கார்ல் மார்க்ஸ்


# மூலதனம்

முதல் பாகம்

புத்தகம் ஒன்று



உலகத் தொழிலாளர்களே, ஒன்றுசேருங்கள்!



Karl Marx

காரல் மார்க்ஸ்

மூலதனம் — முதல் பாகம் — புத்தகம் ஒன்று

மொழிபெயர்ப்பாளர்: தியாகு

பதிப்பாசிரியர் : ரா. கிருஷ்ணய்யா

© தமிழ் மொழிபெயர்ப்பு
நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட்
சென்னை-600 098

முதல் பதிப்பு : ஏப்ரல், 1998

ISBN No. : 81-234-0588-X

CODE No. : A993

**விலை : ரூ.900.00**

அனைத்து மூன்று பாகங்களும் சேர்த்து ஐந்து புத்தகங்கள்.

அச்சிட்டோர் :
*பாவை பிரிண்டர்ஸ் (பி) லிமிடெட்*
*142, ஜானி ஜான் கான் ரோடு,*
*ராயப்பேட்டை,*
*சென்னை - 600 0014.*

## பதிப்பகத்தார் குறிப்பு

கார்ல் மார்க்ஸ் எழுதிய மூலதனம் முதல் பாகத்தின் இந்தத் தமிழ்ப் பதிப்பு பிரெடெரிக் எங்கெல்ஸ் பதிப்பித்த 1887 ஆம் வருடத்திய ஆங்கிலப் பதிப்பின் மொழிபெயர்ப்பாகும்.

மூலதனம் முதல் பாகத்தின் முதல் ஜெர்மன் பதிப்பு, முதல் ஆங்கிலப் பதிப்பு இவற்றின் தலைப்புப் பக்கங்கள் இப்பதிப்பில் இடம்பெறுகின்றன.

ஆங்கிலப் பதிப்புக்கான எங்கெல்ஸ் முன்னுரையிலிருந்து புத்தகம் ஆரம்பமாகிறது. அடுத்து, ஜெர்மன் பதிப்புக்கும், பிரஞ்சுப் பதிப்புக்குமான மார்க்ஸ், எங்கெல்ஸ் முன்னுரைகள், பின்னுரைகள் அனைத்தும் இடம் பெறுகின்றன. புத்தகத்தின் முடிவில் ஆதாரங்களின் அட்டவணை பெயர் அட்டவணை, பொருள் அட்டவணை ஆகியன இடம் பெறுகின்றன.

நட்சத்திரக் குறியிட்ட அடிக்குறிப்புகள் — வேறு விதமாகக் குறிப்பிடப் படவில்லையென்றால் — தமிழ் மொழிபெயர்ப்பாளரால் சேர்க்கப்பட்டவை.

நூலின் பருமை கருதி முதல் பாகம் இரு புத்தகங்களாக வெளியிடப் படுகிறது.

SEELAN BOOKS NORWAY SIGNATURE

# பொருளடக்கம்

பக்கம்

ஆங்கிலப் பதிப்புக்கு முன்னுரை ................................ 15

ஜெர்மன், பிரெஞ்சுப் பதிப்புகளுக்கு
கார்ல் மார்க்ஸ், பிரெடெரிக் எங்கெல்ஸ்
முன்னுரைகளும் பின்னுரைகளும்

முதல் ஜெர்மன் பதிப்புக்கு முன்னுரை ............................ 22
இரண்டாம் ஜெர்மன் பதிப்புக்குப் பின்னுரை .................... 28
பிரெஞ்சுப் பதிப்புக்கு முன்னுரை ................................ 40
பிரெஞ்சுப் பதிப்புக்குப் பின்னுரை .............................. 41
மூன்றாம் ஜெர்மன் பதிப்புக்கு முன்னுரை ...................... 42
நான்காம் ஜெர்மன் பதிப்புக்கு முன்னுரை ...................... 46

புத்தகம் ஒன்று
பகுதி I
சரக்கும் பணமும்

அத்தியாயம் I. — சரக்கு ........................................... 59
பிரிவு 1. — சரக்கின் இரு காரணிகள்: பயன்-மதிப்பும் மதிப்பும் (மதிப்பின் சாரமும் மதிப்பின் பருமனும்) .... 59
பிரிவு 2. — சரக்குகளில் உருக்கொண்டுள்ள உழைப்பின் இரட்டைத் தன்மை .................................... 67
பிரிவு 3. — மதிப்பின் வடிவம் அல்லது பரிவர்த்தனை-மதிப்பு ................................................ 75
A. மதிப்பின் ஆரம்ப அல்லது தற்செயல் வடிவம் ... 76
1. மதிப்புத் தெரிவிப்பின் இரு துருவங்கள்: ஒப்பீட்டு வடிவமும் சமதை வடிவமும் ......... 76
2. மதிப்பின் ஒப்பீட்டு வடிவம்...................... 78
(அ.) இந்த வடிவத்தின் இயல்பும் கருத்தும் .... 78
(ஆ.) ஒப்பீட்டு மதிப்பின் அளவுவழி நிர்ணயிப்பு 83
3. மதிப்பின் சமதை வடிவம் ......................... 85
4. மதிப்பின் ஆரம்ப வடிவம் அதன் முழு உருவில்.. 92
B. மதிப்பின் மொத்த அல்லது விரிந்த வடிவம் ....... 95
1. விரிந்த ஒப்பீட்டு மதிப்பு வடிவம் ............... 95
2. குறிப்பான சமதை வடிவம் ........................ 96
3. மதிப்பின் மொத்த அல்லது விரிந்த வடிவத்தின் குறைபாடுகள் ........................ 97

பக்கம்
C. மதிப்பின் பொது வடிவம் .............................. 98
1. மதிப்பு வடிவத்தின் மாறிய தன்மை .............. 98
2. மதிப்பின் ஒப்பீட்டு வடிவம், சமதை வடிவம் இவற்றின் ஒன்றுக்கொன்று சார்புள்ள வளர்ச்சி .............................................. 101
3. மதிப்பின் பொது வடிவத்திலிருந்து பண வடிவத்துக்கு மாறிச் செல்லுதல் .................. 103
D. பண வடிவம் .............................................. 104
பிரிவு 4. — சரக்குகளின் மாய்மாலமும் அதன் இரகசியமும். 105
அத்தியாயம் II. — பரிவர்த்தனை .............................. 123
அத்தியாயம் III. — பணம், அல்லது சரக்குகளின் சுற்றோட்டம் .. 135
பிரிவு 1. — மதிப்புகளின் அளவை .............................. 135
பிரிவு 2. — சுற்றோட்ட ஊடகம் .............................. 148
அ. சரக்குகளின் உருமாற்றம் .............................. 148
ஆ. பணத்தின் ஓட்டம் .............................. 162
இ. நாணயமும் மதிப்பின் சின்னங்களும் .............. 175
பிரிவு 3. — பணம் .............................................. 182
அ. சேர்த்து வைத்தல் .............................. 182
ஆ. கொடுப்புச் சாதனம் .............................. 188
இ. உலகப் பொதுப் பணம் .............................. 198

பகுதி II

## பணம் மூலதனமாக மாற்றமடைதல்

அத்தியாயம் IV. — மூலதனத்துக்கான பொதுச் சூத்திரம் .......... 203
அத்தியாயம் V. — மூலதனத்தின் பொதுச் சூத்திரத்தில் உள்ள முரண்பாடுகள் .............................................. 216
அத்தியாயம் VI. — உழைப்புச் சக்தியை வாங்குவதும் விற்பதும்... 231

பகுதி III

## அறுதி உபரி-மதிப்பின் உற்பத்தி

அத்தியாயம் VII. — உழைப்பு நிகழ்முறையும் உபரி-மதிப்பின் உற்பத்தி நிகழ்முறையும் .............................. 244
பிரிவு 1. — உழைப்பு நிகழ்முறை அல்லது பயன்-மதிப்புகளின் உற்பத்தி .............................................. 244
பிரிவு 2. — உபரி-மதிப்பின் உற்பத்தி .............................. 256
அத்தியாயம் VIII. — மாறா-மூலதனமும் மாறும்-மூலதனமும் ...... 273
அத்தியாயம் IX. — உபரி-மதிப்பு வீதம் .............................. 289
பிரிவு 1. — உழைப்புச் சக்தி மீதான சுரண்டல்-கடுமை...... 289

பக்கம்

பிரிவு 2. — உற்பத்திப் பொருளினது மதிப்பின் ஆக்கக் கூறுகளை உற்பத்திப் பொருளில் அவற்றுக்கு இணையான விகிதாசாரப் பகுதிகளைக் கொண்டு காட்டுதல்.. 300
பிரிவு 3. — சீனியரின் ''கடைசி மணி நேரம்'' .............. 305
பிரிவு 4. — உபரி-உற்பத்தி .................................. 312
அத்தியாயம் X. — வேலை-நாள் .................................. 314
பிரிவு 1. — வேலை-நாளின் வரம்புகள் .......................... 314
பிரிவு 2. — உபரி-உழைப்புக்கான பேராசை. தொழிலதிபரும் போயார்டும் .................................. 319
பிரிவு 3. — ஆங்கிலேயத் தொழில் துறையில் சுரண்டலுக்கு சட்ட வரம்புகள் இல்லாத கிளைகள் ..................... 330
பிரிவு 4. — பகல் நேர வேலையும் இரவு நேர வேலையும். அஞ்சல் முறை .................................. 349
பிரிவு 5. — இயல்பான வேலை-நாளுக்கான போராட்டம். 14ஆம் நூற்றாண்டின் மத்தியிலிருந்து 17ஆம் நூற்றாண்டின் முடிவு வரை வேலை-நாளை நீட்டுவதற்கான கட்டாயச் சட்டங்கள் ........................ 359
பிரிவு 6. — இயல்பான வேலை-நாளுக்கான போராட்டம். வேலை நேரத்துக்கு சட்டத்தைக் கொண்டு கட்டாய வரம்பிடுதல். ஆங்கிலேயத் தொழிற்சாலைச் சட்டங்கள், 1833 முதல் 1864 வரை ................................ 377
பிரிவு 7. — இயல்பான வேலை-நாளுக்கான போராட்டம். இதர நாடுகளில் ஆங்கிலேயத் தொழிற்சாலைச் சட்டங்களின் பிரதிபலிப்பு .................................. 404
அத்தியாயம் XI. — உபரி-மதிப்பின் வீதமும் திரளும் .............. 411

## பகுதி IV

## ஒப்பீட்டு உபரி-மதிப்பின் உற்பத்தி

அத்தியாயம் XII. — ஒப்பீட்டு உபரி-மதிப்பு என்ற கருத்தமைவு .................................. 424
அத்தியாயம் XIII. — கூட்டு-வேலை .................................. 437
அத்தியாயம் XIV. — உழைப்புப் பிரிவினையும் பட்டறைத் தொழிலும் .................................. 456
பிரிவு 1. — பட்டறைத் தொழிலின் இரட்டைத் தோற்றுவாய் 456
பிரிவு 2. — நுணுக்கத் தொழிலாளியும் அவரது கருவிகளும். 460
பிரிவு 3. — பட்டறைத் தொழிலின் அடிப்படை வடிவங்கள் இரண்டு: பலபடித்தான பட்டறைத் தொழில், தொடர் பட்டறைத் தொழில் .......................... 464
பிரிவு 4. — பட்டறைத் தொழில் உழைப்புப் பிரிவினையும் சமுதாய உழைப்புப் பிரிவினையும் ....................... 476
பிரிவு 5. — பட்டறைத் தொழிலின் முதலாளித்துவத் தன்மை 488

பக்கம்

அத்தியாயம் XV. — இயந்திர சாதனமும் நவீனத் தொழில் துறையும் ........ 503

பிரிவு 1. — இயந்திரச் சாதனத்தின் வளர்ச்சி ........ 503

பிரிவு 2. — உற்பத்திப் பொருளுக்கு இயந்திர சாதனம் பெயர்த்தளிக்கும் மதிப்பு ........ 523

பிரிவு 3. — தொழிலாளி மீது இயந்திர சாதனம் ஏற்படுத்தும் உடனடி விளைவுகள் ........ 534

அ. மூலதனம் துணை உழைப்புச் சக்தியைத் தனதாக்குதல். மாதர்களையும் குழந்தைகளையும் வேலை வாங்குதல் ........ 534

ஆ. வேலை-நாளின் நீட்டிப்பு ........ 545

இ. உழைப்பை மும்முரமாக்குதல் ........ 553

பிரிவு 4. — தொழிற்சாலை ........ 566

பிரிவு 5. — தொழிலாளிக்கும் இயந்திரத்துக்கும் இடையிலான போர் ........ 578

பிரிவு 6. — இயந்திர சாதனத்தால் நீக்கப்படும் தொழிலாளர்கள் தொடர்பான இழப்பீட்டுத் தத்துவம் ........ 592

பிரிவு 7. — தொழிலாள மக்களை ஆலைத் தொழில் விலக்குவதும், ஈர்ப்பதும். பருத்தித் தொழிலில் நெருக்கடிகள் ........ 604

பிரிவு 8. — பட்டறைத் தொழிலிலும், கைத்தொழில்களிலும், வீட்டுத் தொழிலிலும் நவீனத் தொழில் துறை ஏற்படுத்திய புரட்சி ........ 620

அ. கைத்தொழிலையும் உழைப்புப் பிரிவினையையும் அடிப்படையாகக் கொண்ட கூட்டு-வேலையின் வீழ்ச்சி ........ 620

ஆ. பட்டறைத் தொழில் மீதும் வீட்டுத் தொழில்கள் மீதும் ஆலைத் தொழிலின் பிரதி பலிப்பு ........ 622

இ. நவீனப் பட்டறைத் தொழில் ........ 624

ஈ. நவீன வீட்டுத் தொழில் ........ 628

உ. நவீனப் பட்டறைத் தொழிலும் வீட்டுத் தொழிலும் நவீன இயந்திரத் தொழிலாய் மாறிப் போதல். அத்தொழில்களுக்குத் தொழிற்சாலைச் சட்டங்களைப் பிரயோகிப்பதால் இப்புரட்சி துரிதமாதல் ........ 634

பிரிவு 9. — தொழிற்சாலைச் சட்டங்கள். துப்புரவு, கல்வி பற்றிய அவற்றின் சரத்துகள். இங்கிலாந்தில் அவற்றின் பொதுவான விரிவாக்கம் ........ 648

பிரிவு 10. — நவீனத் தொழில் துறையும் விவசாயமும் ........ 681

பக்கம்

## புத்தகம் இரண்டு

### பகுதி V

## அறுதி உபரி-மதிப்பின் உற்பத்தியும் ஒப்பீட்டு உபரி-மதிப்பின் உற்பத்தியும்

அத்தியாயம் XVI. — அறுதி உபரி-மதிப்பும் ஒப்பீட்டு உபரி-மதிப்பும் ........ 685
அத்தியாயம் XVII. — உழைப்புச் சக்தியின் விலையிலும் உபரி-மதிப்பிலும் பருமன் மாற்றங்கள் ........ 699
I. வேலை-நாளின் கால அளவும் உழைப்பின் மும்முரமும் மாறாதவை. உழைப்பின் உற்பத்தித் திறன் மாறுவது ........ 700
II. வேலை-நாள் மாறாதது. உழைப்பின் உற்பத்தித் திறன் மாறாதது. உழைப்பின் மும்முரம் மாறுவது.... 705
III. உழைப்பின் உற்பத்தித் திறனும் மும்முரமும் மாறாதவை. வேலை-நாளின் கால அளவு மாறுவது.. 707
IV. ஒரே நேரத்தில் உழைப்பின் கால அளவிலும், உற்பத்தித் திறனிலும்,மும்முரத்திலும் மாறுபாடுகள்... 709
(1) உழைப்பின் உற்பத்தித் திறன் குறைகிற அதே நேரத்தில் வேலை-நாளை நீட்டுதல்........ 710
(2) உழைப்பின் மும்முரமும் உற்பத்தித் திறனும் அதிகரிக்கிற அதே நேரத்தில் வேலை-நாளைக் குறுக்குதல்........ 712
அத்தியாயம் XVIII. — பல்வேறு உபரி-மதிப்பு வீதச் சூத்திரங்கள்.. 714

### பகுதி VI

## கூலி

அத்தியாயம் XIX. — உழைப்புச் சக்தியின் மதிப்பும், அதோடு விலையும் கூலியாக மாற்றமடைதல் ........ 719
அத்தியாயம் XX. — நேரவீதக் கூலி ........ 729
அத்தியாயம் XXI. — பலன்வீதக் கூலி ........ 740
அத்தியாயம் XXII. — நாடுகளிடையிலான கூலி வேறுபாடுகள்.... 751

### பகுதி VII

## மூலதனத் திரட்டல்

அத்தியாயம் XXIII. — சாமான்ய மறுவுற்பத்தி ........ 760
அத்தியாயம் XXIV. — உபரி மதிப்பை மூலதனமாக மாற்றுதல் ........ 778

பக்கம்

பிரிவு 1. — முதலாளித்துவப் பொருளுற்பத்தியின் அளவு வீதம் மேன்மேலும் அதிகமாகிச் செல்லுதல். சரக்கு உற்பத்தியைக் குறிக்கும் சொத்துடைமை விதிகள் முதலாளித்துவத் தனதாக்கத்தின் விதிகளாக மாறுதல்.... 778
பிரிவு 2. — மேன்மேலும் அதிகரிக்கும் அளவு வீதத்தில் நடைபெறும் மறுவுற்பத்தி பற்றி அரசியல் பொருளாதாரத்தின் தவறான கருத்தமைவு ........................ 789
பிரிவு 3. — உபரி-மதிப்பு மூலதனமாகவும் வருவாயாகவும் பிரிதல். துறவுத் தத்துவம்........................................ 794
பிரிவு 4. — உபரி-மதிப்பு மூலதனமாகவும் வருவாயாகவும் பிரிக்கப்படும் விகிதத்தைச் சாராமலே, மூலதனத் திரட்டலின் அளவை நிர்ணயிக்கும் காரணிகள். உழைப்புச் சக்தி மீதான சுரண்டல்-கடுமை. உழைப்பின் உற்பத்தித் திறன். ஈடுபடுத்தப்படும் மூலதனத் தொகைக்கும் நுகரப் படும் மூலதனத் தொகைக்கும் இடையிலான வேறுபாடு அதிகமாதல். முன்னீடு செய்யப்படும் மூலதனத்தின் பருமன் ........................................................ 804
பிரிவு 5. — தொழிலாளர் நுகர்வு-நிதியம் எனப்படுவது ..... 818

அத்தியாயம் XXV. — முதலாளித்துவத் திரட்டலின் பொது விதி ........................................................ 823
பிரிவு 1. — மூலதனத்தின் இயைபு மாறாதிருக்க, மூலதனத் திரட்டலுடன் கூடவே உழைப்புச் சக்திக்கான வேண்டல் அதிகரித்தல் ................................................ 823
பிரிவு 2. — மூலதனத் திரட்டலோடும் அதோடு சேர்ந்து நடைபெறும் மூலதனக் குவிப்போடும் கூடவே மூலதனத்தின் மாறும் பகுதி ஒப்பளவில் குறைந்து செல்லுதல் ..... 835
பிரிவு 3. — ஒப்பீட்டு உபரி-மக்கள்தொகை அல்லது தொழில் துறை சேமப் பட்டாளம் மேன்மேலும் அதிகமாதல் ................................................ 845
பிரிவு 4. — ஒப்பீட்டு உபரி-மக்கள்தொகையின் பல்வேறு வடிவங்கள். முதாலாளித்துவத் திரட்டலின் பொது விதி.. 861
பிரிவு 5. — முதலாளித்துவ திரட்டலின் பொது விதி — சில எடுத்துக் காட்டுகள் ........................................ 872
(அ) 1846-1866இல் இங்கிலாந்து .................... 872
(ஆ) பிரித்தானிய ஆலைத் தொழிலாளி வர்க்கத்தில் குறைந்த ஊதியம் பெறும் பிரிவுகள் ........ 879
(இ) நாடோடி மக்கள் திரள் .......................... 892
(ஈ) தொழிலாளி வர்க்கத்தில் அதிக ஊதியம் பெறும் பகுதியினர் மீது நெருக்கடிகள் ஏற்படுத்தும் விளைவு ............................ 897
(உ) பிரித்தானிய விவசாயப் பாட்டாளி வர்க்கம்.... 904
(ஊ) அயர்லாந்து ........................................ 937

பக்கம்

## பகுதி VIII

# ஆதித் திரட்டல் என்பது

*அத்தியாயம்* XXVI. — ஆதித் திரட்டலின் இரகசியம் .............. 958
*அத்தியாயம்* XXVII. — விவசாயக் குடிகளின் நிலவுடைமையைப் பறித்தல் .................................................... 963
*அத்தியாயம்* XXVIII. — உடைமை பறிக்கப்பட்டோருக்கு எதிரான கொலைகாரச் சட்டங்கள் — 15 ஆம் நூற்றாண்டின் முடிவில் தொடங்கியவை. பாராளுமன்றச் சட்டங்கள் மூலம் கூலியை வலுவந்தமாய்க் குறைத்தல் ............................ 986
*அத்தியாயம்* XXIX. — முதலாளித்துவ சாகுபடியாளர் பிறந்த கதை .................................................... 998
*அத்தியாயம்* XXX. — வேளாண்மைப் புரட்சியால் தொழில் துறையில் ஏற்பட்ட விளைவு. தொழில் துறை மூலதனத்துக்காக உள்நாட்டுச் சந்தையை உருவாக்குதல் ........................ 1002
*அத்தியாயம்* XXXI. — தொழில் துறை முதலாளி பிறந்த கதை..... 1009
*அத்தியாயம்* XXXII. — முதலாளித்துவத் திரட்டலின் வரலாற்று வழிப்பட்ட போக்கு ........................................ 1024
*அத்தியாயம்* XXXIII. — குடியேற்ற முறையின் நவீனத் தத்துவம்.... 1028

## அட்டவணைகள்

*ஆதாரங்களின் அட்டவணை* .......................................... 1041
*பெயர் அட்டவணை* .................................................. 1069
*பொருள் அட்டவணை* ................................................ 1080

## *சமர்ப்பணம்*

**எனது மறக்க முடியாத நண்பர்**

**தீரமிக்க, பற்றுறுதி வாய்ந்த,**
**உயரிய பாட்டாளிவர்க்க நாயகர்**

## *வில்ஹெல்ம் வொல்ஃப்*

**அவர்களுக்கு.**

***பிறப்பு: டார்னவ், 1809 ஜூன் 21.***
***மறைவு: நாடு கடந்து வாழ்ந்த போது, மான்செஸ்டர், 1864 மே 9.***

# ஆங்கிலப் பதிப்புக்கு முன்னுரை

" தாஸ் கேபிட்டல் " நூலின் ஆங்கில மொழிபெயர்ப்பைப் பிரசுரிப்பதற்கு நியாய விளக்கம் தேவையில்லை. மாறாக, இந்த ஆங்கில மொழிபெயர்ப்பு இதுவரை தாமதமானதற்கே விளக்கம் தேவைப்படலாம்; கடந்த சில ஆண்டுகளாக, இங்கிலாந்து, அமெரிக்கா இரண்டினுடையவும் காலவட்டப் பத்திரிகைகளிலும், நடப்பு இலக்கியத்திலும் இந்தப் புத்தகத்தில் எடுத்துரைக்கப் பட்டுள்ள தத்துவங்கள் இடைவிடாமல் குறிப்பிடப்பட்டும், தாக்கப் பட்டும் ஆதரிக்கப்பட்டும், பொருள் விளக்கப்பட்டும் பொருள் கெடுக்கப்பட்டும் உள்ளன என்பதைக் கருதுகையில் இவ்விளக்கம் அவசியமாகிறது.

1883இல் நூலாசிரியரின் மரணத்திற்குப் பின்னர் சீக்கிரமே, இந்நூலின் ஆங்கிலப் பதிப்பு உண்மையிலேயே அவசியம் என்பது தெளிவாயிற்று; அப்போது, பல ஆண்டுகளாக மார்க்சினுடை யவும், இதை எழுதுபவருடையவும் நண்பரான திரு சாமுவேல் மூர் — இப்புத்தகத்தோடு இவரை விட அதிகப் பரிச்சயமுள்ளோர் அநேகமாக யாருமில்லை — மார்க்சின் இலக்கியத் திட்டப் பொறுப் பாளர்கள் பொதுமக்கள் முன்னர் வைக்க ஆவல் கொண்டிருந்த இம்மொழிபெயர்ப்பு வேலையை மேற்கொள்ளச் சம்மதித்தார். நான் கையெழுத்துப் பிரதியை மூல நூலுடன் ஒத்துப்பார்த்து உகந்ததெனக் கருதக் கூடிய மாற்றங்களுக்கு யோசனை கூற வேண்டுமெனக் கொள்ளப்பட்டது. நாங்களெல்லாம் விரும்பிய அளவுக்குத் துரிதமாக மொழிபெயர்ப்பை முடிக்க விடாமல் திரு மூரின் சொந்தத் தொழில் சார்ந்த அலுவல்கள் அவரைத் தடுத்து வந்த நேரத்தில், வேலையின் ஒரு பகுதியை மேற்கொள்ள டாக்டர் அவெலிங் முன்வந்ததை நாங்கள் மகிழ்ச்சியுடன் ஏற்றுக் கொண்டோம்; அதே போது, மார்க்சின் கடைசிப் புதல்வி யான திருமதி அவெலிங், மேற்கோள்களைச் சரி பார்க்கவும், ஆங்கில நூலாசிரியர்களிடமிருந்தும், நீலப் புத்தகங்களிலிருந்தும் [Blue books] எடுத்துக் கொள்ளப்பட்டவையும், மார்க்சினால் ஜெர்மன் மொழிக்குப் பெயர்க்கப்பட்டவையுமான ஏராளமான

பகுதிகளின் மூலமொழி வாசகங்களைத் தேடிக் கொடுக்கவும் முன் வந்தார். தவிர்க்க முடியாத சில சந்தர்ப்பங்கள் தவிர, இது பரிபூரணமாகச் செய்யப்பட்டுள்ளது.


புத்தகத்தின் கீழ்க்கண்ட பகுதிகள் டாக்டர் அவெலிங் மொழி பெயர்த்தவை: (1) அத்தியாயங்கள் X. (வேலை-நாள்), XI. (உபரி-மதிப்பின் வீதமும் திரளும்); (2) பகுதி VI. (கூலி, அத்தியாயங்கள் XIX. முதல் XXII. வரை கொண்டது); (3) அத்தியாயம் XXIV. பிரிவு 4 (மூலதனமாகவும் வருவாயாகவும்....) முதல், புத்தகத்தின் முடிவு வரை, அத்தியாயம் XXIV.இன் பிற்பகுதி, அத்தியாயம் XXV., பகுதி VIII. முழுவதும் (அத்தியாயங்கள் XXVI. முதல் XXXIII. வரை) ஆகியவற்றைக் கொண்டது; (4) நூலாசிரியரின் முன்னுரைகள் இரண்டும். புத்தகத்தின் இதர பகுதிகள் அனைத்தையும் திரு மூர் மொழிபெயர்த்தார். இவ்வாறு மொழிபெயர்ப்பாளர்கள் ஒவ்வொருவரும் வேலையில் தத்தமது பங்குக்கு மட்டுமே பொறுப்பாளியாக இருக்க, நானோ முழுவதற்குமான கூட்டுப் பொறுப்பைத் தாங்கியுள்ளேன்.

எங்கள் வேலை முழுவதற்கும் அடிப்படையாகப் பயன்பட்ட மூன்றாவது ஜெர்மன் பதிப்பு 1883இல் என்னால் தயாரிக்கப் பட்டதாகும்; நூலாசிரியர் விட்டுச் சென்ற குறிப்புகளின் உதவி யுடன் அது தயாரிக்கப்பட்டது; இரண்டாவது பதிப்பின் எந்தப் பகுதிகளை 1873இல் வெளிவந்த பிரெஞ்சுப் பதிப்பின்[1] குறிப் பிட்ட பகுதிகளைக் கொண்டு மாற்ற வேண்டுமென்பதை அக் குறிப்புகள் தெரிவித்தன. இரண்டாவது பதிப்பின் வாசகத்தில் இவ்வாறு செய்யப்பட்ட மாற்றங்கள் அமெரிக்காவில் சுமார் பத் தாண்டுகள் முன்னர் திட்டமிடப்பட்ட, ஆனால் பிரதானமாக தக்க மொழிபெயர்ப்பாளர் கிடைக்காமையால் கைவிடப்பட்ட ஆங்கில மொழிபெயர்ப்புக்கான வழிகாட்டுதல்கள் கொண்ட கையெழுத்துப் பிரதித் தொகுப்பு ஒன்றில் மார்க்ஸ் ஆலோசனை கூறியிருந்த மாற் றங்களுக்குப் பொதுவாக ஒத்திருந்தன. நியூ ஜெர்சி, ஹோபோக் கெனைச் சேர்ந்த எங்களது பழைய நண்பர் திரு பி.அ. சோர்ஜ் இந்தக் கையெழுத்துப் பிரதியை எங்களுக்குத் தந்துதவினார். பிரெஞ்சுப் பதிப்பிலிருந்து எடுத்து நுழைக்க வேண்டிய இன்னுஞ் சிலவற்றை அது குறிப்பிடுகிறது; ஆனால், மூன்றாவது பதிப்புக் குரிய இறுதியான நெறிமுறைக் குறிப்புகளை விட இத்தனை ஆண்டுகள் பழையதாக அது இருந்ததால், மிதமாகவும், பிரதான மாக இடர்ப்பாடுகளைக் கடக்க அது எங்களுக்கு உதவிய

1 "Le capital," par Karl Marx. Traduction de M.J. Roy, entierement revisee par l'auteur. Paris. Lachatre. இந்த மொழிபெயர்ப்பு, குறிப்பாகப் புத்தகத்தின் பிந்திய பகுதியில், இரண்டாவது ஜெர்மன் பதிப்பின் வாசகத்தோடு ஒப்பிட்டால், கணிசமான மாற்றங்களையும் சேர்ப்புகளையும் கொண்டுள்ளது.

இடங்களிலும் அன்றி, வேறு விதமாக அதனைப் பயன்படுத்திக் கொள்ள எனக்கு உரிமை இருப்பதாக நான் கருதவில்லை. அவ்வாறே, மூலத்தின் முழு கருத்தில் எதையேனும் மொழி பெயர்ப்புக்காக விட்டுக் கொடுக்க வேண்டியிருந்த இடங்களி லெல்லாம், நூலாசிரியரே எதை விட்டுக் கொடுக்கத் தயாராக இருந்தார் என்பதை அறியும் பொருட்டு கடினமான பகுதிகளில் பெரும்பாலானவற்றிற்கு பிரெஞ்சு வாசகத்தின் துணை நாடப் பட்டது.

ஆயினும், ஒரு சங்கடத்தை வாசகருக்கு நாம் தராமலிருக்க முடியாது: குறிப்பிட்ட சில சொற்களை, அன்றாட வாழ்க்கையில் மட்டுமல்லாமல் சாதாரண அரசியல் பொருளாதாரத்திலும் அவற்றுக்குள்ள அர்த்தத்திலிருந்து வேறான அர்த்தத்தில் பிரயோகித்திருப்பதைச் சொல்கிறோம். இதனைத் தவிர்க்க முடியவில்லை. ஒரு விஞ்ஞானத்தின் ஒவ்வொரு புதிய கட்டமும் அந்த விஞ்ஞானத்தின் கலைச் சொற்களில் ஒரு புரட்சியை அவசியமாக்குகிறது. இது வேதியியலில் [chemistry] சிறப்பாக நிரூபணமாகிறது. அதில், சுமார் இருபதாண்டுகளுக்கு ஒரு முறை, சொல்லாட்சி முழுவதும் தீவிரமாக மாற்றப்படுகிறது; வெவ்வேறு பெயர்களின் முழுத் தொடரைக் கடந்து வந்திராத ஒரே ஒரு கரிமச் சேர்மத்தையும் [organic compound] காண்பது அரிது. தொழில், வர்த்தக வாழ்க்கையின் பதங்களை உள்ளவாறே எடுத்துக் கொள்வதிலும், அவற்றை வைத்துக் கொண்டு இயங்குவதிலும் அரசியல் பொருளாதாரம் பொதுவாகத் திருப்தி கண்டது; இவ்வாறு செய்வதன் மூலம், அது அந்தப் பதங்களால் வெளியிடப் படும் கருத்துகளின் குறுகிய வட்டத்துக்குள் தன்னைக் குறுக்கிக் கொள்வதை அறவே காணத் தவறியது. இவ்வாறு, இலாபம் [profit], நில வாடகை [rent] இரண்டுமே உழைப்பாளி தன்னை வேலைக்கு அமர்த்துபவருக்கு (உற்பத்திப் பொருளின் முடிவான பிரத்தியேக உடைமையாளர் அல்லர் என்ற போதிலும், அப் பொருளை முதலில் தனதாக்கிக் கொள்பவர் [appropriator] இவரே) வழங்க வேண்டியிருப்பதான ஊதியமளிக்கப்படாத உற் பத்திப் பொருட் பகுதியின் உட்பிரிவுகள்தாம், துண்டுதுக்காணிகள் தாம் என்பதைப் பூரணமாக அறிந்திருந்த போதிலும், தொல்சீர் அரசியல் பொருளாதாரமே [Classical Political Economy] இலாபம், நில வாடகை பற்றிய ஒப்புக் கொள்ளப்பட்ட கண்ணோட்டங்களை ஒருபோதும் தாண்டிச் செல்லவில்லை. உற் பத்திப் பொருளின் இந்த ஊதியமளிக்கப்படாத பகுதியை (இதை மார்க்ஸ் உபரி-உற்பத்திப் பொருள் [surplus-product] என அழைத்தார்) ஒருமித்த முழுமையாக வைத்து ஒருபோதும் பரிசீலிக்க வில்லை; ஆகவே, அதன் தோற்றமும் இயல்பும் குறித்தோ அல்லது அடுத்து வரும் அதன் மதிப்புப் பங்கீட்டை ஒழுங்கியக்கும்



1867 ஆகஸ்டு 16ஆம் நாள் எங்கெல்சுக்கு மார்க்ஸ் எழுதிய கடிதத்தின் நிழற்பட நகல்
(சிறிதாக்கியது)

1867 ஆகஸ்டு 16, இரவு 2 மணி

அன்பிற்குரிய பிரெட்,

நூலின் கடைசித் தாளை (49ஆவது தாள்) இப்போதுதான் திருத்தி முடித்தேன். இணைப்பு— மதிப்பின் வடிவம் — சிறு அச்சில் 1¼ தாள் வருகிறது.

முன்னுரைப் படியைத் திருத்தி நேற்று அனுப்பினேன். ஆக இந்தப் பாகம் முடிந்தது. இது சாத்திய மானதற்குக் காரணம் நீயேதான். தன்னலம் கருதா உனது தியாகம் எனக்குக் கிடைத்திரா விட்டால், மூன்று பாகங்களுக்குமான பெரும் பணியை என்னால் ஒரு நாளும் செய்திருக்க முடியாது. நெஞ்சம் நிறைந்த நன்றியுடன் ஆரத் தழுவுகிறேன் உன்னை! திருத்திய அச்சுப் படிகள் இரண்டை இத்துடன் இணைத்துள்ளேன்.

£15 கிடைக்கப் பெற்றேன். மிக்க நன்றி.

வாழ்த்துக்கள், அன்பிற்குரிய அருமை நண்பா!
உனது கா. மார்க்ஸ்

விதிகள் [Laws] குறித்தோ ஒரு தெளிவான ஞானத்தை அது ஒரு போதும் அடையவில்லை. இது போலவே, பயிர்த் தொழிலோ கைத்தொழிலோ அல்லாத பிறவகைத் தொழிலனைத்தும் கண்மூடித் தனமாகப் பட்டறைத் தொழில் [manufacture] என்ற பதத்தில் உட்படுத்தப்படுகிறது; இதனால், பொருளாதார வரலாற்றில், சாராம்சத்திலேயே வெவ்வேறான இருபெரும் காலங்களாகிய கையுழைப்புப் பிரிவினையை அடிப்படையாய்க் கொண்ட முறைப் படியான பட்டறைத் தொழிற் காலத்துக்கும், இயந்திர சாதனத்தை [machinery] அடிப்படையாய்க் கொண்ட நவீனத் தொழில் துறைக் காலத்துக்கும் இடையிலான வேறுபாடு இருட்டடிக்கப்படுகிறது. ஆயினும் நவீன முதலாளித்துவப் பொருளுற்பத்தியை [modern capitalist production] மனித வர்க்கத்தின் பொருளாதார வரலாற் றில் வந்து போகிற கட்டமாக மட்டுமே கருதுகிற ஒரு தத்துவம், உற்பத்தியின் அந்த வடிவத்தை அழிவற்றதாகவும் இறுதியான தாகவும் கருதுகிற எழுத்தாளர்களுக்குப் பழகிப்போன பதங் களிலிருந்து வேறான பதங்களைப் பயன்படுத்தியாக வேண்டு மென்பது கூறாமலே விளங்கும்.

நூலாசிரியரின் மேற்கோள் காட்டும் முறை குறித்து ஒரு வார்த்தை சொல்வது பொருத்தமாயிருக்கும். பெரும்பாலான இடங் களில், மேற்கோள்கள், வழக்கமான முறையில், வாசகத்தில் எடுத் துரைக்கப்படுபவற்றிற்கு ஆதரவான ஆவணச் சான்றாகப் பயன் படுகின்றன. ஆனால், அநேக இடங்களில், குறிப்பிட்ட கருத்துரை முதன்முதல் தெளிவாக வெளியிடப்பட்டது எப்போது, எங்கே, யாரால் என்பதைக் காட்டும் பொருட்டு, பொருளாதார எழுத் தாளர்களின் வாசகங்கள் மேற்கோள்களாகத் தரப்படுகின்றன. மேற்கோளாக தரப்படுகிற கருத்துரை, அக்காலத்திய சமுதாயப் பொருளுற்பத்தி [social production], பரிவர்த்தனை [exchange] இவற்றின் நிலைமைகளை அநேகமாகப் பிசகின்றித் தெரிவிப்பதால் முக்கியத்துவம் வாய்ந்ததாக இருக்கும் இடங்களில், மேற்கோள் தரப் படுகிறது. மார்க்ஸ் அக்கருத்துரை பொதுவாகச் செல்லத்தக்கதென அங்கீகரிக்கிறாரா, இல்லையா என்பதைச் சிறிதும் கருதாமல் இது செய்யப்படுகிறது. ஆகவே, இந்த மேற்கோள்கள் இவ்விஞ்ஞானத் தின் வரலாற்றிலிருந்து தரப்படும் நேர்முக வர்ணனையாக வாசகத் திற்குத் துணை நிற்கின்றன.

எங்கள் மொழிபெயர்ப்பு நூலின் முதல் பாகத்தை மட்டுமே கொண்டுள்ளது. ஆனால் இந்த முதல் பாகம் பெருமளவுக்கு அதனளவிலேயே முழுமையானதொன்று. இது இருபது ஆண்டு களாகத் தனியொரு நூலாய் விளங்கி வருகிறது. 1885இல் என்னைப் பதிப்பாசிரியனாகக் கொண்டு ஜெர்மன் மொழியில் வெளிவந்த இரண்டாம் பாகமானது மூன்றாம் பாகம் இல்லாமல் முழுமையற்றதே. ஆனால், 1887 முடிவுக்கு முன்னதாக இந்த

மூன்றாம் பாகத்தை வெளியிட முடியாது. மூன்றாம் பாகம் மூலத்தின் மொழியான ஜெர்மன் மொழியில் வெளிவந்ததும், இரண்டுக்குமான ஆங்கிலப் பதிப்பைத் தயாரிப்பது குறித்து உடனே யோசிக்க வேண்டியிருக்கும்.

''தாஸ் கேபிட்டல்'' கண்டத்தில் [Continent] ''தொழிலாளி வர்க்கத்தின் விவிலியம்'' என்று போற்றப்படுகிறது. இந்த நூலில் கண்டுள்ள முடிவுகள் ஜெர்மனியிலும் ஸ்விட்சர்லாந்திலும் மட்டு மன்றி, பிரான்சிலும் ஹாலந்திலும் பெல்ஜியத்திலும் அமெரிக்கா விலும், ஏன், இத்தாலியிலும் ஸ்பெயினிலும் கூட நாளும் பரவி, மேலும் மேலும் மாபெரும் தொழிலாளி வர்க்க இயக்கத்தின் அடிப் படைக் கோட்பாடுகளாகிக் கொண்டிருக்கின்றன என்பதையும், எங்கு பார்த்தாலும் தொழிலாளி வர்க்கம் தனது நிலைமையினுடை யவும், அபிலாஷைகளுடையவும் மிகப் பொருத்தமான தெரிவிப்பை இந்த முடிவுகளில் மேலும் மேலும் அடையாளங் கண்டு கொள்கிறது என்பதையும் அந்த இயக்கத்துடன் பரிச்சயமுள்ள எவரும் மறுக்க மாட்டார். இங்கிலாந்திலும், தொழிலாளி வர்க்கத்தின் அணிகளில் பரவுவதை விடக் குறைவின்றி ''பண்பாடுள்ள'' மாந்தர்தம் அணிகளிலும் பரவி வரும் சோஷலிச இயக்கத்தின் மீது இந்தத் தருணத்திலும் கூட மார்க்சின் தத்துவங்கள் சக்தி வாய்ந்த தாக்கம் உண்டாக்குகின்றன. இது மட்டுமன்று, இங்கிலாந்தின் பொருளா தார நிலை பற்றிய முழுமையானதோர் ஆராய்ச்சி தடுத்து நிறுத்த முடியாத தேச அவசியமாக நிர்ப்பந்திக்கப் போகும் நேரம் வேகமாக நெருங்கிக் கொண்டிருக்கிறது. உற்பத்தியின், எனவே சந்தைகளின் இடைவிடாத, விரைவான விரிவாக்கம் இல்லாமல் சாத்தியமற்றதாகிய இந்நாட்டின் தொழில் துறை அமைப்பின் செயற்பாடு அந்திம எல்லைக்கு வந்து கொண்டிருக்கிறது. தடையிலா வாணிபம் [Free-trade] தன் வாய்ப்பு வளங்களை இழந்து விட்டது. தனது ஒரு காலத்திய பொருளாதார வரப்பிரசாத மான இதனை மான்செஸ்டரே கூடச் சந்தேகிக்கிறது.[2] விரை வாக வளர்ந்து கொண்டிருக்கும் அந்நியத் தொழில் துறையானது எங்கு பார்த்தாலும், காப்புடைய சந்தைகளில் மட்டுமின்றி பொது வான சந்தைகளிலும், ஏன், ஆங்கிலேயக் கால்வாயின் இந்தக் கரை யிலும் கூட ஆங்கிலேயப் பொருளுற்பத்தியை நெருக்கிக்

---

[2] இன்று பிற்பகல் நடைபெற்ற மான்செஸ்டர் வர்த்தக சபையின் காலாண்டுக் கூட்டத்தில் தடையிலா வாணிபம் பற்றி விறுவிறுப்பான விவாதம் நடைபெற்றது. ''இங்கிலாந்தின் தடையிலா வாணிப உதாரணத்தை ஏனைய நாடுகளும் பின்பற்றுமென நாற்பது ஆண்டுகள் வீணாகக் காத்திருந்த பின், அந்த நிலையை மறுபரிசீலனை செய்வதற்குரிய காலம் வந்து விட்டது என இந்த சபை நினைக்கிறது'' என்ற விதத்தில் ஒரு தீர்மானம் கொண்டுவரப்பட்டது. ஒரே ஒரு ஓட்டு வித்தியாசத்தில்தான் தீர்மானம் நிராகரிக்கப்பட்டது; எண்ணிக்கை: ஆதரவாக 21, எதிராக 22. — ஈவினிங் ஸ்டாண்டர்டு, 1886 நவம்பர் 1.

கொண்டிருக்கிறது. உற்பத்தித் திறன் [productivity] பெருக்கு விகிதத்தில் அதிகரிக்கும் அதே போது சந்தைகளின் விரிவாக்கம் அதிகபட்சம் கூட்டு விகிதத்தில்தான் முன்னேறுகிறது. 1825 முதல் 1867 வரை ஓயாது திரும்பத் திரும்ப வந்து கொண்டிருந்த தேக்கம் [stagnation], செழுமை [prosperity], மிகையுற்பத்தி [over-production] , நெருக்கடி [crisis] இவற்றின் பத்தாண்டுச் சகடம் [decennial cycle] உண்மையிலேயே சுழன்று முடிந்து விட்டதாகத் தோன்றுகிறது; ஆனால் நிரந்தரமான, நீடித்த மந்தத்தின் விரக்திச் சகதியில்தான் அது நம்மை இறக்கிவிட்டுள்ளது. ஏக்கத்துடன் எதிர் பார்த்த செழுமைக் காலம் வராது; அதன் முன்னறிகுறிகள் தெரிவ தாக அடிக்கடி தோன்றுகிறது; ஆனால் ஒவ்வொரு முறையும் அவை மாயமாய் மறைந்து போகின்றன. இதற்கிடையில், ஒவ்வொரு குளிர் காலமும் ''வேலையில்லாதாரை என்ன செய்வது'' என்ற பெருங் கேள்வியை மீண்டும் மீண்டும் எழுப்புகிறது. ஆனால் வேலை யில்லாதார் தொகை ஆண்டுக்கு ஆண்டு பெருகிக் கொண்டே இருக்க, அந்தக் கேள்விக்கு பதில் சொல்ல யாரும் இல்லை; வேலை யில்லாதார் பொறுமையிழந்து தம் கதியைத் தாமே தீர்மானிக்கப் போகும் தருணத்தைக் கணித்துக் கூறி விட முடியும் எனலாம். எவரது முழுத் தத்துவமும் இங்கிலாந்தின் பொருளாதார வரலாறு, நிலைமை ஆகியவை பற்றிய ஆயுட்கால ஆய்வின் விளைவாகுமோ, தவிர்க்க முடியாத சமூகப் புரட்சி முற்றிலும் சமாதான வழியில், சட்ட பூர்வமாக நடத்தப்படக் கூடிய ஒரே நாடு — எப்படியும் ஐரோப் பாவில் — இங்கிலாந்து மட்டுமே என்ற முடிவுக்கு அந்த ஆயுட்கால ஆய்வு எவரை இட்டுச் சென்றதோ, அவரது குரலை நிச்சயமாக அந்தத் தருணத்தில் கேட்டிடல் வேண்டும். சமாதான வழியில் சட்ட பூர்வமாக நடைபெறும் இந்தப் புரட்சிக்கு ஆங்கிலேய ஆளும் வர்க் கங்கள் ''அடிமை முறைக்கு ஆதரவான கலகம்'' [pro-slavery rebellion] புரியாமல் பணிந்து போகுமெனத் தாம் எதிர்பார்க்க வில்லை என்பதைக் குறிப்பிட அவர் மறக்கவேயில்லை.

**பிரெடெரிக் எங்கெல்ஸ்**

*1886 நவம்பர் 5*

# ஜெர்மன், பிரெஞ்சுப் பதிப்புகளுக்கு கார்ல் மார்க்ஸ், பிரெடெரிக் எங்கெல்ஸ் முன்னுரைகளும் பின்னுரைகளும்

## முதல் ஜெர்மன் பதிப்புக்கு முன்னுரை

இந்நூல் — இதன் முதல் பாகத்தை நான் இப்போது பொது மக்கள் முன் சமர்ப்பிக்கிறேன் — 1859இல் பிரசுரிக்கப்பட்ட "Zur Kritik der Politischen Oekonomie" (அரசியல் பொருளாதார விமர்சனத்திற்கு ஒரு பங்களிப்பு) என்ற நூலின் தொடர்ச்சியாக அமைகிறது. முதல் பகுதிக்கும் தொடர்ச்சிக்கும் இடையிலான நீண்ட இடைவெளி மீண்டும் மீண்டும் என் வேலையில் குறுக்கிட்ட பல்லாண்டுகால உடல் நலமின்மையின் விளைவேயாகும்.

அந்த முந்தைய நூலின் சாரம், இந்தப் பாகத்தின் முதல் மூன்று அத்தியாயங்களில் தொகுத்தளிக்கப்படுகிறது. இப்படிச் செய்வது இணைப்பு, பூரணத்துவம் இவற்றின் நிமித்தம் மட்டுமல்ல. கருப் பொருளை முன்வைக்கும் விதமும் செம்மைப்படுத்தப்பட்டுள்ளது. முந்தைய நூலில் குறிப்பாக மட்டுமே தெரிவிக்கப்பட்ட பல விவரங்கள் இங்கே சூழ்நிலைகள் இடமளிக்கும் அளவுக்கு இன்னும் முழுமையாக விவரிக்கப்பட்டுள்ளன; இதற்கு மாறாக, அங்கே முழுமையாக விவரிக்கப்பட்ட விவரங்கள் இந்தப் பாகத்தில் சுருக்கமாகவே குறிப்பிடப்பட்டுள்ளன. மதிப்பு, பணம் இவை பற்றிய தத்துவங்களின் வரலாறு தொடர்பான பிரிவுகள் இப்போது முழுமையாகக் கைவிடப்பட்டிருப்பது மெய்தான். ஆயினும், முந்தைய நூலின் வாசகர், அந்தத் தத்துவங்களின் வரலாறு தொடர்பாகக் கூடுதலாய்ப் படிக்கத்தக்க நூல்களின் விவரத்தை முதல் அத்தியாயத்துக்கான குறிப்புகளில் காணலாம்.

தொடக்கமென்றாலே இடர்ப்பாடுதான்; இது எல்லா விஞ்ஞானங்களுக்கும் பொருந்தும். ஆகவே, முதல் அத்தியாயத்தை, குறிப்பாகச் சரக்குகளின் [commodities] பகுப்பாய்வைக் கொண்டுள்ள பிரிவைப் புரிந்து கொள்வது மிகவும் இடர்ப்பாடானது. இன்னும்

குறிப்பாக, மதிப்பின் சாரம் [substance of value], மதிப்பின் பருமன் [magnitude of value] இவற்றின் பகுப்பாய்வு தொடர்பான பகுதியை கூடுமான அளவுக்கு ஜனரஞ்சகமாக்கியுள்ளேன்.[3] மதிப்பு வடிவம் — அதன் முழு வளர்ச்சியடைந்த உருவம் பண வடிவமாகும் — தொடக்க நிலைக்குரியது, மிகவும் சாமானிய மானது. ஆயினும், மனித உள்ளம் 2,000 ஆண்டுகளுக்கும் மேலாக அதனைப் புரிந்துக் கொள்வதற்கு செய்த முயற்சி பலிக்க வில்லை; ஆனால், பலவுமிணைந்து பன்மடங்கு சிக்கலாயுள்ள வடிவங்களின் பகுப்பாய்வில் வெற்றி நெருங்கியாவது வந்துள்ளது. ஏன்? ஏனெனில், உடலை ஓர் அங்கக முழுமையாகப் பயில்வது அந்த உடலின் உயிரணுக்களைப் பயில்வதைக் காட்டிலும் சுலப மானது. மேலும், பொருளாதார வடிவங்களின் பகுப்பாய்வில், நுண்பெருக்காடிகளோ இரசாயன ஆய்வுப் பொருட்களோ பயன் படுவதில்லை. இவற்றுக்கு பதில் சூக்குமப்படுத்தும் ஆய்வு முறை யின் [abstraction] சக்தி பயன்பட்டாக வேண்டும். ஆனால், முத லாளித்துவ சமுதாயத்தில், உழைப்பினது உற்பத்திப் பொருளின் சரக்கு வடிவம் — அல்லது சரக்கின் மதிப்பு வடிவம் — பொரு ளாதார உயிரணு வடிவமாகும். மேம்போக்காகப் பார்ப்போருக்கு, இந்த வடிவங்களின் பகுப்பாய்வு மிக நுண்ணிய விவரங்களைப் பற்றியதாகத் தோன்றுகிறது. அது உண்மையிலேயே நுண்ணிய விவரங்களைப் பற்றியதுதான். ஆனால், நுண்பெருக்காடிக் கூறாய் வில் ஆராயப்படுகிறவற்றின் வகைப்பாட்டவையே அவை.

ஆகவே, மதிப்பு வடிவம் பற்றிய பிரிவைத் தவிர்த்து, இப் புத்தகம் கடினமானதென்று குற்றஞ்சாட்ட முடியாது. புதிய தொன்றைக் கற்றுக் கொள்ளவும், ஆகவே சுயமாகச் சிந்திக்கவும் சித்தமாயுள்ள வாசகரையே நான் மனத்தில் கொண்டுள்ளேன்.

பௌதிகப் புலப்பாடுகள்[physical phenomena] மிகவும் இன மாதிரியான வடிவத்திலும், குறுக்கீடுகளின் தாக்கம் இல்லாமலும் நேரிடும் இடங்களில் பௌதிக அறிஞர் அவற்றைக் கண்டறிகிறார்; அல்லது, சாத்தியமான போதெல்லாம், புலப்பாடு இயல்பான

---

[3] ஷூல்ட்ஸே-டெலிஷுக்கு எதிரான தமது நூலில் ஃபெர்டினாண்டு லஸ்ஸால் இந்த விவகாரங்கள் பற்றிய எனது விளக்கங்களின் ''அறிவுச் சாரத்தை'' அளிப்பதாகக் கூறிக் கொள்கிறார்; அவர் இப்படிக் கூறிக் கொள்கிற பிரிவே கூட முக்கியமான தவறு களைக் கொண்டுள்ளது என்பதால் இப்படி ஜனரஞ்சகமாக்குவது இன்னுங்கூட அவசிய மாகிறது. ஃபெர்டினாண்டு லஸ்ஸால், தமது பொருளாதார நூல்களில், பொதுவான தத்துவக் கருத்துரைகள் அனைத்தையும், உதாரணமாக மூலதனத்தின் வரலாற்றுக் குணம், உற்பத்தி உறவுகளுக்கும் உற்பத்தி முறைக்கும் இடையிலான தொடர்பு போன்ற பலவற்றையும் பற்றிய கருத்துரைகளை எனது எழுத்துகளிலிருந்து அநேகமாக வரிக்கு வரி — நன்றிக் குறிப்பு கூட இல்லாமல் — எடுத்தாள்கிறார்; என்னால் உருவாக்கப்பட்ட சொல்லாட்சியைக் கூட இதில் அப்படியே பயன்படுத்திக் கொள்கிறார். இதற்கெல்லாம், ஒருவேளை பிரசார நோக்கங்களே காரணமாய் இருக்கலாம். இந்தக் கருத்துரைகளை அவர் விரித்துரைத்து, விளக்கங் காண்பதையும் பிரயோகிப்பதையும் நான் இங்கே சொல்லவில்லை. ஐயம் வேண்டாம், அவற்றுக்கும் எனக்கும் ஒட்டுறவில்லை.

தன்மையில் நிகழ்வதை உறுதி செய்யும் நிலைமைகளில் பரி சோதனைகளை நடத்துகிறார். இந்த நூலில், நான் முதலாளித்துவப் பொருளுற்பத்தி முறையையும், அந்த முறைக்குரிய உற்பத்தி, பரிவர்த்தனை இவற்றின் நிலைண்மைகளையும் ஆராய வேண்டியுள்ளது. இது வரை அவற்றின் தூய எடுத்துக்காட்டுக்குரிய நிலைக்களன் இங்கிலாந்தே. எனது தத்துவக் கருத்துகளின் வளர்ச்சி யில் பிரதான எடுத்துக்காட்டாக இங்கிலாந்து பயன்படுவதற்கு இதுவே காரணம். ஆயினும் ஜெர்மானிய வாசகர், ஆங்கிலேயத் தொழில் துறை, வேளாண்மைத் துறைத் தொழிலாளர்களின் நிலை மையைக் கண்டு இகழ்ச்சியுடன் முகஞ்சுளிப்பாரேயானால், அல்லது ஜெர்மனியில் நிலைமை அவ்வளவு மோசமில்லை என்று நன்னம்பிக்கையுடன் ஆறுதலடைவாரேயானால், திட்டவட்டமாக அவருக்குச் சொல்கிறேன்: *"De te fabula narratur!"**

சாராம்சத்தில், முதலாளித்துவப் பொருளுற்பத்தியின் இயற்கை யான விதிகளிலிருந்து விளைகின்ற சமூகப் பகைமைகளின் வளர்ச்சியில் உயர்ந்த அல்லது தாழ்ந்த நிலை பற்றியதன்று பிரச்சினை. இந்த விதிகளைப் பற்றியதே, தவிர்க்க முடியாத முடிவு களை நோக்கி வலுக்கட்டாயமான அவசியத்துடன் செயல்படுகிற இந்தப் போக்குகளைப் பற்றியதே பிரச்சினை. குறைவாகத் தொழில் வளர்ச்சி அடைந்த நாட்டுக்கு, அதன் எதிர்காலத்தின் பிரதிபிம்பத்தையே அதிகம் தொழில் வளர்ச்சி அடைந்த நாடு காட்டுகிறது.

ஆனால் இது மட்டுமன்று. ஜெர்மானியர்கள் மத்தியில் முதலாளித்துவப் பொருளுற்பத்தி முழு அளவில் சுவிகரிக்கப் பட்டுள்ள இடங்களில் (உதாரணமாக முறையான தொழிற்சாலை களில்) நடப்பு நிலைமை இங்கிலாந்திலிருப்பதை விடப் படுமோச மாக உள்ளது; ஏனெனில், எதிர்நிறையாகிய தொழிற்சாலைச் சட் டங்கள் [Factory Acts] அங்கில்லை. மற்றெல்லாத் துறைகளிலும், நாம், கண்டத்தைச் சேர்ந்த மேற்கு ஐரோப்பாவின் மீதப் பகுதி முழுவதையும் போலவே, முதலாளித்துவப் பொருளுற்பத்தியின் வளர்சசியால் மட்டுமின்றி, அந்த வளர்ச்சியின் அரைகுறை நிலை யினாலும் அவதிப்படுகிறோம். நவீன காலத் தீமைகளோடு கூடவே, காலத்துக்கொவ்வாத சமூக, அரசியல் முறைகளைத் தவிர்க்க முடி யாத படி உடன்கொணரும் பழமைப்பட்ட உற்பத்தி முறைகளின் முனைப்பொழிந்த மீதமிச்சத்திலிருந்து மரபுரிமையாய் வந்த கேடு களின் முழு வரிசையும் நம்மை வருத்துகிறது. வாழ்பவற்றால் மட்டு மின்றி மாண்டவற்றாலும் அவதிப்படுகிறோம். *Le mort saisit le vif!***

இங்கிலாந்துடன் ஒப்பிடுமிடத்து, ஜெர்மனியிலும், கண்டத்தைச்

* *"கதை உங்களைப் பற்றியதே!".*

** *மாண்டவன் வாழ்பவனை ஆட்டி வைக்கிறான்!*

சேர்ந்த மேற்கு ஐரோப்பாவின் மீதப்பகுதியிலும் சமூகப் புள்ளி விவரங்கள் மோசமாகத் தொகுக்கப்படுகின்றன. ஆனால், திரை மறைவிலுள்ள மெடூசா தலை சற்றேனும் நம் கண்ணிற்படுமளவுக் காவது அவை திரையை விலக்குகின்றன. இங்கிலாந்தில் போலவே நமது அரசாங்கங்களும் நாடாளுமன்றங்களும் பொருளாதார நிலைமைகள் பற்றிய விசாரணை ஆணையங்களை [commissions of inquiry] அப்போதைக்கப்போது நியமித்தால், உண்மையைக் கண்டறிவதற்கு அதே போல் பூரண அதிகாரங்கள் உடையவையாக இந்த ஆணையங்கள் இருந்தால், ஆங்கிலேயத் தொழிற்சாலை ஆய்வாளர்கள் [Factory inspectors], பொதுச் சுகாதாரம் பற்றிய அந்நாட்டு மருத்துவத் தகவலாளர்கள், பெண்களும் குழந்தைகளும் சுரண்டபடுவது, வீட்டு வசதி, உணவு இவை பற்றிய அந்நாட்டு விசாரணை ஆணையர்கள் ஆகியோரைப் போலவே தகுதியுள்ளவர் களும், ஒருதலைச்சார்பு, முக தாட்சண்யம் ஆகிய கேடுகள் இல்லாதவர்களுமான மனிதர்கள் இந்தக் காரியத்துக்காக நமக்குக் கிடைப்பது சாத்தியமானால், உள்நாட்டு நிலைமை நம்மைத் திடுக் கிடச் செய்யும். தான் வேட்டையாடிய வேதாளங்கள் தன்னைப் பார்க்காத படி பெர்சியஸ் மாயாஜாலக் குல்லாயை அணிந்து கொண்டான். வேதாளங்கள் எதுவுமில்லை என்று பொய்யாக நம்பும் பொருட்டு, கண்ணையும் காதையும் மறைக்கும் படியாக நாமும் மாயாஜாலக் குல்லாயை இழுத்து விட்டுக் கொள்கிறோம்.

இது தொடர்பாக நம்மை நாமே ஏமாற்றிக் கொள்ள வேண் டாம். 18ஆவது நூற்றாண்டில் அமெரிக்க சுதந்தரப் போர் ஐரோப்பிய நடுத்தர வர்க்கத்துக்கு சங்கநாதம் எழுப்பியது போலவே, 19ஆவது நூற்றாண்டில் அமெரிக்க உள்நாட்டுப் போர் ஐரோப்பியத் தொழிலாளி வர்க்கத்துக்கு சங்கநாதம் எழுப்பியது. இங்கிலாந்தில் சமூக நசிவின் போக்கு எளிதிற் புலனாகும் விதத்தில் உள்ளது. அது குறிப்பிட்ட கட்டத்தை அடைந்ததும், கண்டத்தில் பிரதிபலித்தாக வேண்டும். அங்கே தொழிலாளி வர்க்கத்தின் வளர்ச்சி நிலைக்கேற்ப, மேலும் மிருகத்தனமானதாய் அல்லது மேலும் மனிதத் தன்மையுள்ளதாய் அது வடிவெடுக்கும். எனவே, தொழிலாளி வர்க்கத்தின் தடையற்ற வளர்ச்சிக்கு முட்டுக்கட்டை யாகவுள்ள, சட்ட வழியில் அகற்றத்தக்க இடையூறுகள் அனைத்தை யும் அகற்றுமாறு, இப்போதைக்கு ஆளும் வர்க்கங்களாயிருக்கும் வர்க்கங்களுக்கு, உயரிய நோக்கங்கள் அல்லாமல் அவற்றின் மிக முக்கிய சொந்த நலன்களே கட்டளையிடுகின்றன. இதற்காகவும், இதர காரணங்களுக்காகவும், நான் இந்தப் புத்தகத்தில், ஆங்கிலேயத் தொழிற்சாலைச் சட்ட நெறியின் வரலாறு, விவரங் கள், விளைவுகள் ஆகியவற்றுக்கு இவ்வளவு நிறைய இடம் ஒதுக்கி யுள்ளேன். ஒரு நாடு பிற நாடுகளிடமிருந்து கற்றுக் கொள்ள முடியும், கற்றுக்கொள்ளவும் வேண்டும். ஒரு சமுதாயம் தனது

இயக்கத்தின் இயற்கையான விதிகளைக் கண்டுபிடிப்பதற்கான சரியான சுவட்டில் அடி வைத்து விட்ட போதும் கூட — நவீன கால சமுதாயத்தின் பொருளாதார இயக்க விதியைப் பட்டவர்த்தனமாக்கிக் காட்டுவதே இந்த நூலின் இறுதி நோக்கம் — தனது இயல்பான வளர்ச்சியின் அடுத்தடுத்த கட்டங்கள் எழுப்பும் தடைகளை துணிச்சல்மிக்க பாய்ச்சல்கள் மூலம் கடந்து விடவோ, சட்ட நெறிகள் மூலம் அகற்றி விடவோ முடியாது. ஆனால் அது பிரசவ வேதனைகளைக் குறுக்கிக் கொள்ளவும், குறைத்துக் கொள்ளவும் முடியும்.

தவறாகப் புரிந்து கொண்டு விடக் கூடாதென்பதற்காக ஒரு வார்த்தை. முதலாளியையும், நிலக் கிழாரையும் எந்த விதத்திலும் கண்கவர் வண்ணத்தில் நான் சித்திரிக்கவில்லை; ஆனால் தனியாட்கள் இங்கே குறிக்கப்படுவது, அவர்கள் பொருளாதார இனங்களின் அவதாரங்களாக, குறிப்பிட்ட வர்க்க உறவுகள், வர்க்க நலன்கள் இவற்றின் ஆளுருவங்களாக இருக்கிற அளவில் மட்டுமே. சமுதாயத்தினது பொருளாதார அமைப்பின் பரிணாமத்தை இயற்கை வரலாற்று நிகழ்முறையாகக் கருதுகிற எனது கண்ணோட்டம் வேறு எந்தக் கண்ணோட்டத்தை விடவும் குறைவாகவே, தனியாள் சமூக வழியில் எந்த உறவுகளால் ஆட்டிப் படைக்கப்படுகிறாரோ — அவர் எவ்வளவுதான் தன்னை அகவயமாக அவற்றுக்கு மேம்பட்டவராக்கிக் கொண்டாலும் சரி — அந்த உறவுகளுக்குப் பொறுப்பாளியாக அவரை ஆக்க முடியும்.

அரசியல் பொருளாதாரத் துறையில் சுதந்தர விஞ்ஞான ஆராய்ச்சி சந்திப்பது, மற்றெல்லாத் துறைகளிலும் சந்திக்கிற எதிரிகளை மட்டுமன்று. அது ஆராய்கிற பொருளின் விசேஷத் தன்மையானது மானுட நெஞ்சத்தின் மிக உக்கிரமான, இழிவான, குரோதமான உணர்ச்சிகளை, தனி நலனின் ஆவேசங்களை யுத்தகளத்துக்குள் எதிரிகளாக வரவழைக்கிறது. உதாரணமாக, ஆங்கிலேய அங்கீகாரத் திருச்சபையானது தனது 39 விதிகளில் 38இன் மீதான தாக்குதலை மன்னித்தாலும் மன்னிக்குமே தவிர, தனது வருமானத்தில் 1/39 பங்கின் மீதான தாக்குதலை மன்னிக்கவே மன்னிக்காது. இப்போதெல்லாம், நிலவுகிற சொத்துறவுகளைக் குற்ற விமர்சனம் செய்யும் செயலுடன் ஒப்பிடுமிடத்து நாத்திகமே கூட சிறு குற்றம் தான். ஆயினும், சந்தேகத்திற்கிடமற்ற ஒரு முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. கடந்த சில வாரங்களில் பிரசுரிக்கப்பட்ட பின்வரும் நீலப் புத்தகத்தை எடுத்துக் காட்டாகக் குறிப்பிடுவேன்: ''தொழில் துறைப் பிரச்சினைகள், தொழிற் சங்கங்கள் இவை சம்பந்தமாக மாட்சிமை தங்கிய அரசியாரின் அயல் நாட்டுத் தூதகங்களுடன் கடிதப் போக்குவரத்து.'' ஜெர்மனியில், பிரான்சில், சுருங்கச் சொல்லின் ஐரோப்பாக் கண்டத்தின் எல்லா நாகரிக நாடுகளிலும், மூலதனத்துக்கும் உழைப்புக்கும் இடையில் நிலவும் உறவுகளில் தீவிரமான மாற்றம் ஏற்படுவது இங்கிலாந்தில் இருப்பது போன்றே

கண்கூடானதாகவும், தவிர்க்க முடியாததாகவும் இருப்பதை அயல் நாடுகளிலுள்ள ஆங்கிலேய முடியாட்சியின் பிரதிநிதிகள் இப் புத்தகத்தில் வெளிப்படையாகவே அறிவிக்கின்றனர். அதே நேரத்தில், அட்லாண்டிக் மாகடலின் மறு புறத்தில், அடிமை முறை ரத்து செய்யப்பட்ட பின்னர், மூலதன உறவுகளிலும் நிலவுடைமை உறவுகளிலும் தீவிரமான மாற்றம் ஏற்படும் தருணம் நெருங்கி விட்டதாக அமெரிக்க ஐக்கிய நாட்டின் துணையதிபர் திருவாளர் வேடு பொதுக்கூட்டங்களில் பறைசாற்றினார். காலத்தின் அறிகுறிகள் இவை; அரச உடுப்புகளாலோ, பாதிரி அங்கிகளாலோ இவற்றை மூடி மறைத்து விட முடியாது. நாளைக்கே ஏதோ அதிசயம் நடக்கப் போவதன் அறிகுறிகள் இவை என்று சொல்லவில்லை. ஆனால், இன்றைய சமுதாயம் மாறாத கல்லுருவம் அன்று, மாற்றத்துக்குரிய உயிரமைப்பே, அது இடைவிடாமல் மாறிக் கொண்டுமிருக்கிறது என்ற திகிலுணர்வு ஆளும் வர்க்கங்கள் மத்தியிலேயே உதித்துக் கொண்டிருக்கிறது என்பதை அவை காட்டுகின்றன.

இந்த நூலின் இரண்டாம் பாகம் மூலதனச் சுற்றோட்டத்தின் [circulation of capital] நிகழ்முறையையும்[4] (புத்தகம் இரண்டு), மூலதனத்தின் வளர்ச்சிப் போக்கில் அது மேற்கொள்கிற பலதிறப்பட்ட வடிவங்களையும் (புத்தகம் மூன்று), கடைசிப் பாகமான மூன்றாவது பாகம் (புத்தகம் நான்கு) தத்துவத்தின் வரலாற்றையும் ஆராயும்.

விஞ்ஞான வழிப்பட்ட விமர்சனத்தின் அடிப்படையில் கூறப்படும் அபிப்பிராயங்கள் யாவற்றையும் வரவேற்கிறேன். பொதுஜன அபிப்பிராயம் என்று சொல்லப்படுவதன் விருப்புவெறுப்புக்களைப் பொறுத்த வரை — இவற்றுக்கு நான் என்றுமே விட்டுக் கொடுத்ததில்லை — முன் போலவே இப்போதும் ஃப்ளோரென்ஸ் பெருங் கவிஞனின் கட்டளை வாசகம் எனதுமாகும்:

"Segui il tuo corso, e lascia dir le genti."*

**கார்ல் மார்க்ஸ்**

*லண்டன், 1867 ஜூலை 25*

---

4 தான் இத்தலைப்பின் கீழ் உள்ளடக்குகிறவற்றை நூலாசிரியர் பக்கம் 758இல் விளக்குகிறார்.

---

* "நின் வழியே நீ செல்; பேசுவோர் பேசட்டும்."

# இரண்டாம் ஜெர்மன் பதிப்புக்குப் பின்னுரை

இரண்டாம் பதிப்பில் செய்யப்பட்டுள்ள மாற்றங்கள் பற்றி முதல் பதிப்பின் வாசகர்களுக்கு முதலில் தெரிவிக்க வேண்டும். புத்தகத்தின் முன்னிலும் தெளிவான ஒழுங்கமைப்பு உடனே பளிச்சிடுகிறது. கூடுதல் குறிப்புகள் எல்லா இடங்களிலும் இரண்டாம் பதிப்புக்கான குறிப்புகளாகக் குறிக்கப்பட்டுள்ளன. கீழ்க்கண்டவை வாசகம் தொடர்பான மிக முக்கிய அமிசங்களாகும்:

அத்தியாயம் I, பிரிவு 1இல், சகலவித பரிவர்த்தனை-மதிப்பையும் தெரிவிக்கும் வழியாகிய சமன்பாடுகளைப் பகுத்தாய்வதிலிருந்து மதிப்பைக் கண்டுபிடிப்பதானது முன்னிலும் அதிக விஞ்ஞானக் கண்டிப்புடன் செய்யப்பட்டிருக்கிறது. அதே போல், மதிப்பின் சாரத்துக்கும், சமூக வழியில் அவசியமான உழைப்பு நேரத்தைக் கொண்டு மதிப்பின் பருமனை நிர்ணயிப்பதற்கும் இடையிலான தொடர்பு — இது முதல் பதிப்பில் ஜாடையாகவே குறிக்கப்பட்டது — இப்போது வெளிப்படையாகவே வற்புறுத்திக் கூறப்பட்டுள்ளது அத்தியாயம் I, பிரிவு 3 (மதிப்பின் வடிவம்) முழுவதும் திருத்தப்பட்டுள்ளது. இப்பணி வேறு எதனாலும் இல்லாவிட்டாலும் முதல் பதிப்பின் இருதர விளக்கத்தால் அவசியமாயிற்று. அந்த இருதர விளக்கத்துக்குக் காரணம் ஹனோவரில் உள்ள எனது நண்பர் டாக்டர் லு.குகெல்மன் அவர்களே என்பதை இங்கே குறிப்பிடலாம். 1867 வசந்த காலத்தில் அவரைப் பார்க்கச் சென்றிருந்தேன்; அப்போது ஹாம்பர்க்கிலிருந்து முதல் அச்சுப் படிகள் வந்து சேர்ந்தன; மதிப்பின் வடிவம் பற்றிய அனுபந்த முறையிலான, இன்னும் அதிகமாகக் கற்பிக்கும் தன்மையுள்ள விளக்கம் பெரும்பாலான வாசகர்களுக்குத் தேவை என்று அவர் எனக்கு உணர்த்தினார். முதல் அத்தியாயத்தின் கடைசிப் பிரிவான "சரக்கின் மாய்மாலமும்..." என்ற பிரிவு பெரிதும் மாற்றப்பட்டுள்ளது. அத்தியாயம் III, பிரிவு 1 (மதிப்பின் அளவை) கவனமாகத் திருத்தியமைக்கப்பட்டுள்ளது. ஏனெனில், முதல் பதிப்பில் இந்தப் பிரிவு குறித்து போதிய கவனம் செலுத்தப்படவில்லை. 1859

பெர்லின் பதிப்பான "அரசியல் பொருளாதார விமர்சனத்திற்கு ஒரு பங்களிப்பு" என்ற நூலில் தர்ப்பட்டுள்ள விளக்கத்தைப் பார்க்குமாறு வாசகரிடம் கேட்டுக் கொள்ளப்பட்டது. அத்தியாயம் VII., குறிப்பாகப் பகுதி 2 [தமிழ்ப் பதிப்பு, அத்தியாயம் IX., பிரிவு 2] பெருமளவுக்குத் திருத்தியெழுதப்பட்டுள்ளது.

சிறுதிற வாசக மாற்றங்கள் அனைத்தையும் விவரித்து நேரத்தை வீணாக்கத் தேவையில்லை; இம் மாற்றங்கள் பல இடங்களில் முற்றிலும் நடை சம்பந்தப்பட்டவையே. அவை புத்தகம் முழுவதிலும் வருகின்றன. ஆயினும், ஜெர்மன் மூலத்தின் பல பகுதிகளுக்கு ஓரளவு முழுமையான மறுவார்ப்பு தேவைப்படுகிறது என்பதையும், மற்ற பகுதிகளுக்கு நடை சம்பந்தமாக ஓரளவு கடுமையான பதிப்பாசிரியப் பணி தேவைப்படுகிறது என்பதையும், இன்னும் சில பகுதிகளில் எப்போதாவது வருகிற பிழைகளைத் தேடிப் பிடித்து நீக்க வேண்டியுள்ளது என்பதையும் பாரிசில் வெளிவருகிற பிரெஞ்சு மொழிபெயர்ப்பைச் சரிபார்த்த பின் இப்போது உணர்கிறேன். ஆனால், அதற்கு அவகாசமில்லை. ஏனெனில், புத்தகம் விற்றுத் தீர்ந்து விட்டது என்றும், இரண்டாம் பதிப்பை அச்சிடும் வேலை 1872 ஜனவரியில் தொடங்கி விட வேண்டும் என்றும் 1871 இலையுதிர் காலத்தில்தான், வேறு அவசர வேலையில் ஈடுபட்டிருந்த போது, என்னிடம் தெரிவிக்கப்பட்டது.

"தாஸ் கேபிட்டலுக்கு" ஜெர்மானியத் தொழிலாளி வர்க்கத்தின் விரிவான வட்டாரங்களில் அதிவேகமாய் நன்மதிப்பு கிட்டியுள்ளது; இது எனது கடும் உழைப்புக்குக் கிடைத்த மிகச் சிறந்த வெகுமதியாகும். பொருளாதார விவகாரங்களில் முதலாளித்துவக் கண்ணோட்டமுடையவரான வியன்னா தொழிலதிபர் திரு மேயர், பிரெஞ்சு-ஜெர்மானியப் போரின் போது வெளியான பிரசுரத்தில், வழக்கமாக ஜெர்மானியர்களுக்குரிய பரம்பரை உடைமையாய்க் கருதப்பட்டு வந்த தத்துவப் பேராற்றல் ஜெர்மனியில் படித்த வர்க்கங்கள் எனப்படுவனவற்றின் மத்தியில் அநேகமாய் அடியோடு மறைந்து விட்டது என்றும், ஆனால் ஜெர்மானியத் தொழிலாளி வர்க்கத்தின் மத்தியில் அந்த ஆற்றல் உயிர்த்தெழுந்து வெற்றி முழக்கமிடுகிறது என்றும் பொருத்தமாகவே எடுத்துரைத்தார்.

இன்று வரை ஜெர்மனியில் அரசியல் பொருளாதாரம் ஒரு வெளிநாட்டு விஞ்ஞானமே. குஸ்தவ் ஃபோன் கூலிஹ் தமது "வர்த்தகம், தொழில் துறை பற்றிய வரலாற்று விவரிப்பு"[5] என்னும் நூலில், குறிப்பாக 1830இல் பிரசுரிக்கப்பட்ட முதல் இரு பாகங்களில், ஜெர்மனியில் முதலாளித்துவப் பொருளுற்பத்தி முறையின் வளர்ச்சியையும், ஆதலால் அந்நாட்டில் நவீன முதலாளித்துவ

[5] Geschichtliche Darstellung des Handels, der Gewerbe und des Ackerbaus, &c., von Gustav von Gulich. 5 vols., Jena. 1830-45.

சமுதாயத்தின் வளர்ச்சியையும் தடுத்த வரலாற்று நிலைமைகளை விரிவாக ஆராய்ந்திருக்கிறார். இவ்வாறு அரசியல் பொருளாதாரம் வேர்விட்டு வளர்வதற்கு வேண்டிய மண் இல்லாமற் போயிற்று. இந்த ''விஞ்ஞானத்தை'' தயாரான நிலையில் அப்படியே இங்கிலாந்திலிருந்தும், பிரான்சிலிருந்தும் தருவித்துக் கொள்ள வேண்டியிருந்தது; அதன் ஜெர்மானியப் பேராசிரியர்கள் பள்ளிப் பருவத்தினராகவே இருந்தனர். அயல்நாட்டு எதார்த்தத்தின் தத்துவ வெளியீட்டை அவர்கள் சூத்திரங்களின் தொகுப்பாக்கினார்கள். தம்மை சுற்றிலுமிருந்த சில்லறை வர்த்தக உலகத்தின் வாயிலாக அதனை வியாக்கியானம் செய்தனர்; ஆதலால் தவறாகவே வியாக்கியானம் செய்தனர். முழு அளவுக்கு ஒடுக்கி விட முடியாத உணர்வாகிய விஞ்ஞானத் துறையிலான ஏலாமை உணர்வும், உள்ளபடியே தங்களுக்கு அந்நியமான ஆய்வுப் பொருளைத் தீண்ட வேண்டியிருக்கிறதே என்ற சஞ்சலமும், இலக்கிய, வரலாற்றுப் புலமையின் ஆர்ப்பாட்டத்தைக் காட்டியோ, அல்லது ''Kameral'' விஞ்ஞானங்கள் எனப்படுவனவற்றிலிருந்து கடன் வாங்கப்பட்ட சம்பந்தமில்லாத விவரங்களின் கலவையைக் கொண்டோ அரை குறையாகவே மூடி மறைக்கப்பட்டன; நுனிப்புல்லறிவுக் கூளமாகிய இந்த விஞ்ஞானங்களின் தீக் குழியை மிதித்துக் கடப்போரே ஜெர்மானிய அதிகார வர்க்கத்தினராய்த் தேர்வு பெற முடியும்.

1848க்குப் பிறகு முதலாளித்துவப் பொருளுற்பத்தி ஜெர்மனியில் துரிதமாக வளர்ச்சியடைந்திருக்கிறது. இப்போது அது ஊகவாணிபம், மோசடி இவற்றின் முழுமலர்ச்சிக் கட்டத்தில் உள்ளது. ஆனால், நமது தொழில்முறைப் பொருளாதார அறிஞர்களுக்குக் கெட்ட காலம் தீர்ந்தபாடில்லை. நேர்மையான விதத்தில் அரசியல் பொருளாதாரத்தை அவர்கள் அணுக முடிந்த நேரத்தில், நவீன காலப் பொருளாதார நிலைமைகள் உண்மையில் ஜெர்மனியில் நிலவவில்லை. முடிவில் இந் நிலைமைகள் நிலவத் தொடங்கின என்றாலும் முதலாளித்துவப் பார்வையின் எல்லைகளுக்குள் அவற்றை மெய்யாகவும், பாரபட்சமின்றியும் ஆராய்வதற்கு முன் போல் இடமளிக்காத சூழ்நிலைகளில்தான் அவை நிலவத் தொடங்கின. அரசியல் பொருளாதாரம் அந்த முதலாளித்துவப் பார்வையின் எல்லைகளுக்குட்பட்டிருக்குமாயின், முதலாளித்துவ முறை சமுதாயப் பொருளுற்பத்தியின் பரிணாமத்தில் வந்து போகிற வரலாற்றுக் கட்டமாகக் கருதப்படாமல் சமுதாயப் பொருளுற்பத்தியின் அறுதியான இறுதி வடிவமாகக் கருதப்படுமாயின், வர்க்கப் போராட்டம் முதிராது உள்ளடங்கியிருக்கும் வரைதான், அல்லது தனித்த, எப்போதேனும் எங்கேனும் நேரிடுகிற நிகழ்வுகளில் மட்டுமே புலப்படும் வரைதான், அரசியல் பொருளாதாரம் ஒரு விஞ்ஞானமாக நீடிக்க முடியும்.

இங்கிலாந்தை எடுத்துக் கொள்வோம். அதன் அரசியல்

பொருளாதாரம் வர்க்கப் போராட்டம் இன்னும் வளர்ச்சியடை யாதிருந்த காலத்தியதாகும். அதன் கடைசிப் பெரும் பிரிதிநிதியான ரிக்கார்டோ, இறுதிக் கட்டத்தில் வர்க்க நலன்களின் பகைமையை, கூலி-இலாபம் இவற்றின், இலாபம்-நிலவாடகை இவற்றின் பகை மையை இயற்கையின் சமுதாய விதியென வெகுளித்தனமாய்க் கருதிக் கொண்டு, உணர்வுபூர்வமாய் இந்தப் பகைமையைத் தொடக்க மாக வைத்து, தமது ஆராய்ச்சிகளை நடத்துகிறார். ஆனால், இப்படித் தொடங்கியதன் மூலம், முதலாளித்துவப் பொருளாதார விஞ்ஞானம் இனிமேல் தாண்டிச் செல்ல முடியாத எல்லைகளை அடைந்திருந்தது. ரிக்கார்டோவின் ஆயுட்காலத்திலேயே, அவருக்கு எதிராக, சிஸ்மொந்தி வாயிலான குற்ற விமர்சனத்தை அது சந்தித்தது.[6]

அடுத்து வந்த 1820 முதல் 1830 வரையிலான காலம் இங்கிலாந்தில் அரசியல் பொருளாதாரத் துறையில் விஞ்ஞானச் செயல்முனைப்புக்குக் குறிப்பிடத்தக்கதாய் இருந்தது; ரிக்கார்டோ வின் தத்துவம் பழைய மரபுடன் போட்டியிடும் காலமாகவும், அதே அளவுக்கு அத்தத்துவத்தைக் கொச்சைப்படுத்தி விரிவாக்கும் கால மாகவும் இருந்தது. விறுவிறுப்பான போட்டிப் பந்தயங்கள் நடந்தன. அப்போது என்ன நடந்தது என்று பொதுவாகக் கண்டத்து நாடுகளுக்கு அதிகம் தெரியவில்லை; ஏனெனில் இந்த சர்ச்சை விமர்சன ஏடுகளில் வரும் கட்டுரைகளிலும், எப்போதேனும் வெளிவரும் நூல்களிலும், பிரசுரங்களிலும் பெரும் பகுதி சித றுண்டே வெளிப்படுகிறது. இந்த சர்ச்சையின் காழ்ப்புணர்வற்ற தன்மைக்கு — ரிக்கார்டோவின் தத்துவம் ஏற்கெனவே விதிவிலக்கான சந்தர்ப்பங்களில் முதலாளித்துவப் பொருளாதாரத்தின் மீதான தாக்குதலுக்கு ஆயுதமாகப் பயன்படுகிறது என்ற போதிலும் — அந்த நேரத்தின் நிலைமைகளே காரணம். ஒரு புறம் நவீனத் தொழில் துறை என்பதே அப்போதுதான் பிள்ளைப் பிராயத்தைக் கடந்து வந்து கொண்டிருந்தது; 1825ஆம் வருட நெருக்கடியுடன், அதன் நவீன கால வாழ்க்கையின் முதலாவது காலவட்டச் சகடம் ஆரம்ப மாகிறது என்ற உண்மை இதனை ருசுப்பிக்கிறது. மறு புறம், ஒரு பக்கத்தில் புனிதக் கூட்டை [Holy Alliance] சுற்றித் திரண்ட அரசாங்கங்கள், பிரபுத்துவ உயர் குடியாளர் [feudal aristocracy] ஆகியோருக்கும், மறு பக்கத்தில் முதலாளி வர்க்கத்தின் தலைமை யிலான மக்கள் திரள்களுக்கும் இடையிலான சச்சரவால் அரசிய லிலும், தொழில் துறை மூலதனத்துக்கும் பிரபுத்துவ உயர்குடியாள ரின் நிலச் சொத்துக்கும் இடையிலான சண்டையால் பொருளா தாரத்திலும் — இச்சண்டை பிரான்சில் சிறு நிலவுடைமைக்கும் பெரு நிலவுடைமைக்கும் இடையிலான எதிர்ப்பால் மூடி மறைக்கப்

[6] பார்க்கவும்: எனது நூல் ''அரசியல் பொருளாதார விமர்சனத்திற்கு ஒரு பங்களிப்பு,'' பக்கம் 39.

பட்டது; இங்கிலாந்தில் தானியச் சட்டங்களுக்கு [Corn Laws] பின்னர் வெளிப்படையாக மூண்டது — மூலதனத்துக்கும் உழைப்புக்கும் இடையிலான வர்க்கப் போராட்டம் பின்னுக்குத் தள்ளப் படுகிறது. இந்த நேரத்தில் இங்கிலாந்தின் அரசியல் பொருளாதார இலக்கியம் டாக்டர் கெனேயின் மரணத்துக்குப் பின்னர் பிரான்சில் புயலெனப் புறப்பட்ட முன்னேற்ற இயக்கத்தை நினைவுபடுத்து கிறது; ஆனால் செயிண்ட் மார்ட்டினின் கோடைக் காலம் வசந்தத்தை நினைவுபடுத்துவது போன்றதே இது. 1830ஆம் ஆண்டு தீர்மானகர நெருக்கடியை உடனழைத்து வந்தது.

பிரான்சிலும் இங்கிலாந்திலும் முதலாளி வர்க்கம் அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றியிருந்தது. அதுமுதல், வர்க்கப் போராட்டமானது நடைமுறையிலும் அதே போல் தத்துவத் துறையிலும் மேலும் மேலும் பகிரங்கமான, அச்சுறுத்தும் தன்மையுள்ள வழிகளில் நடந்தது. அது விஞ்ஞான வழிப்பட்ட முதலாளித்துவ அரசியல் பொருளாதாரத்திற்கு சாவு மணி அடித்தது. அதுமுதல், இந்தத் தேற்றம் சரியா, அந்தத் தேற்றம் சரியா என்ற கேள்வி மறைந்து விட்டது. அது மூலதனத்துக்கு உபயோகமுள்ளதா, ஊறு செய்வதா? உசிதமானதா, உசிதமற்றதா? அரசியல் வழியில் ஆபத்தானதா, ஆபத்தற்றதா? இதுவே கேள்வியாயிற்று. விருப்பு வெறுப்பற்ற ஆராய்ச்சியாளர்களின் இடத்திற்கு, கூலிக்கமர்த்தப் பட்ட பரிசுப் போட்டியாளர்கள் வந்தார்கள்; உண்மையான விஞ்ஞான ஆராய்ச்சிக்கு பதில் சப்பைக்கட்டுவாதிகளின் குற்ற நெஞ்சும், கெடுமதியும் அரங்கேறின. ஆயினும், தொழிலதிபர்களான காப்டென், பிரைட் ஆகியோரின் தலைமையில் தானியச் சட்ட எதிர்ப்புக் கழகம் ஒரு பிரசுரப் பிரளயத்தில் உலகை ஆழ்த்தும் விதத்தில் வெளியிட்ட பகட்டான பிரசுரங்களும் கூட நிலம் படைத்த பிரபுத்துவ உயர்குடிக்கு எதிரான அவற்றின் வாதப் போரின் காரணத்தால், விஞ்ஞான வழியில் இல்லா விட்டாலும் வரலாற்று வழியில் அக்கறைக்குரியவையாகும். ஆனால், அதன் பிறகு சர் ராபர்ட் பீல் தொடங்கி வைத்த தடையிலா வாணிபச் சட்டத் தொடர் கொச்சைப் பொருளாதாரத்திடமிருந்து [vulgar economy] அதன் கடைசிப் பல்லான இதனையும் பிடுங்கி விட்டது.

1848-49 காலத்திய கண்டந்தழுவிய புரட்சியின் பிரதிபலிப்பு இங்கிலாந்திலும் காணப்பட்டது. இன்னமும் ஓரளவு விஞ்ஞான அருகதைக்கு உரிமை கொண்டாடியோரும் ஆளும் வர்க்கங்களின் குதர்க்கவாதிகளாகவும், துதிபாடுவோராகவுமே இருந்து விடக் கூடாதென ஆசைப்பட்டோரும் மூலதனத்தின் அரசியல் பொருளாதாரத்தை இனிமேலும் புறக்கணிக்க முடியாத பாட்டாளி வர்க்கத்தின் கோரிக்கைகளுடன் இசைவுபடுத்த முயன்றனர். மேலெழுந்தவாரியாக இசைவுபடுத்த முயலும் அவியல்வாதம் இதிலிருந்தே பிறந்தது. ஜான் ஸ்டுவர்ட் மில் இவ்வாதத்தின் மிகச்

சிறந்த பிரதிநிதியாவார். இது முதலாளித்துவ அரசியல் பொருளாதாரம் போண்டியாகி விட்டதன் அறிவிப்பாகும். ருஷ்யப் பேரறிஞரும் விமர்சகருமான நி. செர்னிஷேவ்ஸ்கி ''மில்லின் கருத்துப்படி அரசியல் பொருளாதாரத்தின் உருவரைகள்'' என்னும் தமது நூலில் இதை ஒரு வித்தகருக்குரிய முறையில் விவரித்துள்ளார்.

ஆகவே, பிரான்சிலும் இங்கிலாந்திலும் முதலாளித்துவப் பொருளுற்பத்தி முறையின் பகைமைக் குணம் உக்கிரமிக்க வர்க்க மோதலில் வெளிப்பட்ட பின்னரே அவ்வுற்பத்தி முறை ஜெர்மனியில் உச்ச கட்டத்தை அடைந்தது. மேலும், இதற்கிடையில் ஜெர்மானியப் பாட்டாளி வர்க்கம் ஜெர்மானிய முதலாளி வர்க்கத்தை விட மிகத் தெளிவான வர்க்க உணர்வைப் பெற்றிருந்தது. இவ்வாறு, ஜெர்மனியில் முதலாளித்துவ அரசியல் பொருளாதார விஞ்ஞானம் கடைசியில் சாத்தியமெனத் தோன்றிய அக்கணமே, அது எதார்த்தத்தில் மீண்டும் சாத்தியமற்றதாகி விட்டது.

இந்நிலையில் அதன் பேராசிரியர்கள் இரு பிரிவுகளாகப் பிரிந்தனர். காரிய நோக்குள்ள வியாபாரக் கூட்டமாகிய ஒரு பிரிவு கொச்சைப் பொருளாதாரச் சப்பைக்கட்டுவாதிகளின் மிக மேம்போக்கான, எனவே மிகப் பொருத்தமான பிரதிநிதியாகிய பாஸ்தியாவின் கும்பலில் சேர்ந்தது; தமது விஞ்ஞானத்தின் பேராசிரிய மேன்மை குறித்து கர்வமிக்கதாகிய மற்றொரு பிரிவு இணக்கம் காண முடியாதவற்றை இணக்கம் காணச் செய்யும் முயற்சியில் ஜான் ஸ்டுவர்ட் மில்லைப் பின்பற்றியது. முதலாளித்துவ அரசியல் பொருளாதாரத்தின் தொல்சீர் காலத்தில் போலவே, அதன் வீழ்ச்சிக் காலத்திலும் ஜெர்மானியர்கள் வெறும் பள்ளிச் சிறுவர்களாகவும், போலிகளாகவும், பின்செல்வோராகவும், பெரும் அந்நிய மொத்த வியாபார நிறுவனத்துக்கு சேவை செய்யும் சிறு சில்லறை வியாபாரிகளாகவும், அங்காடிக்காரர்களாகவும் இருந்தனர்.

ஆகவே, ஜெர்மானிய சமுதாயத்தின் விசேஷமான வரலாற்று வளர்ச்சி அந்த நாட்டில் முதலாளித்துவ அரசியல் பொருளாதாரத்தின் சுயமான முயற்சியை அறவே தடுத்து விடுகிறது. ஆனால், அந்தப் பொருளாதாரத்தின் விமர்சனத்தை அது தடுத்து விடவில்லை. இப்படிப்பட்ட விமர்சனம் ஒரு வர்க்கத்தைப் பிரதிநிதித்துவப்படுத்துமாயின் முதலாளித்துவப் பொருளுற்பத்தி முறையை வீழ்த்துவதையும், எல்லா வர்க்கங்களையுமே இறுதியாக இல்லாதொழிப்பதையும் தனது வரலாற்றுப் பணியாகக் கொண்ட வர்க்கத்தையே — பாட்டாளி வர்க்கத்தையே — அது பிரதிநிதித்துவப்படுத்த முடியும்.

ஜெர்மானிய முதலாளி வர்க்கத்தின் கற்றாரும் கல்லாதாருமான பிரதிநிதிகள் எனது முந்தைய எழுத்துகளை எப்படி மௌனம் சாதித்துக் கொன்றார்களோ, அது போலவே ''தாஸ் கேபிட்டலையும்'' மௌனம் சாதித்தே கொன்று விடலாமென

முதலில் முயன்றனர். இந்தத் தந்திரம் இனி காலத்தின் நிலைமைகளுக்குப் பொருந்தாது என்பதைக் கண்டதும் அவர்கள் எனது புத்தகத்தை விமர்சிக்கும் தோரணையில் ''முதலாளித்துவ உள்ளத்தை சாந்தப்படுத்துவதற்கான'' நியமங்களை எழுதினர். ஆனால் அவர்கள் தொழிலாளர்களின் பத்திரிகையுலகில் தங்களை விடவும் வலிமை வாய்ந்த எதிராளிகளைக் கண்டனர். ஃபோல்க்ஸ்தாத்தில் ஜோசப் டீத்ஸ்கென் எழுதிய கட்டுரைகளைப் பார்க்கவும். இவர்களுக்கு (நாளது வரைக்கும்) அவர்கள் பதில் சொன்னார்களில்லை.[7]

''தாஸ் கேபிட்டலின்'' அருமையானதொரு ருஷ்ய மொழிபெயர்ப்பு 1872 வசந்த காலத்தில் வெளிவந்தது. 3,000 பிரதிகள் கொண்ட பதிப்பு இதற்குள் அநேகமாக விற்றுத் தீர்ந்து விட்டது. 1871இலேயே, கீவ் பல்கலைக் கழகத்தில் அரசியல் பொருளாதாரப் பேராசிரியரான நி. சீபர் ''மதிப்பு மற்றும் மூலதனம் பற்றிய டேவிட் ரிக்கார்டோவின் தத்துவம்'' என்ற தமது நூலில், மதிப்பு, பணம், மூலதனம் இவை பற்றிய என் தத்துவம் அதன் அடிப்படை அமிசங்களில் ஸ்மித், ரிக்கார்டோ ஆகியோரது போதனையின் அவசியத் தொடர்ச்சியாகுமென்று குறிப்பிட்டார். இந்நூலாசிரியர் முழுக்க முழுக்கத் தத்துவார்த்தமான நிலையை முரணின்றியும், உறுதியாகவும் கிரகித்திருப்பது இச்சிறந்த நூலை வாசிக்கிற மேற்கு ஐரோப்பியரைப் பிரமிக்கச் செய்வதாயுள்ளது.

''தாஸ் கேபிட்டலில்'' கையாளப்பட்டுள்ள வழிமுறை சரிவரப் புரிந்து கொள்ளப்படவில்லை; அது பற்றி உருவாகியுள்ள ஒன்றுக்கொன்று முரணான பலவிதக் கருத்தோட்டங்களிலிருந்தே இது தெளிவாகிறது.

எடுத்துக்காட்டாக, பாரிஸ் ரெவ்யூ பாசிட்டிவிஸ்ட் என்னைக் கடிந்து கொள்கிறது; ஒரு புறம் நான் பொருளாதார இயலை மாறாநிலைவாத முறையில் அணுகுகிறேனாம்; மறு புறம்—நினைத்துப்

[7] ஜெர்மானியக் கொச்சைப் பொருளாதாரத்தின் வாய்ச்சவடால்காரர்கள் எனது புத்தகத்தின் நடையுடன் முட்டி மோதினர். ''தாஸ் கேபிட்டலின்'' இலக்கியக் குறைபாடுகளை என்னை விட அழுத்தமாக உணர்ந்தவர்கள் யாருமிருக்க முடியாது. ஆயினும், இந்தக் கனவான்களும், அவர்களது நேயர்களும் பயனடைவதற்காகவும், ரசிப்பதற்காகவும் இது தொடர்பாக ஓர் ஆங்கிலேய விமர்சனத்தையும், ஒரு ருஷ்ய விமர்சனத்தையும் மேற்கோள் காட்டுகிறேன். எப்போதுமே எனது கருத்துக்களின்பால் பகைமை பாராட்டும் ''சாட்டர்டே ரெவ்யூ'' ஏடானது முதல் பதிப்பு பற்றிய அதன் குறிப்பில் கூறியது: ''ஆய்வுப் பொருளை முன்வைக்கும் விதம் மிக வறண்ட பொருளாதாரப் பிரச்சினைகளுக்கும் ஒருவகைத் தனிக் கவர்ச்சியை உண்டாக்குகிறது.'' ''செயிண்ட் பீட்டர்ஸ்பர்க் ஜர்னல்'' (Sankt-Peterburgskie Viedomosti), 1872 ஏப்ரல் 8 (20) இதழில் கூறுகிறது: ''ஆய்வுப் பொருளை முன்வைக்கும் விதம், விதிவிலக்கான ஓரிரு தனிப் பகுதிகளைத் தவிர்த்து, சாதாரண வாசகர் புரிந்து கொள்ளத் தக்கதாகவும், தெளிவானதாகவும், ஆய்வுப் பொருளின் சிக்கல் வாய்ந்த நுட்பங்களையும் மீறி குறிப்பிடத்தக்க விறுவிறுப்புடையதாகவும் இருப்பது அதன் தனிச் சிறப்பாகும். சாதாரண வாசகர்களின் மண்டை உடையும் படி வறண்ட, விளங்காத நடையில் புத்தகமெழுதுகிற...பெரும்பாலான ஜெர்மானிய அறிஞர்களை இவ்வகையில் சிறிதும் ஒத்திருப்பவரல்லர் இந்நூலாசிரியர்.''

பாருங்கள் — உள்ளபடியே இருக்கிற உண்மைகளை விமர்சன முறையில் பகுத்தாய்வதுடன் நின்று விடுகிறேனாம்; வருங்கால உணவகங்களுக்கு உண்டிவகைக் குறிப்புகள் (கோண்டிய சமையல் முறைகள்?) தயாரிக்கவில்லையாம். மாறாநிலைவாதம் என்ற கண்டனத்துக்குப் பதில் சொல்லும் விதத்தில் பேராசிரியர் சீபர் குறிப்பிடுகிறார்: "மார்க்சின் வழிமுறை உள்ளபடியே தத்துவத்தின் பாற்பட்டதாய் உள்ள வரை, ஆங்கிலேய மரபு முழுமைக்கும் உரிய உய்த்தறியும் ஆய்வு முறையாகும்; இம்மரபின் நிறைகுறைகள் மிகச் சிறந்த தத்துவார்த்தப் பொருளாதார இயலினர் அனைவருக்கும் பொதுவானவையாகும்." மொ. பிளாக் "Les Theoriciens du Socialisme en Allemagne. Extrait du Journal des Economistes, Juillet et Aout, 1872" என்ற நூலில், எனது வழிமுறை பகுப்பாய்வு முறையிலானது என்று கண்டுபிடிக்கிறார்: "Par cet ouvrage M. Marx se classe parmi les esprits analytiques les plus eminents."* ஜெர்மானிய விமர்சனங்கள் "ஹெகலிய நுட்பவாத முறை" என்று சொல்லிக் கூக்குரலிடுவது உண்மைதான். செயிண்ட் பீட்டர்ஸ்பர்க்கைச் சேர்ந்த யூரோப்பியன் மெசஞ்சர், பிரத்தியேகமாக "தாஸ் கேபிட்டலின்" வழிமுறையைப் பற்றிய ஒரு கட்டுரையில் (1872 மே இதழ், பக்கம் 427-436) எனது ஆராய்ச்சி முறை முழுக்க முழுக்க எதார்த்தபூர்வமாய் இருப்பதாகவும், ஆனால் துர்ப்பாக்கிய வசமாக எனது முன்வைக்கும் முறை ஜெர்மானிய-இயக்கவியல் முறையாய் இருப்பதாகவும் கூறுகிறது. அது குறிப்பிடுகிறது: "எடுத்த எடுப்பில், விஷயத்தை முன்வைக்கும் வெளிவடிவத்தின் அடிப்படையில் முடிவு கூறுவதனால், மார்க்ஸ் கருத்தியல் தத்துவ ஞானிகளிலேயே — எப்போதுமே கருத்தியல் என்ற இச்சொல்லின் ஜெர்மானிய அர்த்தத்தில், அதாவது கெட்ட அர்த்தத்தில் — மிகவும் கருத்தியலான தத்துவஞானியாவார். ஆனால், உண்மையிலேயே பொருளாதார விமர்சனப் பணியில் தமது முன்னோடிகள் அனைவரை விடவும் அவர் எண்ணிறந்த மடங்கு அதிக எதார்த்த நோக்குடையவராவார். அவரை எந்த அர்த்தத்திலும் கருத்தியல்வாதி என அழைக்க முடியாது." இதை எழுதியவரின் விமர்சனத்திலிருந்தே சில பகுதிகளை எடுத்துக்காட்டி அவருக்கு பதிலளிப்பதே உத்தமம்; எனது வாசகர்களில் ருஷ்ய மூலத்தைப் படித்துப் பார்க்க முடியாதவர்களான சிலருக்கும் இந்தப் பகுதிகள் பயன்படக் கூடியவை.

1859இல் பெர்லினில் பிரசுரிக்கப்பட்ட எனது "அரசியல் பொருளாதார விமர்சனத்திற்கான" முன்னுரையில் — பக்கம் IV-VII — எனது வழிமுறையின் பொருள்முதல்வாத அடிப்படையை நான் விவரிக்கிற பகுதியை எடுத்துக்காட்டிய பின்னர், இந்த

---

* "இந்நூலின் மூலம் திரு மார்க்ஸ் தலைசிறந்த பகுப்பாய்வுச் சிந்தனையாளர்கள் மத்தியில் இடம்பெற்று விட்டதாகக் கருதலாம்."

எழுத்தாளர் சொல்கிறார்: ''மார்க்சுக்கு முக்கியத்துவம் வாய்ந்தது யாதென்றால், தாம் ஆராய முற்பட்டுள்ள புலப்பாடுகளின் விதியைக் கண்டுபிடிப்பதே; குறிப்பிட்ட வரலாற்றுக் காலத்திற்குள் திட்டமான வடிவத்தையும் பரஸ்பரத் தொடர்பையும் கொண்டுள்ள இப்புலப்பாடுகளை ஆளுகிற விதி மட்டுமன்று அவருக்கு முக்கியத் துவம் வாய்ந்தது. அவை திரிந்து மாறுபடுவது பற்றிய, வளர்ச்சி யடைவது பற்றிய, அதாவது ஒரு வடிவத்திலிருந்து இன்னொரு வடி வத்துக்கு, தொடர்புகளின் ஒரு வரிசையிலிருந்து வேறொரு வரி சைக்கு மாறிச் செல்வது பற்றிய விதி அவருக்கு இன்னுமதிக முக்கியத்துவம் வாய்ந்ததாகும். இந்த விதியைக் கண்டுபிடித்தவுட னேயே, அதனை சமூக வாழ்வில் வெளிக்காட்டுகிற விளைவுகளை அவர் நுணுக்கமாக ஆராய்கிறார். ஆதலால் மார்க்ஸ் ஒன்றைப் பற்றி மட்டுமே கவலை கொள்கிறார்; சமூக நிலைமைகளின் நிர்ணயமான அமைப்புகள் ஒன்றன்பின் ஒன்றாகத் தொடர வேண்டிய அவ சியத்தை விடாக்கண்டிப்பான விஞ்ஞான ஆராய்ச்சியின் மூலம் உணர்த்துவதைப் பற்றியும், அடிப்படைத் தொடக்க ஆதாரங்களாக அவருக்குப் பயன்படுகிற உண்மைகளை முடிந்த வரை பாரபட்ச மின்றி நிலைநாட்டுவதைப் பற்றியும் மட்டுமே கவலை கொள் கிறார். இன்றுள்ள அமைப்பின் அவசியம், இவ்வமைப்பு தவிர்க்க முடியாமலே மறைந்து அதனிடத்துக்கு வர வேண்டிய இன்னொரு அமைப்பின் அவசியம் ஆகிய இரு அவசியங்களையும், மனிதர்கள் நம்பினாலும் நம்பா விட்டாலும், உணர்ந்திருந்தாலும் உணராதிருந் தாலும் இப்படித்தான் நிகழுமென்பதையும் அவர் ஒருங்கே நிரூபித்து விட்டாலே இதற்குப் போதுமானது. மார்க்ஸ் சமுதாயத்தின் இயக் கத்தை இயற்கை வரலாற்று நிகழ்முறையாக அணுகுகிறார்; இந்நிகழ் முறையை ஆளுகிற விதிகள் மனித சித்தத்தையும் உணர்வையும் மதிநுட்பத்தையும் சார்ந்திராதவை மட்டுமல்ல, பார்க்கப் போனால் அந்த சித்தத்தையும் உணர்வையும் மதிநுட்பத்தையும் நிர்ணயிக்கவும் செய்பவை எனக் கொள்கிறார்.... நாகரிகத்தின் வரலாற்றில் உணர்வு அமிசம் இவ்வளவு கீழ்நிலைப் பாத்திரத்தை வகிக்கிற தென்றால், நாகரிகத்தைக் கருப்பொருளாகக் கொண்ட ஒரு விமர் சன ஆராய்ச்சி உணர்வின் எந்த வடிவத்தையும் அல்லது எந்தப் பயனையும் அடிப்படையாகக் கொண்டிருக்க முடியாது என்பது கூறாமல் விளங்கும். இப்படிச் சொல்வதன் பொருள் அதன் தொடக்க ஆதாரமாகப் பயன்படக் கூடியது கருத்தன்று, பொருளா யதப் புலப்பாடே என்பதாகும். இப்படிப்பட்ட ஆராய்ச்சி ஒரு நிகழ்வை கருத்துகளோடு அல்லாமல், இன்னொரு நிகழ்வோடு மோத விட்டும், ஒப்பிட்டும் பார்ப்பதுடன் நின்று கொள்ளும். முடிந்த வரை சரிநுட்பமாக இரு நிகழ்வுகளையும் ஆராய்வதும், ஒன்றோடொன்று தொடர்புபடுத்தினால் உண்மையிலேயே ஒரு பரிணாமத்தின் வெவ்வேறு அமிசங்களாக அவை அமைவதும் இவ்

வாராய்ச்சிக்கு முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றாகும்; ஆனால், அனைத்திலும் மிக முக்கியமானது இப்படியொரு பரிணாமத்தின் வெவ்வேறு கட்டங்கள் வெளிப்படுகிற அடுத்தடுத்த நிகழ்ச்சிகளின் தொடரை, வரிசைக் கிரமங்கள் மற்றும் சங்கிலித் தொடர்களை விடாக்கண்டிப்புடன் பகுத்தாய்வதாகும். ஆனால், பொருளாதார வாழ்வின் பொது விதிகள் நிகழ் காலத்துக்குப் பிரயோகிக்கப்பட்டாலும், இறந்த காலத்துக்குப் பிரயோகிக்கப்பட்டாலும் ஒன்றேயெனக் கூறப்படும். இதனை மார்க்ஸ் நேரடியாக மறுக்கிறார். இப்படிப்பட்ட பரம சூக்கும விதிகள் கிடையாதென்கிறார். மாறாக, ஒவ்வொரு வரலாற்றுக் காலத்துக்கும் அதற்கேயுரிய விதிகள் இருப்பதாகக் கருதுகிறார். சமுதாயம் குறிப்பிட்ட வளர்ச்சிக் காலத்தை வாழ்ந்து முடித்து விட்டு, குறிப்பிட்ட ஒரு கட்டத்திலிருந்து குறிப்பிட்ட இன்னொரு கட்டத்துக்குச் சென்று கொண்டிருக்கும் போதே, அது இதர விதிகளுக்கும் கீழ்ப்பட்டதாக இருக்கத் தொடங்குகிறது. சுருங்கச் சொல்லின், இதர உயிரியற் கிளைகளில் காணப்படும் பரிணாமத்தின் வரலாற்றுக்கு இணையானதொரு புலப்பாட்டைப் பொருளாதார வாழ்க்கை நமக்கு வழங்குகிறது. பழைய பொருளாதார அறிஞர்கள் பொருளாதார விதிகளைத் தவறாகப் புரிந்து கொண்டு, அவற்றை பௌதிகம், இரசாயனம் இவற்றின் விதிகளுக்கு ஒப்பானவையாகக் காட்டினார்கள். தாவரங்கள் அல்லது மிருகங்கள் எந்த அளவுக்கு அடிப்படையிலேயே தம்மிடையே வேறுபடுகின்றனவோ அந்த அளவுக்கு அடிப்படையிலேயே சமூக உயிரமைப்புகள் [social organisms] தம்மிடையே வேறுபடுகின்றன என்பதைப் புலப்பாடுகளின் இன்னும் செம்மையான பகுப்பாய்வு காட்டுகிறது. அது மட்டுமன்று, அந்த முழு உயிரமைப்புகளின் வேறுபட்ட வடிவமைப்பு, அவற்றின் தனித்தனி அங்கங்களின் மாறுபாடுகள், அந்த அங்கங்கள் செயல்படுகிற வேறுபட்ட நிலைமைகள் முதலானவற்றின் காரணத்தால் ஒரே புலப்பாடு முற்றிலும் வெவ்வேறான விதிகளுக்கு ஆட்படுகிறது. உதாரணமாக, மக்கள்தொகை பற்றிய விதி எல்லாக் காலங்களிலும் எல்லா இடங்களிலும் ஒன்றே என்பதை மார்க்ஸ் மறுக்கிறார். மாறாக, ஒவ்வொரு வளர்ச்சிக் கட்டமும் அதற்கேயுரிய மக்கள்தொகை விதிகளை உடையது என்கிறார். உற்பத்தித் திறனின் வளர்ச்சி நிலை வேறுபடுவதற்கேற்ப, சமுதாய நிலைமைகளும், அவற்றை ஆளுகிற விதிகளும் கூட வேறுபடுகின்றன. இந்தக் கோணத்தில் மூலதனத்தின் ஆட்சியால் நிறுவப்பட்ட பொருளாதார அமைப்பைப் புரிந்து கொள்வது, விளக்குவது என்ற பணியை மார்க்ஸ் மேற்கொள்கையில், பொருளாதார வாழ்வு பற்றிய துல்லியமான ஆராய்ச்சி ஒவ்வொன்றுக்கும் இருக்க வேண்டிய நோக்கத்தையே கறாரான விஞ்ஞான வழியில் வகுத்துரைக்கிறார். குறிப்பிட்ட சமூக உயிரமைப்பின் பிறப்பையும், வாழ்வையும், வளர்ச்சியையும்,

இறப்பையும், இறந்ததன் இடத்துக்கு இன்னுமுயர்ந்த இன்னொரு உயிரமைப்பு வருவதையும் ஒழுங்கியக்குகிற தனிவகை விதிகளை வெளிப்படுத்துவதிலேயே இத்தகைய ஆராய்ச்சியின் விஞ்ஞான மதிப்பு அடங்கியுள்ளது. மார்க்சின் நூல் உண்மையிலேயே இம் மதிப்பைப் பெற்றுள்ளது.''

உள்ளபடியே எனது வழிமுறையென்று இந்த எழுத்தாளர் எதை எடுத்துக் கொள்கிறாரோ, அதை இவ்வாறு பளிச்சிடும் விதத்திலும் (அம்முறையை நான் கையாண்டிருப்பதைப் பொறுத்தமட்டில்) விசால மனப்பாங்குடனும் சித்திரிக்கிறார்; இப்படி அவர் சித்திரிப்பது இயக்கவியல் வழிமுறையைத்தானே?

முன்வைக்கும் முறை ஆராய்ச்சி முறையிலிருந்து வடிவத்தில் வேறுபட்டே தீரும். ஆராய்ச்சி முறையானது ஆதாரங்களை விவரமாகப் பயன்படுத்திக் கொள்ளவும், அவற்றின் வெவ்வேறு வளர்ச்சி வடிவங்களைப் பகுத்தாயவும், அவ்வடிவங்களின் உள் தொடர்பைக் கண்டறியவும் வேண்டியிருக்கிறது. இந்த வேலை முடிந்த பிறகுதான், மெய்யான இயக்கத்தைத் தக்க முறையில் விவரிக்க முடியும். இதை வெற்றிகரமாகச் செய்துவிட்டால், ஆய்வுப் பொருளின் ஜீவன் ஒரு கண்ணாடியில் பிரதிபலிப்பது போல் உருச் சிதையாமல் பிரதிபலிக்குமாறு செய்துவிட்டால், முன்கூட்டியே மனத்துள் வகுக்கப்பட்ட திட்டமே நம்முன் தெரிவது போன்ற தோற்றம் ஏற்படக் கூடும்.

எனது இயக்கவியல் வழிமுறை ஹெகலிய வழிமுறையிலிருந்து வேறுபட்டது மட்டுமன்று, அதற்கு நேர் எதிரானதுமாகும். ஹெகலுக்கு, மனித மூளையின் உயிர் நிகழ்முறையானது, அதாவது சிந்தனை நிகழ்முறையானது—இதனை அவர் ''கருத்து'' என்ற பெயரில் சுயேச்சையான கர்த்தாவாகவே மாற்றி விடுகிறார்—எதார்த்த உலகத்தின் படைப்பாளி ஆகும்; எதார்த்த உலகம் ''கருத்தின்'' புற வடிவமே, புலப்பாட்டு வடிவமே அன்றி வேறில்லை. மாறாக எனக்கு, கருத்துலகம் என்பது மனித உள்ளத்தால் பிரதிபலிக்கப்பட்டு, சிந்தனை வடிவங்களாக மாற்றப்படுகிற பொருளுலகமே அன்றி வேறில்லை.

ஹெகலிய இயக்கவியலின் மாயாவாத அமிசத்தை, சுமார் முப்பது ஆண்டுகள் முன்னரே, அது மோகத்துக்குரிய மோஸ்தராக இருந்து வந்த காலத்திலேயே, நான் கண்டன விமர்சனத்துக்குள்ளாக்கினேன். ஆனால் ''தாஸ் கேபிட்டலின்'' முதல் பாகத்துக்கான வேலையில் நான் ஈடுபட்டிருக்கையிலேயே, இன்று பண்பட்ட ஜெர்மனியில் வாய்கிழியப் பேசுகிற சிடுசிடுப்பான, மண்டைக் கனம் ஏறிய, மட்டரகமான சந்ததியர் ஹெகலை ''செத்த நாயாக''—லெஸ்ஸிங்கின் காலத்தில் தீரர் மோசஸ் மெண்டல் சோன் எப்படி ஸ்பினோசாவை பாவித்தாரோ, அப்படியே—பாவித்து அகமகிழ்வெய்தினர். எனவே, அந்த மாபெரும் சிந்தனை

யாளரின் மாணவன் நான் என்று பகிரங்கமாகப் பறைசாற்றினேன்; ஏன், மதிப்பின் தத்துவம் பற்றிய அத்தியாயத்தில் பல இடங்களில் பிரத்தியேகமாய் ஹெகலுக்கேயுரிய தெரிவிப்பு முறைகளைக் கையாண்டு பார்த்தேன். ஹெகலின் கையில் இயக்கவியல் மாயாவாதத் தன்மைக்கு உள்ளாகிறதென்றாலும், அதன் பொதுவான செயற்பாட்டு வடிவத்தை விரிவாகவும் உணர்வுபூர்வமாகவும் முதன் முதலாக முன்வைத்தவர் அவரே. அவரிடம் இயக்கவியல் தலை கீழாக நின்று கொண்டிருக்கிறது. மாயாவாதச் சிப்பிக்குள் மறைந்துள்ள அறிவார்ந்த முத்தைக் காண வேண்டுமானால், அதனை நேராகத் திருப்பி நிறுத்த வேண்டும்.

இயக்கவியல், அதன் மாயாவாத வடிவத்தில், ஜெர்மனியில் புது மோஸ்தராயிற்று; ஏனெனில் நிலவுகிற அமைப்பை அது உயர்த்திக் காட்டுவதாகவும் போற்றிப் புகழ்வதாகவும் தோன்றியது. அதன் அறிவார்ந்த வடிவத்தில், முதலாளி வர்க்க ஆளுகைக்கும், அதன் வறட்டுச் சூத்திரப் பேராசிரியர்களுக்கும் அது ஓர் அடுக்காத அவக் கேடு; ஏனெனில் இருக்கிற நிலவரத்தை அது கிரகித்தறிந்து ஆமென்று அங்கீகரிப்பதில், அந்த நிலவரத்தின் நிலைமறுப்பையும், அதன் தவிர்க்க முடியாத தகர்வையும் அங்கீகரிப்பதும் அதே போதில் உள்ளடங்குகிறது; மேலும் ஏனெனில், வரலாற்று வழியில் வளர்ச்சியடைந்த ஒவ்வொரு சமுதாய வடிவமும் ஆற்றொழுக்கான இயக்கத்திலிருப்பதாக அது கருதுகிறது, ஆகவே அதன் கணநேர இருத்தலை மட்டுமல்லாமல், அதே அளவுக்கு அதன் மாறிமறையுந் தன்மையையும் கணக்கிலெடுத்துக் கொள்கிறது; மேலும் ஏனெனில், அது எந்த ஏமாற்றுக்கும் பலியாவதில்லை; அது சாராம்சத்தில் விமர்சனப் பார்வையுடையதும், புரட்சிகரமானதும் ஆகும்.

முதலாளித்துவ சமுதாய இயக்கத்தில் உள்ளார்ந்துள்ள முரண்பாடுகள் நவீனத் தொழில் துறையின் காலவட்டச் சகடத்தில் ஏற்படும் மாற்றங்களின் வாயிலாகக் காரியாம்ச முதலாளிக்கு மனத்தில் பதிகின்றன. சர்வவியாபக நெருக்கடி இச்சகடத்தின் முத்தாய்ப் பாகும். அந்த நெருக்கடி இதுவரை பூர்வாங்கக் கட்டத்திலேயே உள்ளதென்றாலும், மீண்டும் நெருங்கி வந்து கொண்டிருக்கிறது; அது தனது செயற்களத்தின் சர்வவியாபகத் தன்மையாலும், தனது செயலின் உக்கிரத்தாலும், புதிய, புனித பிரஷ்ய-ஜெர்மானிய சாம்ராஜ்யத்தின் துதிபாடிகளான நேற்று முளைத்த காளான்களின் மண்டையிலும் கூட இயக்கவியலைப் புகுத்தும்.

கார்ல் மார்க்ஸ்

லண்டன், 1873 ஜனவரி 24

## பிரெஞ்சுப் பதிப்புக்கு முன்னுரை

பிரஜை மோரிஸ் லஷாத்துக்கு.

அன்புடையீர்,

''தாஸ் கேபிட்டலின்'' மொழிபெயர்ப்பைத் தொடர் வெளியீடாகப் பிரசுரிப்பதென்ற தங்கள் கருத்தை மெச்சுகிறேன். இந்த வடிவத்தில் புத்தகம் தொழிலாளி வர்க்கத்துக்கு மேலும் எளிதாகக் கிடைக்கக் கூடியதாய் இருக்கும்; இந்த நோக்கம் வேறு எதையும் விட எனக்கு முக்கியமானதாகும்.

தங்கள் ஆலோசனையின் நல்ல பக்கம் அது; ஆனால் நாணயத்தின் மறுபக்கம் இதோ: நான் கையாண்டுள்ள, இதுகாறும் பொருளாதார விவகாரங்களுக்குப் பிரயோகிக்கப்படாத பகுப்பாய்வு முறையினால் ஆரம்ப அத்தியாயங்கள் படிப்பதற்குக் கடினமாயுள்ளன. பிரெஞ்சுப் பொதுமக்கள் எப்போதுமே ஒரு முடிவுக்கு வர அவசரப்படக் கூடியவர்கள்; பொதுவான கோட்பாடுகளுக்கும், தங்களது உணர்ச்சிகளைக் கிளறி விட்டுள்ள உடனடிப் பிரச்சினைகளுக்கும் இடையிலான தொடர்பை அறியத் துடிப்பவர்கள்; ஆகவே தாங்கள் உடனே தொடர்ந்து படிக்க இயலவில்லை என்பதால் அவர்கள் ஆர்வமிழக்கலாம் என அஞ்ச வேண்டியுள்ளது.

உண்மையைக் காணத் துடிக்கிற வாசகர்களை முன்கூட்டியே எச்சரித்து, முன்கூட்டியே ஆயத்தப்படுத்துவதன் மூலம் அல்லாமல் சங்கடத்தை சமாளிக்கச் சக்தியற்றவனாய் இருக்கிறேன். விஞ்ஞானத்துக்கு ராஜபாட்டை ஏதுமில்லை; அதன் களைப்பூட்டும் செங்குத்துப் பாறைகளில் ஏறத் துணிந்தவர்களுக்கே அதன் ஒளிரும் உச்சிகளை எய்துகிற வாய்ப்புண்டு.

அன்புடையீர்! தங்கள் நம்பிக்கைக்குரிய,

தங்கள் உண்மையுள்ள,

கார்ல் மார்க்ஸ்

லண்டன், 1872 மார்ச் 18

# பிரெஞ்சுப் பதிப்புக்குப் பின்னுரை

முடிந்த வரை துல்லியமாகவும், ஏன் சொல்லுக்குச் சொல் நேரான அர்த்தத்திலும் கூட, ஒரு மொழிபெயர்ப்பைத் தயாரிக்கிற பணியை திரு ஜே. ராய் ஏற்றுக் கொண்டார். அதனை அவர் இம்மியும் பிசகாத முறையில் நிறைவேற்றியிருக்கிறார். ஆனால், அவரது இந்த இம்மியும் பிசகாத நிலையே அவருடைய வாசகத்தைத் திருத்த வேண்டிய கட்டாயத்துக்கு என்னை ஆளாக்கியது; அதனை வாசகருக்கு மேலும் புரியக் கூடியதாய் ஆக்குவதே இத்திருத்தங்களின் நோக்கம். புத்தகம் பகுதி பகுதியாகப் பிரசுரிக்கப்பட்டதால், அவ்வப்போது புகுத்தப்பட்ட இந்த மாற்றங்கள் ஒரே மாதிரியான கவனத்துடன் செய்யப்படவில்லை; இதன் விளைவாக நடையில் இசைவின்மை தவிர்க்க முடியாததாயிற்று.

திருப்பிப் பார்த்துத் திருத்தும் வேலையை மேற்கொண்டதுமே, அடிப்படை மூலவாசகத்தையும் (இரண்டாம் ஜெர்மன் பதிப்பு) திருத்த நேரிட்டது; சில வாதங்களை எளிமைப்படுத்துவது, மற்றவற்றை நிறைவு செய்வது, வரலாறு அல்லது புள்ளி விவரம் தொடர்பாகக் கூடுதலான ஆதாரங்களைத் தருவது, விமர்சன யோசனைகளைச் சேர்த்துக் கொள்வது போன்ற பணிகளையும் நான் செய்ய நேரிட்டது. எனவே இந்த பிரெஞ்சுப் பதிப்பின் இலக்கியக் குறைபாடுகள் என்னவானாலும், மூலத்திற்கில்லாத ஒரு வகை விஞ்ஞான மதிப்பு இதற்குள்ளது; ஜெர்மன் மொழி தெரிந்த வாசகர்களும் கூட இதனைப் பார்த்தறிய வேண்டும்.

இரண்டாம் ஜெர்மன் பதிப்புக்கான பின்னுரையில் ஜெர்மனியில் அரசியல் பொருளாதாரத்தின் வளர்ச்சியையும், இந்நூலில் பிரயோகிக்கப்பட்டுள்ள வழிமுறையையும் விவரிக்கிற பகுதிகளைக் கீழே தருகிறேன்.

***கார்ல் மார்க்ஸ்***

***லண்டன், 1875 ஏப்ரல் 28***

# மூன்றாம் ஜெர்மன் பதிப்புக்கு முன்னுரை

இந்த மூன்றாம் பதிப்பைத் தாமே அச்சுக்குத் தயார்படுத்த மார்க்ஸ் இல்லாமற் போய் விட்டார். எதிராளிகளும் கூட இப் போது வணங்குகிற மகத்துவத்துக்கு உரியவரான இம்மாபெரும் சிந்தனையாளர் 1883 மார்ச் 14ஆம் நாள் காலமானார்.

மார்க்சை இழந்ததன் மூலம், எனது மிகச் சிறந்த, மிக உண்மை யான நண்பரை, நாற்பதாண்டு காலம் நண்பராய் இருந்தவரை, சொல்லிலடங்காத அளவுக்கு நான் கடன்பட்டுள்ள நண்பரை இழந்து விட்டேன். இந்நிலையில், இந்த மூன்றாம் பதிப்பின் வெளி யீட்டையும், மார்க்ஸ் கையெழுத்துப் பிரதியாக விட்டுச் சென்ற இரண்டாம் பாகத்தின் வெளியீட்டையும் கவனித்துக் கொள்ளும் பொறுப்பு எனதாயிற்று. எனது பொறுப்பின் முதல் பகுதியை நான் நிறைவேற்றிய விதம் குறித்து, இப்போது வாசகருக்கு இங்கே விளக்கமளிக்க வேண்டும்.

பல தத்துவ விவகாரங்களை இன்னும் சரியாக வகுத்துரைக் கவும், புதியனவற்றைப் புகுத்தவும், வரலாறு மற்றும் புள்ளி விவரம் சம்பந்தமான ஆதாரங்களைக் காலத்துக்கொப்ப நவீனமாக்கவும், முதல் பாகத்தின் வாசகத்தில் பெரும் பகுதியைத் திருத்தியெழுதவும் மார்க்ஸ் முதலில் திட்டமிட்டிருந்தார். ஆனால், அவர் நோய்வாய்ப் பட்டதாலும், இரண்டாம் பாகத்தை இறுதியாகச் சீரமைக்க வேண் டிய அவசரத் தேவை ஏற்பட்டதாலும், அவர் இத்திட்டத்தைக் கைவிட வேண்டியதாயிற்று. மிக அவசியமான மாற்றங்களை மட்டுமே செய்வதென்றும், பிரெஞ்சுப் பதிப்பில் ("Le Capital." Par Karl Marx. Paris, Lachatre 1873) புகுத்தப்பட்ட புதிய பகுதிகளை மட்டுமே சேர்த்துக் கொள்வதென்றும் முடிவாயிற்று.

மார்க்சே பலவிடங்களைத் திருத்தியிருந்ததும், பிரெஞ்சுப் பதிப்பில் பார்த்துக் கொள்ள வேண்டிய இடங்களைக் குறிப்பிட் டிருந்ததுமான ஒரு ஜெர்மன் பிரதியும், பயன்படுத்தப்பட வேண் டிய திட்டமான பகுதிகளைச் சுட்டியிருந்த ஒரு பிரெஞ்சுப் பிரதியும் அவர் விட்டுச் சென்ற புத்தகங்களில் இருந்தன. இந்த மாற்றங்களும்

# Das Kapital.

## Kritik der politischen Oekonomie.

Von

**Karl Marx.**

Erster Band.

**Buch I: Der Produktionsprocess des Kapitals.**

Hamburg

Verlag von Otto Meissner.

1867.

New-York: L. W. Schmidt, 24 Barclay-Street.

*மூலதனம், முதல் பாகம், முதல் ஜெர்மன் பதிப்பின் மேலட்டை (சிறிதாக்கியது)*

சேர்ப்புகளும், சில விதிவிலக்குகளுடன். கூட, புத்தகத்தின் கடைசிப் பகுதியான [தமிழ்ப் பதிப்பில் கடைசிக்கு முந்தைய பகுதி] ''மூலதனத் திரட்டல்'' என்ற பகுதியில் மட்டுமே வருகின்றன. ஏனைய பகுதிகளைக் காட்டிலும் இந்தப் பகுதியில் முந்தைய வாசகம் மூல நகலை ஒட்டியிருந்தது; இதற்கு முன்னால் வரும் பிரிவுகளோ இன்னும் செம்மையாகத் திருத்தி சரிசெய்யப்பட்டிருந் தன. எனவே, இப்பகுதியில் நடையானது மேலும் விறுவிறுப்பான தாக, மேலும் ஏகவார்ப்பினதாக, ஆனால் மேலும் கவனக்குறை வானதாகவும், ஆங்கில வழக்குகள் நிறைந்ததாகவும் இருந்தது; சில இடங்கள் தெளிவற்றிருந்தன; வாதங்களை முன்வைப்பதில் பல இடங்களில் இடைவெளிகள் இருந்தன. சில முக்கிய விவரங்கள் ஜாடையாகவே குறிக்கப்பட்டிருந்தன.

நடையைப் பொறுத்த வரை மார்க்சே பல உட்பிரிவுகளை முழுமையாகத் திருப்பிப் பார்த்துத் திருத்தியிருந்தார்; ஆங்கிலக் கலைச் சொற்களையும் இதர ஆங்கில வழக்குகளையும் நீக்குவதில் எந்த அளவுக்குச் செல்லலாம் என்பதை, இதிலும், அத்தோடு எண் ணற்ற வாய்மொழி யோசனைகளிலும் எனக்கு சுட்டிக் காட்டியிருந் தார். எது எப்படியானாலும், மார்க்ஸ் சேர்ப்புகளையும் துணை வாச கங்களையும் சரிபார்த்துத் திருத்தி, சரளமான பிரெஞ்சின் இடத்தில் தனக்கேயுரிய மணிச்சுருக்கமான ஜெர்மன் மொழியை அமர்த்தி யிருப்பார்; அவற்றைப் பெயர்த்துச் சேர்க்கும் போது, மூல வாசகத் துடன் அதிகபட்ச இசைவு கொண்டவையாக்குவதோடு நான் திருப்தியடைய வேண்டியிருந்தது.

இவ்வாறு, நூலாசிரியரே மாற்றியிருப்பார் என்று நான் உறுதி யாக நம்பிய இடங்கள் தவிர்த்து, ஒரு வார்த்தை கூட இந்த மூன்றாம் பதிப்பில் மாற்றப்படவில்லை. ஜெர்மானியப் பொருளாதார அறிஞர்கள் தங்கள் கருத்தைத் தெரிவிக்க வழக்கமாகப் பயன் படுத்துகிற இப்போதைய பிதற்றலை ''தாஸ் கேபிட்டலுக்குள்'' நுழைக்கும் எண்ணம் எனக்கு வரவே வராது. இந்தக் குளறுபடியில், எடுத்துக்காட்டாக, மற்றவர்களை ரொக்கத்துக்கு உழைப்பைத் தன்னிடம் கொடுக்கச் செய்பவன் உழைப்பைக் கொடுப்போன் (Arbeit*geber)* என்று அழைக்கப்படுகிறான்; யாருடைய உழைப்பு கூலிக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறதோ அவன் உழைப்பை எடுப்போன் (Arbeit*nehmer)* என்று அழைக்கப்படுகிறான். பிரெஞ்சு மொழியிலும், *''travail''* என்ற வார்த்தை அன்றாட வாழ்க்கையில் ''வேலை'' என்ற அர்த்தத்தில் பயன்படுத்தப்படு கிறது. ஆனால் எந்தப் பொருளாதார அறிஞராவது முதலாளியை *donneur de travail* (உழைப்பைக் கொடுப்போன்) என்றோ, தொழிலாளியை *receveur de travail* (உழைப்பை எடுப்போன்) என்றோ அழைப்பாரானால் பிரெஞ்சுக்காரர்கள் அவரை சித்த சுவாதீனமற்றவர் என்று சரியாகவே கருதுவார்கள்.

வாசகரும் முழுவதிலும் பயன்படுத்தப்படும் ஆங்கிலேய நாணயங்களையும், பணங்களையும், அளவைகளையும், எடைகளையும் அவற்றின் புதிய ஜெர்மானியச் சமதைகளாக மாற்றவும் நான் உரிமையெடுத்துக் கொள்ளவில்லை. முதல் பதிப்பு வெளிவந்த போது, வருடத்தில் எத்தனை நாட்கள் உண்டோ, அத்தனை வகையான அளவைகளும் எடைகளும் ஜெர்மனியில் இருந்தன. இதன்னியில், இருவகை மார்க்குகளும் (அந்த நேரத்தில் ரைக்ஸ்மார்க் என்பது சோயட்பீரின் கற்பனையில் மட்டுமே இருந்தது; அதை அவர் முப்பதாம் ஆண்டுகளின் பிற்பகுதியில் புதிதாகக் கண்டுபிடித்திருந்தார்), இருவகை கூல்டினும், neues Zweidrittel* என்றழைக்கப்பட்ட ஒன்று உட்படக் குறைந்தது மூன்று வகை தாலெரும் இருந்தன. இயற்கை விஞ்ஞானங்களில், மெட்ரிக் முறை வழங்கியது. உலகச் சந்தையில் ஆங்கிலேய அளவைகளும் எடைகளும் வழங்கின. இந்நிலையில் உண்மை விவரம் சார்ந்த தனது நிரூபணங்களில் அநேகமாக அனைத்தையுமே பிரித்தானியத் தொழில் துறை நிலைமைகளிலிருந்து எடுத்துக் கொள்ள வேண்டியிருந்த ஒரு நூலில் ஆங்கிலேய அளவை அலகுகள் இடம் பெற்றது முற்றிலும் இயல்பே. கடைசியாகச் சொன்ன காரணம் இன்னும் கூடத் தீர்மானகரமானது; முக்கியமாக ஏனெனில், உலகச் சந்தையில் இந்நிலைமைகள் மாறவேயில்லை எனலாம்; ஆங்கிலேய எடைகளும் அளவைகளும் — குறிப்பாக இரும்பு, பஞ்சு போன்ற கேந்திரத் தொழில்களில் — அநேகமாய் முழுமையாகவே ஆதிக்கம் செலுத்துகின்றன.

முடிவில் மார்க்சின் மேற்கோள் காட்டும் கலை சரிவரப் புரிந்து கொள்ளப்படவில்லை என்பதால், அது பற்றிச் சில வார்த்தைகள். மேற்கோள்கள் முற்றிலும் உண்மை விவரக் கூற்றுகளாக அல்லது விவரணங்களாக இருக்கும் போது, எளிய ஆவண நிரூபணமாகப் பயன்படுகின்றன என்பது உண்மையே. உதாரணம்: ஆங்கிலேய நீலப் புத்தகங்களிலிருந்து தரப்படும் மேற்கோள்கள். ஆனால், ஏனைய பொருளாதார அறிஞர்களின் தத்துவக் கருத்துகள் எடுத்துக் காட்டப்படும் போது சங்கதி இதுவன்று. இங்கே, வளர்ச்சிப் போக்கில் உருப்பெற்ற ஒரு பொருளாதாரக் கருத்து முதன் முதல் தெளிவாக விரித்துரைக்கப்பட்டது எங்கே, எப்போது, யாரால் என்பதைக் கூறுவது மட்டுமே மேற்கோளின் நோக்கமாகக் கொள்ளப்படுகிறது. பேசப்படும் பொருளாதாரக் கருத்தோட்டம் இவ்விஞ்ஞானத்தின் வரலாற்றுக்கு ஓரளவு முக்கியத்துவமுடையதாக இருக்க வேண்டும், அது தன் காலத்திய பொருளாதார நிலைமையின் ஏறக்குறைய பொருத்தமான தத்துவத் தெரிவிப்பாக இருக்க வேண்டும் என்பது மட்டுமே இங்கு நோக்கம். ஆனால், இந்தக்

* புதிய மூன்றிலிரு பங்கு: தாலெரில் ⅔ பங்கு மதிப்புள்ள வெள்ளி நாணயம்.

கருத்தோட்டம் நூலாசிரியரின் பார்வையில் அறுதியாகவோ, ஒப்பளவிலோ இன்னமும் சரியானதுதானா, அல்லது அது முழுக்க முழுக்க கடந்த கால வரலாறாகி விட்டதா என்பது சிறிதும் முக்கிய மன்று. எனவே, இந்த மேற்கோள்கள் வாசகத்துக்கு ஒரு நேர்முக வர்ணனையே, பொருளாதார விஞ்ஞானத்தின் வரலாற்றிலிருந்து பெறப்பட்ட வர்ணனையே. பொருளாதாரத் தத்துவத்தில் ஏற்பட்ட முக்கியமான முன்னேற்றங்களில் சிலவற்றின் தேதிகளையும், மூல கர்த்தாக்களையும் அவை நிலைநாட்டுகின்றன. இது இந்த விஞ் ஞானத்திற்கு மிக அவசியமான ஒன்று; ஏனெனில் இதன் வரலாற் றாசிரியர்கள் தன்னலவாதிகளுக்கேயுரிய கபடமான அறியாமை யின் சின்னங்களாக இது வரை இருந்துள்ளனர். இரண்டாம் பதிப்பின் பின்னுரையில் சொல்லியிருப்பது போல, ஜெர்மானியப் பொருளாதார அறிஞர்களை மேற்கோள் காட்டுகிற சந்தர்ப்பம் மார்க்சுக்கு மிகவும் விதிவிலக்கான இடங்களிலேயே கிடைத்தது ஏன் என்று இப்போது புரியும்.

1884ஆம் ஆண்டில் இரண்டாம் பாகம் வெளிவரும் என்ற நம்பிக்கையுள்ளது.

பிரெடெரிக் எங்கெல்ஸ்

லண்டன், 1883 நவம்பர் 7

## நான்காம் ஜெர்மன் பதிப்புக்கு முன்னுரை

வாசகம், அடிக் குறிப்புகள் இரண்டையுமே இயன்ற வரை இறுதியான வடிவில் அமைத்திடுவது நான்காம் பதிப்பிற்கு அவசியமாய் இருந்தது. நான் இந்தப் பணியை எப்படி நிறைவேற்றியிருக்கிறேன் என்பதைக் கீழ்க்கண்ட சிறு விளக்கம் காட்டும்.

பிரெஞ்சுப் பதிப்பையும் மார்க்சின் கையெழுத்துப் பிரதிக் குறிப்புகளையும் மீண்டும் ஒப்பிட்டுப் பார்த்த பின்னர், நான் அந்த மொழிபெயர்ப்பிலிருந்து ஜெர்மன் வாசகத்துக்கு மேலும் சிலவற்றைச் சேர்த்துள்ளேன். பக்கம் 80 (3ஆம் பதிப்பில் பக்கம் 88) [தமிழ்ப் பதிப்பில் பக்கம் 165], பக்கம் 458-60 (3ஆம் பதிப்பில் பக்கம் 509-10) [தமிழ்ப் பதிப்பில் பக்கம் 664-69], பக்கம் 547-51 (3ஆம் பதிப்பில் பக்கம் 600) [தமிழ்ப் பதிப்பில் பக்கம் 784-89], பக்கம் 591-93 (3ஆம் பதிப்பில் பக்கம் 644) [தமிழ்ப் பதிப்பில் பக்கம் 842-45], பக்கம் 596இல் (3ஆம் பதிப்பில் பக்கம் 648) குறிப்பு 1 [தமிழ்ப் பதிப்பில் பக்கம் 848, குறிப்பு 159] ஆகியவற்றில் இந்தச் சேர்ப்புகள் காணப்படும். சுரங்கத் தொழிலாளர்கள் பற்றிய நீண்ட அடிக் குறிப்பை வாசகத்துக்குள்ளேயே சேர்த்து விடுவதன் மூலம் பிரெஞ்சு, ஆங்கிலப் பதிப்புகளின் உதாரணத்தைப் பின்பற்றியிருக்கிறேன் (3ஆம் பதிப்பு, பக்கம் 509-15; 4ஆம் பதிப்பு, பக்கம் 461-67) [தமிழ்ப் பதிப்பு, பக்கம் 669-78]. இதர சிறு மாற்றங்கள் முற்றிலும் செய்நுட்பத் தன்மையுள்ளவையே.

மேலும், சில கூடுதல் விளக்கக் குறிப்புகளை, குறிப்பாக மாற்றமடைந்த வரலாற்று நிலைமைகள் கோருவதாகத் தோன்றிய இடங்களில், சேர்த்துள்ளேன். இந்தக் கூடுதல் குறிப்புகள் அனைத்தும் சதுர வடிவ அடைப்புக் குறிகளில், எனது பெயரின் முதல் எழுத்துகள் அல்லது "D.H."* என்பதுடன் தரப்பட்டுள்ளன.**

---

* "பதிப்பாசிரியர்."

** இந்தப் பதிப்பில் அவை சதுர வடிவ அடைப்புக் குறிகளில் எங்கெல்ஸ் குறிப்புகளாகத் தரப்பட்டுள்ளன. — பதிப்பாசிரியர்.

இதற்கிடையில், ஆங்கிலப் பதிப்பின் வெளியீட்டையொட்டி, பல மேற்கோள்களை முழுமையாகத் திருப்பிப் பார்த்துத் திருத்த வேண்டிய அவசியம் ஏற்பட்டது. மிகப் பெரும்பாலான மேற்கோள்கள் ஆங்கில ஆதாரங்களிலிருந்து எடுக்கப்பட்டவை; ஆங்கிலப் பதிப்பில் இவற்றை ஜெர்மன் மொழியிலிருந்து மறு மொழிபெயர்ப்பாக இல்லாமல் மூல வடிவமான ஆங்கில வடிவத்திலேயே தரும் பொருட்டு, மேற்கோள்கள் அனைத்தையும் அவற்றின் மூலங்களுடன் ஒப்பிட்டுச் சரிபார்க்கும் வேலையை மார்க்சின் கடைசிப் புதல்வி எலினார் மேற்கொண்டார். எனவே, நான்காம் பதிப்பைத் தயாரிக்கையில், இந்த ஆங்கிலப் பதிப்பின் வாசகத்துடன் சரிபார்த்துக் கொள்வது எனது கடமையாயிற்று. இந்தச் சரிபார்த்தலினால் பல்வேறு சிறு பிழைகள் தெரிய வந்தன. குறிப்பேடுகளிலிருந்து எடுத்தெழுதுவதில் ஏற்பட்ட தவறுகளின் விளைவாகவும், மூன்று பதிப்புகளின் குவிந்து போன அச்சுப் பிழைகளின் விளைவாகவும் பக்க எண்கள் தவறாகக் குறிக்கப் பட்டிருந்தன; மேற்கோள் குறிகள் அல்லது விடுபாட்டுக் குறிகள் இடந்தவறிப் போடப்பட்டிருந்தன; பெருமளவிலான மேற்கோள் களை நோட்டுப் புத்தகக் குறிப்புகளிலிருந்து எடுத்தெழுதும் போது இம்மாதிரியான பிழைகள் தவிர்க்க முடியாதவை; பலவிடங்களில் சில வார்த்தைகளுக்கான மொழிபெயர்ப்பு அவ்வளவாகத் திருப்தி யளிக்கவில்லை. 1843-45 காலத்திய பழைய பாரிஸ் குறிப்பேடு களிலிருந்து மேற்கோள் காட்டப்பட்ட சிற்சில பகுதிகளில் ஆங்கில வாசகத்தையே இப்போது பயன்படுத்த வேண்டியிருந்தது. அப் போது மார்க்சுக்கு ஆங்கிலம் தெரியாது. ஆங்கிலேயப் பொருளா தார அறிஞர்கள் எழுதியவற்றை பிரெஞ்சு மொழிபெயர்ப்புகள் வாயிலாகவே படித்துக் கொண்டிருந்தார். இந்த இரட்டை மொழி பெயர்ப்பால் அர்த்தச் சாயல் சற்றே மாறிப் போயிற்று. உதாரணமாக, ஸ்டுவர்ட், யூர் முதலோனோரின் மேற்கோள்களை மூல ஆங்கில வாசகத்திலிருந்தே தர வேண்டியிருந்தது. இவை போன்ற வேறு சில சிறு பிழைகள் அல்லது கவனக் குறைவுகளும் சரிசெய்யப்பட்டன. ஆனால், இந்தப் பிரயாசைமிக்க பிழை திருத்தப் பணியெல்லாம் நூலில் குறிப்பிட்டுச் சொல்லக் கூடிய ஒரே ஒரு சிறு மாற்றத்தையும் கூட ஏற்படுத்தி விடவில்லை என்பதை நான்காம் பதிப்பை முந்தைய பதிப்புகளுடன் ஒப்பிட்டுப் பார்க்கிற எவரும் ஐயமறக் காணலாம். ஒரே ஒரு மேற்கோளுக்குத்தான் மூலத்தைக் கண்டுபிடிக்க முடியவில்லை — அது ரிச்சர்டு ஜோன்சிடமிருந்தான மேற்கோள் (நான்காம் பதிப்பு, பக்கம் 562, குறிப்பு 47). அநேகமாக, புத்தகத்தின் தலைப்பைக் குறித்துக் கொண்ட போது மார்க்ஸ் தவறியிருக்கலாம்.* ஏனைய

* மார்க்ஸ் தவறியது புத்தகத்தின் தலைப்பு குறித்தல்ல, பக்கம் குறித்தே. அவர் 37 என்பதற்குப் பதில் 36 எனக் குறித்து விட்டார். — ஆங்கிலப் பதிப்பாசிரியர். [பார்க்கவும்: தமிழ்ப் பதிப்பில் பக்கம் 803-04.]

எல்லா மேற்கோள்களும் அவற்றின் நம்பகத் தன்மையை சற்றும் இழந்து விடவில்லை; இப்போதைய சரியான வடிவத்தின் பயனாய் அத்தன்மையை உயர்த்திக் கொண்டுள்ளன எனலாம்.

ஆயினும், இங்கே ஒரு புழங்கதைக்கு நான் திரும்ப வேண்டி யுள்ளது.

நான் அறிந்த வரை, மார்க்ஸ் எடுத்தாண்ட மேற்கோளின் துல் லியத் தன்மை கேள்விக்கிடமானது ஒரே ஒரு முறைதான். இவ் விவகாரம் அவரது ஆயுட்காலத்துக்குப் பிறகும் நீண்டு கொண்டே போனதால், இங்கே அதனை நான் கவனியாது விடுவதற்கில்லை.

1872 மார்ச் 7ஆம் நாள் ஜெர்மானியத் தொழிலதிபர்கள் சங்கத்தின் ஏடான பெர்லின் **கங்கார்டியா** ஏட்டில் ''கார்ல் மார்க்ஸ் எப்படி மேற்கோள் காட்டுகிறார்'' என்று தலைப்பிட்ட ஓர் அனாமதேயக் கட்டுரை வெளிவந்தது. 1863 ஏப்ரல் 16 அன்றைய கிளாட்ஸ்டனின் வரவு செலவுத் திட்ட உரையிலிருந்து காட்டப் படும் மேற்கோள் (அது 1864இல் சர்வதேச உழைக்கும் மக்கள் சங்கத்தின் தொடக்க உரையில் எடுத்தாளப்பட்டது; ''மூலதனம்'' முதல் பாகத்தில் திரும்பவும் எடுத்தாளப்பட்டது.—நான்காம் பதிப்பு, பக்கம் 617; மூன்றாம் பதிப்பு, பக்கம் 671) [தமிழ்ப் பதிப்பு, பக்கம் 876] பொய்யாகத் திரிக்கப்பட்டிருப்பதாகவும், ''செல்வம், அதிகாரம் இவற்றின் இந்தப் போதையூட்டும் பெருக் கம்...சொத்துடைத்த வர்க்கங்களின் எல்லைக்குள்ளேயே முற்றிலும் அடங்கியதாய் இருக்கிறது'' என்ற வாக்கியத்தின் ஒரே ஒரு வார்த்தை கூட ஹன்சார்டில் வெளியான (பெருமளவு அதிகார பூர்வ) சுருக்கெழுத்து அறிக்கையில் காணப்படவில்லை எனவும் இந்த அனாமதேயக் கட்டுரையில் தர்மாவேசத்துடனும் பாராளு மன்றத்துக்கொவ்வாத மொழியிலும் கூறப்படுகிறது. ''ஆனால் கிளாட்ஸ்டனின் உரையில் இந்த வாக்கியம் எவ்விடத்தும் காணப் படவில்லை. நேர் எதிரானதே அதில் கூறப்படுகிறது.'' (கொட்டை எழுத்தில்): ''**வடிவம், சாரம் இரண்டிலுமே இந்த வாக்கியம் மார்க்சால்** செருகப்பட்ட பொய்யாகும்.''

**கங்கார்டியா** ஏட்டின் இந்த இதழ் மே மாதத்தில் மார்க்சுக்கு அனுப்பப்பட்டது; ஜூன் முதல் தேதிய **ஃபோல்க்ஸ்தாத்தில்** மார்க்ஸ் இந்த அனாமதேய எழுத்தாளருக்கு பதிலளித்தார். மேற் கோளுக்காகத் தாம் பயன்படுத்தியது எந்தப் பத்திரிகையின் செய்தி என்பதை நினைவு கூர முடியாததால், அவர் முதலில் இரு ஆங்கிலப் பிரசுரங்களிலிருந்து அதற்கீடான மேற்கோளையும், பின்னர் **தி டைம்ஸ்** பத்திரிகையில் வந்த செய்தியையும் எடுத்துக் காட்டியதுடன் நிறுத்திக் கொண்டார். **தி டைம்ஸ்** செய்தியின் படி, கிளாட்ஸ்டன் கூறுவதாவது:

''இந்த நாட்டின் செல்வத்தைப் பொறுத்த வரை நிலைமை இதுவே. செல்வம், அதிகாரம் இவற்றின் இந்தப் போதையூட்டும்

பெருக்கம் வசதியான நிலையிலுள்ள வர்க்கங்களின் எல்லைக் குட்பட்டது என்பது எனது நம்பிக்கையாக இருக்குமேயானால், இப் பெருக்கத்தை அநேகமாக அச்சத்துடனும் வேதனையுடனும் நோக்க வேண்டும் என்றே நான் கருதுவேன். உழைக்கும் மக்களின் நிலையை இது கிஞ்சிற்றும் கணக்கிலெடுத்துக் கொள்ளவில்லை. நான் விவரித்திருப்பதும், சரியான தகவல் விவரங்களை ஆதார மாகக் கொண்டதென நான் நினைப்பதுமாகிய இந்தப் பெருக்கம் சொத்துடைத்த வர்க்கங்களின் எல்லைக்குள்ளேயே முற்றிலும் அடங்கியதாய் இருக்கிறது.''

இவ்வாறாக, அது அப்படி இருந்தால், தான் வருத்தப்படுவதாக கிளாட்ஸ்டன் கூறுகிறார்; ஆனால் அது அப்படித்தான் இருக்கிறது: செல்வம், அதிகாரம் இவற்றின் இந்தப் போதையூட்டும் பெருக்கம் சொத்துடைத்த வர்க்கங்களின் எல்லைக்குள்ளேயே முற்றிலும் அடங்கியதாய் இருக்கிறது. பெருமளவு அதிகாரபூர்வ ஹன்சார் டைப் பொறுத்த வரை, மார்க்ஸ் சொல்கிறார்: ''தானே பின்னர் புரட்டிச் சரிக்கட்டிய [zurechtgestumpert] வாசகத்தில், திரு கிளாட்ஸ்டன் சாமர்த்தியமாக இந்தப் பகுதியை நீக்கி விடுகிறார் [wegzupfuschen]. ஏனென்றால் ஆங்கிலேய நிதியமைச்சர் ஒரு வரின் வாயிலிருந்து இப்படியொரு கூற்று வெளியாவது நிச்சயமாக அவரை சந்தேகத்துக்குரியவராக்கும். இது ஆங்கிலேயப் பாராளுமன்றத்தில் பரம்பரையாக வழக்கத்திலிருக்கும் நடைமுறை தான், பேபலுக்கெதிராக சிறியவர் லாஸ்கர் செய்த விஷமம் அன்று.''

அனாமதேய எழுத்தாளர் மேலும் மேலும் கொதிப்படைகிறார். ஜூலை 4 தேதிய கங்கார்டியாவில், அவர் நேரல்லாத ஆதாரங் களை நிராகரித்து விடுகிறார்; பாராளுமன்றப் பேச்சுகளை சுருக்கெழுத்து அறிக்கையிலிருந்து மேற்கோள் காட்டுவதுதான் ''வழக்கம்'' என்று போலிப் பணிவுடன் குறிப்பிடுகிறார்; ஆயினும், (''பொய்யாகத் திரிக்கப்பட்ட'' வாக்கியத்தைக் கொண் டிருக்கும்) தி டைம்ஸ் செய்தியும் (அதை விட்டு விடுகிற) ஹன்சார்டுச் செய்தியும் ''கணிசமான அளவுக்கு முழுமையாக உடன்படுகின்றன'' என்றும், தி டைம்ஸ் செய்தியிலும் கூட ''தொடக்க உரையிலுள்ள அந்தக் கேடுகெட்ட கூற்றுக்கு நேர் எதிரானதே இடம் பெறுகிறது'' என்றும் சொல்கிறார். தி டைம்ஸ் செய்தியில் அதே கேடுகெட்ட கூற்று அதற்கு ''எதிரானது'' எனக் கூறப்படுவதன் பக்கத்திலேயே தெளிவாக இடம்பெறுவதை இந்த ஆசாமி எச்சரிக்கையுடன் மூடிமறைக்கிறார். இருப்பினும், இந்த அனாமதேயப் பேர்வழி, தாம் வசமாக சிக்கிக் கொண்டு விட்டதையும், ஏதேனும் புதிய சூழ்ச்சி செய்யாமல் தப்ப வழி யில்லாததையும் நன்குணர்கிறார். இவ்வாறு, மேலே நாம் காட்டியதைப் போல அவரது கட்டுரை ''வாய் கூசாத பொய்மை யின்'' உருவாகத் திகழ்கிறது என்றாலும், ''நயவஞ்சகம்,''

''அயோக்கியத்தனம்,'' ''பொய்யுரை,'' ''அந்தப் போலி மேற்கோள்,'' ''வாய்கூசாத பொய்மை,'' ''முற்றிலும் பொய்யாகத் திரிக்கப்பட்ட மேற்கோள்,'' ''இந்தத் தகிடுதத்தம்,'' ''மானவெட்கமின்மை'' போன்ற கூப்பாடு போடும் வசைச் சொற்கள் கட்டுரையில் இடையிடையே சிலிர்த்தெழுகின்றன என்றாலும், பிரச்சினையைத் திசை திருப்புவது அவருக்கு அவசியமாகி விடுகிறது; எனவே, ''கிளாட்ஸ்டனின் வார்த்தைகளது உள்ளடக்கத்தை நாம் (பொய்மைக் கலப்பில்லா அனாமதேயப் பேர்வழி) எப்படிப் புரிந்து கொள்கிறோம் என்பதை இரண்டாவது கட்டுரையொன்றில் விளக்குவோம்'' என வாக்களிக்கிறார். உருப்படியான மதிப்பேதும் இல்லாததாகிய அவரது தனிக் கருத்துக்கும் இவ்விவகாரத்துக்கும் ஏதோ சம்பந்தமிருப்பது போல் எழுதுகிறார். இந்த இரண்டாவது கட்டுரை ஜூலை 11இல் **கங்கார்டியா** ஏட்டில் வெளிவந்தது.

ஆகஸ்ட் 7 தேதிய **ஃபோல்க்ஸ்தாத்தில்** மார்க்ஸ் மீண்டும் பதிலளித்தார்; இம்முறை, 1863 ஏப்ரல் 17 தேதிய **மார்னிங் ஸ்டார், மார்னிங் அட்வர்டைசர்** ஆகியவற்றிலிருந்து சர்ச்சைக்குக் காரணமான பேச்சு பற்றிய செய்திகளையும் கொடுத்தார். இவ்விரு செய்திகளின் படியுமே, செல்வம், அதிகாரம் இவற்றின் இந்தப் போதையூட்டும் பெருக்கம் ''வசதியான நிலையிலுள்ள வர்க்கங்களின்'' எல்லைக்குட்பட்டது என்பது தனது நம்பிக்கையாக இருக்குமேயானால், இப்பெருக்கத்தை அச்சத்தோடும்...நோக்குவேன் என கிளாட்ஸ்டன் கூறினார். ஆனால், உண்மையில் இப்பெருக்கம் ''சொத்துடைத்த வர்க்கங்களின் எல்லைக்குள்ளேயே முற்றிலும் அடங்கியதாய்'' **இருக்கிறது** என்றார். எனவே, இந்தச் செய்திகளும் ''பொய்யாகச் செருகப்பட்டது'' எனக் கூறப்படும் வாக்கியத்தை வார்த்தைக்கு வார்த்தை திரும்பத் தருகின்றன. ஒன்றுக்கொன்று தொடர்பின்றி மறு நாள் காலை வெளிவருகிற ஒரே மாதிரியான உள்ளடக்கம் கொண்ட மூன்று பத்திரிகைச் செய்திகளும் இந்த வாக்கியம் உண்மையில் பேசப்பட்டதே என்பதை நிரூபிக்கின்றன. இந்த வாக்கியத்தை நன்கறிந்த ''வழக்கத்தின் படி'' திருத்தப்பட்ட ஹன்சார்டுச் செய்தியில் காணவில்லை என்றும், கிளாட்ஸ்டன்— மார்க்சின் சொற்களில்—''பிற்பாடு அதனை மாயமாக மறையச் செய்து விட்டார்'' என்றும் **தி டைம்ஸ்,** ஹன்சார்டு வாசகங்களை ஒப்பிடுவதன் மூலம் மார்க்ஸ் மீண்டுமொரு முறை நிலைநாட்டினார். முடிவில், இந்த அனாமதேயத்துடன் மேலும் சல்லாபித்துக் கொண்டிருக்கத் தமக்கு நேரமில்லையென மார்க்ஸ் கூறி விட்டார். அனாமதேயப் பேர்வழிக்கும் பட்டது போதுமெனத் தோன்றியது போலும். அது எப்படியாயினும், மேற்கொண்டு **கங்கார்டியா** இதழ்கள் எதுவும் மார்க்சுக்கு வரவில்லை.

இத்தோடு இவ்விவகாரம் மாண்டு மண் மூடிப் போனதாகத் தோன்றியது. உண்மைதான், பின்னர் ஓரிரு தடவை, ''மூலதனத்தில்''

மார்க்ஸ் இழைத்திருப்பதாகக் கொள்ளப்பட்ட ஓர் அருவருப்பான இலக்கியக் குற்றம் பற்றிய ஒளிவுமறைவான வதந்திகள் கேம்பிரிட்ஜ் பல்கலைக் கழகத்துடன் தொடர்புள்ளோரிடமிருந்து எமது காதை எட்டின; ஆனால் எவ்வளவோ விசாரித்துப் பார்த்தும், திட்டவட்டமான எதையும் தெரிந்துகொள்ள முடியவில்லை. பிறகு, 1883 நவம்பர் 29ஆம் நாள், மார்க்ஸ் இறந்து 8 மாதம் கழித்து டிரினிட்டி காலேஜ், கேம்பிரிட்ஜ் எனத் தலைப்பிட்டு செட்லீ டெய்லர் என்பவர் ஒப்பமிட்ட ஒரு கடிதம் தி டைம்ஸ் பத்திரிகையில் வெளிவந்தது; இக்கடிதத்தில், இலேசான வகைப்பட்ட கூட்டுறவு விவகாரங்களில் தலையிட்டுக் களிக்கும் இந்தச் சுண்டைக்காய் மனிதர் ஏதோ சந்தர்ப்ப வசமான சாக்கைப் பற்றிக் கொண்டு, அந்தத் தெளிவற்ற கேம்பிரிட்ஜ் வதந்திகள் சம்பந்தமாக மட்டுமின்றி, கங்கார்டியாவில் தலைகாட்டிய அந்த அனாமதேயப் பேர்வழி சம்பந்தமாகவும் கடைசியில் நமக்குத் தெளிவூட்டி விட்டார்.

டிரினிட்டி கல்லூரியைச் சேர்ந்த அந்தச் சிறு மனிதர் சொல் கிறார்: "இதில் விசித்திரம் என்னவென்றால், [தொடக்க] உரை யில் திரு கிளாட்ஸ்டனின் பேச்சிலிருந்து மேற்கோள் காட்டிடத் தூண்டுதலாயிருந்த அப்பட்டமான நயவஞ்சகத்தை...அம்பலப் படுத்துகிற வேலையை (அப்போது பிரெஸ்லாவ் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்தவரும், இப்போது ஸ்ட்ராஸ்பர்க் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்தவருமான) பேராசிரியர் பிரெண்டானோ செய்யும் வரை இவ்வளவு காலம் வேறு யாரும் செய்யவில்லை என்பதே. பிரெண்டானோ தாக்குதலைக் கைதேர்ந்த முறையில் நடத்தி, இம் மேற்கோள் சரியென வாதிட முயன்ற...ஹெர் கார்ல் மார்க்சை அபாயகரமான திருகுதாளங்களைக் கையாளும் நிலைக்கு வேகமாகத் தள்ளி விட்டார்; ஓர் ஆங்கிலேய நிதியமைச்சரைப் பொறுத்த வரை 'நிச்சயமாக சந்தேகத்தைக் கிளப்பி விடக் கூடிய தான' ஒரு கூற்றை 'நீக்கி விடும்' பொருட்டு, திரு கிளாட்ஸ்டன் தமது பேச்சு பற்றி 1863 ஏப்ரல் 17 தேதிய தி டைம்ஸ் பத்திரிகையில் வந்த செய்தியை, அது ஹன்சார்டில் வெளி வருவதற்குள் 'புரட்டிச் சரிக்கட்டி விட்டார்' என்று சொல்லும் நெஞ்சுரம் மார்க்சுக்கிருந்தது. தந்திரமாகத் தனித்தெடுக்கப்பட்ட மேற்கோள் திரு கிளாட்ஸ்டனின் வார்த்தைகளுக்கு அளித்த அர்த்தம் தி டைம்ஸ் செய்தியிலும் இல்லை, ஹன்சார்டு செய்தி யிலும் இல்லை என்பதை அவ்வாசகங்களின் விரிவான ஒப்பீட்டின் மூலம் பிரெண்டானோ காட்டியதும், மார்க்ஸ் 'நேரமில்லை' என்று சாக்குச் சொல்லி, மேலும் சர்ச்சை செய்யாமல் பின்வாங்கிக் கொண்டார்."

ஆக, இதுவே விவகாரத்துக்கெல்லாம் ஆதிமூலம்! இவ்விதம் கங்கார்டியாவில் ஹெர் பிரெண்டானோ நடத்திய அனாமதேய

இயக்கம் கேம்பிரிட்ஜின் பயன்திறம் வாய்ந்த கூட்டுறவுக் கற்பனையில் பிரமாதமாக எதிரொலித்தது. இவ்விதம் கரத்தில் வாளேந்தி நின்றார் அவர். இவ்விதம் ஜெர்மானியத் தொழிலதிபர்கள் சங்கத்தின் இந்தப் புனித ஜார்ஜ் ''தாக்குதலைக் கைதேர்ந்த முறையில் நடத்திப்'' போர் புரிந்தார். நெருப்பைக் கக்கும் கீழுலகப் பூதமாகிய மார்க்சோ ''அபாயகரமான திருகுதாளங்களைக் கையாண்டு,'' வேகமாக விழுந்து, அவரது காலடியில் இறுதி மூச்சு விட்டார்.

ஆயினும், இந்த ஆரீயாஸ்டியப் போர்க்களக் காட்சியெல்லாம் நமது புனித ஜார்ஜின் ஏமாற்று வித்தைகளை மூடி மறைப்பதற்கே பயன்படுகிறது. இங்கே முன்போல் ''பொய்யாகச் செருகுதல்'' என்றோ ''திரித்தல்'' என்றோ பேசப்படவில்லை: ''தந்திரமாகத் தனித்தெடுக்கப்பட்ட மேற்கோள்'' என்றுதான் பேசப்படுகிறது. பிரச்சினை அடியோடு திசை திருப்பப்பட்டது. ஏன் என்று புனித ஜார்ஜுக்கும், அவரது கேம்பிரிட்ஜ் கையாளுக்கும் நன்றாகவே தெரியும்.

எலினார் மார்க்சின் கடிதத்தைப் பிரசுரிக்க தி டைம்ஸ் மறுத்து விட்டதால், அவர் டு-டே என்னும் மாதப் பத்திரிகையில் (1884 பிப்ரவரி) பதிலளித்தார். மார்க்ஸ் அந்த வாக்கியத்தை ''பொய்யாகச் செருகினாரா,'' இல்லையா?—விவகாரத்துக்குரிய ஒரே கேள்வியான இதனை அவர் மீண்டும் விவாதத்தின் குவிமையமாக்கினார். இதற்கு திரு செட்லீ டெய்லர் பதிலளித்தார்: ''சர்ச்சைக்குரிய மேற்கோள் எடுத்தாளப்பட்டது திரு கிளாட்ஸ்டனின் நோக்கத்தை எடுத்தியம்பும் விருப்பத்துடனா, குதர்க்கப்படுத்தும் விருப்பத்துடனா என்ற பிரச்சினையுடன் ஒப்பிடுகையில்,'' ''குறிப்பிட்ட ஒரு வாக்கியம் திரு கிளாட்ஸ்டனின் பேச்சில் இடம்பெற்றதா இல்லையா என்ற பிரச்சினை'' பிரெண்டானோ-மார்க்ஸ் சர்ச்சையில் ''மிகக் குறைவான முக்கியத்துவமுடையதே'' என்று தாம் கருதுவதாகச் சொன்னார். பிறகு அவர் தி டைம்ஸ் செய்தி ''ஒரு சொல்வழி முரணிலையைக்'' கொண்டுள்ளது என்று ஒப்புக்கொள்கிறார்; ஆனால் சந்தர்ப்பம் சரியாகப் பொருள் கொள்ளப்பட்டால், அதாவது கிளாட்ஸ்டானிய மிதவாத அர்த்தத்தில் பொருள் கொள்ளப்பட்டால் திரு கிளாட்ஸ்டன் என்ன கூற நினைத்தார் என்பதை அது காட்டுகிறதாம். (டு-டே, 1884 மார்ச்சு). வேடிக்கை என்னவென்றால், அனாமதேய பிரெண்டானோவின் கருத்துப் படி பேச்சை ஹன்சார்டிலிருந்து மேற்கோள் காட்டுவதே ''வழக்கம்'' என்றாலும் இப்போது நமது கேம்பிரிட்ஜ் சுண்டைக்காய் மனிதர் ஹன்சார்டிலிருந்து மேற்கோள் காட்டவில்லை; ''தவிர்க்கவியலாத குளறுபடி'' என்று அதே பிரெண்டானோவினால் வர்ணிக்கப்பட்ட தி டைம்ஸ் செய்தியிலிருந்தே மேற்கோள் காட்டுவேன் என்று பிடிவாதம் பிடிக்கிறார். இது இயல்பானதே. ஏனெனில் ஹன்சார்டில் இந்தத் தொல்லைபிடித்த வாக்கியத்தைக் காணவில்லை.

இந்த வாதத்தையெல்லாம் எலீனார் மார்க்ஸ் (டு-டே அதே இதழில்) எளிதில் பஸ்மமாக்கி விட்டார். திரு டெய்லர் 1872ஆம் வருட சர்ச்சையைப் படித்திருப்பாரேயானால், இப்போது இல்லா ததைப் ''பொய்யாகச் செருகுவது'' மட்டுமல்லாமல், இருப்பதைப் ''பொய்யாக'' மூடி மறைக்கவும் செய்கிறார் என்று பொருள். அவர் அதனைப் படித்ததில்லை என்றால், வாயைப் பொத்திக் கொண்டு வாளாவிருந்திருக்க வேண்டும். இரண்டில் எது உண்மையானாலும், மார்க்ஸ் ''பொய்யான'' ஒன்றைச் சேர்த்திருக்கிறார் என்று தமது நண்பர் பிரென்டானோ சுமத்தும் குற்றச்சாட்டுக்குச் சற்றேனும் முட்டுக் கொடுக்க அவர் துணியவில்லை என்பது நிச்சயம். மாறாக, மார்க்ஸ் ஒரு முக்கிய வாக்கியத்தைப் பொய்யாகச் சேர்க்கவில்லை, மறைத்தேயிருக்கிறார் என இப்போது அவருக்குத் தோன்றுகிறது. ஆனால் தொடக்க உரையில் 5ஆம் பக்கத்தில் ''பொய்யாகச் செருகியதாய்'' கூறப்படுவதற்குச் சில வரிகள் முன்னதாக இதே வாக்கியம் மேற்கோள் காட்டப்படுகிறது. கிளாட்ஸ்டனின் பேச்சிலுள்ள ''முரணிலையைப்'' பொறுத்த வரை, ''1863, 1864 ஆண்டுகளில் கிளாட்ஸ்டன் ஆற்றிய வரவு செலவுத் திட்டச் சொற்பொழிவுகளில் வரிசையாக வரும் அப்பட்டமான முரண்பாடுகள்'' பற்றி ''மூலதனத்தில்'' — பக்கம் 618 (3ஆம் பதிப்பு, பக்கம் 672), குறிப்பு 105 [தமிழ்ப் பதிப்பு, பக்கம் 877, குறிப்பு 186] — மார்க்சே குறிப்பிடவில்லையா? திரு செட்லீ டெய்லரைப் போல் அவற்றை மெத்தனமான மிதவாத மனோபாவங்களாக மாற்றிச் சொல்ல அவர் துணியவில்லை, அவ்வளவே. தனது பதிலை முடிக்கும் விதத்தில் எலீனார் மார்க்ஸ் பின்வருமாறு இறுதியாகத் தொகுத்துச் சொல்கிறார்:

''மார்க்ஸ் மேற்கோள் காட்டத்தக்க எதையும் மறைத்துவிடவில்லை; எதையும் அவர் பொய்யாகச் சேர்க்கவும் இல்லை. ஆனால், திரு கிளாட்ஸ்டனின் உரையொன்றில் குறிப்பிட்ட ஒரு வாக்கியத்தை — இவ்வாக்கியம் சந்தேகத்துக்கிடமின்றிப் பேசப்பட்டது, ஆனால் எப்படியோ ஹன்சார்டிலிருந்து நழுவி விட்டது — மீட்டுக் கொண்டு வந்திருக்கிறார், மறைந்தொழிந்து போகாமல் காப்பாற்றியிருக்கிறார்.''

இத்துடன் திரு செட்லீ டெய்லருக்கும் பட்டது போதுமென்ற நிலை வந்தது; இரு பத்தாண்டுகளிலும் இரு பெரும் நாடுகளிலும் பின்னப்பட்ட இந்தப் பேராசிரியப் பின்னல்களின் பலன் என்னவென்றால், அதன் பின் யாரும் மார்க்சின் இலக்கிய நேர்மை குறித்து வேறு எவ்வகையிலும் களங்கம் கற்பிக்கத் துணியவில்லை. ஹன்ஸார்டின் போப்பாண்டவப் பிழையாத் தன்மையில் ஹெர் பிரென்டானோவும், ஹெர் பிரென்டானோவின் இலக்கியப் போர்ச் செய்தியறிக்கைகளில் திரு செட்லீ டெய்லரும் இனி அதிக நம்பிக்கை வைக்க மாட்டார்கள் என்பது திண்ணம்.

பிரெடெரிக் எங்கெல்ஸ்

*லண்டன், 1890 ஜூன் 25.*

முதல் பாகம்

# முதலாளித்துவப் பொருளுற்பத்தி

## புத்தகம் ஒன்று

## பகுதி I

# சரக்கும் பணமும்

## அத்தியாயம் I

## சரக்கு

### பிரிவு 1. — சரக்கின் இரு காரணிகள்: பயன்-மதிப்பும் மதிப்பும் (மதிப்பின் சாரமும் மதிப்பின் பருமனும்)

முதலாளித்துவப் பொருளுற்பத்தி முறை [capitalist mode of production] நிலவுகிற சமுதாயங்களின் செல்வம் "சரக்குகளின் பெருந் திரட்டலாகக்"[8] காட்சி தருகிறது. தனிச் சரக்குதான் அந்தச் செல்வத்தின் அலகு. எனவே நமது ஆராய்ச்சி சரக்கின் பகுப்பாய்விலிருந்து தொடங்க வேண்டும்.

சரக்கு [commodity] என்பது, முதலாவதாக நமக்குப் புறத்தேயுள்ள பொருள்; தனது குணங்களைக் கொண்டு ஏதேனும் ஒரு விதமான மனிதத் தேவைகளை நிறைவு செய்கிற ஒன்று. இந்தத் தேவைகளின் தன்மை எப்படிப்பட்டதாய் இருந்தாலும் சரிதான்; உதாரணமாக அவை வயிற்றிலிருந்து உதித்தாலும் சரி, அல்லது கேளிக்கையிலிருந்து உதித்தாலும் சரி — எல்லாம் ஒன்றுதான்.[9] இந்தத் தேவைகளை அப்பொருள் எப்படி நிறைவு செய்கிறது — நேரடியாக வாழ்வுச் சாதனங்கள் [means of subsistence] என்ற முறையிலா, அல்லது சுற்றடியாக உற்பத்திச் சாதனங்கள் [means of production] என்ற முறையிலா — என்பது குறித்தும் இங்கு நமக்குக் கவலை இல்லை.

இரும்பு, காகிதம் போன்ற ஒவ்வொரு பயனுள்ள பொருளையும் பண்பு, அளவு என்னும் இரு நோக்குநிலைகளிலிருந்து கருதலாம்.

---

8 கார்ல் மார்க்ஸ், "அரசியல் பொருளாதார விமர்சனத்திற்கு ஒரு பங்களிப்பு." பெர்லின், 1859, பக்கம் 3.

9 "இச்சையானது தேவையைக் குறிக்கிறது. மனத்தின் பசியே இச்சை, உடலுக்குப் பசி எப்படியோ அதே போல இதுவும் இயற்கையானது...(பொருட்களில்) மிகவும் அதிகமானவை மனத்தின் தேவைகளைப் பூர்த்தி செய்வதன் மூலம் மதிப்பு பெறுகின்றன." நிக்கோலஸ் பார்பான்: "புதிய பணத்தை இன்னும் இலேசான நாணயமாக்குவது சம்பந்தமாக ஓர் உரை...திரு லாக்கின் கருத்துகளுக்குப் பதில்," லண்டன், 1696, பக்கம் 2, 3.

அது பல குணங்களின் தொகுப்பாகும்; எனவே பல்வேறு வழி களில் பயனுள்ளதாக இருக்கலாம். பொருட்களின் பல்வேறு பயன் களைக் கண்டுபிடிப்பது வரலாற்றின் வேலை.[10] இந்தப் பயனுள்ள பொருட்களின் அளவுகளை அளவிடுவதற்கான சமூக வழியில் அங்கீகரிக்கப்பட்ட நியமங்களை நிறுவுவதும் வரலாற்றின் வேலை தான். இந்த அளவைகள் பல்வேறுபட்டனவாய் இருக்கின்றன என்றால், அளவிட வேண்டிய பொருட்கள் வேறுபட்ட தன்மை யினவாய் இருப்பதும், வழக்காறும்தான் மூல காரணம்.

ஒரு பொருளின் பயன்பாடு அதனைப் பயன்-மதிப்பு [use-value] ஆக்குகிறது.[11] ஆனால் இந்தப் பயன்பாடு மானசீக விஷய மன்று. அது அச்சரக்கின் பௌதிகக் குணங்களால் வரம்பிடப் படுவதால், அந்தச் சரக்கிற்கு அப்பாற்பட்டு அதற்கு வாழ்வில்லை. எனவே இரும்பு, தானியம் அல்லது வைரம் போன்ற சரக்கு அது பொருளாயதமான ஒன்று என்ற அளவில் பயன்-மதிப்பாகும், பயனுள்ள ஒன்றாகும். சரக்கின் இந்தக் குணம் அதன் பயனுள்ள பண்புகளை உபயோகித்துக் கொள்ளத் தேவையான உழைப்பின் அளவைச் சார்ந்ததன்று. பயன்-மதிப்பு பற்றிப் பேசும் போது நாம் எப்போதுமே இத்தனை டஜன் கடிகாரங்கள், இத்தனை கெஜம் துணி அல்லது இத்தனை டன் இரும்பு என்பது போன்ற திட்டமான அளவுகளையே கையாள்வதாகக் கொள்கிறோம். சரக்குகளின் பயன்-மதிப்புகள் தனி ஆய்வுக்குரியவையாய், சரக்குகள் பற்றிய வாணிப அறிவின் ஆய்வுக்குரியவையாய் அமைகின்றன.[12] உபயோகம் அல்லது நுகர்வின் மூலமே பயன்-மதிப்புகள் மெய்ம்மையாகின்றன. அவை செல்வம் அனைத்தின் சாரமாகவும் அமைகின்றன — அந்தச் செல்வத்தின் சமுதாய வடிவம் எதுவா னாலும் சரி. நாம் பரிசீலிக்கப் போகும் சமுதாய வடிவத்தில் அவை

---

10 "பொருட்களுக்கு உள்ளார்ந்த இயல்பு" (பயன்-மதிப்பு என்பதற்கு பார்பானின் தனிப் பதமாகும் இது) "ஒன்று உண்டு." "அவை எல்லா இடங்களிலும் அதே இயல்பினைப் பெற்றுள்ளன; இரும்பை ஈர்க்கும் இயல்பினைக் காந்தகக் கல் பெற்றுள் ளதைப் போல" (முன் வந்தது, பக்கம் 6 ). இரும்பை ஈர்ப்பது காந்தத்தின் இயல்பு; இந்த இயல்பைக் கொண்டு காந்தத்தின் துருவச் சார்பு கண்டுபிடிக்கப்பட்ட பின்னரே அவ்வியல்பு பயன்படலாயிற்று.

11 "எந்தப் பொருளின் இயற்கையான பெறுமானமும் மனித வாழ்க்கையின் அவசியப் பொருட்களை வழங்குவதற்கு அல்லது சௌகரியங்களுக்கு ஊழியம் செய் வதற்கு அதற்குள்ள தகுதியிலேயே அடங்கியுள்ளது." (ஜான் லாக், "வட்டியைக் குறைப்பதன் விளைவுகள் பற்றிய சில கருத்துகள், 1691" நூல்கள் பதிப்பில், லண்டன், 1777, இரண்டாம் பாகம், பக்கம் 28.) 17 ஆவது நூற்றாண்டின் ஆங்கிலேய எழுத்தாளர்களிடம் பயன்-மதிப்பு என்ற அர்த்தத்தில் "பெறுமானத்தையும்" பரிவர்த்தனை-மதிப்பு என்ற அர்த்தத்தில் "மதிப்பையும்" நாம் அடிக்கடி காண்கிறோம். உள்ளபடியான பொருளுக்கு டியூடானிக் வார்த்தையையும் அதன் பிரதிபலிப்புக்கு ரொமான்ஸ் வார்த்தையையும் பயன்படுத்த விரும்புகிற இம்மொழியின் போக்குக்கு முற்றிலும் ஒத்தேயுள்ளது இது.

12 ஒவ்வொருவரும், வாங்குகிறவர் என்ற விதத்தில் சரக்குகள் பற்றி சகலமுந் தழுவிய அறிவைப் பெற்றிருக்கிறார் என்ற பொருளாதாரச் சட்ட மாயை முதலாளித்துவ சமுதாயங்களில் நிலவுகிறது.

பரிவர்த்தனை-மதிப்பின் [exchange-value] பொருளாயத சேமிப் பகங்களாகவும் உள்ளன.

பார்த்த மாத்திரத்தில், பரிவர்த்தனை-மதிப்பானது ஓர் அளவு வழிப்பட்ட உறவாக, ஒரு வகைப்பட்ட பயன்-மதிப்புகள் இன்னொரு வகைப்பட்ட பயன்-மதிப்புகளுக்குப் பரிவர்த்தனை செய்து கொள்ளப்படுகிற விகிதாசாரமாக,[13] காலத்துக்கும் இடத்துக்குமேற்ப இடைவிடாமல் மாறிக் கொண்டிருக்கும் உறவாகக் காட்சி தருகிறது. எனவே, பரிவர்த்தனை-மதிப்பு ஏதோ தற்செயலானதாகவும், முற்றிலும் ஒப்பீட்டு முறையிலானதாகவும் தோன்றுகிறது; ஆதலால் இயல்பாய் அமைந்த ஒரு மதிப்பு என்பது, அதாவது பிரிக்க முடியாத படி சரக்குகளுடன் பிணைப்புள்ள, சரக்குகளில் உள்ளார்ந்துள்ள பரிவர்த்தனை-மதிப்பு என்பது சொற்களில் ஒரு முரண்பாடெனத் தோன்றுகிறது.[14] இதனை இன்னும் சற்று நெருங்கிப் பரிசீலிப்போம்.

குறிப்பிட்ட ஒரு சரக்கு, உதாரணமாக ஒரு குவார்ட்டர் கோதுமையானது x கருஞ்சாயம், y பட்டு, அல்லது z தங்கம் முதலானவற்றுக்காக — சுருங்கச் சொல்லின், மிக வெவ்வேறான விகிதாசாரங்களில் இதர சரக்குகளுக்காக — பரிவர்த்தனை செய்து கொள்ளப்படுகிறது. எனவே கோதுமை ஒரு பரிவர்த்தனை-மதிப்புக்கு பதில் மிகப் பல பரிவர்த்தனை-மதிப்புகளைப் பெற்றிருக்கிறது. ஆனால் x கருஞ்சாயம், y பட்டு, z தங்கம் முதலானவை ஒவ்வொன்றும் ஒரு குவார்ட்டர் கோதுமையின் பரிவர்த்தனை-மதிப்பைக் குறிப்பதால் x கருஞ்சாயம், y பட்டு, z தங்கம் முதலானவை, பரிவர்த்தனை-மதிப்புகள் என்ற விதத்தில், ஒன்றுக்கொன்று மாற்றீடு செய்யத் தக்கவையாய், அல்லது ஒன்றுக்கொன்று சமமானவையாய் இருக்க வேண்டும். எனவே, முதலாவதாக: குறிப்பிட்ட சரக்கின் செல்லுபடியாகத்தக்க பரிவர்த்தனை-மதிப்புகள் சமமான ஏதோ ஒன்றைத் தெரிவிக்கின்றன; இரண்டாவதாக: பொதுவாக பரிவர்த்தனை-மதிப்பானது அதில் அடங்கியுள்ள, ஆனால் அதிலிருந்து வேறுபடுத்திப் பார்க்கத்தக்க ஏதோ ஒன்றின் தெரிவிப்பு முறையாகவே, புலப்பாட்டு வடிவமாகவே [phenomenal form] இருக்கிறது.

இரு சரக்குகளை, உதாரணமாகத் தானியத்தையும் இரும்பையும் எடுத்துக் கொள்வோம். அவை பரிவர்த்தனை செய்து கொள்ளத் தக்கவையாய் இருக்கும் விகிதாசாரங்கள் — அந்த விகிதாசாரங்கள்

---

13 ''மதிப்பானது ஒரு பொருளுக்கும் இன்னொரு பொருளுக்கும் இடையிலான, ஒரு பொருளின் குறிப்பிட்ட அளவுக்கும் இன்னொரு பொருளின் குறிப்பிட்ட அளவுக்கும் இடையிலான பரிவர்த்தனை உறவில் அடங்கியுள்ளது.'' (லெ திரொஸ்னே: ''Do l'Inte'rêt Social.'' Physiocrates, டைரே பதிப்பு. பாரிஸ், 1846. பக்கம் 889.)

14 ''உள்ளார்ந்த மதிப்பு எதற்கும் இருக்க முடியாது.'' (நி.பார்பான், முன் வந்தது. பக்கம் 6); அல்லது, பட்லர் கூறுவது போல,

''பொருளொன்றின் மதிப்பு
அது எவ்வளவு கொண்டு வருமோ அவ்வளவே.''

எவையானாலும் — எப்போதுமே, குறிப்பிட்ட அளவு தானியம் ஏதோ ஓர் அளவிலான இரும்புடன் சமன் செய்யப்படுகிற ஒரு சமன்பாட்டால் குறிக்கப்பட முடியும்: உதாரணமாக ஒரு குவார்ட்டர் தானியம் = x அந்தர் இரும்பு. இந்தச் சமன்பாடு நமக்கு எதைச் சொல்கிறது? இருவேறு பொருட்களில், ஒரு குவார்ட்டர் தானியத்திலும் x அந்தர் இரும்பிலும், இரண்டுக்குமே பொதுவான ஏதோ ஒன்று சம அளவுகளில் இருக்கிறது என்பதைச் சொல்கிறது. எனவே, முதல் பொருளாகவோ இரண்டாவது பொருளாகவோ இல்லாத ஒரு மூன்றாவது பொருளுக்கு இவ்விரு பொருட்களும் சமமாக இருக்க வேண்டும். எனவே அவை ஒவ்வொன்றும், பரிவர்த்தனை-மதிப்பு என்ற அளவில், இந்த மூன்றாவது பொருளாகப் பெயர்க்கத்தக்கதாய் இருக்க வேண்டும்.

எளிய வடிவகணித எடுத்துக்காட்டு ஒன்று இதைத் தெளிவு படுத்தும். நேர்கோட்டு வடிவங்களின் பரப்பளவுகளைக் கணக்கிடு வதற்கும் ஒப்பிடுவதற்கும் அவற்றை முக்கோணங்களாகப் பிரித்துக் கொள்கிறோம். ஆனால் முக்கோணத்தின் பரப்பளவு, அதன் கண்ணுக்குத் தெரிகிற வடிவத்திலிருந்து முற்றிலும் வேறுபட்ட ஏதோ ஒன்றால், அதாவது அடிக்கோட்டு நீளம், குத்துயரம் இவற்றின் பெருக்கற் பலனில் பாதியால் வெளியிடப்படுகிறது. அதே விதத்தில், சரக்குகளின் பரிவர்த்தனை-மதிப்புகள் எப் பொருட்களை ஏதேனுமோர் அளவில் அவை குறிக்கின்றனவோ, அப்பொருட்கள் அனைத்துக்கும் பொதுவான ஏதோ ஒன்றின் வாயிலாகத் தெரிவிக்கப்பட வல்லவையாய் இருக்க வேண்டும்.

இந்தப் பொதுவான ''ஏதோ ஒன்று'' சரக்குகளின் வடிவகணித குணமாகவோ, இரசாயன குணமாகவோ அல்லது வேறு ஏதேனும் இயற்கைக் குணமாகவோ இருக்க முடியாது. இப்படிப்பட்ட குணங் கள் அந்தச் சரக்குகளின் பயன்பாட்டுக்குத் தொடர்புள்ளவையாய் இருந்து, அவற்றைப் பயன்-மதிப்புகள் ஆக்குகிற அளவுக்குத்தான் நமது கவனத்துக்குரியவை ஆகின்றன. ஆனால் சரக்குகளின் பரி வர்த்தனை என்ற செயலின் சிறப்பியல்பு பயன்-மதிப்பை முழுமை யாக நீக்கி விட்டுப் பார்ப்பதாகும் என்பது தெளிவு. ஆகவே, ஒரு பயன்-மதிப்பு, அது போதுமான அளவில் இருக்க வேண்டும் என்ற ஒரே நிபந்தனையின் பேரில், இன்னொரு பயன்-மதிப்பை ஒத்ததே. அல்லது, முதியவர் பார்பான் கூறுவது போல, ''மதிப்புகள் சம மானால், ஒரு வகைப் பண்டங்கள் இன்னொரு வகைப் பண்டங் களை ஒத்தவையே. சம மதிப்புள்ள பொருட்களில் வேறுபாடோ வித்தியாசமோ எதுவுமில்லை....நூறு பவுன் பெறுமானமுள்ள ஈயம் அல்லது இரும்பின் மதிப்பும், நூறு பவுன் பெறுமானமுள்ள வெள்ளி அல்லது தங்கத்தின் மதிப்பும் ஒன்றுதான்.''[15] பயன்-மதிப்புகள்

---

[15] நி. பார்பான், முன் வந்தது, பக்கம் 53, 7.

என்ற விதத்தில், சரக்குகள், அனைத்துக்கும் முதலாவதாக, வெவ்வேறு பண்புகள் உடையவை. ஆனால் பரிவர்த்தனை-மதிப்புகள் என்ற விதத்தில் அவை வெவ்வேறு அளவினவையே; ஆதலால் பயன்-மதிப்பை அணுவளவும் கொண்டவையல்ல.

ஆகவே, சரக்குகளின் பயன்-மதிப்பைப் பரிசீலனையிலிருந்து விட்டு விடுவோமானால், உழைப்பின் உற்பத்திப் பொருட்களாக இருத்தல் என்ற ஒரே ஒரு பொதுவான குணமே அவற்றில் எஞ்சி நிற்கிறது. ஆனால் உழைப்பின் உற்பத்திப் பொருளும் கூட நமது கையில் ஒரு மாற்றத்தை அடைந்திருக்கிறது. நாம் உற்பத்திப் பொருளின் பயன்-மதிப்பை நீக்கி விட்டுப் பார்ப்போமானால், அதே நேரத்தில், அதனைப் பயன்-மதிப்பாக்குகிற பொருட் கூறுகள், உருவங்கள் ஆகியவற்றையும் நீக்கி விட்டுப் பார்ப்பதாகும். இனியும் நாம் அதன் உருவில் மேசையை, வீட்டை, நூலை அல்லது வேறு ஏதேனும் பயனுள்ள பொருளைப் பார்ப்பதில்லை. பொருளாயதமான ஒன்று என்ற அதன் நிலை பார்வையிலிருந்து அகற்றப்படுகிறது. தச்சர், கொத்தர், நூற்பாளரது உழைப்பின் அல்லது வேறு திட்டமான வகைப்பட்ட திறனுடை உழைப்பு [productive labour] எதனுடையவும் உற்பத்திப் பொருளாக இனி அதனைக் கருதவும் முடியாது. உற்பத்திப் பொருட்களின் பயனுள்ள பண்புகளோடு கூடவே, அவற்றில் உருக்கொண்ட உழைப்பின் பல்வேறு வகைகளது பயனுள்ள தன்மை, அந்த உழைப்பின் ஸ்தூல வடிவங்கள்[concrete forms] ஆகிய இரண்டையுமே பார்வை யிலிருந்து அகற்றி விடுகிறோம்; அவை அனைத்துக்கும் பொது வானது எதுவோ, அது மட்டுமே எஞ்சி நிற்கிறது; அனைத்துமே ஒரே வகை உழைப்பாக, ஸ்தூலமற்ற மனித உழைப்பாகப் பெயர்க்கப்படுகின்றன.

இந்த உற்பத்திப் பொருட்கள் ஒவ்வொன்றிலும் எஞ்சி நிற்பதை இப்போது பரிசீலிப்போம்; ஒவ்வொன்றிலும் பொருளுருவில்லா ஒரே மெய்ம்மையே, அதாவது ஒருபடித்தான மனித உழைப்பின் — செலவிடும் விதத்தைப் பொருட்படுத்தாமல் செலவிடப்பட்ட உழைப்புச் சக்தியின் — இறுகல் மட்டும் எஞ்சி நிற்கிறது. இவை இப்போது நமக்குச் சொல்வதெல்லாம், மனித உழைப்புச் சக்தி அவற்றின் உற்பத்தியில் செலவிடப்பட்டிருக்கிறது, மனித உழைப்பு அவற்றில் உருக்கொண்டிருக்கிறது என்பதையே. அவை அனைத் துக்கும் பொதுவான இந்த சமூக சாரத்தின் படிகங்களாக நோக்குங் கால், அவையே **மதிப்புகள்** [values].

சரக்குகள் பரிவர்த்தனை செய்யப்படும் போது, அவற்றின் பரிவர்த்தனை-மதிப்பு அவற்றின் பயன்-மதிப்பை சற்றும் சார்ந் திராத ஒன்றாகத் தன்னைக் காண்பித்துக் கொள்கிறது என்று பார்த் தோம். ஆனால் நாம் அவற்றின் பயன்-மதிப்பை நீக்கி விட்டுப் பார்ப்போமானால், மேலே வரையறுத்தது போல, அவற்றின்

மதிப்பு எஞ்சியுள்ளது. எனவே, சரக்குகள் பரிவர்த்தனை செய்யப் படும் போதெல்லாம், அவற்றின் பரிவர்த்தனை-மதிப்பில் வெளிப் படுகிற பொதுவான சாரமே அவற்றின் மதிப்பாகும். சரக்குகளின் மதிப்பு தன்னை வெளிப்படுத்திக் கொள்ளக் கூடிய அல்லது தெரிவித்துக் கொள்ளக் கூடிய ஒரே வடிவம் பரிவர்த்தனை-மதிப்பே என்பதை நமது ஆராய்ச்சியின் முன்னேற்றம் காட்டும். ஆனபோதிலும், இப்போதைக்கு நாம் மதிப்பின் இயல்பை இதனுடன் — அதன் வடிவத்துடன் — சார்பின்றிப் பரிசீலிக்க வேண்டியுள்ளது.

எனவே ஒரு பயன்-மதிப்பு, அல்லது பயனுள்ள பண்டம், ஸ்தூலமற்ற மனித உழைப்பு [human labour in the abstract] அதில் உருக்கொண்டுள்ளது அல்லது பொருள் வடிவாகியுள்ளது என்ப தாலேயே மதிப்பைப் பெற்றிருக்கிறது. அப்படியானால், இம் மதிப்பின் பருமனை அளப்பதெப்படி? பண்டத்தில் அடங்கியுள்ள உழைப்பின் — மதிப்பைப் படைக்கும் சாரமாகிய உழைப்பின் — அளவைக் கொண்டே என்பது தெளிவு. ஆயினும் உழைப்பின் அளவு அது நீடிக்கும் காலத்தால் அளவிடப்படுகிறது. உழைப்பு நேரமோ வாரம், நாள், மணி என்னும் அளவுத் திட்டம் உடையதாகும்.

ஒரு சரக்கின் மதிப்பு அதற்காகச் செலவிடப்பட்ட உழைப்பின் அளவைக் கொண்டு நிர்ணயிக்கப்படுகிறதென்றால், உழைப்பாளி எவ்வளவு அதிகம் சோம்பேறியாகவும் தேர்ச்சியற்றவராகவும் இருக்கிறாரோ, அவ்வளவு அதிகம் மதிப்புள்ளதாக அவரது சரக்கு இருக்கும், ஏனெனில் அதன் உற்பத்திக்கு அதிக நேரம் தேவைப் படும் என்று சிலர் நினைக்கக் கூடும். ஆயினும் மதிப்பின் சாரமாகிற உழைப்பு ஒருபடித்தான மனித உழைப்பு [homogeneous human labour] ஆகும்; ஒரேசீரான உழைப்புச் சக்தியின் செலவீடாகும். சமுதாயத்தால் உற்பத்தி செய்யப்படும் சரக்குகள் அனைத்தினதும் மதிப்புகளின் ஒட்டுமொத்தத்தில் உருக் கொண்டுள்ள சமுதாயத்தின் மொத்த உழைப்புச் சக்தி, அது எண்ணற்ற தனித்தனி அலகுகளால் ஆனதென்றாலும், இங்கே மனித உழைப்புச் சக்தியின் [human labour-power] ஒரே ஒருபடித்தான திரளாகவே கணக்கிடப்படுகிறது. இந்த அலகுகளில் ஒவ்வொன்றும் சமுதாயத்தின் சராசரி உழைப்புச் சக்தியின் தன்மையைப் பெற்றிருக்கிறது, அவ்வாறே பயன்படுகிறது என்ற அளவில், அதாவது ஒரு சரக்கை உற்பத்தி செய்வதற்குத் தேவைப் படுகிற நேரம் சராசரியாகத் தேவைப்படுகிற நேரம்தான், சமுதாய வழியில் அவசியமான நேரம்தான் என்ற அளவில் இவ்வலகுகள் அனைத்தும் ஒன்றே. சமுதாய வழியில் அவசியமான உழைப்பு நேரம் என்பது, இயல்பான உற்பத்தி நிலைமைகளிலும், அந் நேரத்தில் வழக்கிலுள்ள சராசரியான தேர்ச்சி [skill], மும்முரம்

[intensity] இவற்றைக் கொண்டும் ஒரு பண்டத்தை உற்பத்தி செய்யத் தேவைப்படுகிற நேரமாகும். இங்கிலாந்தில் விசைத்தறி புகுத்தப்பட்டதானது குறிப்பிட்ட அளவு நூலைத் துணியாக நெய்வதற்குத் தேவைப்படும் உழைப்பை ஏறக்குறைய சரிபாதியாகக் குறைத்து விட்டது எனலாம். அப்போதும், கைத்தறி நெசவாளர்களுக்கு, முன்பு தேவைப்பட்ட அதே நேரமே தொடர்ந்து தேவைப்பட்டது; ஆனாலும் கூட அவர்களது ஒரு மணி நேர உழைப்பின் உற்பத்திப் பொருள் இம்மாற்றத்திற்குப் பின்னர் அரை மணி நேர சமுதாய உழைப்பையே குறித்தது; இதன் விளைவாக அதன் முந்தைய மதிப்பில் சரிபாதியாகக் குறைந்தது.

அப்படியானால், எந்தப் பண்டத்தினது மதிப்பின் பருமனையும் நிர்ணயிப்பது சமுதாய வழியில் அவசியமான உழைப்பின் அளவே, அதாவது அதன் உற்பத்திக்கு சமுதாய வழியில் அவசியமான உழைப்பு நேரமே என்பதைப் பார்க்கிறோம்.[16] இது தொடர்பாக, ஒவ்வொரு தனிச் சரக்கும் அதன் வகையில் ஒரு சராசரி மாதிரியாகவே கருதப்பட வேண்டும்.[17] எனவே, உழைப்பின் சம அளவுகள் உருக்கொண்ட அல்லது ஒரே அளவு நேரத்தில் உற்பத்தி செய்யக் கூடிய சரக்குகள் ஒரே மதிப்பையே பெற்றுள்ளன. ஒரு சரக்கின் உற்பத்திக்கு அவசியமான உழைப்பு நேரத்திற்கும் வேறொரு சரக்கின் உற்பத்திக்கு அவசியமான உழைப்பு நேரத்திற்குமுள்ள விகிதமே முன்னதன் மதிப்புக்கும் பின்னதன் மதிப்புக்குமுள்ள விகிதமாகும். ''மதிப்புகள் என்ற விதத்தில், எல்லாச் சரக்குகளுமே இறுகிய உழைப்பு நேரத்தின் திட்டமான திரள்கள்தாம்.''[18]

எனவே, ஒரு சரக்கின் உற்பத்திக்குத் தேவைப்படும் உழைப்பு நேரம் மாறாதிருந்தால், அச்சரக்கின் மதிப்பும் மாறாதிருக்கும். ஆனால் உழைப்பின் உற்பத்தித் திறனில் [productiveness] ஏற்படும் ஒவ்வொரு மாறுபாட்டுக்கும் ஏற்ப உழைப்பு நேரம் மாறுகிறது. வேலை செய்வோரது தேர்ச்சியின் சராசரி அளவு, விஞ்ஞானத்தின் வளர்ச்சி நிலை, அதன் நடைமுறைப் பிரயோகத்தின் வீச்சு,

---

16 ''அவை (வாழ்க்கையின் அவசியப் பண்டங்கள்) ஒன்றுக்கொன்று பரிவர்த்தனை செய்து கொள்ளப்படும் போது, அவற்றின் மதிப்பு, அவசியமாகவே தேவைப்படுவதும், அவற்றை உற்பத்தி செய்வதில் சாதாரணமாக எடுத்துக் கொள்ளப்படுவதுமான உழைப்பின் அளவால் கட்டுப்படுத்தப்படுகிறது.'' (''பொதுவாகப் பணத்தின் வட்டி பற்றியும், குறிப்பாகப் பொது நிதிகளில் வட்டி பற்றியும் சில சிந்தனைகள்,'' லண்டன், பக்கம் 36.) சென்ற நூற்றாண்டில் எழுதப்பட்ட இந்தக் குறிப்பிடத்தக்க நூல் — ஆசிரியர் பெயர் இல்லை — தேதி எதையும் கொண்டிருக்கவில்லை. ஆயினும் இது இரண்டாம் ஜார்ஜின் ஆட்சிக் காலத்தில், 1739 அல்லது 1740 வாக்கில் வெளிவந்தது என்பது அதனுள் இருக்கும் சான்றிலிருந்து தெளிவாகிறது.

17 ''சரியாகச் சொன்னால், ஒரே வகையைச் சேர்ந்த எல்லா உற்பத்திப் பொருட்களும் தனியொரு திரளாய் அமைகின்றன; அவற்றின் விலை குறிப்பிட்ட நிலைமைகளைக் கருதாமல் பொதுவான முறையில் நிர்ணயிக்கப்படுகிறது.'' (லெ திரொஸ்னே, முன் வந்தது, பக்கம் 893.)

18 கார்ல் மார்க்ஸ், முன் வந்தது, பக்கம் 6.

உற்பத்தியின் சமுதாய ஒழுங்கமைப்பு, உற்பத்திச் சாதனங்களின் விரிவும் ஆற்றல்களும், பௌதிக நிலைமைகள் ஆகியவை உட்பட பல்வேறு காரணிகளால் இந்த உற்பத்தித் திறன் நிர்ணயிக்கப் படுகிறது. உதாரணமாக, அனுசரணையான பருவங்களில் எட்டு மூட்டை தானியத்தில் உருக்கொள்கிற அதே அளவு உழைப்பு அனுசரணையற்ற பருவங்களில் நான்கே மூட்டை தானியத்தில் உருக்கொள்கிறது. ஒரே அளவு உழைப்பு வளமற்ற சுரங்கங் களிலிருந்து தோண்டியெடுப்பதை விட வளமான சுரங்கங் களிலிருந்து அதிக உலோகத்தைத் தோண்டியெடுக்கிறது. பூமியின் பரப்பில் வைரங்கள் மிக அரிதாகவே காணப்படுகின்றன; எனவே அவற்றின் கண்டுபிடிப்புக்கு சராசரியாக ஏராளமான உழைப்பு நேரம் செலவாகிறது. இதன் விளைவாகச் சின்னஞ்சிறு எல்லைக் குள் அதிகமான உழைப்பு குவிக்கப்படுகிறது. எப்போதேனும் தங்கத்துக்கு அதன் முழு மதிப்பில் விலை தரப்பட்டுள்ளதா என ஜேக்கப் சந்தேகிக்கிறார். இது வைரங்களுக்கு இன்னும் அதிக மாகவே பொருந்தும். வைரங்களுக்கு மிக அதிகமான உழைப்பு செலவான போதிலும், எனவே அவை அதிகமான மதிப்பைக் குறித்த போதிலும், 1823 வரையிலான எண்பதாண்டு காலத்தில் பிரேசில் நாட்டு வைரச் சுரங்கங்களில் நடைபெற்ற மொத்த உற்பத்தி, அந்நாட்டின் கரும்பு, காப்பித் தோட்டங்களது ஒன்றரை ஆண்டு சராசரி உற்பத்தியின் விலையைக் கூட பெற்றுத் தரவில்லை என்கிறார் எஷ்வேக். இன்னும் வளமான சுரங்கங்களின் விஷயத் தில், அதே அளவு உழைப்பு இன்னும் அதிகமான வைரங்களில் உருக்கொள்ளும்; அவற்றின் மதிப்பு வீழ்ச்சியடையும்: சிறிது உழைப்பைச் செலவிட்டு கரியை வைரமாக மாற்றுவதில் நாம் வெற்றி காண முடிந்தால், அதன் மதிப்பு செங்கல்லின் மதிப்பை விடவும் குறையக் கூடும். பொதுவாக, உழைப்பின் உற்பத்தித் திறன் எந்த அளவுக்கு உயர்வாக உள்ளதோ, அந்த அளவுக்கு ஒரு பண்டத்தின் உற்பத்திக்குத் தேவைப்படும் உழைப்பு நேரமும் அப் பண்டத்தில் உருப்பெற்றுள்ள உழைப்பின் அளவும், அதன் மதிப்பும் குறைவாக உள்ளன; மறுதலையாக, உழைப்பின் உற்பத்தித் திறன் எந்த அளவுக்குக் குறைவாக உள்ளதோ, அந்த அளவுக்கு ஒரு பண்டத்தின் உற்பத்திக்குத் தேவைப்படும் உழைப்பு நேரமும், அதன் மதிப்பும் அதிகமாக உள்ளன. எனவே சரக்கின் மதிப்பு, அதில் சேர்க்கப்பட்டுள்ள உழைப்பின் அளவுக்கு நேர் விகிதத்திலும், அவ்வுழைப்பின் உற்பத்தித் திறனுக்கு எதிர் விகிதத் திலும் மாறுகிறது.

ஒரு பொருள், மதிப்பைப் பெற்றிராமலே, பயன்-மதிப்பாக இருக்க முடியும். மனிதனுக்கு அது பயன்படுவதாய் இருப்பதற்குக் காரணம் உழைப்பாக இல்லாத போதெல்லாம் நிலைமை இதுவே. காற்றும், கன்னி நிலமும், இயற்கையான புல்வெளிகளும், இன்ன

பிறவும் இவ்வாறே. ஒரு பொருள் சரக்காக இல்லாமலே பயனுள்ள தாகவும், மனித உழைப்பின் உற்பத்திப் பொருளாகவும் இருக்க முடியும். உள்ளபடியே, தன் சொந்த உழைப்பின் உற்பத்தியைக் கொண்டு தன் தேவைகளை நேரடியாக நிறைவு செய்து கொள்கிற எவரும் படைப்பது பயன்-மதிப்புகளையே, சரக்குகளையல்ல. அவர் உற்பத்தி செய்வது சரக்குகளாக வேண்டுமானால் அவை பயன்-மதிப்புகளாய் இருந்தால் போதாது; மற்றவர்களுக்கான பயன்-மதிப்புகளாக, அதாவது சமுதாயப் பயன்-மதிப்புகளாக இருத்தல் வேண்டும். (மற்றவர்களுக்கான என்று மட்டும் சொன் னால் போதாது. மத்திய கால விவசாயி நிலப்பிரபுவுக்காகப் பணியீட்டு வார தானியத்தையும், மத குருவுக்காகத் தட்சணை தானி யத்தையும் உற்பத்தி செய்தார். ஆனால், பணியீட்டு வார[quit-rent] தானியமோ, தட்சணை [tithe] தானியமோ, அவை மற்றவர் களுக்காக உற்பத்தி செய்யப்பட்டவை என்பதால் மட்டுமே, சரக்காகி விடவில்லை. ஓர் உற்பத்திப் பொருள் சரக்காக வேண்டு மானால், அது பயன்-மதிப்பாகப் பயன்படத்தக்க இன்னொரு வருக்குப் பரிவர்த்தனை மூலமாகக் கைமாற வேண்டும்.)[19] இறுதி யாக, பயன்பாட்டுப் பொருளாகாத எதுவுமே மதிப்புடையதாக இருக்க முடியாது. பொருள் பயனற்றதானால் அதில் அடங்கியுள்ள உழைப்பும் பயனற்றதே; அவ்வுழைப்பு உழைப்பாவதில்லை; எனவே மதிப்பெதையும் படைப்பதில்லை.

## பிரிவு 2.— சரக்குகளில் உருக்கொண்டுள்ள உழைப்பின் இரட்டைத் தன்மை

எடுத்த எடுப்பில் சரக்கானது இரு விஷயங்களின் — பயன்-மதிப்பு, பரிவர்த்தனை-மதிப்பு இவற்றின் — பின்னலாக நம்மிடம் தன்னைக் காட்டிக் கொண்டது. அதே இரட்டை இயல்பை [two-fold nature] உழைப்பும் பெற்றிருக்கிறது என்பதைப் பின்னர் பார்த்தோம்; ஏனென்றால் பயன்-மதிப்புகளின் படைப்பாளி என்ற முறையில் அதற்குள்ள சிறப்பியல்புகள் வேறு, மதிப்பு வாயிலாகத் தெரிவிக்கப் பெறுகிறது என்ற அளவில் அதற்குள்ள சிறப்பியல்பு கள் வேறு. சரக்குகளில் அடங்கிய உழைப்பின் இந்த இரட்டை இயல்பை முதன் முதல் சுட்டிக் காட்டியதும் விமர்சன வழியில் ஆராய்ந்ததும் நானே. அரசியல் பொருளாதாரத்திலான தெள்ளிய ஞானத்துக்கு அச்சாணியாகத் திகழ்வது இதுவே என்பதால் நாம்

[19] [4ஆவது ஜெர்மன் பதிப்பில் எங்கெல்ஸ் குறிப்பு: உற்பத்தியாளர் அல்லாத வேறு ஒருவரால் நுகரப்படுகிற ஒவ்வொரு உற்பத்திப் பொருளையும் மார்க்ஸ் சரக்காகக் கருதுகிறார் என்ற தவறான கருத்து பல நேரங்களில் தலையெடுப்பதைக் கருதி, இந்த இடைக் குறிப்பைச் சேர்த்துள்ளேன்.]

இதனை மேலும் நுணுக்கமாகப் பார்க்க வேண்டும்.

இரு சரக்குகளை, ஒரு சட்டையையும், பத்து கெஜம் துணியையும் எடுத்துக் கொள்வோம்; முன்னது பின்னதன் மதிப்பைப் போல் இரு மடங்கெனக் கொள்வோம். அதாவது 10 கெஜம் துணி=W என்றால், சட்டை=2W.

சட்டையானது குறிப்பிட்ட ஒரு தேவையை நிறைவு செய்யும் பயன்-மதிப்பாகும். அது ஒரு தனி வகைப்பட்ட உற்பத்தி நடவடிக்கையின் விளைவாய் உருவாகிறது. இந்நடவடிக்கையின் இயல்பு அதன் நோக்கத்தாலும், இயங்கு முறையாலும், இலக்குப் பொருளாலும், சாதனங்களாலும், விளைவாலும் நிர்ணயிக்கப்படுகிறது. இவ்வாறு எதன் உபயோகம் அதன் உற்பத்திப் பொருளின் பயன்-மதிப்பால் குறிக்கப்படுகிறதோ, அல்லது எது அதன் உற்பத்திப் பொருளை பயன்-மதிப்பாக்குவதன் மூலம் வெளிப்படுகிறதோ, அந்த உழைப்பைப் பயனுள்ள உழைப்பு என்று அழைக்கிறோம். இது தொடர்பாக அதன் பயன்தரு விளைவை மாத்திரமே நோக்குகிறோம்.

சட்டையும் துணியும் பண்பு வழியில் மாறுபட்ட இருவேறு பயன்-மதிப்புகளாய் இருப்பது போலவே, அவற்றை உற்பத்தி செய்கிற தையலும் நெசவும் உழைப்பின் இருவேறு வடிவங்களாகும். இந்த இரு பொருட்களும் பண்பு வழியில் வேறுபட்டிரா விட்டால், வெவ்வேறு பண்புள்ள உழைப்பால் உற்பத்தி செய்யப்படவில்லை என்றால், அவற்றிடையே சரக்குகள் என்ற உறவு இருக்க முடியாது. சட்டையை சட்டைக்கே பரிவர்த்தனை செய்வதில்லை; ஒரு பயன்-மதிப்பை அதே வகையைச் சேர்ந்த இன்னொரு பயன்-மதிப்புக்கே பரிவர்த்தனை செய்வதில்லை.

பயன்-மதிப்புகளின் வெவ்வேறு வகைகளுக்கும், சமுதாய உழைப்புப் பிரிவினையில் [social division of labour] பயனுள்ள உழைப்பின் அத்தனை வெவ்வேறு வகைகள் உள்ளன; அவை சார்ந்துள்ள வகுப்பு, பிரிவு, இனம், மாதிரி ஆகியவற்றின் படி இந்த வகைபிரித்தல் அமைகிறது. இந்த உழைப்புப் பிரிவினை சரக்கு-உற்பத்திக்கு இன்றியமையாத் தேவையாகும்; ஆனால், மறுதலையாக சரக்கு-உற்பத்தி உழைப்புப் பிரிவினைக்கு இன்றியமையாத் தேவை என்று இதிலிருந்து பெறப்படுவதில்லை. புராதன இந்திய கிராம சமுதாயத்தில் [primitive Indian community] சரக்கு-உற்பத்தி இல்லாமலே சமுதாய உழைப்புப் பிரிவினை உள்ளது. அல்லது, நமக்கு அண்மையில் உள்ள உதாரணத்தை எடுத்துக் கொள்வதானால், ஒவ்வொரு தொழிற்சாலையிலும் ஒரு முறைக்கேற்ப உழைப்பு பிரிக்கப்படுகிறது; ஆனால் இந்தப் பிரிவினை, வேலை செய்வோர் தமது தனித்தனி உற்பத்திப் பொருட்களைத் தமக்குள் பரிவர்த்தனை செய்து கொள்வதால் ஏற்படுவதன்று. உழைப்பின் வெவ்வேறு வகைகளிலிருந்து — ஒவ்வொரு வகையும்

சார்பின்றியும், சுதந்தரமாகவும், தனியாட்களின் நலனுக்காகவும் பிரயோகிக்கப்படும் நிலையில்—விளைகிற உற்பத்திப் பொருட்களே ஒன்று மற்றதன் தொடர்பாக சரக்குகள் ஆக முடியும்.

தொகுத்துக் கூறின், ஒவ்வொரு சரக்கின் பயன்-மதிப்பிலும், பயனுள்ள உழைப்பு, அதாவது ஒரு திட்டமான வகையைச் சேர்ந்ததும் திட்டமான ஒரு நோக்கத்துடன் பிரயோகிக்கப்படுவதுமான உற்பத்தி நடவடிக்கை அடங்கியுள்ளது. பயன்-மதிப்புகள், அவற்றில் உருக்கொண்டுள்ள பயனுள்ள உழைப்பு அவை ஒவ்வொன்றிலும் பண்பு வழியில் வேறுபட்டதாக இல்லையேல், சரக்குகளாக ஒன்றையொன்று எதிர்கொள்ள முடியாது. எச்சமுதாயத்தின் உற்பத்தி பொதுவாக சரக்குகளின் வடிவத்தை மேற்கொள்கிறதோ அச்சமுதாயத்தில், அதாவது சரக்கு உற்பத்தியாளர்களைக் கொண்ட சமுதாயத்தில், தனிப்பட்ட உற்பத்தியாளர்களால் அவர்கள் ஒவ்வொருவரின் சொந்த நலனுக்காகவும் பிரயோகிக்கப்படும் பயனுள்ள உழைப்பு வடிவங்களிடையிலான இந்தப் பண்பு வழி வேறுபாடு பின்னலானதோர் அமைப்பாக, சமுதாய உழைப்புப் பிரிவினையாக வளர்ச்சியடைகிறது.

சட்டையானது, அதனைத் தையற்காரர் அணிந்தாலும் சரி, அவரது வாடிக்கையாளர் அணிந்தாலும் சரி, பயன்-மதிப்பாகவே இயங்குகிறது. சட்டைக்கும் அதை உற்பத்தி செய்த உழைப்புக்கும் இடையிலான உறவும் கூட, தையல் ஒரு தனித் தொழிலாக, சமுதாய உழைப்புப் பிரிவினையின் சுயேச்சையான கிளையாகியிருக்கலாம் என்ற நிலைமையால் மாறி விடுவதில்லை. உடையின் தேவை தங்களை நிர்ப்பந்தித்த இடங்களிலெல்லாம், ஒரு மனிதன் கூட தையற்காரன் ஆகாமலே மனித இனம் ஆயிரக் கணக்கான ஆண்டுகளாகத் துணிகள் தயாரித்தது. ஆனால், எப்போதுமே, சட்டையும் துணியும் இயற்கையின் தன்னியல்பான உற்பத்தியல்லாத பொருட் செல்வத்தின் ஏனைய கூறு ஒவ்வொன்றையும் போலவே, திட்டமான நோக்கத்துடன் பிரயோகிக்கப்படுகிற தனிவித உற்பத்தி நடவடிக்கையின் — இயற்கையளித்த குறிப்பான மூலப் பொருட்களைக் குறிப்பான மனித தேவைகளுக்குப் பயன்படுத்திக் கொள்கிற நடவடிக்கையின் — விளைபயனாய் இருந்தாக வேண்டும். எனவே, உழைப்பு பயன்-மதிப்பின் படைப்பாளியாக இருக்கிறது, பயனுள்ள உழைப்பாக இருக்கிறது என்ற அளவில், மனித இனம் உயிர் வாழ்வதற்கு — சமுதாயத்தின் எல்லா வடிவங்களுக்கும் பொருந்தக் கூடிய — இன்றியமையாத் தேவையாகும். அது இயற்கை விதித்திடும் சாசுவத அவசியமாகும்; அது இல்லாமல் மனிதனுக்கும் இயற்கைக்கும் இடையே பொருளாயதப் பரிமாற்றம் எதுவும் நடக்க முடியாது; எனவே உயிர் எதுவும் இருக்க முடியாது.

பயன்-மதிப்புகளான சட்டை, துணி முதலானவை, அதாவது

சரக்குகளின் தசையுருக்கள் பொருள், உழைப்பு என்ற இரு கூறுகளின் ஒன்றிணைப்புகளாகும். அவற்றில் செலவிடப்பட்ட பயனுள்ள உழைப்பை எடுத்து விட்டால், மனித உதவியின்றி இயற்கையால் வழங்கப்பட்ட பொருளாயத ஆதாரம் எப்போதுமே எஞ்சி நிற்கிறது. இயற்கை செயல்படுவது போலவே, அதாவது பொருளின் வடிவத்தை மாற்றுவதன் மூலமே, மனிதனும் செயல்பட முடியும்.[20] அத்தோடில்லை, வடிவத்தை மாற்றுகிற இந்த வேலையில் இயற்கைச் சக்திகள் அவனுக்கு இடைவிடாது உதவுகின்றன. உழைப்பானது, பொருட் செல்வத்தின், உழைப்பினால் உற்பத்தி செய்யப்படும் பயன்-மதிப்புகளின் ஏக ஆதாரமன்று என்பதைப் பார்க்கிறோம். வில்லியம் பெட்டியின் சொற்களில் கூறுவதானால், உழைப்பு அதன் தந்தை, பூமி அதன் தாய்.

இப்போது நாம் பயன்-மதிப்பாகக் கருதப்படும் சரக்கிலிருந்து சரக்குகளின் மதிப்புக்குச் செல்வோம்.

துணியைப் போல் சட்டை இரு மடங்கு பெறுமானமுள்ளது எனக் கொண்டோம். ஆனால், இது வெறும் அளவு வழிப்பட்ட வேறுபாடே; இப்போது இது பற்றிக் கவலை இல்லை. ஆயினும் சட்டையின் மதிப்பு 10 கெஜம் துணியின் மதிப்பைப் போல் இரு மடங்கானால், 20 கெஜம் துணி ஒரு சட்டை பெற்றுள்ள அதே மதிப்பைப் பெற்றிருக்க வேண்டும் என்பதை மனதிற் கொண்டுள்ளோம். மதிப்புகள் என்ற அளவில் சட்டையும், துணியும் ஒரே விதமான சாரமுடைய பொருட்களே, சாராம்சத்தில் முழுதொத்த உழைப்பின் புறவயத் தெரிவிப்புகளே. ஆனால், தையலும், நெசவும் பண்பு வழியில் உழைப்பின் வெவ்வேறு வகைகளாகும். ஆயினும், ஒரே மனிதன் தையலையும் நெசவையும் மாறிமாறிச் செய்கிற சமுதாய நிலைகள் உண்டு; இந்நிலையில் உழைப்பின் இவ்விரு வடிவங்களும் ஒரே ஆளினது உழைப்பின் வெறும் தழுவல்களே தவிர, வெவ்வேறு ஆட்களின் தனிவிதமான நிலைத்த பணிகளல்ல; நமது தையற்காரர் ஒரு நாள் தைக்கிற சட்டையும் இன்னொரு நாள் தைக்கிற காற்சட்டையும் ஒரே ஆளின்

---

20 "பிரபஞ்சத்தின் புலப்பாடுகளை எல்லாம் — மனிதன் தோற்றுவித்தவை என்றாலும் சரி, உண்மையிலேயே சர்வப் பொதுவான பௌதிக விதிகள் தோற்றுவித்தவை என்றாலும் சரி — படைப்புச் செயல்களாகக் கருதாமல், பொருளின் ஒழுங்கமைப்பை மாற்றி அமைப்பதாக மட்டுமே கருத வேண்டும். மறுவுற்பத்தி என்ற கருத்தை மனித உள்ளம் பகுத்தாயும் போதெல்லாம் அது கண்டுபிடிக்கும் கூறுகள் சேர்தலும் பிரிதலும் மட்டுமே; மதிப்பு," (பயன்-மதிப்பு என்று சொல்லியிருக்க வேண்டும்; ஆனால் ஃபிசியோக்கிராட்டுகளுடன் நடக்கிற இந்த சர்ச்சையில் எந்த மதிப்பைச் சொல்கிறோம் என்பது வெர்ரிக்கு தெளிவாகத் தெரியவில்லை) "செல்வம் ஆகியவற்றின் மறுவுற்பத்திக்கும் இது பொருந்தும்; வயல்களில் மண்ணும் காற்றும் நீரும் தானியமாக மாற்றப்படுவதாய் இருந்தாலும் சரி, ஒரு பூச்சி சுரக்கிற பொருள் மனிதனால் பட்டு நூலாக மாற்றப்படுவதாய் இருந்தாலும் சரி, சிறு உலோகக் கூறுகள் சிலவற்றை முறையாகக் கோத்து கடிகாரம் செய்யப்படுவதாய் இருந்தாலும் சரி, இதுவே பொருந்தும்." — பீட்ரோ வெர்ரி, "Meditazioni Sulla Economia Politica."

உழைப்பில் ஒரு மாறுபாட்டையே குறிக்கின்றன என்பது போலத் தான் இதுவும். மேலும், நமது முதலாளித்துவ சமுதாயத்தில், மனித உழைப்பின் குறிப்பிட்ட ஒரு பங்கு மாறுபடும் வேண்டலுக்கேற்ப ஒரு நேரத்தில் தையலின் வடிவிலும் இன்னொரு நேரத்தில் நெசவின் வடிவிலும் வழங்கப்படுகிறது என்பது வெளிப்படை. இந்த மாற்றம் சிக்கலின்றி நடைபெறாமற் போகலாம்; ஆனால் நடைபெற்றேயாக வேண்டும்.

உற்பத்தி நடவடிக்கை என்பது, அதன் தனி வடிவத்தை, அதாவது உழைப்பின் பயனுள்ள தன்மையைப் பார்வையிலிருந்து விட்டு விடுவோமானால், மனித உழைப்புச் சக்தியின் செலவீடே யன்றி வேறல்ல. தையலும் நெசவும் பண்பு வழியில் வேறுபட்ட உற்பத்தி நடவடிக்கைகள் என்ற போதிலும், அவை ஒவ்வொன்றும் மனிதனின் மூளை, நரம்பு, தசை இவற்றின் திறனுடைச் செலவீடே, இந்த அர்த்தத்தில் மனித உழைப்பே. மனித உழைப்புச் சக்தியைச் செலவிடுகிற இருவேறு முறைகளே அவை. தனது தழுவல்கள் அனைத்திற்குமிடையில் மாறாதிருக்கும் இந்த உழைப்புச் சக்தி குறிப்பிட்ட வளர்ச்சி நிலையை அடைந்த பின்னரே, அதனைப் பற்பல விதங்களில் செலவிட முடியும் என்பது மெய்தான். ஆனால் சரக்கின் மதிப்பு ஸ்தூலமற்ற மனித உழைப்பை, பொதுவான மனித உழைப்பின் செலவீட்டைக் குறிக்கிறது. சமுதாயத்தில் தளபதி அல்லது வங்கிக்காரர் முக்கியப் பாத்திரத்தையும், மறு புறம் சாதாரண மனிதன் மிக ஈனமான பாத்திரத்தையும் வகிப்பது எப்படியோ,[21] அப்படியேதான் இங்கு வெறும் மனித உழைப்பின் சங்கதியும். சாமானிய உழைப்புச் சக்தியின், அதாவது சராசரியாக, எந்தத் தனிவித வளர்ச்சியும் இன்றி ஒவ்வொரு சாதாரணத் தனி மனிதனின் உயிரமைப்பிலும் இருக்கிற உழைப்புச் சக்தியின் செலவீடே அது. சராசரி சாமானிய உழைப்பின் தன்மை வெவ் வேறு நாடுகளிலும் வெவ்வேறு காலங்களிலும் வேறுபடுவது மெய் தான்; ஆனால் குறிப்பிட்ட சமுதாயத்தில் அது குறிப்பிட்ட தன்மை யதாகவே உள்ளது. தேர்ச்சி பெற்ற உழைப்பு [skilled labour] என்பது மும்முரமாக்கப்பட்ட சாமானிய உழைப்பாகவே, அல்லது இன்னும் சரியாகச் சொன்னால், பன்மடங்காக்கப்பட்ட சாமானிய உழைப்பாகவே கணக்கிடப்படுகிறது; குறிப்பிட்ட அளவிலான தேர்ச்சி பெற்ற உழைப்பு அதை விடப் பெரிய அளவிலான சாமானிய உழைப்புக்கு [simple labour] சமமானதாகக் கருதப்படுகிறது. இந்தப் பெயர்ப்பு இடைவிடாமல் செய்யப்படுகிறது என்பதை அனுபவம் காட்டுகிறது. ஒரு சரக்கு மிகவும் தேர்ச்சி பெற்ற உழைப்பின் உற்பத்திப் பொருளாக

---

[21] பார்க்கவும்: ஹெகல், "Philosophie des Rechts." பெர்லின், 1840, பக்கம் 250, §190.

இருக்கலாம். ஆனால் — அதனை தேர்ச்சியற்ற சாமானிய உழைப்பின் உற்பத்திப் பொருளுக்கு சமன் செய்வதன் மூலம் — அதன் மதிப்பு தேர்ச்சியற்ற உழைப்பின் திட்டமான அளவையே குறிக்கிறது.[22] உழைப்பின் வெவ்வேறு வகைகள் அவற்றின் நியமம் என்ற முறையில் தேர்ச்சியற்ற உழைப்பாகப் பெயர்க்கப்படுகிற வெவ்வேறு விகிதாசாரங்கள், உற்பத்தியாளர்களின் முதுகுக்குப் பின்னால் நடந்த வண்ணமுள்ள சமூக நிகழ்முறையால் நிறுவப் படுகின்றன; ஆதலால் அவை வழக்கத்தால் நிர்ணயிக்கப்படுவதாகத் தோன்றுகிறது. எளிமையின் நிமித்தம், இனிமேல் சகல வகைப்பட்ட உழைப்பையும் தேர்ச்சியற்ற சாமானிய உழைப்பாகவே கணக்கில் கொள்வோம்; இதன் மூலம் பெயர்ப்புச் செய்கிற தொந்தரவைத் தவிர்க்கிறோம், அதற்கு மேல் ஒன்றுமில்லை.

எனவே, சட்டையையும், துணியையும் மதிப்புகளாகக் கருதும் போது எப்படி அவற்றின் வெவ்வேறு பயன்-மதிப்புகளை நீக்கி விட்டுப் பார்க்கிறோமோ, அதே போல் அந்த மதிப்புகளால் குறிக்கப்படும் உழைப்பை நோக்கும் போது அதன் பயன் வடிவங்களான நெசவுக்கும் தையலுக்குமான வேறுபாட்டைக் கருதாமல் பார்க்கிறோம். பயன்-மதிப்புகளான சட்டையும் துணியும் துணி, நூல் இவற்றுடன் தனிவித உற்பத்தி நடவடிக்கைகளின் ஒன்றிணைப்புகளாகும்; மறு புறம் மதிப்புகளான சட்டையும் துணியுமோ வகைபிரிக்கப்படாத உழைப்பின் ஒருபடித்தான இறுகல்கள்தாம்; இவ்வாறே, இந்த மதிப்புகளில் உருக்கொண்டுள்ள உழைப்பும் — துணி, நூல் இவற்றின் உற்பத்தியோடு அதற்குள்ள தொடர்பின் அடிப்படையில் கணக்கிடப்படாமல் — மனித உழைப்புச் சக்தியின் செலவீடு என்ற முறையில்தான் கணக்கிடப்படுகிறது. தையல், நெசவு ஆகியவை வெவ்வேறு பண்புள்ளவையாக இருப்பதால்தான், சட்டை, துணி ஆகிய பயன்-மதிப்புகளின் படைப்பில் இவ்விரு உழைப்பு வகைகளும் அவசியக் காரணிகளாகின்றன. ஆனால் அவற்றின் தனிப் பண்புகளை நீக்கி விட்டுப் பார்க்கிற அளவிலேயே, இரண்டுமே மனித உழைப்பென்ற ஒரே பண்பைப் பெற்றுள்ளன என்ற அளவிலேயே, தையலும், நெசவும் அந்தப் பண்டங்களின் மதிப்புகளது சாரமாக அமைகின்றன.

ஆயினும், சட்டையும் துணியும் வெறும் மதிப்புகள் மட்டுமல்ல, திட்டமான பருமனுடைய மதிப்புகளுமாகும்; சட்டையானது பத்து கெஜம் துணியைப் போல் இரு மடங்கு பெறுமானமுடையது எனக்

[22] நாம் இங்கே தொழிலாளி குறிப்பிட்ட உழைப்பு நேரத்துக்காகப் பெறுகிற கூலி அல்லது மதிப்பு பற்றிப் பேசவில்லை, அந்த உழைப்பு நேரம் எதில் பொருள் வடிவாகியுள்ளதோ அந்தச் சரக்கின் மதிப்பு பற்றியே பேசுகிறோம் என்பதை வாசகர் கவனிக்க வேண்டும். நமது ஆராய்ச்சியின் இந்தக் கட்டத்தில், கூலி என்ற கருத்தினமே இது வரை இடம் பெறவில்லை.

கொண்டோம். அவற்றின் மதிப்புகளில் இந்த வேறுபாடு எங்கிருந்து வந்தது? சட்டையில் அடங்கியுள்ளதில் பாதியளவு உழைப்புதான் துணியில் அடங்கியுள்ளது; ஆதலால், சட்டையின் உற்பத்தியில், துணியின் உற்பத்திக்கு அவசியமானதைப் போல் இரு மடங்கு காலத்துக்கு உழைப்புச் சக்தி செலவிடப்பட்டிருக்க வேண்டும் என்பதே அதற்குக் காரணமாகும்.

எனவே, சரக்கில் அடங்கியுள்ள உழைப்பானது பயன்-மதிப்பைப் பொறுத்த வரை பண்பு வழியிலேயே கணக்கிடப்படுகிறது என்னும் அதே போது, மதிப்பைப் பொறுத்த வரை அளவு வழியிலேயே கணக்கிடப்படுகிறது. ஆகவே, முதலாவதாக அதனை முழுக்க முழுக்க சாமானிய மனித உழைப்பாகப் பெயர்த்துக் கொள்ள வேண்டும். பயன்-மதிப்பைப் பொறுத்த வரை கேட்க வேண்டிய கேள்வி: எப்படி? என்ன? மதிப்பைப் பொறுத்த வரை கேட்க வேண்டிய கேள்வி: எவ்வளவு? எவ்வளவு காலத்துக்கு? சரக்கினது மதிப்பின் பருமன் அதில் உருக்கொண்டுள்ள உழைப்பின் அளவையே குறிக்கிறதென்பதால், எல்லாச் சரக்குகளுமே, குறிப்பிட்ட விகிதாசாரங்களில் எடுத்துக் கொள்ளப்படும் போது சம மதிப்புள்ளவையாய் இருந்தாக வேண்டும் என்றாகிறது.

ஒரு சட்டையின் உற்பத்திக்குத் தேவையான பயனுள்ள உழைப்பின் வெவ்வேறு வகைகள் அனைத்தின் உற்பத்தித் திறன் மாறாதிருந்தால், உற்பத்தி செய்யப்படும் சட்டைகளது மதிப்புகளின் மொத்தம் அவற்றின் தொகைக்கேற்ப அதிகரிக்கிறது. ஒரு சட்டை x நாள் உழைப்பைக் குறித்தால், இரு சட்டைகள் 2x நாள் உழைப்பைக் குறிக்கின்றன; இவ்வாறே மேலும் சொல்லலாம். ஆனால் ஒரு சட்டையின் உற்பத்திக்கு அவசியமான உழைப்பு நீடிக்கும் காலம் இரு மடங்காகிறது, அல்லது சரிபாதியாகிறது எனக் கொள்வோம். முதல் நேர்வில், முன்பு இரு சட்டைகளுக்கு இருந்த பெறுமானம் ஒரு சட்டைக்கு உள்ளது; இரண்டாவது நேர்வில், முன்பு ஒரு சட்டைக்கு இருந்த பெறுமானம் இரு சட்டைகளுக்கு உள்ளது; எனினும் இரு நேர்வுகளிலுமே முன்பளித்த அதே பயனையே ஒரு சட்டை அளிக்கிறது; அதில் உருக்கொண்டுள்ள பயனுள்ள உழைப்பு அதே பண்புடையதாகவே நீடிக்கிறது. ஆனால் அதன் உற்பத்தியில் செலவிடப்படும் உழைப்பின் அளவு மாறியுள்ளது.

பயன்-மதிப்புகளின் அளவிலான அதிகரிப்பு பொருட் செல்வத்திலான அதிகரிப்பாகும். இரு சட்டைகள் இருவருக்கு உடையாகும்; ஒரு சட்டை ஒருவருக்கே உடையாகும். ஆனாலும் பொருட் செல்வத்தின் அளவு அதிகமாகும் போதே, அதன் மதிப்பின் பருமன் குறையலாம். இந்தப் பகை இயக்கத்தின் தோற்றுவாய் உழைப்பின் இரட்டைத் தன்மையில் பொதிந்துள்ளது. உற்பத்தித் திறன் என்பது ஏதேனும் ஒரு பயனுள்ள ஸ்தூல வடிவம்

கொண்ட உழைப்போடு தொடர்புடையது. குறிப்பிட்ட காலத்தில் நிகழும் விசேஷ உற்பத்தி நடவடிக்கையின் பயனாற்றலும் அதன் உற்பத்தித் திறனைச் சார்ந்துள்ளது. எனவே, பயனுள்ள உழைப்பு அதன் உற்பத்தித் திறனில் உயர்வுக்கோ, தாழ்வுக்கோ ஏற்ற விகிதத்தில் உற்பத்திப் பொருட்களின் கூடுதலாகவோ, குறைவாகவோ நிறைவுள்ள ஆதாரம் ஆகிறது. மறு புறம் இந்த உற்பத்தித் திறனிலான மாற்றமெதுவும் மதிப்பால் குறிக்கப்படும் உழைப்பைப் பாதிப்பதில்லை. உற்பத்தித் திறன் உழைப்பின் ஸ்தூலமான வடிவங்களுக்கே உரித்தானதொரு தன்மையென்பதால், அந்த ஸ்தூலமான பயனுள்ள வடிவங்களிலிருந்து நாம் பிரித்தெடுத்த மாத்திரமே, அது இனியும் அந்த உழைப்பில் எவ்விளைவையும் தோற்றுவிக்க முடியாது என்பது மெய்தான். இந்நிலையில் உற்பத்தித் திறன் எப்படித்தான் மாறலாமென்றாலும், சம கால அளவுகளில் பிரயோகிக்கப்படும் ஒரே உழைப்பு எப்போதும் சம மதிப்பளவுகளையே கொடுக்கிறது. ஆனால் சம கால அளவுகளில் அது பயன்-மதிப்புகளின் வேறுபட்ட அளவுகளைக் கொடுக்கும்; உற்பத்தித் திறன் உயர்ந்தால் அதிகமாகவும், வீழ்ந்தால் குறைவாகவும் கொடுக்கும். உழைப்பின் பயன்தரு தன்மையையும், அதன் விளைவாக அந்த உழைப்பால் உற்பத்தி செய்யப்படும் பயன்-மதிப்புகளின் அளவையும் அதிகரிக்கச் செய்த உற்பத்தித் திறனிலான அதே மாற்றம்—இவ்வாறான மாற்றம் அவற்றின் உற்பத்திக்கு அவசியமான மொத்த உழைப்பு நேரத்தைக் குறைப்பதாய் இருக்க வேண்டும் என்ற நிபந்தனையின் பேரில்— பயன்-மதிப்புகளின் இந்த அதிகரித்த அளவினது மொத்த மதிப்பைச் சுருக்கி விடும்; மறுதலையாகவும் இது பொருந்தும்.

உடலியல் நோக்கில் பேசுவதானால், ஒரு புறம், உழைப்பு அனைத்தும் மனித உழைப்புச் சக்தியின் செலவீடே; முழுதொத்த ஸ்தூலமற்ற மனித உழைப்பு என்ற தன்மையில் அது சரக்குகளின் மதிப்பைப் படைக்கிறது, அம்மதிப்பாக அமைகிறது. மறு புறம், உழைப்பு அனைத்தும் ஒரு விசேஷமான வடிவத்திலும், ஒரு திட்டமான நோக்கத்துடனும் மனித உழைப்புச் சக்தியைச் செலவிடுதலே ஆகும்; ஸ்தூலமான பயனுள்ள உழைப்பு என்ற இந்தத் தன்மையில் அது பயன்-மதிப்புகளை உற்பத்தி செய்கிறது.[23]

---

[23] எல்லாக் காலங்களிலும் எல்லாச் சரக்குகளின் மதிப்பையும் மதிப்பிடவும் ஒப்பிடவும் கூடிய அந்தச் சர்வவல்லமையுள்ள, மெய்யான அளவை உழைப்பே என்பதை நிரூபிக்கும் பொருட்டு, ஆதாம் ஸ்மித் கூறுகிறார்: "எல்லா நேரங்களிலும், எல்லா இடங்களிலும் உழைப்பின் சம அளவுகள் உழைப்பாளிக்கு ஒரே மதிப்புடையவையாகவே இருக்க வேண்டும். தமது ஆரோக்கியம், வலிமை, முனைப்பு இவற்றின் இயல்பான நிலையிலும், தாம் பெற்றிருக்கக் கூடிய சராசரித் தேர்ச்சித் தரத்துடனும், தமது ஓய்வு, தமது சுதந்தரம், தமது மகிழ்ச்சி இவற்றின் ஒரே பகுதியை எப்போதும் அவர் இழக்க வேண்டும்." ("நாடுகளின் செல்வம்", புத்தகம் I, அத்தியாயம் V.) ஒரு புறம், ஆதாம் ஸ்மித் இங்கே (ஆனால் எங்குமல்ல) சரக்குகளின் உற்பத்தியில் செலவிடப்பட்ட உழைப்பின் அளவைக் கொண்டு மதிப்பை நிர்ணயிப்பதை, உழைப்பின் மதிப்பைக் கொண்டு சரக்குகளின்

## பிரிவு 3. — மதிப்பின் வடிவம் அல்லது பரிவர்த்தனை-மதிப்பு

இரும்பு, துணி தானியம் போன்ற பயன்-மதிப்புகள், பொருட்கள், அல்லது பண்டங்களின் வடிவில் சரக்குகள் உருவெடுக்கின்றன. இது அவற்றின் வெளிப்படையான, எளிமையான தசையுருவமாகும். ஆயினும், அவை இரட்டைத் தன்மையுள்ள ஏதோ ஒன்றாக, உபயோகப் பொருட்கள், அதே நேரத்தில் மதிப்பின் சேமிப்பகங்கள் ஆகிய இரண்டாகவுமே இருப்பதால்தான் சரக்குகளாக இருக்கின்றன. எனவே, அவை இரு வடிவங்களை, பௌதிக அல்லது இயற்கை வடிவத்தையும் மதிப்பு வடிவத்தையும், பெற்றுள்ளன என்ற அளவிலேயே சரக்குகளாக விளங்குகின்றன; அல்லது சரக்குகளின் வடிவத்தைப் பெற்றிருக்கின்றன.

சரக்குகளின் மதிப்பென்ற மெய்ம்மை இவ்வகையில் திருவாட்டி குவிக்ளி போன்றதாயில்லை; ஏனெனில் ''அதனைப் பெறுவது எங்கே'' என்பதறியோம். சரக்குகளின் மதிப்பு அவற்றினது சாரத்தின் மோட்டாவான பொருள்வயத் தன்மைக்கு நேர் எதிரானது; அதன் கட்டமைப்பில் பொருளின் ஓரணுவும் இடம் பெறுவதில்லை. தனியொரு சரக்கை எடுத்துக் கொண்டு, அதனை விருப்பம் போல் புரட்டியும் பரிசோதித்தும் பாருங்கள்; இருப்பினும், அது மதிப்புடைய பொருளாக இருக்கிறதென்ற அளவில் புரிந்து கொள்ள இயலாததாகவே தோன்றுகிறது.

---

மதிப்புகளை நிர்ணயிப்பதுடன் போட்டுக் குழப்பிக் கொள்கிறார்; எனவே, உழைப்பின் சம அளவுகள் எப்போதும் ஒரே மதிப்பையே பெற்றுள்ளன என்று நிரூபிக்க முனைகிறார். மறு புறம், உழைப்பு சரக்குகளின் மதிப்பில் தன்னைக் காண்பித்துக் கொள்கிறது என்ற அளவில், உழைப்புச் சக்தியின் செலவீடாகவே கணக்கிடப்படுகிறது என்ற எண்ணம் அவருக்கு முன் கூட்டியே உள்ளது; ஆனால் அவர் இந்தச் செலவீட்டை ஓய்வு, சுதந்தரம், மகிழ்ச்சி இவற்றின் தியாகமாகக் கருதுகிறாரே தவிர, அதே நேரத்தில் அது ஜீவராசிகளின் இயல்பான நடவடிக்கையும் ஆகும் என்று கருதவில்லை. ஆனால், இங்கே நவீன காலக் கூலித் தொழிலாளியையே அவர் தம் கண்முன் கொண்டுள்ளார். இன்னும் அதிகம் பொருத்தமாக, பக்கம் 65, குறிப்பு 16இல் மேற்கோள் காட்டப்பட்ட ஆதாம் ஸ்மித்தின் முன்னோடி ஒருவர் (பெயர் தெரியவில்லை) கூறுகிறார்: ''வாழ்க்கையின் இந்த அவசியப் பொருளுக்கு வழி செய்வதில் ஒரு மனிதன் தன்னை ஒரு வாரம் ஈடுபடுத்திக் கொண்டுள்ளான்.... பரிவர்த்தனையில் வேறு ஒன்றை அவனுக்குத் தருபவன், சரியான சமதை எது என்பது பற்றி, சரியாக அதே அளவு உழைப்பும் நேரமும் அவனுக்கு எதில் செலவாகிறது என்பதைக் கணக்கிடுவதன் மூலமே மிகச் சிறந்த மதிப்பீட்டைச் செய்ய முடியும்; இது, காரியாம்சத்தில், ஒரு பொருளில் குறிப்பிட்ட நேரத்துக்கான ஒரு மனிதனின் உழைப்பை இன்னொரு பொருளில் அதே நேரத்துக்கான இன்னொரு மனிதனின் உழைப்புக்குப் பரிவர்த்தனை செய்து கொள்வதன்றி வேறில்லை.'' (முன் வந்தது, பக்கம் 39.) [எங்கெல்ஸ் குறிப்பு: இங்கு பரிசீலிக்கப்படுபவையான உழைப்பின் இரு அமிசங்களுக்கும் வெவ்வேறு வார்த்தைகளைப் பெற்றிருக்கும் சௌகரியம் ஆங்கில மொழிக்கு உள்ளது. பயன்-மதிப்பைப் படைப்பதும் பண்பு வழியில் கணக்கிடப்படுவதுமான உழைப்பு Work எனப்படும் — இது Labour என்பதற்கு மாறானது. மதிப்பைப் படைப்பதும் அளவு வழியில் கணக்கிடப்படுவதுமான உழைப்பு Labour எனப்படும் — இது Work என்பதற்கு மாறானது.]

ஆயினும், சரக்குகளின் மதிப்புக்கு முற்றிலும் சமூக வழிப்பட்ட மெய்ம்மை இருக்கிறது என்பதையும், அவை முழுதொத்த சமூக சாரத்தின், அதாவது மனித உழைப்பின் தெரிவிப்புகள் அல்லது உருக்கள் என்ற அளவிலேயே இந்த மெய்ம்மையை ஈட்டுகின்றன என்பதையும் நாம் மனத்திலிருத்தினால், சரக்குக்கு சரக்கு என்ற சமூக உறவிலேயே மதிப்பு தன்னைக் காண்பித்துக் கொள்ள முடியும் என்பது இயல்பாகவே தெரிகிறது. உண்மையிலேயே, பரிவர்த்தனை-மதிப்பிலிருந்து, அல்லது சரக்குகளின் பரிவர்த்தனை-உறவிலிருந்து — அதன் பின்னால் ஒளிந்து கிடக்கும் மதிப்பைக் கண்டறியும் பொருட்டு — புறப்பட்டோம். மதிப்பு நமக்கு முதலில் தென்பட்ட இவ்வடிவத்துக்கு இப்போது திரும்ப வேண்டும்.

சரக்குகள், அவை அனைத்துக்கும் பொதுவானதும், அவற்றின் பயன்-மதிப்புகளின் பல்வேறு தசையுருவங்களுடன் கண்கூடாக பேதத்தைக் காட்டுவதுமான மதிப்புருவத்தைப் பெற்றிருக்கின்றன என்பதை அறியாதார் எவருமில்லை. அவற்றின் பண வடிவத்தையே நான் குறிப்பிடுகிறேன். ஆயினும், இங்கே நமக்கு ஒரு வேலை இருக்கிறது. முதலாளித்துவப் பொருளாதார இயல் இது வரை இந்த வேலையைச் செய்ய முயன்றது கூட இல்லை. இந்தப் பண வடிவத்தின் பிறப்பைக் கண்டறிவதுதான், சரக்குகளின் மதிப்புறவில் பொதிந்துள்ள மதிப்புத் தெரிவிப்பை அதன் மிகவும் சாமானியமான, அநேகமாய்ப் புலனாகாத உருவரையிலிருந்து மினுமினுக்கும் பண வடிவத்துக்கு வளர்த்தெடுப்பதுதான் இந்த வேலை. இந்த வேலையைச் செய்வதன் மூலம், நாம் அதே நேரத்தில் பணத்தின் புதிரையும் விடுவிப்போம்.

ஒரு சரக்கு வேறு வகையைச் சேர்ந்த இன்னொரு சரக்கோடு கொண்டுள்ள மதிப்புறவே மிகவும் சாமானியமான மதிப்புறவு என்பது தெளிவு. எனவே, இரு சரக்குகளின் மதிப்புகளிடையிலான உறவு தனியொரு சரக்கினது மதிப்பின் சாமானியத் தெரிவிப்பை நமக்குத் தருகிறது.

## A. மதிப்பின் ஆரம்ப அல்லது தற்செயல் வடிவம்

x சரக்கு A = y சரக்கு B, அல்லது
x சரக்கு Aஇன் பெறுமானம் y சரக்கு B.
20 கெஜம் துணி = 1 சட்டை, அல்லது
20 கெஜம் துணியின் பெறுமானம் 1 சட்டை.

### 1. மதிப்புத் தெரிவிப்பின் இரு துருவங்கள். ஒப்பீட்டு வடிவமும் சமதை வடிவமும்

மதிப்பு வடிவத்தின் மர்மம் முழுவதும் இந்த ஆரம்ப வடிவத்தில்

மறைந்து கிடக்கிறது. எனவே, நமக்குள்ள சிரமமெல்லாம் இதன் பகுப்பாய்வே.

இங்கே, சரக்குகளின் இருவேறு வகைகள் (நம் உதாரணத்தில் துணியும் சட்டையும்) இருவேறு பாத்திரங்கள் வகிக்கின்றன என்பது தெளிவு. துணி தனது மதிப்பை சட்டையின் வாயிலாக தெரிவிக்கிறது. அந்த மதிப்பைத் தெரிவிப்பதற்கான பொருளாக சட்டை பயன்படுகிறது. முன்னது தன்முனைப்பான பாத்திரத்தையும், பின்னது தன்முனைப்பற்ற பாத்திரத்தையும் வகிக்கின்றன. துணியின் மதிப்பு ஒப்பீட்டு மதிப்பாகக் குறிக்கப் பெறுகிறது; அல்லது ஒப்பீட்டு வடிவில் தோன்றுகிறது. சட்டை சமதை ஆகிறது; அல்லது சமதை வடிவில் தோன்றுகிறது.

ஒப்பீட்டு வடிவமும் [relative form] சமதை வடிவமும் [equivalent form] மதிப்புத் தெரிவிப்பின் இரு கூறுகளாகும் — நெருக்கமாகத் தொடர்புள்ள, பரஸ்பரம் சார்புள்ள, பிரிக்க முடியாத கூறுகளாகும். ஆனால், அதே போது ஒன்றுக்கொன்று பிரத்தியேகமான, பகைமை வாய்ந்த முனைகளாக — அதாவது ஒரே தெரிவிப்பின் இரு துருவங்களாக — அவை இருக்கின்றன. அந்தத் தெரிவிப்பால் உறவுபடுத்தப்படும் இருவேறு சரக்குகளுக்கும் அவை முறையே உரித்தாகின்றன. துணியின் மதிப்பை துணி வாயிலாகவே தெரிவிப்பது சாத்தியமல்ல. 20 கெஜம் துணி = 20 கெஜம் துணி என்பது எவ்விதத்தும் மதிப்புத் தெரிவிப்பன்று. மாறாக, 20 கெஜம் துணி என்பது பயன்-மதிப்பான துணியின் திட்டமான அளவாகிய 20 கெஜம் துணியே அன்றி வேறில்லை என்று மட்டுமே இப்படிப்பட்ட ஒரு சமன்பாடு சொல்கிறது. எனவே துணியின் மதிப்பை ஒப்பீட்டு முறையில்தான் — அதாவது வேறு ஒரு சரக்கின் வாயிலாகத்தான் — தெரிவிக்க முடியும். எனவே துணியினது மதிப்பின் ஒப்பீட்டு வடிவமானது, வேறு ஒரு சரக்கு — இங்கே சட்டை — சமதை வடிவில் இருப்பதை முன் தேவையாகக் கொண்டுள்ளது. மறு புறம், ஒரு சரக்கு சமதையாகத் தோன்றுகிற போதே ஒப்பீட்டு வடிவத்தையும் மேற்கொள்வது முடியாத காரியம். தெரிவிக்கப் பெறுவது அந்த இரண்டாவது சரக்கின் மதிப்பன்று. முதல் சரக்கின் மதிப்பைத் தெரிவிப்பதற்கான பொருளாகப் பயன்படுவது மட்டுமே அதன் வேலை.

20 கெஜம் துணி = 1 சட்டை, அல்லது 20 கெஜம் துணியின் பெறுமானம் 1 சட்டை என்ற தெரிவிப்பு, 1 சட்டை = 20 கெஜம் துணி, அல்லது 1 சட்டையின் பெறுமானம் 20 கெஜம் துணி என்ற எதிரிடை உறவையும் குறிக்கத்தான் செய்கிறது — இதில் ஒன்றும் சந்தேகமில்லை. ஆனால், அந்நிலையில், சட்டையின் மதிப்பை ஒப்பீட்டு முறையில் தெரிவிக்கும் பொருட்டு சமன்பாட்டை நேர்மாறாக்க வேண்டும்; அவ்வாறு செய்ததுமே சட்டைக்கு பதில் துணி சமதையாகிறது. எனவே, தனியொரு சரக்கு

ஒரே நேரத்தில், ஒரே மதிப்பு தெரிவிப்பில் இரு வடிவங்களையுமே மேற்கொள்ள முடியாது. இந்த வடிவங்களின் துருவச் சார்பே அவற்றை ஒன்றுக்கொன்று பிரத்தியேகமானவை ஆக்குகிறது.

அப்படியானால், ஒரு சரக்கு ஒப்பீட்டு வடிவத்தை மேற்கொள்கிறதா அல்லது அதற்கு எதிரிடையான சமதை வடிவத்தை மேற்கொள்கிறதா என்பது, முழுக்க முழுக்க, மதிப்புத் தெரிவிப்பில் அதன் தற்செயலான நிலையைப் பொறுத்தது; அந்தச் சரக்கின் மதிப்பு தெரிவிக்கப்படுகிறதா, அல்லது அந்தச் சரக்கின் வாயிலாக மதிப்பு தெரிவிக்கப்படுகிறதா என்பதைப் பொறுத்தது.

## 2. மதிப்பின் ஒப்பீட்டு வடிவம்

### (அ.) இந்த வடிவத்தின் இயல்பும் கருத்தும்

ஒரு சரக்கின் ஆரம்ப மதிப்புத் தெரிவிப்பு இரு சரக்குகளின் மதிப்புறவில் மறைந்து கிடப்பது எப்படி என்பதைக் கண்டுபிடிக்கும் பொருட்டு, நாம் முதலாவதாக அம்மதிப்புறவை அதன் அளவு வழிப்பட்ட அமிசத்திலிருந்து அறவே வேறாகப் பரிசீலிக்க வேண்டும். வழக்கமான நடைமுறை பொதுவாக நேர்மாறானது. ஒன்றுக்கொன்று சமமெனக் கருதப்படுகிற இருவேறு வகைப்பட்ட சரக்குகளின் குறிப்பிட்ட அளவுகளிடையிலான விகிதாசாரம் தவிர வேறெதுவும் மதிப்புறவில் பார்க்கப்படுவதில்லை. வெவ்வேறு பொருட்களின் பருமன்களை ஒரே அலகின் பேரில் தெரிவிக்கும் போதுதான் அப்பருமன்களை அளவு வழியில் ஒப்புநோக்க முடியும் என்பதை மறந்து விடுகின்றனர். அவை இப்படியோர் அலகின் தெரிவிப்புகள் என்ற முறையில்தான் ஒரே வகைப்பட்டவை, எனவே பொதுவளவுடையவை.[24]

20 கெஜம் துணி = 1 சட்டையா? அல்லது = 20 சட்டையா? அல்லது = x சட்டைகளா? அதாவது, குறிப்பிட்ட அளவிலான துணியின் பெறுமானம் சில சட்டைகளா? அல்லது பல சட்டைகளா? இப்படிப்பட்ட ஒவ்வொரு கூற்றும், துணியும் சட்டைகளும் மதிப்பின் பருமன்கள் என்ற விதத்தில், ஒரே அலகின் தெரிவிப்புகளே, ஒரே வகையைச் சேர்ந்தவையே என்பதை உள்ளர்த்தமாகக் கொண்டுள்ளது. துணி = சட்டை என்பது இச்சமன்பாட்டின் அடிப்படையாகும்.

---

[24] மதிப்பின் வடிவத்தைப் பகுத்தாயும் வேலையில் தங்களை ஈடுபடுத்திக் கொண்ட சிலரேயான பொருளாதார அறிஞர்கள் — அவர்களில் சா. பெய்லியும் ஒருவர் — எந்த முடிவையும் அடைய முடியவில்லை. இதற்கு முதற்காரணம் அவர்கள் மதிப்பின் வடிவத்தை மதிப்போடு போட்டுக் குழப்பிக் கொள்கின்றனர்; இரண்டாவது காரணம், காரியாம்ச முதலாளியின் பாதிப்புக்கு உள்ளாகி அவர்கள் இப்பிரச்சினையின் அளவு வழிப்பட்ட அமிசத்திலேயே பிரத்தியேகமாகக் கவனம் செலுத்துகின்றனர். ''அளவின் கட்டளை ... மதிப்பாக அமைகிறது.'' (''பணமும் அதன் விகாரங்களும்.'' லண்டன், 1837, பக்கம் 11, எழுதியவர் சா. பெய்லி.)

ஆனால் எவற்றின் முழுதொத்த பண்புடைமை இவ்வாறு அனுமானித்துக் கொள்ளப்படுகிறதோ அந்த இரு சரக்குகளும் ஒரே பாத்திரத்தை வகிப்பதில்லை. தெரிவிக்கப் பெறுவது துணியின் மதிப்பே. எப்படி? அதன் சமதையாக, அதற்குப் பிரதியாய் பரிவர்த்தனை செய்து கொள்ளக் கூடிய ஒன்றாக சட்டையுடன் அதற்குள்ள தொடர்பைக் கொண்டே. இந்த உறவில் சட்டையானது மதிப்பின் நிலவல் முறையே, உருக்கொண்ட மதிப்பே; ஏனெனில், இந்த விதத்தில்தான் அதுவும் துணியும் ஒன்றாகும். மறு புறம் துணியின் சொந்த மதிப்பு முன்னுக்கு வந்து சார்பற்ற தெரிவிப்பைப் பெறுகிறது; ஏனெனில், அது சம மதிப்புள்ள ஒன்று என்ற விதத்தில் சட்டையுடன் ஒப்பு நோக்கத் தக்கதாக, அல்லது சட்டையுடன் பரிவர்த்தனை செய்து கொள்ளத் தக்கதாக இருப்பது மதிப்பு என்ற விதத்திலேயே. இரசாயனத்திலிருந்து ஓர் எடுத்துக் காட்டை குறிப்பிடலாம். பியூட்டிரிக் அமிலம் புரொப்பைல் ஃபார்மேட்டிலிருந்து வேறுபட்ட பொருளாகும். இருந்தும் அவை இரண்டுமே கார்பன் (C), ஹைட்ரஜன் (H), ஆக்ஸிஜன் (O) ஆகிய ஒரே இரசாயனப் பொருட்களால் — அதுவும் ஒத்த விகிதாசாரங்களில் — ஆனவை: அதாவது $C_4 H_8 O_2$. நாம் இப்போது பியூட்டிரிக் அமிலத்தை புரொப்பைல் ஃபார்மேட்டுக்குச் சமன் செய்வோமானால், முதலாவதாக, புரொப்பைல் ஃபார்மேட் இந்த உறவில் $C_4 H_8 O_2$ என்பதன் வெறும் நிலவல் வடிவமாகவே இருக்கும்; இரண்டாவதாகப் பியூட்டிரிக் அமிலமும் $C_4 H_8 O_2$ என்பதால் ஆனது என்று கூற வேண்டியிருக்கும். எனவே, இரு பொருட்களையும் இவ்வாறு சமன் செய்வதன் மூலம், அவற்றின் வெவ்வேறு பௌதிக வடிவங்களைக் கருத்தில் கொள்ளாமல், அவற்றின் இரசாயன இயைபு வெளியிடப்படும்.

மதிப்புகள் என்ற விதத்தில், சரக்குகள் மனித உழைப்பின் வெறும் இறுகல்களே என்று கூறும் போது அவற்றை நமது பகுப்பாய்வின் மூலம் மதிப்பென்ற சூக்கும நிலைக்குப் பெயர்க்கிறோம் என்பது மெய்தான். ஆனால் நாம் இந்த மதிப்புக்கு அவற்றின் தசையுருவத்திலிருந்து வேறான வடிவமெதையும் உரித்தாக்கவில்லை. ஒரு சரக்கு இன்னொரு சரக்குடன் கொண்ட மதிப்புறவில், இது இப்படியில்லை. இங்கே ஒரு சரக்கு மறு சரக்குடனான தன் உறவின் காரணத்தால் தன் மதிப்புத் தன்மையில் முன்னிற்கிறது.

சட்டையைத் துணியின் சமதையாக்குவதன் மூலம் சட்டையில் உருக்கொண்ட உழைப்பை துணியில் உருக்கொண்ட உழைப்புக்குச் சமன் செய்கிறோம். சட்டை தைக்கிற தையலானது துணி நெய்கிற நெசவுக்கு மாறான வகையைச் சேர்ந்த ஸ்தூலமான உழைப்புதான். ஆனால், அதை நெசவுக்கு சமன் செய்யும் செயல், உழைப்பின் இவ்விரு வகைகளிலும் உண்மையில் சமமானது எதுவோ அதற்கு —

அவற்றின் மனித உழைப்பென்ற பொதுத் தன்மைக்கு—தையலைப் பெயர்க்கிறது. அப்படியாயின், நெசவும் மதிப்பை நெய்கிறது என்ற அளவில் தையலிடமிருந்து அதை வேறுபடுத்துவதற்கு எதுவுமில்லை, ஆதலால் அது ஸ்தூலமற்ற மனித உழைப்பே என்ற உண்மை இந்தச் சுற்று வழியில் தெரிவிக்கப்படுகிறது. வெவ்வேறு வகைச் சரக்குகளிடையில் தெரிவிக்கப்படும் சமன்பாடுதான் மதிப்பைப் படைக்கும் உழைப்பின் குறிப்பான தன்மையை எடுப்பாகத் தெரியச் செய்கிறது; வெவ்வேறு வகையான சரக்குகளில் உருக்கொண்ட வெவ்வேறு விதமான உழைப்பை ஸ்தூலமற்ற மனித உழைப்பென்ற அவற்றின் பொதுப் பண்புக்கு உள்ளபடியே பெயர்ப்பதன் மூலம் இதைச் செய்கிறது.[25]

ஆயினும், துணியின் மதிப்பில் அடங்கியிருக்கும் உழைப்பினது குறிப்பான தன்மையின் தெரிவிப்புக்கும் மேலே வேறு ஏதோ தேவைப்படுகிறது. இயங்குகிற மனித உழைப்புச் சக்தி, அதாவது மனித உழைப்பு, மதிப்பைப் படைக்கிறது; ஆனால் அதுவே மதிப்பன்று. ஒரு பொருளின் வடிவில் உருக்கொள்ளும் போது, அதன் இறுகிய நிலையிலேயே அது மதிப்பாகிறது. துணியின் மதிப்பை மனித உழைப்பின் இறுகலாகத் தெரிவிக்கும் பொருட்டு, அந்த மதிப்பு, புறவய நிலவலைப் பெற்றிருப்பதாக, துணியிடமிருந்து பொருளாயதமாய் வேறுபட்ட ஏதோ ஒன்றாகவும், ஆயினும் துணிக்கும் மற்ற எல்லாச் சரக்குகளுக்கும் பொதுவான ஏதோ ஒன்றாகவும் இருப்பதாகத் தெரிவிக்கப்பட வேண்டும். பிரச்சினை ஏற்கெனவே தீர்க்கப்பட்ட ஒன்றாகிறது.

மதிப்புச் சமன்பாட்டில் சமதையின் நிலையை வகிக்கும் போது சட்டை பண்பு வழியில் துணிக்குச் சமமானதாக, அதே வகையைச் சேர்ந்த ஏதோ ஒன்றாக இடம் பெறுகிறது; ஏனெனில் அது மதிப்பாகும். இந்த நிலையில் அதன் உருவில் மதிப்பைத் தவிர வேறெதையும் நாம் பார்ப்பதில்லை; அதாவது அதன் புலனாகத் தக்க தசையுருவம் மதிப்பைக் குறிக்கிறது. இருப்பினும், சட்டை—சரக்கின் தசையுருவாகிய சட்டை—அதனளவில் வெறும் பயன்-மதிப்பே.

---

25 வில்லியம் பெட்டிக்குப் பின்னர் மதிப்பின் உண்மைத் தன்மையைக் கண்டறிந்த முதல் பொருளாதார அறிஞர்களில் ஒருவரான பிரபல பிராங்க்ளின் கூறுகிறார்: "வர்த்தகம் என்பது பொதுவாக உழைப்புக்கு பதில் உழைப்பைப் பரிவர்த்தனை செய்து கொள்வதே என்பதால், எல்லாப் பொருட்களின் மதிப்பும் உழைப்பாலேயே மிகச் சரியாக அளக்கப்படுகிறது" ("பெ. பிராங்க்ளின் நூல்கள்," பதிப்பாசிரியர்: ஸ்பார்க்ஸ். பாஸ்டன், 1836, இரண்டாம் பாகம், பக்கம் 267.) பிராங்க்ளின் ஒவ்வொன்றின் மதிப்பையும் உழைப்பைக் கொண்டு அளப்பதன் மூலம், பரிவர்த்தனை செய்து கொள்ளப்படும் உழைப்பு வகைகளிலான வேறுபாடு அனைத்தையும் நீக்கி விட்டு, இவ்வாறு அவ்வுழைப்பு வகைகள் அனைத்தையும் சமமான மனித உழைப்பாகப் பெயர்த்து விடுகிறார்—ஆனால் அவர் இதை உணரவில்லை. இது பற்றி அறியாவிட்டாலும், அவர் இதைக் கூறுகிறார். அவர் ஒவ்வொன்றின் மதிப்பிலும் இருக்கிற சாரமாக முதலில் "ஒரு உழைப்பு" என்றும், பின் "மற்றொரு உழைப்பு" என்றும், இறுதியாக மேற்கொண்டு அடைமொழி சேர்க்காமல் "உழைப்பு" என்றும் பேசுகிறார்.

நாம் முதலில் கையிலெடுக்கிற துணித் துண்டைப் போலவே, ஒரு சட்டையும் சட்டை என்ற நிலையில், தான் மதிப்பாய் இருப்பதாக நமக்குச் சொல்வதில்லை. சட்டையானது துணியுடன் மதிப்புறவில் வைக்கப்படும் போது பெறுகிற முக்கியத்துவம் அந்த உறவுக்கு வெளியே இருக்கும் போது பெறுகிற முக்கியத்துவத்துக்கும் மேலான ஒன்று என்பதை இது காட்டுகிறது — அநேக ஆசாமிகள் சாதாரண உடையில் இருக்கும் போது மதிக்கப்படுவதைக் காட்டிலும், பகட்டான சீருடையில் ராஜ நடை போட்டுத் திரியும் போது அதிகமாய் மதிக்கப்படுகிறார்கள் அல்லவா, அது போலத்தான் இதுவும்.

சட்டையின் உற்பத்தியில், மனித உழைப்புச் சக்தி தையலின் உருவில் உள்ளபடியே செலவிடப்பட்டிருக்க வேண்டும். எனவே, மனித உழைப்பு அதில் திரட்டப்பட்டுள்ளது. இந்த அமிசத்தில் சட்டையானது மதிப்பின் சேமிப்பகமாகும். ஆனால் இழை இழையாக நைந்து போனாலுங்கூட இந்த உண்மையை அது வெளிக் காட்டி விடுவதில்லை. மேலும் மதிப்புச் சமன்பாட்டில் துணியின் சமதை என்ற விதத்தில் அது நிலவுவது இந்த அமிசத்தில் மட்டுமே. எனவே, உருக்கொண்ட மதிப்பாக, மதிப்பு என்ற ஓர் உருவாக அது கணக்கிடப்படுகிறது. உதாரணமாக A ஆனவர் Bக்கு ''மாட்சிமை பொருந்தியவர்'' ஆக வேண்டுமானால் Bஇன் கண் களில் ''மாட்சிமை'' என்பது Aஇன் தசையுருவை மேற்கொள்ள வேண்டும்; மேலும், ஒவ்வொரு புதிய ஜனபிதாவுக்கும் ஏற்பத் தனது தனியமிசங்களை, முடியையும் மற்றும் பல அமிசங்களையும் மாற்றிக் கொள்ளவும் வேண்டும்.

எனவே, சட்டை துணியின் சமதையாகவுள்ள மதிப்புச் சமன் பாட்டில், மதிப்பின் வடிவமென்ற வேலையை சட்டை செய்கிறது. துணி என்னும் சரக்கின் மதிப்பு சட்டை என்னும் சரக்கின் தசையுருவத்தால் தெரிவிக்கப்படுகிறது. ஒன்றின் மதிப்பு மற்றதன் பயன்-மதிப்பால் தெரிவிக்கப்படுகிறது. பயன்-மதிப்பு என்ற விதத்தில், துணி சட்டைக்குக் கண்கூடாய் மாறுபட்ட ஒன்றாகும்; மதிப்பு என்ற விதத்தில் அதுவும் சட்டையும் ஒன்றே; இப்போது அது சட்டையின் தோற்றத்தைப் பெற்றிருக்கிறது. இவ்வாறு, துணி அதன் பௌதிக வடிவத்துக்கு மாறான மதிப்பு வடிவத்தைப் பெறுகிறது. ஒரு கிறிஸ்தவரின் ஆட்டியல்பு அவர் தேவ ஆட்டுக் குட்டியை ஒத்திருப்பதில் வெளிப்படுவது போலவே, துணி மதிப்பாக உள்ளது என்ற உண்மை சட்டையுடனான அதன் சமத்துவத்தில் துலக்கமாய்ப் புலப்படுகிறது.

அப்படியானால், சரக்குகளின் மதிப்பு பற்றிய நமது பகுப் பாய்வு நமக்கு ஏற்கெனவே கூறியுள்ளதனைத்தையும், துணி இன்னொரு சரக்கான சட்டையுடன் தொடர்பு கொண்டதுமே நமக்குக் கூறி விடுகிறது என்பதைக் காண்கிறோம். அது தனது

சிந்தனைகளை அதற்குத் தெரிந்த மொழியிலேயே, சரக்குகளின் மொழியிலேயே வெளிப்படுத்துகிறது. சட்டையானது தன் சொந்த மதிப்பு மனித உழைப்பென்ற ஸ்தூலமற்ற தன்மையிலான உழைப்பால் படைக்கப்படுகிறது என்பதை நமக்குச் சொல்லும் பொருட்டு, துணியின் அளவுக்கே பெறுமானமுடையதாகவும், எனவே மதிப்பாகவும் இருக்கிற அளவில், துணி கொண்டிருக்கும் அதே உழைப்பையே தானும் கொண்டிருப்பதாகச் சொல்கிறது. மதிப்பு என்ற தன் மேலான மெய்ம்மையும் தன் மோட்டா உருவமும் ஒன்றல்ல என்பதை நமக்குத் தெரிவிக்கும் பொருட்டு, மதிப்பு ஒரு சட்டையின் தோற்றத்தைப் பெற்றிருக்கிறது என்றும், ஆதலால் துணி மதிப்பாக இருக்கிற அளவில், அதுவும் சட்டையும் முழுக்க முழுக்க ஒரே மாதிரியானவை என்றும் அது சொல்கிறது. சரக்குகளின் மொழி, ஹீப்ரு அன்னியில், மற்றும் பல கிட்டத்தட்ட சரியான திசை மொழிகளைக் கொண்டுள்ளது என நாம் இங்கே குறிப்பிடலாம். உதாரணமாக, சரக்கு Aக்கு சரக்கு Bஐச் சமன் செய்வது சரக்கு A தன் மதிப்பைத் தெரிவிக்கிற முறையாகும் என்பதை ரொமான்ஸ் மொழிக் குடும்ப வினைகளான ''valere,'' ''valer,'' ''valoir'' ஆகியவை தெரிவிப்பது போல் பெறுமானம் என்பதற்கான ஜெர்மன் சொல்லாகிய ''Wertsein'' அவ்வளவு தெளிவாகத் தெரிவிப்பதில்லை. Paris vaut bien une messe.*

எனவே, நமது சமன்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ள மதிப்புறவின் மூலமாக சரக்கு Bஇன் தசையுருவம் [bodily form] சரக்கு Aஇன் மதிப்புருவம் [value form] ஆகிறது. அதாவது சரக்கு Bஇன் தசையுரு சரக்கு Aஇன் மதிப்பைப் பிரதிபலிக்கும் கண்ணாடி ஆகிறது.[26] மதிப்புடைய பொருள் என்ற நிலையில், மனித உழைப்பின் பொருள்வடிவாக்கம் என்ற நிலையில் சரக்கு Bஐ வைத்து அதனுடன் உறவு கொள்வதன் மூலம், சரக்கு A பயன்-மதிப்பான Bஐத் தனது — Aஇன் — மதிப்பைத் தெரிவிப்பதற்கான பொருளாக மாற்றுகிறது. இவ்விதம் Bஇன் பயன்-மதிப்பின் வாயிலாகத் தெரிவிக்கப்படும் Aஇன் மதிப்பு ஒப்பீட்டு மதிப்பின் வடிவத்தை மேற்கொள்கிறது.

---

[26] ஒரு விதத்தில் சரக்குகள் எப்படியோ மனிதனும் அப்படியே. கையில் முகம் பார்க்கும் கண்ணாடியுடனோ, அல்லது ''நானே நான்'' என்பது போதும் என்கிற ஃபிக்டியத் தத்துவஞானியாகவோ மனிதன் உலகில் தோன்றுவதில்லை என்பதால், அவன் மற்ற மனிதர்கள் வாயிலாகவே தன்னை முதலில் பார்த்துக் கொள்ளவும் அடையாளம் கண்டு கொள்ளவும் செய்கிறான். பீட்டர் ஒத்த வகையினன் என்ற விதத்தில் பால் என்பவனுடன் தன்னை முதலில் ஒப்பு நோக்குவதன் மூலமே தனது தனித்தன்மையை நிறுவிக் கொள்கிறான். பாலுக்குரிய தனித் தன்மையுடன் நிற்கிற பால், இதன் மூலம் பீட்டருக்கு மனித இனத்தின் மாதிரி ஆகிறான்.

---

* பாரிசின் பெறுமானத்துக்கு ஒரு திருவிழாவே கொண்டாடலாம்.

### (ஆ.) ஒப்பீட்டு மதிப்பின் அளவுவழி நிர்ணயிப்பு

எதன் மதிப்பை நாம் தெரிவிக்க விரும்புகிறோமோ அந்தச் சரக்கு ஒவ்வொன்றும் 15 மூட்டை தானியம் அல்லது 100 இராத்தல் காப்பி என்பது போலக் குறிப்பிட்ட அளவிலான பயனுள்ள பொருளாகும். எந்தச் சரக்கின் குறிப்பிட்ட அளவிலும் மனித உழைப்பின் திட்டமான அளவு அடங்கியுள்ளது. எனவே, மதிப்பு வடிவம் தெரிவிக்க வேண்டியது பொதுவாக மதிப்பை மட்டுமல்ல, திட்டமான அளவிலுள்ள மதிப்பையுமாகும். எனவே, சரக்கு Bஉடனான சரக்கு Aஇன் மதிப்புறவில், சட்டையுடனான துணியின் மதிப்புறவில், சட்டையானது, பொதுவாக மதிப்பு என்ற விதத்தில் பண்பில் துணிக்குச் சமமானதாக்கப்படுவது மட்டுமல்லாமல், சட்டையின் திட்டமான அளவு (ஒரு சட்டை), துணியின் திட்டமான அளவிற்கு (20 கெஜம்) சமதையும் ஆக்கப்படுகிறது.

20 கெஜம் துணி = 1 சட்டை அல்லது 20 கெஜம் துணியின் பெறுமானம் ஒரு சட்டை என்ற சமன்பாடானது, ஒரே அளவிலான மதிப்புச் சாரம் (இறுகிய உழைப்பு) இரண்டிலுமே உருக்கொண்டுள்ளது என்பதை, ஒரே அளவிலான உழைப்பு நேரத்திற்குரிய ஒரே அளவிலான உழைப்பு ஒவ்வொன்றுக்கும் செலவாகியிருக்கிறது என்பதை உணர்த்துகிறது. ஆனால், 20 கெஜம் துணி அல்லது ஒரு சட்டையின் உற்பத்திக்கு அவசியமான உழைப்பு நேரம் நெசவு அல்லது தையலின் உற்பத்தித் திறனிலான ஒவ்வொரு மாற்றத்துக்குமேற்ப வேறுபடுகிறது. ஒப்பீட்டு மதிப்புத் தெரிவிப்பின் அளவு வழிப்பட்ட அமிசத்தின் மீது இது போன்ற மாற்றங்களின் தாக்கத்தை நாம் இப்போது பரிசீலிக்க வேண்டியுள்ளது.

I. சட்டையின் மதிப்பு மாறாதிருக்க, துணியின் மதிப்பு மாறுபடுவதாகக் கொள்வோம்.[27] வெண்சணல் விளையும் நிலம் சத்திழந்ததன் விளைவாக துணியின் உற்பத்திக்கு அவசியமான உழைப்பு நேரம் இரட்டிப்பதாகக் கொண்டால், துணியின் மதிப்பும் இரட்டிக்கும். 20 கெஜம் துணியில் உருக்கொண்ட உழைப்பு நேரத்தில் சரிபாதியே இப்போது 1 சட்டையில் அடங்கியுள்ளது என்பதால், 20 கெஜம் துணி = 2 சட்டை என்ற சமன்பாடு நமக்குக் கிடைக்க வேண்டும். மறு புறம், மேம்பாடுற்ற தறிகளின் விளைவாக இந்த உழைப்பு நேரம் சரிபாதியாய்க் குறைக்கப்படுவதாகக் கொண்டால், துணியின் மதிப்பு சரிபாதியாய்க் குறைய

[27] இங்கே மதிப்பு, முன்வந்த பக்கங்களில் எப்போதாவது பயன்படுத்தப்பட்டது போலவே, அளவு தொடர்பாக நிர்ணயிக்கப்பட்ட மதிப்பு என்ற, அல்லது மதிப்பின் பருமன் என்ற அர்த்தத்தில் பயன்படுத்தப்படுகிறது.

வேண்டும். ஆதலால், 20 கெஜம் துணி = ½ சட்டை என்ற சமன்பாட்டை நாம் பெற வேண்டும். சரக்கு Bஇன் மதிப்பு மாறாதிருப்பதாகக் கொண்டால், சரக்கு Aஇன் ஒப்பீட்டு மதிப்பு, அதாவது சரக்கு Bஇன் வாயிலாகத் தெரிவிக்கப்படும் அதன் மதிப்பு Aஇன் மதிப்புக்கு நேர் விகிதத்தில் உயரவோ, குறையவோ செய்கிறது.

II. சட்டையின் மதிப்பு மாறுபடும் அதே போதில், துணியின் மதிப்பு மாறாதிருப்பதாகக் கொள்வோம். இந்நிலையில், உதாரணமாய் கம்பளி உற்பத்தி சரிவுற்ற காரணத்தால், ஒரு சட்டையின் உற்பத்திக்கு அவசியமான உழைப்பு நேரம் இரட்டித்தால், 20 கெஜம் துணி = 1 சட்டை என்பதற்கு பதில் 20 கெஜம் துணி = ½ சட்டை என்பது நமக்குக் கிடைக்கிறது. மறு புறம் சட்டையின் மதிப்பு சரிபாதியாகக் குறையுமானால், 20 கெஜம் துணி = 2 சட்டை. எனவே சரக்கு Aஇன் மதிப்பு மாறாதிருந்தால், சரக்கு Bஇன் வாயிலாகத் தெரிவிக்கப்படும் அதன் ஒப்பீட்டு மதிப்பு Bஇன் மதிப்புக்கு எதிர் விகிதத்தில் உயரவோ, குறையவோ செய்கிறது.

Iஇலும், IIஇலும் வருகிற வேறுபட்ட உதாரணங்களை ஒப்பு நோக்கினால் ஒப்பீட்டு மதிப்பின் பருமனிலான ஒரே மாற்றம் முற்றிலும் எதிரெதிரான காரணங்களால் ஏற்படலாம் என்பதைப் பார்க்கிறோம். இவ்வாறாக, துணியின் மதிப்பு இரட்டித்திருக்கிறது என்பதாலோ, அல்லது சட்டையின் மதிப்பு சரிபாதியாக வீழ்ந்திருக்கிறது என்பதாலோ 20 கெஜம் துணி = 1 சட்டை என்ற சமன்பாடு 20 கெஜம் துணி = 2 சட்டை என்றாகி விடுகிறது; துணியின் மதிப்பு சரிபாதியாக வீழ்ந்திருக்கிறது என்பதாலோ, அல்லது சட்டையின் மதிப்பு இரட்டித்திருக்கிறது என்பதாலோ 20 கெஜம் துணி = ½ சட்டை என்றாகி விடுகிறது.

III. துணி, சட்டை இவை ஒவ்வொன்றின் உற்பத்திக்கும் அவசியமான உழைப்பு நேர அளவுகள் ஒரே திசையிலும், ஒரே விகிதத்திலும் ஏககாலத்தில் மாறுபடுவதாகக் கொள்வோம். இந் நிலையில், அவற்றின் மதிப்புகள் எவ்வளவுதான் மாறியிருந்தாலும் 20 கெஜம் துணி 1 சட்டைக்குச் சமம் என்னும் நிலையே தொடர் கிறது. மதிப்பு மாறாதிருக்கும் மூன்றாவது சரக்குடன் அவை ஒப்பு நோக்கப்பட்டதுமே, அவற்றின் மதிப்பிலான மாற்றம் தெரிய வருகிறது. எல்லாச் சரக்குகளின் மதிப்புகளும் ஏககாலத்திலும் ஒரே விகிதத்திலும் ஏறினாலோ இறங்கினாலோ, அவற்றின் ஒப்பீட்டு மதிப்புகள் மாற்றம் அடைவதில்லை. குறிப்பிட்ட நேரத்தில் உற்பத்தி செய்யப்படும் சரக்குகளின் அளவு குறைவது அல்லது அதிகமாவதிலிருந்தே அவற்றின் உண்மையான மதிப்பு மாற்றம் தென்படும்.

IV. முறையே துணி, சட்டை இவற்றின் உற்பத்திக்கு அவசிய

மான உழைப்பு நேரமும், ஆகவே இந்தச் சரக்குகளின் மதிப்பும் ஒரே திசையில், ஆனால் சமமற்ற விகிதங்களில், அல்லது எதிர்த் திசைகளில், அல்லது பிற வழிகளில் ஏக காலத்தில் மாறுபடலாம். சாத்தியமான இந்த வெவ்வேறு மாறுபாடுகள் எல்லாம் ஒரு சரக்கினது ஒப்பீட்டு மதிப்பின் மீது ஏற்படுத்தும் விளைவை I, II, III ஆகியவற்றின் முடிவுகளிலிருந்து ஊகிக்கலாம்.

இவ்வாறாக மதிப்பின் பருமனில் ஏற்படும் உண்மையான மாற்றங்கள், அவற்றின் ஒப்பீட்டுத் தெரிவிப்பில், அதாவது ஒப்பீட்டு மதிப்பின் பருமனைத் தெரிவிக்கிற சமன்பாட்டில் ஐயத்துக்கிடமின்றியோ, பரிபூரணமாகவோ பிரதிபலிப்பதில்லை. ஒரு சரக்கின் மதிப்பு மாறாதிருந்தாலும் அதன் ஒப்பீட்டு மதிப்பு மாறலாம். மதிப்பு மாறினாலும் ஒப்பீட்டு மதிப்பு மாறாதிருக்க லாம்; இறுதியாக, மதிப்பின் பருமனிலும், அதன் ஒப்பீட்டுத் தெரிவிப்பின் பருமனிலுமான ஏக காலத்திய மாற்றங்கள் அளவில் கட்டாயம் ஒத்திருக்க வேண்டுமென்பதில்லை.[28]

### 3. மதிப்பின் சமதை வடிவம்

சரக்கு A (துணி) தனது மதிப்பை வேறு வகையைச் சேர்ந்த ஒரு சரக்கின் (சட்டையின்) பயன்-மதிப்பின் வாயிலாகத் தெரிவிப்பதன்

---

[28] மதிப்பின் பருமனுக்கும், அதன் ஒப்பீட்டுத் தெரிவிப்புக்கும் இடையிலான இந்த ஒவ்வாமையைக் கொச்சைப் பொருளாதார அறிஞர்கள் வழக்கமான சாமர்த்தியத்துடன் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டுள்ளனர். உதாரணமாக "Aஇல் செல விடப்படும் உழைப்பு குறையாத போதிலும், அதனுடன் பரிவர்த்தனை செய்து கொள் ளப்படும் B உயர்கிறது என்பதால் A சரிகிறது என்பதை மட்டும் ஒப்புக் கொள்ளுங் கள், உடனே மதிப்பு பற்றிய உங்கள் பொதுக் கோட்பாடு தகர்ந்து விடுகிறது.... Bஉடன் ஒப்பிட்டால் A மதிப்பில் உயரும் போது, Aஉடன் ஒப்பிட்டால் B மதிப்பில் சரிகிறது என்பதை அவர் (ரிக்கார்டோ) ஒப்புக் கொண்டார் என்றால், ஒரு சரக்கின் மதிப்பு அதில் உருக்கொண்ட உழைப்பாலேயே எக்காலத்திலும் நிர்ணயிக்கப்படுகிறது என்ற தமது மகத்தான விதிக்குரிய ஆதாரத்தையே வீழ்த்தி விடுகிறார் என்று பொருள்; ஏனெனில், Bஐ உற்பத்தி செய்வதற்கான உழைப்பின் அளவில் எந்த மாற்றமும் ஏற் பட்டிரா விட்டாலும், Aக்கான செலவில் ஏற்படும் மாற்றம் அதற்காகப் பரிவர்த்தனை செய்து கொள்ளப்படுகிற Bஉடன் ஒப்பிட்டு வரும் அதன் சொந்த மதிப்பை மட்டுமல் லாமல் Aஇன் மதிப்புடன் ஒப்பிட்டு வரும் Bஇன் மதிப்பையும் மாற்றினால், ஒரு பண்டத்துக்காகச் செலவிடப்படும் உழைப்பின் அளவு அதன் மதிப்பைக் கட்டுப்படுத்து கிறது என்ற கோட்பாடு மட்டுமல்லாமல், ஒரு பண்டத்துக்காகும் செலவு அதன் மதிப்பைக் கட்டுப்படுத்துவதாகச் சாதிக்கிற கோட்பாடும் தகர்ந்து விடுகிறது." (ஜே. பிராட்ஹர்ஸ்ட்: "அரசியல் பொருளாதாரம்," லண்டன், 1842, பக்கம் 11, 14.).

திரு பிராட்ஹர்ஸ்ட் இப்படியும் சொல்லக் கூடும்: $\frac{10}{20}$, $\frac{10}{50}$, $\frac{10}{100}$, முதலிய பின்னங் களைக் கவனியுங்கள்; 10 என்ற எண் மாறாது வருகிறது; ஆயின், அதன் விகிதாசாரப் பருமன், அதாவது 20, 50, 100 முதலான எண்களுடன் ஒப்பிட்டு வரும் அதன் பருமன் தொடர்ச்சியாகக் குறைகிறது. எனவே, 10 போன்றதொரு முழு எண்ணின் பருமன் அதில் அடங்கியுள்ள ஒருமையின் மடங்குகளின் எண்ணிக்கையால் "கட்டுப்படுத்தப் படுகிறது" என்ற மாபெரும் கோட்பாடு தகர்ந்து விடுகிறது. [எங்கெல்ஸ் குறிப்பு: இந்த அத்தியாயத்தின் பிரிவு 4, பக்கம் 118-19, குறிப்பு 40இல் "கொச்சைப் பொருளாதாரம்" என்பதன் மூலம் தான், புரிந்து கொள்வது என்ன என்பதை நூலாசிரியர் விளக்குகிறார்.]

மூலம், அதே நேரத்தில் ஒரு பிரத்தியேகமான மதிப்பு வடிவத்தை, அதாவது சமதையின் வடிவத்தைப் பின்சொன்ன சரக்கின் மீது பதிக்கிறது என்று பார்த்தோம். சட்டை, தன் தசையுருவத்திலிருந்து வேறான மதிப்புருவத்தை மேற்கொள்ளாமலே துணிக்குச் சமன் செய்யப்படுகிறது என்ற உண்மையால் துணி என்னும் சரக்கு மதிப்புடையதாய் இருக்கும் அதன் பண்பை வெளிப்படுத்துகிறது. எனவே பின்சொன்ன சரக்கு மதிப்புடையதாகும் என்ற உண்மை, சட்டை அதனுடன் நேரடியாகப் பரிவர்த்தனை செய்து கொள்ளத் தக்கது என்று கூறுவதைக் கொண்டு தெரிவிக்கப்படுகிறது. எனவே ஒரு சரக்கு சமதை வடிவத்திலிருக்கிறது என்று கூறும் போது, அது ஏனைய சரக்குகளுடன் நேரடியாகப் பரிவர்த்தனை செய்து கொள்ளத் தக்கது என்ற உண்மையைத் தெரிவிக்கிறோம்.

சட்டை போன்ற ஒரு சரக்கு துணி போன்ற இன்னொரு சரக்கின் சமதையாகப் பயன்படும் போதும், இதன் விளைவாகத் துணியுடன் நேரடியாகப் பரிவர்த்தனை செய்து கொள்ளத் தக்கது என்ற விசேஷ குணத்தை சட்டை பெறும் போதும், இவ்விரண்டும் எவ்விகிதத்தில் பரிவர்த்தனை செய்து கொள்ளத் தக்கவையாய் இருக்கின்றன என்று நமக்கு உடனே தெரிந்து விடுவதில்லை. துணியின் மதிப்பு அதன் பருமனில் குறிப்பிட்டதாயிருக்க, அந்த விகிதம் சட்டையின் மதிப்பைப் பொறுத்ததாய் இருக்கிறது. சட்டை சமதையாகவும் துணி ஒப்பீட்டு மதிப்பாகவும் பயன்பட்டாலும் சரி, அல்லது துணி சமதையாகவும் சட்டை ஒப்பீட்டு மதிப்பாகவும் பயன்பட்டாலும் சரி, சட்டையினது மதிப்பின் பருமன், அதன் மதிப்பு வடிவத்தைச் சாராமல், அதன் உற்பத்திக்கு அவசியமான உழைப்பு நேரத்தால் நிர்ணயிக்கப்படுகிறது. ஆனால் மதிப்புச் சமன்பாட்டில் சட்டை சமதையின் நிலையை மேற்கொள்ளும் போதெல்லாம் அதன் மதிப்பு அளவு வழிப்பட்ட தெரிவிப்பு எதையும் பெறுவதில்லை; மாறாக, சரக்காகிய சட்டை இப்போது ஏதோ ஒரு பண்டத்தின் திட்டமான அளவாகவே குறிக்கப் பெறுகிறது.

உதாரணமாக, 40 கெஜம் துணியின் பெறுமானம் என்ன? 2 சட்டை. சரக்காகிய சட்டை இங்கே சமதையின் பாத்திரத்தை வகிக்கிறது என்பதால், பயன்-மதிப்பான சட்டை, துணிக்கு எதிரிடையாக, மதிப்பின் உருவாக இடம் பெறுகிறதென்பதால், சட்டைகளின் திட்டமான எண்ணிக்கை துணியிலுள்ள மதிப்பின் திட்டமான அளவைத் தெரிவிக்கப் போதுமானது. எனவே 40 கெஜம் துணியினது மதிப்பின் அளவை இரு சட்டைகள் தெரிவிக்க லாம்; ஆனால் அவை தமது சொந்த மதிப்பின் அளவை ஒரு போதும் தெரிவிக்க முடியாது. இந்த உண்மையை, அதாவது மதிப்புச் சமன்பாட்டில் சமதையானது ஏதோ ஒரு பண்டத்தின், ஏதோ ஒரு பயன்-மதிப்பின் அளவாக மட்டுமே பிரத்தியேகமாய்க்

குறிக்கப் பெறுகிறது என்ற உண்மையை மேம்போக்காக நோக்கிய தானது பெய்லியை (அவருக்கு முன்னாலும் பின்னாலும் வந்த் மற்றும் பலரையும் போலவே) மதிப்புத் தெரிவிப்பில் ஓர் அளவு வழிப்பட்ட உறவை மட்டுமே பார்க்கிற நிலைக்குத் தவறாக இட்டுச் சென்றுள்ளது. உண்மை என்னவென்றால், ஒரு சரக்கு சமதையாகச் செயல்படும் போது அதன் மதிப்பின் அளவு வழிப்பட்ட நிர்ண யிப்பு எதுவும் தெரிவிக்கப்படுவதில்லை.

சமதையின் வடிவத்தைப் பரிசீலிக்கையில் நமக்குப் பளிச்செனத் தெரிகிற முதல் விசேஷ குணம் இதுவே: பயன்-மதிப்பு தன் எதிர்க் கூறாகிய மதிப்பின் காண்பிப்பு வடிவமாகிறது, புலப்பாட்டு வடிவமாகிறது.

சரக்கின் தசையுருவம் அதன் மதிப்புருவம் ஆகிறது. ஆனால் இந்த மாறாட்டம் B என்ற ஏதேனுமொரு சரக்கு தொடர்பாய் நிலவுவது, அச்சரக்குடன் A என்ற வேறொரு சரக்கு மதிப்புறவு கொள்ளும் போதுதான் என்பதும், அப்போதும் இம்மதிப்புறவின் எல்லைகளுக்குட்பட்டே என்பதும் கவனத்திற்குரியது. எந்தச் சரக்கும் தனக்குத் தானே சமதையுறவில் நிற்கவும், இவ்வாறு தன் சொந்தத் தசையுருவத்தைத் தன் சொந்த மதிப்பின் தெரிவிப்பாக மாற்றிக் கொள்ளவும் முடியாது என்பதால், ஒவ்வொரு சரக்கும் தன் சமதையாக வேறொரு சரக்கைத் தேர்ந்தெடுத்துக் கொள்வது அவசியமாகிறது; அந்த வேறொரு சரக்கின் பயன்-மதிப்பை, அதாவது தசையுருவத்தைத் தன் சொந்த மதிப்புருவமாக அது ஏற்றுக் கொள்வதும் அவசியமாகிறது.

பொருட் கூறுகள் என்ற விதத்தில், பயன்-மதிப்புகள் என்ற விதத்தில், சரக்குகளுக்கு நாம் பிரயோகிக்கிற அளவைகளில் ஒன்று இதனை எடுத்துக்காட்டப் பயன்படும். ஒரு வெல்லக் கட்டி பொரு ளுருவாக இருப்பதால் கனமாக உள்ளது; எனவே எடையைப் பெற்றுள்ளது. ஆனால் இந்த எடையைப் பார்க்கவோ தொடவோ முடியாது. முன்கூட்டியே எடை நிர்ணயிக்கப்பட்டுள்ள பல்வேறு இரும்புத் துண்டுகளை எடுத்துக் கொள்கிறோம். இரும்பும் இரும்பு என்ற விதத்தில் எடையின் புலப்பாட்டு வடிவமாகி விடாது; இவ்வகையில் அதுவும் வெல்லக் கட்டியும் ஒன்றே. இருப்பினும், வெல்லக் கட்டி இவ்வளவு எடையுள்ளது என்பதைத் தெரிவிக்கும் பொருட்டு, நாம் அதனை இரும்புடன் எடையுறவு கொள்ளச் செய்கிறோம். இந்த உறவில் இரும்பு எடையன்றி வேறெதையும் குறிக்காத வேலையைச் செய்கிறது. எனவே, இரும்பின் குறிப் பிட்ட அளவு வெல்லத்தின் எடையளவையாகப் பயன்படுகிறது; வெல்லக் கட்டியுடனான உறவில், அது உருக்கொண்ட எடையை, எடையின் தெரிவிப்பு வடிவத்தைக் குறிக்கிறது. வெல்லம் அல்லது எடை நிர்ணயிக்கப்பட வேண்டிய வேறு பொரு ளுரு எதுவும் இரும்புடன் கொள்கிற இந்த உறவுக்குட்பட்டே

இரும்பு இந்தப் பாத்திரத்தை வகிக்கிறது. அவை இரண்டுமே கனமாக இல்லையென்றால், அவை இவ்விதம் உறவு கொள்ள முடியாது; எனவே ஒன்றுக்கொன்று எடைத் தெரிவிப்பாகப் பயன்பட முடியாது. நாம் அவற்றைத் தராசுத் தட்டுகளில் போடும் போது, எடையென்ற விதத்தில் அவை இரண்டும் ஒன்றே என்பதையும், எனவே சரியான விகிதத்தில் எடுத்துக் கொள்ளும் போது அவை ஒரே எடையையே பெற்றுள்ளன என்பதையும் எதார்த்தத்தில் பார்க்கிறோம். இரும்பெனும் பொருள் எடையின் அளவை என்ற விதத்தில், வெல்லக் கட்டியுடனான உறவில் எடையை மட்டுமே குறிப்பது போலவே, நமது மதிப்புத் தெரிவிப்பில் பொருட்கூறாகிய சட்டை துணியுடனான மதிப்பை மட்டுமே குறிக்கிறது.

ஆயினும், ஒப்புவமை இத்தோடு முடிந்து விடுகிறது. வெல்லக் கட்டியின் எடைத் தெரிவிப்பில், இரும்பானது இரு உருக்களுக்குமே பொதுவானதோர் இயற்கைக் குணத்தை, அதாவது அவற்றின் எடையைக் குறிக்கிறது. ஆனால் சட்டையோ, துணியின் மதிப்புத் தெரிவிப்பில், இரண்டினுடையவும் இயற்கையல்லாத ஒரு குணத்தை, முற்றிலும் சமூகத் தன்மை வாய்ந்த ஒன்றை, அதாவது அவற்றின் மதிப்பைக் குறிக்கிறது.

ஒரு சரக்கின்—உதாரணமாகத் துணியின்—ஒப்பீட்டு மதிப்பு வடிவம் அந்தச் சரக்கின் மதிப்பை, அச்சரக்கின் பொருளுருவிலிருந்தும் குணங்களிலிருந்தும் அறவே வேறுபட்ட ஒன்றாக, எடுத்துக்காட்டாகச் சட்டையைப் போல் இருப்பதாகத் தெரிவிக்கிறது என்பதால், அதன் அடிமட்டத்தில் ஏதோ சமூக உறவு பொதிந்திருப்பதை இந்தத் தெரிவிப்பே காட்டுகிறது என்று பார்க்கிறோம். சமதை வடிவம் தொடர்பாக இது நேர்மாறாகும். இவ்வடிவத்தின் சாராம்சமே என்னவென்றால், சரக்காகிய பொருள்—சட்டை—அது உள்ள நிலையிலேயே, மதிப்பைத் தெரிவிக்கிறது, இயற்கையே மதிப்பின் வடிவத்தை அதற்கு அருளியுள்ளது என்பதே. சட்டையானது துணிக்கான சமதையின் நிலையிலிருக்கும் மதிப்புறவு நீடிக்கும் வரைதான் இது பொருந்தும் என்பதில் ஐயமில்லை.[29] ஆயினும், ஒரு பொருளின் குணங்கள் மற்ற பொருட்களுடன் அது கொள்ளும் உறவுகளின் விளைவல்ல; இப்படிப்பட்ட உறவுகளில் அக்குணங்கள் தம்மைக் காண்பித்துக் கொள்ள மட்டுமே செய்கின்றன என்பதால், கனமாய் இருத்தல் என்ற குணத்தை, அல்லது நம்மைக் கதகதப்பாக வைத்துக் கொள்கிற சக்தியை சட்டைக்கு இயற்கை அருளியிருப்பது போலவே, அதன் சமதை

[29] பிம்ப இனங்கள் என ஹெகல் அழைக்கிற இப்படிப்பட்ட பொதுவான உறவுத் தெரிவிப்புகள் ஒரு விநோதமான வகையாக அமைகின்றன. உதாரணமாக, ஒருவர் அரசராயிருப்பது மற்றவர்கள் அவருக்குக் குடிகள் என்ற உறவில் இருப்பதாலேயே. இதற்கு மாறாக, அவர்கள் அவர் அரசராயிருப்பதால் தாங்கள் குடிகளாயிருப்பதாகக் கற்பனை செய்து கொள்கிறார்கள்.

வடிவத்தையும், நேரடியாகப் பரிவர்த்தனை செய்து கொள்ளத் தக்கதாக இருக்கிற அதன் குணத்தையும் இயற்கை அருளியிருப் பதாகத் தோன்றுகிறது. சமதை வடிவத்தின் புரியாப் புதிரான தன்மை இதிலிருந்து பிறப்பதே. இவ்வடிவம், முழு அளவில் வளர்ச்சியடைந்து பணத்தின் உருவில் முதலாளித்துவ அரசியல் பொருளாதார அறிஞரை எதிர்நோக்கும் வரை அவரது கவனத் திலிருந்து தப்பி விடுகிறது. பின் அவர் தங்கம், வெள்ளியின் இடத்துக்கு அவ்வளவாய் மினுமினுக்காத சரக்குகளைக் கொணர் வதன் மூலமும், ஏதேனும் ஒரு காலத்தில் சமதையின் பாத்திரத்தை வகித்திருக்கும் சாத்தியமான சரக்குகள் அனைத்தின் பட்டியலை என்றும் குன்றா மனநிறைவுடன் ஒப்பிப்பதன் மூலமும், தங்கம், வெள்ளியின் மாயத் தன்மையை விளக்கித் தீர்க்க முனைகிறார். 20 கெஜம் துணி = 1 சட்டை என்பது போன்ற சாமானிய மதிப்புத் தெரிவிப்பு சமதை வடிவத்தின் புதிரை முன்பே நமது தீர்வுக்காக முன்வைத்தது என்பது அவருக்குப் புலப்படுவதே இல்லை.

சமதையாகப் பயன்படுகிற சரக்கின் தசையுரு, ஸ்தூலமற்ற மனித உழைப்பின் பொருள்வடிவாக்கமாக இடம்பெறுகிறது; அதே நேரத்தில் குறிப்பிட்ட பயனுள்ள ஸ்தூலமான உழைப்பின் உற்பத்திப் பொருளாகவும் உள்ளது. எனவே, இந்த ஸ்தூலமான உழைப்பு ஸ்தூலமற்ற மனித உழைப்பைத் தெரிவிப்பதற்கான ஊடகம் ஆகிறது. ஒரு புறம், சட்டை ஸ்தூலமற்ற மனித உழைப்பின் உருவாகவே இடம்பெறுகிறது என்றால், அப்படியே மறு புறம், அதில் உள்ளபடியே உருக்கொண்டுள்ள தையல் அந்த ஸ்தூலமற்ற மனித உழைப்பு ஈடேற்றம் பெற்றுள்ள வடிவமாகவே கணக்கிடப்படுகிறது. துணியின் மதிப்புத் தெரிவிப்பில், தையலின் பயன்பாடு அடங்கியிருப்பது உடைகள் தயாரிப்பதில் அன்று. மதிப்பு என்று, எனவே உழைப்பின் இறுகல் என்று, ஆனால் துணியின் மதிப்பில் ஈடேற்றம் பெற்ற உழைப்பிலிருந்து வேறு படுத்த முடியாத உழைப்பின் இறுகல் என்று உடனே ஏற்றுக் கொள்ளும் படியான ஒரு பொருளைத் தயாரிப்பதிலேயே அப் பயன்பாடு அடங்கியுள்ளது. மதிப்பின் இத்தகையதொரு கண்ணாடி யாகச் செயல்பட வேண்டுமானால், தையலுழைப்பு பொதுவான மனித உழைப்பாயிருக்கும் தனது ஸ்தூலமற்ற பண்பை அல்லாமல் வேறு எதையும் பிரதிபலிக்கலாகாது.

தையலிலும், அதேபோல் நெசவிலும் மனித உழைப்புச் சக்தி செலவிடப்படுகிறது. எனவே, இரண்டுமே மனித உழைப்பாக இருத்தலென்ற பொதுவான குணத்தைப் பெற்றுள்ளன. எனவே மதிப்பின் உற்பத்தி போன்ற குறிப்பிட்ட சந்தர்ப்பங்களில், இந்த அமிசத்தில் மட்டுமே அவற்றை நோக்க வேண்டியிருக்கலாம். இதில் மர்மம் ஒன்றுமில்லை. ஆனால், மதிப்புத் தெரிவிப்பில் ஒரு தலைகீழ் மாற்றம் ஏற்படுகிறது. எடுத்துக்காட்டாக, நெசவானது

துணியின் மதிப்பைப் படைப்பது, அப்படி அது நெசவாக இருத்தலின் பயனாய் அன்று; மனித உழைப்பாக இருத்தல் என்ற அதன் பொதுக் குணத்தின் காரணத்தாலேயே. இந்த உண்மையைத் தெரிவிப்பது எப்படி? நெசவினது உற்பத்திப் பொருளின் சமதையை உற்பத்தி செய்கிற ஸ்தூலமான உழைப்பின் அந்த மற்றொரு குறிப்பான வடிவத்தை (இந்த உதாரணத்தில் தையலை) நெசவுக்கெதிராக நிறுத்துவதன் மூலமே. சட்டை அதன் தசை யுருவில் மதிப்பின் நேரடித் தெரிவிப்பானது எப்படியோ, அதே போல் உழைப்பின் ஸ்தூலமானதொரு வடிவமாகிய தையலும் இப் போது பொதுவாக மனித உழைப்பின் நேரடியான, கண்கூடான உருவாகத் தோன்றுகிறது.

எனவே, ஸ்தூலமான உழைப்பு அதன் எதிர்க் கூறாகிய ஸ்தூலமற்ற மனித உழைப்பின் புலப்பாட்டு வடிவமாகிறது என்பது சமதை வடிவத்தின் இரண்டாவது விசேஷ குண மாகும்.

ஆனால், இந்த ஸ்தூலமான உழைப்பு, நமது உதாரணத்தில் தையல், வேறுபாடற்ற மனித உழைப்பாகக் குறிக்கப் பெறுகிறது, அதனுடன் நேரடியாக ஒன்றெனக் காணப்படுகிறது என்பதால், உழைப்பின் வேறெந்த வகையுடனும், எனவே துணியில் உருக் கொண்டுள்ள உழைப்புடனும் முழுதொத்ததாக அது இடம் பெறுகிறது. சரக்கு உற்பத்தி செய்கிற மற்றெல்லா உழைப்பையும் போலவே அது தனியாட்களின் உழைப்பே என்ற போதிலும், அதே நேரத்தில் நேரடியாக சமூகத் தன்மை வாய்ந்த உழைப்பாகவும் குறிக்கப் பெறுகிறது. ஏனைய சரக்குகளுடன் நேரடியாகப் பரிவர்த்தனை செய்து கொள்ளத் தக்க ஓர் உற்பத்திப் பொருளில் அது முடிவதன் காரணம் இதுவே. அப்படியானால், சமதை வடிவத்தின் மூன்றாவது விசேஷ குணத்தை, அதாவது தனியாட் களின் உழைப்பு, வடிவத்தில் நேரடியாக சமூகத் தன்மையுள்ள உழைப்பென்னும் அதன் எதிர்க் கூறின் வடிவத்தை மேற்கொள் கிறது என்பதைப் பார்க்கிறோம்.

எத்தனையோ வடிவங்களை, சிந்தனை, சமுதாயம் அல்லது இயற்கை இவற்றின் எவ்வடிவத்தையும், அவற்றோடு கூட மதிப் பின் வடிவத்தையும் முதன்முதல் பகுத்தாய்ந்த மாபெரும் சிந்தனை யாளரிடம் செல்வோமானால் சமதை வடிவத்தின் பின்னிரு விசேஷ குணங்களும் இன்னும் நன்றாகப் புரியும். அரிஸ்டாட் டிலைச் சொல்கிறேன்.

முதலாவதாக, சரக்குகளின் பண வடிவம் என்பது சாமானிய மதிப்பு வடிவத்தின் — அதாவது ஒரு சரக்கின் மதிப்பை இஷ்டம் போல் எடுத்துக் கொண்ட வேறொரு சரக்கின் வாயிலாகத் தெரிவிப்பதன் — உயர்நிலை வளர்ச்சியே என்பதை அவர் தெளி வாகச் சொல்கிறார்; ஏனெனில் அவர் கூறுகிறார் —

# CAPITAL:

## A CRITICAL ANALYSIS OF CAPITALIST PRODUCTION

By KARL MARX

*TRANSLATED FROM THE THIRD GERMAN EDITION, BY SAMUEL MOORE AND EDWARD AVELING*

AND EDITED BY

FREDERICK ENGELS

VOL. I.

LONDON:
SWAN SONNENSCHEIN, LOWREY, & CO.,
PATERNOSTER SQUARE.
1887.

மூலதனம், முதல் பாகம், முதல் ஆங்கிலப் பதிப்பின் மேலட்டை

இரகசியத்தை—மனித சமத்துவமென்ற கருத்து கண்மூடித்தனமான ஒரு நம்பிக்கை போல் நிலைத்து விடாத வரை—வெளிப்படுத்த முடியாது. ஆயினும், உழைப்பினது உற்பத்தியின் பெருந்திரளானது சரக்குகளின் வடிவத்தை மேற்கொள்கிற ஒரு சமுதாயத்தில்தான், ஆதலால் மனிதனுக்கும் மனிதனுக்கும் இடையில் ஆளுகிற உறவு சரக்குடைமையாளர்களின் உறவாக இருக்கிற ஒரு சமுதாயத்தில் தான் இது சாத்தியம். சரக்குகளின் மதிப்புத் தெரிவிப்பில் சமத்துவத்தின் உறவை அரிஸ்டாட்டில் கண்டுபிடித்தார் என்ற இது ஒன்றே அவரது மேதையின் சிறப்பைக் காட்டுகிறது. ''உண்மையில்'' இந்தச் சமத்துவத்தின் அடிமட்டத்தில் இருப்பது எது என்பதைக் கண்டுபிடிக்க விடாமல் அவரைத் தடுத்தது அவர் வாழ்ந்த சமுதாயத்தின் விசேஷ நிலைமைகளே.

### 4. மதிப்பின் ஆரம்ப வடிவம் அதன் முழு உருவில்

ஒரு சரக்கினது மதிப்பின் ஆரம்ப வடிவம் என்பது வேறு வகையைச் சேர்ந்த இன்னொரு சரக்குடனான அதன் மதிப்புறவைத் தெரிவிக்கிற சமன்பாட்டில், அதாவது அந்த இன்னொரு சரக்குடனான அதன் பரிவர்த்தனையுறவில் அடங்கியுள்ளது. சரக்கு Aஇன் மதிப்பு, சரக்கு B அதனுடன் நேரடியாகப் பரிவர்த்தனை செய்து கொள்ளத் தக்கது என்ற உண்மையால் பண்பு வழியில் தெரிவிக்கப்படுகிறது; Bஇன் திட்டமான அளவு Aஇன் திட்டமான அளவுடன் பரிவர்த்தனை செய்து கொள்ளத் தக்கது என்ற உண்மையால் அது அளவு வழியில் தெரிவிக்கப்படுகிறது. விவரமாகச் சொன்னால், ஒரு சரக்கின் மதிப்பு பரிவர்த்தனை-மதிப்பின் வடிவத்தை மேற்கொள்வுதன் மூலம் சுயேச்சையான, திட்டமான தெரிவிப்பைப் பெறுகிறது. பயன்-மதிப்பு; பரிவர்த்தனை-மதிப்பு இரண்டாகவுமே ஒரு சரக்கு இருக்கிறது என்று இந்த அத்தியாயத்தின் ஆரம்பத்தில் நாம் சாதாரணப் பேச்சில் கூறியது, கறாராகப் பேசுவதானால், தவறாகும். ஒரு சரக்கு பயன்-மதிப்பு அல்லது பயனுடைய பொருளாகவும், மதிப்பாகவும் உள்ளது. அதன் மதிப்பு சுயேச்சையான வடிவத்தை—அதாவது பரிவர்த்தனை-மதிப்பின் வடிவத்தை மேற்கொண்டதுமே இந்த இரட்டைப் பொருளாகத் தன்னை வெளிப்படுத்திக் கொள்கிறது. அது தனித்திருக்கையில் ஒருபோதும் இந்த வடிவத்தை மேற்கொள்வதில்லை; ஆனால் வேறு வகையைச் சேர்ந்த இன்னொரு சரக்குடன் மதிப்புறவு அல்லது பரிவர்த்தனையுறவில் வைக்கப்படும் போதுதான் அது இவ்வடிவத்தை மேற்கொள்கிறது. இதை தெரிந்து கொண்டு விட்டால் இப்படிப்பட்ட தெரிவிப்பு முறையில் தொல்லையேதும் இல்லை; இது ஒரு சுருக்க வடிவமாகப் பயன்படுகிறது, அவ்வளவே.

ஒரு சரக்கினது மதிப்பின் வடிவம் அல்லது தெரிவிப்பு என்பது

மதிப்பின் இயல்பில் தோற்றமெடுக்கிறதே தவிர, மதிப்பும் அதன் பருமனும் பரிவர்த்தனை-மதிப்பென்ற அவற்றின் தெரிவிப்பு முறையில் தோற்றமெடுக்கவில்லை என்று நமது பகுப்பாய்வு காட்டுகிறது. வாணிப ஊக்கவாதிகள் [mercantilists], அவர்களது சமீபத்திய மறுபிறவிகளான ஃபெரியே, கானில்[30] முதலானோ ருடையவும், அதே போல் அவர்களது எதிராளிகளான பாஸ்தியா போன்ற தடையிலா வாணிபத்தின் நவீன அங்காடிக்காரர்களுடைய வும் பிரமையாகும் இது. வாணிப ஊக்கவாதிகள் மதிப்புத் தெரிவிப்பின் பண்பு வழிப்பட்ட அமிசத்தையும், ஆதலால் பணத்தில் தன் முழு பூரணத்துவத்தை அடைவதான சரக்குகளின் சமதை வடிவத்தையும் விசேஷமாக வலியுறுத்துகின்றனர். மறு புறம், எவ்விலைக்கேனும் தங்கள் சரக்கினைக் கழித்துக்கட்ட வேண்டியவர் களான தடையிலா வாணிபத்தின் நவீன அங்காடிக்காரர்கள் மதிப்பின் ஒப்பீட்டு வடிவத்தின் அளவு வழிப்பட்ட அமிசத்தை மிகவும் வலியுறுத்துகின்றனர். இதனால் அவர்களுக்கு, சரக்குகளின் பரிவர்த்தனையுறவு வாயிலான மதிப்புத் தெரிவிப்பில் அன்றி, அதாவது நடப்பிலுள்ள விலைகளின் அன்றாடப் பட்டியலில் அன்றி, வேறெங்கிலும் மதிப்பும் இருப்பதில்லை, மதிப்பின் பரு மனும் இருப்பதில்லை. மக்லியோடு—லோம்பார்டு தெருவின் குழம் பிய கருத்துகளை புலமைமிக்க சொல்லலங்காரத்தால் அணி செய் யும் வேலையை சிரமேற்கொண்டிருக்கிறாரே அந்த மக்லியோடு— மூடநம்பிக்கை கொண்ட வாணிப ஊக்கவாதிகளுக்கும் அறிவார்ந்த தடையிலா வாணிப அங்காடிக்காரர்களுக்கும் வெற்றிகரமான கலப்பினப் பிறவியாவார்.

Bஉடன் Aஇன் மதிப்புறவைத் தெரிவிக்கிற சமன்பாட்டில் அடங்கியுள்ள Bஇன் வாயிலான Aஇன் மதிப்புத் தெரிவிப்பின் உன்னிப்பான ஆய்வு, அந்த உறவுக்குள், Aஇன் தசையுருவம் ஒரு பயன்-மதிப்பாகவே இடம்பெறுவதையும், Bஇன் தசையுருவம் மதிப்பின் வடிவம் அல்லது கூறாகவே இடம்பெறுவதையும் காட்டு கிறது. எனவே, பயன்-மதிப்புக்கும் மதிப்புக்குமிடையே ஒவ்வொரு சரக்கிலும் எதிர்ப்பு அல்லது மாறுபாடு உட்படையாக நிலவுகிறது; மதிப்பு எதன் வாயிலாகத் தெரிவிக்கப்பட வேண்டுமோ அந்தச் சரக்கு வெறும் பரிவர்த்தனை-மதிப்பாக இடம்பெறும் அதே நேரத் தில், எதன் மதிப்பைத் தெரிவிக்க முனைகிறோமோ அந்தச் சரக்கு வெறும் பயன்-மதிப்பாகவே நேரடியாக இடம்பெறும் விதத்தில், இரு சரக்குகளும் ஒன்றுக்கொன்று உறவுபடுத்தி வைக்கப்படுவதன் மூலமே மேலே சொன்ன உட்படையான எதிர்ப்பு அல்லது

---

30 பி.லு.அ. ஃபெரியே, "Du gouvernement considere dansses rapports avec le commerce," பாரிஸ், 1805; மற்றும் சார்லஸ் கானில், "Des Systemes d'Economie Politique," 2ஆம் பதிப்பு, பாரிஸ், 1821.

மாறுபாடு வெளிப்படையாகத் தெளிவுபடுத்தப்படுகிறது. எனவே சரக்கில் அடங்கியுள்ள, பயன்-மதிப்புக்கும் மதிப்புக்குமிடையிலான மாறுபாடு கண்கூடாகத் தெரிகிற ஆரம்ப வடிவமே அச்சரக்கின் ஆரம்ப மதிப்பு வடிவம் ஆகும்.

உழைப்பின் உற்பத்திப் பொருள் ஒவ்வொன்றும், எல்லா சமுதாய முறைகளிலுமே, ஒரு பயன்-மதிப்பாகும்; ஆனால் ஒரு சமுதாயத்தின் வளர்ச்சியில் குறிப்பிட்ட ஒரு வரலாற்றுச் சகாப் தத்தில்தான், அதாவது ஒரு பயனுள்ள பொருளின் உற்பத்தியில் செலவிடப்பட்ட உழைப்பு, அந்தப் பொருளின் புறவயப் பண்பு களில் ஒன்றாக, அதாவது அதன் மதிப்பாகத் தெரிவிக்கப்படுகிற சகாப்தத்தில்தான், இத்தகையதோர் உற்பத்திப் பொருள் சரக் காகிறது. எனவே, ஆரம்ப மதிப்பு வடிவம் என்பது, உழைப்பின் உற்பத்திப் பொருள் சரக்காக வரலாற்று வழியில் எவ்வடிவத்தில் தோன்றுகிறதோ அந்த ஆதி வடிவமும் ஆகும் என்றும், இவ் வாறான உற்பத்திப் பொருட்கள் சரக்குகளாகப் படிப்படியான முறையில் அடைகிற மாற்றம் மதிப்பு வடிவத்தின் வளர்ச்சியுடன் சம வேகத்தில் முன்னேறுகிறது என்றும் தெரிகிறது.

எடுத்த எடுப்பில், மதிப்பின் ஆரம்ப வடிவத்தின் குறைபாடுகள் நமக்குப் புலனாகின்றன. அது வெறும் முளைதான்; சரமாரியான பல உருமாற்றங்களுக்கு உள்ளான பிறகே விலை வடிவமாக முதிர முடியும்.

சரக்கு Aஇன் மதிப்பை B என்னும் வேறு ஏதேனுமொரு சரக்கின் வாயிலாக வெளியிடுகிற தெரிவிப்பு Aஇன் மதிப்பை அதன் பயன்-மதிப்பிலிருந்து வேறுபடுத்திக் காட்டுகிறது, எனவே சரக்கு Aஐ B என்னும் வேறொரு தனிச் சரக்குடன் பரிவர்த்தனை உறவில் வைக்கிறது, அவ்வளவே. ஆனால், இது எவ்வகையிலும், எல்லாச் சரக்குகளுடனும் Aஇன் பண்பு வழிச் சமத்துவத்தையும் அளவு வழி விகிதாசாரத்தையும் தெரிவிப்பதாகாது. ஒரு சரக்கின் ஆரம்ப ஒப்பீட்டு மதிப்பு வடிவத்துக்கு இணையாக மற்றுமொரு சரக்கின் ஒற்றைச் சமதை வடிவம் உள்ளது. இவ்வாறாக, துணியின் ஒப்பீட்டு மதிப்புத் தெரிவிப்பில் சட்டை என்னும் தனிச் சரக்கு துணி தொடர்பாக மட்டுமே சமதை வடிவத்தை, அல்லது நேரடி யாகப் பரிவர்த்தனை செய்து கொள்ளத்தக்கதாக இருக்கிற வடிவத்தை மேற்கொள்கிறது.

ஆனாலும், மதிப்பின் ஆரம்ப வடிவம், எளியதொரு வளர்ச்சிப் போக்கின் மூலம் இன்னும் முழுமையான வடிவத்தை அடைகிறது. ஆரம்ப வடிவத்தைக் கொண்டு சரக்கு Aஇன் மதிப்பு, வேறு ஒரே ஒரு சரக்கின் வாயிலாகவே தெரிவிக்கப்படுகிறது என்பது மெய் தான். ஆனால், அந்த ஒரு சரக்கு எவ்வகைப்பட்ட சரக்காகவும் — சட்டை, இரும்பு, தானியம் அல்லது வேறு எதுவாக வேண்டு மானாலும் — இருக்கலாம். எனவே, A ஆனது ஒன்று அல்லது

இன்னொன்றுடன் உறவுபடுத்தப்படுவதற்கேற்ப, ஒரே சரக்குக்கு வெவ்வேறு ஆரம்ப மதிப்புத் தெரிவிப்புகள் நமக்குக் கிடைக்கின்றன.[31] இவ்வாறு சாத்தியமான தெரிவிப்புகளின் தொகைக்கு அதல்லாத வெவ்வேறு வகைச் சரக்குகளின் தொகையே வரம்பாகிறது. எனவே, Aஇன் தனிப்பட்ட மதிப்புத் தெரிவிப்பை, அந்த மதிப்பினது வெவ்வேறு ஆரம்பத் தெரிவிப்புகளின் தொடராக—எவ்வளவு வேண்டுமானாலும் நீட்டப்படுகிற தொடராக—மாற்றிக் கொள்ளலாம்.

## B. மதிப்பின் மொத்த அல்லது விரிந்த வடிவம்

z சரக்கு A = u சரக்கு B அல்லது = v சரக்கு C அல்லது = w சரக்கு D அல்லது = x சரக்கு E அல்லது = .... (20 கெஜம் துணி = 1 சட்டை அல்லது = 10 இராத்தல் தேயிலை அல்லது = 40 இராத்தல் காப்பி அல்லது = 1 குவார்ட்டர் தானியம் அல்லது = 2 அவுன்ஸ் தங்கம் அல்லது = ½ டன் இரும்பு அல்லது =....)

### 1. விரிந்த ஒப்பீட்டு மதிப்பு வடிவம்

ஒரு தனிச் சரக்கின், உதாரணமாகத் துணியின் மதிப்பு, சரக்குகளின் உலகைச் சேர்ந்த ஏனைய எண்ணற்ற கூறுகளின் வாயிலாக இப்போது தெரிவிக்கப்படுகிறது. மற்ற சரக்குகள் ஒவ்வொன்றும் இப்போது துணியின் மதிப்பைப் பிரதிபலிக்கும் கண்ணாடியாகி விடுகிறது.[32] முதல் தடவையாக இந்த மதிப்பு தன் உண்மையான

---

[31] எடுத்துக்காட்டாக, ஹோமரின் நூல்களில் ஒரு பண்டத்தின் மதிப்பு வெவ்வேறு பொருட்களின் தொடர் வாயிலாகத் தெரிவிக்கப்படுகிறது. இலியாத், VII. 472-475.

[32] இந்தக் காரணத்துக்காக, துணியின் மதிப்பு சட்டைகளின் வாயிலாகத் தெரிவிக்கப்படும் போது, துணியின் சட்டை-மதிப்பு பற்றியும், தானியத்தின் வாயிலாகத் தெரிவிக்கப்படும் போது அதன் தானிய-மதிப்பு பற்றியும், இப்படியாக மேற்கொண்டும் நாம் பேசலாம். சட்டை, தானியம், இன்ன பிற பயன்-மதிப்புகளில் தோன்றுவது துணியின் மதிப்பே என்பதை இது போன்ற ஒவ்வொரு தெரிவிப்பும் நமக்குச் சொல்கிறது. "பரிவர்த்தனையில் அதன் உறவைக் குறிக்கிற எந்த ஒரு சரக்கின் மதிப்பு பற்றியும் எந்தச் சரக்குடன் அது ஒப்பிடப்படுகிறது என்பதற்கேற்ப தானிய-மதிப்பு, துணி-மதிப்பு...என்று நாம் பேசலாம்; எனவே மதிப்பின் வெவ்வேறு வகைகள் ஆயிரம் உண்டு; எத்தனைச் சரக்குகள் உள்ளனவோ அத்தனை மதிப்பு வகைகள் உள்ளன; இவை யாவும் எந்த அளவுக்கு மெய்யானவையோ அதே அளவுக்குப் பெயரளவிலானவை. ("மதிப்பின் இயல்பு, அளவைகள், காரணங்கள் பற்றிய விமர்சன ஆய்வுரை: பிரதானமாக, திரு ரிக்கார்டோவும் அவரைப் பின்பற்றுவோரும் எழுதியவை தொடர்பாக." "அபிப்பிராயங்களின் அமைதலும் வெளியீடும் பற்றிய கட்டுரைகள்" என்பதன் ஆசிரியர் எழுதியது. லண்டன், 1825, பக்கம் 39.) ஆசிரியர் பெயரில்லாத இந்த நூலை—அந்தக் காலத்தில் இங்கிலாந்தில் பெரும் சலசலப்பை உண்டாக்கிய நூல் இது—எழுதியவரான சா. பெய்லி, தாம் இவ்வாறு ஒரே மதிப்பின் பல்வேறு ஒப்பீட்டுத் தெரிவிப்புகளை சுட்டிக் காட்டியதன் மூலம் மதிப்பு பற்றிய கருத்தமைவு எதையும்

ஒளியில், வேறுபடுத்தப்படாத மனித உழைப்பின் இறுகலாகத் தன்னைக் காண்பித்துக் கொள்வது இவ்வாறே. ஏனெனில் அதைப் படைக்கிற உழைப்பு, மற்ற ஒவ்வொரு வகை மனித உழைப்புடனும் — அதன் வடிவம் என்ன, தையலா, உழவா, சுரங்க வேலையா, இது போன்ற இன்னொன்றா என்பதைப் பொருட்படுத்தாமலும், எனவே அது ஈடேற்றம் பெறுவது சட்டையிலா, தானியத்திலா, இரும்பிலா, அல்லது தங்கத்திலா என்பதைப் பொருட்படுத்தாமலும் — சம அந்தஸ்தில் இடம்பெறுகிற உழைப்பாக இப்போது அப்பட்டமாய் வெளிப்பட்டு விடுகிறது. துணி தன் மதிப்பினது வடிவத்தின் அடிப்படையில், இனியும் வேறு ஒரே ஒரு வகைச் சரக்குடன் மட்டுமல்லாமல் சரக்குகளின் உலகு முழுவதுடனும் இப்போது ஒரு சமூக உறவு பூண்டு நிற்கிறது. சரக்கு என்ற முறையில் அது அவ்வுலகின் பிரஜையாகும். அதே நேரத்தில், ஒரு சரக்கின் மதிப்பைப் பொறுத்த வரை, அது பயன்-மதிப்பின் எந்தக் குறிப்பான வடிவம் அல்லது வகையில் தோன்றுகிறது என்பதை இலட்சியம் செய்ய வேண்டியதில்லை என்பதை மதிப்புச் சமன்பாடுகளின் முடிவற்ற தொடர் உணர்த்துகிறது.

20 கெஜம் துணி = 1 சட்டை என்ற முதல் வடிவத்தில், தோற்றம் எப்படி இருந்தாலும், இந்த இரு சரக்குகளும் திட்டமான அளவுகளில் பரிவர்த்தனை செய்து கொள்ளத் தக்கவையாக இருப்பது தற்செயலாகவே இருக்கக் கூடும். மாறாக, இரண்டாவது வடிவத்தில் இந்தத் தற்செயலான தோற்றத்தை நிர்ணயிப்பதும், இதிலிருந்து சாராம்சத்தில் வேறுபட்டதுமான பின்னணியை உடனே காண்கிறோம். துணியின் மதிப்பானது சட்டைகள், காப்பி அல்லது இரும்பில் அல்லது எண்ணற்ற வெவ்வேறு உடைமையாளர்களின் சொத்தாகிய எண்ணற்ற வெவ்வேறு சரக்குகளில் தெரிவிக்கப்பட்டாலும் பருமனில் மாறாதிருக்கிறது. இரு தனிப்பட்ட சரக்கு உடைமையாளர்களிடையிலான தற்செயல் உறவு மறைந்து விடுகிறது. சரக்குகளது மதிப்பின் பருமனைக் கட்டுப்படுத்துவது அவற்றின் பரிவர்த்தனை அன்று; மாறாக அவற்றின் பரிவர்த்தனை விகிதங்களைக் கட்டுப்படுத்துவது அவற்றினது மதிப்பின் பருமனே என்பது தெளிவாகிறது.

### 2. குறிப்பான சமதை வடிவம்

சட்டை, தேயிலை, தானியம், இரும்பு முதலானவை போன்ற ஒவ்வொரு சரக்கும் துணியின் மதிப்புத் தெரிவிப்பில் ஒரு

நிர்ணயிப்பது அசாத்தியமென நிரூபித்து விட்டதாகக் கற்பனை செய்து கொண்டார். அவரது சொந்தக் கருத்துகள் எவ்வளவுதான் குறுகியவை என்றாலும் ரிக்கார்டியத் தத்துவத்திலுள்ள சில கடுமையான குறைபாடுகளை அவர் சரியாக இனங்கண்டார் என்பது, ரிக்கார்டோவைப் பின்பற்றியவர்கள் அவரைத் தாக்கியதில் காட்டிய குரோதத்தால் நிரூபிக்கப்படுகிறது. சான்றாக வெஸ்ட்மின்ஸ்டர் ரெவ்யூவைப் பார்க்கவும்.

சமதையாய், ஆதலால் மதிப்பாக இருக்கிற பொருளாய் இடம் பெறுகிறது. இந்தச் சரக்குகள் ஒவ்வொன்றின் தசையுருவமும் பலவற்றில் ஒன்றான சமதை வடிவமாக, குறிப்பான ஒரு சமதை வடிவமாக இப்போது இடம்பெறுகிறது. அதே விதத்தில், இந்த வெவ்வேறு சரக்குகளில் உருக்கொண்ட உழைப்பின் பலதரப்பட்ட பயனுள்ள ஸ்தூல வகைகளும், வேறுபடுத்தப்படாத மனித உழைப்பின் ஈடேற்றம் அல்லது வெளிப்பாட்டின் வெவ்வேறான அத்தனை வடிவங்களாக இப்போது இடம்பெறுகின்றன.

*3. மதிப்பின் மொத்த அல்லது விரிந்த வடிவத்தின் குறைபாடுகள்*

முதலாவதாக, ஒப்பீட்டு மதிப்புத் தெரிவிப்பு முழுமையற்ற தாகும்; ஏனெனில் அதைக் குறிக்கிற தொடர் முடிவற்றதாகும். ஒவ்வொரு மதிப்புச் சமன்பாட்டையும் கரணையாகக் கொண்ட சங்கிலித் தொடரானது பிறப்பெடுக்கும் புதிய வகைச் சரக்கு ஒவ்வொன்றாலும் நீட்டப்பட ஏதுவானதாகும்; இந்த ஒவ்வொரு சரக்கும் ஒரு புதிய மதிப்புத் தெரிவிப்புக்கு ஆதாரமாகிறது. இரண்டாவதாக, இது தொடர்பும் சார்புமற்ற மதிப்புத் தெரிவிப்பு களின் பல்வண்ணச் சேர்க்கையாகும். கடைசியாக, ஒவ்வொரு சரக்கின் ஒப்பீட்டு மதிப்பும் இந்த விரிந்த வடிவத்தில் தெரிவிக்கப் படுவதானால் இப்படித்தான் நடக்க வேண்டும். அவை ஒவ் வொன்றுக்கும், ஒவ்வொரு நேர்விலும் வேறுபடுவதும், மதிப்புத் தெரிவிப்புகளின் ஒரு முடிவற்ற தொடரைக் கொண்டிருப்பதுமான ஓர் ஒப்பீட்டு மதிப்பு வடிவம் நமக்குக் கிடைக்கிறது. விரிந்த ஒப்பீட்டு மதிப்பு வடிவத்தின் குறைபாடுகள் அதற்கான சமதை வடிவத்தில் பிரதிபலிக்கின்றன. ஒவ்வொரு தனிச் சரக்கின் தசையுருவமும் எண்ணற்ற சமதை வடிவங்களில் குறிப்பான ஒரு சமதை வடிவமே என்பதால், மொத்தத்தில், ஒவ்வொன்றும் மற்ற வற்றை உட்படுத்தாத துண்டு துண்டான சமதை வடிவங்களையே பெறுகிறோம். அதே விதத்தில், ஒவ்வொரு குறிப்பான சமதை யிலும் உருக்கொண்டுள்ள விசேஷமான, ஸ்தூலமான, பயனுள்ள வகைப்பட்ட உழைப்பும் ஒரு குறிப்பான வகைப்பட்ட உழைப் பாகவே முன்வைக்கப்படுகிறது; எனவே பொதுவாக மனித உழைப்பனைத்தையும் குறிக்கக் கூடிய ஒன்றாக அது முன் வைக்கப்படுவதில்லை. உள்ளபடியே, இம்மனித உழைப்பு தன் பலதரப்பட்ட, குறிப்பான, ஸ்தூலமான வடிவங்களின் ஒட்டு மொத்தத்தில் தக்க வெளியீட்டைப் பெறுகிறது. ஆனால் அந் நிலையில், ஒரு முடிவற்ற தொடரிலான அதன் தெரிவிப்பு என்றும் முழுமையற்றதாகவும், ஏகத் தன்மையில் குறைபாடுள்ள தாகவும் இருக்கிறது.

ஆயினும் விரிந்த ஒப்பீட்டு மதிப்பு வடிவம் என்பது,

20 கெஜம் துணி = 1 சட்டை
20 கெஜம் துணி = 10 இராத்தல் தேயிலை

என்பன போன்ற முதல் வகையைச் சேர்ந்த ஆரம்ப ஒப்பீட்டுத் தெரிவிப்புகள் அல்லது சமன்பாடுகளின் மொத்தமேயன்றி வேறில்லை.

இவை ஒவ்வொன்றும் அதனதன் திருப்பிப் போட்ட சமன் பாட்டையும் குறிக்கின்றன:

1 சட்டை = 20 கெஜம் துணி
10 இராத்தல் தேயிலை = 20 கெஜம் துணி, முதலானவை.

உண்மையில் ஒருவர் தன் துணியினை வேறு பல சரக்கு களுக்காகப் பரிவர்த்தனை செய்து கொண்டு, இவ்வாறு அதன் மதிப்பை ஏனைய சரக்குகளது தொடர் ஒன்றின் வாயிலாகத் தெரி விக்கும் போது, பின் சொன்ன சரக்குகளின் பல்வேறு உடைமை யாளர்களும் அவற்றைத் துணிக்காகப் பரிவர்த்தனை செய்து கொள் கின்றனர். ஆதலால் தங்கள் பல்வேறு சரக்குகளின் மதிப்பை ஒரே மூன்றாவது சரக்காகிய துணியின் வாயிலாகத் தெரிவிக்கின்றனர் என்பது சொல்லாமலே விளங்கும். அப்படியானால், 20 கெஜம் துணி = 1 சட்டை, அல்லது = 10 இராத்தல் தேயிலை...என்ற தொடரை நாம் திருப்பிப் போட்டால், அதாவது ஏற்கெனவே இத்தொடரில் உட்கிடக்கையாகவுள்ள மறுதலை உறவை நாம் தெரிவிப்பதானால், நமக்குக் கிடைப்பது—

## C. மதிப்பின் பொது வடிவம்

1 சட்டை
10 இராத்தல் தேயிலை
40 இராத்தல் காப்பி
1 குவார்ட்டர் தானியம் } = 20 கெஜம் துணி.
2 அவுன்ஸ் தங்கம்
½ டன் இரும்பு
x சரக்கு A...

### 1. மதிப்பு வடிவத்தின் மாறிய தன்மை

எல்லாச் சரக்குகளும் இப்போது தங்கள் மதிப்பை (1) தனியொரு சரக்கின் வாயிலாக என்பதால், ஓர் ஆரம்ப வடிவத்திலும், (2) ஒரே சரக்கின் வாயிலாக என்பதால், ஏகத் தன்மையுடனும் வெளியிடு கின்றன. இந்த மதிப்பு வடிவம் ஆரம்ப நிலைப்பட்டதும் அனைத் துக்கும் ஒரே மாதிரியானதும் ஆகும். எனவே பொதுவானதாகும்.

வடிவங்கள் Aஉம், Bஉம் ஒரு சரக்கின் மதிப்பை அதன் பயன்-மதிப்பு அல்லது பொருளாயத வடிவத்திலிருந்து வேறான ஒன்றாகத் தெரிவிக்க மட்டுமே ஏற்றவையாக இருந்தன.

முதல் வடிவமான A பின்வருவன போன்ற சமன்பாடுகளையே வழங்குகிறது: 1 சட்டை = 20 கெஜம் துணி; 10 இராத்தல் தேயிலை = ½ டன் இரும்பு. சட்டையின் மதிப்பு துணிக்கும், தேயிலையின் மதிப்பு இரும்புக்கும் சமன் செய்யப்படுகிறது. ஆனால் துணிக்குச் சமன் செய்வதற்கும் இரும்புக்குச் சமன் செய் வதற்கும் இடையிலான வேறுபாடு துணிக்கும் இரும்புக்கும் இடை யிலான வேறுபாட்டைப் போன்றதாகும். உழைப்பின் உற்பத்திப் பொருட்கள் எப்போதாவது நிகழும் தற்செயலான பரிவர்த்தனை களால் சரக்குகளாக மாற்றப்படும் காலமான ஆரம்ப காலத்தில் மட்டுமே இந்த வடிவம் நடைமுறையில் எதிர்ப்படுகிறது என்பது வெளிப்படை.

இரண்டாவது வடிவமான B முதலாவது வடிவத்தை விடப் பொருத்தமான விதத்தில் ஒரு சரக்கின் மதிப்பை அதன் பயன்-மதிப்பிலிருந்து வேறுபடுத்திக் காட்டுகிறது; ஏனெனில் அதில் சட்டை யின் மதிப்பு சட்டையின் தசையுருவத்திலிருந்து வேறுபடுத்தும் விதத் தில் சாத்தியமான அனைத்து உருவங்களிலும் காட்டப்படுகிறது; அது துணிக்கு, இரும்புக்கு, தேயிலைக்கு, சுருங்கச் சொல்லின் சட்டை யாகிய தன் ஒன்றையல்லாது மற்ற ஒவ்வொன்றுக்கும் சமன் செய்யப்படுகிறது. மறு புறம், அனைத்துக்கும் பொதுவானதாகிய பொது மதிப்புத் தெரிவிப்பு எதுவும் நேரடியாகவே தவிர்க்கப்படு கிறது. ஏனெனில் ஒவ்வொரு சரக்கின் மதிப்புச் சமன்பாட்டிலும், மற்ற சரக்குகள் அனைத்தும் சமதைகளின் வடிவத்திலேயே இப் போது தோன்றுகின்றன. கால்நடை போன்ற உழைப்பின் குறிப் பான உற்பத்திப் பொருளை ஏனைய பல்வேறு சரக்குகளுக்கு இனி யும் விதிவிலக்காக அன்றி வழக்கமாகவே பரிவர்த்தனை செய்து கொள்ளும் நிலை வந்தவுடனேயே முதல் தடவையாக மதிப்பின் விரிந்த வடிவம் உள்ளபடியே நிலவத் தொடங்குகிறது.

மூன்றாவதும், கடைசியாக வளர்க்கப்பட்டதுமான வடிவம் சரக் குலகு முழுவதன் மதிப்புகளை இக்காரியத்துக்காக ஒதுக்கப்பட்ட தனியொரு சரக்கின் வாயிலாக, அதாவது துணியின் வாயிலாகத் தெரிவிக்கிறது; இவ்வாறு துணியுடன் அச்சரக்குகளுக்குள்ள சமத் துவத்தைக் கொண்டு நமக்கு அவற்றின் மதிப்புகளைக் காட்டுகிறது. இப்போது ஒவ்வொரு சரக்கின் மதிப்பும், துணிக்குச் சமன் செய்யப் படுவதன் மூலம், தன் சொந்தப் பயன்-மதிப்பிலிருந்து மட்டுமன்றி பொதுவாக மற்றெல்லாப் பயன்-மதிப்புகளிலிருந்தும் வேறுபடுத் தப்படுகிறது; அந்த உண்மையாலேயே எல்லாச் சரக்குகளுக்கும் பொதுவான மதிப்பாகத் தெரிவிக்கப்படுகிறது. இந்த வடிவத்தால், சரக்குகள் முதல் தடவையாக மதிப்புகளென்ற முறையில் ஒன்றுடன்

ஒன்று முனைப்பாக உறவு கொள்ளுமாறு, அதாவது பரிவர்த்தனை-மதிப்புகளாகத் தோன்றுமாறு செய்யப்படுகின்றன.

முதல் இரு வடிவங்களும் ஒவ்வொரு சரக்கின் மதிப்பையும் வேறு வகையைச் சேர்ந்த தனியொரு சரக்கின் வாயிலாகத் தெரிவிக்கின்றன, அல்லது இவ்வாறான அநேக சரக்குகளின் தொடர் வாயிலாகத் தெரிவிக்கின்றன. இரண்டிலுமே, தன் மதிப்புக்குத் தெரிவிப்பொன்றைக் காண்பது ஒவ்வொரு தனிச் சரக்கினுடையவும் விசேஷ வேலையாகும் எனலாம்; இவ்வேலையை அது மற்றவற்றின் உதவியின்றி செய்து கொள்கிறது. அச்சரக்கு தொடர்பாக, இந்த மற்றவை சமதைகளின் தன்முனைப்பற்ற பாத்திரங்களை வகிக்கின்றன. மதிப்பின் பொது வடிவமாகிய C. சரக்குலகு முழுமையின் கூட்டுச் செயலிலிருந்து — அதிலிருந்து மட்டுமே — விளைகிறது. ஒரு சரக்கு தன் மதிப்பின் பொதுத் தெரிவிப்பைக் காண வேண்டுமானால், மற்றெல்லாச் சரக்குகளும் அதேபோது தமது மதிப்புகளை அதே சமதையின் வாயிலாய் வெளியிட்டால்தான் முடியும். ஒவ்வொரு புதிய சரக்கும் அவ்வழி யிலேயே செல்ல வேண்டும். சரக்குகள் மதிப்புகளாக நிலவுவது முற்றிலும் சமூக வழிப்பட்டதென்பதால், இந்தச் சமூக நிலவலை அவற்றின் சமூக உறவுகளின் ஒட்டுமொத்தத்தால் மட்டுமே தெரி விக்க முடியும் என்பதும், ஆதலால் அவற்றினது மதிப்பின் வடிவம் சமூக வழியில் அங்கீகரிக்கப்பட்ட வடிவமாக இருக்க வேண்டு மென்பதும் இவ்வாறு தெளிவாகிறது.

துணிக்குச் சமன் செய்யப்படுகிற சரக்குகள் அனைத்தும் இப் போது பொதுவாக மதிப்புகள் என்ற விதத்தில் பண்பு வழியில் சமமானவையாக மட்டுமல்லாமல், ஒப்பிடக் கூடிய பருமன்களை யுடைய மதிப்புகளாகவும் தோன்றுகின்றன. அவற்றினது மதிப்பு களின் பருமன்களை துணி என்ற ஒரே பொருளின் வாயிலாகத் தெரிவிப்பதன் மூலம், அந்தப் பருமன்களும் ஒன்றுடன் ஒன்று ஒப்புநோக்கப்படுகின்றன. உதாரணமாக, 10 இராத்தல் தேயிலை = 20 கெஜம் துணி, 40 இராத்தல் காப்பி = 20 கெஜம் துணி. எனவே, 10 இராத்தல் தேயிலை = 40 இராத்தல் காப்பி. வேறுவிதமாகச் சொன்னால், 1 இராத்தல் தேயிலையில் அடங்கியுள்ள மதிப்புச் சாரத்தில் — உழைப்பில் — நான்கிலொரு பங்குதான் 1 இராத்தல் காப்பியில் அடங்கியுள்ளது.

சரக்குலகு முழுவதையும் தழுவி நிற்கும் பொதுவான ஒப்பீட்டு மதிப்பு வடிவம், மற்றவற்றிலிருந்து பிரிக்கப்பட்டுச் சமதையின் பாத்திரத்தை வகிக்குமாறு செய்யப்படுகிற தனிச் சரக்கை — இங்கே துணியை — சர்வப் பொதுச் சமதையாக மாற்றி விடுகிறது. துணி யின் தசையுருவம் இப்போது அனைத்துச் சரக்குகளின் மதிப்புகளும் பொதுவில் மேற்கொள்கிற வடிவமாகும்; எனவே அது அவை அனைத்துடனும் — ஒவ்வொன்றுடனும் — நேரடியாகப் பரிவர்த்தனை

செய்து கொள்ளத் தக்கதாகிறது. துணி என்ற பொருள் ஒவ்வொரு வகை மனித உழைப்பினதும் கண்கூடான அவதாரம் ஆகிறது, சமூக வழிப்பட்ட கூட்டுப்புழு நிலை ஆகிறது. இதன் விளைவாக ஒரு குறிப்பான பொருளை, துணியை உற்பத்தி செய்கிற குறிப்பிட்ட சில தனியாட்களின் உழைப்பான நெசவு, ஒரு சமூகத் தன்மையை, உழைப்பின் மற்றெல்லா வகைகளுடனும் சமத்துவமென்ற தன்மையை ஈட்டுகிறது. மதிப்பின் பொது வடிவம் எவற்றா லானதோ அந்த எண்ணற்ற சமன்பாடுகள், துணியில் உருக் கொண்ட உழைப்பை, மற்ற ஒவ்வொரு சரக்கிலும் உருக்கொண்ட உழைப்போடு அடுத்தடுத்து சமன் செய்கின்றன; இவ்வாறு அவை நெசவை, வேறுபடுத்தப்படாத மனித உழைப்பினது வெளிப் பாட்டின் பொது வடிவமாக மாற்றுகின்றன. இவ்விதத்தில், சரக்கு களின் மதிப்புகளில் ஈடேற்றம் பெற்ற உழைப்பு நடைமுறை வேலையின் ஒவ்வொரு ஸ்தூலமான வடிவத்திலிருந்தும், பயனுள்ள தன்மையிலிருந்தும் அது பிரித்துப் பார்க்கப்படுவதான அதன் எதிர்மறை அமிசத்தில் முன்வைக்கப்படுவது மட்டுமல்லாமல், அதன் சொந்த நேர்நிலை இயல்பும் தன்னைத் தெளிவாக வெளிப்படுத்திக் கொள்ளுமாறு செய்யப்படுகிறது. நடைமுறை உழைப்பின் அனைத்து வகைகளையும், பொதுவாக மனித உழைப்பென்ற, மனித உழைப்புச் சக்தியின் செலவழிப்பென்ற அவற்றின் பொது வான தன்மையின் நிலைக்குப் பெயர்ப்பதே மதிப்பின் பொது வடிவம் ஆகும்.

உழைப்பின் உற்பத்திப் பொருட்கள் அனைத்தையும் வேறு படுத்தப்படாத மனித உழைப்பின் இறுகல்களாய் மட்டும் காட்டுகிற பொதுவான மதிப்பு வடிவம் தன் வடிவமைப்பைக் கொண்டே, சரக்குலகின் சமூகப் பொழிப்பே தானென்று காட்டிக் கொள்கிறது. ஆதலால் உழைப்பனைத்துக்குமுள்ள மனித உழைப்பென்ற தன்மை சரக்குலகில் அதன் குறிப்பான சமூகத் தன்மை ஆகிறது என்பதை இவ்வடிவம் மறுப்புக்கிடமின்றி தெளிவாக்குகிறது.

### 2. மதிப்பின் ஒப்பீட்டு வடிவம், சமதை வடிவம் இவற்றின் ஒன்றுக்கொன்று சார்புள்ள வளர்ச்சி

மதிப்பின் ஒப்பீட்டு வடிவத்தின் வளர்ச்சி நிலை சமதை வடிவத்தின் வளர்ச்சி நிலைக்கேற்ப அமைகிறது. ஆனால் சமதை வடிவத்தின் வளர்ச்சி ஒப்பீட்டு வடிவத்தின் வளர்ச்சியின் தெரி விப்பும் விளைவுமே ஆகும் என்பதை நாம் மனத்தில் கொள்ள வேண்டும்.

ஒரு சரக்கினது மதிப்பின் ஆரம்ப அல்லது தனித்த ஒப்பீட்டு வடிவம் வேறு ஒரு சரக்கை தனித்த சமதையாக மாற்றி விடுகிறது. ஒரு சரக்கின் மதிப்பை மற்றெல்லாச் சரக்குகளின் வாயிலாகவும்

தெரிவிப்பதான விரிந்த ஒப்பீட்டு மதிப்பு வடிவம், அந்த மற்ற சரக்குகளுக்கு, வகையில் வேறுபடும் குறிப்பான சமதைகளின் தன்மையை அளிக்கிறது. கடைசியாக ஒரு குறிப்பான வகையைச் சேர்ந்த சரக்கு சர்வப் பொதுச் சமதையின் தன்மையைப் பெறு வதன் காரணம், மற்ற சரக்குகள் அனைத்தும் தங்கள் மதிப்பை ஒரேவிதமாக வெளியிடுவதற்குரிய பொருளாக அதனை ஆக்கிக் கொள்வதே.

மதிப்பு வடிவத்தின் இரு துருவங்களான ஒப்பீட்டு மதிப்பு வடிவத்துக்கும் சமதை வடிவத்துக்கும் இடையிலான பகைமை அந்த வடிவத்தோடு கூடவே ஏககாலத்தில் வளர்ச்சி பெறுகிறது.

முதல் வடிவமான 20 கெஜம் துணி = ஒரு சட்டை என்பதில் ஏற்கெனவே இந்தப் பகைமை, இன்னமும் நிர்ணயிக்கப்படாத நிலையில், அடங்கியுள்ளது. இந்தச் சமன்பாட்டை முன்னோக் கியோ பின்னோக்கியோ படிப்பதைப் பொறுத்து, துணியும் சட்டை யும் வகிக்கும் பாத்திரங்கள் வேறுபடுகின்றன. முன்னோக்கிப் படிக் கையில், துணியின் ஒப்பீட்டு மதிப்பு சட்டையில் வெளியிடப்படு கிறது; பின்னோக்கிப் படிக்கையில், சட்டையின் ஒப்பீட்டு மதிப்பு துணியில் வெளியிடப்படுகிறது. எனவே, மதிப்பின் இந்த முதல் வடிவத்தில், துருவ மாறுபாட்டைக் கிரகித்துக் கொள்வது கடினம்.

ஒரு நேரத்தில் தனியொரு சரக்கு மட்டுமே அதன் ஒப்பீட்டு மதிப்பை முழு அளவில் விரிவாக்கிக் கொள்ள முடியும் என்றும், அது தொடர்பாக மற்றெல்லாச் சரக்குகளும் சமதைகளாய் இருக்கிற காரணத்தாலும், அப்படி இருக்கிற வரையிலும்தான், அது இந்த விரிந்த வடிவத்தை அடைய முடியும் என்றும் வடிவம் B காட்டு கிறது. 20 கெஜம் துணி = 1 சட்டை என்ற சமன்பாட்டைத் திருப்பிப் போட முடிவது போல, இங்கே இச்சமன்பாட்டைத் திருப்பிப் போட முடியாது. அப்படித் திருப்பிப் போட்டால் அதன் பொதுவான தன்மை மாறிப் போகும்; விரிந்த மதிப்பு வடிவம் பொதுவான மதிப்பு வடிவம் ஆகிப் போகும்.

இறுதியாக, பொதுவான சமுதாய ஒப்பீட்டு மதிப்பு வடிவத்தின் மூலம், ஒன்றைத் தவிர்த்து எல்லாச் சரக்குகளும் சமதை வடிவத் திலிருந்து விலக்கப்படுகிற காரணத்தாலும், அப்படி விலக்கப் படுகிற அளவிலும், வடிவம் C சரக்குலகுக்கு அந்தப் பொதுவான சமுதாய ஒப்பீட்டு மதிப்பு வடிவத்தைத் தருகிறது. எனவே, தனி யொரு சரக்கான துணி மற்ற ஒவ்வொரு சரக்குடனும் நேரடியாகப் பரிவர்த்தனை செய்து கொள்ளக்கூடிய தன்மையை, இத்தன்மை மற்ற ஒவ்வொரு சரக்குக்கும் மறுக்கப்படுகிற காரணத்தாலும், அப்படி மறுக்கப்படுகிற அளவிலும், அடைந்திருப்பதாகத் தோன்றுகிறது.[33]

---

[33] இந்த நேரடியான சர்வப் பொதுப் பரிவர்த்தனைக்குரிய தன்மை துருவத் தன்மையுள்ள ஒன்று எனலாம்; காந்தத்தின் நேர்துருவம் அதன் எதிர் துருவத்துடன்

மறு புறம், சர்வப் பொதுச் சமதையாக இடம்பெறுகிற சரக்கு ஒப்பீட்டு மதிப்பு வடிவத்திலிருந்து விலக்கி வைக்கப்படுகிறது. சர்வப் பொதுச் சமதையாகப் பயன்படுகிற துணியோ அல்லது வேறு ஏதேனும் சரக்கோ ஒப்பீட்டு மதிப்பு வடிவத்தில் பங்கு பெறுவதானால், அது தனக்குத் தானே சமதையாகப் பயன்பட வேண்டியிருக்கும். அப்போது, 20 கெஜம் துணி = 20 கெஜம் துணி என்று பெறப்படும். அர்த்தமற்ற இந்தக் கூறியது கூறல் மதிப்பையும் தெரிவிப்பதில்லை, மதிப்பின் பருமனையும் தெரிவிப்பதில்லை. சர்வப் பொதுச் சமதையின் ஒப்பீட்டு மதிப்பைத் தெரிவிக்கும் பொருட்டு, நாம் வடிவம் Cஐத் திருப்பி போட வேண்டும். இந்தச் சமதைக்கு ஏனைய சரக்குகளுடன் பொதுவான ஒப்பீட்டு மதிப்பு வடிவம் ஏதுமில்லை; ஆனால் அதன் மதிப்பு ஏனைய சரக்குகளின் முடிவற்ற தொடரால் ஒப்பீட்டு முறையில் தெரிவிக்கப்படுகிறது.

இவ்வாறாக ஒப்பீட்டு மதிப்பின் விரிந்த வடிவம், அதாவது வடிவம் B, சமதைச் சரக்குக்கான ஒப்பீட்டு மதிப்பின் குறிப்பான வடிவமாக இப்போது காட்சி தருகிறது.

### *3. மதிப்பின் பொது வடிவத்திலிருந்து பண வடிவத்துக்கு மாறிச் செல்லுதல்*

சர்வப் பொதுச் சமதை வடிவம் [universal equivalent form] பொதுவான மதிப்பு வடிவமாகும். எனவே, எந்தச் சரக்கும்

---

எவ்வளவு நெருக்கமாகப் பிணைக்கப்பட்டுள்ளதோ, அவ்வளவு நெருக்கமாக நேரடிப் பரிவர்த்தனைக்குரிய தன்மையில்லாமை என்ற தன் எதிர் துருவத்துடன் அது பிணைக்கப்பட்டது என்பது எளிதிற் புலனாவதில்லை. எனவே, எல்லாக் கத்தோலிக்கர்களுமே சேர்ந்தாற் போல் போப்பாண்டவர்களாய் இருக்க முடியும் என்ற கற்பனையைப் போன்றதே எல்லாச் சரக்குகளும் ஏககாலத்தில் இத்தன்மையைப் பதித்துக் கொள்ள முடியும் என்ற கற்பனையும். நேரடியாகப் பரிவர்த்தனை செய்து கொள்ளப் பட இயலாது என்ற இந்தத் தன்மையிலிருந்து விளைகிற அசௌகரியங்கள் அகற்றப்பட வேண்டும் என்பது, சரக்கு உற்பத்தியை மனித சுதந்தரம், தனி மனிதனின் சுயேச்சை நிலை இவற்றின் சிகரமாகக் கருதுகிற குட்டி முதலாளியின் கண்ணோட்டத்தில் பெரிதும் விரும்பத் தக்கதுதான். இந்த அற்பவாதக் கற்பனாலோகத்தின் ஒரு விவரணமே புரூதோனின் சோஷலிசம்; நான் வேறிடங்களில் விளக்கியிருப்பது போல, இது சுயமானதென்ற தகுதி கூட இல்லாத ஒரு சோஷலிச வடிவமேயன்றி வேறில்லை. அவரது காலத்துக்கு வெகு முன்னதாகவே கிரே, பிரே முதலானோர் இன்னுமதிக வெற்றியுடன் இதனைச் செய்ய முயன்று பார்த்தனர். இருப்பினும் இம்மாதிரியான புத்திசாலித்தனம் இப்போதுங்கூட ''விஞ்ஞானம்'' என்ற பெயரில் சில வட்டாரங்களில் தாண்டவமாடுகிறது. புரூதோனின் மரபினரைப் போல் எந்த மரபினரும் விஞ்ஞானம் என்ற சொல்லை வைத்து இவ்வளவு ஜால வித்தை புரிந்து காட்டியதில்லை. ஏனெனில்,

''wo Begriffe fehlen,<br>
Da stellt zur rechten Zeit ein Wort sich ein.''*

---

* ''சிந்தனைகள் இல்லாத போது<br>
சொற்கள் சுகமான மாற்றாகின்றன.''

அவ்வடிவத்தை மேற்கொள்ள முடியும். மறு புறம் ஒரு சரக்கு சர்வப் பொதுச் சமதை வடிவத்தை (வடிவம் C) மேற்கொண்டிருப்பதாகத் தெரிகிறது என்றால், மற்றெல்லாச் சரக்குகளிடமிருந்தும் அவற்றின் சமதை என்ற விதத்தில், அதுவும் அவற்றின் செயலாலேயே அது விலக்கப்பட்டிருக்கிற காரணத்தாலும், விலக்கப்பட்டிருக்கிற அளவிலுமே, இது நிகழ்கிறது. குறிப்பிட்ட ஒரு சரக்கு மட்டுமே முடிவில் இப்படி விலக்கப்படும் நேரத்திலிருந்து — அக்கணத்திலிருந்துதான் — சரக்குலகில் ஒப்பீட்டு மதிப்பின் பொது வடிவம் உண்மையான முரணின்மையையும் சமுதாயத்தில் பொதுவாக செல்லத்தக்க நிலையையும் அடைகிறது.

எந்தச் சரக்கின் தசையுருவமானது சமதை வடிவம் என்று இவ்வாறு சமூக வழியில் இனங்காட்டப்படுகிறதோ, அந்தக் குறிப்பிட்ட சரக்கே பணச் சரக்காகிறது, அதாவது பணமாகப் பயன்படுகிறது. சரக்குலகில் சர்வப் பொதுச் சமதையின் பாத்திரத்தை வகிப்பது அந்தச் சரக்கின் விசேஷ சமூகப் பணியும், ஆதலால் அதன் சமூக ஏகபோகமும் ஆகிறது. வடிவம் Bஇல் துணியின் குறிப்பான சமதைகளாக இடம்பெறுகிறவையும், வடிவம் Cஇல் தமது ஒப்பீட்டு மதிப்புகளைத் துணி வாயிலாகப் பொதுவில் தெரிவிப்பவையுமான சரக்குகளில், குறிப்பாக ஒரு சரக்கு, அதாவது தங்கம் இந்தத் தலையாய இடத்தை அடைந்திருக்கிறது. ஆக, வடிவம் Cஇல் துணியின் இடத்தில் தங்கத்தை அமர்த்தினால் நமக்குக் கிடைப்பது:

## D. பண வடிவம்

| | | |
|---|---|---|
| 20 கெஜம் துணி | | |
| 1 சட்டை | | |
| 10 இராத்தல் தேயிலை | | |
| 40 இராத்தல் காப்பி | = | 2 அவுன்ஸ் தங்கம் |
| 1 குவார்ட்டர் தானியம் | | |
| ½ டன் இரும்பு | | |
| x சரக்கு A... | | |

வடிவம் Aஇலிருந்து வடிவம் Bக்கும், வடிவம் Bஇலிருந்து வடிவம் Cக்கும் செல்கையில் அடிப்படை மாற்றங்கள் நிகழ்கின்றன. ஆனால், வடிவம் Dஇல் தங்கம் துணிக்குப் பதிலாகச் சமதை வடிவத்தை மேற்கொண்டுள்ளது என்பதைத் தவிர வடிவங்கள் Cக்கும் Dக்குமிடையே வேறுபாடு ஏதுமில்லை. வடிவம் Cஇல் துணி என்னவாக இருந்ததோ அதுவாகவே — சர்வப் பொதுச் சமதையாகவே — வடிவம் Dஇல் தங்கம் இருக்கிறது. நேரடியான சர்வப் பொதுப் பரிவர்த்தனைக்குரிய தன்மை — அதாவது சர்வப் பொதுச் சமதை வடிவம் — இப்போது சமுதாய வழக்கின் மூலம் தங்கம் என்ற பொருளாக இறுதியில் இனங்காட்டப்படுவது தவிர வேறு முன்னேற்றம் ஏதுமில்லை.

தங்கம் மற்றெல்லாச் சரக்குகள் தொடர்பாகவும் இப்போது பணமாக இருப்பது, அது முன்னர் அவை தொடர்பாக ஒரு சாமானியச் சரக்காக இருந்ததால்தான். மற்றெல்லாச் சரக்குகளையும் போலவே அதுவும் ஒரு சமதையாக — தனித்த பரிவர்த்தனைகளில் சாமானியச் சமதையாகவோ, மற்றவற்றோடு கூட குறிப்பான சமதையாகவோ — பயன்பட வல்லதாய் இருந்தது. அது படிப் படியாக வேறுபடும் எல்லைகளுக்குள் சர்வப் பொதுச் சமதையாகப் பயன்படலாயிற்று. சரக்குலகிற்கான மதிப்புத் தெரிவிப்பில் இந்தப் பதவியை அது ஏகபோகமாக்கிக் கொண்டதுமே, பணச் சரக்காகி விடுகிறது; அப்போதே, அதுவரையல்ல, வடிவம் D வடிவம் Cஇலிருந்து வேறுபடுகிறது; மதிப்பின் பொது வடிவம் பண வடிவமாக மாறி விடுகிறது.

பணத்தின் பாத்திரத்தை வகிக்கிற தங்கம் போன்ற சரக்கின் வாயிலாகத் துணி போன்ற தனியொரு சரக்கின் ஒப்பீட்டு மதிப்பைத் தெரிவிக்கும் ஆரம்பத் தெரிவிப்பு அந்தச் சரக்கின் விலை வடிவம் [price-form] ஆகும். எனவே துணியின் விலை வடிவமாவது:

*20 கெஜம் துணி = 2 அவுன்ஸ் தங்கம்; அல்லது, 2 அவுன்ஸ் தங்கம் நாணயமாக்கப்படும் போது £2 ஆனால், 20 கெஜம் துணி = £2.*

பண வடிவத்தைப் புரிந்து கொள்வதிலுள்ள இடர்ப்பாடு சர்வப் பொதுச் சமதை வடிவத்தையும் — அதன் அவசியத் துணை முடிவாக — மதிப்பின் பொது வடிவமான வடிவம் Cஐயும் தெளிவாகப் புரிந்து கொள்வதில் அடங்கியுள்ளது. 20 கெஜம் துணி = 1 சட்டை, அல்லது x சரக்கு A=y சரக்கு B என்ற வடிவம் Aஐ இன்றியமையாத உள்ளடக்கக் கூறாகக் கொண்டதே வடிவம் B என்று பார்த்தோம்; விரிந்த மதிப்பு வடிவமான இந்த வடிவம் Bஇலிருந்து வருவிக்கத்தக்கதாகும் வடிவம் C. எனவே, சாமானிய சரக்கு வடிவமே பண வடிவத்தின் வித்தாகும்.

### பிரிவு 4. — சரக்குகளின் மாய்மாலமும் அதன் இரகசியமும்

எடுத்த எடுப்பில் சரக்கு என்பது சர்வ சாதாரணமானதாகவும், எளிதிற் புரிந்துகொள்ளக் கூடியதாகவும் தோன்றுகிறது. உண்மையில் அது சூக்கும நுணுக்கங்களும் வேதாந்த நுட்பங்களும் நிறைந்த மிக விந்தையான பொருளாகும் என்பதை அதன் பகுப்பாய்வு காட்டுகிறது. அது ஒரு பயன்-மதிப்பு என்ற அளவில் தன் தன்மைகளால் மனிதத் தேவைகளை நிறைவு செய்ய வல்லது என்ற கண்ணோட்டத்தில் பார்த்தாலும் சரி, அந்தத் தன்மைகள் மனித உழைப்பின் பலனாகும் என்ற கண்ணோட்டத்தில் பார்த்தாலும்

சரி, அதில் எந்த மர்மமும் இல்லை. மனிதன் தனது தொழிலைக் கொண்டு, இயற்கை தந்த பொருட்களின் வடிவங்களை அவை தனக்குப் பயனுள்ளவையாக இருக்கும் விதத்தில் மாற்றுகிறான் என்பது வெள்ளிடைமலை. உதாரணமாக, மரத்தின் வடிவம் அதிலிருந்து ஒரு மேஜை செய்வதன் மூலம் மாற்றப்படுகிறது. இருப்பினும், மேஜை தொடர்ந்து மரம் என்ற அந்த சாதாரண அன்றாடப் பொருளாகவே இருக்கிறது. ஆனால் அது ஒரு சரக்காக அடியெடுத்து வைத்ததுமே, புலன் கடந்த ஒன்றாக மாறிப் போகிறது. காலைத் தரையில் ஊன்றி நிற்பது மட்டுமல்லாமல் மற்றெல்லாச் சரக்குகளுடனுமான உறவில் அது தலைகீழாகவும் நிற்கிறது; தன் மர மண்டையிலிருந்து விசித்திரமான கருத்துகளை, "மேஜையே குதித்தாடுவதை" விடவும் அதியற்புதமான கருத்து களை பரிமளிக்கச் செய்கிறது.

எனவே, சரக்குகளின் மாயமான தன்மை அவற்றின் பயன்-மதிப்பிலிருந்து பிறப்பதன்று; அவ்வாறே, மதிப்பை நிர்ணயிக்கும் காரணிகளின் இயல்பிலிருந்து வருவதுமன்று. ஏனெனில், உழைப் பின் பயனுள்ள வகைகள் அல்லது உற்பத்தி நடவடிக்கைகள் எவ்வளவுதான் வேறுபட்டவை என்றாலும், அவை மனித உயி ரமைப்பின் [human organism] காரியங்கள் என்பதும், இவ் வாறான ஒவ்வொரு காரியமும், அதன் இயல்பு அல்லது வடிவம் என்னவானாலும், சாராம்சத்தில் மனித மூளை, நரம்புகள், தசை கள் இன்ன பிறவற்றின் செலவீடே என்பதும் ஓர் உடலியல் உண்மையாகும். இரண்டாவதாக, மதிப்பின் அளவுவழி நிர்ண யிப்புக்கு அடித்தளமாவது எதுவோ அதைப் பொறுத்த வரை, அதாவது அந்தச் செலவீடு நீடிக்கும் காலம் அல்லது உழைப்பின் அளவைப் பொறுத்த வரை, அதன் அளவுக்கும் பண்புக்குமிடையே ஒரு வேறுபாடு இருப்பது தெள்ளத் தெளிவாய்த் தெரிகிறது. எல்லாச் சமுதாய முறைகளிலும் வாழ்வுச் சாதனங்களை உற்பத்தி செய்வதற்கு செலவாகிற உழைப்பு நேரம், வெவ்வேறு வளர்ச்சிக் கட்டங்களிலும் ஒரே விதமான அக்கறைக்குரியதன்று என்றாலும், மனித வர்க்கத்தின் அக்கறைக்குரிய ஒன்றாய்க் கட்டாயம் இருந்தாக வேண்டும்.[34] கடைசியாக மனிதர்கள் எவ்விதத்திலேனும் ஒருவர் மற்றவருக்காக உழைக்கிற அக்கணத்திலிருந்தே அவர்களது உழைப்பு ஒரு சமூக வடிவத்தை மேற்கொள்கிறது.

---

[34] புராதன ஜெர்மானியர்கள் மத்தியில் நிலத்தை அளப்பதற்கான அலகு ஒரு நாளில் அறுவடை செய்யக் கூடிய மகசூலின் அளவாக இருந்தது: Tagwerk, Tagwanne (jurnale அல்லது terra jurnalis அல்லது diornalis), Mannsmaad இன்ன பிறவாறு அது அழைக்கப்பட்டது. (பார்க்கவும்: கி.லு. ஃபோன் மௌரர், "Einleitung zur Geschichte der Mark...Verfassung," Munchen, 1854, பக்கம் 129 முதலானவை.)

அப்படியானால் உழைப்பின் உற்பத்திப் பொருள் சரக்கு என்ற வடிவத்தை மேற்கொண்டதுமே, அது பெறுகிற விசித்திரத் தன்மை எதிலிருந்து பிறக்கிறது? இந்த வடிவத்திலிருந்தே என்பது தெளிவு. மனித உழைப்பின் அனைத்து வகைகளுக்கும் இடையிலான சமத்துவம், அவற்றின் உற்பத்திப் பொருட்கள் எல்லாம் மதிப்புகளாக இருப்பதன் வாயிலாக எதார்த்தத்தில் தெரிவிக்கப் படுகிறது. உழைப்புச் சக்தியின் செலவீட்டை அச்செலவீடு நீடிக்கும் காலத்தைக் கொண்டு அளவிடுவது உழைப்பின் உற்பத்திப் பொருட்களது மதிப்பின் அளவு என்ற வடிவத்தை எடுக்கிறது. இறுதியாக, உற்பத்தியாளர்களின் பரஸ்பர உறவுகள் — அவர்களது உழைப்பின் சமூகத் தன்மை இவ்வுறவுகளில்தான் வெளியாகிறது — உற்பத்திப் பொருட்களிடையிலான சமூக உறவின் வடிவத்தை எடுக்கின்றன.

ஆக, மனிதர்களுடைய உழைப்பின் சமூகத் தன்மை அந்த உழைப்பின் உற்பத்திப் பொருளுக்கு உரித்தான பொருள்வயத் தன்மையாக அவர்களுக்குத் தோற்றமளிக்கிறது; உற்பத்தியாளர் களுக்கு அவர்களுடைய உழைப்பின் ஒட்டுமொத்தத்துடன் உள்ள உறவானது அவர்களிடையே நிலவுகிற சமூக உறவாக அல்லாமல் அவர்களது உழைப்பின் உற்பத்திப் பொருட்களிடையே நிலவுகிற சமூக உறவாக அவர்களை எதிர்கொள்கிறது — சரக்கின் மாயமான தன்மைக்கு இதுவேதான் காரணம். உழைப்பின் உற்பத்திப் பொருட்கள் சரக்குகளாவதற்கு, புலன்களால் உணரக் கூடியவை யும் அதேபோது உணர முடியாதவையுமான சமூகப் பொருட் களாவதற்கு இதுவேதான் காரணம். இதே போலத்தான், ஒரு பொருளிலிருந்து வருகிற ஒளி, நமது பார்வை நரம்பின் அகத் தூண்டுதலாக இல்லாமல் கண்ணுக்கு வெளியே இருக்கும் ஏதோ ஒன்றின் புற வடிவமாகவே நம்மால் உணரப்படுகிறது. ஆனால், எது எப்படியானாலும், பார்த்தல் என்ற செயலில், ஒரு பொருளி லிருந்து இன்னொரு பொருளுக்கு, புறப் பொருளிலிருந்து கண் ணுக்கு, உள்ளபடியே ஒளிக் கடத்தல் நிகழ்கிறது. பௌதிகப் பொருட்களிடையே ஒரு பௌதிக உறவு உள்ளது. ஆனால் சரக்கு களின் விஷயம் வேறு. அங்கே பொருட்கள் சரக்குகளாக இருப் பதும், அவற்றைச் சரக்குகள் என முத்திரை குத்துகிற உழைப்பின் உற்பத்திப் பொருட்களிடையிலான மதிப்புறவும் அவற்றின் பௌதிக இயல்புகளோடும், இந்த இயல்புகளிலிருந்து எழும் பொருளாயத உறவுகளோடும் சற்றும் தொடர்பற்றவை. அங்கே அது மனிதர்களிடையே நிலவும் திட்டமான சமூக உறவு ஆகும். அது, அவர்களது பார்வையில் பொருட்களிடையே நிலவும் உற வென்ற கற்பனை வடிவத்தை மேற்கொள்கிறது. எனவே, ஓர் உவமையைக் காணும் பொருட்டு, நாம் சமய உலகின் பனி மூடிய பரப்புகளினுள் புக வேண்டும். அந்த உலகில் மனித மூளையின்

படைப்புகள் உயிருள்ள சுயேச்சைப் பிறவிகளாகவும், ஒன்றோடு ஒன்றும் மனித இனத்தோடும் உறவு கொள்கிறவையாகவும் தோற்றமளிக்கின்றன. சரக்குலகில், மனிதக் கரங்களின் படைப்பான உற்பத்திப் பொருட்களும் இவ்வாறே தோற்றமளிக்கின்றன. இதனையே சரக்குகளின் மாய்மாலம் [fetishism of commodities] என்றழைக்கிறேன். உற்பத்திப் பொருட்கள் சரக்குகளாக உற்பத்தி செய்யப்பட்டதுமே இந்த மாய்மாலம் அவற்றுடன் ஒட்டிக் கொள்கிறது; எனவே சரக்கு உற்பத்தியிலிருந்து இதனைப் பிரிக்க முடியாது.

மேற்கண்ட பகுப்பாய்வு ஏற்கெனவே காட்டி விட்டது போல, சரக்குகளின் இந்த மாய்மாலம் அவற்றை உற்பத்தி செய்கிற உழைப்பின் தனிவித சமூகத் தன்மையிலிருந்து எழுகிறது.

பொதுவாகச் சொன்னால், ஒருவர் மற்றவரைச் சாராது தங்கள் வேலையைச் செய்கிற தனிப்பட்ட ஆட்களுடைய, அல்லது தனியாட்களைக் கொண்ட குழுக்களுடைய உழைப்பின் உற்பத்திப் பொருட்கள் என்பதால்தான் பயனுள்ள பண்டங்கள் சரக்குகளாகின்றன. இந்தத் தனியாட்கள் அனைவரது உழைப்பின் ஒட்டுமொத்தம் சமுதாயத்தின் மொத்த உழைப்பாகிறது. உற்பத்தியாளர்கள் தங்கள் உற்பத்திப் பொருட்களைப் பரிவர்த்தனை செய்துகொள்ளும் வரை ஒருவரோடு ஒருவர் சமூகத் தொடர்பு கொள்வதில்லை என்பதால், ஒவ்வொரு உற்பத்தியாளருடையவும் உழைப்பின் குறிப்பான சமூகத் தன்மை பரிவர்த்தனைச் செயலில்தான் தன்னைக் காட்டிக் கொள்கிறது. வேறு விதமாகச் சொன்னால், பரிவர்த்தனைச் செயல் உற்பத்திப் பொருட்களிடையே நேரடியாகவும், அவை மூலமாக உற்பத்தியாளர்களிடையே சுற்றடியாகவும் நிறுவுகிற உறவுகளைக் கொண்டுதான் தனியாளின் உழைப்பு சமுதாய உழைப்பின் ஒரு பகுதியாகத் தன்னை நிலைநிறுத்திக் கொள்கிறது. எனவே, ஒரு தனியாளின் உழைப்பை ஏனையோரின் உழைப்புடன் பிணைக்கிற உறவுகள், வேலை செய்கிற தனியாட்களிடையிலான நேரடிச் சமூக உறவுகளாகத் தோன்றாமல், ஆட்களிடையிலான பொருளாயத உறவுகளாகவும் [material relations], பொருட்களிடையிலான சமூக உறவுகளாகவும் [social relations] — உண்மையில் அவை இருக்கிற படி — உற்பத்தியாளர்களுக்குத் தோன்றுகின்றன. உழைப்பின் உற்பத்திப் பொருட்கள், மதிப்புகள் என்ற விதத்தில், அவை பலவாறான வடிவங்களில் பயனுள்ள பொருட்களாக இருப்பதிலிருந்து வேறுபட்ட ஒரேசீரான சமூகத் தகுநிலையை எய்துவது பரிவர்த்தனை செய்யப்படுவதன் மூலமே. பயனுள்ள பண்டங்கள் பரிவர்த்தனை செய்யும் நோக்கத்துக்காகவே உற்பத்தி செய்யப்படுகின்றன, எனவே மதிப்புகள் என்ற அவற்றின் தன்மை உற்பத்தியின் போது முன்கூட்டியே கணக்கிலெடுத்துக் கொள்ளப்பட வேண்டும் என்னுமளவுக்கு பரிவர்த்தனை விரிவடைந்திருக்கும் போதுதான், ஓர் உற்பத்திப் பொருளைப் பயனுள்ள பொருளாகவும்,

மதிப்பாகவும் பிரிப்பது நடைமுறையில் முக்கியமானதாகிறது. இக் கணத்திலிருந்து, தனி உற்பத்தியாளரின் உழைப்பு சமூக வழியில் இரட்டைத் தன்மை பெறுகிறது. ஒரு புறம், அது உழைப்பின் திட்டமான பயனுள்ளதொரு வகை என்ற விதத்தில், திட்டமான தொரு சமுதாயத் தேவையை நிறைவு செய்யவும், இவ்வாறு அனைவரது கூட்டுழைப்பின் பிரிக்க முடியாத பகுதியாக, தன் னியல்பாய்த் தோன்றிய சமுதாய உழைப்புப் பிரிவினையின் [social division of labour] கிளையாகப் பங்காற்றவும் வேண்டும். மறு புறம், பயனுள்ள சொந்த உழைப்பின் வகைகள் அனைத்தின் பரஸ்பரப் பரிவர்த்தனைக்குரிய தன்மை நிலைபெற்ற சமூக உண்மையாக இருக்கிற அளவிலும், எனவே, ஒவ்வொரு உற்பத்தியாளரின் பயனுள்ள சொந்த உழைப்பும் மற்ற அனைவரின் உழைப்புடனும் சரிநிகராக இடம் பெறுகிற அளவிலும்தான், அது தனிப்பட்ட உற் பத்தியாளரின் பலதரப்பட்ட தேவைகளை நிறைவு செய்ய முடியும். மிக வெவ்வேறான உழைப்பு வகைகளை சமப்படுத்துவது, அவற்றின் அசமத்துவங்களை நீக்கி விட்டுப் பார்ப்பதன் — அல்லது அவற்றின் பொதுக் காரணியாக, அதாவது மனித உழைப்புச் சக்தியின் செலவீடாக, அதாவது ஸ்தூலமற்ற மனித உழைப்பாக அவற்றைப் பெயர்ப்பதன் — விளைவாகவே இருக்க முடியும். தனியாளது உழைப்பின் சமூக இரட்டைத் தன்மை அவரது மூளை யில் பிரதிபலிக்கும் போது, அன்றாட நடைமுறையில் உற்பத்திப் பொருட்களின் பரிவர்த்தனை அந்த உழைப்பின் மீது பதிக்கிற வடிவங்களிலேயே அத்தன்மை அவருக்குத் தோன்றுகிறது. இவ் விதத்தில் அவரது சொந்த உழைப்பு சமூக வழியில் பயனுள்ளதாக இருக்கும் தன்மை, உற்பத்திப் பொருள் பயனுள்ளதாக, மற்றவர் களுக்குப் பயனுள்ளதாக இருக்க வேண்டும் என்ற நிபந்தனையின் வடிவத்தில் வெளிப்படுகிறது; அவரது குறிப்பிட்ட உழைப்பு பெற் றிருக்கும் சமூகத் தன்மை, குறிப்பிட்ட மற்றெல்லா உழைப்பு வகைகளின் சரிசமன் என்ற இந்தச் சமூகத் தன்மை, உழைப்பின் உற்பத்திப் பொருட்களான இந்த வெவ்வேறு பௌதிகப் பொருட் கள் யாவும் பெற்றிருக்கும் பொதுப் பண்பின் வடிவில், அதாவது இவை யாவும் மதிப்புள்ளவை என்கிற இந்தப் பொதுப் பண்பின் வடிவில் வெளிப்படுகிறது.

எனவே நமது உழைப்பின் உற்பத்திப் பொருட்களை மதிப்புகள் என்ற விதத்தில் ஒன்றோடு ஒன்று உறவுபடுத்துகிறோம் என்றால், இந்தப் பண்டங்களை ஒருபடித்தான மனித உழைப்பின் பொருளா யதக் கலன்களாகப் பார்ப்பது காரணமாய் அப்படிச் செய்ய வில்லை. நேர்மாறாக, நமது வெவ்வேறு உற்பத்திப் பொருட் களையும் பரிவர்த்தனையின் மூலம் மதிப்புகளாக நாம் சமன் செய்யும் போதெல்லாம், அவற்றில் செலவிடப்பட்டிருக்கும் வெவ் வேறு உழைப்பு வகைகளையும் அதே செயலின் மூலம் மனித

உழைப்பாக சமன் செய்கிறோம். நாம் இதை உணர்ந்திருப்பதில்லை, எனினும் இதையே செய்கிறோம்.[35] ஆக, மதிப்பானது தான் என்ன என்பதை விவரிக்கிற ஒரு முத்திரையுடன் நடைபோடுவதில்லை. இன்னும் சரியாக, ஒவ்வொரு சரக்கையும் ஒரு சமூகக் குறியெழுத்தாக மாற்றுவது மதிப்பே. நாம் படைத்த சமூக உற்பத்திப் பொருட்களின் இரகசியத்தைக் கண்டறிய வேண்டி, பிற்காலத்தில் குறியெழுத்தின் பொருள் காண முயல்கிறோம்; ஏனெனில் பயனுள்ள பொருளை மதிப்பென முத்திரை குத்துவது மொழியைப் போலவே ஒரு சமூக விளைவாகும். உழைப்பின் உற்பத்திப் பொருட்கள் மதிப்புகளென்ற அளவில் அவற்றின் உற்பத்தியில் செலவிடப்பட்ட மனித உழைப்பின் பொருளாயதத் தெரிவிப்புகளே என்ற சமீபத்திய விஞ்ஞானக் கண்டுபிடிப்பு உண்மையிலேயே மனித குல வளர்ச்சியின் வரலாற்றில் ஒரு புதிய சகாப்தத்தைக் குறிக்கிறது; ஆனால் உழைப்பின் சமூகத் தன்மையை உற்பத்திப் பொருட்களுக்கேயுரிய பொருள்வயத் தன்மையாக நமக்குத் தோன்றச் செய்கிற மூடுபனியை இது சிறிதும் அகற்றி விடுவதில்லை. நாம் பார்த்துக் கொண்டிருக்கும் குறிப்பிட்ட உற்பத்தி வடிவத்தில், அதாவது சரக்கு உற்பத்தியில், சுயேச்சையாக ஈடுபடுத்தப்படும் தனியார் உழைப்பின் குறிப்பான சமூகத் தன்மை அது மனித உழைப்பாக இருக்கிறதென்ற அடிப்படையில் அந்த உழைப்பின் சகல வகைகளுக்கும் இடையிலான சமத்துவத்தில் அடங்கியுள்ளது. எனவே, இந்தத் தன்மை உற்பத்திப் பொருளில் மதிப்பாக வடிவம் எடுக்கிறது என்ற உண்மையானது, மேற்குறிப்பிட்ட கண்டுபிடிப்பையும் மீறி — காற்றில் அடங்கியுள்ள வாயுக்களை விஞ்ஞானம் கண்டுபிடித்த பின்னரும் காற்றுவெளி மாற்றமடையாமலே நீடிக்கிறது என்ற உண்மையைப் போலவே — எதார்த்தமானதாகவும் இறுதியானதாகவும் உற்பத்தியாளர்களுக்குத் தோன்றுகிறது.

அனைத்துக்கும் முதலாவதாக, தங்களது உற்பத்திப் பொருளுக்குப் பதிலாக வேறு ஒரு உற்பத்திப் பொருள் எவ்வளவு கிடைக்கும்? உற்பத்திப் பொருட்கள் பரிவர்த்தனைக்குரியவையாய் இருக்கும் விகிதங்கள் யாவை? — இந்தக் கேள்வியே உற்பத்தியாளர்கள் சரக்குப் பரிவர்த்தனை செய்து கொள்ளும் போது நடைமுறையில் அவர்களது அக்கறைக்குரியதாகும். இந்த விகிதாசாரங்கள் வழக்கால் குறிப்பிட்ட ஸ்திரத் தன்மையை அடைந்திருக்கும் போது, அவை உற்பத்திப் பொருட்களின் இயல்பிலிருந்து விளைவதாகத் தோன்றுகிறது. எனவே எடுத்துக்காட்டாக, ஒரு இராத்தல் தங்கமும்

[35] எனவே, மதிப்பு என்பது ஆட்களிடையிலான ஓர் உறவு — "La Ricchezzae una ragione tra due persone," — என்று காலியானி கூறும் போது, பொருட்களிடையிலான ஓர் உறவாகத் தெரிகிற ஆட்களிடையிலான ஓர் உறவு என்றும் சேர்த்துச் சொல்லியிருக்க வேண்டும். (காலியானி: Della Moneta, P.221, V.III.of Custodi's collection of "Scrittori Classici Italiani di Economia Politica." Parte Moderna, Milano, 1803.)

ஒரு இராத்தல் இரும்பும், அவற்றின் வெவ்வேறு பௌதிக, இரசாயனப் பண்புகளையும் மீறி சம எடையுள்ளவையாய்த் தோன்றுவது எவ்வளவு இயல்பானதோ, அவ்வளவு இயல்பாகவே ஒரு டன் இரும்பும் இரண்டு அவுன்ஸ் தங்கமும் சம மதிப்புள்ளவையாகத் தோன்றுகின்றன. மதிப்பைப் பெற்றிருத்தல் என்ற தன்மை உற்பத்திப் பொருட்களின் மீது பதிக்கப்பட்டதுமே, அவை மதிப்பின் அளவுகள் என்ற விதத்தில் ஒன்றின் மீதொன்று செயலும் பிரதிச் செயலும் புரிகிற காரணத்தால்தான், அது நிலைத் தன்மை பெறுகிறது. இந்த அளவுகள் உற்பத்தியாளர்களின் மன விருப்பம், முன்னுணர்வு, செயல் ஆகியவற்றைச் சாராமல் தொடர்ந்து மாறுபடுகின்றன. அவர்களே புரியும் சமூகச் செயல் அவர்களுக்குப் பொருட்களின் செயலாகத் தோற்றமளிக்கிறது; அப்பொருட்கள் உற்பத்தியாளர்களால் ஆளப்படுவதற்குப் பதில் உற்பத்தியாளர்களை ஆளுகின்றன. ஒன்றையொன்று சாராமல் செயல்படுகிற, ஆயின் சமுதாய உழைப்புப் பிரிவினையின் தன்னியல்பாய் வளர்ந்த கிளைகளாய் அமைகிற தனியார் உழைப்பின் வெவ்வேறு வகைகள் அனைத்தும் சமுதாயத்துக்குத் தேவைப்படுகிற அளவு வழிப்பட்ட விகிதாசாரங்களாகத் தொடர்ந்து பெயர்க்கப்பட்டு வருகின்றன என்ற விஞ்ஞான உறுதிப்பாடு திரண்டு நிறையும் அனுபவத்திலிருந்தே வரப்பெறுகிறது; சரக்கு உற்பத்தி முழு வளர்ச்சியடைந்த பிறகே இது சாத்தியம். ஏன்? ஏனெனில் உற்பத்திப் பொருட்களிடையிலான தற்செயலான, ஏறியிறங்கி அலைவுற்ற வண்ணமுள்ள பரிவர்த்தனை உறவுகள் அனைத்திற்குமிடையே, அப்பொருட்களின் உற்பத்திக்குச் சமூக வழியில் அவசியமான உழைப்பு நேரமானது ஆட்டிப் படைக்கும் இயற்கை விதியைப் போலத் தன்னை வலுக்கட்டாயமாக நிலைநாட்டிக் கொள்கிறது. ஒரு வீடு தடதடத்து இடிந்து விழுகையில் புவி ஈர்ப்பு விதி தன்னை நிலைநாட்டிக் கொள்வதைப் போன்றதே இது.[36] எனவே, மதிப்பின் பருமனை உழைப்பு நேரத்தால் நிர்ணயிப்பது சரக்குகளின் ஒப்பீட்டு மதிப்புகளில் காட்சி தரும் ஏற்ற இறக்கங்களில் ஒளிந்திருக்கும் இரகசியமாகும். இந்த இரகசியத்தைக் கண்டுபிடித்து விடுவோமானால், உற்பத்திப் பொருட்களுடைய மதிப்புகளது பருமனின் நிர்ணயிப்பிலிருந்து வெறும் தற்செயல் தன்மை என்ற தோற்றம் அடியோடு மறைந்து விடுகிறது; ஆனால் அந்த நிர்ணயிப்பு நடைபெறுகிற முறையை அது எவ்விதத்திலும் மாற்றி விடுவதில்லை.

---

[36] *"கால அலைவட்ட முறையில் ஏற்படும் கொந்தளிப்புகளால் மட்டுமே தன்னை ருசுபித்துக் கொள்கிற ஒரு விதியைப் பற்றி நாம் என்ன நினைப்பது? அது தன் ஆட்சிக்குட்பட்டோரின் அறிவுப் பஞ்சத்தை அடிப்படையாகக் கொண்ட இயற்கை விதியே அன்றி வேறில்லை." (பிரெடெரிக் எங்கெல்ஸ்:* "Umrisse zu einer Kritik der Nationalokonomie," in the "Deutsch-Franzosische Jahrbucher," *ஆசிரியர்கள்: ஆர்னால்டு ரூஜ், கார்ல் மார்க்ஸ், பாரிஸ், 1844.)*

சமூக வாழ்க்கையின் வடிவங்கள் பற்றிய மனிதனின் எண்ணங்களும், ஆதலால் அந்த வடிவங்கள் பற்றிய அவனது விஞ்ஞானப் பகுப்பாய்வும், அவற்றின் மெய்யான வரலாற்று வளர்ச்சியின் பாதைக்கு நேர் எதிரான பாதையை மேற்கொள்கின்றன. காரியம் நடந்த பிறகு தனக்கு முன்னரே தயாராகி விட்ட வளர்ச்சி நிகழ் முறையின் விளைவுகளிலிருந்து அவன் புறப்படுகிறான். உற்பத்திப் பொருட்களை எத்தன்மைகள் சரக்குகளாக்குகின்றனவோ, சரக்குகளின் சுற்றோட்டத்துக்கு எத்தன்மைகளை நிலைநாட்டுவது ஓர் அவசிய முன்னேற்பாடோ, அத்தன்மைகள் இயல்பான, தாமே விளங்கும் சமூக வாழ்க்கை வடிவங்களின் ஸ்திரத் தன்மையை அடைந்த பிறகுதான் மனிதன் அவற்றின் அர்த்தத்தை விரித்துரைக்க முனைகிறான்; அவன் அவற்றின் வரலாற்றுத் தன்மையை விரித்துரைக்க முனைவதில்லை; ஏனெனில் அவனது பார்வையில் அவை மாற்ற முடியாதவை. ஆதலால், மதிப்பினது பருமனின் நிர்ணயிப்புக்கு இட்டுச் சென்றது சரக்குகளின் விலைகள் பற்றிய பகுப்பாய்வுதான்; மதிப்புகள் என்ற அவற்றின் தன்மைகள் நிலைநாட்டப்படுவதற்கு இட்டுச் சென்றது பொதுவில் எல்லாச் சரக்குகளதும் பணவழித் தெரிவிப்புதான். ஆயினும் தனியார் உழைப்பின் சமூகத் தன்மையையும், தனிப்பட்ட உற்பத்தியாளர்களிடையிலான சமூக உறவுகளையும் வெளிப்படுத்துவதற்கு பதில் உள்ளபடியே மறைத்து வைப்பது சரக்குலகின் இறுதி நிலையான இந்தப் பண வடிவமே. துணி ஸ்தூலமற்ற மனித உழைப்பின் சர்வப் பொது அவதாரமாக இருப்பதால் சட்டைகள் அல்லது பாத அணிகள் அதனோடு உறவு கொண்டுள்ளன என நான் கூறும் போது, இக்கூற்றின் அபத்தம் வெளிப்படையாகத் தெரிகிறது. எனினும், சட்டைகள், பாத அணிகள் இவற்றின் உற்பத்தியாளர்கள் அந்தப் பண்டங்களைத் துணியோடு, அல்லது சர்வப் பொதுச் சமதை என்ற விதத்தில் தங்கம் அல்லது வெள்ளியோடு—இரண்டும் ஒன்றே—ஒப்பு நோக்கும் போது, தங்கள் சொந்த தனியார் உழைப்புக்கும் சமுதாயத்தின் கூட்டு உழைப்புக்கும் இடையிலான உறவை அதே அபத்தமான வடிவத்தில்தான் தெரிவிக்கின்றனர்.

முதலாளித்துவ அரசியல் பொருளாதாரத்தின் கருத்தினங்கள் இது போன்ற வடிவங்களையே கொண்டுள்ளன. திட்டமான, வரலாற்று வழியில் நிர்ணயிக்கப்பட்ட ஓர் உற்பத்தி முறையின், அதாவது சரக்கு உற்பத்தியின் நிலைமைகளையும், உறவுகளையும் சமூகச் செல்லுபடித் தன்மையுடன் தெரிவிக்கிற சிந்தனை வடிவங்களாகும் அவை. எனவே சரக்குகளின் மர்மம் முழுவதும், உழைப்பின் உற்பத்திப் பொருட்கள் சரக்குகளின் வடிவத்தை மேற்கொண்டிருக்கும் வரை அவற்றை சூழ்ந்திருக்கும் மந்திர தந்திரம், மாயாஜாலம் அனைத்தும் மற்ற உற்பத்தி வடிவங்களுக்கு நாம் வந்ததுமே மறைந்து போகின்றன.

ராபின்சன் குரூசோவின் அனுபவங்கள் அரசியல் பொருளாதார அறிஞர்களுக்குப் பிடித்தமானதொரு விவாதப்பொருள் என்பதால்,[37] அவனது தீவில் அவன் இருக்கும் நிலையைச் சற்றே பார்ப்போம். அதிகமில்லையென்றாலும் சிற்சில தேவைகளை அவனும் நிறைவு செய்து கொள்ள வேண்டியிருக்கிறது; ஆகவே, கருவிகள், பண்டங்கள் முதலியவற்றைச் செய்வது, ஆடுகளைப் பழக்குவது, மீன் பிடிப்பது, வேட்டையாடுவது போன்ற பல்வேறு வகைப்பட்ட ஓரளவு பயனுள்ள வேலையை அவன் செய்ய வேண்டும். அவனது பிரார்த்தனைகளையும், இன்ன பிறவற்றையும் நாம் கணக்கிலெடுத்துக் கொள்ளவில்லை. ஏனெனில், அவை அவனுக்கு மன மகிழ்ச்சிக்கான வழியாகும்; அவன் அவற்றைப் பொழுது போக்காகக் கருதுகிறான். அவனது வேலை பல்வகைப்பட்டதென்றாலும், அவனது உழைப்பின் வடிவம் எதுவானாலும், ராபின்சன் என்ற ஒரே ஒருவனின் செயல்பாடேயாதலால் அது மனித உழைப்பின் வெவ்வேறு வகைகளாலானதே அன்றி வேறில்லை என்பது அவனுக்குத் தெரியும். தன் உழைப்பின் வெவ்வேறு வகைகளிடையே தன் நேரத்தைச் சரிவரப் பங்கிட்டுக் கொள்ளுமாறு அவசியமே அவனைக் கட்டாயப்படுத்துகிறது. அவனது பொதுவான செயல்பாட்டில் ஒரு வகை வேலை இன்னொரு வகை வேலையை விட அதிக நேரம் எடுத்துக் கொள்கிறதா என்பது அடைய வேண்டிய பயனை அடைவதில் சமாளிக்க வேண்டிய சிரமங்களின் அளவைப் பொறுத்தது. இதை நமது நண்பன் ராபின்சன் சீக்கிரமே அனுபவத்தால் கற்றுக் கொள்கிறான்; சிதைந்த கப்பலிலிருந்து ஒரு கைக் கடிகாரம், பேரேடு, பேனா, மை ஆகியவற்றை மீட்டெடுத்த அவன், அசல் பிரித்தானியனைப் போல கணக்கு எழுதிவைக்கத் தொடங்குகிறான். அவனுக்குச் சொந்தமான பயனுள்ள பொருட்கள், அவற்றின் உற்பத்திக்கு அவசியமான செய்முறைகள், கடைசியாக அந்தப் பொருட்களின் திட்டமான அளவுகளுக்கு சராசரியாக அவனுக்குச் செலவாகியிருக்கும் உழைப்பு நேரம் ஆகியவற்றின் பட்டியல் அவனது கணக்குப் புத்தகத்தில் உள்ளது. ராபின்சனுக்கும் அவனது செல்வமாகிய இந்தப் பொருட்களுக்கும் இடையிலான உறவுகள் அனைத்தும்,

---

[37] ரிக்கார்டோவிடமும் கூட ராபின்சன் குரூசோ பாணியிலான கதைகள் உண்டு. "அவர் ஆதிகால வேட்டைக்காரனையும், ஆதிகால மீனவனையும் உடனடியாக சரக்குகளின் உடைமையாளர்களாக்கி மீனையும் வேட்டைப் பொருளையும் இந்தப் பரிவர்த்தனை - மதிப்புகளில் உழைப்பு நேரம் உள்ளடங்கியுள்ள விகிதாசாரத்தில் பரிவர்த்தனை செய்து கொள்ள வைக்கிறார். இந்த சந்தர்ப்பத்தில் அவர்களது தொழிற் கருவிகளைக் கணக்கிலெடுத்துக் கொள்ள வேண்டியுள்ளது என்ற அளவில், 1817ஆம் ஆண்டில் லண்டன் பங்குச் சந்தையில் நடப்பு உபயோகத்திலிருந்த வருடாந்தர அட்டவணைகளின் கணக்கீட்டை இவர்கள் பிரயோகிக்குமாறு செய்கிற காலக் குளறுபடியும் செய்கிறார். அவர் அறிந்த ஒரே சமூக வடிவம் முதலாளித்துவ வடிவமன்னியில் திரு ஓவனின் இணைகரங்கள் மட்டுமே என்பதாகத் தோன்றுகிறது." (கார்ல் மார்க்ஸ்: "அரசியல் பொருளாதார விமர்சனத்திற்கு ஒரு பங்களிப்பு," பக்கம் 38,39.)

திரு செட்லீ டெய்லருக்கும் கூட சிரமமின்றிப் புரிகிற அளவுக்கு எளிமையாகவும் தெளிவாகவும் உள்ளன. இருப்பினும், மதிப்பின் நிர்ணயிப்புக்கு அத்தியாவசியமான அனைத்தும் அந்த உறவுகளில் அடங்கியுள்ளன.

இப்போது நாம் ஒளியில் பளிச்சிடும் ராபின்சனின் தீவை விட்டு இருளடர்ந்த ஐரோப்பிய மத்திய காலத்துக்குச் செல்வோம். இங்கே சுயேச்சையான மனிதனுக்குப் பதில், ஒவ்வொருவரும் சார்புநிலைக்கு ஆட்பட்டிருப்பதை, பண்ணையடிமைகளையும் பிரபு களையும், பாளையக்காரர்களையும் வேந்தர்களையும், பாமரர் களையும் பாதிரிகளையும் காண்கிறோம். இங்கு ஆளுடைமைச் சுதந்தரமற்ற சார்புநிலை பொருளுற்பத்திக்கான சமூக உறவுகளின் குணக்குறியாக—அந்த உற்பத்தியின் அடிப்படையில் ஒழுங் கமைக்கப்பட்ட ஏனைய வாழ்க்கைத் துறைகளில் இருக்கும் அதே அளவுக்கு—இருக்கிறது. ஆனால் ஆளுடைமைச் சுதந்தரமற்ற சார்பு நிலை சமுதாயத்தின் அடித்தளமாகிற காரணத்தாலேயே, உழைப் பும் அதன் உற்பத்திப் பொருட்களும் அவற்றின் எதார்த்தத்திலிருந்து வேறுபட்ட கற்பனை வடிவத்தை மேற்கொள்ள வேண்டிய அவசியம் ஏதுமில்லை. அவை சமுதாயத்தின் கொடுக்கல் வாங்கல் களில் பொருள்வடிவச் சேவைகள், பொருள்வடிவக் கொடுப்புகள் என்ற உருவத்தை எடுக்கின்றன. இங்கே உழைப்பின் குறிப்பான, இயற்கையான வடிவம்—சரக்கு உற்பத்தியின் அடிப்படையிலான சமுதாயத்தில் இருப்பது போல, அதன் ஸ்தூலமற்ற பொது வடிவமல்ல—உழைப்பின் உடனடிச் சமுதாய வடிவமாகும். சரக்கு உற்பத்தி செய்யும் உழைப்பைப் போலவே கட்டாய உழைப்பும் காலத்தால் முறையாக அளக்கப்படுகிறது; ஆனால் தன் பிரபுவுக்கு ஆற்றுகிற சேவையில், தான் செலவழிப்பது தன் சொந்த உழைப்புச் சக்தியின் திட்டமான அளவையே என்பது ஒவ்வொரு பண்ணை யடிமைக்கும் தெரியும். குருக்களுக்கு அளிக்கப்பட வேண்டிய தட்சணை அவரது அருளாசியை விடவும் பிண்டபூர்வமானதாகும். அப்படியானால், இந்தச் சமுதாயத்தில் வெவ்வேறு வர்க்கங்கள் வகிக்கும் பாத்திரங்கள் குறித்து நாம் என்னதான் நினைத்தாலும், உழைப்பை ஆற்றுகிற தனியாட்களிடையிலான சமூக உறவுகள் எப்படியும் அவர்களது சொந்தப் பரஸ்பர நேரடி உறவுகளாகவே தோன்றுகின்றன; அவை உழைப்பின் உற்பத்திப் பொருட்களிடை யிலான சமூக உறவுகளாக வேடம் பூணவில்லை.

பொதுவிலான உழைப்பு அல்லது நேரடிக் கூட்டுழைப்பிற்கு உதாரணம் காண்பதற்காக, நாகரிக இனங்கள் அனைத்தினதும் வரலாற்றின் நுழைவாயிலில் நாம் காண்கிற, தன்னியல்பாய் வளர்ந்த அந்த வடிவத்துக்குத் திரும்பிச் செல்லத் தேவையில்லை.[38]

---

[38] பொதுச் சொத்து அதன் ஆதிகால வடிவத்தில் குறிப்பாக ஒரு ஸ்லாவோனிய வடிவமே, அல்லது பிரத்தியேகமாகவே கூட ருஷ்ய வடிவமே என்ற பரிகசிக்கத்தக்க

தானியம், கால்நடை, நூல், துணி, உடை ஆகியவற்றை வீட்டு உபயோகத்துக்காக உற்பத்தி செய்கிற விவசாயக் குடும்பத்தின் தந்தைவழிச் சமுதாயத் தொழில்கள் அண்மையதான ஓர் உதாரணமாகும். இந்த வெவ்வேறு பண்டங்கள், குடும்பத்தைப் பொறுத்த வரை, அதன் உழைப்பின் அத்தனை உற்பத்திப் பொருட்களாகும்; ஆனால் தம்மிடையிலே அவை சரக்குகளல்ல. பல்வேறு உற்பத்திப் பொருட்களை விளைவிக்கிற உழவு, கால்நடை வளர்ப்பு, நூற்பு, நெசவு, ஆடை தயாரித்தல் போன்ற உழைப்பின் வெவ்வேறு வகைகள், தம்மிலேயும் அவை உள்ளவாறும், நேரடிச் சமுதாயச் செயல்களாக உள்ளன; ஏனெனில் சரக்கு உற்பத்தியின் அடிப்படையிலான ஒரு சமுதாயத்தைப் போன்றே தன்னியல்பாய் வளர்ந்த உழைப்புப் பிரிவினை அமைப்பைப் பெற்றிருக்கும் குடும்பத்தின் செயல்கள் அவை. குடும்பத்தினுள்ளேயே வேலைப் பங்கீடும், அநேக உறுப்பினர்களின் உழைப்பு நேரத்தை முறைப்படுத்துவதும் பருவங்களுக்கேற்ப வேறுபடுகிற இயற்கை நிலைமைகளைப் பொறுத்திருப்பது போலவே, வயது, பால் வேறுபாடுகளையும் பொறுத்துள்ளன. ஒவ்வொரு தனியாளின் உழைப்புச் சக்தியும், அதன் இயல்பாலேயே, இங்கே குடும்பத்தின் உழைப்புச் சக்தி முழுவதன் திட்டமான ஒரு பகுதியாக மட்டும் இயங்குகிறது; எனவே தனியாளது உழைப்புச் சக்தியின் செலவீட்டை அது நீடிக்கும் காலத்தைக் கொண்டு அளவிடுவது, அதன் இயல்பாலேயே அவர்களது உழைப்பின் சமூகத் தன்மையாக இங்கே தோன்றுகிறது.

மாற்றத்திற்காக வேண்டி, உற்பத்திச் சாதனங்களைப் பொதுவில் கொண்டு தங்கள் வேலையைச் செய்கிற, வெவ்வேறு தனியாட்கள் அனைவரின் உழைப்புச் சக்தியும் சமுதாயத்தின் ஒன்றுசேர்க்கப்பட்ட உழைப்புச் சக்தியாக உணர்வுபூர்வமாய்ப் பிரயோகிக்கப்படுகிற சுதந்தர மனிதர்களின் கூட்டுச் சமூகத்தை இப்போது மனத்திரையில் சித்திரித்துக் கொள்வோம். ராபின்சனது உழைப்பின் விசேஷத் தன்மைகள் அனைத்தும், அவை தனி மனிதனுடையவை என்பதற்கு பதில் சமுதாயத்தினுடையவை என்ற வேறுபாட்டுடன், இங்கே திரும்பக் காணப்படுகின்றன. அவனால் உற்பத்தி செய்யப்

---

அனுமானம் சமீப காலத்தில் பரவியிருக்கிறது. ரோமானியர்கள், டூட்டானியர்கள், கெல்டுகள் ஆகியோர் மத்தியில் நிலவியிருக்கும் ஆதிகால வடிவம் இது என்பதை நாம் நிரூபிக்க முடியும்; இந்த நாள் வரையிலும் கூட எண்ணற்ற உதாரணங்களை — அவை சிதிலங்களே என்றாலும் — இந்தியாவில் காண்கிறோம். ஆதிகாலப் பொதுச் சொத்தின் வெவ்வேறு வடிவங்களிலிருந்து அதன் குலைவின் வெவ்வேறு வடிவங்கள் வளர்த்தெடுக்கப்பட்டிருப்பது எவ்வாறு என்பதை பொதுச் சொத்தின் ஆசிய வடிவங்களையும், குறிப்பாக இந்திய வடிவங்களையும் மேலும் பூரணமாகப் பயில்வது காட்டும். இவ்வாறு, எடுத்துக்காட்டாக ரோமானிய, டூட்டானிய தனிச் சொத்தின் பல்வேறு மூல மாதிரிகள் இந்தியப் பொதுச் சொத்தின் வெவ்வேறு வடிவங்களிலிருந்து ஊகிக்கத் தக்கவையாகும். (கார்ல் மார்க்ஸ், ''அரசியல் பொருளாதார விமர்சனத்திற்கு ஒரு பங்களிப்பு,'' பக்கம்10.)

பட்ட ஒவ்வொன்றும் பிரத்தியேகமாக அவனது தனிப்பட்ட உழைப் பின் விளைவே; எனவே அது அவனுக்குப் பயனுள்ள பொருள் என்பது வெளிப்படை. மேற்கூறிய சமுதாயத்தின் மொத்த உற்பத் திப் பொருள் சமுதாய உற்பத்திப் பொருளாகும். ஒரு பகுதி புதிய உற்பத்திச் சாதனங்களாகப் பயன்படுகிறது; சமுதாயத்துக்குரியதாய் இருக்கிறது. ஆனால், இன்னொரு பகுதி சமுதாய உறுப்பினர் களால் வாழ்வுச் சாதனங்களாக நுகரப்படுகிறது. ஆதலால் அவர் களிடையே இந்தப் பகுதியை வினியோகிப்பது அவசியமாகும். இந்த வினியோகத்தின் வழிமுறை சமுதாயத்தின் உற்பத்தி ஒழுங்கமைப்புக் கேற்பவும், உற்பத்தியாளர்கள் அடைந்துள்ள வரலாற்று வளர்ச்சி நிலைக்கேற்பவும் வேறுபடும். வாழ்வுச் சாதனங்களில் ஒவ்வொரு தனிப்பட்ட உற்பத்தியாளரின் பங்கும் அவரது உழைப்பு நேரத்தால் நிர்ணயிக்கப்படுவதாக நாம் அனுமானித்துக் கொள்ளப் போவது சரக்கு உற்பத்திக்கான ஒப்புமையின் நிமித்தம் மட்டுமே. அப்போது உழைப்பு நேரம் இரட்டைப் பாத்திரம் வகிக்கும். திட்டவட்டமான ஒரு சமுதாயத் திட்டத்துக்கேற்ப அதைப் பகிர்வதானது, செய்ய வேண்டிய வேலையின் வெவ்வேறு வகைகளுக்கும் சமுதாயத்தின் பல்வேறு தேவைகளுக்கும் இடையில் முறையான விகிதாசாரத்தை நிலவச் செய்கிறது. மறு புறம், பொது உழைப்பில் ஒவ்வொரு தனியாளும் ஏற்றுள்ள பகுதிக்கும், மொத்த உற்பத்திப் பண்டத்தில் சொந்த நுகர்வுக்குரிய பகுதியிலான அவரது பங்கிற்கும் ஓர் அளவுகோலாகவும் அது பயன்படுகிறது. தனிப்பட்ட உற்பத்தி யாளர்களின் சமூக உறவுகள்—அவர்களது உழைப்பு தொடர் பாகவும், அதன் உற்பத்திப் பொருட்கள் தொடர்பாகவும்—இங்கே முற்றிலும் எளிமையாகவும், புரிந்து கொள்ளத் தக்கவையாகவும் உள்ளன; உற்பத்தி தொடர்பாக மட்டுமின்றி, வினியோகம் தொடர் பாகவும் கூட, இவ்வாறே உள்ளன.

சமய உலகம் எதார்த்த உலகத்தின் பிரதிபிம்பமே. சரக்கு உற்பத்தியின் அடிப்படையிலான சமுதாயத்தில் உற்பத்தியாளர்கள் பொதுவாகத் தங்கள் உற்பத்திப் பொருட்களைச் சரக்குகளாகவும் மதிப்புகளாகவும் கருதுகிறார்கள்; இவ்விதம் தங்கள் தனிப்பட்ட தனியார் உழைப்பை ஒருபடித்தான மனித உழைப்பின் நியமமாகப் பெயர்த்து விடுகிறார்கள். சரக்கு-உற்பத்தியின் அடிப்படையிலான ஒரு சமுதாயத்துக்கு, சூக்கும மனித வழிபாட்டுக் கொள்கையைக் கொண்ட கிறிஸ்தவ சமயம்—இன்னும் குறிப்பாக, முதலாளித் துவக் காலத்தில் அதன் வளர்ச்சிகளான புராட்டெஸ்டண்ட் சமயம், ஆதியிறைமைவாதம் போன்றவற்றின் உருவில்—மிகப் பொருத்த மான சமய வடிவமாகும். பண்டைய ஆசியவழி உற்பத்தி முறை யிலும், மற்ற பண்டைய உற்பத்தி முறைகளிலும், உற்பத்திப் பொருட்கள் சரக்குகளாக மாற்றமடைவதும், எனவே மனிதர்கள் சரக்கு உற்பத்தியாளர்களாக மாற்றமடைவதும், இரண்டாந்தரமான

இடத்தையே வகிக்கின்றன என்பதைக் காண்கிறோம்; ஆயினும் புராதன சமுதாயங்கள் சிதைவை நெருங்கி வரவர அதன் முக்கியத்துவமும் அதிகரிக்கிறது. வாணிப நாடுகள் என்று கூறத்தக்க நாடுகள் — இண்டர்முண்டியாவில் எபிக்யூரசின் தெய்வங்களைப் போல, அல்லது போலந்திய சமுதாயத்தின் இடுக்குகளில் யூதர்களைப் போல — பண்டைய உலகில் அதன் இடைவெளிகளில் மட்டுமே உள்ளன. அந்தப் பண்டைக்கால சமுதாய உற்பத்தியமைப்புகள் முதலாளித்துவ சமுதாயத்துடன் ஒப்புநோக்கின் மிக எளிமையானவையும், தெளிவானவையும் ஆகும். ஆனால் ஆதிப் பழங்குடிச் சமுதாயத்தில் சக மனிதர்களுடன் தன்னைப் பிணைக்கிற தொப்புள் கொடியை இன்னமும் துண்டித்துக் கொள்ளாத தனி மனிதனின் முதிர்ச்சியடையாத வளர்ச்சியையோ, அல்லது நேரடியான அடிமையுறவுகளையோ அவை அடிப்படையாகக் கொண்டுள்ளன. உழைப்பினது உற்பத்தித் திறனின் வளர்ச்சி ஒரு தாழ்ந்த நிலைக்கு மேல் உயர்ந்திராத போதும், எனவே மனிதனுக்கும் மனிதனுக்கும் இடையிலான, மனிதனுக்கும் இயற்கைக்கும் இடையிலான பொருளாயத வாழ்க்கை வட்டத்துக்குட்பட்ட சமூக உறவுகள் அதற்கேற்பக் குறுகலாக இருக்கும் போதும்தான் அவை பிறக்கவும் ஜீவிக்கவும் முடியும். இந்தக் குறுகிய தன்மை புராதன இயற்கை வழிபாட்டிலும், பரந்துபட்ட சமயங்களின் ஏனைய அமிசங்களிலும் பிரதிபலிக்கிறது. எவ்வாறாயினும், அன்றாட வாழ்க்கையின் நடைமுறை உறவுகள் சக மனிதர்கள் தொடர்பாகவும், இயற்கை தொடர்பாகவும் முற்றிலும் புரிந்து கொள்ளத்தக்க, அறிவுக்குகந்த உறவுகளை மட்டுமே மனிதனுக்கு வழங்கும் போதுதான் எதார்த்த உலகத்தின் சமயப் பிரதிபிம்பம் இறுதியாக மறைந்து போக முடியும்.

பொருளுற்பத்தி நிகழ்முறையின் அடிப்படையிலான சமுதாய வாழ்க்கை நிகழ்முறையானது சுதந்தரமாக ஒன்றுசேர்ந்த மனிதர்கள் நிகழ்த்தும் உற்பத்தியாகக் கருதப்பட்டு, தீர்மானிக்கப்பட்ட திட்டத்துக்கேற்ப அவர்களால் உணர்வுபூர்வமாக இயக்கப்படும் நிலை வரும் வரை தன் மாயத் திரையை நீக்கி விடுவதில்லை. ஆயினும் சமுதாயம் இந்நிலையை அடைய குறிப்பிட்ட பொருளாயத அடித்தளம் அல்லது வாழ்க்கை நிலைமைகளின் தொகுப்பு தேவைப்படுகிறது. இவையோ ஒரு நீண்ட, வேதனை வாய்ந்த வளர்ச்சி நிகழ்முறையின் தன்னியல்பான விளைவாகும்.

உள்ளபடியே, மதிப்பையும் அதன் பருமனையும் அரசியல் பொருளாதாரம் — எவ்வளவுதான் அரைகுறையாக என்றாலும்[39]

[39] மதிப்பின் பருமனை ரிக்கார்டோ பகுத்தாய்ந்திருப்பதன் போதாமை — அவரது பகுப்பாய்வு ஏனையவற்றைக் காட்டிலும் மிகச் சிறந்ததாகும் — இந்த நூலின் 3ஆவது, 4ஆவது பாகங்களிலிருந்து தெரிய வரும். பொதுவாக மதிப்பைப் பொறுத்த வரை, ஓர் உற்பத்திப் பொருளின் மதிப்பில் காட்சி தரும் உழைப்புக்கும், அந்த உற்பத்திப்

—பகுத்தாய்ந்திருக்கிறது; இந்த வடிவங்களுள் பொதிந்திருப்பதென்ன என்பதை அது கண்டுபிடித்திருக்கிறது. ஆனால், உழைப்பு அதன் உற்பத்திப் பொருளின் மதிப்பாலும், உழைப்பு நேரம் அந்த மதிப்பின் பருமனாலும் குறிக்கப்படுவது ஏன் என்ற கேள்வியை அது ஒரு முறை கூடக் கேட்டதில்லை.[40] உற்பத்தி நிகழ்முறை மனிதனால் கட்டுப்படுத்தப்படுவதற்குப் பதிலாக அவன் மீது ஆட்சி செலுத்துகிற ஒரு சமுதாய முறைக்குச் சொந்தமான சூத்திரங்கள் என்று தம்மீது ஐயமற்ற விதத்தில் முத்திரை தாங்கியிருக்கும் இந்தச்

---

பொருளின் பயன்-மதிப்பில் காட்சி தரும் அதே உழைப்புக்கும் இடையே தெளிவாகவும் முழு உணர்வுடனும் எவ்விடத்திலும் வித்தியாசப்படுத்திப் பார்ப்பதில்லை என்பது அரசியல் பொருளாதாரத்தின் தொல்சீர் மரபிற்குள்ள பலவீன அமிசமாகும். இவ் வேறுபடுத்தல் நடைமுறையில் செய்யப்படுகிறது என்பது உண்மையே; ஏனெனில் இம்மரபினர் உழைப்பை, ஒரு நேரத்தில் அதன் அளவு வழிப்பட்ட அமிசத்திலும், இன்னொரு நேரத்தில் அதன் பண்பு வழிப்பட்ட அமிசத்திலும் நோக்குகின்றனர். ஆனால், உழைப்பின் பல்வேறு வகைகளுக்கிடையிலான வேறுபாடு முற்றிலும் அளவு வழிப்பட்டதாகக் கருதப்படும் போது, அவற்றின் பண்பு வழிப்பட்ட ஓர்மை அல்லது சமத்துவம், எனவே ஸ்தூலமற்ற மனித உழைப்பாக அவை பெயர்க்கப்படுவது உட்கிடையாகக் குறிக்கப்படுகிறது என்ற எண்ணமே அவர்களுக்கு இல்லை. உதாரணமாக பின்வரும் கூற்றில் தெஸ்தூத் டெ திரேசியுடன் தாம் உடன்படுவதாக ரிக்கார்டோ அறிவிக்கிறார். ''நமது உடல் சக்திகளும் அறநெறிச் சக்திகளும் மட்டுமே நமது சுயமான செல்வங்கள் என்பது நிச்சயமாகையால், அந்தச் சக்திகளின் பிரயோகமே, ஏதேனும் ஒரு வகை உழைப்பே நமது ஒரே மூலக் கருவூலமாகும்; எப்போதுமே இந்தப் பிரயோகிப்பிலிருந்துதான், நாம் செல்வங்கள் என்று அழைக்கிறவையெல்லாம் படைக்கப்படுகின்றன....அவையனைத்தும் அவற்றைப் படைத்திருக்கும் உழைப்பையே குறிக்கின்றன, அவற்றுக்கு ஒரு மதிப்பு இருந்தால், அல்லது இரண்டு வித்தியாசமான மதிப்புகள் இருந்தாலும் கூட, அவை எதிலிருந்து தோன்றுகின்றனவோ அந்த உழைப்பின் மதிப்பிலிருந்தே அவற்றைப் பெற முடியும் என்பதும் நிச்சயம்.'' (ரிக்கார்டோ, ''அரசியல் பொருளாதாரத்தின் கோட்பாடுகள்,'' 3ஆம் பதிப்பு, லண்டன், 1821, பக்கம் 334.) தெஸ்தூத்தின் சொற்கள் மீது தன் சொந்த, இன்னும் ஆழ்ந்த விளக்கத்தை ரிக்கார்டோ சேர்க்கிறார் என்பதை மட்டுமே நாம் இங்கே சுட்டிக் காட்டுவோம். ஒரு புறம் செல்வமாக அமையும் அனைத்துமே அவற்றைப் படைக்கிற உழைப்பைக் குறிக்கின்றன; ஆனால் மறு புறம் அவை அவற்றின் ''இரு வேறு மதிப்புகளை'' (பயன்-மதிப்பையும் பரிவர்த்தனை-மதிப்பையும்) ''உழைப்பின் மதிப்பிலிருந்து'' ஈட்டுகின்றன என்பதையே தெஸ்தூத் உண்மையில் இங்கு சொல்கிறார். இவ்வாறு, ஒரு சரக்கின் (இங்கே உழைப்பின்) மதிப்பை, ஏனையவற்றின் மதிப்புகளை நிர்ணயிக்கும் பொருட்டு அனுமானித்துக் கொள்கிற கொச்சைப் பொருளாதார அறிஞர்களின் மாமூலான பிழையில் அவர் வீழ்ந்து விடுகிறார். ஆனால், உழைப்பானது (உழைப்பின் மதிப்பன்று) பயன்-மதிப்பு, பரிவர்த்தனை-மதிப்பு இரண்டிலுமே உருக்கொண்டுள்ளதென அவர் கூறியிருந்தால் எப்படியோ அப்படியே ரிக்கார்டோ புரிந்து கொள்கிறார். ஆயினும், ரிக்கார்டோ ''மதிப்பும் செல்வங்களும்—அவற்றின் வித்தியாசமான குணாதிசயங்கள்'' என்ற அத்தியாயம் முழுவதையும் ஜே.பி.ஸே என்பவரின் அற்பக் கூற்றுகள் பற்றிய பிரயாசை மிக்க பரிசீலனைக்கே ஒதுக்கி விடுகிறார்; ஓர் இரட்டை உருவைப் பெற்றிருக்கும் உழைப்பின் இரட்டைத் தன்மையை அந்த அளவுக்கு சொற்பமாகவே கவனிக்கிறார். முடிவில், உழைப்பு மதிப்பின் ஊற்றுக்கண்ணாக இருக்கிறது என்பதில் ஒரு புறம் தன்னோடும், மதிப்பெனும் கருத்து தொடர்பாக மறு புறம் மூா. ப. ஸேயோடும் தெஸ்தூத் உடன்படுகிறார் என்பதைக் கண்டு அவர் பிரமித்துப் போகிறார்.

40 தொல்சீர் அரசியல் பொருளாதாரம் சரக்குகளையும், குறிப்பாக அவற்றின் மதிப்பையும் பகுத்தாய்ந்தது. ஆனால், மதிப்பின் எவ்வடிவம் மதிப்பைப் பரிவர்த்தனை-மதிப்பாக மாற்றுகிறது என்பதை இப்பகுப்பாய்வின் மூலம் கண்டறிவதில்

சூத்திரங்கள் உற்பத்தித் திறனுள்ள. உழைப்பைப் போலவே இயற்கையால் விதிக்கப்பட்ட வெளிப்படையான அவசியம் என முதலாளித்துவ அறிவாளிக்குத் தோன்றுகின்றன. எனவே, முதலாளித்துவ வடிவத்துக்கு முற்பட்ட சமுதாயப் பொருளுற்பத்தி வடிவங்கள், முதலாளி வர்க்கத்தால் நோக்கப்படுவது கிறித்துவத் துக்கு முற்பட்ட சமயங்கள் திருச்சபைத் தந்தைகளால் நோக்கப்பட்ட அதே விதத்தில்தான்.[41]

---

எக்காலத்திலும் அது வெற்றி பெறவில்லை. இது தொல்சீர் அரசியல் பொருளாதாரத் தின் முக்கியக் குறைபாடுகளில் ஒன்றாகும். தொல்சீர் மரபின் மிகச் சிறந்த பிரதிநிதி களான ஆதாம் ஸ்மித்தும், ரிக்கார்டோவும் கூட மதிப்பின் வடிவத்தை முக்கியத்துவமற்ற ஒன்றாக, சரக்குகளின் உள்ளார்ந்த இயல்புடன் தொடர்பேதும் இல்லாததாகக் கருதுகின்றனர். இதற்குக் காரணம் மதிப்பின் பருமனைப் பகுத்தாய்வதில் அவர்கள் முற்றும் மூழ்கி விடுகிறார்கள் என்பது மட்டுமன்று. காரணம் இன்னும் ஆழமானது. உழைப்பினது உற்பத்திப் பொருளின் மதிப்பு வடிவமென்பது முதலாளித்துவப் பொருளுற்பத்தியில் உற்பத்திப் பொருள் மேற்கொள்கிற ஸ்தூலமற்ற வடிவம் என்பதோடு சர்வப் பொது வடிவமும் ஆகும்; அது முதலாளித்துவப் பொருளுற்பத்தியை சமுதாயப் பொருளுற்பத்தியின் குறிப்பிட்ட இனமாக முத்திரையிட்டு, இவ்விதம் அதற்குரிய வரலாற்றுத் தனித் தன்மையைப் பெறச் செய்கிறது. அப்படியானால், இந்த உற்பத்தி முறைமை நாம் சகல சமுதாய முறைகளுக்கும் உரியதாய், சாசுவதமான ஒன்றாய், இயற்கையால் நிலைநிறுத்தப்பட்ட ஒன்றாய்க் கொண்டு ஆராய்வோமானால், மதிப்பு வடிவத்துக்கும், ஆதலால் சரக்கு வடிவத்துக்கும், மேற்கொண்டு அதன் வளர்ச்சிகளாய் விளங்கும் பண வடிவம், மூலதன வடிவம் முதலானவற்றுக்கும் உரிய இன வழிப்பட்ட தனித் தன்மைகளைத் தவிர்க்க முடியாத வகையில் கவனியாது ஒதுக்கவே செய்கிறோம். இதன் பயனாய், மதிப்பின் பருமனுக்கு அளவையாக உழைப்பு நேரம் இருப்பது குறித்துப் பூரணமாக உடன்பட்டிருக்கும் பொருளாதார அறிஞர்கள் பொதுச் சமைதையின் செம்மையுற்ற வடிவமான பணம் குறித்து முரண்பட்டு மோதுகிற அதிவினோதக் கருத்துகளைக் கொண்டிருக்கக் காண்கிறோம். பணம் பற்றிய மாமூல் இலக்கணங்கள் சிறிதும் பொருந்தாத துறையாகிய வங்கித் தொழிலை அவர்கள் பரிசீலிக்க முற்பட்டதுமே இது பளிச்செனத் தெரிகிறது. மதிப்பை ஒரு சமூக வடிவமாக மட்டுமே, அல்லது இன்னும் சரியாகச் சொன்னால், அந்த வடிவத்தின் பொருளுருவில்லா மாயையாக மட்டுமே பார்க்கிற புத்துயிர் பெற்ற வாணிப ஊக்கக் கொள்கையின் (கானில் முதலானோர்) உதயத்துக்கு இது இட்டுச் சென்றது. கொச்சைப் பொருளாதாரம் தோற்றங்களை மட்டுமே பரிசீலிக்கிறது, விஞ்ஞானவழிப் பொருளா தாரத்தால் நெடுநாட்களுக்கு முன்பே வழங்கப்பட்ட விவரங்களை ஓயாமல் அசை போடுகிறது, எடுப்பாய்த் தெரியும் புலப்பாடுகளுக்கு நம்பத்தக்க விளக்கங்களை அன்றாட முதலாளித்துவ உபயோகத்துக்காக அங்கே காண முயல்கிறது; ஆனால் மற்றபடி, சுய திருப்தி கொண்ட முதலாளிகள் தங்கள் சொந்த உலகு தொடர்பாக— அவர்களுக்குச் சாத்தியமான உலகுகள் அனைத்திலும் மிகச் சிறந்த அவ்வுலகு தொடர்பாக—கொண்டுள்ள சலிப்புற்ற கருத்துகளைப் பகட்டுப் புலமையோடு முறைப் படுத்துவதுடனும், சாசுவத உண்மைகளாகப் பிரகடனப்படுத்துவதுடனும் நின்று விடுகிறது. இந்தக் கொச்சைப் பொருளாதாரத்திற்கு நேர்மாறான விதத்தில், வி. பெட்டியின் காலமுதற்கொண்டு முதலாளித்துவ சமூகத்தின் மெய்யான உற்பத்தி உறவுகளை ஆராய்ந்திருக்கும் பொருளாதாரமே தொல்சீர் அரசியல் பொருளாதாரம் [classical Political Economy] ஆகும் என்பதை இங்கே முற்றாகவும், முடிவாகவும் குறிப்பிட விரும்புகிறேன்.

41 "பொருளாதார அறிஞர்களுக்கென்று ஒரு தனி வழி உண்டு. அவர்களைப் பொறுத்த வரை செயற்கை அமைப்புகள், இயற்கை அமைப்புகள் என்ற இரு வகை அமைப்புகள்தாம் உண்டு. பிரபுத்துவத்தின் அமைப்புகள் செயற்கை அமைப்புகளாகும்,

சரக்குகளில் உள்ளார்ந்துள்ள மாய்மாலத்தால் அல்லது உழைப்பின் சமூகக் குணக்குறிகளின் புறத் தோற்றத்தால் சில பொருளாதார அறிஞர்கள் எந்த அளவுக்கு ஏமாற்றப்படுகிறார்கள் என்பது, பரிவர்த்தனை-மதிப்பு அமைவதில் இயற்கை வகிக்கிற பாத்திரம்

---

முதலாளித்துவத்தின் அமைப்புகள் இயற்கை அமைப்புகளாகும். இதில் அவர்களுக்கும் இறையியலாளர்களுக்கும் வேறுபாடில்லை; இறையியலாளர்கள் சமயத்தில் இரு வகை இருப்பதாய்ச் சொல்கின்றனர். தமதல்லாத எல்லா சமயங்களுமே மனிதனின் கண்டு பிடிப்பு, தமது மட்டுமே கடவுளிடமிருந்து வந்தது என்கின்றனர்....இவ்வாறு, வரலாறு இதற்கு முன்பு இருந்தது, இனிமேல் அப்படியொன்று இருக்காது என்பர்.'' (கார்ல் மார்க்ஸ், தத்துவத்தின் வறுமை. புருதோன் எழுதிய வறுமையின் தத்துவம் என்ற நூலுக்கு பதில், 1847, பக்கம் 113.) பண்டைக்கால கிரேக்கர்களும் ரோமானியர்களும் கொள்ளையடித்தே வாழ்ந்தனர் என்று பாஸ்தியா கற்பனை செய்து கொள்வது உண்மையிலேயே கேலிக்குரியது. ஆனால், மக்கள் பல நூற்றாண்டு காலமாகக் கொள்ளையடிக்கும் போது அவர்கள் கைப்பற்றுவதற்கு ஏதாவது எப்போதுமே இருக்க வேண்டும்; கொள்ளைப் பொருட்கள் மேலும் மேலும் தயாரிக்கப்பட வேண்டும். கிரேக்கர்களுக்கும், ரோமானியர்களுக்கும் கூட ஏதோ ஒரு பொருளுற்பத்தி நிகழ்முறை இருந்தது. ஆதலால், நமது நவீன கால உலகத்தின் பொருளாயத அடிப்படையாக முதலாளித்துவப் பொருளாதாரம் அமைவது போலவே, அவர்களது உலகத்தின் பொருளாயத அடிப்படையாக அமைந்த ஒரு பொருளாதாரம் அவர்களுக்கிருந்தது என்பது தெரிய வரும். அல்லது ஒரு கால், அடிமைத்தனத்தின் அடிப்படையிலான ஓர் உற்பத்தி முறை கொள்ளையமைப்பை அடிப்படையாகக் கொண்டது என்ற பொருளில் பாஸ்தியா சொல்கிறார் போலும். அப்படியானால் அவர் ஆபத்தினுள் அடியெடுத்து வைக்கிறார். அரிஸ்டாட்டில் போன்ற மாபெரும் சிந்தனையாளர் அடிமையுழைப்பை மதிப்பிட்டதில் தவறிழைத்தார் என்றால், பாஸ்தியா போன்ற குட்டிப் பொருளாதார அறிஞர் கூலி உழைப்பு பற்றிச் செய்த மதிப்பீடு சரியாக இருக்க முடியுமா? அரசியல் பொருளாதார விமர்சனத்திற்கு ஒரு பங்களிப்பு என்ற எனது நூல் குறித்து அமெரிக்காவில் வெளிவரும் ஜெர்மன் பத்திரிகை ஒன்று எழுப்பியுள்ள ஆட்சேபணைக்குச் சுருக்கமாகப் பதிலளிக்க இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொள்கிறேன். ஒவ்வொரு தனி வகை உற்பத்தி முறையும், அதற்கொத்த சமூக உறவுகளும், சுருங்கச் சொல்லின், சமுதாயத்தின் பொருளாதாரக் கட்டுமானம் [economic structure] என்பது, நீதி இயல் மற்றும் அரசியல் மேற்கட்டுமானம் [political superstructure] எழுப்பப்பட்டிருப்பதற்கான உண்மை அடிப்படையாகும், திட்டமான சமுதாயச் சிந்தனை வடிவங்கள் அவ்வடிப்படைக்கேற்ப அமைகின்றன என்ற என் கருத்து, உற்பத்தி முறை பொதுவாகச் சமுதாய, அரசியல், அறிவுலக வாழ்க்கையின் தன்மையை நிர்ணயிக்கிறது என்ற என் கருத்து—இதெல்லாம் பொருளாயத நலன்கள் மேலிடம் வகிக்கும் நமது காலத்துக்கு மிகவும் உண்மையாகும், ஆனால் கத்தோலிக்கக் கொள்கை கோலோச்சிய மத்திய காலத்துக்கோ அரசியலின் கை ஓங்கியிருந்த ஏதென்ஸ், ரோமாபுரி ஆகியவற்றுக்கோ இது உண்மையன்று என்பது அப்பத்திரிகையின் மதிப்பீடாகும். முதலாவதாக, மத்திய காலம் பற்றியும், பண்டைய உலகம் பற்றியுமான இந்தப் பழகித் தேய்ந்த சொற்றொடர்கள் வேறு யாருக்கும் தெரியாது என்று நினைப்பது வேடிக்கைதான். எப்படியானாலும், மத்திய காலம் கத்தோலிக்கக் கொள்கையை உட்கொண்டோ, பண்டைய உலகம் அரசியலை உட்கொண்டோ வாழ முடியாது என்பது தெளிவு. மாறாக, இங்கே அரசியலும், அங்கே கத்தோலிக்கக் கொள்கையும் முக்கியப் பாத்திரம் வகித்தது ஏன் என்பதை விளக்குவது அவர்கள் எதன் வாயிலாக ஜீவனம் பெற்றார்களோ அந்த முறையே. மற்றபடி, உதாரணமாக, ரோமானியக் குடியரசின் இரகசிய வரலாறு என்பது அதன் நிலச் சொத்தின் வரலாறே என்பதை அறிந்திருக்க, அக்குடியரசின் வரலாற்றுடன் மேலோட்டமான பரிச்சயமே போதும். மறுபுறம், வீரத்திருத்தகைமை [knight errantry] சமுதாயத்தின் எல்லாப் பொருளாதார வடிவங்களுக்கும் ஏற்றது என்று தவறாகக் கற்பனை செய்து கொண்டதற்காக நெடுங்காலத்துக்கு முன்பே டான் குவிக்சாட்டுக்குத் தண்டனை கிடைத்தது.

சம்பந்தமான புளித்துப் போன சர்ச்சையாலும், மற்ற வழிகளிலும் புலப்படுகிறது. பரிவர்த்தனை—மதிப்பென்பது ஒரு பொருளில் ஈடுபடுத்தப்பட்டுள்ள உழைப்பின் அளவைத் தெரிவிக்கும் திட்டமான சமூகத் தெரிவிப்பு முறை ஆகுமென்பதால், பரிவர்த்தனையின் போக்கை நிர்ணயிப்பதில் போலவே இதிலும் இயற்கைக்குப் பங்கேதுமில்லை.

உற்பத்திப் பொருள் சரக்கின் வடிவத்தை மேற்கொள்வது அல்லது நேரடியாகப் பரிவர்த்தனைக்கென்றே உற்பத்தி செய்யப்படுவது எம்முறையிலோ அவ்வுற்பத்தி முறையே முதலாளித்துவப் பொருளுற்பத்தியின் மிகப் பொதுவான, ஆரம்பக் கருநிலையிலுள்ள வடிவமாகும். எனவே, இப்போதெல்லாம் இருப்பது போல முதன்மையான விதத்திலும் குணக்குறியான விதத்திலும் இல்லையென்றாலும், வரலாற்றில் ஆரம்ப காலத்திலேயே அது தோற்றமெடுக்கிறது. ஆகவே அதன் மாய்மாலத் தன்மையின் உண்மையைக் கண்டறிவது ஒப்பளவில் எளிதாகும். ஆனால் இன்னும் ஸ்தூலமான வடிவங்களுக்கு நாம் வரும் போது, தோற்ற அளவிலான இந்த எளிமை கூட மறைந்து போய் விடுகிறது. பணப் பொருளாதாரத்தின் [monetary system] பிரமைகள் எங்கிருந்து வந்தன? பணமாகப் பயன்படும் தங்கமும், வெள்ளியும் அதன் பார்வையில் உற்பத்தியாளர்களிடையிலான சமூக உறவைக் குறிக்காமல், விசித்திரமான சமூகக் குணங்களுடன் கூடிய இயற்கைப் பொருட்களாகவே இருந்தன. பணப் பொருளாதாரத்தை இத்தகைய இகழ்ச்சியுடன் நோக்குகிற நவீன அரசியல் பொருளாதாரம் மூலதனத்தைப் பற்றி எடுத்துரைக்கும் போதெல்லாம், அதன் மூட நம்பிக்கை வெட்ட வெளிச்சமாகவில்லையா? நில வாடகை வளர்வது மண்ணிலிருந்தே, சமுதாயத்திலிருந்தன்று என்ற பிசியோக்கிராட்டுகளின் பிரமையை அரசியல் பொருளாதாரம் ஒதுக்கித் தள்ளி எவ்வளவு காலம் ஆயிற்று?

ஆனால், பின்னர் வரப் போவதைப் பற்றிக் கூறாமல் இப்போதே சரக்கு வடிவத்துக்குத் தொடர்புள்ள இன்னும் ஓர் உதாரணத்தோடு நிறுத்திக் கொள்வோம். சரக்குகள் தாமே பேச முடியுமானால், அவை கூறும்: எங்கள் பயன்—மதிப்பு மனிதர்களுக்கு சிரத்தைக்குரியதாக இருக்கலாம். அது பொருட்கள் என்ற விதத்தில் எங்களின் பகுதியன்று. ஆயின் பொருட்களென்ற விதத்தில் எங்களுக்குச் சொந்தமாயிருப்பது எங்களது மதிப்பே. சரக்குகள் என்ற விதத்தில் எங்களது இயற்கையான உறவாடல் அதை நிரூபிக்கிறது. நாங்கள், ஒன்று மற்றதன் பார்வையில் பரிவர்த்தனை-மதிப்புகளே அன்றி வேறில்லை. இப்போது பொருளாதார அறிஞரின் வாய் மூலமாக அந்தச் சரக்குகள் எப்படிப் பேசுகின்றன என்பதைக் கவனியுங்கள். ''மதிப்பு'' — (அதாவது பரிவர்த்தனை-மதிப்பு) ''பொருட்களின் குணமாகும், மனிதனின்

செல்வங்களாகும்'' — (அதாவது பயன்—மதிப்பாகும்). ''இந்த அர்த்தத்தில் மதிப்பு அவசியமாகவே பரிவர்த்தனைகளைக் குறிக்கிறது, செல்வங்கள் குறிப்பதில்லை.''[42] ''செல்வங்கள்'' (பயன்-மதிப்பு) ''மனிதர்களுக்குரித்தானது, மதிப்பு சரக்குகளுக்குரித்தானது. ஒரு மனிதன் அல்லது ஒரு சமுதாயம் செல்வமிக்கதாய் இருக்கிறது. ஒரு முத்து அல்லது வைரம் மதிப்புடையதாய் இருக்கிறது...முத்து அல்லது வைரம் மதிப்புடையதாய் இருப்பது'' முத்து அல்லது வைரமாகவே.[43] இது வரை எந்த இரசாயன அறிஞரும் முத்து அல்லது வைரத்தின் பரிவர்த்தனை-மதிப்பைக் கண்டுபிடிக்கவில்லை. பொருட்களின் பயன்-மதிப்பு அவற்றின் பொருளாயதக் குணங்களைச் சாராது அவற்றுக்குச் சொந்தமாயுள்ளது; மறு புறம் அவற்றின் மதிப்போ பொருட்கள் என்ற விதத்தில் அவற்றின் ஒரு பகுதியாக அமைகிறது என்று இந்த இரசாயனத் தனிமத்தின் பொருளாதாரக் கண்டுபிடிப்பாளர்கள் கருதுகிறார்கள் — விமர்சன மதிநுட்பத்துக்கு இவர்கள் தனி பாத்தியதைக் கொண்டாடுகிறார்கள் என்பதை இங்கு குறிப்பிடலாம். பரிவர்த்தனையில்லாமல், பொருட்களுக்கும் மனிதர்களுக்கும் இடையில் ஒரு நேரடி உறவைக் கொண்டு பொருட்களின் பயன்-மதிப்பு ஈடேற்றம் பெறுகிறது. மறு புறம், அவற்றின் மதிப்போ பரிவர்த்தனையின் மூலமே, அதாவது ஒரு சமூக நிகழ்முறையைக் கொண்டே ஈடேற்றம் பெறுகிறது என்ற விசேஷமான சூழ்நிலையே இந்தக் கருத்தில் அவர்களை உறுதிப்படுத்துகிறது. ''செல்வமும், செழிப்பும் அதிர்ஷ்டத்தால் வாய்ப்பவை; படிப்பும், எழுத்தும் இயற்கையாய்க் கிடைப்பவை'' என்று தன் அண்டையிலிருந்த சீகோலிடம் தெரிவித்த நண்பர் டாக்பெர்ரியை அல்லவா இது நினைவுபடுத்துகிறது![44]

---

[42] ''அரசியல் பொருளாதாரத்தில் — குறிப்பாக மதிப்பு தொடர்பாகவும் வேண்டல்-வழங்கல் தொடர்பாகவும் — குறிப்பிட்ட சில வார்த்தைச் சர்ச்சைகள் பற்றிய கண்ணோட்டங்கள்.'' லண்டன், 1821, பக்கம் 16.

[43] சா. பெய்லி, முன் வந்தது, பக்கம் 165.

[44] பரிவர்த்தனை-மதிப்பை ஒப்பளவிலான ஒன்று என்பதிலிருந்து அறுதியான ஒன்றாய் மாற்றி விட்டதாக ரிக்கார்டோ மீது ''கண்ணோட்டங்கள்'' நூலின் ஆசிரியரும், சா. பெய்லியும் குற்றஞ்சுமத்துகின்றனர். உண்மையோ நேர்மாறானது. வைரம், முத்து போன்ற பொருட்கள் பரிவர்த்தனை-மதிப்புகளாகத் தோன்றுகிற, அப்பொருட்களிடையிலான தோற்ற உறவை அவர் விளக்கியிருக்கிறார்; தோற்றங்களுக்குப் பின்னால் மறைந்துள்ள உண்மை உறவை, அதாவது மனித உழைப்பின் வெறும் தெரிவிப்புகள் என்ற முறையில் அவை ஒன்றோடொன்று கொண்டுள்ள உறவை, வெளிப்படுத்தியிருக்கிறார். ரிக்கார்டோவைப் பின்பற்றுவோர் பெய்லிக்கு சற்றே கடுப்பாகவும், ஏற்றுக் கொள்ளக் கூடிய நியாயமின்றியும் பதில் சொல்கின்றனர் என்றால், மதிப்புக்கும் அதன் வடிவமான பரிவர்த்தனை-மதிப்புக்கும் இடையே நிலவுகிற மறைந்திருக்கும் உறவுகளை விளங்கச் செய்வதற்கான எந்தத் திறவுகோலும் ரிக்கார்டோவின் நூல்களில் அவர்களுக்குக் கிடைக்கவில்லை என்பதே அதற்குக் காரணமாயிருத்தல் வேண்டும்.

## அத்தியாயம் II

# பரிவர்த்தனை

சரக்குகள் தாமாகச் சந்தைக்குச் செல்லவும் பரிவர்த்தனைகளைச் செய்து கொள்ளவும் முடியாது என்பது வெளிப்படை. எனவே, அவற்றின் உடைமையாளர்களாகவும் இருக்கிற அவற்றின் காப்பாளர்களது உதவியை நாம் நாட வேண்டும். சரக்குகள் பொருட்களே, எனவே மனிதனுக்கு எதிர்ப்பு காட்டும் சக்தி யில்லாதவை. அவை அடங்கி நடக்கா விட்டால் அவன் பலப் பிரயோகம் செய்யலாம். வேறுவிதமாகச் சொன்னால் அவன் அவற்றை வசப்படுத்திக் கொள்ளலாம்.[45] இந்தப் பொருட்கள் ஒன்றோடு ஒன்று சரக்குகளாக உறவு கொள்ள வேண்டுமானால், அவற்றின் காப்பாளர்கள் அந்தப் பொருட்களைத் தமது சித்தத்தின் உறைவிடங்களாய்க் கொண்ட ஆட்களாக ஒருவரோடு ஒருவர் உறவு கொள்ள வேண்டும்; ஒருவர் மற்றவரின் சரக்கைத் தனதாக்கிக் கொள்வதும் தன் சொந்தச் சரக்கைக் கைவிடுவதும் பரஸ்பர சம்மதத்துடன் செய்யப்படுகிற செயலின் வாயிலாக மட்டுமே நடை பெற வேண்டும். எனவே, தனியுடைமையாளர்களுக்குரிய உரிமை கள் இருவருக்கும் இருப்பதை அவர்கள் பரஸ்பரம் அங்கீகரிக்க வேண்டும். இவ்வாறு ஓர் ஒப்பந்தத்தின் வாயிலாக — இவ் வொப்பந்தம் வளர்ச்சியடைந்த சட்ட அமைப்பின் பகுதியாக இருந்தாலும், இல்லாவிட்டாலும் — வெளிப்படுகிற இந்தச் சட்ட நீதி உறவு [juridical relation] இரு சித்தங்களிடையிலான உறவாகும், இருவருக்குமிடையிலான எதார்த்தமான பொருளாதார உறவின்

---

45 பக்திக்குப் பெயர் பெற்ற பன்னிரண்டாவது நூற்றாண்டில், மிக நுண்மையான பொருட்கள் சிலவற்றையும் சரக்குகளில் சேர்த்தனர். இவ்வாறு, அக்காலத்தைச் சேர்ந்த பிரெஞ்சுக் கவிஞர் ஒருவர் லான்டிட் சந்தையில் கிடைக்கக் கூடிய பண்டங்களின் பட்டியலில் உடை, பாத அணிகள், தோல், விவசாயக் கருவிகள் முதலானவற்றை மட்டுமன்றி ''femmes folles de leur corps''* என்போரையும் பட்டியலிடுகிறார்.

---

* ''அடாவடிப் பெண்கள்.''

பிர்திபிம்பமே ஆகும். இவ்வாறான ஒவ்வொரு சட்ட நீதிச் செயலிலும் அடங்கியுள்ள கருப்பொருளை நிர்ணயிப்பது இந்தப் பொருளாதார உறவுதான்.[46] ஆட்கள் சரக்குகளின் பிரதிநிதிகளாகவே, ஆதலால் சரக்குடைமையாளர்களாகவே ஒருவருக்கொருவர் உள்ளனர். பொருளாதார அரங்கில் தோன்றுகிற கதாபாத்திரங்கள் அவற்றிடையே நிலவும் பொருளாதார உறவுகளின் உருவகங்களே என்பதை நமது ஆராய்ச்சியின் போக்கில் பொதுவாக நாம் காண்போம்.

ஒரு சரக்கை அதன் உடைமையாளரிடமிருந்து பிரதானமாக வேறுபடுத்துவது, அது மற்ற ஒவ்வொரு சரக்கையும் தன் சொந்த மதிப்பினது தோற்றத்தின் வடிவமாகவே பார்க்கிறது என்ற உண்மையே. பிறவியிலேயே சமனவாதியும் அழுகுணியுமான அது, வேறு எந்தச் சரக்குடனும், அது மாரிடோன்ஸ் என்பாளை விடவும் அருவருக்கத் தக்கதாக இருப்பினும் ஆத்மாவை மட்டுமன்றி தேகத்தையும் பரிவர்த்தனை செய்து கொள்ள எப்போதுமே தயாராயுள்ளது. சரக்கிலுள்ள இந்த ஸ்தூல உணர்வுப் பற்றாக்குறையை சரக்குடைமையாளர் தன் சொந்த ஐம்புலன்களாலும், அதற்கு மேற்பட்ட உணர்வுகளாலும் சரிக்கட்டுகிறார். அவரது சரக்குக்கு அவருக்கு வேண்டிய எந்த உடனடிப் பயன்-மதிப்பும் இல்லை. இருக்குமானால், அவர் அதைச் சந்தைக்குக் கொண்டுவர மாட்டார். அதற்கு மற்றவர்களுக்கு வேண்டிய பயன்-மதிப்பு உள்ளது; ஆனால் அவருக்கோ அதன் ஒரே நேரடிப் பயன்-மதிப்பு பரிவர்த்தனை-மதிப்பின் இருப்பகமாகவும், ஆதலால் பரிவர்த்தனைச் சாதனமாகவும் அது உள்ளதென்பதே.[47] எனவே, தனக்குப் பயன்பட வல்ல

---

[46] சரக்குற்பத்திக்குரிய சட்ட நீதி உறவுகளிலிருந்து தனது நீதி இலட்சியத்தை, ''சாசுவத நீதி'' இலட்சியத்தை புரூதோன் ஆரம்பத்திலேயே எடுத்துக் கொள்கிறார். அதனால், சரக்குற்பத்தியானது நீதியைப் போலவே சாசுவதமான உற்பத்தி வடிவமாகும் என்று, எல்லா நற்குடி மக்களுக்கும் ஆறுதல் அளிக்கும் விதத்தில், அவர் நிரூபிக்கிறார் என்பது கவனிக்கத்தக்கது. பின் அவர் அதை விட்டுத் திரும்பி இந்த இலட்சியத்துக்கேற்ப, உள்ளபடியே இருக்கிற சரக்குற்பத்தியையும், உள்ளபடியே இருக்கிற அதற்குரிய சட்ட அமைப்பையும் சீர்திருத்த முனைகிறார். பருப்பொருளின் சேர்க்கையிலும் சிதைவிலுமான மூலக்கூறு மாற்றங்களின் மெய்யான விதிகளைப் பயில்வதற்கும் அவ்வடிப்படையில் திட்டமான பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கும் பதிலாக, ''சாசுவதக் கருத்துகளைக்'' கொண்டு — ''இயற்கைக் குணம்,'' ''நேசம்'' ஆகியவற்றைக் கொண்டு — பருப்பொருளின் சேர்க்கையையும் சிதைவையும் ஒழுங்குப்படுத்துவதாகக் கூறிக் கொள்ளும் ஓர் இரசாயன அறிஞரைப் பற்றி என்ன நினைப்பது? ''கடுவட்டி'' என்பது ''சாசுவத அருள்,'' ''சாசுவத விசுவாசம்,'' ''கடவுளின் சாசுவதச் சித்தம்'' ஆகியவற்றுக்கு ஒவ்வாதது எனக் கூறிய திருச்சபைத் தந்தைகளை விட, அது ''சாசுவத நீதி,'' ''சாசுவத சமத்துவம்,'' ''சாசுதவக் கூட்டுறவு'' ஆகியவற்றுக்கும், ஏனைய ''சாசுவத உண்மைகளுக்கும்'' முரணாக உள்ளது எனக் கூறுகிற நாம் ''கடுவட்டி'' குறித்து உண்மையிலேயே அதிகமாக அறிந்துள்ளோமா?

[47] ''ஒவ்வொரு பொருளின் பயனும் இரட்டைத் தன்மையது என்பதால்...அணிந்து கொள்ளலாம், பரிவர்த்தனையும் செய்யலாம் என்ற நிலையிலுள்ள செருப்பைப் போல, ஒரு தன்மை நேரடியாகப் பொருளுக்குரித்தானதாகவும், மற்றது அவ்வாறின்றியும்

பயன்-மதிப்புடைய சரக்குகளுக்காக அதைக் கைவிட அவர் தீர் மானிக்கிறார். எல்லாச் சரக்குகளும் அவற்றின் உடைமையாளர் களுக்குப் பயன்-மதிப்பில்லாதவையாகவும் உடைமையாளரல்லாத வர்களுக்குப் பயன்-மதிப்புகளாகவும் உள்ளன. இதன் விளைவாக அவை அனைத்துமே கைமாற வேண்டும். ஆனால் இந்தக் கை மாற்றம் அவற்றின் பரிவர்த்தனையாக அமைகிறது; இப்பரிவர்த் தனை அவற்றை ஒன்றோடு ஒன்று மதிப்புகள் என்ற உறவில் வைக்கிறது; அவற்றை மதிப்புகளாக ஈடேற்றம் செய்கிறது. எனவே, சரக்குகள் பயன்-மதிப்புகளாக ஈடேற்றம் பெறுமுன் மதிப்புகளாக ஈடேற்றம் பெற வேண்டும்.

மறு புறம், அவை தம்மைப் பயன்-மதிப்புகளாகக் காட்டிக் கொண்ட பிறகே, மதிப்புகளாக ஈடேற்றம் பெற முடியும். ஏனெனில், அவற்றில் செலவிடப்பட்டுள்ள உழைப்பு, மற்றவர் களுக்குப் பயனுள்ள வடிவத்தில் செலவிடப்பட்டுள்ளது என்ற அளவிலேயே அர்த்தமுள்ளதாகிறது. அந்த உழைப்பு மற்றவர் களுக்குப் பயனுள்ளதாகவும், ஆதலால் அதன் உற்பத்திப் பொருள் மற்றவர்களது தேவைகளை நிறைவு செய்ய வல்லதாகவும் உள்ளதா என்பதைப் பரிவர்த்தனைச் செயலின் மூலமே நிரூபிக்க முடியும்.

சரக்கின் உடைமையாளர் ஒவ்வொருவரும், தன் தேவையை நிறைவு செய்கிற பயன்-மதிப்பையுடைய சரக்குகளுக்காக மட்டுமே பரிவர்த்தனை மூலம் அதனைக் கைவிட விரும்புகிறார். இவ் விதத்தில் பார்த்தால் பரிவர்த்தனை என்பது அவருக்குத் தனியாளுக் குரிய காரியமே. மறு புறம், அவர் தன் சரக்கின் மதிப்பை ஈடேற்றம் செய்ய, அதைச் சம மதிப்புள்ள வேறு எந்தப் பொருத்தமான சரக்காகவும் — தன் சொந்தச் சரக்கு இதர சரக்கின் உடைமையாளருக்கான பயன்-மதிப்பெதையும் உடையதாக இருந் தாலும், இல்லா விட்டாலும் — மாற்ற விரும்புகிறார். இந்த நோக்கில், பரிவர்த்தனை என்பது அவருக்கு ஒரு பொதுத் தன்மையுள்ள சமுதாயக் காரியமாகும். ஆனால், ஒரே காரியத் தொகுதி பிரத்தியேகமாகத் தனியாளுக்குரியதாகவும், பிரத்தியேக மாகச் சமுதாய அளவினதாகவும் பொதுவானதாகவும் — ஆக இருவிதமானதாய் — ஏககாலத்தில் எல்லாச் சரக்குடைமையாளர் களுக்கும் இருக்க முடியாது.

இன்னும் சற்று நெருங்கிப் பார்ப்போம். ஒரு சரக்கின் உடைமை யாளருக்கு, ஏனைய ஒவ்வொரு சரக்கும், தன் சொந்தச் சரக்கு தொடர்பாக ஒரு குறிப்பான சமதையாகும். ஆதலால் அவரது

---

உள்ளது. இரண்டுமே செருப்பின் பயன்கள்; ஏனெனில் தனக்குத் தேவைப்படுகிற பணம் அல்லது உணவுக்காக செருப்பைப் பரிவர்த்தனை செய்து கொள்பவனும் கூட செருப்பை செருப்பாகவே பயன்படுத்திக் கொள்கிறான். ஆனால் அதன் இயற்கையான வழியில் அன்று. ஏனெனில் அது பரிவர்த்தனை செய்து கொள்ளப்படும் நிமித்தம் தயாரிக்கப்பட்டதன்று.'' (அரிஸ்டாட்டில், ''குடியரசு,'' I. i. அத்தியாயம் 9.)

சொந்தச் சரக்கு மற்ற அனைத்துக்கும் சர்வப் பொதுச் சமதையாகும். ஆனால், ஒவ்வொரு சரக்குடைமையாளருக்கும் இது பொருந்தும் என்பதால், உண்மையில் சர்வப் பொதுச் சமதையாகச் செயல் படுகிற சரக்கு எதுவும் கிடையாது; சரக்குகளின் ஒப்பீட்டு மதிப்புக் கும், அவை மதிப்புகளாகச் சமன் செய்யப்படுவதற்கும், தமது மதிப்புகளின் பருமன் ஒப்புநோக்கப் பெறுவதற்குமான பொது வடிவம் எதுவுமில்லை. எனவே, இந்த அளவில் அவை ஒன்றை யொன்று சரக்குகளாக எதிர் நோக்குவதில்லை, உற்பத்திப் பொருட் கள் அல்லது பயன்-மதிப்புகளாகவே எதிர் நோக்குகின்றன. சிக்கல் களுக்கு உள்ளானதும் நமது சரக்குடைமையாளர்கள் ஃபாஸ்டை போல் நினைக்கின்றனர்: ''Im Anfang war die That.''* எனவே, அவர்கள் சிந்திக்கும் முன்னரே செயல்பட்டனர், காரியமாற்றினர். உள்ளுணர்வுத் தூண்டுதலால், சரக்கின் இயல்பிலிருந்து எழும் விதி களை அனுசரிக்கின்றனர். அவர்கள் தமது சரக்குகளை சர்வப் பொதுச் சமதையான வேறொரு சரக்குடன் ஒப்பிடுவதன் மூல மல்லாமல், மதிப்புகளாகவும், எனவே சரக்குகளாகவும் அவற்றை உறவு கொள்ளச் செய்ய முடியாது. சரக்கு பற்றிப் பகுத்தாய்ந்த போது நாம் இதைப் பார்த்தோம். ஆனால், எந்த ஒரு சரக்கும் சமுதாயச் செயலின் மூலமாக அன்றி சர்வப் பொதுச் சமதையாக முடியாது. எனவே, இதர எல்லாச் சரக்குகளும் தமது மதிப்புகளை எந்தவொரு சரக்கின் வாயிலாகக் காட்டுகின்றனவோ, அந்தச் சரக் குக்குத் தமது சமுதாயச் செயலின் மூலம் தனிச் சிறப்பளிக்கின்றன. அதன் மூலம் இச்சரக்கின் தசையுருவம் சமூக வழியில் அங்கீகரிக்கப் பட்ட சர்வப் பொதுச் சமதையின் வடிவமாகிறது. இந்தச் சமுதாய நிகழ்முறையின் மூலம், சர்வப் பொதுச் சமதையாக இருக்கும் பணி எஞ்சியவற்றால் இவ்வாறு தனித்தொதுக்கப்படும் சரக்கின் குறிப் பான பணியாகிறது. இச்சரக்கு இவ்வாறு ஆகிறது—பணமாக. ''Illi unum consilium habent et virtutem et potestatem suam bestiae tradunt. Et ne quis possit emere aut vendere, nisi qui habet charac terem aut nomen bestiae, aut numerum nominis ejus.'' ** *(விவிலியம் — புதிய ஏற்பாடு — வெளிப்படுத்தின விசேஷம்).*

உழைப்பின் வெவ்வேறு உற்பத்திப் பொருட்கள் நடைமுறையில் ஒன்றோடு ஒன்று சமன் செய்யப்படுவதற்கும், இவ்வாறு சரக்குகளாக நடைமுறையால் மாற்றப்படுவதற்கும் வழி செய்கிற பரிவர்த்தனைகளின் போது அவசியம் காரணமாய் உருவாகிற

* ''முந்தி வந்தது செயல்.''

** ''இவர்கள் ஒரே யோசனையுள்ளவர்கள்; தங்கள் வல்லமையையும் அதிகாரத் தையும் மிருகத்திற்குக் கொடுப்பார்கள்.'' (வெளிப்படுத்தின விசேஷம் 17:13.) ''அந்த மிருகத்தின் முத்திரையையாவது நாமத்தையாவது நாமத்தின் இலக்கத்தையாவது தரித்துக் கொள்கிறவன் தவிர வேறொருவனும் கொள்ளவும் விற்கவும் கூடாதபடிக்கும் செய்தது.'' (வெளிப்படுத்தின விசேஷம் 13:17).

படிகமே பணம். பரிவர்த்தனைகளின் வரலாற்று முன்னேற்றமும், விரிவாக்கமும் பயன்-மதிப்புக்கும் மதிப்புக்குமிடையே சரக்குகளில் மறைந்துள்ள முரணிலையை வளர்க்கின்றன. வாணிபக் காரியங்களுக்காக இம்முரணிலைக்குப் புறத் தெரிவிப்பை அளிப்பதன் அவசியம் சுயேச்சையான மதிப்பு வடிவம் நிறுவப்படுவதை ஊக்குகிறது; சரக்குகளாகவும் பணமாகவும் சரக்குகளை வேறுபடுத்துவதன் மூலம் முடிவாகத் திருப்தி காணும் வரை அது ஓய்வதில்லை. அப்படியானால், உற்பத்திப் பொருட்கள் சரக்குகளாக அடைகிற மாற்றம் நிறைவேற்றப்படுகிற அதே வீதத்தில், ஒரு தனிவகைச் சரக்கு பணமாக அடைகிற மாற்றமும் நிறைவேற்றப்படுகிறது.[48]

உற்பத்திப் பொருட்களின் நேரடிப் பண்டமாற்று ஒரு விதத்தில்—ஆனால் இன்னொரு விதத்தில் அன்று—மதிப்பின் ஒப்பீட்டுத் தெரிவிப்பின் ஆரம்ப வடிவத்தைப் பெறுகிறது. அந்த வடிவமாவது: x சரக்கு A = y சரக்கு B. நேரடிப் பண்டமாற்றின் வடிவமாவது: x பயன்-மதிப்பு A = y பயன்-மதிப்பு B.[49] இந்த எடுத்துக்காட்டில் பொருட்கள் Aஉம் Bஉம் இது வரை சரக்குகளல்ல; பண்டமாற்றுச் செயலின் மூலமாகவே அவை சரக்குகளாகின்றன. பரிவர்த்தனை-மதிப்பை ஈட்டுகிற திசையில் பயனுள்ள பொருள் எடுத்து வைக்கும் முதலடி அது தன் உடைமையாளருக்குப் பயனிலா மதிப்பாக அமைவதே; அவரது உடனடித் தேவைகளுக்கு அவசியமான ஒரு பண்டத்தின் மேல்மிச்சப் பகுதியாக அமையும் போதே, அது நிகழ்கிறது. பொருட்கள் இயல்பாகவே மனிதனுக்குப் புறத்தேயுள்ளவை, ஆதலால் அவனால் உடைமை மாற்றம் செய்யத் தக்கவை. இந்த உடைமை மாற்றம் [alienation] பரஸ்பரத் தன்மையுள்ளதாக இருக்க வேண்டுமானால், மனிதர்கள் ஒரு மொழியா உடன்படிக்கை மூலம் ஒருவரையொருவர் உடைமை மாற்றம் செய்யத்தக்க அந்தப் பொருட்களின் தனியுடைமையாளர்களாகவும், இதன் பயனாய் சுயேச்சையான ஆட்களாகவும் கொள்வது மட்டுமே அவசியம். ஆனால், பொதுச் சொத்தின் அடிப்படையிலான புராதனச் சமுதாயத்தில்—இப்படிப்பட்ட சமுதாயம் தந்தைவழிக் குடும்பத்தின், புராதன

[48] சரக்கு உற்பத்தியை நிரந்தரமாக்கிக் கொண்டே பணத்துக்கும் சரக்குகளுக்குமிடையிலான "பகைமையை" ஒழிப்பதற்கும், இப்பகைமையின் அடிப்படையிலேயே பணம் ஜீவிக்கிறது என்பதால் பணத்தையே ஒழிப்பதற்கும் குறி வைக்கிற குட்டி முதலாளித்துவ சோஷலிசத்தின் கூர்மதியை இதிலிருந்து நாம் மதிப்பிட்டுக் கொள்ளலாம். போப்பாண்டவர் இல்லாமலே கத்தோலிக்க நெறியை நிலைநாட்ட முயல்வதைப் போன்றதே இது. இது குறித்து மேலும் அறிய, பார்க்கவும்: எனது நூல், "அரசியல் பொருளாதார விமர்சனத்திற்கு ஒரு பங்களிப்பு," பக்கம் 61 முதலானவை.

[49] இருவேறு பயன்-மதிப்புகள் பரிவர்த்தனை செய்து கொள்ளப்படுவதற்குப் பதிலாக பண்டங்களின் வரைமுறையற்ற குவியல் ஒரே ஒரு பண்டத்தின் சமதையாகத் தரப்படும் போது—காட்டுமிராண்டிகளின் வாழ்வில் பல நேரங்களில் இதுவே நிலைமை—உற்பத்திப் பொருட்களின் நேரடிப் பண்டமாற்றும் கூட பச்சைப் பிள்ளைப் பருவத்திலுள்ளது.

இந்திய கிராம சமுதாயத்தின் அல்லது பெருவிய இங்கா அரசின் வடிவங்களில் எவ்வடிவத்தை எடுத்தாலும்—இப்படிப்பட்ட பரஸ்பர சுயேச்சை நிலைக்கு இடமில்லை. எனவே, சரக்குகளின் பரிவர்த்தனை, முதலில் இப்படிப்பட்ட சமுதாயங்களின் எல்லைகளில், மற்ற ஒத்த சமுதாயங்களுடன் அல்லது அவற்றின் உறுப்பினர்களுடன் அவை தொடர்பு கொள்ளும் இடங்களில் தொடங்குகிறது. ஆயின், உற்பத்திப் பொருட்கள் ஒரு சமுதாயத்தின் வெளியுறவுகளில் சரக்குகளானதுமே, அவை பிரதிச் செயலின் மூலம் அதன் உள்ளுறவிலும் சரக்குகளாகின்றன. அவை பரிவர்த்தனை செய்து கொள்ளத் தக்கவையாய் இருக்கிற விகிதாசாரங்கள் முதலில் முற்றிலும் சந்தர்ப்பவசமானவையே. அவற்றைப் பரிவர்த்தனை செய்து கொள்ளத் தக்கவை ஆக்குவது அவற்றை உடைமை மாற்றம் செய்ய வேண்டுமென்ற அவற்றின் உடைமையாளர்களின் பரஸ்பர விருப்பமே. இதற்கிடையில், பயனுள்ள அந்நியப் பொருட்களுக்கான தேவை படிப்படியாக நிலைபெறுகிறது. பரிவர்த்தனை இடைவிடாமல் திரும்பத் திரும்ப நிகழ்வது அதனை இயல்பான சமூகச் செயல் ஆக்கி விடுகிறது. எனவே, காலப் போக்கில் உழைப்பின் உற்பத்திப் பொருட்களில் ஒரு பகுதியாவது பரிவர்த்தனையைத் தனி நோக்கமாகக் கொண்டு உற்பத்தி செய்யப்பட வேண்டும். அக்கணத்திலிருந்தே, நுகர்வுக் காரியங்களுக்கான ஒரு பொருளின் பயனுடைமைக்கும், பரிவர்த்தனைக் காரியங்களுக்கான அதன் பயனுடைமைக்கும் இடையிலான வேறுபாடு உறுதியாக நிலைபெற்று விடுகிறது. அதன் பயன்-மதிப்பு அதன் பரிவர்த்தனை-மதிப்பிலிருந்து வேறுபட்டதாகிறது. மறு புறம், பொருட்கள் பரிவர்த்தனை செய்து கொள்ளத் தக்கவையாயிருக்கிற அளவு வழிப்பட்ட விகிதாசாரம் அவற்றின் உற்பத்தியையே பொறுத்ததாகிறது. வழக்கம் அவற்றைத் திட்டமான பருமன்களுடைய மதிப்புகளென முத்திரை பதிக்கிறது.

உற்பத்திப் பொருட்களின் நேரடிப் பண்டமாற்றில், ஒவ்வொரு சரக்கும் அதன் உடைமையாளருக்கு நேரடியாக ஒரு பரிவர்த்தனைச் சாதனமாகவும் மற்ற அனைவருக்கும் ஒரு சமதையாகவும் உள்ளது; ஆனால் இது, அவர்களுக்கு அது பயன்-மதிப்பைப் பெற்றிருக்கிறது என்ற அளவுக்கே. எனவே, இந்தக் கட்டத்தில், பரிவர்த்தனை செய்து கொள்ளப்படுகிற பண்டங்கள் அவற்றின் சொந்தப் பயன்-மதிப்பை அல்லது பரிவர்த்தனை செய்வோரின் தனித்தனித் தேவைகளைச் சார்ந்திராத ஒரு மதிப்பு வடிவத்தைப் பெறுவதில்லை. மதிப்பு வடிவத்துக்கான அவசியம், பரிவர்த்தனை செய்து கொள்ளப்படும் சரக்குகளின் அதிகரிக்கிற தொகைக்கும், பல்வகைமைக்கும் ஏற்ப வளர்கிறது. பிரச்சினையும் தீர்வுச் சாதனமும் ஏககாலத்தில் பிறக்கின்றன. வெவ்வேறு உடைமையாளர்களுக்குச் சொந்தமான வெவ்வேறு வகைச் சரக்குகள் ஒரே தனி வகைப்

பண்டத்துக்குப் பரிவர்த்தனை செய்து கொள்ளத் தக்கவையாய் இல்லாமல், அப்பண்டத்தோடு மதிப்புகளாகச் சமன் செய்யப்படாமல், சரக்குடைமையாளர்கள் தம் சொந்தச் சரக்குகளை மற்றவர்களின் சரக்குகளோடு சமன் செய்வதும், அவற்றைப் பெருவீதத்தில் பரிவர்த்தனை செய்து கொள்வதும் ஒருபோதும் நடப்பதில்லை. மேற்சொன்னது போன்ற தனிவகைப் பண்டம் மற்ற பல்வேறு சரக்குகளின் சமதையாவதன் மூலம், உடனே பொதுவான ஒரு சமுதாயச் சமதையின் தன்மையை — குறுகிய எல்லைகளுக்குள்தான் என்றாலும் — பெறுகிறது. இந்தத் தன்மை அதனைத் தோற்றுவித்த தற்காலிக சமூகச் செயல்களுடன் கூட வருவதும் போவதுமாக இருக்கிறது. மாறி மாறியும் நிலையற்ற விதத்திலும் அது முதலில் இச்சரக்கோடும் பிறகு அச்சரக்கோடுமாக ஒட்டிக் கொள்கிறது. ஆனால் பரிவர்த்தனை வளர்ச்சியடைந்ததும், அது சரக்குகளின் குறிப்பிட்ட வகைகளோடு உறுதியாகவும் பிரத்தியேகமாகவும் ஒட்டிக் கொள்கிறது; பண வடிவத்தை மேற்கொள்வதன் மூலம் படிகமாக உருவாகிறது. எவ்வகைச் சரக்குடன் அது ஒட்டிக் கொள்கிறது என்பது முதலில் தற்செயலான ஒன்றாகும். எனினும், தீர்மானகர செல்வாக்குள்ள இரு நிலைமைகள் உள்ளன. ஒன்று, பண வடிவம் வெளியிலிருந்து வரும் மிக முக்கியமான பரிவர்த்தனைப் பண்டங்களோடு ஒட்டிக் கொள்கிறது; இவை உண்மையிலேயே உள்நாட்டு உற்பத்திப் பொருட்களின் பரிவர்த்தனை-மதிப்பு தெரிவிக்கப் பெறுகிற புராதனமான, இயற்கையான வடிவங்களாகும். அல்லது, சுதேசியான, உடைமை மாற்றம் செய்யத்தக்க செல்வத்தின் பிரதானப் பகுதியாக அமைகிற பயனுள்ள பொருளோடு அது ஒட்டிக் கொள்கிறது. கால்நடைகளை உதாரணமாய்க் கொள்ளலாம். பண வடிவத்தை முதலில் வளர்த்தெடுத்தவை மேய்ச்சல் தொழில் செய்யும் நாடோடி இனங்களே; ஏனெனில் அவர்களது லௌகிக உடைமைகள் அனைத்தும் சங்கமப் பொருட்களாய், எனவே நேரடியாக உடைமை மாற்றம் செய்யத் தக்கவையாய் உள்ளன; மேலும் ஏனெனில் அவர்களது வாழ்க்கை முறை, அந்நிய சமுதாயங்களுடன் அவர்களைத் தொடர்ந்து தொடர்பு கொள்ளச் செய்வதன் மூலம் உற்பத்திப் பொருட்களின் பரிவர்த்தனையைத் தூண்டுகிறது. மனிதன் மனிதனையே — அடிமையின் வடிவத்தில் — புராதன காலப் பணப் பொருளாகப் பயன்படுமாறு பல நேரங்களில் செய்துள்ளான்; ஆனால் அந்தக் காரியத்துக்கு ஒருபோதும் நிலத்தைப் பயன்படுத்தியதில்லை. இப்படி ஒரு கருத்து ஏற்கெனவே நன்கு வளர்ந்த முதலாளித்துவ சமுதாயத்தில்தான் பிறக்க முடியும். 17ஆவது நூற்றாண்டின் கடைசி மூன்றாம் பகுதியில் அது தோன்றியது; அதனை நாடு தழுவிய அளவில் நடைமுறைப்படுத்துவதற்கான முதல் முயற்சி ஒரு நூற்றாண்டு கழித்து பிரெஞ்சு முதலாளித்துவப் புரட்சியின் போது செய்யப்பட்டது.

பரிவர்த்தனையானது வட்டார பந்தங்களை உடைத்துக் கிளம்புவதும், சரக்குகளின் மதிப்பு ஸ்தூலமற்ற மனித உழைப்பின் உருவாக மேலும் மேலும் விரிவடைவதும் எவ்விகிதாசாரத்திலோ, அதே விகிதாசாரத்தில் ஒரு சர்வப் பொதுச் சமதையின் சமூகப் பணியை ஆற்றிடத் தக்கவையாய் இயற்கை தந்துள்ள சரக்குகளோடு பணமென்னும் தன்மை ஒட்டிக் கொள்கிறது. உயர்நிலை உலோகங்களே [precious metals] அச்சரக்குகளாகும்.

''தங்கமும் வெள்ளியும் இயற்கையாகவே பணமல்லவென்றாலும், பணம் இயற்கையாகவே தங்கமும் வெள்ளியுமாகும்''[50] என்ற கூற்றின் உண்மை, பணத்தின் பணிகளுக்கு இசைவான இவ்வுலோகங்களின் பௌதிகக் குணங்களால் மெய்ப்பிக்கப்படுகிறது.[51] ஆயினும், இந்தக் கட்டம் வரை, பணத்தின் ஒரே ஒரு பணியை மட்டுமே, அதாவது சரக்குகளது மதிப்பின் புலப்பாட்டு வடிவமாக, அல்லது அவற்றின் மதிப்புப் பருமன்கள் சமூக வழியில் தெரிவிக்கப்படுவதற்குரிய பொருளாகப் பயன்படுவது என்ற பணியை மட்டுமே நாம் கண்டுள்ளோம். எந்தப் பொருளின் ஒவ்வொரு மாதிரியும் ஒரே விதமான பண்புகளை வெளிப்படுத்துகிறதோ, அந்தப் பொருள் மட்டுமே மதிப்பின் பொருத்தமான புலப்பாட்டு வடிவமாக—ஸ்தூலமற்ற, வேறுபடுத்தப்படாத, ஆதலால் சமமான மனித உழைப்பின் தக்க உருவாக—திகழ முடியும். மறு புறம், மதிப்புப் பருமன்களிடையிலான வேறுபாடு முழுக்க முழுக்க அளவு வழிப்பட்டது என்பதால், பணச் சரக்கு அளவுவழி வேறுபாடுகளுக்கு மட்டுமே இடமளிப்பதாக இருக்க வேண்டும்; எனவே விருப்பம் போல் பிரிக்கத்தக்கதாகவும், அதே போல் மீண்டும் இணைக்கத் தக்கதாகவும் இருக்க வேண்டும். தங்கமும் வெள்ளியும் இயற்கையாகவே இந்தக் குணங்களைப் பெற்றுள்ளன.

பணச் சரக்கின் பயன்-மதிப்பு இரட்டைத் தன்மையதாகிறது. சரக்கு என்ற விதத்தில் அதன் தனிவகைப் பயன்-மதிப்போடு (எடுத்துக்காட்டாக, தங்கமானது பல் கட்டுவதற்கும், சொகுசுப் பண்டங்கள் முதலானவற்றின் கச்சாப் பொருளாகவும் பயன்படுகிறது) கூடுதலாக அதன் குறிப்பான சமூகப் பணியிலிருந்து தோற்றமெடுக்கிற வடிவ முறையிலான பயன்-மதிப்பு ஒன்றையும் அது பெறுகிறது.

எல்லாச் சரக்குகளுமே அவற்றின் சர்வப் பொதுச் சமதையாகிய பணத்தின் குறிப்பான சமதைகள் மட்டுமே என்பதால், அவை சர்வப் பொதுச் சரக்காக இருக்கும் பணம் தொடர்பாகக் குறிப்பான சரக்குகளின் பாத்திரம் வகிக்கின்றன.[52]

---

50 கார்ல் மார்க்ஸ், முன் வந்தது, பக்கம் 135. ''உலோகங்கள்...அவற்றின் இயல்பினாலேயே பணமாகின்றன.'' (காலியானி, ''Della moneta,'' கஸ்டடி தொகுப்பு, Parte Moderna, பாகம் iii.)

51 இது பற்றி மேலும் விவரங்களறிய, மேற்குறிப்பிட்ட எனது நூலில் ''உயர்நிலை உலோகங்கள்'' பற்றிய அத்தியாயத்தைப் பார்க்கவும்.

52 ''பணமே சர்வப் பொதுச் சரக்கு.'' (வெர்ரி, முன் வந்தது, பக்கம் 16.)

பண வடிவம் என்பது ஒரு தனிச் சரக்கில் பிரதிபலிக்கிற ஏனையவை அனைத்துக்குமிடையிலான மதிப்புறவுகளின் பிரதி பிம்பமே என்று பார்த்தோம். எனவே, பணம் ஒரு சரக்கே என்பது[53] அதைப் பகுத்தாயும் போது அதன் முழு வளர்ச்சி யடைந்த உருவத்திலிருந்து தொடங்குபவர்களுக்கு மட்டுமே புதிய கண்டுபிடிப்பாயிருக்கும். பணமாக மாற்றப்பட்ட சரக்கு பரிவர்த் தனைச் செயலிலிருந்து பெறுவது அதன் மதிப்பையன்று, அதன் குறிப்பான மதிப்பு வடிவத்தையே. இந்த இருவேறு விஷயங் களையும் போட்டுக் குழப்புவதன் மூலம் சில எழுத்தாளர்கள் தங்கம், வெள்ளி இவற்றின் மதிப்பு கற்பனையானது எனக் கருதும் நிலைக்குச் சென்றுள்ளனர்.[54] சில குறிப்பிட்ட பணிகளில் பணத் தின் இடத்தை அதன் வெறும் அடையாளங்களே நிரப்ப முடியும் என்ற உண்மையானது, அதுவே வெறும் அடையாளம்தான் என்ற அந்த இன்னொரு தவறான கருத்துக்கு வழி செய்தது. எனினும், இந்தப் பிழையின் பின்னால் ஒரு பொருளின் பண வடிவம் அந்தப் பொருளின் பிரிக்க முடியாத பகுதியன்று, குறிப்பிட்ட சில சமூக உறவுகள் தம்மைக் காண்பித்துக் கொள்கிற வடிவம்தான் என்ற

---

[53] ''வெள்ளியும் தங்கமுமே (பொன்-வெள்ளிப் பாளம் [bullion] என்ற பொதுப் பெயர் கொண்டு நாம் இவற்றை அழைக்கலாம்) மதிப்பில்...உயர்ந்து கொண்டும், வீழ்ந்து கொண்டுமிருக்கும்...சரக்குகளாகும்....அப்படியானால் நாட்டின் உற்பத்தி அல்லது உருவாக்கத்தின் கூடுதலான அளவைக் குறைந்த எடைமானம் வாங்கும் போது உயர்ந்த மதிப்புள்ளதென பொற்பாளத்தைக் கணக்கிடலாம்.'' (''பணம், வாணிபம், பரி வர்த்தனைகள் ஆகியவை ஒன்றோடு ஒன்று உறவில் நிற்க, அவை பற்றிய பொதுப் படையான கருத்துகள் குறித்து ஓர் உரை.'' ஒரு வணிகர் எழுதியது. லண்டன், 1695, பக்கம் 7.) ''நாணயமாக்கப்பட்ட அல்லது நாணயமாக்கப்படாத வெள்ளியும் தங்கமும் மற்றெல்லாப் பொருட்களையும் அளவிடுவதற்காகப் பயன்படுத்தப்படுகின்றன என்ற போதிலும், மது, எண்ணெய், புகையிலை, துணி அல்லது பதார்த்தங்களைப் போலவே அவையும் சரக்காகும்.'' (''வாணிபம் சம்பந்தமாகவும், குறிப்பாகக் கிழக்கிந்தியத் தீவு களின் வாணிபம் சம்பந்தமாகவும் ஓர் உரை....'' லண்டன், 1689, பக்கம் 2.) ''நாட் டின் கையிருப்பும், செல்வங்களும் பணத்தோடு நின்று விடுவது முறையன்று; தங்கமும் வெள்ளியும் வாணிபச் சரக்கிலிருந்து விலக்கப்படுவதும் முறையன்று.'' (''கிழக்கிந்திய வாணிபம் இலாபங் கொழிக்கும் வாணிபம்.'' லண்டன், 1677, பக்கம் 4.)

[54] ''தங்கமும் வெள்ளியும் பணமாகு முன்பே உலோகங்கள் என்ற முறையில் மதிப் புடையவை.'' (காலியானி, முன் வந்தது.) லாக் கூறுகிறார்: ''மனித வர்க்கத்தின் பொதுவான சம்மதம், வெள்ளிக்கு, அதைப் பணத்துக்குப் பொருத்தமுள்ளதாக்கிய அதன் பண்புகளின் விளைவாக, ஒரு கற்பனையான மதிப்பைக் கொடுத்தது.'' மறு புறம் லா சொல்கிறார்: ''ஏதேனும் ஒரு தனிப் பொருளுக்கு வெவ்வேறு தேசங்கள் ஒரு கற்பனையான மதிப்பைக் கொடுக்க முடிந்தது எப்படி?...அல்லது இந்தக் கற்பனையான மதிப்பு தன்னைக் காப்பாற்றிக் கொள்ள முடிந்திருப்பது எப்படி?'' ஆனால் அவரே இவ்விஷயம் பற்றி எவ்வளவு சொற்பமாகப் புரிந்து கொண்டார் என்பதைப் பின் வருவது காட்டுகிறது: ''வெள்ளி பெற்றிருந்த பயன்-மதிப்புக்கேற்ற விகிதாசாரத்தில், ஆதலால் அதன் உண்மை மதிப்புக்கு ஏற்ற விகிதாசாரத்தில் அது பரிவர்த்தனை செய்து கொள்ளப்பட்டது. அது பணமாக ஏற்றுக் கொள்ளப்பட்டதன் மூலம் ஒரு கூடுதல் மதிப்பை (une valeur additionnelle) பெற்றது.'' (லா: ''Considerations sur le numeraire et le commerce'' in E. Daire's Edit. of ''Economistes Financiers du **XVIII.** siecle,'' p. 470.)

ஊகம் பதுங்கியிருந்தது. இந்த அர்த்தத்தில் ஒவ்வொரு சரக்கும் ஓர் அடையாளமே; ஏனெனில் மதிப்பு என்ற அளவில், அதில் செலவிடப்பட்ட மனித உழைப்பின் பொருளாயத உறையே.[55] ஆனால், ஒரு திட்டமான உற்பத்தி முறையின் ஆளுகையில் பொருட்களால் மேற்கொள்ளப்படும் சமூகத் தன்மைகள் அல்லது உழைப்பின் சமூகப் பண்புகளால் மேற்கொள்ளப்படும் பொருளாயத வடிவங்கள் வெறும் அடையாளங்களே என்று பிரகடனப் படுத்துவதானால், இந்தக் குணக்குறிகள் மனித வர்க்கத்தின் பொதுச் சம்மதம் எனப்படுவதால் அனுமதிக்கப்பட்ட தன்னிச்சையான கற்பிதங்கள் என்றும் அதே மூச்சில் பிரகடனப்படுத்துவதாகும். 18ஆம் நூற்றாண்டில் வழக்கமாயிருந்த விளக்க முறைக்கு இது பொருந்தியது. மனிதனுக்கும் மனிதனுக்குமிடையிலான சமூக உறவுகள் மேற்கொண்ட புதிரான வடிவங்களின் தோற்றுவாய்க்கு விளக்கம் தர முடியாமல், மனிதர்கள் அவற்றுக்கு ஒரு சம்பிரதாயமான தோற்றுவாயை இட்டுக்கட்டுவதன் மூலம் அவற்றின் விசித்திரத் தோற்றத்தைப் போக்க முயன்றனர்.

---

[55] "பணம் அவற்றின் (சரக்குகளின்) சின்னமாகும்." (ஃபோர்பொன்னே: "Elements du Commerce, புதிய பதிப்பு, லெய்டு, 1766," பாகம் II. பக்கம் 143.) "சின்னம் என்ற முறையில் அது சரக்குகளால் கவரப்படுகிறது." (முன் வந்தது, பக்கம் 155.) "பணம் பொருளின் சின்னமாகும், பொருளைக் குறிப்பதாகும்." (மாண்டெஸ்க்யூ: "Esprit des Lois," (Œuvres, லண்டன், 1767, பாகம் II., பக்கம் 2.) "பணம் வெறும் சின்னமன்று; ஏனெனில் அதுவே செல்வம்தான். அது மதிப்புகளின் பிரதிநிதியன்று, சமதையே." (லெ திரொஸ்னே முன் வந்தது, பக்கம் 910.) "மதிப்பு என்னும் கருத்து மதிப்புள்ள பொருளை வெறும் அடையாளமாக எண்ணுகிறது; பொருள் மதிக்கப் பெறுவது அது என்ன என்பதற்காக அன்று, அதன் பெறுமானம் என்ன என்பதற்காகவே." (ஹெகல், முன் வந்தது, பக்கம் 100.) பணம் வெறும் அடையாளமே, உயர்நிலை உலோகங்களின் மதிப்பு கலப்பற்ற கற்பனையே என்ற கருத்தைப் பொருளாதார அறிஞர்களுக்கு நெடுங்காலமுன்னரே வழக்கறிஞர்கள் முன் வைத்தனர். மத்திய காலம் முழுவதிலும், ரோமானியப் பேரரசின் பாரம்பரியங் களையும், ரோமானியச் சட்டத் தொகுப்பில் காணப்படும் பணம் பற்றிய கருத்தோட்டங்களையும் ஒட்டி, கலப்படம் செய்து நாணயங்களைக் கெடுப்பதற்கான முடி மன்னர்களது உரிமையை ஆதரித்து, அவர்களுக்கு இச்சகச் சேவை புரியவே வழக்கறிஞர்கள் இப்படிச் செய்தனர். அவர்களுக்குப் பொருத்தமான அறிஞர் ஒருவர், வால்வா நாட்டவரான பிலிப் 1346ஆம் ஆண்டின் அரசாணை ஒன்றில் கூறுகிறார், "செலாவணியின் வர்த்தகம், இயைபு, வழங்கல் ஆகியனவும் அது குறித்து சட்டங்கள் பிறப்பிக்கும் அதிகாரமும்...எமது விருப்பத்தின் படியும், எமக்கு உசிதமெனத் தோன்றுகிற படியும் செலாவணி விகிதத்தையும் விலையையும் நிர்ணயிப்பது எம்மையும் எமது மாட்சிமை பொருந்திய அரசையுமே சாரும் என்பது குறித்து யாரும் ஐயம் கொள்ளற்க." பணத்தின் மதிப்பு பேரரசரின் அரசாணையால் நிர்ணயிக்கப்படுவது ரோமானியச் சட்டத்தில் ஒரு விதியாகும். பணத்தை சரக்கெனக் கொள்வது வெளிப்படையாகவே தடை செய்யப்பட்டது. "எப்படியானாலும், எந்த ஒருவரும் பணத்தை வாங்க சட்டப்படி அனுமதி கிடையாது; பணம் பொது உபயோகத்திற்காகப் படைக்கப்பட்டதென்பதால், அது சரக்காய் இருக்க அனுமதியில்லை." இந்தப் பிரச்சினையை ஜி.பி. பகனினி ஓரளவுக்குச் சிறப்பாகவே ஆராய்ந்துள்ளளார்: "Saggio sopra il giusto pregio delle cose, 1751"; Custodi "Parte Moderna," பாகம் II. தனது நூலின் இரண்டாவது பகுதியில் பகனினி தனது வாதத் திறனை முக்கியமாய் வழக்கறிஞர்களை எதிர்த்துப் பிரயோகிக்கிறார்.

ஒரு சரக்கின் சமதை வடிவம் அதன் மதிப்பினது பருமனின் நிர்ணயிப்பைக் குறிப்பதாகாது என்று முன்பே குறிப்பிட்டோம். எனவே தங்கம் பணமாகும், ஆதலால் மற்றெல்லாச் சரக்குகளுக்காகவும் நேரடியாகப் பரிவர்த்தனை செய்து கொள்ளத் தக்கதாகும் என்பதை நாம் அறிந்திருந்தாலும், உதாரணமாக 10 இராத்தல் தங்கத்தின் பெறுமானம் எவ்வளவு என்பதை அதிலிருந்து அறிய வழியில்லை. மற்ற ஒவ்வொரு சரக்கையும் போலவே பணமும் தனது மதிப்பின் பருமனை மற்ற சரக்குகளின் வாயிலாக ஒப்பீட்டு முறையில் அன்றி வேறு விதத்தில் வெளியிட முடியாது. இந்த மதிப்பு அதன் உற்பத்திக்கு அவசியமான உழைப்பு நேரத்தால் நிர்ணயிக்கப்படுகிறது; அதே அளவு உழைப்பு நேரம் செலவாகிற வேறு எந்த சரக்கின் அளவாலும் அது தெரிவிக்கப்படுகிறது.[56] அதன் ஒப்பீட்டு மதிப்பை இவ்வாறு அளவுவழியில் நிர்ணயிப்பது பண்டமாற்றைக் கொண்டு அதன் உற்பத்தி ஸ்தானத்தில் நடைபெறுகிறது. அது பணமாகச் சுற்றோட்டத்தில் இறங்கும் போது, அதன் மதிப்பு ஏற்கெனவே குறிக்கப்பட்டதாக உள்ளது. 17ஆவது நூற்றாண்டின் கடைசிப்* பகுதியிலேயே, பணம் ஒரு சரக்குதான் என்பது நிரூபணமாகியிருந்தது; ஆனால் இந்நிலை பகுப்பாய்வின் பிள்ளைப் பிராயத்தையே குறிக்கிறது. பணம் ஒரு சரக்கே என்பதைப் புரிந்து கொள்வதில் சிரமமில்லை. ஒரு சரக்கு பணமாவது எப்படி, ஏன், எவ்வழியில் என்பதைக் கண்டுபிடிப்பதில்தான் சிரமம் உள்ளது.[57]

---

[56] ''ஒரு மனிதன் ஒரு மூட்டை தானியத்தை உற்பத்தி செய்யக் கூடிய அதே நேரத்தில் பெரு நாட்டின் மண்ணிலிருந்து ஒரு அவுன்ஸ் வெள்ளியை லண்டனுக்குக் கொண்டுவர முடியுமென்றால், ஒன்று மற்றதன் இயற்கை விலையாகும்; இப்போது, புதிய அல்லது இன்னும் எளிதான சுரங்கங்களின் பயனாய், ஒரு மனிதன் முன்பு ஒரு அவுன்ஸ் வெள்ளியைச் சேகரித்த அதே சுலபத்துடன் இரண்டு அவுன்ஸ் வெள்ளியைச் சேகரிக்க முடியும் என்றால், மற்றவை மாறாதிருக்க, தானியம் முன்பு மூட்டை ஐந்து ஷில்லிங் விலைக்குக் கிடைத்த போது எவ்வளவு மலிவானதோ, அவ்வளவு மலிவானதாகவே பத்து ஷில்லிங்குக்கு இருக்கும்.'' வில்லியம் பெட்டி., ''வரிகள், கொடைகள் பற்றிய வியாசம்.'' லண்டன், 1667, பக்கம் 32.

[57] ''பணத்திற்குத் தரப்படும் தவறான இலக்கணங்களை, இரு பிரதான வகைகளாகப் பிரிக்கலாம்; ஒன்று பணத்தை சரக்கை விட மேலானதாக்குவது, இன்னொன்று கீழானதாக்குவது'' என்று நமக்கு முதலில் தெரிவித்த பின்னர், அறிவார்ந்த பேராசிரியர் ரோஷர் பணத்தின் இயல்பு குறித்து மிகக் கலப்பான நீண்ட நூற்பட்டியல் ஒன்றை நமக்குத் தருகிறார். இதிலிருந்து, இத்தத்துவத்தின் உண்மை வரலாறு பற்றி அவருக்குச் சொற்ப ஞானமும் இல்லை எனத் தெரிகிறது. பின் அவர் இவ்வாறு நீதி மொழிகிறார்: ''மற்றபடி பிற்காலத்திய பொருளாதார அறிஞர்களில் பெரும்பாலார் பணத்தை மற்ற சரக்குகளிலிருந்து வேறுபடுத்துகிற தனிக் குணங்களைப் போதுமான அளவு மனதிலிருத்துவதில்லை என்பதை மறுப்பதற்கில்லை.'' (மாறாக, ஒரு சரக்கை விட மேலாக அல்லது கீழாக அது இருப்பது அப்போதே!)...''இந்த அளவில், கானிலின் அரைகுறையான வாணிப ஊக்கவாதக் கருத்து முற்றிலும் அடிப்படையே இல்லாதது அன்று.'' (வில்ஹெல்ம் ரோஷர்: ''Die Grundlagen der Nationaloekonomie,'' 3ஆம் பதிப்பு, 1858, பக்கம் 207-210.) மேலாக! கீழாக! போதுமான அளவில் இல்லை! இந்த அளவில்! மொத்தத்தில் இல்லை! கருத்துகளிலும் மொழியிலும் என்னே

எப்பொருளில் இன்னொரு பொருளினது மதிப்பின் பருமன் குறிக்கப்படுகிறதோ அப்பொருள், இந்த உறவைச் சாராமல் இயற்கையால் அதற்கு அளிக்கப்பட்ட சமூகக் குணமாகச் சமதை வடிவத்தைப் பெற்றிருப்பதாகத் தோன்றுகிறது என்பதை ஆரம்ப மதிப்புத் தெரிவிப்பான x சரக்கு A= y சரக்கு B என்பதிலிருந்து நாம் முன்பே பார்த்தோம். நாம் இந்தப் பொய்த் தோற்றத்தைப் பின்தொடர்ந்து சென்றோம்; சர்வப் பொதுச் சமதை வடிவம் ஒரு குறிப்பிட்ட சரக்கின் தசையுருவமாகி, இவ்வாறு பண வடிவமாகப் படிக உரு அடைந்ததுமே முழுமையாவதாகிய அத்தோற்றத்தின் இறுதி நிலைபாட்டை வந்தடைந்தோம். நிகழ்வதாகத் தோன்றுவது, மற்றெல்லா சரக்குகளும் தமது மதிப்பைத் தங்கத்தில் வெளியிடுவதால் அது பணம் ஆகிவிடுகிறது என்பதல்ல; மாறாக, தங்கம் பணமாகும் என்பதால் மற்றெல்லாச் சரக்குகளும் தமது மதிப்புகளைச் சர்வப் பொதுவாகத் தங்கத்தில் வெளியிடுகின்றன என்பதே. இந்நிகழ்முறையின் இடைநிலைப் படிகள் தடயமேதும் விடாமல் முடிவில் மறைந்து போகின்றன. சரக்குகள், தம் தரப்பில் எம்முயற்சியுமின்றியே, தமது மதிப்பு தம் கூட்டத்திலுள்ள இன்னொரு சரக்கின் உருவில் முழுமையாகக் குறிக்கப்பட்டிருப்பதைக் காண்கின்றன. தங்கம், வெள்ளி என்ற இந்தப் பொருட்கள் பூமியின் அடிவயிற்றிலிருந்து வெளிவரும் நிலையிலேயே, மனித உழைப்பு அனைத்தின் நேரடி அவதாரமாக உள்ளன. பணத்தின் மாயாஜாலத்துக்கு இதுவே காரணம். தற்போது பரிசீலனையிலுள்ள சமூக வடிவத்தில், சமுதாயப் பொருளூற்பத்தி நிகழ்முறையில் மனிதர்கள் முற்றிலும் தனித்தனியான அணுக்களைப் போல் நடந்து கொள்கின்றனர். ஆதலால், உற்பத்தியில் அவர்கள் ஒருவரோடு ஒருவர் கொண்டுள்ள உறவுகள் அவர்களது கட்டுப்பாட்டையும் உணர்வுபூர்வமான தனிப்பட்ட செயலையும் சாராத பொருளாயதத் தன்மையுடையதாகின்றன. உற்பத்திப் பொருட்கள் பொதுவாக சரக்கு வடிவத்தை எடுப்பதன் வாயிலாக இந்த உண்மைகள் முதலில் தம்மை வெளிப்படுத்திக் கொள்கின்றன. சரக்கு உற்பத்தியாளர்களது சமுதாயத்தின் படிப்படியான வளர்ச்சி தனிச் சிறப்புக்குரிய ஒரு சரக்கைப் பணத் தன்மையுடையதாக்குவது எவ்வாறு என்று பார்த்தோம். எனவே, பணம் போடுகிற புதிர் சரக்குகள் போடுகிற புதிரேயன்றி வேறில்லை; அது இப்போது முன்னிலும் அப்பட்டமான வடிவத்தில் நம்முன் எழுகிறது.

---

தெளிவு, என்னே நுட்பம்! இப்படிப்பட்ட கதம்பமான பேராசிரியப் பிதற்றலுக்கு அரசியல் பொருளாதாரத்தின் ''பகுப்பாய்வு-உடலியல் முறை'' என்ற புனைப் பெயரை திரு ரோஷர் அடக்கத்துடன் சூட்டுகிறார்! எப்படியானாலும், பணம் ''ஒரு ரம்மியமான சரக்கு'' என்ற கண்டுபிடிப்புக்கான பெருமை அவரையே சாரும்.

## அத்தியாயம் III

# பணம், அல்லது சரக்குகளின் சுற்றோட்டம்

## பிரிவு 1. — மதிப்புகளின் அளவை

இந்த நூல் முழுவதிலுமே, எளிமையின் நிமித்தம், தங்கத்தைப் பணச் சரக்காக வைத்துக் கொள்கிறேன்.

பணத்தின் முதல் முக்கியப் பணி சரக்குகளுக்கு அவற்றின் மதிப்புகளைத் தெரிவிப்பதற்கான பொருளை வழங்குவது, அல்லது அவற்றின் மதிப்புகளைப் பண்புவழியில் சமமான, அளவுவழியில் ஒப்பிடத்தக்க ஒரே அலகு வகைப்பட்ட பருமன்களாகக் காட்டுவதாகும். இவ்வாறு அது மதிப்பின் சர்வப் பொது அளவையாக [universal measure of value] பயன்படுகிறது. இந்தப் பணியின் பயனாகத்தான் தலைசிறந்த சமதைச் சரக்கான தங்கம் பணமாகிறது.

சரக்குகளைப் பொதுவளவுடையனவாய் [commensurable] ஆக்குவது பணமன்று. நேர்மாறானதே உண்மை. ஏனெனில் எல்லாச் சரக்குகளுமே மதிப்புகள் என்ற விதத்தில் பொருள் வடிவாக்கப்பட்ட மனித உழைப்பாகவும், எனவே பொதுவளவுடையனவாகவும் இருப்பதால்தான் அவற்றின் மதிப்புகளை ஒரே தனிவகைச் சரக்கினால் அளவிடவும், அத்தனிவகைச் சரக்கை அவற்றின் மதிப்புகளின் பொது அளவையாக, அதாவது பணமாக மாற்றவும் முடிகிறது. மதிப்பின் அளவை என்ற விதத்தில் பணமானது சரக்குகளில் உள்ளார்ந்துள்ள மதிப்பளவையான உழைப்பு நேரம் அவசியமாகவே மேற்கொள்ள வேண்டிய புலப்பாட்டு வடிவமாகும்.[58]

---

58 எடுத்துக்காட்டாக, ஒரு துண்டுக் காகிதம் x மணி நேர உழைப்பைக் குறிக்கக் கூடிய முறையில் பணம் உழைப்பு நேரத்தை நேரடியாகக் குறிக்காதது ஏன் என்ற கேள்வியும், சரக்குற்பத்தி நிலவுவதாய் வைத்துக் கொண்டால் உற்பத்திப் பொருட்கள் சரக்குகளின் வடிவத்தை மேற்கொள்ள வேண்டியது ஏன் என்ற கேள்வியும் சாராம்சத்தில்

ஒரு சரக்கின் மதிப்பைத் தங்கத்தின் வாயிலாகத் தெரிவிப்பது— x சரக்கு A = y பணச் சரக்கு—அதன் பண வடிவம் அல்லது விலை [price] ஆகும். 1 டன் இரும்பு = 2 அவுன்ஸ் தங்கம் என்பது போன்ற தனியொரு சமன்பாடு இரும்பின் மதிப்பை சமூக வழியில் செல்லுபடியாகக்கூடிய விதத்தில் தெரிவிக்க இப்போது போதுமானது. மற்றெல்லாச் சரக்குகளின் மதிப்புகளையும் தெரிவிக்கும் சமன்பாடுகளின் சங்கிலியில் ஒரு கரணையாக இந்தச் சமன்பாடு இனியும் இடம்பெறத் தேவையில்லை; ஏனெனில் சமதைச் சரக்கான தங்கம் இப்போது பணத்தின் தன்மையைப் பெற்றிருக்கிறது. ஒப்பீட்டு மதிப்பின் பொது வடிவம் சாமானிய அல்லது தனித்த ஒப்பீட்டு மதிப்பு என்ற தன் சுய ரூபத்தை மீண்டும் எடுத்துள்ளது. மறு புறம், ஒப்பீட்டு மதிப்பின் விரிந்த தெரிவிப்பான சமன்பாடுகளின் முடிவற்ற தொடர் இப்போது பணச் சரக்கின் ஒப்பீட்டு மதிப்பிற்குரிய தனிவித வடிவம் ஆகியிருக்கிறது. இத்தொடரே கூட இப்போது நிலையாய்க் குறிக்கப்பட்டு, உள்ளபடியான சரக்குகளது விலைகளின் மூலம் சமுதாய அங்கீகாரம் பெறுகிறது. எல்லா வகைச் சரக்குகளின் வாயிலாகவும் பண மதிப்பின் பருமனைக் கண்டுபிடிக்க விலைப் பட்டியலில் குறிக்கப்படுவதை நாம் பின்னோக்கி படித்தாலே போதும். ஆனால், பணத்திற்கென்று விலை ஒன்றுமில்லை. மற்றெல்லாச் சரக்குகளுடனும் இவ்வகையில் பணத்தையும் சம அந்தஸ்து பெறச் செய்ய வேண்டுமானால், அதனை அதன் சமதையாக அதற்கே சமன் செய்ய வேண்டி வரும்.

சரக்குகளின் விலை அல்லது பண வடிவம் என்பது பொதுவாக அவற்றின் மதிப்பு வடிவத்தைப் போலவே அவற்றின் கண்கூடான தசையுருவத்திலிருந்து முற்றிலும் வேறான ஒன்றாகும்; எனவே, அது முழுக்க முழுக்க கருத்தளவிலான [ideal] அல்லது மனத்தள

---

ஒன்றே. அவை சரக்கு வடிவத்தை மேற்கொள்வது, அவை சரக்குகளாகவும் பணமாகவும் வேறுபட்டுப் போவதை உள்ளார்த்தமாகக் குறிக்கிறது என்பதால் இது தெளிவு. அல்லது, தனிப்பட்ட உழைப்பு—தனியாட்களின் கணக்கில் சேரும் உழைப்பு—அதன் எதிர்க்கூறான நேரடிச் சமுதாய உழைப்பாக ஏன் கருதப்பட முடியாது? சரக்குற்பத்தி அடிப்படையிலான ஒரு சமுதாயத்தில் ''உழைப்புப் பணம்'' என்ற கற்பனாவாதக் கருத்தை வேறோரிடத்தில் நான் தீர்க்கமாக ஆராய்ந்துள்ளேன். (முன் வந்தது, பக்கம் 61 முதலானவை.) இது குறித்து நான் கூடுதலாய் சொல்லக் கூடியது இதுதான்: எடுத்துக்காட்டாக, நாடக அரங்கத்துக்கான அனுமதிச் சீட்டு எப்படிப் பணம் ஆகாதோ, அப்படியே ஓவனின் ''உழைப்புப் பணமும்'' ''பணம்'' ஆகாது. சரக்குற்பத்திக்கு சற்றும் பொருந்தாத ஓர் உற்பத்தி வடிவமான நேரடியாகக் கூட்டமைந்த உழைப்பை ஓவன் மனத்தில் கொண்டுள்ளார். உழைப்பின் சான்றிதழ் என்பது பொது உழைப்பில் தனியாள் ஆற்றிடும் பங்கினதும், நுகர்வுக்கெனத் தீர்மானிக்கப்பட்ட பொது உற்பத்தியின் ஒரு குறிப்பிட்ட பகுதிக்கான அவரது உரிமையினதும் சான்றே தவிர வேறில்லை. ஆனால், சரக்குற்பத்தியை அடிப்படையாகக் .கொண்டு அதே போழ்தில் பணத்தை வைத்து ஜாலம் புரிவதன் மூலம் அந்த உற்பத்தியின் அவசியமான நிலைமைகளைத் தட்டிக் கழிக்க முயலும் எண்ணம் ஓவனுக்கு இல்லவே இல்லை.

விலான [mental] வடிவமாகும். இரும்பு, துணி, தானியம் இவற்றின் மதிப்பு கண்ணுக்குத் தெரியாததென்றாலும், இந்தப் பண்டங்களிலேயே உள்ளபடி இருக்கிற ஒன்றாகும். தங்கத்துடனான அவற்றின் சமத்துவத்தால் அம்மதிப்பு கருத்தளவில் குறிக்கப்படுகிறது; இந்தச் சமத்துவ உறவு அவற்றின் தலைக்குள் மட்டும் இருக்கிற ஒன்று எனலாம். எனவே அவற்றின் உடைமையாளர் அவற்றின் விலைகளை வெளியுலகத்திற்கு அறிவிக்கும் பொருட்டு, அவற்றுக்குத் தன் நாக்கைக் கொடுத்துதவ வேண்டும், அல்லது அவற்றின் மீது ஒரு விலைச் சீட்டைத் தொங்கவிட வேண்டும்.[59] தங்கத்தின் வாயிலாகச் சரக்குகளின் மதிப்பைத் தெரிவிப்பது வெறும் கருத்தளவிலான செயலே என்பதால், நாம் இந்தக் காரியத்துக்குக் கற்பனையான அல்லது கருத்தளவிலான பணத்தைப் பயன்படுத்தலாம். ஒவ்வொரு வியாபாரியும் தன் சரக்குகளின் மதிப்பை விலையாக அல்லது கற்பனைப் பணமாகத் தெரிவிப்பதற்கு தான் அவற்றைப் பணமாக மாற்றத் தேவையே இல்லை என்பதை அறிவார்; கோடிக் கணக்கான பவுன் பெறுமானமுள்ள சரக்குகளைத் தங்கத்தில் மதிப்பிடுவதற்கு குன்றிமணியளவும் கூட மெய்யான தங்கம் தேவையில்லை என்பதையும் அவர் அறிவார். எனவே பணம் மதிப்பின் அளவையாகப் பயன்படும் போது, அது கற்பனையான அல்லது கருத்தளவிலான பணமாகவே பிரயோகிக்கப்படுகிறது. இந்த நிலைமை தறிகெட்ட தத்துவங்களுக்கு வழி செய்திருக்கிறது.[60] ஆனால், மதிப்பின் அளவைக்குரிய பணிகளை ஆற்றுகிற பணம் கருத்தளவிலான பணமே என்ற போதிலும், விலையானது உள்ளபடியே பணமாக இருக்கும் சாரப் பொருளையே முற்றிலும் பொறுத்திருக்கிறது. ஒரு டன் இரும்பில்

---

[59] காட்டுமிராண்டிகளும், அரை-நாகரிக இனத்தாரும் நாக்கை வேறுவிதமாகப் பயன்படுத்துகின்றனர். பாஃபின் விரிகுடாவின் மேற்கு கரையில் வசிப்போர் பற்றி கேப்டன் பாரி கூறுகிறார்: ''இது தொடர்பாக (அவர் பண்டமாற்றைக் குறிப்பிடுகிறார்) அவர்கள் அதனை (தம்மிடம் காட்டப்பட்ட பண்டத்தை) தொட்டு இரு முறை நக்கினர்; இதன்பின் பேரம் திருப்திகரமாக முடிவு செய்யப்பட்டதாய் அவர்கள் கருதுவதாகத் தெரிந்தது.'' இதே விதத்தில் கிழக்கத்திய எஸ்கிமோக்கள் பரிவர்த்தனையில் தாங்கள் பெற்ற பண்டங்களை நக்கினர். இவ்வாறு வடபுலத்தில் நாக்கு தனதாக்கத்தின் உறுப்பாகப் பயன்படுத்தப்படுகிறது என்றால், தென்புலத்தில் சேர்க்கப்பட்ட சொத்தின் உறுப்பாக வயிறு பயன்படுகிறது என்பதிலும், காஃபிர் ஒரு மனிதனின் செல்வத்தை அவனது தொந்தியின் அளவைக் கொண்டு மதிப்பிடுகிறான் என்பதிலும் வியப்பில்லை. தம் நோக்கத்தைக் காஃபிர்கள் அறிந்திருக்கிறார்கள் என்பதைப் பின்வருவது காட்டுகிறது: தொழிலாளி வர்க்கத்தின் பெரும் பகுதியினர் மத்தியில் கொழுப்புச் சத்துள்ள உணவு குறைவாக இருப்பதை 1864ஆம் ஆண்டின் அதிகாரபூர்வ பிரித்தானிய சுகாதார அறிக்கை வெளிப்படுத்திய அதே நேரத்தில், டாக்டர் ஹார்வி என்ற ஒருவர் (இரத்த ஓட்டத்தைக் கண்டுபிடித்துப் புகழ்பெற்ற ஹார்வி அல்லர்) முதலாளிமார்கள், பிரபுமார்கள் ஆகியோரின் அதிகப்படியான கொழுப்பைக் குறைப்பதற்கான பத்திய முறைகளை விளம்பரம் செய்து பணம் பண்ணினார்.

[60] பார்க்கவும்: கார்ல் மார்க்ஸ்: ''அரசியல் பொருளாதார விமர்சனத்திற்கு ஒரு பங்களிப்பு,'' பக்கம் 53 முதலானவை.

அடங்கியுள்ள மதிப்பு, அதாவது மனித உழைப்பின் அளவு அதே அளவு உழைப்பு அடங்கியுள்ள பணச் சரக்கின் அளவால் கற்பனையில் தெரிவிக்கப்படுகிறது. ஆதலால், தங்கம், வெள்ளி, அல்லது செம்பு மதிப்பளவையாய் இருப்பதற்கேற்ப, ஒரு டன் இரும்பின் மதிப்பு வெவ்வேறான விலைகளால் தெரிவிக்கப்படும், அல்லது முறையே அவ்வுலோகங்களின் வெவ்வேறான அளவுகளால் குறிக்கப்படும்.

எனவே தங்கம், வெள்ளி போன்ற இருவேறு சரக்குகள் ஏக காலத்தில் மதிப்பின் அளவைகளாக இருந்தால் எல்லாச் சரக்குகளும் இரு விலைகளை—ஒன்று தங்க விலை, இன்னொன்று வெள்ளி விலை—பெறுகின்றன. தங்கத்தின் மதிப்புடனான வெள்ளியின் மதிப்பினது விகிதம்—உதாரணமாக 15:1 என்போம்—மாறாமலிருக்கும் வரை இவ்விரு விலைகளும் பாதிப்பின்றி அருகருகே இருக்கின்றன. அவற்றின் விகிதத்தில் ஏற்படும் ஒவ்வொரு மாற்றமும் சரக்குகளின் தங்க விலைகளுக்கும் வெள்ளி விலைகளுக்கும் இடையில் நிலவுகிற விகிதத்தை பாதிக்கிறது; இவ்வாறு மதிப்பின் இரட்டை நியமம் [double standard] ஒரு நியமத்தின் பணிகளுக்குப் பொருந்தாதது என்பதை உண்மைகளின் வாயிலாக நிரூபிக்கிறது.[61]

---

[61] ''தங்கம், வெள்ளி இரண்டுமே பணத்தின் அல்லது மதிப்பளவையின் பணியை ஒருங்கே ஆற்றுமாறு சட்டத்தால் விதிக்கப்பட்டுள்ள இடங்களிலெல்லாம் அவற்றை ஒரே பொருளாகக் கருதுவதற்கு எப்போதுமே முயற்சி நடந்துள்ளது. ஆனால் அம்முயற்சி வெற்றி பெற்றதில்லை. உழைப்பு நேரத்தின் ஒரு குறிப்பிட்ட அளவு சேர்க்கப்பட்டுள்ள தங்கம், வெள்ளி இவற்றின் அளவுகளிடையே மாறாத விகிதமொன்று இருப்பதாக அனுமானித்துக் கொள்வது, உண்மையில், தங்கமும் வெள்ளியும் ஒரே பொருளே என்றும், இவற்றில் குறைந்த மதிப்புடைய உலோகமான வெள்ளியின் ஒரு குறிப்பிட்ட கட்டி தங்கத்தின் ஒரு குறிப்பிட்ட கட்டியின் மாறாத பின்னமாகும் என்றும் அனுமானித்துக் கொள்வதாகும். மூன்றாம் எட்வர்டின் ஆட்சிக் காலத்திலிருந்து இரண்டாம் ஜார்ஜின் காலம் வரை, தங்கம், வெள்ளி இவற்றின் சட்டபூர்வமாக நிர்ணயிக்கப்பட்ட விகிதம் அவற்றின் உண்மை மதிப்புகளிலான ஏற்ற இறக்கங்களுடன் மோதிக் கொண்டதால் சரமாரியாக ஏற்பட்ட குழப்பங்களின் நீண்ட வரலாறே அக்காலத்திய இங்கிலாந்தில் பணத்தின் வரலாறாகும். ஒரு நேரத்தில் தங்கமும், இன்னொரு நேரத்தில் வெள்ளியும் அதிகப்படியாக உயர்ந்திருந்தன. அந்த நேரத்துக்கு அதன் மதிப்பை விடக் கீழாக மதிப்பிடப்பட்ட உலோகம் புழக்கத்திலிருந்து விலக்கப்பட்டு, உருக்கப்பட்டு, ஏற்றுமதி செய்யப்பட்டது. பின் இரு உலோகங்களுக்குமிடையிலான விகிதம் மீண்டும் சட்டத்தால் மாற்றப்பட்டது; ஆனால் சீக்கிரமே இப்புதிய பெயரளவிலான விகிதம் மீண்டும் எதார்த்தமான விகிதத்துடன் மோதிக் கொண்டது. நம் காலத்திலேயே இந்தோ-சீனாவில் வெள்ளிக்கு ஏற்பட்ட வேண்டலின் [demand] விளைவாக வெள்ளியுடன் ஒப்பிடுகையில் தங்கத்தின் மதிப்பில் மிகச் சிறு அளவிலான தற்காலிகச் சரிவு ஏற்பட்டது; இதனால், வெள்ளியை ஏற்றுமதி செய்தல், தங்கமானது வெள்ளியை புழக்கத்திலிருந்து விலக்குதல் என்ற அதே நிகழ்வு இன்னும் விரிந்த அளவில் பிரான்சில் நடந்தது. 1855, 1856, 1857 ஆண்டுகளில் பிரான்சில் வெள்ளி இறக்குமதிகளைக் காட்டிலும் வெள்ளி ஏற்றுமதிகள் £14,704,000 உபரியாய் இருக்க, தங்க ஏற்றுமதிகளைக் காட்டிலும் தங்க இறக்குமதிகள் £41,580,000 உபரியாய் இருந்தன. உண்மையில், இரு உலோகங்களும் சட்டப்படி மதிப்பளவைகளாகவும், ஆதலால் சட்டபூர்வ செலாவணியாகவும் அமைந்து இரண்டிலெந்த உலோகத்திலும் பட்டுவாடா செய்யும்

திட்டமான விலைகளுடைய சரக்குகள் பின்வரும் வடிவத்தில் வெளியாகின்றன: a சரக்கு A = x தங்கம்; b சரக்கு B = z தங்கம்; c சரக்கு C = y தங்கம், இத்தியாதி; a, b, c ஆகியவை A, B, C சரக்குகளின் திட்டமான அளவுகளையும், x, z, y ஆகியவை தங்கத்தின் திட்டமான அளவுகளையும் குறிக்கின்றன. எனவே, இந்தச் சரக்குகளின் மதிப்புகள் தங்கத்தின் அத்தனை வெவ்வேறு அளவுகளாகக் கற்பனையில் மாற்றப்படுகின்றன. எனவே, சரக்குகளின் குழப்பந்தரும் பல்வகைமையையும் மீறி, அவற்றின் மதிப்புகள் ஒரே வகையான பருமன்கள் ஆகின்றன — தங்கப் பருமன்கள் ஆகின்றன. அவற்றை இப்போது ஒன்றோடு ஒன்று ஒப்பிடலாம்; அளவிடலாம்; ஓர் அலகு அளவை என்ற விதத்தில் தங்கத்தின் ஒரு குறிப்பிட்ட அளவுடன் அவற்றை ஒப்பிடுவதற்கான தேவை செய்நுட்ப வழியில் உணரப்படுகிறது. இந்த அலகு அடுத்து ஈவுப் பகுதிகளாக [aliquot parts] பிரிக்கப்படுவதன் மூலம் நியமம் அல்லது அளவுகோல் ஆகி விடுகிறது. உதாரணமாக அலகாய்ப் பயன்படுகிற ஒரு இராத்தல் எடை ஒரு புறம் அவுன்சுகளாகப் பிரிக்கத் தக்கதாகவும், மறு புறம் அந்தர்களாகச் சேர்க்கத் தக்கதாகவும் இருக்கிற விதத்தில், தங்கமும் வெள்ளியும் செம்பும் பணமாவதற்கு முன்பே தமது எடை நியமங்களின் உருவில் இப்படிப்பட்ட திட்டமான அளவைகளைப் பெற்றுள்ளன.[62] இந்தக் காரணத்தால்தான், எல்லா உலோகச் செலாவணிகளிலுமே, பணம் அல்லது விலையின் நியமங்களுக்குத் தரப்படும் பெயர்கள் ஏற்கெனவே இருந்து வரும் எடை நியமங்களின் பெயர்களிலிருந்தே ஆரம்பத்தில் தெரிந்தெடுக்கப்பட்டன.

**மதிப்பின் அளவை** [measure of value] என்ற விதத்திலும், **விலையின் நியமம்** [standard of price] என்ற விதத்திலும், பணம்

---

உரிமை சகலருக்குமுள்ள நாடுகளில், மதிப்பில் உயருகிற உலோகம் அதிகமாய் வேண்டப்படுகிறது; மற்ற ஒவ்வொரு சரக்கையும் போலவே, மிகை மதிப்பீடு செய்யப்பட்ட உலோகத்தில் தன் விலையை அளவிடுகிறது. எதார்த்தத்தில் இந்த உலோகம் மட்டுமே மதிப்பின் நியமமாகப் பயன்படுகிறது. இரு சரக்குகள் சட்டப்படி மதிப்பளவையின் பணிகளைச் செய்யும் இடங்களில் நடைமுறையில் ஒன்று மட்டுமே அந்த நிலையைக் காப்பாற்றிக் கொள்கிறது என்பதே இப்பிரச்சினை குறித்து அனுபவம் அனைத்தினதும் வரலாற்றினதும் முடிவாகும்.'' (கார்ல் மார்க்ஸ், முன் வந்தது, பக்கம் 52,53.)

62 இங்கிலாந்தில் அவுன்ஸ் தங்கம் பணத்தின் நியம அலகாகப் பயன்படுகையில், பவுன் ஸ்டெர்லிங் அதன் ஈவுப் பகுதியாக அமையவில்லை என்ற விநோதமான நிலைமைக்குப் பின்வருமாறு விளக்கம் தரப்படுகிறது. ''நமது நாணய முறை ஆரம்பத்தில் வெள்ளியை மட்டுமே பயன்படுத்துவதற்கு ஏற்றவாறு அமைக்கப்பட்டிருந்தது; எனவே, ஒரு அவுன்ஸ் வெள்ளியை எப்போதுமே தக்க எண்ணிக்கையிலான நாணயத் துண்டுகளாகப் பிரிக்க முடியும்; ஆனால் வெள்ளிக்கு மட்டுமே ஏற்றவாறு அமைக்கப்பட்ட நாணய முறைக்குள் தங்கம் பின்னொரு காலத்தில் நுழைக்கப்பட்டது என்பதால் ஒரு அவுன்ஸ் தங்கத்தை ஈவுத் தொகையிலான துண்டுகளாகப் பிரித்து நாணயமாக்க முடியாது.'' மக்லாரென், ''செலாவணி வரலாற்றின் உருவரை,'' லண்டன், 1858, பக்கம் 16.

இருவேறு பணிகளை ஆற்ற வேண்டியிருக்கிறது. மனித உழைப்பின் சமூக வழியில் அங்கீகரிக்கப்பட்ட அவதாரம் என்ற முறையில் அது மதிப்பின் அளவை ஆகும்; குறிப்பிட்ட எடையுள்ள உலோகம் என்ற முறையில் அது விலையின் நியமம் ஆகும். மதிப்பின் அளவை என்ற விதத்தில் அது பலதரப்பட்ட சரக்குகள் அனைத்தின் மதிப்புகளையும் விலைகளாக—கற்பனையான தங்க அளவுகளாக—மாற்றுவதற்குப் பயன்படுகிறது; விலையின் நியமம் என்ற விதத்தில் அது தங்கத்தின் அந்த அளவுகளை அளவிடுகிறது. மதிப்புகளின் அளவை சரக்குகளை மதிப்புகளென்ற முறையில் அளவிடுகிறது; மாறாக, விலையின் நியமமானது ஓர் அலகு அளவிலான தங்கத்தைக் கொண்டு தங்கத்தின் அளவுகளை அளவிடுகிறதே தவிர, தங்கத்தின் ஓர் அளவின் மதிப்பை இன்னோர் அளவின் எடையைக் கொண்டு அளவிடுவதில்லை. தங்கத்தை விலையின் நியமமாக்கும் பொருட்டு, குறிப்பிட்ட ஓர் எடையானது அலகாக நிர்ணயிக்கப்பட வேண்டும். ஒரே வகையான அளவுகளை அளவிடுகிற எல்லா சந்தர்ப்பங்களிலும் போலவே இங்கும் ஒரு மாறாத அளவை அலகினை நிறுவுவது சர்வமுக்கியமாகும். எனவே இந்த அலகு எவ்வளவுக்கெவ்வளவு மாறுபாட்டுக்கு உட்படாதுள்ளதோ, அவ்வளவுக்கவ்வளவு விலையின் நியமம் என்ற தன் பொறுப்பைத் திறம்பட நிறைவேற்றுகிறது. ஆனால் தங்கமும் கூட உழைப்பின் உற்பத்திப் பொருளே என்பதால்தான், எனவே அதன் மதிப்பும் மாறக் கூடியதே என்பதால்தான் அது ஒரு மதிப்பளவையாகப் பயன்பட முடிகிறது.[63]

முதலாவதாக, தங்கத்தின் மதிப்பிலான மாற்றம் விலையின் நியமம் என்ற அதன் பணியை எவ்விதத்திலும் பாதிப்பதில்லை என்பது தெட்டத் தெளிவு. இந்த மதிப்பு எப்படி மாறுபட்டாலும், உலோகத்தின் வெவ்வேறு அளவுகளின் மதிப்புகளிடையிலான விகிதாசாரங்கள் மாறுவதில்லை. தங்கத்தின் மதிப்பு எவ்வளவுதான் வீழ்ந்தாலும், 12 அவுன்ஸ் தங்கத்தின் மதிப்பு எப்போதுமே 1 அவுன்ஸ் தங்கத்தின் மதிப்பைப் போல் 12 மடங்குதான்; விலைகளைப் பொறுத்த வரை, தங்கத்தின் வெவ்வேறு அளவுகளிடையிலான உறவு மட்டுமே கருத்துக்குரியது. மறு புறம், ஓர் அவுன்ஸ் தங்கத்தின் மதிப்பிலான உயர்வு அல்லது வீழ்ச்சி எதுவும் அதன் எடையை மாற்றி விட முடியாது என்பதால் அதன் ஈவுப் பகுதிகளின் எடையில் எந்த மாற்றமும் ஏற்பட முடியாது. இவ்வாறு தங்கம் அதன் மதிப்பு எவ்வளவுதான் மாறினாலும் விலையின் மாறாத நியமத்துக்குரிய சேவையை எப்போதுமே புரிகிறது.

[63] ஆங்கிலேய எழுத்தாளர்களைப் பொறுத்த வரை, மதிப்பளவைக்கும், விலையின் நியமத்துக்கும் (மதிப்பின் நியமத்துக்கும்) இடையிலான குழப்பம் சொல்லி மாளாது; அவற்றின் பணிகளும், அவ்வாறே அவற்றின் பெயர்களும் ஓயாது ஒன்றுக்குப் பதிலாய் ஒன்று இடம் மாறி விடுகின்றன.

இரண்டாவதாக, தங்கத்தின் மதிப்பில் ஏற்படும் மாற்றம் மதிப்பின் அளவை என்ற முறையிலான அதன் பணிகளில் குறுக்கிடுவதில்லை. இம்மாற்றம் எல்லாச் சரக்குகளையும் ஏககாலத்தில் பாதிக்கிறது, எனவே அவற்றின் ஒப்பீட்டு மதிப்புகள் இப்போது முன்னிலும் உயர்ந்த அல்லது குறைந்த தங்க விலைகளில் தெரிவிக்கப்படுகின்றன என்ற போதிலும், பிற நிலைமைகள் மாறாதிருக்க, அவற்றிடையிலான ஒப்பீட்டு மதிப்புகளை மாற்றமின்றி விட்டு வைக்கிறது.

எந்தச் சரக்கின் மதிப்பையும் வேறொரு சரக்கினது பயன்-மதிப்பின் ஒரு திட்டமான அளவைக் கொண்டு நாம் மதிப்பீடு செய்யும் போது நேரிடுவது போலவே, முதலில் சொன்ன சரக்கின் மதிப்பைத் தங்கத்தில் மதிப்பிடுவதன் மூலம், குறிப்பிட்ட காலத்தில் குறிப்பிட்ட அளவு தங்கத்தின் உற்பத்திக்கு குறிப்பிட்ட அளவிலான உழைப்பு செலவாகிறது என்பதற்கு மேல் வேறு எதையும் நாம் அனுமானித்துக் கொள்ளவில்லை. பொதுவாக விலைகளின் ஏற்ற இறக்கங்களைப் பொறுத்த வரை, அவை முன்பொரு அத்தியாயத்தில் ஆராயப்பட்டுள்ள ஆரம்ப ஒப்பீட்டு மதிப்பின் விதிகளுக்கு உட்பட்டவையாகும்.

சரக்குகளின் விலைகளில் பொதுவான ஏற்றம் என்பது—பணத்தின் மதிப்பு மாறாதிருக்க—அவற்றின் மதிப்புகளிலான ஏற்றத்தின் விளைவாகவோ அல்லது, சரக்குகளின் மதிப்புகள் மாறாதிருக்க, பணத்தின் மதிப்பிலான வீழ்ச்சியின் விளைவாகவோ இருக்கலாம். மறு புறம், விலைகளில் பொதுவான வீழ்ச்சி என்பது—பணத்தின் மதிப்பு மாறாதிருக்க—சரக்குகளின் மதிப்புகளிலான வீழ்ச்சியின் விளைவாகவோ அல்லது, சரக்குகளின் மதிப்புகள் மாறாதிருக்க, பணத்தின் மதிப்பிலான ஏற்றத்தின் விளைவாகவோ இருக்கலாம். எனவே, பணத்தின் மதிப்பிலான ஏற்றம் அவசியமாகவே சரக்குகளின் விலைகளில் ஒரு விகிதாசார வீழ்ச்சியைக் குறிக்கிறது என்றோ அல்லது பணத்தின் மதிப்பிலான வீழ்ச்சி விலைகளில் ஒரு விகிதாசார உயர்வைக் குறிக்கிறது என்றோ கொள்வதற்கில்லை. இவ்வாறான விலை மாற்றம் மதிப்பு மாறாதிருக்கும் சரக்குகளைப் பொறுத்து மட்டுமே ஏற்படுகிறது. உதாரணமாக, எச்சரக்குகளின் மதிப்பு பணத்தின் மதிப்புடன் ஏககாலத்திலும் ஏற்ற விகிதாசாரத்திலும் உயர்கிறதோ, அச்சரக்குகளைப் பொறுத்து விலைமாற்றமேதும் ஏற்படுவதில்லை. அவற்றின் மதிப்பு பணத்தின் மதிப்பை விட மெதுவாகவோ வேகமாகவோ உயர்ந்தால், அவற்றின் விலைகளிலான வீழ்ச்சி அல்லது உயர்வானது அவற்றின் மதிப்பிலான மாற்றத்துக்கும் பணத்தின் மதிப்பிலான மாற்றத்துக்கும் இடையிலான வேறுபாட்டால் நிர்ணயிக்கப்படும்; இவ்வாறே இன்னும் சொல்லலாம்.

இனி விலை வடிவத்தின் பரிசீலனைக்குத் திரும்புவோம்.

பணமாகச் செயல்படுகிற உயர்நிலை உலோகத்தின் பல்வேறு எடைகளின் நடப்பிலுள்ள பணப் பெயர்களுக்கும், அந்தப் பெயர்கள் ஆரம்பத்தில் குறித்த உள்ளபடியான எடைகளுக்கும் இடையில் ஒரு பொருத்தமின்மை படிப்படியாகக் கிளம்புகிறது. இந்தப் பொருத்தமின்மை வரலாற்றுக் காரணங்களின் விளைவாகும். இக் காரணங்களில் முக்கியமானவை: (1) அரைகுறை வளர்ச்சி பெற்ற சமுதாயத்துக்குள் அந்நியப் பணத்தின் இறக்குமதி. இது ரோமாபுரியில் அதன் ஆரம்ப காலத்தில் நிகழ்ந்தது; அங்கே தங்க, வெள்ளி நாணயங்கள் முதலில் அந்நியச் சரக்குகளாகப் புழங்கின. இந்த அந்நிய நாணயங்களின் பெயர்களும் உள்நாட்டு எடைகளின் பெயர்களும் ஒத்திருப்பதற்கில்லை. (2) செல்வம் அதிகரிக்க அதிகரிக்க, உயர்நிலை உலோகங்களில் உயர்ந்த உலோகம் தாழ்ந்த உலோகத்தை மதிப்பளவை என்ற நிலையிலிருந்து வெளியேற்றுகிறது. வெள்ளி செம்பையும், தங்கம் வெள்ளியையும் வெளியேற்றுகிறது. இந்த வரிசைக் கிரமம் கவியுலகின் கால வரிசைக் கணிப்புடன்[64] எவ்வளவுதான் முரண்பட்டாலும், இதுவே உண்மை. உதாரணமாக pound* என்ற சொல் உள்ளபடியே ஒரு பவுண்டு** எடையுள்ள வெள்ளிக்கு தரப்பட்ட பணப் பெயராகும். மதிப்பின் அளவையாக வெள்ளியின் இடத்தைத் தங்கம் பிடித்துக்கொண்டதும், அதே பெயர் (வெள்ளி, தங்கம் இவற்றின் மதிப்புகளிடையிலான விகிதத்திற்கேற்ப) உதாரணமாக ஒரு பவுண்டு தங்கத்தில் 15இல் 1 பங்குக்கும் பயன்படுத்தப்பட்டது. பணப் பெயராகப் பயன்படும் pound என்ற சொல் எடைப் பெயராகப் பயன்படும் அதே சொல்லிலிருந்து இவ்விதம் வேறுபட்டுப் பிரிகிறது.[65] (3) பல நூற்றாண்டுகளாக அரசர்களும், கோமகன்களும் கலப்படம் செய்து நாணயங்களைத் தொடர்ச்சியாகக் கெடுத்து வந்தனர். நாணயங்களின் பூர்விக எடைகளின் பெயர்கள் மட்டுமே மிஞ்சுமளவுக்கு இந்தக் கலப்படம் நடந்தேறியது.[66]

---

[64] தவிரவும், இது வரலாற்று வழியில் உலகுதழுவப் பொருந்தக் கூடியதன்று.

[65] இவ்வாறு, ஆங்கிலத்தில் பவுன் ஸ்டெர்லிங் ஆனது அதன் ஆரம்ப எடையில் மூன்றிலொரு பங்குக்கும் குறைவானதையே குறிக்கிறது; பவுன் ஸ்காட் ஆனது ஐக்கியத்துக்கு முன்பிருந்ததில் 1/36 பங்கையே குறிக்கிறது; பிரெஞ்சு நாட்டு லீவ்ர் ஆனது 1/74 பங்கையும், ஸ்பெயின் நாட்டு மேரவேடி ஆனது 1/1000க்கும் குறைவாகவும், போர்ச்சுகல் நாட்டு ரை ஆனது இன்னும் சிறிய பின்னத்தையும் குறிக்கின்றன.

[66] ''இன்று கருத்தளவில் மட்டுமே மதிப்புப் பெயருடையவையாகிய நாணயங்கள் எல்லா நாடுகளிலும் மிகப் பழமையானவை ஆகும். ஒரு காலத்தில் அவை யாவும் மெய்யானவையாக இருந்தன; மெய்யானவையாக இருந்ததால் மக்கள் அவற்றை மதித்தார்கள்.'' (காலியானி: Della moneta, முன் வந்தது, பக்கம் 153.)

---

* பிரித்தானிய நாணயமாகிய பவுன்.

** ஒரு இராத்தல் எடை.

எடைப் பெயரிலிருந்து பணப் பெயர் விலகிப் பிரிவது மேற் கூறிய வரலாற்றுக் காரணங்களால் சமுதாயத்தில் நிலைபெற்ற பழக் கமாகி விடுகிறது. பணத்தின் நியமம் ஒரு புறம் முற்றிலும் மர பொழுங்கு வழிப்பட்டதாகும் என்பதாலும், மறு புறம் பொதுவான ஏற்புடையதாக வேண்டுமென்பதாலும், அது முடிவில் சட்டத்தால் ஒழுங்கு செய்யப்படுகிறது. உயர்நிலை உலோகங்களில் ஒன்றின் குறிப்பிட்ட எடை, உதாரணமாக ஒரு அவுன்ஸ் தங்கம் ஈவுப் பகுதிகளாய் அதிகாரபூர்வமாகப் பிரிக்கப்பட்டு, அவற்றுக்கு, பவுன், டாலர் போன்ற பெயர்கள் சட்டபூர்வமாகச் சூட்டப்படு கின்றன. அது முதல் பணத்தின் அலகுகளாகப் பயன்படுகிற இந்த ஈவுப் பகுதிகள் வேறு ஈவுப் பகுதிகளாகப் பகுக்கப்பட்டு, அந்த உட்பிரிவுகளுக்கு ஷில்லிங், பென்னி போன்ற பெயர்கள் சட்டபூர்வ மாகச் சூட்டப்படுகின்றன.[67] ஆனால், இந்தப் பிரிவினைகள் செய்யப்படுவதற்கு முன்னரும் சரி, பின்னரும் சரி, உலோகத்தின் ஒரு திட்டமான எடையே உலோகப் பணத்தின் நியமமாக இருக்கக் காண்கிறோம். செய்யப்பட்ட மாற்றமெல்லாம் உட்பிரிவுகளாகப் பகுத்ததும் அவற்றுக்குப்• பெயர் சூட்டியதும்தான்.

விலைகள், அல்லது சரக்குகளின் மதிப்புகள் கருத்தளவில் எவையாக மாற்றப்படுகின்றனவோ அந்தத் தங்க அளவுகள், இப்போது நாணயங்களின் பெயர்களில், அல்லது தங்க நியமத்தின் உட்பிரிவுகளின் சட்டப்படிச் செல்லுபடியாகும் பெயர்களில் தெரி விக்கப்படுகின்றன. எனவே, ஒரு குவார்ட்டர் கோதுமையின் பெறு மானம் ஒரு அவுன்ஸ் தங்கம் என்று சொல்வதற்குப் பதிலாக, அதன் பெறுமானம் £ 3, 17 ஷில்லிங் 10½ பென்னி என்று சொல்கிறோம். இந்த விதத்தில் சரக்குகள் தமது விலைகளைக் கொண்டு, தமது பெறுமானத்தைத் தெரிவிக்கின்றன; ஒரு பண்டத்தின் மதிப்பைப் பண வடிவத்தில் நிர்ணயிக்க வேண்டி யுள்ள போதெல்லாம் பணம் **கணக்கீட்டுப் பணமாக** [money of account] பயன்படுகிறது.[68]

ஒன்றின் பெயர் அதன் பண்புகளிலிருந்து வேறானதாகும். ஒரு மனிதனின் பெயர் ஜேக்கப்• என்பதைத் தெரிந்து கொள்வதன் மூலம் நான் அந்த மனிதனைப் பற்றித் தெரிந்து கொள்வது

---

67 ஆங்கிலேயப் பண நியமத்தின் அலகாக இருக்கும் ஒரு பவுன் (ஸ்டெர்லிங்) இப்போதெல்லாம் சுமார் கால் அவுன்ஸ் தங்கத்துக்கே சமமாக இருக்கிறதென்ற அபத்தம்(!) பற்றி "நன்கு தெரிந்த சொற்கள்" என்ற தமது நூலில் டேவிட் அர்க்கார்ட் குறிப்பிடுகிறார்: "இது ஓர் அளவையைப் பொய்யாக்குவதாகும்; ஒரு நியமத்தை நிறுவுவதாகாது." தங்க எடையின் இந்தப் "பொய்யான நாமகரணத்தில்" மற்ற ஒவ் வொன்றிலும் போலவே நாகரிகத்தின் ஏமாற்று வேலையைத் அவர் பார்க்கிறார்.

68 கிரேக்கர்கள் என்ன காரியங்களுக்காகப் பணத்தைப் பயன்படுத்துகின்றனர் என்று அனாக்கார்சிஸ்ஸிடம் கேட்ட போது அவர் சொன்ன பதில்: "கணக்கிடுவதற் காக." (அத்தேனேயஸ், Deipn. பாகம் iv, 49,v.2, ed. Schweighauser, 1802.)

ஒன்றுமில்லை. அதே விதத்தில், பணத்தைப் பொறுத்த வரை, பவுன், டாலர், பிராங்க், டுக்காட் இன்ன பிற பெயர்களில் மதிப்புறவின் சுவடு கூட மறைந்து விடுகிறது. சரக்குகளின் மதிப்புகளையும், அதே நேரத்தில் பணத்தின் நியமமாகவுள்ள உலோக எடையின் ஈவுப் பகுதிகளையும் — ஆக இரண்டையுமே — இந்தப் பணப் பெயர்கள் தெரிவிக்கின்றன என்பதால், இந்த மாயமான சின்னங்களுக்கு இரகசிய அர்த்தம் கற்பிப்பதன் மூலம் ஏற்படும் குழப்பம் மேலும் அதிகரிக்கிறது.[69] மறு புறம் மதிப்பானது சரக்குகளின் பல திறப்பட்ட தசையுருவங்களிலிருந்து வேறுபட்டு விளங்க வேண்டுமானால் அது மானசீகமல்லாத இந்தப் பொருளாயத வடிவத்தை, ஆனால் அதே நேரத்தில் முற்றிலும் சமூக வழிப்பட்டதாகிய இந்த வடிவத்தை மேற்கொள்வது அத்தியாவசியமாகும்.[70]

சரக்கில் ஈடேற்றம் பெற்றுள்ள உழைப்பின் பணப் பெயரே விலை. எனவே, ஒரு சரக்கின் ஒப்பீட்டு மதிப்பைத் தெரிவிப்பது எப்படிப் பொதுவாக இரு சரக்குகளின் சமன்பாட்டைத் தெரிவிப்பதாகுமோ, அதே போல ஒரு சரக்கின் விலையாக அமைந்துள்ள பணத் தொகையுடன் அச்சரக்கின் சமன்பாட்டைத் தெரிவிப்பது

---

[69] பணம் விலையின் நியமமாகப் பயன்படும் போது, சரக்குகளின் விலைகள் சூட்டிக் கொள்கிற அதே கணக்கீட்டுப் பெயர்களை சூட்டிக் கொள்கிறது. ஆதலால் £3 ஷி.17 பெ. 10½ என்ற தொகை ஒரு புறம் தங்கத்தின் ஒரு அவுன்ஸ் எடையையும், மறு புறம் ஒரு டன் இரும்பின் மதிப்பையும் குறிக்கலாம் என்ற உண்மையின் காரணத்தால், பணத்தின் இந்தக் கணக்கீட்டுப் பெயர் அதன் நாணயச்சாலை-விலை என்று அழைக்கப்படுகிறது. தங்கத்தின் மதிப்பு அதன் சொந்தப் பொருளிலேயே மதிப்பிடப் படுகிறது, மற்றெல்லாச் சரக்குகளையும் போலல்லாமல் அதன் விலை அரசால் நிர்ணயிக்கப்படுகிறது என்ற வியக்கத்தக்க கருத்து இதிலிருந்து பிறந்தது. தங்கத்தின் திட்டமான எடைகளுக்குக் கணக்கீட்டு பெயர்களை வழங்குவதும், அந்த எடைகளின் மதிப்பை நிர்ணயிப்பதும் ஒன்றே என்று தவறாகக் கருதப்பட்டது.'' (கார்ல் மார்க்ஸ், முன் வந்தது, பக்கம் 52.)

[70] பார்க்கவும்: ''அரசியல் பொருளாதார விமர்சனத்திற்கு ஒரு பங்களிப்பு'' நூலில் ''பண நியமம் பற்றிய தத்துவங்கள்,'' பக்கம் 53 முதலானவை. தங்கம் அல்லது வெள்ளியின் அதிகமான அல்லது குறைந்த எடைகளுக்கு அந்த உலோகங்களின் நிர்ணயிக்கப்பட்ட எடைகளுக்கென முன்பே சட்டப்படி ஒதுக்கப்பட்ட பெயர்களை மாற்றுவதன் மூலம் பணத்தின் நாணயச்சாலை-விலையைக் கூட்டலாம் அல்லது குறைக்கலாம் என்ற கருத்துகள் அதிவினோதமானவை; இந்த அதிவினோதக் கற்பனைகளை — குறைந்தது, பொது, தனியார் இரு வகையையும் சேர்ந்த கடன் கொடுத்தோருக்கெதிரான அலங்கோலமான நிதி நடவடிக்கைகளையன்றி, மோசடியான பொருளாதாரப் பரிகாரங்களை நோக்கமாகக் கொண்ட இடங்களில் — வில்லியம் பெட்டி, ''பணம் சம்பந்தமான நியமங்கள் (Quantuiumcunque): ஹாலிஃபாக்சைச் சேர்ந்த மார்க்விஸ் பிரபுவுக்கு, 1682,'' என்ற தமது நூலில் விரிவாக விளக்கியுள்ளார்; எந்த அளவுக்கென்றால், அடுத்து அவரைப் பின்பற்றியவர்களான சர் டட்லி நார்த்தும், ஜான் லாக்கும் கூட — பின்னால் வந்தவர்களைப் பற்றிச் சொல்லவே வேண்டியதில்லை — அவர் கூறியதை சாரம் குறைந்த சொற்களில் திருப்பிச் சொல்லவே முடிந்தது. அவர் குறிப்பிடுகிறார்: ''நாட்டின் செல்வத்தை ஒரு பிரகடனத்தின் மூலம் பத்து மடங்காக்க முடியும் என்றால், நமது ஆளுநர்கள் இப்படிப்பட்ட பிரகடனங்களை நெடுங் காலத்துக்கு முன்பே விடுக்கவில்லை என்பது விபரீதமே.'' (முன் வந்தது, பக்கம் 36.)

கூறியது கூறலேயாகும்.[71] ஆனால் ஒரு சரக்கினுடைய மதிப்புப் பருமனின் தெரிவிப்பாக இருக்கும் விலை பணத்துடனான அச் சரக்கின் பரிவர்த்தனை விகிதத்தின் தெரிவிப்பாகும் என்ற போதிலும், இந்தப் பரிவர்த்தனை விகிதத்தின் தெரிவிப்பு சரக்கினுடைய மதிப்புப் பருமனின் தெரிவிப்பாக இருக்க வேண்டுமென்று அவசியமில்லை. சமூக வழியில் அவசியமான உழைப்பின் இரு சம அளவுகள் முறையே ஒரு குவார்ட்டர் கோதுமை, £2 (சுமார் 1/2 அவுன்ஸ் தங்கம்) ஆகியவற்றால் குறிக்கப்படுவதாகக் கொள்வோம். £2 என்பது குவார்ட்டர் கோதுமையினது மதிப்பின் பருமனைப் பணத்தில் தெரிவிப்பதாகும், அதாவது அதன் விலை ஆகும். இப்போது சூழ்நிலைகளின் பயனாய் இந்த விலையை £3 ஆக உயர்த்த முடிந்தால், அல்லது £1 ஆகக் குறைக்க வேண்டி வந்தால், கோதுமையினுடைய மதிப்பின் பருமனை சரிவரத் தெரிவிக்க £1, £3 ஆகியவை மிகச் சிறிதாகவோ மிகப் பெரிதாகவோ இருக்கலாம் என்ற போதிலும், அவை அதன் விலைகள் ஆகும்; ஏனெனில் அவை முதலாவதாக அதன் மதிப்பு வெளிப்படுகிற வடிவமாகும், அதாவது பணம் ஆகும்; இரண்டாவதாக, பணத்துடனான அதன் பரிவர்த்தனை விகிதத்தின் தெரிவிப்புகளாகும். உற்பத்தி நிலைமைகள், வேறு விதமாகச் சொன்னால் உழைப்பின் உற்பத்தித் திறன் மாறாதிருந்தால், விலை மாற்றத்துக்கு முன்னால் போலவே பின்னாலும், ஒரு குவார்ட்டர் கோதுமையின் மறுவுற்பத்திக்கு அதே அளவு சமுதாய உழைப்பு நேரமே செலவிடப்பட வேண்டும். இந்த நிலைமை கோதுமை உற்பத்தியாளரின் விருப்பத்தைப் பொறுத்ததுமன்று, ஏனைய சரக்குடைமையாளர்களின் விருப்பத்தைப் பொறுத்ததுமன்று.

மதிப்பின் பருமன் ஒரு சமூக உற்பத்தியுறவை [relation of social production] தெரிவிக்கிறது; குறிப்பிட்ட ஒரு பண்டத்துக்கும் சமுதாயத்தின் மொத்த உழைப்பு நேரத்தில் அதை உற்பத்தி செய்யத் தேவைப்படும் பகுதிக்கும் இடையில் அவசியமாகவே நிலவுகிற தொடர்பை அது தெரிவிக்கிறது. மதிப்பின் பருமன் விலையாக மாற்றப்பட்டதுமே, மேற்சொன்ன அவசிய உறவு தனியொரு சரக்குக்கும், இன்னொரு சரக்கான பணச் சரக்குக்கும் இடையில் பெரும்பாலும் தற்செயலானதொரு பரிவர்த்தனை விகிதமாக உருவெடுக்கிறது. ஆனால், இந்தப் பரிவர்த்தனை விகிதம் அந்தச் சரக்கினது மதிப்பின் மெய்யான பருமனையோ, அல்லது, நிலைமைகளுக்கேற்ப எதற்குப் பிரதியாக அது விற்கப்படக்

[71] ''அல்லது, உண்மையிலேயே பணமாக உள்ள 10 லட்சம், சரக்குகளாக உள்ள 10 லட்சத்தை விட அதிகப் பெறுமானம் உடையது என்று ஒப்புக் கொள்ளத்தான் வேண்டும்.'' (லெ திரொஸ்னே, முன் வந்தது, பக்கம் 919.) ''ஒரு மதிப்பு அதற்குச் சமமான இன்னொரு மதிப்பை விட அதிகப் பெறுமானமுடையது'' என்று சொல்வதற்கு ஒப்பானதாகும் இது.

கூடுமோ அந்த—மெய்யான மதிப்பிலிருந்து விலகிச் செல்லும்—தங்க அளவையோ வெளியிடலாம். எனவே, விலைக்கும், மதிப்பின் பருமனுக்கும் இடையில் அளவு வழிப்பட்ட ஒவ்வாமை, அல்லது முன்னது பின்னதிலிருந்து விலகிச் செல்லும் சாத்தியப்பாடு விலை வடிவத்திலேயே உள்ளார்ந்துள்ளது. இது ஒன்றும் குறைபாடன்று; மாறாக, ஒன்றை ஒன்று ஈடு செய்து கொள்கிற, விதிகளுக்கடங் காதவையாகத் தோன்றுகிற ஒழுங்கின்மைகளின் சராசரியாகவே தம்மை நிலைநாட்டிக் கொள்ளும் உள்ளார்ந்த விதிகளைக் கொண்ட ஓர் உற்பத்தி முறைக்கு விலை வடிவத்தை கனகச்சிதமாகத் தகவமைத்திடுவதே ஆகும்.

ஆயினும், விலை வடிவமானது மதிப்பின் பருமனுக்கும் விலைக் கும் இடையே, அதாவது மதிப்பின் பருமனுக்கும் பணத்தின் வாயி லான அதன் தெரிவிப்புக்கும் இடையே ஓர் அளவு வழிப்பட்ட ஒவ்வாமையின் சாத்தியப்பாட்டுடன் ஒத்துப் போகக் கூடியது என்பது மட்டுமன்று. பணம் என்பது சரக்குகளின் மதிப்பு வடிவமே யன்றி வேறல்ல என்ற போதிலும், விலையானது மதிப்பையே தெரிவிக்காமல் போய் விடுமளவுக்கு ஒரு பண்பு வழிப்பட்ட முரணிலைக்கும் அந்த விலை வடிவம் இடமளிக்கக் கூடும். தம் மளவில் சரக்குகளாயிராத மனசாட்சி, கௌரவம் போன்றவை அவற்றை உடையவர்களால் விற்பனைக்கு முன்வைக்கப்படுவதும், இவ்வாறு தமது விலையின் மூலம் சரக்குகளாக வடிவம் பெறுவதும் சாத்தியமே. எனவே ஒரு பொருளுக்கு மதிப்பு இல்லாமலே விலை இருக்கலாம். அந்நிலையில், கணிதத்தில் சில வகைக் கணியங் களைப் போல, விலை கற்பனையானது. மறு புறம், கற்பனையான விலை வடிவம் சில நேரங்களில் ஒரு நேரடியான அல்லது சுற் றடியான உண்மை மதிப்புறவை மறைத்து விடக் கூடும்; எடுத்துக் காட்டாக மனித உழைப்பேதும் உள்ளடங்கியிராத காரணத்தால் தரிசு நிலம் மதிப்பற்றதென்றாலும், அதற்கும் விலையுண்டு.

விலையானது, பொதுவாக ஒப்பீட்டு மதிப்பைப் போல, சமதை யின் குறிப்பிட்ட அளவு (உதாரணமாக ஓர் அவுன்ஸ் தங்கம்) ஒரு சரக்குக்குப் பிரதியாய் (உதாரணமாக ஒரு டன் இரும்புக்குப் பிரதி யாய்) நேரடியாகப் பரிவர்த்தனை செய்து கொள்ளத் தக்கது என்றுரைப்பதன் மூலம் அச்சரக்கின் மதிப்பைத் தெரிவிக்கிறது. ஆனால் அது எவ்விதத்திலும் மறுதலையானதை, அதாவது இரும்பு தங்கத்துக்குப் பிரதியாய் நேரடியாகப் பரிவர்த்தனை செய்து கொள்ளத் தக்கது என்பதைச் சொல்வதாகாது. எனவே, ஒரு சரக்கு நடைமுறையில் பரிவர்த்தனை-மதிப்பாய் தக்கவாறு செயல்பட வேண்டுமானால், அது தன் தசையுருவத்தைத் துறக்க வேண்டும், கற்பனையான தங்கம் என்ற நிலையிலிருந்து மெய்யான தங்கமாகத் தன்னை மாற்றிக் கொள்ள வேண்டும்; ''அவசியத்திலிருந்து'' சுதந்தரத்துக்கான மாற்றம் ஹெகலியக் ''கருத்தினத்துக்கு'', அல்லது

மேல் ஓட்டை நீக்கி விடுவது நண்டுக்கு, அல்லது பழைய ஆதாமைத் தட்டிக் கழிப்பது புனித ஜெரோமுக்கு உள்ளதை விட, இந்த மாற்ற மைவு சரக்குக்கு அதிகக் கடினமாயிருக்கலாம் என்ற போதிலும், அது இப்படிச் செய்யத்தான் வேண்டும்.[72] ஒரு சரக்கு தன் மெய் யான வடிவத்துடன் (எடுத்துக்காட்டாக இரும்பு) கூடவே, நமது கற்பனையில் தங்கத்தின் வடிவத்தையும் மேற்கொள்ளலாம் என்ற போதிலும், அது உள்ளபடியே ஒரே நேரத்தில் இரும்பு, தங்கம் இரண்டாகவும் இருக்க முடியாது. அதன் விலையை நிர்ணயிக்க, கற்பனையில் அதைத் தங்கத்தோடு சமன் செய்வதே போதுமானது. ஆனால், அது தன் உடைமையாளருக்கு சர்வப் பொதுச் சமதை யாகப் பயன்பட வேண்டுமானால், மெய்யாகவே அதனைத் தங்க மாக மாற்ற வேண்டும். இரும்பின் உடைமையாளர் பரிவர்த் தனைக்கு முன்வைக்கப்படும் வேறொரு சரக்கின் உடைமை யாளரிடம் சென்று, இரும்பு ஏற்கெனவே பணமாய் இருப்பதை நிரூபிக்கும் விதத்தில் இரும்பின் விலையை அவரிடம் சுட்டிக் காட்டுவாரேயானால், அவருக்கு கிடைக்கும் பதில், திருக்கோட் பாட்டு வாசகத்தை தாந்தே ஒப்பித்த போது புனித பீட்டர் அளித்த அதே பதிலாகவே இருக்கும்:

''Assai bene e trascorsa
D'esta moneta gia la lega e'l peso,
Ma dimmi se tu l'hai nella tua borsa.''*

எனவே, ஒரு சரக்கு பணத்துக்காகப் பரிவர்த்தனை செய்து கொள்ளத் தக்கது; அது அவ்வாறு பரிவர்த்தனை செய்து கொள் ளப்படவும் வேண்டும்; விலை என்னும் போது இவையிரண்டுமே குறிக்கப்படுகின்றன. மறு புறம், தங்கம் ஏற்கெனவே பரிவர்த்தனை நிகழ்முறையில் தன்னைப் பணச் சரக்காக நிலை நாட்டிக் கொண்டு விட்டது என்பதாலேயே, அது கருத்தளவிலான மதிப்பளவையாகப் பயன்படுகிறது. கருத்தளவிலான மதிப்பளவையின் பின்னால் உலோகப் பணம் [hard cash] பதுங்கியுள்ளது.

---

72 இளமைப் பருவத்தில் ஜெரோம் பருவுடலுடன் கடுமையான மல்லுக்கு நிற்க வேண்டியிருந்தது: பாலைவனத்தில் கற்பனையான கட்டழகிகளை அவர் எதிர்த்து நின்றதானது இதனை நிரூபிக்கிறது. இது போதாதென்று, முதுமைப் பருவத்தில் அவர் ஆன்ம உடலுடன் மல்லுக்கு நிற்க வேண்டியிருந்தது. அவர் கூறுகிறார்: ''பிரபஞ்சத்தின் நியாயாதிபதியின் முன்னர் நான் ஆவியாய் நின்றதாக நினைத்தேன்.'' ஒரு குரல் கேட்டது: ''நீர் யாரோ?'' ''நான் ஒரு கிறிஸ்தவன்.'' மாபெரும் நியாயாதிபதி இடியெனப் பகர்ந்தார்: ''நீர் பொய் சொல்கிறீர்; நீர் சிசரோனியனே.''

---

* ''காசின் உலோகத்தையும் எடையையும் சரிபார்த்தாயிற்று; உன் மடியிலிருக் கிறதா சொல்.''

## பிரிவு 2. — சுற்றோட்ட ஊடகம்

### அ. சரக்குகளின் உருமாற்றம்

சரக்குகளின் பரிவர்த்தனையானது முரண்பாடான, ஒன்றை யொன்று விலக்குகிற நிலைமைகளைச் சுட்டுவதாகும்; இதனை முந்தைய அத்தியாயம் ஒன்றில் பார்த்தோம். சரக்குகள் சரக்கு களாகவும் பணமாகவும் வேறுபட்டுப் பிரிவது இந்த முரண்பாடுகளை ஒழித்து விடுவதில்லை. அவை ஒருங்கே சேர்ந்திருக்க முடிகிற ஒரு வழிமுறையை அது வளர்த்திடுகிறது. பொதுவாக, இதுவே மெய் யான முரண்பாடுகளை இணக்கப்படுத்தும் வழி. எடுத்துக்காட்டாக, ஒரு பொருள் இடைவிடாமல் இன்னொன்றை நோக்கி வீழ்ந்து கொண்டிருப்பதாகவும், அதே நேரத்தில் அதிலிருந்து இடை விடாமல் விலகிப் பறந்து கொண்டிருப்பதாகவும் சித்திரிப்பது முரண்பாடாகும். இந்த முரண்பாடு தொடர அனுமதிக்கும் அதே நேரத்தில் அதனை இணக்கப்படுத்தவும் செய்கிற ஓர் இயக்க வடிவ மாகும் நீள்வளையம் [ellipse].

சரக்குகள் யாருக்கு அவை பயன்-மதிப்புகள் அல்லவோ அவர் களிடமிருந்து யாருக்குப் பயன்-மதிப்புகளாகின்றனவோ அவர் களுக்கு மாற்றப்படுகிற நிகழ்முறையே பரிவர்த்தனை என்பதால், அது ஒரு சமுதாயப் பொருள்வகைச் சுற்றோட்டம் [social circulation of matter] ஆகும். பயனுள்ள உழைப்பின் ஒரு வடிவத்தினது உற்பத்திப் பொருளுக்கு பதிலாக இன்னொரு வடிவத்தினது உற்பத்திப் பொருள் இடம்பெறுகிறது. சரக்கானது பயன்-மதிப் பாகப் பயன்படக் கூடிய ஓய்விடத்தைக் கண்டுகொண்டதுமே, பரிவர்த்தனைத் துறையிலிருந்து நுகர்வுத் துறைக்குள் விழுகிறது. ஆனால், பரிவர்த்தனைத் துறை [sphere of exchange] மட்டுமே இப்போதைக்கு நமது அக்கறைக்குரியதாகும். எனவே, இப்போது நாம் வடிவ அளவிலான நோக்குநிலையிலிருந்து பரிவர்த் தனையைப் பரிசீலிக்கவும், சமுதாயப் பொருள்வகைச் சுற்றோட் டத்தை நிகழச் செய்கிற சரக்குகளின் வடிவ மாறுதல் அல்லது உருமாற்றத்தை [metamorphosis] ஆராயவும் வேண்டியுள்ளது.

இந்த வடிவ மாறுதல் வழக்கமாகவே மிகவும் அறைகுறையாகத் தான் புரிந்து கொள்ளப்படுகிறது. இதற்குக் காரணம், மதிப்பு பற்றிய தெளிவற்ற கருத்துகளன்னியில், ஒரு சரக்கிலான ஒவ்வொரு வடிவ மாறுதலும் ஒரு சாதாரணச் சரக்கு, பணச் சரக்கு என்ற இரு சரக்கு களது பரிவர்த்தனையின் விளைவே என்பதுமாகும். ஒரு சரக்கு தங்கத்துக்காகப் பரிவர்த்தனை செய்து கொள்ளப்பட்டிருக்கிறது என்ற பொருளாயத உண்மையை மட்டுமே நாம் கருத்தில் கொள் வதானால் நாம் கவனிக்க வேண்டியதையே — அதாவது சரக்கின் வடிவத்துக்கு என்ன நேர்ந்தது என்பதை — கவனியாமல் விட்டு விடுகிறோம். தங்கம் வெறும் சரக்காக இருக்கும் போது பணம்

அன்று என்ற, ஏனைய சரக்குகள் தமது விலைகளைத் தங்கத்தில் வெளியிடும் போது இந்தத் தங்கம் அந்தச் சரக்குகளின் பண வடிவமே ஆகும் என்ற உண்மைகளை நாம் பார்க்க தவறுகிறோம்.

முதலாவதாக, சரக்குகள் சரக்குகளாகவே பரிவர்த்தனை நிகழ் முறையில் நுழைகின்றன.இந்நிகழ்முறை பிற்பாடு அவற்றைச் சரக்கு களாகவும், பணமாகவும் வேறுபடுத்துகிறது; இவ்வாறு, அவற்றில் உள்ளார்ந்துள்ள அக எதிர்நிலைக்கு—ஒரே நேரத்தில் பயன்-மதிப்புகளாகவும், மதிப்புகளாகவும் இருத்தல் என்ற அக எதிர் நிலைக்கு—இணையான புற எதிர் நிலையை அது தோற்றுவிக்கிறது. இப்போது பயன்-மதிப்புகளான சரக்குகள் பரிவர்த்தனை-மதிப்பான பணத்துக்கு எதிராய் நிற்கின்றன. மறு புறம், எதிரெதி ரான இரு தரப்புகளுமே சரக்குகள் ஆகும்; பயன்-மதிப்பு, மதிப்பு இவற்றின் ஐக்கியங்கள் ஆகும்.ஆனால் இந்த வேறுபாடுகளின் ஐக்கியம் இரு எதிரெதிர்த் துருவங்களில், ஒவ்வொரு துருவத்திலும் எதிரெதிரான வழியில் வெளிப்படுகிறது. அவை துருவங்களாயிருத் தலால், எந்த அளவு அவசியமாகவே தொடர்புள்ளவையோ, அந்த அளவு அவசியமாகவே' எதிரெதிரானவையும் ஆகும். சமன் பாட்டின் ஒரு பக்கத்தில் மெய்யாகவே பயன்-மதிப்பான ஒரு சாதாரண சரக்கு உள்ளது. அதன் மதிப்பு அதன் விலையின் மூலம் கருத்தளவில் மட்டுமே தெரிவிக்கப்படுகிறது; இவ்விலையின் மூலம், அது தன் எதிராளியான தங்கத்தைத் தன் மதிப்பின் மெய்யான உருவாய்க் கொண்டு அதனுடன் தன்னை சமன்படுத்திக் கொள் கிறது. மறு புறம், தங்கம் அதன் உலோக மெய்ம்மையில் மதிப்பின் உருவாக, பணமாக இடம்பெறுகிறது. தங்கம், தங்கமென்ற முறையில், தானே பரிவர்த்தனை-மதிப்பாகும். அதன் பயன்-மதிப்பைப் பொறுத்த வரை, அது கருத்தளவில் மட்டுமே நிலவுகிறது; மற்றெல்லாச் சரக்குகளோடும் அதனை நேருக்கு நேராக நிறுத்தும் அந்த ஒப்பீட்டு மதிப்புத் தெரிவிப்புகளின் தொடரால் கருத் தளவிலான இந்நிலவல் குறிக்கப்படுகிறது. மற்றெல்லாச் சரக்கு களதும் பயன்களின் ஒட்டுமொத்தம் தங்கத்தின் பல்வேறு பயன் களதும் ஒட்டுமொத்தத்துக்கு ஈடாகிறது. சரக்குகளின் இந்தப் பகைமை வடிவங்கள் [antagonistic forms] அவற்றின் பரிவர்த்தனை நிகழ்முறை நடந்தேறுகிற மெய்யான வடிவங்களாகும்.

இப்போது ஒரு சரக்கின் உடைமையாளருடன்—நமது பழைய நண்பரான துணி நெசவாளருடன் எனக் கொள்வோம்—செயலின் அரங்கமான சந்தைக்குச் செல்வோம். அவரது 20 கெஜம் துணிக்கு £2 என்ற திட்டமான விலை உண்டு. அவர் அதை £2க்குப் பரிவர்த்தனை செய்து கொள்கிறார்; பழம்பெரும் தனி மரபின ராகையால், உடனே அவர், தன் குடும்பத்தின் உபயோகத்துக்காக அதே விலையுள்ள விவிலிய நூலை £2 கொடுத்து வாங்குகிறார். அவரது பார்வையில் வெறும் சரக்காய், மதிப்பின் சேமிப்பகமாய்

இருக்கும் துணியை அதன் மதிப்பு வடிவமாகிய தங்கத்துக்கான பரிவர்த்தனையில் அவர் உடைமை மாற்றம் செய்கிறார்; இம்மதிப்பு வடிவத்தை அவர் இன்னொரு சரக்குக்காகக் கொடுத்து விடுகிறார்; அதாவது தன் இல்லத்தாருக்கு நல்லறம் புகட்டும் பயனுள்ள ஒன்றாக அவரது இல்லத்தில் இடம் பெற வேண்டிய விவிலிய நூலுக்காகக் கொடுத்து விடுகிறார். எதிரெதிரான, ஆனால் ஒன்றை ஒன்று நிறைவு செய்யும் தன்மையுள்ள இரு உருமாற்றங்களால் இப்பரிவர்த்தனை நிறைவேறுகிறது — உருமாற்றங்களாவன: சரக்கு பணமாக மாற்றமடைவதும், பணம் ஒரு சரக்காக மீண்டும் மாற்றமடைவதும்.[73] இந்த உருமாற்றத்தின் இரு கட்டங்களும் நெசவாளரின் இருவேறு காரியங்களாகும் — விற்றல், அல்லது பணத்துக்காகச் சரக்கின் பரிவர்த்தனை; வாங்கல் அல்லது சரக்குக்காகப் பணத்தின் பரிவர்த்தனை; இவ்விரு செயல்களின் ஐக்கியமாவது: வாங்கும் பொருட்டு விற்றல்.

துணியைச் சொந்தமாகப் பெற்றிருப்பதற்குப் பதிலாக, இப்போது விவிலிய நூலைப் பெற்றிருக்கிறார் என்பதே நெசவாளரைப் பொறுத்த வரை இந்தக் கொடுக்கல் வாங்கல் முழுவதன் விளைவாகும்;தனது ஆரம்பச் சரக்குக்குப் பதிலாக, அவர் இப்போது அதே மதிப்புள்ள, ஆனால் வேறு பயன்பாடுள்ள இன்னொரு சரக்கைப் பெற்றிருக்கிறார். இதே போல், அவர் தனக்கு வேண்டிய இதர வாழ்வுச் சாதனங்களையும், உற்பத்திச் சாதனங்களையும் பெற்றுக் கொள்கிறார். அவரது நோக்குநிலையில் இந்நிகழ்முறை முழுவதும் அவரது உழைப்பின் உற்பத்திப் பொருளை வேறொருவரது உழைப்பின் உற்பத்திப் பொருளுக்காகப் பரிவர்த்தனை செய்து கொள்வதல்லாமல், உற்பத்திப் பொருட்களின் பரிவர்த்தனை அல்லாமல் வேறொன்றும் இல்லை.

எனவே, சரக்குகளின் பரிவர்த்தனையுடன் கூடவே அவற்றின் வடிவத்தில் பின்வரும் மாற்றங்களும் ஏற்படுகின்றன:

சரக்கு — பணம் — சரக்கு.

C ——— M ——— C.

இந்நிகழ்முறை முழுவதன் விளைவு, பொருட்களைப் பொறுத்த வரை, C — C ஆகும், ஒரு சரக்கை இன்னொரு சரக்குக்காகப் பரிவர்த்தனை செய்து கொள்வதாகும்; பொருள்வடிவாக்கப்பட்ட சமுதாய உழைப்பின் சுற்றோட்டமாகும். இந்த விளைவு அடையப்படும் போது, இந்நிகழ்முறை முடிவடைகிறது.

---

73 ''ஹெராக்ளிட்டஸ் கூறுவது போல், எல்லாப் பொருட்களும் தீயிற்குப் பரிவர்த்தனையாகின்றன, தீ எல்லாப் பொருட்களுக்கும் பரிவர்த்தனையாகிறது. எப்படி தங்கம் எல்லாச் சரக்குகளுக்கும், எல்லாச் சரக்குகளும் தங்கத்துக்கும் பரிவர்த்தனையாகின்றனவோ, அது போல.'' (ஃபெ. லஸ்ஸால்: ''Die Philosophie Herakleitos des Dunkeln,'' பெர்லின், 1858, பாகம் 1, பக்கம் 222.) ஃபெ. லஸ்ஸால் இந்தப் பகுதி பற்றிய அவரது குறிப்பில் — பக்கம் 224, குறிப்பு 3 — தங்கத்தை வெறும் மதிப்புச் சின்னமாக்குவது தவறாகும்.

## C – M. முதல் உருமாற்றம், அல்லது விற்றல்

சரக்கின் தசையுருவிலிருந்து தங்கத்தின் தசையுருவிற்கு மதிப்பு பாய்கிற பாய்ச்சல், நான் அதை வேறோரிடத்தில் அழைத்திருப்பது போல், சரக்கின் நிலையற்ற பாய்ச்சலாகும். அது அரைகுறையாகப் போய் விடின், சரக்குக்குப் பாதகமேதும் இல்லையெனினும், அதன் உடைமையாளருக்கு நிச்சயமாகத் தீங்கு நேர்கிறது. அவரது தேவை கள் எந்த அளவுக்குப் பலதரப்பட்டவையோ அந்த அளவுக்கு அவரது உழைப்பு ஒருதரப்பட்டதாக இருப்பதற்கு சமுதாய உழைப் புப் பிரிவினை காரணமாகிறது. அவரது உழைப்பின் உற்பத்திப் பொருள் பரிவர்த்தனை-மதிப்பாக மட்டுமே அவருக்குப் பயன் படுவதன் காரணம் இதுவேதான். ஆனால், பணமாக மாற்றப் பட்டாலன்றி, சமூக வழியில் அங்கீகரிக்கப்பட்ட சர்வப் பொதுச் சமதையின் குணங்களை அது அடைய முடியாது. ஆனால், அந்தப் பணமோ வேறொருவரின் சட்டைப் பையில் இருக்கிறது. அந்த சட்டைப் பையிலிருந்து பணத்தைக் கவர்ந்திழுக்கும் பொருட்டு, நமது நண்பரின் சரக்கு யாவற்றுக்கும் முதலாவதாகப் பணத்தின் உடைமையாளருக்குப் பயன்-மதிப்பாக இருக்க வேண்டும். இதற்கு, அதில் செலவிடப்பட்டுள்ள உழைப்பு சமூக வழியில் பயனுள்ள வகையைச் சேர்ந்ததாக, சமுதாய உழைப்புப் பிரிவினையின் கிளை யாக அமைகிற வகையைச் சேர்ந்ததாக, இருப்பது அவசியம். ஆனால், உழைப்புப் பிரிவினை என்பது தன்னியல்பாய் உதித் தெழுந்த உற்பத்தியமைப்பு ஆகும்; உற்பத்தியாளர்களின் முதுகுக் குப் பின்னால் இது வளர்ந்த வண்ணமுள்ளது. பரிவர்த்தனை செய்யப்படுவதற்கான சரக்கு புதிதாகத் தோன்றிய தேவைகளை நிறைவு செய்ய அல்லது தானே புதிய தேவைகளைத் தோற்றுவிக்கவும் கூட முனைகிற ஒரு புதிய வகை உழைப்பின் உற்பத்திப் பொருளாக இருக்கலாம். குறிப்பிட்ட ஒரு நடவடிக்கை குறிப்பிட்ட ஒரு சரக்கை உருவாக்குவதில் ஓர் உற்பத்தியாளர் மேற்கொண்ட பல நடவடிக் கைகளில் ஒன்றாக நேற்று இருந்திருக்கலாம்; இன்று அது இந்தத் தொடர்பிலிருந்து பிரிந்து உழைப்பின் சுயேச்சையான கிளையாகத் தன்னை நிலைநாட்டிக் கொண்டு, தன் பூர்த்தியாகாத உற்பத்திப் பொருளை ஒரு சுயேச்சையான சரக்காக சந்தைக்கு அனுப்பலாம். இப்படியொரு பிரிவினைக்கு சூழ்நிலைகள் பக்குவமாயிருக்கலாம், அல்லது இல்லாமலும் போகலாம். இன்று இவ்வுற்பத்திப் பொருள் ஒரு சமுதாயத் தேவையை நிறைவு செய்கிறது. நாளை இப்பொருள் முற்றாகவோ பகுதியாகவோ பொருத்தமான வேறொரு உற்பத்திப் பொருளால் ஒதுக்கித் தள்ளப்படலாம். மேலும், நமது நெசவாளரின் உழைப்பு சமுதாய உழைப்புப் பிரிவினையின் அங்கீகரிக்கப்பட்ட கிளையாக இருக்கலாம் என்ற போதிலும், அவரது 20 கெஜம் துணியின் பயன்பாட்டை உத்தரவாதப்

படுத்துவதற்கு அந்த உண்மை எவ்வகையிலும் போதுமானதன்று. சமுதாயத்தின் துணித் தேவை—ஒவ்வொரு தேவைக்கும் எப்படி ஒரு வரம்புண்டோ, அப்படியே இந்தத் தேவைக்கும் ஒரு வரம்புண்டு—போட்டி நெசவாளர்களின் உற்பத்திப் பொருட்களால் ஏற்கெனவே முழுமையாக நிறைவு செய்யப்பட்டிருந்தால், நமது நண்பரின் உற்பத்திப் பொருள் வேண்டாததும், தேவைக்கதிகமானதும், ஆதலால் பயனற்றதும் ஆகும். தானம் கொடுத்த மாட்டை யாரும் பல்லைப் பிடித்துப் பார்ப்பதில்லை என்றாலும் நமது நண்பர் சந்தைக்குப் போய் வருவது அன்பளிப்புகள் வழங்குவதற்கு அன்று. ஆனால், அவரது உற்பத்திப் பொருள் ஓர் உண்மையான பயன்-மதிப்பாக மாறி அதன் மூலம் பணத்தை ஈர்ப்பதாக வைத்துக் கொண்டால், அது எவ்வளவு ஈர்க்கும் என்ற கேள்வி எழுகிறது. இந்தக் கேள்விக்கான பதில் பண்டத்தின் விலையில், அதாவது அதன் மதிப்புப் பருமனின் தெரிவிப்பில் முன்னதாகவே கூறப்பட்டுள்ளது என்பது மெய்தான். நமது நண்பர் மதிப்பைக் கணக்கிடுவதில் தற்செயலாக இழைக்கக் கூடிய தவறை—இம்மாதிரியான தவறு சீக்கிரமே சந்தையில் திருத்தப்பட்டு விடுகிறது—இங்கே நாம் பரிசீலனைக்கெடுத்துக் கொள்ளவில்லை. சராசரியாகச் சமூக வழியில் அவசியமான அளவு உழைப்பு நேரத்தையே தனது உற்பத்திப் பொருளில் அவர் செலவிட்டிருப்பதாக வைத்துக் கொள்கிறோம். அப்படியானால் விலை என்பது அவரது சரக்கில் எவ்வளவு ஈடேற்றம் பெற்றுள்ளதோ அவ்வளவு சமூக உழைப்பின் பணப் பெயர்தான். ஆனால், நமது நெசவாளரின் அனுமதியின்றியும், அவரது முதுகுக்குப் பின்னாலும், பழைய வழியிலான நெசவு முறை மாற்றத்துக்குட்படுகிறது. நேற்று வரை ஒரு கெஜம் துணியின் உற்பத்திக்குச் சமூக வழியில் நிச்சயமாய் அவசியமாயிருந்த உழைப்பு நேரம் இன்று அவ்வாறில்லாது போகிறது; நமது நண்பரின் போட்டியாளர்கள் கூறுகிற விலைகளைக் கொண்டு இந்த உண்மையை நிரூபிக்க பணத்தின் உடைமையாளர் குறியாய் இருக்கிறார். நமது நண்பரைப் பிடித்த துரதிர்ஷ்டம், நெசவாளர்கள் அப்படியொன்றும் அபூர்வமாயில்லை. கடைசியாக, சந்தையிலுள்ள ஒவ்வொரு துண்டுத் துணியிலும் சமூக வழியில் அவசியமான உழைப்பு நேரம் மட்டுமே அடங்கியிருப்பதாக வைத்துக் கொள்வோம். இருப்பினும், இத்துண்டுகளை ஒட்டுமொத்தமாய்க் கருதுகையில் அவற்றில் அளவுக்கதிகமான உழைப்பு நேரம் செலவிடப்பட்டிருக்கலாம். ஒரு கெஜம் 2 ஷில்லிங் என்ற மாமூலான விலையில் முழு அளவையும் சந்தையால் ஜீரணிக்க முடியவில்லை என்றால், சமுதாயத்தின் மொத்த உழைப்பில் அதிகப்படியானதொரு பகுதி நெசவின் வடிவில் செலவிடப்பட்டிருக்கிறது என்பதை இது நிரூபிக்கிறது. தனிப்பட்ட ஒவ்வொரு நெசவாளரும் தமது உற்பத்திப் பொருளில் சமூக வழியில்

அவசியமானதைவிட அதிகமான உழைப்பு நேரத்தைச் செலவிட்டிருந்தால் ஏற்படக் கூடிய அதே விளைவுதான் இப்போதும் ஏற்படுகிறது. ஜெர்மன் பழமொழி கூறுவதை இங்கே நாமும் கூறலாம்: ஒன்றாகப் பிடிப்பட்டவர்கள் தூக்கில் ஒன்றாகவே தொங்குகிறார்கள். சந்தைக்கு வரும் அவ்வளவு துணியும் வாணிபத்தில் ஒரே பண்டமாக மதிக்கப்படுகிறது; அதன் ஒவ்வொரு துண்டும் ஈவுப் பகுதியே. உண்மையிலேயே, ஒவ்வொரு தனி கெஜத்தின் மதிப்பும் கூட ஒருபடித்தான மனித உழைப்பின் ஒரே திட்டமான, சமூக வழியில் நிர்ணயிக்கப்பட்ட அளவின் பொருள்மய வடிவமே.*

ஆக, சரக்குகளுக்குப் பணத்தின் மீது காதல் என்று தெரிகிறது; ஆனால் ''உண்மைக் காதலின் பாதை கரடுமுரடானது.'' உழைப்பின் அளவு வழிப்பட்ட பிரிவினை அதன் பண்பு வழிப்பட்ட பிரிவினையைப் போலவே அதே தன்னியல்பான, தற்செயலான முறையில் தோற்றுவிக்கப்படுகிறது. எனவே, தம்மை சுயேச்சையான தனிப்பட்ட உற்பத்தியாளர்களாக மாற்றுகிற அதே உழைப்புப் பிரிவினையானது சமுதாயப் பொருளுற்பத்தி நிகழ்முறையையும், அந்த நிகழ்முறைக்குள்ளேயே தனித்தனி உற்பத்தியாளர்கள் ஒருவரோடு ஒருவர் கொள்ளும் உறவுகளையும் அந்த உற்பத்தியாளர்களின் விருப்பத்தைச் சிறிதும் சார்ந்திராதவை ஆக்கி விடுகிறது என்பதை சரக்குடைமையாளர்கள் காண்கின்றனர். தனியாட்களின் பரஸ்பரச் சார்பின்மையாகத் தோன்றுகிற ஒன்றுடன் உற்பத்திப் பண்டங்களின் வாயிலான பொதுவான பரஸ்பரச் சார்புடைமை அமைப்பொன்று இணைந்திருப்பதையும் காண்கின்றனர்.

உழைப்புப் பிரிவினை [division of labour] உழைப்பின் உற்பத்திப் பொருளை சரக்காக மாற்றுகிறது; இவ்வழியில் உற்பத்திப் பொருள் பணமாக மாறுவதையும் அவசியமாக்குகிறது. அதே நேரத்தில் அது இந்த மாற்றமைவின் நிறைவேற்றத்தை முற்றிலும் தற்செயலான ஒன்றாக்குகிறது. ஆயினும் இங்கே இந்நிகழ்வின் பரிசுத்த நிலையில் மட்டுமே கவனம் செலுத்துகிறோம். ஆதலால் இந்த மாற்றமைவு இயல்பாக நிறைவேறுவதாய்க் கொள்கிறோம். மேலும், பரிவர்த்தனை என்ற ஒன்று நடைபெற்று வரும் வரை, அதாவது சரக்கு விலை போகாத ஒன்றாய் அமையாத வரை, இந்த மாற்றமைவு நிகழவே செய்கிறது; பெறப்படுகிற விலை மதிப்பைக்

---

* *என்.எஃப்:டேனியல்சனுக்கு (நிகோலாய்-ஆன்) 1878 நவம்பர் 28 தேதியிட்டு எழுதிய கடிதத்தில், இந்த வாக்கியம் பின்வருமாறு அமையும் விதத்தில் திருத்தப்பட வேண்டுமென மார்க்ஸ் விருப்பம் தெரிவித்தார்: ''மேலும், உண்மையிலேயே ஒவ்வொரு தனி கெஜத்தின் மதிப்பும் முழுத் துணியிலும் செலவிடப்பட்ட சமுதாய உழைப்பில் ஒரு பகுதியின் பொருள்மய வடிவமே.'' மார்க்சிற்குச் சொந்தமான ''மூலதனம்'' முதல் பாகத்தின் இரண்டாவது ஜெர்மன் பதிப்புப் பிரதியில் இதற்கு நிகரான திருத்தம் செய்யப்பட்டிருந்தது; ஆயின் அது அவரது கையெழுத்தில் இல்லை.—ருஷ்யப் பதிப்பில் மார்க்சிய-லெனினியக் கழகத்தின் குறிப்பு.*

காட்டிலும் முறைகேடான அளவுக்கு அதிகமாகவோ குறைவாகவோ இருக்கக் கூடும் என்றாலும், இந்த மாற்றமைவு நிகழவே செய்கிறது.

விற்பவர் தன் சரக்கிற்கு பதில் தங்கத்தையும், வாங்குபவர் தன் தங்கத்திற்கு பதில் சரக்கையும் பெறுகிறார். இங்கே கண் எதிரே தெரிகிற உண்மை, சரக்கும் தங்கமும்—20 கெஜம் துணி, £2 ஆகியவை கைமாறியும் இடம் மாறியும் உள்ளன; வேறுவிதமாகச் சொன்னால், அவை பரிவர்த்தனை செய்து கொள்ளப்பட்டிருக் கின்றன என்பதாகும். ஆனால் சரக்கைப் பரிவர்த்தனை செய்வது எதற்குப் பதிலாக? அதன் சொந்த மதிப்பு மேற்கொள்ளும் உருவத் துக்குப் பதிலாக, சர்வப் பொதுச் சமதைக்குப் பதிலாக. தங்கத்தைப் பரிவர்த்தனை செய்வது எதற்குப் பதிலாக? அதன் சொந்த பயன்-மதிப்பின் குறிப்பான ஒரு வடிவத்துக்குப் பதிலாக. தங்கம் துணியை எதிர்கொள்ளும் போது பண வடிவத்தை மேற்கொள்வது ஏன்? ஏனெனில், துணியின் விலையான £2, அதாவது அதன் பணப் பெயர் பணமென்ற தன்மையிலான தங்கத்தோடு துணியை ஏற்கெனவே சமன்படுத்தி விட்டது. ஒரு சரக்கு உடைமை மாற்றம் செய்யப்பட்டதுமே, அதாவது அதன் விலையில் முன்னர் கருத் தளவில் மட்டுமே இருந்த தங்கத்தை அதன் பயன்-மதிப்பு மெய் யாகவே ஈர்த்தவுடன், அது தன் ஆரம்ப சரக்கு வடிவத்தை விட்டொழிக்கிறது. எனவே, ஒரு சரக்கின் விலை, அல்லது அதன் கருத்தளவிலான மதிப்பு வடிவம் ஈடேற்றம் பெறுவதென்பது அதே நேரத்தில் பணத்தின் கருத்தளவிலான பயன்-மதிப்பு ஈடேற்றம் பெறுவதுமாகும். சரக்கைப் பணமாக மாற்றுவதென்பது அதே நேரத்தில் பணத்தைச் சரக்காக மாற்றுவதுமாகும். தோற்றத்தில் ஒற்றை நிகழ்முறையாக இருப்பது எதார்த்தத்தில் இரட்டை நிகழ்முறையாகும். சரக்குடைமையாளர் முனையில் அது விற்றல் [sale] ஆகும்; எதிர்முனையான பணவுடைமையாளர் முனையில் அது வாங்கல் [purchase] ஆகும். வேறு விதமாகச் சொன்னால் விற்றல் என்பது வாங்கலும் ஆகும், C — M என்பது M — Cஉம் ஆகும்.[74]

இந்தக் கட்டம் வரை, நாம் மனிதர்களை ஒரு பொருளாதாரப் பொறுப்பில் மட்டுமே, தம் சொந்த உழைப்பின் உற்பத்தியை உடைமை மாற்றம் செய்வதன் மூலம் மற்றவர்களது உழைப்பின் உற்பத்தியைத் தனதாக்கிக் கொள்கிற பொறுப்பாம் சரக்குடைமை யாளர்கள் என்ற பொறுப்பில் மட்டுமே பரிசீலித்துள்ளோம். எனவே, சரக்குடைமையாளர் பணம் வைத்திருக்கிற ஒருவரைச்

---

[74] "ஒவ்வொரு விற்றலும் ஒரு வாங்கலே ஆகும்." (டாக்டர் கெனே: "Dialogues sur le Commerce et les Travaux des Artisans." Physiocrates ed. Daire, பகுதி I, பாரிஸ், 1846, பக்கம் 170.) அல்லது, கெனே தமது "பொதுக் கோட்பாடுகளில்" கூறுவது போல, "விற்பது என்றால் வாங்குவதே."

சந்திக்க வேண்டுமானால், பின்னவருடைய, அதாவது வாங்கு பவருடைய உழைப்பின் உற்பத்திப் பொருள் பணமாய் இருக்க வேண்டும், அதாவது பணப் பொருளான தங்கமாய் இருக்க வேண்டும்; அல்லது அவரது உற்பத்திப் பொருள் ஏற்கெனவே இயல்பு மாறி பயனுள்ள பொருள் என்ற தன் ஆரம்ப வடிவத்தை விட்டொழித்திருக்க வேண்டும். தங்கம் பணத்தின் பாத்திரத்தை வகிக்க வேண்டுமானால், ஏதேனுமொரு கட்டத்தில் சந்தையில் அடியெடுத்து வைத்தாக வேண்டும். உழைப்பின் நேரடி உற்பத்திப் பொருள் என்ற முறையில் தங்கம் சம மதிப்புள்ள வேறொரு உற்பத்திப் பொருளுக்காகப் பண்டமாற்று [barter] செய்யப்படும் இடமான அவ்வுலோகம் உற்பத்தியாகும் இடத்தில் இது நிகழக் காணலாம். அக்கணமுதற்கொண்டு அது எப்போதுமே ஏதேனு மொரு சரக்கின் ஈடேற்றம் பெற்ற விலையைக் குறிக்கிறது.[75] தங்கம் அது உற்பத்தியாகுமிடத்தில் ஏனைய சரக்குகளுக்காகப் பரிவர்த்தனை செய்யப்படுவதை தவிர்த்து, மற்றபடி அது யார் கையிலிருந்தாலும், உடைமையாளரால் உடைமை மாற்றம் செய்யப் பட்ட ஏதோ ஒரு சரக்கின் மாறிய உருவமே ஆகும்.விற்றல் அல்லது முதல் உருமாற்றமான C — M என்பதன் விளைவே அது.[76] நாம் பார்த்த படி, எல்லாச் சரக்குகளும் தங்கத்தின் மூலம் தங்கள் மதிப்புகளை அளவிட்டுக் கொள்வதாலும், இவ்வாறு பயனுள்ள பொருட்கள் என்ற தமது இயற்கையான உருவத்துடன் அதனைக் கருத்தளவில் ஒப்பிட்டு வேறுபடுத்திக் கொள்வதாலும், அதனைத் தமது மதிப்பின் உருவமாக்கிக் கொள்வதாலும், தங்கமானது கருத் தளவிலான பணம் [ideal money] அல்லது மதிப்புகளின் அளவை ஆகிறது. பரவலாக நடந்தேறும் சரக்குகளின் உடைமை மாற்றத்தின் மூலம், பயனுள்ள பொருட்கள் என்ற அவற்றின் இயற்கையான வடிவங்களுடன் உள்ளபடியே இடமாற்றம் செய்து கொண்டு, இவ்விதமாக எதார்த்தத்தில் அவற்றின் மதிப்புகளின் உரு ஆவதன் மூலம் தங்கம் மெய்யான பணமாகிறது. சரக்குகள் இந்தப் பண உருவத்தை மேற்கொள்ளும் போது, ஒருபடித்தான மனித உழைப் பின் ஒரே விதமான, சமூக வழியில் அங்கீகரிக்கப்பட்ட அவதார மாகத் தம்மை மாற்றிக் கொள்ளும் பொருட்டு, தமது இயற்கையான பயன்-மதிப்பு, தமது படைப்புக்குக் காரணமான குறிப்பிட்ட வகை உழைப்பு ஆகியவற்றின் அடையாளமே தெரியாத படி மாறிப் போகின்றன. ஒரு பொற்காசினைப் பார்ப்பதைக் கொண்டே, அது எந்தக் குறிப்பிட்ட சரக்குக்காகப் பரிவர்த்தனை செய்து கொள்ளப்

---

75 ''ஒரு சரக்கின் விலையை இன்னொரு சரக்கின் விலையால்தான் கொடுக்க முடியும்.'' (*மெர்சியர் டெ லா ரிவீரா:* ''L'Ordre naturel et essentiel de societes politiques.'' Physiocrates, ed. Daire, பகுதி II., பக்கம் 554.)

76 ''இந்தப் பணத்தைப் பெறும் பொருட்டு, எதையேனும் விற்றிருக்க வேண்டும்.'' முன் வந்தது, பக்கம் 543.

பட்டது என்பதைச் சொல்ல முடியாது. எல்லாச் சரக்குகளும் அவற்றின் பண வடிவத்தில் ஒரே மாதிரியாய் இருக்கின்றன. எனவே, குப்பை பணமல்ல என்றாலும், பணம் குப்பையாக இருக்கலாம். நமது நெசவாளர் தன் துணியைக் கொடுத்து இரு பொற்காசுகளைப் பெற்றுக் கொண்டாரே, அந்த இரு பொற்காசுகளும் ஒரு குவார்ட்டர் கோதுமையின் மாறிய வடிவமென்று வைத்துக் கொள்வோம். துணியின் விற்றலாகிய C — M என்பது அதே நேரத்தில் துணியின் வாங்கலாகிய M — C என்பதும் ஆகும். ஆனால், விற்றலானது அதற்கு எதிரிடையான தன்மையுள்ள செய்கையுடன், அதாவது விவிலிய நூலின் வாங்கலுடன் முடிவடைகிற ஒரு நிகழ்முறையில் முதற் செயலாகும்; மறு புறம் துணியின் வாங்கல் அதற்கு எதிரிடையான தன்மையுள்ள செய்கையுடன், அதாவது கோதுமையின் விற்றலுடன் தொடங்கிய இயக்கத்தின் இறுதிச் செயலாகும். C — M — C (துணி — பணம் — விவிலிய நூல்) என்பதன் முதற் கட்டமான C — M (துணி — பணம்) என்பது இன்னொரு இயக்கமான C — M — C (கோதுமை — பணம் — துணி) என்பதன் கடைசிக் கட்டமான M — C (பணம் — துணி) என்பதும் ஆகும். எனவே, ஒரு சரக்கின் முதல் உருமாற்றம், அதாவது சரக்கென்னும் நிலையிலிருந்து அது பணமாக மாறுகிற மாற்றம் எப்போதுமே வேறொரு சரக்கின் இரண்டாவது உருமாற்றமும் ஆகும், அதாவது பணமென்னும் நிலையிலிருந்து அது திரும்பவும் சரக்காக மாறுகிற மாற்றமும் ஆகும்.[77]

**M — C, அல்லது வாங்கல்.**

**ஒரு சரக்கின் இரண்டாவதும் இறுதியானதுமாகிய உருமாற்றம்**

பணம் மற்றெல்லாச் சரக்குகளதும் மாறிய வடிவமாகும், அவை பரவலான முறையில் உடைமை மாற்றம் செய்யப்படுவதன் விளைவாகும் என்ற காரணத்தால், பணத்தைப் பொறுத்த வரை தடையோ நிபந்தனையோ இன்றி உடைமை மாற்றம் செய்யத் தக்கதாகும். அது எல்லா விலைகளையும் பின்னோக்கிப் படிக்கிறது; இவ்வாறு அதன் சொந்தப் பயன்-மதிப்பை ஈடேற்றம் செய்து கொள்வதற்கான ஆதாரப் பொருளாக அமைகிற மற்றெல்லாச் சரக்குகளின் தசையுருக்களிலும் முகம் காட்டுகிறது எனலாம். அதே நேரத்தில் சரக்குகள் பணத்தின் மீது செலுத்தும் ஏக்கப் பார்வைகளான விலைகள் பணத்தின் அளவைச் சுட்டுவதன் மூலம் அதன் மாறுந்தகுதியின் [convertibility] வரம்புகளை வரையறுக்கின்றன.

---

[77] முன்னர் குறிப்பிட்டது போல தங்கம் அல்லது வெள்ளியை நேரடியாக உற்பத்தி செய்கிறவர் விதிவிலக்காக அமைகிறார். அவர் தமது உற்பத்திப் பொருளை முதலில் விற்காமலே அதனை வேறொரு சரக்குக்கு பதில் நேரடியாகப் பரிவர்த்தனை செய்து கொள்கிறார்.

ஒவ்வொரு சரக்கும் பணமாகியதும் சரக்கென்ற முறையில் மறைந்து விடுகிறதென்பதால், அது தன் உடைமையாளரின் கையை அடைந்தது எப்படி, அல்லது எப்பண்டம் அதுவாக மாற்றப்பட்டிருக்கிறது என்பதைப் பணத்தைக் கொண்டே சொல்வது சாத்தியமன்று. அது எதை விற்று வந்ததானாலும் சரி, non olet.* ஒரு புறம் அது விற்கப்பட்ட சரக்கைக் குறிக்கிறது, மறு புறம் வாங்க வேண்டிய சரக்கைக் குறிக்கிறது.[78]

வாங்கலான M — C என்பது அதே போது விற்றலான C — M என்பதும் ஆகும். ஒரு சரக்கின் இறுதி உருமாற்றம் வேறொரு சரக்கின் முதல் உருமாற்றம் ஆகும். நமது நெசவாளரைப் பொறுத்த வரை, அவர் தமது £2ஐ மறுமாற்றம் செய்து பெற்ற விவிலிய நூலுடன் அவரது சரக்கின் ஆயுள் முடிந்து விடுகிறது. ஆனால் விவிலிய நூலை விற்றவர் நெசவாளரால் விடுவிக்கப்பட்ட £2ஐ சாராயமாக மாற்றுகிறார் என வைத்துக் கொண்டால், (துணி, பணம், விவிலியம்) என்பதன் முடிவடையும் கட்டமான M — C என்பது, C — M — C (விவிலியம், பணம், சாராயம்) என்பதன் முதற் கட்டமான C — M என்பதுமாகும். குறிப்பிட்ட சரக்கின் உற்பத்தியாளரிடம் அந்தப் பண்டம் மட்டுமே விற்பனைக்குள்ளது; பொதுவாக, அவர் இதனைப் பெருமளவுகளில் விற்கிறார்; ஆனால், ஈடேற்றம் பெற்ற விலையை, விடுவிக்கப்பட்ட பணத் தொகையை அவர் தமது பல்வேறு தேவைகளின் காரணமாய் ஏராளமான வாங்கல்களாகப் பிரிக்க வேண்டியதாகிறது. எனவே, விற்றல் ஒன்றே ஆனாலும் பல்வேறு பண்டங்களின் மிகப் பல வாங்கல்களுக்கு அது வழிவகுக்கிறது. இவ்வாறு, ஒரு சரக்கின் இறுதி உருமாற்றம் வேறு பல சரக்குகளது முதல் உருமாற்றங்களின் ஒட்டுமொத்தமாய் அமைகிறது.

ஒரு சரக்கின் முழுமை பெற்ற உருமாற்றத்தை இப்போது ஒட்டுமொத்தமாகப் பரிசீலிப்போமானால், அது இரு எதிரெதிரான, ஒன்றையொன்று பூர்த்தி செய்யும் இயக்கங்களான C — M, M — C ஆகியவற்றாலானது என்பது எடுத்த எடுப்பில் தெரிகிறது. ஒரு சரக்கின் இந்த இரு எதிர்நிலையான உருமாற்றங்களும் சரக்குடைமையாளரின் இரு எதிர்நிலையான சமூகச் செய்கைகளால் தோற்றுவிக்கப்படுகின்றன; இந்த செய்கைகளோ அவர் ஏற்கும் பொருளாதார பாத்திரங்களின் குணச் சித்திரத்தைப் பதிக்கின்றன. அவர் விற்கும் செயலைச் செய்வதால் விற்பவராகிறார்; வாங்கும் செயலைச் செய்வதால் வாங்குபவராகிறார். ஆனால், ஒரு சரக்கின்

78 ''நமது கையிலிருக்கும் பணம் நாம் வாங்க விரும்பக் கூடிய பண்டங்களைக் குறிப்பது போலவே, நாம் இந்த பணத்திற்காக விற்றுள்ள பண்டங்களையும் குறிக்கிறது.'' (மெர்சியர் டெ லா ரிவீரா, முன் வந்தது, பக்கம் 586.)

* காசுக்கு நாற்றமில்லை.

இப்படிப்பட்ட உருமாற்றம் ஒவ்வொன்றிலும், அதன் இரு வடிவங்களான சரக்கு வடிவமும் பண வடிவமும் ஏக காலத்தில், ஆனால் எதிரெதிர்த் துருவங்களில் இருப்பது போலவே, விற்பவர் ஒவ்வொருவருக்கும் எதிராக வாங்குபவர் ஒருவரும் வாங்குபவர் ஒவ்வொருவருக்கும் எதிராக விற்பவர் ஒருவரும் இருக்கின்றனர். குறிப்பிட்ட ஒரு சரக்கு சரக்கென்ற நிலையிலிருந்து பணமாகவும், பணமென்ற நிலையிலிருந்து மற்றொரு சரக்காகவும் அடுத்தடுத்து இரு முறை உருமாற்றமடையும் போதே, சரக்குடைமையாளர் தன் பாத்திரத்தை விற்பவர் என்பதிலிருந்து வாங்குபவர் என்பதாக அடுத்தடுத்து மாற்றிக் கொள்கிறார். எனவே, விற்பவர், வாங்குபவர் என்ற இந்தப் பாத்திரங்கள் நிரந்தரமானவை அல்ல. சரக்குகளின் சுற்றோட்டத்தில் ஈடுபடுகிற பல்வேறு ஆட்களும் இந்தப் பாத்திரங்களை மாறி மாறி ஏற்கின்றனர்.

ஒரு சரக்கின் முழுமையான உருமாற்றம், அதன் மிகவும் சாமானிய வடிவத்தில் நான்கு முனைகளையும், மூன்று கதா பாத்திரங்களையும் கொண்டுள்ளது. முதலில் சரக்கு பணத்தை எதிர்கொள்கிறது; பணமென்பது சரக்கின் மதிப்பு மேற்கொள்கிற வடிவமாகும்; அது வாங்குபவரின் சட்டைப் பையில் மெய்யான பிண்டப் பொருளாய் சலசலக்கிறது. இவ்விதம் சரக்குடைமையாளருக்கும் பணம் வைத்திருப்பவருக்கும் தொடர்பு ஏற்படுகிறது. இப்போது, சரக்கு பணமாக மாற்றப்பட்டதுமே, பணம் அதன் நிலையற்ற சமதை வடிவம் ஆகிறது; இச்சமதை வடிவத்தின் பயன்-மதிப்பு ஏனைய சரக்குகளின் தசையுருக்களில் காணக் கிடக்கிறது. முதல் மாறுதலின் இறுதிப் பதமாகிய பணம் அதே நேரத்தில் இரண்டாவது மாறுதலின் தொடக்க நிலையாகவும் உள்ளது. முதல் செய்கையில் விற்பவராக இருப்பவர் இரண்டாவது செய்கையில் இவ்விதம் வாங்குபவராகிறார்; இந்த இரண்டாவது செய்கையில் மூன்றாவது சரக்குடைமையாளர் ஒருவர் விற்பவராக அரங்கத்தில் தோன்றுகிறார்.[79]

சரக்கின் உருமாற்றத்தில் அடங்கியுள்ள ஒன்றுக்கொன்று எதிர் மாறான இவ்விரு கட்டங்களும் சேர்ந்து ஒரு சுழல் இயக்கமாக, ஒரு சுற்றாக [circuit] அமைகின்றன: சரக்கு வடிவம், இவ்வடிவத்தை விட்டொழித்தல், சரக்கு வடிவத்துக்குத் திரும்புதல். இங்கு சரக்கு இரு வேறு அமிசங்களில் தோன்றுவது மெய்தான். தொடங்குமிடத்தில் அது தன் உடைமையாளருக்குப் பயன்-மதிப்பன்று. முடியுமிடத்தில், அது தன் உடைமையாளருக்குப் பயன்-மதிப்பாகும். இவ்வாறு பணமும் முதல் கட்டத்தில் மதிப்பின் இறுகிய படிகமாகத் தோன்று

---

[79] "இவ்வாறு நான்கு இறுதிப் பதங்களும் மூன்று ஒப்பந்தத் தரப்புகளும்... உள்ளன; இத்தரப்புகளில் ஒன்று இரு முறை குறுக்கிடுகிறது." (லெ திரொஸ்னே, முன் வந்தது, பக்கம் 909.)

கிறது; இப்படியொரு படிகமாக இறுகுவதற்கே சரக்கு துடித்துக் கொண்டிருக்கிறது. இரண்டாவது கட்டத்தில் அது நிலையற்ற சமதை வடிவமாகக் கரைந்து போகிறது; ஒரு பயன்-மதிப்புக்கு இடம் விட்டு விலகுவதே இச்சமதை வடிவத்துக்கு விதிக்கப்பட்ட வழி.

சுற்றாக அமைகிற இரு உருமாற்றங்களும் அதே நேரத்தில் மற்று மிரு சரக்குகளின் இரு எதிர்மாறான பகுதி உருமாற்றங்களாகவும் உள்ளன. துணியென்ற ஒரே சரக்கு தன் சொந்த உருமாற்றங்களின் தொடரை ஆரம்பித்து, மற்றொரு சரக்கின் (கோதுமையின்) உரு மாற்றத்தைப் பூர்த்தி செய்கிறது. முதல் கட்டம் அல்லது விற்றலில் துணி இவ்விரு பாத்திரங்களையும் தானே நேரில் ஏற்கிறது. ஆனால், பின்னர் அது தங்கமாக மாற்றப்பட்டு, இரண்டாவதும், இறுதியானதுமான தன் சொந்த உருமாற்றத்தைப் பூர்த்தி செய்கிறது; அதே நேரத்தில் மூன்றாவது சரக்கு ஒன்றின் முதல் உருமாற்றத்தின் நிறைவேற்றத்துக்கும் உதவுகிறது. எனவே, ஒரு சரக்கு தன் உரு மாற்றங்களின் போக்கில் கடக்கிற சுற்று ஏனைய சரக்குகளின் சுற்று களுடன் பின்னிப் பிணைந்துள்ளது. வெவ்வேறு சுற்றுகள் அனைத் தும் சேர்ந்த மொத்தமே **சரக்குகளின் சுற்றோட்டம்** [circulation of commodities] ஆகும்.

சரக்குகளின் சுற்றோட்டம் உற்பத்திப் பொருட்களின் நேரடிப் பரிவர்த்தனையிலிருந்து (பண்டமாற்றிலிருந்து) வடிவத்தில் மட்டு மல்லாமல் சாரத்திலும் வேறுபடுகிறது. நடந்துள்ள நிகழ்ச்சிகளின் போக்கைப் பார்த்தாலே இது தெரிந்து விடும். உண்மையில் நடந் திருப்பது என்னவென்றால், நெசவாளர் விவிலிய நூலுக்காகத் தனது துணியை, அதாவது வேறு ஒருவரின் சரக்குக்காகத் தன் சொந்தச் சரக்கைப் பரிவர்த்தனை செய்திருக்கிறார். ஆனால், அவரைப் பொறுத்து மட்டுமே இது உண்மை. விவிலிய நூலை விற்பவர் விறுவிறுப்பூட்டக் கூடிய ஒன்றை நாடுகிறார்; தனது விவிலியத்தைத் துணிக்குப் பரிவர்த்தனை செய்ய வேண்டுமென அவர் நினைக்கவேயில்லை; அவ்வாறே நமது நெசவாளரும் துணிக் குப் பதில் கோதுமை பரிவர்த்தனை செய்யப்படுமென நினைக்க வேயில்லை. Aஇன் சரக்கு இருந்த இடத்துக்கு Bஇன் சரக்கு வந்துள்ளது. ஆனால் A, B ஆகியோர் அந்தச் சரக்குகளைப் பரஸ்பரம் பரிவர்த்தனை செய்து கொள்ளவில்லை. அவர்கள் ஒருவரிடமிருந்து ஒருவர் ஏக காலத்தில் வாங்கிக் கொள்ள நேரிட லாம்தான்; ஆனால், இது போன்ற விதிவிலக்கான கொடுக்கல் வாங்கல்கள் எவ்விதத்திலும் சரக்குச் சுற்றோட்டத்தின் பொது வான நிலைமைகளின் அவசிய விளைவல்ல. ஒரு புறம், சரக்குப் பரிவர்த்தனையானது நேரடிப் பண்டமாற்றிலிருந்து பிரிக்க முடி யாத எல்லைகளாகிய வட்டார வழிப்பட்ட, ஆள் வழிப்பட்ட எல்லைகளை எல்லாம் உடைத்துக் கொண்டு முன்னேறுவதும்,

சமுதாய உழைப்பினது உற்பத்திப் பொருட்களின் சுற்றோட்டத்தை வளர்ப்பதும் எப்படி என்பதை இங்கே பார்க்கிறோம்; மறு புறம், தன்னியல்பாய் மலர்கிறவையும், கதாபாத்திரங்களின் கட்டுப்பாட்டுக்கு முழுக்க முழுக்க அப்பாற்பட்டவையுமான சமூக உறவுகளின் முழு வலைப்பின்னலை சரக்குப் பரிவர்த்தனை பின்னுவது எப்படி என்பதையும் பார்க்கிறோம். விவசாயி தன் கோதுமையை விற்றதால்தான் நெசவாளர் தன் துணியை விற்க முடிகிறது. நெசவாளர் தன் துணியை விற்றதால்தான் நமது விறுவிறுப்புக்காரர் தன் விவிலியத்தை விற்க முடிகிறது. விவிலியக்காரர் நித்திய ஜீவனின் தீர்த்தத்தை விற்றதால்தான் சாராயங் காய்ச்சுபவர் தன் போதைச் சரக்கை விற்க முடிகிறது; இவ்வாறே இன்னும் சொல்லலாம்.

எனவே, சுற்றோட்ட நிகழ்முறை உற்பத்திப் பொருட்களின் நேரடிப் பண்டமாற்றைப் போன்றதன்று; அதாவது பயன்-மதிப்புகள் இடமும் கையும் மாறியவுடன் அது முடிந்து போய் விடுவதில்லை. குறிப்பிட்ட ஒரு சரக்கின் உருமாற்றச் சுற்றிலிருந்து வெளியேறியதுமே பணம் மறைந்து விடுவதில்லை. சுற்றோட்டக் களத்தில் புதிய இடங்களில்—ஏனைய சரக்குகள் காலி செய்யும் இடங்களில் எல்லாம்—அது இடையறாது வந்தமர்கிறது. துணியின் முழுமையான உருமாற்றத்தில், உதாரணமாக துணி—பணம்—விவிலியம் என்பதில் துணி முதலில் சுற்றோட்டத்திலிருந்து வெளியேறுகிறது; பணம் அதனிடத்தில் வந்தமர்கிறது. பின்னர் விவிலியம் சுற்றோட்டத்திலிருந்து வெளியேறுகிறது; பணம் அதனிடத்தில் வந்தமர்கிறது. ஒரு சரக்கு பிறிதொரு சரக்குக்கு இடம் விட்டு விலகும் போதெல்லாம் பணச் சரக்கு மூன்றாவது ஆளிடம் சிக்கிக் கொள்கிறது.[80] சுற்றோட்டமானது ஒவ்வொரு மயிர்க் காம்பிலிருந்தும் பணத்தை வியர்வையாக வழியச் செய்கிறது.

ஒவ்வொரு விற்றலும் ஒரு வாங்கலே, ஒவ்வொரு வாங்கலும் ஒரு விற்றலே என்பதால், சரக்குகளின் சுற்றோட்டம் அவசியமாகவே விற்றல்கள், வாங்கல்கள் இவற்றின் சமநிலையைக் குறிக்கிறது என்ற சூத்திரத்தைக் காட்டிலும் சிறுபிள்ளைத்தனமானது ஒன்றுமில்லை. உள்ளபடியே நடக்கிற விற்றல்களின் எண்ணிக்கை வாங்கல்களின் எண்ணிக்கைக்குச் சமம் என்பதே இதன் அர்த்தமானால், இது கூறியது கூறலே. ஆனால், விற்பவர் ஒவ்வொரும் தனக்கு வேண்டிய வாங்குபவரைத் தன்னுடன் சந்தைக்குக் கொண்டுவருகிறார் என்று நிரூபிப்பதே அதன் உண்மை நோக்கமாகும். அப்படியொன்றும் நடப்பதில்லை: விற்றலும் வாங்கலும் முழுதொத்த ஒரே செயலாக அமைகின்றன; சரக்குடைமையாளருக்கும், பணவுடைமையாளருக்கும் இடையிலான — காந்தத்தின் இரு

80 கூறாமலே விளங்கினாலும் இது, அரசியல் பொருளாதார அறிஞர்களின் கண்ணிலும், குறிப்பாக ''சாமானியமான தடையிலா வாணிபவாதியின்'' கண்ணிலும் படுவதில்லை.

துருவங்களைப் போல் ஒருவருக்கொருவர் எதிராயுள்ள இரு ஆட்களிடையிலான — பரிவர்த்தனையாக அமைகின்றன. அவை ஒரே ஒருவரால் நிறைவேற்றப்படும் போது, துருவ வழிப்பட்ட, எதிரெதிரான தன்மைகளுடைய இரு வேறு செயல்களாக அமைகின்றன. எனவே, சுற்றோட்டம் என்னும் இரசவாத உலைக்குள் வீசப்பட்ட சரக்கு பண வடிவத்தில் மீண்டு வரவில்லையென்றால், அதாவது அதனை அதன் உடைமையாளர் விற்கவும், ஆகவே பணத்தின் உடைமையாளர் வாங்கவும் முடியா விட்டால், அது பயனற்றதாகும் என்பதை விற்றல், வாங்கலின் முழுதொத்த தன்மை [identity] குறிக்கிறது. மேலும், பரிவர்த்தனை நடந்தேறுமேயானால், அது சரக்கின் ஆயுளில் நீண்ட அல்லது குறுகிய ஓய்வுக் காலமாக, இடைவேளையாக அமைகிறது என்பதையும் அந்த முழுதொத்த தன்மை குறிக்கிறது. ஒரு சரக்கின் முதல் உருமாற்றம் ஒரே நேரத்தில் விற்றலும் வாங்கலும் ஆகும் என்பதால், அதுவே ஒரு சுயேச்சையான நிகழ்முறையுமாகும். வாங்குபவர் சரக்கைப் பெறுகிறார்; விற்பவர் பணத்தைப் பெறுகிறார், அதாவது எந்த நேரத்திலும் சுற்றோட்டத்தில் இறங்கத் தயாராயுள்ள சரக்கைப் பெறுகிறார். வாங்குவதற்கு யாருமில்லையேல் யாராலும் விற்க முடியாது. ஆனால், விற்றவர் எவரும் உடனே வாங்க வேண்டுமென்ற கட்டாயமில்லை. நேரடிப் பண்டமாற்றால் சுமத்தப்படும் தடைகளான காலம், இடம் மற்றும் தனியாட்கள் தொடர்பான தடைகளை எல்லாம் சுற்றோட்டம் தகர்த்துச் செல்கிறது. ஒருவர் தனது உற்பத்திப் பண்டத்தை உடைமை மாற்றம் செய்வதற்கும் வேறொருவரது உற்பத்திப் பண்டத்தைத் தனது உடைமையாக்கிக் கொள்வதற்குமிடையில் பண்டமாற்றில் நிலவவே செய்கிற நேரடியான முழுதொத்த தன்மையை விற்றல், வாங்கல் என்னும் எதிர்நிலையாக [antithesis] பிளவுபடுத்துவதன் மூலம் சுற்றோட்டம் இதைச் சாதிக்கிறது. சுயேச்சையான, எதிர்நிலைத் தன்மையுள்ள இவ்விரு செயல்களுக்கும் உள்ளார்ந்த ஐக்கியமுண்டு என்றும், அவை சாராம்சத்தில் ஒன்றே என்றும் கூறுவதற்கும், இந்த உள்ளார்ந்த ஓர்மை ஒரு புற எதிர் நிலையில் வெளிப்படுகிறது என்று கூறுவதற்கும் வேறுபாடு இல்லை. ஒரு சரக்கின் முழுமையான உருமாற்றத்தில் ஒன்றையொன்று பூர்த்தி செய்யும் இரு கட்டங்களுக்குமிடையிலான கால இடைவெளி அதிகப்படியாக நீண்டு விட்டால், விற்றலுக்கும் வாங்கலுக்கும் இடையிலான பிளவு அளவுமீறிக் கடுமையாகி விட்டால், அவற்றிடையிலான மிக நெருங்கிய தொடர்பு, அவற்றின் ஓர்மை ஒரு நெருக்கடியைத் தோற்றுவிப்பதன் மூலம் தன்னை நிலை நாட்டிக் கொள்கிறது. பயன்-மதிப்பு, மதிப்பு என்ற எதிர்நிலை; தனியார் உழைப்பு நேரடிச் சமுதாய உழைப்பாகத் தன்னைக் காண்பித்துக் கொள்ள வேண்டும், குறிப்பான ஸ்தூல வகை உழைப்பு ஸ்தூலமற்ற மனித உழைப்பாகக் கணக்கிடப்பட வேண்டும் என்ற

முரண்பாடுகள்; பொருட்களை மனிதர்களாக உருவகப்படுத்துவதற்கும் மனிதர்களைப் பொருட்கள் பிரதிநிதித்துவப்படுத்துவதற்கும் இடையிலான முரண்பாடு—சரக்குகளில் உள்ளார்ந்துள்ள இந்த எதிர்நிலைகள், முரண்பாடுகள் எல்லாம் ஒரு சரக்கினது உரு மாற்றத்தின் எதிர்நிலைக் கட்டங்களில் தம்மை நிலைநாட்டிக் கொள்கின்றன, தமது இயக்க முறைகளை வளர்த்துக் கொள்கின்றன. எனவே இந்த முறைகள் நெருக்கடிகளின் சாத்தியப் பாட்டை—சாத்தியப்பாட்டை மட்டுமே—குறிக்கின்றன. இந்த வெறும் சாத்தியப்பாட்டை மெய்ந்நடப்பாக மாற்றுவது ஒரு நீண்ட உறவுத் தொடரின் விளைவாகும்: இந்த உறவுகள் சாமானியச் சுற்றோட்டம் [simple circulation] என்ற நமது இப்போதைய நோக்கில் இன்னும் நிலவாத உறவுகளே.[81]

### ஆ. பணத்தின் ஓட்டம்

உழைப்பின் பொருளாயத உற்பத்திகளது சுற்றோட்டத்தை நிகழச் செய்யும் வடிவ மாற்றமான C — M — C நடந்தேற வேண்டு மானால், குறிப்பிட்ட ஒரு மதிப்பு சரக்கின் உருவில் நிகழ் முறையைத் துவக்குவதும், சரக்கின் உருவிலேயே அதனை முடித்து வைப்பதும் அவசியமாகும். எனவே, சரக்கின் இயக்கம் ஒரு சுற்று ஆகும். மறு புறம் இவ்வியக்கத்தின் வடிவமானது பணம் ஒரு சுற்றில் சுற்றிவர வழியில்லாமற் செய்து விடுகிறது. அதாவது, பணம் திரும்பி வருவதன்று விளைவு. தொடர்ந்து புறப்பாட்டிடத் திலிருந்து மேலும் மேலும் அது விலக்கியே இழுத்துச் செல்லப் படுகிறது. விற்பவர் தன் சரக்கின் மாறிய உருவமான பணத்தைக் கெட்டியாகக் கையிலே இருத்திக் கொண்டிருக்கும் வரை, அந்தச்

---

81 "அரசியல் பொருளாதார விமர்சனத்திற்கு ஒரு பங்களிப்பு," பக்கம் 74-76இல் ஜேம்ஸ் மில் பற்றிய என் கருத்துகளைப் பார்க்கவும். இந்த விவகாரம் தொடர்பாக, சப்பைக்கட்டுவாதப் பொருளாதாரத்துக்கே உரித்தான இரண்டு முறைகளை நாம் கவனிக்கலாம். முதலாவது: சரக்குகளின் சுற்றோட்டத்துக்கும் உற்பத்திப் பொருட்களின் நேரடிப் பண்டமாற்றுக்கும் இடையிலான வேறுபாட்டுக் கூறுகளை ஒதுக்கி வைத்து விடுவதன் மூலம் அவ்விரண்டும் ஒன்றே என்பது. இரண்டாவது: முதலாளித்துவப் பொருளுற்பத்தி முறையில் ஈடுபட்டுள்ள ஆட்களிடையிலான உறவுகளை சரக்குச் சுற்றோட்டத்திலிருந்து உதிக்கிற சாமானிய உறவுகளாகப் பெயர்ப்பதன் மூலம் முதலாளித்துவப் பொருளுற்பத்தியின் முரண்பாடுகளுக்கு சமாதானம் சொல்லும் முயற்சி. ஆயினும், சரக்குகளின் உற்பத்தியும் சுற்றோட்டமும், பலவாறான உற்பத்தி முறைகளின் (பெரிய அல்லது சிறிய அளவுக்கு நடைபெறும்) நிகழ்வுகளாகும். இந்த உற்பத்தி முறைகள் அனைத்துக்கும் பொதுவான சுற்றோட்டத்தின் ஸ்தூலமற்ற இனங்களைத் தவிர வேறெதுவும் நமக்கு தெரியாதென்றால், இந்த முறைகளின் குறிப்பான வேறு பாட்டுக் கூறுகளைப் பற்றி நமக்கு எதுவும் தெரிந்திருக்க வாய்ப்பில்லை; அவற்றைப் பற்றி நாம் தீர்ப்பு வழங்கவும் வாய்ப்பில்லை. யாவருமறிந்த சர்வசாதாரணமான உண்மைகள் குறித்து அரசியல் பொருளாதாரத்தில் இவ்வளவு தடபுடல் நடக்கிறதே, இதை வேறெந்த விஞ்ஞானத்திலும் பார்க்க முடியாது. உதாரணமாக, சரக்கு என்பது உற்பத்திப் பொருளாகும் என்று மூா. ப. ஸேக்கு மெய்யாகவே தெரிந்திருப்பதால், அவர் தம்மைத் தாமே நெருக்கடிகள் பற்றிய நீதிபதியாக நியமித்துக் கொள்கிறார்.

சரக்கு இன்னமும் தன் உருமாற்றத்தின் முதற்கட்டத்திலேயே உள்ளது, தன் பாதையில் பாதியை மட்டுமே கடந்துள்ளது. ஆனால், அவர் இந்நிகழ்முறையைப் பூர்த்தி செய்ததுமே, தன் விற்றலை வாங்கலால் நிறைவு செய்ததுமே, பணம் மீண்டும் அதன் உடைமையாளரின் கையை விட்டுச் செல்கிறது. நெசவாளர் விவிலிய நூலை வாங்கிய பின் மேலும் துணியை விற்றால், பணம் அவரது கைக்குத் திரும்பி வருவது மெய்தான். ஆனால், இப்படித் திரும்பி வருவதன் காரணம் முதல் 20 கெஜம் துணியின் சுற்றோட்டம் அல்ல; அந்தச் சுற்றோட்டத்தின் விளைவாகப் பணம் விவிலிய நூலை விற்றவரின் கைக்குச் சென்றது. நெசவாளரின் கைக்குத் திரும்பி வரும் பணம் புதிதாகச் சரக்கு விற்றுச் சுற்றோட்ட நிகழ்முறையைப் புதுப்பிப்பது அல்லது திரும்ப நிகழச் செய்வதால் கிடைப்பதே ஆகும். இந்தப் புதிய நிகழ்முறையும் அதன் முன்னோடி எதில் முடிந்ததோ அதிலேயே முடிகிறது. எனவே, சரக்குகளின் சுற்றோட்டத்தால் பணத்துக்கு நேரடியாக ஏற்படுகிற இயக்கம் அதன் புறப்பாட்டிடத்திலிருந்து இடைவிடாமல் மேலும் மேலும் விலகியோடுவதாகிய, ஒரு சரக்குடைமையாளரின் கையிலிருந்து இன்னொரு சரக்குடைமையாளரின் கைக்குச் செல்வதாகிய வடிவத்தைப் பெறுகிறது. இப்படிச் செல்வதே பணத்தின் ஓட்டம் (cours de la monnaie) என்பது.

பணத்தின் ஓட்டம் [currency of money] என்பது, ஒரே நிகழ்முறை இடைவிடாமலும் மாறுதலின்றியும் திரும்பத் திரும்ப நிகழ்வதாகும். எப்போதுமே சரக்கு விற்பவரின் கையிலிருக்கிறது; எப்போதுமே பணம் வாங்கற் சாதனமாய் [means of purchase] வாங்குபவரின் கையிலிருக்கிறது. பணம் சரக்கின் விலையை ஈடேற்றம் செய்வதன் மூலம் வாங்கற் சாதனமாகப் பயன்படுகிறது. இந்த ஈடேற்றம் [realisation] விற்பவரிடமிருந்து வாங்குபவருக்கு சரக்கை மாற்றிக் கொடுக்கிறது; வாங்குபவரின் கையிலிருந்து பணத்தை எடுத்து விற்பவரின் கையில் சேர்க்கிறது; அங்கே அது இன்னொரு சரக்குடன் மீண்டும் அதே நிகழ்முறைக்கு உட்படுகிறது. பணத்தின் இயக்கத்திற்குள்ள இந்த ஒரு சார்பான தன்மை சரக்கின் இயக்கத்திற்குள்ள இருசார்பான தன்மையிலிருந்து எழுகிறது; இந்த நிலைமை கண்ணிற்படாமல் மறைந்துள்ளது. சரக்குச் சுற்றோட்டத்தின் இயல்பான தன்மை மேற்கூறியதற்கு நேர்மாறான தோற்றத்தை உண்டாக்குகிறது. சரக்கின் முதல் உருமாற்றம் கண்கூடாகவே பணத்தின் இயக்கம் மட்டுமன்று, சரக்கின் இயக்கமும் ஆகும். மாறாக, இரண்டாவது உருமாற்றத்தில் இயக்கம் பணத்தின் இயக்கமாக மட்டுமே நமக்குத் தோன்றுகிறது. சரக்கு தன் சுற்றோட்டத்தின் முதல் கட்டத்தில் பணத்துடன் இடம் மாறுகிறது. உடனே அது ஒரு பயனுள்ள பொருள் என்ற அமிசத்தில் சுற்றோட்டத்திலிருந்து நுகர்வுக்குப்

போய் விடுகிறது.[82] அதற்கு பதில் அதன் மதிப்புருவான பணம் மிஞ்சுகிறது. பின்னர் அது தன் சுற்றோட்டத்தின் இரண்டாவது கட்டத்தினூடே செல்வது அதன் சொந்த இயற்கையான உருவில் அன்று, பண உருவிலேயே. எனவே, இயக்கத்தின் தொடர்ச்சி நிலைநிறுத்தப்படுவது பணத்தால்தான். சரக்கைப் பொறுத்த வரை எதிர்நிலைத் தன்மையுள்ள இரு நிகழ்முறைகளைக் கொண்டுள்ள அதே இயக்கம், பணத்தின் இயக்கமாகக் கருதப்படுகையில், எப் போதுமே ஒரே நிகழ்முறையாக, புதிது புதிதான சரக்குகளுடன் தொடர்ச்சியான இட மாற்றமாக அமைகிறது. எனவே, சரக்கு களின் சுற்றோட்டத்தால் ஏற்படுகிற விளைவு, அதாவது ஒரு சரக்கை விலக்கி விட்டு அதனிடத்துக்கு இன்னொரு சரக்கு வருவது சரக்குகளின் வடிவ மாற்றத்தைக் கொண்டு சாதிக்கப்படாமல், சுற்றோட்ட ஊடகமாக [medium of circulation] செயல்படுகிற பணத்தாலேயே சாதிக்கப்படுவது போன்ற தோற்றம் பெறுகிறது. பணத்தின் இந்தச் செயல் எப்படிப் பார்த்தாலும் தம்மளவில் அசைவற்றவையாகவே தோன்றுகிற சரக்குகளைச் சுற்றியோடச் செய்வது போலவும், பயன்-மதிப்புகளாயிராத கரங்களிலிருந்து பயன்-மதிப்புகளாயுள்ள கரங்களுக்கு அவற்றை மாற்றுவது போல வும், எப்போதுமே பணத்தின் திசைக்கு எதிர்த் திசையில் இதைச் செய்வது போலவும் தோன்றுகிறது. பணம் சரக்குகளைச் சுற்றோட் டத்திலிருந்து தொடர்ச்சியாகத் திருப்பியழைத்துக் கொண்டும், அவற்றினிடத்தில் அடியெடுத்து வைத்துக் கொண்டும், இந்த விதத்தில் தொடர்ச்சியாகத் தன் புறப்பாட்டிடத்திலிருந்து மேலும் மேலும் விலகியோடிக் கொண்டும் இருக்கிறது. எனவே, பணத்தின் இயக்கம் சரக்குச் சுற்றோட்டத்தின் தெரிவிப்புதான் என்ற போதிலும், நேர்மாறானதே உண்மையில் நடப்பது போல் தோன்று கிறது: சரக்குகளின் சுற்றோட்டம் பணத்தினது இயக்கத்தின் விளைவு போல் தோன்றுகிறது.[83]

மேலும், சரக்குகளின் மதிப்புக்குப் பணத்தின் உருவில் சுயேச் சையான மெய்ம்மை இருக்கிறது என்பதாலேயே அது சுற்றோட்ட ஊடகமாகச் செயல்படுகிறது. எனவே, உண்மையில் சுற்றோட்ட ஊடகமென்ற முறையிலான அதன் இயக்கம் சரக்குகள் தமது வடிவங்களை மாற்றிக் கொள்கிற இயக்கமே ஆகும். ஆகவே, இந்த உண்மை பணத்தின் ஓட்டத்தில் தெட்டத் தெளிவாய்க் காணப்

---

82 சரக்கு திரும்பத் திரும்ப விற்கப்படும் பட்சத்திலும் கூட — இப்போதைக்கு நம் கணக்கில் வராத நிகழ்வு இது — இறுதியாக விற்கப்பட்டதும் சுற்றோட்டத் துறையிலிருந்து நுகர்வுத் துறைக்குள் வீழ்கிறது; நுகர்வுத் துறையில் அது வாழ்வுச் சாதனமாகவோ உற்பத்திச் சாதனமாகவோ பயன்படுகிறது.

83 ''அதற்கு (பணத்திற்கு) உற்பத்திப் பொருட்களிடமிருந்து கிடைப்பதல்லாமல் வேறெந்த இயக்கமும் கிடையாது.'' (லெ திரொஸ்னே, முன்வந்தது, பக்கம் 885.)

பட்டாக வேண்டும். இவ்வாறு,* நமது எடுத்துக்காட்டில், துணியானது தன் சரக்கு வடிவத்தைப் பண வடிவமாக மாற்றிக் கொள்கிறது. அதன் முதல் உருமாற்றமாகிய C — M என்பதன் இரண்டாவது பதமான பண வடிவம் அது விவிலியமாக மறுமாற்றம் செய்யப்படுவதான M — C என்னும் அதன் இறுதி உருமாற்றத்தின் முதற் பதமாகிறது. ஆனால், இந்த இரு வடிவ மாற்றங்களில் ஒவ்வொன்றும் சரக்கிற்கும் பணத்திற்குமிடையிலான பரிவர்த்தனையால், அவற்றின் பரஸ்பர இடப் பெயர்ச்சியால் நிறைவேற்றப் படுகிறது. சரக்கின் உடைமை மாற்றம் செய்யப்பட்ட வடிவமாக விற்பவரின் கைக்கு வந்த அதே காசுகள், சரக்கின் முற்றிலும் உடைமை மாற்றம் செய்யத்தக்க வடிவமாகவே அவர் கையை விட்டுச் செல்கின்றன. அவை இரு முறை இடம் பெயர்க்கப்படுகின்றன. துணியின் முதல் உருமாற்றம் இந்தக் காசுகளை நெசவாளரின் சட்டைப் பையில் போடுகிறது; இரண்டாவது உருமாற்றம் அவற்றை அங்கிருந்து எடுத்து விடுகிறது. ஒரே சரக்கு உட்படுகிற இரு எதிர்மாறான மாற்றங்கள், இரு முறை திரும்பத் திரும்ப — ஆனால் எதிரெதிர்த் திசைகளில் — நடக்கும் அதே காசுகளின் இடப் பெயர்ச்சியில் பிரதிபலிக்கின்றன.

மாறாக, உருமாற்றத்தின் ஒரு கட்டம் மட்டுமே நிறைவேறினால், விற்றல்கள் மட்டுமே அல்லது வாங்கல்கள் மட்டுமே நடந்தால், குறிப்பிட்ட ஒரு காசு தன்னிடத்தை ஒரு முறை மட்டுமே மாற்றிக் கொள்கிறது. அதன் இரண்டாவது இட மாற்றம் எப்போதுமே சரக்கின் இரண்டாவது உருமாற்றத்தை, பணமென்னும் நிலையிலிருந்தான அதன் மறுமாற்றத்தைத் தெரிவிக்கிறது. அதே காசுகளின் இடப்பெயர்ச்சி அடிக்கடி திரும்பத் திரும்ப நிகழ்வதானது தனியொரு சரக்கு அடைகிற உருமாற்றங்களின் தொடரை மட்டுமல்லாமல், பொதுவாகச் சரக்குலகிலான எண்ணற்ற உருமாற்றங்கள் பின்னிப் பிணைந்திருப்பதையும் பிரதிபலிக்கிறது. நாம் இப்போது பரிசீலித்துக் கொண்டிருக்கும் ஒரே வடிவமான சரக்குகளின் சாமானியச் சுற்றோட்டத்துக்கு மட்டுமே இதெல்லாம் பொருந்தும் என்பதைக் கூறத் தேவையில்லை.

ஒவ்வொரு சரக்கும் முதலில் சுற்றோட்டத்திற்குள் அடி எடுத்து வைப்பதும் தன் முதல் வடிவ மாற்றத்துக்கு உட்படுவதும், மீண்டும் சுற்றோட்டத்திலிருந்து வெளியேறுவதற்கும் அதனிடத்துக்கு ஏனைய சரக்குகளை வரச் செய்வதற்கும்தான் என்பது போல் தோன்றுகிறது. மாறாக, சுற்றோட்ட ஊடகமாகிய பணம் தொடர்ந்து சுற்றோட்டத் துறைக்குள்ளேயே இருந்து கொண்டும் சஞ்சரித்துக்

---

* இங்கே (''இவ்வாறு, நமது எடுத்துக்காட்டில்...'' என்பதிலிருந்து ''...பின்னிப் பிணைந்திருப்பதையும் பிரதிபலிக்கிறது'' என்பது வரை) ஆங்கில வாசகம் 4-ஆவது ஜெர்மன் பதிப்புக்கு ஏற்ப மாற்றப்பட்டிருக்கிறது. — ஆங்கிலப் பதிப்பாசிரியர்.

கொண்டும் உள்ளது. இந்தத் துறை தொடர்ச்சியாக எவ்வளவு பணத்தை உட்கொள்கிறது என்ற கேள்வி இயல்பாகவே எழுகிறது.

குறிப்பிட்ட ஒரு நாட்டில் ஒவ்வொரு நாளும் ஒரே நேரத்தில், ஆனால் வெவ்வேறு இடங்களில், எண்ணற்ற ஒருசார்பான சரக்கு உருமாற்றங்கள், அல்லது வேறு விதமாகச் சொன்னால் எண்ணற்ற விற்றல்களும் எண்ணற்ற வாங்கல்களும் நடைபெறுகின்றன. சரக்குகள் அவற்றின் விலைகளால் முன்கூட்டியே பணத்தின் திட்டமான அளவுகளோடு கற்பனையாகச் சமன் செய்யப்படுகின்றன. இப்போது பரிசீலனையிலுள்ள சுற்றோட்ட வடிவத்தில், எப்போதுமே பணமும் சரக்குகளும் தத்தமது மெய்யுருவில் நேருக்கு நேர் வருகின்றன, ஒன்று வாங்கல் என்ற நேர் துருவத்திலும் மற்றது விற்றல் என்ற எதிர்த் துருவத்திலும் வருகின்றன என்பதால், தேவைப்படுகிற சுற்றோட்டச் சாதனத்தின் அளவு இந்தச் சரக்குகளனைத்தினது விலைகளின் மொத்தத் தொகையால் முன்கூட்டியே நிர்ணயிக்கப்படுகிறது என்பது தெளிவு. பார்க்கப் போனால், சரக்குகளுடைய விலைகளின் மொத்தத் தொகையால் முன்கூட்டியே கருத்தளவில் தெரிவிக்கப்படும் தங்கத்தின் அளவு அல்லது தொகையையே பணம் மெய்யுருவில் குறிக்கிறது. ஆகவே, இவ்விரு தொகைகளின் சமத்துவம் கூறாமலே விளங்கும். ஆயினும், சரக்குகளின் மதிப்புகள் மாறாதிருக்க, அவற்றின் விலைகள் தங்கத்தின் (பணப் பொருளின்) மதிப்புக்கேற்ப மாறுபடுகின்றன; அது குறைகிற விகிதத்தில் உயர்ந்தும், அது உயர்கிற விகிதத்தில் குறைந்தும் விடுகின்றன. இப்போது தங்கத்தின் மதிப்பில் இப்படியொரு உயர்வு அல்லது குறைவின் விளைவாக, சரக்குகளது விலைகளின் மொத்தத் தொகை வீழ்கிறது அல்லது உயர்கிறது என்றால், ஓட்டத்திலுள்ள பணத்தின் அளவு அதே அளவுக்குக் குறைய வேண்டும் அல்லது உயர வேண்டும். இச்சந்தர்ப்பத்தில் சுற்றோட்ட ஊடகத்தின் அளவில் ஏற்படும் மாற்றம் பணத்தாலேயே ஏற்படுவது மெய்தான்; ஆயினும், இம்மாற்றத்துக்குக் காரணம் மதிப்பளவையாகப் பணியாற்றும் பணமே தவிர, சுற்றோட்ட ஊடகமாகப் பணியாற்றும் பணமன்று. முதலில் சரக்குகளின் விலை பணத்தின் மதிப்புக்கு எதிர் விகிதத்தில் மாறுபடுகிறது. பின்னர் சுற்றோட்ட ஊடகத்தின் அளவு சரக்குகளின் விலைக்கு நேர் விகிதத்தில் மாறுபடுகிறது. எடுத்துக்காட்டாக, தங்கத்தின் மதிப்பு வீழ்ச்சி அடைவதற்குப் பதிலாக மதிப்பின் அளவையாகத் தங்கத்தின் இடத்துக்கு வெள்ளி வந்தால், அல்லது வெள்ளியின் மதிப்பு உயர்வதற்குப் பதிலாக மதிப்பின் அளவையாக வெள்ளியின் இடத்துக்குத் தங்கம் வந்தால், மேற்கூறியதே நிகழும். முதல் நேர்வில் முன்பு தங்கம் இருந்ததை விட அதிகமான வெள்ளி ஓட்டத்திலிருக்கும்; அடுத்த நேர்வில் முன்பு வெள்ளி இருந்ததைவிடக் குறைவான தங்கம் ஓட்டத்திலிருக்கும். இரு நேர்வுகளிலுமே பணப் பொருளின் மதிப்பு,

அதாவது மதிப்பின் அளவையாகப் பயன்படுகிற சரக்கின் மதிப்பு மாற்றமடைந்திருக்கும்; எனவே, சரக்குகளின் மதிப்புகளைப் பண வடிவில் தெரிவிக்கிற அவற்றின் விலைகளும் கூட, அந்த விலைகளை ஈடேற்றம் செய்வதைப் பணியாகக் கொண்ட ஓட்டத்திலுள்ள பணத்தின் அளவும் கூட அவ்வாறே மாற்றமடைந்திருக்கும். சுற்றோட்டத் துறையில் ஒரு நுழைவாயில் இருக்கிறது. அதன் வழியாகத் தங்கம் (அல்லது பொதுவாகப் பணப்பொருள்) குறிப்பிட்ட மதிப்புடைய சரக்காக அத்துறையினுள் நுழைகிறது என்பதை முன்பே பார்த்தோம். எனவே, பணம் ஒரு மதிப்பளவையாகத் தன் பணிகளைத் தொடங்கும் போது, அதாவது விலைகளைத் தெரிவிக்கும் போது, அதன் மதிப்பு ஏற்கெனவே நிர்ணயிக்கப்பட்டதாக இருக்கிறது. இப்போது அதன் மதிப்பு வீழ்ச்சியடைந்தால், உயர்நிலை உலோகங்களின் உற்பத்தியிடங்களில் அவற்றுக்கு பதில் நேரடியாகப் பண்டமாற்று செய்யப்படும் சரக்குகளின் விலைகளில் ஏற்படும் மாற்றம் இதற்கான முதற் சான்றாகிறது. மற்றெல்லாச் சரக்குகளிலும் பெரும் பகுதி, குறிப்பாகக் குடியியல் சமுதாயத்தின் [civil society] அரைகுறையான வளர்ச்சிக் கட்டங்களில், மதிப்பளவையின் முன்னாளைய மதிப்பால்—பழைமைப்பட்டதும் மாயையானதுமாகிய இம்மதிப்பால்—கணிக்கப்படுவது நீண்ட காலத்துக்கு நீடிக்கும். ஆயினும், ஒரு சரக்கு இன்னொரு சரக்கை அவற்றின் பொதுவான மதிப்புறவின் மூலம் பாதிக்கிறது; தங்கம் அல்லது வெள்ளியில் தெரிவிக்கப்படும் அச்சரக்குகளின் விலைகள் அவற்றின் ஒப்பீட்டு மதிப்புகளால் நிர்ணயிக்கப்படும் விகிதாசாரங்களாக இவ்விதம் படிப்படியாய் நிலைபெறுகின்றன. இறுதியில் எல்லாச் சரக்குகளின் மதிப்புகளும் பணமாகிய உலோகத்தினது புதிய மதிப்பின் வாயிலாகக் கணிக்கப்படும் வரை இவ்வாறே நடைபெறுகிறது. இந்நிகழ்முறையோடு சேர்ந்தாற்போல், உயர்நிலை உலோகங்களின் அளவு தொடர்ந்து அதிகரிக்கிறது. இவ்வுயர்நிலை உலோகங்களின் உற்பத்தியிடங்களில் அவற்றுக்கு பதில் நேரடியாகப் பண்டமாற்று செய்து கொள்ளப்படும் பண்டங்களின் இடத்தை நிரப்புவதற்குப் பெருக்கெடுத்து வரும் உயர்நிலை உலோகங்களே இந்த அதிகரிப்புக்குக் காரணம். எனவே, பொதுவாகச் சரக்குகள் தமது உண்மையான விலைகளை வந்தடையும் அதே விகிதாசாரத்தில், அவற்றின் மதிப்புகள் உயர்நிலை உலோகத்தின் வீழ்ச்சியடைந்த மதிப்புக்கேற்ப கணிக்கப்படும் நிலையை அடையும் அதே விகிதாசாரத்தில், அப்புதிய விலைகளை ஈடேற்றம் செய்வதற்கு அவசியமான அந்த உலோகத்தின் அளவு முன் கூட்டியே அளிக்கப்பட்டுள்ளது. தங்கம், வெள்ளி இவற்றின் புதிய மூலாதாரங்களைக் கண்டுபிடித்ததைத் தொடர்ந்து ஏற்பட்ட விளைவுகளை ஒருசார்பாகப் பார்த்ததானது, சுற்றோட்ட ஊடகமாகப் பயன்படும் தங்கம், வெள்ளி இவற்றின் அளவு அதிகரித்ததன்

பயனாய் சரக்குகளின் விலைகள் உயர்ந்து விட்டன என்ற தவறான முடிவுக்கு, 17ஆவது நூற்றாண்டிலும், குறிப்பாக 18ஆவது நூற்றாண்டிலும் சில பொருளாதார அறிஞர்களை இட்டுச் சென்றது. இனி, தங்கத்தின் மதிப்பு நிலையாய்க் குறிக்கப்பட்டதாக வைத்துக் கொள்வோம்; சரக்கின் விலையைக் கணிக்கும் போதெல்லாம் கண நேரத்துக்கு உண்மையில் இப்படித்தான் வைத்துக் கொள்கிறோம்.

இந்த அனுமானத்தின் பேரில், சுற்றோட்ட ஊடகத்தின் அளவு ஈடேற்றம் செய்ய வேண்டிய விலைகளின் மொத்தத் தொகையால் நிர்ணயிக்கப்படுகிறது. இப்போது, மேலும் ஒவ்வொரு சரக்கின் விலையும் நிலையாய்க் குறிக்கப்பட்டதென்று கொள்வோமானால், விலைகளின் மொத்தத் தொகை சுற்றோட்டத்திலுள்ள சரக்குகளின் திரளைப் பொறுத்தது என்பது தெளிவு. ஒரு குவார்ட்டர் கோதுமைக்கு £2 விலையானால், 100 குவார்ட்டருக்கு £200 விலையாகும், 200 குவார்ட்டருக்கு £400 விலையாகும் (இவ்வாறே இன்னும் சொல்லலாம்) என்பதை, ஆதலால் விற்கப்படும் போது கோதுமையுடன் இடம் மாறுகிற பணத்தின் அளவு அந்தக் கோதுமையின் அளவுக்கேற்ப அதிகரிக்க வேண்டும் என்பதை எளிதில் புரிந்து கொள்ளலாம்.

சரக்குகளின் திரள் மாறாதிருந்தால், சுற்றோட்டத்தில் ஓடுகிற பணத்தின் அளவு அந்தச் சரக்குகளின் விலைகளில் ஏற்படும் ஏற்ற இறக்கங்களுக்கேற்ப மாறுபடுகிறது. விலை மாற்றத்தின் விளைவாக விலைகளின் மொத்தத் தொகை அதிகரிக்கிறது அல்லது குறைகிறது என்பதால் இச்சரக்குத் திரள் அதிகரிக்கிறது அல்லது குறைகிறது. இந்த விளைவைத் தோற்றுவிப்பதற்கு, எல்லாச் சரக்குகளின் விலைகளும் ஏககாலத்தில் உயர வேண்டும் அல்லது குறைய வேண்டும் என்பது எவ்விதத்திலும் அவசியமில்லை. எல்லாச் சரக்குகளதும் விலைகளின் மொத்தத் தொகையை அதிகரிக்கச் செய்வதற்கோ குறைப்பதற்கோ, ஆகவே அதிகமாகவோ குறைவாகவோ பணத்தைச் சுற்றோட்டத்தில் விடுவதற்கு முதன்மையான சரக்குகள் பலவற்றின் விலைகளிலான உயர்வோ வீழ்ச்சியோ போதுமானது. விலை மாற்றம் உள்ளபடியே சரக்குகளின் மதிப்பு மாற்றத்தால் ஏற்பட்டதானாலும், அல்லது அது சந்தை விலைகளிலான ஏற்ற இறக்கங்களால் ஏற்பட்டதே ஆனாலும், சுற்றோட்ட ஊடகத்தினது அளவின் மீது அது ஒரேவிதமான விளைவையே உண்டாக்குகிறது.

கீழ்க்கண்ட பண்டங்கள் ஏககாலத்தில் வெவ்வேறு இடங்களில் விற்கப்படுவதாக, அல்லது பகுதி உருமாற்றம் அடைவதாகக் கொள்வோம்: உதாரணமாக, ஒரு குவார்ட்டர் கோதுமை, 20 கெஜம் துணி, ஒரு விவிலியம், 4 காலன் சாராயம். ஒவ்வொரு பண்டத்தின் விலையும் £2 ஆகவும், ஆதலால் ஈடேற்றம் செய்ய வேண்டிய விலைகளின் மொத்தத் தொகை £8 ஆகவும் இருந்தால் £8 பணமாகச் சுற்றோட்டத்தில் ஓட வேண்டும் என்றாகிறது.

மறு புறம், இதே பண்டங்கள் கீழ்க்கண்ட உருமாற்றச் சங்கிலியின் கரணைகளெனக் கொள்வோம்: 1 குவார்ட்டர் கோதுமை — £2 — 20 கெஜம் துணி — £2 — ஒரு விவிலிய நூல் — £2 — 4 காலன் சாராயம் — £2. நமக்கு ஏற்கெனவே நன்கு தெரிந்த சங்கிலி இது; இதில் £2 வெவ்வேறு சரக்குகளை ஒன்றன்பின் ஒன்றாகச் சுற்றோட்டத்தில் ஓடச் செய்கிறது; அடுத்தடுத்து அவற்றின் விலைகளையும், எனவே அந்த விலைகளின் மொத்தத் தொகையான £8ஐயும் ஈடேற்றம் செய்த £2 கடைசியில் சாராயங் காய்ச்சுபவரின் சட்டைப் பையில் வந்தமர்கிறது. இவ்வாறு, £2 நான்கு பெயர்ச்சிகளைப் புரிகிறது. அதே காசுகள் திரும்பத் திரும்ப இடமாற்றம் அடைவதான இந்நிகழ்வு சரக்குகளின் வடிவத்திலான இரட்டை மாற்றத்தாலும் சுற்றோட்டத்தின் இரு கட்டங்கள் வழியே நிகழும் எதிரெதிர்த் திசைகளிலான அவற்றின் இயக்கத்தாலும், வெவ்வேறு சரக்குகளது உருமாற்றங்களின் வலைப் பின்னலாலும் ஏற்படுவதாகும்.[84] உருமாற்ற நிகழ்முறையில் அடங்கியுள்ள, எதிர்நிலைத் தன்மையுள்ளவையும் ஒன்றையொன்று பூர்த்தி செய்பவையுமான இந்தக் கட்டங்கள் நிறைவேற்றப்படுவது ஏக காலத்திலன்று, ஒன்றன்பின் ஒன்றாகவே. எனவே, தொடரைப் பூர்த்தி செய்வதற்குக் கால அவகாசம் தேவைப்படுகிறது. ஆகவே, பணத்தின் ஓட்ட வேகம் குறிப்பிட்ட காலத்தில் குறிப்பிட்ட காசு புரிகிற பெயர்ச்சிகளின் எண்ணிக்கையால் அளவிடப்படுகிறது. மேற்சொன்ன 4 பண்டங்களின் சுற்றோட்டத்துக்கும் ஒரு நாள் ஆவதாகக் கொள்வோம். இந்நாளில் ஈடேற்றம் செய்ய வேண்டிய விலைகளின் மொத்தத் தொகை £8; இரு காசுகள் புரிகிற பெயர்ச்சிகளின் எண்ணிக்கை நான்கு; சுற்றோட்டத்தில் ஓடுகிற பணத்தின் அளவு £2. எனவே, சுற்றோட்ட நிகழ்முறையின் போது குறிப்பிட்ட கால இடைவெளியில் கீழ்க்கண்ட உறவைக் காண்கிறோம்:' சுற்றோட்ட ஊடகமாகப் பணி புரிகிற பணத்தின் அளவு சரக்குகளது விலைகளின் மொத்தத் தொகையை ஒரே பெறுமானமுள்ள நாணயங்கள் புரிகிற பெயர்ச்சிகளின் எண்ணிக்கையால் வகுத்து வரும் ஈவுக்குச் சமமாகும். பொதுவாகச் செயல்படும் விதி இது.

ஒரு புறம், குறிப்பிட்ட காலத்தில், குறிப்பிட்ட நாட்டில் சரக்குகளின் மொத்தச் சுற்றோட்டம் என்பது ஒவ்வொரு நாணயமும் தன்னிடத்தை ஒரே ஒரு முறை மாற்றிக் கொள்கிற, அல்லது ஒரே ஒரு பெயர்ச்சியைப் புரிகிற, ஒரே நேரத்தில் வாங்கலாகவும்

84 ''அதனை (பணத்தை) இயக்கத்தில் விட்டு, ஓடச் செய்பவை உற்பத்திப் பொருட்களே. அதன் (பணத்தின்) இயக்க வேகம் அதன் அளவிலேற்படும் குறைவை ஈடு செய்கிறது. அவசியம் ஏற்படும் போது அது கண நேரமும் நில்லாமல் கைக்குக் கை தாவிச் செல்வதல்லாமல் வேறொன்றும் செய்வதில்லை.'' (லெ திரொஸ்னே, முன் வந்தது, பக்கம் 915, 916.)

விற்றலாகவும் இருக்கிற எண்ணற்ற தனித்த, ஏககாலத்திய பகுதி உருமாற்றங்களால் ஆனது. மறு புறம், அது பகுதி கரங்கோத்து இணையாகவும், பகுதி ஒன்றோடு ஒன்று பிணைந்து கலந்தும் நடைபெறுகிற உருமாற்றங்களின் எண்ணற்ற தனித்தனியான தொடர்களால் ஆனது; இத்தொடர் ஒவ்வொன்றிலும் ஒவ்வொரு நாணயமும் சூழ்நிலைகளுக்கேற்ப பெரிய அல்லது சிறிய எண்ணிக் கையிலான பெயர்ச்சிகளைப் புரிகிறது. சுற்றோட்டத்தில் ஓடுகிற ஒரே பெறுமானமுள்ள நாணயங்கள் அனைத்தும் புரிகிற பெயர்ச்சி களின் மொத்த எண்ணிக்கை தெரியுமானால், அந்த வகையைச் சேர்ந்த தனியொரு நாணயம் புரிகிற பெயர்ச்சிகளின் சராசரி எண்ணிக்கையை, அல்லது பணத்தின் சராசரி ஓட்ட வேகத்தைக் கணக்கிடலாம். ஒவ்வொரு நாளின் தொடக்கத்திலும் சுற்றோட்டத் தில் விடப்படும் பணத்தின் அளவு சுற்றோட்டத்தில் ஏககாலத்தில் ஒருங்கே ஓடுகிற எல்லாச் சரக்குகளதும் விலைகளின் மொத்தத் தொகையால்தான் நிர்ணயிக்கப்படுகிறது. ஆனால், நாணயங்கள் சுற்றோட்டத்தில் இறங்கியதுமே ஒன்றுக்கொன்று ஈடுசெய்து கொள்ள வேண்டியிருப்பதாகச் சொல்லலாம். ஒன்று தன் வேகத்தைக் கூட்டிக் கொண்டால், மற்றது தன் வேகத்தைக் குறைத் துக் கொள்கிறது, அல்லது முழுமையாகச் சுற்றோட்டத்திலிருந்து வெளியேறி விடுகிறது; ஏனெனில் தனியொரு நாணயம் அல்லது கூறு புரிகிற பெயர்ச்சிகளின் சராசரி எண்ணிக்கையையும் ஈடேற்றம் செய்ய வேண்டிய விலைகளின் மொத்த அளவையும் பெருக்கி வரும் தொகைக்குச் சமமாகிற அளவு தங்கத்தையே சுற்றோட்டம் கிரகிக்க முடியும். எனவே, தனிக் காசுகள் புரிகிற பெயர்ச்சிகளின் எண்ணிக்கை அதிகரித்தால், சுற்றோட்டத்திலுள்ள அக்காசுகளின் மொத்த எண்ணிக்கை குறைகிறது. பெயர்ச்சிகளின் எண்ணிக்கை குறைந்தால் காசுகளின் மொத்த எண்ணிக்கை அதிகரிக்கிறது. குறிப்பிட்ட சராசரி ஓட்ட வேகத்தில் சுற்றோட்டத்தால் கிரகிக்கப் பட வல்ல பணத்தின் அளவு குறிப்பிட்டதே என்பதால், சுற்றோட் டத்திலிருந்து குறிப்பிட்ட எண்ணிக்கையிலான சவரன்களைப் பிரித் தெடுக்க வேண்டுமானால், அதே எண்ணிக்கையிலான ஒரு பவுன் நோட்டுகளைச் சுற்றோட்டத்தில் விட்டாலே போதும். வங்கியார் எல்லாரும் நன்கறிந்த தந்திரமே இது.

பணத்தின் ஓட்டம், பொதுவாக நோக்குமிடத்து, எப்படி சரக்கு களது சுற்றோட்டத்தின் அல்லது அவை உட்படுகிற எதிர்நிலை உருமாற்றங்களின் பிரதிபலிப்பே ஆகுமோ, அது போலவே பண ஓட்டத்தின் வேகமும் [velocity of currency] சரக்குகள் தமது வடிவங்களை மாற்றிக் கொள்கிற வேகத்தின் பிரதிபலிப்பே, உரு மாற்றங்களின் ஒரு தொடர் இன்னொரு தொடருடன் தொடர்ச்சி யாகப் பின்னிக் கொள்வதன் பிரதிபலிப்பே, பொருளின் விரை வான சமுதாயப் பரிமாற்றத்தின் பிரதிபலிப்பே, சுற்றோட்டத்

துறையிலிருந்து சரக்குகள் விரைவாக மறைந்து அதே அளவு விரைவுடன் அவற்றின் இடத்துக்குப் புதிய சரக்குகள் வருவதன் பிரதிபலிப்பே ஆகும். எனவே, பண ஓட்டத்தின் வேகத்தில் எதிர் நிலைத் தன்மையுடையவையும், ஒன்றையொன்று பூர்த்தி செய் பவையுமான கட்டங்களின் தங்குதடையற்ற ஐக்கியத்தை, சரக்கு களின் பயன் அமிசம் அவற்றின் மதிப்பு அமிசமாக மாற்றமடை வது, மதிப்பு அமிசம் திரும்பவும் பயன் அமிசமாக மாற்றமடைவது இவற்றின் ஐக்கியத்தை, அல்லது விற்றல், வாங்கல் என்ற இரு நிகழ்முறைகளின் ஐக்கியத்தைக் காண்கிறோம். மறு புறம், பண ஓட்டத்தின் வேகத் தளர்ச்சி [retardation of currency] இந்த இரு நிகழ்முறைகளும் தனித்த, எதிர்நிலைக் கட்டங்களாகப் பிரிந்து போவதைப் பிரதிபலிக்கிறது; வடிவ மாற்றத்திலும், எனவே பொருளின் சமுதாயப் பரிமாற்றத்திலும் [social interchange of matter] ஆன தேக்கத்தைப் பிரதிபலிக்கிறது. சுற்றோட்டமானது இந்தத் தேக்கத்தின் தோற்றுவாய் குறித்து ஒரு துப்பும் கொடுப் பதில்லைதான். அது இந்தப் புலப்பாட்டை காட்டுவதோடு நின்று விடுகிறது. பண ஓட்டத்தின் வேகத் தளர்ச்சியுடன் கூடவே சுற்றோட்டத்தின் எல்லைப் பகுதியில் பணம் முன்னிலும் அரிதாகத் தோன்றவும் மறையவும் பார்க்கிற பொது மக்கள் இந்த வேகத் தளர்ச்சிக்கு சுற்றோட்ட ஊடகத்தின் அளவுப் பற்றாக்குறையே காரணமெனக் கருதுவது இயல்பே.[85]

---

[85] ''பணம்...விற்பது, வாங்குவது இவற்றின் பொதுவான அளவையாக இருக்க, விற்பதற்கு ஒன்றை வைத்திருக்கிற எவரும் அதனை வாங்குவதற்கு வியாபாரி யாரும் இல்லாமற் போனதும், தன் சரக்கு விலை போகாததன் காரணம் அரசு அல்லது நாட்டில் பணத்தின் பற்றாக்குறையே என்று நினைக்கக் கூடிய நிலை இப்போதுள்ளது; ஆகவே பணப் பற்றாக்குறை என்ற கூச்சல் பரவலாக எழுகிறது. இது பெருந்தவறாகும்....பணத் துக்காகக் கூச்சல் போடும் இவர்கள் விரும்புவதென்ன?...நாட்டில் இன்னும் அதிகமான பணமிருந்தால் தன் சரக்குகளுக்கு உரிய விலை கிட்டுமென நினைப்பதாக...சாகுபடி யாளர் குறைபட்டுக் கொள்கிறார். அப்படியானால், அவருக்குப் பணம் தேவையில்லை என்றும், அவர் விற்கத் தயாராயுள்ள, ஆனால் விற்க முடியாத அவரது தானியத்துக்கும் கால்நடைக்கும் ஒரு விலையே தேவை என்றும் தோன்றுகிறது....அவர் ஒரு விலையைப் பெற முடியாதிருப்பது ஏன்?...(1) ஒன்று, அவருக்கிருப்பது போலவே, சந்தைக்கு வருகிற பெரும்பாலாருக்கும் விற்க வேண்டிய அவசியமும், சிலருக்கே வாங்க வேண்டிய அவசியமும் இருக்கும் விதத்தில், நாட்டில் தானியமும் கால்நடையும் அதிகப்படியாகவே உள்ளன. அல்லது (2) ஏற்றுமதியின் மூலம் வெளிச்செல்லும் வழக்கமான வழி இல்லாமற் போகிறது..., அல்லது (3) மக்கள் வறுமையினால் முன்பு செலவு செய்த அளவுக்குத் தமது வீட்டில் செலவு செய்யாதிருப்பது போன்ற காரணத்தால், நுகர்வு குன்றி விடுகிறது; இதனால், சாகுபடியாளரின் சரக்குகளைச் சிறிதேனும் உயர்த்தப் போவது குறிப்பிட்ட பணவகையின் அதிகரிப்பன்று, உண்மையில் சந்தையை விரிவு படாமல் தடுக்கிற மேற்கூறிய மூன்று காரணங்களில் எதையேனும் அகற்றுவதே.... வியாபாரியும் கடைக்காரனும் ஒரே விதத்தில் பணத்தை நாடுகின்றனர்; அதாவது, சந்தைகள் குன்றி விடுவதால் அவர்களது வியாபாரச் சரக்குகள் வெளிச் செல்வதற்கான ஒரு வழி அவர்களுக்கு வேண்டும்''....(ஒரு நாடு) ''செல்வங்கள் கைக்குக் கை தாவும் போது விருத்தியடைவதை விடச் சிறப்பாக வேறெப்போதும் விருத்தியடைவதில்லை.'' (சர் டட்லி நார்த்: ''வர்த்தகம் பற்றிய உரைகள்,'' லண்டன், 1691, பக்கம் 11-15,

சுற்றோட்ட ஊடகமாகக் குறிப்பிட்ட காலத்தில் பணி புரியும் பணத்தின் மொத்த அளவு, ஒரு புறம் சுற்றோட்டத்திலுள்ள சரக்குகளின் விலைகளது மொத்தத் தொகையாலும், மறு புறம் உரு மாற்றங்களின் எதிர்நிலைக் கட்டங்கள் ஒன்றையொன்று பின் தொடர்கிற விரைவாலும் நிர்ணயிக்கப்படுகிறது. விலைகளின் மொத்தத் தொகையில் எவ்விகிதாசாரத்தை சராசரியாக ஒவ்வொரு தனி நாணயமும் ஈடேற்றம் செய்ய முடியும் என்பது இவ் விரைவைப் பொறுத்தது. ஆனால், சுற்றோட்டத்தில் உள்ள சரக்குகளது விலைகளின் மொத்தத் தொகை சரக்குகளின் அளவையும், அதே போல் விலைகளையும் பொறுத்தது. ஆயினும், விலை நிலவரம், சுற்றோட்டத்திலுள்ள சரக்குகளின் அளவு, பணத்தின் ஓட்ட வேகம் என்ற இந்த மூன்று காரணிகளுமே மாறக் கூடியவை. எனவே, இந்த மூன்று காரணிகளின் இணைந்த செயற்பாட்டில் ஏற்படும் எண்ணற்ற மாறுபாடுகளுக்கொப்ப, ஈடேற்றம் செய்ய வேண்டிய விலைகளின் மொத்தத் தொகையும், ஆதலால் அத் தொகையைப் பொறுத்ததான சுற்றோட்ட ஊடகத்தின் அளவும் மாறுபடும். இந்த மாறுபாடுகளில், விலைகளின் வரலாற்றில் மிக முக்கியமானவையாய் இருந்துள்ள மாறுபாடுகளை மட்டும் பரிசீலிப் போம்.

விலைகள் மாறாதிருக்கையில், சுற்றோட்டத்திலுள்ள சரக்குகளின் எண்ணிக்கை அதிகரிக்கிற காரணத்தாலோ, அல்லது பணத்தின் ஓட்ட வேகம் குறைகிற காரணத்தாலோ, அல்லது இரண்டின் இணைப்பின் காரணத்தாலோ சுற்றோட்ட ஊடகத்தின் அளவு அதிகரிக்கலாம். மறு புறம்,சரக்குகளின் குறைகிற எண்ணிக்கைக் கொப்ப, அல்லது அவற்றின் சுற்றோட்டத்தின் அதிகரிக்கிற விரைவுக்கொப்ப சுற்றோட்ட ஊடகத்தின் அளவு குறையலாம்.

சுற்றோட்டத்திலுள்ள சரக்குகளின் விலைகளில் ஏற்படும் அதிகரிப்புக்கேற்ற விகிதத்தில் அச்சரக்குகளின் எண்ணிக்கை குறையுமானால், அல்லது, சுற்றோட்டத்திலுள்ள சரக்குகளின் எண்ணிக்கை மாறாதிருக்க, விலைகள் உயர்கிற அதே விகிதத்தில் பணத்தின் ஓட்ட வேகம் அதிகரிக்குமானால், சரக்குகளின் விலைகளில் பொதுவான ஏற்றம் ஏற்படுகையிலும் சுற்றோட்ட ஊடகத்தின் அளவு மாறாதிருக்கும். விலைகள் ஏறுவதை விட விரைவாகச்

---

பல இடங்கள்.) சரக்குகளின் இயல்பைத் தோற்றுவாயாகக் கொண்டதும் அவற்றின் சுற்றோட்டத்தில் விருத்தி செய்யப்படுவதுமான பகைநிலையை, சுற்றோட்ட ஊடகத்தை அதிகரிப்பதன் மூலம் அகற்றிவிட முடியும் என்பதே ஹெரஷ்வாண்டின் வேடிக்கையான கருத்துகளின் சாரமாகும். ஆனால், உற்பத்தியிலும் சுற்றோட்டத்திலுமான தேக்கத்துக்கு சுற்றோட்ட ஊடகத்தின் போதாமையைக் காரணமாகக் கருதுவது சகஜமான பிரமையே என்றாலும், உதாரணமாக செலாவணியை ஒழுங்கியக்குவதில் குளறுபடியான சட்ட மன்றத் தலையீடு போன்ற காரணத்தால் சுற்றோட்ட ஊடகத்தில் ஏற்படும் மெய்யான பற்றாக்குறை இப்படிப்பட்ட தேக்கத்துக்கு வழி செய்யாது என்று கொள்வதற்கில்லை.

சரக்குகளின் எண்ணிக்கை குறைவதாலோ, பணத்தின் ஓட்ட வேகம் அதிகரிப்பதாலோ சுற்றோட்ட ஊடகத்தின் அளவு குறையலாம்.

சரக்குகளின் எண்ணிக்கை அவற்றின் விலையில் ஏற்படும் குறைவுக்கேற்ற விகிதத்தில் அதிகரிக்குமானால், அல்லது பணத்தின் ஓட்ட வேகம் அதே விகிதத்தில் குறையுமானால், சரக்குகளின் விலைகளில் பொதுவான இறக்கம் ஏற்படுகையிலும் சுற்றோட்ட ஊடகத்தின் அளவு மாறாதிருக்கும். விலைகள் இறங்குவதை விடத் துரிதமாக சரக்குகளின் எண்ணிக்கை அதிகரிக்குமானால் அல்லது சுற்றோட்டத்தின் விரைவு குறையுமானால், சுற்றோட்ட ஊடகத்தின் அளவு அதிகரிக்கும்.

வெவ்வேறு காரணிகளின் மாறுபாடுகள் ஒன்றை ஒன்று ஈடு கட்டிக் கொள்ளலாம்; அந்நிலையில், இக்காரணிகள் தொடர்ந்து அலைவுறுவதையும் மீறி, ஈடேற்றம் செய்ய வேண்டிய விலைகளின் மொத்தத் தொகையும், சுற்றோட்டத்திலுள்ள பணத்தின் அளவும் மாறாதிருக்கும். ஆதலால், முக்கியமாக நீண்ட காலப் பகுதிகளைப் பரிசீலனைக்கு எடுத்துக் கொண்டால், எந்த நாட்டிலும் ஓட்டத்திலுள்ள பண அளவின் சராசரி மட்டத்திலிருந்து விலகிச் செல்லும் விலகல்கள் எடுத்த எடுப்பில் நாம் எதிர்பார்ப்பதை விட மிகச் சிறியவையே என்பதைக் காண்கிறோம்; காலவட்ட முறையிலான தொழில், வர்த்தக நெருக்கடிகளாலோ, இன்னும் அரிதாய்ப் பணத்தின் மதிப்பிலான ஏற்ற இறக்கங்களாலோ ஏற்படும் மிதமிஞ்சிய குலைவுகள் விதிவிலக்காகும் என்பதைக் கூறத் தேவையில்லை.

சுற்றோட்ட ஊடகத்தின் அளவு சுற்றோட்டத்திலுள்ள சரக்குகளது விலைகளின் மொத்தத் தொகையாலும் பணத்தின் சராசரி ஓட்ட வேகத்தாலும் நிர்ணயிக்கப்படுகிறது என்ற விதியைப்[86] பின்

---

86 ''ஒரு தேசத்தின் வர்த்தகத்தை நடத்துவதற்கு ஒரு குறிப்பிட்ட அளவிலும், விகிதாசாரத்திலும் பணம் தேவை; இதை விடக் கூடுதலோ குறைவோ ஆன பணத்தால் அவ்வர்த்தகத்துக்குக் கேடு விளையும். சிறு சில்லறை வர்த்தகத்தில் வெள்ளிப் பணத்தை சில்லறை மாற்றுவதற்கும், மிகச் சிறிய வெள்ளிக் காசுகளாலும் கூட சரிக்கட்ட முடியாத கணக்கீடுகளை நிகழ்த்துவதற்கும் அவசியமான ஃபார்திங்குகளின் குறிப்பிட்ட விகிதாசாரம் இருப்பது போலவே....இப்போது, வாணிபத்தில் அவசியமான ஃபார்திங்குகளின் எண்ணிக்கையின் விகிதாசாரம் மக்களின் எண்ணிக்கையிலிருந்து, அவர்களது பரிவர்த்தனைகளின் விரைவிலிருந்து, பிரதானமாகப் பணத்தின் மிகச் சிறிய வெள்ளித் துண்டுகளின் மதிப்பிலிருந்தும் கணிக்கப்பட வேண்டும் என்பது போலவே, நமது வர்த்தகத்தில் அவசியமான பணத்தின் (தங்க, வெள்ளி நாணயங்கள்) விகிதாசாரமும் பரிமாற்றங்களின் விரைவிலிருந்தும், கொடுப்புகளின் பருமனிலிருந்தும் கணிக்கப்பட வேண்டும்.'' (வில்லியம் பெட்டி, ''வரிகள், கொடைகள் பற்றிய வியாசம்,'' லண்டன், 1667, பக்கம் 17.) ஹியூமின் தத்துவத்தை, ஜே. ஸ்டுவர்ட் முதலானோரின் தாக்குதல்களுக்கெதிராக ஆ. யங், ''அரசியல் எண்கணிதம்,'' லண்டன், 1774 என்ற தமது நூலில் பாதுகாத்தார்; இந்த நூலில் பக்கம் 112 முதலானவற்றில் ''விலைகள் பணத்தின் அளவைப் பொறுத்தவை'' என்று தலைப்பிட்ட தனி அத்தியாயம் உள்ளது. ''அரசியல் பொருளாதார விமர்சனத்திற்கு ஒரு பங்களிப்பு,'' பக்கம் 149இல் நான் கூறியிருக்கிறேன்: ''சுற்றோட்டத்திலுள்ள நாணயத்தின் அளவு தொடர்பான பிரச்சினையை

வருமாறும் கூறலாம்: சரக்குகளது மதிப்புகளின் மொத்தத் தொகையும், அவற்றினது உருமாற்றங்களின் சராசரி விரைவும் குறிப்பிட்டதாய் இருக்க, பணமாக ஓடுகிற உயர்நிலை உலோகத்தின் அளவு அந்த உயர்நிலை உலோகத்தின் மதிப்பைப் பொறுத்தது. ஆனால், சுற்றோட்ட ஊடகத்தின் அளவே விலைகளை நிர்ணயிக்கிறது என்பதும், சுற்றோட்ட ஊடகத்தின் அளவு நாட்டிலுள்ள உயர்நிலை உலோகங்களின் அளவினைப் பொறுத்தது என்பதும் தவறான கருத்தாகும்.[87] இத்தவறான கருத்தை முதலில் கொண்டிருந்தவர்கள், சரக்குகளும் பணமும் முதன் முதலாகச் சுற்றோட்டத்தில் நுழையும் போது சரக்குகள் விலையின்றியும் பணம் மதிப்பின்றியும் உள்ளன, சுற்றோட்டத்தில் இறங்கியதுமே சரக்குகளது கதம்பக் குவியலின் ஓர் ஈவுப் பகுதி உயர்நிலை உலோகங்களது

---

அவர் (ஆதாம் ஸ்மித்) குறிப்பிடாமலே விட்டு விடுகிறார்; பணத்தை வெறும் சரக்காக அவர் கருதுவது முற்றிலும் தவறாகும்.'' ஆதாம் ஸ்மித் பணத்தை முறைப்படி ஆராயும் போது மட்டுமே இக்கூற்று உண்மையாகும். ஆயினும், அரசியல் பொருளாதாரத்தின் முந்தைய அமைப்புகள் பற்றிய அவரது விமர்சனத்திலும், வேறு சில இடங்களிலும் அவர் சரியான கருத்தையும் வெளியிடுகிறார். ''ஒவ்வொரு நாட்டிலும் நாணயத்தின் அளவு அதனால் சுற்றோட்டத்தில் விடப்பட வேண்டிய சரக்குகளின் மதிப்பால் ஒழுங்கு படுத்தப்படுகிறது....எந்த நாட்டிலும் ஆண்டுதோறும் வாங்கவும் விற்கவும் படுகின்ற சரக்குகளின் மதிப்புக்கொப்ப, அவற்றைச் சுற்றுக்கு விடவும், முறையான நுகர்வாளருக்கு அவற்றை விநியோகிக்கவும் குறிப்பிட்ட அளவு பணம் தேவைப்படுகிறது; அந்த அளவிற்கு மேல் பணத்திற்கு இடமில்லை. சுற்றோட்டக் கால்வாய் நிரம்புவதற்கு அவசியமான தொகையை மட்டும் ஈர்த்துக் கொள்கிறது; இதற்கு மேல் எதையும் உள்ளே விடுவதில்லை.'' (''நாடுகளின் செல்வம்.''புத்தகம் IV. அத்தியாயம் I.) அதே விதத்தில் அவர் தமது நூலில் உழைப்புப் பிரிவினை பற்றிய வாழ்த்துப் பாவுடன் முறைப்படி ஆரம்பிக்கிறார். பின்னர், பொது வருவாயின் மூலாதாரங்கள் பற்றி விளக்குகிற கடைசிப் புத்தகத்தில், உழைப்புப் பிரிவினை பற்றிய அவரது ஆசான் ஆ.ஃபெர்கூசனின் கண்டனங்களை இடையில் எப்போதாவது தாமும் தெரிவிக்கிறார்.

[87] தங்கமும் வெள்ளியும் மக்கள் மத்தியில் அதிகரிக்கும் போது, பண்டங்களின் விலைகள் ஒவ்வொரு நாட்டிலும் நிச்சயமாக உயரும்; இதன் விளைவாக, எந்த நாட்டிலும் தங்கமும் வெள்ளியும் குறையும் போது எல்லாப் பண்டங்களின் விலைகளும் பணத்தின் இவ்வாறான குறைவுக்கேற்ற விகிதாசாரத்தில் குறைய வேண்டும்.'' (ஜேக்கப் வாண்டர்லிண்ட். ''அனைத்துக்கும் பணம் பதில் சொல்கிறது.'' லண்டன், 1734, பக்கம் 5. இந்தப் புத்தகத்தை ஹியூமின் ''கட்டுரைகளுடன்'' கவனமாக ஒப்பிடுகையில், நிச்சயமாக ஒரு முக்கிய நூலான வாண்டர்லிண்ட்டின் நூலை ஹியூம் அறிந்திருந்தார், அதைப் பயன்படுத்தவும் செய்தார் என்பது நிரூபணமாவதில் எனக்குச் சந்தேகமில்லை. விலைகள் சுற்றோட்ட ஊடகத்தின் அளவால் நிர்ணயிக்கப்படுகின்றன என்ற அபிப்பிராயம் பார்பானுக்கும், அவருக்கு நெடுங்காலம் முற்பட்ட பிற எழுத்தாளர்களுக்கும் இருந்தது. வாண்டர்லிண்ட் சொல்கிறார்: ''தடையிலா வாணிபத்தால் விளையக் கூடியது அசௌகரியம் அன்று, மிகப் பெரும் அனுகூலமே. நாட்டின் ரொக்கம் அதனால் குறைக்கப்பட்டால் — இதைத் தடுப்பதே தடையாணைகளின் நோக்கம் — ரொக்கத்தைப் பெறுகிற நாடுகள், தம்மிடையே ரொக்கம் அதிகரிக்க அதிகரிக்க ஒவ்வொன்றின் விலையும் ஏறிப் போகக் காண்பது நிச்சயம். மேலும்...வர்த்தக நிலுவையை நமக்கு சாதகமாகத் திருப்பி, அதன் மூலம் பணத்தைத் திரும்பக் கொண்டுவரும் அளவுக்கு நமது ஆலைத் தொழில்களும் மற்ற ஒவ்வொன்றும் சீக்கிரமே மட்டுப்படும்.'' (முன் வந்தது, பக்கம் 43,44.)

பெருங் குவியலின் ஓர் ஈவுப் பகுதிக்குப் பதிலாகப் பரிவர்த்தனை செய்யப்படுகிறது என்ற அபத்தமான அனுமானத்தின் அடிப்படையில் இக்கருத்தைக் கொண்டிருந்தனர்.[88]

### இ. நாணயமும் மதிப்பின் சின்னங்களும்

பணம் நாணயத்தின் உருவத்தை மேற்கொள்வது சுற்றோட்ட ஊடகம் என்ற அதன் பணியிலிருந்து பிறக்கிறது. சரக்குகளின் விலைகள் அல்லது பணப் பெயர்களால் கற்பனையாகக் குறிக்கப் படும் தங்கத்தின் எடை ஒரு குறிப்பிட்ட வகையைச் சேர்ந்த நாண யங்கள் அல்லது பொற்காசுகள் என்ற உருவத்தில் சுற்றோட்டத்துக் குள்ளேயே அந்தச் சரக்குகளை எதிர்கொள்ள வேண்டும். விலை களின் நியமத்தை நிறுவுவது போலவே, நாணயமடித்தலும் அரசின் வேலையாகும். தங்கமும் வெள்ளியும் நாணயங்கள் [coins] என்ற விதத்தில் உள்நாட்டில் அணிந்து உலகச் சந்தையில் களைகிற

[88] ஒவ்வொரு தனிவகைச் சரக்கின் விலையும் சுற்றோட்டத்திலுள்ள சரக்குகள் அனைத்தினதும் விலைகளின் மொத்தத் தொகையின் ஒரு பகுதியாக அமைகிறது என்பது தேற்றம். ஆனால், ஒன்றுக்கொன்று பொதுவளவற்றவையான பயன்-மதிப்புகள் ஒரு நாட்டிலுள்ள தங்கம், வெள்ளி இவற்றின் மொத்தத் தொகைக்குப் பதிலாக ஒட்டு மொத்தமாய் பரிவர்த்தனை செய்யப்படுவது எப்படி என்பது சிறிதும் புரியாத ஒன்று. எல்லாச் சரக்குகளும் சேர்ந்து தனியொரு சரக்காக அமைகின்றன; இதன் ஈவுப் பகுதியே ஒவ்வொரு சரக்கும் என்கிற கருத்திலிருந்து தொடங்கினால் நமக்குக் கிடைப்பது பின் வரும் அருமையான முடிவு: மொத்தச் சரக்கு = x அந்தர் தங்கம்; சரக்கு A = மொத்தச் சரக்கின் ஈவுப் பகுதி = x அந்தர் தங்கத்தின் அதே ஈவுப் பகுதி. இதை மாண்டெஸ்க்யூ பக்தி சிரத்தையுடன் சொல்கிறார்: ''உலகிலுள்ள தங்கம், வெள்ளியின் அளவை கிடைக்கக் கூடிய சரக்குகளின் தொகையுடன் ஒப்பு நோக்குவோமானால், உற்பத்திப் பொருள் அல்லது சரக்கு ஒவ்வொன்றையும் தனியாக எடுத்து மொத்தப் பணத் தொகையின் குறிப்பிட்ட பகுதியுடன் ஒப்பு நோக்கலாம் என்பது உறுதி. உலகத் தில் ஒரே ஒரு உற்பத்திப் பொருள் அல்லது சரக்கு மட்டுமே இருப்பதாக, அல்லது வாங்கத் தக்கதாய் இருப்பதாகக் கொள்வோம். பணத்தைப் பிரிப்பது போலவே அதனையும் பிரிக்கலாம் எனவும் கொள்வோம்; இந்தச் சரக்கின் குறிப்பிட்ட ஒரு பகுதி மொத்தப் பணத் தொகையின் ஒரு பகுதிக்கு ஈடாகும்; சரக்கின் மொத்த அளவில் பாதி என்பது பணத்தின் மொத்த அளவில் பாதிக்கு ஈடாகும்....எப்போதுமே பண்டங்களின் விலை நிர்ணயம், அடிப்படையில், பண்டங்களின் மொத்த அளவுக்கும் அவற்றின் சின்னங்களான பணத்தின் மொத்த அளவுக்கும் இடையிலான உறவைப் பொறுத்தது.'' (மாண்டெஸ்க்யூ, முன் வந்தது, பாகம் III., பக்கம் 12,13.) இத்தத்துவத்தை ரிக்கார் டோவும் அவரது சீடர்களான ஜேம்ஸ் மில், ஓவர்ஸ்டோன் பிரபு முதலானோரும் மேற்கொண்டு வளர்த்திருப்பது தொடர்பாகப் பார்க்கவும்: ''அரசியல் பொருளாதார விமர்சனத்திற்கு ஒரு பங்களிப்பு,'' பக்கம் 140-146, 150 முதலானவை. தமது தந்தை யான ஜேம்ஸ் மில்லின் கருத்தையும் அதற்கெதிரான கருத்தையும் ஒரே நேரத்தில் கொண் டிருப்பதெப்படி என்பதை ஜான் ஸ்டுவர்ட் மில் தமக்கேயுரிய தேர்வுவாத [eclectic] தர்க்கத் திறனுடன் புரிந்து கொள்கிறார். அவரது சுருக்க உரையான ''அரசியல் பொருளாதாரக் கோட்பாடுகள்'' என்பதன் வாசகத்தை முதற் பதிப்புக்கான அவரது முன்னுரையுடன் — இம்முன்னுரையில் அவர் தம்மைத் தம் காலத்திய ஆதாம் ஸ்மித் என்று அறிவித்துக் கொள்கிறார் — ஒப்பு நோக்குமிடத்து, அந்த மனிதரின் எளிமையை மெச்சுவதா, அல்லது அவர் தம்மைப் பற்றி அறிவித்துக் கொள்கிற படி அவரை ஆதாம் ஸ்மித் என்று மனப்பூர்வமாக நம்புகிற பொது மக்களின் எளிமையை மெச்சுவதா என்று நமக்குத் தெரியவில்லை. கார்சைச் சேர்ந்த ஜெனரல் வில்லியம்ஸ் எந்த அளவுக்கு வெலிங்டன்

வெவ்வேறு தேசச் சீருடைகள் சரக்குச் சுற்றோட்டத்தின் உள்நாட்டு அல்லது தேச மண்டலங்களுக்கும், அவற்றின் உலக மண்டலத்துக்கும் இடையிலான பிரிவைக் குறிக்கின்றன.

எனவே, நாணயத்துக்கும் பொற்பாளத்துக்கும் இடையிலான ஒரே வேறுபாடு உருவ வேறுபாடே; தங்கம் எந்த நேரத்திலும் ஒரு உருவத்திலிருந்து இன்னொரு உருவத்துக்கு மாற முடியும்.[89] ஆனால், நாணயம் நாணயச் சாலையை விட்டு வெளியேறியதுமே உருக்கும் சட்டியை நோக்கி அதன் பயணம் தொடங்கி விடுகிறது. நாணயங்கள் அவற்றின் ஓட்டத்தின் போது சில அதிகமாகவும் சில குறைவாகவும் தேய்ந்து போகின்றன. பெயரும் பொருளும், பெயர் வழி எடையும் [nominal weight] மெய்யான எடையும் பிளவுபட்டுப் பிரியத் தொடங்குகின்றன. வகைப் பிரிவில் ஒன்றேயான நாணயங்கள் எடையில் வேறுபாடு அடைவதால் மதிப்பிலும் வேறுபட்டவை ஆகின்றன. விலைகளின் நியமமாக நிர்ணயிக்கப்பட்ட தங்கத்தின் எடை சுற்றோட்ட ஊடகமாகப் பயன்படும் எடையிலிருந்து விலகிப் போகிறது; ஆதலால், அந்நாணய எடை அதனால் ஈடேற்றம் செய்யப்படும் விலைகளுக்குரிய சரக்குகளின் மெய்யான சமதையாக

---

*கோமகனை ஒத்தவரோ அந்த அளவுக்கே ஆதாம் ஸ்மித்தை ஒத்தவர் அவர். விரிவோ ஆழமோ இல்லாதவையான திரு ஜா.ஸ்டு. மில்லின் சுயமான அரசியல் பொருளாதார ஆராய்ச்சிகள், 1844இல் வெளிவந்த அவரது சிறு நூலான "அரசியல் பொருளாதாரத்தில் தீர்வு காணப்படாத சில பிரச்சினைகள்" என்பதில் அணிவகுத்து நிற்பதைக் காணலாம். தங்கம், வெள்ளி ஆகியவற்றில் மதிப்பு இல்லாமைக்கும், அவற்றின் மதிப்புகளை அளவைக் கொண்டு மட்டுமே நிர்ணயிப்பதற்கும் இடையிலான தொடர்பை லாக் நேரடியாக வலியுறுத்துகிறார். "தங்கம் வெள்ளியின் மீது ஒரு கற்பனையான மதிப்பை சார்த்துவதற்கு மனித வர்க்கம் சம்மதித்திருப்பதால்...இந்த உலோகங்களில் இருப்பதாகக் கருதப்படும் உள்ளார்ந்த மதிப்பு அளவேயன்றி வேறில்லை." ("...சில பார்வைகள்," 1691, நூல்கள் பதிப்பு 1777, பாகம் II., பக்கம் 15.)*

[89] *காசடித்தல் மீதான கட்டணம் போன்ற விவரங்களைப் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்வது என் நோக்கத்துக்கு முற்றிலும் அப்பாற்பட்டதுதான். ஆயினும், ஆங்கிலேய அரசின் "இலவசமாகக் காசடிக்கும் தாராள குணத்தை" வியந்து போற்றுகிற படாடோபத் துதிபாடி ஆதாம் முல்லர் தெரிந்து கொள்வதற்காக சர் டட்லி நார்த்தின் பின்வரும் கருத்தை எடுத்துக்காட்டுகிறேன்: "வெள்ளியும் தங்கமும் ஏனைய சரக்குகளைப் போலவே இறக்கங்களையும் ஏற்றங்களையும் பெற்றுள்ளன. ஸ்பெயினிலிருந்து சரக்கு வந்ததுமே அது டவருக்குள் எடுத்துச் செல்லப்பட்டு நாணயமாக்கப்படுகிறது. அதன்பின் சிறிது காலத்திலேயே மீண்டும் பொன்-வெள்ளிப் பாளங்களை ஏற்றுமதி செய்வதற்கான தேவை வரும்; பொன்-வெள்ளிப் பாளம் ஏதும் இல்லாமல் எல்லாமே நாணயமாக இருக்க நேர்ந்து விட்டால் என்ன செய்வது? அதைத் திரும்பவும் உருக்கி விடு; அதனால் இழப்பு ஏற்படுவதில்லை; ஏனெனில் நாணயமடித்தலில் அதன் உடைமையர்களுக்குச் செலவு ஏதுமில்லை. இவ்வாறு தேசம் வஞ்சிக்கப்பட்டு கழுதை தின்பதற்கான வைக்கோலைத் திரிப்பதற்கு விலை கொடுக்குமாறு செய்யப்பட்டுள்ளது. வியாபாரி நாணயமடித்தலின் விலையைச் செலுத்துமாறு செய்யப்பட்டால், அவர் கைம்மாறில்லாமல் தன் வெள்ளியை டவருக்கு அனுப்பியிருக்க மாட்டார்; நாணயமாக்கப்பட்ட பணம் எப்போதுமே நாணயமாக்கப்படாத வெள்ளிக்கு மேலான மதிப்பைப் பெற்றிருக்கும்." (நார்த், முன் வந்தது, பக்கம் 18.) நார்த்தே கூட இரண்டாம் சார்லசின் ஆட்சிக் காலத்தில் மிக முக்கிய வியாபாரிகளில் ஒருவராயிருந்தார்.*

இல்லாது போகிறது. மத்திய காலத்திலும், பிறகு 18ஆவது நூற்றாண்டு வரையிலுமான நாணயமடித்தலின் வரலாறு இந்தக் காரணத்தால் திரும்பத் திரும்ப எழுகிற குழப்பத்தைப் பதிவு செய்கிறது. சுற்றோட்டத்தில் விடப்படும் நாணயங்கள் அவற்றின் பெயரால் குறிக்கப்படும் வகையின் வெறும் வெளித் தோற்றமாக, அவற்றில் அடங்கியிருப்பதாக அதிகாரபூர்வமாய்க் குறிக்கப் பெறும் உலோக எடையின் சின்னமாக [symbol] மாறிப் போகின்றன. சுற்றோட்டத்துக்குரிய இந்த இயல்பான போக்கைத் தற்காலச் சட்ட நெறி அங்கீகரிக்கிறது; ஒரு பொற்காசு இவ்வளவு எடையை இழந்து விட்டால் பணத் தகுதியை இழந்து விடும், அதாவது சட்ட பூர்வச் செலாவணியாக இல்லாமற் போய்விடும் என்று சட்டங்கள் வரையறுக்கின்றன.

நாணயங்களின் ஓட்டமே அவற்றின் பெயர்வழி எடைக்கும் மெய்யான எடைக்கும் இடையே ஒரு பிளவை ஏற்படுத்துகிறது; இவ்வாறு, ஒரு புறம், வெறும் உலோகத் துண்டுகள் என்றும், மறு புறம் திட்டமான பணியுள்ள நாணயங்கள் என்றும் அவற்றிடையே ஒரு வித்தியாசத்தைத் தோற்றுவிக்கிறது; இந்த உண்மையானது உலோக நாணயங்களுக்கு பதில் வேறு பொருளாலான அடையாளங்களை — நாணயங்கள் பயன்படும் அதே காரியங்களுக்குப் பயன்படுகிற சின்னங்களை — புழங்க விடுவதற்கான உள்ளார்ந்த சாத்தியப்பாட்டைக் குறிக்கிறது. தங்கம் அல்லது வெள்ளியின் நுண்ணிய அளவுகளை நாணயமாக்குவதில் நடைமுறைச் சிரமங்கள், மேல்நிலை உலோகத்துக்கு பதில் கீழ்நிலை உலோகம் — வெள்ளிக்கு பதில் செம்பு, தங்கத்துக்கு பதில் வெள்ளி — மதிப்பளவையாகப் பயன்படுத்தப்படுதல், கீழ்நிலை உலோகம் மேல்நிலை உலோகத்தால் விரட்டப்படும் வரை பணமாகச் சுற்றோட்டத்தில் இருத்தல் — இந்த நிலைமைகள் எல்லாம் தங்க நாணயங்களுக்கான பதிலிகளாக வெள்ளி, செம்பு அடையாளங்கள் வரலாற்று வழியில் ஆற்றிய பங்கினை விளக்குகின்றன. நாணயங்கள் அதி விரைவாகக் கைமாறுகிற, அதிகபட்ச அளவு தேய்மானத்துக்குட்படுகிற சுற்றோட்டத் துறைகளில் வெள்ளி, செம்பு அடையாளங்கள் தங்கத்திற்குப் பதிலியாகின்றன. மிகச் சிறு அளவில் விற்றல்களும் வாங்கல்களும் தொடர்ந்து நடந்து கொண்டிருக்கும் இடங்களில் இது நிகழ்கிறது; இந்தச் சார்புப் பொருட்கள் தங்கத்தினிடத்தில் தம்மை இருத்திக் கொண்டு விடாமல் தடுக்கும் பொருட்டு சட்டங்கள் இயற்றப்படலாயின; அவை எந்த அளவுக்கு இந்தப் பதிலிகளைத் தங்கத்துக்குப் பிரதியான கொடுப்பாகக் கட்டாயம் பெற்றுக் கொள்ள வேண்டும் என்பதை வரையறை செய்கின்றன. ஓட்டத்திலுள்ள வெவ்வேறு நாணய வகைகளின் குறிப்பான தடங்கள் இயல்பாகவே ஒன்றுக்குள் ஒன்று ஊடுருவுகின்றன. தங்க நாணயங்களில் மிகச் சிறியதன் பின்னப் பகுதிகளைச் செலுத்திட பிற உலோகங்

களிலான அடையாளங்கள் [tokens] தங்கத்தோடு சேர்ந்து சுற்றோட்டத்தில் செல்கின்றன, தங்கம் ஒரு புறம் சில்லறைச் சுற்றோட்டத்துக்குள் இடைவிடாது பாய்ந்து கொண்டும், மறு புறம் அடையாளங்களாக மாற்றப்படுவதால் இடைவிடாது வெளியேற்றப் பட்டுக் கொண்டும் இருக்கிறது.[90]

வெள்ளி, செம்பு அடையாளங்களின் உலோக எடை சட்டத்தால் இஷ்டம் போல் நிர்ணயிக்கப்படுகிறது. அவை ஓட்டத்திலிருக்கும் போது பொற்காசுகளை விடவும் விரைவாகத் தேய்ந்து போகின்றன. எனவே, அவை ஆற்றும் பணிகள் அவற்றின் எடையையும், ஆதலால் மதிப்பையும் சிறிதும் சார்ந்தவையல்ல. நாணயமாகத் தங்கம் ஆற்றுகிற பணி அந்தத் தங்கத்தின் உலோக மதிப்பைச் சிறிதும் சாராததாகிறது. எனவே ஒப்பளவில் மதிப்பற்றவையான காகித நோட்டுகளும் இன்ன பிறவும் தங்கத்துக்குப் பதில் நாணயங்களைப் போல் புழங்க முடியும். முழுக்க முழுக்க சின்னமாகவே அமைந்திடும் இந்தத் தன்மை அடையாள உலோகக் காசுகளில் ஓரளவுக்கு மூடிமறைக்கப்பட்டுள்ளது. காகிதப் பணத்தில் அது பட்டவர்த்தனமாகிறது. உண்மையில், ce n'est que le premier pas qui coute.*

அரசால் வெளியிடப்பட்டு, கட்டாயச் செலாவணிக்குரியதாவதும், தங்கமாக மாற்ற முடியாததுமான காகிதப் பணத்தையே இங்கு குறிப்பிடுகிறோம். உலோகப் பணமே அதன் உடனடித் தோற்றுவாய். மறு புறம், கடன்-செலாவணியின் [credit] அடிப்படையிலான பணம் சாமானிய சரக்குச் சுற்றோட்டம் என்ற நமது நோக்குநிலையில் நமக்கு இன்னமும் பரிச்சயமாகாத நிலைமைகளைக் குறிக்கிறது. ஆனால், உண்மையான காகிதப் பணம் சுற்றோட்ட ஊடகம் என்ற பணத்தின் பணியில் பிறப்பெடுப்பது போலவே, கடன்-செலவாணியின் அடிப்படையிலான பணமானது கொடுப்புச் சாதனம் [means of payment] என்ற பணத்தின் பணி

90 "வெள்ளியானது சிறு கொடுப்புகளுக்காகத் தேவைப்படும் அளவை விஞ்சாவிட்டால், பெரும் கொடுப்புகளுக்காகப் போதுமான அளவுகளில் அதனைத் திரட்ட முடியாது...முக்கியக் கொடுப்புகளில் தங்கத்தின் பயன்பாடு சில்லறை வர்த்தகத்திலும் அதன் பயன்பாட்டை அவசியமாக்குகிறது. தங்க நாணயத்தை வைத்திருப்பவர்கள் சிறு வாங்கல்களுக்காக அதனைத் தந்து விட்டு, வாங்கப்படும் சரக்குடன் மீதத்தை வெள்ளியாகப் பெற்றுக் கொள்கின்றனர்; சில்லறை வியாபாரியிடம் குவிந்து விடக் கூடிய உபரி வெள்ளி இவ்வழியில் வெளியில் எடுக்கப்பட்டு, பொதுவான சுற்றோட்டத்தில் கரைக்கப்பட்டு விடுகிறது. ஆனால், தங்கத்தைச் சார்ந்திராமல் சிறு கொடுப்புகளை நடத்தித் தருகிற அளவுக்கு வெள்ளி இருந்தால் சில்லறை வியாபாரி சிறு வாங்கல்களுக்கு வெள்ளியையே பெற்றுக் கொள்ள வேண்டும்; அப்போது அது அவரது கையில் கட்டாயமாய் குவிந்து விடுகிறது. (டேவிட் பியூக்கனன்: "மகா பிரிட்டனின் வரி விதிப்பு மற்றும் வாணிபக் கொள்கை பற்றிய ஆய்வு," எடின்பரோ, 1844, பக்கம் 248, 249.)

* எல்லாம் முதற்செயலைப் பொறுத்ததே.

யில் தன்னியல்பாய் வேர்விட்டுக் கிளம்புகிறது என்பதை மட்டும் குறிப்பிடலாம்.[91]

அரசானது துண்டுக் காகிதங்களில் வெவ்வேறு பண வகைகளை—உதாரணமாக £1, £5 முதலானவற்றை—அச்சிட்டு, சுற்றோட்டத்தில் விடுகிறது. அவை அதே தொகைக்கான தங்கத்திற்கு உள்ளபடியே பதிலியாகிற அளவில் அவற்றின் இயக்கம் பணத்தின் ஓட்டத்தை ஒழுங்கியக்கும் விதிகளுக்கு உட்பட்டதாகும். காகிதப் பணத்தின் சுற்றோட்டத்துக்கே உரித்தான ஒரு விதி அந்தக் காகிதப் பணம் தங்கத்தின் பதிலியாக அமைவதன் விகிதாசாரத்திலிருந்துதான் பிறந்தெழ முடியும். அப்படியொரு விதியுள்ளது; எளிமையாகச் சொன்னால், அது பின்வருமாறு: காகிதப் பணத்தின் வெளியீடானது, அடையாளங்கள் புழங்க விடப்படாவிட்டால் உள்ளபடியே சுற்றோட்டத்தில் இருக்கக் கூடியதான தங்கத்தை (அல்லது வெள்ளியாக இருந்தால் வெள்ளியை) தொகையில் விஞ்சக் கூடாது. இப்போது சுற்றோட்டம் உட்கிரகிக்க முடிகிற தங்கத்தின் அளவு ஒரு குறிப்பிட்ட மட்டத்துக்கு மேலாகவும் கீழாகவும் இடையறாது அலைவுறுகிறது. இருப்பினும், குறிப்பிட்ட நாட்டில் சுற்றோட்ட ஊடகத்தின் திரள் குறிப்பிட்ட குறைந்த பட்சத்துக்குக் கீழாக ஒரு போதும் தாழ்வதில்லை; இந்தக் குறைந்தபட்சம் நடைமுறை அனுபவத்தால் சுலபமாகத் தெரிந்து விடுகிறது. இந்தக் குறைந்தபட்சத் திரள் அதன் ஆக்கக் கூறுகளில் தொடர்ச்சியாக மாற்றங்களுக்குட்படுகிறது என்ற உண்மை, அல்லது அதில் அடங்கியுள்ள பொற்காசுகள் புதிய பொற்காசுகளால் இடைவிடாது மாற்றப்படுகின்றன என்ற உண்மை அதன் தொகையிலோ அதன் சுற்றோட்டத்தின் தொடர்ச்சியிலோ எந்த மாற்றத்தையும் ஏற்படுத்துவதில்லை என்பது தெளிவு. எனவே, இந்தக்

---

91 சீன சாம்ராஜ்யத்தில் அஸிக்னாட்டுகளை தங்கமாய் மாற்றத்தக்க வங்கி நோட்டுகளாக மாற்றுவதை இரகசிய நோக்கமாய்க் கொண்ட ஒரு பிரேரணையை விண்ணுலகின் புதல்வர் முன்னால் சமர்ப்பிக்க வேண்டுமென்ற யோசனை நிதியமைச்சரான வான்-மாவ்-இன் என்னும் அரசு அதிகாரிக்கு ஒரு நாள் உதித்தது. அஸிக்னாட்டுக் குழு 1854 ஏப்ரல் அறிக்கையில் அவரைக் கடுமையாகக் கண்டித்தது. வழக்கம் போல் மூங்கில் தடியாலும் மொத்துப்பட்டாரா என்று கூறப்படவில்லை. அறிக்கையின் முடிவுரைப் பகுதி பின்வருமாறு: "குழு அவரது யோசனையைக் கவனமாகப் பரிசீலித்தது; அது முழுக்க முழுக்க வியாபாரிகளுக்கே சாதகமானது, முடியரசுக்கு அதனால் இலாபமேதுமில்லை என்று கருதுகிறது." ("Arbeiten der Kaiserlich Russischen Gesandtschaft zu Peking uber China." Aus dem Russischen von Dr. K. Abel und F.A. Mecklenburg. Erster Band. பெர்லின், 1858, பக்கம் 47 முதலானவை.) வங்கிச் சட்டங்கள் பற்றிய பிரபுகள் சபைக் குழுவின் முன்னர் அளித்த சாட்சியத்தில் இங்கிலாந்து வங்கியின் ஆளுனர் ஒருவர், புழக்கத்தின் விளைவாய் தங்க நாணயங்களில் ஏற்படும் தேய்வு தொடர்பாகக் கூறினார்: ஒவ்வோராண்டும் சவரன்களின் ஒரு புதிய தொகுதி தேய்ந்து மெலிந்து விடுகிறது; ஓர் ஆண்டில் முழு எடையுள்ளதாகப் புழங்கும் தொகுதி மறு ஆண்டில் தராசு முள் அதன் எடைக் குறைவைக் காட்டும் அளவுக்குத் தேய்மானத்தின் மூலம் எடையிழக்கிறது." (பிரபுகள் சபைக் குழு, 1848, எண் 429.)

குறைந்தபட்சப் பொற்காசுகளுக்கு பதில் காகித அடையாளங் களைப் புழங்க விடலாம். மறு புறம், இன்று சுற்றோட்டக் குழாய் கள் அனைத்தும் பணத்தை உட்கிரகிக்க அவற்றுக்குள்ள திறனின் முழு அளவுக்குக் காகிதப் பணத்தால் நிரப்பப்படுவதானால், நாளை சரக்குச் சுற்றோட்டத்தில் ஏற்படக் கூடிய அலைவின் விளைவாக அவை நிரம்பி வழியக் கூடும். நியமம் என்பதே இல்லாமற் போய் விடும். உள்ளபடியே ஓட்டத்திலிருக்கக் கூடிய ஒத்தவகையைச் சேர்ந்த பொற்காசுகளின் உருவிலான தொகையே காகிதப் பணத் தின் முறையான வரம்பாகும்; இவ்வரம்பை அது மீறினால், எல்லாரது அவமதிப்புக்கும் ஆளாகிற ஆபத்து ஒரு புறமிருக்க, எவ்வளவு தங்கம் சரக்குச் சுற்றோட்டத்தின் விதிகளுக்கேற்பத் தேவைப்படுமோ, எவ்வளவு தங்கத்தை மட்டுமே காகிதத்தால் குறிக்க முடியுமோ அவ்வளவு தங்கத்தை மட்டுமே அது குறிப்பதாகி விடும். வெளியிடப்படும் காகிதப் பணத்தின் அளவு அது இருக்க வேண்டியதைப் போல் இரு மடங்கானால், உள்ளபடியே £1 என்பது ¼ அவுன்ஸ் தங்கத்தின் பணப்பெயராக இருக்காது, ⅛ அவுன்ஸ் தங்கத்தின் பணப்பெயராகவே இருக்கும். விலைகளின் நியமம் என்ற தங்கத்தின் பணியில் மாறுதல் ஏற்பட்டிருந்தால் எப்படியோ அது போன்றதே இதனால் நேரிடும் விளைவு. முன்னர் £1 என்ற விலையால் தெரிவிக்கப்பட்ட மதிப்புகள் இப்போது £2 என்ற விலையால் தெரிவிக்கப்படும்.

காகிதப் பணம் என்பது தங்கம் அல்லது பணத்தைக் குறிக்கும் அடையாளச் சீட்டாகும். அதற்கும் சரக்குகளின் மதிப்புகளுக்குமிடை யிலான உறவு என்னவென்றால், காகித அடையாளங்களால் குறிக்கப் படும் தங்கத்தின் அதே அளவுகளால் சரக்குகளின் மதிப்புகள் கருத் தளவில் தெரிவிக்கப்படுகின்றன என்பதே. மற்றெல்லாச் சரக்கு களையும் போலவே மதிப்பைப் பெற்றிருப்பதான தங்கத்தைக் குறிக் கிற அளவுக்குத்தான் காகிதப் பணம் மதிப்பின் சின்னமாகும்.[92]

---

[92] பணத்தைப் பற்றி எழுதும் மிகச் சிறந்த எழுத்தாளர்களும் கூட அதன் வெவ் வேறு பணிகளைத் தெளிவாகப் புரிந்து கொள்ளத் தவறுவதற்கு ஃபுல்லர்டனின் பின் வரும் வாசகம் சான்றாகும்: ''நமது உள்நாட்டுப் பரிவர்த்தனைகளைப் பொறுத்த வரை, தங்க, வெள்ளி நாணயங்கள் வழக்கமாக ஆற்றுகிற பணப் பணிகள் யாவற்றையும் தங்கமாக மாற்ற முடியாத நோட்டுகளின் சுற்றோட்டம் அதே அளவுக்குத் திறம்பட ஆற்ற முடியும் என்பது மறுக்க முடியாத உண்மை; இந்த நோட்டுகள் சட்டத்திலிருந்து பெறுகிற செயற்கையான, சம்பிரதாய மதிப்பல்லாமல் வேறு மதிப்பில்லாதவை. நோட்டு வெளியீட்டின் அளவு தக்க வரையறைக்கு உட்பட்டிருக்கும் வரை, இவ்வகைப்பட்ட செயற்கையான மதிப்பை இயற்கையான மதிப்பிற்குள்ள எல்லாக் காரியங்களையும் செய்ய வைக்கலாம்; நியமம் என்பதற்கான அவசியத்தையும் கூட ஒழிக்கச் செய்து விடலாம்.'' (ஃபுல்லர்டன்: ''செலாவணிகளை முறைப்படுத்தல்,'' லண்டன், 1845, பக்கம் 21.) பணமாகப் பயன்படுகிற சரக்குக்கு பதில் மதிப்பின் வெறும் அடையாளங் களை சுற்றோட்டத்தில் செயல்பட வைக்க முடியும் என்பதால், மதிப்பளவையாகவும், விலைகளின் நியமமாகவும் பணச் சரக்கு ஆற்றக் கூடிய பணிகள் தேவையற்றவை ஆகி விடுவதாய் அறிவிக்கப்படுகிறது!

இறுதியாக, தங்கத்துக்கு பதில் மதிப்பேதுமில்லாத அடையாளச் சீட்டுகளை சுற்றோட்டத்தில் விட முடிகிறதே, இதற்கு என்ன காரணம் என்று கேட்கலாம். ஆனால், நாம் ஏற்கெனவே பார்த்திருப்பது போல, தங்கம் நாணயமாக, அதாவது சுற்றோட்ட ஊடகமாக அல்லாமல் வேறெதுவாகவும் பணி புரியாமலிருக்கும் போது மட்டுமே, அதற்கு பதில் அடையாளச் சீட்டுகளைப் பயன்படுத்த முடியும். தொடர்ந்து சுற்றோட்டத்திலுள்ள தேய்ந்து போன பொற் காசுகள் சுற்றோட்ட ஊடகமாக மட்டும் பயன்படும் தனித்த பணியை ஆற்றுவதாகச் சொல்லலாம். ஆனால் பணத்துக்கு இது ஒன்றுதான் பணியென்ற கட்டாயமில்லை. இதன்றி அதற்கு வேறு பணிகளும் உள்ளன. ஒவ்வொரு துண்டுப் பணமும் உள்ளபடியே சுற்றோட்டத்தில் இருக்கும் வரைதான் வெறும் நாணயம் அல்லது சுற்றோட்டச் சாதனமாக இருக்கிறது. ஆனால், காகிதப் பணத்தைப் பதிலியாகக் கொள்ள வல்ல அந்தக் குறைந்தபட்சத் தங்கத்திரள் தொடர்ந்து சுற்றோட்டச் சாதனமாகவே இருக்கிறது. அத்திரள் இடைவிடாது சுற்றோட்டத் துறைக்குள்ளேயே நீடிக்கிறது, தொடர்ந்து சுற்றோட்ட ஊடகமாகவே பணி புரிகிறது, அந்த ஒரு காரியத்துக்காக மட்டுமே இருக்கிறது. எனவே, சரக்குகள் தமது மதிப்பு வடிவங்களை எதிர்கொள்கிற, மீண்டும் உடனடியாக மறைந்து விடுகிற கட்டங்களான C — M — C என்ற உருமாற்றத்தின் தலைகீழ்க் கட்டங்கள் தொடர்ந்து மாறி மாறி வருவதையே அதன் இயக்கம் குறிக்கிறது. இங்கே ஒரு சரக்கின் பரிவர்த்தனை-மதிப்பு சுயேச்சையான ஒன்றாய் நிலவுதல் என்பது கணநேரத் தோற்றமே; இந்த நிலவலின் பயனாய், இந்தச் சரக்கு போய், அதற்கு பதில் உடனடியாக இன்னொரு சரக்கு வருகிறது. எனவே, பணத்தைத் தொடர்ந்து கை மாறச் செய்கிற இந்த நிகழ்முறையில், பணம் அடையாள வடிவில் நிலவுதலே போதுமானது. பண வடிவிலான அதன் நிலவல் பொருள் வடிவிலான அதன் நிலவலை உட்கிரகித்துக் கொள்கிறது என்று கூறலாம். சரக்கு-விலைகளின் கணநேரத்திய, புறவயப் பிரதிபலிப்பாக இருத்தலால் அது தனக்குத் தானே சின்னமாகப் பயன்படுகிறது, எனவே அடையாளச் சீட்டைப் பதிலியாகக் கொள்ள வல்லதாய் இருக்கிறது.[93] ஆயின் ஒன்று

---

[93] தங்கமும் வெள்ளியும் நாணயங்களாக, அதாவது பிரத்தியேகமாய் சுற்றோட்ட ஊடகமாக மட்டும் பயன்படும் போது, தமக்குத் தாமே வெறும் அடையாளங்களாகி விடுகின்றன என்ற உண்மையிலிருந்து, நிக்கோலஸ் பார்பான் ''பணம் படைக்க'' அரசுகளுக்கு உரிமையிருப்பதாக முடிவு செய்கிறார்; அதாவது ஷில்லிங் என்றழைக்கப் படும் வெள்ளியின் எடைக்கு கிரவுன் என்பது போன்ற இன்னும் பெரிய எடையின் பெயரைக் கொடுக்கவும், எனவே கடன்காரர்களுக்கு கிரவுன்களுக்குப் பதிலாக ஷில்லிங்குகளைக் கொடுக்கவும், அவற்றுக்கு உரிமையுண்டு என்கிறார். ''பணம் அடிக்கடி எண்ணப்படுவதால் தேயவும், எடை குறையவும் செய்கிறது...பணத்தின் வகை என்ன, அது புழங்கக் கூடியதா என்பதை பேரத்தின் போது கருதுகிறார்களே தவிர,

அவசியம், இந்த அடையாளச் சீட்டு புறவயமாய் சமுதாயத்தில் செல்லத் தக்கதாக இருத்தல் வேண்டும்; காகித அடையாளம் கட்டாய முறையில் புழக்கத்துக்குரியதாக்கப்படுவதால் இந்நிலையை அடைகிறது. சமுதாயத்தின் பிரதேச எல்லைகளுடன் ஒன்றியமையும் உள்நாட்டுச் சுற்றோட்டத் துறையின் வரம்புகளுக்குள் மட்டுமே அரசின் இந்தக் கட்டாய நடவடிக்கை செல்லுபடியாகும். ஆனால், அந்தத் துறைக்குள்ளேதான் பணமும் சுற்றோட்ட ஊடகமாக இருத்தலென்ற தன் பணியை முழுமையாக நிறைவேற்றுகிறது, அதாவது நாணயமாகிறது.

## பிரிவு 3. — பணம்

மதிப்பளவையாகவும், ஆதலால், தானே நேராகவோ தன்னைக் குறிக்கிற அடையாளத்தின் மூலமோ சுற்றோட்ட ஊடகமாகவும் பணி புரிகிற சரக்கே பணம் ஆகும். எனவே, தங்கம் (அல்லது வெள்ளி) பணம் ஆகும். ஒரு புறம், அது பணமாகப் பணி புரியும் போது, தன் பொன்னுருவில் நேரில் பிரசன்னமாக வேண்டியுள்ளது. அப்போது அது பணச் சரக்காகும்; மதிப்பளவையாகப் பணி புரியும் போது இருப்பது போல் அது கருத்தளவிலானதன்று, சுற்றோட்ட ஊடகமாகப் பணி புரியும் போது இருப்பது போல் அடையாளத்தால் குறிக்கப்பட வல்லதுமன்று. மறு புறம், நேரில் பிரசன்னமாகியோ, தன்னைக் குறிக்கிற அடையாளத்தின் மூலமோ, அது பணமாகப் பணி புரியலாம். அப்போது அது மதிப்பின் ஒரே வடிவமாகிறது; அதாவது ஏனைய எல்லாச் சரக்குகளும் குறிக்கிற பயன்-மதிப்புக்கெதிராக பரிவர்த்தனை-மதிப்பு நிலவுவதற்கு ஏற்றதான ஒரே வடிவமாகிறது.

### அ. சேர்த்து வைத்தல்

சரக்குகளது இரு எதிர்நிலை உருமாற்றங்களின் சுற்றுகளில் நடக்கும் தொடர்ச்சியான இயக்கம், அல்லது விற்றலும் வாங்கலும் என்றும் ஓயாது மாறிமாறி வருதல் என்பது பணத்தின் ஓயாத ஓட்டத்தில், அல்லது சுற்றோட்டத்தின் நிரந்தர இயக்கியாக பணம் ஆற்றுகிற பணியில் பிரதிபலிக்கிறது. ஆனால், உருமாற்றங்களின் தொடர் இடைமறிக்கப்பட்டதுமே, விற்றல்கள் அடுத்து வாங்கல்களால் நிறைவு செய்யப்படாது போனதுமே, பணம் இயங்காது ஓய்ந்து விடுகிறது; அது புவாகில்பேர் கூறுவது போல் ''meuble''

வெள்ளியின் அளவைக் கருதுவதில்லை....உலோகத்தைப் பணமாக்குவது அதன் மீதான அரசதிகாரமே.'' (நி. பார்பான், முன் வந்தது, பக்கம் 29, 30, 25.)

என்பதிலிருந்து ''immeuble'' ஆக, அசையக் கூடியதிலிருந்து அசையாததாக, நாணயத்திலிருந்து பணமாக மாற்றப்படுகிறது.

சரக்குச் சுற்றோட்ட வளர்ச்சியின் ஆரம்ப காலத்திலிருந்தே, முதல் உருமாற்றத்தின் பலனை விடாமல் கையிலிருத்திக் கொள்வதற்கான அவசியமும், அடங்கா ஆசையும் தோன்றி வளர்கின்றன. இந்தப் பலன் சரக்கின் மாற்றுருவம் ஆகும், அல்லது அதன் பொன் முட்டை ஆகும்.[94] ஆக, சரக்குகள் விற்கப்படுவதன் நோக்கம் ஏனைய சரக்குகளை வாங்குவதன்று, அவற்றின் சரக்கு வடிவத்துக்கு பதில் பண வடிவத்தைப் பெறுவதே. இந்த வடிவ மாற்றம் சரக்குச் சுற்றோட்டத்துக்கான வழியாக இருந்த நிலை போய், அதுவே குறியும் இலக்கும் என்றாகி விடுகிறது. சரக்கின் மாறிய வடிவம் அதன் நிபந்தனையற்ற உடைமை மாற்றத்துக்கேற்ற வடிவமாக, அதாவது அதன் கணநேரப் பண வடிவமாகச் செயல்பட முடியாமல் இவ்வாறு தடுக்கப்படுகிறது. பணம் ஒரு சேர்ப்பாக [hoard] ஓய்ந்து விடுகிறது; விற்பவர் பணத்தைச் சேர்த்து வைப்பவராகிறார்.

சரக்குச் சுற்றோட்டத்தின் ஆரம்பக் கட்டங்களில், பணமாக மாற்றப்படுபவை உபரிப் பயன்-மதிப்புகள் மட்டுமே. இவ்வாறு, தங்கமும் வெள்ளியும் தாமாகவே மிதமிஞ்சிய நிலைக்கான அல்லது செல்வச் செழிப்புக்கான சமூகத் தெரிவிப்புகள் ஆகின்றன. மாற்றமில்லாத மிகக் குறைந்த சுய தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்வதற்காகத் தொடர்ந்து பழங்கால முறையில் உற்பத்தி நடந்தேறுகிற சமுதாயங்களில் சேர்த்து வைத்தலின் [hoarding] இந்த சாமானிய வடிவம் நிலைத்து நீடிக்கிறது. ஆசிய மக்களுக்கும், குறிப்பாகக் கிழக்கிந்திய மக்களுக்கும் இது பொருந்தும். ஒரு நாட்டில் சரக்குகளின் விலைகள், அந்நாட்டில் கிடைக்கக் கூடிய தங்கம், வெள்ளியின் அளவால் நிர்ணயிக்கப்படுகின்றன என்பதாகக் கற்பித்துக் கொள்ளும் வாண்டர்லிண்ட் இந்தியச் சரக்குகள் இவ்வளவு மலிவாக இருப்பது ஏன் என்று கேள்வி எழுப்புகிறார். அவரது பதில்: ஏனெனில், இந்துக்கள் பணத்தைப் புதையலாகப் புதைத்து வைக்கின்றனர். 1602 முதல் 1734 வரை அவர்கள் ஆரம்பத்தில் அமெரிக்காவிலிருந்து ஐரோப்பாவுக்கு வந்த 150 மிலியன் பவுன் ஸ்டெர்லிங் பெறுமான வெள்ளியைப் புதைத்து வைத்ததாக அவர் குறிப்பிடுகிறார்.[95] 1856 முதல் 1866 வரையிலான பத்தாண்டுகளில், இங்கிலாந்து ஆஸ்திரேலியத் தங்கத்துக்குப் பதிலாகப் பெற்றிருந்த

94 ''பணச் செல்வம் என்பது...பணமாக மாற்றப்பட்ட பொருட் செல்வமே தவிர வேறில்லை.'' (மெர்சியர் டெ லா ரிவீரா, முன் வந்தது.) ''உற்பத்திப் பண்டத்தின் வடிவிலான மதிப்பு அதன் வடிவத்தை மாற்றிக் கொண்டுள்ளது, அவ்வளவுதான்.'' (முன் வந்தது, பக்கம் 486.)

95 ''இந்தப் பழக்கத்தின் மூலமாகவே அவர்கள் தமது பண்டங்கள், செய்பொருட்கள் அனைத்தின் விலையையும் இவ்வளவு குறைவாக இருக்கச் செய்கின்றனர்.'' (வாண்டர்லிண்ட், முன் வந்தது, பக்கம் 95,96.)

வெள்ளியில் £120,000,000ஐ இந்தியாவுக்கும் சீனாவுக்கும் ஏற்றுமதி செய்தது. சீனாவுக்கு ஏற்றுமதி செய்யப்படும் வெள்ளியில் மிகப் பெரும் பகுதி இந்தியாவுக்குப் போய்ச் சேர்ந்து விடுகிறது.

சரக்கு உற்பத்தி மேலும் வளர வளர, ஒவ்வொரு சரக்கு உற்பத்தியாளரும் nexus rerum அல்லது சமுதாய வாக்குறுதி ஈடேறும் படி உறுதி செய்து கொள்ள வேண்டியதாகிறது.[96] அவரது சரக்குகளின் உற்பத்திக்கும் விற்பனைக்கும் அவகாசம் வேண்டும்; தவிரவும் அவை நிலைமைகளுக்கேற்பவே அமைகின்றன; ஆனால் இதற்கிடையில் தேவைகள் அவரைத் தொடர்ந்து வாட்டுகின்றன; மற்றவர்களின் சரக்குகளை ஓயாமல் வாங்க வேண்டிய அவசியத்தை உண்டாக்குகின்றன. விற்காமலே வாங்க வேண்டுமானால், முன்னதாக அவர் வாங்காமலே விற்றிருக்க வேண்டும். பொதுவான அளவில் நடத்தப்படும் இச்செயல் ஒரு முரண்பாட்டைக் குறிப்பதாகத் தோன்றுகிறது. ஆனால் உயர்நிலை உலோகங்கள் அவற்றின் உற்பத்தியிடங்களில் ஏனைய சரக்குகளுக்கு நேரடியாகப் பரிவர்த்தனை செய்து கொள்ளப்படுகின்றன. இங்கே நாம் (தங்கம் அல்லது வெள்ளி உடைமையாளர்களின்) வாங்கல்கள் இல்லாமலே (சரக்குடைமையாளர்களின்) விற்றல்கள் நடைபெறக் காண்கிறோம்.[97] இதையடுத்து ஏனைய உற்பத்தியாளர்களின் விற்றல்களைத் தொடர்ந்து வாங்கல்கள் நடைபெறா விட்டால், இதனால் ஏற்படுவதெல்லாம், புதிதாக உற்பத்தியான உயர்நிலை உலோகங்கள் சரக்குடைமையாளர்கள் எல்லாரிடத்தும் வினியோகமாதலே. இந்த விதத்தில், பரிவர்த்தனையின் பாதை நெடுகிலும், வெவ்வேறு அளவுகளில் தங்கமும் வெள்ளியும் சேர்த்து வைக்கப்படுகின்றன. பரிவர்த்தனை-மதிப்பை குறிப்பிட்ட ஒரு சரக்கின் உருவில் இருப்பில் கொள்வதும், சேமித்து வைப்பதும் சாத்தியமாவதைத் தொடர்ந்து அதனுடன் கூடவே பொன்னாசையும் பிறக்கிறது. சுற்றோட்டம் விரிவடைவதுடன் கூடவே, எந்நேரமும் எடுத்துப் பயன்படுத்திக் கொள்ளத்தக்கதாய் சமுதாய அளவில் வியாபகமுள்ள செல்வ வடிவமாகிய பணத்தின் சக்தியும் அதிகரிக்கிறது. "தங்கம் விந்தையிலும் விந்தையானது! அதை வைத்திருப்பவர் எவரும், விரும்புவதெல்லாம் பெறக் கூடியவராகிறார். தங்கத்தின் துணை கொண்டு சுவர்க்கமும் சென்றடையலாம்." (ஜமைக்காவிலிருந்து கொலம்பஸ் எழுதிய கடிதம், 1503) தங்கமாக மாற்றப்பட்டிருப்பது எது என்பதைத் தங்கம் வெளிப்படுத்துவதில்லை என்பதால்

96 "பணம்...ஒரு வாக்குறுதி" (ஜான் பெல்லர்ஸ்: "ஏழைகள், பட்டறைத் தொழில்கள், வர்த்தகம், தோட்டங்கள், ஒழுக்கக்கேடு ஆகியவை பற்றிய கட்டுரைகள்," லண்டன், 1699, பக்கம் 13.)

97 திட்டவட்டமான அர்த்தத்தில் வாங்கல் என்பது, தங்கமும் வெள்ளியும் ஏற்கெனவே சரக்குகளின் மாற்றப்பட்ட வடிவமாகும் அல்லது விற்றலின் பலனாகும் என்பதைக் குறிக்கிறது.

ஒவ்வொரு பொருளும், சரக்காக இருந்தாலும் இல்லாவிட்டாலும், தங்கமாக மாற்றக் கூடியதாகும். சகலமும் விற்கக் கூடியவையும், வாங்கக் கூடியவையும் ஆகின்றன. சுற்றோட்டம், பெரிய சமுதாயக் கொதிகலனாகிறது; யாவும் அதனுள் இடப்பட்டு பொற் படிக மாக்கப்படுகின்றன. புனிதர்களின் திருச்சின்னங்களும் கூட, விற் கவோ வாங்கவோ முடியாதென்று கருதப்படுகிற இன்னும் நுண்மை யான தெய்வீகப் பொருட்களும் கூட இந்த இரசவாதத்திலிருந்து தப்ப முடிவதில்லை.[98] சரக்குகளிடையிலான பண்பு வழிப்பட்ட ஒவ் வொரு வேறுபாடும் பணத்தில் அவிந்து போய் விடுவது போலவே, பணம் தீவிர சமனப்படுத்தி என்ற முறையில் எல்லா உயர்வு தாழ்வுகளையும் ஒழித்து விடுகிறது.[99] ஆனால் பணம் தானே ஒரு சரக்காகும், எந்தத் தனியாளின் தனிச் சொத்தும் ஆகக் கூடிய புறப் பொருளாகும். இவ்வாறு சமுதாயச் சக்தி தனியாட்களின் தனிச் சக்தியாகிறது. எனவே, பழங்காலத்தவர்கள் பொருளாதார ஒழுங் கிற்கும் நன்னெறிக்கும் குழி பறிக்கக் கூடியதென பணத்தைச் சாடினர்.[100] ஆனால், நவீனச் சமுதாயம் பிறந்ததுமே, அது

---

98 பக்தி வாய்ந்த கிறிஸ்தவ மன்னராகிய பிரெஞ்சு நாட்டின் மூன்றாம் ஹென்றி கன்னி மடங்களைக் கொள்ளையடித்து, அங்கிருந்த புனிதச் சின்னங்களைப் பணமாக் கினார். ஃபோசியர்கள் டெல்ஃபிக் கோயிலைச் சூறையாடினார்கள் — இச்செயல் கிரேக்க வரலாற்றில் ஆற்றிய பெரும் பங்கு பிரசித்தமானது. பழங்காலத்தவர்களுக்குக் கோவில்கள் சரக்குத் தெய்வங்களின் இருப்பிடங்களாகப் பயன்பட்டன. அவை ''புனித வங்கிகளாக'' இருந்தன. ஈடிணையற்ற வாணிப இனத்தாராகிய ஃபொயனீசியர்கள் மத்தியில், பணம் சகலத்தையும் குறிக்கிற அவதாரமாக இருந்தது. ஆகவே, காதல் அணங் கின் பண்டிகையின் போது கன்னிப் பெண்கள் அயலாருக்குத் தம்மைக் காணிக்கையாக் கிப் பெற்ற காசை அணங்கிற்கு சமர்ப்பிப்பதே நெறிமுறையாகக் கருதப்பட்டது.

99 ''தங்கம், மஞ்சள் நிறமாய் மின்னும் தங்கம்!
அருமையும் பெருமையும் கூடிய தங்கம்!
இம்மியளவே ஆயினும் என்னென்ன செய்திடும்?
கறுப்பை வெள்ளையாக்கும், கெட்டதை நல்லதாக்கும்!
தவறென்றானதை சரியென்றாக்கிடும்!
இழிந்ததை சிறந்ததாய் உயர்த்தி வைத்திடும்!
கிழவனைக் குமரனாய், அஞ்சி நடுங்கும்
கோழையைத் தீரனாய் மாற்றி வைத்திடும்!
...என்னே இது, விண்ணுறை தெய்வங்காள்!
அர்ச்சகரை, அடியாரை உம்மிடமிருந்தே கவர்ந்து கொள்ளுமே!
மல்லர்தம் தலையணை தட்டிச் செல்லுமே!
இம்மஞ்சள் அடிமை என்னென்ன செய்திடும்?
மதங்களைப் பிணைக்கும், சிதைக்கும்!
படுபாவிக்கும் அருள் பாலிக்கும்!
தொழுநோயென்றும் பாராது குலாவச் செய்திடும்!
கொள்ளையர் தம்மை அவையிலமர்த்தி,
பட்டமும் பாராட்டும் பெற்றுத் தந்திடும்!
வதங்கிய விதவையை மணவறையில் அமர்த்திடும்!
...வினை வைக்க வந்த மண்மகளே!
மனிதரனைவர்க்கும் வாய்த்த விலைமகளே!
(ஷேக்ஸ்பியர்: Timon of Athens.)

100 ''மனிதர்களிடையே தோன்றி வளர்ந்திருப்பவற்றில் பணத்தைப் போல் தீயது எதுவுமில்லை. இது நகரங்களை அடிபணியச் செய்கிறது, மனிதர்களை வீட்டை விட்டே

புவிக்கோளின் அடிவயிற்றிலிருந்து புளூட்டோவை முடியைப் பிடித்து வெளியே இழுத்து வந்தது.[101] அது தங்கத்தை வழிபாட்டுக் குரியதாக, வாழ்க்கையில் தான் கடைபிடிக்க வேண்டிய கோட்பாட்டின் சுடர் வீசும் அவதாரமாகப் போற்றி வணங்குகிறது.

சரக்கானது பயன்-மதிப்பென்ற முறையில் குறிப்பிட்ட தேவையை நிறைவு செய்கிறது; பொருட் செல்வத்தின் குறிப்பிட்ட ஒரு கூறாகும் அது. ஆனால், ஒரு சரக்கின் மதிப்பு பொருட் செல்வத்தின் மற்றெல்லாக் கூறுகளையும் அது எந்த அளவுக்குக் கவர்கிறது என்பதை அளவிடுகிறது; ஆகவே அதன் உடைமையாளரின் சமுதாயச் செல்வத்தை அளவிடுகிறது. அநாகரிகக் காலத்திய சரக்குடைமையாளருக்கு, மேற்கு ஐரோப்பிய விவசாயிக்கும் கூட, மதிப்பும் மதிப்பு வடிவமும் ஒன்றே; எனவே, அவருக்குத் தன் தங்க, வெள்ளிச் சேர்ப்பின் அதிகரிப்பு மதிப்பிலான அதிகரிப்பாகும். பணத்தின் மதிப்பு மாறுபடுவது மெய்தான்; அதன் சொந்த மதிப்பில் ஏற்படும் மாற்றத்தால் ஒரு நேரத்திலும், சரக்குகளின் மதிப்பில் ஏற்படும் மாற்றத்தால் இன்னொரு நேரத்திலும், இந்த மாறுபாடு ஏற்படுகிறது. ஆனால், இதனால், ஒரு புறம் 200 அவுன்ஸ் தங்கம், 100 அவுன்ஸ் தங்கத்தைக் காட்டிலும் அதிக மதிப்புடையதாய் இல்லாமற் போய் விடுவதில்லை; மறு புறம், இந்தப் பொருளின் உள்ளபடியான உலோக வடிவம் மற்றெல்லாச் சரக்குகளின் சர்வப் பொதுச் சமதை வடிவமாகவும், மனித உழைப்பு அனைத்தின் உடனடிச் சமுதாய அவதாரமாகவும் நீடிக்காமலும் போய் விடுவதில்லை. சேர்த்து வைக்க வேண்டும் என்ற ஆசைக்கு அளவில்லை; அந்த ஆசையின் இயல்பு இது. பண்பு எனும் நோக்கில், அல்லது மதிப்பு வடிவம் எனும் நோக்கில் பணம் வரம்பிலாப் பயன்திறன் கொண்டது; அதாவது பொருட் செல்வத்தின் சர்வப் பொதுப் பிரதிநிதியாகத் திகழ்வது. ஏனெனில் அதனை நேரடியாய் வேறெந்தச் சரக்காகவும் மாற்றலாம். ஆனால், அதே நேரத்தில், உள்ளபடியே இருக்கிற ஒவ்வொரு பணத்தொகையும் அளவில் வரம்புக்குட்பட்டதாகும்; எனவே வாங்கற் சாதனம் என்ற விதத்தில் அது வரம்புக்குட்பட்ட பயன்திறனே கொண்டது. பணத்தின் அளவு வழிப்பட்ட வரம்புகளுக்கும், அதன் பண்பு வழிப்பட்ட வரம்பின்மைக்கும் இடையிலான இந்தப் பகைமை பணஞ் சேர்ப்பவரை [hoarder] ஓயாது ஒழியாது தூண்டிக் கொண்டிருக்கிறது; சிசிஃபஸ் போல் முடிவின்றி முயன்று, பணம் திரட்டும் படி

---

விரட்டுகிறது. நேர்மையான ஆன்மாக்களைப் பழக்கி, வழிக்கு கொண்டு வந்து, மானக்கேடான காரியங்களைச் செய்ய வைக்கிறது; அக்கிரமங்கள் செய்வதற்கும், பாவச் செயல்கள் யாவற்றையும் அறிவதற்கும் மக்களைப் பயிற்றுவிக்கிறது.'' (சஃபக்ளீஸ், Antigone.)

[101] ''பேராசை புளூட்டோவையே பூமியின் அடிவயிற்றிலிருந்து இழுத்துவர முடியுமென நம்புகிறது.''

தூண்டிக் கொண்டிருக்கிறது. பிடித்துச் சேர்க்கிற ஒவ்வொரு புதிய நாட்டையும் ஒரு புதிய எல்லையாக மட்டுமே கொள்கிற நாடு பிடிப்பாளரின் நிலையே பணஞ் சேர்ப்பவரின் நிலை.

பணமென்ற முறையில் தங்கத்தை வைத்திருக்கும் பொருட்டும், சேர்ப்பாக மாற்றும் பொருட்டும், அதைச் சுற்றோட்டத்தில் செல்ல விடாமல், அல்லது மகிழ்விப்புச் சாதனமாக மாற விடாமல் தடுத்தாக வேண்டும். எனவே, தங்கத்தைச் சேர்த்து வைப்பவர் உடலின்பங்களைப் பலியிட்டு பொன்னைப் பூஜிக்கிறார். சுகபோகங்களைத் துறந்திடச் சொல்லும் சுவிசேஷ போதனையைக் கரும சிரத்தையுடன் கடைப்பிடிக்கிறார். மறு புறம், அவர் சரக்குகளாகச் சுற்றோட்டத்தில் விட்டதற்கும் கூடுதலாய் அதிலிருந்து எடுக்க முடியாது. எவ்வளவு அதிகமாக உற்பத்தி செய்கிறாரோ, அவ்வளவு அதிகமாக அவரால் விற்க முடிகிறது. எனவே, கடுமையாக உழை, மிச்சப்படுத்து, அளவின்றி ஆசைப்படு—இவை அவரது முப்பெரும் சீலங்களாகும்; விற்பதைக் கூட்டு, வாங்குவதைக் குறை—இதுவே அவரது அரசியல் பொருளாதாரத்தின் சாரமாகும்.[102]

சேர்த்து வைத்தலின் இந்த அப்பட்டமான நேரடி வடிவத்துடன் கூடவே, தங்க, வெள்ளி அணிகலன்கள் முதலான பண்டங்களைப் பெற்றிருப்பதாகிய அதன் அழகியல் வடிவமும் இருக்கக் காண்கிறோம். இது குடியியல் சமுதாயத்தின் செல்வத்துடன் சேர்ந்து வளர்கிறது. ''Soyons riches ou paraissons riches ''* (டிடரோ). இந்த விதத்தில், தங்கத்துக்கும் வெள்ளிக்கும்—அவற்றின் பணப் பணிகளோடு தொடர்பின்றி—இடைவிடாது விரிவடையும் சந்தை ஒரு புறமும், பிரதானமாக நெருக்கடியும் சமூகக் குழப்பமும் நிறைந்த காலங்களில் பயன்படுத்திக் கொள்ளத் தக்க மறைவான தங்க, வெள்ளி இருப்பாதாரம் மறு புறமும் தோற்றுவிக்கப் படுகின்றன.

சேர்த்து வைத்தல் உலோகச் சுற்றோட்டத்தின் பொருளாதாரத்தில் பல்வேறு காரியங்களுக்குப் பயன்படுகிறது. அதன் முதல் பணி தங்க, வெள்ளி நாணயங்களின் ஓட்டத்தை ஆள்கிற நிலைமைகளிலிருந்து பிறக்கிறது. சரக்குச் சுற்றோட்டத்தின் விரிவிலும், விரைவிலும், அவற்றின் விலைகளிலுமான தொடர்ச்சியான ஏற்ற இறக்கங்களோடு கூடவே, ஓட்டத்திலுள்ள பணத்தின் அளவு எப்படி ஓயாமல் குறுகவும், பெருகவும் செய்கிறது என்பதைப்

---

102 ''ஒவ்வொரு சரக்கையும் விற்கிறவர்களின் எண்ணிக்கையை முடிந்த வரை உயர்த்துவது, வாங்குகிறவர்களின் எண்ணிக்கையை முடிந்த வரை குறைப்பது என்ற இந்த அச்சாணிகளைக் கொண்டுதான் அரசியல் பொருளாதாரத்தின் அளவைகள் எல்லாம் சுழல்கின்றன.'' (வெர்ரி, முன் வந்தது, பக்கம் 52.)

---

*''செல்வந்தர்களாய் இருப்போம், அல்லது செல்வந்தர்களாய்த் தோற்றமளிப்போம்.''

பார்த்தோம். எனவே, இத்திரள் விரியவும் சுருங்கவும் வல்லதாய் இருக்க வேண்டும். ஒரு நேரத்தில் பணம் ஈர்க்கப்பட்டு, நாணயமாகச் சுற்றோட்டத்தில் விடப்பட வேண்டும்; இன்னொரு நேரத்தில் சுற்றோட்டத்திலுள்ள நாணயம் விலக்கப்பட்டு அதிகமாகவோ குறைவாகவோ தேக்க நிலையில் இருக்கும் பணமாக மாற்றப்பட வேண்டும். உள்ளபடியே ஓட்டத்திலுள்ள பணத்திரளானது சுற்றோட்டத்தின் கிரகிக்கும் திறனை இடைவிடாமல் விஞ்சும் பொருட்டு, ஒரு நாட்டிலுள்ள தங்கம், வெள்ளியின் அளவு, நாணயமாகச் செயல்படத் தேவைப்படும் அளவைக் காட்டிலும் அதிகமாயிருப்பது அவசியம். பணம் சேர்ப்புகளின் வடிவத்தை மேற்கொள்வதன் மூலம் இந்த நிபந்தனை பூர்த்தி செய்யப்படுகிறது. இந்தச் சேம வைப்புகள் சுற்றோட்டத்துக்குப் பணத்தை வழங்குவதற்கான, அல்லது சுற்றோட்டத்திலிருந்து பணத்தை விலக்கியெடுப்பதற்கான கால்வாய்களாகப் பயன்படுகின்றன; இந்த விதத்தில் சுற்றோட்டம் ஒருபோதும் கரைபுரளாமல் செல்வதற்கு வழி செய்கின்றன.[103]

## ஆ. கொடுப்புச் சாதனம்

இதுவரை பரிசீலிக்கப்பட்ட சரக்குச் சுற்றோட்டத்தின் சாமானிய வடிவத்தில், குறிப்பிட்ட ஒரு மதிப்பு இரட்டை உருவத்தில்—ஒரு துருவத்தில் சரக்காக, எதிர்த் துருவத்தில் பணமாக—எப்போதுமே தோற்றமளிக்கக் கண்டோம். எனவே, சரக்குடைமையாளர்கள் ஏற்கெனவே சமதைகளாக இருந்தவற்றின் பிரதிநிதிகளாகத் தொடர்பு பெறலாயினர். ஆனால், சுற்றோட்டத்தின் வளர்ச்சியைத்

---

103 "தேசத்தின் வாணிபம் நடைபெற, குறிப்பிட்ட வகைப் பணத்தின் நிர்ணயமான ஒரு தொகை தேவைப்படுகிறது. இந்தத் தொகை நமது நிலைமைகளுக்கு ஏற்ப வேறுபடுகிறது; சில நேரம் அதிகமாகவும் சில நேரம் குறைவாகவும் உள்ளது....பணத்தின் இந்த ஏற்றவற்றமானது அரசியல்வாதிகளின் உதவியேதுமில்லாமலே வேண்டிய அளவு கிடைக்குமாறு செய்து தன்னைத் தானே ஒழுங்குபடுத்திக் கொள்கிறது....இறைசால்கள் மாறி மாறி வேலை செய்கின்றன; பணம் பற்றாக்குறையாயிருக்கும் போது பொற்பாளம் நாணயமாக்கப்படுகிறது; பொற்பாளம் பற்றாக்குறையாயிருக்கும் போது பணம் உருக்கப்படுகிறது." (சர் ட. நார்த், முன் வந்தது, பின் குறிப்பு, பக்கம் 3.) இந்தியாவில் வெள்ளி நகைகள் இன்னமும் சேர்த்து வைத்தலுக்குரிய பணிகளைத் தொடர்ந்து நேரடியாக ஆற்றுகின்றன என்ற உண்மையை கிழக்கிந்தியக் கம்பெனியில் அதிகாரியாக நீண்டகாலமிருந்த ஜான் ஸ்டுவர்ட் மில் உறுதி செய்கிறார். உயர்ந்த வட்டி வீதம் நிலவும் போது வெள்ளி நகைகள் வெளியே வந்து நாணயமாக்கப்படுகின்றன; வட்டி வீதம் வீழ்ச்சியடையும் போது அவை திரும்பிப் போய்ச் சேருகின்றன. (ஜா.ஸ்டு. மில்லின் சாட்சியம், "வங்கிச் சட்டங்கள் பற்றிய அறிக்கைகள்," 1857, 2084.) இந்தியாவின் தங்க, வெள்ளி இறக்குமதியும் ஏற்றுமதியும் பற்றிய 1864ஆம் ஆண்டின் பாராளுமன்ற ஆவணம் ஒன்றின் படி, 1863இல் தங்க, வெள்ளி இறக்குமதி ஏற்றுமதியை விட £19,367,764 அதிகமாயிருந்தது. 1864க்கு முந்தைய 8 ஆண்டு காலத்தில், உயர் நிலை உலோகங்களின் இறக்குமதி ஏற்றுமதியை விட மொத்தம் £109,652,917 அதிகமாயிருந்தது. இந்த நூற்றாண்டில் இந்தியாவில் £200,000,000க்கும் மிகக் கூடுதலாக நாணயம் அடிக்கப்பட்டது.

தொடர்ந்து எழுகிற நிலைமைகளில், சரக்குகளின் உடைமை மாற்ற மும் அவற்றினது விலைகளின் ஈடேற்றமும் கால இடைவெளியால் பிரிக்கப்பட்டவை ஆகின்றன. இந்த நிலைமைகளில் மிகவும் எளியவற்றைச் சுட்டிக்காட்டுவதே போதுமானது. உற்பத்திக்குத் தேவைப்படும் காலம் ஒரு வகைப் பொருளுக்கு அதிகமாகவும், வேறொரு வகைப் பொருளுக்குக் குறைவாகவும் உள்ளது. மேலும், ஆண்டின் வெவ்வேறு பருவங்களுக்கேற்ப வெவ்வேறு சரக்குகள் உற்பத்தியாகின்றன. ஒரு வகைச் சரக்கு அதற்குரிய சந்தையிலேயே பிறந்திருக்கலாம்; மற்றொரு வகைச் சரக்கு நெடுந்தொலை விலிருந்து சந்தைக்கு வர வேண்டியிருக்கலாம். ஆகவே, சரக் குடைமையாளர் எண் 1 வாங்கத் தயாராகும் முன்பே எண் 2 விற்கத் தயாராக இருக்கலாம். இதே காரியங்கள் அதே ஆட் களிடையே தொடர்ந்து திரும்பத் திரும்ப நடக்கும் போது, விற்பனை நிலைமைகள் உற்பத்தி நிலைமைகளுக்கேற்ப ஒழுங்கு செய்யப்படுகின்றன. மறு புறம் குறிப்பிட்ட ஒரு சரக்கின் உப யோகம், எடுத்துக்காட்டாக ஒரு வீட்டின் உபயோகம் திட்டமான காலத்துக்கு விற்கப்படுகிறது (சாதாரணச் சொல்வழக்கில், வாட கைக்கு விடப்படுகிறது). இங்கே வாங்கியவர் இக்காலவரையின் முடிவில்தான் சரக்கின் பயன்-மதிப்பை உள்ளபடியே பெற்றுக் கொண்டவராகிறார். எனவே, அவர் அதற்கு விலை தருமுன்னரே அதை வாங்குகிறார். விற்பவர் இருக்கிற சரக்கை விற்கிறார்; வாங்குபவர் பணத்தின், அல்லது இன்னும் சரியாகச் சொன்னால் வருங்காலப் பணத்தின் பிரதிநிதியென்ற முறையிலேயே அதை வாங்குகிறார். விற்பவர் கடன் கொடுத்தவர் [creditor] ஆகிறார்; வாங்குபவர் கடன்பட்டவர் [debtor] ஆகிறார். சரக்குகளின் உரு மாற்றம், அல்லது அவற்றின் மதிப்பு வடிவத்தின் வளர்ச்சி, இங்கே ஒரு புதிய முறையில் நடந்தேறுகிறது என்பதால், பணமும் புதிய தொரு பணியை ஆற்ற வேண்டியதாகிறது. அது கொடுப்புச் சாதனம் ஆகிறது.

இங்கே கடன் கொடுத்தவர், அல்லது கடன்பட்டவர் என்ற பாத்திரங்கள் சாமானியச் சுற்றோட்டத்திலிருந்து விளைவனவாகும். அந்தச் சுற்றோட்டத்தின் வடிவத்தில் ஏற்பட்ட மாற்றம் இந்தப் புதிய முத்திரையை வாங்குபவர் மீதும் விற்பவர் மீதும் பதிக்கிறது. ஆகவே, முதலில், இந்தப் புதிய பாத்திரங்கள் விற்பவர், வாங்கு பவர் என்ற பாத்திரங்களைப் போலவே நிலையற்றவையாகவும், மாறி மாறி வரக் கூடியவையாகவும் இருக்கின்றன. இப்பாத் திரங்களை வகிப்பவர்கள் அவற்றை மாறி மாறி வகிக்க முடிகிறது. ஆனால் எதிரெதிரான இப்பாத்திரங்களை வகிப்பவர் களிடையிலான உறவு விற்பவர், வாங்குபவர் என்ற எதிரெதிரான பாத்திரங்களை வகிப்பவர்களிடையிலான உறவைப் போல் சுமுகமானதன்று; இது பன்மடங்கு இறுகி நிலைத்து விடக்

கூடியதாகும்.[104] ஆயினும் இதே பாத்திரங்கள் சரக்குச் சுற்றோட்டத்துடன் தொடர்பில்லாத நிலையிலும் உருப்பெறலாம். புராதன உலகில் வர்க்கப் போராட்டங்கள் கடன்பட்டவர்களுக்கும் கடன் கொடுத்தவர்களுக்கும் இடையிலான போட்டியின் வடிவிலேயே பிரதானமாய் நடைபெற்றன. இப்போட்டியின் விளைவாகவே ரோமாபுரியில் கடன்பட்ட பிளெபியர்கள் நாசமாகிப் போயினர். அவர்கள் அடிமைகளாக மாறினர். மத்திய காலத்தில் கடன்பட்ட பிரபுமார்கள் இப்போட்டியின் விளைவாக நாசமாகிப் போனார்கள்; இவர்கள் தமது அரசியல் அதிகாரத்தையும், அதற்கு ஆதாரமாயிருந்த பொருளாதார அடிப்படையையும் ஒருசேர இழந்தார்கள். எனினும், இந்த இரு காலப் பகுதிகளிலும் நிலவிய கடன்பட்டோர், கடன் கொடுத்தோர் என்ற பண உறவு சம்பந்தப்பட்ட வர்க்கங்களின் பொதுவான பொருளாதார வாழ்நிலைமைகளிடையே இன்னும் ஆழமாய்ப் பொதிந்திருந்த பகைமையைத்தான் பிரதிபலித்தது.

சரக்குச் சுற்றோட்டத்துக்குத் திரும்புவோம். விற்றல் நிகழ்முறையின் இரு துருவங்களிலும் சரக்கு, பணம் என்ற இரு சமதைகளும் ஏககாலத்தில் தோன்றி வந்த நிலை இப்போது இல்லை. இப்போது, பணமானது விற்கப்படுகிற சரக்கின் விலையை நிர்ணயிப்பதில் மதிப்பளவையாக முதலில் பணி புரிகிறது: ஒப்பந்தத்தால் நிர்ணயிக்கப்பட்ட விலை கடன்பட்டவரின் கடப்பாட்டை [obligation], அல்லது குறிப்பிட்ட தேதியில் அவர் செலுத்த வேண்டியிருக்கும் பணத் தொகையை அளவிடுகிறது. இரண்டாவதாக, அது கருத்தளவிலான வாங்கற் சாதனமாகப் பயன்படுகிறது. விலை கொடுத்து விடுவதாய் வாங்குபவர் அளிக்கும் உறுதிமொழியாக மட்டுமே நிலவிய போதிலும், அது சரக்கைக் கைமாறச் செய்கிறது. கொடுப்புச் சாதனம் உள்ளபடியே சுற்றோட்டத்தில் அடியெடுத்து வைப்பது, வாங்குபவரின் கையை விட்டு விற்பவரின் கைக்குச் செல்வது, கொடுப்புக்காக நிர்ணயிக்கப்பட்ட நாளுக்கு முன்னதாக அன்று. இந்நிகழ்முறை நிறைவு பெறாமல் முதல் கட்டத்தோடு நின்று விடுவது காரணமாய், சரக்கின் மாறிய உருவம், அதாவது பணம் சுற்றோட்டத்திலிருந்து விலக்கியெடுக்கப்படுவது காரணமாய், சுற்றோட்ட ஊடகம் பணச் சேர்ப்பாக மாற்றப்படுகிறது. சுற்றோட்டத்தினுள் கொடுப்புச் சாதனம் நுழைகிறதென்றாலும், சுற்றோட்டத்தை விட்டு சரக்கு வெளியேறிய பிறகே இது நிகழ்கிறது. இப்

---

[104] 18ஆவது நூற்றாண்டின் ஆரம்பத்தில் ஆங்கிலேய வர்த்தகர்களிடையே நிலவிய கடன்பட்டோர்-கடன்கொடுத்தோர் உறவுகளைப் பின்வருவது காட்டுகிறது: ''மனிதர்களின் வேறெந்த சமுதாயத்திலும், அல்லது உலகத்தின் வேறெந்த அரசிலும் காணப்பட முடியாத துன்புறுத்தி மகிழ்கிற கொடிய குணம் இங்கே இங்கிலாந்தில் வர்த்தகத் துறையினர் மத்தியில் நிலவுகிறது.'' (''கடன் மற்றும் நொடிவுச் சட்டம் பற்றிய ஒரு கட்டுரை,'' லண்டன் 1707, பக்கம் 2.)

பணம் இப்போது இந்நிகழ்முறையை நிகழச் செய்யும் சாதனமாய் இல்லை. பரிவர்த்தனை-மதிப்பின் அறுதி நிலவல் வடிவமாக, அல்லது சர்வப் பொதுச் சரக்காக உள்ளே நுழைவதன் மூலம் அது இந்நிகழ்முறையை நிறைவு பெறவே செய்கிறது. விற்பவர் தன் சரக்கைப் பணமாக மாற்றுவது அதன் மூலம் ஏதேனும் ஒரு தேவையை நிறைவு செய்து கொள்வதற்காக; பணஞ் சேர்ப்பவர் அதைச் செய்வது, தன் சரக்கை அதன் பண உருவத்தில் வைத்துக் கொள்வதற்காக; கடன்பட்டவர் அதைச் செய்வது கடனைத் திருப்பிச் செலுத்துவதற்காக. செலுத்தா விட்டால், அவரது சரக்கு களை அமீனா விற்று விடுவார். எனவே, சரக்குகளின் மதிப்பு வடிவமான பணம் இப்போது ஒரு விற்றலின் குறியும் இலக்குமாய் உள்ளது; சுற்றோட்ட நிகழ்முறையிலிருந்தே பிறக்கிற அவசிய சமுதாயத் தேவையே காரணமாகும்.

வாங்குபவர் சரக்குகளைப் பணமாக மாற்றும் முன்னரே பணத்தைச் சரக்குகளாக மாற்றுகிறார்; வேறு விதமாகச் சொன் னால், அவர் சரக்குகளின் முதல் உருமாற்றத்துக்கு முன்னரே இரண்டாவது உருமாற்றத்தை நடந்தேறச் செய்கிறார். விற்பவரின் சரக்குச் சுற்றோட்டத்தில் செல்வதும் தன் விலையை ஈடேற்றம் செய்து கொள்வதும் பணம் குறித்த சட்ட முறையிலான கேட்புரிமை யின் வடிவிலேயே. அது பணமாக மாற்றப்படும் முன்னரே பயன்-மதிப்பாக மாற்றப்படுகிறது. அதன் முதல் உருமாற்றம் பின்னொரு காலத்திலேயே நடந்து முடிகிறது.[105]

குறிப்பிட்ட காலத்திற்குள் தீர்க்கப்பட வேண்டிய கடப்பாடுகள், அந்தக் கடப்பாடுகளை எந்தச் சரக்குகளின் விற்பனை உண்டாக் கியதோ அந்தச் சரக்குகளின் விலைகளது மொத்தத் தொகையைக் குறிக்கின்றன. இந்த மொத்தத் தொகையை ஈடேற்றம் செய்வதற்கு அவசியமான தங்கத்தின் அளவு, முதலாவதாக, கொடுப்புச் சாதனத்தின் ஓட்ட வேகத்தைப் பொறுத்தது. அந்த அளவினை இரு நிலைமைகள் நெறிப்படுத்துகின்றன. ஒன்று: கடன்பட்டவர்களுக் கும் கடன் கொடுத்தவர்களுக்கும் இடையிலான உறவுகள் ஒரு வகைச்

---

[105] இதற்கு எதிரான ஒரு வடிவத்தை வாசகத்தில் நான் கவனியாது விடுவது ஏன் என்பதை 1859இல் வெளிவந்த என் புத்தகத்தில் வரும் கீழ்க்காணும் மேற்கோளிலிருந்து அறியலாம்: "மாறாக, M – C என்ற நிகழ்முறையில், பணம் மெய்யான வாங்கற் சாதனம் என்ற முறையில் உடைமை மாற்றம் செய்யப்பட முடியும்; அந்த விதத்தில், பணத்தின் பயன்-மதிப்பு ஈடேற்றம் செய்யப்படுவதற்கும், சரக்கு உள்ளபடியே ஒப்படைக்கப்படுவதற்கும் முன்னரே சரக்கின் விலை ஈடேற்றம் செய்யப்பட முடியும். முன்கொடுப்புகளின் அன்றாட வடிவத்தில் இது இடைவிடாமல் நிகழ்கிறது. ஆங்கிலேய அரசாங்கம் இந்திய விவசாயிகளிடமிருந்து அபின் கொள்முதல் செய்வது இந்த வடிவத்திலேயே....ஆயினும் இந்த உதாரணங்களில் பணம் எப்போதுமே வாங்கற் சாதனமாகச் செயல்படுகிறது. மூலதனமும் பணத்தின் உருவில் முன்னீடு செய்யப் படுகிறது என்பது உண்மையே....ஆயினும், இந்த நோக்குநிலை சாமானியச் சுற்றோட் டத்தின் எல்லைக்குட்பட்டதன்று." ("அரசியல் பொருளாதார விமர்சனத்திற்கு ஒரு பங்களிப்பு," பக்கம் 119, 120.)

சங்கிலியாய் அமைகின்றன; எப்படியென்றால், A தன்னிடம் கடன் பட்ட Bஇடமிருந்து பணத்தைப் பெறும் போது, தனக்குக் கடன் கொடுத்த Cஇடம் அதை உடனே ஒப்படைக்கிறார்; இவ்வாறே இன்னும் சொல்லலாம். இரண்டு: கடப்பாடுகள் தீர்க்கப்பட வேண்டிய வெவ்வேறு நாட்களிடையிலான இடைவெளிகளின் கால அளவு. கொடுப்புகளின் அல்லது தாமதிக்கப்பட்ட முதல் உரு மாற்றங்களின் சங்கிலித் தொடர் முன்னொரு பக்கத்தில் நாம் பரிசீலித்த உருமாற்றத் தொடர்களின் அந்தப் பின்னலிலிருந்து அடிப்படையிலேயே வேறுபட்டதாகும். சுற்றோட்ட ஊடகத்தின் ஓட்டத்தால் வாங்குபவர்களுக்கும் விற்பவர்களுக்கும் இடையிலான தொடர்பு தெரிவிக்கப்படுகிறது என்பது மட்டுமன்று. இந்தத் தொடர்பு சுற்றோட்டத்தாலேயே தோற்றுவிக்கப்படுகிறது; சுற்றோட்டத்திலேயே நிலவுகிறது. மாறாக, கொடுப்புச் சாதனத்தின் இயக்கம் முன்னதாகவே நிலவிய ஒரு சமூக உறவை வெளியிடுகிறது.

அநேக விற்றல்கள் ஏககாலத்திலும் அக்கம்பக்கமாகவும் நடை பெறுகின்றன என்ற உண்மை நாணயத்திற்கீடாக ஓட்ட வேகம் பயன்படக் கூடிய வாய்ப்பிற்கு வரம்பிடுகிறது. மறு புறம், இந்த உண்மை கொடுப்புச் சாதனத்தைச் சிக்கனப்படுத்துவதற்குப் புதிய நெம்புகோலாகும். கொடுப்புகள் ஓரிடத்தில் குவிவதற்கேற்ப, அவற்றைத் தீர்ப்பதற்காகத் தனி வகை நிறுவனங்களும் வழி முறைகளும் உருவாகின்றன. மத்திய காலத்தில் லயான்சிலிருந்த virements* இத்தகையவையே. Aக்கு Bஇடமிருந்தும், Bக்கு Cஇட மிருந்தும், Cக்கு Aஇடமிருந்தும் (இவ்வாறே இன்னும் சொல்ல லாம்) வர வேண்டிய கடன்கள் ஒன்றை ஒன்று எதிர்கொள்ளச் செய்யப்பட்டாலே போதும், இவை நேரெண்கள், எதிரெண்களைப் போல ஒன்றை ஒன்று ஓரளவுக்கு நீக்கிக் கொண்டு விடும். இவ் வாறு கொடுபட வேண்டிய ஒரே ஒரு நிலுவை மட்டுமே எஞ்சு கிறது. குவிக்கப்படும் கொடுப்புகளின் அளவு எந்த அளவுக்குப் பெரிதாக உள்ளதோ, அந்த அளவுக்கு அதனோடு ஒப்பிடுமிடத்து இந்த நிலுவை குறைவாக உள்ளது. அந்த அளவுக்குச் சுற்றோட்டத் திலுள்ள கொடுப்புச் சாதனத் திரளும் குறைவாக உள்ளது.

கொடுப்புச் சாதனம் என்ற பணத்தின் பணி ஓர் உள்ளார்ந்த முரண்பாட்டைக் குறிக்கிறது. கொடுப்புகள் ஒன்றை ஒன்று சரிக் கட்டிக் கொள்கின்றன என்ற அளவில், கணக்குப் பணமாக, மதிப்பளவையாக, கருத்தளவிலான பணமாக மட்டுமே பணம் பணியாற்றுகிறது. மெய்யான கொடுப்புகளை நிறைவேற்ற வேண்டி யுள்ள அளவில், பணம் சுற்றோட்ட ஊடகமாக, உற்பத்திப் பண்டங்களின் பரிமாற்றத்தில் ஓடி மறையும் செயலியாக மட்டும்

* தீர்வகங்கள்.

பயன்படுவதில்லை; சமுதாய உழைப்பின் தனிப்பட்ட அவதாரமாகவே, பரிவர்த்தனை-மதிப்பின் சுயேச்சையான நிலவல் வடிவமாகவே, சர்வப்பொதுச் சரக்காகவே அது பயன்படுகிறது. தொழில், வாணிப நெருக்கடிகளின் போது பண நெருக்கடிகள் எனப்படும் கட்டங்களில் இந்த முரண்பாடு உச்சமடைகிறது.[106] நீண்டு கொண்டே போகும் கொடுப்புகளின் சங்கிலியும், அவற்றைத் தீர்ப்பதற்கு ஒரு செயற்கை அமைப்பும் முழு அளவில் வளர்க்கப் பட்டிருக்கும் இடங்களில் மட்டுமே, இப்படியொரு நெருக்கடி சம்பவிக்கிறது. இந்தப் பொறியமைவில் விரிந்து பரந்த ஒரு குளறுபடி நேரிடும் போதெல்லாம், அதன் காரணம் என்னவானாலும் சரி, பணம் திடீரென்றும், உடனடியாகவும் அதன் கருத்தளவிலான கணக்குப் பண உருவத்திலிருந்து உலோகப் பணமாக மாற்றப்பட்டு விடுகிறது. சரக்குகள் — இவையெல்லாம் ஆசாரங்கெட்டவை — இனி அதற்கு பதிலியாக முடியாது. சரக்குகளின் பயன்-மதிப்பு மதிப்பற்றதாகிறது; சரக்குகளின் மதிப்பு அதற்குரிய சுயேச்சையான வடிவத்தின் முன்னிலையில் மறைந்து போகிறது. நெருக்கடியின் முன்னணைப் பொழுதில், மதிமயங்கச் செய்யும் செழுமையிலிருந்து பிறக்கிற தன்னிறைவோடு முதலாளி பிரகடனம் செய்கிறார் — பணம் வீணானதொரு கற்பனையே என்று. சரக்குகள் மட்டுமே பணமாம். ஆனால், இப்போது, பணம் மட்டுமே சரக்கு என்ற கூப்பாடு நாற்புறமிருந்தும் எழுகிறது. பணம் ஒன்றே செல்வம் என்றாகி விட்ட நிலையில், அவரது ஆன்மா, தண்ணீருக்காகத் தவிக்கிற கலைமானைப் போல், பணத்துக்காகத் தவிக்கிறது.[107] சரக்குகளுக்கும் அவற்றின் மதிப்பு வடிவமான பணத்துக்கும் இடையிலான எதிர்நிலை நெருக்கடியின் போது அறுதி முரண்பாடாக [absolute contradiction] உச்சமடைகிறது. எனவே, இப்படிப்பட்ட

---

106 வாசகத்தில் குறிப்பிடப்படும் பண நெருக்கடி ஒவ்வொரு நெருக்கடியிலும் ஒரு கட்டமாக அமைவதால் பண நெருக்கடி என்றே அழைக்கப்படும் மற்றொரு வகை நெருக்கடியிலிருந்து அதனை வேறுபடுத்திப் பார்க்க வேண்டும். இவ்வகை நெருக்கடி தொழில், வாணிபத்தின் மீது சுற்றடியாக மட்டுமே பிரதிச் செயல் புரியும் விதத்தில் ஒரு சுயேச்சையான நிகழ்வாக அதனாலேயே தோற்றுவிக்கப்படக் கூடியதாகும். இந்த நெருக்கடிகளின் மையம் பணமாக்கப்பட்ட மூலதனத்தின் உருவில் காணக் கிடைக்கிறது; எனவே, அவற்றின் நேரடிச் செயற்களம் அந்த மூலதனத்தின் செயற்களமாகும்; அதாவது வங்கித் தொழில், பங்குச் சந்தை, நிதித் துறை ஆகியவையாகும்.

107 ''கடன்-செலாவணி அமைப்பிலிருந்து உலோகப் பண அமைப்புக்குத் திடீரெனத் திரும்புவது நடைமுறைப் பீதியுடன் கூட தத்துவத் திகிலையும் பரவச் செய்கிறது; எவரை முகவராய்க் கொண்டு சுற்றோட்டம் நடைபெறுகிறதோ அந்த வியாபாரிகள் தம் சொந்தப் பொருளாதார உறவுகளைச் சூழ்ந்துள்ள ஊடுருவ முடியாத மர்மத்தைக் கண்டு நடுங்குகின்றனர்.'' *(கார்ல் மார்க்ஸ், முன் வந்தது, பக்கம் 126).* ''ஏழைகளுக்கு வேலையில்லை; ஏனென்றால் அவர்களை வேலைக்கமர்த்த பணக்காரர்களிடம் பணமில்லை. ஆனால், உணவும் உடுக்கையும் அளிப்பதற்கு வேண்டிய நிலமும் உழைக்கும் கரங்களும் எப்போதும் போல் இப்போதும் உள்ளன....இவையே தேசத்தின் மெய்யான செல்வம், பணமன்று.'' *(ஜான் பெல்லர்ஸ்; ''தொழிற் கல்லூரி ஏற்படுத்துவதற்கான யோசனைகள்,'' லண்டன், 1696, பக்கம் 3.)*

நிகழ்வுகளின் போது பணத்தின் வடிவம் முக்கியமன்று. கொடுப்பு களைத் தங்கத்தின் வாயிலாக நிறைவேற்ற வேண்டியிருந்தாலும் சரி, வங்கி நோட்டுகள் போன்ற கடன்-செலாவணிப் பணத்தின் வாயிலாக நிறைவேற்ற வேண்டியிருந்தாலும் சரி, பணப் பஞ்சம் நீடிக்கிறது.[108]

குறிப்பிட்ட காலத்தில் ஓட்டத்திலுள்ள பணத்தின் மொத்தத் தொகையை இப்போது நோக்கினால், சுற்றோட்ட ஊடகம், கொடுப்புச் சாதனம் இவற்றின் ஓட்ட வேகம் குறிப்பிட்டதாயிருக்க, ஈடேற்றம் செய்ய வேண்டிய விலைகளின் மொத்தத்துடன் தீர்க்க வேண்டிய கொடுப்புகளின் மொத்தத்தைக் கூட்டி, ஒன்றை ஒன்று சரிக்கட்டிக் கொள்ளும் கொடுப்புகளைக் கழித்து, இறுதியாக, ஒரே நாணயம் சுற்றோட்டச் சாதனமாகவும் கொடுப்புச் சாதனமாகவும் மாறி மாறிப் பயன்படுகிற சுற்றுகளின் எண்ணிக்கையைக் கழித்து வரும் தொகைக்கு அது சமம். எனவே, விலைகளும், ஓட்ட வேகமும், கொடுப்புகளிலான சிக்கனத்தின் அளவும் குறிப்பிட்டதாய் இருக்கும் போதும் கூட, குறிப்பிட்ட காலத்தில், எடுத்துக்காட்டாக ஒரு நாளில் ஓட்டத்திலுள்ள பணத்தின் அளவும் சுற்றோட்டத்திலுள்ள சரக்குகளின் திரளும் இப்போது ஒத்தமைவதில்லை. சுற்றோட்டத்திலிருந்து நீண்ட கால முன்பே விலக்கியெடுக்கப்பட்ட சரக்குகளைக் குறிக்கிற பணம் தொடர்ந்து ஓட்டத்திலுள்ளது. சில சரக்குகளின் பணச் சமதை வருங்காலத்தில்தான் அரங்கத்தில் தோன்றும் என்றாலும் அச்சரக்குகள் சுற்றோட்டத்தில் உள்ளன. மேலும், ஒவ்வொரு நாளும் ஒப்பந்தம் செய்யப்படும் கடன்களும் அதே நாளில் தீர வேண்டிய கொடுப்புகளும் சிறிதும் பொதுவளவற்றவையாகும்.[109]

---

108 இப்படிப்பட்ட சந்தர்ப்பங்களை ''வாணிப நேயர்கள்'' எப்படிப் பயன் படுத்திக் கொள்கின்றனர் என்பதைப் பின்வருவது காட்டுகிறது: ''ஒரு சந்தர்ப்பத்தில் (1839) பேராசை கொண்ட பழைய வங்கிக்காரர் ஒருவர் (நகரத்தில்) தனது தனி அறையில் எதிரிலிருந்த சாய்வு மேசையின் மூடியைத் திறந்து, கட்டுக்கட்டான வங்கி நோட்டுகளைத் தனது நண்பர் ஒருவரிடம் காண்பித்து, £600,000 இருக்கிறது என்றும், பணத் தட்டுப்பாட்டை உண்டாக்குவதற்காக அவை வைக்கப்பட்டிருப்பதாக வும், அதே நாளில் மூன்று மணிக்குப் பின்னர் எல்லாம் வெளியில் விடப்படும் என்றும் பெரும் களிப்புடன் கூறினார்.'' (''பரிவர்த்தனைகளின் தத்துவம், 1844ஆம் வருட வங்கி சாசனச் சட்டம்.'' லண்டன், 1864, பக்கம் 81.) 1864 ஏப்ரல் 24 அன்று பெரிதும் அதிகாரபூர்வ அரசாங்க ஏடான அப்சர்வர் பத்திரிகையில் பின்வரும் பத்தி இடம் பெற்றிருந்தது: ''வங்கி நோட்டுகளின் பற்றாக்குறையை உண்டாக்கும் பொருட்டு கையாளப்பட்டுள்ள வழிகள் குறித்து மிக வினோதமான சில வதந்திகள் உலவு கின்றன....இப்படிப்பட்ட தந்திரமேதும் மேற்கொள்ளப்படுமென நினைப்பது சர்ச்சைக் குரியதாகத் தோன்றினாலும், இச்செய்தி மிகப் பரவலாய் அடிபட்டதால் உண்மையில் குறிப்பிடத்தக்கதாகிறது.''

109 எந்தக் குறிப்பிட்ட நாளிலும் செய்து கொள்ளப்படுகிற வாங்கல்கள் அல்லது ஒப்பந்தங்களின் அளவு அந்தக் குறிப்பிட்ட நாளில் மிதப்பிலுள்ள பணத்தின் அளவினை பாதிக்காது; ஆனால் மிகப் பெரும்பாலான சந்தர்ப்பங்களில் அதிகமாகவோ குறை வாகவோ பிற்பட்டு வரும் தேதிகளில் மிதப்பிலிருக்கக் கூடிய பண அளவின் மீதான

கொடுப்புச் சாதனம் என்ற பணத்தின் பணியிலிருந்து கடன்-செலாவணிப் பணம் நேரடியாகப் பிறக்கிறது. வாங்கப்பட்ட சரக்குகளுக்காகக் கொடுக்க வேண்டியுள்ள கடன்களின் சான்றிதழ்கள் அக்கடன்களை மற்றவர்களுக்கு மாற்றுவதற்காகச் சுற்றோட்டத்திலுள்ளன. மறு புறம், கடன்-செலாவணி அமைப்பு விரிவடையும் அதே அளவுக்கு கொடுப்புச் சாதனம் என்ற பணத்தின் பணியும் விரிவடைகிறது. அந்தப் பாத்திரத்தில் அது தனக்கேயுரித்தான பல்வேறு வடிவங்களை மேற்கொண்டு, பெரிய பெரிய வாணிபக் கொடுக்கல்வாங்கல்களின் துறையில் மும்முரமாகச் செயல்படுகிறது. இவ்வாறன்றி, தங்க, வெள்ளி நாணயங்கள் பெரும்பாலும் சில்லறை வர்த்தகத் துறைக்கு ஒதுக்கித் தள்ளப்படுகின்றன.[110]

---

பலதரப்பட்ட பண விடைகளாக மாற்றப்பட்டு விடும்....இன்று வழங்கப்படுகிற உண்டிகள் அல்லது ஆரம்பமாகிற கடன்கள் நாளை அல்லது மறுநாள் வழங்கப்படுகிற அல்லது ஆரம்பமாகிற உண்டிகள் அல்லது கடன்களை அளவிலோ தொகையிலோ அல்லது கால வரையிலோ எந்த விதத்திலும் ஒத்திருக்க வேண்டிய தேவையில்லை; அது மட்டுமல்ல, இன்றைய உண்டிகளிலும் கடன்களிலும் பல, தீர்க்கப்பட வேண்டிய நாள் வரும் போது, சிறிதும் வரையறையற்ற முந்தைய தேதிகள் பலவற்றிலிருந்தும் வந்த பொறுப்புகளின் திரளுடன் ஒன்றுசேர்கின்றன. 12, 6, 3 அல்லது 1 மாத கால உண்டிகள் பல சந்தர்ப்பங்களில் ஒன்றுசேர்ந்து குறிப்பிட்ட ஒரு நாளின் பொதுவான பொறுப்புகளை ஊதிப் பெருக்கச் செய்து விடுகின்றன....'' (''பணச் செலாவணித் தத்துவம் பற்றிய மறுபரிசீலனை: ஸ்காட்லாந்திய மக்களுக்குக் கடிதம் என்பதிலிருந்து.'' இங்கிலாந்தில் உள்ள ஒரு வங்கியார் எழுதியது. எடின்பரோ, 1845, பக்கம் 29, 30, பல இடங்கள்.)

110 உண்மையான வாணிப நடவடிக்கைகளில் ரொக்கப் பணம் எவ்வளவு குறைவாகத் தேவைப்படுகிறது என்பதற்கான ஓர் உதாரணமாக, மிகப் பெரிய லண்டன் நிறுமங்களில் ஒன்று தன் வருடாந்தர வரவுகள், கொடுப்புகள் பற்றிக் கொடுத்துள்ள அறிக்கையைக் கீழே தருகிறேன். பல மிலியன் பவுன் ஸ்டெர்லிங் அளவுக்கான 1856ஆம் ஆண்டுக் காலத்திய அதன் கொடுக்கல்வாங்கல்கள் இங்கு ஒரு மிலியன் விகிதத்துக்குக் குறைத்துத் தரப்படுகின்றன.

| வரவுகள் | |
|---|---|
| தேதிக்குப் பின்னர் பணம் கொடுக்க வேண்டிய வங்கியார் மற்றும் வர்த்தகர்களின் உண்டிகள் ........... | £533,596 |
| கேட்கும் போது பணம் கொடுக்க வேண்டிய வங்கியார் முதலானோர் பேரிலான காசோலைகள்:.... | 357,715 |
| நாட்டு நோட்டுகள்............. | 9,627 |
| இங்கிலாந்து வங்கியின் நோட்டுகள்..................... | 68,554 |
| தங்கம்............................. | 28,089 |
| வெள்ளி, செம்பு.............. | 1,486 |
| அஞ்சல் அலுவலக ஆணைகள் | 933 |
| மொத்தம்........ | £1,000,000 |

| கொடுப்புகள் | |
|---|---|
| தேதிக்குப் பின்னர் பணம் கொடுக்க வேண்டிய உண்டிகள் .................. | £302,674 |
| லண்டன் வங்கியார் பேரிலான காசோலைகள். | 663,672 |
| இங்கிலாந்து வங்கியின் நோட்டுகள் ............... | 22,743 |
| தங்கம்.......................... | 9,427 |
| வெள்ளி, செம்பு............ | 1,484 |
| மொத்தம்........ | £1,000,000 |

''வங்கிச் சட்டங்கள் பற்றிய பொறுக்குக் குழுவின் அறிக்கை, 1858 ஜூலை,'' பக்கம் lxxi.

சரக்கு உற்பத்தி போதுமான அளவுக்கு விரிவடையும் போது, பணம் சரக்குச் சுற்றோட்டத் துறைக்கப்பால் கொடுப்புச் சாதன மாகப் பயன்படத் தொடங்குகிறது. அது ஒப்பந்தங்கள் அனைத்தின் சர்வப்பொதுக் கருப்பொருளாய் அமையும் சரக்காகிறது.[111] நில வாரங்களும், வரிகளும், இன்னும் இது போன்ற கொடுப்புகளும் பொருள் வடிவக் கொடுப்புகள் என்ற நிலையிலிருந்து பண வடிவக் கொடுப்புகளாக மாற்றப்படுகின்றன. இந்த மாற்றம் எந்த அளவுக் குப் பொதுவான உற்பத்தி நிலைமைகளைச் சார்ந்துள்ளது என்பது, ஓர் உதாரணத்தை எடுத்துக் கொள்வதானால், எல்லாக் காணிக்கை களையும் பணமாகவே வசூல் செய்கிற முயற்சியில் ரோமானியப் பேரரசு இரு முறை தோல்வி அடைந்தது என்ற உண்மையால் காட்டப்படுகிறது. பதினான்காம் லூயீ ஆட்சியில் பிரெஞ்சு விவசாய மக்களின் சொல்லொணாத் துயர்நிலை—புவாகில்பேர், மார்ஷல் வொபான் முதலானோரால் வன்மையாகக் கண்டிக் கப்பட்ட இத்துயர்நிலை—வரிகளின் பெருஞ் சுமையால் மட்டுமே ஏற்பட்டதன்று; பொருள் வடிவ வரிகள் பண வடிவ வரிகளாக மாற்றப் பட்டதும் அதற்குக் காரணமாகும்.[112] மறு புறம், ஆசியாவில் அரசு வரிகள் பிரதானமாகப் பொருள் வடிவில் செலுத்தத்தக்க நிலவாரங் களால் ஆனவை என்ற உண்மை இயற்கை நிகழ்வுகளின் ஒழுங் குடன் திரும்பத் திரும்ப வருகிற உற்பத்தி நிலைமைகளைச் சார்ந்த தாகும். இந்தக் கொடுப்பு முறை புராதன உற்பத்தி வடிவம் மாறாது நீடிக்க உதவக் கூடியதாகும். ஆட்டமன் சாம்ராஜ்யம் சிதையாமல் பாதுகாக்கப்பட்டதன் இரகசியங்களில் இதுவும் ஒன்று. ஜப்பானில் ஐரோப்பியர்களால் வலுவந்தமாய்ப் புகுத்தப்பட்ட வெளிநாட்டு வர்த்தகம் பொருள் வடிவ நிலவாரங்களுக்குப் பதில் பண வடிவ நிலவாரங்களைக் கொண்டு வருவதற்கு இட்டுச் செல்லுமானால், அந்த நாட்டில் நடைபெறும் இனமாதிரியான விவசாயத்தின் கதை முடிந்து விடும். அந்த விவசாயம் நடக்கிற குறுகலான பொருளா தார நிலைமைகள் ஒழிந்து விடும்.

ஒவ்வொரு நாட்டிலும் ஆண்டின் குறிப்பிட்ட சில நாட்கள்

---

111 "வர்த்தகத்தின் போக்கு, இவ்விதம் சரக்குகளுக்காகச் சரக்குகளைப் பரிவர்த் தனை செய்து கொள்ளுதல், அல்லது ஒப்படைத்தலும் எடுத்துக் கொள்ளுதலும் என்பதிலிருந்து விற்பதும் செலுத்துவதும் என்பதாக மாற்றம் அடைவதால், எல்லாப் பேரங்களும்...இப்போது பணத்திலான ஒரு விலையின் அடிப்படையில் கூறப்படுகின்றன." ("பொதுக் கடன் பற்றிய கட்டுரை," 3ஆம் பதிப்பு, லண்டன், *1710, பக்கம் 8.)*

112 "பணம்...சகலத்தையும் அழிப்பவனாகியுள்ளது." நிதி என்பது "வடி கலத்தைப் போன்றது; இந்த வடிகலத்தில் ஏராளமான பண்டங்களும் சரக்குகளும் வடிகட்டப்பட்டு, அந்தப் புனிதங் கெட்ட சாரம் எடுக்கப்பட்டுள்ளது." "பணம் மனித குலத்தின் மீதே போர்ப் பிரகடனம் செய்கிறது." (புவாகில்பேர்: ""Dissertation sur la nature des richesses, de l'argent et des tributs." Edit. Daire. Economistes financiers. *(பாரிஸ், 1843, பாகம் i., பக்கம் 413, 419, 417.)*

திரும்பத் திரும்ப வரும் பல்வேறு பெரிய கொடுப்புகளுக்கான அங்கீகரிக்கப்பட்ட தீர்வு நாட்களாய் வழக்கத்திற்கு வருகின்றன. இந்தத் தேதிகள், மறுவுற்பத்தியின் [reproduction] சக்கரத்தில் வரும் ஏனைய சுழற்சிகள் அன்னியில், பருவ காலங்களுடன் நெருக்க மாகத் தொடர்புள்ள நிலைமைகளைப் பொறுத்தவை ஆகும். சரக்குச் சுற்றோட்டத்துடன் நேரடித் தொடர்பேதும் இல்லாத கொடுப்புகளாகிய வரிகள், நிலவாடகைகள் போன்றவற்றுக்கான தேதிகளையும் அவை ஒழுங்கு செய்கின்றன. நாடெங்கிலும் அந்தத் தேதிகளில் தீர வேண்டிய கொடுப்புகளைத் தீர்ப்பதற்குத் தேவை யான பணத்தின் அளவு, கொடுப்புச் சாதனப் பொருளாதாரத்தில் மேலோட்டமானவையே என்றாலும் காலவட்ட முறையிலான குழப் பங்களைத் தோற்றுவிக்கிறது.[113]

கொடுப்புச் சாதனத்தின் ஓட்ட வேகம் பற்றிய விதியிலிருந்து பெறப்படுவது என்னவென்றால், தோற்றுவாய் எதுவானாலும், காலவட்டக் கொடுப்புகள் அனைத்துக்கும் தேவைப்படுகிற கொடுப்புச் சாதனத்தின் அளவு அவற்றினது காலங்களின் அளவுக்கு எதிர்[114] விகிதத்தில் உள்ளது.[115]

பணம் ஒரு கொடுப்புச் சாதனமாக வளர்ச்சியடைவது, கொடுபட வேண்டியுள்ள தொகைகளின் கொடுப்புக்காக நிர்ண

---

[113] 1826 காமன்ஸ் சபைக் குழுவின் முன்னர் திரு கிரெய்க் கூறுகிறார்: "1824 வெள்ளை ஞாயிறு வாரத்தின் போது, எடின்பரோ வங்கிகளின் பேரிலான நோட்டுகளுக்கு கிராக்கி அதிகரித்து விட்டது. பதினொரு மணிக்குள் எல்லாம் தீர்ந்து போயின. ஒரு நோட்டு கூட மிஞ்சவில்லை. நோட்டுகளைக் கடன் வாங்குவதற்காக வெவ்வேறு வங்கிகளுக்கும் ஆள் அனுப்பினார்கள்; ஆனால் கிடைக்கவில்லை. பல கொடுக்கல்வாங்கல்களை துண்டுச் சீட்டுகளாலேயே சமாளித்தார்கள். இருப்பினும் மூன்று மணிக்குள், நோட்டுகள் முழுவதும், அவை எந்த வங்கிகளிலிருந்து வெளியிடப் பட்டனவோ அந்த வங்கிகளுக்கே திரும்பி வந்து விட்டன! வெறும் கைமாற்றமே அது." ஸ்காட்லாந்தில் வங்கி நோட்டுகளின் திறனுள்ள சராசரிச் சுற்றோட்டம் மூன்று மிலியன் ஸ்டெர்லிங்குக்கும் குறைவானதே என்றாலும், ஆண்டில் சிற்சில சம்பள நாட்களில் மொத்தத்தில் சுமார் £7,000,000க்கு குறையாமல் வங்கியாரிடமுள்ள நோட்டுகளில் ஒவ்வொன்றும் செயல்பட வேண்டியதாகிறது. இந்தச் சந்தர்ப்பங்களில் இந்த நோட்டுகள் குறிப்பிட்ட ஒரே ஒரு பணியைச் செய்ய வேண்டியுள்ளது; அவை அதைச் செய்ததும், தம்மை வெளியிட்ட வங்கிகளுக்கே திரும்பிப் போய்ச் சேருகின்றன. (பார்க்கவும்: ஜான் ஃபுல்லர்ட்டன், "பணச் செலாவணிகளை முறைப்படுத்தல்," லண்டன், 1845, பக்கம் 86, குறிப்பு.) ஃபுல்லர்ட்டனின் நூல் எழுதப்பட்ட காலத்தில் ஸ்காட்லாந்தில் சேமிப்புகளைத் திரும்பப் பெறுவதற்குப் பயன்படுத்தப்பட்டவை நோட்டுகளே, காசோலைகள் அல்ல என்பதை விளக்கத்தின் பொருட்டு இங்கே குறிப்பிட வேண்டும்.

[114] கைத்தவறுதலாகவே இருக்க வேண்டும். நூலாசிரியர் நேர் என்பதற்கு பதில் எதிர் என்று எழுதி விட்டார். — ருஷ்யப் பதிப்பில் மார்க்சிய-லெனினியக் கழகத்தின் குறிப்பு.

[115] "ஆண்டுக்கு 40 மிலியன் திரட்டப் பெறச் சந்தர்ப்பம் இருக்குமானால், அதே 6 மிலியன் (தங்கம்)...வர்த்தகத்துக்கு அவசியமாகிற சுழற்சிகளுக்கும் சுற்றோட்டங் களுக்கும் போதுமா?" என்ற கேள்விக்கு, பெட்டி வழக்கமாய் அவருக்கேயுரிய தேர்ந்த முறையில் பதில் சொல்கிறார், "ஆம் என்பதே எனது பதில்: ஏனெனில் செலவு 40 மிலியனாக இருக்க, ஒவ்வொரு சனிக் கிழமையும் பெறுவோரும்,

யிக்கப்பட்ட தேதிகளில் பணம் திரட்டுவதை அவசியமாககுகிறது. சேர்த்து வைத்தல் செல்வத்தைப் பெறுவதற்கான ஒரு முறையாக இருப்பது குடியியல் சமுதாயத்தின் முன்னேற்றத்தை ஒட்டி மறைந்து போகிற அதே போது கொடுப்புச் சாதனங்களது சேம வைப்பு களின் [reserves] ஆக்கம் அந்த முன்னேற்றத்துடன் சேர்ந்து வளர்கிறது.

### இ. உலகப் பொதுப் பணம்

பணம் உள்நாட்டுச் சுற்றோட்டத்தை விட்டு வெளியேறும் போது, அது அங்கே தரிக்கிற—விலைகளின் நியமம், நாணயம், அடையாளங்கள், மதிப்பின் சின்னம் என்ற—உள்நாட்டுக் கோலங் களைக் களைந்தெறிந்து விட்டுத் தன் சுயமான பொற்பாள வடிவத் துக்குத் திரும்புகிறது. உலகச் சந்தைகளிடையிலான வர்த்தகத்தில் சரக்குகளின் மதிப்பு உலக அளவில் ஒப்புதல் பெறும் விதத்தில் தெரிவிப்பு பெறுகிறது. எனவே, இந்த நேர்வுகளில் அவற்றின் சுயேச்சையான மதிப்பு வடிவமும் உலகப் பொதுப் பணத்தின் [universal money] உருவில் அவற்றை எதிர்கொள்கிறது. எந்தச் சரக்கின் தசையுருவம் ஸ்தூலமற்ற மனித உழைப்பின் நேரடிச் சமுதாய அவதாரமாகவும் திகழ்கிறதோ அந்தச் சரக்கின் தன்மையை பணம் உலகச் சந்தைகளில்தான் முழு அளவுக்கு அடைகிறது. இங்கே மெய்ந்நடப்பிலான அதன் உருவம் அதன் கருத்துருவிற்கு முற்றிலும் பொருத்தமுடையதாகிறது.

உள்நாட்டுச் சுற்றோட்டத்திற்குள், மதிப்பளவையாகப் பயன் படுவதன் மூலம் பணமாகிற சரக்கு ஒன்று மட்டுமே இருக்க முடியும். உலகச் சந்தைகளில் ஓர் இரட்டை மதிப்பளவை, தங்கமும் வெள்ளியுமான மதிப்பளவை கோலோச்சுகிறது.[116]

---

கொடுப்போருமான ஏழைக் கைவினைஞர்கள் மத்தியிலும் தொழிலாளர்கள் மத்தியிலும் நிகழ்வது போலக் குறுகிய வட்டங்களில், அதாவது வாராந்தரமாக சுழற்சிகள் இருந்தால், 1 மிலியன் பணத்தில் 40/52 பங்கே இந்த நோக்கங்களை நிறைவேற்றப் போதுமானதாய் இருக்கும். ஆனால் நிலவாரம் கொடுப்பதற்கும் வரி வசூலிப்பதற்கு மான நம் வழக்கத்தின் படி வட்டங்கள் காலாண்டளவிலிருந்தால், 10 மிலியன் தேவைப்படும். ஆதலால், பொதுவான கொடுப்புகள் ஒரு வாரத்துக்கும் 13 வாரத் துக்கும் இடையிலான ஒரு கலப்பு வட்டமாய் இருப்பதாக வைத்துக் கொண்டால், 10 மிலியனை 40/52 மிலியனோடு சேர்த்துக் கொள்ளுங்கள், இதில் பாதி 5½ மிலியன். ஆக, நம்மிடம் 5½ மிலியன் இருந்தால் போதும்.'' (வில்லியம் பெட்டி: ''அயர் லாந்தின் அரசியல் பகுப்பாய்வு,'' 1672, பதிப்பு: லண்டன், 1691, பக்கம் 13,14.)

[116] எனவே, ஒரு நாட்டின் வங்கிகள், உள்நாட்டில் சுற்றோட்டத்திலுள்ள உயர் நிலை உலோகம் ஒன்றின் சேமவைப்புகளை மட்டுமே ஏற்படுத்துமென நியமம் செய்யும் எந்தச் சட்டமும் அபத்தமானது. இவ்வாறு, இங்கிலாந்து வங்கி தானே உண்டாக்கிக் கொண்ட ''இனிய இன்னல்கள்'' பிரசித்தமானவை. தங்கம், வெள்ளி இவற்றின் ஒப்பீட்டு மதிப்பிலான மாற்றங்களின் வரலாற்றிலேற்பட்ட மாபெரும் சகாப்தங்கள் என்பது குறித்து, பார்க்கவும்: கார்ல் மார்க்ஸ், முன் வந்தது, பக்கம் 136 முதலானவை.

உலகப் பொதுக் கொடுப்புச் சாதனமாகவும், உலகப் பொது வாங்கற் சாதனமாகவும், செல்வமனைத்தின் உலகப் பொது அங்கீகாரம் பெற்ற உருவாகவும் உலகப் பணம் பயன்படுகிறது. சர்வதேச நிலுவைகளைத் தீர்த்து வைப்பதில் ஒரு கொடுப்புச்

---

சர் ராபர்ட் பீல் அவரது 1844ஆம் ஆண்டு வங்கிச் சட்டத்தின் வாயிலாக, வெள்ளிச் சேமவைப்பு ஒரு போதும் தங்கச் சேமவைப்பைக் காட்டிலும் கால் பங்குக்கு மேல் கூடுதலாகி விடக் கூடாது என்ற நிபந்தனையின் பேரில், வெள்ளிப் பாளத்திற்கு [silver bullion] ஈடாக நோட்டுகள் வெளியிடுவதற்கு இங்கிலாந்து வங்கியை அனுமதிப்பதன் மூலம் இன்னலைக் கடக்க முயன்றார். வெள்ளியின் மதிப்பு இதன் பொருட்டு லண்டன் சந்தையிலான அதன் விலையில் கணக்கிடப்பட்டது. [4ஆம் ஜெர்மன் பதிப்பில் எங்கெல்ஸ் குறிப்பு. — மீண்டும் ஒருமுறை தங்கம், வெள்ளியின் ஒப்பீட்டு மதிப்பில் கடுமையான மாற்றம் ஏற்படும் காலத்தை வந்தடைந்திருக்கிறோம். சுமார் 25 ஆண்டுகளுக்கு முன்பு, தங்கம், வெள்ளியின் ஒப்பீட்டு மதிப்பு 15½:1 என்ற விகிதத்தில் இருந்தது; இப்போது அது ஏறக்குறைய 22:1 ஆகி விட்டது. தங்கத்தோடு ஒப்பிடுமிடத்து வெள்ளி இன்னமும் இடைவிடாமல் வீழ்ந்து கொண்டிருக்கிறது. சாராம்சத்தில் இது இவ்விரு உலோகங்களது உற்பத்தி முறையில் ஏற்பட்ட புரட்சியின் விளைவாகும். பொன் விளையும் பாறைகள் இயற்கைச் சூழலுக்கு ஆட்படுவதால் விளையும் தங்கமடங்கிய வண்டல் படிவுகளிலிருந்து கழுவி எடுப்பதே முன்பெல்லாம் தங்க உற்பத்திக்குப் பெரும்பாலும் ஒரே வழிமுறையாய் இருந்தது. இப்போது இந்த முறை போதுமானதாயில்லை, இது பின்னுக்குத் தள்ளப்பட்டு விட்டது. பழங்காலத்தினர் நன்கறிந்த வழிமுறை என்ற போதிலும், முன்னர் இரண்டாந்தர முக்கியத்துவமுடையதாகவேயிருந்த பிரித்தெடுக்கும் வழிமுறையான குவார்ட்ஸ் நாளங்களைப் பதனிடும் முறை முன்னுக்கு வந்துள்ளது (தியோதரஸ், III., 12-14) (Diodor's v. Sicilien "Historische Bibliothek,⅓ ⅓ புத்தகம் III., 12-14. ஸ்டட்கார்ட், 1828, பக்கம் 258-261). மேலும், பெருமளவிலான புதிய வெள்ளிப் படிவுகள் வட அமெரிக்காவில் ராக்கி மலைகளின் மேற்குப் பகுதியில் கண்டுபிடிக்கப்பட்டதோடு இந்த வெள்ளிச் சுரங்கங்களும் மெக்சிகோவின் வெள்ளிச் சுரங்கங்களும் இருப்புப் பாதைகள் போடப்பட்டதால் மெய்யாகவே திறக்கப்படலாயின; நவீன இயந்திர சாதனங்களையும் எரிபொருளையும் அனுப்புவதற்கும், அதன் விளைவாகக் குறைந்த செலவில் பெரிய அளவில் வெள்ளி உற்பத்தி ஆவதற்கும் இருப்புப் பாதைகள் வழி செய்தன. ஆயின், இவ்விரு உலோகங்களும் குவார்ட்ஸ் நாளங்களில் இடம் பெறுகிற விதத்தில் பெரும் வேறுபாடு உள்ளது. தங்கம் பெரும்பாலும் தூய நிலையில், ஆனால் குவார்ட்ஸ் முழுவதிலும் மிகச் சிறு அளவுகளில் வியாபித்திருப்பது. எனவே, நாளத் திரள் முழுவதும் தூளாக்கப்பட்டு, தங்கம் கழுவி எடுக்கப்பட வேண்டும், அல்லது பாதரசத்தைக் கொண்டு பிரித்தெடுக்கப்பட வேண்டும். பல நேரங்களில் 1,000,000 கிராம் குவார்ட்ஸில் 1-3 கிராம் தங்கம் கிடைக்கிறது. 30-60 கிராம் தங்கம் கிடைப்பது மிகவும் அபூர்வம். வெள்ளி தூய நிலையில் கிடைப்பது அரிதிலும் அரிது. ஆயினும் ஒப்பளவில் சுலபமாக நாளத்திலிருந்து பிரித்தெடுக்கப்படும் தனி வகைக் குவார்ட்ஸில் அது கிடைக்கிறது; அதில் பெரும்பாலும் 40-90% வெள்ளி அடங்கியுள்ளது; அல்லது தாமே வேலைக்கு லாயக்குள்ளவையான செம்பு, ஈயம் போன்ற கனிமங்களில் சிறு அளவில் கிடைக்கிறது. இந்தக் கனிமங்களைத் தோண்டியெடுப்பது எப்படியும் பயனுடையதே. வெள்ளி உற்பத்திக்காக செலவிடப்படும் உழைப்பு திட்டவட்டமாகக் குறைந்திருப்பதும், தங்க உற்பத்திக்காகச் செலவிடப்படும் உழைப்பு ஓரளவு அதிகரித்துக் கொண்டிருப்பதும் இதிலிருந்தே தெளிவாகிறது; இதனால் வெள்ளியின் மதிப்பு வீழ்வது இயல்பே. இன்றும் கூட, வெள்ளியின் விலை செயற்கையான வழிகளில் தடுக்கப்பட்டிரா விட்டால், இந்த மதிப்பு வீழ்ச்சி இன்னும் பெரிய விலை வீழ்ச்சியில் வெளிப்படும். ஆனால் அமெரிக்காவின் வளமிக்க வெள்ளிப் படிவுகள் இது வரை மிகச் சொற்பமாகவே பயன்படுத்தப்பட்டுள்ளன; இவ்வாறு, ஓரளவு நீண்டகாலத்துக்கு இந்த உலோகத்தின் மதிப்பு வீழ்ந்து கொண்டே போவதற்கு வாய்ப்புகள் உள்ளன. பொது உபயோகப் பண்டங்களுக்கும் சொகுசுப் பண்டங்களுக்குமான வெள்ளியின் தேவை

சாதனம் என்ற பணி அதன் பிரதானப் பணியாகும். எனவேதான் வர்த்தக நிலுவையே வணிக ஊக்கவாதிகளின் [mercantilists] உயிர் மூச்சாய் இருக்கிறது.[117] வெவ்வேறு நாடுகளிடையிலான பண்டப் பரிமாற்றத்தில் வழக்கமான சமநிலை திடுமெனக் கெடுகிற காலங் களில், பிரதானமாகவும் அவசியமாகவும் தங்கமும் வெள்ளியும் சர்வதேச வாங்கற் சாதனமாகப் பயன்படுகின்றன. கடைசியாக, வாங்குவதோ செலுத்துவதோ அல்லாமல் ஒரு நாட்டிலிருந்து இன்னொரு நாட்டுக்கு செல்வத்தை மாற்ற வேண்டி வரும் போதெல்லாம், சந்தைகளில் ஏற்படும் விசேஷ சந்தர்ப்பச் சேர்க்கைகளாலோ அல்லது இம்மாற்றலுக்கான நோக்கத்தாலோ சரக்கு வடிவில் இம்மாற்றல் நடப்பது சாத்தியமற்றதாகும் போதெல் லாம், தங்கமும் வெள்ளியும் சமுதாயச் செல்வத்தின் உலகப் பொது

---

ஒப்பளவில் குறைந்திருப்பது, அதாவது அதற்குப் பதில் தகட்டுப் பொதிவுச் சாமான் களும், அலுமினியமும் பிறவும் புழக்கத்துக்கு வந்திருப்பது இங்கே இன்னும் பெரிய பங்கினைச் செலுத்தும் காரணியாகும். கட்டாய சர்வதேச விலை நிர்ணயம் வெள்ளியை மீண்டும் 1:15½ என்ற பழைய மதிப்பு விகிதத்துக்கு உயர்த்தும் என்ற ஈருலோகவாதக் கருத்து [bimetallist idea] எந்த அளவுக்குக் கற்பனாவாதமாகும் என்பதை இதிலிருந்து அறியலாம். உலகின் சந்தைகளில் வெள்ளி அதன் பணப் பணியை மேலும் மேலும் பறிகொடுக்கும் என்று எதிர்பார்ப்பதற்கே அதிக இடமுள்ளது.]

117 உபரி வர்த்தக நிலுவைகளைத் தங்கத்திலும் வெள்ளியிலும் தீர்ப்பதைச் சர்வதேச வர்த்தகத்தின் நோக்கமாகக் கருதிய முறையாகிய வணிக ஊக்க முறையின் எதிராளிகளும் கூட உலகப் பணத்தின் பணிகள் குறித்து முற்றிலும் தவறான கருத்தினைக் கொண்டுள்ளனர். சுற்றோட்ட ஊடகத்தின் அளவை ஒழுங்கு செய்கிற விதிகள் பற்றிய அவர்களது தவறான கருத்தமைவு உயர்நிலை உலோகங்களின் சர்வதேச நடமாட்டம் பற்றிய அதே அளவு தவறான அவர்களது கருத்தமைவில் எவ்வாறு பிரதிபலிக்கிறது என்பதை ரிக்கார்டோவின் உதாரணத்தைக் கொண்டு காட்டியிருக் கிறேன். (முன் வந்தது, பக்கம் 150 முதலானவை.) "பாதக வர்த்தக நிலுவை தேவைக்கதிகமான பணச் செலாவணியிலிருந்து அல்லாமல் வேறு விதத்தில் ஒரு போதும் ஏற்படுவதில்லை...நாணயத்தின் ஏற்றுமதிக்குக் காரணமாவது அதன் மலிவுத் தன்மையாகும்; அது பாதக நிலுவையின் விளைவல்ல, காரணமே" என்ற அவரது தவறான சூத்திரம் ஏற்கனவே பார்பானிடத்தும் காணப்பட்டதுதான்: "வர்த்தக நிலுவை என்பது, அப்படி ஒன்று இருந்தால், ஒரு நாட்டிலிருந்து பணம் வெளியே செல் வதற்கான காரணமன்று. அது ஒவ்வொரு நாட்டிலும் பொற்பாளத்தினது மதிப்பின் வேறுபாட்டிலிருந்து எழுவதாகும்." (நி. பார்பான், முன் வந்தது, பக்கம் 59, 60.) "அரசியல் பொருளாதார இலக்கியம், ஒரு வகைப்பிரிவுள்ள பட்டியல், லண்டன் 1845" என்பதில் மக்குல்லோஹ் இந்த முன்னுரைத்தலுக்காக பார்பானைப் புகழ்கிறார்; ஆனால் "செலாவணிக் கோட்பாட்டுக்கு" அடிப்படையாயுள்ள அபத்தமான அனு மானத்துக்கு பார்பான் போர்த்தும் வெகுளித்தனமான வடிவங்களைக் கண்டு கொள்ளாது விடுகிறார், சாதுரியமாக. அந்தப் பட்டி நூலில் உண்மையான விமர்சன மில்லை, நேர்மையும் கூட இல்லை. இந்த நிலைமை பணத் தத்துவத்தின் வரலாற்றுக் கென ஒதுக்கப்பட்டுள்ள பிரிவுகளில் உச்சமடைகிறது. நூலின் இப்பகுதியில் ஓவர்ஸ்டோன் பிரபுவை "facile princeps argentariorum"* என்று மக்குல்லோஹ் முகத்துதி செய்வதே இதற்குக் காரணம்.

---

* "தன வணிகர்களின் முடிசூடா மன்னன்."

அங்கீகாரம் பெற்ற உருவாகப் பயன்படுகின்றன.[118]

ஒவ்வொரு நாட்டுக்கும் அதன் உள்நாட்டுச் சுற்றோட்டத்துக்காகப் பணச் சேமவைப்பு ஒன்று தேவைப்படுவது போலவே, உலகச் சந்தைகளில் வெளிச் சுற்றோட்டத்துக்காகவும் பணச் சேமவைப்பு ஒன்று தேவைப்படுகிறது. எனவே, பணச் சேர்ப்புகளின் பணிகள் உள்நாட்டுச் சுற்றோட்டம், உள்நாட்டுக் கொடுப்புகள் ஆகியவற்றின் ஊடகம் என்ற பணப் பணியிலிருந்து ஓரளவும், பணத்தின் உலகப் பணப் பணியிலிருந்து ஓரளவும் எழுகின்றன.[119] பின் சொன்ன இந்தப் பணிக்கு உள்ளபடியே தங்கமும் வெள்ளியுமான அசல் பணச் சரக்கு அவசியமாகும். அந்தக் காரணத்தால், சர் ஜேம்ஸ் ஸ்டுவர்ட், தங்கத்தையும் வெள்ளியையும் முற்றிலும் உள்நாட்டளவிலான அவற்றின் பதிலிகளிலிருந்து வேறுபடுத்திக் காட்டும் பொருட்டு, அவற்றை ''உலகப் பணம்'' என்று அழைக்கிறார்.

தங்கமும் வெள்ளியுமான அருவிகளின் நீரோட்டம் இரு வகைப்பட்டதாகும். ஒரு புறம், அது உற்பத்தியாகும் இடங்களிலிருந்து உலகின் எல்லாச் சந்தைகளுக்கும் பாய்ந்து பரவுகிறது; இவ்விதம் அது பல்வேறு அளவுகளில் வெவ்வேறு தேசச் சுற்றோட்டத் துறைகளால் உட்கிரகிக்கப்படுகிறது; செலாவணியின் கால் வாய்களை நிரப்புகிறது; தேய்ந்து போன தங்க, வெள்ளி நாணயங்களை நீக்கி விட்டுப் புழக்கத்துக்கு வருகிறது; சொகுசுப் பண்டங்களுக்கு [articles of luxury] உலோகமாகப் பயன்படுகிறது. பணச் சேர்ப்புகளாக சலனமற்று ஒய்ந்து போகிறது.[120] இவ்வகை

118 உதாரணமாக, போர்களைத் தொடர்ந்து நடத்துவதற்கான, அல்லது வங்கிகள் ரொக்கக் கொடுப்புகளை மீண்டும் தொடங்குவதை சாத்தியமாக்குவதற்கான பணக் கடன்களாகிய மானியங்களில் வேண்டப்படுவது மதிப்பின் பண வடிவமே, வேறெந்த வடிவமும் அன்று.

119 ''நாணயம் செலுத்தும் நாடுகளில், பொதுவான சுற்றோட்டத்திலிருந்து உருப்படியான உதவியேதுமின்றி அவசியமான சர்வதேச சரிக்கட்டல் வேலை ஒவ்வொன்றையும் செய்யும் ஆற்றல் பணச் சேர்ப்புகளின் இயங்கமைப்பிற்கு உண்டு. பிரான்ஸ் ஒரு நாசகரமான அன்னியப் படையெடுப்பின் அதிர்ச்சியிலிருந்து அப்போதுதான் மீண்டு வந்து கொண்டிருந்ததென்ற போதிலும், நேச நாடுகளுக்குக் கொடுக்குமாறு நிர்ப்பந்திக்கப்பட்ட காணிக்கையான சுமார் 20 மிலியனை, அத்தொகையிலும் ஒரு கணிசமான பகுதியை நாணயமாக — தன் உள்நாட்டுச் செலாவணியில் புலனாகக் கூடிய சுருக்கம் அல்லது குழப்பம் ஏதுமின்றி, அல்லது அதன் பரிவர்த்தனைகளில் அச்சத்துக்குரிய ஏற்ற இறக்கம்கூட ஏதுமின்றி — 27 மாத காலத்துக்குள் அந்நாடு இலகுவாய் செலுத்தி முடித்தது என்பதைக் காட்டிலும் இதற்கு முடிவான சான்று தேவையில்லை என்பேன்.'' (ஃபுல்லர்ட்டன், முன் வந்தது, பக்கம் 141.) [4ஆவது ஜெர்மன் பதிப்பில் எங்கெல்ஸ் குறிப்பு. — இதே பிரான்ஸ் 1871-73இல் இதைப் போல் 10 மடங்குக்கும் அதிகமான வலுவந்தக் காணிக்கையை, இத்தொகையிலும் கணிசமான பகுதியை நாணயமாக, 30 மாதங்களுக்குள் இலகுவாய் செலுத்தித் தீர்க்கும் சக்தியுடையதாய் இருந்தது என்பது இன்னும் கூட எடுப்பான உதாரணமாகும்.]

120 ''நாடுகளுக்குள்ள பணத் தேவைக்கேற்ப பணம் நாடுகளிடையே வினியோகமாகிறது....ஏனெனில் எப்போதுமே பணம் உற்பத்திப் பண்டங்களால் கவரப்படுகிறது.'' (லெ திரொஸ்னே, முன் வந்தது, பக்கம் 916.) ''தொடர்ந்து தங்கமும்

ஓட்டத்தைத் தொடங்கும் நாடுகள் சரக்குகளில் ஈடேற்றம் பெற்றுள்ள தமது உழைப்பை, தங்கமும், வெள்ளியும் உற்பத்தியாகிற நாடுகளின் உயர்நிலை உலோகங்களில் உருக்கொண்ட உழைப்புக்காகப் பரிவர்த்தனை செய்து கொள்கின்றன. மறு புறம், வெவ்வேறு தேசச் சுற்றோட்டத் துறைகளுக்கிடையே தங்கமும் வெள்ளியும் தொடர்ந்து பின்னோக்கியும் முன்னோக்கியும் ஓடுகின்றன. இவ்வகை ஓட்டத்தின் இயக்கம் பரிவர்த்தனைப் போக்கிலான ஓயாத ஏற்ற இறக்கங்களைச் சார்ந்ததாகும்.[121]

குறிப்பிட்ட அளவுக்கு முதலாளித்துவப் பொருளுற்பத்தி வடிவம் வளர்ந்துள்ள நாடுகள் வங்கிகளின் காப்பறைகளில் குவிக்கப்பட்டுள்ள சேர்ப்புகளை, அவற்றின் விசேஷப் பணிகளை முறையாக ஆற்றுவதற்குத் தேவைப்படுகிற குறைந்த பட்ச அளவுக்கு மேற்படாத படி வரம்பிடுகின்றன.[122] இந்தச் சேர்ப்புகள் குறிப்பிடத் தக்க அளவுக்கு அவற்றின் சராசரி மட்டத்துக்கு மேல் இருக்கும் போதெல்லாம், இந்த நிலைமை சில விதிவிலக்குகளைத் தவிர்த்து சரக்குகளின் சுற்றோட்டத்திலான தேக்கத்தின், அவற்றினது உருமாற்றங்களின் சீரான ஓட்டத்திலான இடைமறிப்பின் அறிகுறியாகும்.[123]

---

வெள்ளியும் கிடைக்கிற சுரங்கங்கள் ஒவ்வொரு நாட்டுக்கும் இவ்வாறு தேவைப்படக் கூடிய ஒரு நிலுவையை வழங்குவதற்குப் போதுமான அளவில் அவற்றைக் கிடைக்கச் செய்கின்றன.'' (ஜே. வாண்டர்லிண்ட், முன் வந்தது, பக்கம் 40.)

121 ''பரிவர்த்தனைகள் ஒவ்வொரு வாரமும் உயர்கின்றன, வீழ்கின்றன; ஆண்டின் குறிப்பிட்ட சில நேரங்களில் ஒரு நாட்டுக்கு எதிராக உயர்கின்றன; வேறு சில நேரங்களில் அதற்கு ஆதரவாக அதேபோல் உயர்கின்றன.'' (நி. பார்பான், முன் வந்தது, பக்கம் 39.)

122 தங்கமும் வெள்ளியும் வங்கி நோட்டுகளை மாற்றுவதற்கான நிதியமாகவும் பயன்பட வேண்டியிருக்கும் போதெல்லாம், இந்தப் பல்வேறு பணிகள் ஒன்றுடனொன்று அபாயகரமான விதத்தில் மோதிக் கொள்ளக் கூடியவையாக உள்ளன.

123 ''உள்நாட்டு வர்த்தகத்துக்கு அவசியமாய்த் தேவைப்படுவதற்கதிகமாக இருக்கக் கூடிய பணம் முடங்கிய இருப்பாகும்...இதை வைத்துள்ள நாட்டுக்கு இதனால் இலாபமில்லை. அது வர்த்தகத்தில் இடம் விட்டு இடம் அனுப்பப்படுகிறது, இறக்குமதியும் செய்யப்படுகிறது.'' (ஜான் பெல்லர்ஸ், ''கட்டுரைகள்,'' பக்கம் 13.) ''அதிகப்படியான நாணயம் நம்மிடமிருந்தால் என்ன செய்வது? மிகக் கனமானவற்றை உருக்கி பளபளக்கும் தங்க அல்லது வெள்ளித் தட்டு, பாத்திரங்கள், அல்லது கருவிகளாக மாற்றலாம்; தேவைப்படுகிற அல்லது வேண்டப்படுகிற இடங்களுக்கு அதை சரக்காகவும் அனுப்பி வைக்கலாம்; வட்டி அதிகமாயிருக்கும் இடங்களில் வட்டிக்கும் விடலாம்.'' (வி. பெட்டி: ''Quantulumcunque,'' பக்கம் 39.) ''பணம் சமுதாயமென்னும் உடலுக்குக் கொழுப்பு போன்றதாகும்; அளவுமீறி அதிகரிக்கும் போது அது உடலின் சுறுசுறுப்புக்குத் தடையாகிறது; அளவுமீறிக் குன்றும் போது உடலைப் பிணிக்குள்ளாக்குகிறது. ....கொழுப்பு தசைகளின் இயக்கத்துக்கு மசையாகப் பயன்படுகிறது; ஆகாரப் பற்றாக்குறையை ஈடு செய்கிறது. குழி விழுந்த இடங்களை சரி செய்கிறது; உடலுக்கு எழிலூட்டுகிறது. அதேபோல், பணமும் நாட்டின் செயலைத் துரிதப்படுத்துகிறது. உள்நாட்டில் பற்றாக்குறையுள்ள காலத்தில் வெளிநாட்டிலிருந்து உணவு கிடைக்கச் செய்கிறது, கணக்குகளை சரிக்கட்டுகிறது...அனைத்தையும், குறிப்பாக, ஏராளமாய்ப் பணம் வைத்திருக்கும் குறிப்பிட்ட ஆட்களை எழில் பெறச் செய்கிறது.'' (வி. பெட்டி, ''அயர்லாந்தின் அரசியல் பகுப்பாய்வு,'' பக்கம் 14.)

## பகுதி II

# பணம் மூலதனமாக மாற்றமடைதல்

## அத்தியாயம் IV

## மூலதனத்துக்கான பொதுச் சூத்திரம்

சரக்குச் சுற்றோட்டமே மூலதனத்தின் தொடக்க நிலை. சரக்கு களின் உற்பத்தியும், அவற்றின் சுற்றோட்டமும், அந்த சுற்றோட்டத் தின் வளர்ச்சியடைந்த வடிவமாகிய வாணிபம் எனப்படுவதும் மூலதனத்தின் உதயத்திற்கான வரலாற்று அடித்தளம் ஆகின்றன. மூலதனத்தின் நவீன கால வரலாறு 16ஆவது நூற்றாண்டில் உலகந் தழுவிய வாணிபமும் உலகந்தழுவிய சந்தையும் தோற்றுவிக்கப் பட்டதிலிருந்து ஆரம்பமாகிறது.

சரக்குச் சுற்றோட்டத்தின் பொருளாயதச் சாரத்தை, அதாவது பல்வேறு பயன்-மதிப்புகளின் பரிவர்த்தனையை ஒதுக்கி விட்டு, இந்தச் சுற்றோட்ட நிகழ்முறையால் தோற்றுவிக்கப்பட்ட பொருளா தார வடிவங்களை மட்டுமே கவனித்தால், அதன் இறுதி விளைவு பணமாக இருக்கக் காண்கிறோம். சரக்குச் சுற்றோட்டத்தின் இந்த இறுதிப் பலனே மூலதனம் தோன்றுகிற முதல் வடிவம் ஆகும்.

வரலாற்று வழியில் பார்த்தால், மூலதனமானது, நிலச் சொத் துக்கு மாறாக, எப்போதுமே முதலில் பணத்தின் வடிவத்தை மேற் கொள்கிறது; அது பணச் செல்வமாக, வணிகரின் மூலதனமாகவும் [merchant's capital] கடுவட்டிக்காரரின் மூலதனமாகவும் [usurer's capital] தோன்றுகிறது.[124] ஆனால், மூலதனத்தின் முதல் வடிவம் பணமாகும் என்பதைக் கண்டுபிடிக்கும் பொருட்டு நாம் மூலதனத் தின் தேற்றுவாயைப் பார்க்கத் தேவையில்லை. அதை அன்றாடம் நம் கண் முன்னாலேயே பார்க்கலாம். நம் காலத்திலும் கூட, ஆரம்பத்தில் புதிய மூலதனம் அனைத்தும் அரங்கத்துக்கு, அதாவது சந்தைக்கு — சரக்குகள், உழைப்பு, பணம் இவற்றில் எதன் சந்தை

[124] நிலச்சொத்தால் வழங்கப்படும் ஆதிக்கம், அடிமைத்தனம் என்ற ஆள்சார்ந்த உறவுகளின் அடிப்படையிலான சக்திக்கும் பணத்தால் தரப்படும் ஆள்சாராச் சக்திக்கும் இடையிலான பேதம், "Nulle terre sans seigneur," "L'argent n'a pas de maitre?"* என்ற இரு பிரெஞ்சுப் பழமொழிகளால் நன்கு வெளியிடப்படுகிறது.

* "பிரபு இல்லாத நிலம் இல்லை." "பணத்துக்கு எஜமானர் இல்லை."

யானாலும் — வரும் போது, ஒரு திட்டமான நிகழ்முறையினால் மூல தனமாக மாற்றப்பட வேண்டிய பணத்தின் வடிவிலேயே வருகிறது.

பணமாக மட்டுமே உள்ள பணத்துக்கும், மூலதனமாக உள்ள பணத்துக்கும் இடையில் நாம் காண்கிற முதல் வேறுபாடு அவற்றின் சுற்றோட்ட வடிவத்திலான மாறுபாட்டுக்கு மேல் ஒன்றும் இல்லை.

சரக்குச் சுற்றோட்டத்தின் மிகவும் சாமானிய வடிவம் C—M—C; அதாவது சரக்கு பணமாக மாறுவதும் பணம் மீண்டும் சரக்காக மாறுவதும் ஆகும்; அல்லது வாங்கும் பொருட்டு விற்பதாகும். ஆனால் இந்த வடிவத்தோடு கூடவே நாம் காண்கிற இன்னொரு முற்றிலும் வேறுபட்ட வடிவம்: M—C—M; அதாவது பணம் சரக்கு களாக மாறுவதும், சரக்குகள் மீண்டும் பணமாக மாறுவதும் ஆகும்; அல்லது விற்கும் பொருட்டு வாங்குவதாகும். பின்சொன்ன விதத்தில் சுற்றோட்டத்தில் செல்கிற பணம் இவ்வழியில் மூலதனமாக மாறுகிறது, மூலதனம் ஆகிறது. உள்ளாற்றலில் ஏற்கெனவே மூலதனமாகவும் இருக்கிறது.

இப்போது M—C—M என்ற சுற்றை இன்னும் சற்று நெருங்கிப் பார்ப்போம். இது முதலில் சொன்ன சுற்றைப் போலவே இரு எதிர்நிலைக் கட்டங்களைக் கொண்டுள்ளது. முதல் கட்டமான M—C அல்லது வாங்கலில் பணம் சரக்காக மாறுகிறது; இரண்டாவது கட்டமான C—M அல்லது விற்றலில் சரக்கு மீண்டும் பணமாக மாறுகிறது. இவ்விரு கட்டங்களின் இணைவு ஒரே இயக்கமாகிறது; இவ்வியக்கத்தின் மூலம் பணம் சரக்குக்காகப் பரிவர்த்தனை செய்யப்படுகிறது; அதே சரக்கு பணத்துக்காக மீண்டும் பரிவர்த்தனை செய்யப்படுகிறது; அதாவது விற்கும்பொருட்டு சரக்கு வாங்கப்படுகிறது; அல்லது — வாங்குவதற்கும் விற்பதற்கும் இடையிலான வடிவ வேறுபாட்டைக் கவனியாது விடுவோமானால் — சரக்கு பணத்தைக் கொண்டு வாங்கப்படுகிறது; பிறகு பணம் சரக்கைக் கொண்டு வாங்கப்படுகிறது.[125] இறுதி விளைவு என்னவென்றால், இந்நிகழ்முறையின் இரு கட்டங்களும் மறைந்து பணம் பணத்துக்குப் பரிவர்த்தனை செய்யப்படுவதாகிய M—M ஆகும். 2,000 இராத்தல் பருத்தியை £100க்கு வாங்கி, £110க்கு விற்கிறேன் என்றால், உண்மையில் £100ஐ £110க்கு, பணத்தைப் பணத்துக்குப் பரிவர்த்தனை செய்கிறேன் என்றாகிறது.

M—C—M என்ற சுற்றின் மூலம் இரு சமமான பணத் தொகைகளைப் பரிவர்த்தனை செய்வது, அதாவது £100ஐ £100க்குப் பரிவர்த்தனை செய்வது நோக்கமானால், இச்சுற்று அபத்தமானதாகவும், அர்த்தமற்றதாகவும் இருக்குமென்பது தெளிவு. கருமியின் திட்டம் இதைக் காட்டிலும் எவ்வளவோ எளிதாகவும் பத்திர

125 "பணத்தைக் கொண்டு சரக்குகளை வாங்குகிறோம். சரக்குகளைக் கொண்டு பணத்தை வாங்குகிறோம்." (மெர்சியர் டெ லா ரிவீரா, "L'ordre naturel et essentiel des societes politiques," பக்கம் 543.)

மானதாகவும் இருக்கும்; அவர் தனது £100ஐச் சுற்றோட்டத்தின் அபாயங்களுக்கு உட்படுத்தாமல், பத்திரமாகத் தன்னிடமே வைத்துக் கொள்கிறார். இருப்பினும், பருத்திக்காக £100 கொடுத்த வணிகர் அதை £110க்கு விற்றலும் சரி, அல்லது £100க்கு, அல்லது £50க்கே கூட கைகழுவினாலும் சரி, எப்படியும் அவரது பணம் தனிச்சிறப்பு வாய்ந்த ஓர் இயக்கத்தை நிகழ்த்தியுள்ளது; இவ்வியக்கமானது தானியத்தை விற்று, இதனால் விடுவிக்கப்பட்ட பணத்தைக் கொண்டு துணிகள் வாங்குகிற விவசாயியின் கை வழியே அது நிகழ்த்துகிற இயக்கத்திலிருந்து முற்றிலும் வேறு வகைப்பட்டதாகும். எனவே, முதலில் நாம் M—C—M, C—M—C என்ற சுற்றுகளது வடிவங்களை வேறுபடுத்திக் காட்டும் சிறப்பியல்புகளை ஆராய வேண்டும்; வெறும் வடிவ வேறுபாட்டின் கீழே பொதிந்துள்ள மெய்யான வேறுபாடு இவ்வழியில் வெளிப்படும்.

முதலாவதாக, இரண்டு வடிவங்களுக்கும் பொதுவாயிருப்பது என்ன என்பதைப் பார்ப்போம்.

இரு சுற்றுகளும் ஒரேமாதிரியான இரு எதிர்நிலை கட்டங்களான C—M என்ற விற்றலாகவும், M—C என்ற வாங்கலாகவும் பகுபடத் தக்கவையாகும். இக்கட்டங்கள் ஒவ்வொன்றிலும் சரக்கும் பணமும் ஆகிய அதே பொருட் கூறுகள் ஒன்றையொன்று எதிர்கொள்கின்றன; வாங்குகிறவரும், விற்பவருமாகிய அதே பொருளாதாரப் பாத்திரங்கள் ஒன்றையொன்று எதிர்கொள்கின்றன. ஒவ்வொரு சுற்றும் அதே இரு எதிர்நிலைக் கட்டங்களின் ஐக்கியம் ஆகும்; ஒவ்வொன்றின் விஷயத்திலும், ஒருவர் வாங்க மட்டுமே செய்கிற, இன்னொருவர் விற்க மட்டுமே செய்கிற, மூன்றாமவர் வாங்கல், விற்றல் இரண்டையுமே செய்கிற மூன்று தரப்பினரின் குறுக்கீட்டால் இந்த ஐக்கியம் ஏற்படுத்தப்படுகிறது.

ஆயினும், C—M—C என்ற சுற்றுக்கும் M—C—M என்ற சுற்றுக்கும் இடையிலான முதல் முக்கிய வேறுபாடு இரு கட்டங்களினதும் நேர்மாறான வரிசையமைப்பே ஆகும். சரக்குகளின் சாமானியச் சுற்றோட்டம் விற்றலுடன் தொடங்கி வாங்கலுடன் முடிவடைகிறது; மூலதனம் என்ற விதத்தில் பணத்தின் சுற்றோட்டமோ வாங்கலுடன் தொடங்கி விற்றலுடன் முடிவடைகிறது. ஒன்றில் தொடக்கநிலை, இலக்கு ஆகிய இரண்டுமே சரக்குகளாகும்; மற்றதில் அவை இரண்டுமே பணமாகும். முதல் வடிவத்தில் பணத்தின் குறுக்கீட்டாலும், இரண்டாவதில் சரக்கின் குறுக்கீட்டாலும் இயக்கம் நிகழ்த்தப்படுகிறது.

C—M—C என்ற சுற்றோட்டத்தில் பணம் பயன்-மதிப்பாகப் பயன்படுகிற சரக்காய் முடிவில் மாற்றப்படுகிறது; அது மீளாதவாறு செலவழிக்கப்படுகிறது. மாறாக, M—C—M என்ற நேர்மாறான வடிவத்தில், வாங்குபவர் பணத்தைச் செலவிடுவது விற்பவர் என்ற முறையில் அதனை மீட்டு விடும் பொருட்டே; சரக்கை வாங்குவதன்

மூலம் அவர் பணத்தை சுற்றோட்டத்தில் விடுவது, அதே சரக்கை விற்பதன் மூலம் அதை திரும்பப் பெறும் பொருட்டே. அவர் பணத்தைக் கையை விட்டுப் போக விடுகிறார். அதைத் திரும்பப் பெறும் கபட நோக்குடனேயே இப்படிச் செய்கிறார். எனவே, பணம் செலவழிக்கப்படுவதில்லை, முன்னீடுதான் செய்யப்படுகிறது.[126]

C — M — C என்ற சுற்றில் ஒரே காசு இரு முறை இடம் மாறுகிறது. விற்பவர் வாங்குபவரிடமிருந்து அதைப் பெற்று இன்னொரு விற்பவரிடம் கொடுத்து விடுகிறார். முழுமையான சுற்றோட்டம் என்பது விற்ற சரக்குகளுக்கான பணத்தின் வரவுடன் தொடங்கி, வாங்கிய சரக்குகளுக்கான பணத்தின் கொடுப்புடன் முடிவடைகிறது. M—C—M என்ற சுற்றில் இது நேர்மாறாக உள்ளது. இங்கே இரு முறை இடம் மாறுவது காசன்று, சரக்கே. வாங்குபவர் அதை விற்பவரின் கையிலிருந்து பெற்று இன்னொரு வாங்குபவரின் கையில் ஒப்படைக்கிறார். சாமானிய சரக்குச் சுற்றோட்டத்தில் ஒரே காசின் இரட்டை இட மாற்றம் அதனை ஒரு கையிலிருந்து இன்னொரு கைக்குச் செல்ல வைக்கிறது; அதே போல், இங்கே ஒரே சரக்கின் இரட்டை இட மாற்றம் பணத்தை அது புறப்பட்ட இடத்துக்கே திரும்பச் செய்கிறது.

இப்படித் திரும்புவது வாங்கியதை விட அதிக விலைக்குச் சரக்கு விற்பதைப் பொறுத்ததன்று. அதிக விலைக்கு விற்பது திரும்பி வரும் பணத்தின் அளவை மட்டுமே பாதிக்கிறது. வாங்கப்பட்ட சரக்கு விற்கப்பட்டதுமே, வேறு விதமாகச் சொன்னால் M — C — M என்ற சுற்று பூர்த்தி செய்யப்பட்டதுமே, திரும்பி வருதல் நிகழ்கிறது. எனவே, மூலதனம் என்ற முறையிலான பணத்தின் சுற்றோட்டத்துக்கும், வெறும் பணம் என்ற முறையிலான அதன் சுற்றோட்டத்துக்கும் இடையில் ஒரு கண்கூடான வேறுபாட்டை இங்கே காண்கிறோம்.

ஒரு சரக்கின் விற்றலால் வரப்பெறுகிற பணம் இன்னொன்றின் வாங்கலால் போய்ச் சேர்ந்ததுமே C — M — C என்ற சுற்று முழுமையாகப் பூர்த்தியடைகிறது.

எப்படியாயினும், பணம் அடுத்து அதன் புறப்பாட்டிடத்துக்கே திரும்பி வருவதானால், செயலின் புத்தாக்கம் அல்லது மறுநிகழ்வு மூலமாகவே அது நடக்க முடியும். நான் ஒரு குவார்ட்டர் தானியத்தை £3க்கு விற்று, இந்த £3 ஐக் கொண்டு துணிகள் வாங்கினால், என்னைப் பொறுத்த வரை பணம் செலவழிக்கப்படுகிறது,

---

126 "ஒரு பொருளை விற்கும் பொருட்டு வாங்கும் போது, ஈடுபடுத்தப்படும் தொகை முன்னீடு செய்யப்படும் பணம் என்று அழைக்கப்படுகிறது; அதனை விற்பதற்காக அல்லாமல் வாங்கும் போது, பணம் செலவழிக்கப்படுவதாகச் சொல்லலாம்." (ஜேம்ஸ் ஸ்டுவர்ட்: "நூல்கள்." அவரது மகன் ஜெனரல் சர் ஜேம்ஸ் ஸ்டுவர்ட்டைப் பதிப்பாசிரியராகக் கொண்டு வெளி வந்தது, லண்டன், 1805, பாகம் I., பக்கம் 274.)

அதன் கதை முடிக்கப்படுகிறது. அது துணி வியாபாரிக்குச் சொந்த மாகிறது. நான் இப்போது இரண்டாவது குவார்ட்டர் தானியத்தை விற்றால், பணம் உள்ளபடியே என்னிடம் திரும்பி வருகிறது; ஆயினும் இப்படித் திரும்பி வருவது முதல் காரியத்தின் பயனாக அன்று, அது திரும்ப நிகழ்வதன் விளைவாகவே. இந்த இரண் டாவது காரியத்தை ஒரு புதிய வாங்கலின் மூலம் நான் பூர்த்தி செய்தால் பணம் மீண்டும் என்னை விட்டுச் செல்கிறது. எனவே C — M — C என்ற சுற்றில் பணத்தின் செலவழிப்புக்கும் அது திரும்பி வருவதற்கும் தொடர்பேதும் இல்லை. மறு புறம், M — C — M இல் பணம் திரும்பி வருவதற்கு அதன் செலவழிப்பு முறையே வழி செய்கிறது. இத்திரும்புதலில்லாமல் செயல் தோல்வி யடைகிறது; அல்லது நிகழ்முறையானது அதனைப் பூர்த்தி செய்யும் இறுதிக் கட்டமான விற்றல் இல்லாத காரணத்தினால் இடை மறிக்கப்பட்டு முழுமையற்றதாகிறது.

C — M — C என்ற சுற்று ஒரு சரக்குடன் தொடங்கி சுற்றோட் டத்திலிருந்து விலகி நுகர்வுக்குள் செல்கிற இன்னொரு சரக்குடன் முடிவடைகிறது. தேவைகளை நிறைவு செய்வதான நுகர்வு, ஒரு வார்த்தையில் சொல்வதானால் பயன்-மதிப்பு இச்சுற்றின் முடிவும் நோக்கமும் ஆகும். மாறாக M — C — M என்ற சுற்று பணத்துடன் ஆரம்பித்து பணத்துடன் முடிகிறது. எனவே, அதன் தலையாய நோக்கமும், அதை வசீகரிக்கிற இலக்கும் வெறும் பரிவர்த்தனை-மதிப்பே.

சாமானிய சரக்குச் சுற்றோட்டத்தில் சுற்றின் இரு முனைகளும் ஒரே பொருளாதார வடிவத்தைப் பெற்றுள்ளன. அவை இரண் டுமே சரக்குகளாகும், சம மதிப்புள்ள சரக்குகளாகும். ஆனால் அவை, உதாரணமாகத் தானியமும் துணிகளும் வேறுபட்ட பண்பு களைக் கொண்ட பயன்-மதிப்புகளும் ஆகும். உற்பத்திப் பொருட் களின், சமுதாய உழைப்பு உருக்கொண்டுள்ள வெவ்வேறு பொருட் களின் பரிவர்த்தனை இங்கே இயக்கத்தின் அடிப்படையாக அமைகிறது. M — C — M என்ற சுற்றோட்டத்தில் இது வேறு விதமாக உள்ளது; இது கூறியது கூறலைப் போன்றதாயிருப்பதால், மேலோட்டமான பார்வைக்கு காரிய நோக்கற்றதாகத் தோன்று கிறது. இரு முனைகளும் ஒரே பொருளாதார வடிவத்தைப் பெற் றுள்ளன. அவை இரண்டுமே பணமாகும்; எனவே பண்பு வழியில் வேறுபட்ட பயன்-மதிப்புகள் அல்ல; ஏனெனில் பணம் சரக்கு களின் மாற்றப்பட்ட வடிவமேயன்றி வேறில்லை; இவ்வடிவத்தில் அவற்றுக்குரிய தனித்தனி பயன்-மதிப்புகள் மறைந்து போகின்றன. பருத்திக்கு £100ஐப் பரிவர்த்தனை செய்வது, பிறகு இதே பருத் தியை மீண்டும் £100க்காகப் பரிவர்த்தனை செய்வது என்பது பணத்துக்குப் பணத்தை, அதற்காக அதையே பரிவர்த்தனை செய்கிற சுற்று வழியே; இச்செயல் காரிய நோக்கற்றதாகவும்

அபத்தமானதாகவும் தோன்றுகிறது.[127] பணத்தொகைகள் ஒன்றிலிருந்து ஒன்று வேறுபடுவதற்கு அவற்றின் அளவே காரணம். M — C — M என்ற நிகழ்முறையின் தன்மையும் போக்கும் அதன் இரு முனைகளிடையிலான அளவு வழிப்பட்ட வேறுபாட்டின் விளைவேயன்றி, பண்பு வழிப்பட்ட வேறுபாட்டின் விளைவு அன்று. ஏனெனில், அந்த இரு முனைகளுமே பணம்தான். சுற்றோட்டத்துக்குள் ஆரம்பத்தில் விடப்பட்டதை விட அதிகமான பணம் முடிவில் அதிலிருந்து எடுக்கப்படுகிறது. £100க்கு வாங்கப்பட்ட பருத்தி £100 + £10, அதாவது £110க்கு விற்கப்படுவதாகக் கொள்வோம். எனவே, இந்நிகழ்முறையின் சரியான வடிவம் M — C — M′; இதில் M′= M+ΔM = ஆரம்பத்தில் முன்னீடு செய்யப்பட்ட தொகை+ ஒரு கூடுதல். ஆரம்ப மதிப்பின் மீதான இந்தக் கூடுதல் அல்லது மிகையை நான் "உபரி-மதிப்பு" [surplus-value]

---

127 "யாரும் பணத்திற்குப் பணத்தைப் பரிவர்த்தனை செய்து கொள்வதில்லை" என்று மொர்சியர் டெ லா ரிவீரா வணிக ஊக்கவாதிகளுக்குச் சொல்கிறார். (முன் வந்தது, பக்கம் 486.) "வர்த்தகத்தையும்" "ஊக வாணிபத்தையும்" [speculation] தொழில்வகையில் பரிசீலிக்கிற ஒரு நூல் பின்வருமாறு கூறுகிறது: "வர்த்தகமனைத்தும் வெவ்வேறு வகைப்பட்ட பொருட்களின் பரிவர்த்தனையில் அடங்கியுள்ளது; ஆதாயம்" (வணிகருக்கு?) "இந்த வகை வேறுபாட்டிலிருந்தே பிறக்கிறது. ஒரு இராத்தல் ரொட்டிக்கு பதில் ஒரு இராத்தல் ரொட்டியைப் பரிவர்த்தனை செய்வதில் எந்த ஆதாயமும் இருக்காது;...எனவே, பணத்துக்காகப் பணத்தையே பரிவர்த்தனை செய்வதில் அடங்கியுள்ள சூதாட்டத்துடன் ஒப்பு நோக்கினால் வர்த்தகம் மேலானதே." (தாமஸ் கார்பெட், "தனியாட்களது செல்வத்தின் காரணங்கள், முறைகள் பற்றிய ஆய்வு; அல்லது வர்த்தகம் மற்றும் ஊக வாணிபத்தின் கோட்பாடுகள் பற்றிய விளக்கம்." லண்டன், 1841, பக்கம் 5.) பணத்துக்காகப் பணத்தைப் பரிவர்த்தனை செய்து கொள்வதான M — M என்பது வணிக மூலதனத்தின் சுற்றோட்டத்துக்கு மட்டுமன்றி மூலதனம் அனைத்தினதும் சுற்றோட்டத்துக்கே உரித்தான வடிவமாகும் என்பதை கார்பெட் பார்க்கா விட்டாலும், அவர் இந்த வடிவம் சூதாட்டத்துக்கும் வர்த்தகத்தின் ஒரு வகைக்கும், அதாவது ஊக வாணிபத்துக்கும் பொதுவானது என்பதையாவது ஒப்புக் கொள்கிறார். ஆனால் அப்புறம் வருகிற மக்குல்லோஹ், விற்கும் பொருட்டு வாங்குவது ஊக வணிபம் செய்வதாகும், இவ்வாறாக ஊக வாணிபத்துக்கும் வர்த்தகத்துக்கும் இடையிலான வேறுபாடு மறைந்து போகிறது என்பதாகச் சொல்கிறார். "ஒரு தனியாள் உற்பத்திப் பண்டத்தை விற்கும் பொருட்டு வாங்குகிற ஒவ்வொரு காரியமும், உண்மையில் ஊக வாணிபமே." (மக்குல்லோஹ்: "வாணிபம் மற்றும்....நடைமுறை...வரலாறு வழிப்பட்ட அகராதி." லண்டன், 1847, பக்கம் 1009.) ஆம்ஸ்டர்டாம் பங்குச் சந்தையின் பிண்டார்* ஆகிய பிண்டோ இதை விட சிறுபிள்ளைத்தனமாகக் குறிப்பிடுகிறார்: "வர்த்தகம் ஒரு விளையாட்டு. (இச் சொற்றொடர் லாக்கிடமிருந்து பெறப்பட்டது) பிச்சைக்காரர்களிடம் எதையும் வென்று பெற முடியாது. ஒருவர் சகலரிடமிருந்து சகலத்தையும் நீண்ட காலமாய் வென்று கொண்டிருந்தால், விளையாட்டை மீண்டும் தொடங்கும் பொருட்டு இலாபத்தில் பெரும் பகுதியைத் தானாகவே திருப்பிக் கொடுப்பது அவசியமாகி விடும்." (பிண்டோ: "Traite de la Circulation et du Credit." ஆம்ஸ்டர்டாம், 1771, பக்கம் 231.)

---

* பிண்டார்: ஒலிம்பிக் வெற்றியாளர்களைப் புகழ்ந்து கவி பாடிய பண்டைய கிரேக்கக் கவிஞர்.

என்றழைக்கிறேன். எனவே, ஆரம்பத்தில் முன்னீடு செய்யப்பட்ட மதிப்பு சுற்றோட்டத்தில் இருக்கையில் குறையாதிருப்பதோடல்லாமல், தன்னோடு ஓர் உபரி-மதிப்பையும் சேர்த்துக் கொள்கிறது, அல்லது பெருக்கமடைகிறது. அதை மூலதனமாக மாற்றுவது இந்தச் சுற்றியக்கமே.

C — M — C என்பதில் C — C என்ற இரு முனைகளும்—உதாரணமாக தானியமும் உடைகளும்—மதிப்பின் வெவ்வேறு அளவுகளைக் குறித்தாலும் குறிக்கலாம். சாகுபடியாளர் தன் தானியத்தை அதன் மதிப்புக்கும் கூடுதலாய் விற்கலாம்; அல்லது துணிகளை அவற்றின் மதிப்புக்கும் குறைவாய் வாங்கலாம். மறுபுறம், துணி வியாபாரியால் அவர் ''ஏமாற்றவும் படலாம்''. ஆனால், இப்போது பரிசீலனையிலுள்ள சுற்றோட்ட வடிவத்தில், இவ்வாறான மதிப்பு வேறுபாடுகள் முற்றிலும் தற்செயலானவையாகும். தானியமும் துணிகளும் சமதைகள் என்ற உண்மையானது M — C — M என்பதில் செய்வதைப் போல், இந்நிகழ்முறையை அர்த்தமற்றதாக்கி விடுவதில்லை. பார்க்கப் போனால், அவற்றின் மதிப்புகள் சமமாயிருத்தல் அதன் முறையான போக்கிற்கு அவசிய நிபந்தனையாகும்.

வாங்கும் பொருட்டு விற்பதென்ற செயலின் மறுநிகழ்வு அல்லது புத்தாக்கம், அதன் நோக்கத்தாலேயே — அதாவது முற்றிலும் சுற்றோட்டத் துறைக்குப் புறத்தேயுள்ள நோக்கமான நுகர்வு, அல்லது திட்டமான தேவைகளை நிறைவு செய்தல் என்ற நோக்கத்தாலேயே—வரம்புக்குட்பட்டதாக வைத்துக் கொள்ளப்படுகிறது. மாறாக, விற்கும் பொருட்டு வாங்கும் போது, எதிலிருந்து தொடங்குகிறோமோ அதிலேதான் முடிக்கிறோம். பணம் அல்லது பரிவர்த்தனை-மதிப்பிலிருந்து தொடங்கி, பணம் அல்லது பரிவர்த்தனை-மதிப்பில் முடிக்கிறோம். இதனால் இயக்கம் முடிவற்றதாகிறது. M என்பது M+ΔM ஆகிறது, £100 என்பது £110 ஆகிறது என்பது மெய்தான். ஆனால் பண்பு என்னும் கோணத்தில் மட்டும் பார்த்தால், £110, £100 இரண்டும் ஒன்றே, அதாவது பணமே. அளவு என்னும் கோணத்தில் பார்த்தால், £100ஐப் போலவே £110 என்பதும் திட்டமான, வரையறையுள்ள மதிப்புடைய தொகையாகும். இப்போது £110 பணமாகச் செலவிடப்பட்டால், அது தன் பாத்திரத்தை வகிப்பது நின்று போகிறது. அது இனியும் மூலதனமன்று. சுற்றோட்டத்திலிருந்து எடுக்கப்பட்டு, அது ஒரு பணச் சேர்ப்பாக ஓய்ந்து போகிறது; அது சேர்ப்பாகிய இந்த நிலையிலேயே அந்திம நாள் வரை நீடித்த போதிலும் சல்லிக் காசு கூட அதனோடு சேராது. ஆக, மதிப்பின் பெருக்கமே நோக்கமெனில், £100இன் மதிப்பைப் போலவே £110இன் மதிப்பையும் அதிகப்படுத்துவதற்கான அதே தூண்டுதல் ஏற்படுகிறது; ஏனெனில் இரண்டுமே பரிவர்த்தனை-மதிப்புக்

கான வரம்பிடப்பட்ட தெரிவிப்புகள்தாம். ஆகவே அளவு வழிப்பட்ட அதிகரிப்பின் மூலம், வரம்பிலா செல்வத்தைக் கூடுமான வரை நெருங்குவதென்ற அவா இரண்டுக்குமுண்டு. உள்ளபடியே, ஆரம்பத்தில் முன்னீடு செய்யப்பட்ட மதிப்பான £100 சுற்றோட்டத்தின் போது அதனோடு சேர்த்துக் கொள்ளப் படுகிற உபரி-மதிப்பான £10இலிருந்து கணநேரத்துக்கு வேறு படுத்திப் பார்க்கத்தக்கதாயிருப்பினும், இவ்வேறுபாடு உடனடியாக மறைந்து போகிறது. நிகழ்முறையின் முடிவில் நாம் ஆரம்ப £100ஐ ஒரு கையிலும் உபரி-மதிப்பாகிய £10ஐ இன்னொரு கையிலும் பெறுவதில்லை. ஆரம்ப £100ஐப் போலவே, பெருக்க நிகழ்முறையைத் தொடங்குவதற்குச் சரியான நிலையிலும் தகுதியிலும் உள்ள £110 என்ற மதிப்பையே பெறுகிறோம். பணம் இயக்கத்தை முடிப்பது மீண்டும் அதைத் தொடங்குவதற்கே.[128] எனவே, வாங்கலும் அதன் விளைவான விற்றலும் பூர்த்தியாகிற ஒவ்வொரு தனிச்சுற்றின் இறுதி விளைவும் ஒரு புதிய சுற்றின் தொடக்க நிலையாகி விடுகிறது. சாமானிய சரக்குச் சுற்றோட்டம் என்பது—வாங்கும் பொருட்டு விற்பது—சுற்றோட்டத்துடன் தொடர்பில்லாத ஒரு காரியத்தை, அதாவது பயன்-மதிப்புகளின் தனதாக்கத்தை, தேவைகளை நிறைவு செய்வதை நிகழ்த்தும் வழியாகும். மூலதனமென்ற முறையிலான பணத்தின் சுற்றோட்டம் இப்படிப்பட்டதன்று; அதுவே ஒரு நோக்க மாகும்; ஏனெனில் இடைவிடாமல் திரும்பத் திரும்ப நடைபெறும் இந்த இயக்கத்துக்குள்தான் மதிப்பின் பெருக்கம் நடைபெறுகிறது. எனவே, மூலதனத்தின் சுற்றோட்டம் வரம்பின்றி நடப்பதாகும்.[129]

---

128 ''மூலதனம்...ஆரம்ப மூலதனமாகவும், மூலதனத்துடன் சேரும் கூடுதலாகிய இலாபமாகவும் பிரிக்கத் தக்கதாகும்....ஆயினும் நடைமுறையில் இந்த இலாபம் உடனடியாய் மூலதனமாக மாற்றப்பட்டு ஆரம்ப மூலதனத்துடன் இயக்கத்தில் விடப்படுகிறது.'' (பி.எங்கெல்ஸ், ''Umrisse zu einer Kritik der Nationalokonomie, in: Deutsch-Franzosische Jahrbucher, herausgegeben von Arnold Ruge und Karl Marx.'' பாரிஸ், 1844, பக்கம் 99.)

129 அரிஸ்டாட்டில் பொருளியலைப் பணவியலுக்கு எதிராக நிறுத்துகிறார். அவர் முன் சொன்னதிலிருந்து ஆரம்பிக்கிறார். பிழைப்புக்கு வழி செய்து கொள்கிற கலை என்ற அளவில் அது உயிர் வாழ்க்கைக்கு அவசியமானவையும், குடும்பம் அல்லது நாட்டுக்குப் பயனுள்ளவையுமான பொருட்கள் கைவரப் பெறுவதுடன் முடிவடைகிறது. ''மெய்யான செல்வம் (ὁ ἀληθινὸς πλοῦτος) இவ்வாறான பயன்-மதிப்புகளால் ஆனது; ஏனெனில் வாழ்க்கையை இனியதாக்கவல்ல இவ்விதமான உடைமைகளின் அளவு எல்லையற்றதன்று. ஆயினும் பொருட்களைச் சம்பாதிப்பதற்கு இரண்டாவது முறை ஒன்று உண்டு; இதற்கு நாம் முன்னுரிமையுடனும் சரியாகவும் பணவியல் என்ற பெயரைக் கொடுக்கலாம்; இதில் செல்வங்களுக்கும், உடைமைகளுக்கும் எல்லையில்லை யெனத் தோன்றுகிறது. வர்த்தகம் (ἡ καπηλική என்பது உண்மையில் சில்லறை வர்த்தகத்தையே குறிக்கிறது; அரிஸ்டாட்டில் இவ்வகை வர்த்தகத்தை எடுத்துக் கொள்வது ஏனெனில், இதில் பயன்-மதிப்புகளே மேனிலை வகிக்கின்றன) அதன் தன்மையில் பணவியலுக்குச் சொந்தமானதன்று; ஏனெனில் இங்கே பரிவர்த்தனை அதில்

பணவுடைமையாளர் இந்த இயக்கத்தின் உணர்வுபூர்வமான பிரதிநிதி என்ற முறையில் முதலாளி ஆகிறார். பணம் புறப்படுகிற இடமும் அது திரும்பி வந்து சேருகிற இடமும் அவரேதான்; சரியாகச் சொன்னால் அவரது சட்டைப்பைதான். மதிப்புப் பெருக்கம் — M — C — M என்ற சுற்றோட்டத்தின் புறவய அடிப்படை அல்லது மூல ஊற்றாகிய இது — அவரது அகவய நோக்கமாகி விடுகிறது; அவர் முதலாளியாக, அதாவது மனித உருக் கொண்ட, உணர்வும் மன விருப்பமும் வாய்க்கப்பெற்ற மூலதனமாகச் செயல்படுவது, ஸ்தூலமற்ற செல்வத்தை மேலும் மேலும் தனதாக்கிக் கொள்வது எந்த அளவுக்கு அவரது செயற்பாடுகளின் ஒரே நோக்கமாகிறதோ அந்த அளவுக்குத்தான் அவர் முதலாளியாகச் செயல்படுகிறார்; அதாவது மனித உருக் கொண்டு உணர்வும் சித்தமும் வாய்க்கப் பெற்ற மூலதனம் ஆகிறார். பயன்-மதிப்புகளை முதலாளியின் மெய்யான குறியென்று ஒருபோதும் கருதலாகாது.[130] தனியொரு கொடுக்கல் வாங்கலில் வரும் இலாபத்தையும் அவ்வாறு கருதுவதற்கில்லை. ஓயாது ஒழியாது இலாபமீட்டுவது ஒன்றே அவரது

---

ஈடுபடுவோருக்கு (வாங்குவோர் அல்லது விற்போருக்கு) அவசியமானவற்றில் மட்டுமே நடைபெறுவதாகும்.'' எனவே, அவர் மேலும் தொடர்ந்து தெளிவுபடுத்துவது போலவே, பண்டமாற்றுதான் வர்த்தகத்தின் ஆதி வடிவம்; ஆனால் பண்டமாற்று விரிவடைந்ததுடன், பணத்துக்கான அவசியம் பிறந்தது. பணம் கண்டுபிடிக்கப்பட்டதும் அவசியத்தின் பேரிலான பண்டமாற்று [illegible], ஆக, சரக்குகளிலான வர்த்தகமாக வளர்ச்சியடைந்தது. பிறகு இது தன் ஆரம்பப் போக்குக்கு எதிரான விதத்தில் பணவியலாக, பணம் பண்ணும் கலையாக வளர்ந்தது. இப்போது ''பணவியலில் சுற்றோட்டமே செல்வங்களின் ஊற்றாகும்'' ([illegible]). என்ற விதத்தில் பணவியல் பொருளியலிலிருந்து வேறுபடுத்திப் பார்க்கத் தக்கதாகும். ''அது பணத்தைச் சுற்றி சுழல்வதாகத் தோன்றுகிறது; ஏனெனில் இவ்வகைப் பரிவர்த்தனையின் தொடக்கமும் முடிவும் பணமே ([illegible]). எனவே, பணவியல் அடைய முயல்கிற செல்வங்கள் வரம்பு கடந்தவை. ஒரு நோக்கத்தை அடைவதற்கான வழியாக அன்றி தானே ஒரு நோக்கமாயுள்ள ஒவ்வொரு கலையும் அந்த நோக்கத்தை மேலும் மேலும் நெருங்கி வர இடைவிடாமல் முனைவதால், அதன் நோக்கங்களுக்கு எல்லையில்லை; ஆனால், ஒரு நோக்கத்துக்கான வழியைப் பின்பற்றுகிற கலைகளுக்கு குறிக்கோளே வரம்பிட்டு விடுவதால், அக்கலைகள் வரம்பற்றவையல்ல; மாறாக, பணவியலில் அதன் நோக்கங்களுக்கு எல்லையில்லை. வரம்பிலா அறுதிச் செல்வமே குறியாகி விடுகிறது. எல்லை என்றிருப்பது பொருளியலுக்கே, பணவியலுக்கன்று....முன்னதன் நோக்கம் பணத்திலிருந்து வேறுபட்ட ஒன்று. பின்னதன் நோக்கம் பணத்தை அதிகமாக்குவது....பகுதியளவு ஒத்திருப்பதால் இந்த இரு வடிவங்களையும் குழப்படி செய்து சிலர் பணத்தைக் காப்பதையும் எல்லையின்றிப் பெருக்குவதையும் பொருளியலின் முடிவும் நோக்கமுமாகக் கருதும் நிலை ஏற்பட்டுள்ளது.'' (அரிஸ்டாட்டில், ''De Rep.'' பதிப்பாசிரியர்: பெக்கர், அத்தியாயம் 8,9, பல இடங்கள்.)

130 ''சரக்குகள் (பயன்-மதிப்புகள் என்ற அர்த்தத்தில்) வர்த்தகம் செய்யும் முதலாளியின் இறுதி நோக்கமன்று. பணமே அவரது இறுதி நோக்கம்.'' (தாமஸ் சால்மர்ஸ், ''.....அரசியல் பொருளாதாரம் பற்றி,'' 2ஆம் பதிப்பு, கிளாஸ்கோ, 1832, பக்கம் 165, 166.)

குறி.[131] செல்வத்தை நாடும் இந்த வரம்பு கடந்த ஆசை, பரிவர்த்தனை-மதிப்பைத் தேடும் இந்த வெறி கொண்ட வேட்டை[132] முதலாளிக்கும் கருமிக்கும் பொதுவானது; ஆனால் கருமி பித்துக் கொண்ட முதலாளியாக இருக்க, முதலாளி பகுத்தறிவு கொண்ட கருமியாக இருக்கிறார். பரிவர்த்தனை-மதிப்பின் முடிவற்ற பெருக்கமே தன் பணத்தைச் சுற்றோட்டத்தில் விடாமல் சேமித்து வைக்கிற[133]கருமியின் நோக்கம்; கெட்டிக்கார முதலாளியோ ஓயாமல் திரும்பத் திரும்பப் பணத்தைச் சுற்றோட்டத்தில் விட்டு இதே நோக்கத்தை சாதித்துக் கொள்கிறார்.[134]

சாமானியச் சுற்றோட்டத்தில் சரக்குகளின் மதிப்பு மேற்கொள்கிற சுயேச்சையான வடிவம், அதாவது பண வடிவம், ஒரு காரியத்துக்கு மட்டுமே, அதாவது அவற்றின் பரிவர்த்தனைக்கு மட்டுமே பயன்பட்டு விட்டு, இயக்கத்தின் இறுதி விளைவில் மறைந்து போகிறது. மறு புறம் M — C — M என்ற சுற்றோட்டத்தில் பணம், சரக்கு இரண்டுமே மதிப்பின் இருவேறு நிலைகளையே குறிக்கின்றன; பணம் அதன் பொதுவான நிலையையும், சரக்கு அதன் குறிப்பான, அல்லது ஒரு விதத்தில் மாறுவேடம் பூண்ட நிலையையும் குறிக்கின்றன.[135] மதிப்பு இடைவிடாமல் ஒரு வடிவத்திலிருந்து இன்னொரு வடிவத்துக்கு மாறிக் கொண்டிருக்கிறது; ஆனால் இதன் மூலம் ஒழிந்து விடுவதில்லை; இவ்வாறு அது தானாகவே இயங்கும் தன்முனைப்புள்ள தன்மை பெறுகிறது. இப்போது தற்பெருக்கமடையும் மதிப்பு [self-expanding value] தன்

131 "வியாபாரி இப்போது தான் அடைந்துள்ள இலாபத்தை பூஜ்யமாகக் கொள்வதில்லை என்றாலும், எப்போதுமே வருங்கால இலாபத்தில் குறியாய் இருக்கிறார்." (அ. ஜெனோவெசி, Lezioni di Economia Civile (1765), இத்தாலியப் பொருளாதார அறிஞர்களுக்கான கஸ்டடி பதிப்பு. Parte Moderna, பாகம் viii., பக்கம் 139.)

132 "அடங்காத ஆதாய வெறி, auri sacra fames* முதலாளிகளை ஆட்டிப்படைக்கிறது." (மக்குல்லோஹ்: "அரசியல் பொருளாதார கோட்பாடுகள்," லண்டன், 1830, பக்கம் 179.) இந்தக் கருத்தைச் சொல்லும் இதே மக்குல்லோஹும் அவரைப் போன்றவர்களும், தத்துவத்தில் இக்கட்டான நிலைகள் ஏற்படும் போது, உதாரணமாக மிகையுற்பத்தி போன்ற பிரச்சினைகள் எழும் போது, அதே முதலாளியை நெறிபிறழாக் குடிமகனாக — பயன்-மதிப்புகள் பற்றி மட்டுமே கவலை கொள்கிற, பாத அணி, தொப்பி, முட்டை, பருத்தியாடை போன்ற வழக்கமான பயன்-மதிப்புகளில் தணியாத பசி கொண்ட குடிமகனாகவும் கூட — மாற்றிச் சித்திரிக்க தயங்குவதில்லை.

133 Σώζειν என்பது சேர்த்து வைத்தலைக் குறிக்கும் கிரேக்கச் சொல். இச்சொல்லைப் போலவே ஆங்கிலச் சொல்லான "to save" என்பதற்கும் இரண்டு அர்த்தங்கள் உண்டு: காப்பாற்றுதல், சேமித்து வைத்தல்.

134 "எந்தப் பொருளும் வட்டத்தில் நகரும் போது வரம்பில்லாத் தன்மையைப் பெறுகிறது; நேர்க் கோட்டில் செல்லும் போது இத்தன்மையைப் பெறுவதில்லை." (காலியானி.)

135 "மூலதனம் ஆவது பொருளன்று, பொருளின் மதிப்பே." (மூா.ப.ஸே: "Traite' d'Econ. Polit." 3ஆம் பதிப்பு, பாரிஸ், 1817, பாகம் II., பக்கம் 429.)

* பாழாய்ப் போன பொன்னாசை.

வாழ்வில் அடுத்தடுத்து ஏற்கிற இருவேறு வடிவங்களையும் ஒவ்வொன்றாக எடுத்துக் கொண்டால், பின்வரும் இரு கூற்றுகளை வந்தடைகிறோம்: மூலதனம் என்பது பணம்; மூலதனம் என்பது சரக்கு.[136] ஆயினும், உண்மையில், மதிப்பு இங்கே ஒரு நிகழ்முறையில் தன்முனைப்புள்ள காரணியாகும்; இந்நிகழ்முறையில் அது பண வடிவத்தையும் சரக்கு வடிவத்தையும் இடைவிடாமல் மாறிமாறி மேற்கொள்கிற அதே நேரத்தில் பருமனில் மாற்றமடைகிறது, உபரி-மதிப்பைத் தன்னிலிருந்தே வெளிவிட்டு தன்னைத் தனி வகைப்பட்டதாக்கிக் கொள்கிறது. வேறுவிதமாகச் சொன்னால், மூல மதிப்பு தானாகவே பெருக்கமடைகிறது. ஏனெனில், எந்த இயக்கத்தின் போக்கில் அது உபரி-மதிப்பைச் சேர்த்துக் கொள்கிறதோ, அந்த இயக்கம் அதன் சொந்த இயக்கமாகும்; எனவே, அதன் பெருக்கம் தானாகவே நடந்தேறும் பெருக்கமாகும். அது மதிப்பென்பதால் தன்னோடு மதிப்பைச் சேர்த்துக் கொள்ள முடியும் படியான மாந்திரிகச் சக்தியைப் பெற்றுள்ளது. அது குட்டி போடுகிறது, அல்லது பொன் முட்டைகளாவது இடுகிறது.

ஆக, மதிப்பு இப்படியொரு நிகழ்முறையில் தன்முனைப்புள்ள காரணியாக இருக்கிறது. ஒரு நேரத்தில் பண வடிவத்தையும் இன்னொரு நேரத்தில் சரக்கு வடிவத்தையும் மேற்கொள்கிறது; ஆனால் இந்த மாற்றங்கள் அனைத்தினூடேயும் தன்னைத் தானே காப்பாற்றிக் கொண்டும், பெருகிக் கொண்டும் இருக்கிறது. ஆதலால், அதன் தனித் தன்மையை எந்த நேரத்திலும் நிலைநிறுத்த சுயேச்சையானதொரு வடிவம் அதற்குத் தேவைப்படுகிறது. இந்த வடிவத்தை அது பணத்தின் உருவில் மட்டுமே பெறுகிறது. பணத்தின் வடிவில்தான் மதிப்பானது அதன் தன்னியல்பான உற்பத்தியின் செயல் ஒவ்வொன்றையும் தொடங்கவும், முடிக்கவும், மீண்டும் தொடங்கவும் செய்கிறது. அது £100ஆக ஆரம்பித்தது; இப்போது £110ஆக இருக்கிறது; இவ்வாறே இன்னும் சொல்லலாம். ஆனால் பணமே கூட மதிப்பின் இரு வடிவங்களில் ஒன்றுதான். அது ஒரு சரக்கின் வடிவம் பெறா விட்டால் மூலதனம் ஆவதில்லை. சேர்த்து வைத்தலில் இருப்பது போல இங்கே பணத்துக்கும் சரக்குகளுக்குமிடையே பகைமை ஏதுமில்லை. சரக்குகள் பார்ப்பதற்கு எவ்வளவுதான் அசிங்கமாயிருப்பினும் அல்லது வாசனையில் எவ்வளவுதான் சகிக்க முடியாதவையாய் இருப்பினும், அவையெல்லாம் நம்பிக்கையிலும் சரி, உண்மையிலும் சரி, பணமே என்று முதலாளிக்குத் தெரியும்; அவை பரிசுத்தமடைந்த யூதர்களாகும்; அது மட்டுமன்று,

[136] "பொருட்களை உற்பத்தி செய்வதில் ஈடுபடுத்தப்படும் செலாவணியே (!) மூலதனம்." (மக்லியோடு: "வங்கித் தொழிலின் தத்துவமும் நடைமுறையும்." லண்டன், 1855, பாகம் 1, அத்தியாயம் i., பக்கம் 55) "மூலதனம் என்பது சரக்கு." (ஜேம்ஸ் மில்: "அரசியல் பொருளாதாரத்தின் ஆதாரக் கூறுகள்." பக்கம் 74, லண்டன், 1821.)

பணத்தைக் கொண்டே இன்னும் கூடுதலான பணம் பண்ணு வதற்கு உதவும் அரும்பெரும் சாதனமும் ஆகும்.

C — M — C என்ற சாமானியச் சுற்றோட்டத்தில், சரக்கின் மதிப்பு உயர்ந்தபட்சம் அவற்றின் பயன்-மதிப்பிலிருந்து சுயேச்சை யான வடிவத்தை, அதாவது பணத்தின் வடிவத்தை அடைந்தது; ஆனால் இப்போது M — C — M என்ற சுற்றோட்டத்தில், அதாவது மூலதனத்தின் சுற்றோட்டத்தில், அதே மதிப்பு திடுமென ஒரு சுயேச் சைப் பொருளாக, தனக்கென ஓர் இயக்கம் வாய்க்கப் பெற்று தன் வாழ்வெனும் நிகழ்முறைக்கு ஆட்படும் பொருளாக நம் முன் வருகிறது; இந்த நிகழ்முறையில் அது மாறி மாறி ஏற்றும் விட் டொழித்தும் செல்கிற வடிவங்களே பணமும் சரக்கும். அது மட்டு மன்று, மதிப்பானது சரக்குகளிடையிலான உறவுகளைக் குறிப் பதோடு மட்டும் நின்று விடாமல், தன்னுடனேயே தனிமுறை உறவு களும் கொள்கிறது எனலாம். அது மூல மதிப்பாகிய தன்னிட மிருந்து உபரி-மதிப்பாகிய தன்னை வேறுபடுத்திக் கொள்கிறது; இருவரும் ஒருவரே, ஒரே வயதினரே என்ற போதிலும், பிதா தம்மை சுதனாகிய தம்மிடமிருந்து வேறுபடுத்திக் கொள்கிறார் அல்லவா, அது போலத்தான் இதுவும். ஏனெனில் ஆரம்பத்தில் முன்னீடு செய்யப்பட்ட £100 ஆனது £10 என்ற உபரி-மதிப்பைக் கொண்டுதான் மூலதனமாகிறது; இது நடந்ததுமே, சுதனும் சுதனைக் கொண்டு பிதாவும் தோன்றியதுமே, வேறுபாடு மறைந்து போகிறது; இரண்டும் ஒன்றாகி, £110 ஆகின்றன.

ஆகவே, மதிப்பு இப்போது நிகழ்முறையிலுள்ள மதிப்பாகிறது, நிகழ்முறையிலுள்ள பணமாகிறது, இவ்விதத்தில் மூலதனமாகிறது. அது சுற்றோட்டத்திலிருந்து வெளியேறுகிறது. மீண்டும் அதற்குள் நுழைகிறது, தன் சுற்றுக்குள்ளேயே தன்னைக் காப்பாற்றிக் கொள் கிறது, பெருக்கிக் கொள்கிறது. பெருக்கமடைந்த பருமனுடன் அதிலிருந்து மீண்டும் வெளியேறுகிறது. அதே சுற்றை மீண்டும் ஆரம்பிக்கிறது; இது முடிவின்றித் தொடர்கிறது.[137] M — M' பணத்தைப் பெற்றெடுக்கும் பணம் — மூலதனத்தின் முதல் பொருள் விளம்பிகளான வணிக ஊக்கவாதிகள் மூலதனத்தை இப்படித்தான் சித்திரிக்கிறார்கள்.

விற்கும் பொருட்டு வாங்குவது, அல்லது இன்னும் சரியாகச் சொன்னால், விலை கூட்டி விற்கும் பொருட்டு வாங்குவது, M — C — M' என்பது, ஒரு வகை மூலதனத்துக்கு மட்டுமே, அதாவது வணிக மூலதனத்துக்கு மட்டுமே உரித்தான வடிவமாகத் தோன்றுவது மெய்தான். ஆனால், தொழில்துறை மூலதனமும் [industrial capital] பணமே; சரக்குகளாக மாற்றப்படுகிற, இந்த

---

137 மூலதனம்: ''நிரந்தரமான, தானே பல்கிப் பெருகும் மதிப்பு.'' (சிஸ்மொந்தி: ''Nouveaux Principes d'Econ. Polit,'' பாகம் i., பக்கம் 88,89.)

சரக்கு விற்றலின் மூலம் மேலும் கூடுதலான பணமாக மறுமாற்றம் செய்யப்படுகிற பணமே. வாங்குவதற்கும் விற்பதற்கும் இடைப் பட்ட காலத்தில் சுற்றோட்டத் துறைக்கு வெளியே நடக்கிற நிகழ்ச்சிகள் இந்த இயக்கத்தின் வடிவத்தைப் பாதிப்பதில்லை. கடைசியாக, வட்டி தரும் மூலதனத்தில் M — C — M′ என்ற சுற் றோட்டம் சுருங்கிய உருவில் காட்சியளிக்கிறது. இச்சுருக்கத்தின் விளைவு இடைநிலைக் கட்டம் இல்லாத M — M′ என்ற வடிவ மாகும்; ''இரத்தினச் சுருக்கமாய்'' சொல்வதெனில், பணம் தன்னிலும் அதிகப் பெறுமானமுடைய பணமாய் இருத்தலாகும், மதிப்பு தன்னிலுமுயர்ந்த மதிப்பாய் இருத்தலாகும்.

எனவே, சுற்றோட்டத் துறைக்குள் முதல் தோற்றத்தில் தெரிவது போல், M — C — M′ என்பதே உண்மையில் மூலதனத்தின் பொதுச் சூத்திரமாகும்.

## அத்தியாயம் V

## மூலதனத்தின் பொதுச் சூத்திரத்தில் உள்ள முரண்பாடுகள்

பணம் மூலதனமாகும் போது சுற்றோட்டம் எடுக்கிற வடிவம், சரக்குகள், மதிப்பு, பணம் இவற்றின் தன்மை குறித்து, ஏன், சுற்றோட்டத்தின் தன்மை குறித்தே கூட நாம் இது வரை ஆராய்ந்துள்ள எல்லா விதிகளுக்கும் எதிரானதாகும். இந்த வடிவத்தை சாமானிய சரக்குச் சுற்றோட்டத்தின் வடிவத்திலிருந்து வேறுபடுத்திக் காட்டுவது விற்றல், வாங்கல் என்ற இரு எதிர்நிலை நிகழ்முறைகளின் நேர்மாறாக்கப்பட்ட வரிசையமைப்பே. இந்த நிகழ்முறைகளிடையே முற்றிலும் வடிவம் குறித்தான இந்த வேறுபாடு ஏதோ ஜாலவித்தை போல அவற்றின் தன்மையை மாற்ற முடிவது எப்படி?

ஆனால், இது மட்டுமன்று. இந்த நேர்மாறாகும் நிகழ்வானது ஒன்றாகக் கொடுக்கல் வாங்கலில் இறங்கும் மூவரில் இருவருக்கு நிகழ்வதில்லை. நான் முதலாளி என்ற முறையில் சரக்குகளை Aஇடம் வாங்கி Bஇடம் விற்கிறேன்; ஆனால் சாமானிய சரக்குடைமையாளர் என்ற முறையில் நான் அவற்றை Bஇடம் விற்று விட்டு, பின் Aஇடமிருந்து புதிய சரக்குகளை வாங்குகிறேன். A, B ஆகியோர் இவ்விரு வகைக் கொடுக்கல் வாங்கல்களிடையே வேறுபாடு எதையும் பார்ப்பதில்லை. ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் அவர்களை நான் பணத்தின் அல்லது சரக்குகளின் உடைமையாளர்களாகவே, வாங்குகிறவர் அல்லது விற்பவராகவே சந்திக்கின்றேன்; அது மட்டுமன்று; இரு வகைக் கொடுக்கல் வாங்கல்களிலுமே நான் வாங்குகிறவர் என்ற விதத்தில் மட்டுமே Aஐயும் விற்பவர் என்ற விதத்தில் மட்டுமே Bஐயும்—ஒருவரைப் பணமாக மட்டுமே, மற்றவரைச் சரக்காக மட்டுமே—எதிர்கொள்கிறேன்; இருவரில் எவரையும் மூலதனமாகவோ, முதலாளியாகவோ எதிர்கொள்வதில்லை; பணம் அல்லது சரக்குக்கு மேலான ஒன்றின் அல்லது பணமும் சரக்கும் உண்டாக்கக் கூடியதற்கும் கூடுதலான எந்த விளைவையும் உண்டாக்கக் கூடிய ஒன்றின் பிரதிநிதியாக எதிர்

கொள்வதில்லை. எனக்கு Aஇடம் வாங்குவதும் Bஇடம் விற்பதும் ஒரு தொடரின் பகுதியே. ஆனால், இந்த இரு செயல்களுக்கு மிடையே தொடர்பிருப்பது எனக்கு மட்டுமே. Bஉடனான என் பரிமாற்றம் பற்றி A அலட்டிக் கொள்வதில்லை; Aஉடனான என் வியாபாரம் பற்றி Bஉம் அலட்டிக் கொள்வதில்லை. வரிசை யமைப்பை நேர்மாறாக்குவதான என் செயலின் சிறப்பு குறித்து அவர்களிடம் சொல்ல முற்படுவேனேயானால், வரிசையமைப் பென நான் சொல்வது தவறு என்றும், கொடுக்கல் வாங்கல் முழுவதுமே வாங்கலுடன் தொடங்கி விற்றலுடன் முடிவதற்கு பதில் விற்றலுடன் தொடங்கி வாங்கலுடன் முடிக்கப்பட்டது என்றும் அவர்கள் என்னிடம் சுட்டிக் காட்டக் கூடும். உண்மையில், என் முதல் செயலான வாங்கல் Aயின் நோக்கில் விற்றல்தானாம்; என் இரண்டாவது செயலான விற்றல் Bஇன் நோக்கில் வாங்கல் தானாம். இத்துடன் நிற்காமல், A, B ஆகியோர் தொடர் முழு வதுமே அனாவசியமானது, எல்லாம் வெறும் ஏமாற்று என்பார் கள்; வருங்காலத்தில் Bஇடம் A நேரடியாக வாங்கிக் கொள்வார், Aஇடம் B நேரடியாக விற்றுக் கொள்வார் என்று அறிவிப்பார் கள். இவ்வாறு கொடுக்கல் வாங்கல் முழுவதுமே சாதாரண சரக்குச் சுற்றோட்டத்தில் ஒரு தனித்த, பூர்த்தி செய்யப்படாத கட்டமாக அமைகிற, Aஇன் நோக்கில் வெறும் விற்றலும், Bஇன் நோக்கில் வெறும் வாங்கலுமான ஒரே செயலாக சுருங்கிப் போகும். எனவே, வரிசையமைப்பு நேர்மாறாவதென்பது சாமானிய சரக்குச் சுற் றோட்டத் துறைக்கு வெளியே நம்மை அழைத்துச் செல்வதில்லை. சுற்றோட்டத்துக்குள் நுழைகிற மதிப்பின் பெருக்கத்துக்கு, ஆதலால் உபரி-மதிப்பின் படைப்புக்கு இடமளிக்கிற ஏதாவது இந்த சாமானியச் சுற்றோட்டத்தில் இருக்கிறதா என்று நாம் ஆராய்தல் வேண்டும்.

சாமானிய நேரடி சரக்குப் பரிவர்த்தனையாக விளங்கும் வடிவிலான சுற்றோட்ட நிகழ்முறையை எடுத்துக் கொள்வோம். இரு சரக்குடைமையாளர்கள் ஒருவரிடம் ஒருவர் வாங்குகையில் எப்போதும் இதுவே நிகழ்கிறது; தீர்வு நாளில் இரு தரப்புக்கும் வர வேண்டிய தொகைகள் சமமாயிருப்பதால் ஒன்றையொன்று ரத்து செய்கின்றன. இந்த நேர்வில் பணம் கணக்குப் பணம் ஆகும். சரக்குகளின் மதிப்பை அவற்றின் விலைகள் மூலம் தெரிவிக்க அது பயன்படுகிறது; ஆனால் உலோகப் பண வடிவத்தில் அவற்றை எதிர்கொள்வதில்லை. பயன்-மதிப்புகளைப் பொறுத்த வரை, இரு தரப்பினருமே ஆதாயமடைவது தெளிவு. இருவருமே பயன்-மதிப்புகள் என்ற முறையில் தங்களுக்குப் பயன்படாத பண்டங் களைக் கொடுத்து விடுகின்றனர். தாங்கள் பயன்படுத்திக் கொள் ளக் கூடிய வேறு பண்டங்களைப் பெறுகின்றனர். இதன்றி இன்னொரு ஆதாயமும் இருக்கக் கூடும். மதுவை விற்று தானி

யத்தை வாங்குகிற A ஆனவர் குறிப்பிட்ட உழைப்பு நேரத்தில் விவசாயியான Bஆல் முடிந்ததை விட அதிக மதுவை உற்பத்தி செய்பவராய் இருக்கலாம். மறு புறம் B ஆனவர் மது தயாரிப்பாள ராகிய Aஆல் முடிந்ததை விட அதிக தானியத்தை உற்பத்தி செய் பவராய் இருக்கலாம். ஆகவே, இருவரும் அவரவருக்கு வேண்டிய தானியம் அல்லது மதுவைப் பரிவர்த்தனையில்லாமல் அவரவரே உற்பத்தி செய்வதைக் காட்டிலும், A அதிக தானியத்தையும் B அதிக மதுவையும் அதே பரிவர்த்தனை-மதிப்புக்கு வாங்க முடி கிறது. எனவே, பயன்-மதிப்பைப் பொறுத்த வரை ''பரிவர்த்தனை என்பது இரு தரப்பினரும் ஆதாயம் அடைகிற கொடுக்கல் வாங்க லாகும்'' என்று கூற நியாயமுண்டு.[138] பரிவர்த்தனை-மதிப்பைப் பொறுத்த வரை இப்படிக் கூற முடியாது. ''ஒருவரிடம் அதிக மது இருக்கிறது; ஆனால் தானியம் இல்லை. வேறொருவரிடம் அதிக தானியம் இருக்கிறது; ஆனால் மது இல்லை. இவ்விருவரும் சந்திக் கையில், 50 என்ற மதிப்புள்ள தானியத்தை அதே மதிப்புள்ள மதுவுக்காகப் பரிவர்த்தனை செய்து கொள்கின்றனர். இந்தச் செயலால் இருவரில் எவருக்கும் பரிவர்த்தனை-மதிப்பு அதிகரிப் பதில்லை. அவ்விருவரும் இந்தச் செயலின் மூலம் பெற்ற மதிப்புக் குச் சமமான மதிப்பை இந்தப் பரிவர்த்தனைக்கு முன்பே பெற் றிருந்தனர்.''[139] சரக்குகளிடையே சுற்றோட்ட ஊடகமாகப் பணத் தைப் புகுத்துவதன் மூலமும், விற்றலையும் வாங்கலையும் இருவேறு செயல்கள் ஆக்குவதன் மூலமும் மேற்கூறிய விளைவு மாறி விடுவதில்லை.[140] ஒரு சரக்கின் மதிப்பு அது சுற்றோட்டத்தினுள் செல்வதற்கு முன்பே அதன் விலையின் மூலம் தெரிவிக்கப் படுகிறது; ஆகவே அது சுற்றோட்டத்துக்குரிய முன்நிபந்தனை யாகுமே தவிர அதன் விளைவாகாது.[141]

ஸ்தூலமற்ற நோக்கில் பார்த்தால், அதாவது சாமானிய சரக்குச் சுற்றோட்டத்தின் விதிகளிலிருந்து நேரடியாக வெளிப்படாத சூழ்நிலைகளை விலக்கி விட்டுப் பார்த்தால், ஒரு பரிவர்த்தனை யில் நிகழ்வது (ஒரு பயன்-மதிப்பின் இடத்துக்கு இன்னொரு

---

138 ''பரிவர்த்தனை என்பது அருமையான காரியம்; இதில் இருதரப்புகளுமே ஆதாயம் அடைகின்றன—எப்போதுமே (!)'' (டெஸ்தூத் டெ திரேஸி: ''Traite de la Volonte et de ses effets.'' பாரிஸ், 1826, பக்கம் 68.) இந்நூல் பிற்பாடு ''Traite d'Econ. Polit.'' என்பதாக வெளிவந்தது.

139 மெர்சியர் டெ லா ரிவீரா, முன் வந்தது, பக்கம் 544.

140 ''இந்த இரு மதிப்புகளில் ஒன்று பணமா, அல்லது இரண்டுமே சாதாரண சரக்குகளா என்பதே கூட கொஞ்சமும் சிரத்தைக்குரியதன்று.'' (மெர்சியர் டெ லா ரிவீரா, முன் வந்தது, பக்கம் 543.)

141 ''மதிப்பைத் தீர்மானிப்பது ஒப்பந்தம் செய்து கொள்ளும் தரப்புகள் அல்ல. அது ஒப்பந்தம் ஏற்படுவதற்கு முன்பே தீர்மானமாகி விட்டது.'' (லெ திரொஸ்னே, முன் வந்தது, பக்கம் 906.)

பயன்-மதிப்பு வருவதைக் கவனியாது விடுவோமானால்) உரு மாற்றமே, சரக்கின் வடிவத்தில் ஒரு மாற்றமே, வேறொன்று மில்லை. அதே பரிவர்த்தனை-மதிப்பு தான், அதாவது பொருள் வடிவாக்கப்பட்ட அதே அளவு சமுதாய உழைப்புதான் ஆரம்ப முதல் கடைசி வரை சரக்குடைமையாளரின் கையில் இருக்கிறது; அது முதலில் அவரது சொந்தச் சரக்கின் வடிவிலும், பின் அவர் அதற்காகப் பரிவர்த்தனையில் பெற்ற பணத்தின் வடிவிலும், கடைசியாக, அந்தப் பணத்தைக் கொண்டு அவர் வாங்குகிற சரக்கின் வடிவிலும் இருக்கிறது. இந்த வடிவ மாற்றத்தால் மதிப் பின் பருமன் மாறுவதில்லை. ஆனால் இந்த நிகழ்முறையில் சரக்கின் மதிப்பு அடைகிற மாற்றம் அதன் பண வடிவத்திலான மாற்றத்தோடு நின்று விடுகிறது. இந்த வடிவம் முதலில் விற் பனைக்கு வரும் சரக்கின் விலையாகவும், பிறகு உள்ளபடியே ஒரு பணத் தொகையாகவும் — இப்பணத் தொகை ஏற்கெனவே விலை யின் மூலம் தெரிவிக்கப்பட்டதுதான் — கடைசியாக, ஒரு சமதைச் சரக்கின் விலையாகவும் நிலவுகிறது. இந்த வடிவ மாற்றத்தைத் தனித்து எடுத்துக் கொண்டால், அது £5 நோட்டை சவரன்களாக வும், அரைச் சவரன்களாகவும், ஷில்லிங்குகளாகவும் மாற்றுவதைப் போன்றதே ஆகும்; அதனால் மதிப்பின் அளவில் மாற்றமேதும் ஏற்படுவதில்லை. ஆகவே, சரக்குகளின் சுற்றோட்டம் அவற்றின் மதிப்புகளது வடிவத்தில் மட்டுமே மாற்றத்தை ஏற்படுத்துகிறது என்றும், மேலும் இடையூறான தாக்கங்களிலிருந்து விடுபட்டிருக் கிறது என்றும் கொள்வோமாயின், அது சமதைகளின் பரிவர்த் தனையாகத்தான் இருக்க வேண்டும். கொச்சைப் பொருளாதாரத் துக்கு மதிப்பின் இயல்பு பற்றி ஒன்றும் தெரியாதென்றாலும், அது சுற்றோட்ட நிகழ்வுகளை அவற்றின் பரிசுத்தமான நிலையில் பரிசீலிக்க ஆசைப்படும் போதெல்லாம், வழங்கலும் வேண்டலும் [supply and demand] சமமானவை என்று அனுமானித்துக் கொள் கிறது; இவ்வனுமானத்தின் பொருள் அவை விளைவெதையும் உண்டாக்குவதில்லை என்பதே. ஆகவே, பரிவர்த்தனை செய்யப் படும் பயன்-மதிப்புகளைப் பொறுத்த வரை, வாங்குகிறவர், விற்கிறவர் இருவருமே ஏதேனும் ஆதாயம் பெறக் கூடும் என் றாலும்,. பரிவர்த்தனை-மதிப்புகளைப் பொறுத்த வரை இப்படிச் சொல்வதற்கில்லை. ''எங்கே சமத்துவம் நிலவுகிறதோ அங்கே ஆதாயத்துக்கிடமில்லை''[142] என்றுதான் நாம் இப்போது சொல்ல வேண்டும். சரக்குகள் அவற்றின் மதிப்புகளிலிருந்து வேறுபடும் விலைகளுக்கு விற்கப்படலாம் என்பது மெய்தான். ஆனால், இந்த வேறுபாடுகள் சரக்குப் பரிவர்த்தனை விதிகளை மீறியே ஏற்படுவ

---

[142] ''Dove e egualita non e lucro.'' (காலியானி, ''Della Moneta in Custodi, Parte Moderna,'' பாகம் iv., பக்கம் 244.)

தாகக் கருத வேண்டும்.[143] சரக்குப் பரிவர்த்தனை, அதன் இயல்பான நிலையில் சமதைகளின் பரிவர்த்தனையே ஆதலால் மதிப்பை அதிகமாக்குவதற்கான வழியன்று.[144]

எனவே, சரக்குச் சுற்றோட்டத்தை உபரி-மதிப்பின் தோற்றுவாயாக வர்ணிக்கும் முயற்சிகள் அனைத்தின் பின்னேயும் ஒரு மாறாட்டப் பிழை, பயன்-மதிப்பையும் பரிவர்த்தனை-மதிப்பையும் குழப்படி செய்யும் பிழை மறைந்துள்ளது. உதாரணமாக, காண்டிலக் கூறுகிறார்: ''சரக்குப் பரிவர்த்தனையில் மதிப்புக்கு பதில் மதிப்பைத் தருகிறோம் என்பது உண்மையன்று. மாறாக, ஒவ்வொரு நிலையிலும் இரு பேரத் தரப்புகள் ஒவ்வொன்றும் பெரிய மதிப்புக்கு பதில் சிறிய மதிப்பையே தருகிறது. நாம் உண்மையாகவே சம மதிப்புகளைப் பரிவர்த்தனை செய்து கொண்டோம் என்றால், எந்தத் தரப்பும் இலாபமடைய முடியாது. ஆயினும் இரு தரப்புகளுமே ஆதாயமடைகின்றன, அல்லது ஆதாயம் அடைந்தாக வேண்டும். ஏன்? ஒரு பொருளின் மதிப்பு முழுக்க முழுக்க நமது தேவைகளுடன் அதற்குள்ள சார்புறவிலேயே அடங்கியுள்ளது. ஒருவருக்கு அதிகமென்பது மற்றவருக்குக் குறைவாயும், ஒருவருக்கு குறைவென்பது மற்றவருக்கு அதிகமாயும் உள்ளது. நம் சொந்த நுகர்வுக்கு அவசியப்படும் பண்டங்களை நாம் விற்க முன் வருவதாகக் கொள்ளக் கூடாது...நமக்கு வேண்டியதைப் பெறும் பொருட்டு வேண்டாததைக் கொடுக்க விரும்புகிறோம்; அதிகமானதற்கு பதில் குறைவானதாகக் கொடுக்க விரும்புகிறோம். ...பரிவர்த்தனை செய்யப்படுகிற பண்டங்கள் ஒவ்வொன்றும் ஒரே அளவிலான தங்கத்துடன் சம மதிப்புள்ளவையாக இருந்த போதெல்லாம், பரிவர்த்தனையில் மதிப்புக்கு பதில் மதிப்பு தரப்படுவதாக நினைப்பது இயல்பாகவே இருந்தது. ...ஆனால், நாம் கணக்கில் கொள்ள வேண்டிய இன்னொரு அமிசம் உள்ளது. நாம் இருவருமே தேவையற்றதைத் தேவையானதற்குப் பரிவர்த்தனை செய்து கொள்கிறோமா என்பதே கேள்வி.''[145] காண்டிலக் பயன்-மதிப்பைப் பரிவர்த்தனை-மதிப்புடன் போட்டுக் குழப்பிக் கொள்வதோடு, சரக்கு உற்பத்தி நன்கு வளர்ந்த சமுதாயத்தில்

---

143 ''ஏதேனும் வெளிக் காரணத்தால் விலை குறைந்தோ கூடியோ போனால், பரிவர்த்தனை ஒரு தரப்புக்கு பாதகம் ஆகி விடுகிறது; அப்போது சமத்துவம் மீறப்படுகிறது; ஆனால் இந்த மீறல் அந்தக் காரணத்திலிருந்து எழுவதே தவிர பரிவர்த்தனையிலிருந்தே எழுவதன்று.'' (லெ திரொஸ்னே, முன் வந்தது, பக்கம் 904.)

144 ''பரிவர்த்தனை சமத்துவத்தின் அடிப்படையிலான ஒப்பந்தமாகும் என்பதே இயற்கை. அதாவது இரு சம மதிப்புகளிடையே அது நடந்தேறுகிறது. ஆகவே அது செல்வந்தர் ஆவதற்குப் பயன்படும் வழியன்று; ஏனென்றால் பெறப்படும் அளவும் தரப்படும் அளவும் ஒன்றே.'' (லெ திரொஸ்னே, முன் வந்தது, பக்கம் 903.)

145 காண்டிலக்: ''Le Commerce et la Gouvernement'' (1776). Edit. Daire et Molinari in the ''Melanges d'Econ. Polit.'' பாரிஸ், 1847, பக்கம் 267, 291.

ஒவ்வொரு உற்பத்தியாளரும் தனக்கு வேண்டிய வாழ்வுச் சாதனங்களைத் தானே உற்பத்தி செய்து கொண்டு, தனது தேவைகள் போக எஞ்சியவற்றை மட்டும் சுற்றோட்டத்தில் விடுகிறார் என்றும் சிறுபிள்ளைத்தனமான முறையில் கற்பித்துக் கொள்வதை மேற்கண்ட வாசகத்தில் பார்க்கிறோம்.[146] இருப்பினும் இக்காலப் பொருளாதார அறிஞர்கள் காண்டிலக்கின் வாதத்தை அடிக்கடி பயன்படுத்துகின்றனர். சரக்குப் பரிவர்த்தனை அதன் வளர்ச்சியடைந்த வடிவமான வாணிபத்தில் உபரி-மதிப்பை உற்பத்தி செய்யக் கூடியது என்று நிரூபிக்க வேண்டி வரும் போதெல்லாம், காண்டிலக்கின் வாதத்தையே முக்கியமாய்க் கையாளுகின்றனர். உதாரணமாக, ''வாணிபம் உற்பத்திப் பண்டங்களின் மதிப்பைக் கூடுதலாக்குகிறது. ஏனென்றால், நுகர்வாளர்களின் கையிலுள்ள அதே உற்பத்திப் பண்டங்கள் உற்பத்தியாளர்களின் கையில் இருப்பதை விட அதிகப் பெறுமானமுள்ளவை; உற்பத்திச் செயல் என அதைக் கருதுவதில் பிழையேதுமில்லை.''[147] ஆனால்; சரக்குகளுக்குத் திரும்பத் திரும்ப இரு முறை, அவற்றின் பயன்-மதிப்பின் விளைவாக ஒரு முறையும், மீண்டும் அவற்றின் மதிப்பின் விளைவாக ஒரு முறையும், விலை தரப்படுவதில்லை. சரக்கின் பயன்-மதிப்பு விற்பவரை விட வாங்குபவருக்கு அதிகம் உபயோகமானது என்றாலும், அதன் பண வடிவம் விற்பவருக்கே அதிகம் உபயோகமானது. இல்லையேல் அவர் அதை விற்பாரா? எனவே, உதாரணமாக, வாங்குபவர் காலுறைகளைப் பணமாக மாற்றுவதன் மூலம் ''உற்பத்திச் செயல்'' புரிகிறார் என்று கூறுவதிலும் ''பிழையேதுமில்லை'' எனலாம்.

சம பரிவர்த்தனை-மதிப்புள்ளவையும், அதனால் சமதைகளுமான சரக்குகள், அல்லது சரக்குகளும் பணமும் பரிவர்த்தனை செய்யப்பட்டால், யாரும் தான் சுற்றோட்டத்தில் விடுவதை விட அதிகமான மதிப்பை எடுத்துக் கொள்வதில்லை என்பது வெளிப்படை. உபரி-மதிப்பின் ஆக்கத்துக்கு இங்கே வழியேதுமில்லை. சரக்குச் சுற்றோட்டம் இயல்பான வடிவில் நடப்பதற்கு சமதைகளின் பரிவர்த்தனை தேவை. ஆனால் நடைமுறையில், இந்நிகழ்

---

146 எனவே லெ திரொஸ்னே தமது நண்பர் காண்டிலக்குக்கு நியாயமாகவே பின்வருமாறு பதில் சொல்கிறார்: ''வளர்ச்சி பெற்ற ஒரு சமுதாயத்தில் எந்த ஒன்றும் தேவைக்கதிகமானதன்று.'' அதே நேரத்தில் கிண்டல் செய்யும் விதத்தில் அவர் குறிப்பிடுகிறார்: ''பரிவர்த்தனை செய்து கொள்கிறவர்கள் இருவருமே சம தொகைக்கு அதிகமானதைப் பெற்று, சம தொகைக்குக் குறைவானதைக் கொடுத்தால், இருவரும் பெறுவது ஒன்றேதான்.'' காண்டிலக் பரிவர்த்தனை-மதிப்பின் தன்மை பற்றி ஒன்றும் தெரியாதவர் என்பதால்தான், பேராசிரியர் வில்ஹெல்ம் ரோஷர் தமது சிறுபிள்ளைத்தனமான கருத்துகள் சரியானவைதாம் என்று நிரூபிப்பதற்கு அவரையே சரியான ஆளென்று தேர்ந்தெடுக்கிறார். பார்க்கவும்: ரோஷரின் ''Die Grundlagen der Nationalokonomie, Dritte Auflage,'' *1858*.

147 சா. பி. நியூமன்: ''அரசியல் பொருளாதாரத்தின் அடிப்படை அமிசங்கள்,'' ஆண்டோவர் மற்றும் நியூயார்க், *1835*, பக்கம் *175*.

முறையானது அதன் இயல்பான வடிவில் நடந்தேறுவதில்லை. எனவே, சமதையல்லாதவற்றின் பரிவர்த்தனை நடப்பதாகக் கொள்வோம்.

எப்படியும் சரக்குடைமையாளர்களே சரக்குச் சந்தைக்கு அடிக்கடி போய் வருகின்றனர்; இந்த ஆட்கள் ஒருவர் மீது ஒருவர் செலுத்துகிற சக்தி அவர்களது சரக்குகளின் சக்தியே அன்றி வேறில்லை. இந்தச் சரக்குகள் பல்வகைப்பட்ட பொருட்களாய் இருப்பது பரிவர்த்தனைச் செயலுக்குப் பொருளாயத ஊக்கமாக அமைகிறது; வாங்குவோரையும் விற்போரையும் பரஸ்பரம் சார்புள்ளவர்கள் ஆக்குகிறது; ஏனெனில் அவர்களில் யாரிடமும் தம் சொந்தத் தேவைகளுக்குரிய பொருள் இல்லை. ஒவ்வொருவரும் இன்னொருவரின் தேவைகளுக்குரிய பொருளை வைத்திருக்கிறார். சரக்குகளது பயன்-மதிப்புகளின் இந்தப் பொருளாயத வேறுபாடுகள் அன்னியில் சரக்குகளிடையே ஒரே ஒரு வேறுபாடுதான் உள்ளது; இந்த வேறுபாடு அவற்றின் தசையுருவத்துக்கும் விற்றலால் அவை மாற்றப்பட்டு அடைகிற வடிவத்துக்கும் இடையிலான வேறுபாடாகும்; சரக்குகளுக்கும் பணத்துக்கும் இடையிலான வேறுபாடாகும். ஆதலால் சரக்குகளை வைத்திருக்கும் விற்போராகவும், பணத்தை வைத்திருக்கும் வாங்குவோராகவும் மட்டுமே சரக்குடைமையாளர்களை வேறுபடுத்தலாம்.

அப்படியானால், ஏதோ காரணம் தெரியாத தனிச் சலுகையால், விற்பவர் தன் சரக்குகளை அவற்றின் மதிப்புக்கும் கூடுதலாக, 100 பெறுமானமுள்ளதை 110க்கு விற்க முடிவதாக வைத்துக் கொள்வோம்; இந்த நேர்வில் விலை பெயரளவில் 10% உயர்த்தப்படுகிறது. எனவே, விற்பவர் 10 என்ற உபரி-மதிப்பைப் பையில் போட்டுக் கொள்கிறார். ஆனால் விற்று முடித்ததும் அவர் வாங்குபவராகிறார். மூன்றாவது சரக்குடைமையாளர் ஒருவர் இப்போது விற்பவராக அவரிடம் வருகிறார்; அவரும் தன் சரக்குகளை 10% விலை கூட்டி விற்கிற தனிச் சலுகையைப் பெற்றுள்ளார். நமது நண்பர் விற்பவர் என்ற முறையில் ஆதாயமாகப் பெற்ற 10ஐ வாங்குபவர் என்ற முறையில் இழந்து விடுகிறார்.[148] எல்லாச் சரக்குடைமையாளர்களும் தத்தமது சரக்குகளை அவற்றின் மதிப்புக்கு 10% கூடுதலாக ஒருவரிடம் ஒருவர் விற்கின்றனர் என்பதே நிகர விளைவு. இதுவும் அச்சரக்குகளை அவற்றின் உண்மை மதிப்புக்கே விற்பதன் விளைவும் ஒன்றுதான். மதிப்புகள் தங்க எடையின் வாயிலாகத் தெரிவிக்கப்படுவதற்கு பதில் வெள்ளி

148 "உற்பத்திப் பண்டத்தின் பெயர்-மதிப்பைக் கூடுதலாக்குவதால்...விற்பவர்களின் செல்வம் கூடுதலாவதில்லை....ஏனெனில் விற்பவர்கள் என்ற முறையில் அவர்கள் அடையும் ஆதாயத்தை, வாங்குபவர்கள் என்ற முறையில் அப்படியே செலவழித்து விடுகின்றனர்." ("நாடுகளின் செல்வம் பற்றிய அடிப்படைக் கோட்பாடுகள்," லண்டன், 1797, பக்கம் 66.)

எடையின் வாயிலாகத் தெரிவிக்கப்படும்போது ஏற்படக் கூடிய அதே விளைவுதான் விலைகள் மேற்கூறியவாறு பொதுவாகவும், பெயரளவிலும் உயரும் போதும் ஏற்படும். சரக்குகளின் பெயர்-விலைகள் உயரும்; ஆனால் அவற்றின் மதிப்புகளிடையிலான உண்மை உறவு மாறாது நீடிக்கும்.

இதற்கு நேர்மாறாக சரக்குகளை அவற்றின் மதிப்புக்கும் குறைவாக வாங்குகிற தனிச் சலுகை வாங்குபவருக்கு இருப்பதாகக் கொள்வோம். இப்படி வாங்குகிறவர் பிற்பாடு விற்பவராக மாறுவார் என்பதை இனி நாம் மனத்திலிருத்த வேண்டியதில்லை. அவர் வாங்குபவர் ஆவதற்கு முன்னர் விற்பவராய் இருந்தார்; ஆகவே, விற்பவராக 10% ஆதாயமடைவதற்கு முன்னரே வாங்கு பவராக 10% இழந்து விட்டார்.[149] ஆக, யாவும் இருந்த படியே இருக்கிறது.

ஆதலால், உபரி-மதிப்பின் உருவாக்கத்துக்கும், எனவே பணம் மூலதனமாக மாற்றப்படுவதற்கும், சரக்குகள் அவற்றின் மதிப்புக்கும் கூடுதலாக விற்கப்படுகின்றன என்று வைத்துக் கொள்வதன் மூலமோ, அவை அவற்றின் மதிப்புக்கும் குறைவாக வாங்கப் படுகின்றன என்று வைத்துக் கொள்வதன் மூலமோ விளக்கமளித்து விட முடியாது.[150]

கர்னல் டாரென்சின் பாணியில் சம்பந்தமில்லாத விஷயங் களைப் புகுத்துவதன் மூலம் பிரச்சினை எவ்விதத்தும் எளிதாகப் போவதில்லை: "பயன்திறனுள்ள வேண்டல் என்பது நேரடியான அல்லது சுற்றடியான பண்டமாற்றின் மூலம், சரக்குகளின் உற்பத் திக்குச் செலவாவதை விடச் சிறிது அதிகப் பகுதி மூலதனத்தை அவற்றுக்காக அளிப்பதற்கு நுகர்வோருக்குள்ள சக்தியிலும் நாட்டத் திலும்(!)அடங்கியுள்ளது."[151] சுற்றோட்டத்தைப் பொறுத்த வரை, உற்பத்தியாளர்களும் நுகர்வாளர்களும் வாங்குகிறவர்களாகவும் விற்கிறவர்களாகவுமே சந்திக்கின்றனர். உற்பத்தியாளர் அடைகிற உபரி-மதிப்பின் தோற்றுவாய் நுகர்வாளர்கள் சரக்குகளுக்கு

---

149 "ஏதேனும் ஓர் உற்பத்திப் பண்டத்தின் குறிப்பிட்ட அளவு 24 லீவ்ர் மதிப்புடையதாக இருக்க அதனை 18 லீவ்ருக்கு விற்குமாறு ஒருவரைக் கட்டாயப்படுத்தினால், வாங்குவதற்கு அதே தொகையைப் பயன்படுத்தும் போது 24 லீவ்ருக்கு வாங்கியிருக்கக் கூடிய அளவு உற்பத்திப் பண்டத்தை 18 லீவ்ருக்கு அவர் பெறுவார்." (லெ திரொஸ்னே, முன் வந்தது, பக்கம் 897.)

150 "விற்பவர் ஒருவர் இதர விற்போரின் சரக்குகளுக்கு மொத்தத்தில் அதிக விலை கொடுக்க ஒப்புக் கொண்டால்தான் தனது சரக்குகளுக்குரிய விலையைப் பெறுவதில் வெற்றி பெற இயலும்; இதே காரணத்தால், ஒரு நுகர்வாளர் தாம் விற்கிற பண்டங்களின் விலையைக் குறைக்க இணங்கினால்தான் அவர் வாங்க வேண்டிய பண்டங்களுக்குக் குறைந்த விலை தர முடியும்; இதுவே இயல்பான நிலவரம்." (மொர்சியர் டெ லா ரிவீரா, முன் வந்தது, பக்கம் 555.)

151 ரா. டாரென்ஸ்: "செல்வ உற்பத்தி பற்றிய கட்டுரை," லண்டன், 1821, பக்கம் 349.

அவற்றின் மதிப்புக்கும் கூடுதலாக விலை கொடுக்கின்றனர் என்ற உண்மையில் அடங்கியிருப்பதாக வற்புறுத்துவதானது, சரக்குடைமையாளர் விற்பவர் என்ற முறையில் அதிக விலைக்கு விற்கிற தனிச் சலுகையைப் பெற்றிருக்கிறார் என்று சொல்வதற்கே ஒப்பாகும். விற்பவர் தானே சரக்குகளை உற்பத்தி செய்திருக்கிறார், அல்லது அவற்றின் உற்பத்தியாளரைப் பிரதிநிதித்துவப் படுத்துகிறார்; ஆனால் அதே அளவுக்கு, வாங்குபவரும் தன் பணத்தால் குறிக்கப்படும் சரக்குகளை உற்பத்தி செய்திருக்கிறார், அல்லது அவற்றின் உற்பத்தியாளரைப் பிரதிநிதித்துவப்படுத்துகிறார். அவர்களிடையிலான வேறுபாடு, ஒருவர் வாங்குகிறார், மற்றவர் விற்கிறார் என்பதே. உற்பத்தியாளர் என்ற பெயரில் சரக்குடைமையாளர் சரக்குகளை அவற்றின் மதிப்புக்கும் கூடுதலாக விற்கிறார், நுகர்பவர் என்ற பெயரில் அவற்றுக்கு அதிகப்படியான விலை கொடுக்கிறார் என்று சொல்வதால் நாம் ஓரடி கூட முன்னேறுவதில்லை.[152]

முரணின்றி வாதிட வேண்டுமானால், உபரி-மதிப்பின் தோற்றுவாய் பெயரளவிலான விலையுயர்வில், அல்லது அதிக விலைக்கு விற்றிட விற்பவருக்குள்ள தனிச் சலுகையில் அடங்கியுள்ளது என்ற பொய்க் கருத்தை ஆதரிப்பவர்கள், விற்காமல் வாங்க மட்டுமே செய்கிற, அதாவது உற்பத்தி செய்யாமல் நுகர மட்டுமே செய்கிற ஒரு வகையினர் இருப்பதாய் வைத்துக் கொண்டாக வேண்டும். நாம் வந்தடைந்திருக்கும் நிலையிலிருந்து, அதாவது சாமானியச் சுற்றோட்டத்தின் நோக்கு நிலையிலிருந்து பார்க்கையில், இப்படியொரு வகையினர் இருப்பதாகக் கூற நியாயமேதுமில்லை. ஆயினும் இப்படியொரு வகையினர் இருப்பதாக வைத்துக் கொண்டு பரிசீலிப்போம். இவ்வகையினர் இடைவிடாமல் பண்டங்கள் வாங்கப் பயன்படும் பணமானது சரக்குடைமையாளர்களின் பையிலிருந்தே இவர்களது பைக்குள், பரிவர்த்தனையேதுமின்றி, இலவசமாக, வலிமையாலோ உரிமையாலோ, இடைவிடாமல் வந்து குவிந்தாக வேண்டும். இப்படியொரு வகையினரிடம் சரக்குகளை அவற்றின் மதிப்புக்கும் கூடுதலாக விற்பது ஏற்கெனவே இவர்களுக்குத் தந்திருந்த பணத்தில் ஒரு பகுதியை ஏமாற்றிப் பறிப்பதாகும்.[153]

---

152 "இலாபம் நுகர்வாளர்களால் கொடுக்கப்படுவதாகும் என்ற கருத்து நிச்சயமாக அபத்தமானது. யார் அந்த நுகர்வாளர்கள்?" (ஜா. ராம்சே: "செல்வ வினியோகம் பற்றிய கட்டுரை." எடின்பரோ, 1836, பக்கம் 183.)

153 "ஒருவருக்குத் தன் சரக்கை வாங்க ஆள் தேவைப்படும் போது, அவர் இன்னொருவரிடம் பணம் கொடுத்து, அதனை வாங்கச் சொல்ல வேண்டும் என்றா திரு மால்தஸ் சிபாரிசு செய்கிறார்?" ரிக்கார்டோவின் சீடர் ஒருவர் மால்தசிடம் கோபமாக இப்படிக் கேட்கிறார். மால்தஸ் அவரது சீடரான பாதிரி சால்மர்ஸைப் போலவே சாமானிய வாங்குவோர் அல்லது நுகர்வோரான இந்த வகையினரை பொருளாதார வழியில் போற்றிப் புகழ்கிறார். (பார்க்கவும்: "வேண்டலின் இயல்பு, நுகர்வின் அவசியம் ஆகியவை குறித்து சமீபத்தில் திரு மால்தஸ் முன்வைத்த கோட்பாடுகளைப் பற்றிய ஆய்வு," லண்டன், 1821, பக்கம் 55.)

இவ்வாறுதான் ஆசியா மைனரைச் சேர்ந்த நகரங்கள் புராதன ரோமாபுரிக்கு ஆண்டுதோறும் கப்பப் பணம் கட்டி வந்தன. இந்தப் பணத்தைக் கொண்டு ரோமாபுரி அவர்களிடமிருந்து சரக்குகளை வாங்கியது. அதிக விலை கொடுத்து வாங்கியது. மாகாணத்தவர் ரோமானியர்களை ஏமாற்றினர்; தங்களை வெற்றி கொண்டோரிட மிருந்து கப்பத்தின் ஒரு பகுதியை இவ்வாறு வர்த்தகத்தின் மூலம் திரும்பப் பெற்றனர். ஆனாலும் கூட உண்மையில் ஏமாற்றப்பட்ட வர்கள் வெற்றி கொள்ளப்பட்டோரே. அவர்களுடைய பணத் தைக் கொண்டே அவர்களிடம் சரக்குகள் வாங்கப்பட்டன. செல் வந்தராவதற்கோ உபரி-மதிப்பை உருவாக்குவதற்கோ இதுவன்று வழி.

ஆகவே, விற்போர் அதே போது வாங்குவோராகவும், வாங்கு வோர் அதே போது விற்போராகவும் இருக்கிற பரிவர்த்தனையின் வரம்புகளை நாம் கடக்கலாகாது. நமக்கேற்படுகிற சிக்கல், கதாபாத்திரங்களைத் தனியாட்களாகக் கொள்ளாமல் உருவகங் களாகக் கொண்டதால் தோன்றியிருக்குமோ?

A ஆனவர் கெட்டிக்காரர் என்றும், B அல்லது Cஇடம் ஆதாய மடைகிறார், அதே நேரத்தில் அவர்கள் தன்னிடம் ஆதாயமடை யாமல் பார்த்துக்கொள்கிறார் என்றும் வைத்துக் கொள்வோம். A ஆனவர் £40 பெறுமான மதுவை Bஇடம் விற்று, அவரிட மிருந்து £50 மதிப்புக்குரிய தானியத்தை பதிலுக்குப் பெறுகிறார்; A தனது £40ஐ £50ஆக மாற்றுகிறார்; தன்னிடமுள்ள பணத்தை அதிகமாக்கிக் கொள்கிறார்; தன் சரக்குகளை மூலதனமாக மாற்றிக் கொள்கிறார். இதை நாம் இன்னும் சற்று நெருங்கிச் சென்று ஆராய்வோம். பரிவர்த்தனைக்கு முன்னதாக, Aஇன் கையில் £40 பெறுமானமுள்ள மதுவும், Bஇன் கையில் £50 பெறுமானமுள்ள தானியமும், ஆக £90 மொத்த மதிப்பு இருக்கக் கண்டோம். பரிவர்த்தனைக்குப் பின்னரும், அதே மொத்த மதிப்பான £90 இருக்கக் காண்கிறோம். சுற்றோட்டத்திலுள்ள மதிப்பு இம்மியளவும் அதிகரித்து விடவில்லை; Aக்கும் Bக்கும் இடையே அது பங்கிடப் படும் முறை மட்டும்தான் மாறுபடுகிறது. Bக்கு மதிப்பிழப்பாக இருப்பது Aக்கு உபரி-மதிப்பாக இருக்கிறது. ஒருவருக்குக் "கழித் தல்" ஆக இருப்பது மற்றவருக்குக் "கூட்டல்" ஆக இருக்கிறது. பரிவர்த்தனை என்ற சம்பிரதாயம் இல்லாமலே, Bஇடமிருந்து A நேரடியாக £10 திருடியிருந்தாலும் இதே மாற்றம் நிகழ்ந்திருக்கும். யூதர் ஒருவர் ஆன் அரசியாரின் ஃபார்திங்கு காசை ஒரு கினிக்கு விற்பதனால் நாட்டிலுள்ள உயர்நிலை உலோகங்களின் அளவு எப்படி பெருக முடியாதோ, அதே போல் சுற்றோட்டத்திலுள்ள மதிப்புகளைப் பங்கிடுவதில் மாற்றம் செய்வதால் அம்மதிப்பு களின் மொத்த அளவு பெருக முடியாது. ஒட்டுமொத்தமாய்ப் பார்க்கையில் எந்த நாட்டின் முதலாளி வர்க்கமும் தன்னைத் தானே

ஏமாற்றிக் கொள்ள முடியாது.[154]

அப்படியானால், எவ்வளவுதான் புரட்டிப் புரட்டிப் போட்டாலும் உண்மை மாறுவதில்லை. சமதைகளின் பரிவர்த்தனையால் உபரி-மதிப்பு விளையவில்லை; சமதையல்லாதவற்றின் பரிவர்த்தனையாலும் உபரி-மதிப்பு விளையவில்லை.[155] சுற்றோட்டம் அல்லது சரக்குப் பரிவர்த்தனை எவ்வித மதிப்பையும் ஈன்றெடுப்பதில்லை.[156]

எனவே, நவீன காலச் சமுதாயத்தின் பொருளாதார ஒழுங்கமைப்பை நிர்ணயிக்கிற மூலதன வடிவத்தை — மூலதனத்தின் இந்த முதன்மையான வடிவத்தை — பகுத்தாய்கையில் நாம் அதன் நன்கு அறிமுகமான வடிவங்களை (பழமைப்பட்ட வடிவங்களை என்றும் சொல்லலாம்), அதாவது வணிக மூலதனத்தையும் [merchant's capital] வட்டி மூலதனத்தையும் [money-lender's capital] பரிசீலனையிலிருந்து அறவே விட்டு விட்டதற்கான காரணம் இப்போது தெளிவாகிறது.

M — C — M' என்ற சுற்றினை, விலை கூட்டி விற்கும் பொருட்டு வாங்குவதை சுத்தமான வணிக மூலதனத்தில் தெளிந்த உருவில் காணலாம். ஆனால் இந்த இயக்கம் முழுக்க முழுக்க சுற்றோட்டத் துறைக்குள்ளேயே நடைபெறுகிறது. ஆயினும் பணம் மூலதனமாக மாற்றம் அடைவதற்கு, உபரி-மதிப்பு உண்டாவதற்கு,

---

154 தெஸ்தூத் டெ திரேஸி பிரெஞ்சுக் கழகத்தின் உறுப்பினர் என்ற போதிலும் (அல்லது உறுப்பினர் என்பதாலோ) இதற்கெதிரான கருத்தைக் கொண்டிருந்தார். அவர் கூறுகிறார்: தொழில் துறை முதலாளிகள் இலாபமடைவது எப்படியென்றால், "அவர்கள் எல்லாரும் உற்பத்திக்கு செலவாவதை விட அதிகமாக விலை வைத்து விற்கின்றனர். அவர்கள் விற்பது யாரிடம்? முதலாவதாகத் தம்மிடையே ஒருவரிடம் ஒருவர்." (முன் வந்தது, பக்கம் 239.)

155 "இரு சம மதிப்புகளின் பரிவர்த்தனை சமுதாயத்திலிருக்கும் மதிப்புகளின் அளவைக் கூட்டுவதோ குறைப்பதோ இல்லை. இதே போல், சமமில்லாத இரு மதிப்புகளின் பரிவர்த்தனை...ஒருவரின் செல்வத்தைக் குறைத்து வேறொருவரின் செல்வத்தைக் கூட்டுகிறதென்றாலும் சமுதாய மதிப்புகளின் மொத்தத் தொகையில் எந்த மாற்றமும் ஏற்படுத்துவதில்லை." (மா. ப. ஸே, முன் வந்தது, பாகம் II., பக்கம் 443, 444.) ஸே, இந்தக் கூற்றிலிருந்து விளையும் முடிவுகளைப் பற்றி கவலைப்படாமலே, அநேகமாக ஒரு சொல்லைக் கூட விடாமல் அப்படியே இதனை பிசியோக்கிராட்டுகளிடமிருந்து இரவல் வாங்குகிறார். திருவாளர் ஸே அவரது காலத்தில் முற்றிலும் மறக்கப்பட்டு விட்ட பிசியோக்கிராட்டுகளின் நூல்களைத் தமது நூல்களின் "மதிப்பைப்" பெருக்கிக் கொள்ளும் காரியத்துக்காகப் பயன்படுத்திக் கொண்டது எப்படி என்பதைப் பின்வரும் உதாரணம் காட்டும். "உற்பத்திப் பண்டங்களைக் கொண்டுதான் உற்பத்திப் பண்டங்களை வாங்க முடியும்" (முன் வந்தது, பாகம் II., பக்கம் 441) என்ற அவரது பிரபல மணிவாசகம் மூல பிசியோக்கிராட்டு நூலில் "உற்பத்திப் பண்டங்களைக் கொண்டுதான் உற்பத்திப் பண்டங்களுக்கு விலை தர முடியும்" (லெ திரொஸ்னே, முன் வந்தது, பக்கம் 899) என்றவாறிருக்கக் காணலாம்.

156 "உற்பத்திப் பண்டங்களுக்கு பரிவர்த்தனையால் மதிப்பு சிறிதும் வரப் பெறுவதில்லை." (பி. வேலாண்டு: "அரசியல் பொருளாதாரத்தின் அடிப்படை அமிசங்கள்." பாஸ்டன், 1843, பக்கம் 169.)

சுற்றோட்டம் மட்டுமே காரணமாக முடியாது என்பதால், சமதைகள் பரிவர்த்தனை செய்யப்படும் நிலை உள்ள வரை, வணிக மூலதனம் என்பதே சாத்தியமற்ற ஒன்றாய்த் தோன்றும்.[157] எனவே, விற்கிற, வாங்குகிற உற்பத்தியாளரிடையே ஒட்டுண்ணியாக வந்தமர்கிற வணிகர் இவ்விரு சாராரிடத்தும் அடைகிற இரட்டை அனுகூலத்திலிருந்தே அது உதிக்க முடியும் என்றும் தோன்றும். ''சூறையாடுவதே போர்; பொதுப்பட ஏமாற்றுவதே வாணிபம்''[158] என்று பிராங்க்ளின் கூறுவது இந்த அர்த்தத்திலேயே. வணிகர்களின் பணம் மூலதனமாக மாற்றப்படுவதற்கு உற்பத்தியாளர்கள் ஏமாற்றப்படுவதே காரணம் என்று சொல்லாமல் வேறுவிதமாய் அதற்கு விளக்கமளிக்க வேண்டுமானால், வரிசையாகப் பல இடைநிலைப் படிகள் அவசியமாயிருக்கும். சாமானிய சரக்குச் சுற்றோட்டத்தை மட்டுமே நாம் அனுமானித்துக் கொண்டுள்ள இப்போதைய நிலையில் இந்த இடைநிலைப் படிகளுக்கு இடமில்லை.

வணிக மூலதனம் பற்றி நாம் கூறியிருப்பது வட்டி மூலதனத்துக்கு இன்னுமதிகமாகவே பொருந்தும். வணிக மூலதனத்தில், சந்தையில் விடப்படும் பணம், பெருகிய அளவில் சந்தையிலிருந்து விலக்கியெடுக்கப்படும் பணம் என்ற இரு முனைகளும் குறைந்தது ஒரு வாங்கலாலும் ஒரு விற்றலாலும், வேறு விதமாகச் சொன்னால் சுற்றோட்டத்தின் இயக்கத்தால், இணைக்கப்பட்டாவது இருக்கின்றன. வட்டி மூலதனத்தில், M — C — M′ இடைநிலையின்றி M — M′ என்ற இரு முனைகளாகச் சுருக்கப்படுகிறது. பணம் இன்னும் அதிகப் பணத்துக்காகப் பரிவர்த்தனை செய்யப்படுகிறது. பணத்தின் தன்மைக்கு ஒவ்வாத, எனவே சரக்குச் சுற்றோட்டத்தின் நோக்கு நிலையிலிருந்து விளக்க முடியாத வடிவமாகும் இது. ஆகவேதான் அரிஸ்டாட்டில் சொல்கிறார்: ''பணவியல் என்பது ஒரு பகுதி வாணிபத்துக்கும், மறு பகுதி பொருளாதாரத்துக்கும் உரியதான இரட்டை விஞ்ஞானமாகும்; பொருளாதாரம் அவசியமானதாகவும் போற்றத் தக்கதாகவும் இருக்கிறது; வாணிபம் சுற்றோட்டத்தைச் சார்ந்ததாகவும் (இயற்கையை அடிப்படையாகக் கொள்ளாமல், ஒருவரையொருவர் ஏமாற்றுவதையே அடிப்படையாகக் கொண்டிருப்பதால்) நியாயமாகவே கண்டிக்கத் தக்கதாகவும்

---

157 மாறாத சமதைகளின் விதிப்படி வாணிபம் சாத்தியமற்றதாக இருக்கும். (ஜா. ஒப்டைக்: ''அரசியல் பொருளாதாரம் பற்றிய வியாசம்,'' நியூயார்க், 1851, பக்கம் 66-69.) ''ஒரு பொருளின் மதிப்பு வர்த்தகத்தில் அதற்கு பதிலாகத் தரப்படும் சமதை எனக் கூறப்படுவதிலிருந்து வேறுபட்டதாகும். அதாவது இந்தச் சமதை சமதையே அன்று என்ற விவரத்தையே உண்மை மதிப்புக்கும் பரிவர்த்தனை-மதிப்புக்குமிடையிலான வேறுபாடு அடிப்படையாகக் கொண்டுள்ளது.'' (பி. எங்கெல்ஸ், முன் வந்தது, பக்கம் 96.)

158 பெஞ்சமின் பிராங்க்ளின்: நூல்கள், பாகம் II., ''நாட்டின் செல்வம் என்பது தொடர்பாக ஆராய வேண்டிய நிலைகள்'' என்பதில் — ஸ்பார்க்ஸ் பதிப்பு, பக்கம் 376.

இருக்கிறது. ஆகவே கடுவட்டிக்காரர் வெறுக்கப்படுவது நியாயமே; பணமே அவரது ஆதாயத்தின் தோற்றுவாய்; பணம் எதற்காகக் கண்டுபிடிக்கப்பட்டதோ, அந்த நோக்கங்களுக்குப் பயன்படுத்தப் படவில்லை. அது தோற்றமெடுத்தது சரக்குகளின் பரிவர்த்தனைக் காக; ஆனால் பணத்திலிருந்து இன்னும் அதிகப் பணத்தை உண்டாக்குகிறது வட்டி. ஆதலால்தான் அதற்கு இந்தப் பெயர் (τόκος — வட்டியும் குட்டியும்). குட்டியும் தாயைப் போன்றதே. வட்டியென்பது பணத்திலிருந்து வரும் பணம் ஆதலால் பிழைப்பு நடத்துவதற்கான எல்லா வழிகளிலும் இதுவே இயற்கைக்கு முற்றிலும் புறம்பான வழி.''[159]

வணிக மூலதனம், வட்டி மூலதனம் இரண்டுமே வருவிக்கப் பட்ட வடிவங்கள் என்பது நமது ஆராய்ச்சியின் வாயிலாகத் தெரிய வரும்; அதே நேரத்தில், இந்த இரு வடிவங்களும் வரலாற்றுப் போக்கில் மூலதனத்தின் நவீன கால முதன்மை வடிவத்துக்கு முன்னதாகத் தோன்றுவது ஏன் என்பதும் தெளிவாகும்.

உபரி-மதிப்பைச் சுற்றோட்டத்தால் படைக்க முடியாது என்பதையும், ஆகவே, அதனைப் படைக்கும் பொருட்டு, சுற்றோட்டத்திலேயே கண்கூடாகத் தெரியாத ஏதோ ஒன்று பின்னணியில் நடக்க வேண்டும் என்பதையும் காட்டியிருக்கிறோம்.[160] ஆனால், உபரி-மதிப்பு சுற்றோட்டத்தில் அல்லாமல் வேறு எங்கேனும் தோற்றமெடுக்க முடியுமா? சரக்குடைமையாளர்கள் இடையிலான உறவுகள் அவர்களது சரக்குகளால் தீர்மானிக்கப்பட்டுக் கொண்டிருக்கும் வரை, சுற்றோட்டம் என்பது அந்த உறவுகள் அனைத்தின் ஒட்டுமொத்தம்தானே? சரக்குடைமையாளர் சுற்றோட்டத்துக்கு வெளியே உறவு கொண்டிருப்பது அவரது சரக்குடன் மட்டுமே. மதிப்பைப் பொறுத்த வரை அந்த உறவானது குறிப்பிட்ட அளவில் அவரது சொந்த உழைப்பு அவரது சரக்கில் அடங்கியுள்ளது என்ற வரம்புக்கு உட்பட்டதாகும். அந்தச் சரக்கிலுள்ள அவரது உழைப்பின் அளவு திட்டமானதொரு சமூக நியமத்தால் அளக்கப்படுகிறது. இந்த அளவானது சரக்கின் மதிப்பால் தெரிவிக்கப்படுகிறது; மதிப்பு கணக்குப் பணத்தில் கணக்கிடப்படுவதால், இந்த அளவானது விலையாலும் தெரிவிக்கப்படுகிறது. விலை £10 எனக் கொள்வோம். ஆனால், அவரது உழைப்பு ஒருங்கே சரக்கின் மதிப்பாலும், அந்த மதிப்பிற்கும் கூடுதலான ஓர் உபரியாலும் குறிக்கப்பட முடியாது; 10 என்பதாகவும், அதே போதில் 11 என்பதாகவும் உள்ள விலையால், அதாவது தன்னிலும் கூடுதலான

---

159 அரிஸ்டாட்டில், முன் வந்தது, அத்தியாயம் 10.

160 ''சந்தையின் வழக்கமான நிலைமையில் இலாபம் பரிவர்த்தனை செய்து கொள்வதன் மூலம் அடையப்படுவதில்லை. அது பரிவர்த்தனைக்கு முன்னர் இருக்கவில்லையென்றால் அதற்குப் பின்னரும் இருக்க முடியாது.'' (ராம்சே, முன் வந்தது, பக்கம் 184.)

ஒரு மதிப்பால் குறிக்கப்பட முடியாது. சரக்குடைமையாளர் தன் உழைப்பைக் கொண்டு உருவாக்கக் கூடியது மதிப்பே அன்றி, தற்பெருக்கமடையும் மதிப்பன்று. அவர் புதிய உழைப்பைச் சேர்ப்பதன் மூலம், கையிலுள்ள மதிப்போடு கூடுதல் மதிப்பைச் சேர்ப்பதன் மூலம், எடுத்துக்காட்டாக தோலைப் பாத அணிகளாகச் செய்வதன் மூலம் தன் சரக்கின் மதிப்பை அதிகப்படுத்திக் கொள்ள முடியும். தோலாகிய அதே பொருளுக்கு இப்போது அதிக மதிப்புள்ளது; ஏனெனில் அதில் முன்னிலும் அதிக அளவு உழைப்பு அடங்கியுள்ளது. ஆகவே, தோலுக்கிருப்பதை விட பாத அணிகளுக்கு அதிக மதிப்புள்ளது; ஆனால் தோலின் மதிப்பு இருந்தபடியே இருக்கிறது; அது பெருகவில்லை, பாத அணிகளின் தயாரிப்பின் போது அது உபரி-மதிப்பைச் சேர்த்துக் கொண்டு விடவில்லை; எனவே சரக்கு உற்பத்தியாளர் ஒருவர் ஏனைய சரக்குடைமையாளர்களுடன் தொடர்பு கொள்ளாமல், சுற்றோட்டத்துக்கு வெளியே மதிப்பைப் பெருக்குவதும், ஆதலால் பணம் அல்லது சரக்குகளை மூலதனமாக மாற்றுவதும் முடியாத காரியம்.

ஆக, மூலதனம் சுற்றோட்டத்தால் உண்டாக்கப்படுவது முடியாத காரியம்; அது சுற்றோட்டமில்லாமல் தோற்றமெடுப்பதும் அவ்வாறே முடியாத காரியம். மூலதனத்தின் தோற்றுவாய் சுற்றோட்டத்தினுள் இருப்பதாகவும், அதே போது சுற்றோட்டத்தினுள் இல்லாததாகவும் அமைதல் வேண்டும்.

ஆக, ஓர் இரட்டை முடிவு நமக்குக் கிடைக்கிறது.

பணம் எப்படி மூலதனமாக மாற்றப்படுகிறது என்பதை சரக்குப் பரிவர்த்தனையை ஒழுங்கியக்கும் விதிகளின் அடிப்படையில், சமதைகளின் பரிவர்த்தனை தொடக்கமாக அமையும் விதத்தில், விளக்கியாக வேண்டும்.[161] இன்னும் கருநிலை முதலாளியாகவே

---

[161] சரக்கின் விலையும் மதிப்பும் ஒன்றே என்றாலும் கூட மூலதனம் உருவாதல் சாத்தியமே என்பதுதான் இந்த வாசகத்தின் பொருள் என்பதை மேற்கண்ட ஆய்விலிருந்து வாசகர் காண்பார்; ஏனெனில் அது உருவாவதற்கு, விலையும் மதிப்பும் ஒன்றிலிருந்து ஒன்று வேறுபடுவதாகச் சொல்லி காரணம் காட்ட முடியாது. உள்ளபடியே விலை மதிப்பிலிருந்து வேறுபடுமானால், முதலில் விலையை மதிப்புக்குச் சமன் செய்ய வேண்டும். வேறு விதமாகச் சொன்னால், நிகழ்வுகளை அவற்றின் தூய நிலையில் பார்த்தாராயும் பொருட்டும், சம்பந்தப்பட்ட நிகழ்முறையுடன் தொடர்பேதுமில்லாத தொல்லை தரும் நிலைமைகளால் நம் ஆய்வுகளில் குறுக்கீடு ஏற்படாதிருக்கும் பொருட்டும், இவ்வேறுபாட்டைத் தற்செயலாக நிகழ்ந்த ஒன்றாய்க் கருத வேண்டும். மேலும் இப்படிச் சமன் செய்வது வெறும் விஞ்ஞான நடைமுறை மட்டுமன்று என்பதையும் நாம் அறிவோம். விலைகளின் ஓயாத அலைவுகள், அவற்றின் ஏற்றமும் இறக்கமும் ஒன்றை ஒன்று ஈடு செய்து கொண்டு சராசரி விலையாகி விடுகின்றன; இந்தச் சராசரி விலைதான் மறைந்திருந்து அவற்றை ஒழுங்கியக்குகிறது; கால அவகாசம் தேவைப்படுகிற ஒவ்வொரு அலுவலிலும் வணிகர் அல்லது தொழிலதிபரின் வழிகாட்டும் தாரகையாகத் திகழ்கிறது. நீண்ட கால அளவில் கணக்கிடுகையில், சரக்குகள் அவற்றின் சராசரி விலைக்கே விற்கப்படுகின்றன, அதற்கு அதிகமாகவோ குறைவாகவோ அல்ல என்பதை அவர் அறிவார். எனவே அவர்

இருக்கிற நமது நண்பர் பணாதிபதி சரக்குகளை அவற்றின் மதிப்புக்கே வாங்க வேண்டும், அவற்றின் மதிப்புக்கே விற்க வேண்டும். ஆனால் நிகழ்முறையின் தொடக்கத்தில் தான் சுற்றோட்டத்தில் விட்டதை விட அதிகமான மதிப்பை முடிவில் அதிலிருந்து எடுக்க வேண்டும். முழு வளர்ச்சியடைந்த முதலாளியாக அவர் வளர்வது சுற்றோட்டத் துறைக்குள்ளேயும், வெளியேயும் நடக்க வேண்டும். இவையே பிரச்சினையின் வரையறைகள். Hic Rhodus, hic salta! *

---

சற்றேனும் சிந்திப்பவராயிருந்தால், மூலதனம் உண்டாகும் பிரச்சினையைப் பின்வருமாறு வரையறுப்பார். விலைகள் சராசரி விலையால், அதாவது இறுதியில் சரக்குகளின் மதிப்பாலேயே ஒழுங்கியக்கப்படுகின்றன என்ற அனுமானத்தின் அடிப்படையில் மூலதனத்தின் தோற்றுவாய்க்கு விளக்கமளிப்பது எப்படி? ''இறுதியில் ஒழுங்கியக்கப்படுகின்றன'' என்று நான் கூறுவதன் காரணம், ஆதாம் ஸ்மித்தும் ரிக்கார்டோவும் மற்றவர்களும் நம்புவது போல, சராசரி விலைகளும் சரக்குகளின் மதிப்புகளும் நேரடியாக ஒன்றாவதில்லை.

---

* இதோ ரோட்ஸ், தாண்டு பார்ப்போம்!

## அத்தியாயம் VI

# உழைப்புச் சக்தியை வாங்குவதும் விற்பதும்

மூலதனமாக மாற்றப்படவுள்ள பணத்தின் மதிப்பில் மாற்றம் ஏற்படுகிறது; ஆனால் இந்த மதிப்பு மாற்றம் அந்தப் பணத்திலேயே ஏற்படுவதாக இருக்க முடியாது; ஏனெனில் வாங்கற் சாதனமாகவும் கொடுப்புச் சாதனமாகவும் செயல்படுகையில், அது எதை வாங்கு கிறதோ அல்லது எதற்கு விலை கொடுக்கிறதோ, அந்தச் சரக்கின் விலையை ஈடேற்றம் செய்வதற்கு மேலாக ஒன்றும் செய்வதில்லை; உலோகப் பணம் என்ற விதத்தில் அது மாறவே மாறாத, இறுகிப்போன மதிப்பாகும்.[168] அது போலவே சுற்றோட்டத்தின் இரண்டாவது செயலான சரக்கின் மறுவிற்றலிலும் அது தோற்ற மெடுக்க முடியாது; இந்த மறுவிற்றல் பண்டத்தை அதன் தசை யுருவத்திலிருந்து மீண்டும் அதன் பண வடிவத்துக்கு மாற்றுவதன்றி வேறொன்றும் செய்வதில்லை. எனவே, மாற்றம் நடைபெற வேண்டியது M — C என்ற முதற் செயலின் மூலம் வாங்கப்படுகிற சரக்கிலேயே தவிர, அதன் மதிப்பில் அன்று; ஏனெனில் சமதைகள் பரிவர்த்தனை செய்து கொள்ளப்படுகின்றன. சரக்குக்கு அதன் முழு மதிப்புக்குரிய விலை கொடுக்கப்படுகிறது. எனவே, மாற்றம் சரக்கின் பயன்-மதிப்பிலேயே, அதாவது அதன் நுகர்வில் தோற்ற மெடுக்கிறது என்று முடிவு கட்ட வேண்டிய நிலைக்குத் தள்ளப் படுகிறோம். ஒரு சரக்கின் நுகர்விலிருந்தே நமது நண்பர் பணாதி பதி மதிப்பை வடித்தெடுக்க வேண்டும்; அப்படியொரு சரக்கு சுற்றோட்டத் துறைக்குள், சந்தையில் இருக்கக் காணும் அதிர்ஷ்டம் அவருக்கிருக்க வேண்டும்; அந்தச் சரக்கின் பயன்-மதிப்பு மதிப்பின் தோற்றுவாயாக விளங்கும் சிறப்பியல்புடையதாக இருக்க வேண் டும்; அதன் நுகர்வென்னும் செயலே உழைப்பின் பொருளாக்க மாகவும், ஆதலால் மதிப்பின் உருவாக்கமாகவும் இருக்க வேண் டும். பணத்தை வைத்திருப்பவர் இத்தகைய ஒரு தனி வகைச்

---

*168 ''பணவடிவிலுள்ள மூலதனம்...இலாபமெதையும் உண்டாக்கக் கூடியதன்று.'' (ரிக்கார்டோ: ''அரசியல் பொருளாதாரக் கோட்பாடுகள்,'' பக்கம் 267.)*

சரக்கு உழைக்கும் திறன் அல்லது உழைப்புச் சக்தியின் உருவில் சந்தையில் இருக்கக் காண்கிறார்.

உழைப்புச் சக்தி அல்லது உழைக்கும் திறன் என்று சொல்லும் போது ஒரு மனிதனிடமுள்ள மூளையாற்றல்கள், உடலாற்றல்கள் ஆகியவற்றின் — ஏதேனும் ஒரு வகைப் பயன்-மதிப்பை உற்பத்தி செய்யும் போதெல்லாம் அவன் பயன்படுத்துகிற இந்த ஆற்றல் களின் — ஒட்டுமொத்தம் என்றே புரிந்து கொள்ள வேண்டும்.

ஆனால் நம்து பணவுடைமையாளர் ஒரு சரக்காக விலைக்கு வரும் உழைப்புச் சக்தியைக் காண வேண்டுமானால் முதற்கண் பல்வேறு நிபந்தனைகள் பூர்த்தி செய்யப்பட வேண்டும். சரக்கு களின் பரிவர்த்தனை தன்னளவில், தன் சொந்த இயல்பிலிருந்தே விளைகின்றவற்றைத் தவிர வேறு எந்தச் சார்பு உறவையும் குறிப் பதில்லை. இந்த அனுமானத்தின் பேரில், உழைப்புச் சக்தியைப் பெற்றிருப்பவர் — உழைப்புச் சக்தி யாருடையதோ அந்தத் தனி யாள் — அந்த உழைப்புச் சக்தியை ஒரு சரக்காக விற்பனைக்கு முன்வைக்கவோ விற்கவோ செய்தால்தான் — அப்படிச் செய்கிற அளவில் தான் — உழைப்புச் சக்தி ஒரு சரக்காக சந்தைக்கு வர முடியும். அவர் இதைச் செய்ய வேண்டுமானால், அதைத் தன் இஷ்டத்துக்குப் பயன்படுத்தும் நிலையில் இருக்க வேண்டும், தன் உழைக்கும் திறனின், அதாவது தன் சரீரத்தின் வில்லங்கமற்ற உடைமையாளராக இருக்க வேண்டும்.[163] அவரும் பணவுடைமை யாளரும் சந்தையில் சந்தித்து, ஒருவர் வாங்குபவர், மற்றவர் விற்பவர் என்ற ஒரே ஒரு வேறுபாடு மட்டும் நிலவ சம உரிமை களின் அடிப்படையில் ஒருவரோடு ஒருவர் பேரம் செய்கின்றனர்; எனவே இருவரும் சட்டத்தின் பார்வையில் சமம் ஆகின்றனர். இந்த உறவு தொடர்வதற்கு, திட்டமான காலத்துக்கு மட்டுமே உழைப்புச் சக்தியின் உடைமையாளர் அதை விற்க வேண்டுமென்பது அவசிய மாகிறது. ஏனெனில் அவர் அதை மொத்தமாக, ஒரேயடியாக விற்று விடுவதானால் அவர் தன்னையே விற்பதாகும்; சுதந்தர மனிதன் என்பதிலிருந்து அடிமையாக, சரக்கின் உடைமையாளர் என்பதிலிருந்து சரக்காகத் தன்னை மாற்றிக் கொள்வதாகும். அவர் இடையறாது தன் உழைப்புச் சக்தியை, தன் சொந்த உடைமையாக, தன் சொந்தச் சரக்காகக் கருத வேண்டும்; அதை அவர் வாங்கு வோரிடம் தற்காலிகமாகத் திட்டமான கால அளவுக்கு ஒப்புக் கொடுப்பதன் மூலம் மட்டுமே இவ்வாறு செய்ய முடியும். இந்த வழியில் மட்டுமே அவர் அதன் உடைமையாளர் என்ற தன்

163 பண்டைக் காலச் சின்னங்கள் பற்றிய கலைக் களஞ்சியங்களில், புராதன உலகத்தில், ''சுதந்தர உழைப்பாளியும் கடன்-செலாவணி முறையும் இல்லாமற் போனதைத் தவிர,'' மூலதனம் முழு வளர்ச்சியடைந்திருந்தது என்பது போன்ற அபத்தங்களைக் காண்கிறோம். மோம்செனும் கூட தமது ''ரோமாபுரி வரலாற்றில்,'' இது குறித்து அடுத்தடுத்து தவறு செய்கிறார்.

உரிமைகளைத் துறக்காதிருக்க முடியும்.[164]

பணவுடைமையாளர் சந்தையில் உழைப்புச் சக்தி ஒரு சரக்காக இருக்கக் காண்பதற்கு இரண்டாவது அத்தியாவசிய நிபந்தனை, உழைப்பாளி தன் உழைப்பாலான சரக்குகளை விற்கிற நிலையில் இருப்பதற்குப் பதிலாக உயிரும் உடலுமான அவரையே உறைவிடமாய்க் கொண்ட அவ்வுழைப்புச் சக்தியையே ஒரு சரக்காக விலைக்குக் கொடுக்கும் கட்டாயத்துக்கு ஆளாக வேண்டும்.

ஒருவர் உழைப்புச் சக்தி தவிர ஏனைய சரக்குகளை விற்க வேண்டுமானால், அவரிடம் கச்சாப் பொருட்கள், கருவிகள் முதலான உற்பத்திச் சாதனங்கள் இருந்தாக வேண்டும். தோலில்லாமல் செருப்பு தைக்க முடியாது. வாழ்வுச் சாதனங்களும் அவருக்குத் தேவைப்படுகின்றன. யாருமே—''எதிர்காலத்தின் இசைவாணர் கூட''—வருங்கால உற்பத்திப் பண்டங்களைக் கொண்டோ, அல்லது இறுதி வடிவளிக்கப்படாத நிலையிலுள்ள பயன்-மதிப்புகளைக் கொண்டோ வாழ முடியாது, மனிதன் உலக அரங்கத்தில் தோன்றிய கணம் முதலே, அவன் உற்பத்தி செய்வதற்கு முன்னரும், உற்பத்தி செய்து கொண்டிருக்கும் போதும், எப்போதுமே நுகர்வாளனாக இருந்திருக்கிறான், இனியும் இருந்தாக வேண்டும். எல்லா உற்பத்திப் பண்டங்களும் சரக்குகளின் வடிவம் எடுக்கிற ஒரு சமுதாயத்தில், அவை உற்பத்தி செய்யப்பட்ட பிறகு விற்கப்பட்டாக வேண்டும்; விற்கப்பட்ட பிறகுதான் அவை தமது உற்பத்தியாளரின் தேவைகளை நிறைவு செய்வதற்குப் பயன்பட

---

164 எனவேதான் பல்வேறு நாடுகளிலும் சட்டநெறியானது உழைப்பு ஒப்பந்தங்களுக்கு உச்சவரம்பு நிர்ணயிக்கிறது. சுதந்தர உழைப்பு வழக்கமாக உள்ள இடங்களிலெல்லாம் இந்த ஒப்பந்தத்தின் காலம் முடிவடைவதற்கான முறையை சட்டங்கள் ஒழுங்கு செய்கின்றன. சில நாடுகளில், குறிப்பாக மெக்சிகோவில் (அமெரிக்க உள்நாட்டுப் போருக்கு முன்னர் மெக்சிகோவிடமிருந்து எடுத்துக் கொள்ளப்பட்ட பிராந்தியங்களிலும், குசா நடத்திய புரட்சி வரை டான்யூபிய மாகாணங்களிலும் கூட அடிமைத்தனம் கடனாளிச் சேவகத்தின் [peonage] வடிவத்தில் ஒளிந்து கொண்டுள்ளது. உழைப்பின் வாயிலாகத் திருப்பிச் செலுத்தத்தக்க, தலைமுறை தலைமுறையாகத் தொடரப்படுகிற முன்பணங்களைக் கொண்டு, தனிப்பட்ட உழைப்பாளி மட்டுமல்லாமல், அவன் குடும்பத்தினரும் எதார்த்தத்தில் [de facto] பிறருக்கும் பிறரது குடும்பங்களுக்கும் சொந்தமான உடைமை ஆகின்றனர். ஜுவாரெஸ் கடனாளிச் சேவகத்தை ஒழித்தார். பேரரசர் எனப்பட்ட மாக்சிமிலியன் அதை ஓர் அரசாணையின் மூலம் மீண்டும் நிலைநாட்டினார்; வாஷிங்டனிலுள்ள பிரதிநிதிகள் சபை இதனை, மெக்சிகோவில் அடிமைத்தனத்தை மீண்டும் புகுத்துவதற்கான அரசாணை எனக் கண்டித்தது பொருத்தமானதே. ''நான் என் உடலாற்றல்கள், மூளையாற்றல்கள், திறமைகள் ஆகியவற்றின் உபயோகத்தை ஒரு குறிப்பிட்ட காலத்துக்குப் பிறிதொருவரிடம் ஒப்படைக்கலாம்; ஏனெனில், இந்தக் கட்டின் விளைவாக, நான் என்ற முழுமையைப் பொறுத்த வரை அன்னியமாகி விடும் தன்மை அந்த ஆற்றல்கள் மீது பதிக்கப்படுகிறது. ஆனால் என் உழைப்பு நேரம் முழுவதையும், என் பணி முழுவதையும் அன்னியமாக்குவதன் மூலம், சாரத்தையே, அதாவது என் பொதுவான செயற்பாட்டையும் எதார்த்தத்தையும், என் சரீரத்தையே வேறொருவரின் உடைமையாக நான் மாற்றுவதாகி விடும்.'' (ஹெகல், ''Philosophie des Rechts.'' பெர்லின், *1840*, பக்கம் *104, § 67.*)

முடியும். அவற்றின் விற்றலுக்கு அவசியமான நேரம் அவற்றின் உற்பத்திக்கு அவசியமான நேரத்தோடு கூட்டிச் சேர்க்கப்படுகிறது.

எனவே, பணவுடைமையாளர் அவரது பணத்தை மூலதனமாக மாற்றிக் கொள்ள சந்தையில் சுதந்தர உழைப்பாளியைச் சந்திக்க வேண்டும். சுதந்தர மனிதர் என்ற விதத்தில் தன் உழைப்புச் சக்தியை தன் சொந்தச் சரக்காக விற்கக் கூடியவர் ஆவார், மறு புறம் விற்பதற்கு வேறு சரக்கேதும் இல்லாதவரும் தன் உழைப்புச் சக்தியை ஈடேற்றிக் கொள்வதற்கு அவசியமான எதுவுமே இல்லாத வரும் ஆவார் என்ற இரட்டை அர்த்தத்தில் இந்த உழைப்பாளியை சுதந்தர உழைப்பாளி என்கிறோம்.

இந்தச் சுதந்தர உழைப்பாளி சந்தைக்கு வந்து பணவுடைமை யாளரை எதிர்கொள்வது ஏன் என்ற கேள்வி குறித்து, உழைப்புச் சந்தையைச் சரக்குகளுக்கான பொதுச் சந்தையின் கிளையாகக் கருதுபவரான அந்தப் பணவுடைமையாளருக்கு அக்கறையில்லை. இப்போதைக்கு அது குறித்து நமக்கும் அக்கறையில்லை. இந்த உண்மையை அவர் நடைமுறையில் ஏற்பதைப் போலவே நாம் தத்துவத்தில் ஏற்கிறோம். ஆயினும் ஒன்று தெளிவு—இயற்கை ஒரு பக்கத்தில் பணம் அல்லது சரக்குகளின் உடைமையாளர்களையும் மறு பக்கத்தில் தம் சொந்த உழைப்புச் சக்தி தவிர வேறேதும் இல்லாதவர்களையும் படைப்பதில்லை. இந்த உறவுக்கு இயற்கை யான அடிப்படை ஏதுமில்லை. அதன் சமூக அடிப்படையும் எல்லா வரலாற்றுக் காலங்களுக்கும் பொதுவானதன்று. அது கடந்த கால வரலாற்று வளர்ச்சியின் விளைவு, பல பொருளாதாரப் புரட்சி களின்—பழமைப்பட்ட சமுதாயப் பொருளுற்பத்தி வடிவங்களது முழுத் தொடர் ஒன்று இல்லாதொழிந்ததன்—பலன் என்பது தெளிவு.

அவ்வாறே, நாம் ஏற்கெனவே பரிசீலித்துள்ள பொருளாதார இனங்களும் வரலாற்று முத்திரையைத் தாங்கியுள்ளன. ஓர் உற்பத் திப் பொருள் சரக்காவதற்குத் திட்டமான வரலாற்று நிலைமைகள் அவசியமாகும். அது உற்பத்தியாளரின் நேரடி வாழ்வுச் சாதனமாக உற்பத்தி செய்யப்படக் கூடாது. நாம் மேலும் சென்று, உற்பத்திப் பண்டங்கள் அனைத்தும், அல்லது அவற்றில் பெரும்பாலான வையே கூட எந்நிலைமைகளில் சரக்குகளாக வடிவம் எடுக்கின்றன என்பதை ஆராய்ந்திருந்தோமானால், இது மிகக் குறிப்பானதொரு வகையைச் சேர்ந்த பொருளுற்பத்தியில் மட்டுமே, முதலாளித்துவப் பொருளுற்பத்தியில் மட்டுமே நிகழ முடியும் என்பதைக் கண்டிருப் போம். ஆயினும் இத்தகைய ஆராய்ச்சி சரக்குகள் பற்றிய பகுப் பாய்வுக்கு அன்னியமானது. உற்பத்தி செய்யப்படுகிற பெருந் திரளான பொருட்கள் அவற்றின் உற்பத்தியாளர்களின் நேரடித் தேவைகளை நோக்கமாகக் கொண்டிருந்தாலும், அவை சரக்குகளாக மாற்றப்படா விட்டாலும், ஆதலால் சமுதாயப் பொருளுற்பத்தி

முழுவதும் பெருமளவுக்கு இன்னமும் பரிவர்த்தனை-மதிப்பின் ஆதிக்கத்திற்கு உட்படாதிருந்தாலும், சரக்குகளின் உற்பத்தியும் சுற்றோட்டமும் நடைபெற முடியும். பரிவர்த்தனை-மதிப்பிலிருந்து பயன்-மதிப்பு பிரிவதால் ஏற்படும் பிளவு, முதலில் பண்டமாற்றில் ஆரம்பிக்கிற இந்தப் பிளவு ஏற்கெனவே நிறைவு பெற்றிடுமளவுக்கு சமுதாய உழைப்புப் பிரிவினை வளர்ந்திருந்தால்தான் உற்பத்திப் பொருட்கள் சரக்குகளாக முடியும். ஆனால் இத்தகையதொரு வளர்ச்சி நிலை பிற துறைகளில் மிகவும் மாறுபட்ட வரலாற்று அமிசங்களைக் கொண்ட பல சமுதாய வடிவங்களுக்கும் பொதுவானதாகும். மறு புறம் நாம் பணத்தை எடுத்துக் கொண்டால், அப்படியொன்று இருப்பதே சரக்குகளின் பரிவர்த்தனையில் குறிப்பிட்ட ஒரு கட்டத்தைக் குறிக்கிறது. சரக்குகளின் சமதையாக மட்டுமோ, சுற்றோட்டச் சாதனமாகவோ, கொடுப்புச் சாதனமாகவோ, சேர்ப்பாகவோ, உலகப் பொதுப் பணமாகவோ பணம் ஆற்றுகிற குறிப்பான பணிகள் அந்தந்தப் பணியின் அளவுக்கும் ஒப்பீட்டு முதன்மைக்கும் ஏற்ப, சமுதாயப் பொருளுற்பத்தி நிகழ்முறையில் வெவ்வேறான கட்டங்களைச் சுட்டுகின்றன. எனினும், ஒப்பளவில் புராதன வளர்ச்சி நிலைக்குரிய சரக்குச் சுற்றோட்டமே பணத்தின் இந்த எல்லா வடிவங்களும் உருவாவதற்குப் போதுமானது என்பதை அனுபவ வாயிலாக அறிவோம். அப்படியன்று மூலதனத்தின் கதை. மூலதனம் இருப்பதற்கு பணம், சரக்குகள் இவற்றின் சுற்றோட்டம் மட்டுமே எவ்விதத்தும் போதுமான வரலாற்று நிலைமைகள் ஆவதில்லை. உற்பத்திச் சாதனங்கள், வாழ்வுச் சாதனங்கள் ஆகியவற்றின் உடைமையாளர் உழைப்புச் சக்தியை விற்கிற உழைப்பாளியைச் சந்தையில் சந்திக்கும் போதே மூலதனம் உதித்தெழ முடியும். இந்த ஒரு வரலாற்று நிலைமையில் ஓர் உலகின் வரலாறே அடங்கியுள்ளது. எனவே, மூலதனத்தின் உதயம் சமுதாயப் பொருளுற்பத்தி நிகழ்முறையில் ஒரு புதிய சகாப்தத்தைப் பறைசாற்றுகிறது.[165]

இந்தத் தனிவகைச் சரக்கை, உழைப்புச் சக்தியை இப்போது இன்னும் நெருங்கிச் சென்று ஆராய வேண்டும். எல்லாச் சரக்குகளையும் போலவே அதற்கும் மதிப்புள்ளது.[166] அந்த மதிப்பு எப்படி நிர்ணயிக்கப்படுகிறது?

---

165 எனவே; உழைப்பாளியின் கண்ணோட்டத்திலேயே உழைப்புச் சக்தி அவரது சொத்தாக உள்ள ஒரு சரக்கின் வடிவம் எடுப்பது முதலாளித்துவ சகாப்தத்தின் தனியியல்பாகும். ஆதலால் அவரது உழைப்பு கூலியுழைப்பாகிறது. மறு புறம், உழைப்பின் உற்பத்திப் பொருட்கள் சர்வப்பொது அளவில் சரக்குகள் ஆவதும் இத்தருண முதற்கொண்டே.

166 "ஒரு மனிதனின் மதிப்பு அல்லது பெறுமானம் எல்லாப் பொருட்களின் மதிப்பையும் போலவே அவனது விலை ஆகும்—அதாவது அவனது சக்தியின் உபயோகத்துக்காக எவ்வளவு தரப்படுமோ அவ்வளவு." (தாமஸ் ஹாப்ஸ். "லெவியாத்தன்," Works என்பதில். பதிப்பாசிரியர்: மோல்ஸ்வர்த். லண்டன், 1839-44, பாகம் iii., பக்கம் 76.)

ஒவ்வொரு சரக்கின் மதிப்பையும் போலவே, உழைப்புச் சக்தியின் மதிப்பும் இந்தத் தனிவகைப் பண்டத்தின் உற்பத்திக்கும், ஆகவே மறுவுற்பத்திக்கும் [reproduction] கூட அவசியமான உழைப்பு நேரத்தால் நிர்ணயிக்கப்படுகிறது. அது மதிப்பைப் பெற்றுள்ளதென்ற அளவில் அதில் சேர்ந்துள்ள சராசரி சமுதாய உழைப்பின் திட்டமான அளவையன்றி வேறு எதையும் குறிப்ப தில்லை. உழைப்புச் சக்தி இருப்பது உயிருள்ள தனியாளின் ஆற்றல் அல்லது சக்தியாகவே. ஆதலால் அவர் இருந்தாலன்றி அதன் உற்பத்தி சாத்தியமன்று. தனியாள் இருக்க, உழைப்புச் சக்தியின் உற்பத்தி அவர் தன்னையே மறுவுற்பத்தி செய்து கொள்வதில், அதாவது அவரது பராமரிப்பில் அடங்கியுள்ளது. அவரது பராமரிப்புக்கு குறிப்பிட்ட அளவிலான வாழ்வுச் சாதனங்கள் அவருக்குத் தேவைப்படுகின்றன. எனவே உழைப்புச் சக்தியின் உற்பத்திக்கு அவசியமான உழைப்பு நேரம் என்பது அந்த வாழ்வுச் சாதனங்களின் உற்பத்திக்கு அவசியமான உழைப்பு நேரமாகி விடுகிறது; வேறு விதமாகச் சொன்னால், உழைப்புச் சக்தியின் மதிப்பு என்பது உழைப்பாளியின் பராமரிப்புக்கு அவசியமான வாழ்வுச் சாதனங்களின் மதிப்பே. ஆயினும் உழைப்புச் சக்தி எதார்த்தமாவது அதன் பிரயோகத்தின் வாயிலாகவே. அது தன்னைச் செயல்படுத்திக் கொள்வது வேலை செய்வதன் மூலமே. ஆனால், இவ்வழியில் மனிதத் தசை, நரம்பு, மூளை முதலானவற்றில் ஒரு குறிப்பிட்ட அளவு செலவழிகிறது; செலவழிந்த இவற்றை மீட்டமைக்க வேண்டும். இவ்வகையில் செலவு கூடினால் வருமானமும் கூட வேண்டும்.[167] உழைப்புச் சக்தியின் உடைமையாளர் இன்று வேலை செய்கிறார் என்றால், ஆரோக்கியம், வலிமை ஆகியவை தொடர்பான அதே நிலைமை களில் அதே நிகழ்முறையை நாளை மீண்டும் நிகழ்த்த அவருக்கு சக்தியிருக்க வேண்டும். எனவே, அவரது வாழ்வுச் சாதனங்கள் தொடர்ந்து அவர் உழைப்பாளிக்குரிய இயல்பான நிலையில் இருப் பதற்குப் போதுமானவையாக இருக்க வேண்டும். உணவு, உடை, எரிபொருள், உறைவிடம் போன்ற அவரது இயற்கைத் தேவைகள் அவரது நாட்டின் வெப்பதட்ப நிலைமைகளுக்கும் பௌதிக நிலை மைகளுக்கும் ஏற்ப மாறுபடுகின்றன. மறு புறம் அவரது அவசியத் தேவைகள் என்பவற்றின் தொகையும் அளவும், அதே போல் அவற்றை நிறைவு செய்கிற முறைகளும் வரலாற்று வளர்ச்சி யிலிருந்து விளைகிறவை; எனவே, அவை பெருமளவுக்கு நாடு நாகரிக வளர்ச்சியில் எந்நிலையை அடைந்துள்ளது என்பதையும்,

---

[167] இதனாலேயே விவசாய அடிமைகளின் கங்காணியாக இருந்த ரோமானிய வில்லிகஸ் ''உழைக்கும் அடிமைகளை விடச் சொற்பமான கூலியே'' பெற்றார்; ''ஏனெனில் அவரது வேலை அடிமைகளின் வேலையைக் காட்டிலும் இலகுவாய் இருந்தது.'' (தியோடார் மோம்சென், Rom. Geschichte, 1856, பக்கம் 810.)

இன்னும் குறிப்பாக, எப்படிப்பட்ட நிலைமைகளிலும் ஆகவே எம்மாதிரியான பழக்க வழக்கங்களுடனும் வசதிகளின் வளர்ச்சி நிலையுடனும் சுதந்தரத் தொழிலாளர்களின் வர்க்கம் உருவெடுத்தது என்பதையும் பொறுத்தவை.[168] எனவே, ஏனைய சரக்குகளின் மதிப்பு நிர்ணயத்தில் போலல்லாமல், உழைப்புச் சக்தியின் மதிப்பு நிர்ணயத்தில் வரலாற்று-தார்மிகக் கூறு ஒரு காரணியாக இடம் பெறுகிறது. எனினும் குறிப்பிட்ட நாட்டில், குறிப்பிட்ட காலத்தில், உழைப்பாளிக்கு அவசியமான வாழ்வுச் சாதனங்களின் சராசரி அளவு நடைமுறை வாயிலாகத் தெரிந்து விடுகிறது.

உழைப்புச் சக்தியின் உடைமையாளருக்கு இறப்புண்டு. ஆகவே, நிலைத்து சந்தையில் அவர் இருக்க வேண்டுமானால்—பணம் மூலதனமாகத் தொடர்ந்து மாற்றமடைவதற்கு இது அவசியம்—''உயிருள்ள ஒவ்வொன்றும் இன விருத்தியைக் கொண்டு தன்னை நிலைத்து இருக்கச் செய்து கொள்வது போல''[169] உழைப்புச் சக்தியை விற்பவரும் தன்னை நிலைத்து இருக்கச் செய்து கொண்டாக வேண்டும். தேய்மானத்தாலும், மரணத்தாலும் சந்தையிலிருந்து விலகி விடும் உழைப்புச் சக்தியின் இடத்தை, மிகக் குறைந்த பட்சமாக சம அளவிலான புதிய உழைப்புச் சக்தியால் தொடர்ந்து நிரப்ப வேண்டும். எனவே, உழைப்புச் சக்தியின் உற்பத்திக்கு அவசியமான வாழ்வுச் சாதனங்களின் ஒட்டுமொத்தத்தில்—இந்தத் தனிவகைச் சரக்குடைமையாளர் இனம் நிலைத்து சந்தையில் இருந்து வர வேண்டுமானால், உழைப்புச் சக்தியின் உற்பத்திக்கு அவசியமான வாழ்வுச் சாதனங்களின் மொத்த அளவில் உழைப்பாளியின் பதிலிகளுக்கு, அதாவது அவரது குழந்தைகளுக்கு அவசியமான வாழ்வுச் சாதனங்களும் அடங்கியிருத்தல் வேண்டும்.[170]

மனித உயிரமைப்பு ஒரு குறிப்பிட்ட தொழிற் கிளையில் தேர்ச்சியும் [skill] கைத்திறனும் பெற்று தனிவகை உழைப்புச் சக்தி யாகும் படி அதனைத் திருத்தியமைக்கும் பொருட்டு, தனிவகைக் கல்வி அல்லது பயிற்சி தேவைப்படுகிறது; இதற்கு குறிப்பிட்ட அளவு சரக்குகளாலாகிய ஒரு சமதை செலவாகிறது. இந்த அள வானது உழைப்புச் சக்தி எவ்வளவு அதிகமாக அல்லது குறைவாக

---

168 பார்க்கவும்: வி. தாமஸ் தார்ண்டன்: ''மிகை மக்கள் தொகையும் அதன் பரிகாரமும்,'' லண்டன், 1846.

169 பெட்டி.

170 ''அதன் (உழைப்பின்) இயற்கை விலை என்பது... தொழிலாளியைப் பராமரிப்பதற்கும், சந்தையில் குறைவின்றி உழைப்பு வழங்கப்படுவதை உறுதி செய்யும் முறையில் குடும்பத்தை வளர்த்தெடுக்கக் கூடியவனாய் ஆக்குவதற்கும், நாட்டின் வெப்பதட்பம், பழக்க வழக்கங்கள் ஆகியவற்றைப் பொறுத்து அவசியமாகிற வாழ்க்கையின் அவசியப் பண்டங்கள், வசதிகள் இவற்றின் அளவில் அடங்கியுள்ளது.'' (ரா. டாரென்ஸ்: ''தானிய வெளி வர்த்தகம் பற்றிய கட்டுரை.'' லண்டன், 1815, பக்கம் 62.) இங்கே உழைப்பு என்ற சொல் உழைப்புச் சக்தி என்பதற்கு பதில் தவறாகப் பயன்படுத்தப்படுகிறது.

சிக்கலானது என்பதற்கேற்ப மாறுபடுகிறது. இந்தக் கல்விக்கு ஆகும் செலவுகள் (சாதாரண உழைப்புச் சக்திக்கு ஆவது சொற்பத்திலும் சொற்பம்) உழைப்புச் சக்தியின் உற்பத்திக்காகச் செலவிடப்படும் மொத்த மதிப்பில் ஒரு பகுதி ஆகின்றன.

ஆக, உழைப்புச் சக்தியின் மதிப்பு என்பது குறிப்பிட்ட அளவிலான வாழ்வுச் சாதனங்களின் திட்டமான மதிப்பாகி விடுகிறது. எனவே, அது இந்த வாழ்வுச் சாதனங்களின் மதிப்புக் கேற்ப அல்லது அவற்றின் உற்பத்திக்குத் தேவைப்படும் உழைப்பின் அளவுக்கேற்ப மாறுபடுகிறது.

உணவு, எரிபொருள் போன்ற சில வாழ்வுச் சாதனங்கள் அன்றாடம் நுகரப்படுகிறவை; இவை தொடர்ந்து அன்றாடம் புதிதாகக் கிடைக்க வேண்டும். துணிமணிகள், தட்டுமுட்டு போன்ற இதர வாழ்வுச் சாதனங்கள் அதிக காலத்துக்கு நீடிப்பவை; காலத்துக்குக் காலம் இவற்றைப் புதுப்பித்தால் போதும். ஒரு பண்டத்தை தினந்தோறும், இன்னொன்றை வாரந்தோறும், இன்னுமொன்றைக் காலாண்டுதோறும் வாங்க வேண்டும், அதாவது இவ்விதம் அவற்றுக்கு விலை கொடுக்க வேண்டும்; இவ்வாறே இன்னும் சொல்லலாம். ஆனால், இந்தச் செலவினங்களின் ஒட்டுமொத்தம் ஆண்டு முழுக்க எவ்விதத்தில் பரவியிருப்பினும், எல்லா நாட்களையும் எடுத்துக்கொண்டால், சராசரி வருமானத்தால் சரிக்கட்டத் தக்கனவாய் இருக்க வேண்டும். உழைப்புச் சக்தியின் உற்பத்திக்கு நாள்தோறும் தேவைப்படும் சரக்குகளின் மொத்தம் $=A$, வாரந்தோறும் தேவைப்படுபவை $=B$, காலாண்டுதோறும் தேவைப்படுபவை $=C$; இவ்வாறே இன்னும் சொல்லலாம். இந்தச் சரக்குகளின் ஒரு நாளைய

$$\text{சராசரி} = \frac{365A+52B+4C+\text{ இன்ன பிற}}{365}.$$

சராசரி நாளுக்குத் தேவையான இச்சரக்குத் திரளில் 6 மணி நேரச் சமுதாய உழைப்பு உருக்கொண்டிருப்பதாகக் கொண்டால், ஒரு நாளைய உழைப்புச் சக்தியில் அரை நாள் சராசரிச் சமுதாய உழைப்பு அடங்கும் என்றாகிறது; வேறுவிதமாகச் சொன்னால், உழைப்புச் சக்தியின் அன்றாட உற்பத்திக்கு அரை நாள் உழைப்பு தேவைப்படுகிறது. உழைப்பின் இந்த அளவு ஒரு நாள் உழைப்புச் சக்தியின் மதிப்பாக அல்லது அன்றாடம் மறுவுற்பத்தி செய்யப்படும் உழைப்புச் சக்தியின் மதிப்பாக அமைகிறது. அரை நாள் சராசரிச் சமுதாய உழைப்பு மூன்று ஷில்லிங்கில் அடங்குவதாகும் என்றால், மூன்று ஷில்லிங் என்பது ஒரு நாளைய உழைப்புச் சக்தியின் மதிப்புக் கேற்ற விலையாகும். எனவே, நாளொன்றுக்கு மூன்று ஷில்லிங் என்ற விலைக்கு உழைப்புச் சக்தியின் உடைமையாளர் உழைப்புச் சக்தியை விற்க முன் வந்தால், அதன் விற்பனை விலை அதன்

மதிப்புக்குச் சமமாகும்; நம் அனுமானத்தின் படி தனது மூன்று ஷில்லிங்கை மூலதனமாக்க விரும்புகிற நமது நண்பர் பணாதிபதி இந்த மதிப்பை விலையாகக் கொடுக்கிறார்.

உழைப்பாளி தன் ஜீவ ஆற்றலைப் புதுப்பித்துக் கொள்ள அன்றாடம் அவசியம் தேவைப்படுகிற சரக்குகளின் மதிப்பால், ஆகவே உடலுக்கு இன்றியமையாத வாழ்வுச் சாதனங்களின் மதிப்பால் உழைப்புச் சக்தியின் மதிப்பினது அடிவரம்பு நிர்ணயிக்கப்படுகிறது. உழைப்புச் சக்தியின் விலை இந்த அடிவரம்புக்கு வீழ்ந்தால், அது தன் மதிப்புக்கும் கீழாக வீழ்கிறது என்று பொருள். ஏனெனில் இப்படிப்பட்ட நிலைமையில் அதனை ஊனமடைந்த நிலையில்தான் பராமரிக்கவும் வளர்க்கவும் முடியும். ஆனால், ஒவ்வொரு சரக்கின் மதிப்பும் அதனை இயல்பான தரமுள்ளதாக்குவதற்குத் தேவையான உழைப்பு நேரத்தாலேயே நிர்ணயிக்கப்படுகிறது.

உழைப்புச் சக்தியின் மதிப்பை இவ்வழியில்—விவகாரத்தின் தன்மையாலேயே விதிக்கப்படுவதான இவ்வழியில்—நிர்ணயிப்பது கொடுமை வாய்ந்ததாகும் என்று கூறி, ரோசியைப் போல் பின்வருமாறு புலம்புவது மட்டரகமான உணர்ச்சிப் பசப்பே ஆகும்; ''உற்பத்தி நிகழ்முறையின் போது தொழிலாளர்களின் வாழ்வுச் சாதனங்களைத் தனித்துப் பிரித்து வைத்து உழைப்பதற்கான திறனை (puissance de travail) புரிந்து கொள்வதென்பது இல்லாத ஒன்றின் மாயத் தோற்றத்தை (etre de raison) புரிந்து கொள்வதே. உழைப்பு அல்லது உழைக்கும் திறனைப் பற்றிப் பேசும் போது, நாம் அதனுடன் கூடவே தொழிலாளியையும் அவரது வாழ்வுச் சாதனங்களையும் பற்றி, தொழிலாளியையும் கூலியையும் பற்றி, பேசுகிறோம்.''[171] உழைக்கும் திறனைப் பற்றிப் பேசுவது உழைப்பைப் பற்றிப் பேசுவதாகாது—எப்படி செரிமானத் திறனைப் பற்றிப் பேசுவது செரிமானம் பற்றிப் பேசுவதாகாதோ அதே போலத்தான் இதுவும். செரிமான நிகழ்முறைக்கு நல்ல வயிறு மட்டும் போதாது. உழைக்கும் திறனைப் பற்றி பேசும் போது, அவசியமான வாழ்வுச் சாதனங்களை நாம் தனித்துப் பிரித்து வைத்து விட்டுப் பேசுவதில்லை. மாறாக, அவற்றின் மதிப்பு அதன் மதிப்பில் வெளியிடப்படுகிறது. தொழிலாளியின் உழைக்கும் திறன் விற்கப்படாதிருந்தால், தொழிலாளிக்கு அதனால் பயனேதுமில்லை. இந்த உழைக்கும் திறனின் உற்பத்திக்குக் குறிப்பிட்ட அளவிலான வாழ்வுச் சாதனங்கள் செலவாயின, அதன் மறுவுற்பத்திக்கும் அவ்வாறே தொடர்ந்து செலவாகும், இந்தக் கொடிய அவசியத்தை உண்டாக்கி இயற்கை என்னை வாட்டுகிறதே என்பார் அவர். அப்போது சிஸ்மொந்தி சொல்வதைத்தான் ஏற்றுக் கொள்வார்: ''உழைக்கும் திறனால் என்ன

171 ரோசி: ''Cours d'Econ. Polit.,'' பிரசல்ஸ், 1842, பக்கம் 370.

பயன், அதனை விற்க வழியில்லை என்றால்.''[172]

சரக்கென்ற விதத்தில் உழைப்புச் சக்திக்குள்ள விசேஷ இயல்பின் ஒரு விளைவு யாதென்றால், வாங்குபவருக்கும் விற்பவருக்குமிடையில் ஒப்பந்தம் ஏற்பட்டவுடனேயே அதன் பயன்-மதிப்பு வாங்குபவரின் கைக்குப் போய் விடுவதில்லை என்பதாகும். அதன் மதிப்பு எந்தவொரு சரக்கின் மதிப்பையும் போன்றதே; அது சுற்றோட்டத்தில் நுழைவதற்கு முன்னரே அம் மதிப்பு நிர்ணயமாகி விடுகிறது; ஏனெனில் ஒரு திட்டமான அளவு சமுதாய உழைப்பு அதற்காக செலவிடப்பட்டுள்ளது; ஆனால் அதன் பயன்-மதிப்பு பிற்பாடு அதன் சக்தி பிரயோகிக்கப்படுவதிலேயே அடங்கியுள்ளது. உழைப்புச் சக்தியின் உடைமை மாற்றமும், வாங்குபவர் அதை உள்ளபடியே தனதாக்கிக் கொள்வதும்—அதாவது அதைப் பயன்-மதிப்பாக ஈடுபடுத்துவதும்—ஒரு கால இடைவெளியால் பிரிக்கப்பட்டிருக்கின்றன. ஆனால், சரக்கின் பயன்-மதிப்பை விற்றலின் மூலம் முறைப்படி உடைமை மாற்றம் செய்வதும், அதை உள்ளபடியே வாங்குபவரிடம் ஒப்படைப்பதும் ஒரே நேரத்தில் நடைபெறாவிட்டால், வாங்குபவரின் பணம் சாதாரணமாய் கொடுப்புச் சாதனமாகவே பயன்படுகிறது.[173] முதலாளித்துவப் பொருளுற்பத்தி முறை கோலோச்சுகிற ஒவ்வொரு நாட்டிலும், உழைப்புச் சக்தி ஒப்பந்தத்தால் நிர்ணயிக்கப்பட்ட காலத்துக்குப் பிரயோகிக்கப்பட்ட பிறகு அதற்கு விலை கொடுப்பதே வழக்கம்; உதாரணமாக ஒவ்வொரு வார இறுதியிலுமே உழைப்புச் சக்திக்கு விலை கொடுக்கப்படுகிறது. ஆகவே, எப்போதுமே உழைப்புச் சக்தியின் பயன்-மதிப்பு முதலாளிக்கு முன்னீடாகத் தரப்படுகிறது: தொழிலாளியானவர் விலை கிடைக்குமுன்பே அந்தப் பயன்-மதிப்பை முதலாளி நுகர அனுமதிக்கிறார். முதலாளிக்கு அவர் கடன் கொடுக்கிறார்; எங்குமே இதுதான் நடக்கிறது. இது உண்மை, வெறும் கற்பனை அன்று; நொடித்துப் போகும் போது சில சந்தர்ப்பங்களில் தொழிலாளிக்கு ஏற்படுகிற கூலியிழப்பு மட்டுமல்லாமல்,[174] மேலும் நீடித்து நிலைக்கக் கூடிய தொடர் வரிசையான பல விளைவுகளும்

---

172 சிஸ்மொந்தி: ''Nouv. Princ. etc.,'' பாகம் I., பக்கம் 112.

173 ''எவ்வகை உழைப்பானாலும் முடிந்த பிறகே ஊதியமளிக்கப்படுகிறது.'' (''வேண்டலின் இயல்பு தொடர்பான கோட்பாடுகள் பற்றிய ஆய்வு,'' பக்கம் 104.) ''உற்பத்திப் பொருட்களின் முதல் படைப்பாளியான தொழிலாளி அவரது சேமிப்புகளின் பயனாய் வாரம், இரு வாரம், மாதம் காலாண்டு போன்ற கால வரைகளின் முடிவு வரை கூலி பெறக் காத்திருக்க முடிந்த அக்கணத்திலிருந்தே வர்த்தகக் கடன்-செலாவணி முறை தொடங்க வேண்டியிருந்தது.'' (ஷார்ல் கானில்: ''Des Systemes d'Econ. Polit.'' 2ஆம் பதிப்பு, பாரிஸ், 1821, பாகம் II., பக்கம் 150.)

174 ''தொழிலாளி தமது தொழிலைக் கொடுத்துதவுகிறார்.'' ஆனால் ஸ்டோர்ஹ் நரித்தனமாகச் சேர்த்துக் கொள்கிறார்: ''கூலி இழப்பைத் தவிர...தொழிலாளி வேறு எவ்வகையிலும் இழப்புக்கு ஆளாவதில்லை''. (ஸ்டோர்ஹ்:''Cours d'Econ. Polit.'' பீட்டர்ஸ்பர்க், 1815, பாகம் II., பக்கம் 37.)

இதற்குச் சான்றாகும்.[175] ஆயினும் பணம் வாங்கற் சாதனமாகப் பயன்பட்டாலும் சரி, கொடுப்புச் சாதனமாகப் பயன்பட்டாலும் சரி, இது சரக்குப் பரிவர்த்தனையின் இயல்பில் எந்த மாற்றத்தையும் ஏற்படுத்துவதில்லை. உழைப்புச் சக்தியின் விலை ஒரு வீட்டின் வாடகையைப் போலவே ஒப்பந்தத்தால் நிர்ணயிக்கப்படுகிறது;

---

[175] ஓர் உதாரணம். லண்டனில், ரொட்டியை அதன் முழு மதிப்புக்கு விற்கிற "முழு விலைக்காரர்கள்" என்றும், அதன் மதிப்புக்குக் கீழாக விற்கிற "குறை விலைக்காரர்கள்" என்றும் இருவகை ரொட்டிக்காரர்கள் உள்ளனர். பின்சொன்ன வகையில் ரொட்டிக்காரர்களின் மொத்த எண்ணிக்கையில் முக்கால் வாசிக்கும் அதிகமானோர் உள்ளனர். ("ரொட்டி தயாரிக்கும் கைத்திறப் பணியாளர்கள் புகார் செய்த குறைகளை ஆராய்வதற்கான ஆணையர் எச். எஸ். ட்ரெமன்உறீரின் அறிக்கை" என்பதில் பக்கம் xxxii., லண்டன், 1862.) குறை விலைக்காரர்கள், அநேகமாக விதிவிலக்கின்றியே, படிக்காரம், சோப்பு, பொட்டாசியம் கார்பனேட், சீமைச் சுண்ணாம்பு, டர்பிஷயர் கல்தூள், இன்னும் இது போன்ற ஊட்டமளித்து உடல்நலம் பேணும் இன்சுவைப் பொருட்களுடன் கலப்படம் செய்த ரொட்டியையே விற்கின்றனர். (மேலே குறிப்பிட்ட நீலப் புத்தகத்தையும், "ரொட்டிக் கலப்படம் பற்றிய 1855ஆம் வருடக் குழுவின்" அறிக்கையையும், டாக்டர் ஹசாலின் "கண்டுபிடிக்கப்பட்ட கலப்படங்கள்," 2ஆம் பதிப்பு, லண்டன், 1861 என்ற நூலையும் பார்க்கவும்.) "இந்தக் கலப்படங்களின் விளைவாக ஒரு நாளைக்கு இரண்டு இராத்தல் ரொட்டி உண்டு வாழ்கிற ஏழை, அவனது சுகாதாரத்துக்கு நேரிடக் கூடிய கேடான பாதிப்புகள் கிடக்கட்டும், இப்பொழுது போஷாக்குப் பொருளில் கால் பாகம் கூடப் பெறுவதில்லை" என்று 1855ஆம் வருடக் குழுவின் முன்னர் சர் ஜான் கார்டன் கூறினார். தொழிலாளி வர்க்கத்தின் மிகப் பெரும் பகுதி இந்தக் கலப்படத்தை நன்கு அறிந்திருந்தும், தாங்கள் வாங்குவதில் பகுதியாகப் படிக்காரத்தையும், கல்தூளையும், இன்ன பிறவற்றையும் ஏற்றுக் கொள்வதற்கான காரணமாக, ட்ரெமன்ஹீர் (முன் வந்தது, பக்கம் xlvii.) கூறுகிறார்: "தங்கள் ரொட்டிக்காரர் அல்லது வியாபாரி பார்த்துக் கொடுக்கும் ரொட்டியை வாங்கிக் கொள்வது" அவர்களுக்குத் "தவிர்க்க முடியாத ஒன்றாகும்." வார இறுதிக்கு முன்னதாக அவர்களுக்குக் கூலி தரப்படுவதில்லை என்பதால், அவர்களோ "வார காலத்தில் தங்கள் குடும்பத்தினர் நுகர்கிற ரொட்டிக்கு, வார இறுதிக்கு முன்னதாக விலை கொடுக்க" இயலாதுள்ளனர். சாட்சிகள் சொன்ன சாட்சியத்தின் அடிப்படையில் ட்ரெமன்ஹீர் மேலும் சொல்கிறார்: "அந்தக் கலவைகளாலான ரொட்டி இவ்வகை விற்பனைக்கென்றே தயாரிக்கப்படுகிறது என்பது பிரசித்தமானது." பல ஆங்கிலேய விவசாய வட்டங்களிலும், இன்னும் அதிகமாக ஸ்காட்லாந்து விவசாய வட்டங்களிலும் இரு வாரத்துக்கு ஒரு முறை, ஏன், மாதமொரு முறை கூட கூலி தரப்படுகிறது; கூலிக் கொடுப்புகளிடையில் இப்படிப்பட்ட நீண்ட இடைவெளிகள் இருப்பதால், விவசாயத் தொழிலாளி கடனுக்குப் பொருள் வாங்கும் கட்டாயத்துக்குள்ளாகிறார்....அவர் அதிகமாக விலை கொடுக்க வேண்டும்; உண்மையில் அவருக்குக் கடன் கொடுக்கிற கடையோடு பிணைக்கப்படுகிறார்; இவ்விதத்தில், உதாரணமாக மாதாந்தரக் கூலி தரப்படும் இடமான வில்ட்ஸிலுள்ள ஹார்னிங்காமில், வேறு இடத்தில் ஸ்டோன் 1 ஷில்லிங் 10 பென்னிக்கு வாங்கக் கூடிய அதே மாவு ஸ்டோன் 2 ஷில்லிங் 4 பென்னி என்று அவருக்கு விலையாகிறது. ("பிரிவி கவுன்சில் மருத்துவ அதிகாரியின்" "பொதுச் சுகாதாரம்" பற்றிய "ஆறாவது அறிக்கை, 1864," பக்கம் 264.) "பெய்ஸ்லி, கில்மர்னாக் ஆகிய இடங்களைச் சேர்ந்த பிளாக் அச்சிடுவோர் வேலைநிறுத்தம் செய்து, மாதாந்தரக் கூலியை இருவாரத்துக்கு ஒரு முறை தரப்படும் கூலியாக மாற்றச் செய்தனர்." ("1853 அக்டோபர் 31க்கான தொழிற்சாலை ஆய்வாளர் அறிக்கைகள்," பக்கம் 34.) முதலாளிக்குத் தொழிலாளர்கள் கொடுக்கிற கடனின் இன்னும் நேர்த்தியானதொரு விளைவு என்ற முறையில், பல ஆங்கிலேய நிலக்கரிச் சுரங்கங்களில் நடப்பிலுள்ள ஒன்றைக் குறிப்பிடலாம்; தொழிலாளிக்கு மாத இறுதி வரை கூலி தரப்படுவதில்லை; இடைக்காலத்தில் அவர் முதலாளியிடமிருந்து கணக்கு வைத்துக் கொண்டு தொகைகள்

ஆனால் பின்னரே ஈடேற்றம் செய்யப்படுகிறது. உழைப்புச் சக்தி விற்கப்படுகிறது; ஆனால் பின்னரே விலை பெறப்படுகிறது. எனவே, ஒப்பந்தத் தரப்புகளின் உறவைத் தெளிவாகக் கிரகித்துக் கொள்வதற்கு, உழைப்புச் சக்தியின் உடைமையாளர் ஒவ்வொரு முறை அதனை விற்கும் போதும் அதற்கென நிர்ணயிக்கப்பட்ட விலையை உடனடியாகப் பெறுகிறார் என்று தற்காலிகமாக அனுமானித்துக் கொள்வது பயனுள்ளதாயிருக்கும்.

உழைப்புச் சக்தி என்ற இந்தத் தனிவகைச் சரக்கின் உடைமையாளருக்கு அதை வாங்குபவர் செலுத்துகிற மதிப்பு நிர்ணயிக்கப்படுவது எப்படி என்பது நமக்குத் தெரிந்ததே. வாங்குபவர் பரிவர்த்தனையில் பெறுகிற பயன்-மதிப்பு உழைப்புச் சக்தியின் நடைமுறை அனுபோகத்திலேயே, நுகர்விலேயே வெளிப்படுகிறது. பணவுடைமையாளர் இந்தக் காரியத்துக்கு அவசியமான கச்சாப் பொருள் போன்ற ஒவ்வொன்றையும் சந்தையில் வாங்குகிறார். அதற்கு அதன் முழு மதிப்பில் விலை கொடுக்கிறார். உழைப்புச் சக்தியின் நுகர்வு என்பது ஒருங்கே சரக்குகளின் உற்பத்தியும், உபரி-மதிப்பின் உற்பத்தியும் ஆகும். எந்தவொரு சரக்கின் நுகர்வையும் போலவே, உழைப்புச் சக்தியின் நுகர்வும் சந்தையின் அல்லது சுற்றோட்டத் துறையின் எல்லைகளுக்கு வெளியே பூர்த்தியாகிறது. எனவே, திறந்த இடத்தில் எல்லாரது கண் முன்னாலும் யாவும் நடைபெறுகிற இந்த இரைச்சலான மண்டலத்தை விட்டு, பணாதிபதி, உழைப்புச் சக்தியின் உடைமையாளர் ஆகியோருடன் கூட சிறிது காலத்துக்கு வெளியே வருவோம். இருவரோடும் சேர்ந்து உற்பத்தியின் மறைவான உறையுள்ளிற்குள் செல்வோம். ''அலுவல் காரணமாக அல்லாமல் உள்ளே வரக் கூடாது'' என்ற அறிவிப்பு **கண்ணை** உறுத்துவது போல் நுழைவாயிலில் உள்ளது. மூலதனம் எப்படி உற்பத்தி செய்கிறது என்பதை மட்டுமல்லாமல், மூலதனம் எப்படி உற்பத்தி செய்யப்படுகிறது என்பதையும் இங்கே நாம் பார்ப்போம். எப்படி இலாபம் கிடைக்கிறது என்ற இரகசியம் முடிவாக வெளிப்படக் காண்போம்.

நாம் விட்டு வெளியேறுகிற இந்த மண்டலத்தின் எல்லைகளுக்குள்ளேயே உழைப்புச் சக்தியின் விற்றலும் வாங்கலும் நடந்தேறுகின்றன. உண்மையில் இம்மண்டலம் மனிதனின் பிறப்புரிமைகளது சொர்க்கமான ஏதேன் ஆகும். சுதந்தரமும், சமத்துவமும்

---

பெறுகிறார்; பல நேரங்களில் சரக்குகளாகப் பெறுகிறார்; இச்சரக்குகளுக்கு சந்தை விலையை விட அதிக விலை கொடுக்கிற கட்டாயத்துக்கு உள்ளாகிறார் (சரக்கூதிய முறை). மாதம் ஒரு முறை ஊதியமளிப்பது, இடையில் வரும் ஒவ்வொரு வார இறுதியிலும் முன்பணம் கொடுப்பது நிலக்கரிச் சுரங்க அதிபர்களின் பொதுவான வழக்கமாகும். ரொக்கம் கடையில் தரப்படுகிறது.'' (அதாவது கடை என்பது அதிபருக்குச் சொந்தமான சரக்கூதியக் கடையாகும்.) ''ஆட்கள் அதை ஒரு பக்கம் வாங்கி மறு பக்கம் கொடுத்து விடுகின்றனர்.'' (''குழந்தையுழைப்பு ஆணையம், மூன்றாம் அறிக்கை,'' லண்டன், *1864*, பக்கம் *38*, எண் *192*.)

சொத்தும், பெந்தமும் கோலோச்சுவது அங்கே மட்டும்தான். சுதந்தரம் கோலோச்சுவது எப்படி என்றால், சரக்கை, உதாரணமாக உழைப்புச் சக்தியை வாங்குபவர், விற்பவர் இருவருமே அவர்களது சுதந்தர சுயவிருப்பம் தவிர வேறு கட்டு ஏதும் இல்லாதவர்கள். சுதந்தர செயலிகளாக அவர்க்ள் ஒப்பந்தம் முடிக்கின்றனர்; அவர்கள் வந்தடையும் உடன்பாடு அவர்கள் இருவருக்கும் பொதுவான விருப்பத்தின் சட்டமுறை வடிவமே அன்றி வேறில்லை. சமத்துவம் கோலோச்சுவது எப்படி என்றால், இருவரும் சாமானிய சரக்குடைமையாளர் என்ற முறையில்தான் ஒருவரோடு ஒருவர் உறவு கொள்கின்றனர்; அவர்கள் சமதைக்குச் சமதையைப் பரிவர்த்தனை செய்து கொள்கின்றனர். சொத்து கோலோச்சுவது எப்படி என்றால் இருவரும் தத்தமக்குச் சொந்தமானதையே விற்கின்றனர். பெந்தம் கோலோச்சுவது எப்படி என்றால், இருவரும் அவரவரைப் பற்றி மட்டுமே அக்கறை கொள்கின்றனர். அவர்களை ஒன்று சேர்த்து ஒருவரோடு ஒருவர் உறவு கொள்ளச் செய்கிற ஒரே சக்தி அவரவரது தன்னலமும், ஆதாயமும், தனிப் பற்றுமே. ஒவ்வொருவரும் தன்னைப் பற்றி மட்டுமே அக்கறை கொள்கிறார்; மற்றவர்களைப் பற்றிக் கவலைப்படவில்லை. அவர்கள் இப்படிச் செய்வதால்தான், இயற்கையில் அமைந்த தெய்விக லயத்துக்கேற்ப, அல்லது எல்லாம் அறிந்த இறைவனது திருவுள்ளப் படி, தமது பரஸ்பர ஆதாயம் கருதி, பொது நலத்தின் பொருட்டு, எல்லாரும் நன்மை அடையும் விதமாய் எல்லாரும் சேர்ந்து வேலை செய்கிறார்கள்.

சாமானியச் சுற்றோட்டத்தின், அல்லது சரக்குப் பரிவர்த்தனையின் இந்த மண்டலத்தை விட்டு—''தடையிலா வாணிபப் பாமரருக்கு'' அவரது பார்வைகளையும் கருத்துகளையும், மூலதனம், கூலி இவற்றின் அடிப்படையிலான சமுதாயத்தை சீர்தூக்கிப் பார்ப்பதற்கான துலாக்கோலையும் வழங்குகிற இந்த மண்டலத்தை விட்டு—வெளியேறியதுமே, நமது கதாபாத்திரங்களின் முக பாவம் மாறி விடுவதாக நமக்குத் தோன்றுகிறது. முன்பு பணவுடைமையாளராக இருந்தவர் இப்போது முதலாளியாக முன்னால் நடைபோடுகிறார். உழைப்புச் சக்தியின் உடைமையாளர் உழைப்பாளியாகப் பின்செல்கிறார். ஒருவர் பெரிய மனித தோரணையுடன் பார்க்கிறார், அகம்பாவமாய்ச் சிரிக்கிறார், கருமமே கண்ணாய் இருக்கிறார். மற்றவர் அச்சத்துடன் தயங்குகிறார், தனது தோலை சந்தையில் விற்க வருபவர் தோல் உரிக்கப்படுமே என்று மிரள்வதைப் போல் மிரள்கிறார்.

## பகுதி III

# அறுதி உபரி-மதிப்பின் உற்பத்தி

## அத்தியாயம் VII

## உழைப்பு நிகழ்முறையும் உபரி-மதிப்பின் உற்பத்தி நிகழ்முறையும்

### பிரிவு 1.—உழைப்பு நிகழ்முறை அல்லது பயன்-மதிப்புகளின் உற்பத்தி

முதலாளி உழைப்புச் சக்தியை வாங்குவது அதனைப் பயன் படுத்திக் கொள்வதற்காகவே; பயன்படுத்தப்படும் உழைப்புச் சக்தி உழைப்பே ஆகும். உழைப்புச் சக்தியை வாங்குபவர், விற்பவரை வேலை செய்ய வைப்பதன் மூலம் அதனை நுகர்கிறார். அதை விற் பவர், வேலை செய்வதன் மூலம், முன்பு உழைக்கக் கூடியவராக மட்டும் இருந்தவர் உள்ளபடியே உழைப்பவர் ஆகிறார்; செயல் படும் உழைப்புச் சக்தி ஆகிறார்; தொழிலாளி ஆகிறார். அவரது உழைப்பு சரக்கில் உருக்கொள்ள வேண்டுமானால், யாவற்றுக்கும் முன்னதாக அவர் பயனுள்ள ஒன்றை, ஏதேனும் ஒரு வகைத் தேவையை நிறைவு செய்ய வல்ல ஒன்றை உண்டாக்குவதற்காகத் தமது உழைப்பைச் செலவிட வேண்டும். எனவே, முதலாளி தொழி லாளியை உற்பத்தி செய்ய வைப்பது குறிப்பிட்ட ஒரு பயன்-மதிப் பையே, திட்டமான ஒரு பண்டத்தையே. பயன்-மதிப்புகள் அல்லது சரக்குகளின் உற்பத்தி முதலாளியின் கட்டுப்பாட்டிலும், அவர் சார் பாகவும் நடத்தப்படுகிறது என்ற உண்மை, அந்த உற்பத்தியின் பொதுவான தன்மையை மாற்றி விடுவதில்லை. எனவே, முதலாவ தாக, உழைப்பு நிகழ்முறையை, அது குறிப்பிட்ட சமூக நிலைமை களில் பூணுகிற குறிப்பான வடிவம் கருதாமல் பரிசீலிக்க வேண்டும்.

உழைப்பு என்பது, முதலாவதாக, மனிதனும் இயற்கையும் பங்கு பெறுகிற, மனிதன் தனக்கும் இயற்கைக்கும் இடையிலான பொருளாயதப் பிரதிச் செயல்களைத் தானாகவே தொடங்கி, முறைப்படுத்தி கட்டுப்படுத்துகிற நிகழ்முறையாகும். மனிதன் இயற் கையின் சக்திகளில் தானும் ஒருவன் என்ற முறையில் தன்னையே இயற்கைக்கு எதிராக நிறுத்திக் கொள்கிறான். இயற்கையின் உற்பத்திகளைத் தன் சொந்தத் தேவைகளுக்குத் தகவமைந்த

வடிவத்தில் தனதாக்கிக் கொள்ளும் பொருட்டு, தோளையும் காலையும், தலையையும் கையையும், அதாவது தன் உடலின் இயற்கைச் சக்திகளை இயங்கச் செய்கிறான். புறவுலகின் மீது இவ்வாறு செயல்பட்டு, அதனை மாற்றுவதன் மூலம் அவன் அதே நேரத்தில் தனது தன்மையையும் மாற்றிக் கொள்கிறான். தன்னுள் உறங்கும் சக்திகளை வளரச் செய்து, அவற்றை அவன் தனது ஆட்சிக்குக் கட்டுப்பட்டுச் செயல்படுமாறு கட்டாயப்படுத்துகிறான். நாம் இப்போது ஆராய்ந்து கொண்டிருப்பது விலங்கு நிலையையே நினைவூட்டுகிற, உள்ளுணர்ச்சியின் பாற்பட்ட அந்த ஆதிகால உழைப்பு வடிவங்களை அல்ல. மனிதன் தன் உழைப்புச் சக்தியை சரக்காக சந்தைக்கு விற்கக் கொண்டுவருகிற நிலையானது, மனித உழைப்பு இன்னமும் உள்ளுணர்ச்சியின் பாற்பட்டதாய் அதன் ஆரம்பக் கட்டத்திலிருந்த அந்த நிலையிலிருந்து அளப்பரிய கால இடைவெளியால் பிரிக்கப்பட்டுள்ளது. முழுக்க முழுக்க மனிதனுக்கே உரியதான உழைப்பு வடிவத்தையே நாம் மனத்தில் கொண்டுள்ளோம். ஒரு நெசவாளரின் செயல்முறைகளை ஒத்தவற்றை சிலந்தி செய்திடுகிறது. கட்டடக் கலைஞர்கள் பலரும் வெட்கித் தலைகுனியும் படி தேனீ தேன் கூட்டை அமைத்திடுகிறது. ஆனால், கட்டடக் கலைஞர் தன் கட்டட அமைப்பை எதார்த்தத்தில் எழுப்புமுன்பே மனத்தில் எழுப்பிக் கொண்டு விடுகிறார்; படுமோசமான கட்டடக் கலைஞரையும் தலைசிறந்த தேனீயிடமிருந்து வேறுபடுத்திக் காட்டுவது இதுவே. உழைப்பு நிகழ்முறை ஒவ்வொன்றின் முடிவிலும் கிடைக்கும் விளைவு அந்நிகழ்முறையின் தொடக்கத்திலேயே உழைப்பாளியின் மனத்தில் இருந்ததுதான். அவர் தாம் வேலை செய்கிற மூலப் பொருளில் வடிவ மாற்றத்தை உண்டாக்குவதோடு தமது குறிக்கோளையும் நிறைவேற்றிக் கொள்கிறார். இந்தக் குறிக்கோள் அவரது வேலை முறையின் நெறியை நிர்ணயிக்கிறது. அவர் இக் குறிக்கோளுக்குத் தமது சித்தத்தைக் கீழ்ப்படுத்திக் கொண்டாக வேண்டும். இப்படிக் கீழ்ப்படுத்துவது கண நேரத்துக்கு மட்டுமான செயலன்று. உடல் உறுப்புகளை வருத்திக் கொள்வதன்னியில், வேலையின் போது ஆரம்பம் முதல் கடைசி வரை உழைப்பாளியின் சித்தம் அவரது குறிக்கோளுக்குத் தொடர்ந்து இசைவாயிருப்பதையும் நிகழ்முறை அவசியமாக்குகிறது, வேலையில் உன்னிப்பாய் கவனம் செலுத்த வேண்டும் என்பது இதன் பொருள். எவ்வளவுக்கெவ்வளவு வேலையின் இயல்பும், அது செய்யப்படுகிற முறையும் அவருக்குக் கவர்ச்சியற்றவையாய் உள்ளனவோ, ஆகவே அவ்வேலை அவரது உடல், மன ஆற்றல்களுக்கு வாய்ப்பளிக்காமல் சலிப்பூட்டுவதாய் உள்ளதோ, அவ்வளவுக்கவ்வளவு அதிக உன்னிப்பாய் கவனம் செலுத்த வேண்டிய கட்டாயத்துக்கு அவர் ஆளாகிறார்.

உழைப்பு நிகழ்முறையின் மூல காரணிகள் வருமாறு: 1. மனிதனின் நேரடிச் செயற்பாடு, அதாவது வேலை; 2. அந்த வேலைக்கு

உள்ளாகிற இலக்குப் பொருள்; 3. அதற்கான சாதனங்கள்.

கன்னி நிலம் (பொருளாதார வழியில் பேசுவதானால் இதில் நீரும் அடங்கும்) அப்படியே பயன்படுத்தத் தக்க தயார் நிலையில் அவசியப் பண்டங்கள் அல்லது வாழ்வுச் சாதனங்களை மனிதனுக்கு வழங்குகிறது.[176] அது மனிதனைச் சாராமல் இயற்கையாகவே இருப்பது; மனித உழைப்பின் சர்வப்பொது இலக்குப் பொருளாய் அமைவது. உழைப்பு சில பொருட்களைச் சுற்றுப்புறத்துடனான நேரடித் தொடர்பிலிருந்து பிரித்தெடுக்க மட்டுமே செய்கிறது. அந்தப் பொருட்களெல்லாம் உழைப்பின் இலக்குப் பொருட்கள்; இயற்கை தானாகவே வழங்குபவை. இயற்கையாகவே அமைந்த நீரில் நாம் பிடிக்கிற மீன்களும், இயற்கையான கானகத்தில் நாம் வெட்டுகிற மரங்களும், படிவ நாளங்களிலிருந்து நாம் எடுக்கிற தாதுப் பொருட்களும் இப்படிப்பட்டவையே. மறு புறம், உழைப்பின் இலக்குப் பொருள் முந்தைய உழைப்பின் மூலம் வடிகட்டப் பட்டதென்று சொல்லக் கூடுமானால், அதைக் கச்சாப் பொருள் [raw material] என்று அழைக்கிறோம். ஏற்கெனவே எடுக்கப் பட்டுக் கழுவுவதற்குத் தயாராய் உள்ள தாதுப்பொருள் இப்படிப் பட்டதே. கச்சாப் பொருள் அனைத்தும் உழைப்பின் இலக்குப் பொருளாகும்; ஆனால் உழைப்பின் இலக்குப் பொருள் ஒவ்வொன்றும் கச்சாப் பொருள் அன்று. உழைப்பைக் கொண்டு சிறிது மாற்றத்துக்கு உட்பட்ட பின்னரே அது கச்சாப் பொருளாக முடியும்.

உழைப்புச் சாதனம் [instrument of labour] என்பது உழைப்பாளி தனக்கும் தன் உழைப்பின் இலக்குப் பொருளுக்கும் இடையே வைப்பதும், அவரது செயற்பாட்டின் கடத்தியாகப் பயன்படுவதுமான பொருள், அல்லது பொருட் தொகுதி ஆகும். அவர் சில பொருட்களின் யாந்திரிக, பௌதிக, இரசாயனப் பண்புகளைப் பயன்படுத்தி பிற பொருட்களைத் தமது நோக்கங்களுக்கு சேவகம் புரியச் செய்கிறார்.[177] பழங்கள் போன்ற தயார் நிலையிலுள்ள வாழ்வுச் சாதனங்களை சேகரிப்பதில் மனிதனின் கைகால்களே

---

176 ''மனிதனைச் சாராமல் பூமி சிறு அளவில் தருகிறவை—ஓர் இளைஞரை தொழில் புரிந்து திரவியம் திரட்டும் வழியில் செலுத்தும் பொருட்டு அவருக்கு சிறு தொகை தந்து உதவுவது போல்—இயற்கை நமக்கு வழங்கிடும் பொருள் எனலாம்.'' (ஜேம்ஸ் ஸ்டுவர்ட்: ''அரசியல் பொருளாதாரக் கோட்பாடுகள்.'' பதிப்பு: டப்ளின், 1770, பாகம் I., பக்கம் 116.)

177 ''பகுத்தறிவு சக்தி வாய்ந்தது மட்டுமன்று, அதே அளவுக்குத் தந்திரமானதும் கூட. அதன் தந்திரம் பிரதானமாக எதில் அடங்கியுள்ளது என்றால்: பொருட்கள் அவற்றின் சொந்த இயல்புக்கேற்ப ஒன்றின்மீதொன்று வினையும் மறுவினையும் புரியுமாறு செய்து இவ்வழியில் பகுத்தறிவு தனது நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்கிறது என்பதிலேயே.'' (ஹெகல்: ''Enzyklopadie, Erster Theil, Die Logik,'' பெர்லின், 1840, பக்கம் 382.)

உழைப்புச் சாதனங்களாகப் பயன்படுகின்றன. இவற்றை விலக்கி விட்டுப் பார்த்தால், உழைப்பாளி சொந்தமாக்கிக் கொள்கிற முதல் பொருள் உழைப்பின் இலக்குப் பொருளன்று, உழைப்புச் சாதனமே. இவ்வாறு, இயற்கை அவரது செயற்பாட்டுக்குதவும் உறுப்புகளில் ஒன்றாகிறது. அதனை அவர் தமது உறுப்புகளோடு இணைத்துக் கொண்டு—விவிலிய நூல் என்ன சொன்னாலும்—தமது ஆகிருதியை ஓங்கி வளரச் செய்கிறார். பூமி அவரது ஆதி உக்கிராணமாய் விளங்குவது போலவே அவரது ஆதிக் கருவிக் கொட்டிலாகவும் விளங்குகிறது. எடுத்துக்காட்டாக, வீசுவதற்கும், அரைப்பதற்கும், அடிப்பதற்கும், வெட்டுவதற்கும் இன்ன பிற காரியங்களுக்குமான கற்களை அது அவருக்கு வழங்குகிறது. பூமியே ஓர் உழைப்புச் சாதனம்தான். ஆனால், அது விவசாயத்தில் அவ்வாறு பயன்படுத்தப்படுவதற்கு, வரிசையான இதர பல உழைப்புச் சாதனங்களும், ஒப்பளவில் உழைப்பின் உயர்ந்த வளர்ச்சி நிலையும் அவசியம்.[178] உழைப்பு சிறிதளவு வளர்ச்சி கண்டதுமே, அதற்கென தயாரிக்கப்பட்ட தனிவகைச் சாதனங்கள் தேவைப்படுகின்றன. இவ்வாறு மிகப் பழங் குகைகளில் கற்கருவிகளையும் கல்லாயுதங்களையும் காண்கிறோம். மனித வரலாற்றின் மிக ஆரம்ப காலத்தில், பழக்கப்பட்ட மிருகங்கள், அதாவது குறிக்கோளுடன் வளர்த்தெடுக்கப்பட்டு உழைப்பினால் மாற்றங்களுக்குள்ளான மிருகங்கள்—திருத்திச் செப்பனிட்ட கற்கள், மரம், எலும்புகள், கிளிஞ்சல்கள் ஆகியவற்றோடு கூட—உழைப்புச் சாதனங்களாக முக்கியப் பங்கு வகிக்கின்றன.[179] உழைப்புச் சாதனங்களின் உபயோகமும் புனைவும்—குறிப்பிட்ட சில மிருக ராசிகளிடையே இவை முதிரா நிலையில் காணப்பட்ட போதிலும்—மனித உழைப்பு நிகழ்முறைக்கே உரித்தான தனிச் சிறப்புகளாகும்; எனவே, கருவி செய்யும் மிருகம் என்று மனிதனுக்கு இலக்கணம் வகுக்கிறார் பிராங்க்ளின். மறைந்து போய்விட்ட மிருக ராசிகளை நிர்ணயிப்பதற்கு புதைபடிவ எலும்புகள் எவ்வளவு முக்கியத்துவமுள்ளவையோ, மறைந்து போய்விட்ட சமூகப் பொருளாதார வடிவங்களை ஆராய்ந்தறிவதற்குக் கடந்த கால உழைப்புச் சாதனங்களின் மீதமிச்சங்களும் அதே அளவு முக்கியத்துவமுள்ளவையாகும். வெவ்வேறு பொருளாதார சகாப்தங்களை நாம் வேறுபடுத்திப் பார்க்க உதவுவது தயாரிக்கப்பட்ட பொருட்கள் எவை என்பதன்று, அவை தயாரிக்கப்பட்டது எப்படி

[178] மற்றபடி மோசமானதாகிய தமது நூலில் ("Theorie de l'Econ. Polit." பாரிஸ், 1815) கானில்—பிசியோக்கிராட்டுகளுக்கு மாறாக—முறைப்படியான விவசாயம் ஆரம்பமாவதற்கு அவசிய முன்தேவைகளாகிய வரிசையான பல நிகழ்முறைகளை மனத்தில் பதியும் விதத்தில் பட்டியலிடுகிறார்.

[179] "Reflexions sur la Formation et la Distribution des Richesses" (1766) என்ற தமது நூலில், துர்கோ பழக்கப்பட்ட மிருகங்கள் பழங்கால நாகரிகத்துக்கு முக்கியமாய்த் திகழ்ந்ததைத் தெளிவாகக் காட்டுகிறார்.

என்பதும் எக்கருவிகளால் என்பதுமே.[180] உழைப்புச் சாதனங்கள் மனித உழைப்பு அடைந்துள்ள வளர்ச்சி நிலைக்கு ஓர் அளவுகோலை வழங்குவது மட்டுமல்லாமல், அந்த உழைப்பு நடைபெறுகிற சமூக நிலைமைகளைச் சுட்டிக் காட்டும் குறிகளாகவும் உள்ளன. உழைப்புச் சாதனங்களிடையே இயந்திரத் தன்மை வாய்ந்தவற்றை, ஒட்டு மொத்தமாக எடுத்துக்கொண்டால், உற்பத்தியின் எலும்பும் தசையும் எனலாம். இந்த உழைப்புச் சாதனங்கள், உற்பத்தியின் கொள்கல அமைப்பென்று சொல்லக்கூடிய வகையைச் சேர்ந்த உழைப்புச் சாதனங்களைக் காட்டிலும், குறிப்பிட்ட உற்பத்திச் சகாப்தத்தின் தனியியல்புகளைத் தெளிவாகப் புலப்படுத்துகின்றன. இரண்டாவ தாகக் குறிப்பிட்ட உழைப்புச் சாதனங்கள், எடுத்துக்காட்டாக குழாய்கள், தொட்டிகள், கூடைகள், ஜாடிகள் போன்றவை உழைப் புக்கான மூலப் பொருட்களை வைக்க மட்டுமே பயன்படுகின்றன. ஆரம்பத்தில் இவை இரசாயனத் தொழில்களில் முக்கியப் பங்கு வகிக்கத் தொடங்குகின்றன.

இன்னும் விரிவான அர்த்தத்தில், நாம் உழைப்புச் சாதனங்கள் என்ற வகையில், உழைப்பை அதன் இலக்குப் பொருளுக்கு நேரடி யாக மாற்றிக் கொடுப்பதற்குப் பயன்படுத்தப்படுபவையும், எனவே ஏதேனும் ஒரு விதத்தில் செயற்பாட்டின் கடத்திகளாகப் பயன்படு பவையுமான அந்தப் பொருட்களோடு கூட, உழைப்பு நிகழ் முறையை நடத்துவதற்கு அவசியமான எல்லாப் பொருட்களையும் சேர்த்துக் கொள்ளலாம். இவை நேரடியாக உழைப்பு நிகழ் முறையில் நுழைவதில்லை; ஆனால் இவையின்றி அது நடை பெறவே முடியாது, அல்லது பகுதியளவுக்கே நடைபெற முடியும். பூமி இவ்வகைப்பட்ட சர்வப் பொது சாதனம் என்பதை மீண்டும் காண்கிறோம். ஏனெனில் உழைப்பாளி நிற்பதற்கு ஓர் இடத்தையும் அவரது செயற்பாடு ஈடுபடுத்தப்படுவதற்கு ஒரு களத்தையும் அது வழங்குகிறது. முந்தைய உழைப்பின் பலனாய் அமைந்து, இவ்வகை உழைப்புச் சாதனங்களாகவும் இருப்பவற்றில் பட்டறைகள், கால் வாய்கள், சாலைகள் போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

---

180 சொகுசுப் பண்டம் என்ற சொல்லின் கண்டிப்பான அர்த்தத்தில் சொகுசுப் பண்டங்களானவை வெவ்வேறு உற்பத்திச் சகாப்தங்களின் தொழில் நுட்ப ஒப்பீட்டுக்கு அனைத்திலும் மிகக் குறைந்த முக்கியத்துவமுள்ள சரக்குகளாகும். இக்காலம் வரை நமது ஏடேறிய வரலாறுகள், சமூக வாழ்க்கை அனைத்தின், எனவே உண்மை வரலாறு அனைத்தின் அடிப்படையாக உள்ள பொருளுற்பத்தி வளர்ச்சியை எவ்வளவுதான் குறைவாகக் கவனித்தாலும், வரலாற்றுக்கு முற்பட்ட காலங்கள் பொருள்முதல்வாத ஆராய்ச்சிகளின் முடிவுகளுக்கேற்ப வகை பிரிக்கப்படுகின்றனவே அல்லாமல், வர லாற்றுபூர்வமானவை என்படுகிற ஆராய்ச்சிகளின் முடிவுகளுக்கேற்ப அல்ல. இந்தக் காலங்கள் அந்தந்த காலத்துக் கருவிகளும் ஆயுதங்களும் எப்பொருளிலிருந்து செய்யப் பட்டனவோ அப்பொருளுக்கேற்பவே, கற்காலமாகவும், வெண்கலக் காலமாகவும், இரும்புக் காலமாகவும் பிரிக்கப்படுகின்றன.

ஆகவே, உழைப்பு நிகழ்முறையில் மனிதனின் செயற்பாடு உழைப்புச் சாதனங்களின் உதவியுடன், வேலைக்குள்ளாகும் மூலப் பொருளில், தொடக்கத்திலிருந்தே திட்டமிட்ட மாற்றத்தை ஏற்படுத்துகிறது. உழைப்பு நிகழ்முறை உற்பத்திப் பொருளில் மறைந்து விடுகிறது; இவ்வுற்பத்திப் பொருள் பயன்-மதிப்பாகும், வடிவ மாற்றத்தால் மனிதனின் தேவைகளுக்குத் தகவமைக்கப்பட்ட இயற்கைப் பொருளாகும். உழைப்பு அதன் இலக்குப் பொருளுடன் இணைகிறது. உழைப்பு பொருள்வடிவம் ஆகிறது; இலக்குப் பொருள் உருமாறுகிறது. முன்பு உழைப்பாளியிடம் இயங்குவதாய் இருந்தது இப்போது உற்பத்திப் பொருளில் இயங்காநிலைப் பண்பாகிறது. கருமான் வார்த்திடுகிறார்; உற்பத்திப் பொருள் வார்ப்பாகிறது.

உழைப்பு நிகழ்முறை முழுவதையும் அதன் பலனாகிய உற்பத்திப் பொருளின் கோணத்திலிருந்து ஆராய்ந்தால், உழைப்புச் சாதனங்கள், உழைப்பின் இலக்குப் பொருள் இரண்டுமே உற்பத்திச் சாதனங்கள் ஆகும் என்பதும்,[181] அந்த உழைப்பு திறனுடை உழைப்பு [productive labour] ஆகும் என்பதும்[182] தெளிவாகும்.

ஒரு பயன்-மதிப்பு உற்பத்திப் பொருளின் வடிவில் உழைப்பு நிகழ்முறையிலிருந்து வெளியாகிறது என்ற போதிலும், முந்தைய உழைப்பின் உற்பத்திப் பொருட்களான வேறு சில பயன்-மதிப்புகள் உற்பத்திச் சாதனங்களாக அதனுள் நுழைகின்றன. ஒரே பயன்-மதிப்பு முந்தைய நிகழ்முறை ஒன்றின் உற்பத்திப் பொருளாகவும் பிந்திய நிகழ்முறை ஒன்றில் உற்பத்திச் சாதனமாகவும் இருக்கிறது. ஆகவே உற்பத்திப் பொருட்கள் உழைப்பின் பலன்கள் மட்டுமல்ல, உழைப்பிற்கான அத்தியாவசிய நிலைமைகளும் ஆகும்.

உழைப்புக்கான மூலப் பொருள் [material] நேரடியாக இயற்கையால் வழங்கப்படும் தொழில்களான சுரங்கம் தோண்டுதல், வேட்டை, மீன் பிடித்தல், வேளாண்மை (கன்னி நிலத்தைக் கொத்துவது என்ற வரம்புக்குள் அடங்குவது) போன்ற எடு பொருள் தொழில்களை [extractive industries] விதிவிலக்காகக் கொண்டால், எல்லாத் தொழிற் கிளைகளும் முன்பே உழைப்பின் மூலம் வடித்தெடுக்கப்பட்ட பொருட்களையே, முன்பே உழைப்பின் உற்பத்திப் பொருட்களாயுள்ள கச்சாப்பொருளையே கையாளுகின்றன. வேளாண்மை விதையை இப்படித்தான் கையாள்கிறது. மிருகங்களையும், தாவரங்களையும் இயற்கையின் விளைபயன்களாய்க் கருதுவது நம் வழக்கம்; இவை இன்றுள்ள வடிவில்

---

181 எடுத்துக்காட்டாக, பிடிபடாதுள்ள மீன் மீன்பிடித்தொழிலில் ஓர் உற்பத்திச் சாதனம் ஆகும் என்பது விசித்திரமாய் தோன்றுகிறது. ஆனால், இது வரை மீனேதும் இல்லாத நீரில் மீன் பிடிக்கும் கலையை யாரும் கண்டுபிடிக்கவில்லை.

182 உழைப்பு நிகழ்முறையின் கண்ணோட்டத்தில் மட்டுமே திறனுடை உழைப்பு என்றால் என்ன என்பதை நிர்ணயிக்கும் இந்த வழிமுறை எவ்விதத்தும் முதலாளித்துவப் பொருளுற்பத்தி நிகழ்முறையின் நிலைக்கு நேரடியாகப் பிரயோகிக்கத் தக்கதன்று.

உழைப்பின் — உதாரணமாகச் சென்ற வருட உழைப்பின் — பலன்கள் என்பது மட்டுமல்ல; தலைமுறை தலைமுறையாக மனிதனின் மேற்பார்வையிலும் அவனது உழைப்பைக் கொண்டும் தொடர்ந்து செய்யப்பட்டுள்ள படிப்படியான மாற்றத்தின் விளைவும் ஆகும். ஆனால் மிகப் பெரும்பாலான சந்தர்ப்பங்களில் உழைப்புச் சாதனங்கள் மிகவும் மேலோட்டமாகப் பார்ப்பவருக்கும் கூட கடந்து போன சகாப்தங்களின் உழைப்பினது தடயங்களைக் காட்டுகின்றன.

கச்சாப் பொருள் உற்பத்திப் பொருளின் பிரதான உட்பொருளாகவும் இருக்கலாம், அல்லது துணைப் பொருளாக [accessory] மட்டும் அதன் ஆக்கத்தில் சேருவதாகவும் இருக்கலாம். துணைப் பொருள் உழைப்புச் சாதனங்களால் உட்கொள்ளப்படலாம் — கொதிகலனால் நிலக்கரியும், சக்கரத்தால் எண்ணெயும், இழுவைக் குதிரைகளால் புல்லும் உட்கொள்ளப்படுவதை உதாரணமாய்க் குறிப்பிடுவோம். அல்லது, துணைப்பொருள் கச்சாப்பொருளில் ஏதேனும் மாற்றத்தை உண்டாக்கும் பொருட்டு அத்துடன் கலக்கப்படலாம் — வெளுக்கப்படாத துணியில் குளோரினும், இரும்போடு நிலக்கரியும், கம்பளியோடு சாயப் பொருளும் கலக்கப்படுவதை உதாரணமாய்க் குறிப்பிடுவோம். அல்லது வேலையைத் தொடர்ந்து நடத்துவதற்கே அது தேவைப்படலாம் — பட்டறைகளில் வெப்பத்துக்காகவும், வெளிச்சத்துக்காகவும் பயன்படுத்தப்படும் பொருட்களை உதாரணமாய்க் குறிப்பிடுவோம். பிரதான சாரப் பொருளுக்கும் துணைப் பொருளுக்கும் இடையிலான வேறுபாடு மெய்யான இரசாயனத் தொழில்களில் மறைந்து போகிறது; ஏனெனில் அங்கே கச்சாப் பொருள் எதுவுமே அதன் மூல இயைபுடன் உற்பத்திப் பண்டத்தின் சாரப் பொருளில் இடம் பெறுவதில்லை.[183]

ஒவ்வொரு பொருளுக்கும் பல்வேறு இயல்புகள் உண்டு; இவ்விதம் அவற்றை வெவ்வேறு காரியங்களுக்கு உபயோகிக்கலாம். ஆகவே, ஒரே உற்பத்திப் பொருள் வெவ்வேறு உழைப்பு நிகழ்முறைகளில் கச்சாப் பொருளாகப் பயன்படலாம். உதாரணமாக, தானியமானது அரைவைக்காரர்கள், மாவுப் பொருள் தயாரிப்பாளர்கள், சாராய உற்பத்தியாளர்கள், கால்நடை வளர்ப்பவர்கள் ஆகியோருக்கு கச்சாப் பொருளாக இருக்கிறது. அது விதை வடிவில் அதன் உற்பத்தியிலேயே கச்சாப் பொருளாகப் பயன்படுகிறது. நிலக்கரியும் கூட, நிலக்கரிச் சுரங்கத் தொழிலில் ஒரே நேரத்தில் உற்பத்திப் பொருளாகவும் உற்பத்திச் சாதனமாகவும் இருக்கிறது.

---

183 உண்மையான கச்சாப் பொருட்களை ''matieres'' என்றும், துணைப் பொருளை ''materiaux'' என்றும் ஸ்டோர்ஷ் அழைக்கிறார். ஷெர்பூலியே துணைப் பொருட்களை ''matieres instrumentales'' என்கிறார்.

மேலும், ஒரு குறிப்பிட்ட உற்பத்திப் பொருள் ஒரே உழைப்பு நிகழ்முறையில் உழைப்புச் சாதனமாகவும், கச்சாப் பொருளாகவும் பயன்படுவதுண்டு. எடுத்துக்காட்டாக, கால்நடைகளைக் கொழுக்க வைப்பதைக் குறிப்பிடலாம். இதில் கால்நடையானது கச்சாப் பொருளாகவும், அதே நேரத்தில் எரு உற்பத்திக்கான சாதனமாகவும் உள்ளது.

ஓர் உற்பத்திப் பொருள் நேரடி நுகர்வுக்குத் தயார்நிலையில் இருந்த போதிலும், மதுவுக்கான கச்சாப் பொருளாகிற திராட்சையைப் போல் மேலுமோர் உற்பத்திப் பொருளுக்கான கச்சாப் பொருளாகவும் பயன்படுவதுண்டு. மறு புறம், பஞ்சு, இழை மற்றும் நூலைப் போல், கச்சாப் பொருளாக மட்டுமே நாம் பயன்படுத்தக் கூடிய வடிவத்தில் உழைப்பு அதன் உற்பத்திப் பொருளை நமக்குத் தருவதுண்டு. இப்படிப்பட்ட கச்சாப்பொருள், அதுவே உற்பத்திப் பொருள்தான் என்ற போதிலும் வரிசையாக வெவ்வேறு உழைப்பு நிகழ்முறைகளுக்கு உள்ளாக வேண்டியிருக்கலாம். இந்நிகழ்முறைகள் ஒவ்வொன்றிலும் அது இடைவிடாது மாறுபடும் வடிவத்தில் கச்சாப் பொருளாகப் பயன்படுகிறது; இறுதியில், வரிசையின் கடைசி நிகழ்முறை அதனைச் சொந்த நுகர்வுக்கோ [individual consumption] உழைப்புச் சாதனமாய்ப் பயன்படுவதற்கோ தயாரான நிலையில் நிறைவு பெற்ற உற்பத்திப் பொருள் ஆக்குகிறது.

ஆக, ஒரு பயன்-மதிப்பைக் கச்சாப்பொருளாகக் கொள்வதா, உழைப்புச் சாதனமாகக் கொள்வதா, உற்பத்திப்பொருளாகக் கொள்வதா என்பது உழைப்பு நிகழ்முறையில் அது ஆற்றுகிற பணியாலேயே, அங்கு அது வகிக்கிற இடத்தாலேயே நிர்ணயிக்கப் படுகிறது என்பதைப் பார்க்கிறோம். இந்தப் பணி அல்லது இடம் மாறும் போது அதன் தன்மையும் மாறுபடுகிறது.

ஆகவே, ஓர் உற்பத்திப் பொருள் ஒரு புதிய உழைப்பு நிகழ்முறையில் உற்பத்திச் சாதனமாகப் பங்கு கொள்ளத் தலைப்பட்டதும், அது உற்பத்திப் பொருள் என்ற தன்மையை இழந்து அந் நிகழ்முறையில் வெறும் காரணியாகி விடுகிறது. நூற்பாளர் கதிர்களை நூற்பதற்கான கருவிகளாகவும், வெண் சணலை [flax] நூலாக்குவதற்கான பொருளாகவும் மட்டுமே கொள்கிறார். மூலப் பொருளும் கதிர்களும் இல்லாமல் நூற்பது முடியாத காரியம் என்பது உண்மையே; ஆகவே, இந்தப் பொருட்கள் நூற்கும் செயலின் தொடக்கத்தில் உற்பத்திப் பொருட்களாய் இருப்பதாகவே கொள்ள வேண்டும்; ஆனால், அவை முந்தைய உழைப்பின் உற்பத்திப் பொருட்கள் என்ற உண்மை உழைப்பு நிகழ்முறையில் சற்றும் சிரத்தைக்குரியதன்று — சாகுபடியாளர், அரைவைக்காரர், ரொட்டிக்காரர் ஆகியோரின் முந்தைய உழைப்பின் பலனே ரொட்டி என்பது செரிமான நிகழ்முறையில் சற்றும் முக்கியத்துவமுடையதன்று

என்பது போலத்தான் இதுவும். மாறாக, எந்த நிகழ்முறையிலும் உற்பத்திச் சாதனங்கள் உற்பத்திப் பொருட்கள் என்ற தங்கள் தன்மையை நிலைநாட்டிக் கொள்வது பொதுவாக உற்பத்திப் பொருட்கள் என்ற முறையில் தங்களுக்குள்ள நிறைவின்மைகளைக் கொண்டே. மொட்டைக் கத்தியும் மோசமான நூலும் கத்தி செய்த வரையும் நூல் நூற்றவரையும் நமக்கு வலுக்கட்டாயமாய் நினைவு படுத்துகின்றன. நிறைவு பெற்ற உற்பத்திப் பொருளில் அதன் பயனுள்ள பண்புகளை அதற்களித்த உழைப்பு கண்ணுக்குப் புலப்படுவதில்லை; அது மறைந்து போய் விட்டதாகவே தெரிகிறது.

உழைப்பின் நோக்கங்களுக்கு உதவாத இயந்திரம் பயனற்ற தாகும். மேலும், அது இயற்கைச் சக்திகளால் தாக்குண்டு சேதமடை கிறது. இரும்பு துருப்பிடிக்கிறது, மரம் உளுத்துப் போகிறது. நூலை நெய்வதற்கோ பின்னுவதற்கோ உபயோகிக்கவில்லை என்றால், அது விரயமான பஞ்சே. உயிருள்ள உழைப்பு இந்தப் பொருட் களைக் கைக்கொண்டு, அவற்றை சாவையொத்த உறக்கத்திலிருந்து எழுப்பி, பயன்-மதிப்புகளாகக் கூடியவையாய் மட்டுமே இருப்ப வற்றை மெய்யான, செய்திறனுள்ள பயன்-மதிப்புகளாக்க வேண்டும். உழைப்பின் தீயில் குளித்து, உழைப்பினது உயிரமைப்பின் பிரிக்க முடியாத பகுதியாகத் தனதாக்கப்பட்டு, உழைப்பு நிகழ்முறையில் தம் பணிகளை நிறைவேற்றுவதற்காக உயிரூட்டப்பட்டு, அவை நுகரப் படுவது மெய்தான்; ஆனால் அவை ஒரு நோக்கத்துடன் நுகரப் படுகிறவை; புதிய பயன்-மதிப்புகளின், புதிய உற்பத்திப் பண்டங் களின் — சொந்த நுகர்வுக்கான வாழ்வுச் சாதனங்களாக அல்லது ஏதேனும் புதிய உழைப்பு நிகழ்முறைக்கான உற்பத்திச் சாதனங் களாக எந்நேரமும் தயாராயிருப்பவற்றின் — ஆரம்ப ஆக்கக் கூறு களாக நுகரப்படுகிறவை.

ஆக, ஒரு புறம் நிறைவு பெற்ற உற்பத்திப் பண்டங்கள் உழைப்பு நிகழ்முறையின் விளைவுகளாக மட்டுமன்றி, அதற்கான அவசிய நிலைமைகளாகவும் இருக்கின்றன; மறு புறம், அந்த நிகழ் முறைக்குள் அவை பங்கு பெற்றால்தான், அதாவது உயிருள்ள உழைப்புடன் அவை தொடர்பு கொண்டால்தான், பயன்-மதிப்புகள் என்ற தன்மையை அவை காப்பாற்றிக் கொள்ளுமாறு செய்யவும், அவற்றைப் பயன்படுத்திக் கொள்ளவும் முடியும்.

உழைப்பு அதன் பொருளாயதக் காரணிகளை, அதாவது அதன் இலக்குப்பொருளையும் அதன் சாதனங்களையும் உபயோகித்துக் கொள்கிறது, அவற்றை நுகர்கிறது; ஆகவே அது ஒரு நுகர்வு நிகழ் முறையாகும். இப்படிப்பட்ட திறனுடை நுகர்வு [productive consumption] சொந்த நுகர்விலிருந்து எப்படி வேறுபடுத்திக் காட் டப்படுகிறது என்றால், பின்னது உற்பத்திப் பொருட்களை உயிருள்ள தனி மனிதருக்கான வாழ்வுச் சாதனங்களாக உபயோகித்துக் கொள் கிறது; முன்னது உழைப்பை, அதாவது உயிருள்ள தனியாளின்

உழைப்புச் சக்தியைச் செயல்பட வைக்கும் ஒரே சாதனம் என்ற முறையில் உற்புத்திப் பொருட்களை உபயோகித்துக் கொள்கிறது. ஆகவே நுகர்வாளரே சொந்த நுகர்வின் பலன்; நுகர்வாளர் அல்ல, உற்பத்திப் பண்டமே திறனுடை நுகர்வின் பலன்.

ஆக, உழைப்புச் சாதனங்களும் இலக்குப் பொருட்களும் தாமே உற்பத்திப் பொருளாய் உள்ள வரை, உழைப்பானது உற்பத்திப் பொருட்களைப் படைக்கும் பொருட்டு உற்பத்திப் பொருட்களை நுகர்கிறது; அல்லது, வேறு விதமாகச் சொன்னால், அது உற்பத்திப் பொருட்களின் ஒரு தொகுதியை இன்னொரு தொகுதிக்கான உற்பத்திச் சாதனங்களாக மாற்றுவதன் மூலம் நுகர்கிறது. ஆனால், ஆரம்பத்தில் உழைப்பு நிகழ்முறையில் பங்கு பெற்றோர் மனிதனும் மனிதனைச் சாராதிருக்கிற பூமியுமே; அவ்வாறே, இன்றும் கூட, மனித உழைப்புடன் இயற்கைப் பொருட்களின் இணைப்பெதையும் குறிக்காத, இயற்கையால் நேரடியாகத் தரப்பட்ட அநேக உற்பத்திச் சாதனங்களை உழைப்பு நிகழ்முறையில் ஈடுபடுத்துகிறோம்.

மேலே கண்டது போல், உழைப்பு நிகழ்முறையை அதன் சாமானிய ஆரம்பக் காரணிகளாகப் பகுக்கும் போது அது பயன்-மதிப்புகளை உற்பத்தி செய்வதை நோக்கமாய்க் கொண்ட மனிதச் செயல் ஆகும்; மனிதத் தேவைகளின் நிறைவுக்காக இயற்கைப் பொருட்களைத் தனதாக்கி கொள்ளுதலாகும்; மனிதனுக்கும் இயற்கைக்குமிடையே பொருட் பரிவர்த்தனை [exchange of matter] நடந்தேறுவதற்கு அவசிய நிபந்தனை ஆகும்; மனித இனம் என்ற ஒன்று இருப்பதற்கு இயற்கை விதித்த சாசுவத நிபந்தனை ஆகும்; ஆகவே மனித இனம் அவ்வப்போது இருக்கிற சமூகக் கட்டம் எதனையும் சாராதிருப்பது; அல்லது, சமூகக் கட்டங்கள் யாவற்றுக்குமே பொதுவானது எனலாம். ஆகவே, நமது உழைப்பாளியை ஏனைய உழைப்பாளிகளுடன் தொடர்புபடுத்திக் காட்ட அவசியமேற்படவில்லை; ஒரு பக்கம் மனிதனும் அவனது உழைப்பும், மறு பக்கம் இயற்கையும் அதன் பொருட்களும் என்பதே போதுமானதாய் இருந்தது. கூழின் சுவை கேப்பையைப் பயிரிட்டது யார் என்று தெரிவிப்பதில்லை; அதே போல், இந்தச் சாமானிய உழைப்பு நிகழ்முறையும் அது எத்தகைய சமூக நிலைமைகளில் நடைபெறுகிறது என்பதைத் தானாகவே தெரிவிப்பதில்லை; அடிமையுடையானின் மூர்க்கமான சவுக்கடியால் நடைபெறுகிறதா, முதலாளியின் தவிப்பு நிறைந்த கண்காணிப்பில் நடைபெறுகிறதா, சின்சினாட்டஸ் அவரது எளிய பண்ணையின் நிலங்களில் உழவு வேலை நடத்தும் போதோ காட்டுமிராண்டி கல்லாலடித்து முரட்டு விலங்குகளைக் கொல்லும் போதோ நடைபெறுகிறதா என்று தெரிவிப்பதில்லை.[184]

184 கர்னல் டாரென்ஸ் காட்டுமிராண்டியின் இந்தக் கல்லில் மூலதனத்தின் தோற்றுவாயைக் கண்டுபிடிக்கிறார். இது அவரது தர்க்கவாதத் திறனின் அரிய

முதலாளி ஆகப் போகிற நம்மவரிடம் இப்போது திரும்பி வருவோம். அவர் உழைப்பு நிகழ்முறைக்கு அவசியமான காரணிகள் அனைத்தையும்—அதன் புறவயக் காரணிகளான உற்பத்திச் சாதனங்களையும், அகவயக் காரணியான உழைப்புச் சக்தியையும்—பொதுச் சந்தையில் வாங்கியதும், அவரை விட்டுப் பிரிந்தோம். அவரது குறிப்பான தொழில் நூற்பானாலும், பாத அணித் தயாரிப்பானாலும், வேறு எதுவானாலும் அந்தத் தொழிலுக்கேற்ற உற்பத்திச் சாதனங்களையும் உழைப்புச் சக்தி வகையையும் நிபுணருக்குரிய திறமையுடன் தெரிந்தெடுத்திருக்கிறார். பிறகு அவர் தான் வாங்கி வந்த உழைப்புச் சக்தியாகிய சரக்கை நுகர முனைகிறார்; உழைப்புச் சக்தியின் அவதாரமான தொழிலாளியை உழைக்க வைத்து, உற்பத்திச் சாதனங்களை இவ்விதம் நுகர வைத்து, இதனைச் செய்கிறார். தொழிலாளி தனக்காக உழைப்பதற்குப் பதில் முதலாளிக்காக உழைக்கிறார் என்ற உண்மை உழைப்பு நிகழ்முறையின் பொதுவான தன்மையை மாற்றி விடுவதில்லை என்பது தெளிவு. மேலும், பாத அணித் தயாரிப்பில் அல்லது நூற்பில் கையாளப்படும் குறிப்பான வினைமுறைகளும் நடவடிக்கைகளும் முதலாளியின் குறுக்கீட்டால் உடனடியாக மாறி விடுவதில்லை. சந்தையில் தனக்குக் கிடைக்கிற உழைப்புச் சக்தியை வைத்தே அவர் தொடங்கியாக வேண்டும்; அதாவது முதலாளிகளின் உதயத்துக்கு உடனடியாக முற்பட்ட காலத்தில் கிடைக்கக் கூடிய ரகத்திலான உழைப்புடன் அவர் திருப்தியடைய வேண்டும். உழைப்பை மூலதனத்துக்குக் கீழ்ப்படுத்துவதன் மூலம் உற்பத்தியின் வினைமுறைகளில் மாற்றங்கள் செய்தல் பிற்காலத்திலேயே சாத்தியம். ஆகவே, பின்னர் ஓர் அத்தியாயத்தில் அதனைப் பரிசீலிக்க வேண்டியிருக்கும்.

உழைப்பு நிகழ்முறையை முதலாளி உழைப்புச் சக்தியை நுகருகிற நிகழ்முறையாக மாற்றி விடும் போது, தனிவிசேஷமான இரு அமிசங்கள் புலப்படுகின்றன. முதலாவதாக, உழைப்பாளி தனது உழைப்பு யாருக்குச் சொந்தமோ அந்த முதலாளியின் கண்காணிப்பில் வேலை செய்கிறார்; முதலாளி கருத்துடன் கவனம் செலுத்தி வேலை சரியானபடி நடைபெறுமாறு செய்கிறார்; கச்சாப் பொருளில் வீண் விரயமும் கருவிகளில் வேலைக்கு அவசியமானதை விடக் கூடுதலான தேய்மானமும் ஏற்படாத படி உற்பத்திச் சாதனங்களை மதிநுட்பத்துடன் பயன்படுத்துமாறு செய்கிறார்.

இரண்டாவதாக, உற்பத்திப் பொருள் முதலாளிக்குரிய சொத்

---

சாதனைதான். "அவன் (காட்டுமிராண்டி) தான் வேட்டையாடுகிற காட்டு விலங்கை நோக்கிக் கடாசுகிற அந்த முதல் கல்லின் உருவில், தனது கைக்கு எட்டாமல் தொங்குகிற பழத்தை அடிப்பதற்கு அவன் பிடிக்கிற அந்த முதல் தடியின் உருவில், ஒரு பொருளை அடைய உதவும் பொருட்டு வேறொன்று தனதாக்கப்படுவதைக் காண்கிறோம். இவ்வாறு மூலதனத்தின் தோற்றுவாயைக் கண்டறிகிறோம்." (ரா. டாரென்ஸ்: "செல்வ உற்பத்தி பற்றிய கட்டுரை," பக்கம் 70-71.)

தாகுமே தவிர, அதன் நேரடி உற்பத்தியாளராகிய உழைப்பாளிக் குரியதன்று. முதலாளி ஒரு நாள் உழைப்புச் சக்திக்கு அதன் மதிப்புக் குரிய விலை கொடுக்கிறார் என்று வைத்துக் கொள்வோம். இந் நிலையில், இந்த உழைப்புச் சக்தியை ஒரு நாளைக்குப் பயன் படுத்திக் கொள்ள அவர் உரிமை படைத்தவர். ஒரு நாளைக்கு அவர் வாடகைக்கு அமர்த்தும் குதிரையையோ அது போன்ற வேறொன்றையோ பயன்படுத்திக் கொள்ள அவருக்கு எவ்வளவு உரிமை உண்டோ, அவ்வளவு உரிமை இதிலும் உண்டு. சரக்கின் பயன் சரக்கை வாங்கியவருக்கே உரியது. உழைப்புச் சக்தியை விற்றவர் தன் உழைப்பைக் கொடுப்பதன் மூலம் உண்மையில் செய்வதெல்லாம் தான் விற்ற பயன்-மதிப்பைத் துறப்பதுதான். பட்டறைக்குள் அவர் அடிவைக்கும் தருணத்திலிருந்து, அவரது உழைப்புச் சக்தியின் பயன்-மதிப்பும், ஆகவே உழைப்பாகிய அதன் பயனும் கூட முதலாளிக்கே உரியவை. உழைப்புச் சக்தியை வாங்கு வதன் மூலம், முதலாளி உற்பத்திப் பொருளின் உயிரில்லாத ஆக்கக் கூறுகளுடன் நுரைக்கும் உயிர்ச்சக்தியாக உழைப்பை இணைக்கிறார். அவரது கண்ணோட்டத்தில் உழைப்பு நிகழ்முறை என்பது வாங்கப்பட்ட சரக்கின், அதாவது உழைப்புச் சக்தியின் நுகர்வே தவிர அதற்கு மேல் ஒன்றுமில்லை; ஆனால் உழைப்புச் சக்திக்கு உற்பத்திச் சாதனங்களை வழங்குவதன் மூலமாக அல் லாமல் இந்த நுகர்வை நிகழச் செய்ய முடியாது. உழைப்பு நிகழ் முறை என்பது முதலாளி வாங்கியிருக்கிறவற்றுக்கிடையில், அவரது சொத்தாகியிருப்பவற்றுக்கிடையில் நிகழ்வதாகும். ஆகவே இந்த நிகழ்முறையின் பலன் அவருக்கே உரியதாகும்—அவரது நிலவறையில் நிகழும் நுரைப்பு நிகழ்முறையின் [process of fermentation] பலனாகிய மது அவருக்கே உரியதல்லவா, அது போல.[185]

---

185 "உற்பத்திப் பண்டங்கள் மூலதனமாக மாற்றப்படுவதற்கு முன்னரே தனதாக் கப்படுகின்றன; இந்த மாற்றம் இப்படிப்பட்ட தனதாக்கத்திலிருந்து அவற்றை மீட்ப தில்லை." (ஷெர்பூலியே: "Richesse ou Pauvrete," பாரிஸ் பதிப்பு, 1841, பக்கம் 54.) பாட்டாளி குறிப்பிட்ட அளவு அவசிய பண்டங்களைப் பெறுவதற்காகத் தன் உழைப்பை விற்பதன் மூலம் உற்பத்திப் பண்டத்தில் ஒரு பங்குக்கான பாத்தியதை முழுவதையும் துறக்கிறார். உற்பத்திப் பண்டங்களின் தனதாக்க முறை முன்பிருந்தது போலவே இருக்கிறது; மேற்குறிப்பிட்ட பேரத்தால் இது எவ்விதத்திலும் மாற்றம் பெறுவதில்லை. கச்சாப் பொருளையும், அவசியப் பண்டங்களையும் வழங்கியவரான முதலாளிக்கே உற்பத்திப் பண்டம் பிரத்தியேகமாய் உரியது. தனதாக்க விதியின் கடுமையான விளைவு இது; இவ்விதியின் அடிப்படைக் கோட்பாடு இதற்கு நேர் மாறானதாக, அதாவது ஒவ்வொரு உழைப்பாளிக்கும் தான் உற்பத்தி செய்வதன் உடைமைக்கான பிரத்தியேக உரிமை உண்டு என்பதாக இருந்தது." (முன் வந்தது, பக்கம் 58.) "தங்களது உழைப்புக்காகத் தொழிலாளர்கள் கூலி பெறும் போது... முதலாளி மூலதனத்துக்கு மட்டுமல்லாமல்" (உற்பத்திச் சாதனங்களைச் சொல்கிறார்) "உழைப் புக்கும் உடைமையாளராவார். கூலியாகக் கொடுக்கப்படுவதையும் மூலதனம் என்ற பதத்தில் சேர்த்துக் கொள்வதே பொது வழக்கம். இப்படிச் சேர்த்துக் கொண்டால்

## பிரிவு 2.—உபரி-மதிப்பின் உற்பத்தி

முதலாளி தனதாக்கிக் கொள்கிற உற்பத்திப் பண்டம்—உதாரணமாக, நூல் அல்லது பாத அணிகள்—பயன்-மதிப்பாகும். ஆனால் ஒரு விதத்தில் பாத அணிகள் சமூக முன்னேற்றம் அனைத்திற்கும் அடிப்படையாக உள்ளன; நமது முதலாளி தீர்மான கர "முன்னேற்றவாதி" ஆவார் என்ற போதிலும், அவர் பாத அணிகளைப் பாத அணிகளின் நிமித்தமே தயாரிப்பதில்லை. சரக்கு உற்பத்தியில் பயன்-மதிப்பு என்பது எவ்விதத்திலும் சரக்குகளின் உற்பத்தியில் "qu'on aime pour lui-meme"* ஒன்றன்று. பயன்-மதிப்புகள் பரிவர்த்தனை-மதிப்பின் பொருளாயத ஆதாரமாக, அதன் சேமிப்பகங்களாக இருக்கிற காரணத்தாலும், இருக்கிற அளவிலுமே அவற்றை முதலாளிகள் உற்பத்தி செய்கின்றனர். நமது முதலாளி இரண்டு குறிக்கோள்களை மனத்திற் கொண்டுள்ளார்: முதலாவதாக, பரிவர்த்தனையில் மதிப்புடையதான பயன்-மதிப்பை, அதாவது விற்க வேண்டியதென விதிக்கப்பட்ட பண்டத்தை, சரக்கை உற்பத்தி செய்ய விரும்புகிறார்; இரண்டாவதாக, உற்பத்தியில் பயன்படுத்தப்பட்ட சரக்குகளின், அதாவது பொதுச் சந்தையில் தன் கைப்பணத்தைக் கொண்டு வாங்கிய உற்பத்திச் சாதனங்கள், உழைப்புச் சக்தி ஆகியவற்றினது மதிப்புகளின் மொத்தத்தை விடவும் அதிக மதிப்புடைய சரக்கை உற்பத்தி செய்ய விரும்புகிறார். அவர் உற்பத்தி செய்ய நினைப்பது பயன்-மதிப்பு மட்டுமன்று, சரக்கும் கூட; பயன்-மதிப்பு மட்டுமன்று, மதிப்பும் கூட; மதிப்பு மட்டுமன்று, அதே போது உபரி-மதிப்பும் கூட.

இப்போது நாம் சரக்கு உற்பத்தி பற்றி ஆராய்ந்து கொண்டிருக்கிறோம் என்பதையும், இதுகாறும் இந்நிகழ்முறையின் ஓர் அமிசத்தையே கவனித்துள்ளோம் என்பதையும் மனத்திற் கொள்ள வேண்டும். சரக்குகள் எப்படி ஒருங்கே பயன்-மதிப்புகளாகவும், மதிப்புகளாகவும் இருக்கின்றனவோ, அதே போல் அவற்றை உற்பத்தி செய்யும் நிகழ்முறையும் ஒருங்கே உழைப்பு நிகழ்முறையாகவும், மதிப்பைப் படைக்கும் நிகழ்முறையாகவும் இருத்தல் வேண்டும்.[186]

---

மூலதனத்தை விடுத்து உழைப்பு குறித்து மட்டும் பேசுவது அபத்தம். இவ்வாறு மூலதனம் என்ற சொல்லைக் கூலி உள்ளிட்ட ஒன்றாகப் பிரயோகிக்கும் போது, அதில் உழைப்பு, மூலதனம் இரண்டுமே அடங்கும்." (ஜேம்ஸ் மில்: "அரசியல் பொருளாதாரத்தின் அடிப்படை அமிசங்கள்," பதிப்பு 1821, பக்கம் 70-71.)

[186] எங்கெல்ஸ் குறிப்பு: முந்தைய குறிப்பொன்றில் கூறியிருப்பதைப் போலவே, ஆங்கில மொழி உழைப்பின் இந்த இரு வேறு அமிசங்களுக்கும் இருவேறு சொற்களைப் பெற்றுள்ளது; சாமானிய உழைப்பு நிகழ்முறையில், அதாவது பயன்-மதிப்புகளை

---

* "அதன் நிமித்தமே விரும்பப்படுகிற"

மதிப்பைப் படைக்கும் நிகழ்முறையாக உற்பத்தியை இப்போது பரிசீலிப்போம்.

ஒவ்வொரு சரக்கின் மதிப்பும் அதில் செலவிடப்பட்டு பொருள் வடிவாக்கப்பட்டுள்ள உழைப்பின் அளவால், குறிப்பிட்ட சமூக நிலைமைகளில் அதன் உற்பத்திக்கு அவசியமான வேலை நேரத்தால் நிர்ணயிக்கப்படுகிறது. நமது முதலாளிக்காக நடத்தப்பட்ட உழைப்பு நிகழ்முறையின் விளைவாக அவருக்குக் கிடைத்த உற்பத்திப் பொருளுக்கும் இந்த விதி பொருந்தும். இந்த உற்பத்திப் பண்டம் 10 இராத்தல் நூல் என்று வைத்துக் கொள்வோம்; அதில் ஈடேற்றமாகியுள்ள உழைப்பின் அளவைக் கணக்கிடுவதே நாம் முதலில் செய்ய வேண்டிய காரியம்.

நூல் நூற்பதற்குக் கச்சாப் பொருள் தேவை. இந்த உதாரணத்தில் இது 10 இராத்தல் பஞ்சு என்று வைத்துக் கொள்வோம். தற்போதைக்கு இந்தப் பஞ்சின் மதிப்பை நாம் ஆராயத் தேவையில்லை. நமது முதலாளி அதனை 10 ஷில்லிங் என்ற அதன் முழு மதிப்புக்கு வாங்கியிருப்பதாகக் கொள்வோம். பஞ்சின் உற்பத்திக்குத் தேவைப்பட்ட உழைப்பு சமுதாயத்தின் சராசரி உழைப்பாக இந்த 10 ஷில்லிங் விலையில் தெரிவிக்கப்பட்டு விடுகிறது. கதிரின் தேய்மானம் 2 ஷில்லிங் மதிப்புக்குச் சமம் என்றும் கொள்வோம். கதிர் இப்போதைக்குக் கதிராக மட்டுமன்றி, எல்லா உழைப்புச் சாதனங்களுக்கும் பிரதிநிதியாகவும் இருப்பதாகக் கொள்ளலாம். ஆக, பன்னிரண்டு ஷில்லிங் குறிக்கிற தங்கத்தின் அளவை உற்பத்தி செய்ய 24 மணி நேர உழைப்பு அல்லது இரு வேலை-நாட்கள் அவசியமானால், ஆரம்பத்திலேயே நூலில் இரு நாள் உழைப்பு சேர்க்கப்பட்டுள்ளது என்றாகிறது.

பஞ்சு புத்துருவம் எடுத்திருக்க, கதிரின் பொருளில் குறிப்பிட்ட அளவு பயன்படுத்தப்பட்டு மறைந்து விட்டது என்ற நிலைமையைக் கண்டு நாம் தடுமாறலாகாது. மதிப்பின் பொது விதிப்படி 40 இராத்தல் நூலின் மதிப்பு = 40 இராத்தல் பஞ்சின் மதிப்பு + ஒரு முழுக் கதிரின் மதிப்பு ஆகும் என்றால், அதாவது இந்தச் சமன்பாட்டின் இரு பக்கத்திலுமுள்ள சரக்குகளை உற்பத்தி செய்ய ஒரே அளவு வேலை-நேரம் தேவைப்படுகிறதென்றால், 10 இராத்தல் நூல் என்பது 10 இராத்தல் பஞ்சுக்கும், ஒரு கதிரில் கால் பாகத்துக்கும் சமதையாகும். நாம் பார்த்துக் கொண்டிருக்கும் உதாரணத்தில் ஒரு புறம் 10 இராத்தல் நூலிலும், மறு புறம் 10 இராத்தல் பஞ்சு, ஒரு கதிரின் கால் பாகம் ஆகியவற்றிலும் ஒரே அளவு உழைப்பு நேரம் பொருள் வடிவாக்கப்பட்டுள்ளது. ஆகவே, மதிப்பின் வடிவம் பஞ்சாயினும், கதிராயினும், நூலாயினும்

---

உற்பத்தி செய்யும் நிகழ்முறையில் அது **work** ஆகும். மதிப்பைப் படைக்கும் நிகழ்முறையில், கண்டிப்பான பொருளாதார அர்த்தத்தில் அது **labour** ஆகும்.

அம்மதிப்பின் அளவு மாறாமல் அப்படியேதான் இருக்கிறது. கதிரும், பஞ்சும் ஒய்ந்த நிலையில் தனித்தனியே இருப்பதற்கு பதில் உழைப்பு நிகழ்முறையில் இரண்டும் ஒன்றுசேருகின்றன. அவற்றின் வடிவங்கள் மாற்றப்படுகின்றன. அவை நூலாகின்றன; இதனால் அவற்றின் மதிப்பு மாறி விடுவதில்லை—அவற்றின் நூல் வடிவச் சமதைக்கு அவை பரிவர்த்தனை செய்யப்பட்டால் எப்படி அவற்றின் மதிப்பு மாறுவதில்லையோ, அது போலத்தான் இதுவும்.

நூலின் கச்சாப் பொருளான பஞ்சின் உற்பத்திக்குத் தேவையான உழைப்பு நூலை உற்பத்தி செய்வதற்கு அவசியமான உழைப்பின் பகுதியாகும்; ஆதலால் அது நூலில் அடங்கியுள்ளது. கதிரின் தேய்மானம் இல்லாமல் பஞ்சை நூலாக்க முடியாதென்பதால், கதிரில் உருக்கொண்ட உழைப்புக்கும் இது பொருந்தும்.

எனவே, நூலின் மதிப்பை, அல்லது அதன் உற்பத்திக்கு அவசியமான உழைப்பு நேரத்தை நிர்ணயிப்பதில், முதலில் பஞ்சையும் கதிரின் தேய்மானமடைந்த பகுதியையும் உற்பத்தி செய்வதற்கும், பின்னர் பஞ்சையும் கதிரையும் கொண்டு நூல் நூற்பதற்கும் அவசியமாய் இருந்த—பல்வேறு நேரங்களிலும் வெவ்வேறு இடங்களிலும் நடத்தப்பட்ட—தனி நிகழ்முறைகள் யாவற்றையும் ஒரே நிகழ்முறையில் அடுத்தடுத்து வரும் வெவ்வேறு கட்டங்களாக நோக்கலாம். நூலிலுள்ள உழைப்பு முழுவதும் கடந்த கால உழைப்பாகும்; அதன் ஆக்கக் கூறுகளின் உற்பத்திக்கு அவசியமான செயல்கள் இறுதியான நூற்புச் செயலுக்கு மிகவும் முற்பட்ட பற்பல காலங்களில் முடிக்கப்பட்டன என்பது பற்றி இப்போது கவலைப்படத் தேவையில்லை. வீட்டைக் கட்டுவதற்குக் குறிப்பிட்ட அளவிலான உழைப்பு, உதாரணமாக முப்பது நாள் உழைப்பு அவசியமானால், கடைசி நாள் வேலை முதல் நாள் வேலைக்குப் பிறகு இருபத்தொன்பது நாள் கழித்து செய்யப்படுகிறது என்பதால் அவ்வீட்டில் அடங்கிய உழைப்பின் மொத்த அளவு மாறி விடுவதில்லை. ஆகவே, கச்சாப் பொருளிலும் உழைப்புச் சாதனங்களிலும் அடங்கியுள்ள உழைப்பை மெய்யான நூற்கும் உழைப்பு தொடங்குமுன்னர் நூற்பு நிகழ்முறையின் முந்தைய கட்டத்தில் செலவிடப்பட்ட உழைப்பாகவே கருதலாம்.

எனவே, பன்னிரண்டு ஷில்லிங் என்ற விலையில் தெரிவிக்கப்படும் மதிப்புகளான உற்பத்திச் சாதனங்களுடைய, அதாவது பஞ்சு, கதிர் இவற்றினுடைய மதிப்புகள் நூலினுடைய மதிப்பின், அதாவது உற்பத்திப் பொருளுடைய மதிப்பின் ஆக்கக் கூறுகளாகும்.

ஆயினும், இரு நிபந்தனைகள் பூர்த்தி செய்யப்பட வேண்டும். முதலாவது: பஞ்சும் கதிரும் ஒரு பயன்-மதிப்பின் உற்பத்திக்காக ஒன்றிணைய வேண்டும்; இப்போதைய எடுத்துக்காட்டில் நூலாக வேண்டும். மதிப்பு அதனைத் தாங்கியுள்ள குறிப்பிட்ட பயன்-மதிப்பைச் சார்ந்திருக்கவில்லை; ஆனால் அது ஏதேனும் ஒரு

வகைப் பயன்-மதிப்பில் உருக்கொண்டிருக்க வேண்டும். இரண் டாவது: உற்பத்தி செய்து முடிக்க உழைப்புக்கு ஆகிற நேரம், எடுத்துக் கொண்ட உதாரணத்திற்குரிய குறிப்பிட்ட சமூக நிலைமை களில் மெய்யாகவே அவசியமாயிருக்கும் நேரத்தை விட அதிகமாகக் கூடாது. எனவே, 1 இராத்தல் நூல் நூற்பதற்கு 1 இராத்தல் பஞ்சுக்கு மேல் தேவையில்லை என்றால், 1 இராத்தல் நூலின் உற்பத்திக்காக இந்த எடைக்கு மேல் பஞ்சு செல்வாகாத படி கவனித்துக் கொள்ள வேண்டும்; கதிர் தொடர்பாகவும் இவ்வாறே செய்ய வேண்டும். தங்கத்தில் மோகம் கொண்ட முதலாளி எஃகுக் கதிருக்கு பதில் தங்கக் கதிரைப் பயன்படுத்தினாலும் எஃகுக் கதிரை உற்பத்தி செய்வதற்குத் தேவையான உழைப்பே நூலின் மதிப்பை நிர்ணயிக்கும். ஏனெனில் குறிப்பிட்ட அச்சமூக நிலைமைகளில் அவசியமாயிருப்பது அவ்வளவுதான்.

நூலினது மதிப்பின் எந்தப் பகுதி பஞ்சு, கதிர் ஆகியவற்றிலிருந்து வருவது என்பது நமக்கு இப்போது தெரியும். அது பன்னிரண்டு ஷில்லிங் அல்லது இரு நாள் வேலையின் மதிப்புக்குச் சமம். நமது பரிசீலனைக்குரிய அடுத்த அமிசம், நூலின் மதிப்பில் எவ்வளவு நூற் பாளரின் உழைப்பால் பஞ்சோடு சேர்க்கப்பட்டதாகும் என்பதே.

இந்த உழைப்பை முன்பு உழைப்பு நிகழ்முறையின் போது நாம் பார்த்ததிலிருந்து வேறுபட்ட நோக்குநிலையில் இப்போது பார்த் தாக வேண்டும். முன்பு, பஞ்சை நூலாக மாற்றுகிற குறிப்பான வகை மனிதச் செயற்பாடு என்று மட்டுமே அதைப் பார்த்தோம்; ஏனைய நிலைமைகள் மாறாதிருக்க, உழைப்பு எந்த அளவுக்கு வேலைக்கேற்றதாக இருந்ததோ அந்த அளவுக்கு நூல் நன்றாக இருந்தது. அப்போது நூற்பாளரின் உழைப்பு இதர திறனுடைய உழைப்பு வகைகளிலிருந்து குறிப்பான முறையில் வேறுபடுவ்தாய் இருக்கக் கண்டோம்; ஒரு புறம் அதன் தனிக் குறிக்கோளில், அதாவது நூற்பில் வேறுபடுவதாகவும், மறு புறம் அதன் செயற் பாடுகளின் தனித் தன்மையிலும், அதன் உற்பத்திச் சாதனங்களின் தனி இயல்பிலும், அதன் உற்பத்திப் பொருளின் தனிப் பயன்-மதிப்பிலும் வேறுபடுவதாகவும் இருக்கக் கண்டோம். நூற்பு வேலைக்குப் பஞ்சும் கதிர்களும் அவசியம்; ஆனால் சுரிகுழல் பீரங்கி செய்வதற்கு அவை சிறிதும் உதவாதவை. மாறாக, இங்கே நூற்பாளரின் உழைப்பு மதிப்பை படைப்பது, அதாவது மதிப்பின் தோற்றுவாயாக இருப்பது என்ற அளவில் மட்டும் அவ்வுழைப்பை நோக்குமிடத்து, அது பீரங்கி செய்பவரின் உழைப்பிலிருந்து எவ் விதத்திலும் வேறுபடுவதில்லை; அல்லது (அங்கே நமக்கு மேலும் தொடர்புடைய உழைப்பை எடுத்துக் கொண்டால்) உற்பத்திச் சாதனங்களில் சேர்க்கப்பட்டுள்ள பருத்தித் தோட்டக்காரர், கதிர் தயாரிப்பவர் ஆகியோரின் உழைப்பிலிருந்தும் எவ்விதத்திலும் வேறுபடுவதில்லை. இந்த முழுதொத்த தன்மையினால்தான்,

பருத்தி பயிரிடுதலும், கதிர் தயாரித்தலும், நூல் நூற்றலும் ஒரே முழுமையின், அதாவது நூலினது மதிப்பின் அங்கங்களாக—ஒன்றிலிருந்து ஒன்று அளவு வழியில் மட்டுமே வேறுபடுகிற அங்கங்களாக—அமைய வல்லவை ஆகின்றன. இங்கே உழைப்பின் பண்பு, இயல்பு, குறிப்பான தன்மை ஆகியவை நம் கவலைக் குரியவையல்ல; அதன் அளவு மட்டுமே கவலைக்குரியது. இதைக் கணக்கிட வேண்டும், அவ்வளவுதான். நூற்பு சாமானியமான, தேர்ச்சியற்ற உழைப்பாகும், குறிப்பிட்ட சமூக நிலையின் சராசரி உழைப்பாகும் என்ற அனுமானத்தின் அடிப்படையில் நாம் மேற் செல்கிறோம். இதற்கு மாறான முறையில் அனுமானித்துக் கொண்டாலும் எந்த மாற்றமும் ஏற்படப் போவதில்லை; பிற்பாடு இதனைக் காண்போம்.

உழைப்பாளி வேலையில் ஈடுபட்டிருக்கையில், அவரது உழைப்பு இடைவிடாமல் மாற்றமடைகிறது; அது இயக்கமென்ற நிலையிலிருந்து இயக்கமற்ற பொருளாகிறது; வேலை செய்யும் உழைப்பாளி என்ற நிலையிலிருந்து உற்பத்தி செய்யப்பட்ட பொருளாகிறது. ஒரு மணி நேர நூற்பின் முடிவில், அந்தச் செயல் குறிப்பிட்ட அளவு நூலால் குறிக்கப்படுகிறது; வேறுவிதமாகச் சொன்னால், குறிப்பிட்ட அளவு உழைப்பு, அதாவது ஒரு மணி நேர உழைப்பு பஞ்சில் உருக்கொள்கிறது. நூற்கும் உழைப்பு என்று சொல்லாமல், உழைப்பு என்று, அதாவது நூற்பாளரது ஜீவ சக்தியின் செலவீடு என்று நாம் கூறுவது ஏனெனில், நூற்பு என்ற தனிவகை வேலை இங்கே கணக்கிடப்படுவது பொதுவாக உழைப் புச் சக்தியின் செலவீடு என்ற அளவிலேயே, நூற்பாளரின் பிரத் தியேக வேலையாகும் என்ற அளவிலன்று.

பஞ்சை நூலாக மாற்றும் வேலையில் குறிப்பிட்ட சமூக நிலைமைகளில் அவசியமானதை விட அதிக நேரம் செலவாகாமல் இருப்பது நாம் இப்போது பரிசீலித்துக் கொண்டிருக்கும் நிகழ் முறையில் அதிமுக்கியத்துவம் உடையதாகும். இயல்பான, அதாவது சராசரியான சமுதாயப் பொருளுற்பத்தி நிலைமைகளில் ஒரு மணி நேர உழைப்பைக் கொண்டு a இராத்தல் பஞ்சை b இராத்தல் நூலாக மாற்ற வேண்டுமானால், 12a இராத்தல் பஞ்சு 12b இராத்தல் நூலாக மாற்றப்படும் போதுதான் ஒரு நாள் உழைப்பை 12 மணி நேர உழைப்பாகக் கணக்கில் கொள்ள முடியும். ஏனெனில் சமுதாய வழியில் அவசியமான நேரத்தை மட்டுமே மதிப்பின் ஆக்கத்தில் கணக்கிற் கொள்ளலாம்.

உழைப்பு மட்டுமல்லாமல் கச்சாப் பொருளும், உற்பத்திப் பொருளும் கூட இப்போது புது விதத்தில்—எளிய உழைப்பு நிகழ்முறையில் அவற்றைப் பார்த்த போது இருந்ததிலிருந்து மிக வேறான விதத்தில்—தோற்றமளிக்கக் காண்கிறோம். இப்போது கச்சாப் பொருள் குறிப்பிட்ட அளவிலான உழைப்பைக் கிரகிக்கும்

பொருளாகவே பயன்படுகிறது. இந்தக் கிரகிப்பின் மூலம் அது உண்மையில் நூலாக மாற்றப்படுகிறது; ஏனெனில் அது நூற்கப் படுகிறது, நூற்பின் வடிவில் உழைப்புச் சக்தி அதனோடு சேர்க்கப் படுகிறது. ஆனால், உற்பத்திப் பொருளான நூல் இப்போது பஞ்சால் கிரகிக்கப்பட்ட உழைப்பின் அளவை என்பதற்கு மேல் ஒன்றுமில்லை. ஒரு மணி நேரத்தில் 1⅔ இராத்தல் பஞ்சை 1⅔ இராத்தல் நூலாக நூற்க முடியுமானால், 10 இராத்தல் நூல் 6 மணி நேர உழைப்பின் கிரகிப்பைத் தெரிவிக்கிறது. உற்பத்திப் பொருளின் திட்டமான அளவுகள் — அனுபவத்தால் நிர்ணயிக்கப் படுகிற இந்த அளவுகள் — இப்போது குறிப்பது உழைப்பின் திட்டமான அளவுகளையே, பொருள்வடிவான உழைப்பு நேரத்தின் திட்டமான திரள்களையே. அவை இத்தனை மணி நேர அல்லது இத்தனை நாள் சமுதாய உழைப்பின் பொருள்வடிவாக்கமே அன்றி வேறல்ல.

உழைப்பின் இலக்குப் பொருள் ஏற்கெனவே ஓர் உற்பத்திப் பொருளாகும், எனவே கச்சாப் பொருளாகும் என்ற உண்மையைப் போலவே, உழைப்பு நூற்பதென்ற குறிப்பான வேலையாகும், அதன் இலக்குப் பொருள் பஞ்சாகும், அதன் உற்பத்திப் பொருள் நூலாகும் என்ற உண்மைகளும் இங்கே நமக்கு அக்கறைக்குரியவை அல்ல. நூற்பாளர் நூற்பதற்கு பதில் நிலக்கரிச் சுரங்கத்தில் வேலை செய்வாரானால் அவரது உழைப்பின் இலக்குப் பொருளாகிய நிலக்கரி இயற்கையால் வழங்கப்படும்; ஆயினும், தோண்டி யெடுக்கப்பட்ட நிலக்கரியின் திட்டமான அளவு, உதாரணமாக ஒரு அந்தர் நிலக்கரி, கிரகிக்கப்பட்ட உழைப்பின் திட்டமான அளவைக் குறிப்பதாயிருக்கும்.

உழைப்புச் சக்தி விற்கப்பட்ட சந்தர்ப்பத்தில், ஒரு நாள் உழைப்புச் சக்தியின் மதிப்பு மூன்று ஷில்லிங் என்றும், ஆறு மணி நேர உழைப்பு அந்தத் தொகையில் அடங்கும் என்றும், ஆதலால் தொழிலாளிக்கு சராசரியாய் அன்றாடம் தேவைப்படும் அவசியப் பண்டங்களை உற்பத்தி செய்வதற்கு இந்த அளவு உழைப்பு தேவைப்படும் என்றும் வைத்துக் கொண்டோம். இப்போது நமது நூற்பாளர் ஒரு மணி நேரம் வேலை செய்வதன் மூலம் 1⅔ இராத்தல் பஞ்சை 1⅔ இராத்தல் நூலாக[187] மாற்ற முடியு மானால், ஆறு மணி நேரத்தில் அவர் 10 இராத்தல் பஞ்சை 10 இராத்தல் நூலாக மாற்றுவார் என்றாகிறது. எனவே நூற்கும் நிகழ்முறையின் போது பஞ்சு ஆறு மணி நேர உழைப்பைக் கிரகிக்கிறது. இதே அளவு உழைப்பு மூன்று ஷில்லிங் மதிப்புள்ள தங்கத்திலும் உருக்கொண்டுள்ளது. ஆதலால் நூற்பதாகிய உழைப்பு மட்டும் மூன்று ஷில்லிங் மதிப்பைப் பஞ்சோடு சேர்க்கிறது.

10 இராத்தல் நூல் என்ற உற்பத்திப் பொருளில் மொத்த

187 இந்த எண் விவரங்கள் முற்றிலும் தன்னிச்சையாகத் தேர்ந்தெடுத்தவை.

மதிப்பை இப்போது பரிசீலிப்போம். அதில் இரண்டரை நாள் உழைப்பு உருக்கொண்டுள்ளது; இதில் இரண்டு நாள் உழைப்பு பஞ்சிலும் தேய்ந்து போன கதிரின் சாரப் பொருளிலும் அடங்கி யிருந்தது; அரை நாள் உழைப்பு நூற்கும் நிகழ்முறையின் போது கிரகிக்கப்பட்டது. இந்த இரண்டரை நாள் உழைப்பை பதினைந்து ஷில்லிங் மதிப்புள்ள பொற்காசும் குறிக்கிறது. எனவே, பதினைந்து ஷில்லிங் என்பது 10 இராத்தல் நூலுக்குத் தக்க விலையாகும், அல்லது ஒரு இராத்தலின் விலை பதினெட்டு பென்னி ஆகும்.

நமது முதலாளி திகைப்படைகிறார். உற்பத்திப் பொருளின் மதிப்பு முன்னீடு செய்யப்பட்ட மூலதனத்தின் மதிப்புக்குச் சரி சமமாகவே இருக்கிறது. முன்னீடு செய்யப்பட்ட மதிப்பு பெருக வில்லை; உபரி-மதிப்பேதும் ஆக்கப்படவில்லை; ஆதலால் பணம் மூலதனமாக்கப்படவில்லை. நூலின் விலை பதினைந்து ஷில்லிங் ஆகும்; உற்பத்திப் பொருளின் ஆக்கக் கூறுகளை, அதாவது உழைப்பு நிகழ்முறையின் காரணிகளைப் பொதுச் சந்தையில் வாங்குவதற்காக பதினைந்து ஷில்லிங் செலவிடப்பட்டது; பஞ்சுக்குப் பத்து ஷில்லிங் தரப்பட்டது. கதிரின் தேய்மானத்துக்கு இரண்டு ஷில்லிங், உழைப்புச் சக்திக்கு மூன்று ஷில்லிங் செலவாயிற்று. நூலின் மதிப்பு பெருகியதால் ஒரு பயனும் இல்லை; ஏனெனில் பஞ்சிலும், கதிரிலும், உழைப்புச் சக்தியிலும் முன்னர் இருந்த மதிப்புகளின் மொத்தமே அது. இருக்கிற மதிப்புகளின் வெறும் கூட்டுத் தொகையிலிருந்து உபரி-மதிப்பு பிறக்க வழியில்லை.[188] இந்தத் தனித்தனி மதிப்புகள் எல்லாம் இப்போது ஒரே பொருளில் ஒன்றுதிரண்டுள்ளன. ஆனால் பதினைந்து ஷில்லிங் என்ற தொகை சரக்குகளை வாங்குவதற்காக மூன்று பகுதிகளாய்ப் பிரிவதற்கு முன்னர் அத்தொகையிலும் அவை ஒன்றுதிரண்டே இருந்தன.

மெய்யாகவே இவ்விளைவில் வினோதம் ஒன்றுமில்லை. ஒரு இராத்தல் நூலின் மதிப்பு பதினெட்டு பென்னி என்றால், நமது

---

188 விவசாயமல்லாத உழைப்பனைத்தின் உற்பத்தித் திறனின்மை தொடர்பான பிசியோக்கிராட்டுகளது கோட்பாட்டுக்கு ஆதாரமான அடிப்படைக் கருத்து இதுவே; மரபுவழிப் பொருளாதார அறிஞருக்கும் இது மறுக்க முடியாதது. ''குறிப்பிட்ட ஒரு பொருளோடு ஏனைய பலவற்றின் மதிப்பைச் சேர்த்துக் கூட்டுகிற இந்த வழி முறையால்,'' (எடுத்துக்காட்டாக நெசவாளரின் வாழ்க்கைச் செலவுகளை வெண் சணலோடு சேர்த்துக் கூட்டுவதால்) ''தனியொரு மதிப்பின் மீது பல்வேறு மதிப்பு களையும் அடுக்கடுக்காய்க் குவிப்பது போன்ற இந்த வழிமுறையால் ஏற்படும் விளைவு என்னவென்றால் இந்த மதிப்பு அந்த அளவுக்கு வளர்கிறது....''சேர்த்துக் கூட்டுதல்'' என்ற பதம் ஓர் உற்பத்திப் பொருளின் விலை உருவாகிற விதத்தைத் தெளிவாகப் படம்பிடித்துக் காட்டுகிறது; நுகரப்பட்டுள்ள அநேக மதிப்புகளின் கூட்டுத் தொகையே இவ்விலை; அவற்றை ஒன்றாகச் சேர்த்துக் கூட்டுவதன் மூலம் அது அடையப்படுகிறது; ஆயினும், சேர்த்துக் கூட்டுவதும் பெருக்குவதும் ஒன்றல்ல.'' (மெர்சியர் டெ லா ரிவீரா, முன் வந்தது, பக்கம் 599.)

முதலாளி சந்தையில் 10 இராத்தல் நூல் வாங்கினால் அதற்குப் பதினைந்து ஷில்லிங் கொடுக்க வேண்டும். ஒருவர், கட்டி முடித்துத் தயார் நிலையிலிருக்கும் வீட்டை வாங்கினாலும் சரி, அல்லது அதைத் தனக்காகக் கட்டச் சொல்லி பெற்றுக் கொண்டாலும் சரி, வீட்டைப் பெறுகிற முறை வீட்டுக்காக செலவிடப்படும் பணத் தொகையை அதிகமாக்கி விடாது.

கொச்சைப் பொருளாதாரத்தில் வல்லவரான நமது முதலாளி கூவுகிறார்: ''ஆ! என் பணத்தைப் பெருகச் செய்வதற்காகத்தானே நான் அதனை முன்னீடு செய்தேன்!'' நினைத்தது ஒன்று, நடந்தது வேறொன்று. இதற்கு பதில், அவர் பொருளுற்பத்தி செய்யாமலே பணம் பண்ண நினைத்திருக்கலாம்.[189] பல வழிகளிலும் அவர் மிரட்டுகிறார். மீண்டும் ஏமாற மாட்டேன் என்கிறார். வருங் காலத்தில் சரக்குகளைத் தானே தயாரிப்பதற்குப் பதில் சந்தையில் வாங்குவாராம். ஆனால், அவரது சகோதர முதலாளிகளும் இதையே செய்தால், அவருக்கு வேண்டிய சரக்குகள் சந்தையில் கிடைப்பது எப்படி? கையிலுள்ள பணத்தை அவர் சாப்பிட முடியாது. அவர் இதமாகப் பேச முயல்கிறார். ''பலவற்றையும் துறந்து இதில் ஈடுபட்டேன்; இந்த 15 ஷில்லிங்கை நான் வீண் செலவு செய்திருக்கலாம்; ஆனால் உற்பத்தித் திறனுள்ள வழியில் அதைச் செலவிட்டு நூல் தயாரித்தேன்.'' நல்லது, அவருக்குக் கைம்மாறு கிடைத்திருக்கிறது; குற்றநெஞ்சின் குறுகுறுப்புக்கு பதில் இப்போது நல்ல நூல் கிடைத்திருக்கிறது. கருமியாகி விடுவதைப் பொறுத்த வரை, மீண்டும் இது போன்ற கெட்ட வழிகளில் செல் வதால் பயனில்லை. இப்படித் துறவு பூணுவதன் விளைவுகளை முன்பே பார்த்துள்ளோம். மேலும், எதுவுமில்லாத இடத்தில் ராஜா உரிமையிழந்து விடுகிறார்; அவரது துறவு மனப்பான்மை எவ்வளவு தான் சிறப்பானதென்றாலும் அதற்குக் கைம்மாறாய்க் கொடுப்பதற்கு ஒன்றுமில்லை. ஏனெனில், உற்பத்திப் பொருளின் மதிப்பு உற்பத்தி நிகழ்முறைக்குள் ஏவப்பட்ட சரக்குகளது மதிப்புகளின் மொத்தமே ஆகும். நல்லது செய்பவர் நல்லது செய்தோம் என்பதையே கைம்மாறாகக் கொள்ள வேண்டும்; அவர் தன்னைத் தானே இப்படித் தேற்றிக் கொள்ளட்டும். ஆனால் அப்படி இல்லை; அவர் நச்சரிக்கிறார். அவர் சொல்கிறார்: ''நூல் எனக்குப் பயன்படாது. விற்பதற்காகவே அதை உற்பத்தி செய் தேன்.'' அப்படியானால் விற்கட்டுமே! அல்லது, தன் சொந்தத் தேவைகளை நிறைவு செய்பவற்றை மட்டும் வருங்காலத்தில் அவர் உற்பத்தி செய்து கொள்வது இன்னும் நல்லதன்றோ? மிகை

189 இவ்வாறே 1844க்கும் 47க்குமிடையில் அவர் உற்பத்தியில் போட்டிருந்த மூலதனத்தில் ஒரு பகுதியை எடுத்து, இருப்புப் பாதைக் கட்டுமான ஊக வாணிபத்தில் போட்டார்; அமெரிக்க உள்நாட்டுப் போரின் போதும், இவ்வாறே, பஞ்சுச் சந்தையில் சூதாடும் பொருட்டு ஆலையை மூடி வேலையாட்களைத் தெருவில் நிறுத்தினார்.

யுற்பத்தி என்ற கொள்ளை நோய்க்குக் கைகண்ட மருந்தாய் அவரது மருத்துவர் மக்குல்லோஹ் இதைத்தானே சொல்கிறார்! நமது முதலாளி இப்போது அடம்பிடிக்கிறார். ''ஒன்றுமில்லாமல் வெறுங்கையால் தொழிலாளி சரக்கை உற்பத்தி செய்து விட முடியுமா?'' என்று கேட்கிறார். ''உழைப்பை உருக்கொள்ளச் செய்வதற்கு வேண்டிய கருவியையும் மூலப் பொருளையும் தொழிலாளிக்குத் தந்தது நான்தானே? இம்மாதிரியான உதவாக்கரைகள் தாமே சமுதாயத்தில் மிகுதியாய் உள்ளனர்? இந்தச் சமுதாயத்துக்கு எனது உற்பத்திச் சாதனங்களை, எனது பஞ்சையும் எனது கதிரையும் தந்து நான் அளப்பரிய சேவையல்லவா புரிந்திருக்கிறேன்? சமுதாயத்துக்கு மட்டுமன்றி, தொழிலாளிக்கும் கூட அவசியப் பண்டங்களைத் தந்து சேவையல்லவா புரிந்திருக்கிறேன்? இந்த சேவைக்கெல்லாம் பிரதியாக எனக்கு ஒன்றுமே கிடையாதா?'' சரிதான், ஆனால் இதற்குப் பிரதியாக அவரது பஞ்சையும் கதிரையும் நூலாக மாற்றி தொழிலாளி அவருக்குச் சேவை புரிந்திடவில்லையா? மேலும், இங்கே சேவை என்ற பேச்சுக்கே இடமில்லை.[190] சேவை என்பது சரக்காகவோ உழைப்பாகவோ இருக்கும் பயன்-மதிப்பால் விளைகிற பயனே அன்றி வேறில்லை.[191] ஆனால், இங்கே நாம் பரிவர்த்தனை-மதிப்பைப் பற்றிப் பேசிக் கொண்டிருக்கிறோம். முதலாளி தொழிலாளிக்கு 3 ஷில்லிங் மதிப்பைக் கொடுத்தார்; தொழிலாளி பஞ்சோடு தன்னால் சேர்க்கப்பட்ட 3 ஷில்லிங் மதிப்பை சரிநிகர் சமதையாக அவருக்குத் திருப்பிக் கொடுத்தார். மதிப்புக்கு பதில் அதற்கீடான மதிப்பைக் கொடுத்தார். இது வரை பணப் பெருமை பாராட்டிக் கொண்டிருந்த

---

190 ''உன்னை நீயே புகழ்ந்து கொள், அலங்கார உடை உடுத்தி ஒப்பனை செய்து கொள். ஆனால் தான் கொடுப்பதை விட அதிகமாகவோ சிறந்ததாகவோ யார் எடுத்துக் கொண்டாலும், அது கடுவட்டிக் கொடுமையே தவிர, சேவையன்று; திருடுவதையும், கொள்ளையடிப்பதையும் போன்று அயலாருக்கு இழைக்கிற தீங்கே. சேவை என்றும் சகாயம் என்றும் சொல்லப்படுவதெல்லாம் அயலாருக்குச் சேவையாகவும் சகாயமாகவும் இருந்திடாது. கள்ளக் காதலனும் கள்ளக் காதலியும் ஒருவருக்கொருவர் சேவை புரிகின்றனர், இன்பமளிக்கின்றனர். குதிரைக்காரர் வழிப்பறிக்காரருக்குப் பெருஞ்சேவை புரிகிறார் — நெடுஞ்சாலையில் திருடவும், நிலத்திலும் வீடுகளிலும் சூறையாடவும் உதவுவதன் மூலம். போப்-ஆதிக்கவாதிகள் நம்மவர்களுக்குப் பெருஞ்சேவை புரிகின்றனர்; எப்படியென்றால், எல்லாரையும் அவர்கள் நீரில் மூழ்கடிப்பதில்லை, எரிப்பதில்லை, கொன்று விடுவதில்லை, சிறையில் தள்ளி வதைப்பதில்லை, சிலரை வாழ விடுகின்றனர்; விரட்டியடிப்பதோடு, அல்லது அவர்களிடமிருப்பதைப் பிடுங்குவதோடு நின்று விடுகின்றனர். சைத்தானே கூட தன் பணியாளர்களுக்கு மதிப்பிடற்கரிய சேவை புரிகிறது. ஆக, உலகில் அரும்பெரும் அன்றாடச் சேவைகளும் சகாயங்களும் நிறையவே உள்ளன.'' (மார்ட்டின் லூதர்: ''An die Pfarrherrn wider den Wucher zu predigen,'' விட்டன்பெர்க், 1540.)

191 ''அரசியல் பொருளாதார விமர்சனத்திற்கு ஒரு பங்களிப்பு,'' பக்கம் 14இல் இது பற்றிப் பின்வருமாறு நான் குறிப்பிடுகிறேன்: ''மூா. ப. ஸே, பி. பாஸ்தியா போன்ற பொருளாதார அறிஞர்களின் வகையறாவுக்கு 'சேவை' என்ற கருத்தினம் என்ன 'சேவையை' வழங்க வேண்டுமெனப் புரிந்து கொள்வது கடினம் அன்று.''

நமது நண்பர் திடீரென்று தனது வேலையாளுக்குரிய அடக்கமான சுபாவத்துடன் முறையிடுகிறார்: ''நான் மட்டும் வேலை செய்ய வில்லையா? கண்காணித்தும், நூற்பாளரை மேற்பார்வையிட்டும் நான் உழைக்கவில்லையா? இந்த உழைப்பும் மதிப்பை உண்டாக்குகிற உழைப்பன்றோ?'' அவருடைய மேற்பார்வையாளரும், மேலாளரும் தங்கள் சிரிப்பை மறைக்க முயல்கின்றனர். இதற்கிடையில், மனம் விட்டுச் சிரித்த பின்னர், அவர் தனது வழக்கமான முகபாவத்தைத் திரும்பப் பெறுகிறார். பொருளாதார அறிஞர்களின் உபதேசங் களையெல்லாம் அவர் நம்மிடம் ஓதினார் என்ற போதிலும், உண்மையில் அவற்றுக்கு சல்லிக் காசு பெறுமான மதிப்பும் கூட அளிப்பதில்லை. இதையும் இது போன்ற செப்பிடு வித்தைகளையும் இதற்கென்று ஊதியம் பெறும் அரசியல் பொருளாதாரப் பேராசிரி யர்களிடமே விட்டு விடுகிறார். அவர் நடைமுறைக் காரியத்தில் கண்ணாயிருப்பவர்; தொழிலுக்கு வெளியே அவர் எப்போதுமே அளந்தும் ஆலோசித்தும் பேசுபவரல்லர்; ஆனால் தனது தொழி லுக்கு உட்பட்டவற்றில், தான் செய்ய வேண்டியதை நன்கறிந்தவர்.

விவகாரத்தை இன்னும் நெருங்கிச் சென்று ஆராய்வோம். ஒரு நாள் உழைப்புச் சக்தியின் மதிப்பு 3 ஷில்லிங் ஆகிறது; ஏனெனில் நாம் வைத்துக் கொண்ட படி, அந்த அளவு உழைப்புச் சக்தியில் அரை நாள் உழைப்பு உருக்கொண்டுள்ளது, அதாவது உழைப்புச் சக்தியின் உற்பத்திக்கு அன்றாடம் தேவைப்படும் வாழ்வுச் சாதனங் களுக்கு அரை நாள் உழைப்பு செலவாகிறது. ஆனால், உழைப்புச் சக்தியில் உருக்கொண்டுள்ள கடந்த கால உழைப்பும், அது செயல் பட வைக்கக் கூடிய உயிருள்ள உழைப்பும்—அதாவது உழைப்புச் சக்தியைப் பராமரிப்பதற்காகும் அன்றாடச் செலவும், வேலையில் அன்றாடம் அது செலவாவதும் இருவேறு சங்கதிகள் ஆகும். முன்னது உழைப்புச் சக்தியின் பரிவர்த்தனை-மதிப்பை நிர்ணயிக் கிறது; பின்னது அதன் பயன்-மதிப்பு ஆகும். 24 மணி நேரத்திற்கு உழைப்பாளியை உயிர் வாழ வைப்பதற்கு அரை நாள் உழைப்பு அவசியம் என்றாலும், இவ்வுண்மை முழு நாளும் அவ்வுழைப்பாளி வேலை செய்வதற்குத் தடையாவதில்லை. ஆகவே, உழைப்புச் சக்தி யின் மதிப்பும், அந்த உழைப்புச் சக்தி உழைப்பு நிகழ்முறையில் உண்டாக்குகிற மதிப்பும் இருவேறு பருமன்கள் ஆகும்; இரு மதிப்புகளுக்குமுள்ள இந்த வேறுபாட்டை மனத்திற் கொண்டே, முதலாளி உழைப்புச் சக்தியை வாங்கினார். உழைப்புச் சக்தியின் பயனுள்ள பண்புகள், நூல் அல்லது பாத அணிகளை அது தயாரிப் பதற்கு உதவுகிற இந்தப் பண்புகள் நமது முதலாளிக்கு அவசிய மானவையே; ஏனெனில் உழைப்பைப் பயனுள்ள முறையில் செலவிட்டால்தான் மதிப்பை உண்டாக்க முடியும். ஆனால் மதிப்பை வாங்குகையில் அவருக்குத் தீர்மானகரமாயிருந்தது இது வன்று. உழைப்புச் சக்தியாகிய இந்தச் சரக்கு மதிப்பின் தோற்று

வாயாக மட்டுமல்லாமல், தனது மதிப்பை விட அதிகமான மதிப்பின் தோற்றுவாயாகவும் இருக்கிற பிரத்தியேகப் பயன்-மதிப்பை உடையதாகும் என்பதுதான் உண்மையில் அவருக்குத் தீர்மானகரமாயிருந்தது. முதலாளி உழைப்புச் சக்தியிடமிருந்து எதிர்பார்க்கிற தனிவிதச் சேவை இதுவே. இந்தக் காரியத்தில் அவர் சரக்குப் பரிவர்த்தனையின் ''சாசுவத விதிகளுக்கு'' ஏற்பவே செயல்படுகிறார்; உழைப்புச் சக்தியை விற்பவர், சரக்கை விற்கும் எவரையும் போலவே சரக்கின் பரிவர்த்தனை-மதிப்பை ஈடேற்றிக் கொள்கிறார், அதன் பயன்-மதிப்பைக் கொடுத்து விடுகிறார். அவர் ஒன்றைப் பெறும் பொருட்டு மற்றொன்றைக் கொடுத்தாக வேண்டும். எண்ணெயை விற்றவருக்கு எண்ணெயின் பயன்-மதிப்பு எப்படி உரியதாகாதோ, அதே போல் உழைப்புச் சக்தியை விற்றவருக்கும் உழைப்புச் சக்தியின் பயன்-மதிப்பு—அதாவது உழைப்பு—உரியதாகாது. பணவுடைமையாளர் ஒரு நாள் உழைப்புச் சக்தியின் மதிப்பை விலையாகக் கொடுத்திருக்கிறார். எனவே, உழைப்புச் சக்தியின் பயன் ஒரு நாளைக்கு அவருடையதே; ஒரு நாள் உழைப்பு அவருக்கு உரியதாகிறது. ஒரு புறம், உழைப்புச் சக்தியின் ஒரு நாள் வாழ்வாதாரத்துக்கு அரை நாள் உழைப்பே செலவாகிறது; மறு புறம் அதே உழைப்புச் சக்தியால் முழு நாளும் வேலை செய்ய முடிகிறது; ஆதலால் ஒரு நாள் பொழுதில் அது பயன்பட்டு உண்டாக்குகிற மதிப்பு அதனை அப்படிப் பயன்படுத்துவதற்கு விலையாக அவர் கொடுப்பதைப் போல் இரு மடங்காகும். இந்நிலை வாங்கியுவருக்கு வாய்த்திடும் சௌபாக்கியம் என்பதில் ஐயமில்லை. விற்றவருக்கு இதனால் இழப்பு ஏதுமில்லை.

இந்த நிலைமை நமது முதலாளி எதிர்பார்த்ததுதான். அவர் சிரித்ததற்கு இதுவே காரணம். எனவே, தொழிலாளி ஆறு மணி நேரம் மட்டுமன்றி, பன்னிரண்டு மணி நேரம் வேலை செய்வதற்கு அவசியமான உற்பத்திச் சாதனங்கள் பட்டறையில் இருக்கக் காண்கிறார். ஆறு மணி நேர நிகழ்முறையின் போது 10 இராத்தல் பஞ்சு ஆறு மணி நேர உழைப்பைக் கிரகித்து 10 இராத்தல் நூல் ஆனது போலவே, இப்போது 20 இராத்தல் பஞ்சு 12 மணி நேர உழைப்பைக் கிரகித்து 20 இராத்தல் நூலாக மாற்றப்படும். நீட்டப்பட்ட இந்த நிகழ்முறையின் உற்பத்திப் பொருளை இப்போது ஆராய்வோம். இப்போது இந்த 20 இராத்தல் நூலில் ஐந்து நாள் உழைப்பு பொருள்வடிவாக்கப்பட்டுள்ளது; இதில் நான்கு நாள் பஞ்சுக்கும் கதிரின் தேய்ந்த எஃகுக்கும் ஆனது; எஞ்சிய ஒரு நாள் நூற்பு நிகழ்முறையின் போது பஞ்சால் கிரகிக்கப்பட்டது. தங்கத்தின் வாயிலாகத் தெரிவித்தால், ஐந்து நாள் உழைப்பு முப்பது ஷில்லிங் ஆகும். ஆகவே, இது 20 இராத்தல் நூலின் விலையாகும்; முன்போலவே ஒரு இராத்தலின் விலை பதினெட்டு பென்னி ஆகிறது. ஆனால் நிகழ்முறையில் நுழைந்த சரக்குகளது மதிப்பு

களின் மொத்தம் 27 ஷில்லிங் ஆகிறது. நூலின் மதிப்பு 30 ஷில்லிங். ஆகவே, உற்பத்திப் பொருளின் மதிப்பு அதன் உற்பத்திக்காக முன்னீடு செய்யப்பட்ட மதிப்பை விட 1/9 பங்கு அதிகமாகும்; 27 ஷில்லிங் 30 ஷில்லிங்காகி விட்டது; 3 ஷில்லிங் உபரி-மதிப்பு உண்டாக்கப்பட்டிருக்கிறது; ஆக, வித்தை பலித்து விட்டது; பணம் மூலதனமாக உருமாறி விட்டது.

சரக்குப் பரிவர்த்தனையை ஒழுங்கியக்கும் விதிகள் எவ்விதத்திலும் மீறப்படாமலே பிரச்சினையின் ஒவ்வொரு நிபந்தனையும் பூர்த்தி செய்யப்படுகிறது. சமதைக்குச் சமதை பரிவர்த்தனை செய்யப் பட்டுள்ளது. ஏனெனில் முதலாளி வாங்குபவர் என்ற முறையில் பஞ்சு, கதிர், உழைப்புச் சக்தி ஆகிய ஒவ்வொரு சரக்குக்கும் அதனதன் முழு மதிப்பை விலையாகக் கொடுத்திருக்கிறார். அடுத்து, அவரும் சரக்கு வாங்குகிற எவரும் செய்வதைத்தான் செய்தார்; அச்சரக்குகளின் பயன்-மதிப்பை நுகர்வு செய்தார்; உழைப்புச் சக்தியின் நுகர்வு சரக்குகளை உற்பத்தி செய்யும் நிகழ்முறையாகவும் அமைந்தது; இந்நுகர்வின் பயனாய் 30 ஷில்லிங் மதிப்புள்ள 20 இராத்தல் நூல் கிடைத்தது. முன்னர் சரக்குகளை வாங்குபவராக இருந்த முதலாளி இப்போது சரக்குகளை விற்பவராய் சந்தைக்குத் திரும்புகிறார். அவர் தனது நூலை, ஒரு இராத்தல் பதினெட்டு பென்னி என்ற விலைக்கு விற்கிறார்; அதன் மதிப்பு என்னவோ அதே விலைக்கு விற்கிறார். ஆனாலும் கூட, சுற்றோட்டத்திலிருந்து ஆரம்பத்தில் அதில் விட்டதை விட 3 ஷில்லிங் அதிகமாகத் திரும்பப் பெறுகிறார். பணம் மூலதனமாக மாறுகிற இந்த உருமாற்றம் சுற்றோட்டத் துறைக்கு உள்ளேயும் வெளியேயுமாக நடைபெறுகிறது. உழைப்புச் சக்தியை சந்தையில் வாங்க வேண்டிய நிபந்தனைக்கு உட்படுவதால், இந்த உருமாற்றம் சுற்றோட்டத் துறையினுள் நடைபெறுவதாகிறது; என்றாலும், உள்ளே நடைபெறுவதெல்லாம் உபரி-மதிப்பின் உற்பத்திக்கு வழியமைப்பது மட்டுமே—உபரி-மதிப்பின் உற்பத்தி நிகழ்முறை முற்றிலும் பொருளுற்பத்தித் துறையிலேயே நிகழ்வது என்பதால் இந்த உருமாற்றம் சுற்றோட்டத் துறைக்கு வெளியே நடைபெறுவதாகிறது. ஆக, ''tout est pour le mieus dans le meilleur des mondes possibles.''*

புதிய உற்பத்திப் பொருளின் பொருட்கூறுகளாகவும், உழைப்பு நிகழ் முறையில் காரணிகளாகவும் பயன்படுகிற சரக்குகளாகத் தன் பணத்தை மாற்றுவதன் மூலம், அவற்றின் உயிரற்ற சாரப் பொருளோடு உயிருள்ள உழைப்பை இணைப்பதன் மூலம், முதலாளி அதே நேரத்தில் மதிப்பை மூலதனமாக மாற்றுகிறார்; அதாவது கடந்த காலத்துக்குரியதும், பொருள்வடிவாக்கப்பட்டதும், உயிரற்றதுமான உழைப்பை மூலதனமாக, மதிப்பையே கர்ப்பமாய்க் கொண்ட மதிப்பாக, கருவுற்று இனம்பெருக்கும் உயிருள்ள

* ''இதனிற் சிறந்த உலகில்லை, இதில் நடப்பவை யாவும் நல்லவையே.''

பூதமாக மாற்றுகிறார்.

மதிப்பை உற்பத்தி செய்வது, உபரி-மதிப்பைப் படைப்பது என்ற இரு நிகழ்முறைகளையும் இப்போது ஒப்பிடுவோமானால், மதிப்பு உற்பத்தியை குறிப்பிட்ட நிலைக்கு மேல் நீடிப்பதே உபரி-மதிப்பின் ஆக்கம் என்பதைப் பார்க்கிறோம். உழைப்புச் சக்திக்கு முதலாளி விலையாகக் கொடுக்கும் மதிப்புக்குப் பதிலாக சரி நிகரான சமதை வரப்பெறும் நிலைக்கப்பால் நிகழ்முறையை நீடிக்கச் செய்யா விட்டால், அது மதிப்பை உற்பத்தி செய்யும் நிகழ்முறை மட்டுமேயாகும்; மாறாக, அதனை அந்த நிலைக்கப்பால் நீடிக்கச் செய்தால் அது உபரி-மதிப்பைப் படைக்கும் நிகழ்முறை ஆகி விடுகிறது.

மேலும் நாம் மதிப்பை உற்பத்தி செய்யும் நிகழ்முறையை சாமானிய உழைப்பு நிகழ்முறையுடன் ஒப்புநோக்கினால், பின்னது பயன்-மதிப்புகளை உற்பத்தி செய்யும் பயனுள்ள உழைப்பாலானது, அதாவது வேலையாலானது என்பதைக் காண்கிறோம். இங்கே உழைப்பை, குறிப்பிட்ட ஒரு பண்டத்தை உற்பத்தி செய்கிற ஒன்றாக வைத்துப் பார்க்கிறோம். நோக்கம் தொடர்பாக அதனை பண்பு அமிசத்தில் மட்டுமே பார்க்கிறோம். ஆனால் மதிப்பை உண்டாக்கும் நிகழ்முறையாக நோக்குங்கால், அதே உழைப்பு நிகழ்முறை அளவு அமிசத்தில் மட்டுமே காட்சி தருகிறது. இங்கே பிரச்சினை, உழைப்பாளி வேலையைச் செய்வதற்காகும் நேரம் பற்றியதே, உழைப்புச் சக்தி பயனுள்ள முறையில் செலவிடப்படும் கால அளவு பற்றியதே. இங்கே நிகழ்முறையில் பங்கு பெறும் சரக்குகள் குறிப்பிட்ட பயனுள்ள பொருளின் உற்பத்தியில் உழைப்புச் சக்திக்கு வேண்டிய அவசிய இணை பொருட்கள் ஆவதில்லை. குறிப்பிட்ட அளவு கிரகிக்கப்பட்ட அல்லது பொருள் வடிவாக்கப்பட்ட உழைப்பின் சேமிப்பகங்களே ஆகின்றன. அந்த உழைப்பானது உற்பத்திச் சாதனங்களில் முன்னதாக உருக் கொண்டிருந்தாலும் சரி, அல்லது உழைப்புச் சக்தியின் செயலால் முதன்முதலாய் நிகழ்முறையின் போது அவற்றில் சேர்க்கப்பட்டாலும் சரி, அது நீடிக்கும் கால அளவுக்கேற்பவே கணக்கில் கொள்ளப்படுகிறது; இத்தனை மணி நேரம் அல்லது இத்தனை நாட்களுக்கான உழைப்பாகிறது.

மேலும் ஒரு பண்டத்தின் உற்பத்திக்காகச் செலவிடப்படும் நேரம் எவ்வளவானாலும், குறிப்பிட்ட சமுதாய நிலைமைகளில் அவசியமாயிருக்கிற நேரமே கணக்கில் கொள்ளப்படுகிறது. இதன் விளைவுகள் பலவாறானவை. முதலாவதாக உழைப்பு இயல்பான நிலைமைகளில் நடைபெற்றாக வேண்டும். தானியங்கி நூற்பியந்திரமாகிய மியூலைக் கொண்டு நூற்பதே வழக்கமாயிருக்கும் நிலைமையில் நூற்பாளரிடம் தக்ளியும் இராட்டையும் தந்து நூற்கச் சொல்வது மடமை ஆகும். பஞ்சும், நூற்பின் போது

மிதமிஞ்சி விரயமாகும் விதத்தில் படுமோசமானதாய் இல்லாமல், தக்க தரமுள்ளதாக இருத்தல் வேண்டும். இல்லையேல், அதிகமான நேரத்தை, ஒரு இராத்தல் நூல் நூற்பதற்கு சமூக வழியில் அவசியமானதை விட அதிகமான நேரத்தை நூற்பாளர் செலவிட நேரும். இப்படி நேர்ந்தால், அதிகப்படியான நேரம் மதிப்பையோ பணத்தையோ உண்டாக்காது. ஆனால் நிகழ்முறையின் பொருளாயதக் காரணிகள் இயல்பான தரமுள்ளவையா, இல்லையா என்பது தொழிலாளியைப் பொறுத்தன்று—முற்றிலும் முதலாளியையே பொறுத்தது. மேலும் உழைப்புச் சக்தியும் சராசரிப் பயன் திறனுள்ளதாய் இருக்க வேண்டும். அதனை ஈடுபடுத்துகிற தொழிலில் நடப்பிலுள்ள சராசரித் தேர்ச்சி, கைத்திறம், விரைதிறன் ஆகியவை அதற்கிருக்க வேண்டும். நமது முதலாளி தக்க கவனம் செலுத்தி இத்தகைய இயல்பான தரம் வாய்ந்த உழைப்புச் சக்தியை வாங்கினார். இந்தச் சக்தி சராசரி அளவு பிரயாசையுடனும், வழக்கமான மும்முரத்துடனும் பிரயோகிக்கப்பட வேண்டும்; இதை உறுதி செய்து கொள்வதில் முதலாளி கண்ணும் கருத்துமாய் இருக்கிறார். தனது வேலையாட்கள் கணப் பொழுதும் ஓய்ந்திருக்காத படி பார்த்துக் கொள்கிறார். குறிப்பிட்ட காலத்துக்கு அவர் உழைப்புச் சக்தியின் பயன்பாட்டை வாங்கியிருக்கிறார்; தனது உரிமைகளை நிலைநாட்டிக் கொள்வதில் கண்டிப்பாயிருக்கிறார். அவர் எதையும் பறிகொடுக்க இசைய மாட்டார். கடைசியாக—கச்சாப் பொருள் அல்லது உழைப்புச் சாதனங்களின் நுகர்விலான விரயம் யாவற்றுக்கும் கண்டிப்பான தடை விதிக்கப்படுகிறது. இதற்கென நமது நண்பர் தனியாக ஒரு தண்டனைச் சட்டமே வைத்துள்ளாரார். ஏனெனில், இந்த விரயம் அனாவசியமாகச் செலவிடப்படும் உழைப்பை, அதாவது உற்பத்திப் பொருளுக்கு வேண்டாத, அல்லது அதன் மதிப்பில் சேராத உழைப்பைக் குறிக்கிறது.[192]

சரக்கு பற்றிய பகுப்பாய்வின் மூலம் உழைப்பில் ஒரு

---

[192] அடிமையுழைப்பைக் கொண்டு நடைபெறும் பொருளுற்பத்தி இவ்வளவு செலவு வாய்ந்ததாய் இருப்பதற்கான காரணங்களில் இதுவும் ஒன்றே. இதில் உழைப்பாளி, பழங்காலத்தவரின் பளிச்சிடும் பிரயோகத்தைக் கையாளுவதானால், 'பேசும் கருவி' என்ற முறையிலேயே 'பாதி ஊமைக் கருவியான' மிருகத்திடமிருந்தும், 'முழு ஊமைக் கருவியான' உயிரிலா வேலைக் கருவியிடமிருந்தும் வேறுபடுகிறார். ஆனால், தான் மிருகமோ கருவியோ அல்லன், மனிதனே என்று மிருகத்துக்கும் கருவிக்கும் அவர் உணர்த்த முற்படுகிறார். ஒன்றை இரக்கமில்லாமல் வாட்டியும், மற்றதை ஆர்வத்துடன் சேதப்படுத்தியும், தான் வேறு வகை ஜீவன் என்பதறிந்து பரம திருப்தி அடைகிறார். ஆகவேதான் மிகவும் முரடான, கனத்த, எளிதில் சேதப்படுத்த முடியாத படி மோட்டாவான கருவிகளை மட்டுமே உபயோகிப்பது என்பது இந்த உற்பத்தி முறையில் நீக்கமறக் கையாளப்படும் கோட்பாடாயிற்று. மெக்சிகோ வளைகுடாவை ஒட்டிய அடிமை ராஜியங்களில், உள்நாட்டுப் போர் வரைக்கும் கூட,

வேறுபாடு இருப்பதைக் கண்டுபிடித்தோம். ஒரு புறம் பயனுள்ள பொருட்களை உற்பத்தி செய்வதாகவும், மறு புறம் மதிப்பை உண்டாக்குவதாகவும் உழைப்பைக் கருதுவதால் வருகிற இந்த வேறுபாடு, உற்பத்தி நிகழ்முறையின் இரு அமிசங்களிடையிலான வேறுபாடாய் உருவெடுக்கிறது என்பதை இப்போது பார்க் கிறோம்.

ஒரு புறம், உழைப்பு நிகழ்முறை, மதிப்பைப் படைக்கும் நிகழ் முறை ஆகியவற்றின் ஐக்கியமாகக் கருதப்படுகையில் பொருளுற் பத்தி நிகழ்முறை சரக்கு உற்பத்தி ஆகும். மறு புறம், உழைப்பு நிகழ்முறை, உபரி-மதிப்பை உற்பத்தி செய்யும் நிகழ்முறை ஆகிய வற்றின் ஐக்கியமாகக் கருதப்படுகையில் அது முதலாளித்துவப் பொருளுற்பத்தி நிகழ்முறை அல்லது முதலாளித்துவ சரக்கு உற்பத்தி ஆகும்.

முதலாளியால் தனதாக்கப்படும் உழைப்பு சராசரித் தரமுள்ள, தேர்ச்சியற்ற, சாமானிய உழைப்பாயிருந்தாலும் சரி, அல்லது தேர்ச்சி பெற்ற சிக்கலான உழைப்பாயிருந்தாலும் சரி, உபரி-மதிப் பைப் படைக்கும் நிகழ்முறையில் இரண்டும் ஒன்றுதான் என்பதை முன்பே கூறினோம். சராசரி உழைப்பை விட உயர்ந்த அல்லது

---

பழைய சீன மாதிரிகளின் அடிப்படையிலேயே கலப்பைகள் செய்யப்பட்டன; இவை உழுவதற்கு பதில் காட்டுப் பன்றி அல்லது பெருச்சாளி போல் மண்ணைப் புரட்டி விடுகிறவையாய் இருந்தன. ஆதாரம்: ஜா.எ. கெய்ர்ன்ஸ்: ''அடிமைச் சக்தி,'' லண்டன், 1862, பக்கம் 46 முதலானவை: ''கரையோர அடிமை ராஜியங்கள்'' என்ற நூலில் ஒம்ஸ்டெட் நமக்குச் சொல்கிறார்: ''இங்கே என்னிடம் சில கருவிகளைக் காட்டினார்கள்; கூலிக்கமர்த்திய உழைப்பாளியிடம் இம்மாதிரியான கருவிகளைக் கொடுத்து வேலையை வில்லங்கப்படுத்த புத்தியுள்ள எவரும் இசைந்திடார். இவற்றின் மிதமிஞ்சிய கனமும், மோட்டாத்தனமும், நம்மிடம் சாதாரணமாகப் பயன்படும் கருவிகளைக் கொண்டு செய்கிற வேலையை குறைந்தது 10 சதவீதம் அதிகமாக்கி விடும் என்பது என் கணிப்பு. கவனமில்லாமலும் முரட்டுத்தனமாகவுமே அடிமைகள் உபயோகிப்பார்கள் என்பதால், இன்னும் இலேசான அல்லது அவ்வளவு முரடாயிராத கருவிகளைத் தந்து அவர்களை வேலை செய்யச் சொல்வது கட்டுபடியாகக் கூடியதல்ல என்று என்னிடம் வலியுறுத் தினார்கள். இங்கே நாம் எப்போதும் நமது தொழிலாளர்களுக்குத் தந்து, இலாபம் பெறும் படியான நமது கருவிகள் வர்ஜீனியாவின் சோள வயல்களில்—நம்முடையதை விட அங்குள்ள மண் பொலபொலப்பானதாகவும் கற்களற்றதாகவும் இருந்த போதிலும்—ஒரே நாளில் நாசமாகி விடும் என்றார்கள். இவ்வாறே, பண்ணையில் குதிரைகளுக்கு பதில் கோவேறுக் கழுதைகளை இவ்வளவு நீக்கமறப் பயன்படுத்துவது ஏன் என்று கேட்டால் தரப்படுகிற முதற் காரணம்—அவர்களே ஒப்புக் கொண்டபடி மிகவும் தீர்மானகரமான காரணம்—நீக்ரோக்களிடமிருந்து தவறாமல் கிடைப்பதைக் குதிரைகள் தாங்கிக் கொள்ள முடியாது என்பதே; அவர்களிடம் விட்டதும் குதிரைகள் சீக்கிரமாகவே படுத்து விடுகின்றன, அல்லது முடமாகி விடுகின்றன. கோவேறுக் கழுதைகளாய் இருந்தால் தடியடியைத் தாங்கிக் கொள்கின்றன, அல்லது இடையிடையே இரண்டொரு வேளை தீனியில்லாமலும் சமாளிக்கின்றன; கடுமையாகக் கேடுறுவதில்லை. கவனிப்புக் குறை வாலோ, அதிகப்படியான வேலையாலோ அவை கபத்தால் பீடிக்கப்படுவதில்லை, நோய்வாய்ப்படுவதுமில்லை. கால்நடைகள் வதைக்கப்படுவதை நான் அமர்ந்து எழுதிக் கொண்டிருக்கும் அறையின் சாளரத்தின் வழியாகவே அநேகமாய் எந்நேரமும் காண லாம். வடபுலத்தில் இப்படி நடக்குமேயானால் அந்தக் கால்நடைகளுக்குரியவரான எந்தச் சாகுபடியாளரும் கால்நடை ஓட்டுபவரை உடனே வீட்டிற்கு அனுப்பி விடுவார்.''

சிக்கலான தன்மையுள்ள உழைப்பனைத்தும் இன்னுமதிகச் செலவு வாய்ந்த உழைப்புச் சக்தியின் பிரயோகமாகும்; அதிக நேரமும் உழைப்பும் செலவாகி உற்பத்தி செய்யப்பட்டுள்ள, எனவே தேர்ச்சியற்ற அல்லது சாமானிய உழைப்புச் சக்தியை விட உயர்ந்த மதிப்புள்ள உழைப்புச் சக்தியின் பிரயோகமாகும். இந்தச் சக்தி உயர்ந்த மதிப்புள்ளதாகையால், அதன் நுகர்வு உயர்ந்த ரக உழைப்பாகும், சமமான கால அளவில் தேர்ச்சியற்ற உழைப்பு உண்டாக்குவதை விட விகிதாசாரப் படி அதிகமான மதிப்புகளைப் படைக்கும் உழைப்பாகும். நூற்பாளரின் உழைப்புக்கும் தட்டாரின் உழைப்புக்குமிடையே தேர்ச்சியில் என்னதான் வேறுபாடு இருப்பினும், தட்டார் அவரது உழைப்பில் தன் சொந்த உழைப்புச் சக்தியின் மதிப்பை மாற்றீடு செய்து கொள்ள மட்டுமே பயன் படுத்தும் பகுதிக்கும் அவர் உபரி-மதிப்பை உண்டாக்கப் பயன் படுத்தும் கூடுதல் பகுதிக்கும் எவ்விதப் பண்பு வேறுபாடுமில்லை. நூற்பதிலும் அதே போல் நகை செய்வதிலும், அளவு வழியில் அதிகப்படியான உழைப்பிலிருந்தே, அதாவது அதே உழைப்பு நிகழ்முறையை — முதலாவதில் நூல் நூற்கும் நிகழ்முறையை, இரண்டாவதில் நகை செய்யும் நிகழ்முறையை — நீட்டுவதிலிருந்தே உபரி-மதிப்பு விளைகிறது.[193]

---

193 "தேர்ச்சி பெற்ற உழைப்புக்கும், தேர்ச்சியற்ற உழைப்புக்குமான வேறுபாடு, பகுதியளவுக்கு, வெறும் மாயையின் பாற்பட்டது, அல்லது குறைந்த பட்சமாகச் சொன்னால் நீண்ட காலமாகவே மெய்ந்நடப்பிலிருந்து மறைந்து பாரம்பரியமான சம்பிரதாயத்தின் பயனாகவே பிழைத்திருக்கும் பாகுபாடுகளின் பாற்பட்டது. பகுதி யளவுக்கு, தொழிலாளி வர்க்கத்தில் சில பிரிவுகளது அனாதரவான நிலைமையின் பாற்பட்டது; தமது உழைப்புச் சக்தியின் மதிப்பை ஏனையோருக்குச் சமமான அளவில் சுறந்து கொள்ள விடாமல் அவர்களைத் தடுக்கிற நிலைமையின் பாற்பட்டது. இந்த இரு உழைப்பு வடிவங்களும் சில நேரங்களில் இடம் மாறிப் போகுமளவுக்கு, தற்செயலான சூழ்நிலைகள் இதில் பெரும் பங்கு வகிக்கின்றன. எடுத்துக்காட்டாக, தொழிலாளி வர்க்கத்தின் உடல்நிலை சீர்கெட்டு, ஒப்பளவில் சோர்வுற்று இருக்கும் இடங்களில் — நன்கு வளர்ச்சியடைந்த முதலாளித்துவப் பொருளுற்பத்தி நிலவும் எல்லா நாடுகளிலும் நிலைமை இதுவே — தசையாற்றலின் செலவீடு அதிகமாய்த் தேவைப்படுகிற கீழ்நிலை உழைப்பு வடிவங்கள் அதிகம் நுண்மையான உழைப்பு வடிவங்களோடு ஒப்பிடுகையில் தேர்ச்சி பெற்றவை எனப் பொதுவாகக் கருதப்படுகின்றன. பின்னவை தேர்ச்சியற்ற உழைப்பின் நிலைக்குத் தாழ்ந்து போகின்றன. இங்கிலாந்தில் சித்திரத் துணி நெசவாளரின் உழைப்பை விட கொத்து வேலைக்காரரின் உழைப்பு மிகவும் உயர்ந்த இடத்தைப் பெற்றுள்ளது என்பதை உதாரணமாகக் கொள்ளலாம். மேலும், மோட்டாத் துணி வெட்டுபவரின் உழைப்புக்கு அதிக உடற் பிரயாசை தேவைப்படுகிறது. ஆரோக்கியமற்றதாகவும் உள்ளது என்ற போதிலும், தேர்ச்சியற்ற உழைப்பாகவே கணக்கிடப்படுகிறது. மேலும் தேர்ச்சி பெற்ற உழைப்பு எனப்படுவது தேச உழைப்புக் களத்தில் அதிகமாயில்லை என்பதை நாம் மறக்கலாகாது. இங்கிலாந்தில் (மற்றும் வேல்சில்) 11,300,000 பேரின் ஜீவனம் தேர்ச்சியற்ற உழைப்பைச் சார்ந்துள்ளது என்று லயிங் மதிப்பிடுகிறார். அவர் எழுதிய காலத்தில் வாழ்ந்த 18,000,000 மொத்த மக்கள் தொகையிலிருந்து, "கண்ணியவான்கள்" என்ற வகையில் 1,000,000ஐயும் வக்கற்றோர், நாடோடிகள், குற்றவாளிகள், விபசாரிகள் போன்றோரின் வகையில் 1,500,000ஐயும், நடுத்தர வர்க்கமாக அமைவோரின் வகையில் 4,650,000ஐயும் கழித்து விட்டால், மேலே குறிப்பிட்ட 11,000,000 மட்டுமே மிஞ்சுகிறது. ஆனால்

மறு புறம், மதிப்பைப் படைக்கும் நிகழ்முறை ஒவ்வொன்றிலும் தேர்ச்சி பெற்ற உழைப்பை சராசரிச் சமுதாய உழைப்பாக, உதாரணமாய் தேர்ச்சி பெற்ற ஒரு நாள் உழைப்பை தேர்ச்சியற்ற ஆறு நாள் உழைப்பாகப் பெயர்ப்பது தவிர்க்க முடியாததாகும்.[194] எனவே, முதலாளியால் அமர்த்தப்படும் வேலையாளின் உழைப்பு தேர்ச்சியற்ற சராசரி உழைப்பாகும் என்று கொள்வதன் மூலம், நாம் ஓர் அனாவசியமான வேலையைத் தவிர்த்து, நமது பகுப்பாய்வை எளிமைபடுத்திக் கொள்கிறோம்.

---

சிறு முதலீடுகளின் வட்டியைக் கொண்டு வாழ்பவர்கள், அலுவலர்கள், எழுத்தாளர்கள், கலைஞர்கள், பள்ளி ஆசிரியர்கள் போன்றோரையும் நடுத்தர வர்க்கம் என்பதில் அவர் சேர்த்துக் கொள்கிறார்; இந்தத் தொகையை அதிகமாக்கும் பொருட்டு ஆலைத் தொழிலாளர்களில் அதிகச் சம்பளம் பெறும் பகுதியையும் இந்த 4,650,000இல் சேர்த்துக் கொள்கிறார்; கொத்து வேலைக்காரர்களும் கூட நடுத்தர வர்க்கமாகி விடுகின்றனர். (சா. லயிங்: ''நாட்டின் துயரம்...,'' லண்டன், 1844.) ''மிகப் பெருவாரியான மக்கள் உணவுக்கு விலையாகக் கொடுப்பதற்கு சாதாரண உழைப்பன்றி வேறெதும் இல்லாதாரைக் கொண்ட மிகப் பெரிய வர்க்கமாவர்.'' (ஜேம்ஸ் மில், ''குடியேற்றம்'' என்ற கட்டுரையில், பிரித்தானியக் கலைக் களஞ்சியத்துக்கான அனுபந்தம், 1831.)

194 ''உழைப்பை மதிப்பின் அளவையாகக் கூறுமிடத்து, அது குறிப்பிட்ட வகைப்பட்ட உழைப்பையே குறிக்கிறது. அதனோடு ஏனைய வகைகள் கொண்டுள்ள விகிதாசாரத்தை எளிதில் கணிக்கலாம்''. (''அரசியல் பொருளாதார உருவரைகள்,'' லண்டன், 1832, பக்கம் 22,23.)

## அத்தியாயம் VIII

# மாறா-மூலதனமும் மாறும்-மூலதனமும்

உழைப்பு நிகழ்முறையின் பல்வேறு காரணிகள் உற்பத்திப் பொருளின் மதிப்பை உருவாக்குவதில் வெவ்வேறு பாத்திரங்கள் வகிக்கின்றன.

உழைப்பாளி தன் உழைப்பினது இலக்குப் பொருள் மீது குறிப்பிட்ட அளவு கூடுதல் உழைப்பைச் செலவிட்டு—அந்த உழைப்பின் பிரத்தியேகத் தன்மையும் பயன்பாடும் என்னவாயிருப் பினும்—அந்த இலக்குப் பொருளுக்குப் புதிய மதிப்பைச் சேர்க் கிறார். மறு புறம் நிகழ்முறையில் பயன்படுத்திக் கொள்ளப்படும் உற்பத்திச் சாதனங்களின் மதிப்புகள் பாதுகாக்கப்பட்டு, உற்பத்திப் பொருளினது மதிப்பின் அடக்கக் கூறுகளாகப் புதுக் கோலம் பூணுகின்றன; எடுத்துக்காட்டாக பஞ்சு, கதிர் ஆகியவற்றின் மதிப் புகள் நூலின் மதிப்பில் திரும்ப இடம் பெற்றுத் தலைகாட்டு கின்றன. ஆகவே, உற்பத்திச் சாதனங்களின் மதிப்பு உற்பத்திப் பொருளுக்குப் பெயர்க்கப்படுவதன் மூலம் பாதுகாக்கப்படுகிறது. இந்தப் பெயர்ச்சி, அந்தச் சாதனங்கள் உற்பத்திப் பொருளாக மாற்றம் அடையும் போது, அதாவது உழைப்பு நிகழ்முறையின் போது நடைபெறுகிறது. இந்தப் பெயர்ச்சி உழைப்பைக் கொண்டு நடைபெறுகிறது; எப்படி?

உழைப்பாளி பஞ்சுக்கு மதிப்பு சேர்ப்பதை ஒரு செயற்பாடா கவும், உற்பத்திச் சாதனங்களின் மதிப்ைப் பாதுகாப்பதை—அதாவது தன் வேலைக்கு இலக்காகிற பஞ்சின் மதிப்பையும், தன் வேலையின் கருவியான கதிரின் மதிப்பில் ஒரு பகுதியையும் நூலுக்கு, அதாவது உற்பத்திப் பொருளுக்குப் பெயர்ப்பதை—இன்னொரு செயற்பாடாகவும் கொண்டு ஒரே நேரத்தில் இரு செயற்பாடுகளை

நிறைவேற்றவில்லை. புதிய மதிப்பைச் சேர்ப்பதென்ற செயலாலேயே, அவர் அவற்றின் முந்தைய மதிப்புகளைப் பாதுகாக்கிறார். ஆயினும், தன் உழைப்பின் இலக்குப் பொருளுக்குப் புதிய மதிப்பைச் சேர்ப்பதும் அதன் முந்தைய மதிப்பைப் பாதுகாப்பதும் ஒரே செயற்பாட்டின் போது உழைப்பாளி ஏககாலத்தில் தோற்றுவிக்கும் இருவேறு விளைவுகளே என்பதால், விளைவின் இந்த இரட்டைத் தன்மைக்கு அவரது உழைப்பின் இரட்டைத் தன்மையையே காரணமாய்க் கொள்ள முடியும் என்பது தெளிவு. ஒரே நேரத்தில் அது ஒரு தன்மையில் மதிப்பைப் படைக்க வேண்டும்; இன்னொரு தன்மையில் மதிப்பைப் பாதுகாத்திட அல்லது பெயர்த்திட வேண்டும்.

இப்போது ஒவ்வொரு உழைப்பாளியும் புதிய உழைப்பையும், அதனால் புதிய மதிப்பையும் சேர்ப்பது எவ்வாறு? உற்பத்தித் திறனுள்ளவாறு குறிப்பிட்ட வழியில் உழைப்பதன் மூலமே என்பது தெளிவு. நூற்பாளர் நூற்பதன் மூலமும், நெசவாளர் நெய்வதன் மூலமும், கருமான் உலைக்களத்தில் காய்ச்சியடிப்பதன் மூலமும் இதைச் செய்கின்றனர். ஆனால் பொதுவாக உழைப்பை, அதாவது மதிப்பை இவ்வாறு இணைக்கிற அதே நேரத்தில், உற்பத்திச் சாதனங்களான பஞ்சும் கதிரும், நூலும் தறியும், இரும்பும் பட்டறைக் கல்லும் உற்பத்திப் பொருளின், அதாவது புதிய பயன்-மதிப்பின் ஆக்கக் கூறுகளாவது உழைப்பின் குறிப்பான வடிவத்தாலேயே—முறையே நூற்பாலும், நெசவாலும், காய்ச்சியடித்தலாலுமே.[195] பயன்-மதிப்பு ஒவ்வொன்றும் மறைந்து போவது ஒரு புதிய பயன்-மதிப்பில் ஒரு புதிய வடிவத்தில் மறுபடியும் தலைகாட்டுவதற்கே. இந்நிலையில், ஒரு பயன்-மதிப்பு புதிய பயன்-மதிப்பின் உற்பத்தியில் திறனுள்ள முறையில் நுகரப்பட்டால், நுகரப்பட்ட பண்டத்தின் உற்பத்தியில் செலவிடப்பட்ட உழைப்பளவானது புதிய பயன்-மதிப்பை உற்பத்தி செய்வதற்கு அவசியமான உழைப்பளவின் பகுதியாக அமைகிறது என்பதை மதிப்பைப் படைக்கும் நிகழ்முறையைப் பரிசீலித்துக் கொண்டிருந்த போது பார்த்தோம். எனவே உழைப்பின் இந்தப் பகுதியானது உற்பத்திச் சாதனங்களிலிருந்து புதிய உற்பத்திப் பொருளுக்குப் பெயர்க்கப்படுகிற உழைப்பாகும். எனவே, நுகரப்பட்ட உற்பத்திச் சாதனங்களின் மதிப்புகளை உழைப்பாளி பாதுகாப்பது, அல்லது அவற்றை உற்பத்திப் பொருளுக்கு அதன் மதிப்பின் பகுதிகளாகப் பெயர்ப்பது, ஸ்தூலமற்றதாய்க் கொண்ட அவரது கூடுதல் உழைப்பின் மூலமன்று, அந்த உழைப்பின் குறிப்பான பயனுள்ள தன்மையின் மூலமே; உற்பத்தித் திறனுள்ள தனி வடிவத்தின் மூலமே. ஆக, உழைப்பு இத்தகைய

---

195 "உழைப்பு அவிந்து போன ஒன்றுக்கு பதில் புதிய படைப்பை வழங்குகிறது." ("நாடுகளின் அரசியல் பொருளாதாரம் பற்றிய கட்டுரை," லண்டன், 1821, பக்கம்13.)

பிரத்தியேகமான திறனுடையச் செயற்பாடாக இருப்பதால், நூற்பு, நெசவு, அல்லது காய்ச்சியடித்தலாக இருப்பதால், உற்பத்திச் சாதனங்களைத் தீண்டுவதன் மூலமே அவற்றை உயிரற்ற நிலையிலிருந்து எழுப்பி, உழைப்பு நிகழ்முறையின் உயிர்த் துடிப்புள்ள காரணிகளாக்கி, அவற்றுடன் இணைந்து புதிய உற்பத்திப் பொருட்களாகிறது.

உழைப்பாளியின் தனிவிதத் திறனுடை உழைப்பு நூற்பாய் இல்லா விட்டால், அவர் பஞ்சை நூலாக மாற்ற முடியாது; எனவே பஞ்சு, கதிர் ஆகியவற்றின் மதிப்புகளை நூலுக்குப் பெயர்க்க முடியாது. அதே உழைப்பாளி தன் தொழிலை தச்சுத் தொழிலாக மாற்றிக் கொள்வதாக வைத்துக் கொண்டாலும், அவர் தன் வேலைக்கு இலக்காகும் பொருளுக்கு ஒரு நாள் உழைப்பின் மூலம் மதிப்பைச் சேர்க்கவே செய்வார். ஆதலால், முதலாவதாக, புதிய மதிப்புச் சேர்ப்பு நடைபெறுவது அவரது உழைப்பு குறிப்பாக நூற்பு அல்லது குறிப்பாகத் தச்சு வேலை என்றிருப்பதன் மூலமன்று; அது ஸ்தூலமற்ற உழைப்பாக, சமுதாயத்தினது மொத்த உழைப்பின் பகுதியாக இருப்பதன் மூலமே என்று பார்க்கிறோம். இரண்டாவதாக, சேர்க்கப்படுகிற மதிப்பு குறிப்பிட்ட திட்டமான அளவினதாக இருப்பது, அவரது உழைப்பு தனிவிதப் பயன் பாட்டைப் பெற்றிருப்பதன் மூலமன்று, குறிப்பிட்ட காலத்துக்குப் பிரயோகிக்கப்படுவதன் மூலமே என்று பார்க்கிறோம். அப்படியானால், நூற்பானது ஒரு புறம் பஞ்சு, கதிர் ஆகியவற்றின் மதிப்புகளோடு புதிய மதிப்பைச் சேர்ப்பது ஸ்தூலமற்ற மனித உழைப்புச் சக்தியின் செலவீடாக இருத்தல் என்ற அதன் பொதுத் தன்மையின் மூலமே; நூற்பு என்ற அதே உழைப்பு மறு புறம் உற்பத்திச் சாதனங்களின் மதிப்புகளை உற்பத்திப் பொருளுக்குப் பெயர்ப்பதும் சரி, அவற்றை உற்பத்திப் பொருளில் பாதுகாப்பதும் சரி, ஸ்தூலமான, பயனுள்ள நிகழ்முறையாக இருத்தலென்ற அதன் தனித் தன்மையின் மூலமே. எனவே, ஒரே நேரத்தில் ஓர் இரட்டை விளைவு உண்டாக்கப்படுகிறது.

குறிப்பிட்ட அளவிலான உழைப்பைச் சேர்ப்பதன் மூலம் புதிய மதிப்பு சேர்க்கப்படுகிறது. இப்படிச் சேர்க்கப்பட்ட உழைப்பின் பண்பால், உற்பத்திச் சாதனங்களின் மூல மதிப்புகள் உற்பத்திப் பொருளில் பாதுகாக்கப்படுகின்றன. உழைப்பின் இரட்டைத் தன்மையிலிருந்து விளைகிற இந்த இரட்டை விளைவு பல்வேறு நிகழ்வுகளிலும் வெளிப்படக் காணலாம்.

முன்னர் 36 மணி நேரத்தில் நூற்ற அதே அளவு பஞ்சை ஏதேனும் புதிய கண்டுபிடிப்பின் பயனாய் நூற்பாளர் இப்போது 6 மணி நேரத்தில் நூற்க முடிவதாகக் கொள்வோம். பயனுள்ள உற்பத்தியென்ற கண்ணோட்டத்தில் அவரது உழைப்பு முன்பிருந்ததைப் போல் இப்போது ஆறு மடங்கு திறன் வாய்ந்ததாய் இருக்கிறது. 6 மணி நேர வேலையின் உற்பத்தி ஆறு மடங்கு

அதிகரிக்கிறது. அதாவது 6 இராத்தலாக இருந்தது 36 இராத்தலாக அதிகரிக்கிறது. முன்பு 6 இராத்தல் பஞ்சு கிரகித்த அதே அளவு உழைப்பையே 36 இராத்தல் பஞ்சு இப்போது கிரகிக்கிறது. ஒவ்வொரு இராத்தல் பஞ்சும் கிரகிக்கிற புதிய உழைப்பு முன்பிருந்ததில் ஆறிலொரு பங்கே ஆகும்; ஆதலால் ஒவ்வொரு இராத்தலுக்கும் உழைப்பால் சேர்க்கப்படும் மதிப்பு முன்பிருந்ததில் ஆறில் ஒரு பங்கே. மறு புறம், உற்பத்திப் பொருளில், 36 இராத்தல் நூலில், பஞ்சிலிருந்து பெயர்க்கப்படும் மதிப்பு முன்பிருந்ததைப் போல் ஆறு மடங்கு அதிகமாகும். 6 மணி நேர நூற்பின் மூலம், ஒவ்வொரு இராத்தல் கச்சாப் பொருளுக்கும் நூற்பாளரின் உழைப்பால் சேர்க்கப்படும் புதிய மதிப்பு முன்பிருந்ததில் ஆறில் ஒரு பங்கே என்ற போதிலும், பாதுகாக்கப்பட்டு உற்பத்திப் பொருளுக்கு மாற்றப்படும் கச்சாப் பொருளின் மதிப்பு முன்பிருந்ததைப் போல் ஆறு மடங்கு அதிகமாகும். உழைப்பு ஒரு நிலையில் மதிப்பைப் பாதுகாக்கவும், மறு நிலையில் மதிப்பைப் படைக்கவும் இயலுவதற்குக் காரணமான உழைப்பின் அவ்விரு குணங்களும் அடிப்படையில் வேறுபட்டவை என்பதையே இது காட்டுகிறது. ஒரு புறம், குறிப்பிட்ட எடையுள்ள பஞ்சை நூலாக நூற்பதற்கு அவசியமான நேரம் எவ்வளவு அதிகமோ, அவ்வளவு அதிகமான மூலப் பொருளுக்கு புதிய மதிப்பு சேர்க்கப்படுகிறது. மறு புறம், குறிப்பிட்ட நேரத்தில் நூற்கப்படும் பஞ்சின் எடை எவ்வளவு அதிகமோ, அவ்வளவு அதிகமான மதிப்பு அந்தப் பஞ்சிலிருந்து உற்பத்திப் பொருளுக்குப் பெயர்க்கப்படுவதன் மூலம் பாதுகாக்கப்படுகிறது.

நூற்பாளரது உழைப்பின் உற்பத்தித் திறன் மாறுபடுவதற்குப் பதில் மாறாதிருப்பதாகவும், எனவே ஒரு இராத்தல் பஞ்சை நூலாக மாற்ற, முன்பு தேவைப்பட்ட அதே நேரம் தேவைப்படுவதாகவும் கொள்வோம். ஆனால் பஞ்சின் பரிவர்த்தனை-மதிப்பு மாறுபட்டு அதன் முந்தைய மதிப்பைப் போல் ஆறு மடங்காய் உயர்கிறது, அல்லது அந்த மதிப்பில் ஆறில் ஒரு பங்காய்க் குறைகிறது என்போம். இரு நேர்வுகளிலுமே, நூற்பாளர் ஒரே அளவு உழைப்பையே ஓர் இராத்தல் பஞ்சுடன் சேர்க்கிறார்; எனவே மதிப்பில் மாற்றம் ஏற்படுவதற்கு முன்னால் சேர்த்த அதே அளவு மதிப்பையே சேர்க்கிறார்: குறிப்பிட்ட எடையுள்ள நூலை முன்பு உற்பத்தி செய்த அதே நேரத்தில் உற்பத்தி செய்கிறார். ஆன போதிலும், பஞ்சிலிருந்து நூலுக்கு அவர் பெயர்க்கிற மதிப்பு, மாறுபாட்டுக்கு முன்னர் இருந்ததில் ஆறில் ஒரு பங்காகவோ அல்லது முன்னைப் போல் ஆறு மடங்காகவோ இருக்கிறது; நிகழ்முறையில் உழைப்புச் சாதனங்களின் பயன்திறன் மாறாதிருக்க, அவற்றின் மதிப்பு உயர்கிற அல்லது குறைகிற போதும், இதே விளைவு ஏற்படுகிறது.

மேலும், நூற்பு நிகழ்முறையின் தொழில்நுட்ப நிலைமைகள் மாறாதிருந்தால், உற்பத்திச் சாதனங்களில் மதிப்பு மாற்றம் ஏதும் நடைபெறாதிருந்தால், நூற்பாளர் முன் போலவே சமமான வேலை நேரங்களில் மாறுபடாத மதிப்புள்ள சம அளவுகளிலான கச்சாப் பொருளையும் சம அளவுகளிலான இயந்திர சாதனத்தையும் நுகர்கிறார். உற்பத்திப் பொருளில் அவர் பாதுகாக்கிற மதிப்பு உற்பத்திப் பொருளுக்கு அவர் சேர்க்கிற புதிய மதிப்புக்கு நேர் விகிதமுடையது. ஒரு வார காலத்தில் சேர்ப்பதைப் போல் இரு வார காலத்தில் இரு மடங்கு உழைப்பை, ஆகவே இரு மடங்கு மதிப்பைச் சேர்க்கிறார். அதே காலத்தில் இரு மடங்கு மதிப்புள்ள இரு மடங்கு கச்சாப் பொருளை நுகர்கிறார். அவ்வாறே இரு மடங்கு மதிப்புள்ள இரு மடங்கு இயந்திர சாதனத்தைத் தேய்மானமடையச் செய்கிறார்; எனவே, ஒரு வார உற்பத்திப் பொருளில் பாதுகாப்பதைப் போல் இரு வார உற்பத்திப் பொருளில் இரு மடங்கு மதிப்பைப் பாதுகாக்கிறார். உற்பத்தி நிலைமைகள் மாறாதுள்ள வரை, உழைப்பாளி புதிய உழைப்பால் எவ்வளவுக்கு எவ்வளவு அதிக மதிப்பைச் சேர்க்கிறாரோ அவ்வளவுக்கு அவ்வளவு அதிக மதிப்பைப் பெயர்க்கிறார், பாதுகாக்கிறார்; ஆனால் அவர் இப்படிச் செய்வது, மாறுபடாதிருப்பவையும் அவரது உழைப்பைச் சாராதிருப்பவையுமான நிலைமைகளில் புதிய மதிப்பின் இந்தச் சேர்க்கை நடைபெறுகிறது என்ற காரணத்தாலேயே. ஒரு விதத்தில், உழைப்பாளி எந்த விகிதாசாரத்தில் மதிப்பைச் சேர்க்கிறாரோ, அதே விகிதாசாரத்தில் பழைய மதிப்பைப் பாதுகாக்கிறார் என்றும் சொல்லலாம். பஞ்சின் மதிப்பு ஒரு ஷில்லிங்கிலிருந்து இரண்டு ஷில்லிங்காக உயர்ந்தாலும் சரி, அல்லது ஆறு பென்னியாகக் குறைந்தாலும் சரி, இரண்டு மணி நேரத்தில் பாதுகாப்பதில் சரிபாதி மதிப்பையே உழைப்பாளி ஒரு மணி நேர உற்பத்திப் பொருளில் பாதுகாக்கிறார். இதே போல் அவரது உழைப்பின் உற்பத்தித் திறன் மாறுபட்டால், அதாவது உயரவோ குறையவோ செய்தால், ஒரு மணி நேரத்தில் அவர் முன்பு நூற்றதை விட அதிகமான அல்லது குறைவான பஞ்சை நூற்பார்; ஆதலால் ஒரு மணி நேர உற்பத்திப் பொருளில் பஞ்சின் அதிகமான அல்லது குறைவான மதிப்பைப் பாதுகாப்பார். எப்படியானாலும் ஒரு மணி நேர உழைப்பைக் கொண்டு பாதுகாக்கிற மதிப்பைப் போல் இரு மடங்கு மதிப்பை இரண்டு மணி நேர உழைப்பைக் கொண்டு பாதுகாப்பார்.

பயன்-மதிப்புகளில், பயனுள்ள பொருட்களில் மட்டுமே மதிப்பு இருக்கிறது: முற்றிலும் அடையாள வடிவில் மதிப்பு குறிக்கப்படுவதைக் கருதாது விட்டு விடுகிறோம். (உழைப்புச் சக்தியின் ஆளுருவாகக் கருதுகையில் மனிதனும் கூட இயற்கைப் பொருள் தான்; உயிரும் உணர்வுமுள்ள பொருளென்ற போதிலும் பொருள்

தான்; உழைப்பு என்பது அவனுள் உறைகிற இந்த உழைப்புச் சக்தியின் வெளிப்பாடே.) எனவே, ஒரு பண்டம் பயன்பாட்டை இழந்தால், மதிப்பையும் இழக்கிறது. உற்பத்திச் சாதனங்கள் பயன்-மதிப்பை இழக்கும் போது மதிப்பை இழக்காததற்கான காரணம் என்னவென்றால்: அவை உழைப்பு நிகழ்முறையில் தமது பயன்-மதிப்பின் ஆரம்ப வடிவத்தை இழந்த போதிலும் உற்பத்திப் பொருளில் ஒரு புதிய பயன்-மதிப்பின் வடிவத்தை மேற்கொள்கின்றன. மதிப்பு உருக்கொள்வதற்கு பயன்பாடுள்ள பொருள் அவசியம்; மதிப்புக்கு இது முக்கியமானது. ஆனால், குறிப்பிட்ட எந்தப் பொருளில் அது உருக்கொள்கிறது என்பது முக்கியமன்று. சரக்குகளின் உருமாற்றம் பற்றி ஆராய்ந்த போது இதைப் பார்த்தோம். எனவே, உழைப்பு நிகழ்முறையில் உற்பத்திச் சாதனங்கள் உற்பத்திப் பொருளுக்குத் தமது மதிப்பைப் பெயர்ப்பது, தமது பயன்-மதிப்போடு கூடப் பரிவர்த்தனை-மதிப்பையும் இழக்கிற அளவுக்கே என்பது தெளிவாகிறது. அவை உற்பத்திச் சாதனங்கள் என்ற முறையில் இழக்கிற மதிப்பை மட்டுமே உற்பத்திப் பொருளிடம் அளிக்கின்றன. ஆனால் இது தொடர்பாக உழைப்பு நிகழ்முறையின் எல்லாப் பொருளாயதக் காரணிகளும் ஒரே விதமாக நடந்து கொள்வதில்லை.

கொதிகலனின் அடுப்பில் எரிகிற நிலக்கரி இருந்த இடம் தெரியாமல் மறைந்து போகிறது; சக்கரங்களின் அச்சுகளுக்கு மசையிடப் பயன்படும் கொழுப்பும் இவ்வாறே மறைந்து போகிறது. சாயப் பொருட்களும், ஏனைய துணைப் பொருட்களும் கூட மறைந்து போகின்றன. ஆனால் உற்பத்திப் பொருளின் குணங்களாக மாறி, அவை திரும்பவும் தலை காட்டுகின்றன. கச்சாப் பொருள் தன் வடிவத்தை மாற்றிக் கொண்ட பின்னரே உற்பத்திப் பொருளின் தசைப் பிண்டமாக அமைகிறது. எனவே, கச்சாப் பொருளும், துணைப் பொருட்களும் தாம் தரித்துள்ள தனி வடிவத்தை உழைப்பு நிகழ்முறையில் நுழைந்ததும் இழந்து விடுகின்றன. உழைப்புச் சாதனங்கள் இப்படிச் செய்வதில்லை. கருவிகளும், இயந்திரங்களும், பட்டறைகளும், கலன்களும் உழைப்பு நிகழ்முறையில் பயனுள்ளவையாய் இருப்பது தம் சுய ரூபத்தைத் தக்க வைத்துக் கொண்டு, ஒவ்வொரு நாள் காலையும் மாறாத உருவத்துடன் நிகழ்முறையைப் புதுப்பிக்கத் தயாராய் இருக்கும் வரைதான். அவை உற்பத்திப் பொருளைச் சாராத தம் சுய ரூபத்தைத் தம் ஆயுட் காலத்தில்—அதாவது தாம் பயன்படுகிற தொடர்ச்சியான உழைப்பு நிகழ்முறையின் காலத்தில்—போலவே, தம் இறப்புக்குப் பிறகும் தக்க வைத்துக் கொள்கின்றன. எப்போதுமே இயந்திரங்கள், கருவிகள், பட்டறைகள் முதலானவற்றின் சடலங்கள் அவற்றின் உதவியால் உற்பத்தியான உற்பத்திப் பொருளிலிருந்து தனித்தவையாகவும், வேறானவையாகவும் உள்ளன. எந்தவோர் உழைப்புச் சாதனத்தின்

கதையையும்—அதன் பணிக் காலம் முழுவதிலும், பட்டறைக்குள் அது நுழைந்த நாளிலிருந்து புறக்கணிக்கப்பட்டு கழிவுக் கிடங்கினுள் தள்ளப்படும் நாள் வரை—நாம் இப்போது பரிசீலித்தால், இந்தப் பணிக் காலத்தில் அதன் பயன்-மதிப்பு முழுமையாக நுகரப் பட்டிருப்பதையும், எனவே அதன் பரிவர்த்தனை-மதிப்பு உற்பத்திப் பொருளுக்கு முழுமையாகப் பெயர்க்கப்பட்டிருப்பதையும் காண் கிறோம். எடுத்துக்காட்டாக, ஒரு நூற்பு இயந்திரம் 10 ஆண்டு காலம் நீடித்தால், அந்த வேலைக் காலத்தில் அதன் மொத்த மதிப்பு 10 ஆண்டு கால உற்பத்திப் பொருட்களுக்கு சன்னம் சன்னமாகப் பெயர்க்கப்படுகிறது என்பது தெளிவு. எனவே, ஓர் உழைப்புச் சாதனத்தின் ஆயுட்காலம் குறிப்பிட்ட எண்ணிக்கையிலான ஒத்த செயற்பாடுகள் திரும்பத் திரும்ப நடப்பதில் செலவிடப்படுகிறது. அதன் ஆயுளை மனித ஆயுளுடன் ஒப்பிடலாம். ஒவ்வொரு தினமும் கழியும் போது மனிதனுக்கும் அவனது இடுகாட்டுக்கும் உள்ள இடைவெளியில் 24 மணி நேரம் குறைந்து போகிறது என்றாலும், ஒரு மனிதனைப் பார்த்து இடுகாட்டுப் பாதையில் இன்னும் அவனுக்கு எஞ்சியிருக்கும் நாட்கள் எத்தனை என்று நிச்சயமாக சொல்லி விட முடியாது. ஆயினும், இந்த இடர்ப் பாடானது ஆயுள் காப்பீட்டு அலுவலகங்கள் சராசரிகளின் தத்து வத்தைக் கொண்டு மனிதனின் ஆயுட்காலம் குறித்து மிக நிச் சயமான, அதே போது மிக இலாபகரமான முடிவுகளை அடை வதைத் தடுத்து விடுவதில்லை. உழைப்புச் சாதனங்களுக்கும் இது பொருந்தும். குறிப்பிட்ட வகையைச் சேர்ந்த இயந்திரம் சராசரி யாக எவ்வளவு காலம் நீடிக்கும் என்று அனுபவத்தால் தெரிகிறது. உழைப்பு நிகழ்முறையில் அதன் பயன்-மதிப்பு ஆறு நாட்கள் மட்டுமே நீடிப்பதாக வைத்துக் கொள்ளுங்கள்; அது சராசரியாக நாள் தோறும் தன் பயன்-மதிப்பில் ஆறில் ஒரு பங்கை இழக்கிறது; எனவே தன் மதிப்பில் ஆறில் ஒரு பங்கை அன்றாட உற்பத்திப் பொருளிடம் கொடுத்து விடுகிறது. எல்லாச் சாதனங்களின் தேய் மானமும், அவற்றின் அன்றாடப் பயன்-மதிப்பிழப்பும், இதற் கிணையாக உற்பத்திப் பொருளிடம் அவை கொடுத்து விடுகிற மதிப்பின் அளவும் இதே அடிப்படையில் கணக்கிடப்படுகின்றன.

இவ்வாறு, உற்பத்திச் சாதனங்கள் உழைப்பு நிகழ்முறையின் போது தம் சொந்தப் பயன்-மதிப்பின் அழிவால் தாமே இழப்பதை விட அதிக மதிப்பை உற்பத்திப் பொருளுக்குப் பெயர்ப்பதில்லை என்பது தெட்டத் தெளிவாகிறது. இப்படியொரு சாதனம் இழப் பதற்கு மதிப்பேதும் இல்லையென்றால், அதாவது அது மனித உழைப்பின் உற்பத்திப் பொருளாக இல்லையென்றால், உற்பத்திப் பொருளுக்கு அது மதிப்பெதையும் பெயர்ப்பதில்லை. அது பரிவர்த்தனை-மதிப்பைப் படைப்பதற்குப் பங்கு செலுத்தாமலே பயன்-மதிப்பைப் படைக்க உதவுகிறது. மனித உதவியில்லாமல்

இயற்கையால் வழங்கப்படும் எல்லா உற்பத்திச் சாதனங்களும் இவ்வகையில் அடங்கும்; நிலம், காற்று, நீர், கனிம நிலையிலுள்ள உலோகங்கள், கன்னிக் காடுகளின் மர வளம் போன்றவற்றை உதாரணமாய்க் கொள்ளலாம்.

இங்கே சுவாரசியமான இன்னொரு நிகழ்வு எதிர்ப்படுகிறது. ஓர் இயந்திரம் £1,000 பெறுமானமுள்ளது என்றும், தேய்மானத்தின் மூலம் 1,000 நாட்களில் அதன் வாழ்வு முடிவதாகவும் கொள்வோம்; தினந்தோறும் இந்த இயந்திரத்தின் மதிப்பில் ஆயிரத்திலொரு பங்கு ஒரு நாளைய உற்பத்திப் பொருளுக்குப் பெயர்க்கப்படுகிறது. அதே நேரத்தில், மேலும் மேலும் குன்றி வரும் ஜீவ சக்தியுடன்தான் என்றாலும், முழு இயந்திரமும் உழைப்பு நிகழ்முறையில் தொடர்ந்து பங்கு பெறுகிறது. இவ்வாறு, உழைப்பு நிகழ்முறையின் காரணிகளில் ஒன்றாகிய ஓர் உற்பத்திச் சாதனம் அந்நிகழ்முறையில் தொடர்ந்து முழுமையாகப் பங்கு பெறுகிற அதே நேரத்தில், மதிப்பைப் படைக்கும் நிகழ்முறைக்குள் பகுதிபகுதியாகவே பங்கு பெறுகிறது. இங்கே இரு நிகழ்முறைகளுக்கும் இடையிலான வேறுபாடு அவற்றின் பொருளாயதக் காரணிகளில் பிரதிபலிக்கிறது; மதிப்பைப் படைக்கும் நிகழ்முறையில் ஓர் ஆக்கக் கூறு என்ற முறையில் பகுதிபகுதியாகவே பங்கு பெறுகிற அதே உற்பத்திச் சாதனம் உழைப்பு நிகழ்முறையில் முழுமையாகப் பங்கு பெறுகிறது என்பதில் பிரதிபலிக்கிறது.[196]

---

[196] உழைப்புச் சாதனங்களின் மராமத்து பற்றி இங்கே நமக்குக் கவலையில்லை. மராமத்து செய்யப்படும் இயந்திரம் இப்போது உழைப்புச் சாதனமாக அல்லாமல் உழைப்பின் இலக்குப் பொருளாகவே பாத்திரம் வகிக்கிறது. வேலை இப்போது அதைக் கொண்டு செய்யப்படுவதில்லை, அதன் மீதே செய்யப்படுகிறது. கருவிகளை மராமத்து செய்வதற்காகச் செலவிடப்படும் உழைப்பு அவற்றின் மூல உற்பத்திக்கு அவசியமான உழைப்பில் அடங்கும் என்று கொள்வது, நமது காரியத்துக்கு முற்றிலும் ஏற்புடையதே. ஆனால் நாம் வாசகத்தில் குறிப்பிடுகிற தேய்மானம் எந்த மருத்துவராலும் குணப்படுத்த முடியாத, கொஞ்சம் கொஞ்சமாய் மரணமேற்படுத்துகிற தேய்மானமாகும்; "அவ்வப்போது மராமத்து செய்ய முடியாத தேய்மானமாகும்; கத்தியை உதாரணமாய்க் கொண்டால் அது ஒரு புதிய வெட்டுவாய்க்கு ஏற்றதல்ல என்று கத்தி செய்பவர் கூறும் நிலைக்கு அதை இறுதியாக தாழ்த்தி விடுகிற தேய்மானமாகும்." ஓர் இயந்திரம் முழு இயந்திரமாக உழைப்பு நிகழ்முறை ஒவ்வொன்றிலும் பங்கு பெறுகிறது என்பதையும், ஆனால் அத்துடன் ஏககாலத்தியதான மதிப்பை உண்டாக்கும் நிகழ்முறையில் கொஞ்சம் கொஞ்சமாகவே பங்கு பெறுகிறது என்பதையும் வாசகத்தில் காட்டியுள்ளோம். அப்படியானால் கீழ்க் கண்ட மேற்கோளில் வெளிப்படும் கருத்துக் குழப்பம் எவ்வளவு பெரியது! "உதாரணமாக (காலுறை) இயந்திரங்களைத் தயாரிப்பதில் பொறியாளரது உழைப்பின் ஒரு பகுதி" ஒரு ஜதைக் காலுறைகளின் மதிப்பில் அடங்கியுள்ளது என்று திரு ரிக்கார்டோ சொல்கிறார். ஆனால் ஒவ்வொரு தனி ஜதைக் காலுறைகளையும் உற்பத்தி செய்த மொத்த உழைப்பில்....அடங்கியிருப்பது பொறியாளரின் உழைப்பு முழுவதுமே, ஒரு பகுதியன்று; ஏனெனில், ஓர் இயந்திரம் பல ஜதைகளைத் தயாரிக்கிறது; அந்த ஜதை எதையும் இயந்திரத்தின் எந்தப் பகுதியில்லாமலும் தயாரிக்க முடியாது." ("அரசியல் பொருளாதாரத்தில், குறிப்பாக மதிப்பு குறித்த சில வார்த்தைச் சர்ச்சைகள் பற்றிய கருத்துரைகள்," பக்கம் 54.) அபார சுய திருப்தி கொள்ளும் பண்டிதரான இந்த நூலாசிரியருக்கு முன்னரோ பின்னரோ, ரிக்கார்டோவும் சரி,

மறு புறம், மதிப்பைப் படைக்கும் நிகழ்முறையில் முழுமையாகப் பங்கு பெறுகிற உற்பத்திச் சாதனம் உழைப்பு நிகழ்முறையில் சிறிது சிறிதாகவே பங்கு பெறுவதும் உண்டு. பஞ்சை நூலாக நூற்பதில் பயன்படுத்தப்பட்ட ஒவ்வொரு 115 இராத்தல் பஞ்சுக்கும் 15 இராத்தல் கழிவு எனக் கொள்வோம்; இக்கழிவு கந்தையாகிறதேத் தவிர நூலாக மாற்றப்படுவதில்லை. இந்நிலையில், இந்த 15 இராத்தல் பஞ்சு ஒரு போதும் நூலின் ஆக்கக் கூறாவதில்லை. என்றாலும், இந்த அளவுக் கழிவு சராசரி நூற்பு நிலைமைகளில் இயல்பானதும் தவிர்க்க முடியாததும் ஆகுமெனக் கொண்டால், அதன் மதிப்பு நூலின் பிண்டமாய் அமைகிற 100 இராத்தல் பஞ்சின் மதிப்பைப் போலவே நிச்சயமாக நூலின் மதிப்புக்கு பெயர்க்கப்படுகிறது. 15 இராத்தல் பஞ்சின் பயன்-மதிப்பு மறைந்து போனால்தான் 100 இராத்தல் நூல் நூற்க இயலும். எனவே இந்தப் பஞ்சின் அழிவு நூலின் உற்பத்திக்கு இன்றியமையாத் தேவையாகும். அது ஓர் அவசிய நிலைமை என்பதால்தான், அந்தப் பஞ்சின் மதிப்பு உற்பத்திப் பொருளுக்குப் பெயர்க்கப்படுகிறது. உழைப்பு நிகழ்முறையிலிருந்து விளைகிற ஒவ்வொரு வகைக் கழிவுக்கும் இது பொருந்தும்—சுயேச்சையான புதிய பயன்-மதிப்புகளின் உற்பத்தியில் ஒரு சாதனமாக அதனை மேற்கொண்டு உபயோகிக்க முடியாத அளவிற்காவது பொருந்தும். (ஆனால், கழிவு இப்படி உபயோகமாவதை மான்செஸ்டரில் இயந்திரம் தயாரிக்கும் பெரிய ஆலைகளில் பார்க்கலாம்; அங்கே மலைமலையாய்க் குவியும் இரும்புச் சீவல்கள் மாலையில் வார்ப்பட சாலைக்கு வண்டியேற்றப்படுகின்றன, மறுநாள் காலை இரும்புப் பாளங்களாக ஆலைகளுக்குத் திரும்பி வருகின்றன.)

உற்பத்திச் சாதனங்கள், உழைப்பு நிகழ்முறையின் போது தமது பழைய பயன்-மதிப்பின் உருவில் மதிப்பை இழக்கிற அளவிலேயே, புதிய உற்பத்திப் பொருளுக்கு மதிப்பைப் பெயர்க்கின்றன என்று பார்த்தோம். இந்நிகழ்முறையில் அவை அடையக் கூடிய அதிகபட்ச மதிப்பிழப்பு நிகழ்முறையினுள் வந்த போது அவற்றுக்கிருந்த ஆரம்ப மதிப்பின் அளவுக்கு மேல் போக முடியாது, அதாவது அவற்றின் உற்பத்திக்கு அவசியமான உழைப்பு நேரத்துக்கு மேல் போக முடியாது என்பது தெளிவு. ஆகவே, உழைப்பு நிகழ்முறையில் பங்கு பெறுகிற உற்பத்திச் சாதனம் முன்பிருந்தே தன்னிடமிருப்பதை விட அதிகமான மதிப்பை உற்பத்திப் பொருளுக்குச் சேர்க்க முடியாது. குறிப்பிட்ட வகைக் கச்சாப் பொருள், அல்லது

---

வேறு எந்தப் பொருளாதார அறிஞரும் சரி, உழைப்பின் இரு அமிசங்களையும் சரிவர வேறுபடுத்திக் காட்டியதில்லை; எனவே, மதிப்பின் உண்டாக்கத்தில் இந்த அமிசங்கள் ஒவ்வொன்றிலும் உழைப்பு வகிக்கிற பாத்திரத்தை அவர்கள் வேறுபடுத்திக் காட்டுவதென்ற பேச்சுக்கே இடமில்லை. இந்நூலாசிரியரின் குழப்பத்துக்கும், ஆகவே அவரது வாதத்துக்கும் நியாயமுண்டு.

இயந்திரம் அல்லது வேறொரு உற்பத்திச் சாதனம் எவ்வளவுதான் பயனுடையதென்றாலும், அதன் அடக்கச் செலவு £150 (அல்லது, உதாரணமாக 500 நாள் உழைப்பு) ஆவதானாலும், அது உற்பத்திப் பொருளுக்கு £150க்கு அதிகமான மதிப்பை ஒருபோதும் சேர்க்க முடியாது. அதன் மதிப்பு நிர்ணயிக்கப்படுவது உற்பத்திச் சாதனமாய் உள்ளே செல்கிற உழைப்பு நிகழ்முறையால் அன்று, உற்பத்திப் பொருளாய் அது வெளியே வருகிற நிகழ்முறையாலேயே. உழைப்பு நிகழ்முறையில் அது வெறும் பயன்-மதிப்பாகவே, பயனுள்ள குணங்களைக் கொண்ட ஒன்றாகவே உபயோகமாகிறது. எனவே, அது முன்னரே மதிப்புடையதாய் இருந்தாலன்றி, அதனால் உற்பத்திப் பொருளுக்கு மதிப்பெதையும் பெயர்க்க முடியாது.[197]

திறனுடை உழைப்பானது உற்பத்திச் சாதனங்களைப் புதிய உற்பத்திப் பொருளின் ஆக்கக் கூறுகளாக மாற்றிக் கொண்டிருக்கும் அதே நேரத்தில், அவற்றின் மதிப்பு கூடு விட்டுக் கூடு பாய்கிறது. நுகரப்படும் உடலை விட்டு, புதிதாகப் படைக்கப்படும் உடலுக்குள் பாய்கிறது. ஆனால் இந்தக் கூடு விட்டுக் கூடு பாய்தல் உழைப்

[197] உற்பத்திச் சாதனங்கள், மண், கருவிகள், கச்சாப்பொருள் ஆகியவை தமது பயன்-மதிப்புகளின் மூலம் உழைப்பு நிகழ்முறையில் ஆற்றுகிற "உற்பத்தித் திறனுள்ள சேவைகளைக்" கொண்டு உபரி-மதிப்புக்கு (வட்டி, இலாபம், வாரம் ஆகியவற்றுக்கு) விளக்கம் சொல்வதாகக் கூறிக் கொள்ளும் மூா. ப. ஸேயின் பேதைமையை இதிலிருந்து அறியலாம். சாதுரியமான சப்பைக்கட்டுவாதக் கற்பனைகளை சந்தர்ப்பம் கிடைக்கும் போதெல்லாம் தவறாமல் எழுத்தில் பதிப்பவரான திரு வில்ஹெல்ம் ரோஷர் நமக்களிப்பவற்றில் ஒன்று வருமாறு: "மூா. ப. ஸே (Traite, பாகம் 1, அத்தியாயம் 4) மறுக்க முடியாதவாறு சொல்கிறார்: எண்ணெய் ஆலை உற்பத்தி செய்த மதிப்பு, எல்லாச் செலவுகளையும் கழித்துப் பார்த்தால் புதிதான ஒன்றாகும். எண்ணெய் ஆலையைக் கட்ட உதவிய உழைப்பிலிருந்து முற்றிலும் வேறான ஒன்றாகும்." (முன் வந்தது, பக்கம் 82, குறிப்பு.) பேராசிரியர் அவர்களே! மறுக்க முடியாததுதான்! எண்ணெய் ஆலை உற்பத்தி செய்கிற எண்ணெய், ஆலையைக் கட்டுவதற்குச் செலவான உழைப்பிலிருந்து முற்றிலும் வேறான ஒன்றுதான்! மதிப்பு என்றால் திரு ரோஷர் "எண்ணெய்" போன்ற ஒரு பொருளென்று புரிந்து கொள்கிறார்; ஏனெனில் எண்ணெயை உற்பத்தி செய்வது "இயற்கையே" என்ற போதிலும், எண்ணெய்க்கு மதிப்புள்ளது; இயற்கையானது ஒப்பளவில் "சொற்பமாகவே" எண்ணெயை உற்பத்தி செய்கிறது. இந்த உண்மையையே குறிப்பிடுவதாகத் தோன்றும் விதத்தில் அவர் மேலும் எழுதுகிறார். "அது (இயற்கை) சொற்பத்திலும் சொற்பமாகவே பரிவர்த்தனை-மதிப்பை உற்பத்தி செய்கிறது." ஒரு விதத்தில், திரு ரோஷரின் "இயற்கையும்" அது உற்பத்தி செய்கிற பரிவர்த்தனை-மதிப்பும், நான் குழந்தை பெற்றது மெய்தான், ஆனால் "அது சின்னஞ் சிறியது" என்று கூறிய அசட்டுக் கன்னிகையைத்தான் நினைப்பூட்டுகின்றன. இந்த "உண்மைக் கல்விமான்" தொடர்ந்து குறிப்பிடுகிறார்; "மூலதனத்தை உழைப்பு என்ற தலைப்பில் திரட்டப்பட்ட உழைப்பாகச் சேர்த்துக் கொள்வது ரிக்கார்டோ மரபிற்கு வழக்கம். இது தேர்ச்சியற்ற வேலை; ஏனெனில், மெய்யாகவே இறுதியாகப் பார்த்தால் மூலதன உடைமையாளர் செய்வது மூலதனத்தைப் படைத்துப் பாதுகாப்பது மட்டுமன்று; அவர் வேறொன்றும் செய்கிறார்: அதை நுகர்ந்து அனுபவிக்காது தவிர்க்கிறார், அதற்காக ஈடு—உதாரணமாக வட்டி—கேட்கிறார்." (முன் வந்தது.) "இறுதியாகப் பார்த்தால்" வெறும் விருப்பத்தை மதிப்பின் தோற்றுவாயாக "மெய்யாகவே" மாற்றி விடுகிற இந்த அரசியல் பொருளாதாரப் "பகுப்பாய்வு-உடலியல் முறையின்" "தேர்ச்சியை" என்னென்பது!

பாளியின் முதுகுக்குப் பின்னால் நிகழ்வதாகச் சொல்லலாம். உழைப்பாளி புதிய உழைப்பைச் சேர்க்க வேண்டுமானால், புதிய மதிப்பைப் படைக்க வேண்டுமானால், அதே நேரத்தில் பழைய மதிப்புகளை அவர் பாதுகாக்க வேண்டும்; ஏனெனில் அவர் சேர்க்கிற உழைப்பு குறிப்பிட்ட பயனுள்ள வகை உழைப்பாக இருக்க வேண்டும்; உற்பத்திப் பொருட்களைப் புதிய உற்பத்திப் பொருளின் உற்பத்திச் சாதனங்களாகப் பிரயோகிக்காமலும் அதன் மூலம் அவற்றின் மதிப்பைப் புதிய உற்பத்திப் பொருளுக்குப் பெயர்க்காமலும் அவர் பயனுள்ள வகையைச் சேர்ந்த ஒரு வேலையைச் செய்ய முடியாது. எனவே, செயல்படும் உழைப்புச் சக்தி, அதாவது உயிருள்ள உழைப்பு மதிப்பைச் சேர்க்கிற அதே நேரத்தில், மதிப்பைப் பாது காக்கவும் செய்கிற குணத்தைப் பெற்றுள்ளது. இது இயற்கையின் வரப்பிரசாதம். இதனால் தொழிலாளிக்கு இழப்பேதுமில்லை; ஆனால் முதலாளிக்கு நிறைய ஆதாயமுண்டு; எப்படியென்றால், அது அவரது மூலதனத்திற்கு இருக்கும் மதிப்பைக் கேடுறாமல் பாதுகாக்கிறது.[198] தொழில் சுணக்கமின்றி நன்றாய் இருக்கும் வரை, உழைப்பின் இந்த நன்கொடை அவரது கண்ணிற்படுவதே இல்லை; அவர் பணம் பண்ணுவதிலேயே குறியாய் இருக்கிறார். உழைப்பு நிகழ்முறையை திடீரெனத் தடைப்படுத்தும் நெருக்கடி அவருக்கு உறைக்கும் படி இதனை உணர்த்துகிறது.[199]

உற்பத்திச் சாதனங்களைப் பொறுத்த வரை, உண்மையில் நுகரப்படுவது அவற்றின் பயன்-மதிப்பே; இந்தப் பயன்-மதிப்பை

---

[198] "சாகுபடியாளர் தமது மூலதனத்தை மீட்டெடுப்பதற்கு...தமது தொழிற் சாதனங்களில் அதிகம் நம்ப வேண்டியிருப்பது மனித உழைப்பே. ஏனைய இரண்டும்... உழைக்கும் கால்நடைச் செல்வமும், வண்டிகள், கலப்பைகள், மண்வெட்டிகள் முதலான வையும், குறிப்பிட்ட அளவு மனித உழைப்பு இல்லையேல், பயனற்றவையே." (எட்மண்டு பர்க்: "தட்டுப்பாடு பற்றிய சிந்தனைகளும் விவரங்களும், முதலில் 1795 நவம்பர் மாதத்தில் ரைட் ஆனரபிள் வி. பிட் அவர்களிடம் சமர்ப்பிக்கப்பட்டது." பதிப்பு: லண்டன், 1800, பக்கம் 10.)

[199] 800 ஆட்களை வேலைக்கமர்த்தி, சராசரியாக 150 பேல் கிழக்கிந்தியப் பஞ்சு அல்லது 130 பேல் அமெரிக்கப் பஞ்சை நுகர்கிற ஆலையின் அதிபர் ஒருவர், வேலை யில்லாத போது தன் தொழிற்சாலையின் நிலையான செலவுகள் பற்றி 1862 நவம்பர் 26 தேதிய தி டைம்ஸ் ஏட்டில் வருத்தத்துடன் முறையிடுகிறார். இச்செலவுகள் ஆண் டுக்கு £6,000 என அவர் மதிப்பிடுகிறார். வாடகை, கட்டணங்கள், வரிகள், காப்பீடு ஆகியவை, மேலாளர், கணக்கர், பொறியாளர் முதலானோரின் சம்பளங்கள் போன்ற பல செலவினங்கள் இதில் அடங்கும். இவை குறித்து இங்கு நமக்குக் கவலையில்லை. அடுத்து, எப்போதாவது ஆலைக்கு வெப்பமூட்டவும், அவ்வப்போது எஞ்சினை ஓட் டவும் பயன்படுத்திய நிலக்கரிக்கு £150 செலவானதாகக் கணக்கிடுகிறார். மேலும் இயந்திர சாதனத்தைப் பழுதின்றி இயங்கும் நிலையில் வைத்திருக்க இடையிடையே அவர் வேலைக்கமர்த்துவோரின் கூலியையும் சேர்த்துக் கொள்கிறார். கடைசியாக, இயந் திர சாதனத்தின் மதிப்பிறக்கத்தை £1,200 ஆகக் கணக்கிடுகிறார். ஏனெனில், "நீராவி எஞ்சின் சுழலாமல் நிற்பதால் தட்ப வெப்பமும் இயற்கையான சீர்கேட்டு விதியும் தமது வேலைகளை நிறுத்திக் கொள்வதில்லை." தமது இயந்திர சாதனம் முன்பே அநேகமாய்த் தேய்ந்து போய் விட்டதால், தமக்கு நேர்ந்த மதிப்பிறக்கம் £1,200 என்ற சிறு தொகைக்கு மேல் இருக்காது என அவர் வலியுறுத்திச் சொல்கிறார்.

நுகர்வதன் விளைவே உற்பத்திப் பொருள். அவற்றின் மதிப்பு எவ்வகையிலும் நுகரப்படுவதில்லை.[200] எனவே, அது மறுவுற்பத்தி செய்யப்படுவதாகக் கூறுவது பிழையாகும். சரியாகச் சொன்னால், அது பாதுகாக்கப்படுகிறது. நிகழ்முறையின் போது ஏதேனும் ஒரு வினைமுறைக்கு அது உள்ளாகிறது என்பதால் அன்று, ஆரம்பத்தில் அதற்கு உறைவிடமாய் இருக்கும் பண்டம் மறைவது மெய்தான் என்றாலும் இவ்விதம் மறைவதன் மூலம் வேறொரு பண்டமாகிறது என்பதாலேயே, அது பாதுகாக்கப்படுகிறது. எனவே, உற்பத்திப் பொருளின் மதிப்பில் உற்பத்திச் சாதனங்களின் மதிப்பு திரும்ப இடம் பெறுகிறதே தவிர, கண்டிப்பாகச் சொன்னால், அந்த மதிப்பு மறுவுற்பத்தியாவதில்லை. உற்பத்தியாவது புதிய பயன்-மதிப்பே. பழைய பரிவர்த்தனை-மதிப்பு இந்தப் புதிய பயன்-மதிப்பில் திரும்ப இடம் பெறுகிறது.[201]

உழைப்பு நிகழ்முறையின் அகவயக் காரணியைப் பொறுத்த வரை, செயல்படும் உழைப்புச் சக்தியை பொறுத்த வரை, இப்படிச் சொல்ல முடியாது. உழைப்பாளி தன் உழைப்பு தனிக் குறிக் கோளுடைய தனி வகையைச் சேர்ந்ததாக இருப்பதன் பயனாய் உற்பத்திச் சாதனங்களின் மதிப்பைப் பாதுகாத்து உற்பத்திப் பொருளுக்குப் பெயர்க்கிற அதே நேரத்தில், உழைப்பென்னும் செயலாலேயே கணந்தோறும் கூடுதலான அல்லது புதிய மதிப்பைப் படைக்கிறார். தொழிலாளி தன் சொந்த உழைப்புச் சக்தியின்

---

200 ''உற்பத்தித் திறனுள்ள நுகர்வு...இதில் சரக்கின் நுகர்வு உற்பத்தி நிகழ்முறையின் பகுதியாகும்....இந்தச் சந்தர்ப்பங்களில் மதிப்பு நுகரப்படுவதில்லை.'' (சா. பி. நியூமன், முன் வந்தது, பக்கம் 296.)

201 சுமார் 20 பதிப்புகள் வரை வெளிவந்திருக்கக் கூடியதான அமெரிக்கத் திரட்டு நூல் ஒன்றில் பின்வருமாறு கூறப்படுகிறது: ''எந்த வடிவத்தில் மூலதனம் திரும்ப இடம் பெறுகிறது என்பதைப் பொருட்படுத்த வேண்டியதில்லை.'' பிறகு, உற்பத்திப் பொருளில் திரும்ப இடம் பெறக் கூடிய மதிப்புக்கு உரிய உற்பத்தி-இடுபொருட்களை எல்லாம் நீண்ட பட்டியலாகத் தந்து விட்டு, முடிவில் இவ்வாசகம் கூறுவதாவது: ''மனிதப் பிறவியின் வாழ்க்கைக்கும் வசதிக்கும் அவசியமான பல்வேறு வகைப்பட்ட உணவு, உடை, உறைவிடம் ஆகியவையும் மாற்றப்படுகின்றன. அவை அவ்வப்போது நுகரப் படுகின்றன; அவற்றின் மதிப்பு அவரது உடலுக்கும் உள்ளத்துக்கும் ஊட்டப்படுகிற அந்தப் புதிய சக்தியில் திரும்ப இடம் பெற்று, உற்பத்திப் பணியில் மீண்டும் பிரயோகிக் கப்பட வேண்டிய புதிய மூலதனமாகிறது.'' (பி. வேலாண்டு, முன் வந்தது, பக்கம் 31,32.) பிற விசித்திரங்களை கவனியாது விட்டுவிட்டு ஒன்றை மட்டும் குறிப்பிடலாம்: புதிய சக்தியில் திரும்ப இடம் பெறுவது ரொட்டியின் விலை அன்று, அதில் அடங்கிய இரத்த விருத்திப் பொருட்களே. மறு புறம், அந்தச் சக்தியின் மதிப்பில் திரும்ப இடம் பெறுபவை வாழ்வுச் சாதனங்கள் அல்ல, அவற்றின் மதிப்பே. வாழ்க்கையின் அதே அவசியப் பண்டங்கள், சரிபாதி விலைக்கு வாங்கப்பட்டாலும், அதே அளவு தசையாகவும் எலும்பாகவும் அமைகின்றன; அவை அதே அளவுச் சக்தியாக அமைகின்றனவே தவிர, அதே மதிப்புடைய சக்தியாக அல்ல. ''மதிப்பு,'' ''சக்தி'' இவை தொடர்பான குழப்படியோடு கூட நமது நூலாசிரியரின் கபடம் வாய்ந்த தெளிவின்மையும் சேர்ந்து முன்பே இருந்த மதிப்புகள் திரும்ப இடம் பெறுவதைச் சொல்லியே எப்படியாவது உபரி-மதிப்புக்கு விளக்கம் கூறுவதற்கான முயற்சி ஆகிறது — வீண் முயற்சி.

மதிப்புக்கான சமதையை உற்பத்தி செய்தவுடன், உதாரணமாக ஆறு மணி நேர உழைப்பைக் கொண்டு மூன்று ஷில்லிங் மதிப்பைச் சேர்த்தவுடன், உற்பத்தி நிகழ்முறை நிறுத்தப்படுவதாகக் கொள் வோம். இந்த மதிப்பு உற்பத்திப் பொருளின் மொத்த மதிப்பில் உற்பத்திச் சாதனங்களால் வரப்பெற்ற பகுதிக்கு மேற்பட்டதான மிகை ஆகும். இந்த நிகழ்முறையின் போது உருவாவதில் இது மட்டுமே அசல் மதிப்பு; உற்பத்திப் பொருளின் மதிப்பில் இது மட்டுமே இந்நிகழ்முறையால் படைக்கப்படும் பகுதி. இந்தப் புதிய மதிப்பானது உழைப்புச் சக்தியை வாங்குவதற்கு முதலாளி முன்னீடு செய்ததும், வாழ்க்கையின் அவசியப் பண்டங்களுக்காகத் தொழிலாளி செலவிட்டதுமான பணத்துக்கு ஈடாகுமே அன்றி வேறில்லை என்பதை நாம் மறக்கவில்லை. செலவிடப்பட்ட பணத்தைப் பொறுத்த வரை புதிய மதிப்பு ஒரு மறுவுற்பத்தியே; என்றாலும் உற்பத்திச் சாதனங்களின் மதிப்பு தோற்றத்திலான மறுவுற்பத்தியாகவே இருப்பது போல் அல்லாமல், இது உள்ள படியே ஒரு மறுவுற்பத்தி ஆகும். ஒரு மதிப்பை இன்னொரு மதிப்புக்குப் பதிலியாக்குவது இங்கே புதிய மதிப்பைப் படைப்பதன் மூலம் நடந்தேறுகிறது.

ஆயினும், உழைப்புச் சக்தியின் மதிப்புக்கான சமதையை மட்டுமே மறுவுற்பத்தி செய்து உற்பத்திப் பொருளில் இணைப் பதற்கு அவசியமான நேரத்தைத் தாண்டியும் உழைப்பு நிகழ்முறை நீடிக்கலாம் என்பது முன்சொன்னதிலிருந்து நமக்குத் தெரியும். மேற்சொன்ன காரியத்துக்குப் போதுமானதாகிய ஆறு மணி நேரத்துக்குப் பதிலாக, நிகழ்முறை பன்னிரண்டு மணி நேரத்துக்கு நீடிக்கலாம். எனவே, உழைப்புச் சக்தியின் செயல் தன் சொந்த மதிப்பை மறுவுற்பத்தி செய்து கொள்வது மட்டுமல்லாமல், அதற்கும் கூடுதலான மதிப்பையும் உற்பத்தி செய்கிறது. இந்த உபரி-மதிப்பு உற்பத்திப் பொருளின் மதிப்புக்கும், அந்த உற்பத்திப் பொருளை உண்டாக்குவதில் நுகரப்பட்ட அடிக்கூறுகளின்— அதாவது உற்பத்திச் சாதனங்கள், உழைப்புச் சக்தி ஆகியவற்றின்— மதிப்புக்கும் இடையிலான வேறுபாடாகும்.

உற்பத்திப் பொருளின் மதிப்பை உண்டாக்குவதில் உழைப்பு நிகழ்முறையின் பல்வேறு காரணிகளும் ஆற்றுகிற வெவ்வேறு பங்கு கள் பற்றிய நமது விளக்கத்தின் மூலம், மூலதனத்தின் வெவ்வேறு அடிக்கூறுகளுக்கு, அதன் மதிப்பைப் பெருக்கும் நிகழ்முறையில் ஒதுக்கப்படும் வெவ்வேறு பணிகளின் தன்மையை வெளிப்படுத்தி விட்டோம். உற்பத்திப் பொருளின் ஆக்கக் கூறுகளது மதிப்புகளின் மொத்தத்துக்கும் மேலே உற்பத்திப் பொருளினது மொத்த மதிப்பிலுள்ள உபரி, ஆரம்பத்தில் முன்னீடு செய்யப்பட்ட மூலதனத் துக்கும் மேலே பெருகிய மூலதனத்திலுள்ள உபரி ஆகும். ஆரம்ப மூலதனத்தின் மதிப்பு பணமென்ற நிலையிலிருந்து உழைப்பு

நிகழ்முறையின் பல்வேறு காரணிகளாகவும் மாற்றப்பட்ட போது அது மேற்கொண்ட வெவ்வேறு நிலவல் வடிவங்களே உற்பத்திச் சாதனங்களும், உழைப்புச் சக்தியும் ஆகும். அப்படியானால், உற்பத்திச் சாதனங்கள், அதாவது கச்சாப் பொருள், துணைப் பொருள், உழைப்புச் சாதனங்கள் ஆகியவை மூலதனத்தின் எந்தப் பகுதியைக் குறிக்கின்றனவோ அந்தப் பகுதி உற்பத்தி நிகழ்முறையில் அளவுவழியிலான மதிப்பு மாறுபாடு எதையும் அடைவதில்லை. எனவே, நான் அதை மூலதனத்தின் மாறாப் பகுதி, அல்லது, சுருக்கமாக **மாறா-மூலதனம்** [constant capital] என்று அழைக்கிறேன்.

மறு புறம், உற்பத்தி நிகழ்முறையில், உழைப்புச் சக்தி குறிக்கிற மூலதனப் பகுதியின் மதிப்பு மாறுபாடு அடையவே செய்கிறது. அது தன் சொந்த மதிப்பின் சமதையை மறுவுற்பத்தி செய்வது மட்டுமல்லாமல் ஒரு மிகையையும், அதாவது உபரி-மதிப்பையும் உற்பத்தி செய்கிறது; இந்த மிகை அல்லது உபரி-மதிப்பு மாறுபடக் கூடியது; சூழ்நிலைக்கேற்ப அதிகமாகவும் இருக்கலாம், குறைவாகவும் இருக்கலாம். மூலதனத்தின் இந்தப் பகுதி மாறாப் பருமன் என்ற நிலையிலிருந்து மாறும் பருமனாகத் தொடர்ந்து மாற்றப்படுகிறது. எனவே, நான் அதை மூலதனத்தின் மாறும் பகுதி, அல்லது சுருக்கமாக **மாறும்-மூலதனம்** [variable capital] என்று அழைக்கிறேன். உழைப்பு நிகழ்முறையின் கண்ணோட்டத்தில் முறையே புறவய, அகவயக் காரணிகளாக—உற்பத்திச் சாதனங்களாகவும், உழைப்புச் சக்தியாகவும்—அமைகிற அதே மூலதனக் கூறுகள் உபரி-மதிப்பைப் படைக்கும் நிகழ்முறையின் கண்ணோட்டத்தில் மாறா-மூலதனமாகவும் மாறும்-மூலதனமாகவும் அமைகின்றன.

மாறா-மூலதனத்துக்கு மேலே கொடுத்த இலக்கணத்தின் பொருள் அதன் கூறுகளில் மதிப்பு மாற்றமே ஏற்பட முடியாது என்பதன்று. பஞ்சின் விலை ஒரு நாள் இராத்தல் ஆறு பென்னி என்றும், மறு நாள் பஞ்சின் விளைச்சல் பொய்த்ததன் காரணமாய் இராத்தல் ஒரு ஷில்லிங் என்றும் வைத்துக் கொள்வோம். ஆறு பென்னிக்கு வாங்கப்பட்டு மதிப்புயர்வுக்குப் பின்னர் வேலைக்குப் பயன்படுத்தப்படும் ஒவ்வொரு இராத்தல் பஞ்சும் உற்பத்திப் பொருளுக்கு ஒரு ஷில்லிங் மதிப்பை பெயர்க்கிறது; மதிப்புயர்வுக்கு முன்னரே நூற்கப்பட்டதும், நூலாகச் சந்தையில் சுற்றோட்டத்தில் இருக்கக் கூடியதுமான பஞ்சும் இவ்வாறே உற்பத்திப் பொருளுக்குத் தன் ஆரம்ப மதிப்பைப் போல் இரு மடங்கைப் பெயர்க்கிறது. ஆயினும், இந்த மதிப்பு மாற்றங்களுக்கும் நூற்பதாலேயே பஞ்சின் மதிப்போடு சேர்க்கப்படும் கூடுதல் அல்லது உபரி-மதிப்புக்கும் சம்பந்தமில்லை என்பது தெளிவு. பழைய பஞ்சு நூற்கப்படவே இல்லையானால், மதிப்புயர்வுக்குப் பின்னர் அதனை இராத்தல் ஆறு பென்னி என்பதற்கு பதில் ஒரு ஷில்லிங்குக்குத் திரும்ப விற்றிருக்க முடியும்.

மேலும் பஞ்சு எவ்வளவு குறைவான வினைமுறைகளுக்கு ஆட்பட்டுள்ளதோ அவ்வளவு நிச்சயமானது இந்த விளைவு. எனவே, இப்படிப்பட்ட திடீர் மதிப்பு மாற்றங்கள் சம்பவிக்கும் போது, எந்தப் பொருளில் இயன்ற வரை மிகக் குறைந்த அளவு உழைப்பு செலவிடப்பட்டுள்ளதோ அந்தப் பொருளில் ஊக வாணிபம் செய்வதை, எனவே துணியைக் காட்டிலும் நூலில், நூலைக் காட்டிலும் பஞ்சில் ஊக வாணிபம் செய்வதை ஊக வணிகர்கள் வழக்கமாகக் கொண்டிருப்பதைக் காண்கிறோம். நாம் பார்த்துக் கொண்டிருக்கும் உதாரணத்தில் மதிப்பு மாற்றம் உருவாவது, பஞ்சு உற்பத்திச் சாதனத்தின பாத்திரத்தை வகிப்பதும், எனவே மாறா-மூலதனமாகச் செயல்படுவதுமான நிகழ்முறையிலன்று, அந்தப் பஞ்சே உற்பத்தி செய்யப்படும் நிகழ்முறையில்தான். சரக்கின் மதிப்பு அதில் அடங்கியுள்ள உழைப்பின் அளவால் நிர்ணயிக்கப்படுவது மெய்தான்; ஆனால் இந்த அளவே கூட சமூக நிலைமைகளால் வரம்பிடப்படுகிறது. எந்தச் சரக்கின் உற்பத்திக்கும் சமூக வழியில் அவசியமான நேரம் மாறினால்—குறிப்பிட்ட எடையுள்ள பஞ்சு குறிக்கிற உழைப்பு அறுவடை மோசமாயிருக்கும் போது அதிகமாகிறது, அறுவடை நன்றாயிருக்கும் போது குறைகிறது—அதே வகையைச் சேர்ந்தவையாய் முன்பேயிருக்கும் எல்லாச் சரக்குகளும் பாதிக்கப்படுகின்றன; ஏனெனில் அவை ஒரே இனத்தைச் சேர்ந்த தனி உறுப்புகளாகச் சொல்லத் தக்கவையாய் இருக்கின்றன.[202] எந்தக் குறிப்பிட்ட நேரத்திலும் அவற்றின் மதிப்பு சமூக வழியில் அவசியமான உழைப்பால், அதாவது அப்போது நிலவுகிற சமூக நிலைமைகளில் அவற்றின் உற்பத்திக்கு அவசியமான உழைப்பால் அளவிடப்படுகிறது.

கச்சாப் பொருளின் மதிப்பு மாறலாம் என்பது போலவே, நிகழ்முறையில் பிரயோகிக்கப்படும் உழைப்புச் சாதனங்களின், அதாவது இயந்திர சாதனம் போன்றவற்றின் மதிப்பும் மாறலாம்; ஆதலால் அவற்றிலிருந்து உற்பத்திப் பொருளுக்குப் பெயர்க்கப்படும் மதிப்புப் பகுதியும் மாறலாம். ஒரு புதிய கண்டுபிடிப்பின் பயனாய் குறிப்பிட்ட வகையைச் சேர்ந்த இயந்திர சாதனம் முன்னைவிடக் குறைந்த உழைப்புச் செலவீட்டால் உற்பத்தி செய்யப்படலாம் என்றால், அதிகமாகவோ குறைவாகவோ பழைய இயந்திர சாதனத்துக்கு மதிப்பிறங்கி விடலாம். இதனால் அந்த அளவுக்குக் குறைந்த மதிப்பையே அது உற்பத்திப் பொருளுக்குப் பெயர்க்கிறது. ஆனால் இங்கேயும், மதிப்பு மாற்றம் உருவாவது இயந்திரம் உற்பத்திச்

---

202 "சரியாகச் சொன்னால், தனியொரு வகையைச் சேர்ந்த எல்லா உற்பத்திப் பொருட்களும் ஒரே திரளாய் அமைகின்றன; அவற்றின் விலை குறிப்பிட்ட சூழ்நிலைகளைக் கருதாமல் பொதுவாக நிர்ணயிக்கப்படுகிறது." (லெ. திரொஸ்னே, முன் வந்தது, பக்கம் 893.)

சாதனமாகச் செயல்படுகிற நிகழ்முறைக்கு வெளியேதான். இந்த நிகழ்முறையில் ஈடுபடுகிற இயந்திரம் நிகழ்முறையைச் சாராத நிலையில் தனக்கிருப்பதை விடக் கூடுதலான மதிப்பை உற்பத்திப் பொருளுக்குப் பெயர்க்க முடியாது.

உற்பத்திச் சாதனங்கள் உழைப்பு நிகழ்முறையில் பங்கு வகிக்கத் தொடங்கிய பின்னரும் கூட அவற்றின் மதிப்பில் ஏற்படும் மாற்றம் மாறா-மூலதனம் என்ற அவற்றின் தன்மையை மாற்றி விடுவதில்லை என்பது போலவே, மாறும்-மூலதனத்துடனான மாறா-மூலதனத்தின் விகிதாசாரத்தில் ஏற்படும் மாற்றமும் மூலதனத்தின் இந்த இரு வகைகளுக்கும் உரிய அதனதன் பணிகளைப் பாதிப்பதில்லை. முன்னதாகச் சிறு மதிப்புள்ள பத்து கருவிகளைப் பயன்படுத்தி பத்து பேர் ஒப்பளவில் சிறு அளவிலான கச்சாப் பொருளை செய்பொருளாக்கிய இடத்தில், இப்போது ஒருவர் விலையுயர்ந்த ஓர் இயந்திரத்தின் துணை கொண்டு முன் போல் நூறு மடங்கு கச்சாப் பொருளை செய்பொருளாக்கலாம் என்னும் அளவுக்கு உழைப்பு நிகழ்முறையின் தொழில் நுட்ப நிலைமைகள் புரட்சிகரமாக மாற்றப்படலாம். இந்நிலையில், பயன்படுத்தப்படும் உற்பத்திச் சாதனங்களின் மொத்த மதிப்பு குறிக்கிற மாறா-மூலதனத்தில் பிரம்மாண்டமான அதிகரிப்பும், அதே நேரத்தில் உழைப்புச் சக்தியில் முதலீடு செய்யப்படும் மாறும்-மூலதனத்தில் பெரும் குறைப்பும் நிகழக் காண்கிறோம். ஆயினும், இப்படியொரு புரட்சி மாறா-மூலதனத்திற்கும் மாறும்-மூலதனத்திற்கும் இடையிலான அளவு வழிப்பட்ட உறவையே, அல்லது மொத்த மூலதனம் அதன் மாறாக் கூறாகவும் மாறும் கூறாகவும் பிரிக்கப்படுகிற விகிதாசாரங்களையே மாற்றுகிறது; இரண்டுக்கும் இடையிலான அடிப்படை வேறுபாடு இதனால் சிறிதும் பாதிக்கப்படுவதில்லை.

## அத்தியாயம் IX

# உபரி-மதிப்பு வீதம்

### பிரிவு 1.—உழைப்புச் சக்தி மீதான சுரண்டல்-கடுமை

முன்னீடு செய்யப்படும் மூலதனமான C என்பதால் உற்பத்தி நிகழ்முறையில் உண்டாக்கப்படும் உபரி-மதிப்பு, அல்லது வேறுவித மாகச் சொன்னால் மூலதனம் Cஇனது மதிப்பின் தற்பெருக்கம் முதலில் ஓர் உபரியாக—உற்பத்திப் பொருளின் மதிப்பில் அதன் ஆக்கக் கூறுகளின் மதிப்புக்கு மேலுள்ள தொகையாக—பரிசீல னைக்கு வருகிறது.

மூலதனம் C உள்ளடக்கக் கூறுகளால் ஆனது. ஒன்று உற்பத் திச் சாதனங்களில் செலவாகும் பணத்தொகை c; மற்றது உழைப் புச் சக்திக்காகச் செலவிடப்படும் பணத்தொகை v; c என்பது மாறா-மூலதனமாகி விட்ட பகுதியையும் v என்பது மாறும்-மூல தனமாகி விட்ட பகுதியையும் குறிக்கின்றன. அப்படியானால் முதலில், C=c+v; உதாரணமாக முன்னீடு செய்யப்படும் மூலதனம் £500 என்றால், அதன் அடக்கக் கூறுகள் £500 = மாறா £410+மாறும் £90 என்பதாயிருக்கலாம். உற்பத்தி நிகழ்முறை முடிவடையும் போது, (c+v)+s என்ற மதிப்புடைய சரக்கு நமக்குக் கிடைக்கிறது; இதில் s என்பது உபரி-மதிப்பாகும்; அல்லது நமது முந்தைய கணக்கை எடுத்துக் கொள்வதானால் இந்தச் சரக்கின் மதிப்பு (மாறா £410+ மாறும் £90)+உபரி £90 என்பதாயிருக் கலாம். ஆரம்ப மூலதனம் இப்போது C என்பதிலிருந்து C′ ஆக, £500இலிருந்து £590ஆக மாறியிருக்கிறது. வித்தியாசம் s ஆகும், அதாவது £90 என்ற உபரி-மதிப்பாகும். உற்பத்திப் பொருளின் ஆக்கக் கூறுகளது மதிப்பு முன்னீடு செய்யப்பட்ட மூலதனத்தின் மதிப்புக்குச் சமமாகும் என்பதால், உற்பத்திப் பொருளின் ஆக்கக் கூறுகளது மதிப்புக்கு மேலே உற்பத்திப் பொருளின் மதிப்பிலுள்ள மிகையானது முன்னீடு செய்யப்பட்ட மூலதனத்தின் பெருக்கத்துக்கு அல்லது உற்பத்தி செய்யப்பட்ட உபரி-மதிப்புக்குச் சமமாகும் என்று சொல்வது கூறியது கூறலே.

என்றாலும், இந்தக் கூறியது கூறலை இன்னும் சற்று நெருங்கிச் சென்று பரிசீலிக்க வேண்டும். உற்பத்திப் பொருளின் மதிப்பு, உற்பத்தி நிகழ்முறையில் நுகரப்படும் அதன் ஆக்கக் கூறுகளின் மதிப்பு ஆகிய இரண்டுமே ஒப்பு நோக்கப்படுகின்றன. உழைப்புச் சாதனங்களால் ஆனதாகிய அந்த மாறா-மூலதனப் பகுதி தன் மதிப்பில் ஒரு துணுக்கையே உற்பத்திப் பொருளுக்குப் பெயர்ப்பதும், அதே போதில் அந்த மதிப்பின் மீதம் அந்தச் சாதனங்களில் தொடர்ந்து உறைவதும் எப்படி என்பதைப் பார்த்து விட்டோம். இந்த மீதமானது மதிப்பை உண்டாக்குவதில் எந்தப் பங்கும் வகிப்பதில்லை என்பதால் இப்போதைக்கு அதை ஒதுக்கி வைத்து விடலாம். அதனைக் கணக்கில் சேர்ப்பதால் எந்த வேறுபாடும் வராது. எடுத்துக்காட்டாக, நமது முந்தைய உதாரணத்தை எடுத்துக் கொண்டால், c=£410; இந்தத் தொகை கச்சாப் பொருளின் மதிப்பான £312, துணைப் பொருளின் மதிப்பான £44, நிகழ்முறையில் இயந்திர சாதனத் தேய்மானத்தின் மதிப்பு £54 ஆகியவற்றைக் கொண்டிருப்பதாகக் கொள்வோம். ஈடுபடுத்தப்படும் இயந்திர சாதனத்தின் மொத்த மதிப்பு £1,054 என்றும் கொள்வோம். அப்படியானால், இத்தொகையில் இயந்திர சாதனம் நிகழ்முறையின் போது தேய்மானத்தால் இழக்கிற £54 என்ற தொகையை மட்டுமே உற்பத்திப் பொருளை செய்து கொடுக்கும் காரியத்துக்காக முன்னீடு செய்யப்படுவதென்று கணக்கிடுகிறோம். ஏனெனில், இதையே அவை உற்பத்திப் பொருளிடம் சேர்ப்பிக்கின்றன. இப்போது இன்னமும் இயந்திர சாதனத்தில் நீடிக்கிற மீதமுள்ள £1,000உம் உற்பத்திப் பொருளுக்குப் பெயர்க்கப்படுவதாகக் கணக்கிட்டால், முன்னீடு செய்யப்பட்ட மதிப்பின் பகுதியாக அதைக் கணக்கிடவும், இவ்வாறு நமது கணக்கீட்டின் இரு பக்கங்களிலும் அதற்கு இடமளிக்கவும் வேண்டும்.[203] இவ்விதம் நமக்கு ஒரு பக்கத்தில் £1,500உம் மறு பக்கத்தில் £1,590உம் கிடைக்கும். இவ்விரு தொகைகளின் வேறுபாடு, அதாவது உபரி-மதிப்பு இப்போதும் £90 ஆகவே இருக்கும். எனவே, இந்தப் புத்தகம் முழுவதிலும், மதிப்பின் உற்பத்திக்காக முன்னீடு செய்யப்படும் மாறா-மூலதனம் என்பதன் மூலம் நாம் எப்போதுமே—சந்தர்ப்பம் இதற்கு ஒவ்வாததாக இருந்தாலன்னியில்—நிகழ்முறையில் உள்ளபடியே நுகரப்படும் உற்பத்திச் சாதனங்களின் மதிப்பையே, இந்த மதிப்பை மட்டுமே குறிப்பிடுகிறோம்.

இது இவ்வாறிருக்க $C=c+v$ என்ற சூத்திரத்துக்குத் திரும்புவோம்; C என்பது C′ ஆகி, இச்சூத்திரம் $C'=(c+v)+s$ என்று

[203] ''ஈடுபடுத்தப்படும் நிலை-மூலதனத்தின் மதிப்பை முன்னீடுகளின் பகுதியாகக் கணக்கிட்டால் ஆண்டு இறுதியில் இப்படிப்பட்ட மூலதனத்தின் மீதமுள்ள மதிப்பை வருடாந்தர வரவுகளின் பகுதியாகக் கணக்கிட வேண்டும்.'' (மால்தஸ், ''அரசியல் பொருளாதாரக் கோட்பாடுகள்'' இரண்டாம் பதிப்பு, லண்டன், 1836, பக்கம் 269.)

மாற்றப்படுவதைப் பார்த்தோம். மாறா-மூலதனத்தின் மதிப்பு உற்பத்திப் பொருளுக்குப் பெயர்க்கப்பட்டு, அவ்வுற்பத்திப் பொருளில் திரும்ப இடம் பெறுவதோடு சரி என்பது நமக்குத் தெரியும். எனவே, நிகழ்முறையில் மெய்யாகவே படைக்கப்படும் புதிய மதிப்பு, உற்பத்தி செய்யப்படும் மதிப்பு, அல்லது மதிப்பு-உற்பத்தி [value-product] என்பதும் உற்பத்திப் பொருளின் மதிப்பும் ஒன்றல்ல; எடுத்த எடுப்பில் தோன்றுவது போல், அது (c+v)+s அல்லது மாறா £410+ மாறும் £90+ உபரி £90 என்பதல்ல; v+s அல்லது மாறும் £90+உபரி £90 என்பதுதான்; £590 அல்ல, £180 தான். c=o என்றிருந்தால்—அல்லது, வேறு விதமாகச் சொன்னால், கச்சாப் பொருளானாலும் துணைப் பொருளானாலும் உழைப்புச் சாதனங்களானாலும், முந்தைய உழைப்பால் ஆக்கப்பட்ட உற்பத்திச் சாதனங்களே இல்லாமல், உழைப்புச் சக்தியையும் இயற்கையால் வழங்கப்படும் மூலப் பொருட்களையும் மட்டுமே ஈடுபடுத்தி முதலாளி காரியமாற்ற இயலக் கூடிய தொழிற்கிளைகள் இருக்கும் பட்சத்தில்—உற்பத்திப் பொருளுக்குப் பெயர்க்க மாறா-மூலதனம் ஏதுமிருக்காது. உற்பத்திப் பொருளுடைய மதிப்பின் இந்த ஆக்கக் கூறு, அதாவது நமது உதாரணத்தில் £410 நீக்கப்பட்டு விடும்; ஆனால் படைக்கப்பட்ட புதிய மதிப்பின் அளவு அல்லது உற்பத்தி செய்யப்பட்ட மதிப்பான £180 என்ற தொகை—உபரி-மதிப்பான £90 இதில் அடங்கியுள்ளது—கற்பனைக்கெட்டக் கூடிய மிக உயர்ந்த மதிப்பை C குறித்தால் எவ்வளவு பெரியதாயிருக்குமோ அவ்வளவு பெரிதாகவே இருந்து வரும். C=(o+v)=v அல்லது பெருகிய மூலதனமான C′=v+s என்று பெறப்படும். எனவே, முன்போலவே, C′−C=s. மறுபுறம், s=o என்றானால், அதாவது மாறும்-மூலதனத்தின் வடிவில் முன்னீடு செய்யப்படும் மதிப்புக்குரியதான உழைப்புச் சக்தி அதன் சமதையை மட்டுமே உற்பத்தி செய்வதாக இருந்தால், C=c+v அல்லது உற்பத்திப் பொருளின் மதிப்பான C′=(c+v)+o அதாவது C=C′ என்றாகி விடும். முன்னீடு செய்யப்பட்ட மூலதனத்தின் மதிப்பு இந்நிலையில் பெருகியிருக்காது.

உபரி-மதிப்பு என்பது vஇன் மதிப்பில்—உழைப்புச் சக்தியாக மாற்றப்படும் மூலதனப் பகுதியின் மதிப்பில்—ஏற்படும் மாறுபாட்டின் விளைவேதான் என்பதை முன்சொன்னதிலிருந்து அறியலாம். ஆதலால் v+s=v+v′ (அதாவது v+vஇன் கூடுதல்). மூலதனத்தின் மாறும் பகுதி அதிகரிப்பதன் விளைவாக முன்னீட்டு மூலதனத்தின் மொத்தத் தொகையும் அதிகரிக்கிறது என்ற நிலைமைதான் v மட்டுமே மாறுகிறது என்ற உண்மையையும், அந்த மாறுபாட்டுக்குரிய நிலைமைகளையும் கண்ணிற்படாமல் மறைக்கிறது. இந்த மொத்தத் தொகை ஆரம்பத்தில் £500ஆக இருந்தது; பிறகு £590 ஆகிறது. எனவே, நமது ஆய்வு பிழையற்ற முடிவுகளுக்கு இட்டுச்

செல்ல வேண்டுமானால், உற்பத்திப் பொருளின் மதிப்பில் மாறா-மூலதனத்தை மட்டும் குறிக்கிற பகுதியைப் பிரித்தகற்றி விட வேண்டும்; ஆதலால் மாறா-மூலதனத்தை பூஜ்யமென்று கொள்ள வேண்டும்; அதாவது c=0 எனக் கொள்ள வேண்டும். கூட்டல், கழித்தல் குறிகளால் மட்டுமே ஒன்றுக்கொன்று தொடர்புபடுத்தப்படும் மாறாப் பருமனுடனும் மாறும் பருமனுடனும் இயங்கும் போதெல்லாம் பிரயோகிக்கப்படும் கணிதவியல் விதியின் பிரயோகமே இது.

மாறும்-மூலதனத்தின் ஆரம்ப வடிவம் மேலுமோர் இடர்ப்பாட்டுக்குக் காரணமாகிறது. நமது உதாரணத்தில், C′=மாறா £410+மாறும்£90+உபரி£90; ஆனால் £90 குறிப்பிட்ட அளவாகும், எனவே மாறா அளவாகும்; ஆகவே, அதை மாறும் பருமனென்று கருதுவது அபத்தமாகத் தோன்றுகிறது. ஆனால் உண்மையில், மாறும் £90 என்ற பதம் இங்கே இந்த மதிப்பு ஒரு நிகழ்முறைக்கு உட்படுகிறது என்பதைக் காட்டுவதற்கான குறியே. உழைப்புச் சக்தியை வாங்குவதில் முதலீடு செய்யப்படும் மூலதனப் பகுதி பொருள்வடிவாக்கப்பட்ட உழைப்பின் திட்டமான அளவே, வாங்கப்பட்ட உழைப்புச் சக்தியின் மதிப்பைப் போல் மாறா மதிப்பே. ஆனால் உற்பத்தி நிகழ்முறையில் £90இன் இடத்தை செயல்படும் உழைப்புச் சக்தி எடுத்துக் கொள்கிறது; உயிரற்ற உழைப்பின் இடத்துக்கு உயிருள்ள உழைப்பு, தேங்கி நிற்கிற ஒன்றின் இடத்துக்குப் பாய்ந்தோடுகிற ஒன்று, மாறாத ஒன்றின் இடத்துக்கு மாறுகிற ஒன்று வருகிறது. இதன் விளைவு: vஇன் மறுவுற்பத்தி+vஇன் கூடுதல். அப்படியானால், முதலாளித்துவப் பொருளுற்பத்தியின் கண்ணோட்டத்தில் நிகழ்முறை முழுவதும் எப்படிக் காட்சியளிக்கிறது என்றால்: உழைப்புச் சக்தியாக மாற்றப்படுகிற மதிப்பு—ஆரம்பத்தில் மாறா மதிப்பாய் இருக்கிற இது—தன்னியல்பாய் மாறி விடும் நிகழ்வாகக் காட்சியளிக்கிறது. இந்த நிகழ்முறை, இதன் விளைவு ஆகிய இரண்டும் இந்த மதிப்பிலிருந்து விளைவதாகத் தோன்றுகிறது. எனவே, "£90 மாறும்-மூலதனம்" அல்லது "இந்த அளவு தற்பெருக்கமடையும் மதிப்பு" என்பது போன்ற தெரிவிப்புகள் முரண்பட்டவையாகத் தோன்றுகின்றன என்றால், இதற்கு ஒரே காரணம் முதலாளித்துவப் பொருளுற்பத்தியில் உள்ளார்ந்துள்ள ஒரு முரண்பாட்டை அவை வெளிக் கொணர்கின்றன என்பதே.

மாறா-மூலதனத்தைப் பூஜ்யமெனக் கொள்வது முதல் பார்வைக்கு விசித்திரமாய்த் தோன்றுகிறது. ஆனால், நாம் ஒவ்வொரு நாளும் இதைத்தான் செய்கிறோம். உதாரணமாக, பஞ்சுத் தொழிலிலிருந்து இங்கிலாந்து அடையும் இலாபங்களின் அளவைக் கணக்கிட விரும்பினால், முதலில் அமெரிக்க ஐக்கிய நாடுகளுக்கும், இந்தியாவுக்கும், எகிப்துக்கும், ஏனைய நாடுகளுக்கும் பஞ்சுக்கு விலையாகத் தரப்பட்ட தொகைகளைக் கழிக்கிறோம்; அதாவது,

உற்பத்திப் பொருளின் மதிப்பில் திரும்ப இடம் பெற மட்டுமே செய்கிற மூலதன-மதிப்பு=0 எனக் கொள்கிறோம்.

உபரி-மதிப்பு நேரடியாக எதிலிருந்து பிறக்கிறதோ, எதன் மதிப்பு மாற்றத்தை அது குறிக்கிறதோ, அந்த மூலதனப் பகுதியுடனான உபரி-மதிப்பு விகிதம் மட்டுமல்லாமல், முன்னீடு செய்யப்பட்ட மூலதனத்தின் மொத்தத் தொகையுடனான உபரி-மதிப்பு விகிதமும் பொருளாதார நோக்கில் பெரும் முக்கியத்துவமுடையதாகும் என்பது மெய்தான். எனவே, இந்த விகிதத்தை மூன்றாம் பாகத்தில் முழுமையாக ஆராய்வோம். மூலதனத்தின் ஒரு பகுதி உழைப்புச் சக்தியாக மாறி, தன் மதிப்பைப் பெருக்கிக் கொள்ள இயலும் பொருட்டு, இன்னொரு பகுதி உற்பத்திச் சாதனங்களாக மாறுவது அவசியம். மாறும்-மூலதனம் தன் பணியை ஆற்றும் பொருட்டு, மாறா-மூலதனம் முறையான விகிதாசாரத்தில் முன்னீடு செய்யப்பட வேண்டும்; இந்த விகிதாசாரம் ஒவ்வொரு உழைப்பு நிகழ்முறைக்கும் உரிய தனித் தொழில் நுட்ப நிலைமைகளால் நிர்ணயமாகிறது. இரசாயன நிகழ்முறைக்கு வாலைகளும் ஏனைய கொள்கலன்களும் அவசியம்தான். ஆனால் இரசாயன அறிஞர் தமது ஆய்வினால் வந்தடையும் முடிவில் அவற்றைக் குறிப்பிட வேண்டுமென்ற கட்டாயமில்லை. உற்பத்திச் சாதனங்களை மதிப்பின் படைப்புடனும் மதிப்பின் அளவு மாறுபாட்டுடனும் அவற்றுக்குள்ள உறவைக் கொண்டு மட்டும் பார்த்தோமானால், மதிப்பின் படைப்பாளியான உழைப்புச் சக்தி தன்னை இணைத்து கொள்வதற்கான பொருளாகவே அவை தோன்றுகின்றன. இந்தப் பொருளின் இயல்புக்கோ மதிப்புக்கோ முக்கியத்துவமில்லை. வேண்டியதெல்லாம், உற்பத்தி நிகழ்முறையில் செலவாகும் உழைப்பைக் கிரகித்துக் கொள்வதற்குப் போதுமான அளவில் இப்பொருள் வழங்கப்படுவதே. இப்படி வழங்கப்படும் அளவு குறிப்பிட்டதாய் இருக்கும் வரை, இப்பொருளின் மதிப்பு உயர்ந்தாலும் சரி, குறைந்தாலும் சரி, நிலமும் கடலும் போல் தன்னளவில் மதிப்பற்றதாக இருந்தாலும் சரி, மதிப்பின் படைப்போ, மதிப்பின் அளவில் ஏற்படும் மாறுபாடோ அதனால் எவ்விதத்திலும் பாதிக்கப் படுவதில்லை.[204]

இந்நிலையில் முதலாவதாக மாறா-மூலதனத்தை பூஜ்யமெனக் கொள்வோம். ஆதலால் முன்னீடு செய்யப்படும் மூலதனம் c+v என்பதிலிருந்து v ஆகக் குறைகிறது; (c+v)+s என்ற உற்பத்திப்

[204] தெளிவாகத் தெரிவதையே லுக்ரீஷியஸ் கூறுகிறார்: ''nil posse creari de nihilo,'' ஒன்றுமே இல்லாத நிலையில் எதையுமே படைக்க முடியாது. மதிப்பின் படைப்பு என்பது உழைப்புச் சக்தியை உழைப்பாக மாற்றுவதே. உழைப்புச் சக்தி என்பதோ ஊட்டமளிக்கும் பொருளின் மூலம் மனித உயிரமைப்புக்குப் பெயர்க்கப்படும் ஆற்றலே.

பண்ட மதிப்புக்கு பதில் இப்போது (v+s) என்ற மதிப்பு உற்பத்தியாவதாகக் கொள்கிறோம். உற்பத்தி செய்யப்படும் புதிய மதிப்பு £180 என்றாகிறது; ஆகவே இந்தத் தொகை நிகழ் முறையின் போது செலவிடப்பட்ட முழு உழைப்பையும் குறிக்கிறது; மாறும் மூலதனத்தின் மதிப்பான £90ஐ இதிலிருந்து கழித்தால் எஞ்சுகிற £90தான் உபரி-மதிப்பாகிறது. £90 அல்லது s என்ற இந்தத் தொகை உற்பத்தி செய்யப்பட்ட உபரி-மதிப்பின் அறுதி யான அளவைத் தெரிவிக்கிறது. உற்பத்தி செய்யப்பட்ட ஒப்பீட்டு அளவு அல்லது மாறும்-மூலதனத்தின் அதிகரிப்புச் சதவீதம் மாறும்-மூலதனத்துடன் உபரி-மதிப்புக்குள்ள விகிதத்தால் நிர்ணயிக்கப் படுவது தெளிவு; அதாவது அது $\frac{s}{v}$ என்பதால் தெரிவிக்கப்படு கிறது. நமது உதாரணத்தில் இந்த விகிதம் $\frac{90}{90}$ ஆகும்; இது 100% அதிகரிப்பைக் குறிக்கிறது. மாறும்-மூலதனத்தின் மதிப்பில் ஏற்படும் இந்த ஒப்பீட்டு அதிகரிப்பை அல்லது உபரி-மதிப்பின் ஒப்பீட்டுப் பருமனை ''உபரி-மதிப்பு வீதம்'' [rate of surplus-value] என்று அழைக்கிறேன்.[205]

உழைப்பாளி உழைப்பு நிகழ்முறையில் ஒரு பகுதியின் போது, தன் உழைப்புச் சக்தியின் மதிப்பை மட்டுமே, அதாவது தன் வாழ்வுச் சாதனங்களின் மதிப்பை மட்டுமே உற்பத்தி செய்கிறார் என்று பார்த்தோம். இப்போது, அவரது வேலை சமுதாய உழைப்புப் பிரிவினையை அடிப்படையாகக் கொண்ட ஓர் அமைப்பின் அங்கமே என்பதால், அவர் உள்ளபடியே தான் நுகர்கிற அவசியப் பண்டங்களை தானே நேரடியாக உற்பத்தி செய்வதில்லை; பதிலுக்கு அவர் அந்த அவசியப் பண்டங்களின் அல்லது அவற்றை வாங்குவதற்கான பணத்தின் மதிப்புக்குச் சமமான மதிப்புடைய குறிப்பிட்ட ஒரு சரக்கை, உதாரணமாக நூலை உற்பத்தி செய்கிறார். அவரது ஒரு நாள் உழைப்பில் இந்தக் காரியத்துக்காகச் செலவாகும் பகுதி சராசரியாக அவருக்கு அன் றாடம் தேவைப்படும் அவசியப் பண்டங்களின் மதிப்புக்கேற்ப அல்லது, அதையே மாற்றிச் சொன்னால், அவற்றை உற்பத்தி செய்வதற்கு சராசரியாகத் தேவைப்படும் உழைப்பு நேரத்துக்கேற்ப அதிகமாகவோ குறைவாகவோ இருக்கும். அந்த அவசியப் பண்டங் களின் மதிப்பு சராசரியாக ஆறு மணி நேர உழைப்பின் செல வீட்டைக் குறித்தால், தொழிலாளி அந்த மதிப்பை உற்பத்தி செய்ய சராசரியாக ஆறு மணி நேரம் உழைக்க வேண்டும். முதலாளிக்காக வேலை செய்வதற்குப் பதில் அவர் தனக்காகவே வேலை செய்து

205 ''இலாப வீதம்,'' ''வட்டி வீதம்'' என்பவற்றை ஆங்கிலேயர் எப்படிப் பயன்படுத்துகிறார்களோ அதே போல். உபரி-மதிப்பின் விதிகளைத் தெரிந்து கொண்டால் இலாப வீதம் என்பதில் மர்மமேதுமில்லை என்பதை மூன்றாம் பாகத்தில் பார்ப்போம். முன்னதற்குப் பின்னதும், பின்னதற்கு முன்னதுமாக மாற்றினால் இரண்டையுமே புரிந்து கொள்ள முடியாது.

கொண்டால், மற்றவை சமமாயிருக்க, தன் உழைப்புச் சக்தியின் மதிப்பை உற்பத்தி செய்யும் பொருட்டும், அதன் மூலம் தனது பராமரிப்பு அல்லது தொடர்ச்சியான மறுவுற்பத்திக்கு அவசியமான வாழ்வுச் சாதனங்களை ஈட்டும் பொருட்டும் அதே மணி நேரத்துக்கு அவர் உழைக்க வேண்டியிருக்கும். ஆனால், அவர் தனது ஒரு நாள் உழைப்பில் தனது உழைப்புச் சக்தியின் மதிப்பை, உதாரணமாக மூன்று ஷில்லிங்கை உற்பத்தி செய்கிற காலப் பகுதியின் போது, முதலாளியால் ஏற்கெனவே முன்னீடு செய்யப்பட்ட[206] அவரது உழைப்புச் சக்தியின் மதிப்புக்கான ஒரு சமதையையே உற்பத்தி செய்கிறார் என்பதை முன்பே கண்டோம். படைக்கப்படும் புதிய மதிப்பு முன்னீடு செய்யப்பட்ட மாறும்-மூலதனத்தை மாற்றீடு செய்வதோடு சரி. இக்காரணத்தால் மூன்று ஷில்லிங் என்ற புதிய மதிப்பின் உற்பத்தி வெறும் மறுவுற்பத்தியின் சாயலைப் பெறு கிறது. ஆகவே, வேலை-நாளில் இந்த மறுவுற்பத்தி நடைபெறும் பகுதியை ''அவசிய'' உழைப்பு நேரம் என்றும், அந்த நேரத்தில் செலவிடப்படும் உழைப்பை ''அவசிய'' உழைப்பு [''necessary'' labour] என்றும் அழைக்கிறேன்.[207] தொழிலாளியைப் பொறுத்த வரை அவசியம் என்பது எப்படியென்றால், இது அவரது உழைப்பின் குறிப்பிட்ட சமூக வடிவத்தைச் சார்ந்ததன்று; மூல தனத்தையும் முதலாளிகளின் உலகையும் பொறுத்த வரை அவசிய மென்பது எப்படியென்றால், தொழிலாளி இல்லையேல் முதலாளி யும் இல்லை.

தொழிலாளி ஆனவர் உழைப்பு நிகழ்முறையின் இரண்டாவது காலப் பகுதியிலும்—அவரது உழைப்பு அவசிய-உழைப்பாயிராத அப்பகுதியிலும்—உழைக்கிறார், உழைப்புச் சக்தியைச் செல விடுகிறார் என்பது மெய்தான்; ஆனால், அவரது உழைப்பு முன் போல் அவசிய-உழைப்பாயிராததால் தனக்கென அவர் மதிப் பேதும் படைப்பதில்லை. அவர் உபரி-மதிப்பைப் படைக்கிறார்; முதலாளியைப் பொறுத்த வரை, இவ்வுபரி-மதிப்பு ஒன்றுமே

---

206 [3ஆம் ஜெர்மன் பதிப்பில் எங்கெல்ஸ் குறிப்பு.— நடப்பிலுள்ள பொருளா தாரச் சொல்லாட்சியை நூலாசிரியர் இங்கே கையாள்கிறார். உண்மையில் தொழிலாளி தான் முதலாளிக்கு ''முன்னீடு செய்கிறார்.'' முதலாளி தொழிலாளிக்கு ''முன்னீடு செய்வது'' இல்லை என்று பக்கம் 182இல் (இந்தப் பதிப்பு, பக்கம் 240) தெளிவாக்கப் பட்டது நினைவிருக்கும்.]

207 இந்த நூலில் இது வரை, குறிப்பிட்ட சமுதாய நிலைமைகளில் எந்தச் சரக்கின் உற்பத்திக்கும் அவசியமான நேரத்தைக் குறிப்பிட ''அவசிய உழைப்பு நேரம்'' என்ற பதத்தை நாம் பயன்படுத்தியிருக்கிறோம். இனிமேல், குறிப்பிட்ட ஒரு சரக்கான உழைப்புச் சக்தியின் உற்பத்திக்கு அவசியமான நேரத்தைக் குறிப்பிடவும் அதைப் பயன்படுத்துகிறோம். ஒரே கலைச் சொல்லை வெவ்வேறு அர்த்தங்களில் உபயோகிப் பது நல்லதன்று; ஆனால் எந்த விஞ்ஞானத்திலும் இதை முற்றிலும் தவிர்க்க முடியாது. எடுத்துக்காட்டாக, கணிதவியலின் உயர்கிளைகளைக் கீழ்க்கிளைகளுடன் ஒப்பு நோக்கலாம்.

இல்லாமல் படைக்கப்படும் படைப்பின் அருமைபெருமைகளை யெல்லாம் கொண்டதாகிறது. வேலை-நாளின் இந்தப் பகுதிக்கு உபரி-உழைப்பு நேரம் என்றும், அந்த நேரத்தில் செலவிடப்படும் உழைப்புக்கு உபரி-உழைப்பு [surplus-labour] என்றும் பெயர் சூட்டுகிறேன். மதிப்பை சரிவரப் புரிந்து கொள்ள வேண்டுமானால் அதை இத்தனை மணி நேர உழைப்பின் இறுகலாக மட்டும் கருது வது, பொருள்வடிவாக்கப்பட்ட உழைப்பே தவிர வேறல்லவெனக் கருதுவது அவசியம். அதே போல், உபரி-மதிப்பை சரிவரப் புரிந்து கொள்ள வேண்டுமானால், அதை உபரி-உழைப்பு நேரத்தின் இறுகலாக மட்டும் கருதுவது, பொருள்வடிவாக்கப்பட்ட உபரி-உழைப்பே தவிர வேறல்லவெனக் கருதுவது அவசியம். சமுதாயத்தின் பல்வேறு பொருளாதார வடிவங்களுக்கும் இடை யிலான, எடுத்துக்காட்டாக அடிமையுழைப்பை அடித்தளமாய்க் கொண்ட சமுதாயத்துக்கும் கூலியுழைப்பை அடித்தளமாய்க் கொண்ட சமுதாயத்துக்கும் இடையிலான அடிப்படை வேறுபாடு, உள்ளபடியே உற்பத்தியாளராகிய உழைப்பாளியிடமிருந்து அந்தந்த சமுதாயத்திலும் இந்த உபரி-உழைப்பு எம்முறையில் கறக்கப்படு கிறது என்பதில்தான்[208] காணப்படுகிறது.

ஒரு புறம், மாறும்-மூலதனத்தின் மதிப்பும் அம்மூலதனத்தால் வாங்கப்படும் உழைப்புச் சக்தியின் மதிப்பும் சமம் என்பதாலும், இந்த உழைப்புச் சக்தியின் மதிப்பு வேலை-நாளின் அவசியப் பகுதியை நிர்ணயிக்கிறது என்பதாலும், மறு புறம், உபரி-மதிப்பு வேலை-நாளின் உபரிப் பகுதியால் நிர்ணயிக்கப்படுகிறது என் பதாலும், உபரி-மதிப்பு மாறும்-மூலதனத்தோடு கொண்டுள்ள விகிதமும், உபரி-உழைப்பு அவசிய-உழைப்போடு கொண்டுள்ள விகிதமும் ஒன்றே என்றாகிறது. அல்லது, வேறு விதமாகச் சொன் னால், உபரி-மதிப்பு வீதம் $\frac{s}{v} = \frac{\text{உபரி-உழைப்பு}}{\text{அவசிய-உழைப்பு}}$. $\frac{s}{v}$, $\frac{\text{உபரி-உழைப்பு}}{\text{அவசிய-உழைப்பு}}$

[208] திருவாளர் வில்ஹெல்ம் துசிடைட்ஸ் ரோஷர் குதிரைக் கொம்பைக் கண்டு பிடித்திருக்கிறார். உபரி-மதிப்பு, அல்லது உபரி-உற்பத்தியின் ஆக்கமும், அதன் பயனான மூலதனத் திரட்டலும் முதலாளியினது சிக்கனத்தின் விளைவென்று இன்று கூறப்படுகிறதென்றால், நாகரிகத்தின் தாழ்ந்த கட்டங்களில், சிக்கனம் செய்யுமாறு இளைத்தவர்களைக் கட்டாயப்படுத்துவது வலுத்தவர்களே என்ற முக்கியக் கண்டு பிடிப்பை அவர் செய்திருக்கிறார். (முன் வந்தது, பக்கம் 78.) எதை சிக்கனம் செய்வது? உழைப்பையா? அல்லது இல்லாத ஒன்றாகிய மிகையான செல்வத்தையா? உபரி-மதிப்பைத் தனதாக்கிக் கொள்வதற்கு முதலாளி சொல்லும் ஓரளவு நம்பக் கூடிய போலியான சமாதானங்களுக்கு மெருகிட்டு ஜோடித்தே உபரி-மதிப்பின் பிறப்புக்குக் காரணம் கூறும் முயற்சியில் ரோஷர் போன்றவர்கள் இறங்கக் காரணம் என்ன? உண்மையிலேயே அவர்கள் அறியாதவர்கள் என்பது மட்டுமன்று. மதிப்பு, உபரி-மதிப்பு பற்றிய விஞ்ஞானப் பகுப்பாய்வு குறித்தும், ஆதிக்கத்திலிருப்பவர்களுக்கு ஓரளவு ஒவ்வாத முடிவை வந்தடைய நேரிடும் சாத்தியப்பாடு குறித்தும் சப்பைக்கட்டுவாதி களான அவர்கள் அஞ்சி நடுங்குவதும் காரணமாகும்.

என்ற இவ்விரு விகிதங்களும் ஒரே உண்மையை வெவ்வேறு வழிகளில் தெரிவிக்கின்றன; ஒன்றில் பொருள்வடிவாக்கப்பட்ட, உட்கொள்ளப்பட்ட உழைப்பு தொடர்பாகவும், மற்றதில் உயிருள்ள, பாய்ந்தோடுகிற உழைப்பு தொடர்பாகவும் இதைத் தெரிவிக்கின்றன.

எனவே, உபரி-மதிப்பின் வீதம் உழைப்புச் சக்தி மீதான மூலதனத்தின் சுரண்டல்-கடுமையை [degree of exploitation], அதாவது தொழிலாளியை முதலாளி சுரண்டுவதன் கடுமையைத் துல்லியமாக வெளிப்படுத்தும் தெரிவிப்பாகும்.[209]

நமது உதாரணத்தில், உற்பத்திப் பொருளின் மதிப்பு = மாறா £410 + மாறும் £90 + உபரி £90 என்றும், முன்னீடு செய்யப்பட்ட மூலதனம் = £500 என்றும் கொண்டோம். உபரி-மதிப்பு = £90, முன்னீடு செய்யப்பட்ட மூலதனம் = £500 என்பதால் வழக்கமான கணக்கீட்டு முறைப் படி உபரி-மதிப்பு வீதம் (வழக்கமாக இது இலாப வீதத்துடன் போட்டுக் குழப்பப்படுகிறது) 18%ஆக இருத்தல் வேண்டும்; இந்த வீதம் இவ்வளவு குறைவாயுள்ளதே என்று திரு கேரியும், இதர இணக்கவாதிகளும் மகிழ்ச்சி கலந்த வியப்பு கொள்ளலாம். ஆனால், உண்மையில் உபரி-மதிப்பு வீதம் $\frac{s}{C}$ அல்லது $\frac{s}{c+v}$ க்குச் சமமன்று, $\frac{s}{v}$ க்கே. சமம்: அதாவது அது $\frac{90}{500}$ அன்று, $\frac{90}{90}$ அல்லது 100% ஆகும். இது தோற்றத்திலான சுரண்டல்-கடுமையைப் போல் ஐந்து மடங்குக்கும் அதிகமாகும். நாம் எடுத்துக் கொண்ட உதாரணத்தில், வேலை-நாளின் மெய்யான கால அளவு, உழைப்பு நிகழ்முறைக்கு நாள் அல்லது வாரக் கணக்கில் ஆகும் காலம் ஆகியவை பற்றியும், வேலை வாங்கப்படும் தொழிலாளர்களின் தொகை பற்றியும் நமக்குத் தெரியாது என்ற போதிலும், உபரி-மதிப்பு வீதமான $\frac{s}{v}$ அதற்குச் சமதையான $\frac{\text{உபரி-உழைப்பு}}{\text{அவசிய-உழைப்பு}}$ எனும் தெரிவிப்பைக் கொண்டு வேலை-நாளின் இரு பகுதிகளுக்குமிடையிலான உறவை

[209] உபரி-மதிப்பு வீதம் உழைப்புச் சக்தியின் மீதான சுரண்டல்-கடுமையைத் துல்லியமாக வெளிப்படுத்தும் தெரிவிப்பு என்ற போதிலும், எவ்விதத்திலும் சுரண்டலின் அறுதி அளவுக்கான தெரிவிப்பன்று. உதாரணமாக அவசிய உழைப்பு = 5 மணி நேரம், உபரி-உழைப்பு = 5 மணி நேரம் என்றால், சுரண்டல்-கடுமை 100% ஆகும். இங்கே சுரண்டலின் அளவைக் குறிப்பது 5 மணி நேரம். மறு புறம், அவசிய உழைப்பு = 6 மணி நேரம், உபரி-உழைப்பு = 6 மணி நேரம் என்றால், சுரண்டல்-கடுமை முன் போலவே 100% ஆகும். மெய்யான சுரண்டல் அளவோ 20% அதிகரித்துள்ளது; அதாவது ஐந்து மணி நேரம் என்பதிலிருந்து ஆறு மணி நேரமாக அதிகரித்துள்ளது.

நமக்குத் துல்லியமாக வெளிப்படுத்துகிறது. உபரி-மதிப்பு வீதம் 100% என்பதால் மேற்கூறிய உறவு சமத்துவ உறவாகும். எனவே, நமது உதாரணத்தில் உழைப்பாளி பாதி நாள் தனக்காகவும், பாதி நாள் முதலாளிக்காகவும் உழைக்கிறார் என்று தெளிவாகத் தெரி கிறது.

எனவே, உபரி-மதிப்பு வீதத்தைக் கணக்கிடும் முறை சுருக்க மாகப் பின்வருமாறு: நாம் உற்பத்திப் பொருளின் மொத்த மதிப்பை எடுத்துக் கொண்டு அதில் திரும்ப இடம் பெற மட்டுமே செய்கிற மாறா-மூலதனத்தை பூஜ்யமெனக் கொள்கிறோம். மீத மிருப்பது சரக்கை உற்பத்தி செய்யும் நிகழ்முறையில் உள்ளபடியே படைக்கப்பட்டிருக்கும் மதிப்பு மட்டுமே. உபரி-மதிப்பின் அளவு தரப்பட்டிருந்தால், மாறும்-மூலதனத்தைக் கண்டுபிடிக்க இந்த மீதத்திலிருந்து உபரி-மதிப்பைக் கழித்தால் போதும். மாறும்-மூலதனம் தரப்பட்டு நாம் உபரி-மதிப்பைக் கண்டுபிடிக்க வேண்டி யிருந்தால், இம்மீதத்திலிருந்து மாறும்-மூலதனத்தைக் கழித்தால் போதும். இரண்டுமே தரப்பட்டிருந்தால் உடனே கணக்கிட்டு விடலாம், அதாவது மாறும்-மூலதனத்துடன் உபரி-மதிப்புக்குள்ள விகிதமான $\frac{s}{v}$ஐக் கணக்கிட்டு விடலாம்.

கணக்கீட்டு முறை இவ்வளவு எளிதாக இருந்த போதிலும், சில உதாரணங்களைக் கொண்டு, அதில் பொதிந்துள்ள பரிச்சய மில்லாத கோட்பாடுகளின் பிரயோகத்தில் வாசகரை ஈடுபடுத்துவது நல்லது.

முதற்கண், அமெரிக்கப் பஞ்சிலிருந்து எண் 32 நூலை நூற்பதும், வாரம் தோறும் கதிர் ஒன்றுக்கு 1 இராத்தல் நூல் உற்பத்தி செய்வதுமான 10,000 மியூல் கதிர்களையுடைய நூற் பாலையை உதாரணமாக எடுத்துக் கொள்வோம். கழிவு 6% எனக் கொள்கிறோம்: இந்த நிலைமைகளில் வாரம் தோறும் 10,600 இராத்தல் பஞ்சு நுகரப்படுகிறது; இதில் 600 இராத்தல் கழிவாகி விடுகிறது. 1871 ஏப்ரலில் பஞ்சு விலை இராத்தலுக்கு 7¾ பென்னியாக இருந்தது; எனவே, கச்சாப் பொருளுக்கான செலவு முழு எண்ணில் £342 ஆகிறது. தயாரிப்பு இயந்திர சாதனம், இயக்கு விசை ஆகியன உட்பட 10,000 கதிர்களுக்கும் கதிர் ஒன்றுக்கு £1 என்ற கணக்கில் மொத்தம் £10,000 செலவாவதாகக் கொள்வோம். தேய்மானம் 10%; ஆண்டுக்கு £1,000 = வாரத்துக்கு £20 எனக் கொள்வோம். கட்டட வாடகை ஆண்டுக்கு £300 அல்லது வாரத்துக்கு £6 எனக் கொள் வோம். நுகரப்படும் நிலக்கரி (60 மணி நேரத்தில் மணிக்குக் குதிரைச் சக்திக்கு 4 இராத்தல் நிலக்கரி என்ற கணக்கில் குறி முள் காட்டிடும் 100 குதிரைச் சக்திக்கான நிலக்கரியோடு ஆலைக்கு வெப்பமூட்ட நுகரப்படும் நிலக்கரியையும் சேர்த்து)

வாரத்துக்கு 11 டன், டன்னுக்கு 8 ஷில்லிங் 6 பென்னி என்ற கணக்கில் வாரத்துக்கு சுமார் £4½ ஆகிறது. எரிவாயு வாரத்துக்கு £1, எண்ணெய் முதலானவை வாரத்துக்கு £4½. மேற்கண்ட துணைப் பொருட்களுக்கான மொத்தச் செலவு வாரத்துக்கு £10. எனவே வார உற்பத்திப் பொருளினது மதிப்பின் மாறாப் பகுதி £378 ஆகும். கூலி வாரத்துக்கு £52 ஆகிறது. நூலின் விலை இராத்தல் 12¼ பென்னியாக உள்ளது. 10,000 இராத்தல் நூலின் மதிப்புக்கு £510 என்ற தொகை இதிலிருந்து கிடைக்கிறது. எனவே, இந்த உதாரணத்தில் உபரி-மதிப்பு £510 — £430 = £80 ஆகும். உற்பத்திப் பொருளினது மதிப்பின் மாறாப் பகுதி மதிப்பின் படைப்பில் பாத்திரமேதும் வகிப்பதில்லை என்பதால், அப்பகுதி = 0 எனக் கொள்கிறோம். படைக்கப்பட்ட வாராந்தர மதிப்பாக £132 மிஞ்சுகிறது. இந்த £132 = மாறும் £52 + உபரி £80. எனவே, உபரி-மதிப்பின் வீதம் $\frac{80}{52} = 153\frac{11}{13}\%$ ஆகும். சராசரி உழைப்புடன் 10 மணி நேரம் கொண்ட வேலை-நாளில் கிடைப்பது: அவசிய-உழைப்பு = $3\frac{31}{33}$ மணிகள். உபரி-உழைப்பு = $6\frac{2}{33}$ மணிகள்.[210]

மேலுமோர் உதாரணம்: 1815ஆம் ஆண்டுக்கு ஜேக்கப் பின்வரும் கணக்கீட்டைத் தருகிறார். பல இனங்கள் முன்னதாக சரிக்கட்டப்பட்டதன் விளைவாய், இது அரைகுறையாக உள்ளது; ஆயினும் நமது காரியத்துக்கு இது போதுமானது. இதில் அவர் கோதுமையின் விலை ஒரு குவார்ட்டருக்கு 8 ஷில்லிங் என்றும், ஏக்கருக்கு சராசரி மகசூல் 22 புஷல் என்றும் கொள்கிறார்.

### ஏக்கர் ஒன்றுக்கு உற்பத்தி செய்யப்பட்ட மதிப்பு

| | £ | ஷி. | பெ. | | £ | ஷி. | பெ. |
|---|---|---|---|---|---|---|---|
| விதை......... | £ 1 | 9 | 0 | மானியங்கள், தீர்வைகள், வரிகள்........................ | £ 1 | 1 | 0 |
| உரம்.......... | 2 | 10 | 0 | வாரம்......................... | 1 | 8 | 0 |
| கூலி........... | 3 | 10 | 0 | சாகுபடியாளரின் இலாபமும் வட்டியும்.............. | 1 | 2 | 0 |
| மொத்தம்... | £7 | 9 | 0 | மொத்தம்.................. | £ 3 | 11 | 0 |

[210] மேற்கண்ட விவரங்கள் நம்பத்தக்கவை; மான்செஸ்டர் நூற்பாளர் ஒருவர் எனக்குத் தந்தவை. இங்கிலாந்தில் ஓர் எஞ்சின் குதிரைச் சக்தி என்பது முன்பு அதன் உருளையின் விட்டத்திலிருந்து கணக்கிடப்பட்டது; இப்போது உள்ளபடியே செலவாகிற குதிரைச் சக்தி குறிமுள் காட்டுவதிலிருந்து எடுத்துக் கொள்ளப்படுகிறது.

உற்பத்திப் பொருளின் விலையும் அதன் மதிப்பும் சமம் என்று வைத்துக் கொண்டால், இலாபம், வட்டி, வாடகை போன்ற பல்வேறு இனங்களில் பங்கிடப்பட்டதாக உபரி-மதிப்பை இங்கே காண்கிறோம். இவற்றின் தனித்தனி விவரங்கள் குறித்து நமக்குக் கவலையில்லை; நாம் இவற்றை சேர்த்துக் கூட்டுகிறோம். கூட்டி வருவது £3 11ஷி. 0பெ. என்ற உபரி-மதிப்பாகும். விதைக்கும் உரத்துக்கும் தரப்பட்ட £3 19ஷி. 0பெ. என்ற தொகை மாறா-மூலதனம் ஆகும். நாம் அதை பூஜ்யமெனக் கொள்கிறோம். மிஞ்சுவது £3 10ஷி. 0பெ. இதுவே முன்னீடு செய்யப்பட்ட மாறும்-மூலதனம் ஆகும்; இதற்குப் பதிலாக £3 10ஷி. 0பெ.+£3 11ஷி. 0பெ. என்ற புதிய மதிப்பு உற்பத்தி செய்யப்பட்டிருப்பதைப் பார்க்கிறோம். எனவே $\frac{s}{v} = \frac{\text{£3 11ஷி. 0பெ.}}{\text{£3 10ஷி. 0பெ.}}$; அதாவது 100 சதவீதத்துக்கும் அதிகமான உபரி-மதிப்பு வீதம் கிடைக்கிறது. தொழிலாளி உபரி-மதிப்பை உற்பத்தி செய்வதற்காகத் தன் வேலை-நாளில் சரிபாதிக்கும் அதிகமாகச் செலவிடுகிறார்; இந்த உபரி-மதிப்பை வெவ்வேறு ஆட்கள் வெவ்வேறு காரணம் காட்டி தம்மிடையே பகிர்ந்து கொள்கின்றனர்.[211]

## பிரிவு 2.—உற்பத்திப் பொருளினது மதிப்பின் ஆக்கக் கூறுகளை உற்பத்திப் பொருளில் அவற்றுக்கு இணையான விகிதாசாரப் பகுதிகளைக் கொண்டு காட்டுதல்

முதலாளி பணத்தை மூலதனமாக மாற்றுவது எப்படி என்பதை நமக்குப் புலப்படுத்திய உதாரணத்தையே திரும்பவும் எடுத்துக் கொள்வோம்.

12 மணி நேர வேலை-நாளின் உற்பத்திப் பொருள் 30ஷி. மதிப்புள்ள 20 இராத்தல் நூலாகும். இந்த மதிப்பில் $\frac{8}{10}$ பாகம், அல்லது 24ஷி. என்பது உற்பத்திச் சாதனங்களின் மதிப்பு (20 இராத்தல் பஞ்சு, மதிப்பு 20ஷி., கதிரின் தேய்மானம், 4ஷி.) அதில் திரும்ப இடம் பெறுவதால் கிடைப்பதாகும்; எனவே அது மாறா-மூலதனம் ஆகும். மீதமுள்ள $\frac{2}{10}$ பாகம் அல்லது 6 ஷி.

---

211 வாசகத்தில் கண்டுள்ள கணக்குகள் எடுத்துக்காட்டுகளே ஆகும்; நாம் விலைகள் = மதிப்புகள் என்று வைத்துக் கொள்கிறோம். ஆயினும், சராசரி விலைகளை எடுத்துக் கொண்டாலும் கூட இந்த எளிய முறையில் அனுமானம் செய்ய முடியாது என்பதை மூன்றாம் பாகத்தில் பார்ப்போம்.

என்பது நூற்பு நிகழ்முறையின் போது படைக்கப்பட்ட புதிய மதிப்பாகும்; இதில் பாதி ஒரு நாள் உழைப்புச் சக்தியின் மதிப்புக்கு, அதாவது மாறும்-மூலதனத்துக்கு பதில் வருவதாகும்; மறு பாதி 3ஷி. உபரி-மதிப்பாகிறது. எனவே, 20 இராத்தல் நூலின் மொத்த மதிப்பு பின்வருமாறு அமைகிறது:

30ஷி. நூலின் மதிப்பு = மாறா 24 ஷி. + மாறும் 3ஷி. + உபரி 3 ஷி.

இந்த மதிப்பு முழுவதும் உற்பத்தியான 20 இராத்தல் நூலில் அடங்கியிருக்கிறது என்பதால், இந்த மதிப்பின் பல்வேறு ஆக்கக் கூறுகளையும் அவற்றுக்கிணையான உற்பத்திப் பொருட் பகுதிகளில் அடங்கியிருப்பதாகக் காட்டலாம் என்றாகிறது.

30ஷி. மதிப்பு 20 இராத்தல் நூலில் அடங்கியிருக்கிறது என்றால், இந்த மதிப்பில் $\frac{8}{10}$ பாகம், அல்லது அதன் மாறாப் பகுதியாக அமைகிற 24ஷி. உற்பத்தி பொருளின் $\frac{8}{10}$ பாகத்தில் அல்லது 16 இராத்தல் நூலில் அடங்கியிருக்கிறது. இதில் 13⅓ இராத்தல் நூல் கச்சாப் பொருளின் மதிப்பை, அதாவது நூற்கப்பட்ட பஞ்சில் 20ஷி. பெறுமானமுள்ளதைக் காட்டுகிறது; 2⅔ இராத்தல் நூல் நிகழ்முறையில் தேய்மானமுற்ற கதிர் போன்றவற்றில் 4ஷி. பெறுமானமுள்ளதைக் காட்டுகிறது.

எனவே, 20 இராத்தல் நூல் நூற்பதில் பயன்படுத்திக் கொள்ளப்பட்ட பஞ்சு முழுவதும் 13⅓ இராத்தல் நூலால் காட்டப்படுகிறது. நூலின் இந்தப் பின்சொன்ன எடை 13⅓ ஷில்லிங் பெறுமானமுள்ள 13⅓ இராத்தல் பஞ்சையே எடைக் கணக்கில் கொண்டிருப்பது மெய்தான்; ஆனால் அதில் அடங்கியுள்ள 6⅔ ஷில்லிங் கூடுதல் மதிப்பு மீதமுள்ள 6⅔ இராத்தல் நூலை நூற்பதில் நுகரப்படும் பஞ்சுக்குச் சமதையாகும். இந்த 6⅔ இராத்தல் நூலில் பஞ்சேதும் இல்லாமல் 20 இராத்தல் பஞ்சு முழுவதுமே 13½ இராத்தல் நூலில் அடர்ந்திருந்தால் எப்படியோ அப்படியே இதன் விளைவும். மறு புறம் பின்சொன்ன இந்த எடையில் துணைப் பொருட்கள், சாதனங்கள் ஆகியவற்றின் மதிப்போ, நிகழ்முறையில் புதிதாகப் படைக்கப்பட்ட மதிப்போ இம்மியளவும் இல்லை.

அதே விதத்தில், மாறா-மூலதனத்தின் மீதமான 4 ஷில்லிங் உருக்கொண்ட 2⅔ இராத்தல் நூல் 20 இராத்தல் நூலை உற்பத்தி செய்வதில் நுகரப்பட்ட துணைப் பொருட்கள், உழைப்புச் சாதனங்கள் ஆகியவற்றின் மதிப்பை மட்டுமே காட்டுகிறது.

எனவே, இம்முடிவை வந்தடைகிறோம்: உற்பத்திப் பொருளின் பத்தில் எட்டு பாகம், அதாவது 16 இராத்தல் நூல் என்பது பயன்பாடுள்ள பண்டம் என்ற முறையில், மீதமுள்ள உற்பத்திப்

பொருளைப் போலவே நூற்பாளரது உழைப்பின் படைப்பே ஆகும். என்றாலும் மேற்கண்டவாறு நோக்குமிடத்து, நூற்பு நிகழ்முறையின் போது செலவிடப்பட்ட உழைப்பேதும் அதில் இல்லை; அதனால் உட்கிரகிக்கப்படவில்லை. யாருடைய உதவியுமில்லாமல் தானாகவே பஞ்சு நூலாக மாறி விட்டது என நினைக்க வேண்டியுள்ளது; அது புது வடிவம் எடுத்திருப்பதாகத் தெரிவதே வெறும் ஏமாற்று என நினைக்கவேண்டியுள்ளது. ஏனெனில் நமது முதலாளி இந்த நூலை 24 ஷில்லிங்குக்கு விற்று, தன் உற்பத்திச் சாதனங்களுக்கு பதில் அப்பணத்தைப் பெற்றதுமே, இந்த 16 இராத்தல் நூல் என்பது குறிப்பிட்ட அளவு பஞ்சும் கதிர்த் தேய்வும் பூணுகிற மாறுவேடமே அன்றி வேறல்ல என்று தெளிவாகிறது.

மறு புறம், உற்பத்திப் பொருளில் மீதமுள்ள $\frac{2}{10}$ பாகம் அல்லது 4 இராத்தல் நூல் 12 மணி நேர நூற்பு நிகழ்முறையில் படைக்கப்பட்ட 6 ஷி. புதிய மதிப்பையன்றி வேறெதையும் காட்டவில்லை. நுகரப்பட்ட கச்சாப் பொருளிலிருந்தும் உழைப்புச் சாதனங்களிலிருந்தும் அந்த 4 இராத்தலுக்குப் பெயர்க்கப்பட்ட மதிப்பனைத்தும் இடைமறிக்கப்பட்டு, முதலில் நூற்கப்பட்ட 16 இராத்தலிலேயே சேர்க்கப்பட்டு விட்டதாகக் கூற வேண்டியுள்ளது. இந்நிலையில், நூற்பாளர் 4 இராத்தல் நூலைக் காற்றிலிருந்து திரித்தார் என நினைக்க வேண்டியுள்ளது; தாமாகவே இயற்கையின் வரப்பிரசாதமாய் வந்ததால் உற்பத்திப் பொருளுக்கு மதிப்பெதையும் பெயர்க்காத பஞ்சு, கதிர்கள் ஆகியவற்றின் துணை கொண்டு அவர் அதை நூற்றார் என நினைக்க வேண்டியுள்ளது.

நிகழ்முறையில் புதிதாகப் படைக்கப்பட்ட மதிப்பு முழுவதும் இறுகியிருக்கும் இந்த 4 இராத்தல் நூலில், ஒரு பாதி நுகரப்பட்ட உழைப்பின் மதிப்புக்கான சமதையை, அல்லது 3 ஷி. மாறும்-மூலதனத்தைக் காட்டுகிறது; மறு பாதி 3ஷி. உபரி-மதிப்பைக் காட்டுகிறது.

நூற்பாளரின் 12 வேலை-மணிகள் 6 ஷில்லிங்கில் உருக்கொண்டிருப்பதால், 30ஷி. மதிப்புள்ள நூலில் 60 வேலை-மணிகள் உருக்கொண்டிருக்க வேண்டும். உழைப்பு நேரத்தின் இந்த அளவு உண்மையில் 20 இராத்தல் நூலில் இருக்கவே செய்கிறது. ஏனெனில் $\frac{8}{10}$ பாகத்தில் அல்லது 16 இராத்தலில் நூற்பு நிகழ்முறையின் தொடக்கத்துக்கு முன்னர் உற்பத்திச் சாதனங்களுக்காகச் செலவிடப்பட்ட 48 மணி நேர உழைப்பு பொருள்வடிவாக்கப்பட்டுள்ளது; மீதமுள்ள $\frac{2}{10}$ பாகம் அல்லது 4 இராத்தலில் நிகழ்

முறையின் போதே செலவிடப்பட்ட 12 மணி நேர உழைப்பு பொருள்வடிவாக்கப்பட்டுள்ளது.

அந்த நூலினது உற்பத்தியின் போது படைக்கப்பட்ட புதிய மதிப்பையும் உற்பத்திச் சாதனங்களில் ஏற்கெனவே இருக்கும் மதிப்பையும் கூட்டி வரும் தொகைக்கு நூலின் மதிப்பு சமம் என்று முன்பே பார்த்தோம்.

பணி வழியில் ஒன்றுக்கொன்று வேறுபடும் கூறுகளாகிய உற்பத்திப் பொருளது மதிப்பின் பல்வேறு ஆக்கக் கூறுகளும், உற்பத்திப் பொருளில் அவற்றுக்கிணையான விகிதாசாரப் பகுதி களாலேயே காட்டப்படுவது எப்படி என்று இப்போது தெளி வாகிறது.

உற்பத்திப் பொருளின் ஒரு பகுதி உற்பத்திச் சாதனங்களுக்காக முன்னரே செலவிடப்பட்ட உழைப்பை அல்லது மாறா-மூல தனத்தை மட்டுமே காட்டுகிறது; இன்னொரு பகுதி உற்பத்தி முறையின் போது செலவிடப்பட்ட அவசிய-உழைப்பை, அல்லது மாறும்-மூலதனத்தை மட்டுமே காட்டுகிறது. மற்றுமொன்றான கடைசிப் பகுதி அதே நிகழ்முறையின் போது செலவிடப்பட்ட உபரி-உழைப்பை, அல்லது உபரி-மதிப்பை மட்டுமே காட்டுகிறது; உற்பத்திப் பொருளை வெவ்வேறு பகுதிகளாக இவ்விதம் பிரிப்பது எந்த அளவுக்கு எளியதோ, அந்த அளவுக்கு முக்கியமானதும் ஆகும்; சிக்கலான, இது வரை தீர்க்கப்படாத பிரச்சினைகளில் பிற்பாடு இதனைப் பிரயோகிக்கையில் இந்த முக்கியத்துவம் தெரிய வரும்.

மேற்கண்ட ஆய்வில் மொத்த உற்பத்திப் பொருளை, பயன் படுத்துவதற்குத் தயாராயுள்ள—12 மணி நேர வேலை-நாளின்— இறுதிப் பலனாகக் கருதி ஆராய்ந்தோம். இந்த மொத்த உற்பத்திப் பொருளை அதன் உற்பத்தியின் சகல கட்டங்கள் வழியாகவும் பின்தொடர்ந்து செல்லலாம்; இவ்வாறு வெவ்வேறு கட்டங்களில் வெளிப்படும் பகுதி-உற்பத்திப் பொருட்களை இறுதி அல்லது மொத்த உற்பத்திப் பொருளின் பணி வழியில் வேறுபட்ட பகுதி களாகக் காட்டினால் முன்னர் அடைந்த அதே முடிவையே வந் தடைவோம்.

நூற்பாளர் 12 மணி நேரத்தில் 20 இராத்தல் நூலை, அதாவது 1 மணி நேரத்தில் 1⅔ இராத்தல் நூலை உற்பத்தி செய்கிறார்; ஆதலால் 8 மணி நேரத்தில் 13⅓ இராத்தல் நூலை, அதாவது முழு நாளில் நூற்கப்படும் பஞ்சனைத்துக்கும் மதிப்பில் சமமான பகுதி-உற்பத்திப் பொருளை உற்பத்தி செய்கிறார். இவ்வாறே அடுத்த 1 மணி 36 நிமிடத்தில் பகுதி-உற்பத்திப் பொருள் 2⅔ இராத்தல் நூலாகும்; 12 மணி நேரத்தில் நுகரப்படும் உழைப் புச் சாதனங்களின் மதிப்பை இது காட்டுகிறது. அடுத்து வரும் 1 மணி 12 நிமிடத்தில் நூற்பாளர் 3 ஷில்லிங் பெறுமானமுள்ள

2 இராத்தல் நூலை உற்பத்தி செய்கிறார்; இம்மதிப்பு தனது 6 மணி நேர அவசிய-உழைப்பில் அவர் படைக்கும் முழு மதிப்புக்கும் சமம். இறுதியாக கடைசி 1 மணி 12 நிமிடத்தில் அவர் இன்னும் 2 இராத்தல் நூலை உற்பத்தி செய்கிறார்; இதன் மதிப்பு அரை நாளில் அவரது உபரி-உழைப்பால் படைக்கப்படும் உபரி-மதிப் புக்குச் சமம். இந்தக் கணக்கீட்டு முறை ஆங்கிலேயத் தொழிலதிபரின் அன்றாட உபயோகத்துக்கு உதவுகிறது; முதல் 8 மணி நேரத்தில், அதாவது வேலை-நாளின் ⅔ பகுதியில் தனது பஞ்சின் மதிப்பைத் திரும்பப் பெறுவதையும், எஞ்சியுள்ள மணி களில் இதே போல் பிறவற்றைப் பெறுவதையும் இது காட்டுவதாக அவர் சொல்வார். இந்த முறையும் பிழையற்றதுதான்; மேலே கூறிய முதலாவது முறையை ஒத்ததுதான்; இரண்டுக்குமுள்ள வேறுபா டெல்லாம்: முதலாவது முறை பூர்த்தியான உற்பத்திப் பொருளின் வெவ்வேறு பகுதிகள் இடத்தில் அடுத்தடுத்து அமையுமாறு இட வழிப்பட்டதாய் இருக்க, இரண்டாவது முறை அப்பகுதிகள் காலத் தில் அடுத்தடுத்து அமையுமாறு கால வழிப்பட்டதாய் இருக்கிறது. ஆனால் இந்த முறையோடு மிக அநாகரிகமான கருத்துகளும் சேர்ந்து வருவதுண்டு; குறிப்பாக, மதிப்பே மதிப்பை பெற் றெடுக்கச் செய்யும் நிகழ்முறையைத் தத்துவ வழியில் தவறாகப் புரிந்து கொள்வதில் எந்த அளவுக்கு அக்கறை கொண்டுள்ளனரோ, நடைமுறையிலும் அதே அளவுக்கு அக்கறைக் கொண்டுள்ளோரின் மண்டையில் இப்படிச் சேர்ந்து வரக் காண்கிறோம். உதாரணமாக, நமது நூற்பாளர் தனது வேலை-நாளின் முதல் 8 மணி நேரத்தில் பஞ்சின் மதிப்பையும், அடுத்து வரும் 1 மணி 36 நிமிடத்தில் தேய்மானமுற்ற உழைப்புச் சாதனங்களின் மதிப்பையும், அதற் கடுத்த 1 மணி 12 நிமிடத்தில் கூலியின் மதிப்பையும் உற்பத்தி செய்கிறார் அல்லது மாற்றீடு செய்கிறார் என்பதாகவும் தொழில் அதிபருக்காக உபரி-மதிப்பை உற்பத்தி செய்வதற்கு அந்தப் பிரசித்தமான ''கடைசி மணியை'' மட்டுமே ஒதுக்குகிறார் என்பதாகவும் கொள்கிற கருத்து இப்படிப்பட்டவர்களின் மண்டையில் உதிக்கக் காணலாம். பாவம் இந்த நூற்பாளர்; இவ்விதத்தில் அவர் பஞ்சு, கதிர்கள், நீராவி எஞ்சின், நிலக்கரி, எண்ணெய் முதலானவற்றைக் கொண்டு நூல் நூற்கும் அதே நேரத்தில் அவற்றை உற்பத்தியும் செய்கிற அற்புதம் மட்டு மல்லாமல், ஒரு வேலை-நாளை ஐந்து வேலை-நாளாக மாற்று கிற அற்புதமுமாகிய இரட்டை அற்புதத்தைச் செய்தாக வேண்டும். ஏனெனில், நமது உதாரணத்தில், கச்சாப் பொருள், உழைப்புச் சாதனங்கள் ஆகியவற்றின் உற்பத்தி ஒவ்வொன்றுக்கும் பன் னிரண்டு மணி நேரம் கொண்ட நான்கு வேலை-நாள் தேவை; அவற்றை நூலாக மாற்ற இதே போன்ற இன்னொரு நாள் தேவை. இலாப ஆசை இப்படிப்பட்ட அற்புதங்களில் எளிதில் நம்பிக்கை

கொள்ளச் செய்கிறது என்பதற்கும், அவற்றை நிரூபிக்கக் கச்சை கட்டிய இச்சகம் பேசும் வறட்டுவாதிகளுக்குப் பஞ்சமில்லை என் பதற்கும், வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த பின்வரும் சம்பவம் சான் றாகிறது.

## பிரிவு 3.—சீனியரின் "கடைசி மணி நேரம்"

நாசா வில்லியம் சீனியர் ஆங்கிலேயப் பொருளாதார அறிஞர் களிடையே கவின் கலை வித்தகர் எனப்படத் தக்கவர்; பொருளா தார "விஞ்ஞானத்துக்கும்," எழிலார்ந்த நடைக்கும் பேர் போன வர்; 1836ஆம் ஆண்டில் ஒரு நல்ல நாளில் அவர் ஆக்ஸ்ஃபோர்டி லிருந்து மான்செஸ்டருக்கு வருமாறு அழைக்கப்பட்டார்—ஆக்ஸ் ஃபோர்டில் அவர் போதித்து வந்த அரசியல் பொருளாதாரத்தை மான்செஸ்டரில் பயில்வதற்காக. புதிதாக நிறைவேறிய தொழிற் சாலைச் சட்டத்துக்கு எதிராக மட்டுமல்லாமல், இன்னும் பெரிய அபாயமான பத்து மணி நேரக் கிளர்ச்சிக்கு எதிராகவும் தொழிலதி பர்கள் அவரைத் தமது சொல்விளம்பியாகத் தேர்ந்தெடுத்தனர். புலமை மிக்க இந்தப் பேராசிரியரை பெருமளவு "மேற்பூச்சிட்டு செம்மையுறச்" செய்தாக வேண்டும் என்பதை அவர்களது வழக் கமான காரியாம்சக் கூர்மதி அவர்களுக்கு உணர்த்திற்று; அதனால் தான் அவர்கள் அவரை வரச் சொல்லி எழுதினர். பேராசிரியர் மான்செஸ்டர் தொழிலதிபர்களிடமிருந்து தமக்குக் கிடைத்த அறிவு ரைகளை சிறு நூலாக வடித்துள்ளார். அதன் பெயர்: "தொழிற் சாலைச் சட்டம் பஞ்சாலைத் தொழிலை பாதிப்பது பற்றிய கடிதங் கள்," லண்டன், 1837. இதில் ஏனைய பலவற்றுடன் கூட பின் வரும் ஆத்மார்த்திக வாசகத்தையும் காண்கிறோம்: "இந்தச் சட்டத்தின் படி, 18 வயதுக்குட்பட்டவர்கள் வேலைக்கமர்த்தப்படும் எந்த ஆலையும் நாள் ஒன்றுக்கு 11½ மணி நேரத்துக்கதிகமாக, அதாவது வாரத்தில் 5 நாட்களுக்கு 12 மணி நேரத்துக்கதிகமா கவும், சனிக் கிழமையில் ஒன்பது மணி நேரத்துக்கதிகமாகவும் இயங்கலாகாது.

"இச்சட்டத்தின் படி இயங்குகிற ஆலையில் நிகர இலாபம் முழுவதும் கடைசி மணி நேரத்திலிருந்தே பெறப்படுகிறது என் பதைப் பின்வரும் பகுப்பாய்வு (!) புலப்படுத்தும். ஓர் ஆலை யதிபர் £100,000 முதலீடு செய்வதாகக் கொள்வோம்: தனது ஆலையிலும் இயந்திரங்களிலும் £80,000, கச்சாப் பொருளிலும் கூலியிலும் £20,000 மூலதனம் ஆண்டுக்கொரு முறை புரள் வதாகவும், மொத்த இலாபம் 15 சதவீதம் எனவும் கொண்டால் அந்த ஆலையின் ஆண்டுப் பலன் £115,000 பெறுமானமுள்ள சரக்குகளாய் இருக்க வேண்டும்...இந்த £115,000இல் ஒவ்வொரு

இருபத்துமூன்று அரை மணி நேர வேலையும் $\frac{5}{115}$ பாகத்தை, அல்லது இருபத்துமூன்றிலொரு பாகத்தை உற்பத்தி செய்கிறது. இந்த 23 இருபத்துமூன்றிலொரு பாகங்களில் (மொத்தம் £115,000ஆக அமைபவை) இருபது பாகங்கள் அதாவது £115,000இல் £100,000 மூலதனத்தை மட்டும் மாற்றீடு செய்கிறது; ஓர் இருபத்துமூன்றிலொரு பாகம் (அல்லது £115,000இல் £5,000) ஆலை, இயந்திர சாதனம் ஆகியவற்றின் சீர்கேட்டை ஈடு செய்கிறது. எஞ்சியுள்ள 2 இருபத்துமூன்றிலொரு பாகங்கள், அதாவது ஒவ்வொரு நாளின் இருபத்துமூன்று அரை மணிகளில் கடைசி இரண்டு அரை மணிகள் 10 சதவீதம் என்ற நிகர இலாபத்தை உற்பத்தி செய்கின்றன. எனவே, சுழல்-மூலதனத்தோடு [circulating capital] சுமார் £2,600ஐச் சேர்த்து பதினொன்றரை மணி நேரத்துக்குப் பதில் பதின்மூன்று மணி நேரம் தொழிற்சாலையை இயங்க வைத்தால் (விலைகள் முன்போலவே இருக்க) நிகர இலாபம் இரு மடங்குக்கும் அதிகமாகி விடும். மறு புறம், வேலை நேரம் நாளுக்கு ஒரு மணி நேரம் குறைக்கப்பட்டால் (விலைகள் முன்போலவே இருக்க) நிகர இலாபம் ஒழிந்து விடும்—வேலை நேரம் ஒன்றரை மணி குறைக்கப்பட்டால், மொத்த இலாபமும் கூட ஒழிந்து விடும்.''[212]

---

[212] சீனியர், முன் வந்தது, பக்கம் 12,13. நமது காரியத்துக்கு முக்கியத்துவமேதுமற்ற அசாதாரணக் கருத்துகளைப் போகட்டுமென விட்டு விடுகிறோம்; எடுத்துக்காட்டாக ஆலையதிபர்கள் இயந்திர சாதனத்தின் தேய்மானத்தை ஈடு கட்ட, அதாவது மூலதனத்தின் ஒரு பகுதியை மாற்றீடு செய்ய அவசியமான தொகையைத் தமது மொத்த அல்லது நிகர இலாபத்தின் பகுதியாகக் கணக்கிடுகின்றனர் என்று கூறுகிறார். அவ்வாறே அவரது எண் விவரங்கள் சரியானவைதாமா என்ற பிரச்சினையையும் 'கண்டு கொள்ளாமல் விடுகிறோம். அவை 'பகுப்பாய்வு' என்று அவர் சொல்லிக் கொள்வதற்கு மேல் மதிப்புள்ளவையல்ல என்பதை லியோனார்டு ஹார்னர் ''திரு சீனியருக்கு ஒரு கடிதம்,'' லண்டன், 1837 என்பதில் காட்டியுள்ளார். லியோனார்டு ஹார்னர் 1833இல் தொழிற்சாலை விசாரணை ஆணையர்களில் ஒருவராகவும் 1859 வரை தொழிற்சாலை ஆய்வாளராகவும், சொல்லப் போனால் தொழிற்சாலைத் தணிக்கையாளராகவும் இருந்தவர். ஆங்கிலேயத் தொழிலாளி வர்க்கத்துக்கு இறவாச் சேவை புரிந்தவர்; காழ்ப்புற்ற ஆலையதிபர்களோடு மட்டுமல்லாமல், ஆலைகளில் ''ஆட்கள்'' வேலை செய்கிற மணிகளின் எண்ணிக்கையைக் காட்டிலும் கீழ்ச் சபையில் அதிபர்கள் அளித்த ஓட்டுகளின் எண்ணிக்கையை மிகவும் முக்கியமானதாய்க் கருதிய அமைச்சரவையோடும் காலமெல்லாம் போராடியவர்.

கோட்பாட்டுப் பிழைகள் ஒரு புறமிருக்க, சீனியர் கூறுவதில் குழப்பம் மிகுந்துள்ளது. உண்மையில் அவர் சொல்ல விரும்பியது இதைத்தான்: ஆலையதிபர் தொழிலாளியை தினசரி 11½ மணி நேரத்துக்கு அல்லது 23 அரை மணிகளுக்கு வேலை வாங்குகிறார். வேலை-நாளைப் போலவே வேலை-ஆண்டினையும், 11½ மணிகள் அல்லது 23 அரை மணிகளை ஆண்டிலுள்ள வேலை-நாட்களின் எண்ணிக்கையால் பெருக்கி வருவதாகக் கருதலாம். இந்த அனுமானத்தின் பேரில், 23 அரை மணிகள் £115,000 என்ற வருடாந்தர உற்பத்தியைக் கொடுக்கின்றன, ஓர் அரை மணி 1/23 × £115,000 என்ற உற்பத்தியைக் கொடுக்கிறது; 20 அரை மணிகள் 20/23 × £115,000 = £100,000 என்ற உற்பத்தியைக் கொடுக்கின்றன; அதாவது அவை மாற்றீடு செய்வது முன்னீடு செய்யப்பட்ட மூலதனத்தை மட்டுமே. 3/23 × £115,000 £15,000

பேராசிரியர் இதைப் ''பகுப்பாய்வு'' என்கிறார்! ஆலையதிபர்களின் கூக்குரல் சரியெனக் கொண்டு, தொழிலாளர்கள் நாளின் மிகப் பெரும் பகுதியை கட்டடங்கள், இயந்திர சாதனம், பஞ்சு, நிலக்கரி இன்ன பிறவற்றின் மதிப்பை உற்பத்தி செய்வதில், அதாவது மறுவுற்பத்தி செய்வதில் அல்லது மாற்றீடு செய்வதில் செலவிடுவதாக அவர் நம்புவாரானால், அவரது பகுப்பாய்வு வீண் வேலையே. அவர் இவ்வாறே பதிலளித்திருப்பார்: — கனவான்களே! நீங்கள் உங்கள் ஆலைகளை 11½ மணி நேரத்துக்குப் பதிலாக 10 மணி நேரம் இயக்கினால், மற்றவை சமமாயிருக்க, பஞ்சு, இயந்திர சாதனம் இன்ன பிறவற்றின் அன்றாட நுகர்வு அதே விகிதத்தில் குறையும். நீங்கள் எவ்வளவு இழக்கிறீர்களோ அதே அளவு ஆதாயமடைகிறீர்கள். முன்னீடு செய்யப்பட்டிருக்கும் மூலதனத்தை மறுவுற்பத்தி செய்வதில் அல்லது மாற்றீடு செய்வதில் உங்கள் தொழிலாளர்கள் இனிமேல் ஒன்றரை மணி நேரம் குறைவாகச் செலவிடுவர். — மறு புறம் ஆலையதிபர்கள் சொல்வதை மேலும் ஆராயாமல் நம்பவில்லையானால், இத்தகையவற்றில் நிபுணர் என்ற முறையில் பகுப்பாய்வு அவசியமெனக் கருதுவாரானால், வேலை-நாளின் கால அளவுக்கும் நிகர இலாபத்துக்குமுள்ள உறவையே பிரத்தியேகமாக ஆராய்கிற இப்பிரச்சினையில் ஆலையதிபர்களிடம் அவர் யாவற்றுக்கும் முதலாய் ஒன்றைச் சொல்லியிருக்க வேண்டும். இயந்திர சாதனம், பட்டறைகள், கச்சாப் பொருள், உழைப்பு இவற்றை ஒரே இனமாய் ஒன்று சேர்க்காமல் கவனமாய் இருக்குமாறும், அருள் கூர்ந்து கட்டடங்கள், இயந்திர சாதனம், கச்சாப் பொருள் முதலானவற்றில் முதலீடாகியுள்ள மாறா-மூலதனத்தைக் கணக்கின் ஒரு பக்கத்திலும், கூலியில் முன்னீடு செய்யப்பட்ட மூலதனத்தை மறு பக்கத்திலும் வைத்துக் கொள்ளுமாறும் சொல்லியிருக்க வேண்டும். அப்போது, ஆலையதிபர்களது கணக்கீட்டின் படி தொழிலாளி 2 அரை மணிகளில் தன் கூலியை மறுவுற்பத்தி செய்கிறார், அல்லது மாற்றீடு செய்கிறார் என்று காணும் பட்சத்தில், பேராசிரியர் தமது பகுப்பாய்வைப் பின்வருமாறு தொடர்ந்திருக்க வேண்டும்.

உங்கள் எண் விவரங்களின் படி, தொழிலாளி கடைசிக்கு முந்தைய மணியில் தன் கூலியை உற்பத்தி செய்கிறார். கடைசி மணியில் உங்கள் உபரி-மதிப்பை அல்லது நிகர இலாபத்தை

---

என்பதை, அதாவது மொத்த இலாபத்தைக் கொடுக்கிற 3 அரை மணிகள் எஞ்சுகின்றன. இந்த 3 அரை மணிகளில் ஒன்று $1/23 \times £115,000 = £5,000$ என்ற உற்பத்தியைக் கொடுக்கிறது: அதாவது இயந்திர சாதனத்தின் தேய்மானத்தை ஈடு செய்கிறது; மீதமுள்ள 2 அரை மணிகள் (அதாவது கடைசி மணி) $2/23 \times £115,000 = £10,000$ என்ற உற்பத்தியை, அதாவது நிகர இலாபத்தைக் கொடுக்கின்றன. வாசகத்தில் சீனியர் உற்பத்திப் பொருளின் கடைசி $2/23$ பாகத்தை வேலை-நாளின் பகுதியாகவே மாற்றி விடுகிறார்.

உற்பத்தி செய்கிறார். இப்போது, அவர் சம கால அளவுகளில் சம மதிப்புகளை உற்பத்தி செய்வதால், கடைசிக்கு முந்தைய மணியின் உற்பத்தியும் கடைசி மணியின் உற்பத்தியும் ஒரே மதிப்புடையன வாகவே இருக்க வேண்டும். மேலும் அவர் மதிப்பேதும் உற்பத்தி செய்வது உழைக்கும் போதுதான். அவரது உழைப்பின் அளவு அவரது உழைப்பு நேரத்தால் அளவிடப்படுகிறது. இந்த நேரம் நாள் ஒன்றுக்கு 11½ மணி ஆவதாகக் கூறுகிறீர்கள். இந்த 11½ மணி நேரத்தில் ஒரு பகுதியைத் தன் கூலியை உற்பத்தி அல்லது மாற்றீடு செய்வதிலும், மீதப் பகுதியை உங்கள் நிகர இலாபத்தை உற்பத்தி செய்வதிலும் அவர் செலவிடுகிறார். இதற்கு மேல் அவர் எதுவும் செய்வதில்லை. ஆனால் உங்கள் அனுமானத்தின் அடிப் படையில், அவரது கூலியும் அவர் விளைவிக்கும் உபரி-மதிப்பும் சம மதிப்புள்ளவை என்பதால் அவர் தன் கூலியை 5¾ மணி நேரத்திலும் உங்கள் நிகர இலாபத்தை மீதமுள்ள 5¾ மணி நேரத்திலும் உற்பத்தி செய்கிறார் என்பது தெளிவு. மேலும், 2 மணி நேரத்தில் உற்பத்தி செய்யப்படும் நூலின் மதிப்பு அவரது கூலி, உங்களது நிகர இலாபம் ஆகியவற்றினது மதிப்புகளின் மொத் தத்துக்குச் சமம் என்பதால், இந்த நூலினது மதிப்பின் அளவை 11½ வேலை-மணியாக இருக்க வேண்டும்; இதில் 5¾ மணி நேரம் கடைசிக்கும் முந்தைய மணியில் உற்பத்தி செய்யப்பட்ட நூலின் மதிப்பையும் 5¾ மணி நேரம் கடைசி மணியில் உற்பத்தி செய்யப்பட்ட நூலின் மதிப்பையும் அளவிடுகின்றன. இப்போது ஒரு சிக்கலான நிலைக்கு வருகிறோம்; எனவே, கவனமாயிருங்கள்! கடைசிக்கு முந்தைய வேலை-மணி முதல் வேலை-மணியைப் போலவே சாதாரண வேலை-மணி ஆகும்; மேலானதோ கீழா னதோ அன்று. அப்படியானால் நூற்பாளர் 5¾ மணி நேர உழைப்பு உருக்கொள்ளும் மதிப்பை நூலின் வடிவில் ஒரு மணி நேரத்தில் உற்பத்தி செய்ய முடிவது எப்படி? இப்படிப்பட்ட அற் புதம் எதையும் அவர் செய்வதில்லை என்பதே உண்மை. ஒரு மணி நேரத்தில் அவர் உற்பத்தி செய்யும் பயன்-மதிப்பு குறிப்பிட்ட அளவிலான நூலாகும். இந்த நூலின் மதிப்பு 5¾ வேலை-மணி களால் அளவிடப்படுகிறது; இதில் 4¾ வேலை-மணிகள் உற் பத்திச் சாதனங்களில், பஞ்சு, இயந்திர சாதனம் போன்றவற்றில் அவரது உதவி ஏதுமின்றி முன்னதாகவே உருக்கொண்டவை. மீதமுள்ள ஒரு மணி மட்டுமே அவரால் சேர்க்கப்படுகிறது. எனவே, அவரது கூலி 5¾ மணி நேரத்தில் உற்பத்தி செய்யப்படுகிறது; ஒரு மணி நேரத்தில் உற்பத்தி செய்யப்படும் நூலிலும் 5¾ மணி நேர வேலை அடங்கியுள்ளது என்பதால் அவரது 5¾ மணி நேர நூற்பால் படைக்கப்படும் மதிப்பு ஒரு மணி நேரத்தில் நூற்கப்படும் உற்பத்திப் பொருளின் மதிப்புக்குச் சமம் என்பதில் மந்திரமோ மாயமோ ஒன்றுமில்லை. பஞ்சு, இயந்திர சாதனம் போன்றவற்றின்

மதிப்புகளை மறுவுற்பத்தி அல்லது மாற்றீடு செய்வதில் அவர் வேலை-நாளில் ஒரே ஒரு கணத்தை இழப்பதாக நினைத்தாலும், நீங்கள் போகும் பாதை முற்றிலும் தவறானது. மாறாக, பஞ்சு, கதிர்கள் ஆகியவற்றின் மதிப்புகள் தாமாகவே நூலுக்குப் பெயர்வது அவரது உழைப்பு பஞ்சையும் கதிர்களையும் நூலாக மாற்றுவதாலேயே, அவர் நூற்பதாலேயே. இந்த விளைவின் காரணம் அவரது உழைப்பின் பண்பே தவிர அளவன்று. அவர் பஞ்சின் உருவில் நூலுக்கு அரை மணி நேரத்தில் பெயர்ப்பதை விட அதிக மதிப்பை ஒரு மணி நேரத்தில் பெயர்ப்பார் என்பது உண்மைதான். ஆனால் அரை மணி நேரத்தில் நூற்பதை விட அதிகமான பஞ்சை ஒரு மணி நேரத்தில் நூற்கிறார் என்பதே இதற்குக் காரணம். அப்படியானால், தொழிலாளி கடைசிக்கு முந்தைய மணியில் தன் கூலியின் மதிப்பையும், கடைசி மணியில் உங்கள் நிகர இலாபத்தையும் உற்பத்தி செய்கிறார் என்ற உங்களது வாதம் குறிப்பது என்ன? வேலை-நாளின் முதல் 2 மணி என்றாலும் சரி, கடைசி 2 மணி என்றாலும் சரி, 2 வேலை-மணியில் அவர் உற்பத்தி செய்கிற நூலில் 11½ வேலை-மணிகள் — அல்லது சரியாக ஒரு முழு நாளின் வேலை— அதாவது அவருக்குச் சொந்தமான வேலையின் இரண்டு வேலை-மணியும் மற்றவர்களுக்குச் சொந்தமான 9½ வேலை-மணியும் சேர்க்கப்பட்டுள்ளன என்பதே. முதல் 5¾ மணியில் தனது கூலியையும், கடைசி 5¾ மணியில் உங்களது நிகர இலாபத்தையும் அவர் உற்பத்தி செய்கிறார் என்ற எனது வாதம் குறிப்பது என்ன? நீங்கள் அவருக்கு ஊதியமளிப்பது முன்னதற்கே, பின்னதற்கன்று என்பதே. உழைப்புச் சக்திக்கு விலை கொடுத்தல் என்பதற்கு பதில் உழைப்புக்கு விலை கொடுத்தல் என்று பேசும் போது, உங்களது கொச்சை மொழியையே பேசுகிறேன். கனவான்களே, இப்போது நீங்கள் ஊதியமளிக்கும் வேலை நேரத்தை ஊதியம் அளிக்காத வேலை நேரத்தோடு ஒப்பிட்டுப் பாருங்கள். இரண்டுக்கும் இடையிலான உறவு அரை நாளுக்கும் அரை நாளுக்கும் இடையிலான உறவுதான் என்பதைக் காண்பீர்கள்; இதிலிருந்து கிடைக்கும் உபரி-மதிப்பு வீதம் 100%; அற்புதமான சதவீதம் இது. மேலும் உங்கள் ''ஆட்கள்'' 11½ மணி நேரத்துக்கு பதில் 13 மணி நேரம் பாடுபடுமாறு நீங்கள் செய்தால், அதிகப்படியான அந்த ஒன்றரை மணியில் செய்யப்படும் வேலையைக் கலப்பற்ற உபரி-உழைப்பாக நீங்கள் மதித்தால்— இது உங்களிடம் எதிர்பார்க்கக் கூடியதே— உபரி-உழைப்பு 5¾ மணி நேரத்திலிருந்து 7¼ மணி நேரமாக அதிகரிக்கும் என்பதிலும், உபரி-மதிப்பு வீதம் 100% என்பதிலிருந்து $126\frac{2}{23}$% ஆக அதிகரிக்கும் என்பதிலும் துளியும் சந்தேகமில்லை. ஆகவே, வேலை-நாளோடு இவ்விதம் 1½ மணியைச் சேர்ப்பதன் மூலம், உபரி-மதிப்பு வீதம் 100% என்பதிலிருந்து

200% ஆகவும், அதற்கதிகமாகவும் கூட உயரும் என்று, அதாவது ''இரு மடங்குக்கும் அதிகம்'' ஆகும் என்று நீங்கள் எதிர்பார்ப்பது மிதமிஞ்சிய நன்னம்பிக்கையைக் காட்டுகிறது. மறு புறம்—மனிதனின் உள்ளம் அதியற்புதமானது, முக்கியமாகப் பணப் பையில் அதனை ஏந்திச் செல்லும் போது—உழைப்பு நேரத்தை 11½ மணி என்பதிலிருந்து 10 மணியாகக் குறைத்ததும் உங்கள் நிகர இலாபம் அடியோடு ஒழிந்து போகும் என்று நீங்கள் அஞ்சுவது மிதமிஞ்சிய அவநம்பிக்கையைக் காட்டுகிறது. அப்படியெல்லாம் நடக்கவே நடக்காது. ஏனைய எல்லா நிலைமைகளும் மாறாதிருக்க உபரி-உழைப்பு 5¾ என்பதிலிருந்து 4¾ மணியாகக் குறையும்; குறைவுற்ற இந்த நேரத்திலும் கூட மிகவும் இலாபகரமான உபரி-மதிப்பு வீதம்—அதாவது $82\frac{14}{23}$ %—கிடைக்கிறது. ஆனால் நல்லாயிரமாண்டுக்காரர்கள் [millenarians] இறுதித் தீர்ப்பு நாள் பற்றிக் கட்டியுள்ள கதைகளையும் விஞ்சும் படி நீங்கள் கதை கட்டியுள்ளீர்களே, அந்தப் படுபயங்கரக் ''கடைசி மணி நேரம்'' என்பது ''எல்லாம் வெத்து வேட்டு.'' அந்த மணி நேரம் இல்லாமற் போவதால், நீங்கள் உங்கள் நிகர இலாபத்தை இழக்கப் போவதும் இல்லை. உங்களிடம் வேலை செய்கிற பையன்களும் பெண்களும் அவர்களது ''மனத் தூய்மையை'' இழக்கப் போவதும் இல்லை.[213]

---

[213] ஒரு புறம், ஆலை அதிபரின் நிகர இலாபமும் ஆங்கிலேயப் பஞ்சுத் தொழிலின் வாழ்வும் உலகச் சந்தைகளில் இங்கிலாந்தின் ஆதிக்கமும் ''கடைசி வேலை-மணி நேரத்தையே'' சார்ந்திருப்பதாக சீனியர் நிரூபித்தார் என்றால், மறு புறம், 18 வயதுக்குட்பட்ட குழந்தைகளையும், இளம் வயதினரையும் தொழிற்சாலையின் கதகதப்பான, சுத்தமான தார்மிகச் சூழ்நிலையில் முழுதாக 12 மணி நேரத்துக்கு வைத்திருப்பதற்கு பதில், இதயமில்லாத, அற்பத்தனமான வெளியுலகிற்கு ஒரு மணி நேரம் முன்னதாகவே அனுப்பி விட்டால், சோம்பேறித்தனமும் துர்க்குணமும் சேர்ந்து அவர்களுக்கு ஆத்ம விமோசனத்துக்கே வழியில்லாமல் செய்து விடும் என்று டாக்டர் ஆண்ட்ரூ யூர் தெளிவாக்கினார். 1848 முதற்கொண்டே, தொழிலதிபர்களை இந்தக் ''கடைசி,'' ''பயங்கர மணி நேரம்'' குறித்து தொழிற்சாலை ஆய்வாளர்கள் அயராது கண்டித்து வந்திருக்கிறார்கள். உதாரணமாக 1855 மே 21 தேதிய அறிக்கையில் திரு ஹோவெல் கூறுகிறார்: ''கீழ்க்கண்ட சாதுரியமான கணக்கீடு (அவர் சீனியரை மேற்கோள் காட்டுகிறார்) சரியாக இருந்திருக்குமேயானால் ஐக்கிய முடியரசில் [United Kingdom] ஒவ்வொரு பஞ்சாலையும் 1850ஆம் ஆண்டு முதற் கொண்டே நஷ்டத்தில் ஓடியிருக்கும்.'' (1855 ஏப்ரல் 30ஆம் நாள் முடிகிற அரையாண்டுக்கான தொழிற்சாலை ஆய்வாளர் அறிக்கைகள், பக்கம் 19, 20.) 1848ஆம் ஆண்டில், 10 மணி நேர மசோதா நிறைவேறிய பின்னர், டோர்செட், சாமர்செட் ஆகியவற்றின் எல்லைகளில் கிராமப்புறத்தில் இங்கொன்றும் அங்கொன்றுமாய் சிதறியிருந்த வெண்சணல் நூற்பாலைகள் சிலவற்றின் அதிபர்கள் இம்மசோதாவுக்கு எதிரான ஒரு மனுவை அவர்களது வேலையாட்கள் சிலரின் தலையில் கட்டினர். இந்த மனுவின் சரத்துகளில் ஒன்று பின்வருமாறு: ''சோம்பேறித்தனம் துர்க்குணத்தின் தந்தை என்று கருதுகிற உங்கள் மனுதாரர்கள் பெற்றோர் என்ற முறையில் கூற விரும்புவது என்னவென்றால், கூடுதலாக ஒரு மணி நேரம் வேலையின்றி ஓய்ந்திருப்பது குழந்தைகளைக் கெடுப்பதற்கே ஏதுவாகும்.'' இது பற்றி 1848 அக்டோபர் 31 தேதிய தொழிற்சாலை அறிக்கை கூறுகிறது: இந்த நற்குணமிக்க அன்புப் பெற்றோர்களின் குழந்தைகள் வேலை செய்கிற வெண்சணல்

மெய்யாகவே உங்களது ''கடைசி மணி'' அடிக்கிற போதெல்லாம், ஆக்ஸ்ஃபோர்டு பேராசிரியரை நினைக்கத் தவறாதீர்கள். கனவான்களே, இப்போது ''பிரியா விடை பெறுகிறோம்; அதோ அந்த நல்லுலகில் மீண்டும் சந்திப்போம், அதற்கு முன்னதாக வேண்டாம்.''

1836இல் ''கடைசி மணி நேரப்'' போர்க் குரலை சீனியர்

---

ஆலைகளின் காற்றில் கச்சாப் பொருளிலிருந்து கிளம்பும் தூசியும் இழையும் நிறைந்துள்ளன; நூற்பு அறைகளில் பத்து நிமிடம் நிற்பது கூட சகிக்க முடியாத வேதனையாகி விடுகிறது. ஏனெனில் படலம் படலமாக வெண்சணலிலிருந்து எழும் தூசி கண்ணிலும், காதிலும், மூக்கிலும், வாயிலும் புகுந்து கொள்கிறது; தப்ப வழியில்லை. இதனால் ஏற்படுகிற வேதனை உணர்ச்சி உங்களை அங்கே நிற்க விடாது; இயந்திர சாதனத்தின் ஜுர வேக அவசரம் காரணமாய் உழைப்பும் கூட ஒரு போதும் சளைக்காத கண்காணிப்பின் கட்டுப்பாட்டில் தேர்ச்சி, அங்க இயக்கம் இவற்றின் ஓயாத பிரயோகத்தைக் கோருகிறது; சாப்பாட்டு நேரம் போக முழுதாக 10 மணி நேரத்துக்கு இப்படியொரு வேலையோடு இப்படியொரு சூழ்நிலையில் பிணைக்கப்பட்டிருக்கும் தம் சொந்தக் குழந்தைகள் தொடர்பாக ''சோம்பியிருத்தல்'' என்ற பதத்தைக் கையாள பெற்றோரை அனுமதிப்பது சற்று கடினமாகவே இருக்கிறது....அண்டைக் கிராமங்களிலிருக்கும் உழைப்பாளிகளை விட இக்குழந்தைகள் அதிக நேரம் வேலை செய்கின்றனர்....''சோம்பியிருத்தல், துர்க்குணம்'' என்று இப்படி இரக்கமின்றிப் பேசுவதை வெறும் பகட்டு, வெட்கக் கேடான பாசாங்கு என்றே கண்டிக்க வேண்டும்....ஆலை அதிபரின் நிகர இலாபம் முழுவதும் கடைசி மணி நேர உழைப்பிலிருந்தே வருகிறது என்றும், எனவே வேலை-நாளை ஒரு மணி நேரம் குறைப்பது அவரது நிகர இலாபத்தை அழித்து விடும் என்றும் பகிரங்கமாகவும், உண்மை விளம்பிக்குரிய முனைப்போடும் உயர் அந்தஸ்துடையோரின் ஒப்புதலுடன் பிரகடனம் செய்யப்பட்டதில் தொனித்த உறுதிப்பாடு பொது மக்களில் ஒரு பிரிவினரை அயரச் செய்தது. கடைசி மணி நேரத்தின் சிறப்புகள் பற்றிய அந்த ஆரம்பக் கண்டுபிடிப்பு, அதன் பின், இலாபம் மட்டுமல்லாமல் ஒழுக்கமும் உட்படுமாறு வெகுவாக விரிவுபடுத்தப்பட்டிருப்பதைக் காணும் போது மக்களின் அப்பிரிவினர் தம் கண்களையே நம்புவது கடினம் என்கிறோம். குழந்தைகளின் உழைப்பு நேரத்தை ஒரு முழு மணி நேரம் குறைத்து 10 மணி நேரமாக்கினால், அக்குழந்தைகளை வேலைக்கு அமர்த்துவோரின் நிகர இலாபங்கள் மட்டுமன்றி, அக்குழந்தைகளின் ஒழுக்கமும் (இவ்விரண்டுமே இந்தப் படுபயங்கரமான கடைசி மணி நேரத்தையே பொறுத்தவை என்பதால்) இல்லாதொழிந்து விடும் என்னுமளவுக்கு இக்கண்டுபிடிப்பு விரிவாக்கப்பட்டிருக்கிறது. (பார்க்கவும்: தொழிற்சாலை ஆய்வாளர் அறிக்கைகள், 1848 அக்டோபர் 31க்கானவை, பக்கம் 101.) பிறகு இந்த அறிக்கை தூய உள்ளம் படைத்த அதே ஆலையதிபர்களின் ஒழுக்கத்துக்கும் நற்குணத்துக்கும் உதாரணங்கள் சிலவற்றைத் தருகிறது; முதலில் பாதுகாப்பற்ற ஒரு சில தொழிலாளர்களை இம்மாதிரியான மனுக்களில் கையொப்பமிடுமாறு நிர்ப்பந்திக்கும் பொருட்டும், பின்னர் தொழிற் கிளை முழுவதுமே அல்லது நாடு முழுவதுமே தந்த மனுக்களாக அவற்றைப் பாராளுமன்றத்தின் முன் வைத்து வற்புறுத்தும் பொருட்டும், அவர்கள் பயன்படுத்திய தந்திரங்கள், உத்திகள், பசப்புகள், அச்சுறுத்தல்கள், தகிடுதத்தங்கள் ஆகியவற்றைக் காட்டுபவை அந்த உதாரணங்கள். பின்னொரு கட்டத்தில் தொழிற்சாலைச் சட்ட நெறியை விறுவிறுப்புடன் ஆதரித்தவரான சீனியரும் சரி—அவருக்குரிய பெருமையாகவே இதைக் குறிப்பிடுகிறோம்—ஒருவர் கூட விலக்கின்றி அவரது எதிராளிகளும் சரி, அன்று முதல் இன்று வரை அந்த ''ஆரம்பக் கண்டு பிடிப்பின்'' பொய்யான முடிவுகளுக்கு ஒருபோதும் விளக்கம் சொல்ல முடியவில்லை. இது பொருளாதார விஞ்ஞானம் எனப்படுவதன் இப்போதைய நிலையின் தனிச் சிறப்பைக் காட்டுகிறது. இவர்கள் மெய்யான அனுபவத்தை சான்றுக்கழைக்கின்றனர்; ஆனால், காரண காரியங்கள் மருமமாகவே இருக்கின்றன.

கண்டுபிடித்தார்.[214] 1848 ஏப்ரல் 15 தேதிய லண்டன் எக்கானமிஸ்ட் இதழில், உயர் அந்தஸ்து வாய்ந்த பொருளாதார அதிகார வர்க்கத்தவரான ஜேம்ஸ் வில்சன் திரும்பவும் இக்குரலை எழுப்பினார்—இம்முறை 10 மணி நேர மசோதாவை எதிர்த்து.

## பிரிவு 4.—உபரி-உற்பத்தி

உற்பத்திப் பொருளில் உபரி-மதிப்பைக் குறிக்கும் பகுதியை (பிரிவு 2இல் தரப்பட்ட உதாரணத்தில், 20 இராத்தல் நூலில் பத்திலொரு பாகம், அதாவது 2 இராத்தல் நூல்) நாம் "உபரி-உற்பத்தி" என்று அழைக்கிறோம். உபரி-மதிப்பு வீதமானது மூலதனத்தின் மொத்தத் தொகையோடு அல்லாமல் அதன் மாறும் பகுதியோடு உபரி-மதிப்பு கொண்டுள்ள உறவால் நிர்ணயிக்கப் படுவது போலவே, உபரி-உற்பத்தியின் ஒப்பீட்டு அளவும் மொத்த உற்பத்திப் பொருளின் எஞ்சிய பகுதியோடு அல்லாமல், அவசிய-உழைப்பு சேர்க்கப்பட்டுள்ள உற்பத்திப் பொருட் பகுதியோடு இந்த உபரி-உற்பத்தி கொண்டுள்ள உறவாலேயே நிர்ணயிக்கப்படுகிறது. உபரி-மதிப்பின் உற்பத்தி முதலாளித்துவப் பொருளுற்பத்தியின் முதற் பெரும் குறிக்கோள் ஆகும் என்பதால் ஒரு மனிதனின் அல்லது நாட்டின் செல்வச் சிறப்பை அளவிட்டுக் காட்டுவது மொத்த உற்பத்தியின் அறுதி அளவு அன்று, உபரி-உற்பத்தியின் ஒப்பீட்டுப் பருமனே என்பது தெளிவு.[215]

---

[214] இது ஒரு புறமிருக்க, கற்றறிந்த பேராசிரியருக்கு அவரது மான்செஸ்டர் பயணத்திலிருந்து சிறிது ஆதாயம் கிடைக்காமலில்லை. "தொழிற்சாலைச் சட்டம் பற்றிய கடிதங்கள்" என்பதில், அவர் "இலாபமும்" "வட்டியும்", ஏன், "வேறு சிலவும்" உட்பட நிகர ஆதாயங்கள் முழுவதும் தொழிலாளியின் ஊதியமில்லாத அந்த ஒரு மணி நேர வேலையையே சார்ந்திருக்கும் படி செய்கிறார். ஓராண்டு முன்னதாக "அரசியல் பொருளாதாரத்தின் உருவரைகள்" என்ற நூலில்—ஆக்ஸ்ஃபோர்டு மாணவர்கள், பண்பட்ட அற்பவாதிகள் ஆகியோரின் போதத்துக்காக இது எழுதப்பட்டது—இன்னொன்றையும் கண்டுபிடித்துக் கூறியிருந்தார். "மதிப்பை உழைப்பால் நிர்ணயிக்கும் ரிக்கார்டோவுக்கு எதிராக, இலாபம் முதலாளியின் உழைப்பிலிருந்தும், வட்டி அவரது சன்னியாசத்திலிருந்தும், அதாவது அவரது துறவிலிருந்தும் பெறப்படுவதாகக் கண்டுபிடித்துக் கூறியிருந்தார்." இந்த ஏமாற்று வித்தை பழையதே; ஆனால் "துறவு" என்ற சொல் புதிது. திருவாளர் ரோஷர் இதை "Enthaltung" என்று சரியானபடி மொழி பெயர்க்கிறார். லத்தீன் மொழியில் அவ்வளவாக அனுபவம் இல்லாதவர்களான அவரது நாட்டினர் சிலர்—ஜெர்மானிய நாட்டின் பிரவுன்களும், ஜோன்களும், ராபின்சன்களும்—அதைத் துறவிக்குரிய பாணியில் "Entsagung" (இன்பம் துறத்தல்) என்று மொழிபெயர்த்துள்ளனர்.

[215] "£20,000 மூலதனத்தைக் கொண்டு ஒருவர் ஆண்டுக்கு £2,000 இலாபம் பெறுகிறார் என்றால், அவரது இலாபம் £2,000க்கு குறையாதிருக்கும் வரை, அவரது மூலதனம் வேலைக்கு அமர்த்துவது 100 ஆட்களா, 1,000 ஆட்களா என்பது குறித்தோ உற்பத்தியான சரக்கு £10,000க்கு விற்கப்படுகிறதா, £20,000க்கு விற்கப்படுகிறதா

அவசிய-உழைப்பு, உபரி-உழைப்பு ஆகியவற்றின் மொத்தம் தான், அதாவது தொழிலாளி தன் உழைப்புச் சக்தியின் மதிப்பை மாற்றீடு செய்து கொள்வதற்காகும் நேரம், உபரி-மதிப்பை உற்பத்தி செய்வதற்காகும் நேரம் ஆகியவற்றின் மொத்தம்தான் உள்ளபடியே அவர் வேலை செய்கிற நேரமாகிய வேலை-நாள் எனப்படுவது.

---

என்பது குறித்தோ அவர் கொஞ்சம் கூடக் கவலைப்படத் தேவையில்லை. நாட்டின் உண்மை நலனும் இது போன்றதே அன்றோ? நாட்டின் நிகர உண்மை வருமானம்—அதன் வாடகையும் இலாபங்களும்—மாறாதிருக்கும் பட்சத்தில், நாட்டில் வசிப்போர் 10 மிலியனா, 12 மிலியனா என்பது சிறிதும் முக்கியமன்று.'' (ரிக்கார்டோ, முன் வந்தது, பக்கம் 416.) ரிக்கார்டோவுக்கு நெடுங்காலம் முன்னரே உபரி-உற்பத்தியை வெறித்தனமாக ஆதரித்தவரும், மற்றபடி விமர்சனக் கண்ணோட்டமில்லாத உளறுவாயரும் தன் தகுதிக்கு எதிர் விகிதத்தில் கீர்த்தியுடையவருமான ஆர்தர் யங் கூறுகிறார்: ''இவ்வாறு ஒரு முழு மாகாணமே (பழைய ரோமானிய பாணியில், சுயேச்சையான சிறு விவசாயிகளால்) பிரித்துக் கொள்ளப்படுகையில் அது எவ்வளவுதான் நன்றாகச் சாகுபடி செய்யப்பட்ட போதிலும், தனித்துப் பார்த்தால் எதற்கும் உதவாத காரியமான இனவிருத்திக் காரியத்துக்குத் தவிர, இக்கால அரசிற்கு அம்மாகாணத்தால் . என்ன பயன்?'' (ஆர்தர் யங்: ''அரசியல் எண் கணிதம்...,'' லண்டன், 1774, பக்கம் 47.)

''நிகர செல்வம் உழைக்கும் வர்க்கத்துக்கு நலம் பயக்கிறதென்று காட்டுவதில்...இது நிகர செல்வமாய் இருப்பதால் அல்ல என்று தெளிவாய்த் தெரிந்த போதிலும்.... காணப்படுகிற அலாதியான விருப்பம்'' விசித்திரமானதே. (தா. ஹாப்கின்ஸ், ''நில வாடகை பற்றியும்...,''லண்டன், 1828, பக்கம் 126.)

## அத்தியாயம் X

# வேலை-நாள்

### பிரிவு 1. — வேலை-நாளின் வரம்புகள்

உழைப்புச் சக்தி வாங்கப்படுவதும் விற்கப்படுவதும் அதன் மதிப்புக்கே என்ற அனுமானத்துடன் ஆரம்பித்தோம். அதன் மதிப்பு, மற்றெல்லாச் சரக்குகளின் மதிப்பையும் போலவே, அதன் உற்பத்திக்கு அவசியமான வேலை நேரத்தால் நிர்ணயிக்கப்படுகிறது. தொழிலாளியின் அன்றாட சராசரி வாழ்வுச் சாதனங்களின் உற்பத்திக்கு 6 மணி நேரமானால் தனது அன்றாட உழைப்புச் சக்தியை உற்பத்தி செய்ய அல்லது அதன் விற்பனையின் விளைவாகக் கிடைக்கப் பெறுகிற மதிப்பை மறுவுற்பத்தி செய்ய அவர் சராசரியாக ஒவ்வொரு நாளும் 6 மணி நேரம் வேலை செய்ய வேண்டும். அவரது வேலை-நாளின் அவசியப் பகுதி 6 மணி நேரம் ஆகிறது; எனவே, மற்றவை மாறாதிருக்க, அது குறிப்பிட்ட அளவாகும். ஆனால் இந்நிலையிலும் வேலை-நாளின் நீளம் குறிப்பிட்ட ஒன்றாகி விடுவதில்லை.

A B என்ற கோடு அவசிய வேலை நேரத்தின் அளவினை, எடுத்துக்காட்டாக 6 மணி நேரத்தைக் குறிப்பதாகக் கொள்வோம். உழைப்பு A Bஐத் தாண்டி 1,3 அல்லது 6 மணி நேரம் நீட்டிக்கப் படுமாயின் நாம் இன்னும் 3 கோடுகளைப் பெறுகிறோம்.

| வேலை-நாள் I | வேலை-நாள் II | வேலை-நாள் III |
| --- | --- | --- |
| A———B—C | A———B——C | A———B———C |

இவை 7,9,12 மணிகள் கொண்ட 3 விதமான வேலை-நாட்களைக் குறிக்கின்றன. A B என்ற கோட்டின் B C என்ற நீட்டிப்பு உபரி-உழைப்பின் கால அளவைக் குறிக்கிறது. வேலை-நாள் என்பது A B + B C, அதாவது A C என்பதால், மாறும் அளவான B Cக்கு ஏற்ப மாறுபடுகிறது. A B மாறா அளவென்பதால், A Bஉடனான B Cஇன் விகிதம் எப்போதும் கணக்கிடக் கூடியதே. அது

வேலை-நாள் Iஇல் A Bஇல் $\frac{1}{6}$ ஆகும், வேலை-நாள் IIஇல் A Bஇல் $\frac{3}{6}$ ஆகும், வேலை-நாள் IIIஇல் ABஇல் $\frac{6}{6}$ ஆகும். மேலும் $\frac{\text{உபரி வேலை நேரம்}}{\text{அவசிய வேலை நேரம்}}$ என்ற விகிதம் உபரி-மதிப்பு வீதத்தை நிர்ணயிக்கிறது என்பதால், இவ்வீதம் A Bஉடனான B Cஇன் விகிதத்தால் தரப்படுகிறது. அது 3 வெவ்வேறு வேலை-நாட்களிலும் முறையே 16⅔, 50, 100 சதவீதம் ஆகிறது. மறு புறம், உபரி-மதிப்பு வீதம் மட்டுமே வேலை-நாளின் கால அளவை நமக்குத் தந்திடாது. இந்த வீதம் உதாரணத்துக்கு 100 சதவீதமாய் இருக்குமேயானால், வேலை-நாள் 8,10,12 அல்லது இன்னும் அதிகமான மணிகளைக் கொண்டதாக இருக்கலாம். வேலை-நாளின் 2 அடக்கக் கூறுகளான அவசிய-உழைப்பு நேரமும், உபரி-உழைப்பு நேரமும் அளவில் சமம் என்பதை அது காட்டும். ஆனால் இவ்விரு கூறுகளில் ஒவ்வொன்றும் எவ்வளவு கால அளவு கொண்டது என்பதை அது காட்டாது.

இவ்வாறு, வேலை-நாள் என்பது மாறும் அளவே ஒழிய மாறா அளவன்று. அதன் பகுதிகளில் ஒன்று தொழிலாளியினது உழைப்புச் சக்தியின் மறுவுற்பத்திக்கு அவசியமான வேலை நேரத்தால் நிர்ணயிக்கப்படுவது மெய்தான். ஆனால், அதன் மொத்த அளவு உபரி-உழைப்பு நீடிக்கும் காலத்துக்கேற்ப மாறுபடுகிறது. ஆகவே, வேலை-நாள் நிர்ணயிக்கப்படக் கூடியது, ஆனால் தன்னளவில் நிர்ணயமற்றது.[216]

வேலை-நாள் என்பது நிலையான அளவன்று, மாறத்தக்க அளவே என்ற போதிலும், மறு புறம் அது குறிப்பிட்ட வரம்புகளுக்கு உட்பட்டே மாற முடியும். ஆயினும் குறைந்தபட்சமாகிய கீழ் வரம்பு நிர்ணயிக்கப்படக் கூடியதன்று; B C என்ற நீட்டிப்புக்கோடு அல்லது உபரி-உழைப்பு=0 என்று ஆக்கினால், கீழ் வரம்பை, அதாவது தன் சொந்தப் பராமரிப்புக்காக தொழிலாளி அவசியம் வேலை செய்ய வேண்டிய நாட்பகுதியைப் பெறுகிறோம். ஆயினும், முதலாளித்துவப் பொருளுற்பத்தியின் அடிப்படையில், இந்த அவசிய-உழைப்பு வேலை-நாளின் பகுதியாகவே அமைய முடியும்; வேலை-நாளோ ஒரு போதும் இந்தக் கீழ் வரம்பாகக் குறைக்கப் படக் கூடியதன்று. மறு புறம், வேலை-நாளுக்கு மேல்வரம்பு உண்டு. குறிப்பிட்ட நிலைக்கப்பால் அதை நீட்ட முடியாது. இந்த மேல்வரம்பை நிர்ணயிப்பவை இரு காரணிகள். முதல் காரணி உழைப்புச் சக்தியின் பௌதிக எல்லைகள் ஆகும். இயற்கையான

---

216 ''ஒரு நாள் உழைப்பு என்பது தெளிவில்லாத ஒன்று; அது நீண்டதாகவும் இருக்கலாம், குறுகியதாகவும் இருக்கலாம்.'' (''தொழில், வாணிபம் பற்றிய கட்டுரை. வரிகள் முதலியவை பற்றிய கண்ணோட்டங்கள் அடங்கியது,'' லண்டன், 1770, பக்கம் 73.)

நாளின் 24 மணி நேரத்துக்குள் மனிதன் தனது ஜீவ ஆற்றலில் குறிப்பிட்ட அளவையே செலவிட முடியும். இதே போல் ஒரு குதிரை தினந்தோறும் 8 மணி நேரமே வேலை செய்ய முடியும். நாளின் ஒரு பகுதியில் இந்த ஆற்றல் ஓய்வு எடுக்க வேண்டும், உறங்க வேண்டும்; இன்னொரு பகுதியில் மனிதன் இதர பௌதிகத் தேவைகளை நிறைவு செய்து கொள்ள வேண்டும்; உண்ணவும், குளிக்கவும், உடுக்கவும் வேண்டும். முற்றிலும் பௌதிகத் தன்மை வாய்ந்த இந்த வரையறைகளோடு, தார்மிகத் தன்மை வாய்ந்த வரையறைகளும் வேலை-நாளின் நீட்டிப்புக்குத் தடை ஆகின்றன. அறிவுத் தேவைகளையும், சமூகத் தேவைகளையும் நிறைவு செய்து கொள்வதற்கு உழைப்பாளிக்கு நேரம் தேவைப்படுகிறது; இத் தேவைகளின் அளவும் எண்ணிக்கையும் சமுதாய முன்னேற்றத்தின் பொது நிலையால் நிர்ணயிக்கப்படுகின்றன. எனவே வேலை-நாளின் கால அளவிலான ஏற்ற இறக்கம் பௌதிக, சமுதாய எல்லைகளுக்கு உட்பட்டது. ஆனால், வேலை-நாளுக்கு வரம்பு கட்டும் இவ்விரு நிலைமைகளும் நெகிழ்ச்சி மிக்கவை; இவை மிகப் பெரும் நீக்குப் போக்கிற்கு இடமளிக்கின்றன. எனவே, 8, 10, 12, 14, 16, 18 மணி நேர வேலை-நாட்களை, அதாவது மிகவும் வேறுபட்ட கால அளவுகளுடைய வேலை-நாட்களைக் காண் கிறோம்.

முதலாளி உழைப்புச் சக்தியை அதன் நாள் வீதத்துக்கு வாங் கியுள்ளார். ஒரு வேலை-நாள் முழுக்க அச்சக்தியின் பயன்-மதிப்பு அவருக்குரியது. இவ்வாறு, அவர் ஒரு நாள் முழுக்க தொழி லாளியைத் தனக்காக வேலை செய்ய வைக்கும் உரிமையைப் பெறு கிறார். ஆனால், வேலை-நாள் என்பது என்ன?[217]

எது எப்படியானாலும், அது இயற்கையான நாளுக்கும் குறை வானது. எவ்வளவு குறைவானது? இந்த எட்டாத் தொலைவு குறித்து, வேலை-நாளின் அவசிய வரம்பு குறித்து முதலாளிக் கென்று சில கருத்துகள் உண்டு. முதலாளி என்ற முறையில் அவர் மூலதனத்தின் அவதாரமே. அவரது ஆன்மா மூலதனத்தின் ஆன் மாவே. ஆனால் மூலதனத்துக்கு உயிர் மூச்சாய் இருப்பது மதிப்பையும் உபரி-மதிப்பையும் படைக்க வேண்டுமென்ற ஆவலே, அதன் மாறாக் காரணியான உற்பத்திச் சாதனங்களைக் கொண்டு முடிந்த வரை அதிக அளவு உபரி-உழைப்பை உறிஞ்ச வேண்டுமென்ற ஆவலே.[218]

---

[217] இந்தக் கேள்வி பர்மிங்காம் வர்த்தக சபையிடம் சர் ராபர்ட் பீல் கேட்ட பிரபலக் கேள்வியை விட மிகவும் முக்கியமானதாகும்; பீலின் கேள்வியாவது: பவுன் என்பது என்ன? அவர் இந்தக் கேள்வியைக் கேட்டிருக்கத்தான் முடியும்; ஏனெனில் பர்மிங்காமின் ''சிறு ஷில்லிங் ஆசாமிகளைப்'' போலவே பீலும் பணத்தின் தன்மை குறித்து அறியாதவராகத்தான் இருந்தார்.

[218] ''தான் செலவிடும் மூலதனத்தைக் கொண்டு முடிந்த வரை அதிக அளவு

மூலதனம் உயிரற்ற உழைப்பு ஆகும்; அது உதிரமாகாளியைப் போல உயிருள்ள உழைப்பை உறிஞ்சியே வாழ்கிறது; எவ்வளவு அதிகமாக உழைப்பை உறிஞ்சுகிறதோ, அவ்வளவு அதிகமாக வாழ்கிறது. தொழிலாளி வேலை செய்யும் நேரம் என்பது, முதலாளி அவரிடமிருநது வாங்கியிருக்கும் உழைப்புச் சக்தியை நுகர்கிற காலம் ஆகும்.[219]

தொழிலாளி கொடுக்கத் தக்கதாயுள்ள தனது நேரத்தைத் தனக்காகவே நுகர்ந்தால் அவர் முதலாளியைக் கொள்ளையிடுகிறவராம்.[220]

பிறகு முதலாளி சரக்குப் பரிவர்த்தனை விதியை ஒட்டி நிலையெடுக்கிறார். சரக்கு வாங்குகிற எவரையும் போலவே அவரும் தன் சரக்கின் பயன்-மதிப்பிலிருந்து முடிந்த வரை அதிகமான ஆதாயத்தைப் பெற முனைகிறார். உற்பத்தி நிகழ் முறையின் அலைக்கழிப்பில் ஒடுங்கிப் போயிருந்த தொழிலாளியின் குரல் திடீரென உயர்கிறது:

நான் உம்மிடம் விற்றிருக்கும் சரக்கின் பயன்பாடு மதிப்பைப் படைக்கிறது, சொந்த மதிப்பை விடக் கூடுதலான மதிப்பைப் படைக்கிறது என்பது அதற்கும் ஏனைய எல்லாச் சரக்குகளுக்குமுள்ள வேறுபாடு ஆகும். அதனால்தான் நீர் அதை வாங்கினீர். உமது தரப்பில் தன்னியல்பான மூலதனப் பெருக்கமாய்த் தோன்றுவது, எனது தரப்பில் உழைப்புச் சக்தியின் கூடுதல் செலவீடாகும். நீரும் நானும் சந்தையில் ஒரே ஒரு விதியை, சரக்குப் பரிவர்த்தனை விதியை அறிவோம். சரக்கு விற்பவர் அதைக் கொடுத்து விடுகிறார்; அதன் நுகர்வு அவருக்கு உரியதன்று, அதைப் பெற்றுக் கொள்பவரான வாங்குபவருக்கே உரியது. ஆகவே என் அன்றாட உழைப்புச் சக்தியின் பயன்பாடு உமக்கே உரியது. ஆனால் நீர் அதற்காக நாள்தோறும் கொடுக்கிற விலையைக் கொண்டு நான் அதை அன்றாடம் மறுவுற்பத்தி செய்யவும் மீண்டும் விற்கவும் முடிய வேண்டும். வயது முதலானவற்றால் ஏற்படும் இயற்கையான சோர்வு ஒரு புறமிருக்க, நான் இன்று போலவே நாளையும் அதே இயல்பான ஆற்றலுடனும்

---

உழைப்பைப் பெறுவது முதலாளியின் நோக்கமாகும் (d'obtenir du capital depense la plus forte somme de travail possible).'' ழா. கு. குர்சேல்-செனாவில். ''Traite theorique et pratique des entreprises industrielles.'' 2ஆம் பதிப்பு. பாரிஸ், 1857, பக்கம் 63.

[219] ''ஒரு நாளில் இழக்கப்படும் ஒரு மணி நேர உழைப்பு என்பது ஒரு வாணிப நாட்டுக்குப் பெருந் தீங்காகும்....இந்த நாட்டின் உழைக்கும் ஏழைகள் மத்தியில், குறிப்பாக ஆலைகளில் வேலை செய்யும் மக்கள் மத்தியில் சொகுசுப் பண்டங்களின் நுகர்வு மிக அதிகமாக உள்ளது; இவ்வழியில் அவர்கள் தமது நேரத்தையும் நுகர்கின்றனர்; இந்த நுகர்வு நுகர்வுகளிலேயே ஆபத்தானது.'' ''தொழில், வாணிபம் பற்றிய கட்டுரை,'' பக்கம் 47, 153.

[220] ''சுதந்தரத் தொழிலாளி வினாடி நேரம் ஓய்வெடுத்தால் கூட, அவரைக் கொட்டக் கொட்ட கண்காணிக்கும் அற்பத்தனமான நிர்வாகம் அவர் தன்னை ஏமாற்றித் திருடுவதாகக் கூறிக் கொள்கிறது.'' நி. லிங்கே, ''Theorie des Lois Civiles &c.'' லண்டன், 1767, பாகம் II., பக்கம் 466.

ஆரோக்கியத்துடனும் புத்துணர்வுடனும் வேலை செய்ய முடிய வேண்டும். நீர் ஓயாமல் என்னிடம் "சேமிப்பு," "துறவு" என்று சுவிசேஷ போதனை செய்கிறீர். நல்லது! அறிவுள்ள முறையில் சேமிக்கும் சொத்துடைமையாளரைப் போல நானும் எனது ஒரே சொத்தாகிய உழைப்புச் சக்தியைக் கட்டுச்செட்டாக நிர்வகித்து, அதன் அசட்டுத்தனமான விரயத்தை அறவே தவிர்ப்பேன். அதன் இயல்பான ஆயுளுக்கும், ஆரோக்கியமான வளர்ச்சிக்கும் ஏற்றது எவ்வளவோ அவ்வளவை மட்டுமே நான் ஒவ்வொரு நாளும் செலவிடுவேன், இயங்கச் செய்வேன், செயல்படுத்துவேன். வேலை-நாளை வரம்பின்றி நீட்டுவதன் மூலம், நான் மூன்று நாளில் மீட்கக் கூடியதை விட அதிக அளவு உழைப்புச் சக்தியை நீர் ஒரு நாளில் பயன்படுத்தி விடக் கூடும். உழைப்பின் உருவில் நீர் அடைவதை என் உடல் வலுவின் உருவில் நான் இழக்கிறேன். எனது உழைப்புச் சக்தியைப் பயன்படுத்திக் கொள்வது வேறு; சூறையாடுவது வேறு. சராசரித் தொழிலாளி (நியாயமான அளவு வேலை செய்து கொண்டு) உயிர் வாழக் கூடிய சராசரிக் காலம் 30 ஆண்டுகள் என்றால் நீர் நாள்தோறும் எனக்கு செலுத்துகிற என் உழைப்புச் சக்தியின் மதிப்பு அதன் மொத்த மதிப்பில் $\frac{1}{365 \times 30}$ அல்லது $\frac{1}{109 \times 50}$ பங்கு ஆகும். ஆனால் நீர் அதை 10 ஆண்டில் நுகர்ந்தால், அன்றாடம் நீர் எனக்கு அதன் மொத்த மதிப்பில் $\frac{1}{3650}$ பங்கைக் கொடுப்பதற்குப் பதிலாக $\frac{1}{10950}$ பங்கை, அதாவது அதன் அன்றாட மதிப்பில் ⅓ பங்கை மட்டுமே கொடுக்கிறீர். எனவே என் சரக்கின் மதிப்பில் ⅔ பங்கை நாள் தோறும் நீர் என்னிடம் கொள்ளையடிக்கிறீர். நீர் 3 நாள் உழைப்புச் சக்தியைப் பயன்படுத்திக் கொண்டு ஒரு நாள் உழைப்புச் சக்திக்கான விலையையே எனக்குக் கொடுக்கிறீர். அது நமது ஒப்பந்தத்துக்கும், பரிவர்த்தனை விதிக்கும் விரோதமானது. எனவே, இயல்பான கால அளவுள்ள வேலை-நாளை நான் கோருகிறேன்; கருணை புரியுமாறு வேண்டாமலே இதைக் கோருகிறேன்; ஏனெனில், பண விஷயங்களில் உணர்ச்சிக்கு இடமில்லை. நீர் எடுத்துக்காட்டான பிரஜையாக இருக்கலாம்; மிருகங்களுக்குக் கொடுமை இழைப்பதைத் தடுப்பதற்கான சங்கத்தில் உறுப்பினராகவும் இருக்கலாம்; புனித வாடை வீசுவோரின் திருக்கூட்டத்தைச் சேர்ந்தவராகவும் இருக்கலாம். ஆனால் எதன் பிரதிநிதியாக நீர் என் எதிரில் வருகிறீரோ அதற்கு இதயமில்லை. அதில் ஒலிப்பது என்னுடைய இதயத்தின் துடிப்பே. நான் இயல்பான வேலை-நாளைக் கோருகிறேன். சரக்கு விற்கிற ஏனைய எவரையும் போலவே எனது சரக்கின் மதிப்பையே நானும் இவ்விதம் கோருகிறேன்.[221]

[221] 1860-61இல் வேலை-நாளை 8 மணி நேரமாய்க் குறைப்பதற்காக லண்டன்

ஆக, மிகுந்த நெகிழ்வுள்ள எல்லைகளன்னியில், சரக்குப் பரிவர்த்தனையின் இயல்பினால் வேலை-நாளுக்கு, உபரி-உழைப் புக்கு வரம்பிடப்படவில்லை என்பதைக் காண்கிறோம். வேலை-நாளை முடிந்த வரை நீட்டவும், முடிந்த போதெல்லாம் ஒரு வேலை-நாளிலிருந்து இரு வேலை-நாட்களைப் பெறவும் முதலாளி முயலும் போது, வாங்குபவர் என்ற முறையில் தன் உரிமை களையே நிலைநாட்டிக் கொள்கிறார்; மறு புறம், விற்கப்படும் சரக்கின் விசேஷ இயல்பு வாங்குபவர் அதை நுகர்வதற்கு ஒரு வரம்பு இருப்பதைக் குறிக்கிறது; தொழிலாளி வேலை-நாளை இயல்பான குறிப்பிட்ட காலவரை கொண்ட ஒன்றாகக் குறைக்க விரும்பும் போது, விற்பவர் என்ற முறையில் தன் உரிமையையே நிலைநாட்டிக் கொள்கிறார். எனவே, எதிரும் புதிருமான ஒரு நிலை இங்கே எழுகிறது; உரிமைக்கு எதிராய் உரிமை நிற்கிறது; இரண்டுமே சமஅளவில் பரிவர்த்தனை விதியின் முத்திரை தாங்கி யவை. சம உரிமைகளுக்கிடையே வலுவந்தமே முடிவு கட்டுகிறது. எனவேதான் முதலாளித்துவப் பொருளுற்பத்தியின் வரலாற்றில் வேலை-நாள் என்றால் என்ன என்பது ஒரு போராட்டம் வாயி லாகத் தீர்மானிக்கப்படுகிறது; கூட்டு மூலதனத்துக்கும் கூட்டு உழைப்புக்கும் இடையிலான, அதாவது முதலாளி வர்க்கத்துக்கும் தொழிலாளி வர்க்கத்துக்கும் இடையிலான போராட்டம் வாயி லாகத் தீர்மானிக்கப்படுகிறது.

## பிரிவு 2. — உபரி-உழைப்புக்கான பேராசை. தொழிலதிபரும் போயார்டும்

உபரி-உழைப்பு மூலதனத்தின் கண்டுபிடிப்பன்று. சமுதாயத் தின் ஒரு பகுதியினர் உற்பத்திச் சாதனங்களின் ஏகபோகத்தைப் பெற்றுள்ள இடங்களிலெல்லாம், தொழிலாளி சுதந்தரமுடைய வராய் இருந்தாலும் சரி, சுதந்தரமற்றவராய் இருந்தாலும் சரி, தன் சொந்தப் பராமரிப்புக்கு அவசியமான வேலை நேரத்தோடு கூட, உற்பத்திச் சாதனங்களின் உடைமையாளர்களுக்கான வாழ்வுச் சாதனங்களை உற்பத்தி செய்யும் பொருட்டுக் கூடுதல் வேலை நேரமும் சேர்த்துக் கொள்ள வேண்டும்.[222] இந்த உடைமையாளர்

---

கட்டுமானத் தொழிலாளர்கள் நடத்திய மாபெரும் வேலைநிறுத்தத்தின் போது, ஓரளவுக்கு நமது தொழிலாளியின் வாதத்தைக் கொண்டிருந்த ஓர் அறிக்கையை அவர்களது கமிட்டி பிரசுரித்தது. கட்டட எஜமானர்கள் மத்தியில் மிகப் பெரும் இலாபவேட்டைக்காரரான சர் எம். பீட்டோ என்பவர் புனிதவாடைத் திருக் கூட்டத்தில் இருந்தார் என்பதை அந்த அறிக்கை வஞ்சப் புகழ்ச்சியுடன் குறிப்பிடுகிறது. (1867க்குப் பின்னர் இதே பீட்டோ ஸ்ட்ரூஸ்பர்க்கிற்கு நேர்ந்த அதே கதிக்கு ஆளானார்.)

222 "தொழிலாளர்கள்...உண்மையில் (செல்வந்தர்கள் எனப்படும்) ஓய்வூதியக் காரர்களுக்கும்...தமக்குத் தாமும்...ஆக இரு சாரருக்குமே உணவளிப்பவர்கள்." (எட்மண்டு பர்க், முன் வந்தது, பக்கம் 2.)

ஆதன்சின் καλὸς κἀγαθὸς* ஆனாலும், எட்ரூஸ்கன் மத குரு ஆனாலும், சிவிஸ் ரோமனஸ் ஆனாலும், நார்மன் பிரபு ஆனாலும், அமெரிக்க அடிமையுடைமையாளர் ஆனாலும், வாலேக்கிய போயார்டு ஆனாலும், இக்கால நிலச்சுவான்தார் ஆனாலும், முதலாளியானாலும் நடப்பது இதுவே.[223] ஆயினும், உற்பத்திப் பொருளின் பயன்-மதிப்பு — பரிவர்த்தனை-மதிப்பன்று — கோலோச்சுகிற சமுதாயத்தின் குறிப்பிட்ட பொருளாதார வடிவமைப்பெதிலும் அதிகமாகவோ குறைவாகவோ இருக்கக் கூடிய குறிப்பிட்ட சில தேவைகள் உபரி-உழைப்புக்கு வரம்பிடும் என்பதும், உபரி-உழைப்புக்கான எல்லையற்ற தாகம் ஏதும் இங்கே உற்பத்தியின் இயல்பிலிருந்தே உதிப்பதில்லை என்பதும் தெளிவு. எனவேதான், பரிவர்த்தனை-மதிப்பை அதன் சுயேச்சையான தனி வடிவமாகிய பண வடிவத்தில் அடைவது குறிக்கோளாக இருக்கும் போதுதான், அதாவது தங்கம், வெள்ளியின் உற்பத்தியில்தான் பண்டைக் காலத்தில் மிகையுழைப்பு கோரத் தாண்டவமாடுகிறது. இங்கேதான் உயிர் போகும் படியான கட்டாய உழைப்பு மிகையுழைப்பின் அங்கீகார வடிவமாய் இருக்கிறது. தியோதரஸ் சிசுலஸ் எழுதியிருப்பதை படித்தாலே இது விளங்கும்.[224] இருப்பினும் இதெல்லாம் பண்டைக் காலத்தில் விதிவிலக்காகவே இருந்தது. ஆனால், இன்னும் அடிமையுழைப்பு, கார்வே உழைப்பு என்ற கீழ் நிலை வடிவங்களுக்குள்ளேயே இயங்கும் உற்பத்தியில் ஈடுபட்டுள்ள மக்கள் முதலாளித்துவப் பொருளுற்பத்தி முறையின் ஆதிக்கத்திலுள்ள சர்வதேசச் சந்தை என்னும் சுழலுக்குள் ஈர்க்கப்பட்டதுமே, ஏற்றுமதிக்கான அவர்களது உற்பத்திப் பொருட்களின் விற்பனை அவர்களது பிரதம நலனாகி, மிகையுழைப்பின் நாகரிகக் கொடுமைகள் அடிமைத்தனம், பண்ணையடிமைத்தனம் முதலானவற்றின் அநாகரிகக் கொடுமைகளுடன் இணைக்கப்படுகின்றன.

---

223 ''ரோமானிய வரலாறு'' என்ற நூலில் நீபர் மிகவும் வெகுளித்தனமாய் சொல்கிறார்: ''சிதிலமடைந்துள்ள நிலையில் நம்மைத் திகைக்க வைக்கும் எட்ரூஸ்கன் போன்ற படைப்புகளுக்கு சிறிய (!) அரசுகளில் பிரபுக்களும் அடிமைகளும் தேவை என்பது தெளிவு.'' ''பிரசெல்ஸ் சரிகைக்கு'' கூலி-பிரபுகளும் கூலி-அடிமைகளும் தேவை என்று சிஸ்மொந்தி காரிய நோக்குடனேயே சொல்கிறார்.

224 உடலை சுத்தம் செய்து கொள்ளவும், அல்லது தமது நிர்வாணத்தை உடை கொண்டு மறைத்துக் கொள்ளவும் கூட முடியாத இந்த துர்பாக்கியசாலிகளை (எகிப்து, எதியோப்பியா, அரேபியா இடையிலான தங்கச் சுரங்கங்களில்) பார்ப்பவர் எவரும் அவர்களது கேடுகெட்ட நிலைக்காகப் பரிதாபப்படாமலிருக்க முடியாது. நோய்வாய்ப் பட்டவர்கள் என்றோ, சக்தியில்லாதவர்கள் என்றோ, வயோதிகர்கள் என்றோ, பலமில்லாத பெண்கள் என்றோ ஈவிரக்கம் சிறிதும் இல்லை. அடி, உதையின் வலுவந்தத்துக்கு ஆளாகி எல்லாரும் வேலை செய்தாக வேண்டும் — அவர்களது துன்ப துயரங்களுக்கு இறப்பு முற்றுப்புள்ளி வைக்கும் வரை.'' (தியோதரஸ் சிசுலஸ், விவிலிய வரலாறு, தொகுதி 2, அத்தியாயம் 13.)

---

* கிரேக்க உயர் குடியாளர்.

எனவேதான் அமெரிக்க ஒன்றியத்தின் தென் மாநிலங்களில், உற்பத்தியின் தலையாயக் குறிக்கோள் நேரடியான ஸ்தல நுகர்வாக இருந்த வரை ஓரளவு தந்தை வழிச் சமுதாயத் தன்மையை நீக்ரோ-உழைப்பு காப்பாற்றிக் கொண்டது. ஆனால், பஞ்சு ஏற்றுமதி இந்த மாநிலங்களுக்கு ஜீவாதாரம் ஆகியதற்கேற்ப, நீக்ரோவை மிகையாக வேலை வாங்குவதும், சில நேரங்களில் 7 ஆண்டு கால உழைப்பில் அவரது வாழ்க்கையை உறிஞ்சித் தீர்ப்பதும் கணக்கிட்டு அமைந்த கணக்கிடும் அமைப்பில் ஒரு காரணி ஆயிற்று. அவரிடமிருந்து குறிப்பிட்ட அளவில் பயனுள்ள உற்பத்திப் பொருட்களைப் பெற வேண்டும் என்பதன்று, உபரி-உழைப்பை உற்பத்தி செய்ய வேண்டும் என்பதே இப்போது நோக்கம். கார்வே தொடர்பாகவும், உதாரணமாக டான்யூபிய சிற்றரசுகளில் (இப்போது ருமேனியா), நிலைமை இப்படித்தான் இருந்தது.

டான்யூபிய சிற்றரசுகளில் காணப்பட்ட உபரி-உழைப்புக்கான பேராசையை ஆங்கிலேயத் தொழிற்சாலைகளில் காணப்படும் அதே பேராசையுடன் ஒப்பு நோக்குவது மெத்தவும் பயனுடையது; ஏனெனில், கார்வே முறையிலான உபரி-உழைப்பு சுயேச்சையான, கண்கூடான வடிவம் உடையது.

வேலை-நாள் 6 மணி நேர அவசிய-உழைப்பையும் 6 மணி நேர உபரி-உழைப்பையும் கொண்டதெனக் கொள்வோம். அப்படியானால் சுதந்தரத் தொழிலாளி முதலாளிக்கு ஒவ்வொரு வாரமும் $6 \times 6 = 36$ மணி நேர உபரி-உழைப்பைக் கொடுக்கிறார். அவர் வாரத்தில் 3 நாள் தனக்காகவும், வாரத்தில் 3 நாள் இலவசமாய் முதலாளிக்காகவும் வேலை செய்வதாயிருந்தாலும் இதுவே நிலைமை. ஆனால் இது மேற்பரப்பில் நிதர்சனமாவதில்லை; உபரி-உழைப்பும் அவசிய-உழைப்பும் ஒன்றோடு ஒன்று கலந்துள்ளன. ஆகவே, இந்த உறவுமுறையை வேறு வழிகளிலும் தெரிவிக்கலாம்; உதாரணமாக, ஒவ்வொரு நிமிடத்திலும் தொழிலாளி தனக்காக 30 வினாடியும் முதலாளிக்காக 30 வினாடியும் வேலை செய்கிறார் என்றும், இன்ன பிறவாறும் தெரிவிக்கலாம். கார்வேயின் சங்கதி வேறு. வாலேக்கிய விவசாயி தன் சொந்தப் பராமரிப்புக்காகச் செய்கிற அவசிய-உழைப்பு போயார்டு சார்பிலான அவரது உபரி-உழைப்பிலிருந்து தெள்ளத் தெளிவாக வேறுபடுத்தப்பட்டுள்ளது. ஒன்றை அவர் தன் சொந்த வயலிலும் மற்றதைப் பிரபுவின் பண்ணையிலும் செய்கிறார். எனவே, உழைப்பு நேரத்தின் இரு பகுதிகளும் தனித்தனியாக, அக்கம்பக்கமாக இருக்கின்றன. கார்வே முறையில் உபரி-உழைப்பு அவசிய-உழைப்பிலிருந்து தெளிவாகப் பிரித்துக் காட்டப்படுகிறது. ஆயினும், அவசிய-உழைப்போடு உபரி-உழைப்பிற்குள்ள அளவு வழிப்பட்ட உறவில் இதனால் எந்த வேறுபாடும் எழ முடியாது. வாரத்தில் மூன்று நாள் உபரி-உழைப்பைக் கார்வே உழைப்பென்றாலும் அல்லது கூலியுழைப்பென்

றாலும், அது உழைப்பாளிக்கு ஈடேதும் கொடுக்காத மூன்று நாளாகவே இருக்கிறது. ஆனால் உபரி-உழைப்புக்கான பேராசை முதலாளியைப் பொறுத்த வரை வேலை-நாளை வரம்பின்றி நீட்டுவதற்காக அவர் அரும்பாடு படுவதில் வெளிப்படுகிறது; போயாரைப் பொறுத்த வரை கார்வே உழைப்பு நாட்களுக்கான நேரடி வேட்டையில் மேலும் அப்பட்டமாக வெளிப்படுகிறது.[225]

டான்யூபிய சிற்றரசுகளில் கார்வே என்பது பண்ட வடிவ வாரங்களுடனும், கொத்தடிமைத்தனத்தின் இதர சேர்மானங்களுடனும் கலந்து போயிருந்தது; இருப்பினும், அதுவே ஆளும் வர்க்கத்துக்குச் செலுத்தப்பட்ட மிக முக்கியக் கப்பமாக அமைந்தது. நிலைமை இப்படியிருந்த இடங்களில் பண்ணையடிமை முறையிலிருந்து கார்வே பிறப்பது அபூர்வமாயிருந்தது. கார்வேயிலிருந்து பண்ணையடிமை முறை பிறப்பதுதான் சகஜமாயிருந்தது.[226] ருமேனிய மாகாணங்களில் நடந்தது இதுவே. அவர்களது ஆரம்ப உற்பத்தி முறை நிலக் கூட்டுடைமையின் அடிப்படையிலானதாய் இருந்தது. ஆனால் ஸ்லாவோனிய வடிவத்திலோ இந்திய வடிவத்திலோ அன்று. நிலத்தில் ஒரு பகுதியை சமுதாயத்தின் உறுப்பினர்கள் தனியுடைமையாகத் தனித்தனியே சாகுபடி செய்தனர்; இன்னொரு பகுதியை — ager publicus — பொதுவில் சாகுபடி செய்தனர். இந்தப் பொது உழைப்பின் விளைபொருட்களில் ஒரு பாகம் மோசமான அறுவடைகளையும் ஏனைய விபத்துகளையும் சமாளிப்பதற்கான சேம வைப்பு நிதியமாகவும் [reserve fund], ஒரு பாகம் போர், சமயம் ஆகியவற்றின் செலவுகளுக்கும் ஏனைய பொதுச் செலவுகளுக்குமான பொது இருப்பாகவும் பயன்பட்டன. காலப் போக்கில் இராணுவம், சமயம் ஆகியவற்றின் பிரமுகர்கள் பொது நிலத்தையும் கூடவே அதில் செலவிடப்பட்ட உழைப்பையும் அபகரித்துக்

---

225 அடுத்து வருவது கிரிமிய யுத்தத்துக்குப் பின்னர் ருமேனிய மாகாணங்களில் ஏற்பட்ட மாற்றத்துக்கு முன்பிருந்த நிலைமையைக் குறிப்பிடுகிறது.

226 இவ்வாறே இது ஜெர்மனிக்கும், குறிப்பாக எல்புக்குக் கிழக்காக உள்ள பிரஷ்யாவுக்கும் பொருந்தும். 15ஆவது நூற்றாண்டில் ஜெர்மானிய விவசாயி, கிட்டத்தட்ட எங்குமே, விளைபொருளின் உருவிலும், உழைப்பின் உருவிலும் செலுத்தப்பட்ட குறிப்பிட்ட சில வாரங்களுக்கு ஆட்பட்டிருந்த அதே நேரத்தில், எப்படியும் நடைமுறையில், சுதந்தரமுடையவராக இருந்தார். பிராண்டன்பர்க், போமெரேனியா, ஸைலீசியா, கிழக்குப் பிரஷ்யா ஆகிய இடங்களில் குடியேறிய ஜெர்மானியர் சட்ட பூர்வமாகவும் கூடச் சுதந்தரமுடையவர்களாக அங்கீகரிக்கப்பட்டனர். விவசாயிகள் போரில் பிரபுத்துவம் கண்ட வெற்றி அதற்கு முடிவு கட்டியது. வெற்றி கொள்ளப்பட்ட தெற்கு ஜெர்மானிய விவசாயிகள் மீண்டும் அடிமைப்படுத்தப்பட்டது மட்டுமன்று. 16ஆவது நூற்றாண்டின் மத்தியிலிருந்து கிழக்கு பிரஷ்யா, பிராண்டன்பர்க், போமெரேனியா, சைலீசியா ஆகிய இடங்களைச் சேர்ந்த விவசாயிகளும் பின்னர் சீக்கிரமே ஷ்லெஸ்விக்-ஹோல்ஸ்டீனைச் சேர்ந்த சுதந்தர விவசாயிகளும் பண்ணையடிமைகளின் நிலைக்குத் தாழ்த்தப்பட்டனர். (மௌரர், ஃப்ரான்ஹோஃப் iv. vol., — மைட்ஸன், "Der Boden des Preussischen Staats." — ஹான்சென், "Leibeigenschaft in Schleswig-Holstein." — பி.எ.)

கொண்டனர். சுதந்தர விவசாயிகள் தம்முடைய பொது நிலத்தில் ஆற்றி வந்த உழைப்பானது பொது நிலத்தின் திருடர்களுக்கான கார்வேயாக மாற்றப்பட்டது. இந்தக் கார்வே சட்டத்தில் அல்லாமல், எதார்த்தத்தில் நிலவிய கொத்தடிமை உறவாக விரைவில் வளர்ந்தது. பிறகு, உலகத்தை விடுவிக்க ருஷ்யா பண்ணையடிமைத் தனத்தை ஒழிப்பதாகச் சொல்லி, கார்வேயை சட்ட வடிவம் பெறச் செய்தது. 1831இல் ருஷ்ய ஜெனரல் கிசெலெஃப் பிரகடனம் செய்த கார்வே சட்டம் போயார்டுகளின் விருப்பத்துக்கேற்ப இயற்றப்பட்டதே ஆகும். இவ்வாறு ருஷ்யா ஒரே அடியில் டான்யூபிய மாகாணங்களின் பிரபுமார்களை வென்றதோடல்லாமல், ஐரோப்பாவெங்கிலும் மிதவாத அசட்டுப் பிறவிகளின் பாராட்டையும் பெற்றது.

இந்தக் கார்வே சட்டம் "Reglement organique"என்று அழைக்கப்படுகிறது; இதன் படி, ஒவ்வொரு வாலேக்கிய விவசாயியும் நிலப்பிரபு எனப்படுபவருக்கு, பண்ட வடிவில் செலுத்தும் திரளான பல்வேறு கொடுப்புகளன்னியில் தர வேண்டியவை: (1) 12 நாள் பொதுப்படையான உழைப்பு; (2) ஒரு நாள் வயல் உழைப்பு; (3) ஒரு நாள் விறகுப் பொதி சுமத்தல். ஆக மொத்தம் ஆண்டில் 14 நாள். ஆயினும், வேலை-நாள் என்பது—அரசியல் பொருளாதாரத்தில் ஆழ்ந்த நுண்ணோக்குடன்—சராசரி அன்றாட விளைபொருளின் உற்பத்திக்கு அவசியமான வேலை-நாள் என்று எடுத்துக் கொள்ளப்படுகிறதே தவிர, அதன் சாதாரண அர்த்தத்தில் எடுத்துக் கொள்ளப்படுவதில்லை. அந்த சராசரி அன்றாட விளைபொருள் என்பது சைக்லோப்ஸ் வந்தால் அவனாலும் 24 மணி நேரத்தில் செய்து முடிக்க இயலாது என்னும் படி தந்திரமான வழியில் நிர்ணயிக்கப்படுகிறது. 12 வேலை-நாள் என்பதை 36 நாள் உடலுழைப்பின் பலன் என்றும், 1 நாள் வயல் உழைப்பு என்பதை 3 நாள் உடலுழைப்பின் பலன் என்றும், 1 நாள் விறகுப் பொதி சுமத்தல் என்பதை 3 நாள் உடலுழைப்பின் பலன் என்றும் புரிந்து கொள்ள வேண்டும் என்று மேற்கூறிய ரெக்ளெமெண்ட் வறண்ட சொற்களில், மெய்யான ருஷ்ய சிலேடையுணர்வுடன் அறிவிக்கிறது. ஆக மொத்தம் 42 கார்வே நாள். இதனோடு அசாதாரணச் சந்தர்ப்பங்களில் பிரபுவுக்கு ஆற்ற வேண்டிய சேவையான ஜோபாஜி எனப்படுவதையும் சேர்த்துக் கொள்ள வேண்டும். ஒவ்வொரு கிராமமும் அதன் மக்கள்தொகைக்கேற்ப ஆண்டுதோறும் ஜோபாஜிக்கு ஒரு திட்டமான ஆட்பிரிவை வழங்க வேண்டும். இந்தக் கூடுதல் கார்வே ஒவ்வொரு வாலேக்கிய விவசாயிக்கும் 14 நாள் என மதிப்பிடப்படுகிறது. இவ்வாறு நியமம் செய்யப்பட்ட கார்வே ஆண்டுக்கு 56 வேலை-நாள் ஆகிறது. ஆனால் வாலேக்கியாவில் விவசாய ஆண்டு என்பது மோசமான தட்பவெப்ப நிலையின் காரணத்தால் 210 நாள்தான்.

இதில் ஞாயிற்றுக் கிழமைகள், விடுமுறை நாட்கள் ஆகியவற்றுக் காக 40, மோசமான கால நிலைக்காக சராசரியாய் 30, ஆக மொத்தம் 70 நாள் கழித்து விட வேண்டும். 140 வேலை-நாட்கள் மிஞ்சுகின்றன. அவசிய-உழைப்புடன் கார்வே உழைப்புக்குள்ள விகிதமான $\frac{56}{84}$, அதாவது 66⅔% என்பது குறிக்கிற உபரி-மதிப்பு வீதம் ஆங்கிலேய விவசாயத் தொழிலாளி அல்லது ஆலைத் தொழிலாளியின் உழைப்பை ஆளுகிற உபரி-மதிப்பு வீதத்தை விட மிகச் சிறியதே. ஆனால் இது சட்டப்படி நியமம் செய்யப்பட்ட கார்வேயை மட்டுமே குறிக்கிறது. இந்த "ரெக்ளெமெண்ட்" தன்னையே ஏய்ப்பதற்கு வசதி செய்து கொடுப்பதில் ஆங்கிலேயத் தொழிற்சாலைச் சட்டங்களை விட "தாராளக் குணமுடையது." அது 12 நாளை 56 நாளாக்கிய பின்னர், 56 கார்வே நாள் ஒவ்வொன்றின் பெயரளவு நாள் உழைப்பையும், அதன் ஒரு பகுதி அடுத்த நாளுக்கு மிஞ்சும் விதத்தில் அமைத்திருக்கிறது. எடுத்துக் காட்டாக, ஒரு நாளில் குறிப்பிட்ட நிலப் பரப்பில் களையெடுக்க வேண்டும்; இந்த வேலைக்கு, குறிப்பாக சோளக் கொல்லைகளில், இதைப் போல் இரு மடங்கு நேரம் தேவைப்படுகிறது. சில வகை விவசாய உழைப்புக்கான சட்ட பூர்வ நாள் வேலை, அந்த நாள் மேயில் தொடங்கி அக்டோபரில் முடிவடையும் விதத்தில் வியாக்கியானம் செய்யத் தக்கதாகும். மொல்டாவியாவில் நிலைமைகள் இன்னும் கடுமையானவை. "இந்த 'ரெக்ளெமெண்ட்' குறிப்பிடும் 12 கார்வே நாள் என்பது ஆண்டில் 365 நாளுக்குச் சமம் என்று வெற்றி முழக்கமிட்டார் ஒரு போயார்டு."[227]

டான்யூபிய மாகாணங்களது ரெக்ளெமெண்டின் ஒவ்வொரு பத்தியும் உபரி-உழைப்பை சட்ட சம்மதமாக்குகிறது. உபரி-உழைப்புக்கான பேராசையை இச்சட்டம் நேர்வழியில் தெரிவிக்கிற தென்றால், ஆங்கிலேயத் தொழிற்சாலைச் சட்டங்கள் இப் பேராசையை எதிர் வழியில் தெரிவிக்கின்றன எனலாம். இந்தச் சட்டங்கள் உழைப்புச் சக்தியை வரம்பின்றி பிழிவதற்கான மூல தனத்தின் வெறியை — முதலாளியாலும் நிலப்பிரபுவாலும் ஆளப் படுகிற அரசால் ஏற்படுத்தப்பட்ட அரசு விதிகளைக் கொண்டு கட்டாய முறையில் வேலை-நாளை வரம்புக்குட்படுவதன் மூலம் — மட்டுப்படுத்துகின்றன. நாளுக்கு நாள் மேலும் மேலும் அச்சமூட்டு வதாய் வளர்ந்த தொழிலாளி வர்க்க இயக்கம் ஒரு புறமிருக்க, ஆங்கிலேய வயல்களில் மீன் எரு இடுவது எப்படி அத்தியாவசிய மாயிற்றோ அதே போல தொழிற்சாலை உழைப்புக்கு வரம் பிடுவதும் அத்தியாவசியமாயிற்று. நிலத்தைச் சத்திழக்கச் செய்து

227 மேற்கொண்டு விவரங்களுக்குப் பார்க்கவும்: இ. ரெனியே எழுதிய "Histoire politique et sociale des Principaute's Damubiennes," பாரிஸ், 1855.

மலடாக்கிய கண்மூடித்தனமான அதே கொள்ளை வெறி நாட்டின் உயிர்ச் சக்தியை வேரறுக்க முற்பட்டது. காலந்தவறாமல் வரும் தொற்று நோய்கள்—ஜெர்மனியிலும் பிரான்சிலும் இராணுவத் திற்கான உயரத் தகுதி குறைந்து வருவதைப் போலவே[228]—இவ் வுண்மையைத் தெளிவாகப் புலப்படுத்துகின்றன.

இப்போது (1867) அமலில் உள்ள 1850ஆம் வருடத் தொழிற் சாலைச் சட்டம் 10 மணி நேர சராசரி வேலை-நாளை விதிக்கிறது; அதாவது முதல் 5 நாட்களுக்கு, காலை உணவுக்கு ½ மணி நேரம், சாப்பாட்டுக்கு 1 மணி நேரம் உட்பட காலை 6 மணியிலிருந்து மாலை 6 மணி வரை 12 மணி நேரம். இவ்விதம் வேலை-மணி களாய் மிஞ்சுவது 10½; சனிக் கிழமைக்கு காலை 6 மணியிலிருந்து பிற்பகல் 2 மணி வரை 8 மணி நேரம்; இதில் காலை உணவுக்கு ½ மணி நேரம். முதல் 5 நாட்களில் ஒவ்வொன்றுக்கும் 10½, கடைசி நாளுக்கு 7½; ஆக வேலை-மணிகளாய் மிஞ்சுவது 60.[229] இந்தச் சட்டங்களுக்கு இரட்சகர்கள் சிலர் நியமிக்கப்படுகின்றனர்; நேரடியாக உள்துறைச் செயலாளரின் பொறுப்பில் உள்ள தொழிற் சாலை ஆய்வாளர்களின் அறிக்கைகள் பாராளுமன்ற உத்தரவுப்படி ½ ஆண்டுக்கு ஒரு முறை வெளியிடப்படுகின்றன. உபரி-மதிப்புக்கான முதலாளித்துவப் பேராசையின் முறையான, அதிகாரபூர்வமான புள்ளி விவரங்களை அவை தருகின்றன.

தொழிற்சாலை ஆய்வாளர்கள் கூறுவதை சற்றே கேட்

---

228 "பொதுவாகவும் சில குறிப்பிட்ட வரம்புகளுக்குட்பட்டும், தம் வகையின் சராசரி அளவை விஞ்சுவது உயிர் வாழ்வனவற்றின் செழிப்புக்குச் சான்றாகும். மனிதனின் தக்க வளர்ச்சிக்கு பௌதிக நிலைமைகளாலோ சமூக நிலைமைகளாலோ இடையூறு ஏற்பட்டால் அவனது உடல் உயரம் குறைகிறது. கட்டாய இராணுவச் சேவை இருந்து வரும் எல்லா ஐரோப்பிய நாடுகளிலும், அது புகுத்தப்பட்ட பின்னர், வயது வந்த ஆண்களின் சராசரி உயரமும், பொதுவாக இராணுவச் சேவைக்கான அவர்களின் தகுதியும் குறைந்துள்ளன. புரட்சிக்கு (1789) முன்னர், பிரான்சில் காலாட்படைக்குக் குறைந்த பட்ச உயரம் 165 செண்டி மீட்டராக இருந்தது; 1818இல் (மார்ச் 10 தேதிய சட்டம்) 157 செ.மீ. 1832 மார்ச் 21 தேதியச் சட்டத்தின் படி 156 செ.மீ. சராசரியாக, பிரான்சில் பாதிக்கும் அதிகமானோர் உயரப் பற்றாக்குறை அல்லது உடல் பலவீனத்தின் காரணத்தால் நிராகரிக்கப்பட்டனர். சாக்சனியில் இராணுவத் திற்கான உயரத் தகுதி 1780இல் 178செ.மீ. இப்போது 155. பிரஷ்யாவில் 157. 1862 மே 9 தேதிய பவேரிய கெஜட்டில் வெளியான டாக்டர் மேயர் அறிக்கையின் படி, 9 ஆண்டுகளுக்கான சராசரிக் கணக்கில், பிரஷ்யாவில் கட்டாய இராணுவச் சேவைக்குரிய 1,000 பேரில் 716பேர் இராணுவச் சேவைக்குத் தகுதியற்றிருந்தனர்; உயரப் பற்றாக்குறையால் 317 பேரும் உடற் குறைபாடுகளால் 399 பேரும் இவ்வாறு தகுதியற்றிருந்தனர்.... 1858இல் இராணுவத்தில் சேர்க்க வேண்டியோரில் பெர்லினால் தனது பங்கைப் பூர்த்தி செய்ய முடியவில்லை; 156 பேர் குறைவாகவே சேர்க்க முடிந்தது." ஜூ. வான் லீபிக்: "Die Chemie in ihrer Anwendung auf Agrikultur und Physiologie. 1862," 7ஆம் பதிப்பு, பாகம் I., பக்கம் 117, 118.

229 1850ஆம் வருடத் தொழிற்சாலைச் சட்டத்தின் வரலாற்றை இந்த அத்தியாயத்தில் காணலாம்.

போம்.[230] மோசடிக்கார ஆலை அதிபர் காலை 6 மணிக்குக் கால் மணி நேரம் (சில நேரம் அதிகமாக, சில நேரம் குறைவாக) முன் கூட்டியே வேலை தொடங்கி, மாலை 6 மணிக்குப் பின்னர் கால் மணி நேரம் (சில நேரம் அதிகமாக, சில நேரம் குறைவாக) கழித்து வேலை முடிக்கிறார். அவர் காலை உணவுக்காகப் பெயரளவில் விடப்படும் அரை மணி நேரத்தின் தொடக்கத்திலும் முடிவிலும் 10 நிமிடம் எடுத்துக் கொள்கிறார். சனிக் கிழமை பிற்பகல் 2 மணிக்குப் பின்னர் கால் மணி நேரத்துக்கு (சில நேரம் அதிகமாக, சில நேரம் குறைவாக) வேலை வாங்குகிறார். இவ்வாறு அவரது ஆதாயம் —

| | | |
|---|---|---|
| காலை 6 மணிக்கு முன்னர்,.......................... | 15 | நிமிடம் |
| மாலை 6 மணிக்குப் பின்னர்,.......................... | 15 | நிமிடம் |
| காலை உணவு நேரத்தில்,.......................... | 10 | நிமிடம் |
| சாப்பாட்டு நேரத்தில்,.......................... | 20 | நிமிடம் |
| | 60 | நிமிடம் |
| ஐந்து நாள் — 300 நிமிடம் | | |
| சனிக் கிழமை காலை 6 மணிக்கு முன்னர்,.......... | 15 | நிமிடம் |
| காலை உணவு நேரத்தில்,.......................... | 10 | நிமிடம் |
| பிற்பகல் 2 மணிக்குப் பின்னர்,.......................... | 15 | நிமிடம் |
| | 40 | நிமிடம் |
| வாராந்தர மொத்தம்,.......................... | 340 | நிமிடம் |

230 இங்கிலாந்தில் நவீனத் தொழில் துறையின் தொடக்கத்திலிருந்து 1845 வரையிலான காலம் குறித்து நான் இங்குமங்குமாகக் குறிப்பிடுவதோடு நிறுத்திக் கொள்கிறேன். இந்தக் காலம் குறித்து பிரெடெரிக் எங்கெல்ஸ் எழுதிய, "Die Lage der arbeitenden Klasse in England," லீப்சிக், 1845 என்ற நூலைப் பார்க்குமாறு வாசகரைக் கேட்டுக் கொள்கிறேன். முதலாளித்துவப் பொருளுற்பத்தி முறையின் இயல்பை எங்கெல்ஸ் எவ்வளவு முழுமையாகப் புரிந்து கொண்டார் என்பது 1845க்குப் பின்னர் வெளிவந்திருக்கும் தொழிற்சாலை அறிக்கைகள், சுரங்கங்கள் பற்றிய அறிக்கைகள் இன்ன பிறவற்றால் காட்டப்படுகிறது; நிலைமைகளின் விவரங்களை அவர் எவ்வளவு அருமையாகச் சித்திரித்தார் என்பது 18 முதல் 20 ஆண்டு கழித்து (1863-1867) வெளிவந்தவையான குழந்தையுழைப்பு ஆணையத்தின் அதிகாரபூர்வ அறிக்கைகளுடன் அவரது நூலை மேம்போக்காக ஒப்புநோக்கினாலும் கூட தெரிய வருகிறது. தொழிற்சாலைச் சட்டங்கள் 1862 வரை புகுத்தப்பட்டிராத, உண்மையில் இன்னமும் புகுத்தப்படாத தொழிற் கிளைகளை இந்த அறிக்கைகள் முக்கியமாக ஆராய்கின்றன. அப்போது, இங்கே எங்கெல்ஸ் சித்திரிக்கிற நிலைமைகளில் அரசாங்கம் புகுத்தியிருந்த மாற்றம் ஏதுமில்லை, அல்லது மிகச் சொற்பமே ஆகும். தடையிலா வாணிபக் கொள்கையின் விளம்பரக்காரர்கள் 1848க்குப் பிற்பட்ட காலத்தைப் பொற்காலமெனச் சொல்லி, அப்பட்டமாகவும் மூடத்தனமாகவும் கதை கட்டி வாய் கிழியப் பேசுகின்றனர்; நான் தரும் உதாரணங்கள் பிரதானமாக இதே தடையிலா வாணிபக் காலத்திலிருந்து எடுக்கப்பட்டவைதாம். இச்சித்திரத்தில் இங்கிலாந்து முன்னணியில் இருக்கிறதென்றால், முதலாளித்துவப் பொருளுற்பத்திக்கு எடுத்துக்காட்டான பிரதிநிதி இங்கிலாந்தே என்பதும், நாம் பரிசீலிக்கும் பிரச்சினைகள் தொடர்பான அதிகாரபூர்வப் புள்ளி விவரங்களின் தொடர்ச்சியான தொகுப்பு இருப்பது இங்கிலாந்தில் மட்டுமே என்பதும்தான் அதற்குக் காரணம்.

அதாவது வாரத்துக்கு 5 மணி, 40 நிமிடம்; இதை ஆண்டில் 50 வேலை-வாரத்தால் பெருக்கினால் (விடுமுறைகள், சந்தர்ப்ப வசமான நிறுத்தங்கள் ஆகியவற்றுக்காக இரு வாரம் தள்ளப் படுகிறது) 27 வேலை-நாளுக்குச் சமம்.''[231]

''நாள் ஒன்றுக்கு 5 நிமிடம் வீதம் அதிகரித்த வேலையை வாரங்களால் பெருக்கினால், ஆண்டில் இரண்டரை நாள் உற்பத் திக்குச் சமம்.''[232]

''காலை 6 மணிக்கு முன்னரும் மாலை 6 மணிக்குப் பின்னரும் சாப்பாட்டுக்கென்று பெயரளவில் நிர்ணயிக்கப்பட்டுள்ள நேரங் களின் தொடக்கத்திலும் முடிவிலும் சிறு தவணைகளாக நாள் ஒன்றுக்கு ஒரு மணி வீதம் வேலை நேரத்தைக் கூடுதலாக்குவது ஆண்டு ஒன்றுக்கு 13 மாதம் வேலை செய்வதற்கு ஏறத்தாழ சமமாகிறது.''[233]

நெருக்கடிகளின் போது உற்பத்திக்குத் தடங்கல் ஏற்படுகிறது. தொழிற்சாலைகள் ''குறை நேரமே,'' அதாவது வாரத்தில் ஒரு பகுதி மட்டுமே வேலை செய்கின்றன; இயல்பாகவே இந்நெருக்கடி கள் வேலை-நாளை நீட்டிக்கும் போக்கைப் பாதிப்பதில்லை. தொழில் எந்த அளவுக்குக் குறைவாக நடக்கிறதோ அந்த அளவுக்கு அதிகமான இலாபத்தை அக்குறைவான தொழிலிலிருந்தே அடைய வேண்டியுள்ளது. எந்த அளவுக்குக் குறைவான நேரம் வேலையில் செலவிடப்படுகிறதோ, அந்த நேரத்தில் அந்த அளவுக்கு அதிகமான பகுதியை உபரி-உழைப்பு நேரமாக்க வேண்டியுள்ளது.

இவ்வாறு 1857 முதல் 1858 வரையிலான நெருக்கடிக் காலம் பற்றி தொழிற்சாலை ஆய்வாளரின் அறிக்கை கூறுவதாவது:

''தொழில் இவ்வளவு மந்தமாக இருக்கும் இந்த நேரத்தில் மிகையாக வேலை வாங்குதல் முரணானதாகத் தோன்றலாம்; ஆனால் அதே மந்த நிலை நேர்மையற்றவர்களின் அதிக்கிரமத்துக்கு வழி செய்கிறது; அவர்கள் அதிலிருந்து கூடுதல் இலாபம் சம்பாதிக் கின்றனர்....சென்ற அரையாண்டில், என் வட்டத்தில் 122 ஆலை கள் கைவிடப்பட்டுள்ளன; 143 ஆலைகள் இயங்கவில்லை. இருப்பினும், மிகை வேலை சட்டபூர்வ நேரத்தையும் தாண்டித் தொடரப்படுகிறது என்று திரு லியோனார்டு ஹார்னர் கூறு கிறார்.''[234]

---

231 தொழிற்சாலைகள் ஒழுங்கு முறைச் சட்டங்களில் ''தொழிற்சாலைகள் ஆய்வாளர் திரு லி. ஹார்னரின் யோசனைகள்.'' காமன்ஸ் சபை உத்தரவுப்படி அச்சிடப்பட்டது, 1859 ஆகஸ்டு 9, பக்கம் 4,5.

232 அரையாண்டுக்கான தொழிற்சாலை ஆய்வாளர் அறிக்கைகள், 1856 அக்டோபர், பக்கம் 35.

233 தொ. ஆ. அறிக்கைகள், 1858 ஏப்ரல் 30, பக்கம் 9.

234 தொ. ஆ. அறிக்கைகள், முன் வந்தது, பக்கம் 10.

திரு ஹோவெல் கூறுகிறார்: "தொழில் மந்தத்தின் விளைவாக, பெரும் பகுதி நேரம் பல தொழிற்சாலைகள் அறவே மூடப் பட்டிருந்தன; இன்னுமதிகத் தொகையிலான தொழிற்சாலைகள் குறைந்த நேரம் வேலை செய்து வந்தன. ஆயினும், ஓய்வெடுக்கவும் இளைப்பாறவும் அனுமதிக்கப்படுவதாக வெளி ஒப்புக்குச் சொல் லப்படுகிற நேரங்களில் நாளொன்றுக்கு அரை அல்லது முக்கால் மணி நேரத்தை அபகரிப்பதன் மூலம் தொழிலாளர்களிடமிருந்து அந்த நேரம் பறித்துக் கொள்ளப்படுகிறது என்ற புகார்கள் கிட்டத் தட்ட வழக்கமான எண்ணிக்கையிலேயே எனக்குத் தொடர்ந்து வருகின்றன."[235] இதே நிகழ்வு 1861 முதல் 1865 வரையிலான பயங்கரமான பஞ்சு நெருக்கடிகளின் போது இன்னும் சிறிய அளவில் திரும்பவும் நடந்தது.[236] "ஒரு தொழிற்சாலையில் சாப்பாட்டு நேரத்திலோ, அல்லது ஏதேனும் சட்டப்புறம்பான நேரத்திலோ ஆட்கள் வேலையில் ஈடுபட்டிருப்பது காணப்பட்டால் சில நேரங்களில் இதற்கு சொல்லப்படும் சால்ஜாப்பு என்ன வென்றால், அவர்கள் நிர்ணயிக்கப்பட்ட நேரத்தில் ஆலையை விட்டு வெளியேற மாட்டார்களாம்; வேலையை [தமது இயந்திரச் சாதனத்தைத் துடைப்பது, இன்ன பிற] — குறிப்பாக சனிக் கிழமை பிற்பகலில் — நிறுத்தச் செய்வதற்குக் கட்டாயப்படுத்தல் அவசிய மாகிறதாம். ஆனால், இயந்திரங்கள் சுழல்வது நின்று போன பின் ஒரு தொழிற்சாலையில் ஆட்கள் தொடர்ந்து இருந்தனர் என்றால் சுத்தப்படுத்துவது முதலானவற்றுக்காகக் காலை 6 மணிக்கு முன்னரோ [மூலத்திலிருப்பது இப்படித்தான்] சனிக் கிழமை பிற் பகலில் 2 மணிக்கு முன்னரோ போதுமான நேரம் தனியாக ஒதுக்கப்பட்டிருந்தால் அவர்கள் இந்த விதத்தில் வேலை வாங்கப் பட்டிருக்க மாட்டார்கள்."[237]

---

[235] தொ. ஆ. அறிக்கைகள், முன் வந்தது, பக்கம் 25.

[236] பார்க்கவும்: 1861 ஏப்ரல் 30இல் முடிகிற அரையாண்டுக்கான தொ. ஆ. அறிக்கைகள், பிற்சேர்க்கை எண் 2; தொ. ஆ. அறிக்கைகள், 1862 அக்டோபர் 31, பக்கம் 7, 52, 53. சட்ட மீறல்கள் 1863இல் கடைசி அரையாண்டின் போது எண்ணிக்கையில் அதிகமாயின. பார்க்கவும்: 1863 அக்டோபர் 31இல் முடிகிற காலத்துக்கான தொ. ஆ. அறிக்கைகள், பக்கம் 7.

[237] தொ. ஆ. அறிக்கைகள், 1860 அக்டோபர் 31, பக்கம் 23. சட்ட நீதி மன்றங் களில் ஆலை அதிபர்கள் அளித்த சாட்சியத்தின் படி, தொழிற்சாலை உழைப்பில் சகல விதமான குறுக்கீட்டையும் அவர்கள் எவ்வளவு வெறித்தனமாக எதிர்க்கின்றனர் என்பதைப் பின்வரும் விநோத நிகழ்ச்சி காட்டுகிறது. 1836 ஜூன் தொடக்கத்தில், பேட்லீ பகுதியிலுள்ள 8 பெரிய ஆலைகளின் அதிபர்கள் தொழிற்சாலைச் சட்டங்களை மீறியிருப்பதாக டியூஸ்பரி (யார்க்ஷயர்) மாஜிஸ்திரேட்டுகளுக்குத் தகவல் கிடைத்தது. இந்தக் கனவான்களில் சிலர் 12க்கும் 15க்கும் இடைப்பட்ட வயதுள்ள 5 பையன்களை, சாப்பாட்டு இடைவேளையும் நள்ளிரவில் உறக்கத்துக்காக ஒரு மணி நேரமும் தவிர, இடைவேளை எதுவும் விடாமல் வெள்ளிக் கிழமை காலை 6 மணி முதல் மறு நாள் சனிக் கிழமை மாலை 4 மணி வரை வேலை வாங்கியதாகக் குற்றஞ்சாட்டப்பட்டது. கம்பளிக் கந்தல்களைப் பிரித்துப் பிய்க்கும் வேலை நடக்கும் இடத்தில் தூசியும் பிசிறும்

"இதன் மூலம் (சட்டத்தை மீறி அதிகப்படியாக வேலை வாங்குவதன் மூலம்) சம்பாதிக்கக் கூடிய இலாபம் பலரையும் மயக்கி ஈர்க்கிறது; அவர்களால் இந்த ஈர்ப்பை எதிர்த்து நிற்க முடியவில்லை. சட்டத்தின் பிடியில் சிக்காமல் தப்பி விடலாம் என்பது அவர்களது கணக்கு. தண்டிக்கப்பட்டவர்கள் கட்ட வேண்டியிருந்த அபராதமும் செலவுகளும் சொற்பமே என்பதைப் பார்க்கும் போது, தாங்கள் மாட்டிக் கொண்டாலும் கணிசமான ஆதாயம் மிச்சப்படும் என்று அவர்களுக்குத் தெரிந்து விடுகிறது....[238] அன்றாடம் அவ்வப்போது திருடிச் சேர்த்து கூடுதல் நேரம் பெறப்படும் சந்தர்ப்பங்களில், வழக்கு தொடர்வதில் ஆய்வாளர்களுக்கு சமாளிக்க முடியாத இடர்ப்பாடுகள் உள்ளன."[239]

தொழிலாளியின் சாப்பாட்டுக்கும் இளைப்பாறலுக்குமான நேரத்திலிருந்து இப்படியாக மூலதனம் செய்யும் "சிறு திருட்டுகளுக்கு" தொழிற்சாலை ஆய்வாளர்கள் "அற்பத்தனமான நிமிடத் திருட்டுகள்"[240] என்றும், "ஒரு சில நிமிடங்களைப் பிடுங்கிக் கொள்வது"[241] என்றும், தொழிலாளர்கள் அவற்றைத் தொழில் பாஷையில் அழைப்பது போல் "சாப்பாட்டு நேரத்தைக் கொறிப்பது"[242] என்றும் பெயர் சூட்டுகின்றனர்.

உபரி-உழைப்பு உபரி-மதிப்பை உண்டாக்குவது இச்சூழலில் இரகசியமன்று என்பது தெளிவு. பெரிதும் மரியாதைக்குரிய அதிபர் ஒருவர் என்னிடம் சொன்னார்: "மிகை நேரமாய் நாளுக்குப் பத்தே பத்து நிமிடம் வேலை வாங்க என்னை அனுமதிப்பீர்களானால் ஓராண்டுக்குள் என் சட்டைப் பையில்

---

காற்றில் அடர்ந்திருக்கும்; வயது வந்த தொழிலாளியும் கூட நுரையீரலைப் பாதுகாத்துக் கொள்வதற்காகக் கைக்குட்டையால் வாயை மூடிக் கொள்ள வேண்டியிருக்கும். "புழுதிப் பொந்து" என்று அழைக்கப்படும் பொந்து போன்ற இந்த இடத்தில் இப்படி 30 மணி நேரம் இந்தக் குழந்தைகள் ஓயாமல் உழைக்க வேண்டியிருந்தது! குற்றஞ் சாட்டப்பட்ட இக்கனவான்கள் குவேக்கர்கள் என்பதால் சத்தியப் பிரமாணம் எடுத்துக் கொள்ளவில்லை: அந்த அளவுக்கு அவர்கள் சமய ஆசாரத்திலிருந்து இம்மியும் பிசகாதவர்கள்; தாங்கள் இந்த வருந்தத்தக்க குழந்தைகளுக்காக மனமிரங்கி, அவர்களுக்கு உறக்கத்துக்கென நான்கு மணி நேரம் விட்டதாகவும், ஆனால் அந்தப் பிடிவாதக்காரக் குழந்தைகள் படுக்கச் செல்ல ஒரேயடியாக மறுத்து விட்டதாகவும் உறுதியாகச் சொல்கின்றனர். குவேக்கர் கனவான்களுக்கு £20 அபராதம் விதிக்கப்பட்டது. இத்தகையோர் குறித்து அந்தக் காலத்திலேயே டிரைடன் சொன்னார்:

"புனிதத் தோற்றம் பொங்கி வழியும் குள்ள நரி,
சத்தியம் செய்ய அஞ்சிடும், எனின் சைத்தான் போலப் புளுகிடும்;
புனித நோன்பின் சோகம் பூண்டு, புண்ணியர் போலவே நோக்கிடும்;
பாவம் செய்யத் துணியாது, பிரார்த்தனை சொல்லி முடிக்கும் வரை!"

238 தொ. ஆ. அறிக்கைகள், 1856 அக்டோபர் 31, பக்கம் 34.

239 முன் வந்தது, பக்கம் 35.

240 முன் வந்தது, பக்கம் 48.

241 முன் வந்தது, பக்கம் 48.

242 முன் வந்தது, பக்கம் 48.

ஓராயிரம் நிமிடங்களை போடுகிறவராவீர்கள்.''[243] ''வினாடிகளே இலாபத்தின் ஆக்கக் கூறுகள்.''[244]

இந்தக் கண்ணோட்டத்தின் படி, முழு நேரம் வேலை செய்கிற தொழிலாளர்களை ''முழு நேரத்தினர்'' என்றும், 6 மணி நேரம் மட்டுமே வேலை செய்ய அனுமதிக்கப்படுகிற 13 வயதுக்குட்பட்ட குழந்தைகளை ''அரை நேரத்தினர்'' என்றும் பெயரிடுவது சாலப் பொருத்தமானது. ஏனெனில் தொழிலாளி இங்கே உழைப்பு நேரத்தின் ஆளுருவமாகவே இருக்கிறார். தனியாட்களிடையிலான எல்லா வேறுபாடுகளும் மறைந்து விடுகின்றன; ''முழு நேரத்தினர்,'' ''அரை நேரத்தினர்''[245] என்ற வேறுபாடு மட்டும் எஞ்சுகிறது.

## பிரிவு 3. — ஆங்கிலேயத் தொழில் துறையில் சுரண்டலுக்கு சட்ட வரம்புகள் இல்லாத கிளைகள்

இது வரை நாம் வேலை-நாளை நீட்டிக்கும் போக்கை, உபரி-உழைப்புக்கான அசுரப் பசியைப் பரிசீலித்தோம். ஓர் ஆங்கிலேய முதலாளித்துவப் பொருளாதார அறிஞர் கூறுவது போல, அமெரிக்கச் செவ்விந்தியர்களுக்கு ஸ்பெயின் நாட்டினர் இழைத்த கொடுமைகளுக்கு[246] சற்றும் சளைக்காத பயங்கர முறையில் தொழிலாளர்கள் வதைக்கப்பட்டதால் இறுதியில் மூலதனத்தை சட்ட ஒழுங்கு முறைகளின் சங்கிலிகளால் கட்ட வேண்டியிருந்த தொழிற் பிரிவில் இந்தப் பரிசீலனையைச் செய்தோம். இப்போது, உழைப்புச் சுரண்டல் நாளது வரை கட்டுத்தளைகள் இல்லாதிருக்கிற, அல்லது நேற்று வரை அப்படியிருந்த குறிப்பிட்ட சில உற்பத்திக் கிளைகளை நோட்டம் விடுவோம்.

1860 ஜனவரி 14ஆம் நாள் நாட்டிங்காம் அசெம்பிளி வளாகத்தில் நடைபெற்ற கூட்டத்தின் தலைவர் என்ற முறையில்

---

243 முன் வந்தது, பக்கம் 48.

244 தொழிற்சாலை ஆய்வாளர் அறிக்கை, 1860 ஏப்ரல் 30, பக்கம் 56.

245 தொழிற்சாலைகளிலும் சரி, அறிக்கைகளிலும் சரி, இரண்டிலுமே அதிகாரபூர்வப் பதங்கள் இவை.

246 ''ஆதாயத்துக்காகக் கொடுமைகள் செய்யும் ஆலை அதிபர்களின் இலாபப் பேராசை, அமெரிக்காவை வென்றதும் ஸ்பெயின் நாட்டினர் தங்கத்தைத் தேடி இழைத்த கொடுமைகளால் விஞ்சப்படுவது அரிதே.'' ஜான் வேட், ''நடுத்தர மற்றும் உழைக்கும் வர்க்கங்களின் வரலாறு,'' 3ஆம் பதிப்பு, லண்டன், 1835, பக்கம் 114. அரசியல் பொருளாதாரத்தின் ஒரு வகையான கையேடாகிய இந்தப் புத்தகத்தின் தத்துவக் கூறு, அதன் பிரசுர காலத்தை நோக்குமிடத்து, சில பகுதிகளில், உதாரணமாக வாணிப நெருக்கடிகள் பற்றிய பகுதிகளில் சுயமானதாகும். வரலாற்றுக் கூறு, பெருமளவுக்கு, சர் பி. மோ. ஈடன் எழுதிய ''வறியோரின் நிலை,'' லண்டன், 1797 என்னும் நூலிலிருந்து திருடிய வெட்கங்கெட்ட இலக்கியக் களவாகும்.

மாவட்ட மாஜிஸ்திரேட் திரு பிரஃப்டன் சார்ல்டன் அறிவித்தார்: ''சித்திரப் பின்னல் தொழிலுடன் தொடர்புள்ள மக்கள் பிரிவினர் மத்தியில் அதித அளவு துன்பமும் அவதியும் உள்ளன; நாட்டில் வேறு எப்பகுதியிலும், ஏன், நாகரிக உலகில் எங்குமே காண முடியாத துன்பம் இது. ஒன்பது அல்லது பத்து வயதுடைய குழந்தைகள் காலையில் இரண்டு, மூன்று அல்லது நான்கு மணிக்கு அவர்களது அழுக்குப் படுக்கையிலிருந்து இழுத்து வரப்பட்டு, வயிற்றுப் பாட்டுக்காக இரவு பத்து, பதினொன்று அல்லது பன்னிரண்டு மணி வரை வேலை செய்யுமாறு கட்டாயப்படுத்தப் படுகின்றனர்; அவர்களது கை கால்கள் சூம்பிப் போகின்றன; உடல் கட்டுக்குலைந்து போகிறது; முகம் வெளிறிப் போகிறது; அவர்களது மனிதத்துவம் கல்லாய் இறுகி மரத்துப் போகிறது; அதை நினைத்துப் பார்த்தால் நெஞ்சு பொறுக்கவில்லை....திரு மாலெட் அல்லது வேறு எந்த ஆலையதிபரும் எழுந்து முன் வந்து, விவாதத்துக்கு எதிர்ப்பு தெரிவிப்பதில் ஆச்சரியம் இல்லை. மறைதிரு மாண்டேகு வால்பி வர்ணிப்பது போல இவ்வமைப்பு சமூக வழியிலும், பௌதிக வழியிலும், தார்மிக வழியிலும், ஆத்மிக வழியிலும் மட்டில்லாத அடிமைத்தனமாகும்....ஆண்களுக்கான உழைப்பு நேரத்தை நாளொன்றுக்குப் பதினெட்டு மணி நேரமாகக் குறைக்குமாறு மனு செய்வதற்குப் பொதுக் கூட்டம் நடத்துகிற நகரத்தைப் பற்றி என்ன நினைப்பது?...வர்ஜீனியா, கரோலினா ஆகியவற்றின் பருத்தித் தோட்ட அதிபர்களுக்கெதிராக நாம் முழக்கம் செய்கிறோம். முதலாளிமார்கள் அணிவதற்காக முகத்திரைகளும், கழுத்துப் பட்டைகளும் செய்யும் பொருட்டு இப்படி மனிதத்துவம் பையப் பைய பலியிடப்படுவதைக் காட்டிலும் அந்தத் தோட்ட அதிபர்களின் அடிமைச் சந்தையும், சாட்டையும் மனிதச் சதைப் பண்டமாற்றும் அதிகம் வெறுக்கத் தக்கவைதாமா?''[247]

கடந்த 22 ஆண்டுகளில் ஸ்டாஃபோர்டுஷயரின் மண்பாண்டத் தொழிற் சாலைகள் மூன்று பாராளுமன்ற விசாரணைகளுக்கு உட்பட்டன. ''குழந்தையுழைப்பு ஆணையர்களுக்கு'' 1841ஆம் ஆண்டு திரு ஸ்க்ரிவன் அளித்த அறிக்கையிலும், பிரிவு கவுன்சில் மருத்துவ அதிகாரியின் உத்தரவின் பேரில் பிரசுரிக்கப்பட்ட 1860ஆம் ஆண்டிற்கான டாக்டர் கிரீன்ஹௌவின் அறிக்கையிலும் (பொதுச் சுகாதாரம், 3ஆம் அறிக்கை, 112-113), கடைசியாக, ''1863 ஜூன் 13ஆம் தேதிய குழந்தையுழைப்பு ஆணையத்தின் முதல் அறிக்கையில்'' அடங்கியுள்ள 1862ஆம் ஆண்டிற்கான திரு லாங்கேயின் அறிக்கையிலும் இந்த விசாரணை முடிவுகளைக் காணலாம். சுரண்டலுக்கு ஆளான குழந்தைகளே அளித்த சில வாக்குமூலங்களை 1860, 1863 அறிக்கைகளிலிருந்து எடுத்துக்

247 டெய்லி டெலிகிராஃப், 1860 ஜனவரி 17.

கொள்வது நமது நோக்கத்துக்குப் போதுமானது. குழந்தைகளிட மிருந்து, வயது வந்தவர்களின் நிலையை, குறிப்பாகப் பெண்கள், தாய்மார்களின் நிலையை நாம் அறியலாம். அதுவும், எதனோடு ஒப்பு நோக்கின் நூல் நூற்பது ஓர் ஏற்புடைய, ஆரோக்கியமான வேலையாகத் தோன்றுகிறதோ, அந்தத் தொழிற் கிளையில் நாம் இதைச் செய்யலாம்.[248]

9 வயதாகும் வில்லியம் வுட் வேலை செய்ய ஆரம்பித்த போது அவனது வயது 7 ஆண்டு 10 மாதம். ஆரம்பம் முதலே அவனது வேலை ''வார்ப்பேந்தி விரைதல்'' (அச்சில் வார்க்கப்பட்டுத் தயாராயுள்ள பொருட்களை உலர்த்தும் அறைக்குள் எடுத்துச் செல்வதும், பின் காலியான அச்சைத் திரும்பக் கொணர்வதும்). வாரத்தில் ஒவ்வொரு நாளும் அவன் காலை 6 மணிக்கு வேலைக்கு வந்து இரவு சுமார் 9 மணிக்கு வேலை முடிந்து திரும்பினான். ''வாரத்தில் 6 நாள் இரவு 9 மணி வரை வேலை செய்கிறேன். ஏழு அல்லது எட்டு வாரம் இவ்வாறு வேலை செய்துள்ளேன்.'' 7 வய தான குழந்தைக்குப் பதினைந்து மணி நேர உழைப்பு! 12 வயதான ஜே. முர்ரே கூறுகிறான்: ''சல்லடைக் கருவியை இயக்குவதும் வார்ப்பேந்தி விரைதலும் என் வேலை. நான் 6 மணிக்கு வரு கிறேன். சில நேரம் 4 மணிக்கு வருகிறேன். நேற்று இரவு பூராவும் இன்று காலை 6 மணி வரை நான் வேலை செய்தேன். முந்தாநாள் இரவுக்குப் பின்னர் நான் படுக்கவில்லை. நேற்று இரவு இன்னும் எட்டு அல்லது ஒன்பது பையன்களும் வேலை செய்தனர். அவர் களில் ஒருவன் தவிர எல்லாரும் இன்று காலை வந்திருக்கின்றனர். எனக்கு 3 ஷில்லிங் 6 பென்னி கிடைக்கிறது. இரவில் வேலை செய்வதற்காகக் கூடுதலாய் ஒன்றும் கிடைப்பதில்லை. சென்ற வாரம் நான் இரண்டு இரவுகள் வேலை செய்தேன்.'' பத்து வயதுள்ள ஃபெர்னிஹாஃப் சொல்கிறான்: ''எனக்கு எப்போதுமே (சாப்பாட்டுக்காக) ஒரு மணி நேரம் கிடைப்பதில்லை. சில சமயங் களில், வியாழன், வெள்ளி, சனி ஆகிய நாட்களில் எனக்குக் கிடைப்பது அரை மணி நேரமே.''[249]

டிரெண்ட் கரை ஸ்டோக், ஒல்ஸ்டாண்டன் ஆகிய மண்பாண் டத் தொழில் வட்டங்களில் சராசரி ஆயுட் காலம் அசாதாரணமான அளவுக்குக் குறுகியதாய் உள்ளதென்று டாக்டர் கிரீன்ஹௌ கூறுகிறார். 20 வயதுக்கு மேற்பட்ட வயது வந்த ஆண்களின் தொகையில் ஸ்டோக் வட்டத்தில் 36.6%, ஒல்ஸ்டாண்டனில் 30.4% மட்டுமே மண்பாண்டத் தொழிற் சாலைகளில் வேலை செய்து வந்த போதிலும், அந்த வயதுள்ள ஆண்கள் மத்தியில்

---

[248] பார்க்கவும்: பிரெடெரிக் எங்கெல்ஸ் எழுதிய ''Lage...,'' பக்கம் 249-51.

[249] குழந்தையுழைப்பு ஆணையம், முதல் அறிக்கை, 1863, சாட்சியம், பக்கம் 16,19,18.

மொத்த இறப்புகளில் முதல் வட்டத்தில் பாதிக்கு அதிகமாகவும், இரண்டாவது வட்டத்தில் கிட்டத்தட்ட $\frac{2}{5}$ பாகமும் மண்பாண்டத் தொழிலாளர்களைப் பீடித்துள்ள நுரையீரல் வியாதிகளின் விளைவாகும். ஹான்லீயில் மருத்துவத் தொழில் நடத்தும் டாக்டர் பூத்ராய்டு கூறுகிறார்: ''மண்பாண்டத் தொழிலாளர்களின் அடுத்தடுத்த தலைமுறை ஒவ்வொன்றும் அதற்கு முன் சென்றதை விட சிறுத்தும் திடங்குன்றியும் உள்ளது.'' இதே போல் இன்னொரு வைத்தியர் திரு எம்பீன் கூறுகிறார்: ''25 ஆண்டு முன்னர் அவர் மண்பாண்டத் தொழிலாளர்கள் மத்தியில் தொழில் நடத்தத் தொடங்கிய பின்னர், ஆகிருதி, பருமன் ஆகியவற்றின் குறைதலில் குறிப்பாக வெளிப்படும் தெளிவான சீர்கேட்டை அவர் கவனித்து வந்தார்.'' இந்தக் கூற்றுகள் 1860இல் டாக்டர் கிரீன்ஹௌ அளித்த அறிக்கையிலிருந்து எடுக்கப்பட்டவை.[250]

1863ஆம் ஆண்டில் ஆணையர்கள் அளித்த அறிக்கையிலிருந்து: வடக்கு ஸ்தாஃபோர்டுஷயர் மருத்துவமனையின் முது நிலை வைத்தியர் டாக்டர் ஜே. டி. ஆர்லெட்ஜ் கூறுகிறார்: ''மண்பாண்டத் தொழிலாளர்கள் ஒரு வர்க்கம் என்ற முறையில், ஆண்கள், பெண்கள் இருசாராருமே பௌதிக வழியிலும் தார்மிக வழியிலும் சீரழிந்த மக்கள்சமூகத்தின் சின்னமாவர். அவர்கள் பொதுவாக வளர்ச்சி குன்றியவர்களாகவும், உருக்கெட்டவர்களாகவும் உள்ளனர். பலர் மார்புக் கூட்டுக் குறையுடையவர்களாகவும் உள்ளனர். அவர்கள் உரிய காலத்துக்கு முன்பே வயோதிகர் ஆகின்றனர்; அவர்கள் அற்ப ஆயுள் படைத்தோர் என்பதைக் கூறத் தேவையில்லை. அவர்கள் சோகை பிடித்தும், இரத்தஞ் செத்தும் உள்ளனர்; செரியாமாந்தத்தின் விடாப்பிடியான தாக்குதல்கள், கல்லீரலிலும், சிறு நீரகங்களிலும் கோளாறுகள், கீல்வாதம் ஆகியவற்றில் அவர்களது உடல் தளர்வு வெளிப்படுகிறது. ஆனால், நோய்கள் யாவற்றிலும் முதலாவதாக மார்பு நோயால்—கபவாதம், கோழை நோய், மார்ச்சளி, ஆஸ்துமா ஆகியவற்றால்—அவர்கள் எளிதில் பீடிக்கப்படுகின்றனர். இந்த ஒரு வடிவம் அவர்களுக்கே உரித்தானதாகத் தோன்றும்: அது மண்பாண்டக்கார ஆஸ்துமா, அல்லது மண்பாண்டக்காரக் காசநோய் என்ற பெயரால் வழங்குகிறது. சுரப்பிகளை அல்லது எலும்புகளை அல்லது உடலின் ஏனைய பாகங்களைக் கண்டமாலை தாக்குவது மண்பாண்டத் தொழிலாளர்களில் மூன்றில் இரு பங்கினரையும் அதற்கும் அதிகமானோரையும் பீடித்துள்ள நோயாகும்....இந்த வட்டத்திலுள்ள மக்களின் 'சீரழிவுப் போக்கு' உள்ளதை விடவும் மோசமாக இல்லாததற்குக் காரணம் அடுத்துள்ள கிராமப்புறத்திலிருந்து இடைவிடாமல் வேலைக்கு ஆள் சேர்ப்பதும், இன்னும் ஆரோக்கியமான

250 பொதுச் சுகாதாரம், 3ஆவது அறிக்கை, பக்கங்கள் 102, 104, 105.

இனங்களுடன் கொள்வினை கொடுப்பினை நடப்பதுமே.''[251]

அதே நிறுவனத்தைச் சேர்ந்த காலஞ் சென்ற மருத்துவப் பணியாளர் திரு சார்லஸ் பார்சன்ஸ் ஆணையர் லாங்கேக்கு எழுதிய கடிதத்தில் இதர பலவற்றோடு இதையும் எழுதுகிறார்: ''நான் நேரடியாகப் பார்த்ததை வைத்தே பேச முடியும்; புள்ளி விவரத் தகவல்களை வைத்தன்று. பெற்றோர்கள் அல்லது முதலாளி களின் பேராசையைத் திருப்திப்படுத்துவதற்காக ஆரோக்கியத்தைப் பலியிட்ட ஏழைக் குழந்தைகளைப் பார்க்கும் போது நான் மீண்டும் மீண்டும் ஆத்திரமடைகிறேன்.'' அவர் மண்பாண்டத் தொழிலாளர்களின் நோய்களுக்கான காரணங்களைப் பட்டிய லிட்டு, ''நீண்ட வேலை நேரம்'' என்ற சொற்றொடரில் அவற்றைத் தொகுத்துச் சொல்கிறார். ''உலகெங்கும் பேரும் புகழும் பெற்றுள்ள இந்தத் தொழில் ஈட்டியுள்ள பெரிய வெற்றிகளுக்கு யாருடைய உழைப்பும் தேர்ச்சியும் காரணமோ...அந்த உழைக்கும் மக்களின் உடற் கேடும், பரவலான தேக அவதியும் இளம் வயதுச் சாவும் இந்தப் பெரிய வெற்றியின் உடன்பிறப்புகள் என்று சொல்ல வேண்டியிருக்கும் இந்த நிலை அதிக காலம் நீடிக் காது''[252] என்று ஆணையத்தின் அறிக்கை நம்பிக்கை தெரிவிக் கிறது. இங்கிலாந்தில் மண்பாண்டத் தொழிற்சாலைகளுக்குப் பொருந்துவதனைத்தும் ஸ்காட்லாந்திலுள்ள மண்பாண்டத் தொழிற் சாலைகளுக்கும் பொருந்தும்.[253]

செந்தீக்குச்சிகளின் தயாரிப்பு 1833இல் தீக்குச்சியுடனேயே பாஸ்பரசைப் பொருத்துகிற முறை கண்டுபிடிக்கப்பட்டதிலிருந்து ஆரம்பமாகிறது. 1845க்குப் பின்னர் இப்பட்டறைத் தொழில் இங்கிலாந்தில் துரிதமாக வளர்ந்து, குறிப்பாக லண்டனின் ஜன நெருக்கமுள்ள பகுதிகளிலும், அதே போல் மான்செஸ்டர், பர்மிங் காம், லிவர்பூல், பிரிஸ்டல், நார்விச், நியூகாசில், கிளாஸ்கோ ஆகிய இடங்களிலும் பரவியுள்ளது. செந்தீக்குச்சி செய்வோருக்கே உரித்தான ஒரு வியாதியென 1845இல் வியன்னா மருத்துவர் ஒருவர் கண்டுபிடித்த ஒரு வகை இசிவு ஜன்னியும் இத்தொழிலுடன் சேர்ந்து பரவியிருக்கிறது. பாதித் தொழிலாளர்கள் பதின்மூன்று வயதுக்குட்பட்ட குழந்தைகளும், பதினெட்டு வயதுக்குட்பட்ட இளம் வயதினரும் ஆவர். இத்தொழில் சுகாதாரமற்றதாயும் அருவருக்கத் தக்கதாயும் இருப்பதால், மக்கள் மத்தியில் கெட்ட பெயரெடுத் துள்ளது. உழைக்கும் வர்க்கத்தின் மிகமிகத் துர்ப்பாக்கியமான பகுதியினர் மட்டுமே—அரைப்பட்டினி கிடக்கும் விதவைகள் போன்றோரே—இத்தொழிலுக்குத் தமது குழந்தைகளை, ''கந்த

[251] குழந்தையுழைப்பு ஆணையம், முதல் அறிக்கை, பக்கம் 24.

[252] குழந்தையுழைப்பு ஆணையம், பக்கம் 22 மற்றும் xi.

[253] முன் வந்தது, பக்கம் xlvii.

லுடுத்தி அரை பட்டினி கிடக்கும் படிப்பு வாசனையற்ற குழந்தைகளை''[254]அனுப்பி வைக்கின்றனர்.

ஆணையர் வொய்ட் விசாரித்த சாட்சிகளில் (1863), 270 பேர் 18 வயதுக்குட்பட்டவர்கள், 50 பேர் 10 வயதுக்குட்பட்டவர்கள், 10 பேர் 8 வயதே ஆனவர்கள், 5 பேர் 6 வயதே ஆனவர்கள். 12 மணி நேரம் முதல் 14 அல்லது 15 மணி நேரம் வரையிலான வேலை-நாளின் வீச்சு, இரவு நேர உழைப்பு, முறையற்ற சாப்பாட்டு நேரங்கள், பெரும்பாலும் பாஸ்பரசால் பீடிக்கப்பட்டிருக்கும் அதே வேலை அறைகளில் சாப்பாட்டை உட்கொள்வது—தாந்தேயின் காவியத்தில் சித்திரிக்கப்படும் நரக லோகத்தின் படுபயங்கரங்களை விஞ்சும் படியான கொடுமைகள் இந்தத் தொழிலில் நிலவக் காணலாம்.

சுவர் அலங்காரத் தாள் உற்பத்தியில் மோட்டா ரகங்கள் இயந்திரத்தால் அச்சிடப்படுகின்றன. நேர்த்தி ரகங்கள் கையால் அச்சிடப்படுகின்றன (அச்சு குத்துதல்). மிகவும் முனைப்பான தொழிற்காலம் அக்டோபர் ஆரம்பம் முதல் ஏப்ரல் முடிவு வரை. இந்த மாதங்களில் காலை 6 மணி முதல் இரவு 10 மணி வரை, அல்லது இன்னுமதிக நேரத்துக்கு, ஓய்வு என்பதே இல்லாமல் மூர்க்க கதியில் மும்முரமாக வேலை நடக்கிறது.

ஜே. லீச் சாட்சியம் அளிக்கிறார்: ''சென்ற குளிர்காலத்தில், ஒரு நேரத்தில் பத்தொன்பது பெண்களில் ஆறு பேர் மட்டுமே மிகை வேலையால் உடல் நலிவுறாதிருந்தனர். அவர்களை விழித்திருக்கச் செய்வதற்காகக் கூச்சலிட்டு நான் அவர்களை ஏச வேண்டியிருக்கிறது.'' வி. டஃபி: ''குழந்தைகளில் யாருமே வேலையின் போது கண் மூடாதிருக்க முடியாத நிலையை நான் பார்த்திருக்கிறேன்; உள்ளபடியே எங்களாலும் கூட முடியவில்லை.'' ஜே. லைட்போர்ன்: ''எனக்கு 13 வயது, நாங்கள் சென்ற குளிர்காலத்தில் (இரவு) 9 மணி வரை வேலை செய்தோம். அதற்கு முந்தைய குளிர் காலத்தில் 10 வரை வேலை செய்தோம். சென்ற குளிர் காலத்தில் ஒவ்வொரு நாள் இரவும் பாதங்களில் வலி தாங்காமல் நான் கத்துவது வழக்கம்.'' ஜி. ஆப்ஸ்டென்: ''அவன் என் பையன்....அவனுக்கு வயது 7 ஆக இருந்த போது, வெண்பனியில் அவனை முதுகில் சுமந்து சென்று வேலைக்குக் கொண்டுபோய் விடுவதும், அவ்வாறே திரும்ப அழைத்து வருவதும், அவன் நாளொன்றுக்கு 16 மணி நேரம் வேலை செய்வதும் வழக்கம்.... அவன் இயந்திரத்தின் அருகில் நிற்கும் போது நான் மண்டியிட்டு அவனுக்கு உணவூட்டுவதுண்டு. ஏனெனில், அவன் இயந்திரத்தை விட்டு விலகவோ, அதை நிறுத்தவோ முடியாது.'' மான்செஸ்டர் தொழிற்சாலை ஒன்றின்

---

254 முன் வந்தது, பக்கம் liv.

மேலாண்மைப் பங்காளரான ஸ்மித்: ''நாங்கள் (''நமக்காக'' வேலை செய்கிற அவரது ஆட்களைக் குறிப்பிடுகிறார்) சாப்பாட்டுக்காக நிறுத்தாமலே தொடர்ந்து வேலை செய்கிறோம்; இதனால் 10½ மணிகள் கொண்ட அந்த நாளைய வேலை மாலை 4.30க்குள் முடிந்து, அதன் பின் நடப்பதெல்லாம் மிகை நேரம் ஆகிறது.''[355] (இந்தத் திருவாளர் ஸ்மித் 10½ மணி நேரமும் சாப்பிடாமலே இருக்கிறாரா?) ''நாங்கள் (அதே ஸ்மித்) அபூர்வமாகவே மாலை 6 மணிக்கு முன்னதாக வேலை முடிந்து செல்கிறோம். (''நமது'' உழைப்புச் சக்தியியந்திரங்களை நுகர்ந்திடும் நுகர்வை விட்டுச் செல்வதையே அவர் சொல்கிறார்); இதனால் நாங்கள் (மீண்டும் அவர்தாம்) உண்மையில் ஆண்டு முழுவதுமே மிகைநேரம் வேலை செய்கிறோம்....இவர்கள் அனைவருக்கும், குழந்தைகளுக்கும் வயது வந்தோருக்கும் ஒரே மாதிரியாக (குழந்தைகளும் இளம் வயதினருமாய் 152 பேர், வயது வந்தோர் 140 பேர்) கடந்த 18 மாதமாக சராசரி வேலை குறைந்தது வாரத்துக்கு 7 நாள், 5 மணி அல்லது 78½ மணி நேரம் என்பதாய் இருந்துள்ளது. இவ்வாண்டு (1862) மே 2ஆம் தேதியுடன் முடிகிற ஆறு வாரத்துக்கான சராசரி கூடுதலாய் இருந்தது—வாரத்துக்கு 8 நாள் அல்லது 84 மணி நேரம்.'' இருப்பினும், மாட்சிமைக்குரிய ''நாங்கள்'' என்று தன்னைப் பன்மையாக்கிக் கொள்வதில் இவ்வளவு தீவிர ஆர்வம் காட்டுகிற இதே திருவாளர் ஸ்மித் புன்னகையோடு சொல்கிறார், ''இயந்திர வேலை செய்வது கடினமன்று.'' அவ்வாறே, அச்சுக்குத்தும் தொழிலைச் சேர்ந்த முதலாளிகள் கூறுகின்றனர்: ''கையினால் உழைப்பது இயந்திர வேலையைக் காட்டிலும் ஆரோக்கியமானது.'' மொத்தத்தில் ''சாப்பாட்டு நேரத்தில் மட்டுமாவது இயந்திரங்களை நிறுத்துவது'' என்ற யோசனையை ஆலையதிபர்கள் ஆவேசமாக எதிர்க்கின்றனர். பரோவில் சுவரலங்காரத் தாள் உற்பத்தி செய்யும் தொழிற் சாலையின் மேலாளர் திரு ஆட்லி கூறுகிறார்: ''உதாரணமாக, காலை 6 மணி முதல் இரவு 9 மணி வரை வேலையை அனுமதிக்கிற சரத்து எங்களுக்கு (!) மிகவும் ஏற்றதாய் இருக்கும். ஆனால் காலை 6

---

[355] இதை நமது உபரி-உழைப்பு நேரத்துக்குரிய அதே அர்த்தத்தில் எடுத்துக் கொள்ளக் கூடாது. இந்தக் கனவான்கள் 10½ மணி நேர உழைப்பை இயல்பான வேலை-நாளாகக் கருதுகின்றனர்; இதில் இயல்பான உபரி-உழைப்பும் அடங்கும் என்பது மெய்தான். இதன் பின்னர் ஆரம்பிக்கிறது ''மிகைநேரம்.'' இதற்கு, சிறிது அதிகமாக ஊதியம் தரப்படுகிறது. இயல்பான நாள் என்று சொல்லப்படுவதின் போது செலவிடப்படும் உழைப்புக்கு அதன் மதிப்புக்கும் குறைவாகவே ஊதியம் தரப்படுகிறது என்பதைப் பின்னர் பார்ப்போம். ஆதலால், மிகைநேரம் என்பது இன்னுமதிகமான உபரி-உழைப்பைக் கறப்பதற்கான முதலாளித்துவத் தந்திரம்தான். இயல்பான வேலை-நாளின் போது செலவிடப்படும் உழைப்புச் சக்திக்குக் குறைவின்றி முறையாகவே ஊதியம் கொடுத்தாலும் கூட, மிகைநேரம் என்பது இன்னுமதிக உபரி-உழைப்பைக் கறப்பதற்கான தந்திரம்தான்.

மணி முதல் மாலை 6 மணி வரையிலான தொழிற்சாலை வேலை நேரம் ஏற்றதல்ல. எங்கள் இயந்திரம் எப்போதுமே சாப்பாட்டு வேளைக்காக நிறுத்தப்படுகிறது. (என்னே பெருந்தன்மை!) குறிப்பிட்டுச் சொல்லும் படியான அளவில் காகிதம், சாயம் விரயமாவதில்லை.'' அனுதாபத்துடன் அவர் மேலும் சொல்கிறார்: ''ஆனால் நேர இழப்பு விரும்பப்படாதது புரிந்து கொள்ளக் கூடியதே.'' ஆணையம் தனது அறிக்கையில் இது குறித்து சூதுவாதில்லாமல் அபிப்பிராயம் தெரிவிக்கிறது. நேரத்தை, அதாவது மற்றவர்களது உழைப்பைத் தனதாக்கும் நேரத்தை இழந்து விடுவோமே, அதனால் இலாபத்தை இழந்து விடுவோமே என்று ''முன்னணித் தொழில் நிறுமங்கள்'' சில அஞ்சுகின்றன என்றும், நாளுக்கு 12 முதல் 16 மணி நேரம் வேலை செய்கிற 13 வயதுக்குட்பட்ட குழந்தைகளும் 18 வயதுக்குட்பட்ட இளம் வயதினரும் மதிய உணவை இழக்க விடுவதற்கு இந்த அச்சம் போதுமான காரணமன்று என்றும், அதே போல, உற்பத்தி நிகழ்முறையின் போதே நீராவி இயந்திரத்துக்கு நிலக்கரி, நீர் ஆகியவையும், கம்பளிக்கு சோப்பும், சக்கரத்துக்கு எண்ணெயும் வழங்குவது மாதிரி—உழைப்புச் சாதனங்களுக்கான துணைப் பொருளாகவே—அவர்களுக்கு உணவு தருவதற்கும் கூட இந்த அச்சம் போதுமான காரணமன்று என்றும் அது கூறுகிறது.[256]

இங்கிலாந்தில் வேறு எந்தத் தொழிற் கிளையும் ரொட்டித் தயாரிப்புத் தொழிலின் அளவுக்கு இவ்வளவு பழங்காலத்திய, (ரோமானியப் பேரரசின் கவிஞர்களிடமிருந்து நாம் அறிந்து கொள்வது போல) கிறிஸ்துவுக்கு இவ்வளவு முற்பட்ட உற்பத்தி முறையை நாளது வரை பாதுகாத்து வைத்திருக்கவில்லை. (சமீபத்தில் புகுத்தப்பட்டதான இயந்திரவழி ரொட்டித் தயாரிப்பை நாம் கணக்கிலெடுத்துக் கொள்ளவில்லை.) ஆனால், முன்னர் கூறியது போல, மூலதனம் முதலில் உழைப்பு நிகழ்முறையின் தொழில் நுட்பத் தன்மை குறித்து கவலைப்படுவதில்லை. அத்தன்மை தனக்கு எப்படிக் கிடைக்கிறதோ அப்படியே எடுத்துக் கொண்டு தொடங்குகிறது.

ரொட்டித் தயாரிப்பில் நம்ப முடியாத அளவுக்கு நடைபெறும் (குறிப்பாக லண்டனில் நடைபெறும்) கலப்படத்தை முதலில் ''உணவுப் பண்டக் கலப்படம்'' பற்றிய காமன்ஸ் சபைக் குழுவும் (1855-56), ''கண்டுபிடிக்கப்பட்ட கலப்படங்கள்'' என்ற டாக்டர் ஹசாலின் நூலும் வெளிப்படுத்தின.[257] இந்த வெளிப்படுத்தல்களின் விளைவே ''உணவு மற்றும் பான வகைப் பண்டங்களில்

---

[256] முன் வந்தது, சாட்சியம், பக்கம் 123, 124, 125, 140, 54.

[257] தூளாகப் பொடி செய்யப்பட்ட அல்லது உப்புடன் கலக்கப்பட்ட படிக்காரம் ''ரொட்டி தயாரிப்போர் பதார்த்தம்'' என்ற பொருள் பொதிந்த பெயரைத் தாங்கிய மாமூல் வாணிபப் பொருளாகும்.

கலப்படத்தைத் தடுப்பதற்கான'' 1860 ஆகஸ்டு 6 தேதியச் சட்டம்; இச்சட்டம் கலப்படம் செய்த சரக்குகளை வாங்கியோ விற்றோ ''நேர்மையாகக் காசு சம்பாதிக்கத்'' தீர்மானித்துள்ள தடையிலா வணிகர்கள் ஒவ்வொருவருக்கும் இயல்பாகவே அலாதியான காருண்யம் காட்டியதால் செயல்படாத சட்டமாகவே இருந்தது.[258] சாராம்சத்தில் தடையிலா வாணிபம் என்பதன் பொருள் கலப்படம் செய்யப்பட்ட சரக்குகளை அல்லது, ஆங்கிலேயர்கள் சாதுரியமாகச் சொல்வது போல, ''நவீனமாக்கப்பட்ட'' சரக்குகளை வர்த்தகம் செய்வதாகும் என்று காமன்ஸ் சபைக் குழுவே கூட சற்றே பட்ட வர்த்தனமாய் எடுத்துக்காட்டியது. உண்மையில் இந்த விதமான போலிவாதம் வெள்ளையைக் கறுப்பாகவும், கறுப்பை வெள்ளை யாகவும் மாற்றுவது எப்படி என்பதை புரோத்தகோரசை விடவும், இருப்பதெல்லாம் பொய்த் தோற்றமே என்று கண் முன்னால் காட்டுவது எப்படி என்பதை எலியாட்டிக்குகளை விடவும் நன்றாக அறிந்துள்ளது.[259]

ஆயினும், அக்குழு பொது மக்களின் கவனத்தை அவர்களது ''அன்றாட ரொட்டியின்'' பக்கமும், இவ்விதம் ரொட்டித் தொழி லின் பக்கமும் திருப்பியது. அதே நேரத்தில் பொதுக் கூட்டங் களிலும், பாராளுமன்றத்திடம் அளிக்கப்பட்ட மனுக்களிலும், தாங்கள் மிகையாக வேலை வாங்கப்படுவதற்கும் இன்ன பிற

---

[258] புகைக்கரியானது கார்பனின் யாவருமறிந்த ஆற்றல் வாய்ந்த வடிவமாகும். இது எருவாகிறது. இதனைப் புகைபோக்கி துப்பரவு முதலாளிகள் ஆங்கிலேயச் சாகுபடி யாளர்களிடம் விற்கின்றனர். இன்று, 1862இல், வாங்குபவருக்குத் தெரியாமல் 90% தூசியும் மணலும் கலக்கப்பட்ட புகைக்கரி சட்ட வழிப்பட்ட அர்த்தத்தில் கலப்படப் புகைக்கரியா அல்லது வாணிப வழிப்பட்ட அர்த்தத்தில் அசல் புகைக்கரியா என்பது பற்றி ஒரு வழக்கில் பிரித்தானிய சான்றாயர்கள் தீர்ப்பளிக்க வேண்டியிருந்தது. ''Amis du commerce''* அதை அசல் வாணிபப் புகைக்கரி என்று முடிவு செய்து சாகுபடியாளர் தொடர்ந்த வழக்கைத் தள்ளுபடி செய்தனர்; சாகுபடியாளர் வழக்குச் செலவுகளையும் செலுத்த வேண்டியதாயிற்று.

[259] பிரெஞ்சு இரசாயன அறிஞர் செவாலியே சரக்குகளின் ''நவீனமாக்கங்கள்'' பற்றிய நூலில், தாம் திறனாய்வு செய்கையில் கடந்து செல்கிற 600 அல்லது அதற்கதிகமான பண்டங்களில் பலவற்றுக்கு 10, 20, 30 வெவ்வேறு கலப்பட முறைகளைப் பட்டியலிடுகிறார். எல்லா முறைகளும் தமக்குத் தெரியாது என்றும் தமக்குத் தெரிந்ததனைத்தையும் சொல்லி விடவில்லை என்றும் அவர் கூறுகிறார். கலப்படம் செய்வதில் சர்க்கரைக்கு 6 வகைகளையும், ஆலிவ் எண்ணெய்க்கு 9 வகைகளையும், வெண்ணெய்க்கு 10 வகைகளையும், உப்புக்கு 12 வகைகளையும், பாலுக்கு 19 வகைகளையும், ரொட்டிக்கு 20 வகைகளையும், பிராந்திக்கு 23 வகைகளையும், சாப்பாட்டுக்கு 24 வகைகளையும், சாக்லேட்டுக்கு 28 வகைகளையும், திராட்சை ரசத்துக்கு 30 வகைகளையும், காப்பிக்கு 32 வகைகளையும், இன்ன பிறவற்றையும் அவர் குறிப்பிடுகிறார். எல்லாம் வல்ல இறைவனே இக்கதியிலிருந்து தப்புவதில்லை. பார்க்கவும்: ரூவர் டெ கார், ''சமயச் சடங்குப் பொருட்களின் போலிகள் பற்றி.'' (''De la falsification des substances sacramentelles,'' பாரிஸ், 1856.)

---

* ''வாணிப நேயர்கள்''

வற்றுக்கும் எதிராக லண்டனைச் சேர்ந்த ரொட்டித் தொழிற் பணியாளர்களின் குரல் எழுந்தது. இது குறித்து ஏதாவது அவசர மாகச் செய்ய வேண்டியிருந்தது. மேலே பல முறை குறிப்பிட்ட 1863ஆம் ஆண்டின் ஆணையத்திலும் உறுப்பினராய் இருந்த வரான திரு எச். எஸ். ட்ரெமன்ஹீர் அரசு விசாரணை ஆணை யராக நியமிக்கப்பட்டார். அவரது அறிக்கையும் [260] ஆணையத்தில் தரப்பட்ட சாட்சியமும் சேர்ந்து பொது மக்களின் நெஞ்சைக் கலக்குவதற்கு பதில் வயிற்றைக் கலக்கின. மனிதன் தெய்வ அருளால் முதலாளியாகவோ நிலச்சுவான்தாராகவோ சுக ஜீவனப் பதவியாளராகவோ இருந்தாலொழிய நெற்றி வியர்வை நிலத்தில் சிந்த உழைத்தே உண்ண வேண்டுமெனக் கட்டளையிடப்பட்டுள் ளான் என்பது விவிலியம் பயின்றவர்களான ஆங்கிலேயருக்கு நன்றாகவே தெரியும். ஆனால், தினமும் அம்மனிதன் உண்ணுகிற ரொட்டியில் குறிப்பிட்ட அளவு மனித வியர்வையும் கலந்திருப்பது அவர்களுக்குத் தெரியாது. வியர்வை மட்டுமல்ல, அதோடு கூட, புண்களிலிருந்து வெளிப்படும் சீழும், ஒட்டடையும், செத்த வண்டு களும், ஊழ்த்த ஜெர்மன் காடியும் (படிக்காரம், மணல் போன்ற ஏற்புடைத்த பிற பொருட்களை சேர்க்காமல் விடுவதெனில்) கலந்திருக்கின்றன. திவ்வியம் வாய்ந்த தடையிலா வாணிபத்துக்கு அதற்குரிய மரியாதை அளிக்காமல், தடையிலா ரொட்டித் தொழிலை அரசு ஆய்வாளர்களின் மேற்பார்வைக்கு உள்ளாக் கினர் (1863 பாராளுமன்ற அமர்வின் முடிவில்); அதே பாராளு மன்றச் சட்டத்தின் மூலம், 18 வயதுக்குட்பட்ட ரொட்டித் தொழிற் பணியாளர்களுக்கு மாலை 9 மணியிலிருந்து காலை 5 மணி வரை வேலை தடை செய்யப்பட்டது. இந்தப் பழைய முறையிலான பதட்ட மற்ற தொழிற் பிரிவில் நிலவும் மிகைவேலையைக் கடைசி சரத்து வெட்ட வெளிச்சமாக்குகிறது.

"லண்டனைச் சேர்ந்த ரொட்டித் தொழிற் பணியாள்ர் ஒரு வரின் வேலை வழக்கமாகவே இரவு 11 மணி சுமாருக்கு ஆரம்பிக் கிறது. அந்த நேரத்தில் அவர் 'மாவு பிசைகிறார்'—மிகுந்த பிரயாசை தேவைப்படுகிற இவ்வேலை ரொட்டி எடுப்பின் அளவுக் கேற்ப அல்லது அதில் சேர்க்கப்படும் உழைப்புக்கேற்ப அரை மணி நேரம் முதல் முக்கால் மணி நேரம் வரை நீடிக்கிறது. பின்னர் அவர் மாவைப் 'பதம் செய்யும்' தொட்டியின் மூடியுமாகிய பிசையும் பலகை மீது நீட்டிப் படுக்கிறார்; சாக்கு ஒன்றைப் படுக்கையாக விரித்து, இன்னொன்றைச் சுருட்டித் தலையணையாக வைத்துக் கொண்டு சுமார் இரண்டு மணி நேரம் உறங்குகிறார். பின்னர் தொடர்ச்சியாக சுமார் ஐந்து மணி நேரத்துக்கு அதிவிரைவாக

260 "ரொட்டித் தொழிற் பணியாளர்கள் புகார் செய்த குறைகள் தொடர்பான அறிக்கை, லண்டன், 1862," "இரண்டாவது அறிக்கை, லண்டன், 1863."

உழைக்கிறார் — மாவெறிதல், மழித்துச் சீராக்குதல், வார்த்தல், அடுப்பில் வைத்தல், உருளை ரொட்டியும் மினுக்கு ரொட்டியும் தயார் செய்து சுடுதல், எடுப்பு எடுப்பாக ரொட்டியை அடுப்பிலிருந்து வெளியிலெடுத்தல், கடைக்கு அனுப்புதல் போன்றவற்றைச் செய்கிறார். ரொட்டித் தொழிலகத்தின் வெப்ப நிலை சுமார் 75 டிகிரியிலிருந்து 90 டிகிரி வரை உள்ளது; சிறிய ரொட்டித் தொழிலகங்களில் வெப்ப நிலை வழக்கமாகவே தாழ்ந்த வெப்ப மட்டத்தை விடவும் உயர்ந்த வெப்ப மட்டத்தையே நெருங்கியுள்ளது. ரொட்டி, உருளைகள் முதலானவற்றைத் தயாரிக்கும் வேலை முடியும் போது வினியோக வேலை ஆரம்பிக்கிறது. இத்தொழிலில் ஈடுபட்டுள்ள பணியாளர்களில் கணிசமான பகுதியினர் மேலே விவரித்த விதத்தில் இரவில் கடுமையாக வேலை செய்த பின்னர், பகல் பொழுதில் கூடைகளை ஏந்திய படியோ, கைவண்டிகளைத் தள்ளிய படியோ பல மணி நேரம் கால் கடுக்க நடக்கின்றனர். சில நேரங்களில் மீண்டும் ரொட்டித் தொழிலகத்தில் வேலை செய்கின்றனர். ஆண்டின் பருவத்துக்கேற்ப, அல்லது தங்கள் எஜமானரின் தொழிலின் அளவுக்கும் இயல்புக்கும் ஏற்ப, மதியம் 1 மணிக்கும் மாலை 6 மணிக்குமிடையே பல்வேறு சமயங்களில் வேலையை விட்டுச் செல்கின்றனர்; அதே போது, மற்றவர்கள் மீண்டும் பிற்பகல் வெகு நேரம் வரை ரொட்டித் தொழிலகத்தில் மேலும் எடுப்பு எடுப்பாக ரொட்டியை 'எடுப்பதில்' ஈடுபடுகின்றனர்.[261]...'லண்டன் பருவம்' என்று அழைக்கப்படும் காலத்தின் போது நகரத்தின் வெஸ்ட் எண்டில் 'முழு விலைக்கார' ரொட்டித் தயாரிப்பாளர்களிடம் வேலை செய்யும் தொழிலாளர்கள் பொதுவாக இரவு 11 மணிக்கு வேலையைத் தொடங்குகின்றனர்; ஓரிரு சிறு (சில நேரங்களில் மிகச் சிறு) ஓய்வு இடைவேளைகளுடன், மறு நாள் காலை 8 மணி வரை ரொட்டித் தயாரிப்பில் ஈடுபடுகின்றனர். பின்னர் பகல் முழுவதிலும் 4, 5, 6 மணி வரை, 7 மணி வரையிலும் கூட ரொட்டியைச் சுமந்து செல்வதில், அல்லது சில நேரம் பிற்பகல் மீண்டும் ரொட்டித் தொழிலகத்துக்கு வந்து பிஸ்கட் தயாரிப்புக்கு உதவுவதில் ஈடுபடுகின்றனர். தமது வேலையைச் செய்த பின்னர் திரும்பவும் அதைத் துவக்குவதற்கு முன்னதாகச் சில சந்தர்ப்பங்களில் ஐந்தாறு மணி நேரத் தூக்கம், சில சந்தர்ப்பங்களில் நான்கைந்து மணி நேரத் தூக்கம் மட்டுமே அவர்களுக்குக் கிடைக்கும். வெள்ளிக் கிழமைகளில் அவர்கள் எப்போதுமே சீக்கிரமாக, சிலர் சுமார் பத்து மணிக்கு, வேலையைத் தொடங்கி, சில சந்தர்ப்பங்களில் சனிக் கிழமை இரவு 8 மணி வரை, ஆனால் பொதுவாக ஞாயிறு காலை 4 அல்லது 5 மணி வரை ரொட்டி தயாரிப்பதிலோ அல்லது அதைப் பட்டுவாடா செய்

[261] முன் வந்தது, முதல் அறிக்கை, பக்கம் vi.

வதிலோ தொடர்ந்து வேலை செய்கின்றனர். ஞாயிற்றுக் கிழமை களில் மறு நாள் ரொட்டிக்கான முன் தயாரிப்பு வேலைகள் செய்வதற்குப் பகல் வேள்ளையில் ஓரிரு மணி நேரத்துக்கு இரண்டு மூன்று தடவை ஆஜராக வேண்டும். குறை விலைக்கார எஜமானர்கள் (இவர்கள் தங்கள் ரொட்டியை 'முழு விலைக்குக்' குறைவாக விற்பவர்கள்; ஏற்கெனவே சுட்டிக் காட்டியது போல லண்டன் ரொட்டித் தயாரிப்பாளர்களில் முக்கால் வாசிப் பேர் இவர்களே) வேலைக்கமர்த்துகிற ஆட்கள் சராசரியாக இன்னும் அதிக மணி நேரம் வேலை செய்ய வேண்டியிருப்பது மட்டுமல் லாமல், அவர்களது வேலை ஏறக்குறைய முற்றாக ரொட்டித் தொழிலகத்துக்குள்ளேயே அடைபட்டுள்ளது. பொதுவாகக் குறை விலை ரொட்டி எஜமானர்கள் ரொட்டி விற்பது...கடையிலேயே. அதை வெளியில் அனுப்பினால்—பலசரக்குக் கடைகளுக்கு வழங்குவது போன்றவற்றைத் தவிர்த்து சாதாரணமாக இப்படி நடப்பதில்லை—அந்த வேலைக்கு அவர்கள் வேறு ஆட்களைப் பயன்படுத்துவது வழக்கம். ரொட்டியை வீட்டுக்கு வீடு பட்டுவாடா செய்வது அவர்கள் வழக்கமன்று. வார இறுதி வாக்கில்...ஆட்கள் வியாழக் கிழமை இரவு 10 மணிக்கு ஆரம்பித்து, சனி மாலை வெகு நேரம் வரை மிகச் சிறு இடைவேளையுடன் தொடர்ந்து வேலை செய்கின்றனர்.[262]

''குறை விலைக்கார'' எஜமானர்களின் நிலையை முதலாளித் துவ உள்ளமும் கூடப் புரிந்து கொள்ளும். ''ஆட்களின் ஊதியமற்ற உழைப்பு தொடர்ந்து போட்டி போடுவதற்கான ஆதாரமாக்கப் பட்டது.''[263] ''முழு விலை'' ரொட்டிக்காரர் குறை விலைக்காரர் களான தன் போட்டியாளர்களை பிறர் உழைப்பைத் திருடுபவர்கள் என்றும், கலப்படக்காரர்கள் என்றும் விசாரணை ஆணையத்திடம் கண்டனம் செய்கிறார். ''முதலாவதாகப் பொது மக்களை வஞ்சிப் பதன் மூலமும், அடுத்தபடியாகத் தம் ஆட்களிடமிருந்து 12 மணி நேரக் கூலிக்கு 18 மணி நேரம் வேலை வாங்குவதன் மூலமுமே அவர்கள் இப்போது ஜீவிக்கின்றனர்.''[264]

ரொட்டிக் கலப்படமும், ரொட்டியை முழு விலைக்குக் குறை வாக விற்கிற ரொட்டிக்காரர்கள் என்னும் பிரிவினரின் தோற்றமும் 18ஆவது நூற்றாண்டின் தொடக்கத்தில்—இத்தொழிலின் ஒன் றிணைந்த தன்மை மறைந்து பெயரளவிலான தலைமை ரொட்டிக் காரரின் பின்னால் மாவு ஆலைக்காரர் அல்லது மாவு முகவரின்

---

[262] முன் வந்தது, பக்கம் lxxi.

[263] ஜார்ஜ், ரீடு ''ரொட்டித் தொழிலின் வரலாறு'' லண்டன், 1848, பக்கம் 16

[264] ரொட்டித் தொழிற் பணியாளர்கள்... அறிக்கை (முதலாவது). முழு விலைக் காரர்'' ரொட்டிக்காரர் சீஸ்மனின் சாட்சியம், பக்கம் 108.

உருவில் முதலாளி தலையெடுத்த நேரத்திலிருந்து—தொடங்கிய தாகும்.[265] இந்தத் தொழிலில் முதலாளித்துவப் பொருளுற்பத் திக்கும், வேலை-நாளின் வரம்பற்ற நீட்டிப்புக்கும், இரவு நேர உழைப்புக்கும்—இரவு நேர உழைப்பு முறை லண்டனிலேயே கூட 1824க்குப் பிறகுதான் குறிப்பிடத் தக்கவாறு காலூன்றியது என்றாலும்—இவ்வாறுதான் அடிகோலப்பட்டது.[266]

மேலே சொல்லியிருப்பதிலிருந்து, ஆணைய அறிக்கை ரொட் டித் தொழிற் பணியாளர்களை ஆயுள் குறுகிய தொழிலாளர் களின் வகையில் சேர்க்கிறது என்பதைப் புரிந்து கொள்ளலாம். இவர்கள் தொழிலாளி வர்க்கக் குழந்தைகளுக்கு வழக்கமாக நேரிடும் அழிவிலிருந்து அதிர்ஷ்ட வசமாகத் தப்பி விட்டால், 42 வயதை எட்டிப் பிடிப்பதும் அரிதே. ஆயினும் ரொட்டித் தொழிலில் எப்போதுமே விண்ணப்பதாரர்கள் நிரம்பி வழிகின் றனர். லண்டனுக்கு இவ்வுழைப்புச் சக்திகளை ஸ்காட்லாந்தும், இங்கிலாந்தின் மேற்கு விவசாய மாவட்டங்களும், ஜெர்மனியும் வழங்குகின்றன.

1858-60 ஆண்டுகளில் அயர்லாந்தில் ரொட்டித் தொழிற் பணியாளர்கள் இரவு நேர வேலையையும் ஞாயிறு வேலையையும் எதிர்த்து கிளர்ச்சிப் பிரச்சாரம் செய்யத் தம் சொந்தச் செலவில் பெரும் பெரும் கூட்டங்கள் நடத்தினர். பொது மக்கள்—எடுத்துக் காட்டாக 1860 மே மாதம் டப்ளின் கூட்டத்தில்—அயர்லாந்துக்கே உரிய எழுச்சியுடன் இவற்றில் பங்கு பெற்றனர். இந்த இயக்கத்தின் விளைவாக வெக்ஸ்ஃபோர்டு, கில்கென்னி, கிலோன்மல், வாட்டர் ஃபோர்டு முதலான இடங்களில் பகல் உழைப்பு மட்டுமே என்பது வெற்றிகரமாக நிலைநாட்டப்பட்டது. "பணியாளர்களுக்குள்ள குறைகள் அதீதமானவை என்று மெய்ப்பிக்கப்படுகிற லிமரிக்கில் இவ்வியக்கம் தலைமை ரொட்டிக்காரர்களின் எதிர்ப்பால் தோற் கடிக்கப்பட்டிருக்கிறது; மாவாலைக்கார ரொட்டித் தயாரிப் பாளர்களே மிகப் பெரும் எதிராளிகளாய் இருந்துள்ளனர். லிமரிக்கின் உதாரணம் என்னிஸிலும், திப்பராரியிலும் பின் னடைவுக்கு இட்டுச் சென்றது. முடிந்த வரை அழுத்தமாய் உணர்ச்சி

[265] ஜார்ஜ் ரீடு, முன் வந்தது. 17ஆவது நூற்றாண்டின் இறுதியிலும், 18ஆவது நூற்றாண்டின் தொடக்கத்திலும் சாத்தியமான ஒவ்வொரு தொழிலிலும் பெரிய அளவில் நுழைந்து கொண்ட முகவர்கள் (ஏஜண்ட்டுகள்) இன்னமும் "பொது ஜனத் தொல்லை பயப்போர்" என்றே கண்டிக்கப்பட்டனர். இவ்வாறு, சாமர்செட் மாவட்டத்துக்கான அமைதிக் காப்பு நடுவர்களின் [Justices of the Peace] காலாண்டு அமர்வின் போது பெருஞ் சான்றாயம் காமன் சபைக்கு ஓர் அறிக்கையைச் சமர்ப் பித்தது; ஏனைய பலவற்றோடு கூட அவ்வறிக்கை கூறுவதாவது: "பிளாக்வெல் ஹாலைச் சேர்ந்த இந்த முகவர்கள் பொது மக்களுக்கு ஒரு தொல்லை ஆவர்; ஆடைத் தொழிலுக்குக் கேடு செய்வோர் ஆவர்; இவர்களைத் தொல்லையாகக் கருதி அடக்குதல் வேண்டும்." "நமது ஆங்கிலேயக் கம்பளியின் நிலை," லண்டன், 1865, பக்கம் 6, 7.

[266] முதல் அறிக்கை.

வெளிக்காட்டப்பட்ட இடமான கார்க்கில், தலைமை ரொட்டிக் காரர்கள் ஆட்களை வேலையிலிருந்து நீக்கும் அதிகாரத்தைச் செலுத்தி இயக்கத்தை முறியடித்து விட்டனர். தலைமை ரொட்டிக் காரர்கள் டப்ளினில் இயக்கத்துக்கு மிகவும் உறுதியான எதிர்ப்பைக் காட்டியுள்ளனர்; இயக்கத்தில் முன்னுக்கு நின்ற பணியாளர்களை முடிந்த வரை புறக்கணிப்பதன் மூலம், ஆட்களை அவர்களது எண்ணத்துக்கு மாறாக, ஞாயிறு வேலை, இரவு நேர வேலை ஆகியவற்றுக்குப் பணியச் செய்துள்ளனர்.[267]

அயர்லாந்தில் முற்ற முழுக்க ஆயுதம் தரித்து, அதை வெளிக் காட்டவும் தெரிந்த அரசாகிய ஆங்கிலேய அரசின் குழு டப்ளின், லிமரிக், கார்க் முதலான இடங்களைச் சேர்ந்த எதற்கும் மசியாத தலைமை ரொட்டிக்காரர்களை மெல்லிய குரலில் அழாக்குறை யாய்க் கடிந்து கொள்கிறது: "உழைப்பு நேரத்துக்கு இயற்கை விதிகள் வரம்பிடுகின்றன; இவ்விதிகளை மீறினால் தண்டனைக்கு ஆளாக நேரிடும் என்று இக் குழு நம்புகிறது. தலைமை ரொட்டிக் காரர்கள் வேலை போய் விடுமென்று பயம் காட்டி தொழிலாளர் களை அவர்களது சமய நம்பிக்கைகளையும் மெல்லுணர்ச்சிகளையும் மீறத் தூண்டுவதும், நாட்டின் சட்டங்களுக்குக் கீழ்ப்படிய மறுப் பதும் பொதுஜன அபிப்பிராயத்தை மதியாதிருப்பதும் (இதெல் லாம் ஞாயிறு உழைப்பைக் குறிக்கிறது) ஆட்களுக்கும் தலைமை ரொட்டிக்காரர்களுக்கும் இடையே குரோதத்தைக் கிளப்பி விடக் கூடியவையாகும்....இது சமயத்துக்கும், அற நெறிக்கும், சமூக ஒழுங்குக்கும் ஆபத்தான உதாரணமாகி விடுகிறது....நாளுக்கு 12 மணி நேரத்துக்கு மேல் இடைவிடாமல் எவ்விதமான வேலை செய் வதாய் இருந்தாலும், அது தொழிலாளியின் குடும்ப வாழ்க்கை யிலும், தனிப்பட்ட வாழ்க்கையிலும் அத்துமீறித் தலையிடு வதாகிறது; இவ்வாறு இல்லந்தோறும் மகன், சகோதரன், கணவன், அல்லது தந்தை என்னும் பொறுப்பில் அவர் தமக்குரிய குடும்பக் கடமைகளை நிறைவேற்றுவதில் குறுக்கிட்டு, கேடான தார்மிக விளைவுகளுக்கு வழிகோலுகிறது என்று இக்குழு நம்புகிறது. 12 மணி நேரத்துக்கு மேல் வேலை செய்வது தொழிலாளியின் உடல் நிலையைக் கெடுக்கக் கூடியதாகும்; இது அகால முதுமைக்கும் மரணத்துக்கும் இட்டுச் செல்கிறது; இதனால் குடும்பத் தலைவர் மிக அதிகமாகத் தேவைப்படும் நேரத்தில் அவரது கவனிப்பும் ஆதரவும் கிடைக்காமற் செய்து தொழிலாளர் குடும்பங்களுக்குப் பெரும் கேடு விளைவிக்கிறது என்றும் இக்குழு கருதுகிறது."[268]

இது வரை நாம் அயர்லாந்தை ஆராய்ந்தோம். கால்வாயின் மறு பக்கத்தில், ஸ்காட்லாந்தில், விவசாயத் தொழிலாளி, உழவர்,

---

[267] அயர்லாந்தில் ரொட்டித் தொழில் பற்றிய குழுவின் அறிக்கை, 1861.

[268] முன் வந்தது.

ஞாயிற்றுக் கிழமையன்று 4 மணி நேரக் கூடுதல் வேலையுடன் (சப்பாத்தேரியர்கள் வாழும் இந்த நாட்டில்!) மிகவும் மோசமான காலநிலையில் 13-14 மணி நேரம் வேலை வாங்கப்படுவதற்கு எதிர்ப்பு தெரிவிக்கிறார்.[269] அதே நேரத்தில் மூன்று இரயில்வே ஊழியர்கள் லண்டன் மரண விசாரணைச் சான்றாயத்தின் முன்னர் நிற்கின்றனர்—ஒரு கார்டு, ஒரு எஞ்சின் டிரைவர், ஒரு சிக்னல் மேன். ஒரு பெரிய இரயில் விபத்து நூற்றுக்கணக்கான பயணிகளை வேறு உலகத்துக்கு அவசர அவசரமாய் அழைத்துச் சென்று விட்டது. ஊழியர்களின் அசட்டையே இந்த துர்ச்சம்பவத்துக்குக் காரணம். ஒரே குரலில் இந்த ஊழியர்கள் சான்றாயத்திடம் முறையிடு கிறார்கள்: பத்து அல்லது பன்னிரண்டு ஆண்டு முன்னர் நாளுக்கு 8 மணி நேரம் மட்டுமே உழைப்பு நீடித்தது. கடந்த ஐந்து அல்லது ஆறு ஆண்டாக அது 14, 18, 20 மணிகள் வரை உயர்ந்து விட்டது; விடுமுறை கழிப்போரின், சில நேரங்களில் உல்லாசப் பயண இரயில்களின் மிகக் கடுமையான நெருக்குதலினால், உழைப்பு பல நேரங்களில் முறிவின்றி 40 அல்லது 50 மணி நேரம் நீடித்தது. அவர்கள் சாதாரண மனிதர்களே, சைக்லோபஸ்கள் அல்ல. ஒரு கட்டத்தில் அவர்களது உழைப்புச் சக்தி அயர்ந்து விட்டது. அசதி ஆட்கொண்டது. மூளை சிந்தனையிழந்தது. கண் கள் பார்வையிழந்தன. ''பெரு மதிப்புக்குரிய'' பிரித்தானிய சான்றாயர்கள் கொலைக் குற்றம் சாட்டி நீதிபதிகளின் அடுத்த அமர்வில் அவர்களை விசாரணைக்கு அனுப்புவதெனத் தீர்ப் பளித்தனர். அவர்கள் தமது தீர்ப்புக்கு இணைப்பாய்ச் சேர்த்த இதமான ''பிற்சேர்க்கையில்,'' இரயில்வேக்களின் முதலாளித்துவப் பெருமக்கள் வருங்காலத்தில் போதிய அளவு உழைப்புச் சக்தியை வாங்குவதில் இன்னும் தாராளமாகவும், உழைப்புச் சக்தியை வடிப்பதில் இன்னும் ''மிதமாகவும்'' இன்னுமதிகத் ''தன்னல மறுப்போடும்'' இன்னும் ''சிக்கனமாகவும்'' இருப்பார்கள் என்று

[269] 1866 ஜனவரி 5ஆம் நாள் எடின்பரோ அருகே லாஸ்வேடில் விவசாயத் தொழிலாளர்களின் பொதுக்கூட்டம். (பார்க்கவும்:1866 ஜனவரி 13 தேதிய வொர்க் மேன்ஸ் அட்வகேட்) 1865 முடிவுக்குப் பின்னர் ஸ்காட்லாந்தில் முதலில் விவசாயத் தொழிலாளர்கள் மத்தியில் ஒரு தொழிற்சங்கம் ஏற்பட்டது வரலாற்று முக்கியத்துவ முள்ள நிகழ்ச்சியாகும். இங்கிலாந்தில் மிகவும் ஒடுக்கப்பட்ட விவசாயப் பகுதிகளில் ஒன்றான பக்கிங்காம்ஷயரில் 1867 மார்ச்சில் தொழிலாளர்கள் தங்கள் வாரக் கூலியை 9-10 ஷில்லிங்கிலிருந்து 12 ஷில்லிங்காக உயர்த்தக் கோரி மாபெரும் வேலைநிறுத்தம் செய்தனர். (1830க்குப் பின் இயக்கத்தின் பலாத்கார வெளிப்பாடுகள் ஒடுக்கப்பட்ட பின்னர், குறிப்பாகப் புதிய வறியோர் நலச் சட்டங்கள் புகுத்தப்பட்ட பின்னர் முற்றிலும் நசுக்கப்பட்டு விட்ட ஆங்கிலேய விவசாயப் பாட்டாளி வர்க்கத்தின் இயக்கம் அறுபதாம் ஆண்டுகளில் மீண்டும் துவங்கி இறுதியில் 1872இல் வரலாறு படைக்கும் இயக்கமாகிறது என்பதை மேற்கண்டதிலிருந்து அறியலாம். இது குறித்தும், ஆங்கிலேய வயல் உழைப்பாளிகளின் நிலை பற்றி 1867க்குப் பின்னர் வெளிவந்திருக்கும் நீலப் புத்தகங்கள் குறித்தும் இரண்டாம் பாகத்தில் மீண்டும் சொல்வேன். 3ஆம் பதிப்புக்குப் பிற்சேர்க்கை.)

போலித்தனமாய் நம்பிக்கை தெரிவித்தனர்.[270]

கொலையுண்டோரின் ஆன்மாக்கள் யுலிசஸைச் சுற்றி மொய்த்ததைக் காட்டிலும், நம்மைச் சுற்றி மொய்த்துக் கொண்டிருக்கிறது ஒரு பெருங்கூட்டம்; எல்லா விதமான தொழில்களையும் எல்லா வயதுகளையும் சேர்ந்த இருபாலாருமாகிய நானாவிதமானோர் அடங்கிய பெருங்கூட்டம். அவர்களது கக்கத்திலுள்ள நீலப் புத்தகங்களைப் படித்துப் பார்க்க வேண்டியதில்லை; கண் எடுத்து ஒரு தரம் பார்த்தாலே போதும், மிகை வேலையின் அறிகுறிகள் துலக்கமாய்த் தெரிகின்றன. இவர்களிடையிலிருந்து மேலும் இருவரை — ஒரு தையற்காரப் பெண்ணையும் ஒரு கருமானையும் — எடுத்துக் கொள்வோம்; இவர்களிடையிலான வேறுபாடு கண்ணைக் குத்தும்படியானது; ஆனால் மூலதனத்தின் எதிரே யாவரும் ஒன்று போலத்தான் என்பதையே இவ்வேறுபாடு நிரூபிக்கிறது.

1863 ஜூன் கடைசி வாரத்தில், லண்டன் தினசரிகள் அனைத்தும் ''மிகை வேலையாலேயே சாவு'' என்ற ''பரபரப்பான'' தலைப்புடன் ஒரு செய்தி வெளியிட்டன. எலீஸ் என்ற இனிய பெயருடைத்த சீமாட்டி சுரண்டல் நடத்திடும் மதிப்பார்ந்த ஆடை தயாரிப்பு நிறுவனத்தில் வேலை செய்து வந்த 20 வயதான

270 ரெய்னால்ட்ஸ் நியூஸ்பேப்பர், 1866 ஜனவரி. — இதே பத்திரிகை ஒவ்வொரு வாரமும் ''பயங்கரமான, உயிர்குடிக்கும் விபத்துக்கள்,'' ''திடுக்கிடச் செய்யும் சோக நிகழ்ச்சிகள்'' போன்ற பரபரப்பூட்டும் தலைப்புகளில் கோரமான புதிய இரயில் விபத்துக்களின் முழுப் பட்டியலையே தருகிறது. இவை பற்றி வடக்கு ஸ்தாஃபோர்டு ஷயர் பிரிவில் வேலை பார்க்கும் ஊழியர் ஒருவர் சொல்கிறார்: ''இரயில் எஞ்சின் டிரைவரும் ஃபயர்மேனும் தொடர்ந்து உஷாராயில்லா விட்டால் நேரிடக் கூடிய விளைவுகளை யாவரும் அறிவர். பருவ நிலையால் பாதிக்கப்படும் விதத்திலும், ஓய்வில்லாமலும் 29 அல்லது 30 மணி நேரத்துக்கு இப்படிப்பட்ட வேலையில் ஈடுபட்டிருக்கும் ஒருவரிடமிருந்து அதை எப்படி எதிர்பார்க்க முடியும்? அடிக்கடி நிகழக் கூடிய ஓர் உதாரணம் பின்வருமாறு: ஒரு ஃபயர்மேன் திங்கள் காலை முன்னேரத்திலேயே வேலையை ஆரம்பித்தார். ஒரு நாள் வேலை என்று சொல்லப்படுவதை அவர் முடித்த போது 14 மணி 50 நிமிட நேரம் கடமையாற்றியிருந்தார். தேநீர் அருந்த நேரம் கிடைப்பதற்குள் மீண்டும் கடமைக்கு அழைக்கப்பட்டார்....மறு முறை அவர் வேலையை முடித்த போது 14 மணி 25 நிமிட நேரம் கடமையாற்றியிருந்தார்; ஆக மொத்தம் 29 மணி 15 நிமிடம் இடைவேளையில்லாமல் வேலை செய்திருந்தார். வாரத்தில் மீத நாட்களின் வேலை பின்வருமாறு: புதன் 15 மணிகள், வியாழன் 15 மணிகள் 35 நிமிடங்கள், வெள்ளி 14½ மணிகள், சனி 14 மணிகள் 10 நிமிடங்கள் ஆக மொத்தம் வாரத்துக்கு 88 மணிகள் 40 நிமிடங்கள். ஐயா, இப்போது மொத்தத்துக்கு 6¼ நாட்களுக்கான ஊதியம் தரப்பட்டதும் அவருக்கு ஏற்பட்ட திகைப்பைக் கற்பனை செய்து பாருங்கள். கணக்கு தவறாக இருக்கலாம் என்று நினைத்து அவர் நேரப் பதிவாளருக்கு மனுச் செய்தார்....ஒரு நாள் வேலையென்று அவர்கள் எதைக் கருதுகிறார்கள் என்று விசாரித்தார்: சரக்குப் பிரிவு ஆளுக்கு 13 மணி நேரம் என்று பதில் கிடைத்தது (அதாவது 78 மணிகள்)....பின்னர் அவர் வாரத்துக்கு 78 மணி நேரத்துக்கு அதிகமாக தான் வேலை செய்திருப்பதற்கு ஊதியம் கேட்டார்; அது மறுக்கப்பட்டது. ஆயினும் இன்னொரு கால் பாகம், அதாவது 10 பென்னி தரப்படுமென்று கடைசியில் சொன்னார்கள்.'' முன் வந்தது, 1866 பிப்ரவரி 4.

தையற்காரப் பெண் மேரி ஆன் வாக்லி என்பவளின் சாவு பற்றிய செய்தி அது. பல முறை சொல்லப்பட்ட பழைய கதையே[271] திரும்பவும் சொல்லப்பட்டது. இந்தப் பெண் முறிவின்றி சராசரியாக 16½ மணி நேரம்—மும்முரக் காலத்தில் பல தடவை 30 மணி நேரம்—வேலை செய்தாள்; அயர்ந்து போன அவளது உழைப்புச் சக்தி அவ்வப்போது திராட்சை ரசம் அல்லது காப்பி மூலம் மீட்கப்பட்டது. சரியாக அப்போது மும்முரக் காலத்தின் உச்சக் கட்டம். புதிதாய் இறக்குமதியான வேல்ஸ் இளவரசியைக் கௌரவிக்கும் பொருட்டு நடன விருந்துக்கு அழைக்கப்பட்ட உயர்குடிச் சீமாட்டிகளுக்காகப் பகட்டான உடைகளைக் கண் சிமிட்டும் நேரத்தில் கொண்டு வந்து நிறுத்துவது அவசியமாயிருந்தது. மேரி ஆன் வாக்லி 60 பெண்களுடன் சேர்ந்துழைத்தாள்; ஒவ்வோர் அறையிலும் 30 பேர். அவர்களுக்கு வேண்டிய கன அடிக் காற்றில் ⅓ பங்குக்கு மட்டுமே அந்த அறையில் இடமிருந்தது. அங்கேதான் அவள் 26½ மணி நேரம் இடைவேளை இல்லாமல் வேலை செய்தாள். படுக்கையறை பலகைகளைக் கொண்டு பொந்துகளாகப் பிரிக்கப்பட்டிருந்தது; இரவில் மூச்சு திணறச் செய்யும் இந்தப் பொந்துகள் ஒவ்வொன்றிலும் இரண்டு இரண்டு பேராகச் சேர்ந்து அவர்கள் உறங்கினர்.[272] இந்த

---

[271] பார்க்கவும்: பிரெடெரிக் எங்கெல்ஸ், முன் வந்தது, பக்கம் 253, 254.

[272] சுகாதார வாரியத்தின் ஆலோசக மருத்துவர் டாக்டர் லெதபி அறிவித்தார்: "வயது வந்த ஒவ்வொருவருக்கும் குறைந்தபட்சக் காற்று படுக்கையறையில் 300 கன அடியாகவும் வசிப்பறையில் 500 கன அடியாகவும் இருக்க வேண்டும்." லண்டன் மருத்துவமனை ஒன்றில் முதுநிலை மருத்துவரான டாக்டர் ரிச்சர்ட்சன்: "அலங்காரத் தையற் பெண்கள், ஆடை தயாரிப்பாளர்கள், சாதாரண கைத்தையற் பெண்கள் ஆகியோர் உட்பட சகல வகையான தையற்காரப் பெண்களுக்கும் மூவகைத் துன்பங்கள் உள்ளன—மிகைவேலை, போதாத காற்று, போதாத உணவு அல்லது போதாத செரிமானம்....தையல் வேலை பிரதானமாக ஆண்களை விடப் பெண்களுக்கே மிகவும் பொருத்தமானதாகும். ஆனால் இத்தொழிலின் தீங்குகள், குறிப்பாகத் தலைநகரில் சுமார் இருபத்தாறு முதலாளிகளின் ஏகபோகமாக அது இருப்பதும், மூலதனம் தரும் அனுகூலங்களைக் கைக்கொண்டு, முதலிட்டு, உழைப்பைக் கணக்கின்றிப் பிழிய இவர்களால் முடிகிறது என்பதுமே. இந்த அதிகாரம் இத்தொழிற் பிரிவு முழுவதிலும் கோலோச்சுகிறது. ஓர் ஆடை தயாரிக்கும் பெண்ணுக்கு வாடிக்கையாளர்களின் சிறு வட்டம் ஒன்று கிடைத்தால் அதைக் காப்பாற்றிக் கொள்ள அவர் தனது வீட்டில் உயிரைக் கொடுத்து வேலை செய்தாக வேண்டும்; இதே மிகைவேலையைத் தன்னிடம் வேலை செய்கிற எவர் மீதும் கட்டாயம் திணித்தாக வேண்டும். அந்த அளவுக்குப் போட்டி கடுமையாக உள்ளது. அவள் அப்படிச் செய்யத் தவறினால், அல்லது சுயேச்சையாக முயன்று பார்க்கா விட்டால், ஒரு நிறுவனத்தில் சேர்ந்து கொள்ள வேண்டும்; அங்கு அவளது உழைப்பு குறைவதில்லை; ஆனால் அவளது பணத்துக்கு ஆபத்தில்லை. இந்நிலையில் அவள் வெறும் அடிமையாகிறாள், சமுதாயத்தின் மாறுபாடுகளுக்கேற்ப சுண்டி விடப்படுகிறாள். வீட்டில் ஓர் அறையில், பட்டினியோ அரைப்பட்டினியோ கிடந்தவள் இப்போது 24 மணி நேரத்தில் 15, 16, ஏன், 18 மணி நேரம் வேலை செய்கிறாள். வேலையறையின் காற்று சகிக்கவொண்ணாதது. அவள் சாப்பிடுவது நல்ல உணவாகவே இருந்து விட்டாலும் கூட தூய்மை கெட்ட காற்றில் செரிக்க வழியில்லை. மோசமான காற்றினால் மட்டுமே ஏற்படக் கூடிய வியாதியான

லட்சணத்தில், இது லண்டனில் தலைசிறந்த தையல் நிறுவனங்களில் ஒன்று. மேரி ஆன் வாக்லி வெள்ளிக் கிழமை நலம் குன்றிப் படுத்தாள்; திருவாட்டி எலீஸ் திகைப்படையும் விதத்தில் அவள் கையிலிருந்த வேலையை முன்னதாகவே முடிக்காமல் ஞாயிற்றுக் கிழமை இறந்து போனாள். மரணப் படுக்கையிலிருந்த அவளிடம் காலங் கடந்து அழைக்கப்பட்ட மருத்துவர் திரு கீய்ஸ், மரண விசாரணை சான்றாயத்திடம் முறைப்படி சாட்சியம் அளித்தார்: ''மிகவும் நெரிசலான வேலையறையிலும், காற்றோட்டமில்லாத மிகச் சிறிய படுக்கையறையிலும் நெடுநேரம் வேலை செய்ததால் மேரி ஆன்வாக்லி இறந்து போனாள்.'' இங்கிதமான நடத்தை குறித்து மருத்துவருக்குப் பாடம் புகட்டும் விதமாய், மரண விசாரணைச் சான்றாயம் வழங்கிய தீர்ப்பாவது: ''இறந்து போன பெண் வலிப்பு கண்டு இறந்திருக்கிறாள்; ஆனால், மிகவும் நெரிசலான வேலையறையில் மிதமிஞ்சிய வேலையால் அவளது மரணம் துரிதமாக்கப்பட்டது என்று அஞ்சக் காரணம் உண்டு.'' தடையிலா வாணிபக் கனவான்கள் காப்டென், பிரைட் ஆகியோரின் ஏடான **மார்னிங் ஸ்டார்** கூக்குரலிட்டது: ''நமது வெள்ளை அடிமைகள் செத்து குழியில் விழும் வரை கடுமையாய் வேலை வாங்கப்படுகிறார்கள்; ஆனால் பெரும்பாலும் மௌனமாய் ஏங்கிச் சாகிறார்கள்.''[273]

---

காசநோய் இத்தகையோரை இரையாய்க் கொண்டே ஜீவிக்கிறது. ''டாக்டர் ரிச்சட்சன்: ''சோஷல் சைன்ஸ் ரெவியூ'' 1863 ஜூலை 18 இதழில் ''வேலையும் மிகை வேலையும்.''

[273] மார்னிங் ஸ்டார், 1863 ஜூன் 23. பிரைட் முதலானோருக்கெதிராக அமெரிக்க அடிமையுடைமையாளர்களை ஆதரித்து வாதாட தி டைம்ஸ் இந்நிலைமையைப் பயன்படுத்திக் கொண்டது. 1863 ஜூலை 2 இதழின் தலையங்கம் கூறுகிறது. ''கட்டாயப்படுத்துவதற்குரிய சாதனம் என்ற முறையில் சவுக்கைச் சொடுக்குவதற்கு பதில் பட்டினியென்னும் கசையைப் பயன்படுத்தி நமது இளம் பெண்களை உயிர் போகும் படி வேலை வாங்கும் நமக்கு, எப்படியும் தங்கள் அடிமைகளுக்கு நன்றாக உணவளித்து அவர்களிடமிருந்து இலகுவாய் வேலை வாங்கும் பிறவி அடிமையுடைமையாளர் குடும்பங்களுக்கெதிராய் தீயையும் சாவையும் ஏவி வேட்டையாட உரிமையில்லை என்றே நம்மிற் பலரும் நினைக்கிறோம்.'' இவ்வாறே டோரி ஏடான ஸ்டாண்டர்டு மறைதிரு நியூமன் ஹாலுடன் மோதியது: ''அவர் அடிமையுடைமையாளர்களைத் திருச்சபையிலிருந்து பிரஷ்டம் செய்தார்; ஆனால் லண்டனில் பேருந்து ஓட்டுனர்கள், நடத்துனர்கள் முதலானோரை அற்பக் கூலிக்காக நாளுக்கு 16 மணி நேரம் நெஞ்சில் ஈரமின்றி வேலை வாங்குகிற மகானுபாவர்களுடன் சேர்ந்து பிரார்த்திக்கிறார்.'' இறுதியாக, அசரீரியாய்க் குரல் கொடுக்கும் தாமஸ் கார்லைல் விளம்பினார். இவர் பற்றி 1850இல் நான் எழுதினேன்: ''Zum Teufel ist der Genius, der Kultus ist geblieben.''* இவர் நிகழ்கால வரலாற்றின் மாபெரும் நிகழ்ச்சியான அமெரிக்க உள்நாட்டுப் போரைக் குட்டிக் கதையின் நிலைக்குத் தாழ்த்துகிறார்: வட பகுதியின் பீட்டர் தென் பகுதியைச் சேர்ந்த பாலின் மண்டையைத் தன் முழு பலம் கொண்டு உடைக்க விரும்புகிறாராம். ஏனெனில் வட பகுதியின் பீட்டர், உழைப்பை நாளுக்கு

---

* ''மேதாவிலாசம் மலையேறி விட்டது, வழிபாடு எஞ்சியுள்ளது.''

''சாகும் வரை வேலை செய்வது இன்றைய நடப்பாய் இருப்பது ஆடைத் தயாரிப்பாளர்களின் வேலையறைகளில் மட்டும்தான் என்பதில்லை; இன்னும் ஓராயிரம் இடங்களில் இப்படித்தான் நடக்கிறது; 'வளங்கொழிக்கும் தொழில்' நடக்க வேண்டிய ஒவ் வோரிடத்திலும் இப்படித்தான் என்பேன்....இனமாதிரியாகக் கரு மானை எடுத்துக் கொள்வோம். புலவர்கள் சொல்வது உண்மை யானால், கருமானைப் போல் ஊக்கமும் உவகையும் மிக்கவர் யாருமில்லை; அதிகாலையில் எழுந்து பகலவனுக்கு முன்னர் தீப்பொறி பறக்கச் செய்கிறார்; உண்பதிலும், குடிப்பதிலும், உறங்குவதிலும் அவருக்கு ஈடு எவருமில்லை. மிதமாக வேலை செய்கிற அவர், உடலடிப்படையில் பார்க்கையில், மனிதனுக்கு அமையக் கூடிய மிகச் சிறந்த நிலைகளில் ஒன்றுக்குரியவராய் உள்ளார். நகரத்துக்குள் நாம் அவரைப் பின்தொடர்ந்து செல் கிறோம்; அவரது வலுவான உடலில் வேலைக் கடுமையின் தாக்கத் தைக் காண்கிறோம்; நாட்டின் மரண வீதத்தில் அவர் நிலை என்ன என்றும் பார்க்கிறோம்; மேரிலிபோனில், கருமான்கள் ஆண்டுக்கு ஆயிரம் பேரில் 31 பேர் என்ற வீதத்தில் இறக்கின்றனர்; இது நாடு முழுவதிலும் வயதுவந்த ஆண்களின் சராசரி இறப்பு வீதத்தை விட 11 கூடுதலாகும். மனிதனுக்கே உரிய கலைத் திறனின் அங்கம் என்னும் படி உள்ளுணர்ச்சிவயப்பட்டதும், மானுடத் தொழில் துறையின் கிளை என்ற முறையில் ஆட்சேபத்துக்கு இடமில்லாதது மாகிய இந்தத் தொழில் அதீத உழைப்பினாலேயே மனிதனின் நாசகாரி ஆகி விடுகிறது. அவர் நாள்தோறும் இத்தனை முறை அடித்து, இத்தனை அடி நடந்து, இத்தனை தடவை மூச்சு விட்டு, இவ்வளவு வேலை செய்து, சராசரி ஐம்பது ஆண்டு வாழ முடியும் எனலாம். நாள்தோறும் இன்னும் இத்தனை முறை கூடுதலாய் அடித்து, இன்னும் இத்தனை அடி கூடுதலாய் நடந்து, இன்னும் இத்தனை தடவை கூடுதலாய் மூச்சு விட்டு, மொத்தத்தில் தமது வாழ்வில் கால் பகுதிக்கு ஈடானதைக் கூடுதலாய் செலவிட வேண்டியதாகிறது. இந்த முயற்சிக்கு அவர் ஈடுகொடுக்கிறார். இதன் விளைவாக, குறிப்பிட்ட காலத்தில் கால் பங்கு கூடு தலாய் வேலை செய்து, 50க்கு பதில் 37 வயதிலேயே இறந்து போகிறார்.''[274]

---

அமர்த்திக் கொள்கிறாராம்; தென் பகுதியின் பால், உழைப்பை ஆயுட் காலத்துக்கு அமர்த்திக் கொள்கிறாராம். (''மாக்மில்லன் சஞ்சிகை.'' Ilias Americana in nuce. 1863 ஆகஸ்டு.) இவ்வாறு, நகரப்புறத் தொழிலாளர் குறித்து — எவ் விதத்தும் கிராமப்புற தொழிலாளர் குறித்தன்று — பேரரி அனுதாபம் என்ற நீர்க்குமிழி கடைசியில் வெடித்து விட்டது: கூட்டிக் கழித்துப் பார்த்தால் மிஞ்சுவது — அடிமைத் தனம்!

274 டாக்டர் ரிச்சர்ட்சன், முன் வந்தது.

## பிரிவு 4. — பகல் நேர வேலையும் இரவு நேர வேலையும். அஞ்சல் முறை

மாறா-மூலதனமாகிய உற்பத்திச் சாதனங்கள், உபரி-மதிப்பின் படைப்பென்ற கண்ணோட்டத்தில் பார்க்கையில், உழைப்பையும், உழைப்பின் ஒவ்வொரு துளியுடனும் அதற்கேற்ற அளவில் உபரி-உழைப்பையும் உட்கிரகிப்பதற்கே உள்ளன. அவை இதைச் செய்யத் தவறுகையில், அவை இருப்பதே முதலாளிக்கு ஒப்பளவில் இழப்புக்குக் காரணமாகிறது; ஏனெனில் அவை வேலையற்றுக் கிடக்கும் காலத்தில் பயனற்ற மூலதன முன்னீட்டைக் குறிக்கின்றன. அவற்றைப் பிரயோகிப்பதில் ஏற்படும் இடைநிறுத்தம் வேலை மீண்டும் தொடங்கும் போது கூடுதலான செலவீட்டை அவசியமாக்கியதுமே, இந்த இழப்பு நிச்சயமானதும் அறுதியானதும் ஆகிறது. இயற்கையான நாளின் வரம்புகளைத் தாண்டி வேலை-நாளை இரவுக்கு நீட்டிப்பது அப்போதைக்கு இழப்பைக் குறைக்கும் வழியாகவே பயன்படுகிறது. உழைப்பின் உயிருள்ள இரத்தத்துக்கான உதிரமாகாளித் தாகத்தை அது சிறிதளவே தணிக்கிறது. எனவே, நாளின் 24 மணி நேரம் முழுவதிலும் உழைப்பைத் தனதாக்கிக் கொள்வது முதலாளித்துவப் பொருளுற்பத்தியின் உள்ளார்ந்த போக்காகும். ஆனால் ஒரே ஆளின் உழைப்புச் சக்தியை இரவு பகலாக இடைவிடாமல் சுரண்ட உடல் இடமளிக்காது என்பதால், உடல் தொடர்பான இந்தத் தடையினைக் கடப்பதற்காக, பகலில் சக்திகளைச் செலவழித்து விடும் தொழிலாளர்களையும், இரவில் பிழியப்படும் தொழிலாளர்களையும் மாறி மாறி ஈடுபடுத்துவது அவசியமாகிறது. இப்படி மாறி மாறி ஈடுபடுத்துவதைப் பல்வேறு வழிகளில் நிறைவேற்றலாம். உதாரணமாக, தொழிலாளர்களில் ஒரு பகுதியினர் ஒரு வாரம் பகல் நேர வேலையும் மறு வாரம் இரவு நேர வேலையும் செய்யுமாறு ஏற்பாடு செய்யலாம். இந்த அஞ்சல் முறை — தொழிலாளர்களின் இரு தொகுதிகளை இப்படி மாறி மாறி ஈடுபடுத்துவது — ஆங்கிலேயப் பஞ்சுத் தொழிலின் வீரியமிக்க இளமைக் காலத்தில் முழு ஆதிக்கம் செலுத்தியது என்பதும், இப்போது மாஸ்கோ வட்டத்தின் பஞ்சு நூற்புத் தொழிலில் அது இன்னமும் பரவலாயுள்ளது என்பதும் நன்கு தெரிந்ததே. இந்த 24 மணி நேர உற்பத்தி நிகழ்முறை மகா பிரிட்டனில் இன்னமும் "சுதந்தரமாய்" இருந்து வரும் தொழிற்கிளைகள் பலவற்றில், இங்கிலாந்திலும் வேல்சிலும் ஸ்காட்லாந்திலும் உள்ள ஊது உலைகள், தூளைகள், தகட்டுருட்டு ஆலைகள் மற்றும் பிற உலோகத் தொழிலகங்களில் இன்று ஒரு வேலை முறையாக நிலவுகிறது. இங்கே 6 வேலை-நாட்களின் அன்றாட 24 மணிகளன்னியில் ஞாயிற்றுக் கிழமையின் 24 மணிகளில் பெரும் பகுதியும் கூட வேலை நேரத்தில் அடங்குகிறது. தொழிலாளர்களில்

ஆண்களும் பெண்களும், வயது வந்தோரும் இருபாலாருமான குழந்தைகளும் உள்ளனர். குழந்தைகளும் இளம் வயதினரும் 8 முதல் (சில இடங்களில் 6 முதல்) 18 வரை வயதுடையவர்கள்.[275]

சில தொழிற் கிளைகளில் ஆண்களோடு கூடவே சிறுமிகளும் மாதர்களும் இரவெல்லாம் வேலை செய்கின்றனர்.[276]

இரவு நேர உழைப்பின் பொதுவான தீமை ஒரு புறமிருக்க[277] 24 மணி நேரத்தில் முறிபடாத உற்பத்தி நிகழ்முறையின் நீடிப்புக் காலம் இயல்பான வேலை-நாளின் வரம்புகளை விஞ்சுவதற்கு—

---

[275] குழந்தையுழைப்பு ஆணையம், மூன்றாம் அறிக்கை, லண்டன், 1864, பக்கம் iv, v, vi.

[276] ஸ்தாஃபோர்டுஷயர், தென் வேல்ஸ் இரு இடங்களிலுமே சிறுமிகளும் மாதர்களும் சுரங்கக் கரைகளிலும் கல்கரிக் குவியல்களிலும், பகலில் மட்டுமின்றி இரவிலும் வேலை வாங்கப்படுகின்றனர். இந்தப் பழக்கம் பேர்போன பெருந் தீமைகளை உடையதென்று பாராளுமன்றத்துக்குச் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கைகள் பலவும் சுட்டிக் காட்டியுள்ளன. ஆண்களுடன் கூடவே வேலை வாங்கப்படும் இந்தப் பெண்களை ஆண்களிடமிருந்து உடையில் வேறுபடுத்திப் பார்ப்பது கடினம்; அழுக்கேறி, புகை படிந்து இவர்கள் அலங்கோலமாய் இருக்கின்றனர். இவர்கள் சுயமரியாதையை இழக்க நேரிடுகிறது; பெண்டிருக்கொவ்வாத வேலையில் ஈடுபடுகையில் இது தவிர்க்க முடியாதது தான். ஒழுக்கக் கேட்டுக்கே இவையெல்லாம் வழி வகுக்கின்றன. (முன் வந்தது, 194, பக்கம் xxvi. பார்க்கவும்: நான்காம் அறிக்கை (1865), 61, பக்கம் xiii.) கண்ணாடித் தொழில்களிலும் இதே நிலைமைதான்.

[277] இரவு நேர உழைப்பில் குழந்தைகளை ஈடுபடுத்தும் உருக்காலை அதிபர் ஒருவர் குறிப்பிட்டார்: "இரவில் வேலை செய்கிற பையன்கள் பகலில் உறங்கவும், முறையான ஓய்வு பெறவும் முடியாது. அவர்கள் சுற்றித் திரிந்து கொண்டிருப்பார்கள் என்பது இயற்கையானதாகவே தோன்றுகிறது." (முன் வந்தது, நான்காம் அறிக்கை, 63, பக்கம் xiii.) உடலின் பராமரிப்புக்கும் வளர்ச்சிக்கும் சூரிய ஒளியின் முக்கியத்துவம் பற்றி ஒரு மருத்துவர் எழுதுகிறார்: "ஒளி நேரடியாக உடல் திசுக்கள் மீது செயல்பட்டு அவற்றுக்கு உரமும் நெகிழ்வும் ஊட்டுகிறது. மிருகங்களின் தசைகளுக்குச் சரியான அளவில் ஒளி கிடைக்காத போது அவை தளர்ந்தும், நெகிழ்வற்றும் போகின்றன; நரம்புகள் போதிய அளவு தூண்டப் பெறாமல் பதனிழப்பதால் நரம்பாற்றல் குன்றிப் போகிறது. வளர்ச்சியின் ஆக்கக் கூறுகளெல்லாம் வக்கரித்துப் போவதாகத் தெரிகிறது...குழந்தைகளைப் பொறுத்த வரை பகல் பொழுதில் ஏராளமான ஒளியும், பகுதி நேரத்துக்கு சூரியனின் நேரடிக் கதிர்களும் இடைவிடாமல் கிடைப்பது ஆரோக்கியத்துக்கு அத்தியாவசியமானது. இளக்கமான நல்ல இரத்தத்தின் ஆக்கத்திற்கு ஒளி உதவுகிறது; தசைநார் உருவானதும் அதைக் கெட்டிப்படுத்துகிறது. அது கட்புலன் உறுப்புகளுக்குத் தூண்டுதலாகவும் செயல்படுகிறது; இவ்வழியில் மூளையின் பல்வேறு பணிகளும் விறுவிறுப்புடன் நடந்தேறச் செய்கிறது." டாக்டர் வி. ஸ்டிரேஞ்சு, உர்ஸ்டர் பொது மருத்துவமனையின் முதுநிலை மருத்துவர் ஆவார்; "ஆரோக்கியம்" பற்றிய இவரது நூலிலிருந்தே (1864) இப்பகுதி எடுக்கப்பட்டுள்ளது; இவர் ஆணையர்களில் ஒருவரான திரு வொய்ட்டுக்கு எழுதிய கடிதத்தில் குறிப்பிடுகிறார்: "முன்னதாக, நான் லங்காஷயரில் இருந்த போது, குழந்தைகள் மீது இரவு நேர வேலை ஏற்படுத்துகிற விளைவுகளைக் கவனிக்கிற சந்தர்ப்பங்கள் எனக்குக் கிடைத்தன; சில முதலாளிகள் அடித்துப் பேச விரும்புவதற்கு மாறாக, இரவு நேர வேலைக்கு உட்படுத்தப்பட்ட குழந்தைகளின் ஆரோக்கியம் சீக்கிரமே பாதிக்கப்பட்டது என்று தயக்கமின்றிச் சொல்வேன்." (முன் வந்தது, 284, பக்கம் 55.) இப்படியொரு பிரச்சினை கடுமையான சர்ச்சையின் பொருளாவதே முதலாளிகள், மற்றும் அவர்தம் பரிவாரத்தினரின் மூளை இயக்கங்கள் மீது முதலாளித்துவப் பொருளுற்பத்தியின் தாக்கத்தை வெளிப்படையாகக் காட்டுகிறது.

உதாரணமாய், அதீதமாகக் களைக்கச் செய்யும் தன்மையுள்ள மேற் கூறிய தொழிற் கிளைகளில்—மிக அருமையான சந்தர்ப்பங்களை வழங்குகிறது; ஒவ்வொரு தொழிலாளிக்கும் அதிகாரபூர்வ வேலை-நாள் என்பதன் வழக்கமான அர்த்தம் இரவு நேரத்திலோ பகல் நேரத்திலோ 12 மணி நேரம் என்பதாகும். ஆனால் இந்த அளவைத் தாண்டி மிகையாக் வேலை செய்வது, பல சந்தர்ப்பங் களில், ஆங்கிலேய அதிகாரபூர்வ அறிக்கையின் சொற்களில் சொல்வதானால், ''மெய்யாகவே பயங்கரமானது.''[278]

அறிக்கை தொடர்கிறது; ''பின்வரும் வாசகங்களில் விவரிக்கப் படும் வேலையளவினைப் பார்க்கும் போது, 9 முதல் 12 வரை வயதுள்ள பையன்கள் செய்யக் கூடிய வேலையாக அதனை கருத எவருக்கும் மனம் ஒப்பாது....இப்படிப்பட்ட அதிகாரத் துர்ப் பிரயோகங்களைப் பெற்றோர்களும் முதலாளிகளும் செய்வதை இனியும் அனுமதிக்கலாகாது என்ற தயக்கமற்ற முடிவுக்கே வந்தாக வேண்டும்.''[279]

''அன்றாடப் போக்கில் ஆனாலும், நெருக்குதலான சமயங் களில் ஆனாலும், இரவு, பகல் முறை வைத்து சிறுவர்கள் வேலை செய்வதென்ற பழக்கமே அடிக்கடி மிதமிஞ்சி நீண்ட நேரம் வேலை செய்வதற்குத் தவிர்க்க முடியாமலே வழி திறப்பதாகத் தெரிகிறது. குழந்தைகளுக்கு இந்த வேலை நேரம் மிக நீண்டதாய் உள்ளது. இது சில சந்தர்ப்பங்களில் உள்ளபடியே கொடுமையாகவும், ஏன், நம்ப முடியாததாகவும் கூட இருக்கிறது. பல சிறுவர்களில், ஒரு சிலர் ஏதேனும் காரணத்தால் அடிக்கடி வேலைக்கு வராமற்போவது மெய்தான். இப்படி வராதவர்களுக்கு பதில் அடுத்த முறையில் வேலை செய்யும் சிறுவர்களில் ஒருவரோ ஒரு சிலரோ வேலை செய்கின்றனர். இது எல்லாருக்கும் அறிமுகமான ஏற்பாடு என்பது...பெரிய உருட்டாலைகள் சிலவற்றின் மேலாளர் அளித்த பதிலிலிருந்தே தெளிவாகிறது; தங்கள் முறைக்கு வராமலிருந்து விடும் சிறுவர்களின் இடம் சரிக்கட்டப்படுவது எப்படி என்று நான் கேட்ட போது, அவர், 'நான் மறுக்கவில்லை, ஐயா, இது எனக்கும் தெரியும், உங்களுக்கும் தெரியும்' என்று கூறி, உண்மையை ஒப்புக் கொண்டார்.''[280]

''முறையான வேலை நேரம் காலை 6 முதல் மாலை 5½ வரை என்றிருந்த ஓர் உருட்டாலையில், ஒரு சிறுவன் ஒவ்வொரு வாரமும் சுமார் நான்கு இரவுகள் குறைந்தது 8½ மணி வரை வேலை செய்தான்....அவன் இவ்வாறு ஆறு மாதம் வேலை செய்தான். இன்னொருவன், 9 வயதில் சில நேரங்களில் சேர்ந்தாற்

278 முன் வந்தது, 57, பக்கம் xii.

279 முன் வந்தது, நான்காம் அறிக்கை (1865), 58, பக்கம் xii.

280 முன் வந்தது.

போல் மூன்று 12 மணி நேர ஷிஃப்டு வேலை செய்தான்; 10 வயதில் சேர்ந்தாற்போல் இரண்டு பகல், இரண்டு இரவு வேலை செய்துள்ளான்.'' மூன்றாமவன், ''இப்பொழுது வயது 10... காலை 6 மணி முதல் மூன்று இரவுகள் 12 மணி வரையும் மற்ற இரவுகள் 9 மணி வரையும் வேலை செய்தான்.'' ''வேறொருவன், இப்போது வயது 13... ஒரு வாரம் முழுவதற்கும் மாலை 6 மணி முதல் அடுத்த நாள் பகல் 12 மணி வரையும், சில நேரம் முழுதாக மூன்று ஷிஃப்டும், உதாரணமாகத் திங்கள் காலை முதல் செவ்வாய் இரவு வரையும், வேலை செய்தான்.'' ''இன்னொருவன், இப்போது வயது 12, ஸ்டேவ்லியில் ஓர் இரும்பு வார்ப்பட சாலையில் ஒரு வாரம் தொடர்ச்சியாகக் காலை 6 மணி முதல் இரவு 12 வரை வேலை செய்துள்ளான்; அதற்கு மேல் அவனால் வேலை செய்ய முடியவில்லை.'' ''ஜார்ஜ் ஆலின்ஸ்வொர்த், வயது 9, இங்கு நிலவறைச் சிறுவனாக சென்ற வெள்ளிக் கிழமை வந்தான்; மறு நாள் காலை நாங்கள் 3 மணிக்கு வேலை தொடங்க வேண்டியிருந்தது; ஆதலால் நான் இரவு முழுவதும் இங்கேயே இருந்து விட்டேன். ஐந்து மைல் தள்ளி வசிக்கிறேன். தலைக்கு மேலே ஊது உலையுள்ள தரையில், கீழே ஒரு துண்டுடனும், மேலே கிழிந்த சொக்காயுடனும் உறங்கினேன். ஏனைய இரு நாட்களும் காலை 6 மணிக்கே இங்கு இருந்துள்ளேன்; ஆம்! இங்கு ஒரே புழுக்கமாய் இருக்கிறது. இங்கு வருமுன்னர் கிராமப்புறத்தில் சில தொழிற்சாலைகளில் இதே வேலையில் கிட்டத்தட்ட ஓராண்டு இருந்திருக்கிறேன். அங்கேயும் சனிக் கிழமை காலை 3 மணிக்கு வேலை தொடங்கினேன் — எப்போதுமே அப்படித்தான். ஆனால் வீட்டுக்கு அருகாமையிலிருந்ததால், படுக்க வீடு செல்ல முடிந்தது. மற்ற நாட்களில் காலை 6 மணிக்கு வேலை தொடங்கினேன்; மாலை 6 அல்லது 7க்கு வேலை முடிந்து வீடு செல்ல அனுமதிக்கப் பட்டேன்.'' இவ்வாறே இன்னும் சொல்லலாம்.[281]

[281] முன் வந்தது, பக்கம் xiii. இந்த ''உழைப்புச் சக்திகளின்'' கலாசாரத் தரம் ஆணையர்களில் ஒருவருடன் நடந்த பின்வரும் உரையாடலிலிருந்து தெரிவதற்கு ஒப்பானதாகவே இருக்கும்: ஜெரிமையா ஹெய்ன்ஸ், வயது 12 — ''நாலை நாலால் பெருக்கினால் எட்டு. 4 நான்குகள் 16. ஒரு ராஜா என்றால் பணம், தங்கம் அனைத்தையும் பெற்றிருப்பவன். நமக்கு ஒரு ராஜா இருக்கிறார் (அவரை ராணி என்று சொல்கிறார்கள்); அவளை இளவரசி அலெக்சாண்டிரா என்று அழைக்கிறார்கள்; அவள் ராணியின் மகனை மணந்து கொண்டதாகக் கூறுகிறார்கள். ராணியின் மகன் தான் இளவரசி அலெக்சாண்டிரா. இளவரசி என்றால் ஒரு மனிதன்.'' வில்லியம் டர்னர், வயது 12 — ''இங்கிலாந்தில் வசிக்காதீர்கள், அது ஒரு நாடாய் இருப்பதாக நினைக்கிறேன்; ஆனால் இதற்கு முன் எனக்குத் தெரியாது.'' ஜான் மோரிஸ், வயது 14 — ''கடவுள் உலகைப் படைத்தார் என்றும், ஒருவரைத் தவிர எல்லாரும் மூழ்கடிக்கப்பட்டு விட்டதாகவும் சொல்லக் கேட்டிருக்கிறேன்; அந்த ஒருவர் ஒரு சிறிய பறவை என்று சொல்லக் கேட்டிருக்கிறேன்.'' வில்லியம் ஸ்மித், வயது 15 — ''கடவுள் மனிதனைப் படைத்தான், மனிதன் மனுஷியைப் படைத்தான்.'' எட்வர்டு டெய்லர், வயது 15 — ''லண்டனைப் பற்றி எனக்கு தெரியாது.'' ஹென்றி மாத்யூமன்,

மூலதனமே இந்த 24 மணி நேர ஏற்பாட்டை எப்படிக் கருதுகிறது என்பதை இப்போது கவனிப்போம். இயல்பாகவே, இவ்வேற்பாட்டின் படுமோசமான வடிவங்களை — இதைத் தவறான முறையில் பயன்படுத்தி வேலை-நாளைக் "கொடுமையாகவும், ஏன், நம்ப முடியாததாகவும் கூட" நீட்டுவதை — கண்டு கொள்ளாமல் மூலதனம் மௌனம் சாதிக்கிறது. மூலதனம் அஞ்சல் முறை குறித்துப்

---

வயது 17 — "பிரார்த்தனைக் கூட்டத்துக்குப் போயிருந்தேன்; ஆனால் சமீப காலத்தில் மிகப் பல தடவைகள் போகத் தவறினேன். அவர்கள் உபதேசித்த ஒரு பெயர் ஏசு கிறிஸ்து என்பதாகும்; வேறு யாரைப் பற்றியும் நான் சொல்ல முடியாது, அவரைப் பற்றியும் எதுவும் சொல்ல முடியாது, அவர் கொல்லப்படவில்லை; மற்றவர்களைப் போல் இறந்து போனார். சில வழிகளில் அவரும் மற்றவர்களும் ஒன்றல்ல; ஏனெனில், அவர் சில வழிகளில் சமயப் பற்றுடையவராய் இருந்தார், மற்றவர்கள் இல்லை." (முன் வந்தது, பக்கம் xv.) "சைத்தான் நல்ல ஆள், அவர் எங்கே வசிக்கிறார் என்பது எனக்குத் தெரியாது." "கிறிஸ்து மோசமான ஆள்." "இந்தப் பெண் God என்பதை dog என்று எழுத்துக் கூட்டினாள்; ராணியின் பெயர் அவளுக்குத் தெரியவில்லை." ("குழந்தையுழைப்பு ஆணையம், ஐந்தாம் அறிக்கை, 1866," பக்கம் 55, எண் 278.) இதே போன்ற ஏற்பாடு ஏற்கெனவே எடுத்துக்காட்டப்பட்ட உலோகத் தொழில்களில் போலவே கண்ணாடித் தொழில்களிலும், காகிதத் தொழில்களிலும் நிலவி வருகிறது. காகிதம் இயந்திர சாதனம் கொண்டு செய்யப்படும் காகிதத் தொழிற்சாலைகளில் கூளம் பிரித்தல் தவிர எல்லா நிகழ்முறைகளுக்கும் இரவு நேர வேலை வழக்கமாய் உள்ளது. சில இடங்களில், இரவு நேர வேலை அஞ்சல் முறையின் மூலம் வாரம் முழுவதிலும், வழக்கமாக ஞாயிறு இரவு முதல் சனி நள்ளிரவு வரை இடைவிடாமல் நடத்தப்படுகிறது. ஒவ்வொரு வாரத்திலும், பகல் நேர வேலையில் இருப்பவர்கள் 5 நாட்களில் 12 மணி நேரமும் ஒரு நாளில் 18 மணி நேரமும் வேலை செய்கின்றனர்; இரவு நேர வேலையில் இருப்பவர்கள் 12 மணி நேரம் கொண்ட 5 இரவுகளும், 6 மணி நேரம் கொண்ட 1 இரவும் வேலை செய்கின்றனர். இதர இடங்களில் ஒவ்வொரு குழுவும் ஒரு நாள் விட்டு மறு நாள் அடுத்தடுத்து 24 மணி நேரம் வேலை செய்கிறது; ஒரு குழு 24 மணி நேரத்தை ஈடு கட்டுவதற்காகத் திங்கட்கிழமை 6 மணி நேரமும், சனிக் கிழமை 18 மணி நேரமும் வேலை செய்கிறது. ஏனைய இடங்களில், ஓர் இடைத்தர ஏற்பாடு நிலவுகிறது. இதன் படி காகிதத் தயாரிப்பு இயந்திர சாதனத்தில் வேலைக்கமர்த்தப்பட்டுள்ள அனைவரும் வாரத்தில் ஒவ்வொரு நாளும் 15 அல்லது 16 மணி நேரம் வேலை செய்கின்றனர். இந்த ஏற்பாடு "12 மணி நேர அஞ்சல் முறை, 24 மணி நேர அஞ்சல் முறை ஆக இரண்டினதும் தீமைகள் அனைத்தையும் ஒன்று சேர்ப்பதாகத் தோன்றுகிறது" என்று ஆணையர் லார்டு சொல்கிறார். 13 வயதுக்குட்பட்ட குழந்தைகளும் 18 வயதுக்குட்பட்ட இளம் வயதினரும், மாதர்களும் இந்த இரவு ஏற்பாட்டின் படி வேலை செய்கின்றனர். சில சமயங்களில் 12 மணி நேர ஏற்பாட்டில், அவர்கள் தங்களை மாற்ற வேண்டியவர்கள் வந்து சேராத காரணத்தினால், 24 மணி நேரம் கொண்ட இரட்டை முறை வேலை செய்ய வேண்டியதாகிறது. சிறுவர் சிறுமிகளும், மிகப் பல நேரங்களில் மிகை நேரம் வேலை செய்கின்றனர் என்பதையும், இது 24 மணி நேர அல்லது 36 மணி நேர முறிவற்ற பாடாக அடிக்கடி நீண்டு போகிறது என்பதையும் சாட்சியம் நிரூபிக்கிறது. பளபளப்பாக்குதல் என்ற தொடர்ச்சியான, மாறுபாடில்லாத நிகழ்முறையில் "சாப்பாட்டுக்கான 2 அல்லது அதிகபட்சம் 3 அரை மணி நேர இடைவெளிகள் தவிர முறையான மாற்றி விடுதலோ ஓய்வோ எதுவுமின்றி" 12 வயதுடைய பெண்கள் மாத முழுமைக்கும் நாளுக்கு 14 மணி நேரம் வேலை செய்வது காணப்படுகிறது. முறையான இரவு நேர வேலை முற்றிலும் கைவிடப்பட்டிருக்கும் சில ஆலைகளில் மிகைவேலை பயங்கரமான அளவுக்கு நடக்கிறது; "அதுவும் பல சந்தர்ப்பங்களில், பல்வேறு நிகழ்முறைகளிலும் மிகவும் அசுத்தமானவை, மிகவும் வெப்பமானவை, மிகவும் சலிப்பூட்டுகிறவை எவையோ அவற்றில் நடக்கிறது." (குழந்தையுழைப்பு ஆணையம், நான்காம் அறிக்கை, 1865, பக்கம் xxxviii, xxxix.)

பேசும் போதெல்லாம் இவ்வேற்பாட்டின் ''இயல்பான'' வடிவத்தைக் காட்டியே பேசுகிறது.

திருவாளர்கள் நெய்லர் & விக்கர்ஸ் எனும் உருக்காலை அதிபர்கள் 600 முதல் 700 பேர் வரை வேலைக்கமர்த்துகிறார்கள். இவர்களில் 10 சதவீதத்தினர் மட்டும் 18 வயதுக்குட்பட்டவர்கள்; இவ்வயதினரில் 20 சிறுவர்கள் மட்டுமே இரவுக் குழுக்களில் வேலை செய்கின்றனர். இந்த நிறுவனத்தார் தமது கருத்தை இவ்வாறு தெரிவிக்கின்றனர்: ''சிறுவர்கள் வெப்பத்தால் பாதிக்கப்படுவதில்லை; வெப்ப நிலை அநேகமாக 86° முதல் 90° வரை இருக்கும்....உலைகளிலும் உருட்டாலைகளிலும் ஆட்கள் இரவிலும் பகலிலும் அஞ்சல் முறையில் உழைக்கின்றனர். ஆனால் வேலையின் மற்றெல்லாப் பகுதிகளும் பகல் நேர வேலையே; அதாவது காலை 6 முதல் மாலை 6 வரையே. உலையில் வேலை நேரம் 12 முதல் 12 வரையாகும். ஆட்களில் சிலருக்கு பகல் நேர வேலையும் இரவு நேர வேலையும் மாறி வருவதில்லை. அவர்கள் எப்போதும் இரவில் வேலை செய்கின்றனர்...எப்போதும் பகல் நேரத்தில் வேலை செய்பவர்களுக்கும், எப்போதும் இரவு நேரத்தில் வேலை செய்பவர்களுக்கும் உடல் நிலையில் வேறுபாடு எதையும் நாங்கள் காணவில்லை. அநேகமாக ஓய்வு நேரம் மாற்றப்படுவதை விட ஒரே விதமாய் இருப்பது அவர்கள் உறங்குவதற்கு ஏற்றது.... 18 வயதுக்குட்பட்ட சிறுவர்களில் சுமார் 20 பேர் இரவுக் குழுக்களில் வேலை செய்கின்றனர்.... 18 வயதுக்குட்பட்ட சிறுவர்கள் இரவில் வேலை செய்யாமல் நாங்கள் ஒன்றும் செய்ய முடியாது. உற்பத்திச் செலவு கூடிப்போகும் என்பதுதான் எங்களது ஆட்சேபம்....ஒவ்வொரு துறையிலும் தேர்ச்சி பெற்ற கரங்களும் மூளைகளும் கிடைப்பது சிரமமாயுள்ளது; ஆனால் சிறுவர்கள் எத்தனை பேர் வேண்டுமானாலும் கிடைப்பார்கள்...ஆனால் நாங்கள் வேலை கொடுக்கிற பையன்களின் சிறு விகிதாசாரத்தைக் கொண்டு பார்த்தால், இந்த விவகாரம் (அதாவது இரவு வேலை மீது கட்டுத்தளைகள் என்ற விவகாரம்) எங்களுக்கு முக்கியத்துவமுடையதோ அக்கறைக்குரியதோ அன்று.'' [282]

சுமார் 3,000 ஆட்களுக்கும் பையன்களுக்கும் வேலை கொடுக்கிற உருக்கு, இரும்புத் தொழிலான திருவாளர்கள் ஜான் பிரவுன் & கம்பெனியின் வேலைகளில் ஒரு பகுதி, அதாவது இரும்பு மற்றும் கனரக உருக்கு வேலை அஞ்சல் முறையில் இரவும் பகலும் நடக்கிறது; இந்நிறுமத்தின் பங்காளர்களில் ஒருவரான திரு ஜே. எல்லிஸ் கூறுகிறார்: ''கனரக உருக்கு வேலையில் இருபது இருபத்திரண்டு ஆட்களுக்கு ஓரிரு சிறுவர் என்ற விகிதத்தில் வேலைக்க்மர்த்தப்படுகின்றனர்.'' 18 வயதுக்குட்பட்ட 500

[282] நான்காம் அறிக்கை, 1865, 79, பக்கம் xvi.

பையன்களுக்குக் குறையாமல் அவர்களது நிறுவனத்தில் வேலை செய்கிறார்கள்; இப்பையன்களில் சுமார் 1/3 பங்கினர் அல்லது 170 பேர் 13 வயதுக்குட்பட்டவர்கள். முன்மொழியப்பட்டுள்ள சட்டத்திருத்தம் சம்பந்தமாகத் திரு எல்லிஸ் சொல்கிறார்: "18 வயதுக்குட்பட்டவர் யாரும் 24 மணி நேரத்தில் 12 மணி நேரத்துக்கதிகமாக வேலை செய்யலாகாது என்று கோருவது அவ்வளவாக ஆட்சேபத்துக்குரியதென்று நான் நினைக்கவில்லை. ஆனால் இரவு நேர வேலைக்கு ஆகாதென்று 12 வயதுக்கு மேல் கோடு கிழிக்க முடியுமென்று நான் நினைக்கவில்லை; 12 வயதுக் குட்பட்டவர்களை வேண்டுமானால் இரவு நேர வேலைக்குச் சேர்க் காமல் விட்டு விடலாம். வேண்டுமானால், 13 வயதுக்குட்பட் சிறுவர்களை, ஏன், 14 வயதுக்குட்பட்டவர்களையும் கூட தடை செய்யுங்கள். ஆனால், இப்போது எங்களிடம் இரவில் வேலை பார்க்கிற சிறுவர்களைத் தடை செய்வது சரியன்று. பகல்-குழுக்களில் வேலை செய்கிற சிறுவர்கள் இரவுக் குழுக்களிலும் முறை வைத்துப் பங்கெடுக்க வேண்டும்; ஏனெனில், ஆட்கள் இரவுக் குழுக்களில் மட்டுமே வேலை செய்ய முடியாது; அது அவர்களது ஆரோக்கியத்தைக் கெடுத்து விடும்.... ஆயினும், ஒரு வாரம் விட்டு மறு வாரம் இரவு நேர வேலை செய்வதால் எந்தக் கெடுதலும் இல்லை. (மறு புறம், திருவாளர்கள் நெய்லர்& விக்கர்ஸ், அவர்களது தொழிலின் நலனுக்கு இசைவான விதத்தில், தொடர்ச்சியான இரவு உழைப்பை விட கால வட்ட முறையில் மாற்றப்படும் இரவு உழைப்பால் அதிகக் கெடுதல் விளையக்கூடும் என்று கருதினர்.) இவ்விதம் வாரம் விட்டு வாரம் இரவு நேர வேலை செய்கிறவர்கள் பகல் நேரத்தில் மட்டுமே வேறு வேலை செய்கிற மற்றவர்களைப் போலவே ஆரோக்கியமாய் இருக்கக் காண்கிறோம்....18 வயதுக்குட்பட்ட சிறுவர்கள் இரவில் வேலை செய்வதைத் தடை செய்வதற்கு நாங்கள் எதிர்ப்புத் தெரிவிப்பதற்குக் காரணம் செலவு கூடிப்போகும் என்பதாகும். ஆனால் இது ஒன்றுதான் காரணம். (என்னே இந்தக் கேடு கெட்ட பேதைமை!) தொழில் வெற்றிகரமாக நடக்க வேண்டுமென்பதை உரிய விதத்தில் மனத்தில் கொண்டால், இந்த அதிகப்படியான செலவு நியாயமாக அதனால் தாங்க முடிவதை விட அதிகமாய் இருக்கும் என்று நினைக்கிறோம். (என்னே இந்தப் பசப்புரை!) இங்கு உழைப்பு போதும்போதாமலே கிடைக்கிறது; மேற்கூறியது போன்ற விதிமுறை வருமானால் இதற்கும் பற்றாக்குறை ஏற்படக் கூடும்." (அதாவது எல்லிஸ் பிரவுன் & கம்பெனி, உழைப்புச் சக்திக்கு அதன் முழு மதிப்பில் விலை கொடுக்க வேண்டிய ஆபத்தான சிக்கலில் மாட்டிக் கொள்ள நேரும்.)[283]

---

[283] முன்வந்தது, 80, பக்கம் xvi.

திருவாளர்கள் கேமல் & கம்பெனியின் ''சைக்லோப்ஸ் உருக்கு மற்றும் இரும்புத் தொழில்கள்'' மேற்குறிப்பிட்ட ஜான் பிரவுன் & கம்பெனியின் தொழில்களைப் போலவே பிரம்மாண்ட அளவில் நடத்தப்படுபவை. மேலாண்மை இயக்குநர் தன் சாட்சியத்தை அரசாங்க ஆணையர் திரு வொய்ட்டிடம் எழுத்து மூலம் கொடுத்திருந்தார். பின்னர், சரிபார்ப்பதற்காகக் கையெழுத்துப் பிரதி அவரிடம் திருப்பித் தரப்பட்ட போது அதை அமுக்கி விடுவதே வசதியென அவருக்குத் தோன்றியது. ஆயினும், திரு வொய்ட்டுக்கு நல்ல ஞாபகசக்தி. திருவாளர்கள் சைக்லோப்சுக்கு குழந்தைகள், இளம் வயதினரின் இரவு நேர உழைப்பை விலக்குவது ''நடக்கக் கூடிய காரியமன்று, அவர்களது தொழில்களை நிறுத்தி விடுவதற்கு ஒப்பானது'' என்ற வாசகம் அவருக்குத் தெளிவாக நினைவிருந்தது. ஆனால் அவர்களது தொழில் 18 வயதுக்குட்பட்ட சிறுவர்களை 6 சதவீதத்துக்கு சற்று அதிகமாகவும், 13 வயதுக்குட்பட்டவர்களை 1 சதவீதத்துக்குக் குறைவாகவுமே வேலைக்கு வைத்துள்ளது.[284]

இதே பொருள் பற்றி சாண்டர்சன், சகோதரர்கள் & கம்பெனியின் (இந்நிறுமம் ஆட்டர்க்ளிஃபில் உருக்கு உருட்டாலைகள், உலைகள் கொண்டது) பங்காளர்களில் ஒருவரான திரு இ.எஃப். சாண்டர்சன் கூறுகிறார்: ''18 வயதுக்குட்பட்ட சிறுவர்களை இரவில் வேலை செய்ய விடாமல் தடுப்பதால் பெரும் இடர்ப்பாடு உண்டாகும். தலையாய இடர்ப்பாடு சிறுவர்களுக்கு பதில் ஆட்களுக்கு வேலை கொடுப்பதால் செலவு அதிகரிக்கும் என்பதாகும். எவ்வளவு அதிகரிக்கும் என்று என்னால் சொல்ல முடியாது; ஆனால், அநேகமாக, ஆலையதிபர்கள் உருக்கின் விலையை உயர்த்தக் கூடிய அளவுக்கு அதிகரிக்காது. ஆட்கள் அந்தை ஈடு செய்ய நிச்சயம் மறுப்பார்கள் (என்னே இவர்களின் பிடிவாதம்!) என்பதால் அது ஆலையதிபர்களின் தலையில் விழும்.'' தாம் குழந்தைகளுக்குக் கொடுக்கும் ஊதியம் எவ்வளவு என்பது திரு சாண்டர்சனுக்குத் தெரியவில்லை; ஆனால் ''சிறு பையன்கள் வாரத்துக்கு 4 ஷில்லிங் முதல் 5 ஷில்லிங் வரை பெறக் கூடும்.... சிறுவர்களின் வேலை அவர்களது சக்திக்குப் பொதுவாக ('பொதுவாக'த்தான், எப்போதுமன்று) உட்பட்டதாகவே இருக்கும். ஆதலால், முழு ஆட்களின் கூடுதலான சக்தியால் ஆதாயம் இல்லை; இழப்பை சரிக்கட்ட வழியில்லை; உலோகம் கனமாயுள்ள சில சந்தர்ப்பங்களில் மட்டுமே ஆதாயம் இருக்கும். ஆட்கள் சிறுவர்களைப் போல் பணிந்து நடக்க மாட்டார்கள். தமக்குக் கீழே சிறுவர்கள் இல்லாமற் போவதையும் அவ்வளவாக விரும்ப மாட்டார்கள். இஃதன்றியில், சிறுவர்கள் தொழில் பயில வேண்டுமானால் இளமையில் தொடங்க வேண்டும். பகல் நேர

---

[284] முன் வந்தது, 82, பக்கம் xvii.

வேலையை மட்டுமே சிறுவர்களுக்குரியதாக்குவது இந்த நோக்கத்துக்கு உதவாது.'' ஏன் உதவாது? சிறுவர்கள் பகல் நேரத்தில் ஏன் தொழில் பயில முடியாது? காரணம் என்ன? ''ஆட்கள் வாரம் விட்டு வாரம் என்ற முறையில் பகல், இரவு முறைகளில் வேலை செய்வதால், சிறுவர்களிடமிருந்து பாதி நேரத்துக்குப் பிரிக்கப்பட்டிருப்பார்கள்; அச்சிறுவர்கள் மூலமாய் அடைகிற இலாபத்தில் பாதியை இழப்பார்கள். அவர்கள் பழகுதொழிலாளர்களான [apperentices] சிறுவர்களுக்கு அளிக்கிற பயிற்சி அச்சிறுவர்களின் உழைப்புக்கான ஊதியத்தில் ஒரு பகுதியாகக் கருதப்படுகிறது; இவ்விதம் ஆட்கள் அவ்வுழைப்பைக் குறைந்த விலைக்குப் பெற்றிட உதவுகிறது. ஒவ்வொரு ஆளுக்கும் இந்த இலாபத்தில் ஒரு பாதி கிடைக்கும்.'' வேறு விதமாகச் சொன்னால், திருவாளர்கள் சாண்டர்சன் வயதுவந்த ஆட்களின் கூலியில் ஒரு பகுதியை சிறுவர்களின் இரவு நேர வேலையைக் கொண்டு கொடுப்பதற்கு பதில் தம் கையை விட்டுக் கொடுக்க வேண்டியிருக்கும். திருவாளர்கள் சாண்டர்சனின் இலாபம் இதனால் சிறிதளவு குறைந்து போகும்; சிறுவர்கள் பகல் நேரத்தில் தொழில் பயில முடியாது என்பதற்கு இதுவே சாண்டர்சனது நற்காரணம்.[285] இத்துடன் கூட, சிறுவர்களுக்கு பதில் வேலை செய்வோர் மீது இரவு உழைப்பை இது சுமத்தும்; இதை அவர்களால் தாங்க இயலாது. அவர்கள் இரவு நேர வேலையையே விட்டொழிக்கும் படியான அளவுக்கு சிரமங்கள் உண்மையிலேயே அதிகமாயிருக்கும். இ.எஃப். சாண்டர்சன் கூறுகிறார்: ''வேலையைப் பொறுத்த வரையிலும் இதுவே பொருந்தும்; ஆனால்—'' ஆனால் திருவாளர்கள் சாண்டர்சன் உருக்கு அன்னியில் வேறு எதையோ தயாரிக்க வேண்டியிருக்கிறது. உருக்குத் தயாரிப்பு என்பது உபரி-மதிப்புத் தயாரிப்புக்கான போர்வைதான். உருக்கு உலைகள், உருட்டாலைகள் முதலானவையும், கட்டடங்கள், இயந்திர சாதனம், இரும்பு, நிலக்கரி முதலானவையும் தம்மை உருக்காக மாற்றிக் கொள்வதன்னியில் வேறு ஏதோ செய்ய வேண்டியுள்ளது. அவை உபரி-மதிப்பை உறிஞ்சுவதற்கென்றே இருப்பவை. அவை 12 மணி நேரத்தில் உறிஞ்சுவதை விட 24 மணி நேரத்தில் அதிகமாய் உறிஞ்சுவதில் வியப்பில்லை. உண்மையிலேயே, கடவுளின் அருளாலும் சட்டத்தின் அருளாலும், அவை நாளின் 24 மணி நேர முழுமைக்கும் குறிப்பிட்ட தொகையிலான ஆட்களின் வேலை நேரத்தின் மீது ஒரு பிணைமுறியை [cheque] சாண்டர்சன்களுக்கு வழங்குகின்றன.

---

[285] சிந்தித்தலுக்கும், ஆய்ந்தறிதலுக்குமான நம் காலத்தில், எவ்வளவுதான் கெட்டதென்றாலும், அல்லது எவ்வளவுதான் பைத்தியக்காரத்தனமானதென்றாலும் ஒவ்வொன்றுக்கும் ஒரு நற்காரணம் கூற முடியாதவனுக்கு அதிகம் மதிப்பில்லை. உலகத்தில் தவறாகச் செய்யப்பட்டிருப்பதனைத்தும் மிகச் சிறந்த காரணங்களை முன்னிட்டே தவறாகச் செய்யப்பட்டுள்ளது. (ஹெகல், முன் வந்தது, பக்கம் 249.)

உழைப்பை உறிஞ்சுகிற அவற்றின் பணி இடைமறிக்கப்பட்டதுமே, மூலதனமெனும் தன்மையை அவ் இழக்கின்றன; எனவே சாண்டர்சன்களுக்குப் பூரண இழப்பாகின்றன. ''ஆனால் பாதி நேரத்துக்கு இவ்வளவு விலையுயர்ந்த இயந்திர சாதனம் சோம்பிக் கிடப்பதால் இழப்பு ஏற்படும்; இப்போதைய ஏற்பாட்டின் படி நாங்கள் பெற முடிகிற அளவு வேலையைப் பெறுவதற்கு கட்டடங்களையும் இயந்திரத் தளவாடங்களையும் இரு மடங்காக்க வேண்டியிருக்கும்; இது முதலீட்டை இரு மடங்காக்கி விடும்.'' ஆனால் பிற முதலாளிகள் பகல் நேரத்தில் மட்டும் வேலை வாங்குகிறார்கள். எனவே அவர்களது கட்டடங்களும், இயந்திர சாதனமும், கச்சாப் பொருளும் இரவு நேரத்தில் சோம்பிக் கிடக் கின்றன. இந்த முதல்ாளிகளுக்கு இல்லாத தனிச்சலுகைக்கு சாண்டர்சன்கள் ஏன் உரிமை கொண்டாட வேண்டும்? எல்லா சாண்டர்சன்களின் பெயராலும் இ.எஃப். சாண்டர்சன் பதில் சொல்கிறார்: ''பகலில் மட்டுமே வேலை நடக்கிற பட்டறைகளில் இயந்திரங்கள் சோம்பிக் கிடப்பதால் இழப்பு ஏற்படுவது உண்மை தான். ஆனால் எங்களைப் பொறுத்தவரை உலைகளைப் பயன் படுத்துவதால் இதனிலும் அதிகமான இழப்பு ஏற்படும். அவை சூடேறிய நிலையிலேயே வைக்கப்படுவதானால் (இப்போது தொழி லாளர்களது உயிர்ச்சத்து வீணாவதற்கு பதில்) எரிபொருள் வீணாகும்; இல்லையேல் திரும்பவும் தீ மூட்டி சூடேற்றுவதில் நேர இழப்பு ஏற்படும். (8 வயதுக் குழந்தைகளுக்குக் கூட உறக்க நேர இழப்பு என்பது சாண்டர்சன் குலத்துக்கு வேலை நேர ஆதாயமா கிறது); உலைகளும் வெப்பநிலை மாற்றங்களால் பாதிக்கப்படும்.'' (அதே உலைகள் பகல், இரவு உழைப்பாளர் மாற்றத்தால் எந்தப் பாதிப்பும் அடைய மாட்டா.)[286]

---

[286] முன் வந்தது, 85, பக்கம் xvii. கண்ணாடித் தொழில் அதிபர்களும் இதே போன்ற கனிவான காரணங்கள் கூறுகின்றனர். குழந்தைகளுக்கு முறையான சாப்பாட்டு நேரம் சாத்தியமில்லை, ஏனெனில் உலைகள் வீசும் வெப்பத்தில் குறிப்பிட்ட அளவு ''பூரண இழப்பு'' ஆகி விடும், அல்லது ''வீணடிப்பு'' ஆகி விடும் என்கின்றனர். இதற்கு ஆணையர் வொய்ட் பதில் சொல்கிறார். முதலாளிமார்கள் தமது தங்கத்தைச் செலவிடுவதில் காட்டும் ''துறவு மனப்பான்மை,'' ''தன்னலமறுப்பு,'' ''சேமித்தல்'' ஆகியவற்றாலும், மனித உயிர்களைப் பாழாக்குவதில் தைமூர்-தாமர்லேனுக்கு ஒப்பான அவர்களது மட்டுமீறலாலும் மனமிளகிப் போகும் யூர், சீனியர் போன்றோரும் அவர்களது அற்ப ஜெர்மானியப் போலிகளான ரோஷர் போன்றோரும் சொல்கிற பதிலைப் போன்றதன்று ஆணையர் வொய்ட் சொல்கிற பதில்: ''இந்நிலையில் சாப்பாட்டுக்கு நேரம் கொடுப்பதானால் தற்போது வழக்கமாயிருப்பதற்கும் அதிகமாய் குறிப்பிட்ட அளவு வெப்பம் வீணாகலாம்; ஆனால் வளரும் சிறுவர்கள் சாவகாசமாகச் சாப்பிடுவதற்கு அமைதியான போதிய நேரமும், அதன் ஜீரணத்துக்காகச் சிறிது நேரம் ஓய்வும் கிடைக்காததால் நாடு முழுவதிலும் கண்ணாடித் தொழிலகங்களில் இப்போது தசைச் சக்தியில் ஏற்படுகிற வீணடிப்புக்கு மேற்கூறிய வீணடிப்பு பண-மதிப்பில் சமமாக முடியாது என்றே தோன்றுகிறது.'' (முன் வந்தது, பக்கம் xiv.) முன்னேற்றத்தின் ஆண்டான 1865இல் இந்த நிலை! தூக்குவதிலும் ஏந்திச் செல்வதிலும் உடல்வலு செலவாவதைக் கருத்தில் கொள்ளாவிட்டாலும் இப்படியொரு குழந்தை, சீசாக்

## பிரிவு 5. — இயல்பான வேலை-நாளுக்கான போராட்டம். 14ஆம் நூற்றாண்டின் மத்தியிலிருந்து 17ஆம் நூற்றாண்டின் முடிவு வரை வேலை-நாளை நீட்டுவதற்கான கட்டாயச் சட்டங்கள்

''வேலை-நாள் என்பது என்ன? மூலதனம் எதன் அன்றாட மதிப்பை விலைக்கு வாங்குகிறதோ அந்த உழைப்புச் சக்தியை அது நுகரக் கூடிய கால அளவு என்ன? உழைப்புச் சக்தியின் மறுவுற் பத்திக்கு அவசியமான வேலை நேரத்தைத் தாண்டி எவ்வளவு தூரம் வேலை-நாளை நீட்டலாம்?'' இந்தக் கேள்விகளுக்கு மூலதனம் பின்வருமாறு பதிலளிக்கிறது என்பதைப் பார்த்தோம்: உழைப்புச் சக்தி மீண்டும் தன் சேவையை வழங்குவதற்கு முற்றிலும் இன்றி யமையாததான சில மணி நேர ஓய்வு போக 24 மணி நேர முழு மையும் வேலை-நாளில் அடங்கும். எனவே தொழிலாளி என்பவர், தன் வாழ்க்கை பூராவும், உழைப்புச் சக்தியே அன்றி வேறல்லர் என்பதும், எனவே அவரது பயன்படுத்தத்தக்க நேரம் முழுவதுமே, இயற்கையாலும் சட்டத்தாலும், மூலதனத்தின் தற்பெருக்கத்துக்கு அர்ப்பணிக்கப்பட வேண்டிய உழைப்பு நேரமே என்பதும் சொல் லாமல் விளங்கும். கல்விக்கான நேரம், அறிவு வளர்ச்சிக்கான நேரம், சமுதாயப் பணிகளை நிறைவேற்றுவதற்கான நேரம், சமுதாயக் கலந்துறவாடலுக்கான நேரம், ஏன், அவரது உடலும் உள்ளமும் கட்டின்றிச் செயல்பட்டு மகிழ்வதற்கான நேரம்,

---

கண்ணாடியும் கெட்டிக் கண்ணாடியும் செய்யப்படும் இலாயங்களில் வேலை செய்யும் போது ஒவ்வொரு 6 மணி நேரத்திலும் 15-20 மைல் நடக்கிறது! அடிக்கடி வேலை 14 அல்லது 15 மணி நேரம் நீடிக்கிறது! மாஸ்கோ நூற்பாலைகளில் போலவே இக் கண்ணாடித் தொழிற் கூடங்கள் பலவற்றிலும் 6 மணி நேர அஞ்சல் முறை அமலில் உள்ளது. ''வாரம் தோறும் வேலையுள்ள நாட்களில் ஓய்வுக்கென்று எந்தவொரு நேரத்திலும் சேர்ந்தாற்போல் கிடைத்துள்ள முறிவில்லாத அதிகபட்சக் காலம் ஆறு மணி நேரமே; இந்த 6 மணி நேரத்தில்தான் வேலைக்கு வருவதும் வேலை விட்டுப் போவதும், குளித்தலும், உடுத்தலும், உண்பதும் அடங்க வேண்டும்; ஓய்வுக்கென்று மிஞ்சுவது மிகச் சொற்ப நேரம்தான்; சிறுவர்களுக்கு இப்படி வெப்பம் மிகுந்து களைப்பூட்டும் வேலையில், அவசியமான தூக்கத்தைப் பலியிட்டாலன்றி நல்ல காற்றை சுவாசிப் பதற்கும், விளையாடுவதற்கும் நேரமே இல்லை. இந்த சொற்ப நேரத் தூக்கமும் கூட இரவாயிருந்தால் தன்னைத் தானே எழுப்பிக் கொள்ள வேண்டிய அவசியத்தாலும், அல்லது பகலாயிருந்தால் சத்தத்தாலும் தடைப்படக் கூடியது என்பதைக் கூறத் தேவை யில்லை.'' சேர்ந்தாற்போல் 36 மணி நேரம் உழைத்த சிறுவனையும் அதிகாலை 2 மணி வரை பாடுபட்டு உழைத்து விட்டு, பின் காலை 5 மணி வரை (3 மணி நேரம்!) தொழிற் கூடத்தில் உறங்கி விட்டு மீண்டும் வேலை துவக்கிய 12 வயதுடைய சிறுவர்களையும் திரு வொய்ட் எடுத்துக்காட்டுகளாய்க் குறிப்பிடுகிறார். பொது அறிக்கையைத் தயாரித்த ட்ரெமன்ஹீரும் டஃப்னெலும் கூறுகின்றனர்: ''தங்களது பகல் அல்லது இரவு உழைப்புக் காலத்தில் சிறுவர்களும் வாலிபர்களும் சிறுமிகளும் மாதர்களும் செய்த வேலையின் அளவு அசாதாரணமானதே.'' (முன் வந்தது, ப்க்கம் xliii., xliv.) இதற்கிடையில், அநேகமாய் இரவு வெகு நேரம் கழித்து, தன்னல மறுப்பாளரான திருவாளர் கண்ணாடி முதலாளி திராட்சை மதுவால் போதையுற்று, தனது மன்றத்திலிருந்து வெளிப்பட்டுத் தடுமாறுகிறார்; ''பிரித்தானியர்கள் அடிமைகளாக வாழ மாட்டார்கள், மாட்டவே மாட்டார்கள்'' என்று உளறியபடி வீடு நோக்கித் தள்ளாடிச் செல்கிறார்.

ஞாயிற்றுக் கிழமை ஓய்வு நேரம் (அதுவும் சபாத்தேரியர்கள் வாழும் இந்த நாட்டில்)[287] — எல்லாமே பகற் கனவுதான்! ஆனால் மூலதனம் உபரி-உழைப்புக்கான தன் கண்மூடித்தனமான, கட்டுக் கடங்காத வெறியுணர்ச்சியால், அசுரப் பசியால் வேலை-நாளின் அதிகபட்ச எல்லைகளையும் மீறிச் செல்கிறது; தார்மிக எல்லை களை மட்டுமல்லாமல், வெறும் பௌதிக எல்லைகளையும் கூட மீறிச் செல்கிறது. உடலின் வளர்ச்சிக்கும், மேம்பாட்டுக்கும், ஆரோக் கியமான பராமரிப்புக்கும் உரிய நேரத்தை அது அபகரித்துக் கொள் கிறது. நல்ல காற்று, சூரிய ஒளி ஆகியவற்றைப் பெறுவதற்கு அவசியமான நேரத்தைக் களவாடுகிறது. சாப்பாட்டு நேரம் குறித்து தகராறு பண்ணுகிறது. கொதிகலனுக்கு நிலக்கரியும், இயந்திர சாதனத்துக்கு மசையும் எண்ணெயும் இடுவது போல, ஓர் உற்பத்திச் சாதனமாகவே பாவித்து தொழிலாளிக்கு உணவு தரும் விதத்தில், சாத்தியமான இடங்களில் சாப்பாட்டு நேரத்தை உற்பத்தி நிகழ் முறையுடனேயே மூலதனம் இணைத்து விடுகிறது. உடல் சக்திகளை மீட்கவும், ஈடு கட்டவும், ஊக்கவும் அவசியமான நல்ல தூக்கத்தை, அறவே ஓய்ந்து விட்ட உயிரமைப்பினைத் திரும்பவும் இயங்கச் செய்வதற்கு அத்தியாவசியமான இத்தனை மணி நேர முடக்கம் என்பதாகவே அது தாழ்த்தி விடுகிறது. வேலை-நாளின் வரம்பு களை நிர்ணயிக்க வேண்டியதாயிருப்பது உழைப்புச் சக்தியின் இயல் பான பராமரிப்பன்று. தொழிலாளர்களின் உழைப்புச் சக்தியை — அது எவ்வளவுதான் நோய்வாய்ப்பட்டதாகவும், கட்டாயத்தின் பேரிலான தாகவும், வேதனையளிப்பதாகவும் இருந்தபோதிலும் — முடிந்தவரை அதிகபட்சமாக அன்றாடம் செலவிட வைப்பதே தொழிலாளர்களது ஓய்வு நேரத்தின் வரம்புகளை நிர்ணயிக்க வேண்டியதாயிருக்கிறது.

---

[287] இங்கிலாந்தில் கிராமப்புற வட்டங்களில தனது முகப்புத் தோட்டத்தில் ஞாயிற்றுக் கிழமையில் வேலை செய்ததன் மூலம் சபாத்தின் புனிதத்தைக் கெடுத்ததாக உழைப்பாளியை சிறைப்படுத்துவது இன்றும் கூட நிகழ்வதுண்டு. ஞாயிற்றுக் கிழமையில் உலோக, காகித, அல்லது கண்ணாடித் தொழிற் கூடத்துக்கு வராமலிருந்தால், மதச் சடங்கின் காரணத்தால் வராமலிருந்தாலும் கூட, வராத ஆள் ஒப்பந்த மீறலுக்காகத் தண்டிக்கப்படுவதும் இங்கேதான். சபாத் மீறல் மூலதனத்தைப் பெருக்குவதற்காக நடந்தால், வைதிகமான பாராளுமன்றம் அதைக் கண்டு கொள்ளாது. ஞாயிறு உழைப்பை ரத்து செய்யக் கோரி மீன் கடைகளிலும் கோழி-வாத்துக் கடைகளிலும் வேலை செய்யும் லண்டன் தினத் தொழிலாளர்கள் சமர்ப்பித்த விண்ணப்பம் (1863 ஆகஸ்டு), அவர் களது வேலை-வாரத்தின் முதல் 6 நாட்களுக்கு நாளொன்றுக்கு சராசரி 15 மணி நேரம் வீதமும், ஞாயிறன்று 8-10 மணி நேரமும் நீடிப்பதாகக் கூறுகிறது. திருச்சபையாரது ஈஸ்டர் கூடத்தில் பிரபுக் குலப் பசப்பர்களிடையிலான அறுசுவையினர் இந்த "ஞாயிறு உழைப்பை" முக்கியமாய் ஊக்குவிக்கின்றனர் என்பதையும் நாம் இதே விண்ணப்பத்தி லிருந்து அறிகிறோம். *In cute curanda,** இவ்வளவு ஆர்வமாய் இருக்கும் இந்தப் "புனிதப் பிறவிகள்" பிறரது மிகையுழைப்பையும், துன்பங்களையும், பட்டினியையும் பணிந்து ஏற்பதன் மூலம் தங்கள் கிறித்துவப் பண்பை வெளிப்படுத்திக் கொள்கின்றனர். *Obsequium ventris istis*(உழைப்பாளிகள்) *perniciosius est.* **

---

* தமது உடல் சுகங்களைக் கவனித்துக் கொள்வதில்

** பெருண்டிக்காரர்களாய் இருப்பது அவர்களது வயிற்றுக்கு மேலும் கேடு விளைவிக்கும்

உழைப்புச் சக்தியினது ஆயுட் காலத்தின் அளவு பற்றி மூலதனத்துக்கு அக்கறையில்லை; அதன் அக்கறைக்குரியதெல்லாம் ஒரு வேலை-நாளில் இயங்க வைக்கத்தக்க உழைப்புச் சக்தியின் அதிகபட்ச அளவு மட்டும்தான். மூலதனம் தொழிலாளியின் ஆயுட் காலத்தைக் குறுக்குவதன் மூலம் இந்த நோக்கத்தை அடைகிறது; பேராசைக்கார விவசாயி நிலத்தின் சத்தைக் கொள்ளையிடுவதன் மூலம் அதிலிருந்து அதிக விளைச்சலைப் பறித்தெடுப்பது போலத்தான் இதுவும்.

இவ்வாறு முதலாளித்துவப் பொருளுற்பத்தி முறை (சாராம்சத்தில் உபரி-மதிப்பின் உற்பத்தி, உபரி-உழைப்பை உறிஞ்சுதல்) வேலை-நாளின் நீட்டிப்பைக் கொண்டு, மனித உழைப்புச் சக்தியின் வளர்ச்சிக்கும், செயல்பாட்டுக்கும் வேண்டிய இயல்பான தார்மிக-பௌதிக நிலைமைகள் அதற்குக் கிடைக்காத படி கொள்ளையிட்டு அச்சக்தியை சீரழியச் செய்வதோடு வற்றிப் போகும் படியும் செய்கிறது.[288] அது உள்ளபடியே தொழிலாளியின் ஆயுட் காலத்தைக் குறுக்கி விடுவதன் மூலம், குறிப்பிட்ட காலத்திற்குட்பட்டு அவரது உற்பத்தி நேரத்தை நீட்டுகிறது.

ஆனால், தொழிலாளியின் மறுவுற்பத்திக்கு, அதாவது தொழிலாளி வர்க்கம் தொடர்ந்து நீடிப்பதற்கு அவசியமான சரக்குகளின் மதிப்பு உழைப்புச் சக்தியின் மதிப்பில் அடங்கியுள்ளது. அப்படியானால், மூலதனம் தற்பெருக்கத்துக்கான தன் வரம்பற்ற வெறியில் தவிர்க்க முடியாமலே அடைய முனைவதான வேலை-நாளின் இயற்கைக்குப் பொருந்தாத நீட்டிப்பு தனிப்பட்ட தொழிலாளியின் ஆயுட் காலத்தையும், எனவே அவரது உழைப்புச் சக்தியின் நீடிப்புக் காலத்தையும் குறுக்கி விடுகிறதென்றால், பயன்பட்டுத் தீர்ந்து போன சக்திகளை இன்னும் துரித கதியில் மாற்றீடு செய்ய வேண்டியுள்ளது; உழைப்புச் சக்தியின் மறுவுற்பத்திக்கான செலவுகளின் மொத்தத் தொகை இன்னும் அதிகமாகி விடும்—எப்படி இயந்திரம் தேய்மானமடைகிற வேகம் அதிகரிக்க அதிகரிக்க அந்த இயந்திரத்தின் மதிப்பில் அன்றாடம் மறுவுற்பத்தி செய்யப்பட வேண்டிய பகுதி மேன்மேலும் கூடிப் போகிறதோ, அதே போலத்தான் இதுவும். ஆகவே, இயல்பான வேலை-நாள் என்பது மூலதனத்தின் நலனுக்கே கூட உகந்ததாகத் தோன்றும்.

அடிமையுடைமையாளர் குதிரை வாங்குவது போலவே உழைப்பாளியையும் விலைக்கு வாங்குகிறார். அவர் தன் அடிமையை இழந்து விட்டால், மூலதனத்தை இழக்கிறார்; அடிமைச் சந்தைக்கு

---

[288] "மிகை வேலை நேரம்...ஆட்களின் வேலை செய்யும் சக்தி அகாலமாக வற்றிப் போவதற்கு நிச்சயம் ஏதுவாகிறது என்ற விதத்தில் அனுபவம் வாய்ந்த பல தொழிலதிபர்களின் வாக்குமூலங்களை எங்கள் முந்தைய அறிக்கைகளில் கொடுத்திருக்கிறோம்." (முன் வந்தது, 64, பக்கம் xiii.)

சென்று திரும்பவும் செலவு செய்தே இந்த இழப்பை ஈடு செய்தாக வேண்டும். ஆனால், " ஜியார்ஜியாவின் நெல் வயல்கள் அல்லது மிசிசிபி சதுப்பு நிலங்கள் மனித உடலமைப்புக்கு ஆபத்தான கேடு செய்யக் கூடியவையாக இருக்கலாம்; ஆனால் இந்த வட்டங்களில் சாகுபடிக்கு அவசியமாகிற மனித உயிர் வீணடிப்பு வர்ஜீனியா விலும், கெண்டக்கியிலும் ஏராளமாயுள்ள மனிதவள இருப்பு களைக் கொண்டு ஈடு செய்ய முடியாத அளவுக்கு அதிகமானதன்று. மேலும், இயற்கையான அமைப்பில் அடிமையின் உயிர்காப்பு ஆண்டையின் நலனுக்கு ஏற்றதாய் இருப்பதால் அடிமையை ஓரளவு இரக்கத்துடன் நடத்தத் தூண்டுகிற சிக்கன நோக்கங்கள் — அடிமை வர்த்தகம் நடைமுறைக்கு வந்தவுடன் — அடிமையின் உழைப்பை அதிகபட்சம் பிழிவதற்கான காரணங்களாகின்றன; ஏனெனில் அந்த அடிமையின் இடத்தை அந்நிய மனிதவள இருப்புகளைக் கொண்டு உடனே நிரப்ப முடியும் போது, அவரது ஆயுள் என்பது அவர் உயிருடன் இருக்கையில் அவரிடமிருந்து பெறப்படும் உற்பத்தித் திறனை விடக் குறைந்த முக்கியத்துவமுடையதாகிறது. எனவே, மனிதன் எனும் சங்கமப் பொருளிலிருந்து, அது வெளிப்படுத்த வல்ல அதிகபட்ச முயற்சியை மிகக் குறுகிய காலத்தில் கறப்பதே மிகவும் பயனுள்ள சிக்கனமாகும் என்பது அடிமைகளை இறக்குமதி செய்யும் நாடுகளில் அடிமை-மேலாண்மையின் செயல் விதிகளில் ஒன்று. பல சந்தர்ப்பங்களில் வருடாந்தர இலாபங்கள் தோட்டங் களின் முழு மூலதனத்துக்கே சமமாய் இருக்கிற வெப்பப் பிரதேசச் சாகுபடியில்தான் நீக்ரோ உயிர் மிகவும் அலட்சியமாகப் பலியிடப் படுகிறது. நம்ப முடியாத செல்வச் செழிப்புக்கு பல நூறு ஆண்டுகளாகப் பெயர் பெற்றிருக்கும் மேற்கிந்தியத் தீவுகளின் வேளாண்மைதான் ஆப்பிரிக்க இனத்தைச் சேர்ந்த பல லட்சம் மக்களை விழுங்கியுள்ளது. வருவாய்கள் கோடிக் கணக்கில் கணக்கிடப்படுகிற, தோட்ட அதிபர்கள் இளவரசர்களாய் இருக்கிற இந்நாளைய கியூபாவில்தான், அடிமை வர்க்கத்திடம் படுமட்டமான உணவையும்,சோர்ந்து ஒடுங்கச் செய்யும் ஓயாத உழைப்பையும், ஏன், ஆண்டு தோறும் அவ்வர்க்கத்தில் ஒரு பகுதி முற்றாக அழி வதையும் கூடக் காண்கிறோம்.[289]

*Mutato nomine de te fabula narratur.** அடிமை வர்த்தகம் என்பதை உழைப்புச் சந்தை என்றும், கெண்டக்கி, வர்ஜீனியா என்பதை அயர்லாந்து, இங்கிலாந்து, ஸ்காட்லாந்து, வேல்ஸ் ஆகிய வற்றின் வேளாண்மை வட்டங்கள் என்றும், ஆப்பிரிக்கா என்பதை ஜெர்மனி என்றும் மாற்றிப் படியுங்கள். லண்டனில் ரொட்டித்

---

289 கெயிர்ன்ஸ், "அடிமைச் சக்தி," பக்கம் 110, 111.

---

* பெயர்தான் வேறு; கதை உங்களைப் பற்றியதே.

தொழிலாளர்களின் அணிகளை மிகையுழைப்பு எப்படிக் குறுக்கியது என்பதைக் கேட்டறிந்தோம். ஆயினும், ரொட்டித் தொழிலகங்களில் சாவதற்காக ஜெர்மானியரும் பிறரும் வந்து குவிவதால் லண்டன் உழைப்புச் சந்தையில் எப்போதுமே தேவைக்கதிகமானோர் உள்ளனர். மண்பாண்டத் தொழில் ஆயுள் குறுகியோரின் தொழில்களில் ஒன்று என்பதைப் பார்த்தோம். ஆனால் மண்பாண்டத் தொழிலாளர்கள் பற்றாக்குறையாகவா இருக்கிறார்கள்? தானே ஆரம்பத்தில் சாதாரணத் தொழிலாளியாக இருந்தவரும், நவீன மண்பாண்டத் தொழிலின் கண்டுபிடிப்பாளருமான ஜோசையா வெட்ஜ்வுட் இத்தொழில் முழுவதும் 15,000 முதல் 20,000 பேருக்கு வேலை கொடுப்பதாக காமன்ஸ் சபையிடம் 1785இல் கூறினார்.[290] 1861ஆம் ஆண்டில் மகா பிரிட்டனில் இத்தொழில் நடக்கும் நகர மையங்களின் மக்கள்தொகை மட்டும் 101,302ஆக இருந்தது. "பஞ்சுத் தொழில் 90 ஆண்டுகளாக நடைபெறுகிறது....ஆங்கிலேய இனத்தின் மூன்று தலைமுறைகளாக அது நடைபெறுகிறது. இப்படி நடைபெற்றுள்ள இந்தக் காலத்தில் அது ஆலைத் தொழிலாளர்களின் ஒன்பது தலைமுறைகளை அழித்துள்ளதென்று துணிந்து சொல்லலாம் என நம்புகிறேன்."[291]

விறுவிறுப்பான செயற்பாட்டுக்குரிய குறிப்பிட்ட சில காலக் கட்டங்களில் உழைப்புச் சந்தையில் குறிப்பிடத்தக்க தட்டுப்பாடுகள் ஏற்படுவது மெய்தான். 1834ஆம் ஆண்டினை உதாரணமாய்க் குறிப்பிடலாம். ஆனால் அப்போது, வேளாண்மை வட்டங்களின் "உபரி-மக்கள் தொகையை" வட பகுதிக்கு அனுப்ப வேண்டுமாய் தொழிலதிபர்கள் வறியோர் நலச் சட்ட ஆணையர்களிடம் யோசனை கூறினார்கள். "அதைத் தொழிலதிபர்கள் ஈர்த்து பயன்படுத்திக் கொள்வார்கள்"[292] என்று விளக்கமளித்தனர். "வறியோர் நலச் சட்ட ஆணையர்களின் சம்மதத்துடன் முகவர்கள் நியமிக்கப்பட்டனர்....மான்செஸ்டரில் அலுவலகம் அமைக்கப்பட்டது; வேலை தேடும் உழைப்பாளர் பட்டியல்கள் வேளாண்மை வட்டங்களிலிருந்து அங்கு அனுப்பப்பட்டு, குறிப்பேடுகளில் பெயர்கள் பதிவு செய்யப்பட்டன. தொழிலதிபர்கள் இந்த அலுவலகங்களுக்கு வந்து, தாங்கள் விரும்பிய ஆட்களைத் தேர்ந்தெடுத்தனர்; 'தங்கள் தேவைகளுக்கேற்ற' ஆட்களை எடுத்ததும், அவர்களை மான்செஸ்டருக்கு அனுப்பி வைக்குமாறு உத்தரவிட்டனர்; அவர்கள், சரக்குப் பொதிகளைப் போல் சீட்டு ஒட்டப்பட்டு நீர்

290 ஜான் வார்டு: "டிரெண்ட்-கரை-ஸ்டோக் நகராட்சி," லண்டன், 1843, பக்கம் 42.

291 காமன்ஸ் சபையில் ஃபெர்ரண்டு ஆற்றிய உரை, 1863 ஏப்ரல் 27.

292 "பஞ்சாலையதிபர்கள் இந்த வார்த்தைகளையே பயன்படுத்தினர்." முன் வந்தது.

வழியாகவோ, வாகனங்கள் மூலமோ அனுப்பி வைக்கப்பட்டனர்; ஏனையோர் சாலை வழி நடந்தே சென்றனர். வழியில் பலர் அரைப் பட்டினியால் மயங்கிக் கிடந்தனர். இந்த ஏற்பாடு ஒரு மாமூல் வர்த்தகமாக வளர்ந்து விட்டது. இந்தச் சபை இதை நம்புவது கடினம்; ஆனால், அமெரிக்க ஐக்கிய நாட்டில் பருத்தித் தோட்ட அதிபரிடம் அடிமைகள் விற்கப்படுவது போல் இவர்களும் நடைமுறையில் அந்த அளவுக்கு மாமூலாகவே இந்த (மான்செஸ்டர்) தொழிலதிபர்களிடம் விற்கப்பட்டனர் என்று சொல்கிறேன். இந்த மனித சதை வியாபாரம் அங்கு போலவே இங்கும் பாதுகாக்கப்பட்டது....1860இல் 'பஞ்சுத் தொழில் உச்ச நிலையிலிருந்தது'....தொழிலதிபர்கள் மீண்டும் ஆட்கள் பற்றாக்குறையாக இருக்கக் கண்டனர்...அவர்கள் ''சதை முகவர்கள்'' என்று அழைக்கப் படுவோரிடம் மனுச் செய்தனர். அந்த முகவர்கள் இங்கிலாந்தின் தென்பகுதிச் சமவெளிகளுக்கும், டார்செட்ஷயரின் மேய்ச்சல் நிலங்களுக்கும், டெவான்ஷயரின் காடாரங்களுக்கும், வில்ட்ஷயரின் பசு வளர்க்கும் குடிகளிடமும் ஆளனுப்பினர்; ஆனால் அவர்களது முயற்சி பலிக்கவில்லை. உபரி-மக்கள்தொகை 'கிரகிக்கப்பட்டிருந்தது.' பிரெஞ்சு உடன்படிக்கை பூர்த்தியானதும் பரி கார்டியன் எழுதிற்று: ''10,000 கூடுதல் ஆட்களை லங்காஷயர் கிரகிக்க முடிந்தது. 30,000 அல்லது 40,000 தேவைப்படும்.'' வேளாண்மை வட்டங்களில் ''சதை முகவர்களும் உதவி முகவர்களும்'' முயன்று பார்த்து முடியாது போன பின்னர், ''ஒரு தூதுக் குழு லண்டனுக்கு வந்து, லங்காஷயர் ஆலைகளில் உழைப்பதற்கு சில யூனியன் இல்லங்களிலிருந்து ஏழைக் குழந்தைகளைப் பெறும் நோக்கத்துடன் மாண்புமிகு கனவானிடம் [வறியோர் நலச் சட்ட வாரியத்தின் தலைவர் திரு வில்லியர்சிடம்] சென்றது.''[293].

---

[293] முன் வந்தது. திரு வில்லியர்ஸ் சிறந்த விருப்பங்கள் உடையவராய் இருந்தும் ''சட்டப் படி'' ஆலையதிபர்களின் வேண்டுகோள்களை மறுக்க வேண்டிய நிலைக்கு ஆளானார். ஆயினும் இந்தக் கனவான்கள் வட்டார வறியோர் நலச் சட்ட வாரியங்களின் ஒத்தாசையால் தமது நோக்கத்தை நிறைவேற்றிக் கொண்டனர். இந்தத் தடவை அனாதைகளும் வக்கற்ற குழந்தைகளும் ''சட்டப் படி'' தொழில்பழகுவோராகக் கருதப் படும் ஏற்பாடு ''பழைய முறைகேடுகளைக் கொண்டதன்று'' (இந்த ''முறைகேடுகள்'' குறித்து பார்க்கவும்: எங்கெல்ஸ், முன் வந்தது); ஆயினும், ஒரு முறை, ''ஸ்காட்லாந்தின் வேளாண்மை வட்டாங்களிலிருந்து லங்காஷயருக்கும் சேஷயருக்கும் கொண்டுவரப்பட்ட பல சிறுமிகள், இளம் பெண்கள் தொடர்பாக இந்த ஏற்பாட்டில் நிச்சயமாய் முறைகேடு நடந்தது. இந்த ஏற்பாட்டின் படி தொழிலதிபர் வேலையில்லத்தின் அதிகாரிகளுடன் குறிப்பிட்ட காலத்துக்கு ஓர் ஒப்பந்தத்தை ஏற்படுத்திக் கொண்டார். அவர் குழந்தைகளுக்கு உணவும் உடையும் உறைவிடமும் அளித்து, அவர்களுக்கு சிறு தொகையை உதவிப் பணமாக வழங்கினார்; குறிப்பாக, ஆங்கிலேயப் பஞ்சுத் தொழிலின் செழிப்பான ஆண்டுகளிலேயே 1860ஆம் ஆண்டு ஈடிணையற்றது என்பதையும், அஃதன்னியில் கூலியும் அசாதாரணமான விதத்தில் உயர்வாக இருந்தது என்பதையும் கருத்தில் கொண்டால், திரு ரெட்கிரேவின் ஒரு கூற்று (அடுத்து இக்கூற்றை அப்படியே மேற்கோளாய்த் தருவோம்) விநோதமானதாகத் தோன்றுகிறது. அயர்லாந்தில் ஏற்பட்ட

பொதுவாக முதலாளிக்கு அனுபவம் காட்டுவது என்னவெனில், மக்கள்தொகை இடையறாது மிகைப்பட்டு விடுகிறது என்பதே. வளர்ச்சி குன்றிய, ஆயுள் குறைந்த, விரைவாக ஒன்றையொன்று ஈடு செய்கிற, பழுப்பதற்கு முன்பே பறிக்கப்படுவோர் என்று சொல்லும் படியான மனிதப் பிறவிகளின்[294] தலைமுறைகளால்

---

மக்கள்தொகைக் குறைவுடன், இங்கிலாந்து, ஸ்காட்லாந்தின் வேளாண்மை வட்டங்களிலிருந்து ஆஸ்திரேலியாவுக்கும் அமெரிக்காவுக்கும் முன்னெப்போதுமில்லாத அளவில் நடந்த குடிப்பெயர்ச்சியுடன், — ஓரளவு, உழைப்பாளிகளின் ஜீவ சக்தி உள்ளபடியே வற்றிவிட்ட காரணத்தாலும், ஓரளவு, மனித சதை வியாபாரிகள் மூலமாக பயனுள்ள மக்கள் திரள் ஏற்கெனவே கலைவுற்றுப் போய் விட்ட காரணத்தாலும் — ஆங்கிலேய வேளாண்மை வட்டங்கள் சிலவற்றில் உள்ளபடியே மக்கள்தொகையில் ஏற்பட்ட குறைவுடன் உழைப்புக்கான இந்த அசாதாரண வேண்டல் பொருத வேண்டியிருந்தது. இதற்கெல்லாம் மாறாக, திரு ரெட்கிரேவ் சொல்கிறார்: "ஆயினும், இந்த வகை உழைப்பு வேறு ஒன்றும் கிடைக்காத போது மட்டுமே நாடப்படும்; ஏனெனில், இது விலையுயர்ந்த உழைப்பாகும். 13 வயதுள்ள சிறுவனின் சாதாரணக் கூலி வாரத்துக்கு சுமார் 4 ஷில்லிங்காக இருக்கும்; ஆனால் இச் சிறுவர்களில் 50 அல்லது 100 பேருக்கு உணவு, உடை, உறைவிடம் அளிப்பதற்கும், மருத்துவ உதவியும் முறையான கவனிப்பும் கிடைக்கச் செய்வதற்கும், அவர்களுக்கு ஊதியமாய் சிறிது ஒதுக்கித் தருவதற்கும் வாரத்துக்கு தலைக்கு 4 ஷில்லிங் போதாது." (1860 ஏப்ரல் 30க்கான தொழிற்சாலை ஆய்வாளர் அறிக்கை, பக்கம் 27.) 50 அல்லது 100 குழந்தைகளுக்குத் தங்க இடமும் உண்ண உணவும் கவனிப்பும் எல்லாருக்கும் ஒன்றாக வழங்குவதற்குத் தொழிலதிபருக்கு வாரத்துக்கு 4 ஷில்லிங் போதாது என்னும் போது, தொழிலாளி தன் குழந்தைகளுக்கு அவர்களது வாரக் கூலி 4 ஷில்லிங்கைக் கொண்டு இதையெல்லாம் எப்படிச் செய்து தர முடியும் என்பதை திரு ரெட்கிரேவ் நமக்குச் சொல்லவில்லை. வாசகத்திலிருந்து தவறான முடிவுகளுக்கு வருவதைத் தவிர்க்கும் பொருட்டு, ஆங்கிலேயப் பஞ்சுத் தொழில் — வேலை நேர ஒழுங்கு முறைகள் இன்ன பிறவற்றைக் கொண்ட 1850ஆம் வருடத் தொழிற்சாலைச் சட்டத்தின் அதிகாரத்துக்கு உட்படுத்தப்பட்டதிலிருந்து — இங்கிலாந்தின் மாதிரித் தொழிலாக மதிக்கப்பட வேண்டியது என்பதை இங்கு நான் குறிப்பிட்டாக வேண்டும். ஆங்கிலேயப் பஞ்சுத் தொழிலாளி, துன்பத்தில் சிக்கியுள்ள தன் கண்டத்துக் கூட்டாளியைக் காட்டிலும் ஒவ்வொரு விதத்திலும் மேம்பட்டுள்ளார். "பிரஷ்ய ஆலைத் தொழிலாளி தன் ஆங்கிலேயப் போட்டியாளரைக் காட்டிலும் வாரத்துக்கு எப்படியும் 10 மணி நேரம் அதிகமாக வேலை செய்கிறார்; தன் சொந்த வீட்டிலேயே தன் சொந்த தறியில் அவர் வேலை செய்தால், அவரது உழைப்பு அந்தக் கூடுதல் மணிகளோடு கூட நின்று விடுவதில்லை." ("தொழிற்சாலை ஆய்வாளர் அறிக்கை," 1855 அக்டோபர் 31, பக்கம் 103.) மேலே குறிப்பிட்ட தொழிற்சாலை ஆய்வாளர் ரெட்கிரேவ் 1851இல் நடந்த தொழிற் துறைக் கண்காட்சிக்குப் பின்னர், கண்டத்தில், குறிப்பாக பிரான்சிலும் ஜெர்மனியிலும், தொழிற்சாலை நிலைமைகள் பற்றி ஆராயும் நோக்கத்துடன் சுற்றுப் பிரயாணம் செய்தார்; பிரஷ்யத் தொழிலாளி பற்றி அவர் சொல்கிறார்: "எளிய உணவைப் பெறவும், தனக்குப் பழக்கமான சொற்ப வசதிகளைச் செய்து கொள்ளவும் போதுமான ஊதியம் பெறுகிறார்....மட்டரகமான உணவை உண்டு வாழ்கிறார். கடுமையாய் உழைக்கிறார். இதில் அவரது நிலை ஆங்கிலேயத் தொழிலாளியின் நிலையை விட மோசமானது." ("தொழிற்சாலை ஆய்வாளர் அறிக்கை," 1855 அக்டோபர் 31, பக்கம் 85.)

294 மிகையாக வேலை வாங்கப்படுவோர் "அசாதாரண அளவில் சீக்கிரம் மாண்டு போகின்றனர்; ஆனால் மாண்டு போனவர்களின் இடத்துக்கு உடனுக்குடன் வேறு ஆட்கள் வந்து விடுகிறார்கள்; ஆட்கள் அடிக்கடி மாறுவதால் நிலைமையில் எவ்வித மாறுபாடும் இல்லை." ("இங்கிலாந்தும் அமெரிக்காவும்," லண்டன், 1833, பாகம் I, பக்கம் 55, எழுதியவர் எ. கி. வேக்ஃபீல்டு.)

ஆனதே இந்த மிகைத்திரள் என்றாலும், உபரி-உழைப்பை உறிஞ்சும் மூலதனத்தின் அந்நேரத்திய தேவைகளோடு ஒப்பிடுகையில் மட்டுமே இது மிகைத்திரளாகும். உண்மையிலேயே, வரலாற்று வழியில் சொன்னால் நேற்று முளைத்த ஒன்றாகிய முதலாளித்துவப் பொருளுற்பத்தி முறை மக்களது ஜீவ சக்தியின் அடிவேரையே எவ்வளவு விரைவாகவும் உறுதியாகவும் பற்றியுள்ளது என்பதை மதிநுட்பமுள்ள நோக்கருக்கு அனுபவம் காட்டுகிறது— கிராமப் புறத்திலிருந்து பூர்வீகமான, பௌதிக வழியில் சீர்கேடுறாத மானுடக் கூறுகளை இடைவிடாமல் கிரகிப்பது தொழில் துறை மக்கள் சமூகம் சீரழியும் வேகத்தை எப்படி மட்டுப்படுத்த மட்டுமே செய்கிறது என்பதைக் காட்டுகிறது; அவர்கள் மத்தியில் இவ்வளவு சக்தி வாய்ந்த முறையில் செயல்பட்டு மிக வலுவானவர்களை மட்டுமே பிழைத்திருக்க விடுவதான இயற்கைத் தேர்வுக் கோட்பாடும், புத்திளங் காற்றும் இருந்த போதிலும், கிராமப்புற தொழிலாளர்களே கூட எப்படி ஏற்கனவே மடிந்து மறையத் தொடங்கி விட்டனர் என்பதைக் காட்டுகிறது.[295] மூலதனம் தன்னைச் சுற்றிலுமுள்ள தொழிலாளர் திரள்களின் அவதிகளை இல்லையென்று மறுப்பதற்கு இப்படிப்பட்ட நல்ல காரணங்களை வைத்திருக்கிறது; நடைமுறையில் அது, மனித இனத்தின் நெருங்கி வரும் சீர்கேட்டையும், இறுதி அழிவையும் பற்றி கவலைப்படுவதில்லை—அப்படி கவலை இருக்குமாயின் பூமி சூரியனுக்குள் விழுந்து விடும் சாத்தியப்பாடு குறித்து அதற்குள்ள கவலையைப் போன்றதாகவே இருக்கும். பங்கு வியாபாரப் புரட்டு ஒவ்வொன்றிலும் ஏதேனும் ஒரு நேரத்தில் தகர்வு ஏற்படவே செய்யும் என்பது தெரிந்ததே; ஆனால் அது அண்டையர் தலையில்தான் விழும், அதற்குள் பொன்மாரியைப் பிடித்துப் பத்திரப்படுத்தி விடலாம் என்றே ஒவ்வொருவரும் எதிர்பார்க்கின்றனர். Apres moi le deluge!* ஒவ்வொரு முதலாளிக்கும்

---

[295] பார்க்கவும்: "பொது சுகாதாரம். பிரிவி கவுன்சில் மருத்துவ அதிகாரியின் ஆறாம் அறிக்கை, 1863," லண்டனில் 1864இல் பிரசுரிக்கப்பட்டது. இந்த அறிக்கை குறிப்பாக விவசாயத் தொழிலாளர்கள் பற்றியது. "சுதர்லாந்து...பொதுவாகப் பெரிதும் மேம்பாடுற்ற மாவட்டமாகக் காட்டப்படுகிறது....ஆனால்...அங்கேயும் கூட கவின்மிகு மாந்தர்களுக்கும் கம்பீரமான சிப்பாய்களுக்கும் ஒரு காலத்தில் பேர் பெற்றிருந்த வட்டங்களில், ஓர் அற்பமான, வளர்ச்சி குன்றிய இனமாக அங்கு வசிப்போர் சீரழிந்துள்ளனர் என்பதை சமீபத்திய ஆய்வு காண்பித்துள்ளது. கடல் எதிரிலிருக்கும் மலைப் புறங்களில், மிகவும் ஆரோக்கியமான சூழலில் கொடும் பட்டினியால் நலிவுற்ற அவர்களது குழந்தைகளின் முகங்கள், லண்டன் சந்து ஒன்றின் அசிங்கமான சூழலில் இருந்தால் எப்படியோ அப்படி வெளிறிட்டுப் போயுள்ளன." (வி.தாமஸ் தார்ண்டன், "மிகை மக்கள்தொகையும் அதன் பரிகாரமும்." முன் வந்தது, பக்கம் 74, 75.) இவர்கள் கதி, கிளாஸ்கோ நகரச் சந்து பொந்துகளில் விபசாரிகளுடனும் திருடர்களுடனும் சேர்ந்து அடைந்து கிடக்கும் ஸ்காட்லாந்தை சேர்ந்த 30,000 "தீரமிக்க வடபுலத்தாரின்" கதியையே உண்மையில் ஒத்திருக்கிறது.

---

* எனக்குப் பிற்பாடுதான் பிரளயம்!

ஒவ்வொரு முதலாளித்துவ நாட்டிற்கும் இதுவே தாரக மந்திரம். எனவே, சமுதாயத்திடமிருந்து நிர்ப்பந்தம் இருந்தாலன்றி, தொழிலாளியின் ஆரோக்கியம் பற்றியோ ஆயுள் பற்றியோ மூலதனத்துக்குக் கவலையில்லை.[296] உடலும் உள்ளமும் பாழாவது, அகால மரணம், மிகை வேலையெனும் சித்திரவதை ஆகியவை குறித்து எழுப்பப்படும் கூக்குரலுக்கு அது பதில் சொல்கிறது: இவற்றால் எங்கள் இலாபம் அதிகமாகும் போது, நாங்கள் இவை குறித்து ஏன் கவலைப்பட வேண்டும்? ஆனால் ஒட்டுமொத்தமாகப் பார்த்தால், இதெல்லாம் உண்மையில் தனிப்பட்ட முதலாளியின் நல்லெண்ணத்தையோ கெட்டெண்ணத்தையோ பொறுத்ததன்று. தடையிலாப் போட்டியானது முதலாளித்துவப் பொருளுற்பத்தியின் உள்ளார்ந்த விதிகளை, வெளியிலிருந்து வலுவந்தம் செய்து ஒவ்வொரு தனிப்பட்ட முதலாளியின் மீதும் அதிகாரம் செலுத்தும் விதிகளாய் உருவெடுக்கச் செய்கிறது.[297]

முதலாளிக்கும் தொழிலாளிக்குமிடையே நூற்றாண்டுக்கால

---

[296] ''மக்கள் சமூகத்தின் ஆரோக்கியம் நாட்டின் மூலதனத்துக்கு இவ்வளவு முக்கியத்துவமுடையதென்ற போதிலும், உழைப்பை அமர்த்துகிறவர்களின் வர்க்கம் இக் கருவூலத்தைக் காப்பதிலும் பேணி வளர்ப்பதிலும் முன்னணியில் இல்லை என்பதைக் கூறியாக வேண்டும்....தொழிலாளர்களது உடல்நலம் குறித்து கவலை கொள்ள வேண்டும் என்ற கருத்து ஆலையதிபர்கள் மீது வலுவந்தமாய்த் திணிக்கப்பட்டது.'' (டைம்ஸ், 1861 நவம்பர் 5.) ''வெஸ்ட் ரைடிங் ஆசாமிகள் மனித குலத்துக்கே உடை செய்வோர் ஆயினர்.... உழைக்கும் மக்களது உடல் நலம் பலியிடப்பட்டது; அவர்களது இனம் சில தலைமுறைகளில் சீரழிந்திருக்கும். ஆனால் எதிர்ப்பு கிளம்பியது. ஷேஃப்ட்ஸ்பரி பிரபுவின் மசோதா குழந்தைகளின் உழைப்பு நேரத்தை வரம்புக்குட் படுத்தியது....'' (''தலைமைப் பதிவாளரின் அறிக்கை,'' 1861 அக்டோபருக்கானது.)

[297] எனவே, உதாரணமாக 1863 ஆரம்பத்தில் ஜோசையா வெட்ஜ்வுட் & சன்ஸ் உட்பட ஸ்தாஃபோர்டுஷயரைச் சேர்ந்த பெரிய பீங்கான் தொழிற்சாலைகளுக்குரிய 26 பங்காளர்கள் ''பாராளுமன்றச் சட்டம்'' கோரி விண்ணப்பிப்பதைக் காண்கிறோம். ஏனைய முதலாளிகளுடன் நடக்கிற போட்டி குழந்தைகள் முதலானோருக்கான வேலை நேரத்தை அவர்கள் தாமாக முன்வந்து வரம்புக்குட்படுத்துவதற்கு இடமளிப்பதில்லை. ''முன் குறிப்பிட்ட தீமைகளுக்காக நாங்கள் பெரிதும் வருத்தப்பட்ட போதிலும், ஆலையதிபர்களுக்கிடையிலான உடன்பாட்டுத் திட்டமெதையும் கொண்டு அவற்றைத் தடுப்பது சாத்தியமாயிராது....இந்த அமிசங்கள் அனைத்தையும் கணக்கிற் கொண்டு, பாராளுமன்றச் சட்டம் அவசியம் என்ற உறுதியான முடிவுக்கு வந்திருக்கிறோம்.'' (''குழந்தையுழைப்பு ஆணையம்'' அறிக்கை 1, 1863, பக்கம் 322.) அண்மைக் காலம் மேலும் எடுப்பான உதாரணம் ஒன்றைத் தருகிறது. விறுவிறுப்பான செயற்பாட்டுக்குரிய காலகட்டத்தில், பஞ்சு விலையில் ஏற்பட்ட உயர்வு, பிளாக்பர்னிலுள்ள ஆலையதிபர்களை, பரஸ்பர உடன்பாட்டின் பேரில், குறிப்பிட்ட நிர்ணயமான காலத்தில், தமது ஆலைகளில் வேலை நேரத்தை குறைக்கத் தூண்டியது. இந்தக் காலம் 1871 நவம்பர் இறுதிவாக்கில் முடிவடைந்தது. இதற்கிடையில் இந்த உடன்பாட்டின் விளைவாக உற்பத்தி குறுகியதைப் பயன்படுத்தி, இன்னும் பெரிய செல்வந்தர்களான ஆலையதிபர்கள் — நூற்பும் நெசவும் ஒருங்கே நடத்தும் இவர்கள் — தம் சொந்தத் தொழிலை விரிவாக்கிக் கொண்டார்கள். இவ்வாறு சிறு முதலாளிகளைப் பலியிட்டு பெருத்த இலாபம் அடைந்தார்கள். சிறு முதலாளிகள் உடனே தீவிரமாய்த் தொழிலாளர் பக்கம் திரும்பி 9 மணி நேர ஏற்பாட்டுக்காகக் கிளர்ச்சி செய்யுமாறு அவர்களை மெய்யாகவே தூண்டினர். இந்த நோக்கத்தை அடைவதற்காக நன்கொடைகள் தருவதாகவும் வாக்களித்தனர்.

போராட்டத்தின் விளைவாகவே இயல்பான வேலை-நாள் நிலை நாட்டப்பட்டது. இந்தப் போராட்டத்தின் வரலாற்றில் எதிரெதி ரான இரு போக்குகளைக் காண்கிறோம். உதாரணமாக, நமது காலத்திய ஆங்கிலேயத் தொழிற்சாலைச் சட்ட நெறியை, 14ஆம் நூற்றாண்டு முதல் 18ஆம் நூற்றாண்டின் மத்தியில் வெகுகாலம் வரையிலான ஆங்கிலேயத் தொழிலாளர் சட்டங்களுடன் ஒப் பிட்டுப் பாருங்கள்.[298] நவீன காலத் தொழிற்சாலைச் சட்டங்கள் வேலை-நாளைக் கட்டாயமாகக் குறைத்தனவென்றால், முந்தைய சட்டங்கள் அதைக் கட்டாயமாக அதிகப்படுத்த முயன்றன. மூல தனம் அதன் குழவிப் பருவத்தில், இப்போதுதான் வளரத் தொடங் கியுள்ளதென்னும் நிலையில், போதிய அளவில் உபரி-உழைப்பை உறிஞ்சும் உரிமையை,. பொருளாதார உறவுகளின் வலிமை கொண்டு மட்டுமன்றி, அரசின் உதவி கொண்டும் நிலைநாட்டு கிறது. இந்தக் குழவிப் பருவத்தில் அது கொண்டாடுகிற பாத்தியதை கள், வயது வந்த நிலையில் முனங்கியும், முரண்டு பிடித்தும் அது அளிக்க வேண்டியிருக்கும் சலுகைகளோடு ஒப்பிட்டுப் பார்க்கும் போது, மிகவும் மிதமானவையாகவே தோன்றுகின்றன. அவசியப் பண்டங்களின் விலைக்காகத் தன் செயல்முனைப்பான வாழ்க்கை முழுவதையும் விற்றிட, தன் உழைப்பாற்றலையே விற்றிட, வயிற் றைக் கழுவுவதற்காகத் தன் பிறப்புரிமையை விற்றிட—முதலாளித் துவப் பொருளுற்பத்தியினது வளர்ச்சியின் பயனாய்—''சுதந்தரத்'' தொழிலாளி விரும்பி உடன்படுவதற்கு, அதாவது சமூக நிலைமை களால் நிர்ப்பந்திக்கப்படுவதற்கு, பல நூற்றாண்டுகளாகின்றன. எனவே, 14ஆம் நூற்றாண்டு மத்தியிலிருந்து 17ஆம் நூற்றாண் டின் முடிவு வரை மூலதனம் வயது வந்த தொழிலாளர்கள் மீது அரசு நடவடிக்கைகள் மூலம் திணிக்க முயன்ற நீடித்த வேலை-நாளின் கால அளவும், 19ஆம் நூற்றாண்டின் இரண்டாம் பாதி யில் இங்குமங்குமாக—குழந்தைகளின் இரத்தத்தை மூலதனமாக்கு வதைத் தடுப்பதற்காக—அரசால் குறைக்கப்பட்ட வேலை-நாளின் கால அளவும் ஏறத்தாழ ஒன்றாயிருப்பதில் வியப்பில்லை. உதார ணமாக, சமீப காலம் வரை வட அமெரிக்கக் குடியரசின் மிகச் சுதந்தரமான ராஜியமாகிய மாசச்சூசெட்ஸ் ராஜியத்தில், 12 வயதுக் குட்பட்ட குழந்தைகளின் உழைப்புக்கான சட்ட வரம்பாக இப் போது பிரகடனப்படுத்தப்பட்டுள்ள கால அளவு இங்கிலாந்தில் 17ஆம் நூற்றாண்டின் மத்தியிலேயே உடல் வலுமிக்க கைவினை

---

[298] இப்படிப்பட்ட தொழிலாளர் சட்டங்கள் [Labour Statutes] இங்கிலாந்தில் இயற்றப்பட்ட அதே காலத்தில் பிரான்சிலும் நெதர்லாந்திலும் வேறு இடங்களிலும் கூட இயற்றப்பட்டன. இச்சட்டங்கள் 1813இல்தான் இங்கிலாந்தில், முதன்முதல் முறைப்படி ரத்து செய்யப்பட்டன. ஆனால் அதற்கு நெடுங்காலம் முன்பே உற்பத்தி வழிமுறை களிலான மாற்றங்கள் அவற்றைக் காலாவதியாக்கி விட்டன.

ஞர்கள், திடகாத்திரமான தொழிலாளர்கள், வாட்டசாட்டமான கருமான்கள் ஆகியோருக்கு இயல்பான வேலை-நாளாக இருந்த கால அளவுதான்.[299]

முதலாவது ''தொழிலாளர்கள் சட்டம்'' (23, மூன்றாம் எட்வர்டு, 1349) அதற்கான உடனடி சமாதானத்தை (காரணத்தை யன்று; ஏனெனில் இவ்வகையான சட்டம் அதற்கான சமாதானம் மறைந்து பல நூற்றாண்டுகள் கழிந்த பிறகும் நீடிக்கிறது) மக்களுக் குப் பேரழிவை ஏற்படுத்திய பெரும் பிளேக் நோயின் உருவில் கண்டது; இதனால்தான் டோரி எழுத்தாளர் ஒருவர் சொல்கிறார்: ''நியாயமான அடிப்படையில் (அதாவது நியாயமான அளவு உபரி-உழைப்பை அவர்களது முதலாளிகளுக்கு விட்டுவைக்கும் விலைக்கு) வேலை செய்வதற்கு ஆட்கள் கிடைப்பதிலுள்ள இடர்ப்பாடு சற்றும் சகிக்க முடியாத அளவுக்கு வளர்ந்தது.''[300] எனவே, நியாயமான கூலி என்பது வேலை-நாளின் வரம்புகளாலும், அதே போல் சட்டத்தாலும் நிர்ணயிக்கப்பட்டது. நமக்கு இங்கே அக்கறைக்குரிய ஒரே அமிசமான வேலை-நாளின் வரம்புகள் என்ற அமிசம் 1496ஆம் ஆண்டுச் சட்டத்தில் (ஏழாம் ஹென்றி) திரும்ப வரு கிறது. இந்தச் சட்டத்தின் படி (ஆயினும் இச்சட்டத்தை அமல் படுத்த முடியவில்லை) அனைத்துக் கைத்திறனாளர்களுக்கும், வயல்

---

299 ''12 வயதுக்குட்பட்ட எந்தக் குழந்தையையும் பட்டறைத் தொழில் நிறுவனம் எதிலும் ஒரு நாளில் 10 மணி நேரத்துக்கதிகமாக வேலை வாங்கக் கூடாது.'' மாசச்சூசெட்ஸ் பொதுச் சட்டங்கள், 63, அத்தியாயம் 12. (இந்தப் பல்வேறு சட்டங் களும் 1836க்கும் 1858க்குமிடையே நிறைவேற்றப்பட்டவை.) ''பஞ்சு, கம்பளி, பட்டு, காகிதம், கண்ணாடி, வெண்சணல் ஆலைகள் எல்லாவற்றிலும், அல்லது இரும்பு, பித்தளைப் பட்டறைகளிலும் எந்த ஒரு நாளிலும் 10 மணி நேரத்தில் செய்யும் உழைப்பு சட்டப்படியான ஒரு நாள் உழைப்பாகக் கருதப்படும். எந்தத் தொழிற்சாலையிலும் வேலையிலிடுபட்டுள்ள இளம்படியர் [minor] யாரும் இனிமேல் எந்த ஒரு நாளிலும் 10 மணி நேரத்துக்கதிகமாகவோ அல்லது எந்த ஒரு வாரத்திலும் 60 மணி நேரத்துக் கதிகமாகவோ வேலை செய்ய வைத்துக்கொள்ளப்படவோ அல்லது கோரப்படவோ மாட்டார் என்பதும், இனிமேல் இந்த ராஜியத்தில் எந்தத் தொழிற்சாலையிலும் 10 வயதுக்குட்பட்ட எந்த இளம்படியரும் தொழிலாளியாகச் சேர்த்துக் கொள்ளப்பட மாட்டார் என்பதும் சட்டமாகட்டும்.'' நியூஜெர்சி ராஜியம். உழைப்பு நேரத்தை வரம்புக்குட்படுத்துவதற்கான சட்டம், § 1, 2. (1851 மார்ச் 18 தேதியச் சட்டம்.) ''12 வயதடைந்து 15 வயதுக்குட்பட்டிருக்கும் எந்த இளம்படியரையும் பட்டறைத் தொழில் நிறுவனம் எதிலும் எந்த ஒரு நாளிலும் 11 மணி நேரத்துக்கதிகமாகவோ, காலை 5 மணிக்கு முன்னரோ, மாலை 7.30க்குப் பின்னரோ வேலை வாங்கலாகாது.'' (''ரோடு தீவு ராஜியத்தின் திருத்தப்பட்ட சட்டங்கள்,'' அத்தியாயம் 139, § 23, 1857 ஜூலை 1.)

300 ''தடையிலா வாணிபத்தின் குதர்க்கங்கள்.'' 7ஆம் பதிப்பு, லண்டன், 1850, பக்கம் 205, 9ஆம் பதிப்பு, பக்கம் 253. மேலும் இதே டோரி ஒப்புக் கொள்கிறார். ''உழைப்பாளிக்கெதிராகவும், எஜமானருக்கு ஆதரவாகவும் கூலியை ஒழுங்குபடுத்திப் பாராளுமன்றம் இயற்றிய சட்டங்கள் மிக நீண்ட காலம், 464 ஆண்டு காலம் நீடித்தன. மக்கள்தொகை பெருகியது. பின் இச்சட்டங்கள் அனாவசியமானவை, சுமை போன் றவை எனத் தெரிந்தது; உண்மையிலும் அவை அப்படியாகிவிட்டன.'' (முன் வந்தது, பக்கம் 206.)

உழைப்பாளிக்கும் மார்ச் முதல் செப்டம்பர் வரை வேலை-நாள் காலை 5 முதல் மாலை 7க்கும் 8க்கும் இடையில் வரை நீடிக்க வேண்டும். ஆனால், காலை உணவுக்கு 1 மணி நேரம், சாப்பாட்டுக்கு 1½மணி நேரம், ''நடுப்பகல் உண்டிக்கு'' ½ மணி நேரம் ஆகியவை, அதாவது இப்போது அமலிலுள்ள தொழிற்சாலைச் சட்டங்களின் படி உள்ள நேரத்தைப் போல் சரியாக இரு மடங்கு நேரம் உணவு நேரமாகும்.[301] வேலையானது குளிர்காலத்தில் காலை 6 மணி முதல் இருட்டும் வரை அதே இடைவேளைகளுடன் நீடிக்க வேண்டியதாக இருந்தது. 1562ஆம் ஆண்டில் எலிசபெத்தின் சட்டம் ஒன்று ''தின அல்லது வாரக் கூலிக்கு அமர்த்தப்படும்'' உழைப்பாளர்கள் அனைவருக்குமான வேலை-நாளின் அளவைத் தொடாமல் விடுகிறது. ஆனால் இடைவேளைகளைக் கோடையில் 2½ மணி நேரமாகவும், குளிர் காலத்தில் 2 மணி நேரமாகவும் வரம்புக்குட்படுத்துவது அதன் நோக்கமாகும். மதிய சாப்பாட்டுக்கு ஒரு மணி நேரம் மட்டுமே, ''அரை மணிநேரப் பிற்பகல் உறக்கம்'' மே மத்திக்கும் ஆகஸ்ட் மத்திக்கும் இடையில் மட்டுமே அனுமதிக்கப்படுகிறது. வராமலிருக்கும் மணி ஒவ்வொன்றுக்கும் கூலியிலிருந்து 1 பென்னி கழிக்கப்பட வேண்டும். ஆயினும் நடைமுறையில், நிலைமைகள் சட்டப் புத்தகத்திலிருப்பதை விட உழைப்பாளிக்கு எவ்வளவோ சாதகமாயிருந்தன. அரசியல் பொருளாதாரத்தின் தந்தையும் ஓரளவுக்குப் புள்ளி விவர இயலின் மூல வருமான வில்லியம் பெட்டி 17ஆம் நூற்றாண்டின் கடைசி மூன்றாம் பகுதியில் பிரசுரித்த ஒரு நூலில் சொல்கிறார்: ''உழைக்கும் ஆட்கள் (அப்போது வயல் உழைப்பாளர்கள் என்று பொருள்) நாளுக்கு 10 மணி நேரம் வேலை செய்கின்றனர்; வாரத்துக்கு 20 தடவை, அதாவது வேலை-நாட்களில் நாளுக்கு 3 தடவையும், ஞாயிற்றுக் கிழமைகளில் 2 தடவையும் சாப்பிடுகின்றனர். இதனால் அவர்கள் வெள்ளி இரவுகளில் சாப்பிடாமலிருந்து, மதிய சாப்பாட்டுக்கு பதினொரு மணி முதல் ஒரு மணி வரை எடுத்துக்

---

301 இந்தச் சட்டம் சம்பந்தமாக, ஜா. வேடு சொல்வது உண்மை. ''மேற்கண்ட (அதாவது இச்சட்டம் தொடர்பான) கூற்றிலிருந்து, 1496இல் உணவு ஒரு கைத்திறனாளரின் வருமானத்தில் மூன்றிலொரு பாகத்துக்கும், ஒரு தொழிலாளியின் வருமானத்தில் பாதிக்கும் ஈடாகுமெனக் கருதப்பட்டதாகத் தெரிகிறது. இது உழைக்கும் வர்க்கங்களுக்கிடையே தற்போது வழக்கிலிருப்பதை விட உயர்ந்த அளவிலான சுதந்தரம் நிலவியதைச் சுட்டுகிறது; ஏனெனில், தொழிலாளர்கள், கைத்திறனாளர்கள் ஆக இரு சாராரின் உணவுமே இப்போது அவர்களது கூலியின் இன்னும் வெகு உயர்ந்த விகிதாசாரத்துக்குக் கணக்கிடப்படும்.'' (ஜா. வேடு, ''நடுத்தர மற்றும் உழைக்கும் வர்க்கங்களின் வரலாறு,'' பக்கம் 24, 25, 577.) இந்த வேறுபாடு உணவு, உடை ஆகியவற்றில் அப்போதைக்கும் இப்போதைக்கும் இடையிலான விலை உறவுகளில் காணப்படும் வேறுபாட்டின் விளைவாகும் என்ற அபிப்பிராயம் சரியல்ல என்பது, ஃபிளீட்வுட் பாதிரியார் எழுதிய ''Chronicon Preciosum...'' (முதல் பதிப்பு, லண்டன், 1707; இரண்டாம் பதிப்பு, லண்டன், 1745) என்ற நூலை மேலோட்டமாகப் பார்த்தாலே தெரிய வரும்.

கொள்வதற்கு பதில் ஒன்றரை மணி நேரமே எடுத்துக் கொள்ளக் கூடுமானால், அதன் மூலம் $\frac{1}{20}$ பாகம் கூடுதலாக வேலை செய்து, $\frac{1}{20}$ பாகம் குறைவாகச் செலவழித்தால், மேற்குறிப்பிட்டது (வரி) உயர்த்தப்படலாம் என்பது வெளிப்படை.[302] 1833ஆம் ஆண்டின் 12 மணி நேர மசோதாவை டாக்டர் ஆண்ட்ரூ யூர் இருண்ட காலத்துக்கான சரிவு என்று குறை கூறியது சரியன்றோ? பெட்டி குறிப்பிட்ட சட்டத்தில் அடங்கிய இந்த விதிமுறைகள் தொழில் பழகுவோருக்கும் பொருந்தும் என்பது உண்மையே. ஆனால் குழந்தை உழைப்பின் நிலைமை, 17ஆம் நூற்றாண்டின் இறுதியிலும் கூடப் பின்வரும் புகார் கூறப்பட்டதிலிருந்து தெரிகிறது: ''தொழில் பழகுகிற ஒருவரை, இந்த ராஜ்யத்தில் நாம் செய்வது போல, ஏழாண்டுகளுக்குக் கட்டிப் போட்டு வைப்பது அவர்களது (ஜெர்மனியில்) பழக்கமன்று. அவர்களது பொதுவான பயிற்சிக் காலம் மூன்று நான்கு ஆண்டுகளே; இதற்கான காரணம், அவர்கள் தொட்டில் முதற்கொண்டே வேலை பற்றி ஏதேனும் கற்பிக்கப் பெறுகின்றனர்; இது அவர்களை அதிகம் பொருத்தமானவர்களாகவும், எளிதில் பழகக் கூடியவர்களாகவும், ஆகவே தொழில் பக்குவத்தையும் இன்னும் விரைவான தேர்ச்சியையும் அடைவதற்கு அதிகம் வல்லவர்களாகவும் மாற்றுகிறது. இங்கே இங்கிலாந்திலோ, நமது இளைஞர்கள் தொழில் பழகுவோராக வருமுன்னர் எதிலும் பயிற்றுவிக்கப்படுவதில்லை; மிக மெதுவாகவே முன்னேறுகின்றனர்; தேறிய கலைஞர்களாக நிறைவெய்துவதற்கு இன்னும் நீண்ட காலம் அவர்களுக்குத் தேவைப்படுகிறது.''[303]

---

[302] வி. பெட்டி, ''அயர்லாந்தின் அரசியல் பகுப்பாய்வு, Verbum Sapienti,'' 1672, பதிப்பு 1691, பக்கம் 10.

[303] ''இயந்திரத் தொழிலை ஊக்கப்படுத்துவதன் அவசியம் பற்றிய விரிவுரை,'' லண்டன், 1690, பக்கம் 13. விக்குகளின் நலனுக்காகவும் முதலாளி வர்க்கத்தாரின் நலனுக்காகவும் ஆங்கிலேய வரலாற்றைப் பொய்யாகத் திரித்துள்ள மெக்காலே சொல்கிறார்: ''குழந்தைகளை உரிய வயதாவதற்குள் வேலைக்கு அனுப்புகிற பழக்கம் 17ஆவது நூற்றாண்டில் நிலவியது; பட்டறைத் தொழில் அமைப்பின் அளவோடு ஒப்பிடும் போது நம்ப முடியாததெனச் சொல்லுமளவுக்கு அது பரவியிருந்தது. ஆடைத் தொழிலின் முக்கிய இடமான நார்விச்சில் ஆறு வயதுள்ள சிறிய ஜீவனும் கூட உழைப்புக்கு லாயக்கானதென்று கருதப்பட்டது. தயாள குணத்துக்குப் பேர் போனவர்கள் எனக் கருதப்பட்ட சிலர் உட்பட அந்தக் காலத்திய எழுத்தாளர்கள் பலரும், அந்த ஒரு நகரத்தில் மட்டும் இளந்தளிரொத்த சிறுவர்களும் சிறுமிகளும் வருடம் ஒன்றுக்குத் தங்கள் சொந்த ஜீவனத்துக்கு அவசியமானதை விடப் பன்னிரண்டாயிரம் பவுன் மிகுதியாகப் படைக்கின்றனர் என்ற உண்மையைக் களிப்புடன் குறிப்பிடுகின்றனர். கடந்த கால வரலாற்றை நாம் எவ்வளவு கவனமாகப் பரிசோதிக்கிறோமோ, நமது காலம் புதிய சமூகத் தீமைகளை ஈந்துள்ளது என்று கற்பனை செய்வோருடன் இணங்காதிருப்பதற்கு அவ்வளவு அதிகமான காரணம் நமக்குக் கிடைக்கும்....புதிதாக இருப்பது அவற்றுக்குப் பரிகாரம் தரும் மதிநுட்பமும் மனிதத் தன்மையுமே.'' (''இங்கிலாந்தின் வரலாறு,'' பாகம் I, பக்கம் 417.) மெக்காலே இத்துடன் நில்லாமல் இன்னொன்

இருப்பினும், 18 ஆம் நூற்றாண்டின் பெரும்பகுதியில், நவீனத் தொழில் துறைக்கும் இயந்திரவியலுக்குமான இந்தக் காலம் வரை, இங்கிலாந்தில் உழைப்புச் சக்தியின் வாராந்தர மதிப்பைக் கொடுப்பதன் மூலம் தொழிலாளியின் வாரம் முழுவதையும் தனக்கெனப் பற்றிக்கொள்வதில் மூலதனம் வெற்றி பெறவில்லை; ஆயினும், விவசாயத் தொழிலாளர்கள் இதற்கு விதிவிலக்கு. நான்கு நாள் கூலியைக் கொண்டு வாரம் முழுவதும் வாழ முடியும் என்ற இந்த நிலைமை எஞ்சிய இரு நாட்களிலும் தொழிலாளர்கள் முதலாளிக்காக வேலை செய்ய வேண்டும் என்பதற்குப் போதுமான காரணமாக அவர்களுக்குப் படவில்லை. ஆங்கிலேயப் பொருளாதார அறிஞர்களின் ஒரு கட்சி, மூலதனத்தின் நலன் கருதி, தொழிலாளர்களது இந்த பிடிவாதத்தை வன்மையாகக் கண்டிக்கிறது; இன்னொரு கட்சி தொழிலாளர்களை ஆதரிக்கிறது. உதாரணமாக, இன்று போசில்துவேய்ட்டுக்கும் (இவரது தொழில் அகராதி மக்குல்லோஹ், மக்கிரிகோர் ஆகியோர் எழுதிய இதையொத்த நூல்கள் இன்று பெற்றுள்ள அதே புகழை அன்று பெற்றிருந்தது) "தொழில், வாணிபம் பற்றிய கட்டுரையின்" (ஏற்கெனவே மேற்கோள் காட்டப்பட்ட) ஆசிரியருக்கும் இடையே நடைபெற்ற வாதப் பிரதிவாதங்களைக் கவனிப்போம்.[304]

---

றையும் கூறியிருக்கலாம்; அதாவது ஹாலந்தில் வறியோர் இல்லமொன்றில் நான்கு வயது குழந்தை வேலைக்கமர்த்தப்பட்ட விதத்தை 17ஆவது நூற்றாண்டில் "அன்புள்ளம் கொண்ட" amis du commerce* "களிப்புடன்" விவரிக்கின்றனர் என்பதையும் "vertu mise en pratique"** என்பதன் இந்த உதாரணம் ஆதாம் ஸ்மித்தின் காலம் வரை மெக்காலே பாணியிலான எல்லா மனிதாபிமான நூல்களிலும் எடுத்தாளப்படுகிறது என்பதையும் கூறியிருக்கலாம். கைத்தொழில்களுக்கு பதில் பட்டறைத் தொழில் வருவதுடன் குழந்தைச் சுரண்டலின் தடங்களும் தோன்ற ஆரம்பிக்கின்றன என்பது உண்மையே. இந்தச் சுரண்டல் எப்போதுமே விவசாயிகள் மத்தியில் ஓரளவு நிலவியது; உழவனை வருத்தும் நுகத்தடியின் சுமை எவ்வளவுக்கெவ்வளவு அதிகமாயிற்றோ, அவ்வளவுக்கவ்வளவு இச்சுரண்டலும் வளர்ந்தது. மூலதனத்திற்குரிய இந்தப் போக்கு குறித்து சந்தேகத்திற்கிடமில்லை. இதற்கான விவரங்கள் இரட்டைத் தலைக் குழந்தைகள் பிறக்கிற அதிசயத்தை போல் இன்னமும் அபூர்வமாகவே உள்ளன. எனவேதான், அவை மிகவும் குறிப்பிடத்தக்கவையாகவும், அதிசயங்களாகவும் தொலை நோக்குள்ள "amis du commerce" என்போரால் "களிப்புடன்" எடுத்துரைக்கப்பட்டன; தம் சொந்தக் காலத்துக்கும், வருங்காலத்துக்குமான முன்மாதிரிகளாகப் பரிந்துரைக்கப்பட்டன. துதிபாடும் ஸ்காட்லாந்தியரும், சொற்சிலம்பக்காரருமான மெக்காலே சொல்கிறார்: "இன்று நாம் பின்னடைவு பற்றியே பேசக் கேட்கிறோம். ஆனால் முன்னேற்றத்தையே காண்கிறோம்." எம்மாதிரியான கண்கள்! இன்னும் குறிப்பாக, எம்மாதிரியான செவிகள்!

304 தொழிலாளர்களைக் குற்றம் சொல்வோரிலேயே மிகவும் ஆத்திரக்காரர், வாசகத்தில் மேற்கோள் காட்டப்பட்ட "தொழில், வாணிபம் பற்றிய கட்டுரை; வரிகள் முதலானவற்றைப் பற்றிய கண்ணோட்டங்கள் அடங்கியது," லண்டன், 1770 என்ற

---

* வாணிப நேயர்கள்

** "நடைமுறை நற்பண்பு"

போசில்துவேய்ட் ஏனைய பலவற்றோடு கூட இதையும் சொல்கிறார்: ''நாம் அந்தச் சில கண்ணோட்டங்களுக்கு முடிவு கட்ட வேண்டுமானால், முயற்சி வாய்ந்த ஏழைகள் தங்களைப் பராமரித்துக் கொள்வதற்குப் போதுமானதை ஐந்து நாளில் அடைய முடிகிறபோது ஆறு நாள் முழுக்க வேலை செய்ய மாட்டார்கள் என்று மிகப் பலரும் பேசும் சலிப்பூட்டும் பேச்சைக் கவனித்தாக வேண்டும். உழைக்கிற கைவினைஞரையும், ஆலைத் தொழிலாளியையும் ஓய்வின்றி வாரத்தில் ஆறு நாள் முழுவதும் உழைக்குமாறு கட்டாயப்படுத்துவதற்கு வரிகள் மூலம் அல்லது வேறு எந்த வழியின் மூலமும் வாழ்க்கையின் அவசியப் பண்டங்களையே கூட விலை கூடச் செய்வது அவசியமென்ற முடிவுக்கு அவர்கள் இந்தப் பேச்சிலிருந்து வருகின்றனர். இந்த நாட்டின் உழைக்கிற மக்களின் நிரந்தரமான அடிமைத்தனத்துக்காக வாதாடுகிற அந்த மாபெரும் அரசியல்வாதிகளுடன் கருத்து வேறுபாடு கொள்ள அனுமதியுங்கள்; விளையாடாமல் முழு நேரமும் வேலை செய்தால் முட்டாள் ஆவான் என்ற பாமரப் பழமொழியை அவர்கள் மறந்து விடுகின்றனர். இது வரை பொதுவாக பிரித்தானியச் சரக்குகளுக்கு பேரும் புகழும் பெற்றுத் தந்துள்ள உழைக்கும் கலைஞர்கள் மற்றும் உற்பத்தியாளர்களின் மதிநுட்பம் பற்றியும் கைத்திறம் பற்றியும் ஆங்கிலேயர்கள் பெருமைப்படவில்லையா? இந்தப் பேருக்கும் புகழுக்கும் காரணம் என்ன? உழைக்கும் மக்கள் அவர்தம் வழியில் இளைப்பாறி சுகமடைந்ததே முதற்பெரும் காரணம் எனலாம். ஆண்டு முழுவதிலும், வாரத்தில் ஆறு நாள் முழுவதும், ஒரே வேலையைத் திரும்பத் திரும்ப செய்து பாடுபட வேண்டியவர்களாக அவர்கள் இருந்தால், இது அவர்களது மதி நுட்பத்தை மழுங்கடித்து, விழிப்பானவர்களாகவும் கைத்திறமுள்ளவர்களாகவும் இருப்பதற்குப் பதில் மந்தபுத்தியினராக அவர்களை மாற்றி விடலாமல்லவா? இது போன்ற சாசுவதமான அடிமைத்தனத்தால் நமது உழைப்பாளர்கள் தங்கள் நற்பெயரைக் காப்பாற்றிக் கொள்வதற்கு பதில் இழந்து விடலாமல்லவா?...இப்படிக் கடுமையாக வாட்டப்படும் பிராணிகளிடமிருந்து எம்மாதிரியான வேலைத்

நூலின் அனாமதேய ஆசிரியராவார். அவர் தமது முந்தைய நூலான ''வரிகள் பற்றிய பார்வைகள்,'' லண்டன், 1765 என்பதில் இப்பொருள் குறித்து ஏற்கெனவே எழுதியுள்ளார். அதே பக்கத்தில் அடுத்து வருபவர் சொல்லுந்தரமற்ற புள்ளி விவர உளறுவாயரான போலோனியஸ் ஆர்தர் யங் ஆவார். உழைக்கும் வர்க்கங்களுக்கு ஆதரவாக வாதாடுவதில் முன்னணியிலிருப்பவர்கள் — ஜேக்கப் வாண்டர்லிண்ட், நூல்: ''அனைத்துக்கும் பணம் பதில் சொல்கிறது,'' லண்டன், 1734; மறைதிரு நதேனியல் ஃபார்ஸ்டர், டி.டி., நூல்: ''பலசரக்குகளின் இப்போதைய உயர்விலைக்கான காரணங்கள் பற்றிய ஓர் ஆய்வு,'' லண்டன், 1767; டாக்டர் பிரைஸ்; குறிப்பாகப் போசில்துவேய்ட்டும் அவரது ''மகா பிரிட்டனின் வாணிப நலன், விளக்கமும் மேம்பாடும்,'' 2ஆம் பதிப்பு, 1755 என்னும் நூல் போலவே ''தொழில், வாணிபம் பற்றிய உலக அகராதி'' என்பதற்கான அனுபந்தமும். ஜோசையா டக்கர் உட்பட அக்காலத்தைச் சேர்ந்த மற்றும் பல எழுத்தாளர்கள் இவ்வுண்மைகளை ஊர்ஜிதம் செய்கிறார்கள்.

திறனை எதிர்பார்க்க முடியும்?...அவர்களில் பலர், பிரெஞ்சுக் கார்ரர் ஐந்து ஆறு நாளில் செய்யும் வேலையை நான்கு நாளில் செய்து முடிப்பார்கள். ஆனால் ஆங்கிலேயர்கள் எந்நேரமும் மட்டுமீறி உழைக்க நேர்ந்தால், அவர்கள் பிரெஞ்சுக்காரர்களை விடவும் மட்டமாகப் போய்விடுவார்கள் என அஞ்ச வேண்டியிருக்கும். நம்மவர்கள் வீரதீரத்துடன் போர் புரிந்து பெயர் பெற்றவர்கள்; சுவையான ஆங்கிலேய மாட்டிறைச்சி வறுவலும், களியும், அரசியலமைப்பு தரும் சுதந்திர உணர்வும்தான் இதற்குக் காரணமென்று நாம் சொல்வதில்லையா? நமது கலைஞர்களதும் உழைப்பாளர்களதும் மேலான மதிநுட்பமும் கைத்திறமும் விருப்பம் போல் நடப்பதற்கான சுதந்திரம், உரிமை ஆகியவற்றின் விளைவாக ஏன் இருக்கலாகாது? அவர்களது தீரத்துக்கு மட்டுமின்றி மதிநுட்பத்துக்கும் ஆதாரமான இந்தச் சிறப்புரிமைகளையும் நல்வாழ்வையும் அவர்களிடமிருந்து ஒருபோதும் பறிக்கமாட்டோம் என நம்புகிறேன்.''[305] தொழில், வாணிபம் பற்றிய கட்டுரையை எழுதியவர் இதற்கு பதில் அளிக்கிறார்: ''ஒவ்வொரு ஏழாவது நாளையும் விடுமுறை நாளாக்குவது தெய்விகக் கட்டளை எனக் கொண்டால், ஏனைய 6 நாட்களை உழைப்புக்கு'' (மூலதனத்தையே அவர் குறிப்பிடுகிறார்; இதை நாம் சீக்கிரமே பார்ப்போம்) ஒதுக்க வேண்டும் என்பதே அதன் பொருள்; எனவே இதை அமல் படுத்துவது கொடுமை என நிச்சயம் கருதப்படாது....பொதுவாக மனித இனம் ஓய்வையும் சோம்பலையுமே நாடுகிறது. இது உண்மையே என்பதை ஆபத்தான அனுபவத்தின் வாயிலாக அறிகிறோம். தேவைப் பொருட்களின் விலை மிகவும் உயர்ந்து போனால் தவிர, சராசரியாக வாரத்தில் 4 நாளுக்கு மேல் உழைக்காத நமது தொழில் துறை மக்களின் நடத்தை இதையே புலப்படுத்துகிறது. ஏழைகளின் அவசியப் பண்டங்கள் அனைத்தையும் ஒரே இனமாய்க் கொள்ளுங்கள்; உதாரணமாக; அவை அனைத்தையும் கோதுமை என்று வைத்துக் கொள்ளுங்கள்; புஷல் கோதுமைக்கு 5 ஷில்லிங் விலையாகும் என்றும், அவர் (ஒரு தொழிலாளி) தன் உழைப்பின் மூலம் ஒரு ஷில்லிங் சம்பாதிக்கிறார் என்றும் வைத்துக் கொள்ளுங்கள்; அப்படியானால் ஒரு வாரத்திற்கு ஐந்து நாள் மட்டுமே வேலை செய்ய வேண்டிய நிலையில் அவர் இருப்பார். புஷல் கோதுமை 4 ஷில்லிங்தான் விலையானால் அவர் 4 நாள் மட்டுமே வேலை வேண்டிய நிலையில் இருப்பார். ஆனால், இந்த நாட்டில் கூலியானது அவசியப் பண்டங்களின் விலையுடன் ஒப்பிடுகையில் அதிகம் உயர்ந்திருப்பதால்...4 நாள் உழைக்கிற தொழிலாளியிடம் வாரத்தின் மீதி நாள் வேலை செய்யாமல் வாழ்வதற்கு உபரிப் பணம் உள்ளது....ஒரு வாரத்தில் 6 நாள் மிதமான உழைப்பு

[305] போசில்துவேய்ட், முன் வந்தது, ''முதல் பூர்வாங்க விரிவுரை,'' பக்கம் 14.

என்பது எவ்விதத்தும் அடிமைத்தனமன்று; நான் கூறியிருப்பதி லிருந்து இது தெரிந்து கொள்ளப்படுமென நம்புகிறேன். நமது உழைக்கும் மக்கள் இப்படி உழைக்கின்றனர்; எப்படி பார்த்தாலும் நம் உழைக்கும் ஏழைகள் அனைவரிலும் மகிழ்ச்சியுடன் இருப்பது அவர்களே என்று சொல்ல வேண்டும்.[306] டச்சுக்காரர்களும் பட்டறைத் தொழில்களில் இதைச் செய்கின்றனர்; மகிழ்ச்சி வாய்ந்த வர்களாகவே இருக்கின்றனர்; பிரெஞ்சுக்காரர்கள் விடுமுறை கள் குறுக்கிடாத போது இதைச் செய்கின்றனர்.[307] ஆனால், ஆங்கிலேயர்கள் என்ற விதத்தில் ஐரோப்பாவில் வேறு எந்த நாட்டிலுமிருப்பதைவிடச் சுதந்தரமாகவும் சுயேச்சையாகவும் இருத் தல் என்ற பிறப்புரிமையைத் தாங்கள் அனுபவிப்பதாக நமது மக்கள் நினைக்கின்றனர். இப்போது இந்த நினைப்பு நமது துருப்பு களின் தீரத்தைத் தூண்டக்கூடும் என்ற அளவில் சிறிது பயன் படலாம்; ஆனால் தொழிலாளர்களான ஏழைகளுக்கு எவ்வளவு குறைவாக அந்தக் கருத்து உள்ளதோ, அவ்வளவுக்கு அவர்களுக்கும் நல்லது, அரசுக்கும் நல்லது என்பது நிச்சயம். உழைக்கிற மக்கள் தங்களை விட மேல்நிலையில் இருப்பவர்களைச் சாராமல் தாங்கள் சுயேச்சையாய் இருப்பதாக ஒருபோதும் நினைக்கக் கூடாது.... மக்களில் எட்டில் ஏழு பங்கினர் அநேகமாய் சொற்பச் சொத்துள்ள வர்களாக அல்லது சொத்தே இல்லாதவர்களாக இருக்கிற நம் நாடு போன்ற ஒரு வாணிப நாட்டில் வெறிக் கும்பல்களை ஊக்கப் படுத்துவது மிகவும் ஆபத்தானது. நமது தொழிலாளர்களான ஏழைகள் இப்போது நான்கு நாளில் சம்பாதிக்கிற அதே தொகைக் காக ஆறு நாள் உழைப்பில் திருப்தி அடையாத வரை சிகிச்சை நிறைவு பெறாது.[308] இந்த நோக்கத்துக்காகவும், ''சோம்பேறித் தனத்தையும், தீயொழுக்கத்தையும், அத்துமீறலையும் வேரறுப்பதற் கும்,'' தொழில் உணர்வை வளர்ப்பதற்கும், ''நமது தொழிற் சாலைகளில் உழைப்பின் விலையை குறைப்பதற்கும், வறியோர் நல வரிகளின் பெருஞ் சுமையிலிருந்து நாட்டை விடுவிப்பதற்கும்,'' நமது மூலதனத்தின் ''விசுவாசமிக்க ஏக்கார்ட்'' இந்த ஒப்புதல் பெற்ற வழியை முன்மொழிகிறார்: பொது உதவியை சார்ந்திருப்

306 ''...கட்டுரை,'' 1770இல் ஆங்கிலேய விவசாயத் தொழிலாளியின் ''மகிழ்ச்சி'' எதில் அடங்கியிருந்தது என்பதை அவரே பக்கம் 96இல் சொல்கிறார். ''அவர்களது சக்திகள் எந்நேரமும் ஓய்வதில்லை; அவர்கள் இப்போது வாழ்வதை விடச் சிக்கனமாக வாழவும் முடியாது; இப்போது உழைப்பதை விடக் கடுமையாக உழைக்கவும் முடியாது.''

307 புராட்டெஸ்டண்டுக் கொள்கை கிட்டத்தட்ட எல்லாப் பாரம்பரியமான விடுமுறை நாட்களையுமே வேலை-நாட்களாக மாற்றுவதன் மூலம் மூலதனத்தின் பிறப்பில் முக்கியப் பாத்திரம் வகிக்கிறது.

308 ''...கட்டுரை,'' பக்கம் 15, 41, 96, 97, 55, 57, 69 — உழைக்கிற மக்களின் சோம்பேறித்தனமென்று முதலாளிகள் போடும் கூச்சலின் இரகசியம், அவர்கள் ஒரே அளவு கூலிக்கு 4 நாள் உழைப்புக்கு பதில் 6 நாள் உழைப்புக்கு உரிமை கொண்டாடு வதே தவிர வேறில்லை என்று 1734இலேயே ஜேக்கப் வாண்டர்லிண்ட் கூறினார்.

போராகி விடும் தொழிலாளர்களை, ஒரு வார்த்தையில் சொன்னால் வக்கற்றோரை ''இலட்சிய வேலையில்லத்தில்'' அடைக்க வேண்டும். இப்படிப்பட்ட இலட்சிய வேலையில்லம், ''வயிறார உண்டு, கதகதப்பாகவும் கச்சிதமாகவும் உடுத்தி, மிகச் சிறிதே வேலை செய்கிற'' ஏழைகளுக்கான புகலிடமாக இல்லாமல் ''பயங்கர இல்லம்'' ஆக்கப்பட வேண்டும்.[309] இந்த ''பயங்கர இல்லத்தில்,'' இந்த ''இலட்சிய வேலையில்லத்தில்'' ஏழைகள் நாளொன்றுக்கு 14 மணி நேரம் வேலை செய்ய வேண்டும்; சாப்பாட்டுக்கு முறையாக நேரம் விட்டு, 12 மணி நேரம் உழைக்க வேண்டும்.[310]

இலட்சிய வேலையில்லத்தில், 1770ஆம் வருட ''பயங்கர இல்லத்தில்,'' நாளுக்குப் பன்னிரண்டு வேலை-மணிகள்! 63 ஆண்டுகள் கழித்து 1833இல் 13 முதல் 18 வரை வயதுடைய குழந்தைகளுக்கான வேலை-நாளை நான்கு தொழிற் கிளைகளில் 12 முழு மணிகளாக ஆங்கிலேயப் பாராளுமன்றம் குறைத்த போது, ஆங்கிலேயத் தொழில் துறையின் இறுதித் தீர்ப்பு நாள் வந்து விட்டதாகத் தோன்றியது! 1852இல் சட்டப்பூர்வ வேலை-நாளில் கை வைப்பதன் மூலம் முதலாளி வர்க்கத்திடம் தன் நிலையைப் பத்திரப்படுத்திக் கொள்ள லுயீ போனபார்ட் முனைந்த போது, பிரெஞ்சு உழைக்கும் மக்கள் ''வேலை-நாளை 12 மணி நேரமாக வரம்பிடும் சட்டம்தான் குடியரசின் சட்ட நெறியில் எங்களுக்கு எஞ்சியிருக்கும் ஒரே நன்மை!'' என்று கூறி ஏகோபித்த குரலில் எதிர்ப்பு தெரிவித்தார்கள்.[311] ஜூரிச்சில் 10 வயதுக்கு மேற்பட்ட குழந்தைகளின் வேலை 12 மணி நேரமாக வரம்பிடப் படுகிறது; ஆர்காவில் 1862இல் 13க்கும் 16க்குமிடையிலான வயதுடைய குழந்தைகளின் வேலை 12½ மணி நேரத்திலிருந்து 12 மணி நேரமாகக் குறைக்கப்பட்டது; ஆஸ்திரியாவில் 1860இல்

---

309 முன்வந்தது, பக்கம் 242.

310 முன் வந்தது. அவர் கூறுகிறார், ''சுதந்தரம் பற்றிய நமது ஆர்வமிக்க கருத்துகளைப் பிரெஞ்சுக்காரர்கள் எள்ளி நகையாடுகின்றனர்.'' முன் வந்தது, பக்கம் 78.

311 ''நாளுக்கு 12 மணி நேரத்துக்கும் அதிகமாக வேலை வாங்குவதை அவர்கள் முக்கியமாய் ஆட்சேபித்தனர்; ஏனெனில், அந்த வேலை நேரத்தை விதித்த சட்டம் குடியரசின் சட்ட நெறியில் அவர்களுக்கு எஞ்சியுள்ள ஒரே நன்மை.'' (தொழிற்சாலை ஆய்வாளர் அறிக்கை, 1856 அக்டோபர் 31, பக்கம் 80.) 1848 மார்ச் 2ஆம் தேதிய இடைக்கால அரசாங்க உத்தரவின் முதலாளித்துவப் பதிப்பான 1850 செப்டம்பர் 5 தேதிய பிரெஞ்சுப் பன்னிரெண்டு மணி நேர மசோதா விதிவிலக்கின்றி எல்லாத் தொழிற்கூடங்களுக்கும் பொருந்தும். இந்தச் சட்டத்துக்கு முன்னர் பிரான்சில் வேலை-நாள் திட்டமான வரம்பின்றியிருந்தது. தொழிற்சாலைகளில் வேலை 14,15 அல்லது இன்னும் அதிக மணி நேரம் நீடித்தது. பார்க்கவும்: ''Des classes ouvrieres en France, pendant l'annee, 1848, எழுதியவர்: திரு பிளாங்கி'' திரு. பிளாங்கியிடம் — புரட்சியாளர் அல்லர், பொருளாதார அறிஞர் — தொழிலாளி வர்க்கத்தின் நிலைமை பற்றி விசாரணை நடத்தும் பொறுப்பை அரசாங்கம் ஒப்படைத்திருந்தது.

14க்கும் 16க்குமிடையிலான வயதுடைய குழந்தைகளுக்கும் இதே மாதிரி குறைக்கப்பட்டது.[312] 1770க்குப் பின்னர் ''எப்பேர்ப்பட்ட முன்னேற்றம்!'' களிப்புடன் கூவுவார் மெக்காலே!

1770ஆம் ஆண்டில் முதலாளித்துவ ஆத்மாவின் கனவாகவே இருந்த வக்கற்றோருக்கான ''பயங்கர இல்லம்'' சில ஆண்டுகள் கழித்து ''பகாசுர வேலையில்லத்தின்'' உருவில் நனவாயிற்று—ஆனால் இது ஆலைத் தொழிலாளிக்கான வேலையில்லமே தவிர, வக்கற்றோருக்கானது அன்று. இந்த வேலையில்லத்துக்குப் பெயர் தொழிற்சாலை. இலட்சியத்தையே இப்போது விஞ்சிவிடுகிறது எதார்த்தம்.

## பிரிவு 6.—இயல்பான வேலை-நாளுக்கான போராட்டம். வேலை நேரத்துக்கு சட்டத்தைக் கொண்டு கட்டாய வரம்பிடுதல். ஆங்கிலேயத் தொழிற்சாலைச் சட்டங்கள், 1833 முதல் 1864 வரை

மூலதனம் பல நூற்றாண்டுகள் முயன்று வேலை-நாளை அதன் இயல்பான அதிகபட்ச வரம்புக்கும், பின் இதையும் தாண்டி 12 மணி நேரம் கொண்ட இயற்கையான நாளின் வரம்புக்கும் நீட்டிச் சென்றது.[313]பிறகு, 18ஆவது நூற்றாண்டின் கடைசி மூன்றாம்

---

312 வேலை-நாளின் முறைப்படுத்தலைப் பொறுத்த வரை பெல்ஜியம் முன் மாதிரியான முதலாளித்துவ நாடாகும்; பிரசல்ஸில் இங்கிலாந்தின் நிறையதிகாரத் தூதுவராய் இருக்கும் வெல்டனைச் சேர்ந்த ஹோவார்டு பிரபு 1862 மே 12இல் வெளிவிவகார அலுவலகத்துக்குத் தெரிவிக்கிறார்: ''குழந்தைகளின் உழைப்பு ஒரு பொது சட்டத்தாலோ, ஸ்தல விதிமுறைகள் எதனாலுமோ வரம்பிடப்படவில்லை என்று அமைச்சர் திரு ரோஜியர் என்னிடம் தெரிவித்தார். கடந்த மூன்றாண்டுகளாக அரசாங்கம் ஒவ்வொரு அமர்விலும் இது குறித்து ஒரு மசோதாவை முன்மொழிய விரும்பியது. ஆனால் எப்பொழுதுமே குறைவற்ற உழைப்புச் சுதந்தரம் என்ற கோட்பாட்டுக்கு முரணான எந்தச் சட்டத்திற்கும் கண்டிப்பான எதிர்ப்பு எழுந்து, கடக்க முடியாத ஒரு தடையாய் அமையக் கண்டது என்றும் அவர் தெரிவித்தார்.''

313 ''எவ்வகையான ஆட்களும் 12 மணி நேரம் பாடுபட வேண்டியிருப்பது நிச்சயமாகப் பெரிதும் வருத்தப்பட வேண்டிய ஒன்று; 24 மணி நேரத்தில் அவர்களது சாபபாட்டுக்கான நேரமும், வேலைக்குப் போவதற்கும் திரும்பி வருவதற்குமான நேரமும் உட்பட, வேலை நேரம் உண்மையில் 14 மணி நேரமாகிறது....உடல்நலப் பிரச்சினைக்குள் செல்லாமலே, தார்மிகக் கண்ணோட்டத்தில், 13 வயது முதலே, தங்கு தடைக்குட்படாத தொழில்களில் இன்னும் வெகுவாக இளம் வயது முதலே உழைக்கும் வர்க்கங்களின் நேரத்தை, இடைவேளையில்லாமல், இவ்வளவு முழுமையாக உறிஞ்சுவது மிகவும் ஊறுபயப்பதாகவே இருக்க வேண்டும் என்பதையும், இது பெரிதும் கண்டிக்கத்தக்க கேடு என்பதையும் ஒப்புக் கொள்ள யாருமே தயங்க மாட்டார்கள் என நினைக்கிறேன்.... எனவே, பொது ஒழுக்க நெறிகளின் நிமித்தமும், ஒழுங்கு முறையுள்ள ஜன சமூகத்தை வளர்த்தெடுக்கும் நிமித்தமும், மக்கட் பெருந்திரள் நியாயமான அளவில் வாழ்வின் இன்பத்தைத் துய்க்கும் நிமித்தமும் எல்லாத் தொழில்களிலும் ஒவ்வொரு வேலை-நாளிலும் ஏதேனும் ஒரு பகுதி ஓய்வுக்கும் உல்லாசத்துக்குமாக ஒதுக்கப்படுவது பெரிதும் விரும்பத் தக்கதாகும்.'' (லியோனார்டு ஹார்னர், ''1841 டிசம்பர் 31க்கான தொழிற்சாலை ஆய்வாளர் அறிக்கைகள்.'')

பகுதியில் இயந்திரவியலும் நவீன தொழிலும் பிறந்ததும், தீவிரத்திலும் அளவிலும் பனிமலைச்சரிவை போன்ற உக்கிர ஆக்கிரமிப்பு நடந்தேறியது. ஒழுக்க நெறியும் இயற்கையும், வயதும் பாலும், பகலும் இரவும் எழுப்பிய வரம்புகள் யாவும் தகர்த்தெறியப்பட்டன. பகல்-இரவு பற்றிய கருத்துகளும் கூட—பழைய சட்டங்களில் கிராமிய எளிமை வாய்ந்திருந்த இந்த கருத்துகளும் கூட—ஒன்றும் புரியாத குழப்படி ஆயின. 1860ஆம் ஆண்டிலும் கூட பகல் என்றால் என்ன, இரவு என்றால் என்ன என்பதை "நீதி முறையில்" விளக்குவதற்கு ஓர் ஆங்கிலேய நீதிபதிக்கு யூத வேத விற்பன்னருக்குரிய கூரறிவு தேவைப்பட்டது.[314] மூலதனம் ஆனந்த தாண்டவமாடியது.

புதிய உற்பத்தி அமைப்பின் கூச்சல் குழப்பத்தால் முதலில் திகைத்து நின்ற தொழிலாளி வர்க்கம் தன் உணர்வுகளை ஓரளவு மீட்டுக் கொண்டதுமே, அதன் எதிர்ப்பு தொடங்கியது; அதுவும் இயந்திரவியலின் தாயகமான இங்கிலாந்தில் முதலில் தொடங்கியது. ஆயினும் 30 ஆண்டுகளுக்குத் தொழிலாளர் வென்ற சலுகைகள் முற்றிலும் பெயரளவிலானவையே. 1802க்கும் 1833க்குமிடையே 5 தொழிலாளர் சட்டங்களை பாராளுமன்றம் நிறைவேற்றியது; ஆனால் அவற்றை நடைமுறைப்படுத்துவதற்கும், அவசியமான அலுவலர்களை நியமிப்பதற்கும், இன்னபிற ஏற்பாடுகள் செய்வதற்கும் சல்லிக் காசு கூட ஒதுக்காமல் சாமர்த்தியம் புரிந்தது.[315]

அவை ஏட்டுச் சுரைக்காயாகவே இருந்தன. "1833ஆம் வருடத்திய சட்டத்துக்கு முன்னதாக இளம் வயதினரும், குழந்தைகளும்

[314] பார்க்கவும்: "திரு ஜே. எச். ஆட்வேயின் தீர்ப்பு, பெல்ஃபாஸ்ட் ஹிலேரி நீதிமன்றம், ஆண்ட்ரிம் மாவட்டம், 1860."

[315] முதலாளித்துவ மன்னரான லுயீ பிலிப்பின் ஆட்சிக் காலத்தில் நிறைவேறிய ஒரே தொழிற்சாலைச் சட்டமான 1841 மார்ச் 22 தேதிய சட்டம் ஒருபோதும் அமல் படுத்தப்படவில்லை. இது அவரது ஆட்சி எப்படிப்பட்டது என்று காட்டுகிறது. இச்சட்டம் குழந்தை உழைப்பு பற்றியதாகும். 8க்கும் 12க்கும் இடைப்பட்ட வயதுடைய குழந்தைகளுக்கு நாளுக்கு 8 மணி நேரமெனவும், 12க்கும் 16க்கும் இடைப்பட்ட வயதுடைய குழந்தைகளுக்கு 12 மணி நேரமெனவும், இன்ன பிறவாறும் அது நிர்ணயித்தது; இதற்கு விதிவிலக்குகள் அநேகம்; இவை 8 வயது குழந்தைக்கு கூட இரவு நேர வேலையை அனுமதிக்கின்றன. ஒவ்வொரு சுண்டெலியும் போலீஸ் நிர்வாகத்துக்குட்பட்டதாக இருக்கும் இந்த நாட்டில் இந்தச் சட்டத்தை மேற்பார்வையிடுவதும், அமல் படுத்துவதும் amis du commerce * என்பாரின் நல்லெண்ணப் பொறுப்பில் விடப்பட்டது. 1853க்குப் பின்னரே, ஒரே ஒரு மாவட்டத்தில்—நோர்டு மாவட்டத்தில்—ஊதியம் பெறும் அரசாங்க ஆய்வாளர் நியமிக்கப்பட்டார். பொதுவாகச் சொன்னால், லுயீ பிலிப்பின் சட்டம் சகல துறைகளையும் தழுவிய பிரெஞ்சுச் சட்டக் குவியலில் 1848ஆம் வருட புரட்சி வரை தனித்து நின்றது என்ற உண்மையும் பிரெஞ்சு சமுதாய வளர்ச்சி எப்படிப்பட்டது என்று அதே அளவுக்குக் காட்டுகிறது.

*வாணிப நேயர்கள்

இரவு முழுவதும், பகல் முழுவதும், அல்லது வரைமுறையின்றி இரவும் பகலும் வேலை வாங்கப்பட்டனர்; இதுவே உண்மை.''[316]

நவீனத் தொழிலுக்கு இயல்பான வேலை-நாள் என்பது பஞ்சு, கம்பளி, வெண்சணல், பட்டுத் தொழிற்சாலைகளை உள்ளடக்கிய 1833ஆம் வருடத் தொழிற்சாலைச் சட்டத்திலிருந்தே ஆரம்ப மாகிறது. 1833முதல் 1864வரையிலான ஆங்கிலேயத் தொழிற் சாலைச் சட்டங்களின் வரலாற்றை விட மூலதனத்தின் உணர் வினைக் குணங் காட்டுவது வேறொன்றும் இல்லை.

தொழிற்சாலையில் சாதாரண வேலை-நாள் காலை ஐந்தரை மணி முதல் இரவு எட்டரை மணி வரை என்று 1833ஆம் வருடச் சட்டம் அறிவிக்கிறது; இந்த 15 மணி நேரத்தின் வரம்புகளுக்குள், தனியாகச் சட்டத்தில் குறிக்கப்படும் சில சந்தர்ப்பங்களில் தவிர, எந்த ஒரு நாளிலும் 12 மணி நேரத்துக்கதிகமாக இளம் வயதினர் எவரும் (அதாவது 13க்கும் 18க்கும் இடையிலான வயதுடையவர் எவரும்) வேலை செய்யக் கூடாது என்ற நிபந்தனையோடு, நாளின் எந்த நேரத்திலும் இளம் வயதினரை வேலை வாங்குவது சட்டபூர்வ மானதே. இச்சட்டத்தின் 6ஆம் பிரிவு விதித்தது: ''ஒவ்வொரு நாளும், மேலே விதிக்கப்பட்டவாறு கட்டுப்படுத்தப்படும் ஒவ் வொரு ஆளுக்கும் சாப்பாட்டுக்கென ஒன்றரை மணி நேரத்துக்குக் குறைவில்லாமல் அனுமதிக்கப்படும்.'' பின்னர் குறிப்பிடப்பட்ட விதிவிலக்குகளுடன், 9 வயதுக்குட்பட்ட குழந்தைகளை வேலை வாங்குவது தடை செய்யப்பட்டது; 9க்கும் 13க்கும் இடையிலான வயதுடைய குழந்தைகளின் வேலை-நாள் 8 மணி நேரமாக வரம் பிடப்பட்டது; இரவு நேர வேலை, அதாவது இந்தச் சட்டத்தின் படி இரவு 8.30க்கும் காலை 5.30க்குமிடையிலான வேலை 9க்கும் 18க்குமிடையிலான வயதுடைய எல்லாருக்கும் தடை செய்யப்பட்டது.

சட்டமியற்றியோர் வயது வந்தோரது உழைப்புச் சக்தியை மூலதனம் சுரண்டுவதற்கான சுதந்தரத்தில்—அல்லது இவர்கள் பெயரிட்டழைத்தது போல் ''உழைப்புச் சுதந்தரத்தில்''—தலையிட விரும்பினார்களில்லை; எனவே தொழிற்சாலைச் சட்டங்கள் இவ்வளவு அக்கிரமமான விளைவை உண்டாக்காமல் தடுக்கும் பொருட்டு ஒரு தனிவித ஏற்பாட்டையே உருவாக்கினர்.

1833 ஜூன் 28 தேதியில் ஆணையத்தின் மத்திய வாரியம் அளித்த முதல் அறிக்கை கூறுகிறது, ''இப்போது நடத்தப்படும் நிலையில் தொழிற்சாலை அமைப்பின் மிகப்பெரும் தீங்கு என்று எமக்குத் தெரிந்திருப்பது, குழந்தைகளின் உழைப்பை வயது வந்தோரின் உழைப்பின் அதிகபட்ச அளவுக்கு நீட்டிக்கும் அவசி யத்தை அது ஏற்படுத்துகிறது என்பதே. எமது அபிப்பிராயப்படி, வயது வந்தோரின் உழைப்புக்கு வரம்பிடுவது நோயைவிட

316 ''தொழிற்சாலை ஆய்வாளர் அறிக்கை'', 1860 ஏப்ரல் 30, பக்கம் 50.

மோசமான தீங்கு பயக்கும் மருந்தாகும்; இதற்கு பதில் குழந்தைகளை இரட்டைக் குழுக்களாகப் பிரித்து வேலை வாங்கும் திட்டமே இத்தீமைக்கு ஒரே பரிகாரமாகத் தோன்றுகிறது.''...எனவே, உதாரணமாக 9க்கும் 13க்கும் இடையிலான வயதுடைய குழந்தைகளின் ஒரு குழுவை காலை 5.30 முதல் பிற்பகல் 1.30 வரையிலும், இன்னொரு குழுவை பிற்பகல் 1.30 முதல் இரவு 8.30 வரையிலும் வேலை வாங்கும் திட்டம் அஞ்சல்முறை என்ற பெயரில் நிறைவேற்றப்பட்டது.

கடந்த 22 ஆண்டுகளாகக் குழந்தை உழைப்பு தொடர்பாகப் பிறப்பிக்கப்பட்ட சட்டங்களையெல்லாம் கண்டு கொள்ளாமல் அப்பட்டமாக அலட்சியம் செய்தமைக்காகத் தொழிலதிபர்களுக்கு வெகுமதியளிக்க முற்பட்டனர்; கசப்பு மாத்திரை மேல் அவர்களுக்காக மேலும் இனிப்பு தடவினர். 1834 மார்ச் 1க்குப் பின்னர் 11 வயதுக்குட்பட்ட எந்தக் குழந்தையும், 1835 மார்ச் 1க்குப் பின்னர் 12 வயதுக்குட்பட்ட எந்தக் குழந்தையும், 1836 மார்ச்1க்குப் பின்னர் 13 வயதுக்குட்பட்ட எந்தக் குழந்தையும் தொழிற்சாலையில் எட்டு மணி நேரத்துக்கதிகமாக வேலை செய்யலாகாது என்று பாராளுமன்றம் ஆணை பிறப்பித்தது. இந்த ''மிதவாதம்'' மூலதனத்தின் பால் இவ்வளவு அதிகப்பரிவு கொண்டிருக்கிறது. காமன்ஸ் சபையிடம் அளித்த சாட்சியத்தில் டாக்டர் ஃபர்ரே, சர் ஏ. கார்லைல், சர் பெ. புராடி, சர் சா. பெல், திரு குத்ரி முதலானோர், சுருங்கச் சொல்லின் மிகச் சிறந்த லண்டன் மருத்துவர்களும் அறுவை வைத்தியர்களும், காலங்கடத்துவது ஆபத்தானதென்று அறிவித்திருந்ததை மனதிற் கொள்வோமானால், இந்தப் பரிவு மேலும் குறிப்பிடத் தக்கதாகிறது. டாக்டர் ஃபர்ரே இன்னும் பட்டவர்த்தனமாகத் தன் கருத்தை வெளியிட்டார்: ''அகால முறையில் எவ்வடிவத்திலும் சாவுக்கு வழி செய்வதைத் தடுப்பதற்குச் சட்டமியற்றுவது அவசியம். சாவுக்கு வழி செய்கிற மிகக் கொடூரமான முறையென இதை (அதாவது தொழிற்சாலை முறையை) கருத வேண்டும்.''

தொழிலதிபர்களின்பால் மெல்லிய பரிவு கொண்டு, 13 வயதுக்குட்பட்ட குழந்தைகளை ஆண்டாண்டு காலத்திற்குத் தொழிற்சாலை நரகத்தில் வாரத்துக்கு 72 மணி நேரம் வேலை செய்யும் படி சபித்த அதே ''சீர்திருந்திய'' பாராளுமன்றம், மறுபுறம், அடிமை விடுதலைச் சட்டத்தில்—இதுவும் சொட்டுச் சொட்டாகவே சுதந்தரத்தை உட்செலுத்தியது—ஆரம்ப முதலே, தோட்ட அதிபர்கள் எந்த நீக்ரோ அடிமையையும் வாரத்துக்கு 45 மணி நேரத்துக்கதிகமாக வேலை வாங்குவதைத் தடை செய்தது.

ஆனால், எவ்வகையிலும் சமாதானப்படாத மூலதனம் இப்போது கூச்சலிட்டுக் கிளர்ச்சி தொடங்கியது. இக்கிளர்ச்சி பல்லாண்டு காலம் தொடர்ந்தது. குழந்தைகளென்ற பெயரில் எட்டு

மணி நேர வேலையென்னும் வரம்புக்கு உள்ளாகி, குறிப்பிட்ட அளவு கட்டாயக் கல்வி பெற வேண்டியவர்களின் வயதே கிளர்ச்சியில் முக்கிய விவகாரமாயிற்று. இந்த முதலாளிமார்களின் மானிடவியலின் படி, குழந்தைப் பருவம் 10 வயதிலேயே முடிந்து விடுகிறது, அதிகம் போனால் 11 வயதில் முடிந்து விடுகிறது. தொழிற்சாலைச் சட்டத்தை முழு அளவில் அமலுக்குக் கொண்டு வருவதற்கான காலமாகிய அந்த ஆபத்தான 1836ஆம் ஆண்டு நெருங்க நெருங்க, தொழிலதிபர் கும்பல் வெறி கொண்டு வெகுண்டெழுந்தது. உண்மையிலேயே 1835இல் அரசாங்கம் குழந்தைப் பருவத்தின் வயது வரம்பை 13லிருந்து 12ஆகக் குறைத்திட உத்தேசிக்குமளவுக்கு அதனை அச்சுறுத்துவதில் அவர்கள் வெற்றி கண்டனர். இதற்கிடையில் வேறு வகையில் வெளியிலிருந்து எழுந்த நிர்ப்பந்தம் இதனிலும் அச்சம் தருவதாய் வளர்ந்தது. துணிவிழந்தது காமன்ஸ் சபை. 13 வயதான குழந்தைகளை நாளொன்றுக்கு 8 மணி நேரத்துக்கதிகமாக மூலதனத்தின் தேர்ச்சக்கரம் நசுக்க விடுவதற்கு அது ஒப்ப மறுத்தது. ஆக, 1833ஆம் வருடத்திய சட்டம் முழு அளவில் செயலுக்கு வந்தது. 1844 ஜூன் வரை அது மாற்றமின்றி நீடித்தது.

முதலில், பகுதியாகவும், பின்னர் முழுமையாகவும் அது தொழிற்சாலை வேலையைக் கட்டுப்படுத்திய பத்தாண்டுகளில் தொழிற்சாலை ஆய்வாளர்கள் அளித்த அதிகாரபூர்வ அறிக்கைகளில், இச்சட்டத்தை அமல்படுத்துவதன் இயலாமை பற்றிய புகார்கள் மிகுந்துள்ளன. காலை 5.30 முதல் இரவு 8.30 வரையிலான 15 மணி நேரத்தில் மூலதனப் பிரபுகள் தம் விருப்பம் போல் எப்போது வேண்டுமானாலும் "இளம் வயதினர்" ஒவ்வொருவரையும் "ஒவ்வொரு குழந்தையையும்" தன் 12 அல்லது 8 மணி நேர வேலையைத் தொடங்குமாறு, நிறுத்துமாறு, மறுபடி துவக்குமாறு அல்லது முடிக்குமாறு செய்ய 1833ஆம் வருடத்திய சட்டம் இடமளித்தது. மேலும் அது அவர்களை வெவ்வேறு ஆட்களுக்கு வெவ்வேறு சாப்பாட்டு நேரத்தை ஒதுக்கிட அனுமதித்தது. ஆதலால், இந்தக் கனவான்கள் சீக்கிரமே "அஞ்சல் முறையைக்" கண்டுபிடித்தனர்; இம்முறையின் படி உழைப்புக் குதிரைகள் குறிப்பிட்ட நிலையங்களில் மாற்றப்படவில்லை; வெவ்வேறு நிலையங்களில் எப்போதும் மாற்றிச் சேணமிடப்பட்டன. பிற்பாடு இந்த ஏற்பாட்டின் அழகு பற்றித் திரும்பவும் சொல்ல வேண்டியிருப்பதால், இங்கே அதிகம் கூற வேண்டியதில்லை. ஆனால், பார்த்த மாத்திரத்திலேயே ஒன்று தெளிவாகி விடுகிறது: இந்த ஏற்பாடு தொழிற்சாலைச் சட்டம் முழுவதையும் உணர்வில் மட்டுமல்லாமல், உருவத்திலும் செல்லாக் காசாக்கியது. தனிப்பட்ட குழந்தை அல்லது இளம் வயதினர் ஒவ்வொருவர் தொடர்பாகவும் இப்படிச் சிக்கலான முறையில் கணக்கு வைத்துக் கொள்ள வேண்டிய இந்த

நிலையில் தொழிற்சாலை ஆய்வாளர்கள் சட்டப் படி நிர்ணயிக் கப்பட்ட வேலை நேரமும், சட்டப் படி ஒதுக்கப்பட வேண்டிய சாப்பாடு நேரமும் அமல் செய்யப்படுமாறு உறுதி செய்வது எப்படி? மிகப்பல தொழிற்சாலைகளில் பழைய மிருகத்தனங்கள் தண்டிக்கப்படாமலே சீக்கிரமாய் மீண்டும் தழைத்தோங்கின. உள்துறைக் காரியதரிசியுடனான பேட்டியொன்றில் (1844) தொழிற்சாலை ஆய்வாளர்கள் புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்ட அஞ்சல் முறையில் கட்டுப்பாடு எதுவும் சாத்தியமில்லை என்பதைக் காட்டினர்.[317] ஆயினும், இதற்கிடையில் சூழ்நிலைகள் பெரிதும் மாறி விட்டன. ஆலைத் தொழிலாளர்கள், குறிப்பாக 1838க்குப் பின்னர், மக்கள்-சாசனத்தை [Charter]தமது அரசியல், தேர்தல் முழக்கம் ஆக்கிக் கொண்டது போலவே, 10 மணிநேர மசோதா வைத் தமது பொருளாதார முழக்கம் ஆக்கிக் கொண்டனர். தொழி லதிபர்களிலேயே சிலர் — தமது தொழிற்சாலைகளை 1833ஆம் வருடத்திய சட்டத்துக்கேற்ப நிர்வகித்தவர்கள் — அதிகத் துணிச்சல் காரணமாகவோ அதிர்ஷ்டவசமான வட்டார நிலைமைகள் காரண மாகவோ சட்டத்தை மீற முடிந்த தமது போலிச் சோதரர்களின் நெறிகெட்ட போட்டி பற்றிய முறையீடுகளை சமர்ப்பித்து பாராளு மன்றத்தைத் திக்குமுக்காட வைத்தனர். மேலும், வழக்கமான இலாபப் பேராசை தனிப்பட்ட தொழிலதிபரை எவ்வளவுதான் ஆட்டிப் படைத்ததென்றாலும், தொழிலதிபர் வர்க்கத்தின் சொல் விளம்பிகளும் அரசியல் தலைவர்களும் தொழிலாளர்கள் தொடர் பான அணுகு முறையையும், பேச்சு முறையையும் மாற்ற வேண்டு மென ஆணையிட்டனர். தானியச் சட்டங்களை ரத்துச் செய்வதற் கான போராட்டத்தை அவர்கள் தொடுத்திருந்தனர்; இதில் வெற்றி பெற தொழிலாளர்களின் உதவி அவர்களுக்குத் தேவைப்பட்டது. எனவே, அவர்கள் தடையிலா வாணிபப் பொற்காலத்தில் இரு மடங்கு பெரிய ரொட்டித் துண்டு தருவதோடு கூட, 10 மணி நேர மசோதாவையும் சட்டமாக்குவோமென்று வாக்களித்தனர்.[318] ஆகவே, அவர்கள் 1833ஆம் வருடச் சட்டத்தை நடைமுறையாக்கு வதை மட்டுமே நோக்கமாகக் கொண்ட ஒரு நடவடிக்கையை எதிர்க்கத் துணியவில்லை. டோரிகள் அவர்களது அதிபுனித நலனா கிய நிலவாரத்துக்கு ஆபத்து வரவே, அவர்களது பகையாளர் களின் ''இழி செயல்களுக்கு''[319] எதிராகப் பரோபகார ஆவேசத் துடன் இடிமுழக்கம் செய்தனர்.

---

317 ''தொழிற்சாலை ஆய்வாளர் அறிக்கை''. 1849 அக்டோபர் 31, பக்கம் 6.

318 ''தொழிற்சாலை ஆய்வாளர் அறிக்கை,'' 1848 அக்டோபர் 31, பக்கம் 98.

319 லியோனார்டு ஹார்னர் தன் அதிகார பூர்வ அறிகையில் ''இழி செயல்கள்'' என்ற பதத்தைப் பயன்படுத்துகிறார். (''தொழிற்சாலை ஆய்வாளர் அறிக்கை,'' 1859 அக்டோபர் 31, பக்கம் 7.)

இவ்வாறே பிறந்தது கூடுதலான 1844 ஜூன் 7 தேதிய தொழிற்சாலைச் சட்டம். அது 1844 செப்டம்பர் 10 ஆம் நாள் அமலுக்கு வந்தது. தொழிலாளர்களின் புதிய வகைக்கு, அதாவது 18 வயதுக்கு மேற்பட்ட பெண்களுக்கு அது பாதுகாப்பளிக்கிறது. அவர்கள் ஒவ்வொரு விதத்திலும் இளம் வயதினருக்குரிய அதே நிலையில் வைக்கப்பட்டனர். அவர்களது வேலை நேரம் பன்னிரண்டு மணி நேரமாக வரம்பிடப்பட்டது. அவர்களுக்கு இரவு நேர உழைப்பு தடை செய்யப்பட்டது. இன்ன பிற வழிவகைகளும் செய்யப்பட்டன. வயதுவந்தோரின் உழைப்பை நேரடியாகவும் அதிகாரபூர்வமாகவும் கட்டுப்படுத்தும் கட்டாயம் முதல் தடவையாக சட்டத்துக்கேற்பட்டது. ''தமது உரிமைகளில் இந்த அளவுக்குக் குறுக்கிடுகிறார்களே என்று வயதுவந்த பெண்கள் வருந்தியதாக எனக்குத் தெரிந்த வரை தகவல் ஏதும் இல்லை''[320] என்று 1844-1845க்கான தொழிற்சாலை அறிக்கை குத்தலாகக் கூறுகிறது. 13 வயதுக்குட்பட்ட குழந்தைகளின் வேலை நேரம் நாளுக்கு 6½ மணிகளாகவும் குறிப்பிட்ட சில நிலைமைகளில் 7 மணிகளாகவும் குறைக்கப்பட்டது.[321]

''போலி அஞ்சல் முறையின்'' கேடுகளிலிருந்து விடுபடுவதற்காக, ஏனைய பல ஒழுங்கு முறைகளோடு கூடப் பின்வரும் முக்கிய ஒழுங்கு முறைகளையும் சட்டம் நிறுவியது: ''குழந்தைகள், இளம் வயதினர் ஆகியோரின் வேலை நேரம் அவர்களில் யாராவது ஒருவர் காலையில் வேலை செய்ய ஆரம்பிக்கிற நேரத்திலிருந்து கணக்கிடப்படும்.'' இதன்படி, உதாரணமாக A என்பவர் காலை 8 மணிக்கும் B என்பவர் 10 மணிக்கும் வேலையை ஆரம்பித்தாலும், Bஇன் வேலை-நாள் Aஇன் வேலை-நாள் முடிகிற அதே நேரத்தில் முடிய வேண்டும். ''நேரம் பொதுக் கடிகாரத்தால் முறைப்படுத்தப்படும்.'' உதாரணமாக மிக அண்மையிலுள்ள இரயில்வே கடிகாரத்தைப் பார்த்து தொழிற்சாலைக் கடிகாரத்தை இசைவுபடுத்த வேண்டும். வேலை ஆரம்பிப்பதற்கும் முடிவதற்குமான நேரங்களையும், வெவ்வேறு சாப்பாட்டு வேளைகளுக்கு அனுமதிக்கப்படும் நேரங்களையும் தெரிவிக்கும் அறிவிப்பைப் ''படிக்கத் தக்க'' வகையில் அச்சிட்டுத் தொங்கவிடுவது உரிமையாளரின் கடமை. நடுப்பகல் 12 மணிக்கு முன்னதாக வேலையை ஆரம்பிக்கிற குழந்தைகள் பிற்பகல் 1 மணிக்குப் பின்னர் மீண்டும் வேலை வாங்கப்படலாகாது. ஆகவே, காலையில் வேலை செய்யாத குழந்தைகளை மட்டுமே பிற்பகல் ஷிஃப்டில் வேலை வாங்க வேண்டும். சாப்பாட்டு நேரங்களாக ஒதுக்கப்பட்ட 1½

[320] தொ.ஆ.அறிக்கை, 1844 செப்டெம்பர் 30, பக்கம் 15.

[321] அடுத்தடுத்த நாட்களில் வேலை செய்யாமல் ஒன்றுவிட்டு ஒரு நாள் வேலை செய்வதானால், குழந்தைகள் 10 மணி நேரம் வேலை வாங்கப்படுவதை இச்சட்டம் அனுமதிக்கிறது. முக்கியமாய் இந்த சரத்து செயலுக்கு வராமல் இருந்தது.

மணியில் ''குறைந்தது ஒரு மணி நேரம் பிற்பகல் மூன்று மணிக்கு முன்னதாகவும்...உண்டிக்குரிய பொழுதிலேயே தரப்பட வேண்டும். குழந்தை அல்லது இளம் வயதினர் எவரையும் பிற்பகல் 1க்கு முன்னதாக, குறைந்தது 30 நிமிட சாப்பாட்டு இடைவேளையின்றி, ஐந்து மணி நேரத்துக்கதிகமாக வேலை வாங்கக் கூடாது. குழந்தை அல்லது இளம் வயதினர் (அல்லது பெண்) எவரும் அந்த நேரத்தில் (அதாவது சாப்பாட்டு நேரங்களில்) பொருளுற்பத்தி நிகழ்முறை ஏதும் நடக்கிற எந்த அறையிலும் வேலை வாங்கப்படுவதோ, அத்தகைய அறையில் இருக்க அனுமதிக்கப்படுவதோ கூடாது....''

இராணுவத்துக்குரிய சீர்முறையுடன், கடிகாரத்தின் மணியடிக் கொப்ப வேலையின் நேரங்களையும், வரம்புகளையும், நிறுத்தங்களையும் ஒழுங்குபடுத்துகிற இந்த நுட்ப விதிகள் எவ்விதத்தும் பாராளுமன்றக் கற்பனையால் விளைந்தவையல்ல. அவை நவீனப் பொருளுற்பத்தி முறையின் இயற்கை விதிகளாய் நிலைமைகளிலிருந்து சிறிது சிறிதாக உருவாயின. அவற்றை அரசு வகுத்ததும், அதிகாரபூர்வமாக அங்கீகரித்ததும், பிரகடனம் செய்ததும் நீண்ட நெடிய வர்க்கப் போராட்டத்தின் விளைவாகும். அவற்றின் முதற் பயன்களில் ஒன்று என்னவெனில், தொழிற்சாலைகளில் வயது வந்த ஆண்களின் வேலை-நாள் நடைமுறையில் அதே வரம்புகளுக் குட்பட்டதாயிற்று; ஏனெனில், பெரும்பாலான உற்பத்தி நிகழ் முறைகளில் குழந்தைகள், இளம் வயதினர், பெண்கள் ஆகியோரின் ஒத்தாசை இன்றியமையாதது. எனவே, மொத்தத்தில் 1844 முதல் 1847 வரையிலான காலத்தில், தொழிற்சாலை சட்டத்தின் படி பொதுவாகவும், சீராகவும் எல்லாத் தொழிற் கிளைகளிலும் 12 மணி நேர வேலை-நாள் அமலாயிற்று.

ஆயினும், தொழிலதிபர்கள் இந்த ''முன்னேற்றத்தை'' அதற்கீடான ''பின்னடைவு'' இல்லாமல் அனுமதிக்கவில்லை. அவர்களது தூண்டுதலின் பேரில், காமன்ஸ் சபை சுரண்டலுக்குரிய குழந்தைகளுக்கான குறைந்த பட்ச வயதை ஒன்பதிலிருந்து எட்டாகக் குறைத்து, ஆலைக் குழந்தைகள் கூடுதலாக வழங்கப்படுதலை உறுதி செய்தது; தெய்விகச் சட்டத்தின் படியும், மானுடச் சட்டத்தின் படியும் முதலாளிகளுக்குக் கிடைப்பதை இவ்விதம் கிடைக்கச் செய்தது.[322]

1846-47 ஆண்டுகள் இங்கிலாந்தின் பொருளாதார வரலாற்றில் சகாப்தகர முக்கியத்துவம் வாய்ந்தவை. தானியச் சட்டங்களும் பஞ்சு முதலான கச்சாப் பொருட்கள் மீதான தீர்வைகளும்

---

[322] ''அவர்களது வேலை நேரம் குறைக்கப்படுவதால் இன்னும் அதிக எண்ணிக்கையினரை (குழந்தைகளை) வேலைக்கமர்த்த வேண்டியிருக்கும் என்பதால் கூடுதலாய் 8 முதல் 9 வயதுடைய குழந்தைகளும் வழங்கப்படுவது அதிகமாகிவிடும் வேண்டலை நிறைவு செய்யுமெனக் கருதப்பட்டது.'' (முன் வந்தது, பக்கம் 13.)

ரத்தாயின. தடையிலா வாணிபம் சட்டமியற்றலின் வழிகாட்டும் தாரகையாக பிரகடனம் செய்யப்பட்டது. சுருங்கச் சொல்லின், பொற்காலம் வந்து விட்டது. மறு புறம், இதே ஆண்டுகளில் சாசன இயக்கமும் [Chartist movement] 10 மணி நேரக் கிளர்ச்சியும் உச்ச நிலையை அடைந்தன. இவை, பழி தீர்த்துக் கொள்ளத் துடித்துக் கொண்டிருந்த டோரிகள் கூட்டாளிகளாக வரக் கண்டன. பொய்ச் சான்று அளித்தவர்களான தடையிலா வாணிபக் கூட்டத்தார் பிரைட், காப்டென் ஆகியோர் தலைமையில் காட்டிய வெறித்தன மான எதிர்ப்பையும் மீறி, பத்து மணி நேர மசோதா பாராளுமன் றத்தில் நிறைவேறியது; இவ்வளவு நீண்ட காலம் நடந்த போராட்டம் இவ்வாறு வெற்றி பெற்றது.

1847 ஜூன் 8 தேதிய புதிய தொழிற்சாலைச் சட்டம், ''இளம் வயதினருக்கும்'' (13 முதல் 18 வயது), எல்லாப் பெண்களுக்கும் வேலை-நாளை 1847 ஜூலை 1ஆம் நாள் பூர்வாங்கமாய் 11 மணி நேரமாகக் குறைக்க வேண்டும் என்றும், 1848 மே 1ஆம் நாள் 10 மணி நேரமாகத் திட்டமான வரம்பிட வேண்டுமெனவும் ஆணை யிட்டது. ஏனையவற்றில் இச்சட்டம் 1833, 1844 ஆகிய வருடங் களின் சட்டங்களைத் திருத்துவதோடும், பூர்த்தி செய்வதோடும் நின்று கொண்டது.

இச்சட்டம் 1848 மே 1 ஆம் நாள் முழு அளவில் அமலுக்கு வராமல் தடங்கல் செய்யும் பொருட்டு மூலதனம் இப்போது ஒரு பூர்வாங்க இயக்கத்தை ஆரம்பித்தது. அனுபவ வாயிலாகப் படிப் பினை பெற்றதாய்ச் சொல்லி, தொழிலாளர்களும் தமது படைப்பை அழிப்பதற்கு தாமே உதவ முன்வருமாறு செய்யத் திட்டமிடப்பட்டது. சாமர்த்தியமான முறையில் தக்க தருணம் தேர்ந் தெடுக்கப்பட்டது. ''அநேக ஆலைகள் குறைநேரம் வேலை செய்த தாலும், இதர பல ஆலைகள் முற்றாக மூடப்பட்டதாலும், ஆலைத் தொழிலாளர்களுக்கு (1846-47 ஆண்டுகளின் பயங்கர நெருக் கடியால்) ஈராண்டுகளுக்கும் அதிகமாகப் பெருந்துன்பம் நேரிட்டுள் ளதையும் நினைவிற் கொள்ள வேண்டும். ஆகவே கணிச எண் ணிக்கையிலான தொழிலாளர்களின் நிலைமை மிகவும் கடுமை யானதாகவே இருக்கும்; பலர் கடன்பட்டிருப்பர் என்றும் அஞ்ச வேண்டியுள்ளது; எனவே, அவர்கள் கடந்த கால இழப்புகளை ஈடு செய்யும் பொருட்டு—கடன்களைத் தீர்க்கும் பொருட்டோ, தட்டு முட்டுக்களை அடமானத்திலிருந்து மீட்கும் பொருட்டோ, விற் கப்பட்டவற்றுக்கு பதில் வேறு பண்டங்கள் வாங்கும் பொருட்டோ, தங்களுக்கும் தங்கள் குடும்பத்தினருக்கும் புதிதாக ஆடைகள் வாங்கும் பொருட்டோ—இச்சமயம் கூடுதல் நேரம் வேலை செய் வதையே விரும்புவர் என்று கொள்வதில் தவறில்லை.''[323]

[323] ''தொழிற்சாலை ஆய்வாளர் அறிக்கை,'' 1848 அக்டோபர் 31, பக்கம் 16.

இந்த நிலைமைகளின் இயற்கையான விளைவை—பொது வாகக் கூலியை 10% குறைப்பதன் மூலம்—மேலும் கடுமையாக்கத் தொழிலதிபர்கள் முயன்றனர். புதிய தடையிலா வாணிபச் சகாப் தத்தின் துவக்கத்தைக் கொண்டாடும் முறையில் இப்படிச் செய்தார்கள் போலும்! வேலை-நாள் 11 மணி நேரமாகச் சுருக்கப்பட்டதுமே, கூலி மேலும் 8⅓ சதவீதம் குறைக்கப்பட்டது; வேலை-நாள் முடி வில் 10 மணி நேரமாகக் குறைக்கப்பட்டதும் கூலி மேற்கூறியதைப் போல் இரு மடங்கு குறைக்கப்பட்டது. ஆகவே, நிலைமைகள் அனு மதித்த இடங்களிலெல்லாம் குறைந்தது 25 சதவீதம் கூலி குறைக்கப்பட்டது.[324] அனுகூலமாய் அமையும் படி வலிந்து உருவாக் கப்பட்ட இத்தகைய நிலைமைகளில், 1847ஆம் வருடச் சட்டத்தை ரத்து செய்வதற்கான கிளர்ச்சி ஆலைத் தொழிலாளர்கள் மத்தி யில் தொடங்கப்பட்டது. இந்த முயற்சியில் புளுகு, லஞ்சம், மிரட்டல் போன்ற எல்லா உபாயங்களும் கையாளப்பட்டன, எதுவும் விட்டு வைக்கப்படவில்லை. ஆனால் எதுவும் பலிக்கவில்லை. "இச் சட்டம் தம்மை ஒடுக்குவதாக" தொழிலாளர்களைப் புகார் செய்ய வைத்தனர். இம்மாதிரியான அரை டஜன் புகார் மனுக்கள் தொடர் பாக, தங்கள் கையொப்பங்கள் கட்டாயப்படுத்தி வாங்கப்பட்டவை என்று மனுதாரர்களே வாய்மொழி விசாரணையில் தெரிவித் தார்கள். "தாங்கள் ஒடுக்கப்படுவதை அவர்கள் உணர்ந்தனர்: ஆனாலும், ஒடுக்கியது தொழிற்சாலைச் சட்டமன்று."[325] தொழி லதிபர்கள் தாம் விரும்பியது போல் தொழிலாளர்களைப் பேச வைப்பதில் வெற்றி பெறவில்லை என்றாலும், அதற்கும் சேர்த்து தாமே தொழிலாளர்களின் பெயரில் பத்திரிகைகளிலும் பாராளு மன்றத்திலும் பலக்கக் கூச்சலிட்டனர். தொழிற்சாலை ஆய்வாளர் களை நிந்தித்தனர்; பிரெஞ்சுத் தேசிய மாமன்றத்தின் ஆணையர் களைப் போன்ற ஒரு விதமான புரட்சிக்கார ஆணையர்கள் என்றும், அவதியுறும் ஆலைத்தொழிலாளர்களைத் தமது மனிதா பிமானப் பித்துக்குக் கண்மூடித்தனமாகப் பலியிடுகிறவர்கள் என்றும் ஏசினர். இந்தத் தந்திரமும் பலிக்கவில்லை. தொழிற்சாலை ஆய்வாளர் லியோனார்டு ஹார்னர் தாமே நேரடியாகவும், தமது

324 "வாரத்துக்கு 10 ஷில்லிங் பெற்று வந்த ஆட்களின் கூலி 10% குறைக்கப் பட்டதால் 1 ஷில்லிங் பறிபோயிற்று, மீதமிருந்த 9 ஷில்லிங்கில் வேலை நேரக் குறைப் பினால் 1 ஷில்லிங் 6 பென்னி பறிபோயிற்று; ஆக மொத்தம் 2 ஷில்லிங் 6 பென்னி குறைக்கப்பட்டது என்பதைக் கண்டேன்; ஆனால் 10 மணி நேரம் வேலை செய்வதையே விரும்புவதாக அவர்களில் பலரும் கூறினர்." முன் வந்தது.

325 " 'நான் (மனுவில்) ஒப்பமிட்டேன் என்ற போதிலும், தவறான ஒன்றுக்கு ஒப்பமளிக்கிறேன் என்று அப்போதே கூறினேன்.' 'அப்படியானால் நீர் ஏன் அதில் ஒப்பமிட்டீர்?' 'ஏனென்றால், நான் மறுத்திருந்தால் வெளியில் தள்ளப்பட்டிருப்பேன்.' இந்த மனுதாரர், தான் 'ஒடுக்கப்பட்டிருப்பதை' உணர்ந்தார் என்பதும் ஒடுக்கியது தொழிற்சாலைச் சட்டமன்று என்பதும் இதிலிருந்து புலப்படும்." முன் வந்தது, பக்கம் 102.

உதவி அய்வாளர்கள் மூலமாகவும், லங்காஷயர் தொழிற்சாலைகளில் சாட்சி விசாரணைகள் பலவற்றை நடத்தினார். விசாரிக்கப்பட்ட தொழிலாளர்களில் சுமார் 70% பேர் 10 மணி நேரத்துக்கு ஆதரவாகவும், மிகக் குறைந்த சதவீதத்தினர் 11 மணி நேரத்துக்கு ஆதரவாகவும், அற்பச் சிறுபான்மையினர் பழைய 12 மணி நேரத்துக்கு ஆதரவாகவும் கருத்து தெரிவித்தனர்.[326]

வயதுவந்த ஆண்களை 12 முதல் 15 மணி நேரம் வேலை வாங்குவதும், பின் இந்த விவரத்தை பாட்டாளி வர்க்கத்தின் அந்தரங்க விருப்பம் என்ன என்பதற்கான மிகச் சிறந்த நிரூபணமென்று பட்டிதொட்டியெல்லாம் பறைசாற்றுவதும் இன்னொரு ''சினேகம் வாய்ந்த'' மோசடி. ''கண்மூடித்தனமான'' தொழிற்சாலை ஆய்வாளர் லியோனார்டு ஹார்னரின் குரல் மீண்டும் ஒலித்தது. ''மிகை நேரத்தினரில்'' பெரும்பாலார் கூறினர்: ''முன்னிலும் குறைந்த கூலிக்கு 10 மணி நேர வேலை செய்வதையே அவர்கள் விரும்புவர்; ஆனால் அவர்களுக்கு வேறு வழியில்லை. ஏராளமானோர் வேலையில்லாதிருந்தனர் (ஏராளமான நூற்புத் தொழிலாளர்கள் வேறு வழியின்றி பலன்வீதக் கூலிக்காரர்களாக வேலை செய்ய வேண்டியிருந்ததால், மிகக் குறைந்த கூலி பெற்று வந்தனர்). கூடுதல் நேரத்துக்கு அவர்கள் வேலை செய்ய மறுத்தால், உடனடியாக அவர்களது இடம் மற்றவர்களால் கைப்பற்றப்படும்; எனவே, அதிக நேரத்துக்கு வேலை செய்ய ஒப்புக் கொள்வதா, அல்லது வேலையையே இழந்து விடுவதா என்பதே அவர்களது பிரச்சினை.''[327]

இவ்வாறு மூலதனத்தின் பூர்வாங்க இயக்கம் மண்ணைக் கவ்வியது. பத்து மணி நேரச் சட்டம் 1848 மே 1இல் அமலுக்கு வந்தது. ஆனால், இதற்கிடையில் சாசனக் கட்சியின் தலைவர்கள் சிறைபிடிக்கப்பட்டு, அதன் ஸ்தாபனம் சின்னாபின்னப்பட்டு, அக்கட்சி தோல்வியடைந்தது. ஆங்கிலேயத் தொழிலாளி வர்க்கம் தன் சொந்த பலம் குறித்து கொண்டிருந்த நம்பிக்கை இதனால் ஆட்டங்கண்டது. இதன் பின் சீக்கிரமே பாரிசில் நடந்த ஜூன் எழுச்சியும், இரத்த வெள்ளத்தில் அது மூழ்கடிக்கப்பட்ட நிகழ்ச்சியும் கண்டத்தில் போலவே இங்கிலாந்திலும் ஆளும் வர்க்கங்களின் எல்லாப் பகுதியினரையும்—நிலப்பிரபுகளையும் முதலாளி

---

[326] பக்கம் 17, முன் வந்தது. திரு ஹார்னரின் வட்டத்தில் வயதுவந்த 10,270 ஆண் தொழிலாளர்கள் இவ்வாறு 181 தொழிற்சாலைகளில் விசாரிக்கப்பட்டனர். அவர்களது சாட்சியத்தை 1848 அக்டோபரில் முடிகின்ற அரையாண்டுக்குரிய தொழிற்சாலை அறிக்கைகளுக்கான பிற்சேர்க்கையில் காணலாம். இந்த விசாரணைகள் ஏனைய பிரச்சினைகள் தொடர்பாகவும் மதிப்புமிக்க ஆதாரங்களை வழங்குகின்றன.

[327] முன் வந்தது. லியோனார்டு ஹார்னரே திரட்டிய சாட்சியம் எண்கள் 69, 70, 71, 72, 92, 93 ஆகியவற்றையும் உதவி ஆய்வாளர் A திரட்டிய சாட்சியம் (பிற்சேர்க்கை) எண்கள் 51, 52, 58, 59, 62, 70 ஆகியவற்றையும் பார்க்கவும். தொழிலதிபராய் உள்ள ஒருவரும் வெளிப்படையாக உண்மையைச் சொல்கிறார். பார்க்கவும்: எண் 14, எண் 265, முன் வந்தது.

களையும், பங்குச் சந்தை ஓநாய்களையும் கடைக்காரர்களையும், காப்புக் கொள்கையினரையும் தடையிலா வாணிபக் கொள்கை யினரையும், அரசினரையும் எதிர்தரப்பினரையும், பாதிரிமார் களையும் சுதந்தரச் சிந்தனையாளர்களையும், இளம் வேசிகளையும் வயதான மாடக்கன்னிகளையும்—சொத்து, மதம், குடும்பம், சமு தாயம் ஆகியவற்றைப் பாதுகாப்போம் என்ற பொதுக் கூப்பாட்டில் ஒன்றுசேரச் செய்தது. தொழிலாளி வர்க்கம் எங்கும் சாபமிட்டு ஒதுக்கப்பட்டது, தடைக்குள்ளாக்கப்பட்டது, சந்தேகிக்கத் தக்கவர் தொடர்பானது என்று கருதத் தக்க சட்டத்துக்கு உட்படுத்தப்பட்டது. தொழிலதிபர்கள் முன்போல் தம்மைக் கட்டுப்படுத்திக் கொள்ள வேண்டியிருக்கவில்லை. பத்து மணி நேரச் சட்டத்துக்கெதிராக மட்டுமின்றி, 1833 முதல் உழைப்புச் சக்தியைச் சுரண்டும் "சுதந்தரத்தை" ஓரளவு கட்டுப்படுத்தும் நோக்கமுடைய சட்டநெறி முழுவதற்குமெதிராக அவர்கள் வெளிப்படையாகவே கலகம் தொடங்கினர். அது அடிமைத்தனத்துக்கு ஆதரவாக எழுந்த குட்டிக் கலகம். தனது தொழிலாளர்களின் தோலைத் தவிர வேறெதையும் கலக முதலாளி பணயம் வைக்கவில்லை என்பதால் அந்த அளவுக்கு மலிவான குருட்டு வெறியுடனும், பயங்கரவாத மூர்க்கத்துடனும் ஈராண்டுக்குமதிகமாய் அந்தக் கலகத்தை நடத்தினர்.

பின்வருவதைப் புரிந்து கொள்ள வேண்டுமானால், 1833, 1844, 1847 ஆகிய ஆண்டுகளின் தொழிற்சாலைச் சட்டங்கள் மூன்றுமே, ஒன்றுக்கொன்று திருத்தம் கொண்டு வராத அளவுக்கு அமலில் இருந்தன என்பதையும், இவற்றில் எதுவுமே 18 வயதுக்கு மேற்பட்ட ஆண் தொழிலாளியின் வேலை-நாளுக்கு வரம்பிட வில்லை என்பதையும், சட்டபூர்வ "நாள்" என்பது காலை 5.30 முதல் இரவு 8.30 வரையிலான 15 மணி நேரம் என்பதாகவே இருந்து வந்தது என்பதையும், அந்த நாளின் வரம்புகளுக்குள் இளம் வயதினரும் மாதர்களும் முதலில் 12 மணி நேரமும், பின்னர் 10 மணி நேரமும் குறிப்பிட்ட நிலைமைகளில் உழைக்க வேண்டும் என்பதையும் நினைவிற் கொள்வது அவசியம்.

தாங்கள் வேலைக்கு அமர்த்தி வந்த இளம் வயதினர் மற்றும் மாதர்களில் ஒரு பகுதியினரை—பல சந்தர்ப்பங்களில் சரிபாதியினரை—விலக்கியும், பின்னர் வயதுவந்த ஆண்களுக்கு, கிட்டத்தட்ட வழக்கொழிந்து போயிருந்த இரவு வேலையைத் திரும்பக் கொணர்ந்தும் தொழிலதிபர்கள் அநேக இடங்களில் தமது நடவடிக்கையை ஆரம்பித்தனர். 10 மணி நேரச் சட்டம் வேறெந்த மாற்று வழியையும் விட்டு வைக்கவில்லை என்று அவர்கள் கூக்குரலிட்டனர்.[328]

---

328 தொ. ஆ. அறிக்கைகள், 1848 அக்டோபர் 31க்கானவை, பக்கம் 133, 134.

அவர்களது இரண்டாவது நடவடிக்கை உணவுக்கான சட்டபூர்வ இடைவேளைகள் தொடர்பானது. தொழிற்சாலை ஆய்வாளர்கள் சொல்வதைக் கேட்போம்; "வேலை நேரம் 10 மணி நேரமாக வரம்பிடப்பட்ட பின்னர், வேலை நேரம் காலை 9 முதல் இரவு 7 வரை என்று வைத்துக் கொண்டால் (சாப்பாட்டுக்கு) காலை 9க்கு முன்னர் ஒரு மணி நேரமும் இரவு 7க்குப் பின்னர் அரை மணி நேரமும் விடுவது—நடைமுறையில் இன்னமும் அந்த அளவுக்கு சென்று விடவில்லையென்றாலும்—சட்ட நிபந்தனை களைப் பூர்த்தி செய்யப் போதுமானதென்று தொழிற்சாலை உரிமையாளர்கள் வாதிடுகின்றனர். சில இடங்களில் அவர்கள் இப்போது மதிய உணவிற்கு 1 மணியோ ½ மணியோ விடுகின் றனர்; அதே நேரத்தில், இந்த ஒன்றரை மணியின் எந்தப் பகுதி யையும் தொழிற்சாலை வேலை-நாளின் போது விட வேண்டிய கட்டாயம் தங்களுக்கில்லை என்று வலியுறுத்துகின்றனர்."[329] எனவே, 1844ஆம் வருடச் சட்டத்தில் உணவு நேரம் தொடர்பாகக் கறாராய் வலியுறுத்தப்படும் கண்டிப்பு வாய்ந்த நிபந்தனைகள் தொழிற்சாலைக்கு வருமுன்னரும், தொழிற்சாலையை விட்டுச் சென்ற பின்னரும்—அதாவது வீட்டிலேயே—உண்பதற்கும் பருகு வதற்கும்தான் தொழிலாளர்களை அனுமதிக்கின்றன என்பதே தொழிலதிபர்களின் வாதம். இந்தத் தொழிலாளர்கள் மதிய உணவைக் காலை 9 மணிக்கு முன்னதாகவே சாப்பிடக் கூடாதா? ஆனபோதிலும், குறிப்பிட்ட சாப்பாட்டு நேரம் "வேலை நேரத்தின் இடைவேளையில் இருக்க வேண்டும் என்றும், இடைவேளை ஏதுமின்றிக் காலை 9 முதல் இரவு 7 வரைத் தொடர்ச்சியாக 10 மணி நேரம் வேலை செய்வது சட்டபூர்வமாகாது என்றும்"[330] முடியரசின் சட்ட அறிஞர்கள் முடிவு செய்தனர்.

இந்த இனிய நடவடிக்கைகளுக்குப் பின்னர், மூலதனம் ஒரு நடவடிக்கையின் மூலம் தன் கலகத்தை மெய்யாகவே தொடங்கிற்று; 1844ஆம் வருடச் சட்டத்தின் வாசகத்துக்கிசைவாக—ஆதலால் சட்டபூர்வமாக—அந்நடவடிக்கையை மேற்கொண்டது.

1844ஆம் வருடச் சட்டம் நடுப்பகலுக்கு முன்னர் வேலை வாங்கப்பட்ட 8 முதல் 13 வயதுடைய குழந்தைகளைப் பிற்பகல் 1க்குப் பின்னர் வேலை வாங்குவதை தடை செய்வது மெய்தான். ஆனால் வேலை நேரத்தை நடுப்பகல் 12க்கோ அல்லது அதற் குப் பின்னரோ தொடங்கிய குழந்தைகளின் 6½ மணி நேர வேலையை அது சிறிதும் ஒழுங்குபடுத்தவில்லை. 8 வயதுக் குழந்தை கள் நடுப்பகல் நேரத்தில் வேலையைத் தொடங்கினால், 12 முதல் 1 வரை 1 மணி நேரமும், பிற்பகலில் 2 முதல் 4 வரை 2 மணி

---

[329] தொ. ஆ. அறிக்கைகள், 1848 ஏப்ரல் 30க்கானவை, பக்கம் 47.

[330] தொ. ஆ. அறிக்கைகள், 1848 அக்டோபர் 31க்கானவை பக்கம் 130.

நேரமும், மாலையில் 5 முதல் 8.30 வரை 3½ மணி நேரமும், ஆக மொத்தத்தில் சட்டப்படியான 6½ மணி நேரம் வேலை வாங்கப்படலாம். அல்லது, இன்னும் சாமர்த்தியமாக, அவர்களது வேலையை வயது வந்த ஆண் தொழிலாளர்களின் வேலையுடன் இரவு 8.30 வரை ஏககாலத்தியதாய் ஆக்கும் பொருட்டு, ஆலை யதிபர்கள் பிற்பகல் 2 மணி வரை வேலை கொடுக்காமலே இருந்து விட்டு, பிறகு இடைவேளையில்லாமல் 8.30 வரை அவர்களை வேலை வாங்கலாம். "தங்கள் இயந்திரங்களை நாளுக்கு 10 மணி நேரத்துக்கும் அதிகமாக வேலை வாங்குவதற்கும், எல்லா இளம் வயதினரும் மாதர்களும் போன பிறகும் குழந்தைகளை வயது வந்த ஆண்களின் பாதுகாப்பில் வைத்து தாங்கள் விரும்பினால் இரவு 8.30 வரை வேலை வாங்குவதற்குமான ஆலையுரிமை யாளர்களின் ஆசையினாலேயே இப்பழக்கம் இங்கிலாந்தில் நிலவு கிறது என்று இப்போது வெளிப்படையாகவே ஒப்புக் கொள்ளப் படுகிறது."[331] தொழிலாளர்களும் தொழிற்சாலை ஆய்வாளர் களும் ஆரோக்கிய முறைகளையும், அறநெறிகளையும் காரணமாய்க் காட்டி ஆட்சேபித்தனர்; ஆனால் மூலதனம் விடை பகர்ந்தது:

"என் செயல்களின் பலன் என் தலையிலே!
சட்டத்தை இறைஞ்சுகிறேன்,
பத்திரப்படியான பறிமுதலும் தண்டமும் வேண்டுமென!"

உண்மையில், 1850 ஜூலை 26ஆம் நாள் காமன்ஸ் சபையில் சமர்ப்பிக்கப்பட்ட புள்ளி விவரங்களின் படி, சகல எதிர்ப்பையும் மீறி 1850 ஜூலை 15 அன்றைய நிலையில் 3,742 குழந்தைகள் 257 தொழிற்சாலைகளில் இந்த "நடைமுறைக்கு" உட்படுத்தப் பட்டிருந்தனர்.[332] இதுவும் போதவில்லை. 1844ஆம் வருடத்திய சட்டம் சிற்றுண்டிக்காக குறைந்தது 30 நிமிட ஓய்வு விடாமல் நடுப்பகலுக்கு முன்னர் 5 மணி நேர வேலையை அனுமதிக்க வில்லை என்றாலும், நடுப்பகலுக்குப் பின்னர் செய்யும் வேலைக்கு அப்படி ஒரு நியமமும் விதிக்கவில்லை என்பதை மூலதனத்தின் கழுகுக் கண் கண்டு கொண்டது. எனவே, 8 வயதுடைய குழந்தை களைப் பிற்பகல் 2 முதல் 8.30 வரை இடைவேளையில்லாமல் பாடுபடச் செய்து மகிழ்வதற்கு மட்டுமல்லாமல், அந்த நேரத்தில் அவர்களைப் பட்டினி போட்டு மகிழ்வதற்கும் உரிமை கோரி, உரிமை பெறவும் செய்தது.

"ஆம், அவனது மார்புச் சதைதான்,
பத்திரம் கேட்பது அதைத்தான்."[333]

---

331 தொ. ஆ. அறிக்கைகள், முன் வந்தது, பக்கம் 142.

332 தொ. ஆ. அறிக்கைகள், 1850 அக்டோபர் 31க்கானவை. பக்கம் 5,6.

333 மூலதனத்தின் இயல்பு அதன் வளர்ச்சியடையாத வடிவத்தில் போலவே வளர்ச்சியடைந்த வடிவத்திலும் அப்படியே நீடிக்கிறது. அமெரிக்க உள்நாட்டு யுத்தம்

1844ஆம் வருடச் சட்டம் குழந்தைகளின் உழைப்பை ஒழுங்கு படுத்திய அளவில் அதன் வாசகத்தை இப்படி ஷைலாக் பாணியில் இறுகப் பிடித்துக் கொண்டதானது, அதே சட்டம் ''இளம் வயதினர் மற்றும் மாதர்களின்'' உழைப்பை ஒழுங்குபடுத்திய அளவில் அதற்கெதிராய் வெளிப்படையாகக் கலகம் புரிவதற்கான முதற் படிதான். ''போலி அஞ்சல் முறையை'' ஒழிப்பது அச்சட்டத்தின் தலையாய நோக்கமும் குறிக்கோளும் ஆகும் என்பது நினைவிருக்க லாம். முதலாளி தன் வசதிக்கேற்ப 15 மணி நேர நாளின் சிறு துண்டுப் பகுதிகளில் இளம் வயதினரையும் மாதர்களையும் விருப்பம் போல் பயன்படுத்திக் கொள்வதைத் தடை செய்த 1844ஆம் வருடச் சட்டத்தின் பிரிவுகள், வேலை நேரம் 12 மணி நேரமாக நிர்ணயிக்கப்பட்டிருக்கும் வரை, ''ஒப்பளவில் கெடுதி யற்றவை'' என்று கூறி எஜமானர்கள் கலகம் செய்தனர். ஆனால் 10 மணி நேரச் சட்டத்தில் அவை ''கடுமையான இன்னலாகி''[334] விட்டன. ஆய்வாளர்கள் சட்டத்தின் வாசகத்துக்கு மேம்பட்டவர் களாக நடக்க வேண்டுமென்றும், அவர்களது சொந்தப் பொறுப் பில் பழைய ஏற்பாட்டையே மீண்டும் கொண்டுவர வேண்டு மென்றும் அவர்கள் சிறிதும் பதட்டப்படாமல் கூறினர்.[335] ஆலோசனையற்ற தொழிலாளர்களின் நலன்களை முன்னிட்டே, ''அவர்களுக்கு அதிகக் கூலி கொடுக்க முடியும் பொருட்டே'' அவர்கள் இப்படிச் செய்தனராம். ''மகா பிரிட்டனின் தொழில் துறை முதன்மையை 10 மணி நேரச் சட்டம் அமலிலுள்ள போதும் பாதுகாப்பதற்குச் சாத்தியமான ஒரே திட்டம் இதுதான்.'' ''அஞ்சல் முறையில் முறைகேடுகளைக் கண்டுபிடிப்பது சிறிது சிரமமாய் இருக்கலாம்; அதனால் என்ன? தொழிற்சாலைகளின் ஆய்வாளர்களுக்கும் துணை ஆய்வாளர்களுக்கும் கொஞ்சம் தொல்லை ஏற்படுவதைத் தவிர்க்கும் பொருட்டு இந்த நாட்டின்

---

வெடித்தெழுவதற்குச் சற்று முன்னதாக, அடிமையுடைமையாளர்களின் செல்வாக் கினால் நியூ மெக்சிக்கோ பிரதேசத்தில் அமலாக்கப்பட்ட சட்டத்தில், உழைப்பாளியின் உழைப்புச் சக்தியை முதலாளி வாங்கியிருப்பதால், அவ்வுழைப்பாளி ''அவரது (முதலாளியின்) பணமாவார்'' என்று கூறப்பட்டுள்ளது. இதே கருத்து ரோமானிய மேற்குடியினர் மத்தியில் நிலவியது. கீழ்க்குடியைச் சேர்ந்த அவர்கள் கடனாளிக்கு அளித்த பணம் வாழ்வுச் சாதனங்களின் வழியாகக் கடனாளியின் சதையும் இரத்தமுமாக மாறி விடுகிறதாம். எனவே, இந்தச் ''சதையும் இரத்தமும்'' ''அவர்களது பணமாம்.'' இதன் விளைவே பத்துப் பட்டிகைகள் என்ற ஷைலாக் பாணியிலான ரோமானியச் சட்டங்கள். கடன் கொடுத்த மேற்குடியினர் அடிக்கடி தைபர் நதிக்கப்பால் கடனாளி களின் சதையைக் கொண்டு அவ்வப்போது விருந்து தயாரித்தனர் என்று லிங்கே கூறும் கருத்து, கிறிஸ்துவின் இராப்போசனம் பற்றி டாமர் கூறும் கருத்தைப் போல் சந்தேகத்துக்குரியதாகவே இருக்கும்.

334 தொ. ஆ. அறிக்கைகள், 1848 ஏப்ரல் 30க்கானவை, பக்கம் 28.

335 ஏனைய பலரோடு கூட பரோபகாரி ஆஷ்வொர்த்தும் இதைச் சொல்கிறார், — லியோனார்டு ஹார்னருக்கு எழுதிய அருவருப்பான குவேக்கர் கடிதத்தில். (தொ. ஆ. அறிக்கைகள், 1849 ஏப்ரல், பக்கம் 4.)

மாபெரும் ஆலைத் தொழில் நலனை இரண்டாம் பட்சத்துக்குரிய ஒன்றாகத் தாழ்த்த வேண்டுமா?''[336]

இயல்பாகவே இந்த உபாயங்களெல்லாம் பலிக்காமற் போயின. தொழிற்சாலை ஆய்வாளர்கள் நீதி மன்றங்களிடம் முறையீடு செய்தனர். ஆனால், உள்துறைச் செயலாளர் சர் ஜார்ஜ் கிரே அசந்து விடும் படி தொழிலதிபர்களிடமிருந்து சரமாரியாக விண்ணப்பங்கள் வந்து குவிந்தன; 1848 ஆகஸ்டு 5 தேதியில் உள்துறைச் செயலர் தொழிற்சாலை ஆய்வாளர்களுக்கு அனுப்பிய சுற்றறிக்கையில், ''சட்டத்தின் வாசகத்தை மீறியதற்காக அல்லது—இளம் வயதினர் சட்டத்தால் அனுமதிக்கப்பட்டதை விட அதிக காலத்துக்கு மெய்யாகவே வேலை வாங்கப்பட்டிருப்பதாக நம்பு வதற்கு காரணமேதுமில்லாத சந்தர்ப்பங்களில்—இளம் வயதினரை அஞ்சல் முறையில் வேலை வாங்கியதாக, ஆலை அதிபர்களுக்கெதி ராகத் தகவல் அளிக்க'' வேண்டாமென்று பரிந்துரை செய்தார். இதன் பேரில், தொழிற்சாலை ஆய்வாளர் ஜே. ஸ்டுவர்ட் 15 மணி நேரத் தொழிற்சாலை வேலை-நாளில் அஞ்சல் முறை எனப்பட்டதை ஸ்காட்லாந்து முழுவதிலும் அனுமதித்தார்; அங்கு அது சீக்கிரமே பழைய முறையில் மீண்டும் செழித்து வளர்ந்தது. மறு புறம், ஆங்கிலேயத் தொழிற்சாலை ஆய்வாளர்கள், சட்டத்தின் செயற்பாட்டை சர்வாதிகாரப் போக்கில் நிறுத்தி வைப்பதற்கு உள்துறைச் செயலருக்கு எவ்வித அதிகாரமும் கிடையாது என்று அறிவித்து, அடிமைத்தன ஆதரவுக் கலகத்தை எதிர்த்து சட்டப் படியான தமது வழக்கு நடவடிக்கைகளைத் தொடர்ந்தனர்.

ஆனால், நீதிமன்றங்கள், அதாவது மாவட்ட மாஜிஸ்திரேட்டு கள்—''ஊதியம் பெறாத கனதனவான்கள்'' என்று காபெட் குறிப்பிட்ட இவர்கள்—முதலாளிகளை நிரபராதிகளென்று தீர்ப்புக் கூறுகையில் அவர்களை நீதிமன்றத்துக்கு வருமாறு அழைத்து ஆணை அனுப்புவதால் என்ன பயன்? இந்த நியாய சபையில் தொழிலதிபர்கள் தங்களுக்குத் தாங்களே நீதிபதிகளாயினர். ஓர் உதாரணம்: கெர்ஷா, லீஸ் & கம்பெனி பங்காளர்களில் ஒரு வரான பஞ்சு நூற்பதிபர் எஸ்க்ரீஜ் என்பவர் தமது வட்டத்திற்கான தொழிற்சாலை ஆய்வாளரின் முன்னர், தமது ஆலைக்கென ஓர் அஞ்சல் முறைத் திட்டத்தைச் சமர்ப்பித்தார். இத்திட்டம் ஏற்கப்பட வில்லை என்றதும், அவர் முதலில் சும்மா இருந்தார். ராபின்சன் என்ற பெயருடைய ஒருவர்—இவரும் பஞ்சு நூற்பதிபரே, எஸ்க்ரீஜின் கையாளோ என்னவோ, எப்படியும் அவரது உற வினரே—எஸ்க்ரீஜ் கண்டுபிடித்த அஞ்சல் திட்டத்தையொத்த ஒரு திட்டத்தைப் புகுத்திய குற்றச்சாட்டின் பேரில், ஸ்டாக்போர்ட் நகராட்சி மாஜிஸ்திரேட்டுகளின் முன்னர் ஆஜரானார். நீதிபதிகள்

---

336 முன் வந்தது, பக்கம் 140.

நால்வர்; அவர்களில் மூவர் பஞ்சு நூற்பதிபர்கள்; அவர்களுக்குத் தலைவராக அதே தவிர்க்கவியலா எஸ்க்ரீஜ். ராபின்சனை நிரப ராதியென்று விடுவித்தார் எஸ்க்ரீஜ். இப்போது அவர் ராபின் சனுக்கு நியாயமானது தனக்கும் நியாயமானதே எனக் கொண்டார். சட்ட வழக்கில் தாம் அளித்த தீர்ப்பையே ஆதாரமாய்க் கொண்டு தமது தொழிற்சாலையிலும் அதே ஏற்பாட்டை உடனே புகுத் தினார்.[337] இந்த நியாய சபையின் அமைப்பே சட்டத்துக்குப் புறம் பானதுதான்.[338] நீதி சம்பந்தமான இந்தக் கேலிக் கூத்துகள் "அவசரமாகப் பரிகாரம் கோருகின்றன" என்று ஆய்வாளர் ஹோர வெல் குரல் கொடுக்கிறார். "இந்தத் தீர்ப்புகளுக்கு இசைவான தாக்கப்படும் விதத்தில் சட்டம் மாற்றியமைக்கப்பட வேண்டும். இல்லையேல் இந்த வழக்குகள் கொண்டு வரப்படும் போது சட்டத் துக்கிசைவான முடிவுகளை எடுக்கக் கூடிய விதத்தில் அதிகம் தவறிழைக்காத நியாய சபையோரால் சட்டம் செயல்படுத்தப்பட வேண்டும். சம்பளம் பெறுகிற மாஜிஸ்திரேட் வேண்டுமெனவும் ஆசைப்படுகிறேன்"[339] என்று சொல்கிறார்.

1848ஆம் வருடச் சட்டம் குறித்து தொழிலதிபர்களின் வியாக்கி யானம் அபத்தமானதென்று முடியரசின் சட்ட நிபுணர்கள் அறிவித் தனர். ஆனால், சமுதாய இரட்சகர்கள் தமது நோக்கத்தைக் கைவிடு பவர்களல்லர். லியோனார்டு ஹார்னர் அறிக்கை தருகிறார்: "இச் சட்டத்தை ஏற்கும்படி செய்யத் தொடர்ந்து முயன்று...ஏழு மாஜிஸ் திரேட் கோட்டங்களில் 10 வழக்குகள் தொடுத்தேன். ஒன்றே ஒன்றில் மட்டும்தான் மாஜிஸ்திரேட்டுகளின் ஆதரவைப் பெற் றேன்....இந்நிலையில் இச்சட்டம் தட்டிக்கழிக்கப்படுவதை எதிர்த்து மேலும் வழக்குப் போடுவது பயனற்றதெனக் கருதினேன். ஆக, 1848ஆம் வருடச் சட்டத்தில் ஒரேசீரான வேலை நேரத்தை ஏற் படுத்துவதற்காக வகுக்கப்பட்ட பகுதி என் வட்டத்தில் (லங்காஷயர்) இப்போது அமலில் இல்லை. ஷிஃப்டுகள் மூலம் வேலை செய்கிற ஆலையை பார்வையிடும் போது, இளம் வயதினரும் மாதர்களும் நாளுக்கு 10 மணி நேரத்துக்கதிகமான வேலை செய்யவில்லை என்று உறுதி செய்து கொள்வதற்கு உதவி ஆய்வாளர்களுக்கோ எனக்கோ ஒரு வழியுமில்லை. ஏப்ரல் 30 தேதிய விவர அறிக்கை யின் படி—ஷிஃப்டு முறையில் வேலை வாங்கும் ஆலையதிபர்

[337] தொ. ஆ. அறிக்கைகள், 1849 ஏப்ரல் 30க்கானவை, பக்கம் 21,22. இது போன்ற உதாரணங்களுக்குப் பார்க்கவும்: மேலது, பக்கம் 4,5.

[338] சர் ஜான் ஹாப்ஹவுஸின் தொழிற்சாலைச் சட்டம் எனப்பட்ட நான்காம் வில்லியம் மன்னரின் சட்டம் I, மற்றும் II, அத்தியாயம் 24, பிரிவு 10இன்படி, தொழிற்சாலைச் சட்டம் சம்பந்தமான எந்த விசாரணைகளிலும் பஞ்சு நூற்பு அல்லது நெசவு ஆலையின் உரிமையாளரோ அல்லது உரிமையாளரின் தந்தையோ, புதல் வரோ, சகோதரரோ நீதிபதியாக செயல்படக்கூடாது.

[339] முன் வந்தது.

களின் மொத்த எண்ணிக்கை 114; சிறிது காலமாக இது துரிதமாய் அதிகரித்து வருகிறது. பொதுவாக, ஆலையில் வேலை நடக்கும் நேரம் காலை 6 முதல் இரவு 7½ வரை 13½ மணி நேரமாக நீட்டிக்கப்படுகிறது; சில இடங்களில் இது காலை 5½ முதல் இரவு 8½ வரை 15 மணி நேரம் ஆகிறது''[340] ஏற்கெனவே, 1848 டிசம்பரிலேயே, எந்தக் கண்காணிப்பு ஏற்பாடும் பெருமளவிலான மிகை வேலையை இந்த அஞ்சல் முறையில் தடுத்துவிட முடியாது என்று ஒருமனதாக அறிவித்த 65 ஆலை அதிபர்கள் மற்றும் 29 மேற்பார்வையாளர்களின் பட்டியல் ஒன்றை லியோனார்டு ஹார்னர் வைத்திருந்தார்.[341] இப்போது அதே குழந்தைகளும் இளம் வயதினரும் 15 மணி நேரத்தில் நூற்பறையிலிருந்து நெசவறைக்கு, ஒரு தொழிற்சாலையிலிருந்து இன்னொரு தொழிற்சாலைக்கு மாற்றப் பட்டனர்.[342] ''ஒரே நேரத்தில் ஒரே அறையில் ஒன்றாக வேலை செய்கிற ஆட்களின் ஒரு முழுத் தொகுதி உங்களுக்கு ஒருபோதும் கிடைக்காமற் போகக் கூடிய விதத்தில், அஞ்சல் முறையென்ற போர்வையில் முடிவற்ற வகையில் ஆட்களை இங்குமங்குமாகக் கலக்குவதற்கும், நாள் முழுவதும் வெவ்வேறு ஆட்களுக்கான வேலை நேரத்தையும் ஓய்வு நேரத்தையும் மாற்றுவதற்குமான பல திட்டங்களில் ஒன்றாக இருக்கிற''[343] ஓர் ஏற்பாட்டைக் கட்டுப் படுத்துவது எப்படிச் சாத்தியம்?

ஆனால், நடைமுறையிலான மிகை வேலையை ஒதுக்கி விட்டுப் பார்த்தாலும், அஞ்சல் முறை என்று சொல்லப்படும் இந்த ஏற்பாடு முதலாளித்துவக் கற்பனா வினோதம் பெற்றெடுத்த குழந்தையாகும். ஃபூரியேயும் கூட ''Courtes Seances''* என்பதான அவரது நகைச் சுவைக் குறிப்புகளில் இந்தக் கற்பனா வினோதத்தை விஞ்சினா ரில்லை—''உழைப்பின் கவர்ச்சி'' இங்கே மூலதனத்தின் கவர்ச்சி யாக மாற்றப்பட்டது தவிர. உதாரணமாய், ''நியாயமான தரமுள்ள கவனிப்பும் வழிமுறையும் எதைச் சாதிக்க முடியும்'' என்பதன் முன்மாதிரிகளென்று ''உயர் மதிப்புக்குரிய'' பத்திரிகைகள் புகழ்ந் துரைத்த தொழிலதிபர்களின் அந்தத் திட்டங்களைப் பாருங்கள். சில நேரங்களில் தொழிலாளர் தொகுதி 12 முதல் 14 வகை களாகப் பிரிக்கப்பட்டது; இவ்வகைகளில் இடம் பெற்றவர்களும் ஓயாமல் திரும்பத் திரும்ப மாற்றப்பட்டனர். தொழிற்சாலை வேலை-நாளின் 15 மணி நேரத்தில் மூலதனம் ஒரு சமயத்தில் 30 நிமிடங்களுக்கும், ஒரு சமயத்தில் ஒரு மணி நேரத்துக்குமாகத்

340 தொ. ஆ. அறிக்கைகள், 1849 ஏப்ரல் 30க்கானவை, பக்கம் 5.

341 தொ. ஆ. அறிக்கைகள், 1849 அக்டோபர் 31க்கானவை, பக்கம் 6.

342 தொ. ஆ. அறிக்கைகள், 1849 ஏப்ரல் 30க்கானவை, பக்கம் 21.

343 தொ. ஆ. அறிக்கைகள், 1848 அக்டோபர் 31க்கானவை, பக்கம் 95.

* ''சிறு சிறு நேரங்கள்''

தொழிலாளியை உள்ளுக்கிழுத்து, பின் மீண்டும் வெளியில் தள்ளியது; தொழிற்சாலைக்குள் அவரை இழுப்பதும் பின்னர் திரும்ப வெளியில் தள்ளுவதுமாக இருந்தது; முழுமையாக 10 மணி நேர வேலை செய்யப்படும் வரை அவரைத் தன் பிடியிலிருந்து விட்டு விடாமல், மாறி மாறி இப்போதும் அப்போதுமாக இங்குமங் குமாக அலைக்கழித்துக் கொண்டிருந்தது. நாடக மேடையில் நடிப் போர் தாமே வெவ்வேறு அங்கங்களின் வெவ்வேறு காட்சிகளில் எப்படி மாறி மாறித் தோன்றுகிறார்களோ அப்படியே இங்கும் நடந்தது. இவ்விதம் மாறி மாறித் தோன்றினாலும் நடிகரானவர் நாடகம் முடியும் வரை எப்படி அரங்கத்துக்குச் சொந்தமோ, அதே போல் தொழிலாளர்களும் 15 மணி நேரத்துக்கு தொழிற்சா லைக்குச் சொந்தமாயிருந்தனர் — 15 மணி நேரம் என்பதில் வந்து போகும் நேரம் கணக்கில் சேராது. இவ்வாறு ஓய்வு நேரம் என்பது கட்டாயத்தின் பேரில் ஓய்ந்திருக்கும் நேரமாக மாற்றப்பட்டது; இது இளைஞர்களை சாராயக் கடைக்கும், பெண்களை விபசார விடு திக்கும் துரத்தியது. முதலாளி தன் ஆட்களின் எண்ணிக்கையை அதிகரிக்காமலே தன் இயந்திரசாதனத்தை 12 அல்லது 15 மணி நேரம் ஓட்டச் செய்வதற்கு அவ்வப்போது கண்டுபிடித்த ஒவ் வொரு புதிய தந்திரத்துக்கும், தொழிலாளி தன் உணவை ஒரு போது இந்த நேரத்திலும், மறு போது அந்த நேரத்திலுமாக நேரங் கெட்ட முறையில் விழுங்க வேண்டியிருந்தது. 10 மணி நேரத் திற்கான கிளர்ச்சி நடந்த காலத்தில், உழைக்கும் கும்பல் 10 மணி நேர வேலைக்கு 12 மணி நேரக் கூலி பெறும் நம்பிக்கையில் மனுச் செய்ததென தொழிலதிபர்கள் கூச்சலிட்டனர். இப்போது அவர்கள் நாணயத்தின் மறு பக்கத்தைக் காட்டினர். 12 அல்லது 15 மணி நேர உழைப்புச் சக்தி மீதான ஆளுகைக்கு 10 மணி நேரக் கூலி கொடுத்தனர்.[344] இதுவே விவகாரத்தின் சாரம்! இதுவே 10 மணி நேரச் சட்டத்துக்குத் தொழிலதிபர்கள் தந்த வியாக்கியானம்! தடையிலா தானிய இறக்குமதியையும், ஆங்கிலேயத் தொழில் துறை பெற்றிருக்கும் வசதி வாய்ப்புகளையும் கருத்தில் கொண்டால், முதலாளிகளை செல்வந்தர்களாக்க 10 மணி நேர உழைப்பு முற் றிலும் போதுமானதாய் இருக்கும் என்று பவுன், ஷில்லிங், பென்னி வரை கணக்கு போட்டு — தானியச் சட்ட எதிர்ப்புக் கிளர்ச்சியின் போது — முழுதாகப் பத்தாண்டு காலம் தொழிலாளர்களுக்கு இதோபதேசம் செய்த, மானுடத்தின்பால் கொண்ட நேசத்தால்

---

344 பார்க்கவும்: தொ. ஆ. அறிக்கைகள், 1849 ஏப்ரல் 30க்கானவை, பக்கம் 6. மற்றும் ''1848 அக்டோபர் 31க்கான அறிக்கைகளில்'' தொழிற்சாலை ஆய்வாளர்கள் ஹோவெலும், சாண்டர்சும் ''ஷிஃப்டு முறை'' பற்றி அளித்துள்ள விவரமான விளக்கம். மேலும் பார்க்கவும்: 1849 வசந்த காலத்தில் ''ஷிஃப்டு முறைக்கு'' எதிராக ஆஷ்டன் மற்றும் அதன் சுற்றுப்புறத்தைச் சேர்ந்த சமய குருமார்களிடமிருந்து அரசியாருக்கு வந்த விண்ணப்பம்.

வியர்த்து விறுவிறுத்து போகும் அதே அருள்மிகு தடையிலா வாணி பக்காரர்கள்தாம் இவர்கள்.[345] மூலதனத்தின் இந்தக் கலகம், இரண்டாண்டுகளுக்குப் பின், இங்கிலாந்திலுள்ள நான்கு உயர் நீதி மன்றங்களில் ஒன்றான நிதித் துறை நீதி மன்றத்தின் தீர்ப்பால் இறுதியில் வெற்றி வாகை சூடியது; இந்த நீதி மன்றம் 1850 பிப்ரவரி 8ஆம் நாள் தன்னிடம் கொண்டுவரப்பட்ட வழக்கொன்றில், ஆலையதிபர்கள் நிச்சயமாக 1844ஆம் வருடத்திய சட்டத்தின் உட்கருத்துக்கெதிராகச் செயல்படுகின்றனர் என்ற போதிலும், இந்தச் சட்டத்திலேயே அதை அர்த்தமற்றதாக்கும் குறிப்பிட்ட சில சொற்கள் அடங்கியுள்ளன என்று தீர்ப்பளித்தது. "இந்தத் தீர்ப்பின் மூலம் பத்து மணி நேரச் சட்டம் ரத்து செய்யப்பட்டது."[346] இளம் வயதினருக்கும் மாதர்களுக்கும் அஞ்சல் முறையைப் பயன்படுத்த அது வரை அஞ்சியிருந்த தொழிலதிபர் கும்பல் இப்போது அதை முழு மூச்சாக மேற்கொண்டது.[347]

ஆனால், மூலதனத்தின் திட்டவட்டமான வெற்றியாகத் தோன்றிய இதனைத் தொடர்ந்து இதற்கெதிரான ஒரு கொந்தளிப்பு ஏற்பட்டது. வளைந்து கொடுக்காத, சலியாத எதிர்ப்பெனினும், சாத்வீக எதிர்ப்பையே தொழிலாளர்கள் இதுவரை காட்டி வந்தனர். இப்போது அவர்கள் லங்காஷயரிலும், யார்க்ஷயரிலும் ஆவேசமான கண்டனக் கூட்டங்கள் நடத்தி எதிர்ப்புத் தெரிவித்தனர். 10 மணி நேரச் சட்டம் என்பதானது சுத்த மோசடி, பாராளுமன்ற ஏய்ப்பு, அப்படி ஒரு சட்டமே இருக்கவில்லை என்று கண்டித்தனர். வர்க்கங்களின் பகைமையானது நம்பமுடியாத பதற்றத்தை அடைந்திருப்பதாகத் தொழிற்சாலை ஆய்வாளர்கள் அரசாங்கத்தை அவசரமாக எச்சரித்தனர். தொழிலதிபர்களிலேயே சிலர் முணுமுணுத்தனர்: "மாஜிஸ்திரேட்டுகளின் முரண்பாடான முடிவுகளின் விளைவாக, முற்றிலும் முறைகேடான அராஜக நிலைமை எழுந்துள்ளது. யார்க்ஷயரில் ஒரு சட்டம், லங்காஷயரில் வேறொரு சட்டம்; லங்காஷயரில் ஒரு வட்டாரத்தில் ஒரு சட்டம், அதன் அண்டைப் புறத்திலேயே இன்னொரு சட்டம் என்றாகிவிட்டது. பெரிய நகரங்களில் தொழிலதிபரால் சட்டத்திலிருந்து தப்ப முடிகிறது; கிராமப்புற வட்டங்களில் தொழிலதிபருக்கு அஞ்சல்

---

345 உதாரணமாகப் பார்க்கவும்: ரா. ஹை. கிரெக் எழுதிய "தொழிற்சாலைப் பிரச்சினையும் பத்து மணி நேர மசோதாவும்," 1837.

346 பி. எங்கெல்ஸ்: "ஆங்கிலேயப் பத்து மணி நேர மசோதா." ("Neue Rheinische Zeitung, Politisch-oekonomische Revue." பதிப்பாசிரியர்: கார்ல் மார்க்ஸ், 1850 ஏப்ரல் இதழ், பக்கம் 13.) அமெரிக்க உள்நாட்டுயுத்தத்தின் போது, இதே "உயர்" நீதி மன்றம் ஓர் ஐயந்திரிபான சொற்பிரயோகத்தைத் தேடிக் கண்டுபிடித்து கடற்கொள்ளைக் கப்பல்களுக்கு ஆயுதம் கொடுப்பதற்கெதிரான சட்டத்தின் அர்த்தத்தையே தலைகீழாகப் புரட்டியது.

347 தொ. ஆ. அறிக்கைகள், 1850 ஏப்ரல் 30க்கானவை.

முறைக்கு அவசியமான ஆட்கள் கிடைப்பதில்லை; ஒரு தொழிற் சாலையிலிருந்து இன்னொரு தொழிற்சாலைக்கு மாற்றுவதற்கு ஆட்கள் கிடைப்பது பற்றிச் சொல்லவே வேண்டாம்.'' எல்லா முதலாளிகளும் உழைப்புச் சக்தியைச் சுரண்டுவதில் சமத்துவம் என்பதே மூலதனத்தின் முதற்பெரும் பிறப்புரிமை.

இந்நிலைமைகளில் தொழில்திபர்களுக்கும் ஆட்களுக்குமிடையே சமரசம் ஏற்படலாயிற்று. இது 1850 ஆகஸ்டு 5 தேதியக் கூடுதல் தொழிற்சாலைச் சட்டத்தில் பாராளுமன்ற முத்திரையைப் பெற்றது. ''இளம் வயதினருக்கும் மாதர்களுக்குமான'' வேலை-நாள் வாரத்தின் முதல் 5 நாட்களுக்கு 10இலிருந்து 10½ மணிகளாக உயர்த்தப்பட்டது; சனிக்கிழமையன்று 7½ மணிகளாகக் குறைக் கப்பட்டது. சாப்பாட்டு வேளைக்காக 1½ மணி நேரத்துக்கு குறை வில்லாத இடை நிறுத்தங்களுடன் காலை 6 மணிக்கும் மாலை 6 மணிக்குமிடையே[348] வேலை தொடர்ந்து நடக்க வேண்டும்; இந்தச் சாப்பாட்டு வேளை எல்லாருக்கும் ஒரே நேரத்திலும், 1844ஆம் வருட நிபந்தனைகளுக்கு இசைவாகவும் அனுமதிக்கப்பட வேண்டும். இதன் மூலம் அஞ்சல் முறைக்கு இறுதியாக முடிவு கட்டப்பட்டது.[349] குழந்தை உழைப்பைப் பொறுத்த வரை, 1844ஆம் வருடச் சட்டம் தொடர்ந்து அமலிலிருந்தது.

முன்போலவே இம்முறையும் தொழிலதிபர்களில் ஒரு பிரி வினர் பாட்டாளி வர்க்கத்தின் குழந்தைகள் மீது பிரபுத்துவத் தனியு ரிமைகளை நிலைநாட்டிக் கொண்டனர். பட்டுத் தொழிலதிபர்களே இவர்கள். ''குழந்தைகள் எந்த வயதைச் சேர்ந்தவர்களாயினும் அவர்களை நாளுக்கு 10 மணி நேரம் வேலை வாங்கும் சுதந் தரத்தைப் பிடுங்கிக் கொண்டால், தங்கள் தொழிலகங்களை மூட வேண்டி வரும்''[350] என்று 1833இல் அச்சுறுத்தும் முறையில் உறுமியவர்கள்தாம் இவர்கள். 13 வயதுக்கு மேற்பட்ட குழந்தை களைப் போதுமான எண்ணிக்கையில் கூலிக்கு வாங்க முடியாது என்று அவர்கள் கூறினர். தமக்கு வேண்டிய தனியுரிமையை வலு வந்த முறையில் பெற்றுக் கொண்டனர். இதற்கு அவர்கள் கூறிய சால்ஜாப்பு வாய் கூசாமல் சொல்லிய பொய் என்பது அடுத்து நடந்த விசாரணையில் வெளிப்பட்டது.[351] ஆனாலும் கூட,

---

[348] குளிர்காலமானால், காலை 7 மணி முதல் மாலை 7 மணி வரை என்று மாற்றிக் கொள்ள வேண்டும்.

[349] இப்போதுள்ள (1850ஆம் வருடத்திய) சட்டம் சமரசமாக அமைந்தது; வரம் பிடப்படும் உழைப்புக்குரியவர்களின் வேலை தொடர்வதற்கும் முடிவதற்கும் சீரான ஒரே நேரம் என்ற அனுகூலத்தை முன்னிட்டு, தொழிலாளர்கள் 10 மணி நேரச் சட்டத்தின் ஆதாயத்தைத் துறக்க இசைந்தனர்.'' (தொ. ஆ. அறிக்கைகள், 1852 ஏப்ரல் 30க்கானவை, பக்கம்14.)

[350] தொ. ஆ. அறிக்கைகள், 1844 செப்டெம்பருக்கானவை, பக்கம் 13.

[351] முன் வந்தது.

சின்னஞ் சிறாரை உயர்த்தி முக்காலி மேல் அமர்த்தி, நாளொன்றுக்கு 10 மணி நேரம் அவர்களது ரத்தத்தைப் பட்டாய் நூற்கும் பழக்கம் இந்த 10 ஆண்டு காலமுழுவதும் நிறுத்தப்படவேயில்லை. [352] 1844ஆம் வருடத்திய சட்டம், நாளுக்கு 6½ மணி நேரத்துக்கதிகமாக 11 வயதுக்குட்பட்ட குழந்தைகளை வேலை வாங்கும் "சுதந்தரத்தை" தொழிலதிபர்களிடமிருந்து "பறித்துக் கொண்டது" மெய்தான். ஆனால் மறுபுறம், 11 வயதுக்கும் 13 வயதுக்கும் இடைப்பட்ட குழந்தைகளை நாளுக்கு 10 மணி நேரம் வேலை வாங்குவதற்கும், ஏனைய ஆலைக் குழந்தைகளுக்கெல்லாம் கட்டாயமாக்கப்பட்ட கல்வியை அவர்கள் தொடர்பாக ரத்துச் செய்வதற்குமான தனியுரிமையை இச்சட்டம் அவர்களுக்குக் கிடைக்கச் செய்தது. இந்த முறை சொல்லப்பட்ட சால்ஜாப்பு என்னவென்றால், "அவர்களது வேலைக்குரிய துணியின் மென்மையான இழை நயத்துக்கு விரல்களின் மெல்லிய தொடுநயம் தேவை; இந்தத் தொழிற்சாலைகளில் அவர்கள் பிள்ளைப் பிராயமுதலே பழகினாலன்றி இந்தத் தொடுநயத்தைப் பெற முடியாது" என்பதே. [353] தென் ருஷ்யாவில் கொம்புக் கால்நடைகள் அவற்றின் தோலுக்காகவும் கொழுப்புக்காகவும் கொல்லப்பட்டது போலவே, குழந்தைகள் முழுக்க முழுக்க அவர்களின் மெல்லிய விரல்களுக்காகவே வதைக்கப்பட்டனர். கடைசியில் 1844இல் வழங்கப்பட்ட தனியுரிமை, 1850இல் பட்டு முறுக்குதல், பட்டு சுற்றுதல் என்னும் துறைகளுக்கு மட்டுமே உரியதாக வரம்பிடப்பட்டது. ஆனால் இங்கே, மூலதனத்தின் "சுதந்தரத்தைப்" பறித்ததற்காக அதற்கு ஈடு செய்யும் முறையில் 11 முதல் 13 வயதுடைய குழந்தைகளுக்கான வேலை நேரம் 10இலிருந்து 10½ மணி நேரமாக உயர்த்தப்பட்டது. இதற்கு சொல்லப்பட்ட சால்ஜாப்பு: "பட்டுத் தொழிலகங்களில் உழைப்பானது இதர வகைத் துணிகளுக்கான தொழிலகங்களிலிருப்பதை விட இலகுவானதும், அநேகமாக ஏனைய அமிசங்களிலும் ஆரோக்கியத்துக்கு அவ்வளவாகக் கேடு பயக்காததும் ஆகும்."[354] மாறாக, "பட்டுத் தொழில் வட்டங்களில் சராசரி இறப்பு வீதம் மிதமிஞ்சி உயர்வாய் உள்ளது. இது பெண்கள் மத்தியில் லங்காஷயரின் பஞ்சுத்தொழில் வட்டங்களிலிருப்பதை விடவும் அதிகமாக உள்ளது." [355] என்பதை அதிகார பூர்வ

[352] முன் வந்தது.

[353] தொ. ஆ. அறிக்கைகள், 1846 அக்டோபர் 31க்கானவை, பக்கம் 20.

[354] தொ. ஆ. அறிக்கைகள், 1861 அக்டோபர் 31க்கானவை, பக்கம் 26.

[355] முன் வந்தது, பக்கம் 27. தொழிற்சாலைச் சட்டத்துக்குட்பட்டோரான தொழிலாளர்களின் உடல்நிலை மொத்தத்தில் வெகுவாய் மேம்பட்டிருக்கிறது. மருத்துவ சாட்சியம் அனைத்தும் இந்த அமிசத்தில் உடன்படுகிறது; வெவ்வேறு நேரங்களில் நேரடியாக நான் பார்த்தவையும் இதன் உண்மையை எனக்கு உணர்த்தியுள்ளன. ஆனபோதிலும், குழந்தைகளது வாழ்வின் ஆரம்ப ஆண்டுகளில் நேரிடும் பயங்கரமான

மருத்துவ விசாரணைகள் பின்னர் நிரூபித்தன. 6 மாதங்களுக் கொருமுறை புதுப்பிக்கப்பட்ட தொழிற்சாலை ஆய்வாளரின் ஆட்சேபணைகளுக்கு மாறாக இத்தீங்கு இந்த நேரம் வரை நீடிக்கிறது.[356]

1850ஆம் வருடத்திய சட்டம் ''இளம் வயதினருக்கும் மாதர் களுக்கும்'' மட்டும் காலை 6 முதல் இரவு 8.30 வரையிலான 15 மணி நேரத்தைக் காலை 6 முதல் மாலை 6 வரையிலான 12 மணி நேரமாக மாற்றியது. ஆகவே, மொத்த உழைப்பு 6½ மணி நேரத்தை விஞ்சுவதில்லை என்ற நிபந்தனையோடு, மேற்சொன்ன நேரத்துக்கு முன்னர் அரை மணிநேரமும் பின்னர் 2½ மணி நேரமும் எப்போதுமே வேலை வாங்கப்பட முடிந்த குழந்தைகளுக்கு

---

இறப்பு வீதத்தைச் சேர்க்காமல், டாக்டர் கிரீன்ஹௌவின் அதிகார பூர்வ அறிக்கைகள், ''இயல்பான ஆரோக்கியமுள்ள பயிர்த் தொழில் வட்டங்களுடன்'' ஒப்பிடுகையில் ஆலைத் தொழில் வட்டங்களின் பாதகமான ஆரோக்கிய நிலைமையைக் காட்டுகின்றன. அவரது 1861ஆம் வருட அறிக்கையிலிருந்து பின்வரும் அட்டவணையை சான்றாக எடுத்துக் கொள்ளலாம்:

| ஆலைத்தொழில்களில் ஈடுபட்டுள்ள வயதுவந்த ஆண்களின் சதவீதம் | 100,000 ஆண்களுக்கு நுரையீரல் பாதிப்பு களால் இறப்பு வீதம் | வட்டத்தின் பெயர் | 100,000 பெண்களுக்கு நுரையீரல் பாதிப்பு களால் இறப்பு வீதம் | ஆலைத்தொழில்களில் ஈடுபட்டுள்ள வயதுவந்த பெண்களின் சதவீதம் | பெண்களது வேலை வகை |
|---|---|---|---|---|---|
| 14.9 | 598 | விகான் | 644 | 18.0 | பஞ்சு |
| 42.6 | 708 | பிளாக்பர்ன் | 734 | 34.9 | ,, |
| 37.3 | 547 | ஹலிஃபாக்ஸ் | 564 | 20.4 | முறுக்குக் கம்பளி |
| 41.9 | 611 | பிராட்ஃபோர்டு | 603 | 30.0 | ,, |
| 31.0 | 691 | மெக்லெஸ்ஃபீல்டு | 804 | 26.0 | பட்டு |
| 14.9 | 588 | லீக் | 705 | 17.2 | ,, |
| 36.6 | 721 | டிரெண்ட் கரை ஸ்டோக் | 665 | 19.3 | மண்செய் பொருட்கள் |
| 30.4 | 726 | வூல்ஸ்டாண்டன் | 727 | 13.9 | ,, |
| | 305 | ஆரோக்கியமான எட்டு பயிர்த் தொழில் வட்டங்கள் | 340 | | |

356 ஆங்கிலேயத் ''தடையிலா வாணிபக்காரர்கள்'' பட்டுத் தொழில் மீதான காப்பு வரியை எவ்வளவு தயக்கத்துடன் கைவிட்டனர் என்பது நன்கு தெரிந்ததே. பிரெஞ்சு இறக்குமதிக்கெதிரான காப்புக்குப் பதிலாக, ஆங்கிலேய ஆலைக் குழந்தைகளுக்கான காப்பற்ற நிலை இப்போது அவர்களுக்குப் பயன்படுகிறது.

இதனால் பயனில்லை. மசோதா விவாதத்திலிருந்த அதே காலத்தில், தொழிற்சாலை ஆய்வாளர்கள் இந்த முரண்பாட்டிலிருந்து பிறந்த பெயர் போன துர்ப்பிரயோகங்கள் குறித்துப் புள்ளி விவரங்களை பாராளுமன்றத்திடம் சமர்ப்பித்தனர். இதனால் ஒரு பயனுமில்லை. செழிப்புமிகு ஆண்டுகளில் குழந்தைகளின் துணை கொண்டு வயதுவந்த ஆண்களின் வேலை-நாளை 15 மணி நேரமாக உயர்த்துவதென்ற நோக்கம் பின்னணியில் ஒளிந்திருந்தது. இப்படிப்பட்ட முயற்சி வயதுவந்த ஆண்தொழிலாளர்களின் எதிர்ப்பின் முன்னே தோல்வியைத் தழுவியே தீரும் என்பதை அடுத்து வந்த மூன்றாண்டுகளின் அனுபவம் அறிவுறுத்தியது. எனவே, ''காலையில் இளம் வயதினர், மாதர்களுக்கு முன்னதாகவும், மாலையில் அவர்களுக்குப் பின்னதாகவும் குழந்தைகளை வேலை வாங்குவதைத்'' தடை செய்ததன் மூலம், 1850ஆம் வருடத்திய சட்டம் 1853இல் இறுதியாகப் பூர்த்தி செய்யப்பட்டது. அது முதல், சில விதிவிலக்குகள் போக 1850ஆம் வருடத்திய தொழிற்சாலைச் சட்டம் அதன் ஆளுகைக்குரிய தொழிற் கிளைகளில் எல்லாத் தொழிலாளர்களின் வேலை-நாளையும் முறைப்படுத்தியது.[357] முதல் தொழிற்சாலைச் சட்டம் நிறைவேறியதிலிருந்து இதற்குள் அரை நூற்றாண்டு காலம் உருண்டோடி விட்டது.[358]

தொழிற்சாலைச் சட்ட நெறி ''1845ஆம் வருடத்திய அச்சுக் கூடங்கள் சட்டத்தில்'' முதன் முதலாக அதன் மூலத்தின் செயலெல்லையைத் தாண்டிச் சென்றது. இந்தப் புதிய ''மட்டுமீறலை'' ஏற்பதில் மூலதனம் காட்டிய அதிருப்தி, சட்டத்தின் ஒவ்வொரு

[357] ஆங்கிலேயப் பஞ்சுத் தொழிலின் செழிப்புமிகு ஆண்டுகளான 1859இலும் 1860இலும் சில தொழிலதிபர்கள் மிகை நேரத்துக்கு அதிகக் கூலி என்று ஆசை காட்டி, வேலை-நாளை நீட்டிப்பதற்கு வயதுவந்த ஆண் தொழிலாளர்களை இணங்கச் செய்ய முயன்றனர். கை-மியூல் நூற்பாளர்கள், தானியங்கிக் கவனிப்பாளர்கள் ஆகியோர் தங்கள் முதலாளிகளுக்கு மனுச்செய்து இப்பரிசோதனைக்கு முடிவு கட்டினர்; இம் மனுவில் அவர்கள் கூறுகின்றனர்: ''வெளிப்படையாகச் சொன்னால் வாழ்க்கை எங்களுக்குச் சுமையாக உள்ளது; நாட்டின் இதர தொழிலாளர்களை விட வாரத்துக்குக் கிட்டத்தட்ட இரண்டு நாள் அதிகமாக நாங்கள் ஆலைகளில் அடைபட்டிருக்கும் போது, நிலத்திலுள்ள பண்ணை அடிமைகள் போல் இருப்பதாகவும், எங்களுக்கும் வருங்காலத் தலைமுறைகளுக்கும் தீங்கான ஏற்பாட்டை நீடிக்கச் செய்து வருகிறோம் என்றும் எண்ணுகிறோம்....எனவே கிறிஸ்துமஸ், புத்தாண்டு விடுமுறைகளுக்குப் பின்னர் மீண்டும் வேலை துவங்கும் போது, நாங்கள் வாரத்துக்கு 60 மணி நேரம் மட்டுமே, அல்லது ஒன்றரை மணி நேர இடைநிறுத்தத்துடன் காலை ஆறு முதல் மாலை ஆறு வரை மட்டுமே வேலை செய்வோம் என்று பணிவுடன் முன்னறிவிப்பதற்கே இம்மனு.'' (தொ. ஆ. அறிக்கைகள், 1860 ஏப்ரல் 30க்கானவை, பக்கம் 30.)

[358] இந்தச் சட்டத்தின் சொல்லாட்சி அதை மீறுவதற்கு வழங்குகிற வழி பற்றி பார்க்கவும்: பாராளுமன்றத் தகவல் அறிக்கை: ''தொழிற்சாலைகள் ஒழுங்குமுறைச் சட்டம்'' (1859 ஆகஸ்டு 6.) இதில், லியோனார்டு ஹார்னர் எழுதியுள்ள ''இப்போது மிகவும் வியாபகமாகி வரும் சட்ட விரோத வேலை வாங்கலை ஆய்வாளர்கள் தடுப்பதற்கு உதவும் வகையில் தொழிற்சாலைச் சட்டங்களைத் திருத்துவதற்கான யோசனைகள்.''

வரியிலும் காணக் கிடக்கிறது. அது மாதர்களுக்கும், 8 முதல் 13 வயதுடைய குழந்தைகளுக்கும், சாப்பாட்டு வேளைக்காகச் சட்ட பூர்வ இடை நிறுத்தம் ஏதுமின்றிக் காலை 6க்கும் இரவு 10க்கு மிடையே 16 மணி நேரமாக வேலை-நாளுக்கு வரம்பிடுகிறது; 13 வயதுக்கு மேற்பட்ட ஆண்களை இஷ்டம் போல் இரவும் பகலும் வேலை வாங்குவதை அனுமதிக்கிறது.[359] அது ஒரு பாராளுமன்றக் குறைப்பிறவியே.[360]

ஆயினும், நவீனப் பொருளுற்பத்தி முறைக்கே மிகவும் உரித்தான படைப்பாக அமைந்த பெருந் தொழிற் கிளைகளில் சட்டப்படி வேலை-நாளுக்கு வரம்பிடுவதில் வெற்றி கிட்டியது. வேலை-நாளுக்கு வரம்பிட வேண்டுமென்ற கோட்பாடு இவ்வாறு வெற்றிக் கொடி நாட்டியது. 1853க்கும் 1860க்கும் இடையில் ஆலைத் தொழிலாளர்களின் பௌதிக, தார்மிக மறுமலர்ச்சியுடன் ஒருங்கிணைந்து அத்தொழிற் கிளைகள் கண்ட வளர்ச்சி கண்ணில்லாதாரும் காணும்படி அபாரமாயிருந்தது. அரை நூற்றாண்டு கால உள்நாட்டுப் போருக்குப் பிறகே தொழிலதிபர்களை சட்டப்பூர்வ வரம்பிடலுக்கும், ஒழுங்கு முறைக்கும் பையப் பைய பணிய வைக்க முடிந்தது. இப்போது அதே தொழிலதிபர்கள் இன்னமும் ''சுதந்தரமாக'' இருந்த சுரண்டற் கிளைகளுடன் ஒப்பிட்டுக் காட்டி, தம்மைத் தாமே மெச்சிக் கொண்டனர்.[361] ''அரசியல் பொருளாதாரத்தின்'' ஆஷாடபூதிகள் சட்ட பூர்வமாக நிர்ணயிக்கப்பட்ட வேலை-நாள் அவசியமெனக் கண்டறிந்தது தமது ''விஞ்ஞானத்தின்'' சிறப்பான புதிய கண்டுபிடிப்பு என்று இப்போது பறைசாற்றினர்.[362] தொழிற்சாலைப் பிரபுமார்கள் தவிர்க்க முடியாத நிலைக்குப் பணிந்து தம்மை இணக்கப்படுத்திக் கொண்ட பின், மூலதனத்தின் எதிர்ப்புச் சக்தி பையப் பைய பலவீனமடைந்தது என்பதையும், அதே நேரத்தில் தொழிலாளி வர்க்கத்தின் தாக்குஞ்சக்தியோ — பிரச்சினையில் நேரடி அக்கறையில்லாத சமுதாய வர்க்கங்களின்

---

[359] ''8 வயதும் அதற்கு மேற்பட்ட வயதும் உடைய குழந்தைகள், உண்மையிலேயே, என் வட்டத்தில் சென்ற அரையாண்டில் காலை 6 முதல் இரவு 9 வரை வேலை வாங்கப்பட்டனர்.'' (தொ. ஆ. அறிக்கைகள், 1857 அக்டோபர் 31க்கானவை, பக்கம் 39.)

[360] ''அச்சுக் கூடங்கள் சட்டம் அதன் கல்வி சம்பந்தப்பட்ட விதிமுறைகள், தற்காப்பு சம்பந்தப்பட்ட விதிமுறைகள் ஆக இரு வகையிலுமே ஒரு தோல்வி என்பது ஒப்புக் கொள்ளப்படுகிறது.'' (தொ. ஆ. அறிக்கைகள், 1862 அக்டோபர் 31க்கானவை, பக்கம் 52.)

[361] உதாரணம்: 1863 மார்ச் 24 தேதிய டைம்ஸ் ஏட்டுக்கு எ. பாட்டர் எழுதிய கடிதம். டைம்ஸ் ஏடு பத்து மணி நேர மசோதாவுக்கெதிரான தொழில் அதிபர் கலகத்தை அவருக்கு நினைவூட்டியது.

[362] டூக் எழுதிய ''விலைகளின் வரலாறு'' என்ற நூலின் கூட்டாசிரியரும், அதன் பதிப்பாசிரியருமான திரு வி. நியூமார்ச் இவ்வகையினரில் ஒருவரே. பொது ஜன அபிப்பிராயத்துக்குக் கோழைத்தனமாக விட்டுக் கொடுப்பதுதான் விஞ்ஞான முன்னேற்றமா?

உருவிலான அதன் நேச சக்திகளின் தொகையோடு சேர்ந்து— வளர்ந்தது என்பதையும் எளிதிற் புரிந்து கொள்ளலாம். இதுவே 1860க்குப் பின்னர் ஒப்பளவில் துரிதமாக ஏற்பட்ட முன்னேற்றத் திற்குக் காரணமாக அமைந்தது.

1860இல் எல்லா சாயத் தொழிற்கூடங்களும், வெளுப்புத் தொழிற்கூடங்களும், 1861இல் பின்னல், காலுறை தயாரிப்புத் தொழில்களும் 1850ஆம் வருடத் தொழிற்சாலைச் சட்டத்திற்குட் பட்டவை ஆயின.[363]

குழந்தையுழைப்பு ஆணையத்தின் (1863) முதல் அறிக்கையின் விளைவாக, மண்செய்பொருட்கள் (மண்பாண்டத் தொழில் மட்டு மன்று), செந்தீக்குச்சிகள், வெடிக் குதிரைகள், தோட்டாக்கள், சமுக்காளங்கள், ஜோடனைக் கத்தரிப்பு, "இறுதி வடிவளித்தல்" என்ற பெயரில் அடங்கிய அநேக நிகழ்முறைகள் ஆகிய தொழில் களின் அதிபர்களுக்கு இதே கதி நேரிட்டது. 1863ஆம் ஆண்டில் திறந்த வெளியில் வெளுத்தலும்[364] ரொட்டி தயாரித்தலும் தனிச்

---

[363] சாய, வெளுப்புத் தொழில்கள் தொடர்பாக, வேலை-நாள் 1861 ஆகஸ்ட் 2ஆம் நாள் இடைக்கால முறையில் 12 மணி நேரமாகவும் 1862 ஆகஸ்ட் 1ஆம் நாள் திட்டவட்டமாய் 10 மணி நேரமாகவும், அதாவது சாதாரண நாட்களுக்கு 10½ மணி நேரமாகவும், சனிக் கிழமைக்கு 7½ மணி நேரமாகவும் நிர்ணயிக்கப்பட வேண்டும் என்று 1860இல் நிறைவேறிய சட்டம் வரையறுத்தது. இப்போது, ஆபத்தான ஆண்டாகிய 1862 வந்த போது, பழைய கேலிக் கூத்து திரும்பவும் நடத்தப்பட்டது. இதன்னியில், இளம் வயதினரையும் மாதர்களையும் 12 மணி நேரம் வேலை வாங்கு வதை இன்னும் ஓராண்டு காலத்துக்கு அனுமதிக்குமாறு ஆலையதிபர்கள் பாராளு மன்றத்துக்கு மனுச்செய்தனர். "இத்தொழிலின் தற்போதைய நிலைமையில் (பஞ்சப் பஞ்ச காலம்), இயன்ற போது நாளுக்கு 12 மணி நேரம் வேலை செய்து கூலி பெறுவது தொழிலாளர்களுக்குப் பெரிதும் அனுகூலமானது." இதற்கேற்ப ஒரு மசோதா கொண்டுவரப்பட்டது. "இது கைவிடப்பட்டதற்குப் பிரதான காரணம் ஸ்காட்லாந்தைச் சேர்ந்த வெளுப்புத் தொழிலாளர்களின் நடவடிக்கையே." (தொ. ஆ. அறிக்கைகள், 1862 அக்டோபர் 31க்கானவை, பக்கம் 14,15.) இவ்வாறு யார் பெயரில் பேசுவதாக மூலதனம் பாசாங்கு செய்ததோ அந்தத் தொழிலாளர்களாலேயே அது தோற்கடிக்கப் பட்டு விட்டது. இந்நிலையில் "தொழிலாளர் காப்புக்காக" நிறைவேற்றப்பட்ட பாராளுமன்றச் சட்டங்கள் அனைத்தையும் போலவே 1860ஆம் வருடச் சட்டமும் ஐயந்திரிபான சொற்றொடர்களைக் கொண்டதே என்றும் பெட்டி போடுவோரையும் இறுதி வடிவளிப்போரையும் விலக்கி வைப்பதற்கு அது தங்களுக்கு ஒரு சால்ஜாப்பை அளித்தது என்றும் சட்ட நிபுணர்களது கூர்க்கண்களின் துணை கொண்டு மூலதனம் கண்டுபிடித்தது. என்றென்றும் மூலதனத்தின் விசுவாசமிக்க சேவகனாகிய ஆங்கிலேய நீதித் துறை, சாமானிய விண்ணப்ப நீதிமன்றத்தில் இந்தச் சொற் புரட்டு வழக்காடலுக்கு ஆதரவாகத் தீர்ப்பு வழங்கியது. "தொழிலாளர்கள் பெரிதும் ஏமாற்றமடைந் துள்ளனர்....மிகைவேலை பற்றி அவர்கள் குறைபட்டுக் கொண்டனர்; சட்டப் பேரவை யின் தெளிவான விருப்பம் பிழையானதொரு வியாக்கியானத்தின் காரணத்தால் தோற்றிருப்பது பெரிதும் வருந்தற்பாலது." (முன் வந்தது, பக்கம் 18.)

[364] "திறந்தவெளி வெளுப்பதிபர்கள்" மாதர்கள் யாரும் இரவில் இவ்வேலையைச் செய்யவில்லை என்ற பொய்யின் மூலம் 1860ஆம் வருடச் சட்டத்தை ஏய்த்து வந்தனர். இந்தப் புளுகைத் தொழிற்சாலை ஆய்வாளர்கள் அம்பலப்படுத்தினர்; அதே நேரத்தில், தொழிலாளர்களிடமிருந்து வந்த மனுக்கள் திறந்தவெளி வெளுத்தல் நடைபெறுவதாகத் தெரிவிக்கப்பட்ட குளுமையான புல்வெளியின் நறுமணம் பற்றிய நினைப்புகளை

சட்டங்களுக்கு உட்படுத்தப்பட்டன; இச்சட்டங்களின் படி முன் சொன்ன தொழிலில் இளம் வயதினர், மாதர்களின் இரவு நேர (இரவு 8 மணி முதல் காலை 6 மணி வரையிலான) உழைப்பும், பின்சொன்ன தொழிலில் ரொட்டி தயாரிக்கும் பணியாளர்களில் 18 வயதுக்குட்பட்டோரை இரவு 9 மணிக்கும் காலை 5 மணிக்கு

---

நீக்கின. இந்தக் காற்றோட்ட வெளுப்பில், உலர்த்தும் அறைகள் 90° முதல் 100° பாரன்ஹீட் வரையிலான வெப்ப நிலைகள் உடையனவாயிருந்தன; இவற்றில் பெரும் பாலும் பெண்களே வேலை செய்தனர். எப்போதாவது அவர்கள் உலர்த்தும் அறை களிலிருந்து தப்பித்து நல்ல காற்றைப் பெறுவதற்கான தொழில் வழக்குச் சொல்லே ''குளுமையாதல்'' ஆகும். ''அடுப்புகளில் பதினைந்து பெண்கள். வெப்பம் லினன் துணிகளுக்கு 80° முதல் 90° வரை, கேம்பிரிக் துணிகளுக்கு 100°, அதற்கும் மேலே. சுமார் 10 அடி சதுரமான சிறு அறையில் பெட்டி போடவும் மடிக்கவும் பன்னிரண்டு பெண்கள்; இந்த அறையின் மையத்தில் மூடிய அடுப்பு. பயங்கரமான வெப்பத்தை வீசி, பெட்டி போடுவதற்காக கேம்பிரிக் துணிகளை உலர்த்துகிற அடுப்பைச் சுற்றிப் பெண்கள் நிற்கின்றனர். இந்தப் பெண்களுக்கு வேலை நேரம் வரம்பற்றது. நிறைய வேலையிருந்தால் அவர்கள் தொடர்ச்சியாக அடுத்தடுத்த இரவுகளில் 9 அல்லது 12 வரை வேலை செய்கின்றனர்.'' (தொ. ஆ. அறிக்கைகள், 1862 அக்டோபர் 31க்கானவை, பக்கம் 56.) ஒரு மருத்துவர் கூறுகிறார்; ''குளுமையாதலுக்குத் தனியாக நேரம் தரப்படுவதில்லை; ஆனால் வெப்ப நிலை அளவுக்கு அதிகமாக உயர்ந்து விட்டால் அல்லது தொழிலாளர்களின் கைகள் வியர்வையால் அழுக்காகி விட்டால் சில நிமிடங்களுக்கு வெளியில் செல்ல அனுமதிக்கப்படுகின்றனர்....அடுப்புத் தொழிலாளர் களின் நோய்களுக்கு சிகிச்சையளிப்பதில் கணிசமான அனுபவம் வாய்ந்தவன் என்ற முறையில், அவர்களது சுகாதார நிலை எவ்விதத்தும் நூற்பாலையில் வேலை செய்யும் தொழிலாளர்களின் நிலையினளவுக்கு உயர்வாயில்லை என்பதைத் தெரிவிக்க வேண்டியவனாயுள்ளேன். (மூலதனமோ பாராளுமன்றத்துக்குக் கொடுத்த விண்ணப்பங் களில் ரூபென்ஸின் பாணியில் தளதளப்பான ஆரோக்கியம் வாய்ந்தவர்களாய் அவர் களைச் சித்திரித்துள்ளது.) அவர்கள் மத்தியில் மிக அதிகமாகக் காணப்படும் நோய்கள் கோழை நோய், மார்ச்சளி, கருப்பை இயக்கங்களில் ஒழுங்கின்மை, மோசமான வடிவங்களில் இசிப்பு நோய், கீல்வாதம் ஆகியவையாகும். இவையனைத்தும் அந்தப் பெண்கள் வேலை வாங்கப்படும் அறைகளின் அசுத்தமான, மிதமிஞ்சி வெப்பமடைந்த காற்றாலும், குளிர்காலத்தில் வீடு செல்லும்போது குளிரான, ஈரமான சுற்றுப் புறத்திலிருந்து தம்மைப் பாதுகாத்துக் கொள்வதற்குப் போதுமான நல்ல உடைகள் இல்லாமையாலும் நேரடியாகவோ மறைமுகமாகவோ விளைபவை என்று நம்புகிறேன்.'' (முன் வந்தது பக்கம் 56, 57) இந்தத் திறந்தவெளி வெளுப்பதிபர்களிடமிருந்து வலிந்து பெறப்பட்ட 1850ஆம் வருடத் துணைச் சட்டம் பற்றி தொழிற்சாலை ஆய்வாளர்கள் குறிப்பிட்டதாவது: ''இச்சட்டம் அளிப்பதாகத் தோன்றுகிற பாதுகாப்பை தொழிலாளர் களுக்கு அளிக்கத் தவறியிருப்பது மட்டுமல்ல; அதிலுள்ள ஒரு சரத்தின் சொல்லமைப்பு எப்படியிருப்பதாகத் தோன்றுகிறதென்றால், ஆட்கள் இரவு 8 மணிக்குப் பின்னர் வேலை செய்வது கண்டுபிடிக்கப்படா விட்டால், அவர்கள் காப்பு விதிமுறைகள் எதற்கும் உரியோராவதில்லை; அப்படியே அவர்கள் அப்படி வேலை வாங்கப்படுவது தெரிந்தாலும், அதை நிரூபிப்பதற்கான முறை திட்டவட்டமாய் இல்லாததால் குற்றத் தீர்ப்பு கிடைப்பது அரிதினும் அரிது.'' (முன் வந்தது, பக்கம் 52) ''எனவே, சேம நல அல்லது கல்வி சார்ந்த நோக்கம் கொண்ட சட்டம் என்ற முறையில், இது நடைமுறையில் ஒரு தோல்வியே; ஏனெனில் நிலைமைக்கேற்றவாறு சாப்பாட்டுடனோ சாப்பாடின் றியோ நாளொன்றுக்கு 14 மணி நேரமோ, இன்னும் அதிக நேரமோ, — வயது குறித்த வரம்பின்றியும், ஆண் பெண் பேதமின்றியும், இப்படிப்பட்ட தொழில்கள் (வெளுத் தலும் சாயமிடுதலும்) நடைபெறுகிற பகுதியில் வசிக்கும் குடும்பங்களின் சமுதாய வழக்கங்களை மதியாமலும் — மாதர்களையும் குழந்தைகளையும் வேலை செய்ய அனுமதிப்பதை (இது கட்டாயப்படுத்துவதற்கொப்பானதே) சேம நலனென்று கூறுவதற்கில்லை.'' (தொ. ஆ. அறிக்கைகள், 1863 ஏப்ரல் 30க்கானவை, பக்கம் 40.)

மிடையே வேலை வாங்குவதும் தடை செய்யப்பட்டன. விவசாயம், சுரங்கங்கள், போக்குவரத்துச் சாதனங்கள் ஆகியவை தவிர ஆங்கிலேயத் தொழிலின் முக்கியக் கிளைகள் அனைத்திடமிருந்தும் அவற்றின் ''சுதந்தரத்தைப்'' பறித்துக் கொள்வதாக அச்சுறுத்தும் வகையில் இந்த ஆணையம் தெரிவித்த யோசனைகளைப் பின்னர் பார்ப்போம்.[365]

## பிரிவு 7.— இயல்பான வேலை-நாளுக்கான போராட்டம். இதர நாடுகளில் ஆங்கிலேயத் தொழிற்சாலைச் சட்டங்களின் பிரதிபலிப்பு

உழைப்பை மூலதனத்துக்குக் கீழ்ப்படுத்துவதால் எழக் கூடிய உற்பத்தி முறையிலான மாற்றங்கள் அனைத்தும் ஒரு புறமிருக்க, முதலாளித்துவப் பொருளுற்பத்தியின் திட்டமான இலட்சியமும் குறிக்கோளும், சாரமும் சத்தும் உபரி-மதிப்பின் உற்பத்தியே, அதாவது உபரி-உழைப்பைக் கறத்தலே என்பது வாசகருக்கு நினைவிருக்கும். இதுகாறும் நாம் அறிந்து கொண்ட வரை, சுயேச்சையான உழைப்பாளி மட்டுமே, அதாவது தனக்குத்தானே செயல்பட சட்டபூர்வத் தகுதியுள்ள உழைப்பாளி மட்டுமே ஒரு சரக்கை விற்பவர் என்ற முறையில் முதலாளியுடன் ஒப்பந்தம் செய்து கொள்கிறார் என்பதும் வாசகருக்கு நினைவிருக்கும். ஆகவே, வரலாற்று வழிப்பட்ட நமது சித்திரத்தில், ஒரு புறம் நவீனத் தொழில் துறையும், மறு புறம் உடல் வழியிலும் சட்ட வழியிலும் இளம் படியர்களாய் இருப்பவர்களின் உழைப்பும் முக்கியப் பாத்திரங்கள் வகிக்கின்றன என்றால், முன்னதை உழைப்புச் சுரண்டலின் ஒரு தனித் துறையாகவும், பின்னதை அச்சுரண்டலின் எடுப்பான ஒரு தனி உதாரணமாகவும் மட்டுமே எடுத்துக் கொண்டோம் என்பதே அதற்குக் காரணம். ஆயினும் நமது ஆய்வின் வரவிருக்கும் வளர்ச்சிப் போக்குகளை முன் கூட்டியே அறிய முயற்சிக்காமல் நம் முன்னுள்ள வரலாற்று உண்மைகளைத் தொடர்புபடுத்திப் பார்ப்பதன் மூலமே பெறப்படுகிறவை வருமாறு:

*முதலாவது:* வேலை-நாளை வரம்பின்றியும் கண் மூடித்தனமாகவும் நீட்டிக்க வேண்டுமென்ற மூலதனத்தின் வெறித்தனமான ஆசையானது நீர்விசை, நீராவி, இயந்திர சாதனம் ஆகியவற்றால் முதன் முதல் புரட்சிகரமாக்கப்பட்ட தொழில்களில்—பஞ்சு, கம்பளி, வெண்சணல், பட்டு ஆகியவற்றின் நூற்பும் நெசவும் என்ற நவீன

365 2ஆம் பதிப்புக்கான குறிப்பு: 1866இல் மேற்கண்ட பகுதிகளை நான் எழுதிய பின்னர் ஓர் எதிர் நிகழ்வு மீண்டும் தொடங்கியுள்ளது.

உற்பத்தி முறையின் அந்த முதல் படைப்புகளில்—முதலில் நிறைவேறுகிறது. பொருளுற்பத்தி முறையில் ஏற்பட்ட மாற்றங்களும், அதற்கேற்ப உற்பத்தியாளர்களின் சமுதாய உறவுகளில் ஏற்பட்ட மாற்றங்களும் [366]முதலில் சகல விதத்திலும் வரம்பு கடந்த மட்டு மீறலுக்கு வழி வகுத்தன. பின், இதற்கு எதிரிடையாக, சமுதாயத்திடமிருந்து ஒரு கட்டுப்பாட்டை அவசியமாக்கின. சமுதாயம் வேலை-நாளுக்கும், அதன் இடைநிறுத்தங்களுக்கும் சட்ட வரம்பிட்டு, அவற்றை ஒழுங்குபடுத்தி ஒரேசீரானவை ஆக்குகிறது. எனவே இந்தக் கட்டுப்பாடு பத்தொன்பதாவது நூற்றாண்டின் முதற் பாதியில் விதிவிலக்கான நிலைமைகளுக்குரிய சட்ட நெறியாகவே தோன்றுகிறது.[367] புதிய உற்பத்தி முறையின் இந்தப் பூர்விக ஆதிக்க மண்டலத்தில் தொழிற்சாலைச் சட்டங்கள் வாகை சூடியதுமே, இதற்கிடையில் இதர பல உற்பத்திக் கிளைகள் இதே ஆலைத் தொழிலுக்கு உட்படுமாறு செய்யப்பட்டதோடு, மண்பாண்டத் தொழில்கள், கண்ணாடி தயாரித்தல் போன்ற பெரும்பாலும் காலங்கடந்த வழிமுறைகளுடன் கூடிய பட்டறைத் தொழில்களும், ரொட்டி தயாரித்தல் போன்ற பழைய முறையிலான கைத்தொழில்களும், முடிவில், ஆணி தயாரித்தல் போன்ற வீட்டுத் தொழில்கள் [domestic industries] எனப்படுபவையும் கூட[368] நீண்ட கால முன்னரே தொழிற்சாலைகளைப் போலவே முதலாளித்துவச் சுரண்டலுக்கு முழுமையாக உட்பட்டு விட்டன என்பதும் தெரியலாயிற்று. எனவே, சட்டம் அதன் விதிவிலக்கான தன்மையை விட்டொழிக்க வேண்டியதாயிற்று; அல்லது, இங்கிலாந்தில் நடைபெற்றது போல—ரோமானிய விதண்டாவாதிகளின் பாணியைக் கடைப்பிடித்து—வேலை நடக்கிற ஒவ்வொரு வீடும் தொழிற்சாலையே என்று அறிவிக்க வேண்டியதாயிற்று.[369]

---

366 "இந்த வர்க்கங்கள் (முதலாளி வர்க்கம், தொழிலாளி வர்க்கம்) ஒன்று சார்பாக ஒன்று இருந்து வந்த நிலைமையின் விளைவே இவை ஒவ்வொன்றும் நடந்து கொண்ட விதம்". (தொ. ஆ. அறிக்கைகள், *1848 அக்டோபர் 31க்கானவை, பக்கம் 113.)*

367 "வரைமுறைக்குட்படுத்தப்பட்ட வேலைகள் நீராவி அல்லது நீர்விசையின் துணை கொண்டு ஜவுளித் துணிகளைத் தயாரிப்பது சம்பந்தப்பட்டவையாக இருந்தன. வேலையானது மேற்பார்வை ஆய்வுக்குட்பட வேண்டுமானால், இரு நிலைமைகள்—அதாவது நீராவி அல்லது நீர்விசையின் உபயோகமும், குறிப்பிட்ட சில நூலிழைகளின் தயாரிப்பும்—இருக்க வேண்டும்" *(தொ. ஆ. அறிக்கைகள், 1864 அக்டோபர் 31க்கானவை, பக்கம் 8.)*

368 வீட்டுத் தொழில்கள் எனப்படுபவற்றின் நிலைமை பற்றி, குழந்தையுழைப்பு ஆணையத்தின் மிகச் சமீபத்திய அறிக்கைகளில் தனி மதிப்புக்குரிய விஷயாதாரங்கள் இருக்கக் காணலாம்.

369 "சென்ற அமர்வின் (1864) சட்டங்கள்...பலதிறப்பட்ட தொழில் வகைகளும் இவற்றில் அடங்குகின்றன. இத்தொழில் வகைகள் வெகுவாக மாறுபடும் பழக்க வழக்கங்கள் கொண்டவை. இயந்திர சாதனத்தை இயக்குவதற்கு இயக்க ஆற்றல் பயன்படுத்தப்படுவது சட்ட வழக்கில் 'தொழிற்சாலை' ஆவதற்கு முன்போல் இப்போது அடிப்படைக் கூறுகளில் ஒன்றாய் இருக்கவில்லை." *(தொ .ஆ. அறிக்கைகள், 1864 அக்டோபர் 31க்கானவை, பக்கம் 8.)*

**இரண்டாவது:** குறிப்பிட்ட சில உற்பத்திக் கிளைகளில் வேலை-நாளை முறைப்படுத்தியதன் வரலாறும், இப்படி முறைப்படுத்துவதற்காக ஏனைய கிளைகளில் இன்னமும் நடைபெற்று வரும் போராட்டமும், தனிமைப்பட்ட உழைப்பாளி—தன் உழைப்புச் சக்தியை "சுதந்தரமாக" விற்பவன் என்ற தன்மையிலுள்ள உழைப்பாளி—முதலாளித்துவப் பொருளுற்பத்தி குறிப்பிட்ட கட்டத்தை எட்டியதுமே, எதிர்ப்புச் சக்தி ஏதுமின்றி அடங்கிப் போகிறான் என்பதைத் திட்டவட்டமாக நிரூபிக்கின்றன. ஆகவே முதலாளி வர்க்கத்துக்கும் தொழிலாளி வர்க்கத்துக்கும் இடையில் பெரும்பாலும் மறைவாக நீண்ட காலத்துக்கு நடைபெறும் ஓர் உள்நாட்டுப் போரின் விளைவாகவே இயல்பான வேலை-நாள் நிலை நாட்டப்படுகிறது. இப்போர் நவீனத் தொழில் துறை என்னும் களத்தில் நடப்பதால் தொழில் துறையின் பிறப்பிடமாகிய இங்கிலாந்தில் முதலில் வெடித்தெழுகிறது.[370] ஆங்கிலேய ஆலைத் தொழிலாளர்கள் ஆங்கிலேயத் தொழிலாளி வர்க்கத்தின் போராட்ட வீரர்களாக மட்டுமன்றி, பொதுவாக நவீனத் தொழிலாளி வர்க்கத்தின் போராட்ட வீரர்களாகவும் இருந்தனர்; ஏனெனில் அவர்களது தத்துவார்த்திகள்தாம் மூலதனத்தின் தத்துவார்த்தத்திற்கு முதன் முதலாகச் சவால் விடுத்தவர்கள்.[371] ஆகவே, ஆங்கிலேயத் தொழிலாளி வர்க்கம் "பரிபூரண உழைப்புச் சுதந்தரத்துக்காக" வீர தீரத்துடன் பாடுபடுகிற மூலதனத்தை எதிர்த்து ஏந்தியுள்ள

---

[370] கண்டத்து மிதவாதத்தின் சொர்க்கபுரியான பெல்ஜியத்தில் இந்த இயக்கத்தின் அறிகுறியே காணப்படவில்லை. நிலக்கரி, உலோகச் சுரங்கங்களில் கூட, இருபாலாரும் சகல வயதினருமான உழைப்பாளிகள் எந்த நேரத்திலும் எவ்வளவு காலத்துக்கு வேண்டுமானாலும் முழு "சுதந்தரத்தோடு" பயன்படுத்தப்படுகின்றனர். அங்கு வேலை வாங்கப்படுபவர்களில், 1,000 பேருக்கு 733 பேர் ஆண்கள், 88 பேர் மாதர்கள், 135 பேர் பையன்கள், 44 பேர் 16 வயதுக்குட்பட்ட சிறுமிகள்; வெடி உலைகள் முதலானவற்றில் 1,000பேருக்கு 668பேர் ஆண்கள், 149 பேர் மாதர்கள், 98 பேர் பையன்கள், 85 பேர் பதினாறு வயதுக்குட்பட்ட சிறுமிகள். பக்குவமானதும், பக்குவமற்றதுமான உழைப்புச் சக்தியின் இந்தப் பெரும் சுரண்டலுக்கான குறைந்த கூலியை இதனோடு சேர்த்துக் கொள்ளுங்கள். ஆணுக்கு சராசரி தினசரி ஊதியம் 2 ஷில்லிங் 8 பென்னி, பெண்ணுக்கு 1ஷில்லிங் 8பென்னி, பையனுக்கு 1 ஷில்லிங் 2½ பென்னி. இதன் விளைவாக நிலக்கரி, இரும்பு முதலானவற்றில் தன் ஏற்றுமதிகளின் அளவு, மதிப்பு இரண்டையுமே பெல்ஜியம் 1850உடன் ஒப்பிடுகையில் 1863இல் கிட்டத்தட்ட இரு மடங்காகப் பெருகச் செய்தது.

[371] ராபர்ட் ஓவன், 1810க்குப் பின்னர் சீக்கிரமே, வேலை-நாளுக்கு வரம்பிடுவதன் அவசியத்தைத் தத்துவார்த்தத்தில் வலியுறுத்தியது மட்டுமல்லாமல், நியூ லானார்க்கில் அவரது தொழிற்சாலையில் 10 மணி வேலை-நாளை உள்ளபடியே புகுத்தியும் விட்டார். கம்யூனிசக் கற்பனாவாதம் என்று இதைப் பார்த்து நகைத்தனர்; "குழந்தைகளின் கல்வியை உற்பத்தித் திறனுள்ள உழைப்புடன் இணைப்பது" என்ற அவரது திட்டமும், முதலில் அவரால் நிறுவப்பட்ட தொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களும் அவ்வாறே நகைப்புக்குள்ளாயின. முதலாவது கற்பனாவாதம், இன்று தொழிற்சாலைச் சட்டமாகி விட்டது. இரண்டாவது, சகல தொழிற்சாலைச் சட்டங்களிலும் அதிகார பூர்வச் சொற்றொடராக இடம் பெறுகிறது; மூன்றாவது, பிற்போக்கு மோசடிக்கு மூடுதிரையாக ஏற்கெனவே பயன்பட்டு வருகிறது.

பதாகையில் ''தொழிற்சாலைச் சட்டங்களின் அடிமைத்தனத்தைப்'' பொறித்துக் கொண்டது என்றும், இது அவ்வர்க்கத்துக்கு என்றென்றைக்கும் மறையாத அவமானம் ஆகும் என்றும் தொழிற்சாலைத் தத்துவஞானி யூர் கண்டிக்கிறார்.[372]

பிரான்ஸ் இங்கிலந்துக்குப் பின்னால் தட்டுத் தடுமாறி மெல்லச் செல்கிறது. 12 மணி நேரச் சட்டத்தைப் பெற்றெடுக்க பிப்ரவரிப் புரட்சி அவசியமாயிற்று.[373] இது அதன் ஆங்கிலேய மூலத்துடன் ஒப்பிடுகையில் குறைகள் மிகுந்தது. இருப்பினும், புரட்சிகரமான பிரெஞ்சு முறையில் தனிவித அனுகூலங்கள் உள்ளன. எவ்வித வேறுபாடுமின்றி எல்லாப் பட்டறைகளிலும் தொழிற்சாலைகளிலும் வேலை-நாளுக்கு ஒரே மாதிரியான வரம்பை அது முடிவாக விதிக்கிறது; ஆனால் ஆங்கிலேயச் சட்ட நெறியோ ஒருபோது இந்த அமிசத்திலும், மறுபோது அந்த அமிசத்திலுமாகச் சூழ்நிலைகளின் நெருக்குதலுக்கு வேண்டா வெறுப்புடன் பணிந்து கொடுக்கிறது; அது முரண்பாடான சட்டங்களின் படுமோசமான குழப்படியில் சிக்கி ஜீவனற்றுப் போய்க் கொண்டிருக்கிறது.[374] மறு புறம், இங்கிலாந்தில் குழந்தைகள், இளம்படியர், மாதர்கள் ஆகியோரின்

---

[372] யூர்: ''பிரெஞ்சு மொழிபெயர்ப்பு,Philosophie des Manufactures.'' பாரிஸ், 1836, பாகம் II, பக்கம் 39, 40, 67, 77 இன்னபிற.

[373] 1855இல் பாரிசில் நடந்த சர்வதேசப் புள்ளி விவரப் பேராயத்தின் தகவல் அறிக்கையில் பின்வருமாறு கூறப்பட்டுள்ளது: ''தொழிற்சாலைகளிலும் பட்டறைகளிலும் அன்றாட உழைப்பு நேரத்தை 12 மணி நேரமாக வரம்பிடுகிற பிரெஞ்சுச் சட்டம் இந்த வேலையைத் திட்டமாக நிர்ணயிக்கப்பட்ட மணிகளுக்குள் கட்டுப்படுத்தவில்லை. குழந்தைகளின் உழைப்புக்கு மட்டுமே காலை 5க்கும் இரவு 9க்கும் இடையில் என்று வேலை நேரம் விதிக்கப்பட்டுள்ளது. ஆகையால், அநேகமாக ஞாயிற்றுக் கிழமை தவிர, தங்கள் தொழிற்கூடங்களை இடைவேளையில்லாமல் இரவு பகல் இயங்கச் செய்வதற்கு, இந்த ஆபத்தான மௌனம் தங்களுக்களிக்கிற உரிமையைத் தொழிலதிபர்களில் சிலர் பயன்படுத்திக் கொள்கின்றனர். இந்த நோக்கத்துக்காக அவர்கள் தொழிலாளர்களின் இருவேறு குழுக்களைப் பயன்படுத்துகின்றனர்; இக்குழுக்களில் எதுவும் பட்டறையில் சேர்ந்தாற்போல் 12 மணி நேரத்துக்கதிகமாக இருப்பதில்லை; ஆனால் நிறுவனத்தின் வேலை இரவும் பகலும் நீடிக்கிறது; சட்டம் திருப்தியடைகிறது, ஆனால் மானுடம் திருப்தியடைகிறதா?'' ''மனித உயிரமைப்பின் மீது இரவு நேர உழைப்பின் நாசகரத் தாக்கம்'' என்பதோடு, ''வெளிச்சம் போதாத பட்டறைகளில் இரவு நேரத்தில் இருபாலாரும் சேர்ந்திருப்பதன் ஆபத்தான தாக்கத்துக்கும்'' அழுத்தம் தரப்படுகிறது.

[374] ''எடுத்துக்காட்டாக, என் வட்டத்திலேயே, ஒரே முற்றத்துக்குள், ஒரே நேரத்தில் வெளுப்பு, சாயத் தொழில்கள் சட்டத்தின் படி சாயக்காரராகவும், அச்சுத் தொழில்கள் சட்டத்தின் படி அச்சுக்காரராகவும், தொழிற்சாலைச் சட்டத்தின் படி இறுதி வடிவளிப்பாளராகவும் ஒரு தொழிலதிபர் இருக்கிறார்.'' (1861 அக்டோபர் 31க்கான தொ. ஆ. அறிக்கைகளில் திரு பேக்கரின் அறிக்கை, பக்கம் 20.) இந்தச் சட்டங்களின் பல்வேறு விதிகளையும் அவற்றிலிருந்து பிறக்கிற சிக்கல்களையும் பட்டியலிட்ட பின்னர் திரு பேக்கர் சொல்கிறார்: ''இதிலிருந்து, அதிபர் சட்டத்தை ஏய்க்க விரும்புமிடத்தில் இந்த மூன்று பாராளுமன்றச் சட்டங்களின் செயல்படுத்தலையும் சாதிப்பது மிகக் கடினமாகவே இருக்கும் என்பது தெரிய வரும்.'' ஆனால், இதன் மூலம் வழக்கறிஞர்களுக்கு சட்ட தாவாக்கள் நிச்சயம் கிடைக்கும்.

பெயரால் சாதிக்கப்பட்டதும். சமீபத்தில்தான் முதல் தடவையாக எல்லாருக்குமான பொது உரிமையாகக் கோரப்பட்டதுமாகிய ஒன்றை பிரெஞ்சுச் சட்டம் ஒரு கோட்பாடாகப் பிரகடனம் செய்கிறது.[375]

வட அமெரிக்காவின் ஐக்கிய அரசில், அடிமை முறை குடியரசின் ஒரு பகுதியை விகாரமாக்கிக் கொண்டிருந்த வரை தொழிலாளர்களின் சுயேச்சையான இயக்கம் ஒவ்வொன்றும் முடக்கப்பட்டது. உழைப்பானது கறுப்புத் தோலில் அடிமைச் சூட்டால் வடுப்பட்டுள்ள இடத்தில் வெள்ளைத் தோலிலும் விடுதலை பெற முடியாது. ஆனால், அடிமை முறையின் மரணத்திலிருந்து உடனே பிறந்தது புதிய வாழ்க்கை. உள்நாட்டுப் போரில் விளைந்த முதற் பலன் எட்டு மணி நேரக் கிளர்ச்சி; இரயில் எஞ்சின் வேகத்தில் இந்தக் கிளர்ச்சி அட்லாண்டிக்கிலிருந்து பசிபிக்குக்கு, நியூ இங்கிலாந்திலிருந்து கலிபோர்னியாவுக்கு அதிவிரைவாய்ப் பரவியது. பால்டிமரில் நடந்த (1866 ஆகஸ்டு 16) தொழிலாளர் பொதுப் பேராயம் அறிவித்தது: ''அமெரிக்க ஒன்றியத்தின் எல்லா அரசுகளிலும், எட்டு மணி நேரமே இயல்பான வேலை-நாள் ஆகுமென சட்டம் இயற்றுதல் வேண்டும். இந்த நாட்டின் உழைப்பை முதலாளித்துவ அடிமைத்தனத்திலிருந்து விடுவிப்பதற்கு இன்றைய முதற்பெரும் தேவை இதுவே. சீரும் சிறப்பும் வாய்ந்த இந்த விளைவு கிட்டும் வரை நமது முழு பலத்தையும் கொண்டு முயன்றிட உறுதி பூண்டுள்ளோம்.''[376] அதே நேரத்தில், ஜெனிவாவில் நடந்த சர்வதேச உழைக்கும் மக்கள் சங்கத்தின் பேராயம், லண்டன் பொது மன்றத்தின் பிரேரணையின் பேரில், ''வேலை-நாளுக்கு வரம்பிடுவதென்பது ஆரம்ப நடவடிக்கை; இஃதல்லாமல்

---

375 இவ்வாறு தொழிற்சாலை ஆய்வாளர்கள் இறுதியில் சொல்லத் துணிகின்றனர்: ''(வேலை-நாளுக்குச் சட்ட வரம்பிடுவதற்கு, மூலதனத்தின்) இந்த ஆட்சேபணைகள் உழைப்பின் உரிமைகள் என்ற பரந்த கோட்பாட்டின் முன்னர் மடிந்தே தீர வேண்டும்....களைப்படைதல் என்னும் பிரச்சினையே இல்லா விட்டாலும் கூட, தொழிலதிபருக்கு அவரது தொழிலாளியின் உழைப்பின் மீதுள்ள உரிமை ஏதேனும் ஒரு சமயத்தில் முடிவடைந்து, தொழிலாளியின் நேரம் தொழிலாளிக்கே சொந்தமாகிறது.'' (தொ. ஆ. அறிக்கைகள், 1862 அக்டோபர் 31க்கானவை, பக்கம் 54.)

376 ''இப்போதுள்ள ஏற்பாட்டில் அவசியமாகும் உழைப்பு நேரத்தின் அளவு மிதமிஞ்சியதாகுமென்றும், தொழிலாளிக்கு ஓய்வுக்கும் கல்விக்கும் நேரம் கிடைக்கச் செய்வது இருக்கட்டும், அடிமைத்தனத்திலிருந்து அதிகம் வேறுபடாத கட்டாயத் தொண்டூழிய நிலையில் அவரை அது அமிழ்த்தி விடுகிறது என்றும் டங்கர்க்கைச் சேர்ந்த தொழிலாளர்களாகிய நாங்கள் பிரகடனம் செய்கிறோம். அதனால்தான் ஒரு வேலை-நாளுக்கு 8 மணி நேரம் போதுமானது என்றும், அது போதுமானதென்று சட்ட பூர்வமாக அங்கீகரிக்க வேண்டும் என்றும் நாங்கள் தீர்மானிக்கிறோம்; அதனால்தான் பத்திரிகைகளென்ற அந்தச் சக்தி வாய்ந்த சாதனத்தை எங்கள் உதவிக்கு வருமாறு அழைக்கிறோம்....இந்த உதவியை எங்களுக்குச் செய்ய மறுக்கிற அத்தனை பேரையும் உழைப்புச் சீர்திருத்தத்துக்கும் உழைப்பாளியின் உரிமைகளுக்கும் எதிரிகளாக நாங்கள் கருதுவோம்.'' (நியூயார்க் அரசைச் சேர்ந்த டங்கர்க் உழைக்கும் மக்களின் தீர்மானம், 1866.)

மேம்பாட்டிற்கும் விடுதலைக்குமான ஏனைய எல்லா முயற்சிகளும் வீண் முயற்சிகளே....எட்டு மணி நேரமே வேலை-நாளுக்குரிய சட்ட வரம்பு என்று பேராயம் முன்மொழிகிறது'' என்று தீர்மானம் இயற்றியது.

இவ்வாறு அட்லாண்டிக்கின் இருபுறமும் உற்பத்தி நிலைமைகளிலிருந்து இயல்பாகவே வளர்ந்த தொழிலாளி வர்க்க இயக்கம் ஆங்கிலேயத் தொழிற்சாலை ஆய்வாளர் ரா. ஜே. சாண்டர்ஸ் கூறியதை ஆமோதித்தது: ''வேலை நேரம் வரம்பிடப்பட்டு, விதிக்கப்படும் வரம்பு கண்டிப்புடன் அமல் செய்யப்பட்டாலன்றி சமுதாயச் சீரமைப்புக்கான ஏனைய முயற்சிகள் வெற்றி பெறுமென எதிர்பார்க்க இடமேயில்லை.''[377]

நமது தொழிலாளி உற்பத்தி நிகழ்முறையிலிருந்து வெளிப்படும் போது, அதில் நுழைந்த போதிருந்த நிலையில் அவர் இருப்பதில்லை என்பதை ஒப்புக் கொண்டாக வேண்டும். சந்தையில் அவர் ஏனைய சரக்குடைமையாளர்களின் எதிரே ''உழைப்புச் சக்தி'' என்னும் சரக்கின் உடைமையாளராக, வியாபாரியினெதிரே வியாபாரியாக நின்றார். அவர் தனது உழைப்புச் சக்தியை முதலாளியிடம் விற்றதற்கான ஒப்பந்தம் அவர் தன்னைத்தானே விற்றுக் கொள்ளும் சுதந்தரமுடையவர் என்பதை எழுத்து வடிவில் நிரூபித்தது எனலாம். ஆனால் விற்பனை முடிந்ததும் வெளிப்படுவது என்ன? அவர் ஒன்றும் ''சுதந்தர கர்த்தா'' அல்லர் என்பதும், அவர் உழைப்புச் சக்தியை விற்பதற்குச் சுதந்தரமுடையவராக இருக்கும் காலம் அதனை விற்பதற்கு நிர்ப்பந்திக்கப்படுகிற காலமே ஆகும் என்பதும்,[378] உண்மையில் ''சுரண்டுவதற்கு சிறு தசைப்பற்றும், சிறிதளவே உணர்ச்சித் துடிப்பும், சொட்டு இரத்தமும் எஞ்சியிருக்கும் வரை''[379] அவரை உதிரமாகாளி தனது பிடியிலிருந்து விடப் போவதில்லை என்பதும் வெளிப்படுகிறது. ''தங்களை வாட்டி வதைக்கும் கொடுஞ்சர்ப்பத்திடமிருந்து''

---

[377] தொ. ஆ. அறிக்கைகள், 1848 அக்டோபருக்கானவை, பக்கம் 112.

[378] ''மேலும் தொழிலாளர்களுக்குப் பாதுகாப்பேதும் தேவையில்லை என்றும், தமக்குள்ள ஒரே உடைமையை — தம் கரங்களின் உழைப்பையும் நெற்றி வியர்வையையும் — விற்றுக் கொள்ளும் சுதந்தர கர்த்தாக்களாக அவர்களைக் கருதலாம் என்றும் அடிக்கடி முன்வைக்கப்படுகிற கருத்து பொய்யானது என்பதன் மறுக்க முடியாத நிரூபணமாக இந்நிகழ்ச்சிகள் (மூலதனத்தின் தந்திரச் செயல்கள், உதாரணமாக 1848-50இல்) அமைந்துள்ளன.'' (தொ. ஆ. அறிக்கைகள், 1850 ஏப்ரல் 30க்கானவை , பக்கம் 45.) ''சுதந்தர உழைப்புக்கு (அப்படிச் சொல்லலாம் என்றால்) சுதந்தர நாட்டிலேயே கூட தன்னைப் பாதுகாத்துக் கொள்ள சட்டத்தின் இரும்புக் கரம் தேவைப்படுகிறது.'' (தொ. ஆ. அறிக்கைகள் 1864 அக்டோபர் 31க்கானவை, பக்கம் 34.) ''உணவுடனோ உணவின்றியோ நாளுக்கு 14 மணி நேரம் வேலை செய்ய... அனுமதிப்பது — இது கட்டாயப்படுத்துவதற்கு ஒப்பாகும்....'' (தொ. ஆ. அறிக்கைகள், 1863 ஏப்ரல் 30க்கானவை, பக்கம் 40.)

[379] பிரெடெரிக் எங்கெல்ஸ், முன் வந்தது, பக்கம் 5.

''பாதுகாப்பு'' பெறுவதற்கு, தொழிலாளர்கள் ஒன்றுபட்டு ஆலோசித்து, ஒரு சட்டத்தை நிறைவேற்றுமாறு ஒரு வர்க்கம் என்ற முறையில் கட்டாயப்படுத்த வேண்டும். தொழிலாளர்கள் தாமே சுய விருப்பத்தின் பேரில் மூலதனத்துடன் ஒப்பந்தம் செய்து கொள்வதன் மூலம் தம்மையும் தம் குடும்பத்தினரையும் அடிமைத்தனத்துக்கும் மரணத்துக்கும் விற்று விடுவதை தடுக்கும்படியான சக்தி மிக்க சமுதாயத் தடையாக இச்சட்டம் திகழ வேண்டும்.[380] ''இழக்கவோ துறக்கவோ முடியாத மனித உரிமைகளின்'' படாடோபமான பட்டியலுக்கு பதிலாய் வருகிறது எளியதொரு மகா சாசனம்—வேலை-நாளுக்கு சட்ட வரம்பிட்டு, ''தொழிலாளியால் விற்கப்படும் நேரம் முடிவடைவதும், அவரது சொந்த நேரம் துவங்குவதும் எப்போது''[381] என்று தெளிவுபடுத்தும் மகா சாசனம். Quantum mutatus ab illo!*

[380] 10 மணி நேரச் சட்டம் அதற்குட்பட்ட தொழிற் கிளைகளில் ''முன்னாள் நீண்ட நேர தொழிலாளர்களின் அகால முதுமைக்கு முடிவு கட்டியது.'' (தொ. ஆ. அறிக்கைகள், 1859 அக்டோபர் 31க்கானவை, பக்கம் 47.) மூலதனமானது (தொழிற் சாலைகளில்) வரம்புக்குட்பட்ட நேரத்திற்கப்பால் இயந்திரங்களை இயக்குவதில் ஈடுபடுமாயின், வேலையில் ஈடுபடும் உழைப்பாளிகளின் உடல்நலனுக்கும், ஒழுக்க நெறிகளுக்கும் நிச்சயம் தீங்கு நேரிடவே செய்யும். அவர்கள் தங்களைப் பாதுகாத்துக் கொள்ளும் நிலையில் இல்லை.'' (முன் வந்தது, பக்கம் 8.)

[381] ''தொழிலாளியின் சொந்த நேரத்துக்கும் அவரது தொழில் அதிபரின் நேரத்துக்கும் இடையிலான வேறுபாடு இறுதியாக தெளிவு செய்யப்பட்டிருப்பது இன்னும் கூட பெரிய நற்பயனாகும். தான் விற்பது முடிவடைவதும், தனக்குச் சொந்தமானது தொடங்குவதும் எப்போது என்பது தொழிலாளிக்கு இப்போது தெரியும்; இதை முன் கூட்டியே நிச்சயமாகத் தெரிந்து வைத்திருப்பதன் மூலம் அவர் தனது சொந்த நேரத்தை சொந்தக் காரியங்களுக்காகப் பயன்படுத்த முன்கூட்டியே ஏற்பாடு செய்து கொள்ள முடிகிறது. (முன் வந்தது, பக்கம் 52.) ''(தொழிற்சாலைச் சட்டங்கள்) அவர்களைத் தங்களது சொந்த நேரத்தின் எஜமானர்கள் ஆக்கியதன் மூலம், நாளாவட்டத்தில் அரசியல் அதிகாரம் பெறுவதற்காக அவர்களை வழிநடத்தும் தார்மிக ஆற்றலை அவர்களுக்குக் கிடைக்கச் செய்துள்ளன.'' (முன் வந்தது, பக்கம் 47.) உள்ளபடியே மூலதனத்தின் உருவாகவே திகழ்கிற மனிதனுக்கு இயல்பானதாகிய மிருகத்தனத்திலிருந்து இச்சட்டம் முதலாளியைச் சிறிது விடுவிக்கவும் செய்கிறது என்றும், அது அவருக்குச் சிறிது ''பண்பாடு அடைய'' நேரம் கிடைக்கச் செய்கிறது என்றும் தொழிற் சாலை ஆய்வாளர்கள் அளவறிந்து எடுத்தாளும் சொற்களில் கேலி தொனிக்கக் கூறுகின்றனர்: ''முன்பெல்லாம் எஜமானருக்குப் பணத்தைத் தவிர வேறு எதற்கும் நேரமில்லை; வேலைக்காரருக்கோ உழைப்பைத் தவிர வேறு எதற்கும் நேரமில்லை.'' (முன் வந்தது, பக்கம் 48.)

* அந்தக் காலத்துக்கும் இதற்கும் இடையே எவ்வளவு பெரிய மாற்றம்!

## அத்தியாயம் XI

# உபரி-மதிப்பின் வீதமும் திரளும்

இது வரை செய்தது போலவே இந்த அத்தியாயத்திலும், உழைப்புச் சக்தியின் மதிப்பும், எனவே அந்த உழைப்புச் சக்தியின் மறுவுற்பத்தி அல்லது பராமரிப்புக்கு அவசியமான வேலை-நாளின் பகுதியும் குறிப்பிடப்பட்ட மாறாப் பருமன்கள் என்று வைத்துக் கொள்கிறோம்.

இப்படிக் கொள்வோமாயின் ஒரு திட்டமான காலத்தில் தனிப்பட்ட தொழிலாளி முதலாளிக்குக் கிடைக்கச் செய்கிற உபரி-மதிப்பின் வீதம் அந்த உபரி-மதிப்பின் திரளையும் தெரியப்படுத்துகிறது. உதாரணமாய், அவசிய உழைப்பு தினசரி 6 மணி நேரமாக இருக்க, அது 3 ஷில்லிங்குக்குச் சமமான அளவு தங்கத்தின் வாயிலாகத் தெரிவிக்கப்பட்டால், 3 ஷில்லிங் என்பது உழைப்புச் சக்தியின் தினசரி மதிப்பு அல்லது உழைப்புச் சக்தியை வாங்குவதில் முன்னீடு செய்யப்படும் மூலதனத்தின் மதிப்பு ஆகும். மேலும் உபரி-மதிப்பின் வீதம் 100% என்றால், 3 ஷில்லிங் என்ற இந்த மாறும்-மூலதனம் 3 ஷில்லிங் உபரி-மதிப்புத் திரளை உற்பத்தி செய்கிறது; அல்லது, தொழிலாளி 6 மணி நேரத்துக்குச் சமமான உபரி-உழைப்புத் திரளை அன்றாடம் வழங்குகிறார்.

ஆனால் முதலாளியின் மாறும்-மூலதனம் என்பது அவர் ஏககாலத்தில் வேலையில் ஈடுபடுத்துகிற உழைப்புச் சக்திகள் அனைத்தினுடையவும் மொத்த மதிப்பின் பணத் தெரிவிப்பாகும். ஆகவே, அதன் மதிப்பு ஓர் உழைப்புச் சக்தியின் சராசரி மதிப்பை, வேலையில் ஈடுபடுத்தப்படுகிற உழைப்புச் சக்திகளின் எண்ணிக்கையால் பெருக்கி வரும் தொகைக்குச் சமம். ஆகவே, உழைப்புச் சக்தியின் மதிப்பு குறிப்பிட்டதாய் இருக்க, மாறும்-மூலதனத்தின் பருமன் ஏககாலத்தில் வேலையில் ஈடுபடுத்தப்படுகிற தொழிலாளர்களின் எண்ணிக்கைக்கு நேர் விகிதத்தில் மாறுபடுகிறது. ஓர் உழைப்புச் சக்தியின் அன்றாட மதிப்பு = 3 ஷில்லிங் என்றால், அன்றாடம் 100 உழைப்புச் சக்திகளைச் சுரண்டும் பொருட்டு 300 ஷில்லிங் மூலதனம் முன்னீடு செய்யப்பட வேண்டும்; அன்றாடம்

n உழைப்புச் சக்திகளைச் சுரண்டுவதற்கு 3 ஷில்லிங் × n மூலதனம் முன்னீடு செய்யப்பட வேண்டும்.

இதே விதத்தில், ஓர் உழைப்புச் சக்தியின் அன்றாட மதிப்பாக இருக்கிற 3 ஷில்லிங் மாறும்-மூலதனம் அன்றாடம் 3 ஷில்லிங் உபரி-மதிப்பை உற்பத்தி செய்தால், 300 ஷில்லிங் மாறும்-மூலதனம் அன்றாடம் 300 ஷில்லிங் உபரி-மதிப்பை உற்பத்தி செய்யும்; 3 ஷில்லிங் × n மாறும்-மூலதனம் அன்றாடம் 3 ஷில்லிங் × n உபரி-மதிப்பை உற்பத்தி செய்யும். ஆகவே உற்பத்தி செய்யப்படுகிற உபரி-மதிப்பின் திரள் என்பது ஒரு தொழிலாளியின் வேலை-நாள் வழங்குகிற உபரி-மதிப்பை வேலையில் ஈடுபடுத்தப்படுகிற தொழிலாளர்களின் எண்ணிக்கையால் பெருக்கி வரும் தொகைக்குச் சமம். ஆனால், மேலும் பார்த்தால், உழைப்புச் சக்தியின் மதிப்பு குறிப்பிட்டதாய் இருக்க, தனியொரு தொழிலாளி உற்பத்தி செய்கிற உபரி-மதிப்பின் திரள் உபரி-மதிப்பு வீதத்தால் நிர்ணயிக்கப்படுகிறதென்பதால், இதிலிருந்து பின்வரும் விதி பெறப்படுகிறது: உற்பத்தி செய்யப்படும் உபரி-மதிப்பின் திரள் முன்னீடு செய்யப்படும் மாறும்-மூலதனத்தின் அளவை உபரி-மதிப்பின் வீதத்தால் பெருக்கி வரும் தொகைக்குச் சமம்; வேறு விதமாகச் சொன்னால்: அது, ஏக காலத்தில் ஒரே முதலாளியால் சுரண்டப்படும் உழைப்புச் சக்திகளின் எண்ணிக்கைக்கும் ஒவ்வொரு தனிப்பட்ட உழைப்புச் சக்தியின் மீதான சுரண்டல்-கடுமைக்கும் இடையிலான கூட்டு விகிதத்தால் நிர்ணயிக்கப்படுகிறது.

உபரி-மதிப்பின் திரள் S ஆகவும், சராசரி நாளில் தனிப்பட்ட தொழிலாளி வழங்குகிற உபரி-மதிப்பு s ஆகவும், ஒரு தனிப்பட்ட உழைப்புச் சக்தியை வாங்குவதில் அன்றாடம் முன்னீடு செய்யப்படும் மாறும்-மூலதனம் v ஆகவும் மாறும்-மூலதனத்தின் மொத்தத் தொகை V ஆகவும், ஒரு சராசரி உழைப்புச் சக்தியின் மதிப்பு P ஆகவும், அதன் மீதான சுரண்டல்-கடுமை $\frac{a'}{a}\left(\frac{\text{உபரி-உழைப்பு}}{\text{அவசிய-உழைப்பு}}\right)$ ஆகவும் வேலையில் ஈடுபடுத்தப்படுகிற தொழிலாளர்களின் எண்ணிக்கை n ஆகவும் இருப்பின் பெறப்படுவது:

$$S = \begin{cases} \frac{s}{v} \times V \\ P \times \frac{a'}{a} \times n. \end{cases}$$

சராசரி உழைப்புச் சக்தியின் மதிப்பு மாறாதிருக்கிறது என்று மட்டுமல்லாமல், முதலாளியால் வேலையில் ஈடுபடுத்தப்படும் தொழிலாளர்கள் சராசரித் தொழிலாளர்களாக வகுத்தமைக்கப்படுகின்றனர் என்றும் எப்போதுமே அனுமானித்துக் கொள்கிறோம். உற்பத்தி செய்யப்படுகிற உபரி-மதிப்பு சுரண்டப்படுகிற

தொழிலாளர்களின் தொகைக்கேற்ப அதிகரிக்காத விதிவிலக்கான நிலைகள் உண்டு. ஆனால் அப்போது உழைப்புச் சக்தியின் மதிப்பு மாறாதிருப்பதில்லை.

ஆகவே, திட்டமான உபரி-மதிப்புத் திரளின் உற்பத்தியில், ஒரு காரணியின் குறைவு மற்றொரு காரணியின் அதிகரிப்பால் ஈடு செய்யப்படலாம். மாறும்-மூலதனம் குறைந்து, அதே போது உபரி-மதிப்பின் வீதம் அதே விகிதத்தில் அதிகரித்தால், உற்பத்தி செய்யப் படும் உபரி-மதிப்பின் திரள் மாறாதுள்ளது. நமது முந்தைய அனுமானத்தின் அடிப்படையில், முதலாளி நாளொன்றுக்கு 100 தொழிலாளர்களைச் சுரண்டும் பொருட்டு 300 ஷில்லிங் முன்னீடு செய்ய வேண்டும். உபரி-மதிப்பின் வீதம் 50% என்றால், 300 ஷில்லிங் என்ற இந்த மாறும்-மூலதனம் 150 ஷில்லிங் அல்லது 100 × 3 வேலை-மணிகள் என்ற உபரி-மதிப்பை தருகிறது. உபரி-மதிப்பின் வீதம் இரு மடங்கானால், அல்லது வேலை-நாள் 6 இலிருந்து 9 மணிகளாக நீட்டப்படுவதற்குப் பதில் 6 இலிருந்து 12 மணிகளாக நீட்டப்பட்டு, அதே நேரத்தில் மாறும்-மூலதனம் பாதி குறைக்கப்பட்டு 150 ஷில்லிங் ஆக்கப்பட்டால், அதுவும் 150 ஷில்லிங் அல்லது 50 × 6 வேலை-மணிகள் என்ற உபரி-மதிப்பையே தருகிறது. ஆகவே மாறும்-மூலதனத்தின் குறைப்பு, உழைப்புச் சக்தியின் மீதான சுரண்டல்-கடுமை அதற்கேற்ப உயர்வதால் ஈடு செய்யப்படலாம்; அல்லது வேலையில் ஈடுபடுத்துகிற தொழிலாளர்களின் தொகையிலான குறைவு வேலை-நாளை நீட்டிப்பதால் ஈடு செய்யப்படலாம். ஆகவே சில குறிப்பிட்ட வரம்புகளுக்குள், மூலதனத்தின் சுரண்டலுக்குரிய உழைப்பின் வழங்கல் தொழிலாளர்களின் வழங்கலைப் பொறுத்ததன்று.[382] மாறாக, உபரி-மதிப்பு வீதத்தில் ஏற்படும் குறைவைத் தொடர்ந்து, மாறும்-மூலதனத்தின் அளவோ அல்லது வேலையில் ஈடுபடுத்தப் படும் தொழிலாளர்களின் எண்ணிக்கையோ அதே விகிதத்தில் அதிகரித்தால், உற்பத்தி செய்யப்படும் உபரி-மதிப்பின் திரள் மாறாது.

ஆயினும், வேலையில் ஈடுபடுத்தப்படும் தொழிலாளர்களின் எண்ணிக்கையிலான குறைவை, அல்லது முன்னீடு செய்யப்படும் மாறும்-மூலதனத்தின் அளவிலான குறைவை, உபரி-மதிப்பின் வீதத்தை உயர்த்துவதன் மூலமோ வேலை-நாளை நீட்டுவதன் மூலமோ ஈடு செய்வதற்கு மீற முடியாத வரம்புகள் உள்ளன. உழைப்புச் சக்தியின் மதிப்பு என்னவானாலும், தொழிலாளியின்

---

382 கொச்சைப் பொருளாதார அறிஞர்கள் ஆர்க்கிமிடிசைத் தலைகீழாக்கி, வழங்கலையும் வேண்டலையும் கொண்டு உழைப்பின் சந்தை விலையை நிர்ணயித்ததன் மூலம், உலகத்தை இயக்குவதற்கு அல்லாமல், அதன் இயக்கத்தை நிறுத்துவதற்கு வேண்டிய ஆதாரத் தானத்தை தாங்கள் கண்டுபிடித்து விட்டதாகக் கற்பனை செய்து கொள்கின்றனர். அவர்களுக்கு மேற்கூறிய ஆரம்ப விதி தெரியாது போலும்.

பராமரிப்புக்கு அவசியமான வேலை நேரம் 2 மணிகளானாலும் 10* மணிகளானாலும், நாள் முழுவதிலும் ஒரு தொழிலாளி உற்பத்தி செய்ய முடிகிற மொத்த மதிப்பு எப்போதுமே 24 மணி நேர உழைப்பு உருக்கொண்டுள்ள மதிப்பை விடக் குறைவான தாகும்; ஈடேற்றம் செய்யப்பட்ட 24 மணி நேர உழைப்புக்கான பணத் தெரிவிப்பு 12 ஷில்லிங் என்றால் 12 ஷில்லிங்கை விடக் குறைவானதாகும். உழைப்புச் சக்தியை மறுவுற்பத்தி செய்யும் பொருட்டே, அல்லது அதை வாங்குவதில் முன்னீடு செய்யப்பட்ட மூலதனத்தின் மதிப்பை மாற்றீடு செய்யும் பொருட்டே 6 வேலை-மணிகள் அன்றாடம் அவசியம் என்ற நம் முந்தைய அனுமானத்தில், 12 மணி நேர வேலை-நாளுடன் 100% உபரி-மதிப்பு வீதத்தில் 500 தொழிலாளர்களை வேலையில் ஈடுபடுத்துகிற 1,500 ஷில்லிங் மாறும்-மூலதனம் அன்றாடம் 1,500 ஷில்லிங் அல்லது 6 × 500 வேலை-மணிகள் என்னும் உபரி-மதிப்பை உற்பத்தி செய்கிறது. 200% உபரி-மதிப்பு வீதத்துடன் அல்லது 18 மணி நேர வேலை-நாளுடன் நாளொன்றுக்கு 100 தொழிலாளர்களை வேலையில் ஈடுபடுத்துகிற 300 ஷில்லிங் மூலதனம் 600 ஷில்லிங் அல்லது 12 × 100 வேலை-மணிகள் என்னும் உபரி-மதிப்புத் திரளை மட்டுமே உற்பத்தி செய்கிறது; முன்னீடு செய்யப்பட்ட மாறும்-மூலதனத்தையும் உபரி-மதிப்பையும் கூட்டி வரும் தொகைக்குச் சமமான அதன் மொத்த மதிப்பு-உற்பத்தி [value-product] நாள் முழுவதிலும் 1,200 ஷில்லிங் அல்லது 24 × 100 வேலை-மணிகள் என்ற தொகையை ஒருபோதும் அடைய முடியாது. சராசரி வேலை-நாளின் அறுதி வரம்பு [absolute limit]—இது இயற்கையாகவே எப்போதும் 24 மணி நேரத்துக்கு குறைவானது—மாறும்-மூலதனத்திலான குறைப்பை உபரி-மதிப்பு வீத உயர்வைக் கொண்டு, அல்லது சுரண்டப்படும் தொழிலாளர்களின் எண்ணிக்கையிலான குறைவை உழைப்புச் சக்தியின் மீதான சுரண்டல்-கடுமையின் உயர்வைக் கொண்டு ஈடு கட்டுவதற்கு ஓர் அறுதி வரம்பை விதிக்கிறது. இவ்விதி கூறாமலே விளங்குகிற ஒன்று. தான் வேலையில் ஈடுபடுத்துகிற தொழிலாளர்களின் எண்ணிக்கையை, அல்லது உழைப்புச் சக்தியாக மாற்றப் படுகிற தனது மாறும் அங்கத்தை முடிந்த வரை குறைப்பதென்ற மூலதனத்தின் போக்கிலிருந்து எழுகிற பல நிகழ்வுகளைத் தெளிவு படுத்துவதற்கு இந்த விதி முக்கியமானது (இது பற்றி பிற்பாடு விவரமாகக் கூறுவோம்). மூலதனத்தின் மேற்கூறிய போக்கானது முடிந்த வரை அதிகபட்ச உபரி-மதிப்புத் திரளை உற்பத்தி செய்வதென்ற அதன் மற்றொரு போக்கிற்கு நேர் முரணானது. மறு புறம், வேலையில் ஈடுபடுத்தப்படுகிற உழைப்புச் சக்தியின் திரள் அல்லது மாறும்-மூலதனத்தின் அளவு அதிகரித்து, ஆனால் அவ் வதிகரிப்பு உபரி-மதிப்பின் வீதத்திலான குறைவின் விகிதத்தில்

இல்லா விட்டால், உற்பத்தி செய்யப்படும் உபரி-மதிப்பின் திரள் குறைகிறது.

உற்பத்தி செய்யப்படும் உபரி-மதிப்பின் திரளை உபரி-மதிப்பின் வீதம், முன்னீடு செய்யப்படும் மாறும்-மூலதனத்தின் அளவு ஆகிய இரு காரணிகளைக் கொண்டு நிர்ணயிப்பதிலிருந்து மூன்றாவது விதி பிறக்கிறது. உபரி-மதிப்பின் வீதம் அல்லது உழைப்புச் சக்தியின் மீதான சுரண்டல்-கடுமையும், உழைப்புச் சக்தியின் மதிப்பு அல்லது அவசிய வேலை நேரத்தின் அளவும் குறிப்பிட்டவையாய் இருக்க, மாறும்-மூலதனம் எவ்வளவு அதிகமோ, உற்பத்தி செய்யப்படும் மதிப்பின் திரளும் உபரி-மதிப்பின் திரளும் அவ்வளவு அதிகமாய் இருக்குமென்பது சொல்லாமலே விளங்கும். வேலை-நாளின் வரம்பும் மேலும் அதன் அவசிய அங்கத்தின் வரம்பும் குறிப்பிட்டதாயிருக்க, தனியொரு முதலாளி உற்பத்தி செய்கிற மதிப்பு, உபரி-மதிப்பு ஆகியவற்றின் திரள் அவர் இயங்கச் செய்கிற உழைப்பின் திரளையே முழுக்கப் பொறுத்ததாகும் என்பது தெளிவு. ஆனால் மேலே அனுமானித்துக் கொள்ளப்பட்ட நிலைமைகளில் இது உழைப்புச் சக்தியின் திரளை, அதாவது அந்த முதலாளி சுரண்டுகிற தொழிலாளர்களின் எண்ணிக்கையைப் பொறுத்ததாகும்; இந்த எண்ணிக்கையோ முன்னீடு செய்யப்படும் மாறும்-மூலதனத்தின் அளவால் நிர்ணயிக்கப்படுகிறது. ஆகவே, உபரி-மதிப்பின் வீதமும் உழைப்புச் சக்தியின் மதிப்பும் குறிப்பிட்டதாய் இருக்க, உற்பத்தி செய்யப்படும் உபரி-மதிப்புத் திரள்கள் முன்னீடு செய்யப்படும் மாறும்-மூலதனங்களின் அளவுகளுக்கு நேர் விகிதத்தில் மாறுபடுகின்றன. முதலாளி தன் மூலதனத்தை இரு பகுதிகளாகப் பிரித்துக் கொள்கிறார் என்று இப்போது நமக்கு தெரிய வருகிறது. ஒரு பகுதியை அவர் உற்பத்திச் சாதனங்களில் முதலீடு செய்கிறார். இது அவரது மூலதனத்தின் மாறாப் பகுதியாகும். மறு பகுதியை உயிருள்ள உழைப்புச் சக்தியில் முதலீடு செய்கிறார். இந்தப் பகுதி அவரது மாறும்-மூலதனமாக அமைகிறது. ஒரே சமூகப் பொருளுற்பத்தி முறையின் அடிப்படையில், மாறா-மூலதனம், மாறும்-மூலதனம் என்ற மூலதனப் பிரிவினை வெவ்வேறு உற்பத்திக் கிளைகளில் வெவ்வேறு விதமாயிருக்கிறது. ஒரே உற்பத்தி கிளைகளுக்குள்ளேயும் கூட, தொழில் நுட்ப நிலைமைகளிலும் உற்பத்தி நிகழ்முறைகளின் சமுதாய இணைவுகளிலும் ஏற்படும் மாற்றங்களுக்கேற்ப இந்த உறவு மாறுகிறது. ஆனால் ஒரு குறிப்பிட்ட மூலதனம் மாறாப் பகுதியாகவும் மாறும் பகுதியாகவும் பிரிகிற விகிதாசாரம் என்னவாக இருந்தாலும், மாறாப் பகுதிக்கும் மாறும் பகுதிக்கும் இடையிலான விகிதம் 1:2 ஆனாலும் சரி, 1:10 ஆனாலும் சரி, அல்லது 1:x ஆனாலும் சரி, சற்றுமுன் சொல்லப்பட்ட விதி இதனால் பாதிக்கப்படுவதில்லை. ஏனெனில், நமது முந்தைய பகுப்பாய்வின் படி, மாறா-மூலதனத்தின் மதிப்பு

உற்பத்திப் பொருளின் மதிப்பில் அப்படியே திரும்பவும் இடம் பெறுகிறது. புதிதாக உற்பத்தி செய்யப்பட்ட மதிப்பில், புதிதாகப் படைக்கப்பட்ட மதிப்பு-உற்பத்தியில் அது சேருவதில்லை. 100 நூற்பாளர்களை வேலையில் ஈடுபடுத்துவதற்கு அவசியமானதை விட அதிகக் கச்சாப் பொருள், கதிர்கள் முதலானவை 1,000 நூற்பாளர்களை வேலையில் ஈடுபடுத்துவதற்கு அவசியமாகின்றன என்பது மெய்தான். ஆயினும், இந்தக் கூடுதல் உற்பத்திச் சாதனங்களின் மதிப்பு உயரலாம், குறையலாம், மாறாதிருக் கலாம்; அதிகமாகவோ குறைவாகவோ இருக்கலாம்; அவற்றை இயங்கச் செய்யும் உழைப்புச் சக்திகளைக் கொண்டு உபரி-மதிப்பைப் படைக்கும் நிகழ்முறை அதனால் எவ்விதத்திலும் பாதிக்கப்படுவதில்லை. எனவே, மேலே விள்க்கிக் கூறப்பட்ட விதி பின்வரும் வடிவத்தை எடுக்கிறது: வெவ்வேறு மூலதனங்களால் உற்பத்தி செய்யப்படும் மதிப்பு, உபரி-மதிப்பு இவற்றின் திரள் கள் — உழைப்புச் சக்தியின் மதிப்பு குறிப்பிட்டதாகவும், அதன் மீதான சுரண்டல்-கடுமை சமமாகவும் இருக்க — இந்த மூலதனங் களது மாறும் அங்கங்களின் அளவுகளுக்கு, அதாவது உயிருள்ள உழைப்புச் சக்தியாக மாற்றப்படுகிற அங்கங்களின் அளவுகளுக்கு நேர் விகிதத்தில் மாறுபடுகின்றன.

தோற்றத்தை அடிப்படையாக கொண்ட அனுபவம் அனைத் துடனும் இவ்விதி தெளிவாகவே முரண்படுகிறது. பிரயோகிக்கப் படும் மூலதனத்தின் மொத்தத் தொகையிலான சதவிகிதமாகக் கணக்கிட்டு பார்க்கையில், பஞ்சு நூற்பதிபர் மாறா-மூலதனத்தை அதிகமாகவும், மாறும்-மூலதனத்தை குறைவாகவும் ஈடுபடுத்து கிறார்; ரொட்டிக்காரர் ஒப்பளவில் மாறும்-மூலதனத்தை அதிக மாகவும் மாறா-மூலதனத்தைக் குறைவாகவும் ஈடுபடுத்துகிறார் என்ற காரணத்தால் ரொட்டிக்காரரை விட பஞ்சு நூற்பதிபர் குறைவான இலாபம் அல்லது உபரி-மதிப்பைப் பெறுவதில்லை என்பது யாவரும் அறிந்ததே. தோற்றத்திலான இந்த முரண் பாட்டைத் தீர்ப்பதற்கு, இன்னும் பல இடைநிலை உறுப்புகள் வேண்டியுள்ளன — ஆரம்ப இயற்கணிதத்தின் கண்ணோட்டத்தில், $\frac{0}{0}$ என்பது உள்ளபடியே இருக்கிற பருமனை குறிக்கக் கூடும் என்பதைப் புரிந்து கொள்ள பல இடைநிலை உறுப்புகள் வேண்டி யிருக்கிறதல்லவா, அது போல. தொல்சீர் பொருளாதாரம் இவ் விதியை வரையறுத்துக் கூறா விட்டாலும், உள்ளுணர்ச்சியால் உந்தப்பட்டு அதை பற்றிக் கொண்டுள்ளது; ஏனெனில், இவ்விதி மதிப்பு பற்றிய பொது விதியிலிருந்து அவசிய விளைவாய் பெறப் படுகிற ஒன்று. வலிந்து கையாளப்படும் சூட்சுமத்தைக் கொண்டு, முரண்பாடான நிகழ்வுகளுடன் மோதிக் கொள்ளாமல் இவ்விதியைக் காப்பாற்ற தொல்சீர் பொருளாதாரம் முயல்கிறது. இந்தத் தடைக்

கல்லைத் தாண்டுவதில் ரிக்கார்டோவின் மரபினர், தோல்வியைத் தழுவியது எப்படி என்பதைப் பின்னர் பார்ப்போம்.[383] கொச்சைப் பொருளாதாரம் எப்போதுமே ''உண்மையில் எதையும் கற்றறிவதில்லை;'' தோற்றங்களுக்குக் காரணமாய் அமைந்து அவற்றை ஆளுகிற விதியை விட்டு விட்டு, எங்கும் போலவே இங்கும் தோற்றங்களையே கட்டித் தழுவிக் கொள்கிறது. ஸ்பினோசா சொன்னதற்கு மாறாக, ''அறியாமையே போதுமான காரணம்'' என்று அது நம்புகிறது.

நாள் முழுவதிலும் ஒரு சமுதாயத்தின் மொத்த மூலதனம் இயங்கச் செய்யும் உழைப்பை ஒரே ஒரு கூட்டு வேலை-நாளாகக் கருதலாம். உதாரணமாக, தொழிலாளர்களின் எண்ணிக்கை பத்து லட்சமாகவும், ஒரு தொழிலாளியின் வேலை-நாள் 10 மணி நேரமாகவும் இருந்தால் சமுதாய வேலை-நாளில் நூறு லட்சம் மணிகள் அடங்கியுள்ளன. இந்த வேலை-நாளின் கால அளவு குறிப்பிட்டதாயிருக்க, அதன் வரம்புகள் உடல் வழியில் நிர்ணயிக்கப்பட்டாலும் சரி, சமூக வழியில் நிர்ணயிக்கப்பட்டாலும் சரி, தொழிலாளர்களின் எண்ணிக்கையை, அதாவது உழைக்கும் மக்கள் தொகையை அதிகமாக்குவதன் மூலம் மட்டுமே உபரி-மதிப்பின் திரளை அதிகமாக்க முடியும். இங்கே மக்கள் தொகைப் பெருக்கம் மொத்த சமுதாய மூலதனத்தால் உபரி-மதிப்பு உற்பத்தி செய்யப்படுவதற்குக் கணித வழிப்பட்ட வரம்பாக அமைகிறது. மாறாக, மக்கள் தொகையின் அளவு குறிப்பிட்டதாயிருக்க, வேலை-நாளை நீட்டிப்பதற்குள்ள சாத்தியப்பாடே இவ்வரம்பாக அமைகிறது.[384] ஆயினும் இந்த விதி இதுவரை பார்த்துள்ள உபரி-மதிப்பு வடிவத்துக்கு மட்டுமே பொருந்துவதாகும் என்பது அடுத்து வரும் அத்தியாயத்தில் தெரிய வரும்.

இது வரை உபரி-மதிப்பின் உற்பத்தியைப் பரிசீலித்ததிலிருந்து, ஒவ்வொரு பணத் தொகையும், அல்லது மதிப்புத் தொகையும் விருப்பம் போல் மூலதனமாக மாற்றத் தக்கதன்று எனத் தெரிய வரும். இந்த மாற்றத்தை ஏற்படுத்துவதற்கு, உண்மையிலேயே, குறிப்பிட்ட குறைந்தபட்ச அளவு பணம் அல்லது பரிவர்த்தனை-மதிப்பு தனிப்பட்ட பணவுடைமையாளர் அல்லது சரக்குடைமையாளரின் கையில் இருப்பது முன்தேவையாகும். மாறும்-மூலதனத்தின் குறைந்தபட்ச அளவென்பது உபரி-மதிப்பின் உற்பத்திக்காக

---

383 மேற்கொண்டு இது பற்றிய விவரங்கள் புத்தகம் IVஇல் தரப்படும்.

384 ''சமுதாயத்தின் உழைப்பு, அதாவது பொருளாதார நேரம் ஒரு குறிப்பிட்ட பகுதியாகும். உதாரணமாக, பத்து லட்சம் மக்களின் அன்றாடப் பத்து மணி நேரம், அல்லது நூறு லட்சம் மணி நேரம் என்போம்....மூலதனம் அதிகமாவதற்கு ஓர் எல்லையுண்டு. இந்த எல்லையை எந்தக் குறிப்பிட்ட காலத்திலும் உள்ளபடியே ஈடுபடுத்தப்படுகிற பொருளாதார நேரத்தின் அளவால் அறியலாம்.'' (''நாடுகளின் அரசியல் பொருளாதாரம் பற்றிய கட்டுரை.'' லண்டன், 1821, பக்கம் 47, 49.)

ஆண்டு பூராவிலும் நாள் முழுவதும் ஈடுபடுத்தப்படும் தனியொரு உழைப்புச் சக்தியின் அடக்க விலையாகும். இந்தத் தொழிலாளி தன் சொந்த உற்பத்திச் சாதனங்களைப் பெற்றிருந்து, ஒரு தொழிலாளியாக வாழ்வதில் திருப்தி அடைவாரேயானால், அவர் தன் வாழ்வுச் சாதனங்களின் மறுவுற்பத்திக்கு அவசியமான நேரத்துக்கதிகமாக, உதாரணமாய் நாளுக்கு 8 மணி நேரத்துக்கதிகமாக வேலை செய்யத் தேவையில்லை. மேலும், 8 வேலை-மணிகளுக்குப் போதுமான உற்பத்திச் சாதனங்கள் மட்டுமே அவருக்குத் தேவைப் படும். மறு புறம் அவரை இந்த 8 மணி நேரமன்னியில், உதாரணமாக 4 மணி நேர உபரி-உழைப்பை ஆற்றச் செய்கிற முதலாளிக்கு, கூடுதல் உற்பத்திச் சாதனங்கள் கிடைக்கச் செய்வதற்காகக் கூடுதல் பணத் தொகை தேவைப்படுகிறது. ஆயினும், நமது அனுமானத்தின் படி, அன்றாடம் தனதாக்கப்பட்ட உபரி-மதிப்பைக் கொண்டு ஒரு தொழிலாளியைப் போலவே—தொழிலாளியை விட மேலாக அன்று—வாழும் பொருட்டு, அதாவது தனது அவசியத் தேவைகளை நிறைவு செய்து கொள்ள இயலும் பொருட்டு, இரண்டு தொழிலாளர்களை அவர் வேலையில் ஈடுபடுத்த வேண்டியிருக்கும். இந்த நிலையில் அவரது உற்பத்தியின் நோக்கம் வெறும் வாழ்க்கைப் பராமரிப்பாகவே இருக்கும்; செல்வப் பெருக்கமாக இருக்காது. ஆனால் செல்வப் பெருக்கம் என்பது முதலாளித்துவப் பொருளுற்பத்தியின் உள்ளார்ந்த அவசியமாகும். அவர் சாதாரண தொழிலாளியைப் போல் இரு மடங்கே நன்றாக வாழ்வதற்கும், மேலும் உற்பத்தி செய்யப்படும் உபரி-மதிப்பில் பாதியை மூலதனமாக மாற்றுவதற்கும் தொழிலாளர்களின் தொகையையும் முன்னீடு செய்யப்படும் மூலதனத்தின் குறைந்தபட்ச அளவையும் அவர் 8 மடங்கு அதிகமாக்க வேண்டியிருக்கும். அவர் தன் தொழிலாளியைப் போலவே தானும் வேலையில் ஈடுபடலாம், உற்பத்தி நிகழ்முறையில் நேரடியாகப் பங்கேற்கலாம் என்பது மெய்தான். ஆனால் அவர் அப்போது முதலாளி, தொழிலாளி ஆகியோர் இடையிலான கலப்பினமே, ''சிறு எஜமானரே'' ஆவார். முதலாளி தான் ஒரு முதலாளியாக, அதாவது மூலதனத்தின் ஆளுருவமாகச் செயல்படுகிற நேரம் முழுவதையும், பிறர் உழைப்பைத் தனதாக்கவும், எனவே அதன் மீது ஆதிக்கம் செலுத்தவும், இந்த உழைப்பின் பலன்களை விற்பதற்கும் செலவிட இயல வேண்டுமென்பது முதலாளித்துவப் பொருளுற்பத்தியின் குறிப்பிட்ட வளர்ச்சிக் கட்டத்தில் அவசியமாகிறது.[385] ஆகவே, மத்திய காலத்தைச்

385 ''சாகுபடியாளர் தனது உழைப்பையே நம்பியிருக்க முடியாது; அப்படி நம்பியிருந்தால், அதனால் இழப்புக்கு ஆளாகிறார் என்று சொல்வேன். அவரது வேலை பொதுவாக அனைத்தையும் கவனித்துக் கொள்வதாக இருக்க வேண்டும்; அவரது கதிரடிப்புக்காரர் கண்காணிக்கப்பட வேண்டும்; இல்லா விட்டால் அடிக்கப்படாமல் போரோடு விடப்படும் தானியத்தின் வடிவில் விரைவில் அவர் தனது கூலியை இழக்க

சேர்ந்த கைவினைச் சங்கங்கள் [guilds], எந்தக் கைவினை ஆண்டானும் வேலைக்கு அமர்த்தக் கூடிய உழைப்பாளர்களின் தொகைக்கு மிகக் குறைந்த உச்சவரம்பிட்டு, ஆண்டான் முதலாளியாக மாற்றமடைவதை வலுவந்தமாகத் தடுக்க முயன்றன. உற்பத்திக்காக முன்னீடு செய்யப்படும் குறைந்தபட்சத் தொகை மத்திய காலத்தின் அதிகபட்சத்தைத் தாண்டி வெகுவாக அதிகரித்து விடும் போதுதான், பணம் அல்லது சரக்குகளின் உடைமையாளர் உள்ளபடியே முதலாளியாக மாறுகிறார். ஒரு குறிப்பிட்ட நிலைக்கப்பால் வெறும் அளவு வேறுபாடுகள் பண்பு வேறுபாடுகளாக மாறுகின்றன என்று ஹெகல் (அவரது "தர்க்கவியலில்") கண்டுபிடித்த விதி பிழையற்றதென்பது இயற்கை விஞ்ஞானத்தில் போலவே இங்கும் மெய்ப்பித்துக் காட்டப்படுகிறது.[386]

தன்னை முதலாளியாக உருமாற்றிக் கொள்ளும் பொருட்டு பணம் அல்லது சரக்குகளின் தனிப்பட்ட உடைமையாளர் வசம் இருக்க வேண்டிய மதிப்புத் தொகையின் குறைந்தபட்ச அளவு

---

நேரும்; தனக்காக வெட்டுவோரையும், அறுப்போரையும் ஏனையோரையும் கவனிக்க வேண்டும்; அடிக்கடி வேலியோரமாகச் சுற்றி வர வேண்டும்; கவனக் குறைவிற்கு வழியில்லாத படி பார்த்து கொள்ள வேண்டும்; அங்கும் இங்கும் போகாமல் அவர் ஒரே இடத்தில் இருப்பாரானால் கவனக் குறைவு ஏற்படவே செய்யும்." ("பலசரக்குகளின் தற்போதைய விலைக்கும் பண்ணைகளின் அளவு போன்றவற்றிற்கும் இடையிலான தொடர்பு பற்றிய ஆய்வு. ஒரு சாகுபடியாளர் எழுதியது." லண்டன், *1773*, பக்கம் *12*.) இந்தப் புத்தகம் மிகவும் சுவாரசியமானது. "முதலாளித்துவ சாகுபடியாளர்" அல்லது, நடைமுறையில் அழைக்கப்படுவது போல "வணிகச் சாகுபடியாளர்" என்பவர் வளர்ந்து உருவான விதத்தை இப்புத்தகத்திலிருந்து அறியலாம்; வயிற்றுப் பாட்டு ஜீவனத்தைக் கொண்டே காலந்தள்ள வேண்டியிருக்கும் சிறு சாகுபடியாளரை கேலி செய்து அவர் தற்பெருமை அடித்துக் கொள்வதைக் காணலாம். "முதலாளி வர்க்கம் முதலில் பகுதியாகவும், இறுதியில் முழுமையாகவும் உடல் உழைப்பின் அவசியத்திலிருந்து விடுவிக்கப்படுகிறது." ("நாடுகளின் அரசியல் பொருளாதாரம் பற்றிய விரிவுரைப் பாட நூல். மறைதிரு ரிச்சர்டு ஜோன்ஸ் எழுதியது." ஹெர்ட்ஃபோர்டு, *1852*, விரிவுரை *3*, பக்கம் *39*.)

[386] லாரெண்ட்டும் ஜெர்ஹார்ட்டும் முதன்முதல் விஞ்ஞான வழியில் வகுத்தளித்த நவீன இரசாயனத்தின் மூலக்கூறுத் தத்துவம் [molecular theory] இந்த விதியையே ஆதாரமாகக் கொண்டுள்ளது. (3ஆம் பதிப்பில் எங்கெல்ஸ் குறிப்பு:) இரசாயனி அல்லாதாருக்கு அவ்வளவாகத் தெளிவுபடாத இந்தக் கூற்றை விளக்குவதற்காக, நூலாசிரியர் இங்கே கார்பன் சேர்மங்களின் படிவரிசைகள் குறித்துப் பேசுகிறார் என்பதைச் சொல்லி வைக்கிறோம்; முதலில் இதற்கு *1843*இல் இப்பெயரிட்டவர் சா. ஜெர்ஹார்ட் ஆவார்; இதன் வரிசை ஒவ்வொன்றுக்கும் அதற்கேயுரிய பொதுவான இயற்கணிதச் சூத்திரம் உண்டு. இவ்வாறு பாரஃபின்களின் வரிசை: $C^nH^{2n+2}$; சாதாரண ஆல்கஹால்களின் வரிசை: $C^nH^{2n+2}O$; சாதாரண கொழுப்பு அமிலங்களின் வரிசை: $C^nH^{2n}O^2$; மற்றும் பல. மேற்கண்ட உதாரணங்களில் $CH^2$ என்பதை மூலக்கூறு சூத்திரத்தோடு வெறுமனே அளவு வழியில் சேர்ப்பதன் மூலம் தடவைக்குத் தடவை பண்பு வழியில் வேறுபட்ட பொருள் உண்டாக்கப்படுகிறது. இந்த முக்கியமான உண்மையை நிர்ணயிப்பதில் லாரெண்ட்டும் ஜெர்ஹார்ட்டும் ஆற்றிய (மார்க்சால் மிகையாக மதிப்பிடப்பட்ட) பங்கு குறித்துப் பார்க்கவும்: கோப், "Entwicklung der Chemie." Munchen, *1873*, பக்கம் *709*, *716*; மற்றும் ஷொர்லெமர், "அங்கக இரசாயனத்தின் உதயமும் வளர்ச்சியும்," லண்டன், *1879*, பக்கம் *54*.

முதலாளித்துவப் பொருளுற்பத்தியின் வெவ்வேறு வளர்ச்சிக் கட்டங் களுக்கேற்ப மாறுகிறது; குறிப்பிட்ட கட்டங்களில், வெவ்வேறு உற் பத்தித் துறைகளில் அவற்றின் தனி நிலைமைகளுக்கும் தொழில் நுட்ப நிலைமைகளுக்கும் ஏற்ப வேறுபடுகிறது. முதலாளித்துவப் பொருளுற்பத்தியின் தொடக்கத்திலேயே கூட, குறிப்பிட்ட சில உற் பத்தித் துறைகளுக்கு, தனியாட்களின் கையில் இருப்பதைக் காட்டி லும் அதிகப்படியான குறைந்தபட்ச மூலதனம் தேவைப்படுகிறது. இந்த நிலைமைதான் — கொல்பெர் காலத்தில் பிரான்சில் நடந்தது போலவும், நம் காலம் வரையில் பல ஜெர்மானிய அரசுகளில் நடப்பது போலவும் — தனியார்களுக்கு அரசு மானியங்கள் வழங்கப் படுவதற்கும் குறிப்பிட்ட சில தொழில், வாணிபக் கிளைகளின் சுரண்டலை சட்டபூர்வமாய் ஏகபோகமாக்கிக் கொள்ளும் கூட் டமைவுகள் (இவை நமது நவீனக் கூட்டுப் பங்கு நிறுமங்களின் முன்னோடிகளாகும்) உருவாவதற்கும் வழி செய்கிறது.[387]

நாம் கண்ணுற்றது போல, உற்பத்தி நிகழ்முறையினுள்ளேயே மூலதனம் உழைப்பின் மீது, அதாவது இயங்குகிற உழைப்புச் சக்தி அல்லது தொழிலாளியின் மீது மேலாண்மை பெறலாயிற்று. தொழி லாளி அவரது வேலையை ஒழுங்காகவும், முறையான மும்முரத் துடனும் செய்யுமாறு மூலதனத்தின் ஆளுருவமான முதலாளி கவனித்துக் கொள்கிறார்.

தொழிலாளி வர்க்கத்தை, அதன் வாழ்க்கைத் தேவைகள் நிர்ண யிக்கிற குறுகிய வட்டத்தைக் காட்டிலும் அதிகமாக வேலை செய்யு மாறு நிர்ப்பந்திக்கிற வலுவந்த உறவாக மூலதனம் மேலும் வளர லாயிற்று. மற்றவர்களது செயற்பாட்டின் மூலவராக அமைந்து, உபரி-உழைப்பைக் கறந்து, உழைப்புச் சக்தியைச் சுரண்டுவதாகிய மூலதனம் ஆற்றலிலும், வரம்புகளைத் துச்சமாக மதிப்பதிலும், கண்மூடித்தனத்திலும், செயல்திறனிலும், நேரடிக் கட்டாய உழைப் பின் அடிப்படையிலான முந்தைய அமைப்புகள் யாவற்றையும் விஞ்சி விடுகிறது.

முதலில், மூலதனம் உழைப்பைத் தனக்குக் கீழ்ப்படுத்துகிறது; வரலாற்று வழியில் உழைப்பு வந்தடைந்திருக்கும் தொழில் நுட்ப நிலைமைகளின் அடிப்படையிலேயே இதைச் செய்கிறது. ஆகவே, மூலதனம் உற்பத்தி முறையை உடனடியாக மாற்றுவதில்லை. ஆகவே, வேலை-நாளை நீட்டிப்பதைக் கொண்டு மட்டுமே உபரி-மதிப்பை — நாம் இதுகாறும் பார்த்துள்ள வடிவத்தில் — உற்பத்தி செய்வது உற்பத்தி முறையில் நிகழும்படியான எந்த மாற்றத்தை யும் சார்ந்ததன்று. உபரி-மதிப்பின் இந்த உற்பத்தி நவீனப் பஞ்சாலைகளில் எவ்வளவு முனைப்புடன் நடந்தேறியதோ அதே

387 இம்மாதிரியான அமைவுகளை மார்ட்டின் லூதர் "ஏகபோக நிறுவனங்கள்" என்றழைக்கிறார்.

முனைப்புடன் பழம்பாணியிலான ரொட்டித் தொழிலகங்களிலும் நடந்தேறியது.

சாமானிய உழைப்பு நிகழ்முறை என்ற கோணத்திலிருந்து உற்பத்தி நிகழ்முறையை நோக்கினால், உற்பத்திச் சாதனங்களுடன் தொழிலாளி உறவு கொண்டிருப்பது, அவை தனது அறிவார்ந்த உற்பத்திச் செயற்பாட்டுக்கு வகை செய்யும் சாதனமும் பொருளும் ஆகும் என்பதால்தானே தவிர, அவை மூலதனம் என்கிற பண்புடைத்திருப்பதால் அன்று. உதாரணமாக, தோல் பதனிடுவதில் அவர் தனது உழைப்பின் சாமானிய இலக்குப் பொருள் என்ற முறையிலேயே தோல்களைக் கையாள்கிறார். முதலாளியின் தோல் என்று அவர் தோலைப் பதனிடவில்லை. ஆனால், உற்பத்தி நிகழ்முறையை உபரி-மதிப்பைப் படைக்கும் நிகழ்முறையென்ற கோணத்திலிருந்து நாம் ஆராயத் தொடங்கியதுமே விவகாரம் மாறி விடுகிறது. உற்பத்திச் சாதனங்கள் பிறர் உழைப்பை உறிஞ்சுவதற்கான சாதனங்களாக உடனே மாறிப் போகின்றன. தொழிலாளி உற்பத்திச் சாதனங்களைப் பயன்படுத்துவதற்கு பதில், இப்போது உற்பத்திச் சாதனங்கள் தொழிலாளியைப் பயன்படுத்துகின்றன. அவரது உற்பத்திச் செயற்பாட்டின் பொருட் கூறுகள் என்ற முறையில் அவரால் நுகரப்படுவதற்குப் பதிலாக, அவை அவரைத் தமது வாழ்வு நிகழ்முறைக்கு அவசியமான உயிர்ப்புச் சக்தி என்ற முறையில் நுகர்கின்றன. மூலதனத்தின் வாழ்வு நிகழ்முறை இடையறாது விரிவடையும், இடையறாது பல்கிப் பெருகும் மதிப்பு என்ற முறையிலான அதன் இயக்கத்திலேயே அடங்கியுள்ளது. இரவில் ஓய்ந்து கிடக்கிற — உயிருள்ள உழைப்பு எதையும் உறிஞ்சாமலிருக்கிற — உலைகளும் பட்டறைகளும் முதலாளிக்கு "இழப்பு மட்டுமே" ஆகும். எனவேதான், உலைகளும் பட்டறைகளும் தொழிலாளர்களது இரவு உழைப்பின் மீது சட்டபூர்வ பாத்தியதை கொண்டாடுகின்றன. பணத்தை உற்பத்தி நிகழ்முறையின் பொருட் காரணிகளாக, உற்பத்திச் சாதனங்களாக மாற்றுவதே, இவற்றைப் பிறர் உழைப்புக்கும் உபரி-உழைப்புக்குமான பாத்தியதையாகவும் உரிமையாகவும் மாற்றி விடுகிறது. முடிவாக, முதலாளித்துவப் பொருளுற்பத்திக்கே உரித்தான இந்தப் புரட்டல் — உயிரற்ற உழைப்புக்கும் உயிருள்ள உழைப்புக்கும் இடையிலான உறவை, மதிப்புக்கும் மதிப்பைப் படைக்கிற சக்திக்கும் இடையிலான உறவை இப்படி முற்றிலும் தலைகீழாக்குவது — முதலாளிகளின் உணர்வில் எப்படிப் பிரதிபலிக்கிறது என்பதை ஓர் உதாரணம் தெளிவுபடுத்தும். 1848க்கும் 1850க்கும் இடையில் ஆங்கிலேயத் தொழிற்சாலைப் பிரபுமார்கள் நடத்திய கலகத்தின் போது, "மேற்கு ஸ்காட்லாந்தில் மிகப் பழைய, பெருமதிப்புக்குரிய தொழிலகங்களில் ஒன்றும், சுமார் நூறாண்டு காலமாக இருந்து வரும் நிறுமமும், 1752இலேயே இயங்கிக் கொண்டிருந்ததும், ஒரே குடும்பத்தின் நான்கு தலைமுறை

கள் நடத்தியிருப்பதுமான திருவாளர்கள் கார்லைல் சன்ஸ் & கம்பெனி என்ற பெயரில் பெய்ஸ்லியில் உள்ள லினன் மற்றும் பஞ்சு இழைத் தொழிற்சாலையின் அதிபதி''...இந்த ''அறிவார்ந்த கனவான்'' 1849 ஏப்ரல் 25 தேதிய கிளாஸ்கோ டெய்லி மெயிலில் ''அஞ்சல் முறை'' என்ற தலைப்பில் ஒரு கடிதம்[388] எழுதினார்: இதில், வேறு சிலவற்றுடன் கூட, அருவருக்கத் தக்க வாறு அப்பட்டமான பின்வரும் வாசகத்தையும் காணலாம்: ''நாம் இப்போது....தொழிற்சாலை 10 மணி நேரம்தான் வேலை செய்ய லாம் என்று வரம்பிடுவதால் விளையும் தீங்குகள் என்ன என்று பார்ப்போம்....அவை ஆலையதிபரின் வாய்ப்புகளுக்கும், சொத் துக்கும் மிகக் கடுமையான சேதமாக அமைகின்றன. அவர் (அதாவது அவரது வேலையாள்) முன்பு 12 மணி நேரம் வேலை செய்தார் என்றால், 10 மணி நேரமாக அதற்கு வரம்பிட்டு விட்டால், அவரது நிறுவனத்திலுள்ள 12 நூற்பு இயந்திரங்கள் அல்லது நூற்புக் கதிர்களைக் கொண்ட ஒவ்வொன்றும் 10ஐக் கொண்டதாகச் சுருங்கி விடும். விற்கப்படுமேயானால், அது 10ஐக் கொண்டதாக மட்டுமே கொண்டு மதிப்பிடப்படும். ஆக, நாட்டி லுள்ள ஒவ்வொரு தொழிற்சாலையின் மதிப்பும், இவ்விதம் ஆறிலொரு பங்கு குறைந்து போகும்.''[389]

மேலைய ஸ்காட்லாந்தின் இந்த முதலாளித்துவ மூளைக்கு, ''நான்கு தலைமுறைகளாகத்'' திரட்டப் பெற்ற முதலாளித்துவப் பண்புகளின் வாரிசான இந்த மூளைக்கு, நூற்புக் கதிர்கள் போன்ற உற்பத்திச் சாதனங்களின் மதிப்பு, மூலதனம் என்ற முறையில் தமது மதிப்பை பெருகச் செய்தலும், தினசரி திட்டமான அளவில் பிறரது ஊதியமிலா உழைப்பை விழுங்குதலுமான அவற்றின் இயல்புடன் பிரிக்க முடியாத படி பின்னிப் பிணைந்து விடுகிறது; இதன் விளை வாக, கார்லைல் & கம்பெனியின் அதிபர் உள்ளபடியே என்ன எதிர்பார்க்கிறார் தெரியுமா? தன் தொழிற்சாலையை விற்க நேரு மாயின், கதிர்களின் மதிப்பு மட்டுமல்லாமல், அத்துடன் கூட, உபரி-மதிப்பைக் கைப்பற்றிக் கொள்ளும் அவற்றின் சக்தியும்—அவற்றில் உருக்கொண்டிருப்பதும் இவ்வகைப்பட்ட கதிர்களின் உற்பத்திக்கு அவசியமானதுமாகிய உழைப்பு மட்டுமல்லாமல்,

---

388 தொழிற்சாலை ஆய்வாளர் அறிக்கைகள், 1849 ஏப்ரல் 30, பக்கம் 59.

389 முன் வந்தது, பக்கம் 60 தொழிற்சாலை ஆய்வாளர் ஸ்டுவர்ட் (அவரும் ஸ்காட்லாந்தியரே), ஆங்கிலேயத் தொழிற்சாலை ஆய்வாளர்களுக்கு மாறாக, முதலாளித்துவ சிந்தனை முறைக்கு முற்றிலும் அடிமைப்பட்டவர்; இவர் தன் அறிக்கை யில் இணைத்துள்ள இக்கடிதம் பற்றி வெளிப்படையாகக் கூறுகிறார்: இது ''அஞ்சல் முறையில் செயல்படுகிற ஆலையதிபர் எவரும் அதே தொழிலில் ஈடுபட்டிருப்பவர் களுக்கு விடுத்திருக்கும் விண்ணப்பங்களில், மிகவும் பயனுள்ள விண்ணப்பம் ஆகும்; வேலை-மணிகளின் ஏற்பாட்டில் மாற்றம் செய்வது தொடர்பாக சபலமுடையவர்களின் தப்பெண்ணங்களை அகற்றுவதற்கென்றே தயாரிக்கப்பட்ட விண்ணப்பம் ஆகும்.''

பெய்ஸ்லியைச் சேர்ந்த தீரமிக்க ஸ்காட்டுகளிமிடமிருந்து அவை அன்றாடம் கறக்க உதவுகிற உபரி-உழைப்பும் கூட—விலையாகத் தனக்குக் கிடைக்கும் என்று எதிர்பார்க்கிறார்; எனவேதான், வேலை-நாளை 2 மணி நேரம் குறைக்க நேருமாயின் 12 நூற்பு இயந்திரங்களின் விற்பனை விலை 10 நூற்பு இயந்திரங்களது விற்பனை விலையின் அளவிற்குத் தேய்ந்து போகும் என்று நினைக்கிறார்!

பகுதி IV

# ஒப்பீட்டு உபரி-மதிப்பின் உற்பத்தி

## அத்தியாயம் XII

## ஒப்பீட்டு உபரி-மதிப்பு என்ற கருத்தமைவு

தான் அமர்த்தும் உழைப்புச் சக்திக்காக முதலாளி கொடுக்கிற மதிப்புக்கான சமதையை மட்டும் உற்பத்தி செய்கிற வேலை-நாளின் அந்தப் பகுதியை, இதுகாறும் மாறாப் பருமனாகவே கருதி வந்துள்ளோம்; குறிப்பிட்ட உற்பத்தி நிலைமைகளிலும், சமுதாயத்தின் பொருளாதார வளர்ச்சியில் ஒரு குறிப்பிட்ட கட்டத்திலும் அது இவ்வாறு மாறாப் பருமனாகவே உள்ளது. தனது அவசிய வேலை நேரமாகிய இதற்கு மேல், தொழிலாளி 2, 3, 4, 6 — இத்தியாதி — மணி நேரம் தொடர்ந்து வேலை செய்ய முடியும் என்று பார்த்தோம். உபரி-மதிப்பு வீதமும், வேலை-நாளின் கால அளவும் [length of the working-day] இந்த நீட்டிப்பின் பருமனைப் பொறுத்தவை என்று கண்டோம். அவசிய-உழைப்பு நேரம் மாறாதிருந்தாலும், மறு புறம் மொத்த வேலை-நாள் மாறுந் தன்மையது என்று பார்த்தோம். இப்போது, வேலை-நாளின் கால அளவும், அவசிய-உழைப்புக்கும் உபரி-உழைப்புக்கும் இடையிலான அதன் பங்கீடும் குறிப்பிட்டதாய் இருப்பதாகக் கொள்வோம். உதாரணமாக ac என்ற முழுக் கோடு, அதாவது a——b—c என்பது 12 மணி நேரம் கொண்ட ஒரு வேலை-நாளைக் குறிக்கட்டும்; இதில் ab என்ற பாகம் 10 மணி நேர அவசிய-உழைப்பையும், bc என்ற பாகம் 2 மணி நேர உபரி-உழைப்பையும் குறிக்கட்டும். இப்போது acஐ நீட்டாமலே, அல்லது அப்படி நீட்டுவதன் மூலமல்லாமல், உபரி-மதிப்பின் உற்பத்தியை அதிகமாக்குவது எப்படி? அதாவது உபரி-உழைப்பை நீட்டிப்பது எப்படி?

acஇன் நீளம் குறிப்பிட்டதாய் இருந்த போதிலும், bcஐ அதன் இறுதி முனையாகிய (வேலை-நாளைக் குறிக்கும் acஇன் இறுதி முனையாகவும் உள்ள) cஐத் தாண்டி நீட்டுவதன் மூலம் இல்லாவிட்டாலும், அதன் தொடக்க முனையாகிய bஐ aஇன் திசையில் பின்னுக்குத் தள்ளுவதன் மூலம் bcஐ நீட்ட இயலுமெனத் தெரிகிறது. ab'bc என்ற கோட்டில் b'—b என்பது bcஇல் பாதிக்குச்

பாதிக்குச் சமமெனக் கொள்வோம்:

a —— b —ˡb — c

— அல்லது ஒரு மணி உழைப்பு நேரத்துக்குச் சமமெனக் கொள்வோம். இப்போது 12 மணி நேர வேலை-நாளான acஇல் நாம் b என்ற புள்ளியை b′க்கு நகர்த்தினால் bc என்பது b′c ஆகிறது; வேலை-நாள் முன்போலவே 12 மணி நேரமாக இருந்த போதிலும் உபரி-உழைப்பு அரைப் பங்கு கூடுகிறது; அது 2 மணி நேரத்திலிருந்து 3 மணி நேரமாக அதிகரிக்கிறது. ஆயினும், உபரி-உழைப்பு நேரத்தை இப்படி bcஇலிருந்து b′cக்கு நீட்டுவது, அதாவது 2 மணி நேரமாக இருந்ததை 3 மணி நேரமாக்குவது என்பது அதே போழ்தில் அவசிய-உழைப்பு நேரத்தை abஇலிருந்து ab′ஆகக் குறுக்காமல், அதாவது 10 மணி நேரமாக இருந்ததை 9 மணி நேரமாக்காமல் சாத்தியமன்று என்பது தெளிவு. உபரி-உழைப்பின் நீட்டிப்பு அவசிய-உழைப்பைக் குறுக்குவதற்கேற்ப அமையும்; அல்லது எதார்த்தத்தில் தொழிலாளியின் நன்மைக்காக முன்பு பயன்படுத்தப்பட்ட உழைப்பு நேரத்தின் ஒரு பகுதி முதலாளியின் நன்மைக்கான உழைப்பு நேரமாக மாற்றப்படும். வேலை-நாளின் கால அளவில் மாற்றமிருக்காது. அவசிய-உழைப்பு நேரம், உபரி-உழைப்பு நேரம் என்ற அதன் பகுப்பில்தான் மாற்றமிருக்கும்.

மறு புறம், வேலை-நாளின் கால அளவும், உழைப்புச் சக்தியின் மதிப்பும் குறிப்பிட்டதாய் இருக்கும் போது, உபரி-உழைப்பின் கால அளவும் குறிப்பிட்டதாகிறது என்பது தெளிவு. உழைப்புச் சக்தியின் மதிப்பு, அதாவது உழைப்புச் சக்தியை உற்பத்தி செய்வதற்குத் தேவையான உழைப்பு நேரம் அந்த மதிப்பின் மறுவுற்பத்திக்கு அவசியமான உழைப்பு நேரத்தை நிர்ணயிக்கிறது. ஒரு வேலை-மணி 6 பென்னியில் உருக்கொண்டு ஒரு நாள் உழைப்புச் சக்தியின் மதிப்பு ஐந்து ஷில்லிங்காய் இருந்தால், தொழிலாளி தன் உழைப்புச் சக்திக்காக மூலதனம் கொடுத்த மதிப்பை மாற்றீடு செய்யும் பொருட்டு, அல்லது தன் அன்றாட அவசிய வாழ்வுச் சாதனங்களின் மதிப்புக்கான சமதையை உற்பத்தி செய்யும் பொருட்டு நாளுக்கு 10 மணி நேரம் வேலை செய்ய வேண்டும். இந்த வாழ்வுச் சாதனங்களின் மதிப்பு குறிப்பிட்டதாய் இருக்க, அவரது உழைப்புச் சக்தியின் மதிப்பும் குறிப்பிட்டதாகிறது.[390]

---

390 தொழிலாளி பெறும் சராசரி அன்றாடக் கூலியின் மதிப்பு "வாழ்வதற்கும், உழைப்பதற்கும், இன விருத்திக்கும்" அவருக்குத் தேவைப்படுகிறவற்றால் நிர்ணயிக்கப்படுகிறது. (வில்லியம் பெட்டி: "அயர்லாந்தின் அரசியல் பகுப்பாய்வு," 1672, பக்கம் 64.) "உழைப்பின் விலை எப்போதுமே அவசியப் பண்டங்களின் விலையால் ஆனது.... உழைப்பவரின் கூலி, உழைப்பவர் என்ற முறையில் அவரது தாழ்ந்த நிரத்துக்கும் நிலைக்கும் பொருத்தமாக — அவர்களில் பலரும் பெற்றிருக்கும் படியான — குடும்பத்தைக் காப்பாற்றப் போதுமானதாய் இல்லாத...போதெல்லாம்," அவர் பெறுவது சரியான கூலியாகாது. (ஜே. வாண்டர்லிண்ட், முன் வந்தது, பக்கம் 15.) "கையும் சுறுசுறுப்பும் தவிர வேறேதும் கொண்டிராத சாமானியத் தொழிலாளி எப்படியாவது

அவரது உழைப்புச் சக்தியின் மதிப்பு குறிப்பிட்டதாய் இருக்க, அவரது அவசிய-உழைப்பு நேரத்தின் அளவும் குறிப்பிட்டதாகிறது. ஆயினும், உபரி-உழைப்பின் கால அளவு அவசிய-உழைப்பு நேரத்தை மொத்த வேலை-நாளிலிருந்து கழிப்பதன் மூலம் பெறப் படுகிறது. பன்னிரண்டு மணி நேரத்திலிருந்து பத்து மணி நேரத் தைக் கழித்தால் மீதி இரண்டு மணி நேரம்; குறிப்பிட்ட நிலைமை களில் உபரி-உழைப்பை இரண்டு மணி நேரத்துக்கு அதிகமாக நீட்டிப்பது எப்படிச் சாத்தியம் என்பதை அறிவது எளிதன்று. முதலாளி தொழிலாளிக்கு ஐந்து ஷில்லிங் ஊதியமளிப்பதற்கு பதில் நான்கு ஷில்லிங் ஆறு பென்னி அல்லது இன்னும் குறை வாகவே கூடக் கொடுக்கலாம் என்பது மெய்தான். நான்கு ஷில்லிங் ஆறு பென்னி என்ற இம்மதிப்பை மறுவுற்பத்தி செய்வதற்கு ஒன்பது மணி நேர உழைப்பு போதும்; ஆதலால் முதலாளிக்கு இரண்டு மணி நேர உபரி-உழைப்புக்கு பதில் மூன்று மணி நேர உபரி-உழைப்பு கிடைக்கும்; உபரி-மதிப்பு ஒரு ஷில்லிங்கிலிருந்து பதினெட்டு பென்னியாக உயரும். ஆயினும், தொழிலாளியின் கூலியை அவரது உழைப்புச் சக்தியின் மதிப்புக்கும் குறைவாகத் தாழ்த்துவதன் மூலம் மட்டுமே இந்த விளைவை அடையலாம். தான் ஒன்பது மணி நேரத்தில் உற்பத்தி செய்கிற நான்கு ஷில்லிங் ஆறு பென்னியைக் கொண்டு, அவர் வாழ்க்கையின் அவசியப் பண்டங் களை முன்னை விடப் பத்திலொரு பங்கு குறைவாகவே பெற முடிகிறது; ஆதலால் அவரது உழைப்புச் சக்தியின் முறையான மறுவுற்பத்தி முடமாக்கப்படுகிறது. இந்நிலையில் உபரி-உழைப்புக் குரிய முறையான வரம்புகளை மீறுவதன் மூலமே உபரி-உழைப்பை நீட்டிக்க முடியும்; அதன் களம் அவசிய-உழைப்பு நேரத்தின் களத்தில் ஒரு பகுதியை அபகரிப்பதன் மூலமே விரிவடைய முடியும். இந்த வழிமுறை உள்ளபடியே நடைமுறையில் முக்கியப் பங்கு ஆற்றுகிறது. ஆனால், உழைப்புச் சக்தி உட்பட எல்லாச் சரக்குகளும் அவற்றின் முழு மதிப்பிற்கே வாங்கவும் விற்கவும் படுகின்றன என்ற நமது அனுமானம் இந்த இடத்தில் நாம் இந்த வழிமுறையைப் பரிசீலிக்க விடாமல் தடுக்கிறது. இந்த அனுமா னத்தைக் கொள்வோமானால் உழைப்புச் சக்தியின் உற்பத்திக்கு அல்லது அதன் மதிப்பின் மறுவுற்பத்திக்கு அவசியமான உழைப்பு நேரம் குறைவது உழைப்புச் சக்தியின் மதிப்பு சரிவதால் சாத்தியமே

---

*தனது உழைப்பைப் பிறரிடம் விற்றால் தான் உண்டு....ஒவ்வொரு வகை உழைப்பிலும், தொழிலாளி பெறும் கூலி அவர் தனது பிழைப்பைத் தேடிக் கொள்வதற்குத் தேவைப்படுகிற அளவுக்கு மேல் போய் விடாதவாறு வரம்பிடப்பட வேண்டும். இப்படித்தான் நடைபெற வேண்டும்; உண்மையில் இப்படித்தான் நடைபெறுகிறது.'' (துர்கோ, ''Reflexions, &c.,'' Oeuvres, பதிப்பு: டைரே, பாகம் I., பக்கம் 10.) ''வாழ்க்கையின் அவசியப் பண்டங்களது விலை, உண்மையில், உழைப்பை உற்பத்தி செய்வதற்கான செலவே ஆகும்.'' (மால்தஸ், ''வாடகையின்...ஆய்வு,'' லண்டன், 1815, பக்கம் 48, குறிப்பு.)*

தவிர, தொழிலாளியின் கூலி அவரது உழைப்புச் சக்தியின் மதிப்புக்கும் குறைவாக வீழ்வதால் சாத்தியமன்று. வேலை-நாளின் கால அளவு குறிப்பிட்டதாய் இருக்க, உபரி-உழைப்பின் நீட்டிப்பு தவிர்க்க முடியாமலே அவசிய-உழைப்பு நேரத்தின் குறைப்பிலிருந்துதான் வர வேண்டும்; பின்னது முன்னதிலிருந்து வர முடியாது. நாம் எடுத்துக் கொண்டிருக்கும் உதாரணத்தில், அவசிய-உழைப்பு நேரம் பத்திலொரு பங்கு (அதாவது பத்து மணி நேரத்திலிருந்து ஒன்பது மணி நேரமாக) குறைக்கப்படுவதற்கும், இதன் விளைவாக உபரி-உழைப்பு இரண்டு மணி நேரத்திலிருந்து மூன்று மணி நேரமாக நீட்டப்படுவதற்கும், உழைப்புச் சக்தியின் மதிப்பு உள்ளபடியே பத்திலொரு பங்கு வீழ்வது அவசியம்.

ஆயினும், உழைப்புச் சக்தியின் மதிப்பிலான இத்தகைய வீழ்ச்சி, முன்னர் பத்து மணி நேரத்தில் உற்பத்தி செய்த அதே அவசியப் பண்டங்களை இப்போது ஒன்பது மணி நேரத்தில் உற்பத்தி செய்ய முடியும் என்பதைக் குறிக்கிறது. ஆனால் உழைப்பின் உற்பத்தித் திறன் அதிகரிக்காமல், இது சாத்தியமில்லை. உதாரணமாக, பாத அணி புனைகிற ஒருவர் குறிப்பிட்ட கருவிகளைக் கொண்டு பன்னிரண்டு மணி நேரம் கொண்ட வேலை-நாளில் ஒரு ஜதை பாத அணிகளைப் புனைவதாகக் கொள்வோம். அவர் அதே பன்னிரண்டு மணி நேரத்தில் இரண்டு ஜதைகளைப் புனைய வேண்டுமானால், அவரது உழைப்பின் உற்பத்தித் திறனை இரட்டிப்பாக்க வேண்டும்; அவரது கருவிகளிலோ வேலை முறையிலோ, அல்லது இரண்டிலுமோ மாற்றம் செய்தாலன்றி இதைச் செய்ய முடியாது. எனவே உற்பத்தி நிலைமைகள், அதாவது அவரது உற்பத்தி முறையும், உழைப்பு நிகழ்முறையும் கூட புரட்சிகரமாக மாற்றப்பட வேண்டும். உழைப்பின் உற்பத்தித் திறன் அதிகமாவதாகச் சொல்லும் போதெல்லாம், பொதுவாக சரக்கின் உற்பத்திக்குச் சமூக வழியில் அவசியமான உழைப்பு நேரத்தைக் குறைக்கும் விதத்திலும், குறிப்பிட்ட அளவிலான உழைப்புக்கு இன்னும் பெரிய அளவிலான பயன்-மதிப்பை உற்பத்தி செய்கிற சக்தி வாய்க்கும் விதத்திலும் உழைப்பு நிகழ்முறையில் செய்யப்படும் மாற்றத்தையே குறிக்கிறோம்.[391] இது வரை, வேலை-நாளை நீட்டிப்பதிலிருந்து மட்டுமே கிடைக்கிற உபரி-மதிப்பைப் பரிசீலிக்கையில், உற்பத்தி முறை குறிப்பிட்டதெனவும் மாறாத் தன்மையதெனவும் வைத்துக் கொண்டோம். ஆனால் மூலதனமானது

---

391 ''தொழில்கள் இன்னும் செம்மையான வடிவம் பெறுகிற போது, முன்னைக் காட்டிலும் குறைவான ஆட்களைக் கொண்டு அல்லது குறுகிய காலத்தில் (இரண்டும் ஒன்றுதான்) பண்டத்தைச் செய்திடும் புதிய வழிகளைக் கண்டுபிடித்தல் என்பதுதான் இதன் பொருள், வேறு ஒன்றுமில்லை.'' (காலியானி, முன் வந்தது, பக்கம் 159.) "உற்பத்திச் செலவில் சிக்கனங்கள் என்பது உற்பத்தியில் ஈடுபடுத்தப்படும் உழைப்பின் அளவில் சிக்கனங்கள் என்பதாகத்தான் இருக்க முடியும்.'' (சிஸ்மொந்தி, ''Etudes,'' பாகம் I., பக்கம் 22.)

அவசிய-உழைப்பை உபரி-உழைப்பாக மாற்றி உபரி-மதிப்பை உற்பத்தி செய்ய வேண்டுமானால் வரலாற்று வழியில் கிடைக்கப் பெற்ற உழைப்பு நிகழ்முறையை அதே வடிவில் கைக்கொண்டு அந் நிகழ்முறையின் கால அளவை நீட்டிப்பது மட்டும் போதாது. உழைப்பின் உற்பத்தித் திறனை அதிகமாக்க வேண்டுமாயின், இந் நிகழ்முறையின் தொழில் நுட்ப நிலைமைகளும் சமூக நிலைமைகளும், ஆதலால் உற்பத்தி முறையும் கூட புரட்சிகரமாக மாற்றப் பட வேண்டும். இவ்வழியில்தான், உழைப்புச் சக்தியின் மதிப்பைக் குறையச் செய்ய முடியும், அந்த மதிப்பின் மறுவுற்பத்திக்கு அவசியமான வேலை-நாட் பகுதியை சுருங்கச் செய்ய முடியும்.

வேலை-நாளை நீட்டிப்பதன் மூலம் உற்பத்தி செய்யப்படும் உபரி-மதிப்பை **அறுதி உபரி-மதிப்பு** [absolute surplus-value] என்றழைக்கிறேன். மறுபுறம், அவசிய-உழைப்பு நேரத்தைக் குறைப்பதன் மூலமும், வேலை-நாளின் இரு அங்கங்களின் கால அளவுகளும் இதற்கொப்ப மாறுவதன் மூலமும் கிடைக்கிற உபரி-மதிப்பை **ஒப்பீட்டு உபரி-மதிப்பு** [relative surplus-value] என்றழைக்கிறேன்.

உழைப்புச் சக்தியின் மதிப்பு குறைய வேண்டுமானால், உழைப்பின் உற்பத்தித் திறனிலான அதிகரிப்பு உழைப்புச் சக்தியின் மதிப்பை நிர்ணயிக்கிற பண்டங்களை, அதாவது வழக்கமான வாழ்வுச் சாதனங்களின் வகையைச் சேர்ந்தவையாகவோ அந்தச் சாதனங்களுக்கு பதிலாக அமையக் கூடியவையாகவோ இருக்கும் பண்டங்களை உற்பத்தி செய்கிற தொழிற் கிளைகளில் உழைப்பின் உற்பத்தித் திறன் அதிகரித்தாக வேண்டும். ஆனால், சரக்கின் மதிப்பு, நேரடியாக உழைப்பாளி அச்சரக்கில் சேர்க்கிற உழைப்பின் அளவால் மட்டுமன்றி, உற்பத்திச் சாதனங்களில் அடங்கியுள்ள உழைப்பாலும் நிர்ணயிக்கப்படுகிறது. எடுத்துக்காட்டாக, ஒரு ஜதை பாத அணிகளின் மதிப்பு பாத அணித் தொழிலாளியின் உழைப்பை மட்டுமல்லாமல் தோல், மெழுகு, நூல் முதலானவற்றின் மதிப்பையும் பொறுத்ததாகும். எனவே, வாழ்க்கையின் அவசியப் பண்டங்களை உற்பத்தி செய்வதற்குத் தேவைப்படும் மாறா-மூலதனத்தின் பொருட் கூறுகளாக அமைகிற உழைப்புச் சாதனங்களையும் கச்சாப் பொருளையும் வழங்குகிற தொழில்களில் உழைப்பின் உற்பத்தித் திறன் அதிகரிப்பதாலும், அதற்கொப்ப சரக்குகள் மலிவாகிப் போவதாலும் கூட உழைப்புச் சக்தியின் மதிப்பு குறைந்து போகலாம். ஆனால் வாழ்கையின் அவசியப் பண்டங்களையோ இந்த அவசியப் பண்டங்களுக்கான உற்பத்திச் சாதனங்களையோ வழங்காத தொழிற் கிளைகளில் உழைப்பின் உற்பத்தித் திறனில் ஏற்படும் அதிகரிப்பால் உழைப்புச் சக்தியின் மதிப்பு பாதிக்கப்படுவதில்லை.

மலிவாகி விட்ட சரக்கு, உழைப்புச் சக்தியின் மதிப்பில் அந்த அளவு சரிவையே—உழைப்புச் சக்தியின் மறுவுற்பத்தியில் அந்தச்

சரக்கு ஈடுபடுத்தப்படும் அளவுக்கேற்ற சரிவையே—தோற்றுவிக்கிறது. எடுத்துக்காட்டாக, சட்டை அவசிய வாழ்வுச் சாதனமாகும். ஆனால் அது அவசியமான பலவற்றில் ஒன்றே. ஆயினும், வாழ்க்கையின் அவசியப் பண்டங்களது முழுமொத்தம் என்பது—ஒவ்வொன்றும் ஒரு தனித் தொழிலின் உற்பத்திப் பொருளாகிய—பல்வேறு சரக்குகளால் ஆனது; அச்சரக்குகள் ஒவ்வொன்றின் மதிப்பும் உழைப்புச் சக்தியின் மதிப்பில் உள்ளடக்கக் கூறாகச் சேர்கிறது. உழைப்புச் சக்தியின் மறுவுற்பத்திக்கு அவசியமான உழைப்பு நேரம் குறையும் போது உழைப்புச் சக்தியின் மதிப்பும் குறைகிறது; உழைப்பு நேரத்தில் ஏற்படும் மொத்தக் குறைவு என்பது அந்தப் பல்வேறு, தனித் தனித் தொழில்களில் செய்யப்படும் வெவ்வேறு உழைப்பு நேரக் குறைப்புகள் அனைத்தின் மொத்தமாகும். இங்கே, இந்தப் பொதுவான விளைவு அந்தந்த நேர்விலும் நேரடிக் குறிக்கோளாகக் கொள்ளப்பட்ட உடனடி விளைவு போலக் கருதப்படுகிறது. எடுத்துக்காட்டாக, தனியொரு முதலாளி உழைப்பின் உற்பத்தித் திறனை அதிகமாக்குவதன் மூலம் சட்டைகளை மலிவாக்கும் போதெல்லாம், உழைப்புச் சக்தியின் மதிப்பைக் குறைப்பதும், அந்த அளவுக்கு அவசிய-உழைப்பு நேரத்தைச் சுருக்குவதும் அவரது குறிக்கோளாயிருக்க வேண்டிய கட்டாயமில்லை. ஆனால், முடிவில் இவ்விளைவு ஏற்படுவதற்குப் பங்கு செலுத்துகிறார் என்ற அளவில்தான், அவர் பொதுவான உபரி- மதிப்பு வீதத்தை உயர்த்த உதவுகிறார்.[392] மூலதனத்தின் பொதுவான, அவசியமான போக்குகளை அவை வெளிப்படும் வடிவங்களிலிருந்து வேறுபடுத்திப் பார்க்க வேண்டும்.

முதலாளித்துவப் பொருளுற்பத்தியின் உள்ளார்ந்த விதிகள் தனித்தனி மூலதனத் திரள்களின் இயக்கங்களில் எப்படி வெளிப்படுகின்றன, இந்த இயக்கங்களில் போட்டியின் [competition] வலுக்கட்டாய விதிகளாக எப்படி அதிகாரம் செலுத்துகின்றன, தனிப்பட்ட முதலாளியின் உள்ளத்திலும் உணர்விலும் அவரது செயல்களின் வழிகாட்டும் குறிக்கோள்களாக எப்படிப் பதிகின்றன என்பதையெல்லாம் பரிசீலிப்பது இங்கு நமது நோக்கமன்று. என்றாலும், ஒன்று தெளிவு: மூலதனத்தின் உள்ளியல்பை உணராத வரை, போட்டியைப் பற்றி விஞ்ஞானப் பகுப்பாய்வில் இறங்க முடியாது; விண்கோள்களின் மெய்யான இயக்கங்களை, அதாவது புலன்களால் நேரடியாகக் கண்டு கொள்ள முடியாத இயக்கங்களை அறியாத வரை எப்படி அக்கோள்களின் புறத்தோற்ற

392 "ஆலையதிபரின் உற்பத்திப் பண்டங்கள் இயந்திர சாதன மேம்பாட்டால் இரட்டிப்பாவதாக...வைத்துக் கொள்வோம்... மொத்த உற்பத்தியில் முன்னிலும் சிறிய விகிதாசாரத்தைக் கொண்டு தன் தொழிலாளர்கள் உடுத்திக் கொள்ள அவரால் வகை செய்ய முடியும்....இதனால் அவரது இலாபம் உயரும். ஆனால், 'இவ்வழியன்றி வேறு எவ்வழியிலும் அது பாதிப்புக்கு உள்ளாவதில்லை.'" (ராம்சே, முன் வந்தது, பக்கம் *168,169.*)

இயக்கங்களைப் புரிந்து கொள்ள முடியாதோ, அது போலத்தான் இதுவும். ஆயினும், ஒப்பீட்டு உபரி-மதிப்பின் உற்பத்தியை மேலும் நன்றாகவே புரிந்து கொள்ளும் பொருட்டு, ஏற்கெனவே நாம் வந்தடைந்துள்ள முடிவுகளைத் தவிர வேறு எதையும் அடிப்படை யாகக் கொள்ளாமல் பின்வருவனவற்றைக் குறிப்பிடலாம்.

ஆறு பென்னியில் ஒரு மணி நேர உழைப்பு உருக்கொண் டிருந்தால் ஆறு ஷில்லிங் மதிப்பு 12 மணி நேரம் கொண்ட வேலை-நாளில் உற்பத்தி செய்யப்படும். உழைப்பின் அப்போதைய உற்பத்தித் திறனைக் கொண்டு, இந்த 12 மணி நேரத்தில் 12 உருப்படிகள் உற்பத்தி செய்யப்படுவதாகக் கொள்வோம். ஒவ் வொரு உருப்படியிலும் பயன்படுத்திக் கொள்ளப்படும் உற்பத்திச் சாதனங்களின் மதிப்பு ஆறு பென்னியாக இருக்கட்டும். இந்த நிலைமையில் ஒவ்வொரு உருப்படிக்கும் ஒரு ஷில்லிங் செலவா கிறது: உற்பத்திச் சாதனங்களின் மதிப்புக்கு ஆறு பென்னி, அந்த சாதனங்களைக் கொண்டு வேலை செய்ததில் புதிதாகச் சேர்க்கப் பட்ட மதிப்புக்கு ஆறு பென்னி. இப்போது யாராவது ஒரு முத லாளி உழைப்பின் உற்பத்தித் திறனை இரட்டிப்பாக்கவும், 12 மணி நேர வேலை-நாளில் இவ்வாறான 12 உருப்படிகளுக்குப் பதிலாக 24 உருப்படிகளை உற்பத்தி செய்யவும் வழி காண்பதாகக் கொள்வோம். உற்பத்திச் சாதனங்களின் மதிப்பு இருந்த படியே இருக்க, ஒவ்வொரு உருப்படியின் மதிப்பும் ஒன்பது பென்னியாகக் குறையும்; இதில் ஆறு பென்னி உற்பத்திச் சாதனங்களின் மதிப் புக்கும், மூன்று பென்னி உழைப்பால் புதிதாகச் சேர்க்கப்பட்ட மதிப்புக்கும் உரியனவாகும். உழைப்பின் உற்பத்தித் திறன் இரட் டிப்பாக்கப்பட்டதற்கு மாறாக, ஒரு நாள் உழைப்பு முன் போலவே ஆறு ஷில்லிங் புதிய மதிப்பையே படைக்கிறது, அதற்கதிகமாக இல்லை; ஆயினும் இப்புதிய மதிப்பு இப்போது முன்போல் இரு மடங்கு உருப்படிகளில் பரவி நிற்கிறது. இப்போது ஒவ்வொரு உருப்படியும் இந்த மதிப்பில் $\frac{1}{12}$ பாகத்துக்குப் பதில் $\frac{1}{24}$ பாகத்தை (ஆறு பென்னிக்கு பதில் மூன்று பென்னியை) தன்னில் உருக்கொண்டுள்ளது; அல்லது, இதையே இப்படிச் சொல்வ தானால், உற்பத்திச் சாதனங்கள் ஒவ்வொரு உருப்படியாகவும் மாற்றப்படுகையில், அவற்றோடு இப்போது ஒரு முழு மணி உழைப்பு நேரத்துக்குப் பதிலாக அரை மணி உழைப்பு நேரம் மட்டுமே சேர்க்கப்படுகிறது. இந்த உருப்படிகளின் தனித்தனி மதிப்பு இப்போது அவற்றின் சமுதாய மதிப்பை விடக் குறைவாகி விடுகிறது; வேறு விதமாகச் சொன்னால் அவற்றுக்குச் செலவாகிற உழைப்பு நேரம், சராசரி சமுதாய நிலைமைகளில் உற்பத்தி செய் யப்படும் அதே பண்டத்தின் பெரும் பகுதிக்குச் செலவாவதை விடக் குறைவாகி விடுகிறது. சராசரியாக ஒவ்வொரு உருப்படிக்கும் ஒரு ஷில்லிங் அடக்க விலையாகிறது; ஒவ்வொரு உருப்படியும் 2 மணி நேர சமுதாய உழைப்பைக் குறிக்கிறது. ஆனால் மாற்றப்பட்ட

உற்பத்தி முறையில் அதற்கு ஒன்பது பென்னிதான் செலவாகிறது; அதாவது அதில் 1½ மணி நேர உழைப்புதான் அடங்கியுள்ளது. ஆயினும் ஒரு சரக்கின் உண்மை மதிப்பென்பது அதன் தனிப்பட்ட மதிப்பன்று, சமுதாய மதிப்பே; அதாவது, உண்மை மதிப்பானது ஒவ்வொரு தனிப்பட்ட உருப்படிக்காகவும் உற்பத்தியாளருக்குச் செலவாகிற உழைப்பு நேரத்தால் அளவிடப்படுவதில்லை; அதன் உற்பத்திக்குச் சமுதாய வழியில் தேவைப்படும் உழைப்பு நேரத் தாலேயே அளவிடப்படுகிறது. எனவே, புதிய முறையைப் பிரயோ கிக்கிற முதலாளி தன் சரக்கை ஒரு ஷில்லிங் என்ற அதன் சமுதாய மதிப்பிற்கு விற்கிறார் என்றால், அவர் அதை அதன் தனிப்பட்ட மதிப்பை விட மூன்று பென்னி அதிக விலைக்கு விற்கிறார்; இவ்விதம் கூடுதலாக மூன்று பென்னி உபரி-மதிப்பை ஈடேற்றம் செய்து கொள்கிறார். மறு புறம், 12 மணி நேர வேலை-நாள் அவரைப் பொறுத்த வரை இப்போது 12 உருப்படிகளுக்கு பதில் 24 உருப்படிகளால் குறிக்கப்படுகிறது. எனவே, ஒரு வேலை-நாளின் உற்பத்தியை விற்றுத் தீர்க்க வேண்டுமானால், வேண்ட லானது முன்பிருந்ததைப் போல் இரட்டிப்பாக வேண்டும். அதாவது சந்தை இரு மடங்கு விரிவடைந்தாக வேண்டும். மற்றவை சமமாயிருக்க, அவரது சரக்குகள் அவற்றின் விலை குறையும் போது தான் முன்னிலும் விரிவடைந்த சந்தையை ஆள முடியும். எனவே, அவர் அவை ஒவ்வொன்றையும் அவற்றின் தனிப்பட்ட மதிப்புக்கு மேலாக, ஆனால் அவற்றின் சமுதாய மதிப்புக்குக் கீழாக, உதாரணமாக பத்து பென்னிக்கு விற்பார். இவ்விதம் அவர் இப்போதும் ஒரு பென்னி கூடுதல் உபரி-மதிப்பை ஒவ்வொரு உருப்படியிலிருந்தும் பிழிந்தெடுக்கிறார். இந்த அதிகப்படியான உபரி-மதிப்பு அவரது கைக்குப் போய்ச் சேருகிறது — அவரது சரக்குகள் உழைப்புச் சக்தியின் பொது மதிப்பை நிர்ணயிப்பதில் பங்கு பெறுகிற அவசிய வாழ்வுச் சாதனங்களின் வகையைச் சேர்ந்தவை யாக இருந்தாலும் சரி, இல்லா விட்டாலும் சரி. எனவே, இந் நிலைமை எப்படியிருப்பினும், உழைப்பின் உற்பத்தித் திறனை அதிகமாக்கி தன் சரக்குகளுக்கு ஆகும் செலவைக் குறைக்க வேண்டு மென்ற நோக்கத்தால் ஒவ்வொரு தனிப்பட்ட முதலாளியும் உந்தப் படுகிறார்.

எப்படியாயினும், இந்த நேர்விலும் கூட, உபரி-மதிப்பின் உற்பத்தியானது அவசிய-உழைப்பு நேரத்தைக் குறைப்பதிலிருந்தும் உபரி-உழைப்பை அதற்கேற்ப நீட்டிப்பதிலிருந்தும்தான் விளை கிறது.[393] அவசிய-உழைப்பு நேரம் 10 மணியாகவும், ஒரு நாளைய

393 "ஒருவருக்குக் கிடைக்கும் இலாபம் எதைப் பொறுத்ததென்றால், பிறரது உழைப்பின் பலனை அவர் ஆளுவதையன்று, உழைப்பையே அவர் ஆளுவதைத்தான். தனது தொழிலாளர்களின் கூலி மாறாதிருக்கையில் தன் சரக்குகளை முன்னிலும் உயர்ந்த விலைக்கு விற்க முடிந்தால், அவர் ஆதாயமடைகிறார் என்பது தெளிவு...அவர் உற்பத்தி செய்வதில் முன்னிலும் சிறிய விகிதாசாரம் அந்த உழைப்பை இயங்கச்

உழைப்புச் சக்தியின் மதிப்பு ஐந்து ஷில்லிங்காகவும், உபரி-உழைப்பு நேரம் 2 மணியாகவும், அன்றாட உபரி-மதிப்பு ஒரு ஷில் லிங்காகவும் இருப்பதாகக் கொள்வோம். ஆனால் முதலாளி இப்போது 24 உருப்படிகளை உற்பத்தி செய்கிறார்; இவற்றை அவர் ஒவ்வொன்றும் பத்து பென்னி வீதம் விற்கிறார்; மொத் தத்தில் இருபது ஷில்லிங் சம்பாதிக்கிறார்; உற்பத்திச் சாதனங் களின் மதிப்பு பன்னிரண்டு ஷில்லிங் என்பதால் $\frac{2}{5}$ உருப் படிகள் முன்னீடு செய்யப்பட்ட மாறா-மூலதனத்தை மட்டுமே மாற்றீடு செய்கின்றன. 12 மணி நேர வேலை-நாளின் உழைப்பு மீதமுள்ள $9\frac{3}{5}$ உருப்படிகளால் குறிக்கப்படுகிறது. உழைப்புச் சக்தியின் விலை 5 ஷில்லிங் என்பதால், 6 உருப்படிகள் அவசிய-உழைப்பு நேரத்தையும் $3\frac{3}{5}$ உருப்படிகள் உபரி-உழைப்பையும் குறிக்கின்றன. சராசரி சமுதாய நிலைமைகளில் அவசிய-உழைப்புக்கும் உபரி-உழைப்புக்கும் இடையிலான விகிதம் 5:1 ஆக இருந்தது; இப்போது 5:3 ஆகிவிட்டது. இதே விளை வைப் பின்வரும் வழியிலும் வந்தடையலாம். 12 மணி நேர வேலை-நாளின் உற்பத்தியினது மதிப்பு இருபது ஷில்லிங். இந்தத் தொகையில், பன்னிரண்டு ஷில்லிங் அப்படியே மீண்டும் தலை காட்டுகிற மதிப்பான உற்பத்திச் சாதனங்களின் மதிப்புக்குச் சொந் தம். மீதம் எட்டு ஷில்லிங்; இது வேலை-நாளின் போது புதிதாகப் படைக்கப்பட்ட மதிப்பின் பணத் தெரிவிப்பாகும். இத்தொகை இதே வகையான சராசரிச் சமுதாய உழைப்பைத் தெரிவிக்கும் தொகையை விட அதிகமாகும்: பன்னிரண்டு மணி நேர சராசரிச் சமுதாய உழைப்பைத் தெரிவிப்பது ஆறு ஷில்லிங் மட்டுமே. சிறப்பான உற்பத்தித் திறனுள்ள உழைப்பு மும்முரமாக்கப்பட்ட உழைப்பாகச் செயல்படுகிறது; அது சமமான கால அளவுகளில் அதே வகையைச் சேர்ந்த சராசரி சமுதாய உழைப்பை விடக் கூடுதலான மதிப்புகளைப் படைக்கிறது. (பார்க்கவும்: அத்தியாயம் I., பிரிவு 2, பக்கம் 71.) ஆனால் நமது முதலாளி முன் போலவே இப்போதும் ஒரு நாள் உழைப்புச் சக்தியின் மதிப்பாக ஐந்து ஷில்லிங்கை மட்டுமே கொடுக்கிறார். எனவே, இந்த மதிப்பை மறு வுற்பத்தி செய்வதற்கு தொழிலாளி 10 மணி நேரத்துக்கு பதில் இப்போது 7½ மணி நேரம் வேலை செய்தாலே போதும். எனவே, அவரது உபரி-உழைப்பு 2½ மணி நேரம் அதிகமாகிறது. அவர் உற்பத்தி செய்கிற உபரி-மதிப்பு ஒரு ஷில்லிங்கிலிருந்து

---

செய்திடப் போதுமானது; இதன் விளைவாக முன்னிலும் பெரிய விகிதாசாரம் அவருக் குரியதாய் மிஞ்சி நிற்கிறது.'' (''அரசியல் பொருளாதாரத்தின் உருவரைகள்,'' லண்டன், 1832, பக்கம் 49,50.)

மூன்று ஷில்லிங்காகப் பெருகுகிறது. ஆதலால், மேம்பட்ட உற்பத்தி முறையைக் கையாளும் முதலாளி அதே தொழிலிலுள்ள ஏனைய முதலாளிகளை விட வேலை-நாளில் அதிகமான பகுதியை உபரி-உழைப்புக்கு உரித்தாக்குகிறார். ஒப்பீட்டு உபரி-மதிப்பை உற்பத்தி செய்வதில் ஈடுபட்டுள்ள முதலாளிகளின் முழுத் தொகுதியும் கூட்டாகச் செய்வதை அவர் தனியாகச் செய்கிறார். ஆயினும், புதிய உற்பத்தி முறை எல்லா முதலாளிகளுக்கும் பொதுவானதாகி, குறைந்த செலவாகிய சரக்கின் தனிப்பட்ட மதிப்புக்கும் அதன் சமுதாய மதிப்புக்கும் இடையிலான வேறுபாடு மறைந்ததும், இந்தக் கூடுதல் உபரி-மதிப்பு மறைந்து போகிறது. உழைப்பு நேரத்தைக் கொண்டு மதிப்பை நிர்ணயிக்கிற விதிக்கு புதிய உற்பத்தி முறையைக் கையாளுகிற தனிப்பட்ட முதலாளியும் உட்பட்டவரே ஆதலால், அவர் தனது சரக்குகளை அவற்றின் சமுதாய மதிப்புக்கும் குறைவாக விலை வைத்து விற்கும் படியான கட்டாயம் ஏற்படுகிறது. இதே விதி போட்டியின் வலுக்கட்டாய விதியாகச் செயல்பட்டு, அவரது போட்டியாளர்களையும் புதிய உற்பத்தி முறையை மேற்கொள்ளுமாறு நிர்ப்பந்திக்கிறது.[394] எனவே, உழைப்பின் உற்பத்தித் திறனிலான அதிகரிப்பு அவசிய வாழ்வுச் சாதனங்களுடன் தொடர்புள்ள உற்பத்திக் கிளைகளை ஆட்கொண்டு அவ்வாழ்வுச் சாதனங்களின் பகுதியாக அமைபவையும், ஆதலால் உழைப்புச் சக்தியினது மதிப்பின் கூறுகளுமான அந்தச் சரக்குகளை மலிவாக்கிய பிறகு தான், பொதுவான உபரி-மதிப்பு வீதம் இந்நிகழ்முறை முழுவதின் இறுதியான வயப்பாட்டுக்குள்ளாகிறது.

சரக்குகளின் மதிப்பு உழைப்பின் உற்பத்தித் திறனுக்கு எதிர் விகிதத்தில் உள்ளது. உழைப்புச் சக்தியின் மதிப்பும் அவ்வாறே உள்ளது. ஏனெனில் அது சரக்குகளின் மதிப்பைப் பொறுத்தது. மாறாக ஒப்பீட்டு உபரி-மதிப்பு அந்த உற்பத்தித் திறனுக்கு நேர் விகிதத்தில் உள்ளது. உற்பத்தித் திறன் உயர்ந்தால் அது உயர்கிறது; உற்பத்தித் திறன் வீழ்ந்தால் அது வீழ்கிறது. பணத்தின் மதிப்பு மாறாதிருப்பதாகக் கொண்டால், 12 மணி நேரம் கொண்ட சராசரி சமுதாய வேலை-நாள் எப்போதுமே ஒரே புதிய மதிப்பை, ஆறு ஷில்லிங்கை — இத்தொகை உபரி-மதிப்புக்கும் கூலிக்கும் இடையே

---

394 ''என் அண்டை வீட்டுக்காரர் சொற்ப உழைப்பைக் கொண்டு அதிகக் காரியம் செய்து மலிவாக விற்க முடியுமென்றால், நான் அவரளவுக்கு மலிவாக விற்க வழி காண வேண்டும். இவ்வாறு, குறைந்த எண்ணிக்கையிலான கரங்களின் உழைப்பைக் கொண்டு, ஆதலால் மலிவான உழைப்பைக் கொண்டு காரியம் செய்கிற கலை, தொழில் அல்லது எஞ்சின் ஒவ்வொன்றும் — ஒவ்வொரு மனிதனும் நேர்மையாக இருக்கும் விதத்திலும், யாரும் தன் அண்டை வீட்டுக்காரரை விட விலை குறைத்து விற்க இயலாத விதத்திலும் — அதே கலை, தொழில் அல்லது எஞ்சினைப் பயன்படுத்துகிற, அல்லது அதைப் போன்ற எதையேனும் கண்டுபிடிக்கிற ஒரு விதமான அவசியத்தையும் போட்டியுணர்வையும் மற்றவர்களிடையே தோற்றுவிக்கிறது.'' (''இங்கிலாந்துக்கு கிழக்கிந்திய வர்த்தகத்தால் வரும் அனுகூலங்கள்,'' லண்டன், 1720, பக்கம் 67.)

எப்படிப் பங்கிடப்பட்டாலும் சரி—உற்பத்தி செய்கிறது. ஆனால் அதிகரித்த உற்பத்தித் திறனின் விளைவாக, வாழ்க்கையின் அவசியப் பண்டங்களது மதிப்பு வீழ்ந்து, அதனால் ஒரு நாளைய உழைப்புச் சக்தியின் மதிப்பு ஐந்து ஷில்லிங்கிலிருந்து மூன்று ஷில்லிங்காகக் குறைந்தால், உபரி-மதிப்பு ஒரு ஷில்லிங்கிலிருந்து மூன்று ஷில்லிங்காக அதிகரிக்கிறது. உழைப்புச் சக்தியினது மதிப்பின் மறுவுற்பத்திக்குப் பத்து மணி நேரம் அவசியமாயிருந்தது; இப்போது ஆறு மணி நேரம் மட்டுமே தேவைப்படுகிறது. நான்கு மணி நேரம் விடுவிக்கப்பட்டுள்ளது, இதை உபரி-உழைப்பின் களத்தில் சேர்த்து விடலாம். ஆகவே சரக்குகளை மலிவாக்கி, இப்படி மலிவாக்குவதன் மூலம் தொழிலாளியையே மலிவாக்கும் பொருட்டு உழைப்பின் உற்பத்தித் திறனை உயர்த்த வேண்டுமென்ற அவாவும் இடைவிடாத போக்கும் மூலதனத்தின் உள்ளார்ந்த இயல்புகளாகும்.[395]

சரக்கின் மதிப்பு அதனளவில் முதலாளியின் அக்கறைக்குரியதன்று. அவரது அக்கறைக்குரியதெல்லாம், அதனுள் உறைவதும் விற்பனையின் மூலம் ஈடேற்றம் செய்து கொள்ளத் தக்கதுமான உபரி-மதிப்புதான். உபரி-மதிப்பு ஈடேற்றம் செய்யப்படும் நிகழ்வுடன், முன்னீடு செய்யப்பட்ட மதிப்பைத் திரும்பப் பெறும் நிகழ்வு தவிர்க்க முடியாதபடி இணைந்து விடுகிறது. இப்போது, ஒப்பீட்டு உபரி-மதிப்பு உழைப்பினது உற்பத்தித் திறனின் வளர்ச்சிக்கு நேர் விகிதத்தில் அதிகரிக்கையில், மறு புறம் சரக்குகளின் மதிப்பு அதே விகிதத்தில் குறைகிறதென்பதால், ஒரே நிகழ்முறை சரக்குகளை மலிவாக்கவும் அவற்றில் அடங்கியுள்ள உபரி-மதிப்பைப் பெருக்கவும் செய்கிறது என்பதால், இது புதிருக்குத் தீர்வாகி விடுகிறது. அப்புதிராவது: பரிவர்த்தனை-மதிப்பின் உற்பத்தியில் மட்டுமே அக்கறை கொண்ட முதலாளி சரக்குகளின் பரிவர்த்தனை-மதிப்பைக் குறைப்பதற்குத் தொடர்ச்சியாகப் பாடுபடுவது ஏன்? அரசியல் பொருளாதாரத்தின் மூலவர்களில் ஒருவரான கெனே தன் எதிராளிகளை வதைத்தது இந்தப் புதிரைக் கொண்டுதான்; அவர்கள் அவருக்குப் பதில் சொல்ல முடியாமலிருந்தது இந்தப்

---

395 ''ஒரு தொழிலாளியின் செலவுகள் என்ன விகிதத்தில் குறைந்தாலும், தொழிலின் மீதான கட்டுத்தளைகள் அதே நேரத்தில் நீக்கப்பட்டால், அவரது கூலியும் அதே விகிதத்தில் குறையும்.'' (''ஏற்றுமதி செய்யப்படும் தானியம் மீதான உதவி மானியத்தை அகற்றுவது சம்பந்தமான கருத்துகள்....'' லண்டன், 1753, பக்கம் 7.) ''தானியமும் எல்லா மளிகைப் பொருட்களும் முடிந்த வரை மலிவாக இருப்பது தொழிலின் நலனுக்கு அவசியம். ஏனெனில் எது அவற்றை விலை கூடச் செய்தாலும் சரி, அது உழைப்பையும் விலை கூடச் செய்தே தீரும்....தொழிலுக்குக் கட்டுத்தளையில்லாத எல்லா நாடுகளிலும் மளிகைப் பொருட்களின் விலை உழைப்பின் விலையைப் பாதித்தே தீரும். வாழ்க்கையின் அவசியப் பண்டங்கள் மலிவாகும் போது இது எப்போதுமே குறைந்து விடும்.'' (முன் வந்தது, பக்கம் 3.) ''உற்பத்தித் திறன்கள் அதிகரிக்கும் அதே விதத்தில் கூலி குறைந்து போகிறது. இயந்திர சாதனம் வாழ்க்கையின் அவசியப் பண்டங்களை மலிவாக்குவது மெய்தான். ஆனால் அது தொழிலாளியையும் மலிவாக்கி விடுகிறது.'' (''போட்டி, ஒத்துழைப்பு ஆகியவற்றின் ஒப்பீட்டுச் சிறப்புகள் பற்றிய பரிசுக் கட்டுரை.'' லண்டன், 1834, பக்கம் 27.)

புதிருக்குத்தான். அவர் சொல்கிறார்: ''தொழில் துறைப் பண்டங்களின் உற்பத்தியில் உழைப்பின் செலவுகளும் அடக்க விலையும் உற்பத்திக்குக் கேடின்றி எவ்வளவுக்கு எவ்வளவு குறைக்கப்பட முடியுமோ அவ்வளவுக்கு அவ்வளவு இக்குறைப்பு பூர்த்தியான பண்டத்தின் விலையைக் குறையச் செய்து அனுகூலம் செய்கிறது என்பதை நீங்கள் ஒப்புக் கொள்கிறீர்கள். ஆனால் தொழிலாளர்களின் உழைப்பை ஆதாரமாய்க் கொண்ட செல்வ உற்பத்தியானது உற்பத்திப் பண்டங்களின் பரிவர்த்தனை-மதிப்பு அதிகமாவதில் அடங்கியிருக்கிறது என்றும் நம்புகிறீர்கள்.''[396]

ஆகவே, முதலாளித்துவப் பொருளுற்பத்தியில் உழைப்பின் உற்பத்தித் திறனை அதிகமாக்குவதன் மூலம் உழைப்பைச் சிக்கனப்படுத்துவதன் நோக்கம் வேலை-நாளைக் குறைப்பதன்று.[397] திட்டமான அளவு சரக்குகளின் உற்பத்திக்கு அவசியமான உழைப்பு நேரத்தைக் குறைப்பதே நோக்கம். தொழிலாளி அவரது உழைப்பின் உற்பத்தித் திறன் அதிகமாக்கப்படும் போது முன்போல் 10 மடங்கு சரக்குகளை உற்பத்தி செய்கிறார் என்றால், இவ்வாறு ஒவ்வொன்றிலும் முன்போல் பத்திலொரு பங்கு உழைப்பு நேரத்தைச் செலவிடுகிறார் என்றால், இந்த உண்மை முன்போல் அவர் 12 மணி நேரம் தொடர்ந்து வேலை செய்யாமலோ, அந்த 12 மணி நேரத்தில் 120க்கு பதில் 1,200 உருப்படிகளை உற்பத்தி செய்யாமலோ தடுப்பதில்லை. அது மட்டுமன்று. அவரை 14 மணி நேரத்தில் 1,400 உருப்படிகளை உற்பத்தி செய்ய வைக்கும் விதத்தில் அவருடைய வேலை-நாள் நீட்டவும் படலாம். எனவே, மக்குல்லோஹ், யூர், சீனியர் வகையறாவின் பாணியிலான பொருளாதார அறிஞர்கள் எழுதும் புத்தகங்களில், தொழிலாளியின் உற்பத்தித் திறனை முதலாளி வளர்ப்பதற்காக தொழிலாளி முதலாளிக்கு நன்றிக் கடன் பட்டுள்ளார், ஏனெனில் அதன் மூலம் அவசிய-உழைப்பு நேரம் சுருக்கப்படுகிறது என்று ஒரு பக்கத்தில்

---

[396] ''Ils conviennent que plus on peut, sans prejudice, epargner de frais ou de travaux dispendieux dans la fabrication des ouvrages des artisans, plus cette epargne est profitable par la diminution des prix de ces ouvrages. Cependant ils croient que la production de richesse qui resulte des travaux des artisans consiste dans l'augumentation de la valeur venale de leurs ouvrages.'' *(கெனே: ''*Dialogues sur le Commerce et les Travaux des Artisans.'' *பக்கம் 188, 189.)*

[397] *''தாங்கள் ஊதியம் கொடுத்தாக வேண்டிய தொழிலாளர்களின் உழைப்பு தொடர்பாக இவ்வளவு சிக்கனம் பாராட்டுகிற இந்த ஊசு வணிகர்கள்.'' (ஜே. என். பீடோ: ''*Du Monopole qui s'etablit dans les arts industriels et le commerce.'' *பாரிஸ், 1828, பக்கம் 13.) ''நேரத்தையும் உழைப்பையும் சிக்கனப் படுத்த முதலாளி எப்போதுமே துடித்துக் கொண்டிருப்பார்.'' (டுகால்டு ஸ்டுவர்ட். சர் டபிள்யூ. ஹாமில்டன் பதிப்பித்த நூல்கள், எடின்பரோ,* v., viii., *1855, ''அரசியல் பொருளாதாரம் பற்றிய விரிவுரைகள்,'' பக்கம் 318.) ''தாங்கள் வேலை வாங்குகிற தொழிலாளர்களின் உற்பத்தித் திறன்கள் முடிந்த வரை அதிகமாய் இருக்க வேண்டும் என்பதே அவர்களது (முதலாளிகளது) அக்கறை. அவர்களது கவனம் நிலைகொண்டிருப்பது, கிட்டத்தட்டப் பிரத்தியேகமாக நிலைகொண்டிருப்பது, அந்தத் திறனை மேம்படுத்துவதிலேயே.'' (ரி. ஜோன்ஸ்: முன் வந்தது, விரிவுரை* III.*)*

படித்து விட்டு, அவர் நன்றி மறவாதிருக்கும் பொருட்டு 10 மணி நேரத்துக்கு பதில் வருங்காலத்தில் 15 மணி நேரம் வேலை செய்ய வேண்டும் என்று அடுத்த பக்கத்தில் படிக்க நேரிடலாம். முதலாளித் துவப் பொருளுற்பத்தியின் வரம்புக்ளுக்குள் உழைப்பின் உற்பத்தித் திறனது வளர்ச்சி அனைத்துக்கும் குறிக்கோளாய் இருப்பது, தொழிலாளி வேலை-நாளில் தனக்காகவே உழைக்க வேண்டிய பகுதியைக் குறைப்பதும், இப்படிக் குறைப்பதன் மூலமே, முத லாளிக்கு இலவசமாய் உழைப்பதற்காக அவர் விடுவிக்கப்படும் அந்த இன்னொரு பகுதியை நீட்டுவதுமே. சரக்குகளை மலிவாக்காமலே மேற்கூறிய விளைவை எந்த அளவுக்கு சாதிக்க முடியும் என்பதை ஒப்பீட்டு உபரி-மதிப்பின் உற்பத்திக்கான தனிப்பட்ட வழிமுறை களின் பரிசீலனை புலப்படுத்தும்; இப்பரிசீலனையில் இப்போது இறங்குகிறோம்.

## அத்தியாயம் XIII

## கூட்டு-வேலை

தனிப்பட்ட மூலதனம் ஒவ்வொன்றும் ஒப்பளவில் பெரும் எண்ணிக்கையிலான உழைப்பாளிகளை ஒருங்கே வேலைக் கமர்த்தும் போதுதான், அதன் விளைவாக உழைப்பு நிகழ்முறை விரிவான அளவில் நடைபெற்று ஒப்பளவில் பெருவீதத்தில் உற்பத்திப் பண்டங்களைக் கிடைக்கச் செய்யும் போதுதான், முதலாளித்துவப் பொருளுற்பத்தி மெய்யாகவே தொடங்குகிறது என்று முன்பே பார்த்தோம். முன்னிலும் பெரும் எண்ணிக்கையிலான உழைப்பாளிகள் ஒரு முதலாளியின் மேலாண்மையில் ஒரே வகைச் சரக்கை உற்பத்தி செய்யும் பொருட்டு ஒரே நேரத்தில் ஓர் இடத்தில் (அல்லது ஒரே உழைப்புத் துறையில் என்றும் சொல்லலாம்) ஒருங்கே வேலை செய்வது வரலாற்று வழியிலும் தர்க்க ஆய்வு வழியிலும் முதலாளித்துவப் பொருளுற்பத்தியின் தொடக்கமாக அமைகிறது. உற்பத்தியின் செய்முறையைப் பொறுத்த வரை கண்டிப்பான அர்த்தத்தில் பட்டறைத் தொழிலை, அதன் ஆரம்ப நிலைகளில், கைவினைச் சங்கங்களின் கைவினைத் தொழில்களிலிருந்து வேறுபடுத்திப் பார்ப்பது கடினம். தனிப்பட்ட ஒரே மூலதனத்தால் ஒருங்கே வேலை வாங்கப்படும் உழைப்பாளிகளின் எண்ணிக்கை பட்டறைத் தொழிலில் அதிகம் என்பது ஒன்றே வேறுபாடு. மத்திய காலத்திய கைவினைச் சங்க ஆண்டானின் தொழிற் கூடம் இப்போது பெரிதாக்கப்பட்டிருப்பதற்கு மேல் ஒன்றும் இல்லை.

எனவே, முதலில் இவ்வேறுபாடு முற்றிலும் அளவு தொடர்பானதே. எந்த ஒரு மூலதனத்தாலும் உற்பத்தி செய்யப்படும் உபரி-மதிப்பும் ஒவ்வொரு தொழிலாளியும் உற்பத்தி செய்யும் உபரி-மதிப்பை ஒருங்கே வேலைக்கமர்த்தப்படும் தொழிலாளர்களின் எண்ணிக்கையால் பெருக்கி வருவதற்குச் சமம் என்று தெளிவுபடுத்தியிருக்கிறோம். தொழிலாளர்களின் எண்ணிக்கை அதனளவில் உபரி-மதிப்பு வீதத்தையோ உழைப்புச் சக்தியின் மீதான சுரண்டல்-கடுமையையோ பாதிப்பதில்லை. 12 மணி நேரமுள்ள

ஒரு வேலை-நாள் ஆறு ஷில்லிங்கில் உருக்கொண்டிருந்தால், 1,200 வேலை-நாள் 6 × 1,200 ஷில்லிங்கில் உருக்கொண்டிருக்கும். ஒரு நேர்வில் 12 × 1,200 வேலை-மணிகளும், மற்றொரு நேர்வில் 12 வேலை-மணிகளும் உற்பத்திப் பண்டத்தில் அடக்கம் பெறுகின்றன. மதிப்பின் உற்பத்தியில் குறிப்பிட்ட எண்ணிக்கையிலான தொழிலாளர்கள் இத்தனைத் தனிப்பட்ட தொழிலாளர்கள் என்றே இடம் பெறுகின்றனர்; எனவே 1,200 பேர் தனித்தனியாக வேலை செய்தாலும் சரி, ஒரு முதலாளியின் கட்டுப்பாட்டில் ஒன்றுகூடி வேலை செய்தாலும் சரி, உற்பத்தியாகும் மதிப்பில் எந்த வேறுபாடுமில்லை.

ஆயினும், குறிப்பிட்ட சில வரம்புகளுக்குள் ஒரு திருத்தம் நடைபெறுகிறது. மதிப்பில் ஈடேற்றம் செய்யப்படும் உழைப்பு சராசரி சமுதாயத் தரமுடைய உழைப்பாகும்; ஆதலால் சராசரி உழைப்புச் சக்தியின் செலவீடாகும். எப்படியாயினும் எந்த சராசரிப் பருமனும் எல்லாம் ஒருவகையைச் சேர்ந்தவையும், ஆனால் அளவு வழியில் வேறுபடுபவையுமான பல தனிப் பருமன்களின் சராசரிதான். ஒவ்வொரு தொழிலிலும் தனிப்பட்ட தொழிலாளி ஒவ்வொருவரும், பீட்டர் ஆனாலும் பால் ஆனாலும், சராசரித் தொழிலாளியிடமிருந்து வேறுபடுகிறார். குறிப்பிட்ட குறைந்தபட்ச எண்ணிக்கையிலான தொழிலாளர்கள் ஒன்றாக வேலைக்கு அமர்த்தப்படும் போதெல்லாம் தனிநபர் வேறுபாடுகள் அல்லது, கணிதத்தில் சொல்வதுபோல், "பிழைகள்" ஒன்றை ஒன்று ஈடு செய்து மறைந்து போகின்றன. பேர்போன குதர்க்கவாதியும் துதிபாடியுமான எட்மண்டு பர்க் சாகுபடியாளராக இருந்து நடைமுறையில் கவனித்தவற்றின் அடிப்படையில் பின்வருமாறு சொல்லும் அளவுக்குப் போய் விடுகிறார்; அதாவது, ஐந்து பண்ணைத் தொழிலாளர்களைக் கொண்டது போன்ற "சிறிய குழுவில்" உழைப்பிலான எல்லாத் தனிநபர் வேறுபாடுகளும் மறைந்து போகின்றன என்றும், ஆதலால் வயதுவந்த பண்ணைத் தொழிலாளர்களில் எந்த ஐவரையும் ஒன்றாக எடுத்துக் கொண்டால் அவர்கள் அதே நேரத்தில் வேறு எந்த ஐவரும் செய்யும் அதே அளவு வேலையைச் செய்வார்கள் என்றும் சொல்கிறார்.[398] ஆனால், அது எப்படியான

---

[398] "ஒருவரது உழைப்பின் மதிப்புக்கும் இன்னொருவரது உழைப்பின் மதிப்புக்கும் இடையே பலம், லாவகம், நேர்மையான பிரயோகம் ஆகியவற்றில் நிறைய வேறுபாடு இருப்பதில் ஐயமில்லை. ஆனால், ஒட்டுமொத்தத்தில் எந்தக் குறிப்பிட்ட ஐவரும் நான் சொல்லியிருக்கும் வாழ்க்கைக் கால அளவுகளுக்குள் வேறு எந்த ஐவருக்கும் சமமான விகிதாசாரத்தில் உழைப்பைத் தருவார்கள். நான் நன்கு கண்ணுற்றவற்றிலிருந்து இதை உறுதியாகச் சொல்வேன். அதாவது, இவ்வாறான ஐவரில் நல்ல உழைப்பாளியின் எல்லாத் தகுதிகளும் உடையவராக ஒருவரும், மோசமாக ஒருவரும், நடுவாந்தரமாகவும், முதலாமவருக்கும் கடைசியானவருக்கும் இடைப்பட்டும் மூவரும் இருப்பார்கள் என்கிறேன். ஆனால் ஐவரையே கொண்ட சிறு குழுவிலும் கூட, அந்த ஐவரும் ஈட்டக் கூடிய அனைத்தும் சேர்ந்து முழு நிறைவு

போதிலும் ஒருங்கே வேலைக்கு அமர்த்தப்படும் பெரும் எண்ணிக் கையிலான தொழிலாளர்களின் கூட்டு வேலை-நாளை [collective working-day] இந்தத் தொழிலாளர்களின் எண்ணிக்கையால் வகுத் தால், ஒரு நாளைய சராசரிச் சமுதாய உழைப்பு கிடைக்கிறது. உதாரணமாக, ஒவ்வொரு தனி ஆளின் வேலை-நாளும் 12 மணி நேரமெனக் கொள்வோம். எனவே, ஒருங்கே வேலைக்கமர்த்தப் படும் 12 பேரின் கூட்டு வேலை-நாள் 144 மணிகளைக் கொண்ட தாகும்; இப்பன்னிரண்டு பேரில் ஒவ்வொருவரின் உழைப்பும் சராசரி உழைப்பிலிருந்து அதிகமாகவோ குறைவாகவோ வேறு படலாம், அவர்கள் ஒவ்வொருவருக்கும் ஒரே வேலைக்கு வெவ் வேறு அளவிலான நேரம் வேண்டியிருக்கலாம்; ஆனால் ஒவ்வொரு வரின் வேலை-நாளும் கூட்டு வேலை-நாளான 144 மணிகளில் பன்னிரண்டிலொரு பாகமென்பதால், அது சராசரிச் சமுதாய வேலை-நாளின் பண்புகளைப் பெற்றுள்ளது. ஆயினும், இந்த 12 பேரையும் வேலைக்கமர்த்துகிற முதலாளியின் கண்ணோட்டத்தில், வேலை-நாளென்பது இந்த முழு டஜன் பேரின் வேலை-நாளாகும். இந்த 12 பேரும் தங்கள் வேலையில் ஒருவருக்கொருவர் உதவி னாலும் சரி, அவர்களது வேலைகளிடையிலான தொடர்பு அவர் கள் எல்லாரும் ஒரே முதலாளிக்காக வேலை செய்கின்றனர் என்பது மட்டுமே ஆனாலும் சரி, ஒவ்வொரு தனி ஆளின் வேலை-நாளும் கூட்டு வேலை-நாளின் ஈவுப் பகுதியே [aliquot part] ஆகும். ஆனால் இந்த 12 பேரும் ஆறு ஜதைகளாக ஆறு வெவ் வேறு சிறு தொழிலதிபர்களால் வேலைக்கமர்த்தப்பட்டால், இந்த அதிபர்கள் ஒவ்வொருவரும் ஒரே மதிப்பை உற்பத்தி செய் கின்றனரா என்பதும், ஆதலால் அவர் பொது உபரி-மதிப்பு வீதத்தை அடைகிறாரா என்பதும் முற்றிலும் தற்செயலானதாகவே இருக்கும். தனிப்பட்ட நேர்வுகளில் விலகல்கள் சம்பவிக்கும். ஒரு தொழிலாளி ஒரு சரக்கை உற்பத்தி செய்வதற்கு சமுதாய வழியில் அவசியமானதை விடக் கணிசமான அளவுக்கு அதிக நேரம் வேண்டியிருந்தால் அவரைப் பொறுத்த வரை அவசிய-உழைப்பு நேரத்தின் அளவு சராசரியாகச் சமுதாய வழியில் அவசியமான உழைப்பு நேரத்திலிருந்து தெளிவாக விலகிச் செல்லும். ஆதலால், அவரது உழைப்பு சராசரி உழைப்பாகக் கொள்ளப்படாது. அவரது உழைப்புச் சக்தியும் சராசரி உழைப்புச் சக்தியாகக் கொள்ளப் படாது. ஒன்று, அது விற்க முடியாததாகவே இருக்கும்; அல்லது, உழைப்புச் சக்தியின் சராசரி மதிப்புக்கு குறைவாகவே விற்கக் கூடிய தாய் இருக்கும். ஆகவே, உழைப்பு அனைத்திலும் நிலையானதொரு

---

ஆவதைக் காண்பீர்கள்." (எட்மண்டு பர்க், முன் வந்தது, பக்கம் 15,16.) சராசரித் தனிநபர் பற்றி காட்டேலா கூறியதை ஒப்பு நோக்கவும்.

குறைந்தபட்ச செயல்திறன் இருப்பதாகக் கொள்ளப்படுகிறது; முதலாளித்துவப் பொருளுற்பத்தி இந்தக் குறைந்தபட்சத்தை நிர்ண யிக்கும் வழிதுறைகளை வழங்குகிறது என்பதைப் பின்னர் பார்ப் போம். ஆயினும் மறு புறம், முதலாளி உழைப்புச் சக்தியின் சராசரி மதிப்பைக் கொடுக்க வேண்டியிருக்கிறது என்ற போதிலும், இந்தக் குறைந்தபட்சமானது சராசரியிலிருந்து விலகிச் செல்கிறது. ஆகவே, ஆறு சிறு தொழிலதிபர்களில் ஒருவர் உபரி-மதிப்பின் சராசரி வீதத்தை விட அதிகமாகவும், மற்றொருவர் குறைவாகவும் கறந்து கொள்வார். இந்த ஏற்றத் தாழ்வுகள் ஒட்டுமொத்தமாக சமுதாயத்தில் ஈடு செய்யப்பட்ட போதிலும் தனிப்பட்ட அதிபர் களைப் பொறுத்த வரை ஈடு செய்யப்படுவதில்லை. இவ்வாறு, தனிப்பட்ட உற்பத்தியாளர் முதலாளியாக இருந்து பல ஆட்களை வேலைக்கமர்த்தி உற்பத்தி செய்கையில் அவர்களது உழைப்பு உடனே அதன் கூட்டு இயல்பால் சராசரி சமுதாய உழைப்பாகக் கருதத் தக்கதாகிறது; அந்நிலையில்தான் மதிப்பு-உற்பத்தி விதிகள் அவருக்கு முழுமையாக நிறைவேற்றம் பெறுகின்றன.[399]

வேலை முறையில் மாற்றமில்லாமலே கூட, ஒருங்கே பெரும் எண்ணிக்கையிலான உழைப்பாளிகளை வேலைக்கமர்த்துவது உழைப்பு நிகழ்முறையின் பொருளாயத நிலைமைகளில் ஒரு புரட் சியை ஏற்படுத்துகிறது. அவர்கள் வேலை செய்கிற கட்டடங்கள், கச்சாப் பொருளுக்கான இருப்பகங்கள், தொழிலாளர்களால் ஏககாலத்திலோ அடுத்தடுத்தோ பயன்படுத்தப்படும் கருவிகள் மற்றும் கலன்கள், சுருங்கச் சொல்லின் ஒரு பகுதி உற்பத்திச் சாதனங்கள் இப்போது பொதுவில் நுகரப்படுகின்றன. ஒரு புறம், இந்த உற்பத்திச் சாதனங்களின் பரிவர்த்தனை-மதிப்பு அதிகமாவ தில்லை; ஏனெனில் ஒரு சரக்கின் பயன்-மதிப்பு முன்னிலும் முழுமையாகவும் முன்னிலும் அதிக அனுகூலம் தரும் விதத்திலும் நுகரப்படுவதால் அதன் பரிவர்த்தனை-மதிப்பு உயர்ந்து விடுவ தில்லை. மறு புறம், அவை பொதுவிலும், எனவே முன்னை விடப் பெரிய அளவிலும் பயன்படுத்தப்படுகின்றன. இருபது நெசவாளர் கள் இருபது தறிகளில் வேலை செய்கிற ஓர் அறை, இரு உதவியாளர்களுடன் ஒரே ஒரு நெசவாளர் வேலை செய்யும் அறையை விடப் பெரியதாய் இருந்தாக வேண்டும். ஆனால் இருபது ஆட்களுக்கான ஒரு பட்டறையைக் கட்டுவதற்கு, ஒவ் வொன்றும் இரு நெசவாளர்களுக்கான பத்து பட்டறைகளைக்

[399] ஒருங்கே வேலை வாங்கப்படும் இரு தையற்காரிகள் ஒரு நாளில் செய்யும் வேலையை விட திருமதி ரோஷரால் வேலை வாங்கப்படும் ஒரு தையற்காரி இரு நாளில் செய்யும் வேலை அதிகம் என்று கண்டுபிடித்து விட்டதாகப் பேராசிரியர் ரோஷர் பெருமைப்படுகிறார். இந்த அறிவுசால் பேராசிரியர் முதலாளித்துவப் பொருளுற்பத்தி நிகழ்முறையைத் திண்ணைப் பள்ளியிலோ, முக்கியக் கதாபாத்திரமான முதலாளி இல்லாதிருக்கும் நிலைமைகளிலோ பயில முயல்வது சரியன்று.

கட்டுவதற்கு ஆவதை விடக் குறைவாகவே உழைப்பு செலவாகும்; இவ்வாறு பெரிய அளவில் பொதுவில் பயன்படுத்துவதற்காக ஒன்றுகுவிக்கப்படும் உற்பத்திச் சாதனங்களின் மதிப்பு அச்சாதனங் களின் பெருக்கத்துக்கும், அதிகரித்த பயன்பாட்டுக்கும் ஒப்ப அதே விகிதத்தில் அதிகரிப்பதில்லை. பொதுவில் நுகரப்படும் போது அவை ஒவ்வொரு தனி உற்பத்திப் பண்டத்துக்கும் தமது மதிப்பில் முன்னிலும் சிறிய பகுதியையே தருகின்றன; அவை பெயர்த்தளிக் கிற மொத்த மதிப்பு முன்னிலும் அதிக அளவிலான உற்பத்திப் பண்டங்களால் பகிர்ந்து கொள்ளப்படுகிறது என்பது ஓரளவும், அவற்றின் மதிப்பு அறுதியளவில் முன்னிலும் அதிகமென்ற போதிலும் உற்பத்தி நிகழ்முறையில் அவற்றுக்குள்ள செயற் களத்தைக் கொண்டு பார்க்கையில் தனித்த உற்பத்திச் சாதனங் களின் மதிப்பை விட ஒப்பளவில் குறைவாகும் என்பது ஓரளவும் காரணமாகும். இதன் விளைவாக மாறா-மூலதனத்தின் ஒரு பகுதி யினது மதிப்பு வீழ்கிறது. இவ்வீழ்ச்சியின் பருமனுக்கேற்ற விகிதத் தில் சரக்கின் மொத்த மதிப்பும் வீழ்கிறது. உற்பத்திச் சாதனங் களுக்கு ஆகும் செலவு குறைந்தால் எப்படியோ அதே விளைவுதான் இப்போதும் ஏற்படுகிறது. அவற்றைப் பிரயோகிப்பதில் கைவரப் பெறும் சிக்கனத்துக்கு, பெரும் எண்ணிக்கையிலான ஆட்கள் ஒன்று சேர்ந்து பொதுவில் அவற்றை நுகர்வதே முற்றிலும் காரணமா கிறது. மேலும் சமுதாய உழைப்பின் அவசிய நிலைமைகளாய் இருக்கும் இந்தத் தன்மை அவற்றைத் தனித்த, சுயேச்சையான உழைப்பாளர்கள் அல்லது சிறு அதிபர்களின் சிதறலான, ஒப் பளவில் விலையுயர்ந்த உற்பத்திச் சாதனங்களிலிருந்து வேறு படுத்திக் காட்டுகிறது; ஒருங்கே கூடியுள்ள ஏராளமான தொழி லாளர்கள் ஒருவருக்கொருவர் வேலையில் உதவி புரியாமல் அக்கம் பக்கமாக மட்டுமே வேலைசெய்யும் போது கூட இதே தன்மை பெறப்படுகிறது. உழைப்பு நிகழ்முறை இந்தச் சமுதாயத் தன்மை யைப் பெறுவதற்கு முன்னரே ஒரு பகுதி உழைப்புச் சாதனங்கள் அதனைப் பெற்று விடுகின்றன.

உற்பத்திச் சாதனங்களைப் பயன்படுத்துவதில் சிக்கனமென் பதை இரு கோணங்களிலிருந்து பரிசீலித்தாக வேண்டும். சரக்கு களை மலிவாக்கி அதன் மூலம் உழைப்புச் சக்தியின் மதிப்பில் வீழ்ச்சியை உண்டாக்குவது முதலாவது கோணம்; முன்னீடு செய் யப்பட்ட மொத்த மூலதனத்தோடு, அதாவது மாறா-மூலதன, மாறும்-மூலதன மதிப்புகளின் மொத்தத் தொகையோடு உபரி- மதிப்பு கொண்டுள்ள விகிதத்தை மாற்றுவது இரண்டாவது கோணம். இரண்டாவதாக்ச் சொன்ன கோணம் மூன்றாம் பாகத்துக்கு நாம் வரும் வரை பரிசீலிக்கப்பட மாட்டாது. இப் போதைய பிரச்சினைக்குத் தொடர்புள்ள மற்றும் பல அமிசங் களையுங் கூட, அவற்றை அவற்றின் முறையான தொடர்பில்

எடுத்தாளும் பொருட்டு, மூன்றாம் பாகத்துக்கே ஒதுக்கி வைக்கிறோம். நமது பகுப்பாய்வின் போக்கானது ஆய்வுப் பொருளை இப்படிப் பிரிவினை செய்யுமாறு கட்டாயப்படுத்துகிறது; இப்படிப் பிரிவினை செய்வது முதலாளித்துவப் பொருளுற்பத்தியின் உணர்வுக்கு முற்றிலும் பொருத்தமானதே. ஏனெனில், இந்த முதலாளித்துவப் பொருளுற்பத்தி முறையில், தொழிலாளி உழைப்புச் சாதனங்கள் தன்னைச் சார்ந்திராமல் பிறிதொருவரின் சொத்தாக இருக்கக் காண்பதால், அவரைப் பொறுத்த வரை, அவற்றைப் பயன்படுத்துவதில் சிக்கனமென்பது அவருக்கு அக்கறையில்லாத, அவரது தனிப்பட்ட உற்பத்தித் திறனை உயர்த்துவதற்கான வழிமுறைகள் சம்பந்தப்படாத ஏதோ ஒரு வேறுபட்ட செயலாகத் தோன்றுகிறது;

ஒரே நிகழ்முறையிலானாலும் சரி, வெவ்வேறான, ஆனால் தொடர்புடைய நிகழ்முறைகளிலானாலும் சரி, ஏராளமான உழைப்பாளிகள் அக்கம்பக்கமாகச் சேர்ந்து வேலை செய்யும் போது, அவர்கள் கூட்டாய் வேலை செய்வதாக, அதாவது கூட்டு-வேலையில் [co-operation] ஈடுபடுவதாகச் சொல்லப்படுகிறது. [400]

குதிரைப் படைப் பிரிவின் தாக்குஞ்சக்தி அல்லது காலட் படைப் பிரிவின் பாதுகாப்புச் சக்தி என்பது தனித்தனியாக எடுத்துக் கொள்ளப்படும் குதிரை வீரர்கள் அல்லது காலாட்படைச் சிப்பாய்களின் தாக்கும் அல்லது பாதுகாக்கும் சக்திகளின் கூட்டுத் தொகையிலிருந்து அடிப்படையிலேயே வேறான ஒன்று. இதே போல், தனித்த தொழிலாளர்கள் செலுத்துகிற யாந்திரிகச் சக்திகளின் மொத்தத் தொகை என்பது கனத்த எடையைத் தூக்குவது, திருகுப் பொறியைத் திருப்புவது, தடைக் கல்லை அகற்றுவது போன்ற முழுமையான ஒரே வேலையில் பல கரங்கள் ஒருங்கே ஈடுபடும் போது உருவாகிற சமுதாயச் சக்தியிலிருந்து வேறுபடுகிறது.[401] இத்தகைய நேர்வுகளில், ஒருங்கிணைந்த உழைப்பின் பலனைத் தனி ஆளின் உழைப்பால் பெறவே முடியாது; அப்படியே முடிந்தாலும் வெகு நேரம் செலவிட்டே பெற முடியும்; அல்லது, குன்றிச் சிறுத்த அளவிலேயே பெற முடியும். இங்கு நாம் கூட்டு-வேலையின் மூலம் தனி ஆளின் உற்பத்தித் திறன் அதிகமாவதை மட்டும் காணவில்லை. ஒரு புதிய சக்தி, அதாவது வெகு

---

400 "Concours de forces." (தெஸ்தூத் டெ திரேசி, முன் வந்தது, பக்கம் 80.)

401 "பகுதிகளாகப் பிரிப்பதற்கு இடமளிக்காத அளவுக்கு சாமானிய வகையைச் சேர்ந்த வேலைகள் ஏராளம் உண்டு: இவற்றைப் பல ஜோடிக் கரங்களின் கூட்டுச் செயலின்றி நிறைவேற்ற முடியாது. ஒரு பெரிய மரத்தைப் பார வண்டியில் ஏற்றுவதை எடுத்துக்காட்டாகக் கூறுவேன்,...சுருங்கச் சொல்லின், முழுமையான ஒரே வேலையில், ஒரே நேரத்தில் மிகப் பல ஜோடிக் கரங்கள் ஒன்றுக்கொன்று உதவினாலன்றி செய்ய முடியாத ஒவ்வொரு காரியமும் இவ்வகைப்பட்டதே." (எ.கி. வேக்ஃபீல்டு: "குடியேறும் கலை பற்றிய ஒரு பார்வை." லண்டன், 1849, பக்கம் 168.)

ஜனங்களது கூட்டுச் சக்தி உதித்தெழுவதையும் காண்கிறோம்.[402]

பல சக்திகளை ஒரே சக்தியாக இணைப்பதிலிருந்து பிறக்கிற புதிய ஆற்றல் அன்னியில், சமூக ஒட்டுறவே நேசப் போட்டியையும் ஆர்வத் துடிப்பையும் தோற்றுவித்து பெரும்பாலான தொழில்களில் தனிப்பட்ட ஒவ்வொரு தொழிலாளியின் செய்திறனையும் உயர்த்து கிறது. எனவேதான், ஒருங்கே சேர்ந்து வேலை செய்கிற ஒரு டஜன் ஆட்கள் அவர்களது கூட்டு வேலை-நாளாகிய 144 மணிகளில், ஒவ்வொருவரும் 12 மணி நேரம் வேலை செய்கிற பன்னிரண்டு தனித்த ஆட்களைக் காட்டிலும் அல்லது தொடர்ச்சியாகப் பன்னிரண்டு நாட்கள் வேலை செய்கிற ஒரு ஆளைக் காட்டிலும் மிக அதிகமாக உற்பத்தி செய்கின்றனர்.[403] மனிதன், அரிஸ்டாட்டில் வாதிடுவது போல் அரசியல் பிராணியாக[404] இல்லா விட்டாலும், எப்படியும் சமுதாயப் பிராணியாவான் என்பதே இதற்குக் காரணம்.

பல ஆட்கள் ஒரே நேரத்தில் ஒரே வேலையில் அல்லது ஒரே வகை வேலையில் ஈடுபட்டிருக்கலாம் என்ற போதிலும், ஒவ்வொருவரின் உழைப்பும் கூட்டு உழைப்பின் பகுதி என்ற முறையில் உழைப்பு நிகழ்முறையின் தனியொரு கட்டத்துக்குரியதாய் இருக்கலாம்; இந் நிகழ்முறையில் அனைத்துக் கட்டங்களின் வழியாகவும், கூட்டு-வேலையின் விளைவாக, அவர்களது உழைப்பின் இலக்குப் பொருள் அதிகரித்த விரைவுடன் கடந்து செல்கிறது. எடுத்துக்

---

402 "ஒரு டன் எடையைத் தூக்க ஒருவரால் முடியாது; பத்து பேர் முழு பலத்தையும் பிரயோகித்து அதைத் தூக்கலாம்; ஆனால் 100 பேர் சேர்ந்து ஒவ்வொருவரது ஒரு விரலின் பலத்தாலேயே அதைத் தூக்க முடியும்." (ஜான் பெல்லர்ஸ்: "தொழிற் கல்லூரி ஒன்றை ஏற்படுத்துவதற்கான யோசனைகள்." லண்டன், 1696, பக்கம் 21.)

403 (ஒவ்வொருவரும் 30 ஏக்கர் நிலமுடையவரான பத்து சாகுபடியாளர்கள் வேலைக்கமர்த்துகிற அதே எண்ணிக்கையிலான ஆட்களை ஒரே சாகுபடியாளர் 300 ஏக்கரில் வேலைக்கமர்த்தும் போது) "வேலையாட்களின் விகிதாசாரத்திலும் ஓர் அனுகூலமுள்ளது; நடைமுறையில் ஈடுபட்டிருப்போர் தவிர ஏனையோருக்கு இது புரிவது அவ்வளவு எளிதன்று. ஏனெனில் 1 என்பது 4க்கு எப்படியோ 3 என்பது 12க்கு அப்படியே என்று சொல்வது இயல்பானதே; ஆனால் இது நடைமுறையில் பொருந்தாது; ஏனெனில் அறுவடையின் போதும், அவ்வகை விரைவு தேவைப்படுகிற வேறு பல வேலைகளிலும் பல ஆட்களை ஒருங்கே ஈடுபடுத்தினால், வேலை நன்றாகவும் துரிதமாகவும் நடந்தேறுகிறது. எடுத்துக்காட்டாக அறுவடையில் 2 ஓட்டுனர்களும், 2 சுமையேற்றுவோரும், 2 சுதிரடிப்போரும், 2 அரித்தெடுப்போரும், வைக்கோற் போரில் அல்லது தானியக் களஞ்சியத்தில் ஏனையோரும், அதே எண்ணிக்கையிலான ஆட்கள் வெவ்வேறு பண்ணைகளில் வெவ்வேறு வேலைக் குழுக்களாகப் பிரிக்கப்பட்டிருந்தால் செய்வதைப் போல் இரு மடங்கு வேலையைச் செய்து முடிப்பார்கள்." ("பலசரக்குகளின் இப்போதைய விலைக்கும் பண்ணைகளின் அளவு போன்றவற்றுக்கும் இடையிலான தொடர்பு பற்றிய ஆய்வு." ஒரு சாகுபடியாளர் எழுதியது. லண்டன், 1773, பக்கம் 7, 8.)

404 கறாராகச் சொன்னால், மனிதன் இயல்பாகவே நகரப் பிரஜை ஆவான் என்பதே அரிஸ்டாட்டில் கூறும் இலக்கணம். இது பண்டைக் காலத்திய சமுதாயத்தின் தனியியல்புகளைப் புலப்படுத்தும் இலக்கணமாகும் — மனிதன் கருவி செய்யும் பிராணி ஆவான் என்று பிராங்க்ளின் கூறும் இலக்கணம் எப்படி யாங்கி ராஜ்யத்தின் தனியியல்புகளைப் புலப்படுத்தும் இலக்கணமாகுமோ அதே போலத்தான் இதுவும்.

காட்டாக, ஒரு டஜன் கொத்தர்கள் ஒரு ஏணியின் பாதத்திலிருந்து உச்சிக்குக் கற்களை அனுப்பும் விதத்தில் வரிசையாக நின்று கொள்வார்களானால், அவர்கள் ஒவ்வொருவரும் ஒரே காரியத்தையே செய்கின்றனர்; ஆயினும், அவர்களது தனிச் செயல்கள் ஒரு முழு வேலையின் தொடர்புள்ள பகுதிகளாக அமைகின்றன; ஒவ்வொரு கல்லும் கடந்து செல்ல வேண்டிய குறிப்பான கட்டங்கள் அவை; இவ்வாறு கற்கள், ஒவ்வொருவரும் தன் சுமையுடன் தனித்தனியாக ஏணியில் ஏறி இறங்கினால் ஏற்றப்படுவதை விடத் துரிதமாக ஆள் வரிசையின் 24 கரங்களால் ஏற்றப்படுகின்றன.[405] பொருள் அதே தூரத்துக்கு முன்னிலும் குறைந்த நேரத்தில் எடுத்துச் செல்லப்படுகிறது. அதே போல், எடுத்துக்காட்டாக ஒரு கட்டடம் ஏககாலத்தில் வெவ்வேறு பக்கங்களில் கட்டப்படும் போதெல்லாம்—இங்கும் கூட்டு-வேலை செய்யும் கொத்தர்கள் ஒரே வேலையை அல்லது ஒரே வகை வேலையை செய்கின்றனர் என்ற போதிலும்—உழைப்பின் இணைவு நிகழ்கிறது. கட்டடம் கட்டுவதில், ஒரு கொத்தர் 12 நாட்களுக்கு அல்லது 144 மணி நேரத்துக்கு வேலை செய்து அடைவதை விட மிக அதிகமான முன்னேற்றத்தை 12 கொத்தர்கள் 144 மணி நேரம் கொண்ட தமது கூட்டு வேலை-நாளில் அடைகின்றனர். ஒத்திசைந்து வேலை செய்கிற மனிதர்களின் குழு முன்னும் பின்னும் க்ரங்களும் கண்களும் கொண்டுள்ளது, ஓரளவுக்கு சர்வ வியாபியாய் உள்ளது என்பதே காரணம். வேலையின் பல்வேறு பகுதிகள் ஒருங்கே முன்னேறுகின்றன.

மேற்சொன்ன எடுத்துக்காட்டுகளில், மனிதர்கள் ஒரே வேலையை அல்லது ஒரே வகை வேலையைச் செய்கிறார்கள் என்பதை வலியுறுத்திச் சொன்னோம்; ஏனெனில் பொதுவிலான உழைப்பின் மிகவும் சாமானிய வடிவமாகிய இது கூட்டு-வேலையில்—முழுமையாக அது வளர்ச்சியடைந்துள்ள கட்டத்திலும் கூட—முக்கியப் பங்கு வகிக்கிறது. வேலை சிக்கலானதாக இருப்பின், கூட்டாக வேலை செய்கிற ஆட்களின் தொகையே பல்வேறு வேலைகள் வெவ்வேறு கரங்களுக்குப் பிரித்துக் கொடுக்கப்படு

---

405 "தொழிலாளர்கள் ஒரே வேலையில் ஈடுபட்டிருக்கும் போதும் கூட இந்த அரைகுறை உழைப்புப் பிரிவினை ஏற்பட முடியும் என்பதையும் குறிப்பிட்டாக வேண்டும். எடுத்துக்காட்டாக, செங்கற்களை கைக்குக் கை மாற்றி கட்டடத்தின் உயர் மட்டத்துக்கு அனுப்புவதில் ஈடுபட்டுள்ள கொத்துவேலைக்காரர்கள் எல்லாம் ஒரே வேலையைச் செய்து கொண்டிருக்கிறார்கள் என்றாலும், அவர்களிடையே ஒருவிதமான உழைப்புப் பிரிவினை இருக்கவே செய்கிறது. எப்படியென்றால், ஒவ்வொருவரும் செங்கல்லைக் குறிப்பிட்ட தொலைவுக்கு அனுப்புகிறார். ஒவ்வொருவரும் தனித்தனியே செங்கல்லை மேல் மாடிக்குத் தூக்கிச் சென்றால் ஆவதைக் காட்டிலும், எல்லாருமாகச் சேர்ந்து செங்கல்லை அவசியமான இடத்தில் மிகத் துரிதமாய் சேர்ப்பிக்கின்றனர்." (பி. ஸ்கார்பெக்: "Theorie des richesses sociales." பாரிஸ், 1839, பாகம் I., பக்கம் 97, 98.)

வதற்கும், ஆதலால் அவை ஒருங்கே செய்யப்படுவதற்கும் இடமளிக்கிறது. இதனால் வேலை முழுவதும் பூர்த்தியாவதற்கு அவசியமான நேரம். குறைகிறது.[406]

பல தொழில்களில் உழைப்பு நிகழ்முறையின் இயல்பால் தீர் மானிக்கப்படும் தவிப்பான காலங்கள் உள்ளன; சில திட்டவட்ட மான பலன்களை இக்காலங்களில் அடைந்தாக வேண்டும். எடுத்துக்காட்டாக, செம்மறி ஆட்டு மந்தைக்கு ரோமம் கத்தரிக்க வேண்டியிருந்தால், அல்லது கோதுமை வயலில் அறுத்துப் போர் போட வேண்டியிருந்தால், நாம் அடையும் பலனின் அளவும் தரமும் வேலை குறிப்பிட்ட காலத்துக்குள் துவக்கி முடிக்கப்படு வதையே பொறுத்துள்ளன. ஹெரிங் மீன் பிடிப்பதற்குக் குறிப் பிட்ட காலம் இருப்பது போலவே, மேற்கண்ட உதாரணங்களில் உழைப்பு நிகழ்முறை நடந்து முடிவதற்கும் குறிப்பிட்ட கால முண்டு. ஒரு தனியாள் இயற்கை நாளிலிருந்து — உதாரணமாக — 12 மணி நேரத்துக்கு அதிகமான வேலை-நாளை எடுக்க முடியாது; ஆனால் கூட்டு-வேலை செய்கிற 100 பேர் வேலை-நாளை 1,200 மணிகளாக நீண்டு விடச் செய்கின்றனர். வேலைக்கு அனுமதிக்கப் படும் நேரம் சிறிதாயிருப்பதை, தீர்மானகரமான தருணத்தில் உற்பத்திக் களத்தில் இறக்கப்படும் உழைப்புத் திரள் பெரிதா யிருப்பது ஈடு செய்து விடுகிறது. சரியான நேரத்துக்குள் பணியை முடிப்பது ஏராளமான வேலை-நாட்களை இணைத்து ஒருங்கே பிரயோகிப்பதைப் பொறுத்ததாகும்; பயனுள்ள விளைவின் அளவு உழைப்பாளர்களின் எண்ணிக்கையைப் பொறுத்ததாகும்; ஆயினும் இந்த எண்ணிக்கை அதே காலத்தில் அதே அளவு வேலையை செய்வதற்கு அவசியமான தனித்த உழைப்பாளிகளின் எண்ணிக் கையை விட எப்போதுமே சிறியதாகும்.[407] இவ்விதமான கூட்டு-வேலை இல்லாததால்தான் அமெரிக்க ஐக்கிய நாட்டின் மேலைப் பகுதியில் பெருமளவு தானியமும், ஆங்கிலேய ஆட்சி பழைய கிராம சமுதாயங்களை அழித்துள்ள கிழக்கிந்தியப் பகுதிகளில்

---

406 ''சிக்கலான ஒரு வேலையைச் செய்து முடிக்க வேண்டும் என்கிற போது, வெவ்வேறு காரியங்களை ஏக காலத்தில் ஒருங்கே செய்தாக வேண்டும். ஒருவர் ஒன்றைச் செய்கிறார்; இன்னொருவர் வேறொன்றைச் செய்கிறார்; தனியொருவரால் உண்டாக்க முடியாத விளைவை எல்லாருமாகச் சேர்ந்து உண்டாக்குகிறார்கள். ஒருவர் துடுப்பு போடுகிறார்; இன்னொருவர் சுக்கான் பிடிக்கிறார்; இன்னொருவர் வலை வீசுகிறார் அல்லது மண்டா எறிகிறார். இவ்விதம் மீன்பிடித் தொழில் வெற்றிகரமாய் நடைபெறுகிறது. இந்தக் கூட்டு-வேலை இல்லையேல் இது சாத்தியமாகாது.'' (தெஸ்தூத் டெ திரேசி, முன் வந்தது.)

407 ''தக்க தருணத்தில் அதை (விவசாய வேலையை) செய்து முடிப்பது அந்த அளவுக்கு அதிகப் பலன் தருவதாகும்.'' (''பலசரக்குகளின் இப்போதைய விலைக்கும்...இடையிலான தொடர்பு பற்றிய ஆய்வு.''...பக்கம் 9.) ''பயிர்த்தொழிலில் காலத்தை விட முக்கியமானது ஒன்றுமில்லை.'' (லீபிக்: ''Ueber Theorie und Praxis in der Landwirtschaft.'' 1856, பக்கம் 23.)

பெருமளவுப் பருத்தியும் ஆண்டுதோறும் வீணாகின்றன.[408]

ஒருபுறம் கூட்டு-வேலை விரிவான இடப்பரப்பில் வேலை நடப்பதற்கு வழி செய்கிறது; இதன் விளைவாக வடிகால் வேலை, அணைகள் கட்டுதல், நீர்ப்பாசனப் பணிகள், கால்வாய்களையும் சாலைகளையும் இருப்புப் பாதைகளையும் நிர்மாணித்தல் போன்ற குறிப்பிட்ட சில பணிகளில் அது கட்டாய அவசியமுள்ளதாகிறது. மறுபுறம், உற்பத்தியின் அளவுவீதத்தை விரிவுபடுத்துகிற அதே நேரத்தில் ஒப்பளவில் அரங்கம் சுருங்கிட அது உதவுகிறது. இந்த அரங்கச் சுருக்கம் உற்பத்தியின் அளவுவீத விரிவாக்கத்திலிருந்து பிறந்து, அதனுடன் ஒருங்கே நடைபெறுகிறது; இதனால் வீண் செலவுகள் பலவும் தவிர்க்கப்படுகின்றன. இந்த அரங்கச் சுருக்கமானது உழைப்பாளிகள் ஒன்றுதிரளுதல், பல்வேறு நிகழ்முறைகள் ஒன்றுகூடுதல், உற்பத்திச் சாதனங்கள் ஒன்றுகுவிதல் ஆகியவற்றின் விளைவாகும்.[409]

ஒன்றிணைந்த வேலை-நாள் அதற்குச் சமமான தனித்தனி வேலை-நாட்களின் மொத்தத்தோடு ஒப்பிடுமிடத்து, அதிக அளவிலான பயன்-மதிப்புகளை உற்பத்தி செய்கிறது; ஆதலால், குறிப்பிட்ட பயனுள்ள விளைவின் உற்பத்திக்கு அவசியமான உழைப்பு நேரத்தைச் சுருக்குகிறது. ஒன்றிணைந்த வேலை-நாள் குறிப்பிட்ட நேர்வில் இந்த அதிகரித்த உற்பத்தித் திறனை அடைவதற்கு எது காரணமானாலும்—அது உழைப்பின் யாந்திரிக வலிமையை உயர்த்துவது காரணமானாலும், கூடுதலான இடப்பரப்புக்கு அதன் செயற்களத்தை விரிவுபடுத்துவது காரணமானாலும், உற்பத்தியின் அளவுவீதத்தோடு ஒப்பிடுகையில் உற்பத்திக் களத்தை சுருங்கச் செய்வது காரணமானாலும், தக்க தருணத்தில் உழைப்பின் பெருந்

408 ''அடுத்தபடியான கேடு உலகில் வேறு எந்த நாட்டையும் விட (சீனாவையும் இங்கிலாந்தையும் வேண்டுமானால் விதிவிலக்காகக் கொள்ளலாம்) அதிக அளவில் உழைப்பை ஏற்றுமதி செய்யும் ஒரு நாட்டில் காண முடியுமென எதிர்பார்க்க முடியாத ஒன்று. பருத்தியை சுத்தம் செய்யப் போதுமான ஆட்கள் கிடைக்காமற் போவதே இந்தக் கேடு. இதன் விளைவு என்னவென்றால், விளைந்த பருத்தி பெருமளவில் பறிக்காமலே விடப்படுகிறது; அதே நேரத்தில் இன்னொரு பகுதி உதிர்ந்து விழுந்த பின், தரையிலிருந்து அள்ளிச் சேர்க்கப்படுகிறது; அது வண்ணமிழந்தும், ஓரளவு கெட்டுப் போயும் இருப்பது மெய்தான். இவ்வாறு இங்கிலாந்து ஆவலுடன் எதிர்நோக்கும் இந்தப் பயிரின் சாகுபடியாளர் தக்க பருவத்தில் போதிய உழைப்பு கிடைக்காமல் போவதால், விளைச்சலில் பெரும் பகுதியை இழக்க வேண்டியதாகிறது.'' (''பெங்கால் ஹுர்காரு.'' இருமாத இதழ். உள்நாட்டு செய்திச் சுருக்கம், *1861* ஜூலை *22*.)

409 வேளாண்மையின் முன்னேற்றத்தில், ''ஒரு காலத்தில் *500* ஏக்கரில் தளர்வாக வேலை செய்த மூலதனம், உழைப்பு அனைத்தும், ஒருகால் இவையனைத்துக்கும் அதிகமாகவே, இப்போது *100* ஏக்கரை இன்னும் செம்மையாக உழுவதற்கு ஒருமுகப் படுத்தப்படுகின்றன.'' ''ஈடுபடுத்தப்படும் மூலதனம், உழைப்பு ஆகியவற்றின் அளவோடு ஒப்பிடுமிடத்து இடம் ஒன்றுகுவிக்கப்படுகிறது'' என்ற போதிலும், ''ஒரே ஒரு சுயேச்சையான உற்பத்திச் செயலி முன்னதாக வகித்த அல்லது வேலை செய்த உற்பத்தித் துறையோடு ஒப்பிடுமிடத்து அது ஓர் விரிவடைந்த உற்பத்தித் துறையே ஆகும்.'' (*ரி. ஜோன்ஸ்* ''செல்வ வினியோகம் பற்றிய கட்டுரை,'' பகுதி I. வாரம் பற்றி. லண்டன், *1831*, பக்கம் *191*.)

திரள்களை வேலையில் இறக்குவது காரணமானாலும், தனியாட்களிடையே நேசப் போட்டியைத் தூண்டி அவர்களின் ஆர்வத் துடிப்பை உயர்த்துவது காரணமானாலும் பலர் செய்யும் ஒரே மாதிரியான வேலைகளைத் தொடர்ச்சியானவையாகவும், பன்முகப் பட்டவையாகவும் மாற்றுவது காரணமானாலும், வெவ்வேறு வேலைகளை ஒருங்கே நிறைவேற்றுவது காரணமானாலும், பொதுவில் பயன்படுத்துவதன் மூலம் உற்பத்திச் சாதனங்களைச் சிக்கனப்படுத்துவது காரணமானாலும், தனியாள் உழைப்புக்குச் சராசரி சமுதாய உழைப்பின் தன்மையைக் கொடுப்பது காரணமானாலும்—ஒன்றிணைந்த வேலை-நாளின் தனிவித உற்பத்தித் திறன் என்பது எல்லா நிலைமைகளிலும் உழைப்பின் சமுதாய உற்பத்தித் திறனாகும், அல்லது சமுதாய உழைப்பின் உற்பத்தித் திறனாகும். இந்தத் திறனுக்கு காரணம் கூட்டு-வேலையே. உழைப்பாளி மற்றவர்களுடன் முறையாகக் கூட்டு-வேலை செய்யும் போது தன் தனித்தன்மையின் தளைகளை அறுத்தெறிந்து விட்டு, தன் இன ராசியின் ஆற்றல்களை வளர்க்கிறார்.[410]

பொதுவாக, உழைப்பாளிகள் ஒன்று சேர்க்கப்படாமல் கூட்டு-வேலை செய்ய முடியாது. அவர்கள் ஓரிடத்தில் கூடுவது அவர்களது கூட்டு-வேலைக்கு அவசியத் தேவையாகும். எனவே கூலித் தொழிலாளர்கள் ஒரே மூலதனத்தால், ஒரே முதலாளியால் ஒருங்கே வேலைக்கமர்த்தப்படா விட்டால், ஆகவே அவர்களது உழைப்புச் சக்திகள் அவரால் ஒருங்கே வாங்கப்படா விட்டால், அவர்கள் கூட்டு-வேலை செய்ய முடியாது. இந்த உழைப்புச் சக்திகளின் மொத்த மதிப்பு, அல்லது நிலைமைக்கேற்ப ஒரு நாளுக்கான அல்லது ஒரு வாரத்துக்கான இந்தத் தொழிலாளர்களது கூலியின் தொகை, தொழிலாளர்கள் உற்பத்தி நிகழ்முறைக்காகக் கூட்டப்படும் முன்னர் முதலாளியின் கையில் தயாராய் இருக்க வேண்டும். ஒரே ஒரு நாளுக்காக என்றாலும் கூட ஒரே நேரத்தில் 300 தொழிலாளர்களுக்கு ஊதியமளிக்கத் தேவைப்படும் முதலீடு அதை விடச் சிறிய எண்ணிக்கையிலான ஆட்களுக்கு ஓராண்டு முழுமைக்கும் வாரா வாரம் ஊதியமளிப்பதற்குத் தேவைப்படுவதை விட அதிகமாகும். எனவே, கூட்டாக வேலை செய்கிற தொழிலாளர்களின் எண்ணிக்கை, அதாவது கூட்டு-வேலையின் வீச்சு, முதலாவதாக, தனிப்பட்ட முதலாளி உழைப்புச் சக்தியை வாங்குவதற்காக ஒதுக்க முடிகிற மூலதனத்தின் அளவைப் பொறுத்தது; வேறுவிதமாகச்

410 "தனி மனிதனின் வலிமை மிகக் குறைவு. ஆனால் மிகச் சிறிய சக்திகள் பலவும் ஒன்றாகிற போது அதனால் உண்டாகும் கூட்டுச் சக்தியானது அந்தக் கூட்டினது அங்கங்களாய் அமையும் சக்திகளை எல்லாம் கூட்டி வருவதை விட வலிமை வாய்ந்ததாகும். ஆகவே, இந்தச் சக்திகளை ஒன்று சேர்த்தாலே போதும், அவசியமான நேரத்தைக் குறைக்கவும் அவற்றின் செயற்களத்தை விரிவாக்கவும் முடியும்." (ஜி .ரி. கார்லி, பீ. வெர்ரிக்குக் குறிப்பு, முன் வந்தது, பாகம் XV., பக்கம் 196.)

சொல்வதானால், பல தொழிலாளர்களது வாழ்வுச் சாதனங்களின் மீது தனியொரு முதலாளிக்குள்ள ஆளுகையின் விரிவைப் பொறுத்தது.

இது மாறும்-மூலதனத்திற்குப் பொருந்துவது போலவே மாறா-மூலதனத்திற்கும் பொருந்தும். கச்சாப் பொருளுக்கான முதலீடு, தலைக்கு 10 பேரை வேலைக்கமர்த்தும் 30 முதலாளிகள் ஒவ்வொருவருக்கும் இருப்பதைப் போல், 300 பேரை வேலைக்கு அமர்த்தும் ஒரே முதலாளிக்கு 30 மடங்கு அதிகமாயிருக்கும். பொதுவில் பயன்படுத்தப்படும் உழைப்புச் சாதனங்களின் மதிப்பும் அளவும் தொழிலாளர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும் அதே வீதத்தில் அதிகரிப்பதில்லையென்பது மெய்தான். ஆனால், அவையும் கணிசமான அளவுக்கு அதிகரிக்கவே செய்கின்றன. எனவே, தனிப்பட்ட முதலாளிகளின் கையில் பெருந்திரளான உற்பத்திச் சாதனங்கள் ஒன்றுகுவிக்கப்படுவது கூலித் தொழிலாளர்களின் கூட்டு-வேலைக்கு அவசியப் பொருளாயத நிலைமையாகும்; கூட்டு-வேலையின் விரிவு அல்லது உற்பத்தியின் அளவு வீதம் இந்தக் குவிப்பின் விரிவைப் பொறுத்தது.

ஒருங்கே வேலைக்கமர்த்தப்படும் தொழிலாளர்களின் எண்ணிக்கையும், ஆதலால் உற்பத்தி செய்யப்படும் உபரி-மதிப்பின் அளவும், வேலை கொடுப்பவரை உடலுழைப்பிலிருந்து விடுதலை செய்வதற்கும், அவரை சிறு அதிபர் என்ற நிலையிலிருந்து முதலாளியாக மாற்றுவதற்கும், இவ்வாறு முறைப்படி முதலாளித்துவ பொருளுற்பத்தியை நிறுவுவதற்கும் போதுமானதாய் இருக்கும் பொருட்டு, மூலதனத்தின் குறிப்பிட்ட குறைந்தபட்ச அளவு அவசியம் என்பதை முந்தைய அத்தியாயம் ஒன்றில் பார்த்தோம். ஏராளமான தனித்த, சுயேச்சையான நிகழ்முறைகளை ஒன்றிணைந்த சமுதாய நிகழ்முறையாக மாற்றுவதற்கு குறிப்பிட்ட குறைந்தபட்சத் தொகை அவசியத் தேவையாகும் என்பதை இப்போது பார்க்கிறோம்.

முதலில் உழைப்பு மூலதனத்துக்குக் கீழ்ப்படும் படியாதல் உழைப்பாளி தனக்காக அல்லாமல் முதலாளிக்காகவும், ஆதலால் முதலாளிக்குக் கீழ்ப்பட்டும் வேலை செய்வதன் முறையான விளைவே என்பதையும் பார்த்தோம். ஏராளமான கூலித் தொழிலாளர்களின் கூட்டு-வேலையின் மூலம், மூலதனத்தின் ஆளுகை என்பது உழைப்பு நிகழ்முறையை நடத்திச் செல்வதற்கே ஓர் அவசியத் தேவையாக, உற்பத்தியின் மெய்யான அவசியத் தேவையாக வளர்கிறது. போர்க்களத்தில் தளபதி ஆளுகை செலுத்துவது எப்படி அவசியமோ, அதே போல் உற்பத்திக் களத்தில் இப்போது முதலாளி ஆளுகை செலுத்துவது அவசியமாகிறது.

பெருவீதத்தில் ஒன்றிணைந்த உழைப்பனைத்துக்கும் இயக்கி ஆளும் அதிகாரம் ஒன்று அதிகமாகவோ குறைவாகவோ அவசியமாகும். அப்போதுதான் தனித்தனி நடவடிக்கைகளின் இசைவான

செயற்பாட்டை சாதிக்க முடியும்; ஒன்றிணைந்த உயிரமைப்பின் செயலிலிருந்து—அதன் தனி அங்கங்களின் செயலிலிருந்து அன்று—பிறக்கிற பொதுவான பணிகளை ஆற்ற முடியும். ஒண்டியாக வயலின் வாசிப்பவர் தனக்குத் தானே இயக்குநர் ஆவார். ஆனால், வாத்தியக் குழுவுக்குத் தனி இயக்குநர் இருந்தாக வேண்டும். மூலதனத்தின் கட்டுப்பாட்டிற்குட்பட்ட உழைப்பு கூட்டு-வேலை புரிவதாய் ஆகும் தருணத்திலிருந்தே, இயக்குதல், கண்காணித்தல், இசைவித்தல் என்ற வேலை மூலதனத்தின் பணிகளில் ஒன்றாகிறது. மூலதனத்துக்குரிய பணியென்ற முறையில் இது தனிவிதக் குணாதிசயங்கள் உடையதாகிறது.

முதலாளித்துவப் பொருளுற்பத்தியின் இயக்குவிசை—அதன் முடிவும் நோக்கமும்—முடிந்த வரை அதிகமாக உபரி-மதிப்பைக் கறப்பதும்,[411] ஆதலால் முடிந்த வரை அதிகமாக உழைப்புச் சக்தியைச் சுரண்டுவதுமாகும். கூட்டு-வேலை செய்கிற தொழிலாளர்களின் தொகை அதிகரிக்க அதிகரிக்க, மூலதனத்தின் ஆளுகைக்கு அவர்கள் காட்டும் எதிர்ப்பும், அதனுடன் கூடவே இந்த எதிர்ப்பை மூலதனம் எதிர் நிர்ப்பந்தத்தின் மூலம் சமாளிக்க வேண்டிய அவசியமும் அதிகரிக்கின்றன. முதலாளி செலுத்துகிற கட்டுப்பாடு சமுதாய உழைப்பு நிகழ்முறையின் இயல்பிலிருந்து விளைவதும் அந்த நிகழ்முறைக்கே உரித்தானதுமாகிய தனிவிதப் பணி என்பதோடு, சமுதாய உழைப்பு நிகழ்முறையைச் சுரண்டுகிற பணியும் ஆகும். ஆதலால் இக்கட்டுப்பாடு சுரண்டுபவருக்கும், அவர் சுரண்டுகிற உயிருள்ள, உழைக்கிற கச்சாப் பொருளுக்கும் இடையிலான தவிர்க்க முடியாத பகைமையில் வேர் கொண்டதாகும்.

மேலும், முன்போல் உழைப்பாளியின் உடைமையாக இல்லாமல் இப்போது முதலாளியின் உடைமையாக இருக்கிற உற்பத்திச் சாதனங்களின் திரள் அதிகமாவதற்கேற்ப அந்தச் சாதனங்களின் முறையான பிரயோகத்தின் மீது ஓரளவு திறனுள்ள கட்டுப்பாட்டின் அவசியமும் அதிகமாகிறது.[412] மேலும் கூலித்

---

411 "இலாபமே...வர்த்தகத்தின் ஒரே நோக்கம்." (ஜே. வாண்டர்லிண்ட், முன் வந்தது, பக்கம் 11.)

412 அற்பவாத ஏடாகிய ஸ்பெக்டேட்டர் கூறுவதாவது: "மான்செஸ்டர் கம்பித் தொழில் நிறுமத்தில்" முதலாளிக்கும் தொழிலாளர்களுக்குமிடையில் ஒரு வகையான கூட்டாளியுறவைப் புகுத்திய பின்னர் ஏற்பட்ட "முதல் விளைவு வீணடிப்பு திடீரெனக் குறைவதாய் இருந்தது. ஆட்கள் தம் சொந்த உடைமையை—வேறொரு அதிபரின் உடைமையன்று—தாமே வீணடிக்கக் காரணம் எதுவுமில்லை. தொழில் துறை இழப்பின் மிகப் பெரிய ஆதாரமாயிருப்பது திரும்பி வராத கடன்களுக்கு அடுத்தபடியாக வீணடிப்பே எனலாம்." ரோச்டேல் கூட்டுறவுச் சோதனைகளின் பிரதானக் குறைபாடு பின்வருவதென அதே ஏடு கருதுகிறது: "தொழிலாளர்களின் சங்கங்கள் பணிமனைகளையும் ஆலைகளையும், அநேகமாகத் தொழிலின் எல்லா வடிவங்களையுமே வெற்றிகரமாக நிர்வகிக்க முடியும் என்பதை அவை காட்டின; ஆட்களின் நிலைமையை அவை உடனடியாக மேம்படச் செய்தன; ஆனாலும் அதிபர்களுக்கென தெளிவாக ஓர் இடத்தை ஒதுக்கவில்லை." என்னே இக்கொடுமை!

தொழிலாளர்களின் கூட்டு-வேலை முழுக்க முழுக்க அவர்களை வேலைக்கமர்த்தும் மூலதனத்தாலேயே தோற்றுவிக்கப்படுகிறது. ஒற்றை உற்பத்தி அமைப்பாக அவர்கள் ஐக்கியமடைவதும், அவர்களது தனிப் பணிகளிடையே தொடர்பை நிறுவுவதும் அவர்களுக்குப் புறம்பான, அன்னியமான காரியங்களாகும்; இவை அவர்களுக்குரிய செயலல்ல: அவர்களை ஒன்றுசேர்த்து ஒன்றாக வைத்துக் கொள்கிற மூலதனத்தின் செயலாகும். எனவேதான் அவர்களது எண்ணத்தில், அவர்களது பல்வேறு உழைப்புகளிடையே நிலவுகிற தொடர்பு முதலாளியால் முன்கூட்டியே வகுக்கப்பட்ட திட்டத்தின் உருவில் காட்சியளிக்கிறது; நடைமுறையில், அந்த முதலாளி செலுத்தும் அதிகாரத்தின் உருவில், அவர்களது செயற்பாட்டைத் தனது நோக்கங்களுக்குக் கீழ்ப்படுத்துகிற பிறிதொருவரின் சக்தி வாய்ந்த சித்தத்தின் உருவில் காட்சியளிக்கிறது. அப்படியாயின், சாராம்சத்தில் முதலாளியின் கட்டுப்பாடு இரட்டைத் தன்மையதாகும். ஏனென்றால் உற்பத்தி நிகழ்முறையே இரட்டைத் தன்மையதாய் உள்ளது; அதாவது ஒரு புறம் பயன்-மதிப்புகளை உற்பத்தி செய்வதற்கான சமுதாய நிகழ்முறையாகவும், மறு புறம் உபரி-மதிப்பைப் படைப்பதற்கான நிகழ்முறையாகவும் உள்ளது. ஆனால், வடிவத்தில் இக்கட்டுப்பாடு கொடுங்கோல் தன்மை வாய்ந்ததாகும். கூட்டு-வேலையின் வீச்சு விரிவுபட விரிவுபட, இந்தக் கொடுங்கோன்மை அதற்கே உரித்தான வடிவங்கள் எடுக்கிறது. முதலில், தனது மூலதனம் முதலாளித்துவப் பொருளுற்பத்தி என்பதன் தொடக்கத்துக்கு அவசியமான குறைந்தபட்சத் தொகையை எட்டியதுமே, முதலாளி உள்ளபடியே உழைப்பதிலிருந்து விடுபடுகிறார் என்பது போலவே, இப்போது அவர் தனிப்பட்ட தொழிலாளர்களையும் தொழிலாளர் குழுக்களையும் நேரடியாகவும் இடைவிடாமலும் கண்காணிக்கிற வேலையை ஒரு தனி வகைப்பட்ட கூலித் தொழிலாளியிடம் ஒப்படைக்கிறார். முதலாளியின் ஆளுகையில் உள்ள தொழிலாளர்களின் தொழிற் பட்டாளத்துக்கு, உண்மையான சேனைக்குத் தேவைப்படுவது போலவே, அதிகாரிகளும் (மேலாளர்கள்), சார்ஜெண்டுகளும் (மேஸ்திரிகள், கங்காணிகள்) தேவைப்படுகின்றனர்; இவர்கள், வேலை நடக்கும் போது, முதலாளியின் பெயரால் ஆளுகை புரிகின்றனர். கண்காணிப்பு வேலை அவர்களது நிலைத்த, பிரத்தியேகமான பணியாகிறது. தனித்துள்ள விவசாயிகள் மற்றும் கைவினைஞர்களின் பொருளுற்பத்தி முறையை அடிமையுழைப்பு மூலமான உற்பத்தியுடன் ஒப்பிடும் போது, அரசியல் பொருளாதார அறிஞர் இந்தக் கண்காணிப்பு உழைப்பை திறனிலா உற்பத்திச் செலவு [faux frais of production] என்ற கணக்கில் சேர்க்கிறார்.[413] ஆனால்,

[413] உழைப்பைக் கண்காணிப்பதென்பது வட அமெரிக்காவின் தென் மாநிலங்

இதற்கு மாறாக, அவர் முதலாளித்துவப் பொருளுற்பத்தி முறையை நோக்கும் பொழுது, உழைப்பு நிகழ்முறையின் கூட்டு-வேலைத் தன்மையால் அவசியமாகிற கட்டுப்படுத்தும் வேலையும், அந்த நிகழ்முறையின் முதலாளித்துவத் தன்மையாலும், முதலாளியின் நலன்களுக்கும் தொழிலாளியின் நலன்களுக்கும் இடையிலான பகைமையாலும் அவசியமாகிற வேறு விதமான கட்டுப்படுத்தும் வேலையும் ஒன்றெனக் கருதுகிறார்.[414] ஒருவர் முதலாளியாக இருப்பது தொழில்-தலைவராக இருப்பதால் அன்று; மாறாக, அவர் தொழில்-தலைவராக இருப்பது முதலாளியாக இருப்பதால் தான். பிரபுத்துவக் காலத்தில் தளகர்த்தன், நீதிபதி என்ற பணிகள் நிலச் சொத்துக்கு உரித்தானவையாய் இருந்தது போலவே, தொழில் தலைமையென்பது மூலதனத்துக்கு உரித்தானதாகும்.[415]

தொழிலாளி தனது உழைப்புச் சக்தியின் விற்பனைக்காக முதலாளியுடன் பேரம் செய்து முடிக்கும் வரை அவ்வுழைப்புச் சக்தியின் உடைமையாளர் அவரே; அவரிடம் இருப்பதற்கதிக மாக—அதாவது அவரது தனிப்பட்ட ஒண்டியான உழைப்புச் சக்திக்கு அதிகமாக—எதையும் அவர் விற்க முடியாது. முதலாளி ஓர் ஆளின் உழைப்புச் சக்தியை வாங்குவதற்கு பதில் 100 ஆட்களின் உழைப்புச் சக்தியை வாங்கினாலும், ஒரு ஆளுக்குப் பதில் தொடர் பில்லாத 100 ஆட்களுடன் தனித்தனி ஒப்பந்தங்களைச் செய்து கொண்டாலும், நிலைமையில் எவ்வித மாற்றமும் இல்லை. 100 ஆட்களையும் கூட்டாக வேலை செய்யவிடாமலே வேலை வாங்க அவருக்கு உரிமையுண்டு. அவர் அவர்களுக்கு 100 சுயேச்சையான உழைப்புச் சக்திகளின் மதிப்பைக் கொடுக்கிறார்; ஆனால் நூறு பேரின் ஒன்றிணைந்த உழைப்புச் சக்திக்கு அவர் விலை கொடுப்ப தில்லை. ஒருவரை ஒருவர் சாராமலிருக்கும் தொழிலாளர்கள் ஒண்டி ஆட்களாவர்; அவர்கள் உறவு கொள்வது முதலாளியோடு

களில் அடிமைகளைக் கொண்டு நடைபெறும் உற்பத்தியின் தலையாய அமிசம் என்பதைக் கூறிய பின்னர் பேராசிரியர் கெய்ர்ன்ஸ் தொடர்கிறார்: ''(வடபகுதியின்) விவசாய உடைமையாளர் தான் பாடுபட்டதன் பலன் முழுவதையும் அடைகிறார்; பிரயாசைக்கு வேறு எந்த ஊக்கமும் அவருக்குத் தேவைப்படுவதில்லை. இங்கே கண்காணிப்பே இல்லாமல் காரியம் நடக்கிறது.'' (கெய்ர்ன்ஸ், முன் வந்தது, பக்கம் 48,49.)

414 வெவ்வேறு உற்பத்தி முறைகளுக்கிடையிலான விசேஷ சமுதாய வேறு பாடுகளை சட்டென்று பார்த்தறிவதில் முற்றிலும் குறிப்பிடத்தக்க எழுத்தாளரான சர் ஜேம்ஸ் ஸ்டுவர்ட் கூறுகிறார்: ''பட்டறை உற்பத்தி முறையிலான பெருந்தொழில் கள் அடிமைகளின் எளிமைக்கு அதிகம் நெருக்கமாக வருவதன் மூலமே தனியார் தொழிலை நாசம் செய்வது ஏன்?'' (''அரசியல் பொருளாதாரக் கோட்பாடுகள்,'' லண்டன், 1767, முதல் பாகம், பக்கம் 167,168.)

415 எனவே, அகுஸ்த் கோண்ட்டும், அவரது மரபினரும் மூலதனப் பிரபுகள் நித்திய அவசியம் என்று காட்டியிருக்கும் அதே வழியில், பிரபுத்துவப் பிரபுகளும் நித்திய அவசியம் என்று காட்டியிருக்கலாம்.

தானே தவிர, தமக்குள் அன்று. இந்தக் கூட்டு-வேலை ஆரம்பிப்பது உழைப்பு நிகழ்முறையோடுதான்; ஆனால் அவர்கள் அப்போது தமக்கே சொந்தமானவர்களாய் இல்லாது போய் விடுகின்றனர். அந்த நிகழ்முறையினுள் நுழைந்ததும், அவர்கள் மூலதனத்துடன் இணைந்து விடுகின்றனர். கூட்டு-வேலையாளர்கள் என்ற விதத்தில், செயல்படும் உயிரமைப்பு ஒன்றின் உறுப்புகள் என்ற விதத்தில், அவர்கள் மூலதனத்தின் நிலவல் வடிவங்களே ஆவர். எனவே கூட்டாக வேலை செய்யும் போது தொழிலாளி உருவாக்கும் உற்பத்தித் திறன் மூலதனத்தின் உற்பத்தித் திறனாகிறது. தொழிலாளர்கள் குறிப்பிட்ட நிலைமைகளில் வைக்கப்பட்டு, இந்நிலைமைகளில் அவர்களை வைப்பது மூலதனமாக இருக்கும் போதெல்லாம், இந்தத் திறன் இலவசமாக உருவாக்கித் தரப்படுகிறது. இந்தத் திறனுக்காக மூலதனத்துக்குச் செலவு ஏதும் ஆவதில்லை என்பதாலும், மறு புறம் தொழிலாளி தனது உழைப்பு மூலதனத்துக்குச் சொந்தமாவதற்கு முன்னர் அதை உருவாக்குவதில்லை என்பதாலும், அது மூலதனத்துக்கு இயற்கை அருளிய திறனாக—மூலதனத்தில் உள்ளார்ந்துள்ள உற்பத்தித் திறனாக—தெரிகிறது.

சாமானியக் கூட்டு-வேலையின் பிரமாதமான விளைவுகளை புராதன ஆசியர்கள், எகிப்தியர்கள், எட்ருஸ்கர்கள் முதலானோரின் பிரம்மாண்டக் கட்டுமானங்களில் காணலாம். ''கடந்த காலத்தில் இந்தக் கிழக்கிந்திய அரசுகள் தமது குடியியல் நிறுவனங்கள், இராணுவ நிறுவனங்கள் ஆகியவற்றின் செலவுகளுக்கு வழி செய்தது போக உபரி இருக்கக் கண்டன. இவ்வுபரியை உயர் சிறப்புக்கோ பயன்பாட்டுக்கோ உரிய பணிகளுக்காக அவற்றால் செலவிட முடிந்தது; இவற்றைக் கட்டியமைப்பதில், பயிர்த் தொழில் செய்யாத மக்களில் அநேகமாக எல்லாரது கரங்களின் மீதும் அவற்றுக்கிருந்த ஆளுகை, இன்றும் கூட அவற்றின் சக்திக்குச் சான்றாய் திகழும் பிரமிக்கத்தக்க நினைவுச் சின்னங்களை உருவாக்கியுள்ளது. வளங்கொழிக்கும் நைல் பள்ளத்தாக்கு பயிர்த் தொழிலில் ஈடுபடாத பெரும் மக்கள் திரளுக்கு உணவு படைத்தது; முடிமன்னருக்கும் குருமாருக்கும் சொந்தமான இந்த உணவு நாட்டை நிரப்பும் மகத்தான நினைவுச் சின்னங்களை எழுப்புவதற்கான சாதனங்களை வழங்கியது....பிரம்மாண்டமான சிலைகளையும் பெரும் மக்கள் திரள்களையும் இடம் பெயரச் செய்வதில்—இதில் போக்குவரத்து அற்புதம் படைக்கிறது—அனேகமாக மனித உழைப்பு மட்டுமே கணக்கு வழக்கின்றிப் பயன்படுத்தப் பட்டது....உழைப்பாளிகளின் தொகையும், அவர்களது முயற்சிகளின் குவிப்புமே போதுமானவையாய் இருந்தன. மாகடலின் அடியாழத்திலிருந்து எழுந்த தீவுகளாகவும், கெட்டி நிலமாகவும் மாறுகிற மாபெரும் பவழப் பாறைகளைப் பார்க்கிறோம்; ஆயின் இப்படிவுகளை உண்டாக்கும் உயிர்வகையில் தனிப்பட்ட ஒவ்

வொன்றும் சின்னஞ்சிறியதாகவும், வலுவின்றியும், கேவலமாகவும் உள்ளது. ஆசிய முடியரசு ஒன்றில் பயிர்த் தொழிலில் ஈடுபடாத உழைப்பாளிகளிடம் அவர்களது தனிப்பட்ட உடல் முயற்சியல்லாமல், பணிக்கு உதவக் கூடியது வேறொன்றுமில்லை. ஆனால் எண்ணிக்கையே அவர்களது பலமாகி விடுகிறது; இந்த மக்கள் திரள்களை ஆட்டிப் படைக்கிற சக்தி அரண்மனைகளையும் ஆலயங்களையும் பிரமிடுகளையும் திரள் திரளான பெரும் சிலைகளையும் எழுப்பியது; இவற்றின் மீதமிச்சங்கள் இன்று நம்மை வியக்கவும் திகைக்கவும் வைக்கின்றன. இந்த உழைப்பாளிகளுக்கு உணவளிக்கிற வருவாய்கள் ஒருவரின் அல்லது ஒரு சிலரின் கையில் அடங்கிப் போவதே இத்தகைய பெரும் பணிகளைச் சாத்தியமாக்குகிறது.''[416] ஆசிய, எகிப்திய மன்னர்கள், எட்ருஸ்க இறையரசர்கள் முதலானோருடைய இந்தச் சக்தி நவீன காலச் சமுதாயத்தில் முதலாளியின் உடைமையாய் மாற்றப்பட்டிருக்கிறது; அவர் தனித்த முதலாளியாகவும் இருக்கலாம், அல்லது கூட்டுப் பங்கு நிறுமங்களில் இருப்பது போல் கூட்டு முதலாளியாகவும் இருக்கலாம்.

மனிதகுல வளர்ச்சியின் விடியற்போதில் காணும்படியான கூட்டு-வேலைக்கு, வேட்டையாடி வாழ்கிற இனங்கள் மத்தியிலோ[417] அல்லது, உதாரணமாக, இந்திய கிராம சமுதாயங்களது வேளாண்மையிலோ காணும்படியான கூட்டு-வேலைக்கு அடிப்படையாய் அமைவது எது? ஒரு புறம் உற்பத்திச் சாதனங்களின் பொதுவுடைமையும், மறு புறம் தேனீ ஒவ்வொன்றும் தேன் கூட்டுடனான உறவிலிருந்து எப்படி தன்னைத் துண்டித்துக் கொள்வதில்லையோ, அது போல இச்சமுதாயங்களில் தனியாள் எவரும் தனது குலம் அல்லது சமுதாயத்தின் தொப்புள் கொடியிலிருந்து தன்னைத் துண்டித்துக் கொள்வதில்லை என்ற உண்மையும்தான். மேற்சொன்ன குணாதிசயங்கள் இரண்டுமே இவ்விதமான கூட்டு-வேலையை முதலாளித்துவக் கூட்டு-வேலையிலிருந்து வேறுபடுத்திக் காட்டுகின்றன. புராதன காலத்திலும், மத்திய காலத்திலும், நவீன காலக் குடியேற்ற நாடுகளிலும், இங்குமங்குமாய் கையாளப்படும் பெருவீதக் கூட்டு வேலை ஆதிக்கமும் தொண்டூழியமும் என்ற

---

416, ரி. ஜோன்ஸ், ''...விரிவுரைப் பாடநூல்,'' பக்கம் 77, 78. லண்டனிலும், ஏனைய ஐரோப்பியத் தலைநகரங்களிலும் சேகரித்து வைக்கப்பட்டுள்ள புராதன அசீரிய, எகிப்தியத் தொகுப்புகளும், இன்ன பிற தொகுப்புகளும் அந்தக் கூட்டு உழைப்பை நடத்திச் சென்ற முறைகளை நம். கண் முன்னால் கொண்டுவந்து நிறுத்துகின்றன.

417 தனது ''Theorie des Lois Civiles''இல் வேட்டையாடுவது கூட்டு-வேலையின் முதல் வடிவம் என்றும், நரவேட்டை (போர்) வேட்டையாடுதலின் ஆரம்ப வடிவங்களில் ஒன்று என்றும் லிங்கே கூறுவது சரியானது என்றே சொல்ல வேண்டும்.

உறவு முறையை — பிரதானமாக அடிமைத்தனத்தை — சார்ந்துள்ளது. இதற்கு மாறாக, முதலாளித்துவக் கூட்டு-வேலையானது மூலதனத்திடம் உழைப்புச் சக்தியை விற்கிற சுதந்தரமான கூலித் தொழிலாளி இருப்பதை ஆரம்பத்திலிருந்து கடைசி வரை அவசியமாக்குகிறது. ஆனால் வரலாற்றில் இவ்வடிவம் விவசாயியின் பயிர்த் தொழிலுக்கும், கைவினைச் சங்கங்களில் ஆனாலும், அவற்றில் இல்லாவிட்டாலும் சுயேச்சையான கைத் தொழில்கள் நடைபெறுவதற்கும் எதிரான ஒன்றாகவே வளர்க்கப்படுகிறது.[418] இவற்றின் பார்வையில், முதலாளித்துவக் கூட்டு-வேலையானது [capitalistic co-operation] கூட்டு-வேலையின் குறிப்பிட்டதொரு வரலாற்று வடிவமாகத் தெரிவதில்லை. கூட்டு-வேலை என்றாலே முதலாளித்துவப் பொருளுற்பத்தி நிகழ்முறைக்கு மட்டும் உரித்தானதும், அந்நிகழ்முறையைப் பிரத்தியேகமாய் வேறுபடுத்திக் காட்டுவதுமான ஒரு வரலாற்று வடிவமாகத் தெரிகிறது.

கூட்டு-வேலையால் வளர்க்கப்படும் திறனாகிய உழைப்பின் சமுதாய உற்பத்தித் திறன் மூலதனத்தின் உற்பத்தித் திறனாகத் தெரிவது போலவே, சுயேச்சையான தனித்த உழைப்பாளிகளால், ஏன், சிறு அதிபர்களால் கூட நடத்தப்படுகிற உற்பத்தி நிகழ்முறையுடன் ஒப்புநோக்குமிடத்து, கூட்டு-வேலை என்பதே முதலாளித்துவ உற்பத்தி நிகழ்முறைக்கு மட்டுமே உரிய வடிவமாகத் தெரிகிறது. உழைப்பு நிகழ்முறை என்பதே மூலதனத்துக்குக் கீழ்படுத்தப்படும் போது அது அடைகிற முதல் மாற்றம் இதுவே. இந்த மாற்றம் தன்னியல்பாக நடைபெறுகிறது. ஒரே நிகழ்முறையில் ஒருங்கே பெரும் எண்ணிக்கையிலான கூலித் தொழிலாளர்களை வேலைக்கமர்த்துவது இந்த மாற்றத்துக்கு அவசியத் தேவையாகும்; இது முதலாளித்துவப் பொருளுற்பத்தியின் ஆரம்பமாகவும் அமைகிறது. இந்த ஆரம்பமும் மூலதனத்தின் பிறப்பும் ஒருசேர நடந்தேறுகின்றன. அப்படியாயின், ஒரு புறம், முதலாளித்துவப் பொருளுற்பத்தி நிகழ்முறையானது உழைப்பு நிகழ்முறை சமுதாய நிகழ்முறையாக மாறுவதற்கான அவசிய நிபந்தனையாக வரலாற்று வழியில் காட்சியளிக்கிறது என்றால், மறு புறம், உழைப்பு நிகழ்முறையின் இந்தச் சமுதாய வடிவமானது உழைப்பின் உற்பத்தித் திறனை அதிகமாக்கி அந்த உழைப்பை இன்னும் இலாபகரமான முறையில் சுரண்டுவதற்காக மூலதனம் கையாளும் வழி

[418] விவசாயியின் சிறு வீதப் பயிர்த் தொழிலும், சுயேச்சையான கைத்தொழில்களை நடத்துவதும் சேர்ந்து பிரபுத்துவப் பொருளுற்பத்தி முறையின் அடிப்படையாய் அமைகின்றன; அந்த அமைப்பின் குலைவுக்குப் பின்னர் முதலாளித்துவப் பொருளுற்பத்தி முறையுடன் கூடவே நிலவுகின்றன. ஆதி கால நிலப் பொதுவுடைமை வடிவம் மறைந்து போன பின்னரும் பொருளுற்பத்தியை அடிமை முறை தீவிரமாகப் பற்றிக் கொள்வதற்கு முன்னரும் இவை தொல்சீர் சமுதாயங்களின் — அவை முழுப் பொலிவுடன் இருந்த போது — பொருளாதார அடிப்படையாகவும் அமைகின்றன.

முறையாகக் காட்சியளிக்கிறது.

நாம் இது வரை கூட்டு-வேலையைப், பரிசீலித்துள்ள வடிவமான அதன் ஆரம்ப வடிவத்தில் அது எல்லாவிதப் பெருவீத உற்பத்திக்கும் அவசியமான அதன் உடன்பிறப்பாகும்; என்றாலும் அதுவே முதலாளித்துவப் பொருளுற்பத்தி முறையின் வளர்ச்சியில் குறிப்பிட்டதொரு சகாப்தத்திற்குரித்தான நிலையான வடிவத்தைக் குறிக்கவில்லை. உயர்ந்தபட்சமாக, அது அப்படிக் குறிப்பாகத் தோன்றுவது — அதுவும் தோரயமாகத்தான் — பட்டறைத் தொழிலின் கைத்தொழிலொத்த ஆரம்ப நிலைகளிலும்,[419] பட்டறைத் தொழில் சகாப்தத்துக்கு உரியதும், (பிரதானமாக ஒருங்கே வேலையில் ஈடுபடுத்தப்படும் உழைப்பாளிகளின் எண்ணிக்கையாலும், அவர்கள் உபயோகிப்பதற்காக ஒன்றுகுவிக்கப்படும் உற்பத்திச் சாதனங்களின் திரளாலும்) விவசாயியின் பயிர்த் தொழிலிலிருந்து வேறுபடுவதுமான வகையைச் சேர்ந்த பெருவீதப் பயிர்த் தொழிலிலுமே. மூலதனம் பெருவீதத்தில் வேலை செய்கிற, உழைப்புப் பிரிவினையும் இயந்திர சாதனமும் கீழ்நிலைப் பாத்திரமே வகிக்கிற உற்பத்திக் கிளைகளில் சாமானியக் கூட்டு-வேலை [simple co-operation] எப்போதுமே மேலோங்கித் திகழும் வடிவமாகும்.

கூட்டு-வேலை என்றுமே முதலாளித்துவப் பொருளுற்பத்தி முறைக்குரிய அடிப்படை வடிவமாகத் திகழ்கிறது; ஆயினும் கூட்டு-வேலையின் ஆரம்ப வடிவம் முதலாளித்துவ பொருளுற்பத்திக்குரிய ஒரு குறிப்பான வடிவமாக அந்த உற்பத்தி முறையின் வளர்ச்சி பெற்ற வடிவங்களோடு கூடவே தொடர்ந்து நீடிக்கிறது.

---

419 ''ஒரே வேலையில் ஒன்றாக ஈடுபட்டிருக்கும் பலரின் ஒன்றுபட்ட தேர்ச்சியும் ஊக்கமும், நேசப்போட்டியும் அதனை முன்னேற்றுவதற்கான வழியல்லவா? அல்லவென்றால் இங்கிலாந்து தன் கம்பளித் தொழிலை இவ்வளவு செம்மையான நிலைக்குக் கொண்டு செல்ல முடிந்திருக்குமா?'' (பெர்க்ளி, ''கேள்வியாளர்,'' லண்டன், 1751, பக்கம் 56, பாரா 521.)

## அத்தியாயம் XIV

# உழைப்புப் பிரிவினையும் பட்டறைத் தொழிலும்

## பிரிவு 1.—பட்டறைத் தொழிலின் இரட்டைத் தோற்றுவாய்

உழைப்புப் பிரிவினையின் [division of labour] அடிப்படையிலான கூட்டு-வேலை பட்டறைத் தொழிலில் [manufacture] தன் எடுத்துக்காட்டான வடிவத்தை மேற்கொள்கிறது; முறையான பட்டறைத் தொழிற் காலம் முழுவதிலும், முதலாளித்துவப் பொருளுற்பத்தி நிகழ்முறைக்கே உரித்தான வடிவமாக அது மேலோங்கித் திகழ்கிறது. உத்தேசமாகச் சொல்வதானால், அந்தக் காலம் 16ஆம் நூற்றாண்டின் மத்தியிலிருந்து 18ஆம் நூற்றாண்டின் கடைசி மூன்றாம் பகுதி வரை நீடிக்கிறது.

பட்டறைத் தொழில் இரு வழிகளில் உதயமாகிறது:—

(1.) சுயேச்சையான பல்வேறு கைத்தொழில்களைச் சேர்ந்தவர்களாயினும், குறிப்பிட்ட ஒரு பண்டம் அதன் பூர்த்தியான வடிவத்தை அடையுமுன் எந்தக் கரங்களைக் கடந்து செல்ல வேண்டுமோ அந்தக் கரங்களுக்கு உரியோரான உழைப்பாளர்களை ஒரே முதலாளியின் கட்டுப்பாட்டில் ஒரு பட்டறையில் கூட்டுவதென்ற வழி. உதாரணமாக, முன்னர் வண்டியென்பது சக்கரம் செய்பவர்கள், சேணம் தயாரிப்பவர்கள், தையற்காரர்கள், கம்மியர்கள், திண்டு அமைப்பவர்கள், கடைசல் தொழிலாளர்கள், சரிகைத் தொழிலாளர்கள், கண்ணாடி பதிப்பவர்கள், வர்ணம் பூசுவோர், மெருகிடுவோர், தகடு செய்வோர் போன்ற பெரும் எண்ணிக்கையிலான சுயேச்சையான கைத்திறனாளர்களது உழைப்பின் உற்பத்திப் பொருளாய் இருந்தது. ஆயினும் வண்டிகள் தயாரிக்கும் பட்டறைத் தொழிலில் இந்த வெவ்வேறு கைத்திறனாளர்கள் அனைவரும் ஒரு கட்டடத்தில் கூட்டப்படுகின்றனர்; இங்கே அவர்கள் ஒருவருக்கொருவர் கைக்குதவியாக வேலை செய்கின்றனர்; வண்டி செய்யும் முன்னரே அதற்கு முலாமிட முடியாதுதான். ஆனால் ஒருங்கே பல வண்டிகள் தயாரிக்கப்படும் போது சில

வண்டிகள் முலாமிடுவோரின் கரங்களில் இருக்கையில், வேறு சில அதற்கு முந்தைய நிகழ்முறைக்கு உட்பட்டிருக்கலாம். இதுவரை நாம் சாமானியக் கூட்டு-வேலையின் துறையில்தான் இருக்கிறோம்; இதற்கு வேண்டிய தேவைகள் ஆட்களின் உருவிலும் பொருட்களின் உருவிலும் தயார்நிலையில் கிடைக்கின்றன: ஆனால், வெகு சீக்கிரத்திலேயே ஒரு முக்கிய மாற்றம் நடைபெறுகிறது. இப்போது வண்டி செய்யும் வேலையில் பிரத்தியேகமாக ஈடுபட்டுள்ள தையற்காரரும் கம்மியரும் இதர கைத்திறனாளர் ஒவ்வொருவரும் நடைமுறைப் பயிற்சிக் குறைவால் தம் பழைய கைத்தொழிலை முழு அளவுக்கு நடத்திச் செல்லும் திறத்தை படிப்படியாக இழக்கிறார். ஆனால், மறு புறம், ஒரே தடத்தில் செல்லும் அவரது செயற்பாடு குறுகிய செயல் மண்டலத்துக்கு முற்றிலும் தகவமைந்த வடிவம் பெறுகிறது. முதலில் வண்டி செய்யும் பட்டறைத் தொழில் பல்வேறு சுயேச்சையான கைத்தொழில்களின் இணைப்பாக உள்ளது. பையப்பைய அது பிளவுண்டு, வண்டித் தயாரிப்பின் பல்வேறு நுணுக்க நிகழ்முறைகளாகப் பிரிந்து விடுகிறது; இந்நிகழ்முறைகள் ஒவ்வொன்றும் ஒரு குறிப்பிட்ட தொழிலாளியின் பிரத்தியேகப் பணியாய் உருப்பெறுகிறது; பட்டறைத் தொழில் என்பது பலர் ஒன்றுசேர்ந்து நடத்தும் ஒட்டுமொத்தமாகிறது. இதே போல, நெசவுப் பட்டறைத் தொழிலும், இது போன்ற ஏனைய பல பட்டறைத் தொழில்களும் வெவ்வேறு கைத்தொழில்களை ஒரே முதலாளியின் கட்டுப்பாட்டில் ஒன்றாக இணைத்ததன் மூலம் உதித்தவையே.[420]

(2.) இதற்கு நேர்மாறான விதத்திலும் பட்டறைத் தொழில் உதயமாகிறது — அதாவது, காகிதமோ அச்சுக் கட்டையோ ஊசியோ தயாரிப்பது போன்ற ஒரே வேலையில் அல்லது ஒரே வகையான வேலையில் ஈடுபடுமாறு ஒரு முதலாளி பல கைத்திறனாளர்களை

---

420 இன்னும் நவீன காலத்திய எடுத்துக்காட்டு ஒன்றைத் தரலாம்: லயன்ஸ், நைம்ஸ் ஆகிய இடங்களில் பட்டு நூற்பும் நெசவும் "முழுக்க முழுக்க தந்தை வழிக் குடும்ப முறையில் நடைபெறுகிறது. ஏராளமான பெண்களும் குழந்தைகளும் இதில் வேலை செய்கிறார்கள். ஆனால் அது அவர்களைக் கசக்கிப் பிழிவதோ, நாசமாக்குவதோ கிடையாது, துரோம், வார், ஐசீர், வாக்லூஸ் ஆகியவற்றின் அழகிய பள்ளத்தாக்குகளிலேயே அவர்கள் தங்கி, பட்டுப் புழு வளர்த்து அவற்றிலிருந்து பட்டு நூலெடுப்பதற்கு அது இடம் கொடுக்கிறது. அது உண்மையான ஆலைத் தொழிலாய் மாறவே இல்லை. எப்படியான போதிலும், உழைப்புப் பிரிவினை என்னும் கோட்பாடு தனி விதமான தன்மை பெறுகிறது...இங்கு தேவைப்படுகிற உயர்தரத்துக்கு அதனைப் பிரயோகிக்க முடிகிறது. நூல் சுற்றுவோர், இழை முறுக்குவோர், சாயமிடுவோர், பசையிடுவோர், முடிவில் நெசவாளர்கள் என்றெல்லாம் இருக்கத்தான் செய்கிறார்கள். ஆனால் அவர்களை ஒரே பட்டறையில் ஒன்றுகூட்டுவது கிடையாது; அவர்கள் ஒரே அதிபரைச் சார்ந்திருப்பதும் கிடையாது. அவர்கள் எல்லாம் சுயேச்சையானவர்கள்." (அ. பிளாங்கி: "Cours. d'Econ. Industrielle." Recueilli par A. Blaise. பாரிஸ், 1838-39, பக்கம் 79.) பிளாங்கி இதை எழுதிய பின்னர் சுயேச்சையான பல்வேறு உழைப்பாளிகள் ஓரளவுக்குத் தொழிற்சாலைகளில் ஒன்றுபடுத்தப்பட்டுள்ளனர். [எங்கெல்ஸ் குறிப்பு: மார்க்ஸ் மேற்கண்டவாறு எழுதிய பின்னர், இந்த தொழிற்சாலைகள் விசைத் தறியின் படையெடுப்புக்கு ஆளாயின. இப்போது 1886இல் கைத்

ஒரு பட்டறையில் ஒருங்கே வேலைக்கமர்த்துவதன் மூலமும் உதய மாகிறது. இது ஆரம்ப வடிவத்திலமைந்த கூட்டு-வேலையாகும். இக் கைத்திறனாளர்களில் ஒவ்வொருவரும் (சில நேரங்களில் இரண் டொரு பழகு தொழிலாளரின் உதவியுடன்) முழுச் சரக்கையும் தயாரிக்கிறார்; ஆதலால் அவர் அதன் உற்பத்திக்கு அவசியமான வேலைகள் அனைத்தையும் ஒன்றன் பின் ஒன்றாகச் செய்கிறார். அவர் இன்னமும் தன் பழைய கைத்தொழில் பாணியில்தான் வேலை செய்கிறார். ஆனால், தொழிலாளர்கள் ஓரிடத்தில் ஒன்று குவிக்கப்படுவதும் அவர்களது வேலை ஏககாலத்தில் நடைபெறுவது மாகிய இந்த நிலையை, வெளிச் சூழல்களின் காரணமாய் விரைவிலேயே வேறுவிதமாகப் பயன்படுத்திக் கொள்ளும் படி நேரிடுகிறது. சில நேரங்களில், குறிப்பிட்ட காலத்துக்குள் அதிக அளவிலான பண்டத்தைத் தயாரித்தளிக்க வேண்டியேற்படலாம். அப்போது, வேலை மறுபங்கீடு செய்யப்படுகிறது. பல்வேறு வேலைகளையும் ஒன்றன் பின் ஒன்றாக ஒவ்வொரு ஆளும் செய்வதற்கு பதில், இவை தொடர்பில்லாத, தனித்தனியான வேலைகளாக மாற்றப்பட்டு, பல ஆட்களால் ஒருங்கே செய்யப் படுகின்றன. தனித்தனியான ஒவ்வொரு வேலையும் வெவ்வேறு கைத்திறனாளரிடம் ஒப்படைக்கப்படுகிறது. இவ்வேலைகள் யாவும் கூட்டு-வேலை செய்யும் தொழிலாளர்களால் ஏககாலத்தில் சேர்ந் தாற் போல் செய்யப்படுகின்றன. தற்செயலாக நிகழும் இந்த மறுபங்கீடு திரும்பத் திரும்ப நடைபெறும் போது, அது தனக் கேயுரிய அனுகூலங்களை வளர்ந்தெழச் செய்கிறது; படிப்படியாக அது உழைப்புப் பிரிவினை ஒழுங்கமைப்பாக இறுகிப் போகிறது. சுயேச்சையான ஒரு கைத்திறனாளரின் தனி உற்பத்திப் பொருளாக இருந்த சரக்கு கைத்திறனாளர்களது கூட்டிணைவின் சமூக உற் பத்திப் பொருளாகிறது; இவர்களில் ஒவ்வொருவரும் முழு வேலையின் அடக்கக் கூறுகளாகிய பகுதி-வேலைகளில் ஒன்றை மட்டுமே செய்கிறார். ஜெர்மானிய கைவினைச் சங்கத்தைச் சேர்ந்த காகிதத் தயாரிப்பாளர் செய்கிற வேலைகள் ஒரே கைத்திறனா ளரால் ஒன்றன் பின் ஒன்றாக முடிக்கப்படும் செயல்களாக ஒருசேர இணைகின்றன. இதே வேலைகள் டச்சுக் காகிதப் பட்டறைத் தொழிலில் அத்தனை பகுதி-வேலைகளாகி, கூட்டு-வேலை செய்கிற ஏராளமான உழைப்பாளர்களால் ஒருங்கே முடிக்கப்படுகின்றன. நூரம்பர்க் கைவினைச் சங்கத்தைச் சேர்ந்த ஊசித் தொழிலாளியை அடிப்படையாகக் கொண்டே ஆங்கிலேய ஊசிப் பட்டறைத் தொழில் வளர்ந்தெழுந்தது. ஆனால், நூரம்பர்க்கில் வரிசைத்

---

தறியின் இடத்தை துரிதமாக விசைத்தறி கைப்பற்றி வருகிறது. (4ஆவது ஜெர்மன் பதிப்பில் சேர்க்கப்பட்டது. — கிரெபெஃல்டு பட்டுத் தொழிலும் இது விஷயமாக இதே கதையைத்தான் சொல்லும்.)]

தொடரான 20 வேலைகளை ஒரே கைத்திறனாளர் ஒன்றன்பின் ஒன்றாகச் செய்து முடித்தார்; ஆனால், இங்கிலாந்தில், 20 ஊசித் தொழிலாளர்கள் ஒருங்கே வேலை செய்து அந்த 20 வேலை களில் ஒன்றை மட்டுமே எந்த ஒருவரும் செய்து முடிக்கும் நிலை சீக்கிரமே ஏற்பட்டது; மேற்கொண்டு கிடைத்த அனுபவத்தின் வாயிலாய், அந்த 20 வேலைகள் ஒவ்வொன்றும் மேலும் தனித் தனியாகப் பிளக்கப்பட்டு, தனியொரு தொழிலாளிக்குரிய பிரத் தியேக பணியாக்கப்பட்டது.

எனவே பட்டறைத் தொழில் உதிக்கிற முறை, கைத்தொழில் களில் இருந்து அது வளர்கிற விதம் இரட்டைத் தன்மையதாகும். ஒருபுறம், சுயேச்சையான பல்வேறு கைத்தொழில்களின் ஐக்கியத்தி லிருந்து அது பிறக்கிறது; இக்கைத்தொழில்கள் அவற்றின் சுயேச் சையை இழக்கின்றன; குறிப்பிட்ட சரக்கின் உற்பத்தியை நிறைவு செய்வதற்குத் தேவையான வெறும் பகுதி-நிகழ்முறைகளாகக் குன்றி விடும் அளவுக்குத் தனித் தேர்ச்சி வாய்ந்தவை ஆகின்றன. மறு புறம், கைத்தொழிலைச் சேர்ந்த கைத்திறனாளர்களின் கூட்டு-வேலையிலிருந்தும் பட்டறைத் தொழில் பிறக்கிறது; அது அந்த குறிப்பிட்ட கைத்தொழிலை அதன் பல்வேறு நுணுக்க வேலை களாகப் பிரித்து, தனித் தனியாக்கி, ஒவ்வொன்றும் ஒரு குறிப் பிட்ட தொழிலாளியின் பிரத்தியேகப் பணியாகிற அளவுக்கு இந்த வேலைகளை ஒன்றிலிருந்து ஒன்று சுயேச்சையானவை ஆக்குகிறது. எனவே, ஒரு புறம், பட்டறைத் தொழில் உற்பத்தி நிகழ்முறையில் உழைப்புப் பிரிவினையைப் புகுத்துகிறது, அல்லது அந்தப் பிரிவி னையை மேலும் வளர்க்கிறது; மறு புறம், முன்னதாகத் தனித்திருந்த கைத்தொழில்களை அது ஒன்றாய்ச் சேர்க்கிறது. ஆனால், அதன் குறிப்பான தொடக்கம் எதுவாயிருந்தாலும், அதன் இறுதி வடிவம் எப்போதும் ஒன்றே—மனிதப் பிறவிகளைப் பாகங்களாகக் கொண்ட ஓர் உற்பத்திப் பொறியமைவே.

பட்டறைத் தொழிலில் உழைப்புப் பிரிவினையைச் சரிவர புரிந்து கொள்வதற்கு, பின்வரும் அமிசங்களை உறுதியாகக் கிர கித்துக் கொள்வது அவசியம். முதலாவதாக, ஓர் உற்பத்தி நிகழ் முறை அதன் பல்வேறு அடுத்தடுத்த படிகளாகப் பிரிபடுவது, இங்கே ஒரு கைத்தொழில் அதன் அடுத்தடுத்த கைவேலைகளாகப் பகுபடுவதுடன் முற்றிலும் ஒத்தமைகிறது. சிக்கலானதானாலும், எளிமையானதானாலும், ஒவ்வொரு வேலையையும் கையால் செய்ய வேண்டியுள்ளது. அது கைத்தொழிலுக்குரிய தன்மையை இழக்கா திருக்கிறது; எனவே, தன் கருவிகளைக் கையாளுவதில் தனியொரு தொழிலாளிக்குள்ள பலத்தையும், தேர்ச்சியையும், விரைவையும், உறுதியையும் பொறுத்தது அது. கைத்தொழில் தொடர்ந்து அடிப் படையாகவுள்ளது. இந்தக் குறுகிய தொழில் நுட்ப அடிப்படை தொழில் துறை உற்பத்தியின் குறிப்பிட்ட எந்த நிகழ்முறையையும்

உண்மையிலேயே விஞ்ஞான பூர்வமாகப் பகுத்தாய இடம்தருவதில்லை. ஏனெனில், உற்பத்திப் பொருள் கடந்து வருகிற நுணுக்க நிகழ்முறை ஒவ்வொன்றும் கையால் செய்யப்படவும், தன் வழியில் ஒரு தனி கைத்தொழிலாக அமையவும் வல்லதாயிருக்க வேண்டும் என்பது இன்னமும் ஒரு நிபந்தனையாகவே உள்ளது. காரணம் என்னவென்றால் கைத்திறத் தேர்ச்சிதான் இன்னமும் உற்பத்தி நிகழ்முறையின் அடிப்படையாக உள்ளது; ஒவ்வொரு தொழிலாளியும் பிரத்தியேகமாக ஒரு பகுதிப் பணிக்கே ஒதுக்கப்பட்டவராய் உள்ளார். அவரது வாழ்க்கையின் மீதப் பகுதிக்கு அவரது உழைப்புச் சக்தி இந்த நுணுக்கப் பணியைச் செய்யும் அங்கமாக மாற்றப்படுகிறது.

இரண்டாவதாக, இந்த உழைப்புப் பிரிவினை ஒரு குறிப்பிட்ட வகையைச் சேர்ந்த கூட்டு-வேலையாகும்; அதன் குறைகளில் பலவும் கூட்டு-வேலையின் பொதுத் தன்மையிலிருந்து பிறப்பவையே அல்லாமல், அதன் இந்தக் குறிப்பிட்ட வடிவத்திலிருந்து பிறப்பவை அல்ல.

### பிரிவு 2.—நுணுக்கத் தொழிலாளியும் அவரது கருவிகளும்

இப்போது இன்னும் விவரமாகப் பார்ப்போம். வாழ்நாள் முழுவதும் ஒரே சாமானிய வேலையைச் செய்கிற தொழிலாளி தன் முழு உடலையும் அந்த வேலையைச் செய்வதற்கு வேண்டிய தானியங்கித் தன்மை வாய்ந்த தனித்தேர்ச்சி பெற்ற கருவியாக மாற்றிக் கொள்கிறார் என்பது முதற்கண் தெளிவாகும். ஆதலால், ஒன்றன் பின் ஒன்றாக சரமாரியான வேலைகளைச் செய்யும் கைத்திறனாளருக்கு வேண்டியதைக் காட்டிலும் குறைந்த நேரத்தில் அவர் இதைச் செய்ய முடிகிறது. ஆனால் பட்டறைத் தொழிலின் உயிருள்ள பொறியமைவாகிற கூட்டுத் தொழிலாளி [collective labourer] முழுக்க முழுக்க இவ்வாறான தேர்ச்சி பெற்ற நுணுக்கத் தொழிலாளர்களால் ஆனவரே. எனவேதான் சுயேச்சையான கைத்தொழிலுடன் ஒப்பிட்டால் குறிப்பிட்ட காலத்தில் அதிகம் உற்பத்தி செய்யப்படுகிறது. அல்லது உழைப்பின் உற்பத்தித் திறன் அதிகமாக்கப்படுகிறது.[421] மேலும் இந்தப் பகுதி-வேலை ஒருவரின் பிரத்தியேகப் பணியாக நிலைபெற்றதுமே, அது பிரயோகிக்கிற வழிமுறைகள் செம்மையடைகின்றன. ஒரே சாமானியச் செயலைத்

---

421 "அதிகம் பல்வகைத் தன்மையுடைய பட்டறைத் தொழில் எதுவும் எந்த அளவுக்குப் பங்கிடப்பட்டு வெவ்வேறு கலைஞர்களிடம் ஒதுக்கப்படுகிறதோ, அதனை அந்த அளவுக்குச் சிறப்பாகவும், கூடுதல் விரைவுடனும், காலம், உழைப்பு ஆகியவற்றில் குறைவான இழப்புடனும் செய்தாக வேண்டும்." ("கிழக்கிந்திய வர்த்தகத்தால் வரும் அனுகூலங்கள்," லண்டன், 1720, பக்கம் 71.)

தொழிலாளி தொடர்ந்து திரும்பத் திரும்பச் செய்வதாலும், அவரது கவனம் அதில் ஒருமுகப்படுத்தப்படுவதாலும் விரும்பிய பயனைக் குறைந்த முயற்சியால் எப்படி அடைவது என்பதை அனுபவ வாயிலாக அறிந்து கொள்கிறார். ஆனால் பல தலைமுறைகளைச் சேர்ந்த தொழிலாளர்கள் ஒரே காலத்தில் வாழ்ந்து கொண்டும், குறிப்பிட்ட ஒரு பண்டத்தின் பட்டறைவழி உற்பத்தியில் ஒன்றாக வேலை செய்து கொண்டும் இருப்பதால் இவ்வகையில் வரப் பெறும் தொழில் நுட்பத் தேர்ச்சியும், கைவன்மைகளும் நிலை பெற்று, திரட்டப் பெற்று, வழிவழியாக விட்டுச் செல்லப்படுகின்றன.[422] பட்டறைத் தொழிலானது பொதுவாக சமுதாயத்தில் தொழில்கள் இயற்கையாகவே வேறுபட்டு வளர்ந்திருக்கக் கண்டு, அந்த வேறுபாட்டை அப்படியே எடுத்தாள்வதோடு, பட்டறைக்குள்ளேயே திட்டமிட்டு அதனைத் தீவிரப்படுத்துவதன் மூலம் நுணுக்கத் தொழிலாளியை [detail labourer] தனித்தேர்ச்சி பெறச் செய்கிறது. மறு புறம், பகுதி-வேலையை ஒருவரது வாழ்க்கைத் தொழிலாக மாற்றுவதென்பது, முந்தைய சமுதாயங்கள் தொழில்களைப் பரம்பரையாக்கி, சாதிகளாக அவற்றை உறைந்து இறுகச் செய்தோ, குறிப்பிட்ட வரலாற்று நிலைமைகளின் காரணமாய் சாதி அமைப்புக்கு ஒவ்வாத முறையில் வேறுபாடுறும் தன்மை தனி ஆளிடம் தலைதூக்கும் போதெல்லாம் அவற்றை கைவினைச் சங்கங்களாக சமைந்து கெட்டிப்படச் செய்தோ வந்த போக்கிற்கு ஒத்ததே ஆகும். தாவரங்களும் மிருகங்களும் இனங்களாகவும் ராசிகளாகவும் வகைபிரிவதை முறைப்படுத்துகிற அதே இயற்கை விதியின் செயலிலிருந்தே, சாதிகளும் கைவினைச் சங்கங்களும் பிறக்கின்றன; ஒரே ஒரு வேறுபாடு என்னவென்றால், குறிப்பிட்ட வளர்ச்சி நிலையை அடைந்ததும் சாதி மூலமான பரம்பரைத் தன்மையும் கைவினைச் சங்கம் மூலமான பிரத்தியேகத் தன்மையும் சமுதாயச் சட்டத்தின் மூலம் நிலைநாட்டப்படுகின்றன என்பதே.[423]

---

422 "சுலபமான உழைப்பு என்பது வழிவழியாய்ப் பெற்ற தேர்ச்சியாகும்." (தாமஸ் ஹாட்ஸ்கின், "ஜனரஞ்சக அரசியல் பொருளாதாரம்," பக்கம் 48.)

423 "கலைகளும்...எகிப்தில் அவசியமான செம்மை நிலையை அடைந்துள்ளன. ஏனெனில், அந்த நாட்டில்தான் கைத்திறனாளர்கள் பிறிதொரு வகுப்புக் குடிகளின் விவகாரங்களில் எவ்விதத்திலும் தலையிடலாகாது; சட்ட பூர்வமாகத் தங்கள் குலத்தின் பரம்பரையாகவுள்ள தொழிலை மட்டுமே செய்து வர வேண்டும்....இதர நாடுகளில் தொழில் செய்வோர் பல்வேறுபட்ட இலக்குகளில் கவனத்தை சிதற விடுவதைப் பார்க்கிறோம். ஒரு நேரத்தில் அவர்கள் பயிர்த் தொழிலில் இறங்குகின்றனர்; இன்னொரு நேரத்தில் வாணிபத்தை மேற்கொள்கின்றனர்; வேறொரு நேரத்தில் இரண்டு மூன்று வேலைகளில் ஒருங்கே ஈடுபடுகின்றனர். சுதந்தர நாடுகளில் அவர்கள் மக்கள்-மன்றங்களில் அடிக்கடி செயல்படக் காணலாம்....ஆனால் எகிப்தில், அரசு விவகாரங்களில் தலையிட்டால், அல்லது ஒரே நேரத்தில் பல தொழில்களில் ஈடுபட்டால், கைத்திறனாளர் கடுமையாகத் தண்டிக்கப்படுகிறார். இவ்வாறு இங்கு இவர்கள் தமது தொழிலில் முழுமையாக ஈடுபடுவதற்கு இடையூறு ஏதுமில்லை....அதோடு அவர்கள் தமது முன்னோர்களிடமிருந்து பற்பல தொழில் விதிமுறைகளை மரபு வழியில்

''நேர்த்தியில் டாக்கா மஸ்லின் வகைகளையும், நிலைத்து நிற்கக் கூடிய கண்கவர் வண்ணங்களில் கொரமண்டல் காலிக்கோ வகை களையும், இதர ஜவுளிகளையும் எதுவும் என்றும் விஞ்சியதில்லை. என்றாலும், அவை மூலதனமோ இயந்திர சாதனமோ உழைப்புப் பிரிவினையோ, அல்லது ஐரோப்பாவின் பட்டறைத் தொழில் நலனுக்கு இவ்வாறான வசதிகளைத் தருகிற சாதனங்கள் ஏதுமோ இல்லாமல் உற்பத்தி செய்யப்படுகின்றன. நெசவாளர் என்பவர் வாடிக்கையாளர் கோரும் போது நெசவு வேலை செய்யும் தனி யாளே. சில நேரங்களில் நுட்பமின்றி கோக்கப்பட்டிருக்கும் சில மரக் கிளைகள் அல்லது கழிகளாலான மிகக் கரடுமுரடான கட்டு மானமுடைய தறியைக் கொண்டு அவர் இந்த வேலையைச் செய் கிறார். பாவு நூலைச் சுற்றுவதற்குக் கூட சாதனம் கிடையாது. எனவே, தறி அதன் முழு நீளத்துக்கு நீட்டி வைக்கப்பட வேண்டும்; அது சங்கடமான அளவுக்குப் பெரிதாகி, உற்பத்தியாளரின் குடிசைக்குள் அடங்காது போகிறது. ஆகவே, அவர் தன் தொழி லைத் திறந்த வெளியில் நடத்த வேண்டியதாகிறது; பருவ நிலை யால் ஏற்படும் ஒவ்வொரு இடையூறாலும் வேலை தடைப்படு கிறது.''[424] தலைமுறை தலைமுறையாகப் பேணி வளர்க்கப்பட்டு வதும், தந்தை தனயனுக்குத் தருவதுமான தனித் தேர்ச்சிதான் இந்துவுக்கு இந்தச் செயல் திறமையை அளிக்கிறது; சிலந்திக்கும் இதே தனித் தேர்ச்சிதான் அதன் செயல் திறமைக்குக் காரண மாகிறது. இருப்பினும், இத்தகைய இந்து நெசவாளரின் வேலை பட்டறைத் தொழிலாளியின் வேலையுடன் ஒப்பிடுமிடத்து மிகவும் சிக்கலானதாகும்.

முழுப் பண்டத்தின் உற்பத்தியில் பல்வேறு பகுதி-வேலைகளை ஒன்றன் பின் ஒன்றாகச் செய்கிற கைத்திறனாளர் ஒரு நேரத்தில் தன் இடத்தையும் இன்னொரு நேரத்தில் தன் கருவிகளையும் மாற்றிக் கொள்ள வேண்டும். ஒரு வேலையிலிருந்து இன்னொரு வேலைக்கு மாறுவது அவரது உழைப்பின் ஓட்டத்தைத் தடங்கல் செய்கிறது; இது அவரது வேலை-நாளில் இடைவெளிகளை உண்டாக்குகிறது எனலாம். நாள் முழுவதிலும் ஒரே வேலையில் அவர் பிணைப்புண்டு போனதுமே இந்த இடைவெளிகள் மறைந்து விடுகின்றன; அவரது வேலையில் மாற்றங்கள் குறைந்து போவதற் கேற்ப இவ்விடைவெளிகளும் மறைந்து போகின்றன. இப்படி வரப்பெறும் கூடுதல் உற்பத்தித் திறன், ஒன்று, குறிப்பிட்ட

---

பெறுவதால் புதிய அனுகூலங்களைக் கண்டுபிடிக்க அவர்களுக்கு ஆர்வமுள்ளது.'' (தியோதரஸ் சிகுலஸ்: விவிலிய வரலாறு I. முன் வந்தது, பக்கம் 74.)

424 ''பிரித்தானிய இந்தியா பற்றிய வரலாற்று வழியிலும் விவர வழியிலுமான உரை.'' எழுதியோர்: ஹியூ முர்ரே, ஜேம்ஸ் வில்சன் முதலானோர், எடின்பரோ, 1832, இரண்டாம் தொகுதி, பக்கம் 449. இந்தியத் தறி செங்குத்தாக உள்ளது, பாவு நூல் செங்குத்தாக நீட்டப்படுகிறது.

காலத்தில் உழைப்புச் சக்தியின் செலவீடு அதிகரிப்பதன் — அதாவது உழைப்பின் மும்முரம் அதிகரிப்பதன் — விளைவாகவோ, அல்லது திறனிலா முறையில் நுகரப்படும் உழைப்புச் சக்தியின் அளவு குறைவதன் விளைவாகவோ கிடைக்கலாம். ஓய்விலிருந்து இயக்கத்துக்கான மாற்றம் ஒவ்வொன்றும் கோருகிற கூடுதல் சக்திச் செலவீடு, இயல்பான விரைவு அடையப்பட்டதும் அவ்விரைவு நீடித்திருக்கும் கால அளவை அதிகரிப்பதன் மூலம் சரிக்கட்டப் படுகிறது. மறு புறம், செய்யும் வேலையில் ஏற்படும் மாற்றத்தின் மூலமே அயர்வு அகன்று மகிழ்வுறும் மனித ஜீவ ஆற்றல் மும்முர மாகவும், சரளமாகவும் இயங்குவதற்கு, ஒரே விதமான இடையறாத உழைப்பு இடையூறாகிறது.

உழைப்பின் உற்பத்தித் திறன் தொழிலாளியின் தோச்சியை மட்டும் பொறுத்ததன்று; அவரது கருவிகளின் செம்மையையும் பொறுத்ததாகும். கத்திகள், துரப்பணங்கள், ஆக்கர்கள், சம்மட்டி கள் போன்ற எவ்வகையைச் சேர்ந்ததாயினும் ஒரே வகைக் கருவி கள் வெவ்வேறு நிகழ்முறைகளில் பிரயோகிக்கப்படலாம்; ஒரே கருவி ஒரு நிகழ்முறையிலேயே பல்வேறு காரியங்களுக்குப் பயன்பட லாம். ஆனால், ஓர் உழைப்பு நிகழ்முறையின் வெவ்வேறு வேலை கள் ஒன்றிலிருந்து ஒன்று தொடர்பறுக்கப்பட்டு, ஒவ்வொரு பகுதி-வேலையையும் நுணுக்கத் தொழிலாளியின் கையில் ஒரு பொருத்த மான விசேஷ வடிவம் பெற்றதுமே, முன்பு பல காரியங்களுக்குப் பயன்பட்ட கருவிகளில் மாற்றங்கள் செய்வது அவசியமாகிறது. எப்படிப்பட்ட மாற்றம் என்பது கருவியின் பழைய வடிவத்தால் ஏற்படும் இடர்ப்பாடுகளால் நிர்ணயிக்கப்படுகிறது. பட்டறைத் தொழிலின் தனிச்சிறப்பு அடங்கியிருப்பது உழைப்புக் கருவிகளின் வகை வேறுபாட்டிலும் — இந்த வகைவேறுபாட்டின் மூலம் குறிப் பிட்ட வகைக் கருவிகள் அந்தந்தக் குறிப்பிட்ட பிரயோகத்துக்குத் தகவமைந்த நிர்ணய உருவங்களைப் பெறுகின்றன — ஒவ்வொரு தனிவகைக் கருவியும் குறிப்பிட்ட நுணுக்கத் தொழிலாளியின் கையில் மட்டுமே முழு வீச்சில் பயன்படும் விதத்தில் அந்தக் கருவி களைத் தனித்திறன் பெறச் செய்வதிலும்தான். பர்மிங்காமில் மட்டும் 500 வகைச் சம்மட்டிகள் உற்பத்தி செய்யப்படுகின்றன; ஒவ் வொன்றும் குறிப்பிட்ட ஒரு நிகழ்முறைக்குத் தகவமைக்கப்பட்டிருப் பது மட்டுமல்லாமல், பல சந்தர்ப்பங்களில் சிற்சில வ்கைகள் ஒரே நிகழ்முறையில் வெவ்வேறு வேலைகளுக்குப் பிரத்தியேகமாய்ப் பயன்படுகின்றன. பட்டறைத் தொழிற் காலம் ஒவ்வொரு நுணுக்கத் தொழிலாளியின் பிரத்தியேகமான விசேஷப் பணிகளுக்கும் உழைப் புக் கருவிகளைத் தகவமைப்பதன் மூலம் அக்கருவிகள் எளிமைப் படவும், மேம்படவும், பல்கிப் பெருகவும் வழி செய்கிறது.[425]

---

[425] டார்வின் உயிரினங்களின் தோற்றம் பற்றிய தமது சகாப்தகர நூலில்,

இவ்வாறு, அதே நேரத்தில், சாமானியக் கருவிகளின் ஒன்றிணைப் பாலான இயந்திர சாதனம் தோன்றுவதற்கான பொருளாயத நிலைமைகளில் ஒன்றையும் அது படைக்கிறது.

பட்டறைத் தொழிலின் மிகவும் சாமானியக் கூறுகளே நுணுக்கத் தொழிலாளியும், அவரது கருவிகளும். இப்போது அத்தொழிலின் ஒட்டுமொத்தமான தன்மையைப் பரிசீலிப்போம்.

## பிரிவு 3.—பட்டறைத் தொழிலின் அடிப்படை வடிவங்கள் இரண்டு: பலபடித்தான பட்டறைத் தொழில், தொடர் பட்டறைத் தொழில்

பட்டறைத் தொழிலின் ஒழுங்கமைப்புக்கு அடிப்படை வடிவங் கள் இரண்டு; இவை எப்போதாவது ஒன்றுகலக்கக் கூடும் என் றாலும் கூட, அடிப்படையில் வெவ்வேறு வகைப்பட்டவை; மேலும், பட்டறைத் தொழில் பிற்காலத்தில் இயந்திர சாதனத்தைக் கொண்டு நடத்தப்படும் நவீனத் தொழில் துறையாக [modern industry] மாற்றமடைவதில் இவை இருவேறு பாத்திரம் வகிக் கின்றன. இந்த இரட்டைத் தன்மை உற்பத்தி செய்யப்படும் பண்டத் தின் இயல்பிலிருந்து பிறப்பதாகும். இந்தப் பண்டம் தனித்தனி யாகச் செய்யப்பட்ட பகுதி-உற்பத்திப் பொருட்களை யாந்திரிக மாய் இணைத்துப் பொருத்துவதன் மூலமே கிடைக்கப் பெறலாம்; அல்லது, தொடர்புள்ள நிகழ்முறைகள், செப்ப முறைகள் ஆகிய வற்றாலான தொடரின் மூலம் அதன் பூர்த்தியான உருவம் கிடைக் கப் பெறலாம்.

எடுத்துக்காட்டாக, ஒரு இரயில் எஞ்சின் 5,000த்துக்கும் அதிக மான தனித்தனி பாகங்களால் ஆனது. ஆயினும், மெய்யான பட்டறைத் தொழிலின் முதல் வகைக்கு அது உதாரணம் ஆக முடியாது; ஏனெனில் அது இயந்திரத் தொழிலால் உற்பத்தி செய்யப்படும் வடிவமைப்பாகும்; ஆனால் கடிகாரம் இத்தகைய

---

தாவரங்கள், மிருகங்களின் இயற்கை உறுப்புகள் பற்றிக் குறிப்பிடுகிறார்: ''ஒரே உறுப்பு வெவ்வேறு வகை வேலைகளைச்' செய்ய வேண்டியதாய் இருக்கும் வரை, அது மாறக் கூடியதாய் இருப்பதற்கான காரணத்தை நாம் ஓரளவு புரிந்து கொள்ள முடியும்; அதாவது இயற்கைத் தேர்வு ஒவ்வொரு சிறு வடிவத் திரிபையும் அவ்வுறுப்பு குறிப்பிட்ட ஒரே காரியத்துக்காக பயன்படும் போது எவ்வளவு கவனத்துடன் பாதுகாக்கிறதோ அல்லது ஒழித்துக் கட்டுகிறதோ அவ்வளவு கவனத்துடன் மேற்கூறிய நிலைமையில் பாதுகாப்பதோ ஒழித்துக் கட்டுவதோ இல்லை என்பதைப் புரிந்து கொள்ள முடியும். இவ்வாறு, எல்லா விதமான பொருட்களையும் வெட்டுவதற்குத் தகவமைந்த கத்திகள் மொத்தத்தில் ஒரே உருவமுடையனவாய் இருக்கலாம். ஆனால் பிரத்தியேகமாய் ஒரு வழியில் மட்டும் பயன்பட வேண்டிய ஒரு கருவி வெவ்வேறான ஒவ்வொரு உபயோகத் துக்கும் வெவ்வேறு உருவமுடையதாய் இருக்க வேண்டும்.

உதாரணம் ஆக முடியும்; பட்டறைத் தொழிலில் உழைப்புப் பிரிவினைக்கு எடுத்துக்காட்டாக வில்லியம் பெட்டி அதைப் பயன் படுத்தினார். முன்பெல்லாம் நூரம்பர்க் கைத்திறனாளரின் தனிப் பட்ட படைப்பாக இருந்த கடிகாரம் எண்ணிறந்த நுணுக்கத் தொழி லாளர்களின் சமுதாய உற்பத்திப் பொருளாக மாற்றப்பட்டுள்ளது; இந்நுணுக்கத் தொழிலாளர்களில் சிலர் வருமாறு: மைய வில் செய்பவர்கள், முகப்பு செய்பவர்கள், சுருள் வில் செய்பவர்கள், நகைத் துளை செய்பவர்கள், கெம்பு கோல் செய்பவர்கள், பெட்டகம் செய்பவர்கள், திருகாணி செய்பவர்கள், முலாமிடு வோர். இவர்களின் உட்பிரிவுகளாக வருவோர்: சக்கரம் செய்பவர் கள் (பித்தளையும் உருக்கும் தனித்தனியாக), சிற்றூசி செய்பவர் கள், சலன உறுப்பு செய்பவர்கள், acheveur de pignon (அச்சு களில் சக்கரங்களைப் பொருத்துபவர்கள், பட்டைத் தீட்டுபவர்கள், இன்ன பிறர்) சுழலச்சு செய்பவர்கள், planteur de finissage (சக்கரங்களையும், விற்களையும் சூட்சமங்களில் பொருத்துபவர்கள்) finisseur de barillet (சக்கரங்களில் பற்கள் வெட்டுபவர்கள், சரியான அளவுகளில் துளை போடுபவர்கள், இன்னபிற இணைப் பொறி செய்பவர்கள், உருளை இணைப்பொறிகளுக்கு உருளை செய்பவர்கள், இணைப்பொறிச் சக்கரம் செய்பவர்கள், துடிப்புச் சக்கரம் செய்பவர்கள், ரேக்கட் (கடிகாரத்தைச் சரிசெய்வதற்கான உபகரணம்) செய்பவர்கள், planteur d'echappement (பிரதான இணைப்பொறி செய்பவர்கள்); அடுத்து வருவோர்: repasseur de barillet (வில்லுக்கான பெட்டகத்துக்கு இறுதி வடிவளிப்பவர்கள், இன்னபிறர்), உருக்கு மெருகிடுபவர்கள், சக்கரம் மெருகிடுபவர் கள், திருகாணி மெருகிடுபவர்கள், எண் தீட்டுபவர்கள், முகப்பு எனாமல் பூசுபவர்கள் (தாமிரத்தின் மீது எனாமலை உருக்குபவர் கள்), fabricant de pendants (கடிகாரப் பெட்டியைத் தொங்க விடுவதற்கான வளையம் தயாரிப்பவர்கள்), finisseur de charniere (பித்தளைக் கீலைப் பெட்டக உறையில் வைப்பவர்கள், இன்ன பிறர்), faiseur de secret (பெட்டகத்தைத் திறக்கும் விற்களைப் பொருத்துபவர்கள்), graveur, ciseleur, polisseur de boite முத லானோர், அனைத்துக்கும் கடைசியாகக் கடிகாரம் முழுவதையும் ஒன்றாகப் பொருத்தி, ஓடுகிற நிலையில் கையில் . ஒப்படைப் பவரான repasseur. கடிகாரத்தின் சில பாகங்கள் மட்டுமே பலரது கை வழிச் செல்கின்றன; இந்தத் தனித்தனி உறுப்புகள் அனைத்தும் அவற்றை முழு இயந்திரமாகப் பிணைக்கிற கையில் முதல் தடவை யாக ஒன்றுகூடுகின்றன. பூர்த்தியான உற்பத்திப் பொருளுக்கும், அதன் விதவிதமான பல்வேறு கூறுகளுக்கும் இடையிலான இந்த வெளி உறவு (இதுபோன்ற பூர்த்தியான பண்டங்கள் அனைத் துக்கும் போலவே, இதற்கும்) நுணுக்கத் தொழிலாளர்கள் ஒரு பட்டறையில் ஒன்றுகூட்டப்படுகின்றனரா, இல்லையா என்பதைத்

தற்செயலானதாக்கி விடுகிறது. மேலும், நுணுக்க வேலைகள் அவ்வளவும் அத்தனை சுயேச்சையான கைத்தொழில்களாகவும் நடத்தப்படலாம்; வாடு, நியூஃப்சாட்டல் ஆகிய பிராந்தியங்களில் இப்படித்தான் நடக்கிறது. ஆனால் ஜெனிவாவில் தனியொரு முதலாளியின் கட்டுப்பாட்டில் நுணுக்கத் தொழிலாளர்கள் நேர்முக மாகச் சேர்ந்து வேலை செய்யும் பெரிய கடிகாரத் தொழிற்சாலைகள் இருக்கின்றன. இந்நிலையிலுங்கூட முகப்பும் வில்களும் பெட்டகமும் தொழிற்சாலையிலேயே தயாரிக்கப்படுவது அபூர்வம். தொழிலாளர்களை ஒன்றுகுவிக்கும் பட்டறைத் தொழிலாக இத் தொழிலை நடத்துவது கடிகாரத் தொழிலில் விதிவிலக்கான நிலைமைகளில் மட்டுமே இலாபகரமானது. ஏனெனில் வீட்டில் வேலை செய்ய விரும்புகிற தொழிலாளர்களிடையில்தான் போட்டி அதிகமாயிருக்கும். மேலும் ஏனெனில், வேலையானது அநேக பலபடித்தான நிகழ்முறைகளாகப் பிரிந்திருப்பதால் உழைப்புக் கருவிகளை அதிகமாய்ப் பொதுவில் பயன்படுத்த முடிவதில்லை. முதலாளி வேலையைச் சிதறலாக்குவதன் மூலம், பட்டறைகள் முதலானவற்றில் ஆகும் முதலீட்டை மிச்சப்படுத்திக் கொள் கிறார்.[426] ஆயினும், வீட்டில் வேலை செய்த போதிலும் முத லாளிக்காகவே (பட்டறைத் தொழிலதிபர், e'tablisseur) வேலை செய்பவரான இந்த நுணுக்கத் தொழிலாளியின் நிலை சொந்த வாடிக்கையாளர்களுக்காக வேலை செய்யும் சுயேச்சைக் கைத் திறனாளரின் நிலையிலிருந்து பெரிதும் வேறுபட்டது.[427]

---

[426] 1854ஆம் ஆண்டில் ஜெனிவா 80,000 கடிகாரங்கள் உற்பத்தி செய்தது. இது நியூஃப்சாட்டல் பிராந்தியத்தின் உற்பத்தியில் ஐந்திலொரு பங்கு கூட இல்லை. பெரிய கடிகாரப் பட்டறையாகக் கருதத்தக்க லாசாக்ஸ்-டி-ஃபோண்டு மட்டுமே ஆண்டொன்றுக்கு ஜெனிவாவைப் போல் இரு மடங்கு உற்பத்தி செய்கிறது. 1850 முதல் 1861 வரை ஜெனிவா 720,000 கடிகாரங்களை உற்பத்தி செய்தது. பார்க்கவும்: ''கடிகாரத் தொழில் பற்றி ஜெனிவாவிலிருந்து அறிக்கை,'' ''பட்டறைத் தொழில்கள், வாணிபம் முதலானவை பற்றி மேன்மை தங்கிய முடியரசின் தூதரக, பிரதிநிதியகச் செயலாளர்களின் அறிக்கைகள், எண் 6, 1863.'' பாகங்களை இணைத்துப் பொருத்துவதன் மூலமே தயாரிக்கப்படக் கூடிய பண்டங்களின் உற்பத்தியில் அடங்கியுள்ள நிகழ்முறைகளிடையிலான தொடர்பின்மையினாலேயே, இப்படியொரு பட்டறைத் தொழிலை இயந்திரங்களைக் கொண்டு நடத்தப்படும் நவீனத் தொழிற் கிளைகளாக மாற்றுவது மிகக் கடினமாகி விடுகிறது; ஆனால் கடிகார உற்பத்தியில் இவையன்றி மேலும் இரு இடையூறுகள் உள்ளன; அதன் உறுப்புகளின் நுணுக்கமும் நுண்மையும், சொகுசுப் பண்டம் என்ற அதன் தன்மை இவையே அவ்விடையூறுகள். எனவேதான் அவை பல்வகைத் தன்மை உடையனவாய் உள்ளன; மிகச் சிறந்த லண்டன் தொழிற்கூடங்களில் ஓராண்டு காலத்தில் ஒரு டஜன் கடிகாரங்கள் ஒரே மாதிரி செய்யப்படுவதும் அபூர்வமே என்னும் அளவுக்கு அவற்றின் பல்வகைத் தன்மை உள்ளது. இயந்திரங்கள் வெற்றிகரமாக ஈடுபடுத்தப்படும் திருவாளர்கள் வாச்சரன் & காண்ஸ்டான்டினுடைய கடிகாரத் தொழிற்சாலை அதிகபட்சமாக அளவிலும் வடிவத்திலும் மூன்று அல்லது நான்கு வெவ்வேறு வகைகளையே உற்பத்தி செய்கிறது.

[427] பலபடித்தான பட்டறைத் தொழிலின் மிகச் சிறந்த எடுத்துக்காட்டாகிய கடிகார உற்பத்தியில், கைத்தொழில்களின் உட்பிரிவினையால் ஏற்படுவதான மேற்குறிப்பிட்ட

இரண்டாவது வகைப் பட்டறைத் தொழிலில், அதன் நிறைவு பெற்ற வடிவத்தில் உற்பத்தியாகிற பண்டங்கள் தொடர்புள்ள வளர்ச்சிக் கட்டங்களின் வழியே, படிப்படியான நிகழ்முறைகளது தொடர் வழியே சென்று உருவாகிறவை. உதாரணமாக, ஊசி தயாரிப்புப் பட்டறைத் தொழிலில், கம்பி 72 வெவ்வேறு நுணுக்கத் தொழிலாளர்களின், ஏன், சில சந்தர்ப்பங்களில் 92 வெவ்வேறு நுணுக்கத் தொழிலாளர்களின் கரங்கள் வழியே செல்கிறது.

இவ்வகைப்பட்ட பட்டறைத் தொழில் முதலில் தொடங்கப்படும் போது சிதறலான கைத்தொழில்களை ஒன்றிணைக்கிற அளவில், பல்வேறு உற்பத்திக் கட்டங்கள் ஒன்றிலிருந்து ஒன்று பிரிக்கப் பட்டிருக்கும் இடைவெளியைக் குறைக்கிறது. ஒரு கட்டத்திலிருந்து இன்னொரு கட்டத்துக்குச் செல்வதற்கு ஆகும் நேரம் குறைகிறது: இப்படிச் செல்வதைச் சாதிக்கிற உழைப்பும் அவ்வாறே குறைகிறது.[428] கைத்தொழிலுடன் ஒப்பிடுமிடத்து உற்பத்தித் திறன் கூடுதலாகிறது; இதற்கு, பட்டறைத் தொழிலின் பொதுவான கூட்டு-வேலைத் தன்மையே காரணம். ஆனால், அதே நேரத்தில் பட்டறைத் தொழிலை வேறுபடுத்திக் காட்டும் சிறப்பம்சமாகிய உழைப்புப் பிரிவினைக்கு, பல்வேறு உற்பத்திக் கட்டங்களைத் தனிப்படப் பிரிப்பதும், அவை ஒன்றிலிருந்து ஒன்று சுயேச்சையாக இருப்பதும் அவசியமாகிறது. தனித்துள்ள பணிகளிடையில் ஒரு தொடர்பை நிறுவிப் பராமரிப்பதற்கு, பண்டம் ஒரு கையிலிருந்து இன்னொரு கைக்கும், ஒரு நிகழ்முறையிலிருந்து இன்னொரு நிகழ்முறைக்கும் ஓயாது கொண்டுசெல்லப்படுவது அவசியமாகிறது. நவீன இயந்திரத் தொழிலின் கண்ணோட்டத்தில், இந்த அவசியம் பட்டறைத் தொழிலுக்குரிய தனி இயல்பாகி, பெருஞ்செலவு உண்டாக்கும் குறைபாடாகவும், பட்டறைத் தொழிலுக்கான கோட்பாட்டில் உள்ளார்ந்த ஒன்றாகவும் விளங்குகிறது.[429]

குறிப்பிட்ட கச்சாப் பொருள் தொகுதியை மட்டுமே, எடுத்துக்காட்டாகக் காகிதப் பட்டறைத் தொழிலில் கந்தலை மட்டுமே அல்லது ஊசிப் பட்டறைத் தொழிலில் கம்பியை மட்டுமே கவனிப்போமானால், அது இறுதி நிலையடையுமுன் அடுத்தடுத்து பல்வேறு

---

உழைப்புக் கருவிகளின் வகைவேறுபாட்டையும் இக்கருவிகள் தனித்திறன் பெறுவதையும் மிகத் துல்லியமாக ஆராயலாம்.

428 "'இவ்வாறு நெருக்கமாக மக்கள் கூடிப் புழங்குவதில் போக்குவரத்துச் சாதனத் தேவைகள் குறைந்தே தீரும்.'' ("கிழக்கிந்திய வர்த்தகத்தால் வரும் அனுகூலங்கள்,'' பக்கம் 106.)

429 "கையுழைப்பை ஈடுபடுத்துவதன் விளைவாக பட்டறைத் தொழிலின் வெவ்வேறு கட்டங்கள் தனிப்படப் பிரிவது உற்பத்திச் செலவைப் பெரிதும் கூட்டி விடுகிறது. இழப்பு, பிரதானமாக, ஒரு நிகழ்முறையிலிருந்து இன்னொரு நிகழ்முறைக்குக் கொண்டு செல்லும் பணிகளிலிருந்தே ஏற்படுகிறது.'' ("நாடுகளின் தொழில் வளம்.'' லண்டன், 1855, இரண்டாம் பகுதி, பக்கம் 200.)

நுணுக்கத் தொழிலாளர்களின் கரங்களைக் கடந்து கட்டங்களின் தொடர்வரிசை வழியே செல்லக் காண்கிறோம். மறு புறம், ஒட்டு மொத்தமாகப் பட்டறையை நோக்கினால், கச்சாப் பொருளை ஒரே நேரத்தில் அதன் உற்பத்திக் கட்டங்கள் அனைத்திலும் பார்க்கிறோம். பல நூறு கரம் படைத்த கூட்டுத் தொழிலாளியின் ஒரு தொகுதிக் கரங்கள் ஒரு வகைக் கருவிகளை ஏந்தி கம்பியை இழுக்க, இரண்டாவது தொகுதிக் கரங்கள் வேறு வகைக் கருவிகளைக் கொண்டு அதை நேராக்க, மூன்றாவது தொகுதிக் கரங்கள் அதை வெட்டித் துண்டாக்க, நான்காவது தொகுதிக் கரங்கள் முனையைக் கூராக்க...வேலைகள் இவ்வாறு நடந்தேறுகின்றன. ஒன்றன்பின் ஒன்றாக நடைபெற்ற வெவ்வேறு நுணுக்க நிகழ்முறைகள் இப் போது ஏககாலத்தில், ஒரே இடத்தில் அக்கம்பக்கமாக நடைபெறுகின்றன. எனவேதான் குறிப்பிட்ட காலத்தில் முன்னிலும் பெரிய அளவில் சரக்குகள் பூர்த்தியாகி வெளிவருகின்றன.[430] இப்படிப் பலவும் ஏககாலத்தில் நடப்பதற்கு நிகழ்முறை முழுவதன் பொதுவான கூட்டு-வேலை வடிவமே வழிசெய்கிறது என்பது மெய்தான்; பட்டறைத் தொழிலுக்குக் கூட்டு-வேலைக்கான நிலைமைகள் தயார்நிலையில் கிடைப்பது மட்டுமல்லாமல், அதுவே கைத்தொழிலுழைப்பின் உட்பிரிவினையின் மூலம் ஓரளவுக்கு அவற்றைப் படைக்கவும் செய்கிறது. மறு புறம் ஒவ்வொரு தொழிலாளியையும் ஒரே ஒரு பகுதி-நுணுக்கப் பணியோடு இறுக்கிப் பிணைப்பதன் மூலமே அது உழைப்பு நிகழ்முறையின் இந்தச் சமுதாய ஒழுங்கமைப்பைச் சாதிக்கிறது.

ஒவ்வொரு நுணுக்கத் தொழிலாளியின் பகுதி-உற்பத்திப் பொருளும், அதே நேரத்தில், ஒரே பூர்த்தியான பண்டத்தின் உருவாக்கத்தில் குறிப்பிட்ட கட்டம்தான் என்பதால், ஒவ்வொரு தொழிலாளியும், அல்லது ஒவ்வொரு தொழிலாளர் குழுவும் இன்னொரு தொழிலாளிக்காக அல்லது குழுவுக்காகக் கச்சாப் பொருளைத் தயாரித்துத் தருகிறது. ஒருவரது உழைப்பின் விளைவு மற்றவரது உழைப்புக்கான தொடக்கமாகிறது. எனவே, ஒரு தொழிலாளி இன்னொரு தொழிலாளிக்கு நேரடியாக வேலை கொடுக்கிறார். விரும்பிய பலனை அடைவதற்கு ஒவ்வொரு பகுதி-நிகழ்முறையிலும் அவசியமான உழைப்பு நேரம் அனுபவத்தால் கண்டறியப்படுகிறது; மொத்தத்தில் பட்டறைத் தொழிலின் இயங்கு

430 "அது (உழைப்புப் பிரிவினை) — ஒரே தருணத்தில் அனைத்தும் செயல்படுத்தத் தக்கவையான — வெவ்வேறு கிளைகளாக வேலையைப் பிரிப்பதன் மூலம், காலச் செலவிலும் சிக்கனம் உண்டாக்குகிறது...ஒரு தனியாள் நிறைவேற்றியிருக்க வேண்டிய வெவ்வேறு நிகழ்முறைகள் அனைத்தையும் ஒரே நேரத்தில் நடத்துவதன் மூலம், ஒரே யொரு குண்டூசி வெட்டப்பட்டிருக்கக் கூடிய அல்லது கூராக்கப்பட்டிருக்கக் கூடிய அதே நேரத்தில், முழுமையாகப் பூர்த்தியான பற்பல குண்டூசிகளை உற்பத்தி செய்ய முடிகிறது." (டுகால்டு ஸ்டுவர்ட், முன் வந்தது, பக்கம் 319.)

முறை, குறிப்பிட்ட விளைவு குறிப்பிட்ட காலத்தில் அடையப்படும் என்ற அனுமானத்தின் அடிப்படையிலானது. ஒன்றை ஒன்று நிறைவு செய்யும் பல்வேறு துண்டுதுண்டான உழைப்பு நிகழ் முறைகளும் தடங்கலின்றியும் ஏககாலத்திலும் அக்கம்பக்கமாகவும் தொடர முடிவது இந்த அனுமானத்தின் பேரில்தான். வேலைகள் ஒன்றை ஒன்றும், ஆகவே தொழிலாளர்கள் ஒருவரை ஒருவரும் இப்படி நேரடியாகச் சார்ந்திருப்பது, அவர்கள் ஒவ்வொருவரையும் தம் வேலையில் அவசியமான நேரத்துக்கதிகமாகச் செலவிட முடியாத படி செய்து விடுகிறது; இவ்வாறு சுயேச்சையான கைத் தொழிலில், அல்லது சாமானியக் கூட்டு-வேலையிலேயே கூடக் காணக் கூடியதிலிருந்து முற்றிலும் வேறு வகையான தொடர்ச்சியும், சீர்நிலையும், முறைப்பாடும், ஒழுங்கும்,[431] ஏன், உழைப்பின் மும்முரமும் கூடப் பெறப்படுகின்றன. ஒரு சரக்குக்காகச் செல விடப்படும் உழைப்பு நேரம் அதன் உற்பத்திக்கு சமுதாய வழியில் அவசியமான உழைப்பு நேரத்தை விஞ்சக் கூடாது என்ற விதி, பொதுவான சரக்கு உற்பத்தியில், போட்டியின் தாக்கத்தாலேயே நிலைநாட்டப் பெறுவதாகத் தோன்றுகிறது. ஏனென்றால், மேம் போக்காகச் சொல்வதானால், தனிப்பட்ட ஒவ்வொரு உற்பத்தி யாளரும் தன் சரக்கை அதன் சந்தை விலைக்கே விற்க வேண்டிய கட்டாயத்திலுள்ளார். மாறாக, பட்டறைத் தொழிலில், குறிப்பிட்ட காலத்தில் குறிப்பிட்ட அளவில் உற்பத்திப் பொருளைத் தயாரித் தளிப்பது[432] உற்பத்தி நிகழ்முறையின் தொழில் நுட்ப விதியாகி விடுகிறது.

எப்படியாயினும், வெவ்வேறு வேலைகளுக்கு ஆகிற காலம் வெவ்வேறானது; எனவே, அவை சமமான காலங்களில் வெவ் வேறு அளவுகளிலான பகுதி-உற்பத்திப் பொருட்களைத் தருகின் றன. எனவே, ஒரே தொழிலாளி ஒரே வேலையை நாள்தோறும் செய்ய வேண்டியிருந்தால், ஒவ்வொரு வேலைக்கும் வெவ்வேறு எண்ணிக்கையிலான தொழிலாளர்கள் இருக்க வேண்டும்; எடுத்துக் காட்டாக, அச்சு தயாரிக்கும் பட்டறைத் தொழிலில் ஒரு தேய்ப்புக் காரருக்கு நான்கு வார்ப்புக்காரர்களும், இரு உடைப்புக்காரர் களும் உள்ளனர்; வார்ப்புக்காரர் மணிக்கு 2,000 அச்சுகளை வார்க்கிறார், உடைப்புக்காரர் 4,000 அச்சுகளை உடைத்துப்

[431] "பட்டறைத் தொழில் ஒவ்வொன்றுக்கும் கைத்திறனாளர்களின் வகை. எந்த அளவுக்கு அதிகமோ...வேலை ஒவ்வொன்றின் ஒழுங்கும் முறைப்பாடும் அந்த அளவுக்கு உயர்கிறது; வேலை அந்த அளவுக்குக் குறைந்த காலத்தில் செய்யப்பட வேண்டும்; உழைப்பு அந்த அளவுக்குக் குறைந்தாக வேண்டும்." ("...அனுகூலங்கள்," பக்கம் 68.)

[432] ஆயினும், பட்டறையுற்பத்தி முறை பல தொழிற் கிளைகளில் இவ்விளைவை அரைகுறையான அளவுக்கே அடைகிறது. ஏனெனில் உற்பத்தி நிகழ்முறையின் பொதுப் படையான இரசாயன, பௌதிக நிலைமைகளை உறுதியுடன் நிர்வகிப்பது எப்படி என்று அதற்குத் தெரியாது.

பிரிக்கிறார், தேய்ப்புக்காரர் 8,000 அச்சுகளுக்கு மெருகிடுகிறார். இதில், ஒரே காரியத்தைச் செய்கிற பலரை ஏககாலத்தில் வேலையில் ஈடுபடுத்துவதென்ற கூட்டு-வேலைக் கோட்பாட்டை அதன் சாமானிய வடிவில் மீண்டும் காண்கிறோம்; இப்போதுதான் இந்தக் கோட்பாடு ஓர் அங்கக உறவின் தெரிவிப்பாக உள்ளது. பட்டறைத் தொழிலில் அமலாக்கப்படும் உழைப்புப் பிரிவினை சமுதாயக் கூட்டுத் தொழிலாளியின் பண்புவழியில் வேறுபட்ட அங்கங்களை எளிமைப்படுத்துவதும் பல்கச் செய்வதும் மட்டுமல்லாமல், அந்த அங்கங்களின் அளவை—அதாவது ஒவ்வொரு நுணுக்க வேலைக்குமான தொழிலாளர்களின் ஒப்பீட்டு எண்ணிக்கை அல்லது தொழிலாளர் குழுவின் ஒப்பீட்டு அளவை—ஒழுங்குபடுத்தும் நிலையான கணித உறவு அல்லது விகிதத்தையும் உருவாக்குகிறது. அது, சமுதாய உழைப்பு நிகழ்முறையின் பண்புவழிப்பட்ட உட்பிரிவினையோடு கூட, அந்த நிகழ்முறைக்கு ஓர் அளவுவழிப்பட்ட விதியையும் விகிதாசார உறவையும் வளர்ந்தெழச் செய்கிறது.

குறிப்பிட்ட அளவுவீதத்தில் உற்பத்தி செய்யும் போது பல்வேறு குழுக்களில் இடம் பெற வேண்டிய நுணுக்கத் தொழிலாளர்களின் எண்ணிக்கைகளுக்கு மிகப் பொருத்தமான விகிதாசாரம் பரிசோதனை மூலமாய் நிலைநாட்டப்பட்டதுமே, ஒவ்வொரு குறிப்பிட்ட குழுவினதும் பெருக்குத் தொகை ஒன்றை ஈடுபடுத்துவதன் மூலம்தான் உற்பத்தியின் அந்த அளவுவீதத்தை விரிவாக்க முடியும்.[433] ஒரே ஆள் குறிப்பிட்ட சில வகை வேலைகளைச் சிறு வீதத்தில் போலவே பெருவீதத்திலும் செய்ய முடியும் என்ற நிலைமையும் உள்ளது; இதற்கு எடுத்துக்காட்டாக இருப்பவை கண்காணிப்பு வேலை, பகுதி-உற்பத்திப் பொருளை ஒரு கட்டத்திலிருந்து அடுத்த கட்டத்துக்கு எடுத்துச் செல்வது போன்றவை. இவ்வாறான பணிகளைத் தனிப்படப் பிரித்து குறிப்பிட்ட தொழிலாளிக்கு ஒதுக்குவது, வேலையில் ஈடுபடுத்தப்படும் தொழிலாளர்களின் எண்ணிக்கை அதிகரிக்காத வரை அனுகூலமாய் இருப்பதில்லை; ஆனால் இந்த அதிகரிப்பு ஒவ்வொரு குழுவையும் அதற்குரிய விகிதாசாரத்தில் பாதிக்கவே செய்யும்.

எந்தக் குறிப்பிட்ட நுணுக்கப் பணியும் ஒதுக்கப் பெறுகிற தனித்த 'தொழிலாளர் குழு ஒருபடித்தான கூறுகளால் ஆனதாகும்;

---

433 ''ஒவ்வொரு பட்டறைத் தொழிலையும் எத்தனை நிகழ்முறைகளாய்ப் பிரிப்பது அதிக அனுகூலமாய் இருக்கும் என்பதையும், அதே போல் எத்தனை ஆட்களை வேலையில் ஈடுபடுத்தலாம் என்பதையும் (ஒவ்வொரு பட்டறைக்கும் உரிய உற்பத்திப் பண்டத்தின் விசேஷத் தன்மையிலிருந்து) தெரிந்து கொள்ளும் போது இந்த எண்ணிக்கையின் நேரடிப் பெருக்குத் தொகையை ஈடுபடுத்தாத மற்றெல்லாப் பட்டறைகளும் பண்டத்தை இன்னும் அதிகச் செலவில் உற்பத்தி செய்யும்...இது பட்டறைத் தொழில் நிறுவனங்களின் அளவு பெரிதாய் இருப்பதற்கான காரணங்களில் ஒன்று.'' (சா. பாப்பேஜ், ''இயந்திர சாதனத்தின் சிக்கனம் பற்றி,'' முதல் பதிப்பு, லண்டன், 1832, அத்தியாயம் xxl., பக்கம் 172-173.)

அது முழு இயங்கமைப்பின் அங்கக் கூறுகளில் ஒன்றாகும். ஆயினும் பல பட்டறைத் தொழில்களில் குழுவே ஒழுங்கமைக்கப் பட்ட உழைப்புத் தொகுதியாக உள்ளது; முழு இயங்கமைப்போ இந்த மூல உயிரமைப்புகளின் மறுபதிப்பாக அல்லது பெருக்கலாக உள்ளது. கண்ணாடிப் புட்டிகள் தயாரிக்கும் பட்டறைத் தொழிலை எடுத்துக்காட்டாய்க் கொள்வோம். அதை அடிப்படையில் வெவ்வேறான மூன்று கட்டங்களாகப் பகுக்கலாம். முதலாவதாகப் பூர்வாங்கக் கட்டம்; கண்ணாடியின் ஆக்கக் கூறுகளைத் தயாரித்தல், மணல், சுண்ணாம்பு முதலானவற்றைக் கலத்தல், அவற்றைக் கண்ணாடியின் திரவத் திரளாக உருக்குதல் ஆகியவை இதில் அடங்கும்.[434] இந்த முதல் கட்டத்தில் போலவே, உலர்த்தும் சூளையிலிருந்து புட்டிகளை அகற்றுதல், வகை பிரித்தல், கட்டு களாக அடைத்தல் முதலானவை அடங்கிய இறுதிக் கட்டத்திலும் பல்வேறு நுணுக்கத் தொழிலாளர்கள் ஈடுபடுத்தப்படுகின்றனர். இந்த இரு கட்டங்களுக்கும் நடுவில் இடைக் கட்டத்தில் வருவது முறையான கண்ணாடி உருக்குதல், திரவத் திரளைச் சரி செய்தல். சூளையின் ஒவ்வொரு வாயிலும் ஒரு குழு வேலை செய்கிறது; இது ''பொந்து'' என்று அழைக்கப்படுகிறது; இதில் புட்டி செய்பவர் அல்லது இறுதி வடிவளிப்பவர் ஒருவரும், ஊதுபவர் ஒருவரும், திரட்டுபவர் ஒருவரும், அடைப்பவர் அல்லது தீட்டுபவர் ஒருவரும், எடுப்பவர் ஒருவரும் உள்ளனர். இந்த ஐந்து நுணுக்கத் தொழிலாளர்களும், ஒரு முழுமையாகவே செயல்படுகிற, ஆதலால் ஐவர் முழுமையின் நேரடிக் கூட்டு-வேலையால் மட்டுமே இயங்க முடிகிற தனியொரு உழைக்கும் உயிரமைப்பின் ஐந்து தனி உறுப்புகளே. உறுப்புகளில் ஒன்று இல்லாவிட்டாலும் இவ்வுடல் முழுவதுமே ஸ்தம்பித்து விடுகிறது. ஆனால் ஒரு கண்ணாடிச் சூளைக்குப் பல திறப்புகள் இருக்கின்றன (இங்கிலாந்தில் 4 முதல் 6); ஒவ்வொரு திறப்பிலும் ஒரு மட்கொப்பரை நிறைய உருக்கிய கண்ணாடி உள்ளது; ஒவ்வொன்றிலுமே ஐந்து பேர் கொண்ட ஒரே மாதிரி யான தொழிலாளர் குழு ஈடுபடுத்தப்படுகிறது. ஒவ்வொரு குழுவின் ஒழுங்கமைப்பும் உழைப்புப் பிரிவினையின் அடிப்படை யிலானது; ஆனால் வெவ்வேறு குழுக்களிடையிலான பிணைப்பு சாமானியக் கூட்டு-வேலையே; உற்பத்திச் சாதனங்களில் ஒன்றான சூளையைப் பொதுவில் பயன்படுத்துவதன் மூலம் அதனை இன் னும் சிக்கன முறையில் பயன்படுத்துவதற்கு இது வழி செய்கிறது. இப்படியொரு சூளை, அதன் 4-6 குழுக்களுடன் ஒரு கண்ணாடியக மாகிறது; இப்படிப்பட்ட பல கண்ணாடியகங்கள் சேர்ந்து — ஆயத்த

[434] இங்கிலாந்தில், உருக்கு உலையானது கண்ணாடி சரி செய்யப்படுகிற கண்ணாடிச் சூளையிலிருந்து வேறுபட்டதாகும். பெல்ஜியத்தில் இரு நிகழ்முறைகளுக்கும் ஒரே உலை பயன்படுகிறது.

மற்றும் இறுதிக் கட்டங்களுக்கு அவசியமான கருவிகள் மற்றும் தொழிலாளர்களுடன் கூட—ஒரு கண்ணாடிப் பட்டறை ஆகின்றன.

இறுதியாக, பட்டறைத் தொழில் பகுதியளவுக்கு எப்படிப் பல்வேறு கைத்தொழில்களின் ஒன்றிணைப்பிலிருந்து பிறக்கிறதோ, அதேபோல் பல்வேறு பட்டறைத் தொழில்களின் ஒன்றிணைப்பாகவும் வளர்கிறது. எடுத்துக்காட்டாக, பெரும் ஆங்கிலேயக் கண்ணாடித் தொழிலதிபர்கள் தாமே கொப்பரைகளைத் தயாரிக்கின்றனர்; ஏனெனில் நிகழ்முறையின் வெற்றி அல்லது தோல்வி பெருமளவுக்கு இவற்றின் தரத்தைப் பொறுத்ததே. உற்பத்திச் சாதனங்களில் ஒன்றின் உற்பத்தி இங்கே உற்பத்திப் பண்டத்தின் உற்பத்தியுடன் ஒன்றுபடுத்தப்படுகிறது. மறு புறம், உற்பத்திப் பண்டத்தின் உற்பத்தி அந்த உற்பத்திப் பண்டத்தைக் கச்சாப் பொருளாகக் கொண்ட இதர பட்டறைத் தொழில்களுடன், அல்லது அடுத்து எவற்றின் உற்பத்திப் பண்டங்களுடன் அதுவே கலக்கப்படுகிறதோ அந்தப் பட்டறைத் தொழில்களுடன் ஒன்றுபடுத்தப்படலாம்....இவ்வாறு, கெட்டிக் கண்ணாடியின் உற்பத்தியானது கண்ணாடி வெட்டுதல், பித்தளை வார்ப்பு ஆகியவற்றுடன் ஒன்றிணைக்கப்படுவதைக் காண்கிறோம். பித்தளை வார்ப்பு பல்வேறு கண்ணாடிப் பொருட்களுக்கு உலோகப் பிடிப்பு தரப் பயன்படுகிறது. இவ்வாறு ஒன்றிணைக்கப்படும் பல்வேறு பட்டறைத் தொழில்கள் இன்னும் பெரியதொரு பட்டறைத் தொழிலின் ஏறக்குறைய தனித்தனியான துறைகளாக அமைகின்றன; ஆனால் அதே நேரத்தில் அவை ஒவ்வொன்றும் தம் சொந்த உழைப்புப் பிரிவினையுடன் கூடிய சுயேச்சையான நிகழ்முறைகளாக உள்ளன. பட்டறைத் தொழில்களின் இந்த ஒன்றிணைப்பால் அநேக நன்மைகள் உண்டென்றாலும், அது தன் சொந்த அடித்தளத்தின் மீது முழுத் தொழில்நுட்ப அமைப்பாவதில்லை. அது இயந்திர சாதனத்தைக் கொண்டு நடத்தப்படும் தொழில் துறையாக மாறும் போதுதான் இத்தகைய அமைப்பாகிறது.

பட்டறைத் தொழிற் காலத்தின் ஆரம்பத்தில், சரக்கு உற்பத்தியில் அவசிய-உழைப்பு நேரத்தைக் குறைப்பதென்ற கோட்பாடு[435] வகுத்துரைக்கப்பட்டது; பெருவீதத்திலும், பெரும் சக்திப் பிரயோகத்தைக் கொண்டும் நடத்தப்பட வேண்டிய சில சாமானிய ஆரம்ப நிகழ்முறைகளுக்காக இங்குமங்குமாய் இயந்திரங்கள் உபயோகிக்கப்படலாயின. இவ்வாறு காகிதப் பட்டறைத் தொழிலின் ஆரம்ப காலத்தில் கந்தல்களைக் கிழிப்பது காகித ஆலைகளால் செய்யப்பட்டது; உலோகத் தொழிலில், கனிப் பொருட்களை இடிப்பது

435 வி. பெட்டி, ஜான் பெல்லர்ஸ், ஆண்ட்ரூ யாரண்டன், ''கிழக்கிந்திய வர்த்தகத்தால் வரும் அனுகூலங்கள்,'' ஜே. வாண்டர்லின்ட், மற்றும் பலரிடத்தும் இதைப் பார்க்க முடியும்.

அச்சமுத்தி ஆலைகளால் செய்யப்பட்டது.[436] நீர்விசைச் சக்கரத்தின் உருவில் ரோமானியப் பேரரசு எல்லா இயந்திர சாதனங்களுக்குமான மூல வடிவத்தை வழங்கிச் சென்றது.[437]

கைத்தொழிற் காலம் திசைகாட்டி, வெடிமருந்து, அச்சிடும் இயந்திரம், இயந்திரக் கடிகாரம் ஆகிய பெரும் கண்டுபிடிப்புகளை நமக்கு வழங்கிச் சென்றது. ஆனால், மொத்தத்தில், உழைப்புப் பிரிவினையுடன் ஒப்பிடுகையில் இயந்திர சாதனம் அதற்கென ஆதாம் ஸ்மித் ஒதுக்குகிற அந்தக் கீழ்நிலைப் பங்கையே வகித்தது.[438] 17ஆவது நூற்றாண்டில் இயந்திர சாதனங்கள் சிதறலாகப் பயன்படுத்தப்பட்டது மிகப் பெரும் முக்கியத்துவமுடையதாய் இருந்தது; ஏனெனில் அந்தக் காலத்தின் மாபெரும் கணிதவியல் வல்லுனர்களுக்கு இயந்திரவியல் விஞ்ஞானத்தைப் படைப்பதற்கான நடைமுறை அடிப்படையையும் ஊக்கத்தையும் அது வழங்கியது.

பல நுணுக்கத் தொழிலாளர்களின் ஒன்றிணைவால் உருவாகும் கூட்டுத் தொழிலாளிதான் பட்டறைத் தொழிற் காலத்துக்குரிய தனிவித இயந்திர சாதனம் ஆவான். ஒரு சரக்கின் உற்பத்தியாளரால் அடுத்தடுத்து நிறைவேற்றப்பட்டு உற்பத்தியின் முன்னேற்றத்தின் போது ஒன்றுடன் ஒன்று ஐக்கியமாகிற பல்வேறு வேலைகள் கூட்டுத் தொழிலாளியிடமிருந்து பல்வகைத் திறன்களைக் கோருகின்றன. ஒரு வேலையில் அதிக பலத்தையும், இன்னொன்றில் அதிகத் தேர்ச்சியையும், மற்றொன்றில் அதிகக் கவனத்தையும் இந்தக்

436 பிரான்சில் 16ஆம் நூற்றாண்டின் கடைப்பகுதியிலும் கூட, கனிப் பொருட்களைத் தூளாக்கவும் கழுவவும் உரல்களும் சல்லடைகளும் பயன்படுத்தப்பட்டு வந்தன.

437 இயந்திர சாதன வளர்ச்சியின் வரலாறு முழுவதையும் தானிய ஆலையின் வரலாற்றில் கண்டு கொள்ளலாம். இங்கிலாந்தில் தொழிற்சாலை இன்னமும் "ஆலை தான்". இந்த நூற்றாண்டின் முதல் பத்தாண்டுக்குரிய ஜெர்மானியத் தொழில் நுட்பவியற் படைப்புக்களில், "muhle" என்ற வார்த்தை இயற்கைச் சக்திகளால் இயக்கப்படும் எல்லா இயந்திர சாதனங்களுக்கும் மட்டுமல்லாமல், இயந்திர சாதனங்களின் தன்மையில் உள்ள பொறியமைவுகள் பிரயோகிக்கப்படுகிற எல்லாப் பட்டறைத் தொழில்களுக்குமே இன்னமும் பயன்படுத்தப்படுவதைக் காணலாம்.

438 ஆதாம் ஸ்மித் உழைப்புப் பிரிவினை தொடர்பாக ஒரு புதிய வரையறையைக் கூட நிறுவி விடவில்லை என்பதை இந்த நூலின் நான்காம் பாகத்தில் இன்னும் விவரமாகப் பார்ப்போம். ஆயினும் பட்டறைத் தொழிற் காலத்தின் தலைசிறந்த அரசியல் பொருளாதார அறிஞராக அவரைச் சிறப்பித்துக் காட்டுவது உழைப்புப் பிரிவினைக்கு அவர் கொடுக்கிற முக்கியத்துவமே. அவர் இயந்திர சாதனத்துக்கென விதிக்கிற கீழ்நிலைப் பங்கு, நவீன இயந்திரத் தொழிலின் ஆரம்ப நாட்களில் லௌடர்டேலின் வாதப் போருக்கும், பின்னொரு காலத்தில் யூரின் வாதப் போருக்கும் சந்தர்ப்பமளித்தது. உழைப்புக் கருவிகள் தனித்திறன் பெறும் வகைவேறுபாட்டை, ஆதாம் ஸ்மித்தும் கூட இயந்திர சாதனக் கண்டுபிடிப்புடன் போட்டுக் குழப்புகிறார். இந்த வகைவேறுபாட்டில் நுணுக்கத் தொழிலாளர்களே முனைப்புடன் பங்கு வகித்தனர். ஆனால் இயந்திர சாதனத்தைக் கண்டுபிடிப்பதில் பட்டறைத் தொழிலாளர்கள் பங்கு வகிப்பதில்லை. கல்விமான்களும், கைவினைஞர்களும், ஏன், விவசாயிகளும் கூட (பிரிண்ட்லீ) அதில் பங்கு வகிக்கின்றனர்.

கூட்டுத் தொழிலாளி செலுத்த வேண்டியிருக்கிறது. ஒரே ஆள் இப்பண்புகள் அனைத்தையும் சம அளவில் பெற்றிருப்பதில்லை. பட்டறைத் தொழில் பல்வேறு வேலைகளையும் பிரித்து, சுயேச்சையானவையாகவும், தனிப்பட்டவையாகவும் மாற்றி முடித்ததுமே, தொழிலாளர்கள் அவரவரது முக்கியத் திறமைகளுக்கேற்பப் பிரித்து வகைப்படுத்தப்பட்டு, குழுக்களாக்கப்படுகின்றனர். ஒரு புறம் அவர்களது இயற்கையான திறமைகளை அடித்தளமாய்க் கொண்டு உழைப்புப் பிரிவினை உருவாக்கப்பட்டது என்றால், மறு புறம் பட்டறைத் தொழில் தோன்றியதுமே, அது அவர்களிடம் வரம்புக்குட்பட்ட, தனிவிதமான பணிகளை மட்டும் செய்வதற்கு இயற்கையாகப் பொருந்துகிற புதிய ஆற்றல்களை வளர்க்கிறது. கூட்டுத் தொழிலாளி இப்போது உற்பத்திக்கு அவசியமான எல்லாத் திறமைகளையும் சம அளவில் பெற்று விடுகிறார். குறிப்பிட்ட தொழிலாளர்கள் அல்லது தொழிலாளர் குழுக்களால் ஆனதாகிய தன் உறுப்புகள் அனைத்தையும் அவற்றின் தனிவிதப் பணிகளை நிறைவேற்றுவதில் பிரத்தியேகமாக ஈடுபடுத்துவதன் மூலம் அத்திறமைகளை அவர் மிகவும் சிக்கனத்துக்குரிய முறையில் செலவிடுகிறார்.[439] நுணுக்கத் தொழிலாளியின் ஒருதலைச்சார்பும் குறைகளும், அவர் கூட்டுத் தொழிலாளியின் அங்கமாக இருக்கையில் நிறைகளாகி விடுகின்றன.[440] திரும்பத் திரும்ப ஒன்றையே செய்கிற பழக்கம் ஒருபோதும் பிசகாத கருவியாக அவரை மாற்றி விடுகிறது. அதே நேரத்தில், இயங்கமைப்பு முழுவதுடனும் அவருக்குள்ள தொடர்பு அவர் இயந்திரத்தின் பாகங்களுக்குரிய முறைப்பாட்டுடன் வேலை செய்யும் படி நிர்ப்பந்திக்கிறது.[441]

கூட்டுத் தொழிலாளிக்குரிய பணிகள் சாமானியமாக மட்டுமல்லாமல் சிக்கலாகவும், உயர்வாக மட்டுமல்லாமல் தாழ்வாகவும்

---

[439] "பட்டறைத் தொழிலதிபர், நடந்தாக வேண்டிய வேலையை, வெவ்வேறு அளவில் தேர்ச்சி அல்லது சக்தி தேவைப்படுகிற வெவ்வேறு நிகழ்முறைகளாகப் பிரிக்கிறார்; ஆகவே அந்தந்த நிகழ்முறைக்கும் தேவைப்படுகிற துல்லிய அளவில் அந்தந்தத் தேர்ச்சி அல்லது சக்தியை அவர் விலைக்கு வாங்க முடிகிறது. வேலை முழுவதும் ஒரே தொழிலாளியால் செய்யப்பட்டாலோ, பண்டத்தைத் தயாரிக்கத் தேவைப்படும் வேலைகளில் மிகவும் சிக்கலானவற்றைச் செய்வதற்குப் போதுமான தேர்ச்சியையும், மிகவும் பிரயாசைக்குரியவற்றை நிறைவேற்றுவதற்குப் போதுமான வலிமையையும் அந்தத் தொழிலாளி பெற்றிருக்க வேண்டும்." (சார்லஸ் பாபேஜ், முன் வந்தது, அத்தியாயம் xix.)

[440] சில தசைகளின் அசாதாரண வளர்ச்சி, எலும்புகள் வளைந்து போவது போன்றவற்றை எடுத்துக்காட்டாகக் குறிப்பிடலாம்.

[441] இளம் வயதினர் விடாமல் தொடர்ந்து வேலை வாங்கப்பட்டது எப்படி என்று விசாரணை ஆணையர்களில் ஒருவர் கேட்ட கேள்விக்கு ஒரு க்ண்ணாடிப் பட்டறையின் தலைமை மேலாளரான திரு வில்லியம் மார்ஷல் சரியான படி பதிலளித்தார்: "அவர்கள் தமது வேலையைப் புறக்கணிக்க முடியாது; ஆரம்பித்து விட்டால் தொடர்ந்து செய்ய வேண்டியதுதான்; இயந்திரத்தின் பாகங்கள் எப்படியோ அப்படியேதான் அவர்களும்." ("குழந்தையுழைப்பு ஆணையம்," 4ஆம் அறிக்கை, 1865, பக்கம் 247.)

இருக்கிறபடியால், அவரது அங்கங்களான தனிப்பட்ட உழைப்புச் சக்திகளுக்கு வெவ்வேறு அளவில் பயிற்சி அவசியமாகிறது; எனவே, அவற்றுக்கு வெவ்வேறு மதிப்புகள் உள்ளன; ஆகவே, பட்டறைத் தொழில் உழைப்புச் சக்திகளது படிவரிசை ஒன்றை வளர்ந்தெழச் செய்கிறது; கூலி விகிதங்களும் இதற்கொப்ப அமைகின்றன. ஒரு புறம், தனிப்பட்ட தொழிலாளர்கள் வரம்பிடப்பட்ட ஒரே பணிக்கு உரித்தாக்கப்பட்டு, வாழ்நாள் முழுவதும் அப்பணியில் பிணைக்கப்படுகின்றனர்; மறு புறம், படிவரிசைக்குரிய பல்வேறு வேலைகளும், தொழிலாளர்கள் மத்தியில், அவர்களது இயற்கை ஆற்றல், ஈட்டிய ஆற்றல் இரண்டுக்கும் ஏற்பப் பிரித்தளிக்கப்படுகின்றன.[442] ஆயினும், உற்பத்தி நிகழ்முறை ஒவ்வொன்றுக்கும், எவரும் செய்யவல்ல சில எளிய செப்ப முறைகள் அவசியமாகின்றன. இப்போது அவையும் கூட உற்பத்திச் செயற்பாட்டின் அதிகச் செழுமை வாய்ந்த பிரிவுகளுடன் தொடர்பற்றவை ஆக்கப்பட்டு, அவற்றுக்கென்றே நியமிக்கப்பட்ட தொழிலாளர்களின் பிரத்தியேகப் பணிகளாக நிலைப்படுத்தப்படுகின்றன. எனவே, பட்டறைத் தொழிலானது, தான் பற்றுகிற ஒவ்வொரு கைத்தொழிலிலும் தேர்ச்சியற்ற தொழிலாளர்கள் என்று சொல்லப்படும் வகையினரைத் தோற்றுவிக்கிறது; கைத்தொழில் கண்டிப்பான விதத்தில் தவிர்த்து வந்த வகையினர் இவர்கள். பட்டறைத் தொழிலானது மனிதனின் ஒட்டுமொத்தமான வேலைத் திறனுக்குப் பதிலாக, ஒருதரப்பான தனித்திறனை மட்டும் வளர்த்து நிறைவு பெறச் செய்வதோடல்லாமல், வளர்ச்சி என்பதே இல்லாத நிலையையும் ஒரு தனித்திறனாக மாற்றத் தொடங்குகிறது. தரவரிசையோடு கூடவே, தொழிலாளர்களைத் தேர்ச்சி பெற்றோராகவும், தேர்ச்சியற்றோராகவும் பிரிக்கிற சாமானியப் பிரிவினை அடியெடுத்து வைக்கிறது. தேர்ச்சியற்றோருக்குத் தொழில் பழகும்

---

[442] டாக்டர் யூர் நவீன இயந்திரத் தொழில் பற்றிய தன் புகழ்க் காவியத்தில் பட்டறைத் தொழிலின் விசேஷத் தன்மையை முந்தைய பொருளாதார அறிஞர்களை விடவும் கூர்மையான முறையில் புலப்படுத்துகிறார்; இது குறித்து வாதம் புரிவதில் அவ்வறிஞர்கள் இவரைப் போல் அந்த அளவுக்கு அக்கறை கொண்டிருக்கவில்லை. அவரது காலத்தவர்களையும் கூட இதில் அவர் விஞ்சி விடுகிறார். உதாரணமாக, பாபேஜ் கணிதவியல் வல்லுனர் என்ற விதத்திலும் இயந்திரவியல் வல்லுனர் என்ற விதத்திலும் அவரை விட மிகவும் மேம்பட்டவர் என்றாலும், பட்டறைத் தொழிலின் கோணத்திலிருந்து மட்டுமே இயந்திரத் தொழிலை ஆராய்ந்தார். யூர் கூறுகிறார்: ''இப்படி உரித்தாக்குவதுதான்...உரிய மதிப்பும் விலையும் கொண்ட தொழிலாளியை அந்தந்த வேலைக்கும் உரித்தாக்குவதுதான்...இயற்கையான முறையில் ஒதுக்குவதுதான் உழைப்புப் பிரிவினையின் சாராம்சமாகும்.'' மறு புறம், அவர் இந்த உழைப்புப் பிரிவினையையே ''உழைப்பை மனிதர்களின் வெவ்வேறு திறமைகளுக்கேற்பத் தகவமைத்தல்'' என்கிறார். முடிவில், பட்டறைத் தொழில் அமைப்பு முழுவதுமே ''உழைப்பின் பிரிவினை அல்லது தரவரிசைக்கான ஓர் அமைப்பு'' என்றும், ''உழைப்பைத் தேர்ச்சி நிலைகளாகப் பிரித்தல்'' என்றும் குணநிர்ணயம் செய்கிறார்....(யூர், முன் வந்தது, பக்கம் 19-23, பல இடங்கள்.)

செலவு இல்லாமற் போகிறது; தேர்ச்சி பெற்றோருக்கு அவர்களது பணிகள் எளிமையாக்கப்படுவதால் இச்செலவு கைத்திறனாளர்களோடு ஒப்பிடுமிடத்து குறைந்து போகிறது. இரு நேர்வுகளிலுமே உழைப்புச் சக்தியின் மதிப்பு குறைகிறது.[443] இந்த விதிக்கு ஒரு விலக்குண்டு. உழைப்பு நிகழ்முறை கட்டுக்குலைந்து வகைவேறுபாட்டுக்கு உள்ளாகும் போது கைத்தொழில்களில் சற்றும் இடம் பெறாத—அல்லது மிகச் சிறிய இடத்தையே பெற்ற—புதிய, விரிவான பணிகள் தோன்றும் நேர்வுகள் விதிவிலக்காகி விடுகின்றன. தொழில் பழகுதலின் செலவுகள் மறைந்தோ குறைந்தோ போவதால் உழைப்புச் சக்தியின் மதிப்பில் ஏற்படும் வீழ்ச்சி, உபரி-மதிப்பை நேரடியாக அதிகமாக்கி மூலதனத்துக்கு ஆதாயம் கிடைக்கச் செய்கிறது; ஏனெனில் உழைப்புச் சக்தியின் மறுவுற்பத்திக்குத் தேவைப்படும் அவசிய-உழைப்பு நேரத்தைக் குறைக்கிற ஒவ்வொன்றும் உபரி-உழைப்பின் எல்லையை விரிவாக்குகிறது.

## பிரிவு 4.—பட்டறைத் தொழில் உழைப்புப் பிரிவினையும் சமுதாய உழைப்புப் பிரிவினையும்

நாம் முதலில் பட்டறைத் தொழில் தோன்றிய விதத்தையும் பின் அதன் சாமானியக் கூறுகளையும், பின் நுணுக்கத் தொழிலாளி மற்றும் அவரது கருவிகளையும், இறுதியாக இவ்வியங்கமைப்பின் ஒட்டுமொத்தத்தையும் பரிசீலித்தோம். இப்போது நாம் பட்டறைத் தொழில் உழைப்புப் பிரிவினைக்கும், சரக்கு உற்பத்தி முழுவதன் அடித்தளமாக அமைகிற சமுதாய உழைப்புப் பிரிவினைக்கும் இடையிலான உறவை சற்றே கவனிப்போம்.

உழைப்பை மட்டுமே கருத்தில் கொண்டால், நாம் சமுதாயப் பொருளுற்பத்தியை அதன் பிரதானப் பிரிவுகளாக அல்லது பேரினங்களாக—அதாவது வேளாண்மை, தொழில்கள் முதலானவையாக—பிரிப்பதை பொதுப்படையான உழைப்புப் பிரிவினை என்றும், இந்தப் பிரிவுகளை இனங்களாகவும் உள்ளினங்களாகவும் பிரிப்பதை குறிப்பான உழைப்புப் பிரிவினை என்றும், பட்டறைக் குட்பட்ட உழைப்புப் பிரிவினையை சிறப்பு உழைப்புப் பிரிவினை அல்லது நுணுக்க உழைப்புப் பிரிவினை என்றும் அழைக்கலாம்.[444]

---

[443] "ஒவ்வொரு கைவினைஞரும் குறிப்பிட்ட ஓர் அமிசத்தில் நடைமுறை வாயிலாகத் தம்மை செம்மை செய்து கொள்ள முடிவதால் அவர்....இன்னும் விலை மலிவான தொழிலாளியாகிறார்." (யூர், முன் வந்தது, பக்கம் 19.)

[444] "உழைப்புப் பிரிவினையானது செய்தொழில்களின் வேறுபாட்டிலிருந்து தொடங்குகிறது; இந்த வேறுபாடு—ஒரே உற்பத்திப் பொருளின் தயாரிப்பை அநேகத் தொழிலாளர்கள் தம்மிடையே பிரித்துக் கொள்கிற பிரிவினையென்னும் நிலைக்கு,

சமுதாய உழைப்புப் பிரிவினை, அதற்கொப்பத் தனியாட்கள் குறிப்பிட்ட தொழிலோடு பிணைக்கப்பட்டது—பட்டறைத் தொழில் உழைப்புப் பிரிவினையைப் போலவே—எதிரெதிரான தொடக்க நிலைகளிலிருந்து வளர்கிறது. குடும்பத்துக்குள்ளேயே,[445] மேற்கொண்டு வளர்ச்சியடைந்த பின்னர் குலத்துக்குள்ளேயே, பால் மற்றும் வயது வேறுபாடுகளின் காரணத்தால் உழைப்புப் பிரிவினை இயற்கையாகவே பிறக்கிறது; ஆதலால் இப்பிரிவினை முற்றிலும் உடற்கூறு அடிப்படையிலானதாகும்; சமுதாயம் விரிவடைவதன் மூலமும், மக்கள்தொகை பெருகுவதன் மூலமும், இன்னும் முக்கியமாக வெவ்வேறு குலங்களிடையிலான மோதல்கள், ஒரு குலம் இன்னொரு குலத்தை அடிமைப்படுத்துவது ஆகியவற்றின் மூலமும், இப்பிரிவினை மேலும் மேலும் விரிவடைகிறது. மறு புறம், நான் ஏற்கெனவே குறிப்பிட்டது போல, வெவ்வேறு குடும்பங்கள், குலங்கள், சமுதாயங்கள் தொடர்பு கொள்கிற இடங்களில் உற்பத்திப் பண்டங்களின் பரிவர்த்தனை பிறக்கிறது. ஏனெனில் நாகரிகத்தின் ஆரம்ப காலத்தில் சுயேச்சை அந்தஸ்துடன் சந்திப்பது குடும்பங்கள், குலங்கள் போன்றவையே தவிர, தனியாட்களல்லர். வெவ்வேறு சமுதாயங்களுக்கு அவற்றின் இயற்கைச் சுற்றுச் சூழலில் வெவ்வேறு உற்பத்திச் சாதனங்களும், வெவ்வேறு வாழ்வுச் சாதனங்களும் கிடைக்கின்றன. எனவே, அவை உற்பத்தி செய்யும் முறைகளும், அவற்றின் வாழ்க்கை முறைகளும், உற்பத்திப் பண்டங்களும் வெவ்வேறாய் உள்ளன. வெவ்வேறு சமுதாயங்கள் தொடர்பு கொள்ளும் போது உற்பத்திப் பண்டங்களின் பரஸ்பரப் பரிவர்த்தனையை நேரிடச் செய்வதும், அதன் மூலம் அந்த உற்பத்திப் பண்டங்களை சரக்குகளாகப்

---

அதாவது பட்டறைத் தொழிலில் காணும்படியான நிலைக்கு வளர்கிறது.'' (ஸ்டோர்ஷ். ''Cours d'Econ. Pol.,'' பாரிஸ் பதிப்பு, முதல் பாகம், பக்கம் 173.) ''குறிப்பிட்ட அளவு நாகரிகமடைந்து விட்ட மக்கள் சமுதாயங்களில், மூன்று வகை உழைப்புப் பிரிவினைகளைக் காணலாம்: முதலாவதைப் பொது உழைப்புப் பிரிவினை என்போம்; உற்பத்தியாளர்கள் இதன் மூலம் விவசாயிகளாகவும், பட்டறைக்காரர்களாகவும், கடைக்காரர்களாகவும் பிரிகிறார்கள், இந்தப் பிரிவினை நாட்டினது உழைப்பின் முப்பெரும் கிளைகளுக்கு இணையாகிறது. இரண்டாவதைக் குறிப்பான உழைப்புப் பிரிவினை எனலாம்; ஒவ்வோர் உழைப்புக் கிளையும் இதன் மூலம் பல்வேறு வகைகளாய்ப் பிரிகிறது....மூன்றாவதை வேலைப் பிரிவினை, அல்லது அதன் பெயருக்குப் பொருத்தமான உழைப்புப் பிரிவினை என்று குறிப்பிட வேண்டும்; இது தனிப்பட்ட வினைகளிலும் தொழில்களிலும் முளைவிட்டு வளர்கிறது...பெரும்பாலான பட்டறைகளிலும் ஆலைகளிலும் வேர் விடுகிறது.'' (ஸ்கார்பெக், முன் வந்தது, பக்கம் 84,85.)

[445] மூன்றாம் பதிப்புக்கு எங்கெல்ஸ் குறிப்பு.—ஆதியில் குலமாக வளர்ந்தது குடும்பமன்று; மாறாக, இரத்த உறவின் அடிப்படையில் மனிதச் சேர்க்கையின் புராதனமான, தானே வளர்ந்த வடிவமே குலமாகும்; குலப் பிணைப்புக்கள் முதலில் தளர்ச்சியுற்றதிலிருந்தே குடும்பத்தின் பற்பல வடிவங்கள் பின்னர் வளர்ந்து உருவாயின என்ற முடிவையே—மனிதனின் ஆதிகால நிலைமை பற்றி பிற்பாடு நடத்திய தீவிர ஆராய்ச்சியின் பயனாய்—நூலாசிரியர் வந்தடைந்தார்.

பையப்பைய மாற்றமடையச் செய்வதும் தன்னியல்பாய் வளர்ந்த இவ்வேறுபாடே. உற்பத்தித் துறைகளிடையிலான வேறுபாடுகள் பரிவர்த்தனையால் வந்தவையல்ல. பரிவர்த்தனையானது ஏற்கெனவே வேறுபட்டிருப்பவற்றைத்தான் உறவுபடுத்துகிறது; இவ்வாறு அவற்றை ஒரு விரிவடைந்த சமுதாயத்தினுடைய கூட்டு உற்பத்தியின் கிளைகளாக—அதிகமாகவோ குறைவாகவோ ஒன்றையொன்று பின்னிச் சார்ந்து நிற்கும் கிளைகளாக—மாற்றி விடுகிறது. இவ்வாறு, ஆதியில் தனித்தனியாகவும் ஒன்றிலிருந்து ஒன்று சுயேச்சையாகவும் இருந்த உற்பத்தித் துறைகளிடையிலான பரிவர்த்தனையிலிருந்து சமுதாய உழைப்புப் பிரிவினை உதித்தெழுகிறது. மறு புறம், உடற்கூறு வழிபட்ட உழைப்புப் பிரிவினையிலிருந்து தொடங்கும் நேர்வில்—நாம் துவக்கத்தில் குறிப்பிட்ட நேர்வில்—பிரதானமாய் அந்நிய சமுதாயங்களுடனான சரக்குப் பரிவர்த்தனையின் காரணத்தால், ஒன்றித்த முழுமையின் தனி உறுப்புகள் தளர்வடைந்து பிரிந்து போகின்றன; பின், இன்னமும் பல்வேறு வகை வேலைகளையும் இணைத்துள்ள ஒரே பிணைப்பு உற்பத்திப் பண்டங்களைச் சரக்குகளாகப் பரிவர்த்தனை செய்து கொள்வதே என்னும் அளவுக்குத் தனித்தனியாகி விடுகின்றன. ஒரு நேர்வில், முன்பு சுயேச்சையாய் இருந்தது சார்புடையதாக்கப்படுகிறது; மறு நேர்வில், முன்பு சார்புடையதாய் இருந்தது சுயேச்சையானதாக்கப்படுகிறது.

நன்கு வளர்ச்சியடைந்ததும், சரக்குப் பரிவர்த்தனையால் ஏற்படுவதுமான ஒவ்வொரு உழைப்புப் பிரிவினைக்கும் அடித்தளமாயிருப்பது நகரத்துக்கும் கிராமப்புறத்துக்கும் இடையிலான பிரிவினையாகும்.[446] சமுதாயத்தின் பொருளாதார வரலாறு முழுவதும் இந்த எதிர்நிலையின் இயக்கத்தில் தொகுத்தளிக்கப்படுகிறது எனலாம். ஆயினும் தற்போதைக்கு இதை நாம் பரிசீலிக்காமல் விட்டுச் செல்கிறோம்.

ஒருங்கே வேலையில் ஈடுபடுத்தப்படும் குறிப்பிட்ட எண்ணிக்கையிலான தொழிலாளர்கள் பட்டறைத் தொழில் உழைப்புப் பிரிவினைக்கான பொருளாயத முன்தேவைகளாவர் என்பது போலவே, குறிப்பிட்ட மக்கள்தொகையும் ஜனநெருக்கமும் சமுதாய உழைப்புப் பிரிவினைக்கு அவசியமான நிலைமையாகும்.

---

[446] இது குறித்து மிகச் சிறந்த முறையில் பரிசீலனை செய்துள்ள பொருளாதார அறிஞர் சர் ஜேம்ஸ் ஸ்டுவர்ட் ஆவார். இவரது நூல் ''நாடுகளின் செல்வம்'' என்ற நூலுக்குப் பத்தாண்டுகள் முன்னரே வெளிவந்தது. என்றாலும் இந்நூல் இன்றும் கூட பிரபலமாகாமல் இருப்பதைப் பின்வரும் உண்மையிலிருந்தே அறியலாம்; மக்கள் தொகை பற்றி மால்தஸ் எழுதிய நூலின் முதற்பதிப்பில் முற்றிலும் ஆரவாரத் தன்மையுள்ள பகுதியில் தவிர, ஸ்டுவர்ட்டிடமிருந்தும், சற்றுக் குறைந்த அளவுக்கு வாலஸ், டவுன்செண்டு ஆகியோரிடமிருந்தும் எடுக்கப்பட்ட பகுதிகளைத் தவிர அதிகமாய் ஏதுமில்லை என்பது கூட மால்தஸைப் போற்றிப் புகழ்வோருக்குத் தெரியாது.

இங்கே இவை ஒரே பட்டறையில் பலரும் ஒன்றுதிரளுவதற்கு ஒப்பானவை.[447] இந்த. ஜனநெருக்கம் அதிகமாகவோ குறைவாகவோ இருந்த போதிலும் ஒப்பளவானதே. நன்கு வளர்ச்சியடைந்த தொடர்புச் சாதனங்களுடன் கூடிய, ஒப்பளவில் குறைந்த மக்கள்தொகையுள்ள நாடு, நன்கு வளர்ச்சியடையாத தொடர்புச் சாதனங்களுடன் கூடிய, அதிக மக்கள்தொகையுள்ள நாட்டை விட அதிக ஜனநெருக்கமுடையதாகும். இந்த அர்த்தத்தில், எடுத்துக் காட்டாக, அமெரிக்க ஒன்றியத்தின் வட மாநிலங்கள் இந்தியாவை விட அதிகமாக ஜனநெருக்கமுள்ளவையாகும்.[448]

சரக்குகளின் உற்பத்தியும் சுற்றோட்டமும் முதலாளித்துவப் பொருளுற்பத்தி முறையின் பொதுவான முன்தேவைகள் என்பதால், பொதுவான சமுதாய உழைப்புப் பிரிவினை குறிப்பிட்ட வளர்ச்சி நிலையை அடைந்த பிறகுதான் பட்டறைத் தொழில் உழைப்புப் பிரிவினை எழ முடியும். மறுதலையாக பட்டறைத் தொழில் உழைப்புப் பிரிவினை, சமுதாய உழைப்புப் பிரிவினையின் மீது செயல்பட்டு, அதை வளர்த்துப் பெருக்குகிறது. அதே காலத்தில் உழைப்புக் கருவிகளின் வகைவேறுபாட்டுக்கேற்ப, இந்த உழைப்புக் கருவிகளை உற்பத்தி செய்கிற தொழில்கள் மேலும் மேலும் வகைவேறுபாடு அடைகின்றன.[449] முன்னதாக பிரதானத் தொழிலாகவோ அல்லது சார்நிலைத் தொழிலாகவோ ஓர் உற்பத்தியாளரால் இதர தொழில்களுடன் இணைப்பாக நடத்தி வரப்பட்ட ஒரு தொழிலைப் பட்டறையுற்பத்தி முறை பற்றிக் கொண்டால், இந்தத் தொழில்கள் உடனடியாகத் தொடர்பறுந்து போய், சுயேச்சையாகி விடுகின்றன. அது ஒரு சரக்கின் உற்பத்தியில் குறிப்பிட்ட ஒரு கட்டத்தைப் பற்றிக் கொண்டால், அதன் உற்பத்தியின் இதர கட்டங்கள் எல்லாம் அத்தனை சுயேச்சைத் தொழில்களாக மாறி விடுகின்றன. பூர்த்தியான பண்டம் ஒன்றாகப் பொருத்தப்பட்ட பல பாகங்களால் ஆனதாக மட்டும் இருக்குமிடத்து,

---

447 "சமுதாய உறவாடல், உழைப்பின் உற்பத்தி அதிகமாவதற்கு வழி செய்யும் சக்தி-ஒன்றிணைப்பு ஆக இரண்டுக்கும் வசதியான குறிப்பிட்ட அளவு ஜனநெருக்கம் ஒன்று உண்டு." (ஜேம்ஸ் மில், முன் வந்தது, பக்கம் 50.) "தொழிலாளர்களின் எண்ணிக்கை அதிகரிக்க அதிகரிக்க, சமுதாயத்தின் உற்பத்தித் திறன் உழைப்புப் பிரிவினையின் விளைவுகளால் பெருக்கப்படும் அந்த அதிகரிப்பின் கூட்டு விகிதத்தில் விரிவடைகிறது." (தாமஸ் ஹாட்ஸ்கின், முன் வந்தது, பக்கம் 125,126.)

448 1861க்குப் பின்னர் பருத்திக்கு ஏற்பட்ட பெரும் வேண்டலின் பயனாய், இந்தியாவில் ஜனநெருக்கமிக்க சில மாவட்டங்களில் நெற்சாகுபடிக்குக் குந்தகம் செய்யும் விதத்தில் பருத்திச் சாகுபடி விரிவுபடுத்தப்பட்டது. இதன் பயனாய் ஆங்காங்கே பஞ்சங்கள் ஏற்பட்டன; குறைபாடுகள் நிறைந்த போக்குவரத்துச் சாதனங்கள், ஒரு மாவட்டத்தில் நெற்பயிர் பொய்த்ததை, இன்னொரு மாவட்டத்திலிருந்து இறக்குமதி செய்வதன் மூலம் ஈடு செய்வதற்குத் தடையாக இருந்தன.

449 இவ்வாறு, 17ஆம் நூற்றாண்டிலேயே, ஊடுநூல் ஓடங்களைத் தயாரிப்பது ஹாலந்து நாட்டில் தனித் தொழிற்கிளையாக அமைந்தது.

நுணுக்க வேலைகள் உண்மையான, தனித்தனி கைத்தொழில்களாக மீண்டும் நிலைபெறலாம் என்பது ஏற்கெனவே சொல்லப்பட்டிருக் கிறது. பட்டறைத் தொழில் உழைப்புப் பிரிவினையை இன்னும் செம்மையாக நிறைவேற்றும் பொருட்டு, தனியொரு உற்பத்திக் கிளை — அதன் வகைவகையான கச்சாப் பொருளுக்கு அல்லது ஒரே கச்சாப் பொருள் மேற்கொள்ளக் கூடிய பல்வேறு வடிவங்களுக்கு ஏற்ப — ஏராளமான, ஓரளவுக்குப் புத்தம் புதிய பட்டறைத் தொழில் களாக பிரிந்து போகிறது. இவ்விதத்தில் பிரான்சில் மட்டும் 18ஆம் நூற்றாண்டின் முதல் பாதியில், 100க்கும் அதிகமான வெவ்வேறு வகைப் பட்டுத் துணிகள் நெய்யப்பட்டன; அவின்யோனில் ''பழகு தொழிலாளி ஒவ்வொருவரும் ஒரு வகை உருவாக்கப் பயிற்சியில் மட்டும் ஈடுபட வேண்டும்; ஒரே சமயத்தில் பலவகைப் 'பண்டங் களின் தயாரிப்பைக் கற்றுக் கொள்ளக் கூடாது'' என்பது சட்டமாக இருந்தது. உற்பத்தியின் குறிப்பிட்ட கிளைகளை நாட்டின் குறிப் பிட்ட வட்டங்களுக்கு மட்டும் உரியனவாக்கும் பிரதேச உழைப்புப் பிரிவினை, தனிவித அனுகூலம் ஒவ்வொன்றையும் தனக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்ளும் பட்டறைத் தொழில் முறை யிலிருந்து புது ஊக்கம் பெறுகிறது.[450] குடியேற்ற நாடுகள் என்கிற ஏற்பாடும் உலகச் சந்தைகளின் திறப்பும் — இவை இரண்டுமே பட்டறைத் தொழிற் காலத்துக்குரிய பொதுவான நிலைமைகளில் அடங்கும் — சமுதாய உழைப்புப் பிரிவினையின் வளர்ச்சிக்கு ஊட்டமளிக்கின்றன. உழைப்புப் பிரிவினை பொருளாதாரத் துறையை மட்டுமல்லாமல், சமுதாயத்தின் ஒவ்வொரு துறையையும் பற்றிக் கொள்கிறது; மனிதர்களைத் தனித்திறனாளராக்கி வகை பிரித்திடும் அந்த அமைப்பிற்கும் — அனைத்தையும் தன்வசப்படுத் திக் கொள்ளும் அமைப்பு இது — மனிதனின் எல்லாச் சக்திகளையும் விழுங்கி ஒரு சக்தியை மட்டும் ஓங்கச் செய்யும்படியான அந்த வளர்ச்சிக்கும் அது எங்கும் அடித்தளமிடுகிறது. ஆதாம் ஸ்மித்தின் ஆசானாகிய ஆ. ஃபெர்கூசன் இதைக் கண்டுதான் வியந்து கூவினார்: ''நம் நாடு கொத்தடிமைகளால் ஆனதே; சுதந்தரப் பிரஜைகளாய் இருப்போர் யாருமேயில்லை.''[451] ஆயின், இம்

---

[450] ''இங்கிலாந்தில் கம்பளிப் பட்டறைத் தொழில், குறிப்பிட்ட இடங்களுக்கென்று ஒதுக்கப்பட்ட பல பகுதிகள் அல்லது கிளைகளாகப் பிரிக்கப்பட்டிருக்கவில்லையா? அவ்விடங்களில் அவை மட்டுமே உற்பத்தி செய்யப்படுகின்றன, அல்லது அவை பிரதானமாக உற்பத்தி செய்யப்படுகின்றன. சாமர்செட்ஷயரில் நேர்த்தி ரகத் துணிகளும் யார்க்ஷயரில் மோட்டா ரகத் துணிகளும், எக்ஸ்டரில் நீள்வகைத் துண்டுத் துணிகளும், சட்பரியில் சோயிக்களும், நார்விச்சில் கிரேப் துணிகளும், கெண்டாலில் லின்சீக்களும், விட்னீயில் போர்வைத் துணிகளும், இவ்வாறு மேலும் பலவும் உற்பத்தி செய்யப் படுகின்றன.'' (பெர்க்ளி: ''கேள்வியாளர்,'' 1751, § 520.)

[451] ஆ. ஃபெர்கூசன்: ''குடியியல் சமுதாயத்தின் வரலாறு,'' எடின்பரோ, 1767, பகுதி iv., பிரிவு ii., பக்கம் 285.

மாதிரியான வளர்ச்சி எப்படி ஏற்படுகிறது என்பதைப் பரிசீலிப்பதற்கு ஏற்ற இடம் இதுவன்று.

ஆனால், சமுதாயத்திலான உழைப்புப் பிரிவினைக்கும் பட்டறையிலான உழைப்புப் பிரிவினைக்கும் இடையே அவற்றை இணைத்திடும் ஒப்புமைகளும் பிணைப்புகளும் ஏராளமென்றாலும் அவை அளவில் மட்டுமல்லாமல் வகையிலும் வேறுபடுகின்றன. பல்வேறு தொழிற்கிளைகள் கண்ணுக்குத் தெரியாத பிணைப்பால் ஒன்றுபட்டிருக்கையில், இந்த ஒப்புமை சர்ச்சைக்கிடமின்றித் தெளிவாகவே தெரிகிறது. எடுத்துக்காட்டாக, கால்நடை வளர்ப்பாளர் தோல் உற்பத்தி செய்கிறார்; பதனீட்டாளர் தோலைப் பதனிடுகிறார்; பாத அணித் தொழிலாளி பதனிட்ட தோலைப் பாத அணிகளாக்குகிறார். இங்கே அவர்கள் ஒவ்வொருவரும் உற்பத்தி செய்கிற பொருள், அவர்களது ஒன்றிணைந்த உழைப்புகள் அனைத்தின் உற்பத்திப் பொருளாகிய இறுதி வடிவத்தை நோக்கி எடுத்து வைக்கப்படும் ஓர் அடியே ஆகும். இதன்னியில் கால்நடை வளர்ப்பாளருக்கும், தோல் பதனீட்டாளருக்கும், பாத அணித் தொழிலாளிக்கும் உற்பத்திச் சாதனங்களை வழங்குகிற பல்வேறு தொழில்களும் உள்ளன; இப்போது, மேற்கண்ட சமுதாய உழைப்புப் பிரிவினைக்கும் பட்டறைத் தொழில் உழைப்புப் பிரிவினைக்கும் இடையிலான வேறுபாடு அகவயமானதே என்றும், பட்டறைத் தொழிலில் ஏராளமான வேலைகள் ஓரிடத்தில் நடப்பதால் அவை எல்லாவற்றையும் ஒரே நோட்டத்தில் பார்க்க முடிகிறவரின் பார்வையில் மட்டுமே அவ்வேறுபாடு நிலவுகிறது என்றும் ஆதாம் ஸ்மித்தைப் போல் எண்ணிக் கொள்வது சாத்தியமே;[452] ஆனால், மேற்கண்ட எடுத்துக்காட்டில், பெரும் பரப்புகளில் வேலை பரவிக் கிடப்பதும், ஒவ்வொரு உழைப்புக் கிளையிலும் ஈடுபடுத்தப்

---

[452] முறையான பட்டறைத் தொழிலில் உழைப்புப் பிரிவினை கூடுதலாயிருப்பதாகத் தோன்றுகிறது. ஏனெனில் "வெவ்வேறான வேலைக் கிளை ஒவ்வொன்றிலும் வேலையில் ஈடுபடுத்தப்படுவோர் ஒரே சமயத்தில், அடிக்கடி ஒரே தொழிற் கூடத்தில் பார்வையாளருக்குத் தெரியும் படி திரட்டப்பட முடிகிறது. மாறாக, பெரும் மக்கள் தொகுதியின் பெரும் தேவைகளை வழங்க விதிக்கப்பட்டுள்ள மாபெரும் பட்டறைத் தொழில்களில் (!) ஒரே தொழிற் கூடத்தினுள் அனைவரையும் திரட்டுவது முடியாத காரியம் என்னும் அளவுக்கு, ஒவ்வொரு வேலைக் கிளையும் பெரும் எண்ணிக்கையிலான தொழிலாளர்களை வேலை வாங்குகிறது...ஆகவே, இவற்றில் உழைப்புப் பிரிவினை அந்த அளவுக்கு வெளிப்படையாக இல்லை." (ஆ. ஸ்மித்: "நாடுகளின் செல்வம்," புத்தகம் i., அத்தியாயம் i.) அதே அத்தியாயத்தில், "நாகரிகமும் செல்வமும் வாய்ந்த ஒரு நாட்டில் மிகச் சாதாரணமான கைத்திறனாளர் அல்லது தினக் கூலித் தொழிலாளி வசிக்கும் இடத்தைப் பாருங்கள்" என்ற வார்த்தைகளுடன் ஆரம்பித்து, பின் ஒரு சாதாரணத் தொழிலாளியின் தேவைகளை நிறைவு செய்வதில் பெரும் எண்ணிக்கையிலான, வகைவகையான தொழில்களின் பங்கு என்ன என்பதைச் சித்திரிக்க முனைகிற புகழ் மிக்க பகுதி, அநேகமாக வார்த்தைக்கு வார்த்தை, பெ. டெ. மாண்டெவில் "தேனீக்களின் கதை, அல்லது தனியார்க் கேடுகளும், பொது நன்மைகளும்" என்ற அவரது நூலுக்கு எழுதிய குறிப்புகளிலிருந்து எடுக்கப்பட்டதாகும். (முதற் பதிப்பு, குறிப்புகளின்றி, 1706; குறிப்புகளுடன், 1714.)

படுவோரின் பெரும் எண்ணிக்கையும் அந்தப் பல்வேறு வேலைகளுக்கு இடையிலான தொடர்பைக் கண்ணிற்படாமல் மறைக்கின்றன. ஆனால், கால்நடை வளர்ப்பாளர், தோல் பதனீட்டாளர், பாத அணித் தொழிலாளி ஆகியோரின் சுயேச்சையான உழைப்புகளிடையே பிணைப்பாக அமைவது எது? முறையே அவர்கள் ஒவ்வொருவரது உற்பத்திப் பொருட்களும் சரக்காகும் என்பதே. மறு புறம், பட்டறைத் தொழில் உழைப்புப் பிரிவினையின் சிறப்பியல்பாய் அமைவது எது? நுணுக்கத் தொழிலாளி எவ்விதமான சரக்கையும் உற்பத்தி செய்வதில்லை என்பதே.[453] நுணுக்கத் தொழிலாளர்கள் அனைவரதும் பொதுவான உற்பத்திப் பொருள்தான் சரக்காகிறது.[454] சமுதாய உழைப்புப் பிரிவினை என்பது வெவ்வேறு தொழிற்கிளைகளின் உற்பத்திப் பொருட்களை வாங்குவதாலும் விற்பதாலும் ஏற்படுவதாகும். பட்டறையில் நுணுக்க வேலைகளிடையிலான தொடர்போ, பல்வேறு தொழிலாளர்களின் உழைப்புச் சக்தி ஒரு முதலாளிக்கு விற்கப்பட்டு, அதை அவர் ஒன்றிணைந்த உழைப்புச் சக்தியாகப் பிரயோகிப்பதன் விளைவாகும். பட்டறையிலான உழைப்புப் பிரிவினை ஒரு முதலாளியின் கையில் உற்பத்திச் சாதனங்கள் ஒன்றுகுவிவதைக்

---

[453] ''முன்போல் தனியாளது உழைப்பின் இயற்கையான சன்மானம் என நாம் அழைக்கக் கூடியது இப்போது ஏதும் இல்லை. ஒவ்வொரு தொழிலாளியும் ஒரு முழுமையின் ஏதேனும் ஒரு பகுதியையே உற்பத்தி செய்கிறார்; ஒவ்வொரு பகுதியும் தன்னளவில் மதிப்புள்ளதாகவோ அல்லது பயன்பாடுள்ளதாகவோ இல்லாத நிலையில், தொழிலாளி எதையும் சுட்டிக்காட்டி, இது என் உற்பத்திப் பொருள், இதை எனக்கே வைத்துக் கொள்வேன் என்று சொல்வதற்கில்லை.'' (''மூலதனம் பாராட்டும் உரிமைகளுக்கெதிராக உழைப்புக்குப் பாதுகாப்பு'' லண்டன், 1825, பக்கம் 25.) இந்த போற்றத்தக்க நூலின் ஆசிரியர் ஏற்கெனவே நான் குறிப்பிட்ட தாமஸ் ஹாட்ஸ்கின் என்பவரே.

[454] சமுதாய உழைப்புப் பிரிவினைக்கும் பட்டறைத் தொழில் உழைப்புப் பிரிவினைக்கும் இடையிலான இந்த வேறுபாடு நடைமுறையின் வாயிலாக யாங்கிகளுக்கு விளக்கப்பட்டது. உள்நாட்டு யுத்தத்தின் போது வாஷிங்டனில் விதிக்கப்பட்ட புதிய வரிகளில் ஒன்று ''அனைத்துத் தொழில் உற்பத்திப் பொருட்களின் மீதும்'' 6% சுங்க வரி என்பதாகும். கேள்வி: தொழில் உற்பத்திப் பொருள் என்பது என்ன? சட்டப் பேரவையின் பதில்: ஒரு பொருள் ''தயாரானதும்'' அது உற்பத்தி பொருளாகிறது; அது விற்பனைக்கு வரும் நிலையை அடைந்ததும் தயாரானது ஆகிறது. இப்போது பலவற்றிலிருந்து ஓர் உதாரணம்: நியூயார்க் மற்றும் ஃபிலடெல்ஃபியாத் தொழிலதிபர்கள் முன்பெல்லாம் தங்களுக்குச் சொந்தமானவற்றையே கொண்டு குடைகள் ''தயாரித்து'' வந்தனர். ஆனால், குடை பலபடித்தான பாகங்களின் 'கலப்பு இணைவு' என்பதால், இந்தப் பாகங்கள், படிப்படியாக, வெவ்வேறு இடங்களில் சுயேச்சையாக நடத்தப்படும் பல்வேறு தனித்தனித் தொழில்களின் உற்பத்திப் பொருட்களாயின. தனித்தனி சரக்குகளாக அவை குடையுற்பத்திப் பட்டறையினுள் நுழைந்து, அங்கே ஒன்றாக பொருத்தப்பட்டன. இவ்வாறு ஒன்றாகப் பொருத்தப்பட்ட பண்டங்களுக்கு யாங்கிகள் ''கோத்து இணைத்த பண்டங்கள்'' என்று பெயர் சூட்டினர். வரிகளின் கோத்திணைப்பு என்பதால் அவற்றுக்கு இது பொருத்தமான பெயர். எப்படியெனில், குடையானது முதலில் அதன் கூறுகள் ஒவ்வொன்றின் விலையின் மீதான 6 சதவீதத்தையும், மேற்கொண்டு அதன் முழு விலையின் மீதான 6 சதவீதத்தையும் ''கோத்து இணைக்கிறது.''

குறிக்கிறது; சமுதாயத்திலான உழைப்புப் பிரிவினை பல சுயேச்சை யான சரக்கு உற்பத்தியாளர்கள் மத்தியில் அவை பிரிந்து போவதைக் குறிக்கிறது. பட்டறையினுள்ளே, குறிப்பிட்ட எண்ணிக்கையிலான தொழிலாளர்களைக் குறிப்பிட்ட பணிகளுக்கு உட்படுத்துவது கண்டிப்பான உறுதி வாய்ந்த விகிதாசார விதியின்படி நடந்தேறுகிற அதே போழ்தில், பட்டறைக்கு வெளியே சமுதாயத்திலோ, பல் வேறு தொழிற் கிளைகளிடையே உற்பத்தியாளர்களையும், அவர் களது உற்பத்திச் சாதனங்களையும் பங்கீடு செய்வது முழுக்க முழுக்க சந்தர்ப்ப வசத்தின் படியும் சபல புத்தியின் படியும் நடந் தேறுகிறது. வெவ்வேறு உற்பத்தித் துறைகளும் இடைவிடாமல் சம நிலையை நாடும் போக்கைக் கொண்டுள்ளன என்பது மெய்தான். ஏனெனில், ஒரு புறம், சரக்கை உற்பத்தி செய்கிற ஒவ்வொருவரும் பயன்-மதிப்பை உற்பத்தி செய்தாக வேண்டும், குறிப்பிட்ட சமுதாயத் தேவையை நிறைவு செய்தாக வேண்டும் என்னும் அதே நேரத்தில், இந்தத் தேவைகளின் அளவு வேறுபடுகிறது என்னும் அதே நேரத்தில், அவற்றின் விகிதாசாரங்களை முறைப்பாடுள்ள அமைப்பாக நிலைபெறச் செய்கிற உள்ளுறவும் நிலவவே செய் கிறது; அந்த அமைப்பு தன்னியல்பான வளர்ச்சியின் அமைப் பாகும்; மறு புறம், சமுதாயம் தனக்குள்ள பயன்படுத்தத்தக்க வேலை நேரத்தில் எவ்வளவு நேரத்தை சரக்குகளின் ஒவ்வொரு குறிப்பிட்ட வகைக்காகவும் செலவிட முடியும் என்பதைச் சரக்கு களது மதிப்பின் விதி இறுதியாக நிர்ணயிக்கிறது. ஆனால் பல்வேறு உற்பத்தித் துறைகள் இப்படி இடைவிடாமல் சமநிலையை நாடும் போக்கானது, இச்சமநிலை இடைவிடாமல் குலைக்கப்படுவதற்கு எதிரான மறுவினையின் வடிவில்தான் செயல்படுகிறது. பட்டறை யிலான உழைப்புப் பிரிவினையில், வருவது அறிந்து முன்கூட்டியே புனையப்படும் திட்டத்தின் படி யாவும் முறையாக நடைபெறு கின்றன. ஆனால், சமுதாயத்திலான உழைப்புப் பிரிவினையில், இதற்கு மாறாக, இயற்கையால் விதிக்கப்பட்டு பிற்பாடே தெரிய வரும் அவசியமானது உற்பத்தியாளர்களது நியதியற்ற சபலங் களைக் கட்டுப்படுத்தி ஆளுகிறது. சந்தை விலைகள் என்னும் பாரமானிப் பதிவுகளின் ஏற்ற இறக்கங்களாக இந்த அவசியம் வெளிப்படுகிறது. பட்டறையிலான உழைப்புப் பிரிவினை ஆட்கள் மீது முதலாளிக்குள்ள மறுப்புக்கிடமற்ற அதிகாரத்தை குறிக்கிறது; இவ்வாட்கள் முதலாளிக்குச் சொந்தமான இயங்கமைப்பின் பாகங் களாகி விடுகின்றனர். சமுதாயத்திலான உழைப்புப் பிரிவினை சுயேச்சையாகச் செயல்படும் சரக்கு உற்பத்தியாளர்களை தொடர்பு பெறச் செய்கிறது. இந்த உற்பத்தியாளர்கள் போட்டியின் அதி காரத்தைத் தவிர, தமது பரஸ்பர நலன்கள் நெருக்குவதால் ஏற்படும் நிர்ப்பந்தத்தின் அதிகாரத்தைத் தவிர வேறு எந்த அதிகாரத்தையும் ஒப்புக் கொள்வதில்லை. மிருகங்களின் உலகில் bellum omnium

contra omnes* என்பது ஒவ்வொரு ஜீவராசியின் ஜீவிதத்துக்குமான நிலைமைகளைப் பெருமளவுக்கு நிலைநிறுத்துவதைப் போன்றதே இது. பட்டறையில் உழைப்புப் பிரிவினையும், தொழிலாளியை ஒரு பகுதி-வேலையோடு ஆயுள் பரியந்தம் பிணைத்துவிடுவதும், அவரை மூலதனத்துக்கு முழுமையாகக் கீழ்ப்படுத்துவதும் உழைப்பை ஒழுங்கமைப்பதாகும் என்றும், இந்த ஒழுங்கமைப்பு உழைப்பின் உற்பத்தித் திறனை உயர்த்துகிறது என்றும் முதலாளித்துவ சிந்தனை போற்றிப் புகழ்கிறது. இதே முதலாளித்துவ சிந்தனை, உற்பத்தி நிகழ்முறையைச் சமுதாய வழியில் கட்டுப்படுத்தி ஒழுங்கியக்குவதற்கு உணர்வுபூர்வமாய்ச் செய்யப்படும் ஒவ்வொரு முயற்சியையும், சொத்துரிமைகள், தனிப்பட்ட முதலாளியின் முனைவு தங்கு தடையின்றி சுதந்தரமாகச் செயல்படும் வாய்ப்பு போன்ற புனிதங்கள் மீதான தாக்குதல் என்று சொல்லி அதே அளவு வேகத்துடன் கண்டிக்கிறது. இதில் குறிப்பிடத்தக்கது என்னவென்றால், ஆலைத்தொழிலை [factory system] ஆர்வத்துடன் ஆதரிப்போர் சமுதாயத்தின் உழைப்பைப் பொதுப்பட ஒழுங்கமைப்பதை எதிர்த்து நிந்தனையாகச் சொல்லக் கூடியதெல்லாம், இந்த ஒழுங்கமைப்பு சமுதாயம் முழுவதையும் ஒரு பெரும் தொழிற்சாலையாக மாற்றி விடும் என்பதற்கு மேல் ஒன்றுமில்லை.

முதலாளித்துவப் பொருளுற்பத்தியைக் கொண்ட சமுதாயத்தில் சமுதாய உழைப்புப் பிரிவினையில் அராஜகமும், பட்டறை உழைப்புப் பிரிவினையில் கொடுங்கோன்மையும் ஒன்றுக்கொன்று முன்னிபந்தனையாகின்றன. இதற்கு மாறாக, தொழில்களின் பிரிவினை தன்னியல்பாக வளர்ந்து, பின் திடப்பட்டு, இறுதியாகச் சட்டத்தால் நிரந்தரமாக்கப்பட்டிருக்கும் முந்தைய சமுதாய வடிவங்களில், ஒரு புறம், அங்கீகரிக்கப்பட்ட, அதிகாரபூர்வமான திட்டத்துக்கேற்ப சமுதாய உழைப்பு ஒழுங்கமைக்கப்படுவதற்கான முன்மாதிரியைக் காண்கிறோம்; மறு புறம், பட்டறை உழைப்புப் பிரிவினை அறவே தவிர்க்கப்படுவதை, அல்லது எப்படியும் அவ்வுழைப்புப் பிரிவினை சிறுத்ததாகவோ சிதறலாகவோ உள்ள தற்செயலான வளர்ச்சியையே காண்கிறோம்.[455]

அந்தச் சிறிய, மிகவும் புராதனமான இந்திய கிராம சமுதாயங்கள்—அவற்றில் சில இன்று வரை நீடித்துள்ளன—நிலத்தைப்

---

455 "இதை...ஒரு பொது விதியாகவே வகுத்துரைக்கலாம்: அதிகாரத்தைக் கொண்டு சமுதாயத்தில் உழைப்புப் பிரிவினையை விதிப்பது எவ்வளவுக்கு எவ்வளவு குறைவாய் இருக்கிறதோ, பட்டறைக்குள் உழைப்புப் பிரிவினை அவ்வளவுக்கு அவ்வளவு அதிகமாய் வளர்கிறது; அங்கே தனியொருவரின் அதிகாரத்துக்கு அவ்வளவுக்கு அவ்வளவு அதிகமாய் உட்படுத்தப்படுகிறது. உழைப்புப் பிரிவினையைப் பொறுத்தவரை, பட்டறையிலான அதிகாரமும் சமுதாயத்திலான அதிகாரமும் இவ்விதம் ஒன்றுக்கொன்று எதிர் விகிதத்தில் இருக்கின்றன. (கார்ல் மார்க்ஸ், "தத்துவத்தின் வறுமை," பக்கம் 130-131.)

---

* யாவற்றையும் எதிர்த்து யாவும் நடத்தும் போர்.

பொதுவில் வைத்திருப்பதையும், பயிர்த் தொழில், கைத்தொழில்கள் ஆகியவற்றின் ஒன்றுகலத்தலையும், மாற்றமில்லாத உழைப்புப் பிரிவினையையும் அடிப்படையாகக் கொண்டவையாகும்; ஒரு புதிய சமுதாயம் அமைக்கப்படும் போதெல்லாம், இவ்வுழைப்புப் பிரிவினை தயாராக வரைந்து வைத்துள்ள வரைபடத் திட்டமாகப் பயன்படுகிறது. 100 முதல் பல்லாயிரம் வரையிலான ஏக்கர் பரப்பளவு கொண்ட ஒவ்வொரு சமுதாயமும் தனக்குத் தேவையான அனைத்தையும் உற்பத்தி செய்து கொள்கிற கச்சிதமான முழுமையாக அமைகிறது. உற்பத்திப் பண்டங்களில் ஆகப் பெரும் பகுதி சமுதாயத்தின் நேரடி உபயோகத்துக்கு உரியதாகும். அது சரக்காக வடிவம் பெறுவதில்லை. ஆகவே இங்கே உற்பத்தியானது, இந்திய சமுதாய முழுமையிலும், சரக்குப் பரிவர்த்தனையால் ஏற்படும் உழைப்புப் பிரிவினையைச் சார்ந்ததல்ல. உபரி மட்டுமே சரக்காகிறது. அதிலும் கூட ஒரு பகுதி அரசின் கைக்குப் போய்ச் சேரும் வரை சரக்காவதில்லை; நினைவுக்கெட்டாத காலம் தொட்டு இவ்வுற்பத்திப் பண்டங்களின் ஒரு குறிப்பிட்ட அளவு பண்ட வடிவ நில வாரமாக [rent in kind] அரசின் கைக்குப் போய்ச் சேர்ந்துள்ளது. இந்தக் கிராம சமுதாயங்களின் அமைப்பு முறை இந்தியாவின் வெவ்வேறு பகுதிகளிலும் மாறுபடுகிறது. சாமானிய வடிவமுடைய சமுதாயங்களில், நிலம் பொதுவில் உழப்பட்டு, விளைச்சல் சமுதாய உறுப்பினர்களிடையே பங்கிட்டுக் கொள்ளப்படுகிறது. அதே சமயத்தில் நூற்பும் நெசவும் ஒவ்வொரு குடும்பத்திலும் துணைத்தொழில்களாக நடத்தப்படுகின்றன. இவ்வாறு ஒரே வேலையில் ஈடுபட்டுள்ள வெகு ஜனங்களின் பக்கத்திலேயே தானே நீதிபதியாகவும், போலீஸ்காரராகவும் வரி வசூலிப்பவராகவும் இருக்கிற "ஊர்த் தலைவரையும்," உழவுக் கணக்குகளை வைத்திருப்பவரும் அது தொடர்பான சகலத்தையும் பதிவு செய்பவருமான கணக்கப்பிள்ளையையும், குற்றவாளிகள் மீது வழக்கு தொடர்பவரும், வழிப்பயணம் செய்கிற அயலார்களைப் பாதுகாப்பவரும் அவர்கள் அடுத்த கிராமத்துக்குப் போவதற்கு வழித் துணையாகச் செல்பவருமான இன்னொரு அலுவலரையும், அண்டைச் சமுதாயங்களிடமிருந்து எல்லைகளைக் காக்கிற எல்லைக் காவலரையும், பொதுக் குளங்களிலிருந்து பாசனத்துக்காக நீர் பங்கிடுகிற நீர்வளக் கங்காணியையும், மதச் சடங்குகளை நடத்தி வைக்கிற அந்தணரையும், குழந்தைகளுக்கு எழுதப் படிக்க மணலில் கற்றுக் கொடுக்கிற பள்ளி ஆசிரியரையும், விதைப்பதற்கும் அறுப்பதற்கும் சகல விவசாய வேலைகளுக்கும் நல்ல நாள், கெட்ட நாள் பார்த்துச் சொல்கிற பஞ்சாங்கப் பிராமணர் அல்லது ஜோதிடரையும், விவசாயக் கருவிகள் அனைத்தையும் செய்து கொடுக்கிற, பழுது பார்க்கிற கொல்லரையும், தச்சரையும், கிராமத்திற்கான மண்பாண்டங்கள் அனைத்தையும் செய்து கொடுக்கிற குயவரையும்,

நாவிதரையும், துணிகளை வெளுக்கிற சலவைத் தொழிலாளியையும், தட்டாரையும், இங்குமங்குமாகச் சில சமுதாயங்களில் தட்டாரின் இடத்தையும் மற்றவற்றில் பள்ளி ஆசிரியரின் இடத்தையும் வகிக்கிற புலவரையும் காண்கிறோம். இந்தப் பத்துப் பன்னிரண்டு ஆட்களும் சமுதாய முழுமையின் செலவில் பராமரிக்கப் படுகின்றனர். மக்கள்தொகை பெருகினால் ஒரு புதிய கிராம சமுதாயம் பழையதை முன்மாதிரியாகக் கொண்டு குடிவசமாகாத நிலப்பரப்பில் நிறுவப்படுகிறது. இவ்வியங்கமைப்பு முழுவதும் முறைப்படியான உழைப்புப் பிரிவினையைக் கொண்டது. ஆனால் பட்டறைத் தொழிலில் இருப்பதை ஒத்த உழைப்புப் பிரிவினை இங்கு சாத்தியமன்று; ஏனெனில் கொல்லருக்கும் தச்சருக்கும் மற்றவர்களுக்கும் மாற்றத்துக்கு இடமில்லாத சந்தை கிடைக்கிறது; அதிகபட்சமாக கிராமங்களின் அளவைப் பொறுத்து, ஒவ்வொரு வகையிலும் ஒருவருக்கு பதில் இருவர் அல்லது மூவர் இருப்பதுண்டு.[456] ஒவ்வொரு தனிப்பட்ட கைத்திறனாளரும், கொல்லரும், தச்சரும், மற்றவர்களும் தத்தம் கைத்தொழிலின் வேலைகள் அனைத்தையும் தம் பட்டறையில் பரம்பரை வழியில், ஆனால் சுயேச்சையாகவும் தம் மீது எந்த அதிகாரத்தையும் ஒப்புக் கொள்ளாமலும், நடத்துகிற அதே நேரத்தில், சமுதாயத்தில் உழைப்புப் பிரிவினையை முறைப்படுத்துகிற விதி இயற்கை விதிக்குரிய தடுத்து நிறுத்த முடியாத அதிகாரத்துடன் செயல்படுகிறது. இந்தத் தன்னிறைவுச் சமுதாயங்கள் அதே வடிவில் தம்மை ஓயாது படைத்துக் கொள்கின்றன; தற்செயலாக அழிக்கப்பட்டு விடும் போது அதே இடத்தில் அதே பெயருடன் மீண்டும் துளிர்த்தெழுகின்றன.[457] இந்தச் சமுதாயங்களில் உற்பத்தி ஒழுங்கமைப்பின் எளிமையானது ஆசியவழிச் சமுதாயங்கள் மாற்றமின்றி அப்படியே இருப்பதன் இரகசியத்தை அறிவதற்கான திறவுகோலாகும். ஆசிய அரசுகள் இடையறாது சிதைவதற்கும், மீண்டும் நிறுவப்படுவதற்கும், ஓயாத

---

[456] லெஃப்டினண்ட்-கர்னல் மார்க் வில்க்ஸ்: "தென்னிந்தியா பற்றிய சுருக்கமான வரலாற்றுச் சித்திரிப்புகள்," லண்டன், 1810-17, முதல் பாகம், பக்கம் 118-20. இந்திய கிராம சமுதாயங்களின் பல்வேறு வடிவங்கள் பற்றிய நல்லதொரு சித்திரம் காணப்படும் நூல்: ஜார்ஜ் கேம்பெல்லின் "நவீன கால இந்தியா," லண்டன், 1852.

[457] இந்த சாமானிய வடிவத்தில்....நாட்டின் குடிகள் நினைவுக்கெட்டாத காலம் தொட்டு வாழ்ந்து வந்துள்ளனர். கிராமங்களின் எல்லைகள் அபூர்வமாகவே மாற்றப்பட்டுள்ளன; யுத்தத்தாலும் பஞ்சத்தாலும் நோயாலும் கிராமங்கள் சில நேரங்களில் கேடுற்றும், ஏன், பாழாகியும் கூட உள்ளன என்ற போதிலும், அதே பெயர், அதே எல்லைகள், அதே நலன்கள், ஏன், அதே குடும்பங்கள் காலங்காலமாக நீடித்து வந்துள்ளன. முடியரசுகளின் பிரிவினை பற்றியெல்லாம் குடிகள் கவலைப்படுவதில்லை; கிராமம் முழுதாகவே இருந்து வருகையில், அது எந்த ஆட்சிக்கு மாற்றப்படுகிறது, அல்லது எக்குடையின் கீழ் வருகிறது என்பது பற்றி அவர்களுக்கு அக்கறை இல்லை. அதன் உட்பொருளாதாரம் மாற்றமின்றியே நீடிக்கிறது." (தாமஸ் ஸ்தாம்ஃபோர்டு ராஃபிள்ஸ், காலஞ்சென்ற ஜாவா லெஃப்படினண்ட் கவர்னர்: "ஜாவாவின் சரித்திரம்." லண்டன், 1817, முதல் பாகம், பக்கம் 285.)

அரசவம்ச மாற்றங்களுக்கும் நேர் எதிரானதாகக் கண்ணிற்படுகிறது இந்த மாற்றமின்மை. சமுதாயத்தின் பொருளாதாரக் கூறுகளது வடிவமைப்பு அரசியல் வானத்தில் சீறியெழும் புயல்மேகங்களால் பாதிப்புறாமல் அப்படியே இருந்து வருகிறது.

நான் முன்னர் கூறியிருப்பது போலவே, கைவினைச் சங்கங் களின் விதிகள், தனியொரு ஆண்டான் வேலை வாங்கக் கூடிய பழகு தொழிலாளர்கள், பணியாளர்கள் [journey men] ஆகி யோரின் எண்ணிக்கைக்குக் கறாராக வரம்பிட்டதன் மூலம் அந்த ஆண்டானை முதலாளியாக மாற விடாமல் தடுத்தன. மேலும், தான் ஆண்டானாக உள்ள கைத்தொழில் தவிர வேறெந்தக் கைத்தொழிலிலும் தன் பணியாளர்களை அவர் வேலையில் ஈடுபடுத்த முடியாது. கைவினைச் சங்கங்கள் அவற்றின் எதிரில் நின்ற சுதந்தர மூலதனத்தின் ஒரே வடிவமான வணிக மூலதனத் தின் ஒவ்வொரு படையெடுப்பையும் தயங்காமல் உடனுக்குடன் முறியடித்தன. வியாபாரி எந்த வகைச் சரக்கையும் வாங்கலாம்; ஆனால் உழைப்பை சரக்காக வாங்க முடியாது. அவர் கைத் தொழில் உற்பத்திப் பண்டங்களை வாங்கி விற்பதற்கு மட்டுமே அனுமதிக்கப்பட்டார். மேலும், உழைப்புப் பிரிவினையை நிலை மைகள் கோரினால், இருக்கிற கைவினைச் சங்கங்கள் வகை வகையாகத் தம்மைப் பிரித்துக் கொண்டன, அல்லது பழையவற்றின் பக்கத்திலேயே புதிய கைவினைச் சங்கங்களை நிறுவின. ஆயினும் ஒரே பட்டறையில் பல்வேறு கைத்தொழில்களை ஒன்றுகுவிக் காமலே இதெல்லாம் நடந்தது. எனவே, கைவினைச் சங்க ஒழுங் கமைப்பு கைத்தொழில்களைப் பிரித்து, தனித்தனியாக்கி, செம் மைப்படுத்தியதன் மூலம் பட்டறைத் தொழில் நடப்பதற்கான பொருளாயத நிலைமைகளைத் தோற்றுவிப்பதற்குப் பெரிய அளவில் பங்காற்றியதென்றாலும் பட்டறையில் உழைப்புப் பிரிவினைக்கு இடம் தரவேயில்லை. நத்தை அதன் கூட்டுடன் இறுகப் பிணைக்கப் பட்டிருப்பது போல தொழிலாளி மொத்தத்தில் அவரது உற்பத்திச் சாதனங்களுடன் இறுகப் பிணைக்கப்பட்டவராகவே இருந்தார். இவ்வாறு தொழிலாளியை அவரது உற்பத்திச் சாதனங்களிட மிருந்து பிரித்து அச்சாதனங்களை மூலதனமாக மாற்ற முடியாத தால், பட்டறைத் தொழிலுக்கான பிரதான அடித்தளம் இல்லாது போயிற்று.

பொதுவான சமுதாய உழைப்புப் பிரிவினை, இப்பிரிவினை ஏற்படுவது சரக்குகளின் பரிவர்த்தனையால் ஆனாலும், அல்ல வென்றாலும் சமுதாயத்தின் மிகப் பலவாறான பொருளாதார அமைப்புகளுக்குப் பொதுவானதாய் இருக்க, பட்டறையிலான உழைப்புப் பிரிவினை, அது பட்டறைத் தொழிலில் நடைமுறை யிலிருக்கும் வடிவில், முழுக்க முழுக்க முதலாளித்துவப் பொருளுற் பத்தி முறையின் தனிப் படைப்பாகும்.

## பிரிவு 5.—பட்டறைத் தொழிலின் முதலாளித்துவத் தன்மை.

ஒரு முதலாளியின் கட்டுப்பாட்டில் அதிக எண்ணிக்கையிலான தொழிலாளர்கள் இருப்பது, பொதுவாகக் கூட்டு-வேலைக்கும் குறிப்பாக பட்டறைத் தொழிலுக்கும் இயற்கையான தொடக்க நிலை ஆகும். ஆனால், பட்டறைத் தொழில் உழைப்புப் பிரிவினை தொழிலாளர்களின் எண்ணிக்கையிலான இந்த அதிகரிப்பை ஒரு தொழில் நுட்ப அவசியமாக்கி விடுகிறது. குறிப்பிட்ட எந்த முதலாளியும் கட்டாயம் வேலைக்கமர்த்த வேண்டிய குறைந்தபட்ச எண்ணிக்கை, இங்கே, முன்னதாக நிறுவப்பட்ட உழைப்புப் பிரிவினையால் நிர்ணயிக்கப்படுகிறது. மறு புறம், மேலும் உழைப்புப் பிரிவினை செய்து அனுகூலமடைய வேண்டுமானால், தொழிலாளர்களின் எண்ணிக்கையை அதிகமாக்க வேண்டும். இந்த எண்ணிக்கை அதிகரிப்பு பல்வேறு நுணுக்கக் குழுக்களையும் சேர்ந்த தொழிலாளர்களது எண்ணிக்கையின் பெருக்குத் தொகையாய் இருத்தல் வேண்டும். ஆனால், ஈடுபடுத்தப்படும் மூலதனத்தின் மாறும் கூறு அதிகமானால் அதன் மாறாக் கூறும்—பட்டறைகள், கருவிகள் போன்றவையும் குறிப்பாகக் கச்சாப் பொருளும்—அதிகமாவது அவசியமாகிறது. கச்சாப் பொருளுக்கான தேவை தொழிலாளர்களின் எண்ணிக்கையை விட விரைவாய் அதிகமாகிறது. குறிப்பிட்ட காலத்தில் குறிப்பிட்ட அளவு உழைப்பால் நுகரப்படும் கச்சாப் பொருளின் அளவு அந்த உழைப்பின் உற்பத்தித் திறன் உழைப்புப் பிரிவினையின் பயனாய் அதிகமாகும் அதே விகிதத்தில் அதிகமாகிறது. ஆகவே, ஒவ்வொரு முதலாளியின் கையிலும் கட்டாயம் இருக்க வேண்டிய குறைந்தபட்ச மூலதன அளவு மேலும் மேலும் அதிகரித்துக் கொண்டே இருக்க வேண்டும்; அதாவது, சமுதாய உற்பத்திச் சாதனங்களும் வாழ்வுச் சாதனங்களும் மூலதனமாக மாற்றமடையும் நிகழ்வு மேலும் மேலும் விரிவடைந்து கொண்டே இருக்க வேண்டும். இது பட்டறைத் தொழிலின் இயல்பிலிருந்தே உதித்தெழும் விதியாகும்.[458]

---

458 "கைத்தொழில்களின் உட்பிரிவினைக்கு அவசியமான மூலதனம்" (அவசியமான வாழ்வுச் சாதனங்களும் உற்பத்திச் சாதனங்களும் என்று இந்த எழுத்தாளர் சொல்லியிருக்க வேண்டும்) "சமுதாயத்தில் தயார்நிலையில் இருந்தால் மட்டும் போதாது. பட்டறையதிபர்கள் உற்பத்தி வேலைகளைப் பெருவீதத்தில் நடத்துவதற்குப் போதுமான பெரிய அளவுகளில் அது அவர்கள் கையில் திரண்டிருக்கவும் வேண்டும்.... உழைப்புப் பிரிவினை பெருகப் பெருக, குறிப்பிட்ட எண்ணிக்கையிலான தொழிலாளர்களைத் தொடர்ந்து வேலையில் ஈடுபடுத்துவதற்கு கருவிகள், கச்சாப் பொருள் போன்றவற்றில் மேலும் மேலும் முதலீடு அவசியமாகிறது." (ஸ்டோர்ஹ்: "Cours d'Econ. Pol.," பாரிஸ் பதிப்பு, முதல் பாகம், பக்கம் 250, 251.) "எப்படி அரசியல் துறையில் அரசு அதிகாரத்தின் குவிப்பையும் தனி நலன்களின் பிரிவினையையும் ஒன்றிலிருந்து ஒன்று பிரிக்க முடியாதோ, அதே போல் உற்பத்திக் கருவிகளின் குவிப்பையும் உழைப்புப் பிரிவினையையும் ஒன்றிலிருந்து ஒன்று பிரிக்க முடியாது." (கார்ல் மார்க்ஸ், முன் வந்தது. பக்கம் 134.)

சாமானியக் கூட்டு-வேலையில் போலவே பட்டறைத் தொழிலிலும், கூட்டுத் தொழிலாளி என்னும் உயிரமைப்பு மூலதனம் நிலவுவதற்கான ஒரு வடிவமாகும். ஏராளமான தனிப்பட்ட நுணுக்கத் தொழிலாளர்களாலான இந்த இயங்கமைபபு முதலாளிக்குச் சொந்தமானது. எனவே, உழைப்புகளின் ஒன்றிணைப்பிலிருந்து விளைகிற உற்பத்தித் திறன் மூலதனத்தின் உற்பத்தித் திறனாகத் தோற்றமளிக்கிறது. முறையான பட்டறைத் தொழில் முன்னர் சுயேச்சையாய் இருந்த தொழிலாளியை மூலதனத்தின் கட்டுப்பாட்டுக்கும் கட்டளைக்கும் உட்படுத்துவது மட்டுமல்லாமல், தொழிலாளர்களிடையிலேயே தரவரிசை ஒன்றைத் தோற்றுவிக்கவும் செய்கிறது. சாமானியக் கூட்டு-வேலை தனியாளின் வேலைமுறையைப் பெரும்பாலும் மாற்றமின்றி விட்டு விடுகிறது; ஆனால், பட்டறைத் தொழில் அதை முற்றிலும் புரட்சிகரமான முறையில் மாற்றி, உழைப்புச் சக்தியை அதன் அடி வேருடன் கவர்ந்து கொள்கிறது. அது உற்பத்திக்கான ஆற்றல்களும் ஆர்வங்களுமாகிய ஒரு முழு உலகையே முடக்கி, ஒரே ஒரு நுணுக்க வேலையிலான கைத்திறனை வலுவந்தமாக வளர்த்து, தொழிலாளியை முடமாக்கி விகாரப் படுத்துகிறது. இது லா பிளாட்டா அரசுகளில் விலங்கின் தோல் அல்லது கொழுப்புக்காக விலங்கையே வெட்டி வீழ்த்துவதைப் போன்றதே ஆகும். நுணுக்க வேலை வெவ்வேறு தனியாட்களுக்குப் பங்கிட்டளிக்கப்படுவது மட்டுமல்லாமல் தனியாளே ஒரு பகுதிப் பணியின் தானியங்கி விசையூட்டியாக மாற்றப்படுகிறார்.[459] மனிதனை அவனது உடலின் துண்டுத் துணுக்காக குறுகச் செய்து விடும் மெனினியஸ் அக்ரிப்பாவின் அபத்தக் கதை கண்ணெதிரே நிகழ்த்திக் காட்டப்படுகிறது.[460] முதலில் ஒரு சரக்கை உற்பத்தி செய்வதற்கான பொருளாயதச் சாதனங்கள் தன்னிடம் இல்லாததால் தொழிலாளி தன் உழைப்புச் சக்தியை மூலதனத்திடம் விற்கிறார் என்றால், இந்நிலையில் அவரது உழைப்புச் சக்தியே, மூலதனத்திடம் விற்கப்பட்டிரா விடில், செயலாற்ற மறுக்கிறது. இப்படி விற்கப்பட்ட பின் முதலாளியின் பட்டறையில் நிலவுகிற சூழ்நிலையில் மட்டுமே அது தன் பணிகளை ஆற்ற முடியும். பட்டறைத் தொழிலாளி சுயேச்சையாக எதையும் தயாரிக்க இயல்பாகவே லாயக்கற்றவர். அவர் முதலாளியினது பட்டறையின் ஒட்டுவாலாக அமைந்தே உற்பத்திச் செயல்திறனை வளர்த்துக்

459 டுகால்டு ஸ்டுவர்ட் பட்டறைத் தொழிலில் வேலை செய்யும் தொழிலாளர்களை "நுணுக்க வேலைகளில் அமர்த்தப்பட்டிருக்கும்....உயிருள்ள தானியங்கிப் பொறிகள்" என்கிறார். (முன் வந்தது, பக்கம் 318.)

460 பவழங்களில் உள்ளபடியே ஒவ்வொரு தனிப் பவழமும் பவழத் தொகுதி முழுமைக்கும் வயிறாகும்; அது ரோமானிய மேற்குடியோரைப் போல் தானே ஊட்டச் சத்தை உறிஞ்சிக் கொண்டு விடாமல் முழுத் தொகுதிக்கும் வழங்கியுதவுகிறது.

கொள்கிறார்.[461] தேர்வு செய்யப்பட்ட மாந்தர்கள் ஜிஹோவாவின் உடைமைகளாவர் என்பதற்கான சின்னம் அவர்களது அங்கங்களிலேயே பதிக்கப்பட்டிருந்தது போலவே, பட்டறைத் தொழிலாளி மூலதனத்தின் உடைமையாவார் என்று உழைப்புப் பிரிவினையால் முத்திரையிடப்படுகிறார்.

காட்டுமிராண்டி தனது தனிப்பட்ட சூழ்ச்சித் திறனிலேயே போர்க் கலைத்துவம் முழுவதையும் அடங்கச் செய்வது போல, சுயேச்சையான விவசாயி அல்லது கைவினைஞர் — மேலும் மேலும் குறைவான அளவிலேயே என்றாலும் — நடைமுறையில் கையாளுகிற அறிவு, சீர்தூக்கித் தீர்மானித்தல், மனவுறுதி ஆகிய ஆற்றல்கள் எல்லாம் இப்போது ஒட்டுமொத்தமாய்ப் பட்டறைக்குத் தேவைப்படுகின்றன. பொருளுற்பத்தியின் மதிநுட்பம் என்பது பல திசைகளில் மறைந்து விடுவதால் ஒரு திசையில் மட்டும் விரிவடைகிறது. நுணுக்கத் தொழிலாளர்கள் இழப்பவை யாவும் அவர்களை வேலைக்கமர்த்தும் மூலதனத்தில் ஒன்றுதிரள்கிறது.[462] பொருளுற்பத்தி நிகழ்முறையின் அறிவாற்றல்கள் வேறொருவரது சொத்தும், தொழிலாளியின் மீது ஆட்சி செலுத்தும் சக்தியும் ஆகி விடுவது பட்டறைத் தொழில் உழைப்புப் பிரிவினையின் விளைவாகும். இப்படிப் பிரிந்து பிளவுறும் நிகழ்முறை சாமானியக் கூட்டு-வேலையில் ஆரம்பமாகிறது; இதில் தனியொரு தொழிலாளிக்கு முதலாளியானவர் கூட்டமைந்த உழைப்பின் ஒருமைப்பாட்டையும், சித்தத்தையும் குறித்திடுகிறார். தொழிலாளியை நுணுக்கத் தொழிலாளியாகக் குறுக்கி விடுகிற பட்டறைத் தொழிலில் இது வளர்ச்சியடைகிறது. விஞ்ஞானத்தை உழைப்பிலிருந்து வேறான உற்பத்திச் சக்தியாக்கி மூலதனச் சேவையில் ஆழ்த்துகிற நவீனத் தொழில்துறையில் இது முழுமை பெறுகிறது.[463]

பட்டறைத் தொழிலில், கூட்டுத் தொழிலாளியும் இவ்விதம்

---

461 "முழுத் தொழிலிலும் விற்பன்னராய் இருக்கும் தொழிலாளி எங்கு வேண்டுமானாலும் வேலை செய்து பிழைக்கலாம். மற்றவரோ (பட்டறைத் தொழிலாளி) ஒட்டுவால் ஆவார். அவரது சகாக்களை விட்டு அவரைப் பிரித்து விட்டால், அவர் வல்லமையோ சுயேச்சையோ அற்றவராகிறார், எது சொன்னாலும் கேட்டாக வேண்டிய நிலைக்கு ஆளாகிறார்." (ஸ்டோர்ஹ், முன் வந்தது, பீட்டர்ஸ்பர்க் பதிப்பு, 1815, முதல் பாகம், பக்கம் 204.)

462 ஆ. ஃபெர்கூசன், முன் வந்தது, பக்கம் 281: "பின்னது இழந்ததை முன்னது அடைந்ததெனலாம்."

463 "அறிவாளியாக இருப்பவரும் உற்பத்தித் தொழிலாளியாக இருப்பவரும் தனித்தனியாகப் பிரிந்து பெரிதும் விலகி விடும் நிலை ஏற்படுகிறது. அறிவு என்பது தொழிலாளியின் உற்பத்தித் திறன்களை அதிகமாக்கும் பொருட்டு அவரது கையில் உழைப்பின் கைக்கருவியாக இருப்பதற்குப் பதில்....அநேகமாய் எங்குமே தொழிலாளிக்கெதிரான அணியில் நிற்கிறது....அவர்களது (தொழிலாளர்களது) தசையாற்றல்களை முற்றிலும் இயந்திரத் தன்மை வாய்ந்தவை ஆக்கும் பொருட்டும், பணிந்து நடக்கச் செய்யும் பொருட்டும் திட்டமிட்ட முறையில் தடம்புரளச் செய்தும் வருகிறது." (வி. தாம்ப்சன் "செல்வ விநியோகக் கோட்பாடுகள் பற்றிய ஆய்வு." லண்டன், 1824. பக்கம் 274.)

மூலதனமும் சமுதாய உற்பத்தித் திறனில் வளமை பெறும் பொருட்டு, ஒவ்வொரு தொழிலாளியும் அவரவரது தனிப்பட்ட உற்பத்தித் திறன்களில் வறுமையுறும் படி செய்தாக வேண்டும். ''அறியாமை மூட நம்பிக்கையின் தாய் மட்டுமல்ல, தொழில் துறையின் தாயுமாகும். ஆலோசனையும், கற்பனையும் தவறக் கூடியவை; ஆனால் கையை அசைப்பதிலும் காலால் நடப்பதிலும் ஆலோசனைக்கோ கற்பனைக்கோ இடமில்லை. ஆலோசனைக்கு அதிக வேலையில்லாத போதுதான், பட்டறையானது மனிதர் களையே உறுப்புகளாகக் கொண்ட இயந்திரப் பொறியாகும் போது தான் பட்டறைத் தொழில் செழித்தோங்குகிறது.''[464] 18ஆம் நூற்றாண்டின் மத்தியில் மெய்யாகவே சிற்சில பட்டறைத் தொழி லதிபர்கள் தொழில் இரகசியங்களான குறிப்பிட்ட சில வேலை களில் மூடப் பிறவிகளையே அமர்த்த விரும்பினர்.[465]

ஆதாம் ஸ்மித் சொல்கிறார்: ''பெரும்பாலான மனிதர்களின் புத்தி தவிர்க்க முடியாதவாறு அவர்களது வழக்கமான வேலை களால் உருவாவது ஆகும். வாழ்நாள் முழுவதும் ஒரு சில சாமா னிய வேலைகளையே செய்பவருக்கு...புத்தியை அதிகம் உபயோ கிக்க சந்தர்ப்பம் இல்லாமற் போகிறது....பொதுவாக, மனிதனாகப் பிறந்த எவரும் ஆக முடியும் அளவுக்கு இவர் மூடரும் அறிவிலியும் ஆவது சகஜம்.'' நுணுக்கத் தொழிலாளியின் பேதைமையை விவரித்த பின்னர் அவர் மேலும் சொல்கிறார்: ''அவரது நிலைத்த வாழ்க்கையின் ஒரே மாதிரியான தன்மை அவரது நெஞ்சுரத்தைச் சீரழிப்பதில் வியப்பில்லை....அது அவரது உடலின் செயற்பாட் டையும் கூடச் சீரழிக்கிறது; எந்த வேலைக்கேற்றவராக வளர்க்கப் பட்டுள்ளாரோ அந்த வேலை தவிர வேறெந்த வேலையிலும் ஊக்கத்துடனும் விடாமுயற்சியுடனும் தன் வலுவை ஈடுபடுத்த முடி யாதவர் ஆக்கி விடுகிறது. இவ்விதம் அவர் அறிவுத் துறையிலும், சமூகத் துறையிலும், போர்க் கலையிலும் அடைய வேண்டிய சிறப்பு களைப் பலியிடுவதன் மூலமே தனக்குரிய குறிப்பிட்ட தொழிலில் கைத்திறன் பெறுவதாகத் தோன்றுகிறது. ஆனால், முன்னேறிய நாகரிக சமுதாயங்களிலெல்லாம் உழைக்கும் ஏழைகள், அதாவது பெருந்திரளான மக்கள் தவிர்க்க முடியாமலே இந்நிலைக்குத்தான் ஆளாவர்.''[466] உழைப்புப் பிரிவினையால் பெருந்திரளான மக்கள்

---

464 ஆ. ஃபெர்கூசன், முன் வந்தது, பக்கம் 280.

465 ஜா. டி. டக்கெட் ''உழைக்கும் மக்களின் கடந்த கால, நிகழ்கால நிலையின் வரலாறு,'' லண்டன், 1846.

466 ஆ. ஸ்மித்: ''நாடுகளின் செல்வம்,'' புத்தகம் V., அத்தியாயம் i., கட்டுரை ii. உழைப்புப் பிரிவினையின் பாதக விளைவுகளைத் தெளிவுபடுத்திய ஆ. ஃபெர்கூசனின் மாணவராதலால் ஆதாம் ஸ்மித் இந்தப் பிரச்சினையில் முழுத் தெளிவுடையவராய் இருந்தார். தமது நூலின் முன்னுரையில் உழைப்புப் பிரிவினையைப் புகழ்வது அவரது கடமையாவதால், சமூக ஏற்றத் தாழ்வுகளுக்கு உழைப்புப் பிரிவினையே மூல காரணம் என்பதைப் போகிற போக்கில் மட்டுமே குறிப்பிடுகிறார். அரசின் வருவாய் பற்றிய

முழுமையாகச் சீரழிவதைத் தடுப்பதற்காக, ஆதாம் ஸ்மித் மக்களுக்கு அரசு கல்வி புகட்ட வேண்டுமெனப் பரிந்துரைக்கிறார்; ஆனால், விவேகத்துடனும், கொஞ்சம் கொஞ்சமாய்க் குன்றிமணியளவு களிலும் புகட்ட வேண்டும் என்கிறார். முதல் பிரெஞ்சுப் பேரரசில் இயற்கையான போக்கில் செனட்டராக உயர்ந்தவரும், ஸ்மித்தின் பிரெஞ்சு மொழிபெயர்ப்பாளரும் உரையாசிரியருமான ஜெ. கார் னியர் இந்த இயற்கையான போக்கிற்கு முற்றிலும் இசைவாகவே இந்த அமிசத்தில் ஸ்மித்தை எதிர்க்கிறார். வெகுஜனங்களுக்குக் கல்வி புகட்டுவது உழைப்புப் பிரிவினையின் முதல் விதியை மீறு வதாகும் என்று வலியுறுத்துகிறார்; அப்படிச் செய்தால் ''நமது சமுதாய அமைப்புக்கே தடை விதிப்பது போலாகி விடும்'' என் கிறார். அவர் சொல்கிறார்: ''மற்றெல்லா உழைப்புப் பிரிவினை களையும் போலவே கரத்தின் உழைப்புக்கும் சிரத்தின் உழைப் புக்கும்[467] இடையிலான பிரிவினையும், சமுதாயம் (மூலதனம், நிலச்சொத்து, அவற்றின் அரசு ஆகியவற்றுக்கு இச்சொல்லை அவர் பயன்படுத்துவது சரிதான்) மேலும் மேலும் செல்வச் செழிப்புறு வதற்கு ஏற்ப, மேலும் மேலும் தீர்க்கமாகவும் தெளிவாகவும் விளங்கு கிறது. ஏனைய ஒவ்வொரு உழைப்புப் பிரிவினையையும் போலவே, இந்தப் பிரிவினையும் கூட சென்ற கால முன்னேற்றத்தின் காரிய மும் வருங்கால முன்னேற்றத்தின் காரணமும் ஆகும்....அப்படி யானால், அரசாங்கம் இந்த உழைப்புப் பிரிவினைக்கு எதிராகச் செயல்பட்டு, அதன் இயற்கையான போக்கைத் தடங்கல் செய்ய லாமா? பிரிந்து விலகிச் செல்வதற்காகப் பிரயாசைப்படுகிற இரு வேறு உழைப்பு வகைகளை குழப்புவதற்கும் ஒன்றுசேர்ப்பதற்குமான முயற்சியில் ஒரு பகுதிப் பொதுப் பணத்தைச் செலவிடலாமா?''[468]

உடலையும் உள்ளத்தையும் ஓரளவு ஊனப்படுத்துவது சமுதாய முழுமையிலான உழைப்புப் பிரிவினையிலிருந்தும் கூடப் பிரிக்க முடியாததாகும். ஆயினும், பட்டறைத் தொழிலானது உழைப்புக் கிளைகளின் இந்தச் சமுதாயப் பிரிவினையை இன்னுமதிகமாய் முன்னெடுத்துச் செல்வதாலும், மேலும் அதற்குரிய விசேஷப் பிரிவினையின் மூலம் தனியாளது வாழ்வின் அடிவேர்களையே

5ஆம் புத்தகத்தில்தான் அவர் ஃபெர்கூசன் கூறியதை எடுத்துரைக்கிறார். ''தத்துவத்தின் வறுமை'' என்ற எனது நூலில், ஃபெர்கூசன், ஆ. ஸ்மித், லெமொந்தே, ஸே ஆகியோர் இடையே உழைப்புப் பிரிவினை பற்றிய அவர்களது விமர்சனங்கள் தொடர்பாக நிலவும் வரலாற்று இணைப்பைப் போதுமான அளவு விளக்கியிருக்கிறேன். பட்டறைத் தொழில்களில் கையாளப்படும் உழைப்புப் பிரிவினை முதலாளித்துவப் பொருளுற்பத்தி முறையின் பிரத்தியேக வடிவம் என்பதை முதன் முதலாய்த் தெளிவுபடுத்தியிருக்கிறேன்.

467 ஃபெர்கூசன் ஏற்கெனவே கூறி விட்டார், முன் வந்தது, பக்கம் 281: ''பிரிவினைகள் மலிந்த இந்தக் காலத்தில், சிந்தனையே கூட விசேஷமான தொழிலாகி விடக் கூடும்.''

468 ஜெ. கார்னியர், அவரது ஆ. ஸ்மித் மொழிபெயர்ப்பின் ஐந்தாம் பாகம், பக்கம் 4-5.

தாக்குவதாலும், தொழில் துறை நோயியலுக்கு இலக்குப் பொருட்களை வழங்குவதிலும், அதனை ஆரம்பித்து வைப்பதிலும் அதுவே முதலாவதாகும்.[469]

"ஒரு மனிதனை உட்பிரிவினை செய்வதென்பது, மரண தண்டனை தகுமெனில் அவனைத் தூக்கிலிடுவதாகும்; தகாதெனில் வஞ்சகமாய்க் கொலை புரிவதாகும்....உழைப்பின் உட்பிரிவினை என்பது நாட்டு மக்களைக் கொன்று குவிப்பதாகும்."[470]

உழைப்புப் பிரிவினையின் அடிப்படையிலான கூட்டு-வேலை, அதாவது பட்டறைத் தொழில் தன்னியல்பாய்த் தோன்றிய ஒன்றாகத் தொடங்குகிறது. சற்றே நிலைபெற்று விரிவடைந்ததும், முதலாளித்துவப் பொருளுற்பத்திக்கென உணர்வு பூர்வமாக ஒழுங்கு செய்து முறைப்படுத்தப்பட்ட வடிவமாகி விடுகிறது. முறையான பட்டறைத் தொழிலுக்கேயுரிய உழைப்புப் பிரிவினை முதலில் மிகப் பொருத்தமான வடிவத்தை அனுபவத்தின் வாயிலாக (கதாபாத்திரங்களின் கண்ணிற்படாமல் எனலாம்) எப்படி அடைகிறது, பிறகு கைவினைச் சங்கக் கைத்தொழில்களைப் போல, கிடைத்த வடிவத்தை இறுகப் பற்றிக் கொள்ள எப்படி முயல்கிறது, இங்குமங்குமாக பல நூற்றாண்டுகளுக்கு அதை வைத்துக் கொள்வதில் எப்படி வெற்றி பெறுகிறது என்பதையெல்லாம் வரலாறு புலப்படுத்துகிறது. இந்த வடிவத்தில் ஏற்படும் எந்த மாற்றமும், அற்ப விவரங்களிலான மாற்றம் நீங்கலாக, முழுக்க முழுக்க உழைப்புக் கருவிகளிலான புரட்சியின் விளைவேயாகும். நவீனப் பட்டறைத் தொழில் அது உதயமாகும் இடங்களிலெல்லாம் — நான் இங்கே

---

469 பதுவாவில் நடைமுறை மருத்துவத்தின் பேராசிரியரான ராமாசினி 1713இல் "De morbis artificum" என்ற தனது நூலைப் பிரசுரித்தார்: இது 1781இல் பிரெஞ்சு மொழியில் பெயர்க்கப்பட்டது; மீண்டும் 1841ஆம் ஆண்டு "Encyclopedie des Sciences Medicales. 7me Dis. Auteurs Classiques" என்பதில் வெளியிடப்பட்டது. நவீன இயந்திரத் தொழில் துறையின் காலம் உழைப்புத் துறை நோய்களைப் பற்றிய அவரது பட்டியலை மிகப் பெரிதாக நீட்டியுள்ளது என்பதில் ஐயமில்லை. பார்க்கவும்: "Hygiene physique et morale de l'ouvrier dans les grandes villes en general et dans la ville de Lyon en particulier. எழுதியவர்: டாக்டர் அ. லு. ஃபொந்தெரே, பாரிஸ், 1858," மற்றும் "Die Krankheiten, welche verschiednen Standen, Altern und Geschlechtern eigenthumlich sind. 6 பாகங்கள், உல்ம், 1860," இன்னபிற. 1854இல் கலைகளின் சங்கம் தொழில் துறை சம்பந்தப்பட்ட நோயியல் குறித்து விசாரணை ஆணையம் ஒன்றை நியமித்தது. இந்த ஆணையம் திரட்டிய ஆவணங்களின் பட்டியலை "ட்விக்கன்ஹாம் பொருளாதார அருங்காட்சியகத்தின்" பட்டியலில் காணலாம். இவற்றில் மிகவும் முக்கியமானவை அதிகார பூர்வமான "பொதுச் சுகாதார அறிக்கைகள்" ஆகும். மேலும் பார்க்கவும்: எட்வர்டு ரைஹ், எம்.டி. "Ueber die Entartung des Menschen," எர்லாங்கென், 1868.

470 (டே. அர்க்கார்ட்: "நன்கு தெரிந்த சொற்கள்." லண்டன், 1855, பக்கம் 119.) உழைப்புப் பிரிவினை பற்றி வைதிக விரோதக் கருத்துகளை ஹெகல் கொண்டிருந்தார். "Rechtsphilosophie" என்ற நூலில் அவர் சொல்கிறார்: "கல்வியிற் சிறந்தோர் என்னும் போது மற்றவர் செய்வதனைத்தையும் செய்யத் தெரிந்தோர் என்றே முதற்கண் பொருள் கொள்கிறோம்."

இயந்திர சாதனத்தின் அடிப்படையிலான நவீனத் தொழில் துறையைக் குறிப்பிடவில்லை—disjecta membra poetæ* தயார் நிலையில், அவற்றை ஒன்றாகத் தொகுத்தாலே போதுமென்ற நிலையில் இருக்கக் காண்கிறது; பெருநகரங்களில் உடை தயாரிப்புப் பட்டறைத் தொழிலில் இவ்வாறே நிகழ்கிறது. அல்லது, அது ஒரு கைத்தொழிலின் (உதாரணமாக, புத்தகம் கட்டுதல்) பல்வேறு வேலைகளையும் குறிப்பிட்ட ஆட்களுக்கு மட்டும் உரியவையாக ஒதுக்குவதன் மூலமே உழைப்புப் பிரிவினைக் கோட்பாட்டை எளிதில் பிரயோகிக்க முடியும். இவ்வாறான நிலைகளில், பல்வேறு பணிகளுக்கும் அவசியமான ஆட்களின் தொகைகளிடையிலான விகிதாசாரத்தை நிர்ணயிக்க ஒரு வார அனுபவம் போதுமானது.[471]

கைத்தொழில்களைக் கூறுகளாகச் சிதைப்பதன் மூலமும், உழைப்புக் கருவிகளை தனித்திறன் பெறச் செய்வதன் மூலமும், நுணுக்கத் தொழிலாளர்களை உருவாக்குவதன் மூலமும், அவர்களை ஒற்றை இயங்கமைப்பாகத் தொகுத்து ஒன்றிணைப்பதன் மூலமும், பட்டறைத் தொழில் உழைப்புப் பிரிவினையானது சமுதாய உற்பத்தி நிகழ்முறையில் பண்புவழியில் தரவரிசையையும், அளவுவழியில் விகித ஒழுங்கையும் உண்டாக்குகிறது; இவ்வாறு சமுதாய உழைப்பின் திட்டமான ஒழுங்கமைப்பை உண்டாக்குகிறது; இதன் மூலம், அதே நேரத்தில், சமுதாயத்தில் புதிய உற்பத்திச் சக்திகளை வளர்ந்தெழச் செய்கிறது. பட்டறைத் தொழில் என்பது, அதன் பிரத்தியேகமான முதலாளித்துவ வடிவத்தில்—அதற்குள்ள நிலைமைகளில் அது முதலாளித்துவ வடிவம் தவிர வேறு எந்த வடிவமும் எடுக்க முடியாது—ஒப்பீட்டு உபரி-மதிப்பைப் பெறுவதற்கான, அதாவது தொழிலாளியின் செலவில் மூலதனத்தின் தற்பெருக்கத்தை (இதுதான் வழக்கமான சமுதாயச் செல்வம் என்றும், ''நாடுகளின் செல்வம்'' என்றும், இன்ன பிறவாறும் அழைக்கப்படுகிறது) அதிகப்படுத்துவதற்கான ஒரு குறிப்பிட்ட வழிமுறையே. அது உழைப்பின் சமுதாய உற்பத்தித் திறனை, தொழிலாளியின் நன்மைக்காக அல்லாமல், முதலாளியின் நன்மைக்காக அதிகப்படுத்துவது மட்டுமல்லாமல், தனிப்பட்ட தொழிலாளர்களை முடமாக்கியே இதைச் செய்கிறது. உழைப்பின் மீது மூலதனம் கோலோச்சுவதற்கான புதிய நிலைமைகளை அது

471 உழைப்புப் பிரிவினையில் தனிப்பட்ட முதலாளி முன்கூட்டியே திட்டமிட்டு அபாரக் கண்டுபிடிப்புத் திறனை வெளிப்படுத்துகிறார் என்ற அப்பாவித்தனமான நம்பிக்கை, இப்போதெல்லாம், திருவாளர் ரோஷரின் தரத்திலான ஜெர்மானியப் பேராசிரியர்களிடம் மட்டுமே நிலவுகிறது. உழைப்புப் பிரிவினையைத் தயார் நிலையில் அப்படியே தனது ஜூபிட்டர் தலையிலிருந்து உதிக்கச் செய்த முதலாளிக்கு சன்மானம் அளிப்பதற்காக அவருக்குப் ''பல்வேறு கூலிகளை'' (diverse Arbeitslohne) ரோஷர் வகுத்தளிக்கிறார். உழைப்புப் பிரிவினை எவ்வளவு விரிவாகப் பிரயோகிக்கப்படுகிறது என்பது பணப் பையின் பருமனைப் பொறுத்ததேயன்றி கண்டுபிடிப்புத் திறனைப் பொறுத்ததன்று.

* கவிஞரின் அங்கச் சிதறல்கள்.

தோற்றுவிக்கிறது. எனவே, ஒரு புறம், அது வரலாற்றில் ஒரு முன்னேற்றமாகவும், சமுதாயத்தின் பொருளாதார வளர்ச்சியில் ஓர் அவசியக் கட்டமாகவும் திகழ்கிறது; மறு புறம், அது ஒரு நாசூக்கான நாகரிகச் சுரண்டல் முறையாகும்.

முதன் முதலாகப் பட்டறைத் தொழிற் காலத்தின் போது சுயேச்சை விஞ்ஞானமாக உருவெடுத்த அரசியல் பொருளாதாரம் சமுதாய உழைப்புப் பிரிவினையைப் பட்டறைத் தொழிலின் கோணத்திலிருந்து மட்டுமே பார்க்கிறது;[472] சமுதாய உழைப்புப் பிரிவினை குறிப்பிட்ட அளவு உழைப்பைக் கொண்டு கூடுதலான சரக்குகளை உற்பத்தி செய்வதற்கும், இவ்வாறு சரக்குகளை மலிவாக்கி மூலதனத் திரட்டலை [accumulation of capital] விரைவு படுத்துவதற்கும் வாய்த்த சாதனம் என்று மட்டுமே பார்க்கிறது. அளவுக்கும் பரிவர்த்தனை-மதிப்புக்கும் இப்படி உயர்சிறப்பு அளிப் பதற்கு நேர்மாறாக உள்ளது தொல்சீர் பண்டைக்காலத்திய நூலாசிரியர்களின் போக்கு. அவர்கள் முழுக்க முழுக்க பண்பையும் பயன்-மதிப்பையுமே உயர்த்திப் போற்றுகிறார்கள்.[473] சமூகப் பொருளுற்பத்திக் கிளைகள் தனித்தனியாதலின் விளைவாக, சரக்கு கள் முன்னிலும் சிறப்பாகத் தயாரிக்கப்படுகின்றன; மனிதர்களின் பல்வேறு நாட்டங்களும் திறமைகளும் பொருத்தமான துறையைத் தெரிந்தெடுத்துக் கொள்கின்றன;[474] ஓரளவு கட்டுப்பாடில்லாமல்

---

472 பெட்டி, ''கிழக்கிந்திய வர்த்தகத்தால் வரும் அனுகூலங்கள்'' என்ற நூலின் பெயர் தெரியாத ஆசிரியர் போன்ற பழைய எழுத்தாளர்கள் பட்டறைத் தொழிலில் அமலாகும் உழைப்புப் பிரிவினையின் முதலாளித்துவத் தன்மையை ஆதாம் ஸ்மித்தைக் காட்டிலும் தெளிவாகத் தெரியச் செய்கின்றனர்.

473 நவீன காலத்தவர் என்பதில், பெக்காரியா, ஜேம்ஸ் ஹாரிஸ் போன்ற 18ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த ஒரு சில எழுத்தாளர்கள் விதிவிலக்காவர். இவர்கள் உழைப்புப் பிரிவினை தொடர்பாகப் புராதன காலத்தவரைப் பெருமளவுக்குப் பின்பற்றுகின்றனர். இவ்வாறு, பெக்காரியா: ''எல்லாருமே அனுபவத்திலிருந்து அறிந்திருப்பதுதான் இது: எப்போதுமே கையையும் அறிவையும் ஒரே வகை வேலைக்குப் பயன்படுத்தி, ஒரே வகைப் பண்டங்களை உற்பத்தி செய்ய முற்பட்டால், ஒவ்வொருவரும் தாமே தமக்குத் தேவையானவற்றைச் செய்து கொள்வதைக் காட்டிலும் எளிதிலும் மிக அதிகமாகவும் உயர்ந்த தரத்திலும் உற்பத்தி செய்யலாம்....இவ்வாறு மனிதர்கள் அவர்களது நன்மைக்காகவும் சமுதாயத்தின் நன்மைக்காகவும் பல்வேறு வர்க்கங்களாகவும் நிலை களாகவும் பிரிக்கப்படுகின்றனர்.'' (செசார் பெக்காரியா: ''Elementi di Econ. Pubblica,'' பதிப்பு: Custodi, Parte Moderna, பாகம் xi., பக்கம் 29.) பிற்பாடு மால்மஸ்பரி பிரபுவாக இருந்தவரும், செயிண்ட் பீட்டஸ்பர்க்கில் அவரது தூதரகத்தின் ''நாட்குறிப்புகள்'' என்பதற்காகப் பிரபலமானவருமாகிய ஜேம்ஸ் ஹாரிஸ், பின்னர் ''மூன்று வியாசங்கள்,'' 3ஆம் பதிப்பு, லண்டன், 1772 என்பதில் மறுபடி அச்சிடப் பட்ட தனது நூலான ''மகிழ்ச்சி பற்றிய உரையாடல்,'' லண்டன் 1741 என்பதற்கான ஒரு குறிப்பில் சொல்கிறார்: ''சமுதாயத்தை இயற்கையானதாக (அதாவது வேலைகளின் பிரிவினையால்) நிரூபிப்பதற்கான வாதம் முழுவதும்...பிளேட்டோ எழுதிய குடியரசின் இரண்டாவது புத்தகத்திலிருந்து எடுக்கப்படுவதாகும்.''

474 இவ்வாறு, ஒடிஸ்ஸி xiv., 228இல், ''வெவ்வேறு மனிதர்கள் வெவ்வேறு வேலைகளில் மகிழ்ச்சி காண்கிறார்கள்.'' செக்ஸ்டஸ் எம்பிரிக்கஸில் ஆர்க்கிலோக்கஸ்: ''எது மனத்திற்கினியது என்பதில் மனிதர்கள் வேறுபடுகிறார்கள்.''

எந்த முக்கியப் பயன்களையும் எங்குமே அடைய முடியாது.[475] எனவே, உழைப்புப் பிரிவினை உற்பத்திப் பொருளையும் மேம் படுத்துகிறது, உற்பத்தியாளரையும் மேம்படுத்துகிறது. உற்பத்தி செய்யப்படும் அளவில் பெருக்கத்தை எப்போதாவது இவர்கள் குறிப் பிடுகிறார்கள் என்றால், பயன்-மதிப்புகள் மேலும் அபரிமிதமாவது தொடர்பாக மட்டுமே அப்படிக் குறிப்பிடுகிறார்கள். பரிவர்த் தனை-மதிப்பையோ, சரக்குகள் மலிவாக்கப்படுவதையோ குறிக்கிற ஒரு வார்த்தை கூடக் கிடையாது. பயன்-மதிப்பின் கோணத் திலிருந்து மட்டுமே பார்க்கிற இந்தப் பார்வையை, சமுதாயத்தின் வர்க்கப் பிரிவினைக்கான அடித்தளமாக உழைப்புப் பிரிவினை யைக் கருதுகிற பிளேட்டோவும் மேற்கொள்கிறார்;[476] குறிப்பிடத்

---

[475] "அவன் பல வேலைகளைச் செய்தாலும், எல்லாவற்றையும் மோசமாகச் செய்யக் கூடியவன்." ஒவ்வொரு அதீனியரும் சரக்குற்பத்தியாளர் என்ற முறையில் ஸ்பார்ட்டரைக் காட்டிலும் தம்மை மேம்பட்டவராகக் கருதிக் கொண்டார். ஏனெனில், போர்க் காலத்தில், ஸ்பார்ட்டரிடம் உபயோகித்துக் கொள்வதற்குப் போதுமான ஆட்கள் இருந்தனர்; பணம்தான் இல்லை; அதீனியர்களை பெலொப்பொனேசியப் போருக்குத் தூண்டும் சொற்பொழிவில் துசிததீஸ் பெரிக்ளீசை இவ்வாறு சொல்லச் செய்கிறார்: "σώμασί τε ἑτοιμότεροι οἱ αὐτουργοὶ τῶν ἀνθρώπων ἢ χρήμασι πολεμεῖν" (துசிததீஸ், முன் வந்தது, 41.) ஆயினும் பொருளுற்பதத் தொடர்பாகவும் கூட உழைப்புப் பிரிவினைக்கு மாறாக தன்னிறைவுதான் அவர்களது இலட்சியமாக இருந்து வந்தது. "முன்னதால் நல்வாழ்வு கிட்டும். ஆனால் பின்னதால் சுயேச்சை கிட்டும்." 30 கொடுங்கோலர்களது வீழ்ச்சியின் போது நிலச் சொத்தில்லாத அதீனியர் கள் 5,000 பேர் கூட இல்லை என்பதை இங்கே குறிப்பிட வேண்டும்.

[476] பிளேட்டோவின் கருத்துப்படி, சமுதாயத்திலான உழைப்புப் பிரிவினை என்பது தனி மனிதர்களின் தேவைகள் பலதரப்பட்டவையாகவும், சக்திகள் வரம்புக்குட் பட்டவையாகவும் இருப்பதிலிருந்து எழுவதாகும். உழைப்பாளி வேலைக்கேற்பத் தன்னைத் தகவமைத்துக் கொண்டாக வேண்டும், வேலை உழைப்பாளிக்கேற்பத் தக வமைதல் ஆகாது என்பது அவரது முக்கிய வாதமாகும்; உழைப்பாளி ஒரு நேரத்தில் பல தொழில்களை நடத்தி, இவ்வாறு ஏதேனும் ஒன்றைக் கீழ்ப்பட்டதாக்கினால் வேலை உழைப்பாளிக்கேற்பத் தகவமைவது தவிர்க்க முடியாதது என்றார். "ஏனென்றால் வேலை யானது தொழிலாளியின் ஓய்வுக்காகக் காத்திருக்காது. தொழிலாளி அதனைத் தனது பிரதானக் காரியமாய்க் கவனிக்க வேண்டுமே தவிர துணை அலுவலாய்க் கருதக் கூடாது." — "உண்மையில் இப்படித்தான் செய்ய வேண்டும்." "அப்படியானால், இதன் விளைவு என்னவென்றால்: ஒருவர் தமது இயல்புக்கேற்பவும், சரியான தருணத்திலும், வேறு அலுவல்களைக் கவனிக்காமலும் ஒரு வேலையைச் செய்யும் போது, இன்னும் அதிகமான பொருட்கள் உற்பத்தியாகின்றன; இன்னும் சிறப்பாய், இன்னும் எளிதாய் உற்பத்தியாகின்றன." (குடியரசு 1.2. பதிப்பு: பெய்ட்டர், ஒரெல்லி...) இதே போல் துசிததீஸ், முன் வந்தது, அத்தியாயம் 142இல்: "கடற் பயணம் ஒரு கலை; ஏனைய கலைகளைப் போலவே, இதுவும் நிலைமைகளுக்கேற்பத் துணைத் தொழிலாக நடத்த முடியாதது. அது மட்டுமன்று; ஏனைய துணைத் தொழில் களை இத்தொழிலோடு சேர்த்து நடத்த முடியாது." வேலை உழைப்பாளிக்காகக் காத்திருக்க வேண்டியிருந்தால், நிகழ்முறையின் முக்கியமான கட்டம் தவற விடப்பட்டு, பொருள் பாழாக்கப்படுகிறது என்று பிளேட்டோ சொல்கிறார்: "வேலைக்குரிய சரியான தருணத்தைத் தவற விட்டால், கெட்டுப்போய் விடுகிறது." இதே பிளேட் டோனியக் கருத்து, எல்லாத் தொழிலாளர்களுக்கும் நிர்ணயமான சாப்பாட்டு நேரத்தை விதிக்கிற தொழிற் சாலைச் சட்ட சரத்துக்கெதிராக ஆங்கிலேய வெளுப்பதிபர்கள் தெரிவித்துள்ள ஆட்சேபணையில் எதிரொலிப்பதைக் காணலாம். அவர்களது தொழில்

தக்க முதலாளித்துவ உள்ளுணர்வுடன் பட்டறையிலான உழைப்புப் பிரிவினைக்கு அதிகம் நெருங்கி வருகிற செனஃபோனும் மேற் கொள்கிறார்.[477] பிளேட்டோவின் ;குடியரசு, உழைப்புப் பிரி வினை அதில் அரசை உருவாக்கும் கோட்பாடாகக் கருதப்பட்டுள்ள அளவில், எகிப்திய சாதி அமைப்பின் அதீனியக் கருத்துருவாக்கமே. அவர் காலத்தைச் சேர்ந்த பலருக்கும் — ஐசாக்ரெட்டீஸ் அவர்களில் ஒருவர் — எகிப்து தொழில் வளமுள்ள நாட்டின் முன்மாதிரியாகப் பயன்பட்டது.[478] ரோமானியப் பேரரசின் கிரேக்கர்களுக்கும்

---

தொழிலாளர்களின் சௌகரியத்துக்காகக் காத்திருக்க முடியாது; ஏனெனில் "வெள் ளாவி வைத்தல், துவைத்தல், வெளுத்தல், அழுத்தங்கொடுத்தல், மெருகிடல், சாய மேற்றல் போன்ற பல்வேறு பணிகளில் எதையுமே குறிப்பிட்ட தருணத்தில் நிறுத்த முடியாது; நிறுத்தினால் சேதம் ஏற்படும்....எல்லாத் தொழிலாளர்களுக்கும் ஒரே சாப்பாட்டு நேரத்தை அமலாக்கினால், பணிகள் அரைகுறையாக நின்று, மதிப்பு மிக்க சரக்குகள் சில நேரங்களில் பாழ்படக் கூடும்." பிளேட்டோனியத்தை அடுத்து எங்கே காண்பது?

[477] பாரசீக மன்னரின் மேஜையிலிருந்து உணவு பெறுவது கௌரவம் என்பது மட்டுமன்று, இவ்வுணவு வேறு எங்கும் கிடைப்பதை விட சுவை மிக்கது என்று செனஃபோன் சொல்கிறார். "இதில் வியப்பொன்றுமில்லை; ஏனெனில் இதர கலைகள் பெருநகரங்களில் செம்மைப்படுத்தப்படுவது போலவே, ராஜா வீட்டு உணவும் தனி விதமாகத் தயாரிக்கப்படுகிறது. எப்படியெனில், சிறு நகரங்களில் ஒரே ஆள் கட்டில் களையும் கதவுகளையும் கலப்பைகளையும் மேஜைகளையும் செய்கிறார்; பல நேரங்களில் வீடுகளையும் கூட அவர் கட்டித் தருகிறார்; தன் ஜீவனத்துக்குப் போதுமான வாடிக்கை கிடைத்தாலே முழு திருப்தி அடைகிறார். இத்தனையையும் செய்யும் ஒருவர் அவை அனைத்தையுமே நன்றாகச் செய்வது அசாத்தியம். ஆனால், ஒவ்வொருவருக்கும் அநேக வாடிக்கையாளர்கள் கிடைக்கக்கூடிய பெருநகரங்களில், ஒரு தொழில் அதை நடத்து பவரைப் பராமரிக்கப் போதுமானது. அது மட்டுமன்று. பல நேரங்களில், ஒரு முழுத் தொழிலுக்கான தேவைகூட இருப்பதில்லை. ஒருவர் ஆண்களுக்கான பாத அணி களையும் இன்னொருவர் பெண்களுக்கான பாத அணிகளையும் தயாரிக்கின்றனர். இங்குமங்குமாக ஒருவர் பாத அணிகளைத் தைப்பதன் மூலமும், இன்னொருவர் அவற்றை வெட்டிச் சரி செய்வதன் மூலமும் காலம் தள்ளுகின்றனர்; ஒருவர் துணிகளை வெட்டித் தருவது தவிர வேறொன்றும் செய்வதில்லை; இன்னொருவர் வெட்டிய துணிகளைத் தைப்பது தவிர வேறொன்றும் செய்வதில்லை. அப்படியானால், மிகவும் சாமானிய வகை வேலையைச் செய்பவர் வேறு எவரை விடவும் அதைச் சிறப்பாகச் செய்வார் என்பதில் சந்தேகமில்லை. சமையற்கலைக்கும் இதுவே பொருந்தும்." (செனஃபோன், Cyrop. I. viii., அத்தியாயம் 2.) செனஃபோன் உழைப்புப் பிரிவினை யின் தரவரிசைகள் சந்தையின் விரிவைப் பொறுத்தவை என்பதை நன்கறிந்துள்ள போதிலும், இங்கே பயன்-மதிப்பில் அடைய வேண்டிய சிறப்புக்கே பிரத்தியேகமாக அழுத்தம் கொடுக்கிறார்.

[478] அவர் (புசிரிஸ்) அவை அனைத்தையும் தனிச் சாதிகளாகப் பிரித்தார்....அதே தொழிலை அதே தனியாட்கள் எப்போதும் செய்ய வேண்டுமெனக் கட்டளையிட்டார்; ஏனெனில், தங்கள் தொழில்களை மாற்றிக் கொள்பவர்கள் ஒன்றிலுமே தேர்ச்சி பெறு வதில்லை. ஆனால் இடைவிடாது ஒரு தொழிலோடு ஒட்டிக்கொண்டிருப்பவர்கள் அதைச் செம்மையின் உச்சத்துக்கே கொண்டுபோய் விடுகின்றனர் என்பது அவருக்குத் தெரியும். உண்மையில், கலைகளிலும் கைத்தொழில்களிலும், வித்தகர் குளறுபடி யாளரை விஞ்சுவதை விட அதிகமாகவே, அவர்கள் தம் போட்டியாளர்களை விஞ்சி முன்னேறியிருப்பதைக் காண்கிறோம்; முடியாட்சியையும் அரசின் மற்ற நிறுவனங் களையும் நடத்துவதற்கான ஏற்பாடுகள் அற்புதமாய் இருந்தன. எந்த அளவுக்கு என்றால், இக்கருப்பொருளைப் பற்றிப் பேசுகிற பிரபலமான தத்துவஞானிகள்

எகிப்தின் இந்த முக்கியத்துவம் தொடர்ந்து நீடித்தது.[479]

முறையான பட்டறைத் தொழிற் காலத்தில், அதாவது முதலாளித்துவப் பொருளுற்பத்தியின் மேலோங்கிய வடிவமாகப் பட்டறைத் தொழில் திகழ்கிற காலத்தில், பட்டறைத் தொழிலுக்கேயுரிய தனிவிதப் போக்குகளின் முழு வளர்ச்சிக்குத் தடையாக இடையூறுகள் பலவும் உள்ளன. பட்டறைத் தொழிலானது தொழிலாளர்களைப் படிவரிசையாக வகுத்து அமைப்பதுடன். கூடவே, தேர்ச்சி பெற்றோராகவும் தேர்ச்சியற்றோராகவும் பிரித்து சாமானிய உழைப்புப் பிரிவினை ஒன்றைத் தோற்றுவிக்கிறது என முன்பே கண்டோம். என்றாலும், தேர்ச்சி பெற்றோரின் அதிகப் படியான செல்வாக்கின் விளைவாக, தேர்ச்சியற்ற தொழிலாளர்களின் தொகை மிகவும் குறைவாகவே இருந்து வருகிறது. அது நுணுக்கப் பணிகளை, உயிருள்ள உழைப்புக் கருவிகளின் பக்குவம், பலம், வளர்ச்சி ஆகியவற்றின் பல்வேறு படித்தரங்களுக்கேற்புத் தகவமைக்கிறது; இவ்வாறு மாதர்களும் குழந்தைகளும் சுரண்டப் படுவதை ஏதுவாக்குகிறது என்ற போதிலும், மொத்தத்தில் இந்தப் போக்கு ஆண் தொழிலாளர்களின் பழக்க வழக்கங்களாலும், அவர்கள் காட்டும் எதிர்ப்பாலும் தகர்ந்து போகிறது. கைத் தொழில்கள் பிளக்கப்படுவது தொழிலாளியை உருவாக்கும் செலவைக் குறைத்து, இவ்விதம் அவரது மதிப்பைக் குறைக்கிறது என்ற போதிலும், அதிகம் சிரமமான நுணுக்க வேலைக்கு, அதிக காலம் தொழிற் பழகுதல் அவசியமாகும்; அது தேவையற்றதாகி விடும் இடத்தே கூட, தொழிலாளர்களால் விடாப்பிடியாக வலியுறுத்தப் படுகிறது. எடுத்துக்காட்டாக, இங்கிலாந்தில், ஏழாண்டுப் பரீட்சார்த்த காலத்துடன் கூடிய தொழிற் பழகு சட்டங்கள் பட்டறைத் தொழிற் காலத்தின் முடிவு வரையிலும் முழு அளவில் அமலாவதைக் காண்கிறோம். நவீனத் தொழில் துறையின் உதயம் வரை அவை தூக்கியெறியப்படுவதில்லை. கைத்தொழில் தேர்ச்சியே பட்டறைத் தொழிலின் அடித்தளமென்பதாலும், மொத்தத்தில் பட்டறைத் தொழிலின் இயங்குமுறைக்குத் தொழிலாளர் அல்லாத கட்டமைப்பேதும் கிடையாது என்பதாலும் மூலதனம் தொழிலாளர்களின் கீழ்ப்படியாத நிலையுடன் ஓயாமல் மல்லுக்கு நிற்க வேண்டியதாகிறது. நண்பர் யூர் சொல்கிறார்: "மனித இயல்பின் குறைபாடுகள் காரணமாய், தொழிலாளி எவ்வளவு அதிகம் தேர்ச்சி பெறுகிறாரோ, அவ்வளவுக்கு அவர் அகம்பாவியாகவும், சமாளிக்க முடியாதவராகவும் மாறி விடக் கூடும். இதனால், ஓர் இயந்திர அமைப்பின் அங்கமாக இருக்கத் தகுதியற்றவர் ஆகிறார்....

---

மற்றெல்லாவற்றுக்கும் மேலாக எகிப்திய அரசின் அமைப்பு முறையைப் புகழ்கின்றனர். (ஐசாக்ரெட்டீஸ், புசிரிஸ், அத்தியாயம் 8.)

[479] பார்க்கவும்: தியோதரஸ் சிகலஸ்.

அவ்வமைப்பு முழுமைக்கும் அவரால் பெருஞ்சேதம் ஏற்படக் கூடும்.''[480] எனவே, பட்டறைத் தொழிற் காலம் முழுவதிலும் தொழிலாளர்கள் மத்தியில் கட்டுப்பாடின்மை என்ற புகார் சொல்லப்படுகிறது.[481] அக்காலத்து எழுத்தாளர்களின் சாட்சியம் ஒரு புறமிருக்க பின்வரும் எளிய உண்மைகள் இது பற்றி நிறையவே சொல்கின்றன; முதலாவதாக 16ஆம் நூற்றாண்டுக்கும் நவீனத் தொழில் துறையின் சகாப்தத்துக்கும் இடையிலான காலத்தில், மூலதனம் பட்டறைத் தொழிலாளர்களின் பயன்படத்தக்க வேலை நேரம் முழுவதற்கும் அதிபதியாக முடியவில்லை. இரண்டாவதாக, பட்டறைத் தொழில்கள் அற்பாயுள் படைத்தவையாகவே இருந்தன, குடிபெயர்கிற அல்லது குடிவருகிற தொழிலாளர்களுடன் சேர்ந்து இவை தமது இருப்பிடத்தை நாடு விட்டு நாடு மாற்றிக் கொண்டன. ''தொழில், வாணிபம் பற்றிய கட்டுரையின்'' — அடிக்கடி மேற்கோள் காட்டப்படும் — ஆசிரியர், 1770இல் அறைகூவுகிறார்: ''எந்த விதத்திலாவது ஒழுங்கை நிலைநாட்ட வேண்டும்.'' 66 ஆண்டு கழிந்த பின்னர் டாக்டர் ஆண்ட்ரூ யூர் அதை மறுபடி எதிரொலிக் கிறார்: ''உழைப்புப் பிரிவினை என்னும் பண்டிதர்களது சூத்தி ரத்தின்'' அடிப்படையிலான பட்டறைத் தொழிலில் ''ஒழுங்கு'' இல்லாது போயிற்று; ''ஆர்க்ரைட் ஒழுங்கைத் தோற்றுவித்தார்.''

அதே நேரத்தில், சமுதாயத்தின் பொருளுற்பத்தியை முழு அளவுக்குக் கைப்பற்றவோ, அந்த உற்பத்தி முழுவதையும் புரட்சி கரமாக மாற்றவோ பட்டறைத் தொழிலால் முடியவில்லை. நகரக் கைத்தொழில்கள், கிராமப்புற வீட்டுத் தொழில்கள் என்ற பரந்த அடித்தளத்தின் மீதமைந்த பொருளாதாரக் கலைப் படைப்பாக அது ஒரு கோபுரம் போல் எழுந்தது. அதன் வளர்ச்சியில் ஒரு குறிப் பிட்ட கட்டத்தில், பட்டறைத் தொழிலின் குறுகிய தொழில் நுட்ப அடிப்படை, பட்டறைத் தொழிலாலேயே தோற்றுவிக்கப்பட்ட உற் பத்தித் தேவைகளுடன் மோதிக் கொண்டது.

அதன் மிகப் பூர்த்தியான படைப்புகளில் ஒன்று, உழைப்புக் கருவிகளையே உற்பத்தி செய்வதற்கான பட்டறையாகும்; இக்கருவி களில் குறிப்பிட்டுச் சொல்லத் தக்கது அப்போதே பயன்படுத்தப் பட்ட சிக்கல்மிக்க இயந்திரப் பொறியமைவாகும். யூர் சொல் கிறார்: ஓர் இயந்திரத் தயாரிப்புத் தொழிற்சாலையில் ''பலதரப் பட்ட அடுக்குகளில் உழைப்புப் பிரிவினை நிலவக் காணலாம் — அரம், துரப்பணம், கடைசல் பொறி ஒவ்வொன்றுக்கும் தேர்ச்சி வரிசையில் வெவ்வேறு தரமுடைய தொழிலாளர்கள் இருந்தனர்.'' (பக்கம் 21.) பட்டறைத் தொழில் உழைப்புப் பிரிவினையிலிருந்து

---

480 யூர், முன் வந்தது, பக்கம் 20.

481 இந்நிலைமை பிரான்சை விட இங்கிலாந்தில் அதிகம்; ஹாலந்தை விட பிரான்சில் அதிகம்.

விளைந்தது இந்தப் பட்டறை. இப்பட்டறையிலிருந்து பிறந்தன இயந்திரங்கள். இந்த இயந்திரங்கள்தாம் சமூகப் பொருளுற்பத்தியை ஒழுங்கியக்குகிற கோட்பாடாயிருக்கும் கைவினைஞனின் பணியை அகற்றுகின்றன. இவ்விதம் ஒரு புறம், தொழிலாளியை ஒரு நுணுக்கப் பணியோடு ஆயுள் பரியந்தம் பிணைத்து விடுவதற்கான தொழில் நுட்பக் காரணம் நீக்கப்படுகிறது. மறு புறம், இந்தக் கோட்பாட்டினால் மூலதனத்தின் ஆதிக்கத்துக்கு இடப்பட்ட விலங்குகள் முறிந்து விழுகின்றன.

# முதலாளித்துவ உற்பத்தி

### பகுதி IV. — (தொடர்ச்சி)

# ஒப்பீட்டு உபரி-மதிப்பின் உற்பத்தி

## அத்தியாயம் XV

## இயந்திர சாதனமும் நவீனத் தொழில் துறையும்

### பிரிவு 1.—இயந்திர சாதனத்தின் வளர்ச்சி

ஜான் ஸ்டுவர்ட் மில் ''அரசியல் பொருளாதாரத்தின் கோட்பாடுகள்'' என்ற நூலில் சொல்கிறார்: ''இதுவரை செய்யப்பட்டுள்ள இயந்திரக் கண்டுபிடிப்புகளெல்லாம் எம்மனிதனதும் அன்றாட உழைப்பை இலகுவாக்கியிருக்கின்றனவா என்பது கேள்விக்கிடமானதே.''[482] ஆயினும், இயந்திர சாதனத்தை [machinery] முதலாளித்துவ வழியில் பிரயோகிப்பதன் நோக்கம் மனித உழைப்பை இலகுவாக்குவதன்று. உழைப்பின் உற்பத்தித் திறனிலான மற்ற ஒவ்வொரு அதிகரிப்பையும் போலவே, இயந்திர சாதனங்களும், சரக்குகளை மலிவாக்கும் நோக்கத்துக்காகவும், தொழிலாளி தனக்காக வேலை செய்கிற வேலை-நாட் பகுதியைக் குறுக்கி, அவர் ஒரு சமதையில்லாமலே முதலாளிக்கு விட்டுக் கொடுக்கிற எஞ்சிய பகுதியை நீளச் செய்யும் நோக்கத்துக்காகவுமே பயன்படுத்தப் படுகின்றன. சுருங்கச் சொல்லின், அவை உபரி-மதிப்பை உற்பத்தி செய்வதற்கான சாதனமாகும்.

உற்பத்தி முறையிலான புரட்சி, பட்டறைத் தொழிலில் உழைப்புச் சக்தியிலிருந்து ஆரம்பிக்கிறது; நவீனத் தொழில் துறையில் உழைப்புச் சாதனங்களிலிருந்து ஆரம்பிக்கிறது. அப்படியானால், நமது முதல் ஆராய்ச்சி, உழைப்புச் சாதனங்கள் கைக்கருவிகளென்ற நிலையிலிருந்து இயந்திரங்களாக மாற்றப்படுவது எப்படி, அல்லது இயந்திரத்துக்கும் கைத்தொழிலின் கருவிகளுக்கும் இடையிலுள்ள வேறுபாடு என்ன என்பதாகும். எடுப்பாகத் தெரியும் பொதுவான சிறப்பியல்புகள் மட்டுமே இங்கே நம் கருத்துக்குரியவை. ஏனெனில் நிலக்கூறியல் சகாப்தங்களைப் போலவே

---

482 ''பிறர் உழைப்பை உண்டு வாழாத எம்மனிதனதும்'' என்று மில் சொல்லியிருக்க வேண்டும். ஏனெனில், இயந்திர சாதனங்கள் வசதி படைத்த சோம்பேறிகளின் எண்ணிக்கையைப் பெரிதும் அதிகப்படுத்தியுள்ளன என்பதில் சந்தேகமில்லை.

சமுதாய வரலாற்றில் வரும் சகாப்தங்களும் தெளிவான, திட்ட வட்டமான எல்லைக் கோடுகளால் ஒன்றிலிருந்து ஒன்று பிரிக்கப் படாதவையாக உள்ளன.

கணிதவியலாளர்களும் இயந்திரவியலாளர்களும் — இதில் ஆங்கி லேயப் பொருளாதார அறிஞர்கள் சிலர் அவர்களைப் பின்பற்று கின்றனர் — கருவியை சாமானிய இயந்திரமென்றும், இயந்திரத்தை சிக்கலான கருவியென்றும் அழைக்கின்றனர். அவர்கள் அவற் றிடையே அடிப்படையான வேறுபாட்டைதையும் பார்ப்பதில்லை; யாந்திரிகத் திறனளிக்கும் நெம்புகோல், சாய்தளம், திருகாணி, ஆப்பு போன்ற சாமானியக் கருவிகளுக்கே கூட இயந்திரம் என்று பெயர் சூட்டுகின்றனர்.[483] உள்ளபடியே ஒவ்வொரு இயந்திரமும் அந்த சாமானியத் திறன்களின் — அவை எந்த வேடம் பூண்டிருப் பினும் — ஒன்றிணைப்பேயாகும். பொருளாதாரக் கண்ணோட் டத்தில் இந்த விளக்கம் ஒன்றுக்கும் உதவாது; ஏனெனில் இது வரலாற்றுப் பார்வை இல்லாதது. கருவிக்கும் இயந்திரத்துக்குமுள்ள வேறுபாட்டை வேறொரு விதமாகவும் விளக்குகின்றனர்: கருவிக்கு மனிதனே இயக்கு விசை. ஆனால் இயந்திரத்துக்கு மனிதனல்லாத வேறொன்றுதான் — மிருகம், நீர், காற்று போன்ற ஒன்றுதான் — இயக்குவிசை.[484] இதன்படி, மிகவும் வேறுபட்ட சகாப்தங்களுக்குப் பொதுவான சாதனமாகிய மாடு இழுத்துச் செல்லும் ஏர் ஒரு இயந்திரமாகி விடும்; தனியொரு தொழிலாளியால் இயக்கப்பட்டு நிமிடத்துக்கு 96,000 குத்தூசிகளை இயக்கி நெய்கிற கிளாசனின் வட்டத் தறி வெறும் கருவியாகி விடும். அது மட்டுமன்று; இதே தறி கையால் இயக்கப்படுகையில் கருவியாகவே இருக்கும்; நீராவியால் இயக்கப்படுகையில் இயந்திரமாகி விடும். மிருகச் சக்தியை உபயோ கிப்பது மனிதனின் மிக ஆரம்பகாலக் கண்டுபிடிப்புகளில் ஒன்று என்பதால், இயந்திர சாதன வழி உற்பத்தி கைத்தொழில் வழி உற்பத் திக்கு முன்னரே நடந்தது என்றாகி விடும். 1735இல் ஜான் வியாட் தமது நூற்பு இயந்திரத்தை வெளிக் கொணர்ந்து, 18ஆவது நூற் றாண்டின் தொழிற் புரட்சியைத் தொடங்கி வைத்த போது, அந்த இயந்திரத்தை மனிதனுக்குப் பதிலாகக் கழுதையே இழுத்துச் சென்று இயக்கியதென அவர் குறிப்பிடவில்லை. ஆனாலும், கழுதைதான்

---

483 எடுத்துக்காட்டாக, பார்க்கவும்: ஹட்டன் எழுதிய ''கணிதவியலின் பாதை.''

484 ''இந்தக் கண்ணோட்டத்திலிருந்து, கருவிக்கும் இயந்திரத்துக்குமிடையே தெளி வானதோர் எல்லைக் கோட்டை நாம் வரையலாம்; மண்வெட்டிகள், சுத்தியல்கள், உளிகள் முதலானவை, நெம்புகோல்களின் சேர்க்கைகள், திருகாணிகளின் சேர்க்கைகள் இவையெல்லாம் இதர வழிகளில் எவ்வளவுதான் சிக்கலானவையாக இருந்தாலும், மனிதனை இயக்குவிசையாகக் கொண்டவை....இவை யாவும் கருவி என்ற வகைக்குட்படு கின்றன; ஆனால் மிருகச் சக்தியால் இழுக்கப்படும் ஏரும், காற்று விசையாலைகள் போன்றவையும் இயந்திரங்களின் வகையில் சேர்க்கப்பட வேண்டும்.'' (வில்ஹெல்ம் ஷுல்ஸ்: ''Die Bewegung der Produktion,'' ஜூரிச், 1843, பக்கம் 38.) பல விதத் திலும் இப்புத்தகம் குறிப்பிடத்தக்கது.

அதை இயக்கிற்று. ''விரல்களில்லாமல் நூற்பதற்கான'' இயந்திர மென அவர் அதை வர்ணித்தார்.[485]

முழு வளர்ச்சி பெற்ற இயந்திர சாதனங்கள் அனைத்தும் விசை யூட்டும் இயங்கமைப்பு [motor mechanism], விசை செலுத்தும் இயக்கமைப்பு [transmitting mechanism], இறுதியாக கருவி அல்லது வேலைப் பொறி [tool or working machine] ஆகிய—அடிப் படையில் வேறுபட்ட—மூன்று பாகங்களால் ஆனவை. விசை யூட்டும் இயங்கமைப்பு என்பது இயந்திரம் முழுவதையும் இயக்கி விடுவதாகும். நீராவி எஞ்சின், வெப்ப எஞ்சின், மின்காந்த இயந்திரம் முதலானவை போன்று, அது தன் இயக்கு விசை யைத் தானே உற்பத்தி செய்து கொள்கிறது; அல்லது, நீரோட்டத் திலிருந்து நீர்விசைச் சக்கரமும், காற்றிலிருந்து காற்று விசையாலை யும் பெறுவதைப் போல, ஏற்கெனவே இருந்து வரும் ஏதேனு மொரு இயற்கைச் சக்தியிடமிருந்து தன் உந்துசக்தியைப் பெறுகிறது. சுற்றுச் சக்கரங்கள், சுழல்தண்டு, பற்சக்கரங்கள், கப்பிகள், தோல் வார்கள், கயிறுகள், பட்டைகள், சக்கரக் கண்ணிகள், பல்வேறு வகைச் சக்கரப் பல்லிணைகள் ஆகியவற்றாலான விசை செலுத்தும் இயங்கமைப்பு இயக்கத்தை ஒழுங்குபடுத்தி, அவசியமான இடங் களில் அதன் வடிவத்தை—எடுத்துக்காட்டாக, நேர்கோட்டியக் கத்தை வட்ட இயக்கமாக—மாற்றுகிறது; அதை வேலைப் பொறி களிடையே பிரித்துப் பங்கிடுகிறது. இயங்கமைப்பு முழுமையின் இந்த முதலிரு பாகங்களும் இருப்பது வேலைப் பொறிகளை இயக்கி விடுவதற்காகவே; இவ்வாறு இயங்கும் வேலைப் பொறிகள் உழைப் பின் இலக்குப் பொருளைப் பற்றிக் கொண்டு, வேண்டியவாறு திருத்தியமைக்கின்றன. கருவி அல்லது வேலைப் பொறி என்னும் இயந்திர சாதனப் பாகத்திலிருந்துதான் 18ஆம் நூற்றாண்டின் தொழிற் புரட்சி தொடங்கியது. நாளது வரை, ஒரு கைத்தொழிலோ ஒரு பட்டறைத் தொழிலோ இயந்திர சாதனங்களால் நடத்தப்படும் தொழில் துறையாக மாற்றப்படும் போதெல்லாம், இம்மாற்றத்துக் கான தொடக்க நிலையாக அமைவது இந்தப் பாகம்தான்.

---

485 எவ்வளவுதான் செப்பமற்றவை என்றாலும், நூற்பு இயந்திரங்கள் அவரது காலத்துக்கு முன்பிருந்தே பயன்படுத்தப்பட்டு வந்தன; அநேகமாக அவை முதலில் தோன்றிய நாடு இத்தாலியே எனலாம். பெரும்பாலும் 18ஆம் நூற்றாண்டின் கண்டு பிடிப்புகள் எதுவும் தனியொருவரின் படைப்பாக அமையவில்லை என்பதைத் தொழில் நுட்பவியலின் விமர்சனபூர்வ வரலாறு காட்டும். அப்படியொரு நூல் இது வரை கிடையாது.. இயற்கையின் தொழில்நுட்பவியல் வரலாற்றில், அதாவது தாவரங்கள், மிருகங்களின் உறுப்புகள்—உயிர் வாழ வகை செய்யும் உற்பத்திக் கருவிகளாகப் பயன் படுத்தப்படும் இந்த உறுப்புகள்—உருவமைவதில், டார்வின் நம்மை அக்கறை கொள்ளச் செய்கிறார். பொருளுற்பத்திக்குப் பயன்படும் மனித உறுப்புகளின் வரலாறு—சமூக ஒழுங்கமைப்பு அனைத்தின் பொருளாயத அடிப்படையாக விளங்கும் இந்த உறுப்பு களின் வரலாறு—அதே அளவு அக்கறைக்குரியதன்றோ? விக்கோ கேட்பது போல, இப்படியொரு வரலாற்றைத் தொகுப்பது எளிதன்றோ? நாம் மனிதனின் வரலாற்றைப்

முறையான வேலைப் பொறியை இன்னும் உன்னிப்பாக ஆராயும் போது, பொதுவாகச் சொன்னால் கைவினைஞன் அல்லது பட்டறைத் தொழிலாளி பயன்படுத்திய உபகரணங் களையும் கருவிகளையும் அந்த வேலைப் பொறியில் நாம் கண்டு கொள்ளலாம் (பல சந்தர்ப்பங்களில் அவற்றின் வடிவங்கள் பெரிதும் மாறிப் போயிருப்பது மெய்தான்). அவை மனிதனின் கைக்கருவிகளாக இருப்பதற்கு பதில் ஓர் இயங்கமைப்பின் கைக் கருவிகளாக, அதாவது இயந்திரக் கைக்கருவிகளாக உள்ளன என்பதுதான் இரண்டுக்குமுள்ள வேறுபாடு. ஒன்று, இயந்திரம் முழுவதுமே அதிகமாகவோ குறைவாகவோ மாற்றி அமைக்கப்பட்ட பழைய கைத்தொழிற் கருவியின் இயந்திரப் பதிப்பே—எடுத்துக் காட்டு: விசைத் தறி.[486] அல்லது, இயந்திரத்தின் சட்டத்தில் பொருத் தப்பட்டுள்ள வேலை-உறுப்புக்கள் (மியூலில் கதிர்களைப் போல வும், காலுறைத் தறியில் ஊசிகளைப் போலவும், மரமறுக்கும் இயந் திரத்தில் ரம்பங்களைப் போலவும், வெட்டும் இயந்திரத்தில் கத்தி களைப் போலவும்) நமது பழைய கூட்டாளிகளே. இந்தக் கருவி களுக்கும் இயந்திரத்தின் முறையான உடற்பகுதிக்குமுள்ள வேறுபாடு அவற்றின் பிறப்பு முதற்கொண்டே இருந்து வருவதாகும். ஏனெனில், அவை பெரும்பாலும் கைத்தொழிலிலோ பட்டறைத் தொழிலிலோ தொடர்ந்து உற்பத்தி செய்யப்பட்டு, இயந்திர சாதனங்களால் உற் பத்தி செய்யப்படும் இயந்திரத்தின் உடற்பகுதியில் பிற்பாடு பொருத் தப்படுகின்றன.[487] எனவே முறையான இயந்திரம் என்பது, இயக்கி விடப்பட்ட பின், தன் கருவிகளைக் கொண்டு, முன்னதாகத்

---

படைத்திருக்கிறோம், இயற்கையின் வரலாற்றைப் படைக்கவில்லை என்பதுதானே இரண் டுக்குமுள்ள வேறுபாடு? மனிதன் இயற்கையைப் பயன்படுத்திக் கொள்கிற முறையை—அவன் வாழ்வதற்கு வகை செய்யும் பொருளுற்பத்தி நிகழ்முறையை—தொழில் நுட்ப வியல் வெளிப்படுத்துகிறது; இதன் மூலம் அது அவனது சமூக உறவுகளும், அவற்றிலிருந்து ஊற்றெடுக்கிற கருத்துருவங்களும் வடிவமையும் முறையையும் புலப்படச் செய்கிறது. இந்தப் பொருளாயத அடிப்படையைக் கணக்கிலெடுத்துக் கொள்ளத் தவறுகிற சமய வரலாறும் கூட விமர்சன பூர்வமற்றதே. எதார்த்தத்தில், சமயத்தினது மாய சிருஷ்டிகளின் மண்ணுலகக் கருவைப் பகுப்பாய்வின் மூலம் கண்டுபிடிப்பது அவ்வளவு கடினமன்று. ஆனால் உள்ளபடியே நிலவுகிற வாழ்க்கை உறவுகளிலிருந்து அவ்வுறவுகளுக்குரிய விண்ணுலக வடிவங்களை வகுத்தமைப்பது மெத்தக் கடினமாகும். இந்த இரண்டாவது வழிமுறைதான் பொருள்முதல்வாத வழிமுறையாகும்; ஆதலால் விஞ்ஞான வழிமுறையாகும். இயற்கை விஞ்ஞானத்தினது தூக்கும் பொருள்முதல் வாதத்தின் [abstract materialism]—வரலாற்றையும் அதன் நிகழ்முறையையும் ஒதுக்கி விடுகிற இந்தப் பொருள்முதல்வாதத்தின்—பலவீனங்கள், இயற்கை விஞ்ஞானிகள் அவர்களது தனித்துறையின் எல்லைகளைக் கடந்து வந்து வெளியிடுகிற தூக்கும், சித்தாந்தக் கருத்தமைவுகளில் உடனே தெளிவாகப் புலப்படுகின்றன.

[486] விசைத் தறியை, குறிப்பாக ஆரம்ப கால விசைத் தறியைப் பார்த்த மாத்தி ரத்தில் புராதனத் தறியின் சாயலைக் கண்டு கொள்கிறோம். நவீன கால விசைத் தறி வடிவத்தில் அடிப்படையான மாற்றங்களை அடைந்துள்ளது.

[487] இங்கிலாந்தில் கடந்த 15 ஆண்டு காலமாகத்தான் (அதாவது அநேகமாக 1850 இலிருந்துதான்) இந்த இயந்திரக் கருவிகள்—மேலும் மேலும் அதிகமாக—இயந்திர

தொழிலாளி அது போன்ற கருவிகளைக் கொண்டு செய்து வந்த அதே பணிகளைச் செய்கிற இயங்கமைப்பாகும். இயக்கு விசை மனிதனிடமிருந்து பெறப்பட்டாலும் சரி, பிறிதொரு இயந்திரத்திடமிருந்து பெறப்பட்டாலும் சரி, இங்கு எல்லாம் ஒன்றுதான். முறையான கைக்கருவி எனப்படுவதை மனிதனிடமிருந்து எடுத்து ஓர் இயங்கமைப்பில் பொருத்தும் கணமுதற்கொண்டே வெறும் கருவி என்பது இயந்திரமாகி விடுகிறது. மனிதனே பிரதம இயக்கியாக நீடிக்கும் நிலைகளிலும் கூட இவ்வேறுபாடு எடுப்பாய்த் தெரிகிறது. அவன் தன்னளவில் ஒருங்கே பயன்படுத்தக் கூடிய கருவிகளின் எண்ணிக்கைக்கு அவனது இயற்கையான உற்பத்திக் கருவிகளின், அதாவது அவனது உடல் உறுப்புகளின் எண்ணிக்கை வரம்பிடுகிறது. ஜெர்மனியில், முதலில், ஒரு நூற்பாளர் இரு இராட்டைகளை இயக்குமாறு, அதாவது ஒரே சமயத்தில் இரு கைகளாலும் இரு கால்களாலும் இயக்குமாறு செய்ய முயன்றார்கள்; முடியவில்லை. பின்னர் இரு கதிர்களுடன் கூடிய கால்மிதி இராட்டை கண்டுபிடிக்கப்பட்டது; ஆனால் ஒரே நேரத்தில் இரண்டு இழைகளை நூற்கக் கூடிய நூற்புச் சூரர்கள் இரட்டைத் தலை மனிதர்களைப் போல் அபூர்வமே. ஆனால், ஜென்னி ஆரம்பத்திலேயே 12-18 கதிர்களை இயக்கி நூற்றது. காலுறைத் தறி ஒரே நேரத்தில் பல்லாயிரம் ஊசிகளை இயக்கிப் பின்னுகிறது. கைவினைஞர் உபயோகிக்கும் கருவிகளின் தொகைக்கு அவரது அங்கங்கள் வரம்பிடுகின்றன; ஆனால் ஓர் இயந்திரம் ஏககாலத்தில் இயக்கக் கூடிய கருவிகளின் தொகை ஆரம்பமுதலே மேற்சொன்ன வரம்பிலிருந்து விடுதலை பெற்று விடுகிறது.

வெறும் இயக்கு விசையாகவுள்ள மனிதனுக்கும், முறையான தொழிலாளி அல்லது இயக்கியாக உள்ள மனிதனுக்கும் இடையிலான வேறுபாடு பல கைக்கருவிகளில் எடுப்பான முறையில் வெளிப்படுகிறது. எடுத்துக்காட்டாக, காலானது நூற்புச் சக்கரத்தில் பிரதம இயக்கியாக மட்டுமே இருக்க, கையோ கதிரைக் கொண்டு செயல்பட்டும், இழுத்தும் திரித்தும் உண்மையான நூற்பு வேலையை நிறைவேற்றுகிறது. தொழிற் புரட்சி முதலில் பற்றுவது நூற்புச் சக்கரத்தின் இந்த இரண்டாவது பாகத்தையே. இப்புரட்சியானது, கண்களால் இயந்திரங்களைக் கண்காணிப்பது, கைகளால் பிழைகளை சரி செய்வது என்ற புதிய உழைப்போடு கூட, இயக்கு விசையாகச் செயல்படும் வெறும் யாந்திரிகப் பணியைத்

---

சாதனங்களால் தயாரிக்கப்படுகின்றன; அதுவும் இயந்திரங்களைத் தயாரிக்கிற உற்பத்தியாளர்களல்லாதாரால் தயாரிக்கப்படுகின்றன. இந்த இயந்திரக் கருவிக்ளின் புனைவுக்கு இயந்திரங்கள் பயன்படுத்தப்படுவதன் உதாரணங்கள்: தானியங்கி நூல்-உருளைத் தயாரிப்பு எஞ்சின், அட்டை அடுக்கு எஞ்சின், ஊடுநூல் ஒடக்கட்டை தயாரிப்பு இயந்திரங்கள், மியூல் மற்றும் திராஸில் கதிர்களை வார்ப்பதற்கான இயந்திரங்கள் ஆகியவை.

தொழிலாளிக்கு விட்டு வைக்கிறது. மறு புறம், மனிதன் எப்போதுமே சாமானிய இயக்கு விசையாகச் செயல்பட்டிருக்கும் கருவிகளில்—எடுத்துக்காட்டாக ஆலையின் சுழற்றியைத் திருப்புவது,[488] இறைப்பது, துருத்தியின் கைப்பிடியை மேலும் கீழும் அசைப்பது, உலக்கையால் இடிப்பது போன்ற செயல்களோடு தொடர்புள்ள கருவிகளில் மிருகங்களையும், நீரையும்,[489] காற்றையும் இயக்கு விசைகளாகப் பயன்படுத்த வேண்டிய நிலை விரைவில் ஏற்படுகிறது. சிற்சில இடங்களில் பட்டறைத் தொழிற் காலத்துக்கு நெடுங்காலம் முன்னரே, ஓரளவுக்குப் பட்டறைத் தொழிற் காலத்திலும் கூட, இக்கருவிகள் இயந்திரங்களாக மாற்றமடைகின்றன; ஆனால் உற்பத்தி முறையில் புரட்சி எதையும் ஏற்படுத்தாமலே இம்மாற்றம் நிகழ்கிறது. இந்தக் கருவிகள் கைக் கருவிகளென்ற அவற்றின் வடிவத்திலேயே இயந்திரங்களாகி விட்டன என்பது நவீனத் தொழில் துறையின் காலத்தில் தெளிவாகிறது. எடுத்துக்காட்டாக, 1836-37இல் டச்சுக்காரர்கள் ஹார்லம் ஏரியில் பயன்படுத்திய இறைவைப் பொறிகள் சாதாரண இறைவைப் பொறிகளது தத்துவத்தின் அடிப்படையில் அமைந்தவையே: அவற்றின் உந்துதண்டுகள் [pistons] மனிதர்களால் இயக்கப்படுவதற்கு பதில் இராட்சத நீராவி எஞ்சின்களால் இயக்கப்பட்டன என்பது ஒன்றுதான் வேறுபாடு. இங்கிலாந்தில், கருமானின் செம்மையற்ற சாதாரணத் துருத்தியின் பிடியை நீராவி எஞ்சினுடன் இணைத்து, துருத்தியைக் காற்றடிப்பு எஞ்சினாக மாற்றுவதுண்டு. நீராவி எஞ்சினே கூட, 17ஆம் நூற்றாண்டின் இறுதியில் பட்டறைத் தொழிற் காலத்தில் அது கண்டுபிடிக்கப்பட்ட நேரத்தில் இருந்த நிலையிலும், 1780 வரை அது தொடர்ந்து இருந்து வந்த நிலையிலும்[490] தொழிற் புரட்சி எதையும் உண்டாக்கி விட

---

488 மோசே சொல்கிறார்: ''தானியக் கதிரை மிதித்துப் போரடிக்கிற எருதின் வாயைக் கட்டாதிருப்பாயாக.'' இதற்கு மாறாக, ஜெர்மனியின் கிறிஸ்தவப் பரோபகாரிகள், அரைப்பதற்கான இயக்குவிசையாகத் தாங்கள் பயன்படுத்திக் கொண்ட பண்ணையடிமைகள் மாவைக் கையிலெடுத்து வாயில் போட்டுக் கொள்ளாமல் தடுக்கும் பொருட்டு, அவர்களது கழுத்தில் மரப்பலகை இட்டனர்.

489 நல்ல அருவியுடன் கூடிய நீரோடைகள் இல்லாததாலும், பிற வழிகளில் நீர் மிதமிஞ்சி விடுவதை எதிர்த்து நிற்க வேண்டியிருந்ததாலும்தான், டச்சுக்காரர்கள் காற்றை இயக்குவிசையாகப் பயன்படுத்த நேரிட்டது. காற்று விசையாலையை அவர்கள் ஜெர்மனியிலிருந்து பெற்றனர்; ஜெர்மனியில் காற்று விசையாலையின் கண்டுபிடிப்பு, பிரபுகளுக்கும் பாதிரியார்களுக்கும் பேரரசருக்கும் இடையே காற்று அம்மூவரில் யாருக்கு ''சொந்தம்'' என்ற வினோத சச்சரவு எழக் காரணமாயிற்று. ஜெர்மனியில் காற்றால் விமோசனமில்லை என்ற கூப்பாடு ஒலித்த நேரத்தில், ஹாலந்தில் காற்றால் விமோசனம் கிட்டியது. இவ்வகையில் அதனால் விமோசனம் அடைந்தது டச்சுக்காரரேயன்றி, டச்சுக்காரரின் நிலமன்று. ஹாலந்தில் 1836இலும் கூட 6,000 குதிரைத் திறனுடைய 12,000 காற்று விசையாலைகள் தொடர்ந்து இயங்கி, மூன்றிலிரு பங்கு நிலம் திரும்பவும் சதுப்புகளாகி விடாமல் தடுத்தன.

490 ஒற்றைச் செயல் எஞ்சின் என்று அழைக்கப்பட்ட வாட்டின் முதல் எஞ்சினால்

வில்லை. மாறாக, இயந்திரங்கள் கண்டுபிடிக்கப்பட்டதுதான் நீராவி எஞ்சின்களின் வடிவத்தில் ஒரு புரட்சியை அவசியமாக்கியது. மனிதன் தனது உழைப்பின் இலக்குப் பொருள் மீது ஒரு கருவியைக் கொண்டு வேலை செய்வதற்குப் பதில் ஓர் இயந்திர சாதனத்தின் வெறும் இயக்குவிசையான பின், இயக்குவிசை மனிதத் தசையாக வடிவம் தரிப்பது முற்றிலும் தற்செயலானதே. காற்று, நீர் அல்லது நீராவியாக அது வடிவம் தரிப்பதும் அதே அளவுக்கு சாத்தியம்தான். என்றாலும் இத்தகைய வடிவ மாற்றம், மனிதனால் மட்டுமே இயக்கப்படக் கூடிய முறையில் ஆரம்பத்தில் அமைக்கப் பட்ட இயங்கமைப்பில் பெரும் தொழில்நுட்ப மாற்றங்களை ஏற் படுத்துவதற்குத் தடை ஏதுமில்லை. இப்போதெல்லாம், மேம்பட வழியுள்ள எல்லா இயந்திரங்களும், சிறு வீதத்தில் அவற்றைப் பயன் படுத்துவது அவற்றின் இயல்பாலேயே தவிர்க்கப்படாத வரை, மனித இயக்கு விசை, முழுக்க முழுக்க இயந்திர இயக்குவிசை ஆக இரண்டாலுமே இயக்கப்படக் கூடிய முறையில் அமைக்கப்படு கின்றன; தையல் இயந்திரங்களையும் ரொட்டித் தயாரிப்பு இயந் திரங்களையும் உதாரணமாய் குறிப்பிடலாம்.

தொழிற் புரட்சியின் தொடக்க நிலையாக அமைகிற இயந்திரம் ஒரே ஒரு கருவியை மட்டும் கையாள்கிற தொழிலாளிக்குப் பதிலாக அது போன்ற அநேகக் கருவிகளை வைத்து வேலை செய்கிற, ஒரே இயக்கு விசையால்— அவ்விசையின் வடிவம் எதுவானாலும்— இயக்கி விடப்படுகிற இயங்கமைப்பைக் கொண்டு வருகிறது.[491] இங்கே, நாம் இயந்திரத்தைக் காண்கிறோம்; ஆனால் இயந்திர சாதன வழிப் பொருளுற்பத்தியின் ஆரம்பக் காரணியாக மட்டுமே காண்கிறோம்.

இயந்திரத்தின் பருமனும், அதன் வேலைக் கருவிகளின் எண் ணிக்கையும் அதிகரிக்கையில், அதை ஓட்டுவதற்குப் பெரும் பரும னுள்ள இயங்கமைப்பு அவசியமாகிறது. இந்த இயங்கமைப்பின் நிலைம எதிர்வை [resistance] சமாளிக்கும் பொருட்டு, மனிதனிட மிருப்பதை விட வலுவான இயக்கு விசை அவசியமாகிறது; இதன் னியில் ஒரே சீரான தொடர்ச்சியான இயக்கத்தை உண்டாக்க மனிதன் செப்பமற்ற சாதனமே ஆவான் என்பதையும் குறிப்பிட வேண்டும். ஆனால், அவனது கருவிக்கு பதில் இயந்திரம் வந்து, அவன் விசையூட்டியாக மட்டும் செயல்படுகிறான் என்னும் போது, அவனுக்கு பதில் இயற்கைச் சக்திகள் இச்செயலைச் செய்ய முடியும் என்பது தெளிவாகிறது. பட்டறைத் தொழிற் காலத்திலிருந்து

---

அது வெகுவாக மேம்படுத்தப்பட்டது மெய்தான்; ஆனால் இந்த வடிவத்திலும் கூட, நிலத்திலிருந்து நீர் இறைப்பதற்கும், உப்புச் சுரங்கங்களிலிருந்து கசிவு நீரை வெளியேற்று வதற்குமான இயந்திரமாகவே அது நீடித்தது.

491 ''ஒரே ஒரு விசையூட்டியால் இயக்கி விடப்படும் இந்தச் சாமானியக் கருவிகள் அனைத்தின் இணைவே இயந்திரமாக அமைகிறது.'' (பாபேஜ், முன் வந்தது.)

கைவரப் பெற்ற பெரிய விசையூட்டிகள் அனைத்திலும் குதிரைச் சக்தியே மிக மோசமானது; ஏனெனில், குதிரைக்குச் சொந்த மாகத் தலை ஒன்று இருக்கிறது என்பதோடு, அதற்காகும் செலவும் அதிகம்; அது தொழிற்சாலைகளில் அதிகம் பயன்படுத்த வசதி படாத ஒன்று.[492] ஆயினும், நவீனத் தொழில் துறையின் குழந் தைப் பருவத்தில் குதிரை விரிவாகப் பயன்படுத்தப்பட்டது. இதற்கு, அக்காலத்திய சாகுபடியாளர்கள் குதிரைகளைப் பற்றிக் கூறியுள்ள குறைகளோடு, இயந்திர சக்தியைத் தெரிவிக்க இன்றும் பயன்படும் ''குதிரைத் திறன்'' [horse-power] என்ற பதமும் தக்க சான்றாகும்.

காற்று மிகவும் நிலையற்றதாகவும், கட்டுப்படுத்த முடியாத தாகவும் இருந்தது; மேலும், நவீனத் தொழில் துறையின் பிறப்பிட மான இங்கிலாந்தில் நீர்ச் சக்தியின் உபயோகம் பட்டறைத் தொழிற் காலத்திலும் கூட முதலிடம் வகித்தது. 17 ஆம் நூற்றாண்டிலேயே, இரு ஜோடி ஏந்திரக் கற்களை ஒரே ஒரு நீர்விசைச் சக்கரத்தைக் கொண்டு இயக்குவதற்கு முயற்சிகள் செய்யப்பட்டன. ஆனால் சக்கரப் பல்லிணையின் கூடுதலான பருமனை இப்போது பற்றாக் குறையாகி விட்ட நீர்ச்சக்தியால் சமாளிக்க முடியவில்லை. உராய் வின் விதிகளை மேலும் நுட்பமாக ஆராய்வதற்கு இட்டுச் சென்ற

---

[492] 1861 ஜனவரியில், ''விவசாயத்தில் ஈடுபடுத்தப்படும் சக்திகள்'' பற்றி ஜான் சா. மார்ட்டன் கலைகள் கழகத்தில் ஓர் ஆய்வுரையை வாசித்தார். அதில் அவர் சொல்லுகிறார்: ''நிலத்தின் சீர்மையை அதிகப்படுத்துகிற ஒவ்வொரு மேம்பாட்டையும் தொடர்ந்து கலப்பற்ற யாந்திரிகச் சக்தியின் உற்பத்திக்கு நீராவி எஞ்சின் மேலும் மேலும் பயன்படத் தக்கதாகிறது. கோணல்மாணலான வேலிகளும் ஏனைய தடங்கல்களும் சீரான செயலைத் தடுக்கிற இடங்களிலெல்லாம் குதிரைச் சக்தி அவசியமாகிறது. இந்தத் தடங்கல்கள் நாளுக்கு நாள் மறைந்து வருகின்றன. நேரடியான பலப்பிர யோகத்தைக் காட்டிலும் சித்தத்தை ஈடுபடுத்தி செய்ய வேண்டிய பணிகளுக்குப் பயன் படத்தக்க ஒரே விசை மனித மூளையால் சர்வசதாகாலமும் கட்டுப்படுத்தப்படும் விசையே — அதாவது மனித சக்தியே.'' பின்னர் திரு மார்ட்டன் நீராவிச் சக்தி, குதிரைச் சக்தி, மனித சக்தி ஆகியவற்றை, நீராவி எஞ்சின்களுக்குப் பொது உபயோகத்திலிருக்கும் அலகாக, அதாவது 33,000 இராத்தலை ஒரு நிமிடத்தில் ஒரு அடி உயர்த்துவதற்கு அவசியமான சக்தியாகக் கணக்கிட்டு, ஒரு குதிரைத் திறனை ஒரு நீராவி எஞ்சினிட மிருந்து பெறுவதற்காகும் செலவு மணிக்கு 3 பென்னி என்றும், ஒரு குதிரையிடமிருந்து பெறுவதற்காகும் செலவு மணிக்கு 5½ பென்னி என்றும் மதிப்பிடுகிறார். மேலும், குதிரை நலமாயிருக்க வேண்டுமாயின் நாளுக்கு 8 மணி நேரத்துக்கதிகமாக அதை வேலை வாங்கக் கூடாது. நீராவிச் சக்தியைப் பயன்படுத்தினால், ஓராண்டு காலத்தில் உழுநிலத்தில் உபயோகிக்கப்படும் குதிரைகள் குறைந்தது ஏழில் மூன்று வீதம் தேவையற்றவையாகி விடும். நீராவிச் சக்திக்கு ஆகும் செலவு, தேவையற்றவையாகிற குதிரைகளுக்கு (அவை பயன் வாய்ந்தவையாய் அமையக் கூடிய 3 அல்லது 4 மாத காலத்தில்) ஆகும் செலவை விட அதிகமில்லை. கடைசியாக, நீராவிச் சக்தி, அது பயன் படக் கூடிய விவசாயப் பணிகளில், குதிரைச் சக்தியுடன் ஒப்பிடுமிடத்து வேலையின் தரத்தை மேம்படுத்துகிறது. ஒரு நீராவி எஞ்சினின் வேலையைச் செய்ய மணிக்கு 15 ஷில்லிங் மொத்தச் செலவு செய்து 66 ஆட்களை அமர்த்த வேண்டி வரும். ஒரு குதிரையின் வேலையைச் செய்வதற்கு மணிக்கு 8 ஷில்லிங் மொத்தச் செலவு செய்து 32 ஆட்களை அமர்த்த வேண்டி வரும்.

சூழ்நிலைகளில் இதுவும் ஒன்று. இதே விதத்தில் நெம்புகோலைத் தள்ளியும் இழுத்தும் இயக்கப்பட்ட ஆலைகளில் இயக்குவிசையால் ஏற்பட்ட சீரொழுங்கின்மை பிற்பாடு நவீனத் தொழில் துறையில் இவ்வளவு முக்கியப் பங்கு வகிக்கிற சுற்றுச் சக்கரத்தின் [fly-wheel] தத்துவத்துக்கும் பிரயோகத்துக்கும் வழி வகுத்தது.[493] இவ்வாறாக, பட்டறைத் தொழிற் காலத்தில், நவீன இயந்திரத் தொழில் துறையின் விஞ்ஞான, தொழில் நுட்ப ஆரம்பக் கூறுகள் வளர லாயின. ஆர்க்ரைட்டின் திராஸில் நூற்பாலை ஆரம்ப முதலே நீரால் இயக்கப்பட்டது. அப்படியும் கூட, நீரைப் பிரதான இயக்கு விசையாகப் பயன்படுத்துவதிலும் சிரமங்கள் இருந்தன. அதை விருப்பம் போல் அதிகமாக்க முடியவில்லை; ஆண்டின் சில பருவங்களில் அது கிடைப்பதில்லை; அனைத்துக்கும் மேலாக, அது பெரும்பாலும் வட்டார அளவிலானதாகவே இருந்தது.[494] இரட்டைச் செயல் நீராவி எஞ்சின் என்றழைக்கப்பட்ட வாட்டின் இரண்டாவது நீராவி எஞ்சின் கண்டுபிடிக்கப்பட்ட பிறகே ஒரு பிரதம இயக்கி [prime mover] கிடைத்தது. இவ்வியக்கி நிலக் கரியையும் நீரையும் உட்கொண்டு தன் சொந்தச் சக்தியை உண் டாக்கிக் கொள்ளக் கூடியது; இதன் விசை முழுக்க முழுக்க மனிதனின் கட்டுப்பாட்டிற்கு உட்பட்டது; இது இடம் பெயரக் கூடியது மட்டுமன்று; இடப் பெயர்ச்சிக்கு சாதனமாகவும் அமையக் கூடியது; நீர் விசைச் சக்கரத்தைப் போல் கிராமவாசியாய் இராமல், நகரவாசியாய் இருக்கக் கூடியது; நீர் விசைச் சக்கரங்களைப் போல் நாட்டுப் புறங்களில் சிதறிக் கிடக்காமல் நகரங்களில் உற்பத்தியை ஒன்றுகுவிக்க இடமளிக்கக் கூடியது.[495] சர்வப் பொதுவான தொழில்நுட்பப் பிரயோகமுடையது; ஒப்பளவில், இருப்பிடத் தேர்வில் வட்டார நிலைமைகளால் பாதிக்கப்படாதது. 1784 ஏப்ரலில் வாட் எடுத்த காப்புரிமைப் பட்டயத்தின் விவர அறிக் கையில் அவரது மேதைமையின் சிறப்பு வெளிப்பட்டது. அந்த

---

493 ஃபோல்ஹாபர், 1625; டெ காஸ், 1688.

494 நவீன டர்பைன் ஆனது நீர்ச் சக்தியின் தொழில் துறைப் பயன்பாட்டை அதன் முந்தைய தளைகள் பலவற்றிலிருந்தும் விடுவிக்கிறது.

495 "ஜவுளிப் பட்டறைத் தொழில்களின் ஆரம்ப நாட்களில், தொழிற்சாலையின் இருப்பிடம் என்பது நீர் விசைச் சக்கரத்தைச் சுழற்றுவதற்குப் போதுமான அருவியுடன் கூடிய நீரோடை இருப்பதைப் பொறுத்ததாய் இருந்தது; நீர்விசையாலைகளை நிறுவியது வீட்டுப் பட்டறைத் தொழிலமைப்பினது குலைவின் தொடக்கமாக இருந்ததென்ற போதிலும், அவசியத்தின் பேரில் நீரோடைக் கரைகளிலும், பல நேரங்களில் ஒன்றுக் கொன்று கணிசமான தொலைவிலும் நிறுவப்பட்ட இந்த ஆலைகள் நகர அமைப்பின் பகுதியாக அல்லாமல், அதிகமாய் கிராம அமைப்பின் பகுதியாகவே அமைந்தன; நீரோடைக்குப் பதிலியாக நீராவிச் சக்தி புகுத்தப்பட்ட பிறகுதான், நகரங்களிலும், நீராவி உற்பத்திக்கு அவசியமான நிலக்கரியும் நீரும் போதுமான அளவில் கிடைத்த இடங்களிலும் தொழிற்சாலைகள் ஒன்றுதிரண்டன. நீராவி எஞ்சினே பட்டறைத் தொழில் நகரங்களின் தாய் எனலாம்." (அ. ரெட்கிரேவ், "தொழிற்சாலை ஆய்வாளர் அறிக்கைகள், 1860 ஏப்ரல் 30," பக்கம் 36.)

அறிக்கையில், அவரது நீராவி எஞ்சின் குறிப்பிட்ட ஒரு காரியத்துக்கான கண்டுபிடிப்பாக விவரிக்கபட வில்லை. இயந்திர தொழில் துறையில் சகல காரியங்களுக்கும் பிரயோகிக்கக் கூடிய ஒன்றாகவே அது விவரிக்கப்படுகிறது. அதில் அவர் அதன் பிரயோகங்களைச் சுட்டிக் காட்டுகிறார். அப்பிரயோகங்களில் பலவும் பின்னர் அரை நூற்றாண்டு காலம் வரை வழக்கில் வரவில்லை. உதாரணம்: நீராவிச் சம்மட்டி. ஆயினும் கப்பலோட்டுவதில் நீராவி எஞ்சின்களின் பயன்பாடு அவருக்கு சந்தேகத்துக்குரியதாய் இருந்தது. அவரது வாரிசுகளான போல்டன், வாட் ஆகியோர் கடலோடும் நீராவிக் கப்பல்களுக்கான பூதாகார நீராவி எஞ்சின்களை 1851-ஆம் வருடப் பொருட்காட்சிக்கு அனுப்பி வைத்தனர்.

கருவிகள் மனிதனின் கைக்கருவிகளென்ற நிலையிலிருந்து இயந்திரப் பொறியமைவின், இயந்திரத்தின் கைக்கருவிகளாக மாற்றப்பட்டதுமே, விசையூட்டும் இயங்கமைப்பும் மனித வலிமையின் வரம்புகளிலிருந்து முற்றிலும் விடுவிக்கப்பட்டு, சுயேச்சை வடிவம் பெறலாயிற்று. இப்படிப் பெற்றதுமே, நாம் இது வரை பரிசீலித்து வந்துள்ள தனிப்பட்ட இயந்திரம், இயந்திர சாதன வழிப் பொருளுற்பத்தியில் ஒரு காரணியே என்னும் நிலைக்குத் தாழ்ந்து விடுகிறது. விசையூட்டும் இயங்கமைப்பால் இப்போது பல இயந்திரங்களை ஒரே நேரத்தில் ஓட்ட முடிகிறது. விசையூட்டும் இயங்கமைப்பு ஒரே நேரத்தில் இயங்கப்படும் இயந்திரங்களின் எண்ணிக்கைக்கேற்ப வளர்கிறது; விசை செலுத்தும் இயங்கமைப்பு விரிந்து பரவும் பொறியமைவாகிறது.

ஒரே வகைப்பட்ட பல இயந்திரங்கள் சேர்ந்து வேலை செய்வதை, பின்னலானதோர் இயந்திர சாதன அமைப்பிலிருந்து இப்போது வேறுபடுத்திப் பார்ப்போம்.

முதலாவது நேர்வில், முன்னதாகக் கைவினைஞர் தன் கருவியைக் கொண்டு—எடுத்துக்காட்டாக நெசவாளர் தன் தறியைக் கொண்டு—செய்து வந்த, அல்லது தனித்தனியாகவோ ஒரு பட்டறைத் தொழில் அமைப்பின் உறுப்பினர்களாகவோ அநேகக் கைவினைஞர்கள் வரிசைப் படியாக செய்து வந்த பல்வேறு பணிகளையும் ஒரே இயந்திரம் செய்து, முழுமையான உற்பத்திப் பொருளைத் தயாரித்தளிக்கிறது.[496] உதாரணமாக, காகித உறை

---

[496] பட்டறைத் தொழில் உழைப்புப் பிரிவினையின் கண்ணோட்டத்தில், நெசவு சாமானியமானதாய் இருக்கவில்லை; மாறாக, சிக்கலான கையுழைப்பாய் இருந்தது: ஆதலால் விசைத் தறி மிகவும் சிக்கலான வேலையைச் செய்கிற இயந்திரமாகும். நவீன இயந்திர சாதனம் உழைப்புப் பிரிவினையால் எளிமைப்படுத்தப்பட்ட வேலைகளை மட்டுமே ஆரம்பத்தில் ஏற்றுக் கொண்டது என்று எண்ணுவது முற்றிலும் தவறாகும். நூற்பும் நெசவும் பட்டறைத் தொழிற் காலத்தில் புதிய இனங்களாக பிரிக்கப்பட்டு, கருவிகள் திருத்தியமைக்கப்பட்டு, மேம்படுத்தப்பட்டன. ஆனால் உழைப்பைப் பொறுத்த வரை, இவ்வாறு பிரிக்கப்படாமல், அதன் கைவினைத் தன்மையை இழக்காதிருந்தது. இயந்திரத்தின் தொடக்க நிலையாக அமைவது உழைப்பன்று, உழைப்புக் கருவியே.

தயாரிக்கும் பட்டறைத் தொழிலில் ஒருவர் மடிக்கும் கருவியைக் கொண்டு காகிதத்தை மடித்தார். இன்னொருவர் கோந்து தடவினார்; மூன்றாமவர் முத்திரை பதிக்கப்படும் மூடித் தாளை மடித்தார்; நான்காமவர் முத்திரையைப் பதித்தார்; இப்படி தொடர்ந்து பணிகள் ஒவ்வொன்றுக்கும் உறை கைமாற வேண்டியிருந்தது. காகித உறை-இயந்திரம் இப்பணிகள் அனைத்தையும் இப்போது ஒரே நேரத்தில் செய்கிறது; ஒரு மணி நேரத்தில் மூவாயிரத்துக்கும் அதிகமான உறைகளைத் தயாரிக்கிறது. 1862 லண்டன் கண்காட்சியில் கூம்பு வடிவக் காகிதப் பொட்டல உறைகளைத் தயாரிப்பதற்கான அமெரிக்க இயந்திரம் ஒன்று வைக்கப் பட்டிருந்தது. அது காகிதத்தை வெட்டி, பசை தடவி, மடித்து ஒரு நிமிடத்தில் 300 பொட்டல உறைகளைத் தயாரித்தது. இங்கே, பட்டறைத் தொழிலாக நடத்தப்பட்ட போது வரிசைத் தொடரான பணிகளாகப் பிரித்துச் செய்யப்பட்ட முழு நிகழ்முறையும், ஒன்றிணைந்த பல்வேறு கருவிகளை இயக்கும் ஒரே இயந்திரத்தால் நிறைவேற்றப்படுகிறது. இப்போது, இத்தகைய இயந்திரம் சிக்கலான கைக்கருவியின் மறுபதிப்பாக மட்டுமே இருந்தாலும் சரி, அல்லது பட்டறைத் தொழிலால் தனித்திறன் பெற்ற பல்வேறு சாமானியக் கருவிகளின் இணைவாக இருந்தாலும் சரி, தொழிற்சாலையில், அதாவது இயந்திர சாதனம் மட்டுமே பயன்படுத்தப் படும் பட்டறையில் சாமானியக் கூட்டு-வேலையை மீண்டும் எதிர் கொள்கிறோம். இப்போதைக்குத் தொழிலாளியைப் பரிசீலனையிலிருந்து விட்டு விட்டால், முதலாவதாக, இந்தக் கூட்டு-வேலையானது ஒருங்கே இயங்கும் ஒரே மாதிரியான பல இயந்திரங்கள் ஓரிடத்தில் திரண்டிருப்பதாகக் காட்சி தருகிறது. எடுத்துக்காட்டாக, நெசவுத் தொழிற்சாலை என்பது அக்கம்பக்கமாக வேலை செய்கிற பல விசைத் தறிகளால் ஆனதாகும்; தையற் தொழிற்சாலை என்பது ஒரே கட்டடத்தில் உள்ள பல தையல் இயந்திரங்களால் ஆனதாகும். ஆனால், இங்கே அமைப்பு முழுவதிலும் ஒரு தொழில் நுட்ப ஓர்மை நிலவுகிறது; ஏனென்றால், எல்லா இயந்திரங்களுமே இடை நின்று செயலாற்றுகிற விசை செலுத்தும் இயங்கமைப்பின் வாயிலாகப் பொதுவான பிரதம இயக்கியின் துடிப்புகளிலிருந்து தமக்கு வேண்டிய உந்து விசையை ஏககாலத்திலும் சம அளவிலும் பெறுவனவாகும்; இந்த விசை செலுத்தும் இயங்கமைப்பு ஓரளவுக்கு அவை எல்லாவற்றுக்கும் பொதுவானதாகும்; ஏனெனில் அதன் குறிப்பிட்ட கிளைகள் மட்டுமே ஒவ்வொரு இயந்திரத்துக்கும் பிரிந்தோடுகின்றன. அப்படியாயின் பல கருவிகள் ஓர் இயந்திரத்தின் உறுப்புகளாக அமைவது போலவே, ஒரே வகைப்பட்ட பல இயந்திரங்கள் விசையூட்டும் இயங்கமைப்பின் உறுப்புகளாக அமைகின்றன.

ஆயினும், ஒன்றையொன்று பூர்த்தி செய்கிற பல்வேறு வகை இயந்திரங்களின் சங்கிலித் தொடரால் நிறைவேற்றப்படுகிற நுணுக்க

நிகழ்முறைகளது இணைந்த தொடருக்கு உழைப்பின் இலக்குப் பொருள் உட்படும் போதுதான், இந்தத் தனித்தனி இயந்திரங்களுக்கு பதில் மெய்யானதோர் இயந்திர சாதன அமைப்பு இடம் பெறுகிறது. இங்கே நாம் பட்டறைத் தொழிலின் சிறப்பியல்பான உழைப்புப் பிரிவினையின் மூலமான கூட்டு-வேலையை மீண்டும் காண்கிறோம்; ஆனால், இப்போது அது நுணுக்க இயந்திரங்களின் ஒன்றிணைப்பாக உள்ளது. கம்பளிப் பட்டறைத் தொழிலில் அடிப்போர், வாருவோர், நூற்போர் முதலானோரின் தனிவிதக் கருவிகள் போன்று, பல்வேறு நுணுக்கத் தொழிலாளர்களின் தனிவிதக் கருவிகளும், இப்போது தனித்திறன் பெற்ற இயந்திரங்களின் கருவிகளாக மாற்றப்படுகின்றன; ஒவ்வொரு இயந்திரமும் அமைப்பில் தனிவிதப் பணியைக் கொண்ட தனிவித உறுப்பாக அமைகிறது. இயந்திர சாதன அமைப்பு முதலில் புகுத்தப்பட்ட தொழிற்கிளைகளில், பட்டறைத் தொழிலே பொதுவாக உற்பத்தி நிகழ்முறையின் பிரிவினைக்கும், இவ்விதம் ஒழுங்கமைப்புக்குமான இயற்கையான அடிப்படையை வழங்குகிறது.[497] ஆயினும் ஓர் அடிப்படை வேறுபாடு உடனே புலப்படுகிறது. பட்டறைத் தொழிலில் தனித்தனியாகவோ குழுக்களாகவோ தம் கைக்கருவிகளைக் கொண்டு குறிப்பிட்ட நுணுக்க நிகழ்முறை ஒவ்வொன்றையும் நடத்திச் செல்ல வேண்டியவர்கள் தொழிலாளர்களே. இப்போது தொழிலாளி நிகழ்முறைக்கேற்றவராய்த் தன்னை மாற்றிக் கொள்கிறார். முன்பெல்லாம் நிகழ்முறைதான் தொழிலாளர்களுக்கு ஏற்றதாக்கப் பட்டது. இந்த அகவய உழைப்புப் பிரிவினைத் தத்துவம் இயந்திர

[497] ''இயந்திரத் தொழில் துறை சகாப்தத்துக்கு முன்னர், கம்பளி பட்டறைத் தொழில் இங்கிலாந்தில் முதன்மையான பட்டறைத் தொழிலாகத் திகழ்ந்தது. எனவே 18ஆம் நூற்றாண்டின் முதல் பகுதியில் பெரும்பாலான பரிசோதனைகள் இந்தத் தொழிலில்தான் நடத்தப்பட்டன. இயந்திர சாதனத்திடம் ஒப்படைப்பதற்கு கவனமான முன்னேற்பாடு குறைவாகவே தேவைப்பட்ட பருத்தியானது கம்பளியில் ஈட்டிய அனுபவத்தின் நற்பயனைப் பெற்றது; இதே போல்தான், பிற்பாடு, இயந்திர சாதன வழிப் பஞ்சு நூற்பு மற்றும் நெசவின் தடத்தில் இயந்திர சாதன வழிக் கம்பளிப் புனைவு வளர்த்தெடுக்கப்பட்டது. கம்பளி வாருதல் போன்ற கம்பளிப் பட்டறைத் தொழிலின் தனித்த நுணுக்கங்கள் ஆலைத் தொழிலில் சேர்க்கப்பட்டது 1866க்கு முந்தைய 10 ஆண்டு காலத்தில்தான். ''வாரும் இயந்திரத்தை, குறிப்பாக லிஸ்டரின் வாரும் இயந்திரத்தைப் புகுத்திய பின்னர் விரிவாக நடைமுறையிலிருந்த...கம்பளியை வாரும் நிகழ்முறைக்கான விசையின் பிரயோகத்தால்...மிகப் பெரும் தொகையிலான ஆட்கள் வேலையற்றவர்களாயினர் என்பது மெய்தான். முன்னதாக கம்பளி கையால் வாரப்பட்டது; மிகப்பெரும்பாலான நேரங்களில் வாருவோரின் குடிசையில் இவ்வேலை நடந்தது. இப்போது அது பெரும்பாலும் தொழிற்சாலையில் வாரப்படுகிறது; கையால் வாரப்படும் கம்பளி இன்னமும் மேலானதாகக் கருதப்படும் குறிப்பிட்ட வகை வேலைகளில் தவிர, கையுழைப்பு வழக்கொழிந்து விட்டது. கைவாருவோரில் பலருக்குத் தொழிற்சாலைகளில் வேலை கிடைத்தது. ஆனால், கைவாருவோரின் உற்பத்தி, இயந்திரத்தின் உற்பத்தியுடன் ஒப்பிடுகையில் மிகக் குறைவே. ஆதலால், மிகப் பெரும் எண்ணிக்கையிலான வாருவோரின் வேலைவாய்ப்பு பறிபோய் விட்டது.'' (''தொழிற்சாலை ஆய்வாளர் அறிக்கை, 1856 அக்டோபர் 31க்கானது,'' பக்கம் 16.)

சாதன வழி உற்பத்தியில் மறைந்து போகிறது. இங்கே, மொத்த நிகழ்முறையும், அதனளவிலேயே, அதாவது மனிதக் கரங்கள் அதனை நிறைவேற்றி வைக்கும் பிரச்சினையோடு தொடர்பில் லாமலே, புறவயமாக ஆராயப்படுகிறது; அது அதிலடங்கிய கட்டங் களாகப் பகுக்கப்படுகிறது; ஒவ்வொரு நுணுக்க நிகழ்முறையையும் நிறைவேற்றி, அவை அனைத்தையும் ஒரே முழுமையாக இணைப் பது எப்படி என்ற பிரச்சினை இயந்திரங்கள், இரசாயனம் போன்ற வற்றின் துணை கொண்டு தீர்க்கப்படுகிறது.[498] ஆனால், இதிலும், பெரிய அளவில் திரட்டிச் சேர்த்த அனுபவத்தால் தத்துவத்தை செப்பஞ் செய்ய வேண்டுமென்பது மெய்தான். நுணுக்க இயந்திரம் ஒவ்வொன்றும் வரிசையில் அடுத்திருக்கும் இயந்திரத்துக்குக் கச்சாப் பொருளை வழங்குகிறது; அவை அனைத்தும் ஒரே நேரத்தில் வேலை செய்கின்றன என்பதால் உற்பத்திப் பண்டம் எப்போதுமே அதன் புனைவின் பல்வேறு படிகளைக் கடந்து சென்ற வண்ண மும், ஒரு கட்டத்திலிருந்து இன்னொரு கட்டத்துக்கு இடையறாது மாறிய வண்ணமும் உள்ளது. பட்டறைத் தொழிலில் நுணுக்கத் தொழிலாளர்களின் நேரடியான கூட்டு-வேலை தனித்தனிக் குழுக் களிடையே எண்ணிக்கையில் ஒரு விகிதாசாரத்தை நிறுவுவது போலவே, ஒரு நுணுக்க இயந்திரத்துக்கு இன்னொரு நுணுக்க இயந்திரம் இடைவிடாது வேலை கொடுக்கிற ஒழுங்கமைந்த இயந் திர சாதன அமைப்பில், அவற்றின் எண்ணிக்கைகளுக்கும் அவற் றின் பருமனுக்கும் அவற்றின் விரைவுக்கும் இடையே ஒரு நிலையான உறவு நிறுவப்படுகிறது. இப்போது, பல்வேறு வகைப்பட்ட ஒற்றை இயந்திரங்களும், ஒற்றை இயந்திரங்களின் குழுக்களும் அடங்கிய ஒழுங்கமைந்த அமைப்பே கூட்டு இயந்திரமாகும்; மொத்த நிகழ் முறையும் எந்த அளவுக்குத் தொடர்ச்சி உடையதாகிறதோ, அதா வது கச்சாப் பொருள் முதல் கட்டத்திலிருந்து கடைசிக் கட்டத் துக்குச் செல்கையில் எந்த அளவுக்குக் குறைவாக இடைமறிக்கப் படுகிறதோ, வேறு விதமாகச் சொன்னால் அது ஒரு கட்டத்தி லிருந்து இன்னொரு கட்டத்துக்குச் செல்வதைச் சாதிப்பது மனி தனின் கையாக இல்லாமல் இயந்திரங்களாகவே இருப்பது எந்த அளவுக்கு அதிகமோ, அந்த அளவுக்கு இக்கூட்டு இயந்திரம் மேலும் மேலும் செப்பமடைகிறது. பட்டறைத் தொழிலில் ஒவ்வொரு நுணுக்க நிகழ்முறையும் தனித்தனியே நடைபெறுகிறது; உழைப்புப் பிரிவினையின் இயல்பு இதை அவசியமாக்குகிறது. மாறாக, முழு வளர்ச்சி பெற்ற தொழிற் சாலையில் அந்நிகழ்முறைகள் கட்டாயம்

---

498 "அப்படியானால், ஆலைத் தொழிலின் தத்துவம் என்பது, கைவினைஞர்கள் மத்தியிலான உழைப்புப் பிரிவினை அல்லது உழைப்புப் பகிர்வுக்குப் பதிலாக ஒரு நிகழ் முறையை அதன் அடிப்படைக் கூறுகளாகப் பிரிப்பதாகும்." (ஆண்ட்ரு யூர்: "ஆலைத் தொழில்களின் தத்துவம்," லண்டன், 1835, பக்கம் 20.)

தொடர் வரிசையாகவே நடைபெற்றாக வேண்டும்.

ஓர் இயந்திர சாதன அமைப்பு, நெசவில் போன்று ஒரே மாதிரியான இயந்திரங்களின் கூட்டு-வேலையை மட்டும் சார்ந்திருப்பதானாலும் சரி, அல்லது நூற்பில் போன்று வெவ்வேறு இயந்திரங்களின் ஒன்றிணைப்பைச் சார்ந்திருப்பதானாலும் சரி, தானே இயங்கும் பிரதம இயக்கியால் ஓட்டப்படும் போதெல்லாம், அது தன்னளவில் ஒரு பெரும் இயந்திர மனிதனாக [automaton] அமைகிறது. ஆனால், மொத்தத் தொழிற்சாலையும் அதன் நீராவி எஞ்சினாலேயே ஓட்டப்பட்டாலும், தனி இயந்திரங்களில் சிலவற்றுக்கு அவற்றின் இயக்கங்களில் சிலவற்றுக்காகத் தொழிலாளியின் உதவி தேவைப்படலாம். (தன்னியக்க மியூல் கண்டுபிடிக்கப்படும் முன்னர் மியூல் சகடத்தை முடுக்கி விடுவதற்கு இப்படிப்பட்ட உதவி அவசியமாய் இருந்தது; நேர்த்தி-நூற்பு ஆலைகளில் இவ்வுதவி இன்னமும் அவசியமாய் உள்ளது.) அல்லது, ஓர் இயந்திரம் அதன் வேலையைச் செய்ய இயலும் பொருட்டு, அதன் குறிப்பிட்ட சில பாகங்களைத் தொழிலாளி கைக்கருவி போல் கையாள வேண்டியிருக்கலாம். வழுக்குளிதாங்கியை [slide-rest] தன்னியக்கியாக மாற்றுவதற்கு முன்னர் இயந்திரத் தயாரிப்பாளர்களின் பட்டறைகளில் நிலைமை இதுவே. ஓர் இயந்திரம் மனிதனின் உதவி இல்லாமலே—அவனது கவனிப்பு மட்டுமே தேவைப்படும் விதத்தில்—கச்சாப் பொருளை செய்பொருளாக்க அவசியமான இயக்கங்கள் அனைத்தையும் நிறைவேற்றும் போது, ஒரு தானியங்கி இயந்திர சாதன அமைப்பு, தன் நுணுக்கங்களில் இடைவிடாத மேம்பாட்டுக்கு இடமளிக்கிற இயந்திர சாதன அமைப்பு நமக்குக் கிடைக்கிறது. சிம்பு உடையும் போதெல்லாம் இழுவைச் சட்டத்தை நிறுத்துகிற உபகரணம், ஓடத்தின் உருளையில் நூல் காலியானதும் விசைத் தறியை நிறுத்துகிற தன்னியக்க நிறுத்தி போன்ற முன்னேற்றங்கள் முற்றிலும் நவீன காலக் கண்டுபிடிப்புகளாகும். உற்பத்தியின் தொடர்ச்சி, தானியங்கித் தத்துவத்தின் செயலாக்கம் ஆகிய இரண்டுக்குமான எடுத்துக்காட்டாக நவீன காகித ஆலையைக் கொள்ளலாம். பொதுவாகக் காகிதத் தொழிலில், வெவ்வேறு உற்பத்திச் சாதனங்களின் அடிப்படையிலமைந்த உற்பத்தி முறைகளிடையிலான வேறுபாடுகளை மட்டுமன்றி, அந்த முறைகளுடன் சமூகப் பொருளுற்பத்தி நிலைமைகளுக்குள்ள தொடர்பையும் பயனுள்ள முறையில் விவரமாகப் பயிலலாம்; ஏனெனில் பழைய ஜெர்மானியக் காகிதத் தயாரிப்பானது கைத்தொழில் உற்பத்தியின் எடுத்துக்காட்டையும், 17 ஆம் நூற்றாண்டில் ஹாலந்திலும் 18 ஆம் நூற்றாண்டில் பிரான்சிலும் நடைபெற்ற காகிதத் தயாரிப்பு கண்டிப்பான அர்த்தத்தில் பட்டறைத் தொழிலின் எடுத்துக்காட்டையும் நவீன கால இங்கிலாந்தின் காகிதத் தயாரிப்பு இப்பொருளைத் தானியங்கு முறையில் தயாரிப்பதன் எடுத்துக்காட்டையும்

நமக்குத் தருகின்றன. இவையன்னியில், இந்தியாவிலும் சீனாவிலும் இதே தொழிலின் ஆசிய வழியிலான இருவேறு பண்டைய வடிவங்கள் இன்னமும் நிலவுகின்றன.

மையமான இயந்திர மனிதனிடமிருந்து விசை செலுத்தும் இயங்கமைப்பின் மூலம் இயக்கம் அனுப்பப் பெறுகிற ஒழுங்கமைந்த இயந்திர அமைப்பு இயந்திர சாதன வழிப் பொருளுற்பத்தியின் மிக வளர்ச்சியடைந்த வடிவமாகும். இங்கே நாம் தனியொரு இயந்திரத்தினிடத்தில் இயந்திர அரக்கனைக் காண்கிறோம்; இந்த அரக்கனின் உடல் முழுத் தொழிற்சாலைகளையே அடைத்துக் கொள்கிறது; இவனது அசுர சக்தி ஆரம்பத்தில் இவனது பிரம்மாண்டமான அங்கங்களின் மெதுவான, அளவான இயக்கங்களால் மறைக்கப்பட்டிருப்பினும், முடிவில் இவனது எண்ணற்ற வேலை-உறுப்புகளின் வேகமான ஆவேசச் சுழற்சிகளாகப் பீறிட்டெழுகிறது.

மியூல்களையும் நீராவி எஞ்சின்களையும் தயாரிப்பதைப் பிரத்தியேக அலுவலாகக் கொண்ட தொழிலாளர் எவரும் இல்லாத போதே மியூல்களும் நீராவி எஞ்சின்களும் இருந்தன — தையற்காரர்கள் இல்லாத போதே மனிதர்கள் உடை உடுத்தியதைப் போல. ஆயினும், வாக்கன்சன், ஆர்க்ரைட், வாட் முதலானோரின் கண்டுபிடிப்புகள் நடைமுறையில் பயன்படக்கூடியனவாய் இருந்ததற்குக் காரணம் என்னவென்றால், பட்டறைத் தொழிற்காலம் தேர்ச்சி பெற்ற இயந்திரத் தொழிலாளர்களைக் கணிச எணணிக்கையில் உருவாக்கி இந்தக் கண்டுபிடிப்பாளர்களிடம் தயாராய் ஒப்படைத்தது என்பதே. இந்தத் தொழிலாளர்களில் சிலர் பல்வேறு தொழில்களையும் சேர்ந்த சுதந்தரக் கைவினைஞர்களாய் இருந்தனர்; ஏனையோர், முன்னர் குறிப்பிட்டது போல உழைப்புப் பிரிவினை கண்டிப்பாக அமலாக்கப்பட்ட பட்டறைத் தொழில்களில் ஒன்றுசேர்க்கப்பட்டவர்கள். கண்டுபிடிப்புகளின் தொகை அதிகரிக்க அதிகரிக்க, புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்ட இயந்திரங்களுக்கான வேண்டல் பெருகப் பெருக, இயந்திரத் தயாரிப்புத் தொழில் ஏராளமான தனித்தனிக் கிளைகளாக மேலும் மேலும் பிரியலாயிற்று; இப்பட்டறைத் தொழில்களிலான உழைப்புப் பிரிவினை மேலும் மேலும் வளரலாயிற்று. ஆதலால், இங்கே நவீனத் தொழில் துறையின் உடனடித் தொழில் நுட்ப அடிப்படையைப் பட்டறைத் தொழிலில் பார்க்கிறோம். பட்டறைத் தொழில் உற்பத்தி செய்து கொடுத்த இயந்திரங்களைக் கொண்டுதான் நவீனத் தொழில் துறை, அது ஆரம்பத்தில் பற்றிக் கொண்ட உற்பத்தித் துறைகளில் கைத்தொழில், பட்டறைத் தொழில் அமைப்புகளை ஒழித்துக் கட்டியது. எனவே, ஆலைத் தொழிலானது இயற்கைப் போக்கில் ஒரு போதாக் குறையான அடித்தளத்தின் மீது எழுந்தது. இவ்வமைப்பு குறிப்பிட்ட வளர்ச்சி நிலையை அடைந்த போது தயார் நிலையிலிருக்கிற இந்த அடித்தளத்தை — பழைய வழி

யிலேயே இதற்கிடையில் விரிவாக்கப்பட்டிருந்த இந்த அடித்தளத்தை — பெயர்த்தெடுக்கவும், தனக்கெனத் தன் உற்பத்தி முறைகளுக்கு ஏற்றதோர் அடிப்படையைக் கட்டிக் கொள்ளவும் வேண்டியிருந்தது. தனியொரு இயந்திரம் மனிதனின் சக்தியால் மட்டுமே இயக்கப்பட்ட வரை குறுகிச் சிறுத்ததாகவே இருக்கிறது; நீராவி எஞ்சின் அதற்கு முற்பட்ட இயக்குவிசைகளான மிருகங்களையும், காற்றையும், ஏன், தண்ணீரையும் கூட நீக்கி விட்டு அவற்றினிடத்துக்கு வரும் முன்னர் இயந்திர சாதன அமைப்பெதையும் சரிவர வளர்க்க முடியவில்லை. இதே போல் நவீனத் தொழில் துறைக்கே உரித்தான உற்பத்திக் கருவியாகிய இயந்திரமானது மனிதனது நேரடியான வலுவாலும் தேர்ச்சியாலும் உருவானதாய் இருந்த வரை, பட்டறைத் தொழில்களில் நுணுக்கத் தொழிலாளர்களும் கைத்தொழில்களில் கையுழைப்பாளர்களும் தம் சின்னஞ்சிறு கருவிகளைக் கையாண்டதில் அவர்களுக்குதவிய தசை வளர்ச்சி, கூரிய பார்வை, கைத்திறம் ஆகியவற்றைச் சார்ந்ததாய் அது இருந்த வரை நவீனத் தொழில் துறையும் முழு வளர்ச்சி பெறாமல் ஊனப்பட்டதாகவே இருந்தது. ஆதலால், இவ்வழியில் செய்யப்படும் இயந்திரங்களின் அதிகப்படியான உற்பத்திச் செலவு — முதலாளிக்கு எந்நேரமும் உறுத்தலாயிருக்கும் இந்த உற்பத்திச் செலவு — ஒரு புறமிருக்க, இயந்திர சாதனங்களைக் கொண்டு நடத்தப்படும் தொழில்களின் பெருக்கமும், புதிய உற்பத்திக் கிளைகளில் இயந்திர சாதனங்களின் படையெடுப்பும் தொழிலாளர் வர்க்கத்தின் வளர்ச்சியைப் பொறுத்தவையாய் இருந்தன. இத்தொழிலாளர்களின் பணியானது கலைநுட்பமிக்கதாகையால், அவர்களது எண்ணிக்கை தாவிக் குதித்து முன்னேற வழியில்லாமல், சிறுகச் சிறுகவே பெருக முடிந்தது. ஆனால் இது மட்டுமல்லாமல், நவீனத் தொழில் துறை அதன் வளர்ச்சியின் குறிப்பிட்ட ஒரு கட்டத்தில் கைத்தொழிலும் பட்டறைத் தொழிலும் அதற்கு அளித்திருந்த அடிப்படைக்கு தொழில் நுட்ப வழியில் ஒவ்வாத நிலையை வந்தடைந்தது. சூழ்நிலைமைகளின் நெருக்குதலால் மிகப் பல பிரச்சினைகளும் தலைதூக்கின. பிரதம இயக்கிகள்,விசை செலுத்தும் இயங்கமைப்பு, இயந்திரம் எனத்தக்கவையாகிய வேலைப் பொறிகள் ஆகியவற்றின் பருமன் அதிகரித்துச் சென்றது. இவ்வியந்திரங்கள் ஆரம்பத்தில் கையுழைப்பால் செய்யப்பட்டவற்றின் மாதிரியமைப்பிலிருந்து மேலும் மேலும் விலகிச் சென்ற, அவை இயங்கிய நிலைமைகளைத் தவிர வேறு எவற்றாலும் வரம்பிடப்படாத வடிவத்தைப் பெற்றதால், அவற்றின் உறுப்புகளது சிக்கலான தன்மை, பலபடித் தன்மை, இயக்க முறைப்பாடு ஆகியவை கூடுதலாயின. தானியங்கி அமைப்பு மேலும் மேலும் செப்பமுற்றது. அதிக வெப்பம் தாங்கக் கூடிய பொருளை உபயோகிப்பது — உதாரணமாக, மரத்துக்குப் பதில் இரும்பைப் பயன்படுத்துவது — நாளுக்கு நாள் தவிர்க்க

முடியாததாயிற்று.[499] இம்மாதிரியான பிரச்சினைகளுக்கெல்லாம் தீர்வு காண விடாமல் மனிதனின் நேரடி ஆற்றலுக்குள்ள வரம்புகள் தடைகளாயின. பட்டறைத் தொழிலின் கூட்டுத் தொழிலாளியே கூட ஓரளவுக்கே இவற்றை மீறிச் செல்ல முடிந்தது. நவீன நீர்விசை அழுத்தி, நவீன விசைத்தறி, நவீன இழைச் சுத்திகரிப்புப் பொறி போன்ற இயந்திரங்களைப் பட்டறைத் தொழிலால் ஒருகாலும் வழங்கியிருக்க முடியாது.

தொழில் துறையின் ஒரு பிரிவில் உற்பத்தி முறையில் தீவிரமான மாற்றம் ஏற்பட்டால் ஏனைய பிரிவுகளிலும் அதே மாதிரியான மாற்றம் ஏற்பட நேரிடுகிறது; ஒரே நிகழ்முறையின் வெவ்வேறு கட்டங்களாக இருப்பதால் ஒன்றோடு ஒன்று தொடர்புள்ளவையும், ஆனால் ஒவ்வொன்றும் ஒரு தனிச் சரக்கை உற்பத்தி செய்யும் வகையில் சமூக உழைப்புப் பிரிவினையால் தனித்தனியாகப் பிரிக்கப்பட்டிருப்பவையுமான தொழிற் கிளைகளில் இது முதலில் நிகழ்கிறது. இவ்வாறு, இயந்திரவழி நூற்பு இயந்திரவழி நெசவை அவசியமாக்கியது; இரண்டும் சேர்ந்து வெளுத்தல், அச்சிடுதல், சாயமிடல் ஆகியவற்றில் இயந்திர மற்றும் இரசாயனப் புரட்சியை அவசர அவசியமாக்கின. இவ்வாறே, மறு புறம், பஞ்சு நூற்பிலான புரட்சி பருத்தி இழையிலிருந்து கொட்டைகளை நீக்குவதற்கு ஜின் பொறியின் கண்டுபிடிப்பை அவசியமாக்கியது. அக்கண்டுபிடிப் பின் மூலமாகத்தான், இப்போது தேவைப்படும் பிரம்மாண்ட அளவில் பஞ்சு உற்பத்தி சாத்தியமானது.[500] ஆனால், இன்னும் குறிப்பாக, தொழில் துறை, வேளாண்மைத் துறை ஆகியவற்றின் உற்பத்தி முறைகளில் ஏற்பட்ட புரட்சி சமூகப் பொருளுற்பத்தி

---

[499] முதலில் விசைத்தறி பிரதானமாக மரத்தால் செய்யப்பட்டது; அதன் மேம்பட்ட நவீன வடிவத்தில், இரும்பால் செய்யப்படுகிறது. உற்பத்திக் கருவிகளின் பழைய வடிவங்கள் ஆரம்பத்தில் அவற்றின் புதிய வடிவங்களை எந்த அளவுக்குப் பாதித்தன என்பது, தற்போதைய விசைத்தறியைப் பழைய விசைத்தறியுடனும், ஊதுஉலையின் காற்றூதும் நவீனப் பொறியமைவை சாதாரணத் துருத்தியின் திறன் குறைந்த ஆரம்ப கால இயந்திரப் பிரதியுடனும் மேம்போக்காக ஒப்புநோக்கினாலே தெரிந்து விடுகிறது. இப்போதுள்ள இரயில் எஞ்சினின் கண்டுபிடிப்புக்கு முன்னர், குதிரையைப் போல் மாறி மாறித் தூக்குவதற்கான இரு கால்களை உள்ளபடியே உடையதான இரயில் எஞ்சினை நிர்மாணிப்பதற்கு நடந்த முயற்சிகள் இதை தெள்ளத் தெளிவாய்க் காட்டு கின்றன. இயந்திரவியல் விஞ்ஞானம் கணிசமாக வளர்ச்சி பெற்று நடைமுறை அனுபவம் கைவரப் பெற்ற பிறகே, ஓர் இயந்திரத்தின் வடிவம் அதற்குப் பிறப்பளித்த கருவியின் பரம்பரை வடிவத்திலிருந்து விடுபட்டு, முழுக்க முழுக்க இயந்திரக் கோட் பாடுகளுக்கேற்ப நிலைபெற்றதாகிறது.

[500] ஈலி விட்னி பருத்தி ஜின் மிகச் சமீப காலம் வரை 18ஆம் நூற்றாண் டின் வேறு எந்த இயந்திரத்தையும் விடக் குறைவாகவே அடிப்படை மாற்றங்களை அடைந்திருந்தது. சென்ற பத்தாண்டு காலத்தில்தான் (அதாவது 1856க்குப் பின்னர் தான்) இன்னொரு அமெரிக்கரான நியூயார்க் அல்பேனியைச் சேர்ந்த திரு எமெரி சாமானிய, ஆனால் சக்தி வாய்ந்த ஒரு மேம்பாட்டைக் கொண்டு விட்னியின் ஜின்னைப் பழைமைப்படச் செய்து விட்டார்.

நிகழ்முறையின் பொது நிலைமைகளில், அதாவது தொடர்பு மற்றும் போக்குவரத்துச் சாதனங்களில் ஒரு புரட்சியை அவசியமாக்கியது. துணை வீட்டுத் தொழில்கள், நகரக் கைத்தொழில்கள் ஆகிய வற்றுடன் சிறுவீதப் பயிர்த் தொழிலை அச்சாணியாகக் கொண்ட— இது ஃபூரியேவின் சொல்லாட்சி—ஒரு சமுதாயத்தில், விரிவடைந்த சமுதாய உழைப்புப் பிரிவினை, உழைப்புக் கருவிகள் மற்றும் உழைப்பாளிகளின் குவிப்பு, குடியேற்றச் சந்தைகள் ஆகியவற் றுடனான பட்டறைத் தொழிற் காலத்தின் உற்பத்தித் தேவைகளுக்கு சற்றும் போதாதவையாக தொடர்பு மற்றும் போக்குவரத்துச் சாத னங்கள் இருந்தமையால், அவற்றை மெய்யாகவே புரட்சிகரமாக மாற்றி அமைக்க வேண்டியதாயிற்று. இதே விதத்தில், பட்டறைத் தொழிற் காலம் விட்டுச் சென்ற தொடர்பு மற்றும் போக்குவரத்துச் சாதனங்களும்—உற்பத்தியின் ஜுரவேக அவசரம், பிரம்மாண்ட மான விரிவு, மூலதனத்தையும் உழைப்பையும் உற்பத்தியின் ஒரு மண்டலத்திலிருந்து இன்னொரு மண்டலத்துக்கு இடைவிடாது பந்தாடுதல், உலக முழுமையின் சந்தைகளுடன் புதிதாக ஏற்படுத்தப் பட்ட தொடர்புகள் ஆகியவற்றுடனான—நவீனத் தொழில் துறைக்கு சகிக்கவொண்ணாத் தளைகளாய் விரைவில் மாறின. எனவே, நீர்வழிக் கலங்களின் கட்டுமானத்தில் புகுத்தப்பட்ட தீவிரமான மாற்றங்களோடு கூடவே, நதியோடும் நீராவிக் கலங் கள், இருப்புப் பாதைகள், கடலோடும் நீராவிக் கலங்கள், தந்தி ஆகியவற்றின் அமைப்புமுறையும் தோற்றுவிக்கப்பட்டதால், தொடர்பு மற்றும் போக்குவரத்துச் சாதனங்கள் பையப்பைய இயந் திரத் தொழில் துறையின் உற்பத்தி முறைகளுக்குத் தகவமைய லாயின. ஆனால் இப்போது பென்னம்பெரிய பருமன்களில் இரும்பை வார்க்கவும், பற்ற வைக்கவும், வெட்டவும், துளையிட வும், உருவமைக்கவும் வேண்டியிருந்ததால் இராட்சத இயந்திரங்கள் தேவைப்பட்டன. இவ்வியந்திரங்களின் கட்டுமானத்துக்கு, பட்ட றைத் தொழிற் காலத்தின் வழிமுறைகள் சற்றும் போதியனவாய் இல்லை.

எனவே, நவீனத் தொழில் துறை அதற்கே உரித்தான உற்பத்திக் கருவியாகிய இயந்திரத்துக்குத் தானே பொறுப்பேற்று, இயந்திரங் களைக் கொண்டே இயந்திரங்களை நிர்மாணிக்க வேண்டியிருந் தது. இதைச் செய்யாத வரை அதனால் தக்கதொரு தொழில் நுட்ப அடித்தளத்தைத் தனக்கென அமைத்துக் கொள்ளவோ, சொந்தக் காலில் நிற்கவோ முடியவில்லை. இயந்திர சாதனம், இந்நூற்றாண் டின் முதற் சில பத்தாண்டுகளில், அதன் உபயோகம் அதிகரித்த அதே காலத்தில், இயந்திரம், எனத்தக்க வேலைப் பொறிகளின் கட்டுமானப் பணியைச் சிறுகச் சிறுகத் தனதாக்கிக் கொண்டது. ஆனால் 1866க்கு முந்தைய பத்தாண்டில்தான் இருப்புப் பாதை கள், கடலோடும் நீராவிக் கலங்கள் ஆகியவற்றை பிரம்மாண்ட

அளவில் நிர்மாணிக்க வேண்டியதாகி, இப்போது பிரதம இயக்கிகளின் கட்டுமானத்திற்குப் பயன்படும் இராட்சத இயந்திரங்கள் உருவாயின.

இயந்திரங்களைக் கொண்டு இயந்திரங்களை உற்பத்தி செய்வதற்கு அத்தியாவசியத் தேவையாய் இருப்பது சிறிதும் குறைபாடின்றிக் கட்டுப்பாட்டுக்குட்பட்டு, அதே போது எவ்வளவு வேண்டுமானாலும் பலத்தைப் பிரயோகிக்க வல்லதாகிய பிரதம இயக்கிதான். இத்தேவையை நிறைவு செய்யக் கூடியதாய் ஏற்கெனவே இருந்தது நீராவி எஞ்சின். ஆனால், அதே நேரத்தில், வடிவ கணித முறையில் சரிநுட்பமான நேர்கோடுகள், சம தளங்கள், வட்டங்கள், நீள் உருளைகள், கூம்புகள், கோளங்கள் ஆகியவற்றை வடிப்பது அவசியமாய் இருந்தது. இயந்திரங்களின் நுணுக்க உறுப்புகளுக்கு இவை தேவைப்பட்டன. இந்நூற்றாண்டின் முதல் பத்தாண்டில் வழுக்குளிதாங்கி என்ற கருவியைக் கண்டுபிடித்ததன் மூலம், ஹென்றி மௌட்ஸ்லீ இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு கண்டார். இக்கருவி சீக்கிரமே தானியங்கி ஆக்கப்பட்டது. ஆரம்பத்தில் அது கடைசல் இயந்திரத்துக்கென உருவாக்கப்பட்டதென்றாலும், திருத்தியமைக்கப்பட்ட வடிவில் பிற கட்டுமான இயந்திரங்களுக்கும் பிரயோகிக்கப்படலாயிற்று. இந்த இயந்திரத் துணைக் கருவி குறிப்பிட்ட எந்தக் கருவிக்கும் பதிலியாக அமையாமல் வெட்டுங்கருவியைப் பிடித்து, வேலைக்குரிய இரும்பு அல்லது வேறு பொருளின் மீது வழிப்படுத்திச் செல்லுவதன் மூலம், குறிப்பிட்ட வடிவத்தை வடிக்கிற மனிதக் கரத்துக்கே பதிலியாகி விடுகிறது. இவ்வாறு "மிகவும் தேர்ச்சி பெற்ற தொழிலாளியின் கரம் கைப்பழக்கத்தால் பெற்ற அனுபவச் செழுமையாலும் கூட சாதிக்க இயலாத லாவகத்துடனும், துல்லியத்துடனும், விரைவுடனும்"[501] இயந்திர சாதனத்தின் தனித்தனிப் பாகங்களின் வடிவங்களை வடிப்பது சாத்தியமாயிற்று.

இப்போது, இயந்திரங்களின் கட்டுமானத்தில் ஈடுபடுத்தப்படும் இயந்திர சாதனத்தில் வேலைக் கருவியாக அமைகிற பகுதியைக் கவனிப்போமானால், கைக்கருவிகள் மீண்டும் தலைகாட்டுவதை—ஆனால் இராட்சத உருவில் தலைகாட்டுவதை—காணலாம். துளையிடும் இயந்திரத்தின் வேலைப் பாகம் நீராவி எஞ்சினால் ஓட்டப்

---

501 "நாடுகளின் தொழில்," லண்டன், 1855, இரண்டாம் பகுதி, பக்கம் 239. இந்த நூல் மேலும் குறிப்பிடுகிறது: "கடைசல் இயந்திரங்களுக்கான இந்தத் துணையுறுப்பு எளிமையானதாகவும் வெளிப்பார்வைக்கு முக்கியமற்றதாகவும் தோன்றிய போதிலும், இயந்திர சாதன உபயோகத்தை மேம்படுத்துவதிலும், விரிவுபடுத்துவதிலும் அது உண்டாக்கிய தாக்கம், நீராவி எஞ்சினில் வாட் செய்த மேம்பாடுகள் உண்டாக்கிய தாக்கத்திற்கு ஈடானது என்று கூறுவது மிகையாகாதென நம்புகிறோம். அதன் பிரயோகம் சகல இயந்திர சாதனங்களையும் செப்பஞ் செய்யவும், விலை மலிவாக்கவும், கண்டுபிடிப்பையும் மேம்பாட்டையும் தூண்டவும் உடனே பயன்பட்டது."

படும் இராட்சதத் துரப்பணமே. மறு புறம், இந்த இயந்திரமில்லாமல் பெரிய நீராவி எஞ்சின்களுக்கும், நீர்விசை அழுத்திகளுக்குமான நீள் உருளைகளைச் செய்ய முடியாது. இயந்திரக் கடைசற் பொறி, சாதாரண கால்-கடைசற் பொறியின் இராட்சதப் பிரதியே. இழைப்பு இயந்திரம் இரும்பை இழைக்கும் தச்சரே. தச்சர் மரத்தின் மீது பிரயோகிக்கிற அதே கருவிகளைக் கொண்டு இது இரும்பின் மீது வேலை செய்கிறது; லண்டன் கப்பல் துறை மேடைகளில் மெல்லொட்டுப் பலகைகளைச் சீவுகிற கருவி பகாசுர சவரக் கத்தியே; தையற்காரரின் கத்தரிக்கோல் துணியை வெட்டுவது போலச் சுலபமாக இரும்பை வெட்டும் கத்தரிப்பு இயந்திரத்தின் கருவி பூதாகாரக் கத்தரிக்கோலே; நீராவிச் சம்மட்டி சாதாரண சம்மட்டியைப் போன்றதே; ஆனால் தாரே கூட தூக்கி அடிக்க முடியாத அளவுக்கு இது பளுவானது.[502] இந்த நீராவிச் சம்மட்டி நாஸ்மித்தின் கண்டுபிடிப்பாகும். 6 டன்னுக்கு மேல் எடையுள்ளதும் 36 டன் எடையுள்ள பட்டறைக் கல்லின் மீது 7 அடி குத்துயரத்திலிருந்து அடிப்பதுமான நீராவிச் சம்மட்டி ஒன்று உள்ளது; கருங்கல் பாளத்தை தூள் தூளாய் நொறுக்குவது அதற்கு ஒரு பொருட்டே அன்று; ஆணியை மெல்லத் தட்டி மிருதுவான மரப்பலகையில் செலுத்தவும் அதனால் இயலும்.[503]

இயந்திர சாதன வடிவிலான உழைப்புக் கருவிகள் மனிதச் சக்திக்குப் பதிலாக இயற்கைச் சக்திகளைப் பிரயோகிப்பதையும், மாமூல் வழிமுறைக்குப் பதிலாக விஞ்ஞானத்தை உணர்வு பூர்வமாகப் பிரயோகிப்பதையும் அவசியமாக்குகின்றன; பட்டறைத் தொழிலில் சமூக உழைப்பு நிகழ்முறையின் ஒழுங்கமைப்பு முற்றிலும் அகவயமானது; நுணுக்கத் தொழிலாளர்களின் ஒன்றிணைப்பே அது. இயந்திர சாதன அமைப்பின் உருவில், நவீனத் தொழில் துறை முற்றிலும் புறவயமான உற்பத்தி உயிரமைப்பைப் பெற்றுள்ளது; இதில், தொழிலாளி ஏற்கெனவே இருந்து வரும் பொருளாயத அமைப்பின் ஒட்டுவாலாகி விடுகிறார். சாமானியக் கூட்டு-வேலையில், உழைப்புப் பிரிவினையின் அடிப்படையிலான கூட்டு-வேலையிலுங் கூட, தனித்த தொழிலாளியை நீக்கி அந்த இடத்துக்குக் கூட்டுத் தொழிலாளி வருவது ஏறத்தாழ தற்செயலாய் நிகழ்வதாகவே தோன்றுகிறது. பின்னர் குறிப்பிடவிருக்கும் சில விதிவிலக்குகள் தவிர, கூட்டமைந்த அல்லது பொதுவிலான உழைப்பைக் கொண்டுதான் இயந்திர சாதனம்

---

502 இந்த இயந்திரங்களில் ஒன்று — லண்டனில் துடுப்பு சக்கரத்தின் சுழல்தண்டுகளை வார்க்கப் பயன்படுவது — "தார்" என்று அழைக்கப்படுகிறது. கொல்லர் குதிரை லாடத்தை வார்ப்பது போல் அவ்வளவு சுலபமாக அது 16½ டன் எடையுள்ள தண்டினை வார்க்கிறது.

503 சிறுவீதத்திலும் பிரயோகிக்கக் கூடியவையான மரவேலை இயந்திரங்கள் பெரும்பாலும் அமெரிக்கக் கண்டுபிடிப்புகளாகும்.

இயங்குகிறது. எனவேதான், நவீனத் தொழில் துறையில், உழைப்பு நிகழ்முறையின் கூட்டு-வேலைத் தன்மையானது உழைப்புக் கருவியின் இயல்பினாலேயே விதிக்கப்படும் தொழில் நுட்ப அவசியமாகி விடுகிறது.

## பிரிவு 2. — உற்பத்திப் பொருளுக்கு இயந்திர சாதனம் பெயர்த்தளிக்கும் மதிப்பு

கூட்டு-வேலையிலிருந்தும், உழைப்புப் பிரிவினையிலிருந்தும் விளைகிற உற்பத்தித் திறன்களுக்காக மூலதனத்துக்குச் செலவேதும் இல்லை என்று பார்த்தோம். அவை சமூக உழைப்பின் இயற்கையான திறன்களாகும். அதே போல், நீராவி, நீர் போன்ற பௌதிகச் சக்திகள் உற்பத்தி நிகழ்முறைகளுக்குப் பயன்படுத்தப்படும் போதும் செலவேதும் இல்லை. ஆனால் மனிதன் சுவாசிக்க நுரையீரல் தேவைப்படுவது போலவே பௌதிகச் சக்திகளை உற்பத்தித் திறனுள்ள முறையில் நுகரும் பொருட்டு மனிதக் கரத்தின் படைப்பு ஒன்று அவனுக்குத் தேவைப்படுகிறது. நீரின் சக்தியைப் பயன்படுத்திக் கொள்ள நீர்விசைச் சக்கரமும், நீராவியின் நெகிழ்ச்சியைப் பயன்படுத்திக் கொள்ள நீராவி எஞ்சினும் அவசியம். மின்னோட்டக் களத்தில் காந்த ஊசி திரும்புதலின் விதியோ மின்னோட்டத்தால் சூழப்பட்ட இரும்பு காந்தமாதலின் விதியோ—அவ்விதிகள் கண்டுபிடிக்கப்பட்ட பின்—ஒரு போதும் சல்லிக்காசு கூட செலவு வைக்கவில்லை.[504] ஆனால், இவ்விதிகளைத் தந்தி போன்ற காரியங்களுக்குப் பயன்படுத்திக் கொள்வதற்கு, பெருஞ் செலவு பிடிக்கும் விரிவான பொறியமைவு அவசியமாகிறது. இயந்திரம் கருவியை இல்லாதொழித்து விடுவதில்லை என்று பார்த்தோம். மனித உயிரமைப்பின் சின்னஞ்சிறு கைக்கருவி என்ற நிலையிலிருந்து, மனிதனால் படைக்கப்படும் இயங்கமைப்பின் கருவியாக அது விரிந்து பெருகுகிறது. கைக்கருவியைக் கொண்டு அல்லாமல், கருவிகளைத் தானே கையாள்கிற இயந்திரத்தைக் கொண்டே தொழிலாளியை இப்போது மூலதனம் வேலை செய்ய

---

504 பொதுவாகச் சொன்னால், விஞ்ஞானத்திற்காக முதலாளிக்குச் செலவேதுமில்லை. ஆனாலும், அதிலிருந்து அவர் ஆதாயமடைவதற்கு இவ்வுண்மை தடையாவதில்லை. மூலதனம் பிறரது உழைப்பைப் போலவே பிறரது விஞ்ஞானத்தையும் அபகரித்துக் கொள்கிறது. ஆயினும், விஞ்ஞானமானாலும் சரி, பொருட் செல்வம் ஆனாலும் சரி, அதன் முதலாளித்துவத் தனதாக்கம் வேறு, தனிப்பட்ட தனதாக்கம் வேறு. டாக்டர் யூரே கூட இயந்திர சாதனங்களை உபயோகிக்கும் தமதருமைத் தொழிலதிபர்களிடையே இயந்திர விஞ்ஞானம் குறித்து அப்பட்டமான அறியாமை நிலவுவதற்காக வருத்தப்படுகிறார். ஆங்கிலேய இரசாயனத் தொழிலதிபர்கள் இரசாயனம் குறித்து வெளிப்படுத்துகிற திகைப்பூட்டும் அறியாமை பற்றி லீபிக் கதைகதையாகச் சொல்ல முடிகிறது.

வைக்கிறது. எனவே, மிகப் பெரும் பௌதிகச் சக்திகள், இயற்கை விஞ்ஞானங்கள் இரண்டையும் உற்பத்தி நிகழ்முறையுடன் இணைப்பதன் மூலம், நவீனத் தொழில் துறையானது உழைப்பின் உற்பத்தித் திறனை அசாதாரண அளவுக்கு உயர்த்துகிறது என்று எடுத்த எடுப்பிலேயே தெளிவாகிறது. ஆனால், மறு புறம், உற்பத்தித் திறனிலான இந்த அதிகரிப்புக்காக உழைப்பின் செலவீடு அதிகரிப்பதில்லை என்று அந்த அளவுக்குத் தெளிவாவதில்லை. மாறா-மூலதனத்தின் ஏனைய ஒவ்வொரு கூறையும் போலவே, இயந்திர சாதனமும் புதிய மதிப்பெதையும் படைப்பதில்லை; ஆனால், தான் உருவாக்க உதவுகிற உற்பத்திப் பொருளுக்கு அது தன் சொந்த மதிப்பை விட்டுத் தருகிறது. இயந்திரம் மதிப்பைப் பெற்றுள்ளது என்ற அளவிலும், ஆதலால் உற்பத்திப் பொருளுக்கு மதிப்பைத் தருகிறது என்ற அளவிலும், அது அந்த உற்பத்திப் பொருளின் மதிப்பில் ஓர் ஆக்கக் கூறாகிறது. உற்பத்திப் பொருள் இதனால் மலிவாக்கப்படுவதற்குப் பதிலாக, இயந்திரத்தின் மதிப்புக்கேற்ற விகிதாசாரத்தில் விலைகூடியதாக்கப்படுகிறது. நவீனத் தொழில் துறைக்கே உரித்தான உழைப்புச் சாதனங்களாகிய இயந்திரங்களும் இயந்திர சாதன அமைப்புகளும், கைத்தொழில்களிலும் பட்டறைத் தொழில்களிலும் உபயோகிக்கப்பட்ட கருவிகளைக் காட்டிலும் ஒப்புவமையற்ற விதத்தில், அதிகம் மதிப்பேற்றப் பெற்றுள்ளன என்பது உள்ளங்கை நெல்லிக்கனி.

முதலாவதாக, இயந்திர சாதனம் எப்போதுமே உழைப்பு நிகழ்முறையில் முழுமொத்தமாக நுழைகிறது என்னும் அதே நேரத்தில், மதிப்பை உண்டாக்கும் நிகழ்முறையில் கொஞ்சம் கொஞ்சமாகவே நுழைகிறது என்பதைக் கவனிக்க வேண்டும். அது சராசரியாகத் தேய்மானத்தின் மூலம் இழப்பதை விட அதிகமான மதிப்பை ஒரு போதும் சேர்ப்பதில்லை. எனவேதான், இயந்திரத்தின் மதிப்புக்கும், அந்த இயந்திரம் குறிப்பிட்ட காலத்தில் உற்பத்திப் பொருளுக்குப் பெயர்த்தளிக்கும் மதிப்புக்குமிடையே பெரிய வேறுபாடு உள்ளது. உழைப்பு நிகழ்முறையில் இயந்திரத்தின் ஆயுள் எவ்வளவு நீண்டதாக உள்ளதோ, அவ்வளவு பெரியதாக அவ்வேறுபாடு உள்ளது. நாம் ஏற்கெனவே பார்த்ததைப் போல, ஒவ்வொரு உழைப்புச் சாதனமும் உழைப்பு நிகழ்முறையில் முழுமொத்தமாக நுழைகிறது; மதிப்பை உண்டாக்கும் நிகழ்முறையினுள் கொஞ்சம் கொஞ்சமாகவே—தேய்மானத்தின் மூலமான அதன் அன்றாட சராசரி இழப்புக்கேற்ற விகிதாசாரத்தில்—நுழைகிறது என்பதில் சந்தேகமில்லை. ஆனால், முழுமொத்தமான கருவிக்கும் அதன் தினசரித் தேய்மானத்திற்கும் இடையிலான இந்த வேறுபாடு கைக்கருவியில் இருப்பதை விட இயந்திரத்தில் மிகப் பெரியதாகும்; ஏனெனில், அதிகம் நீடித்திருக்கக் கூடிய பொருளிலிருந்து தயாரிக்கப்படும் இயந்திரத்துக்கு ஆயுள் அதிகம்; மேலும் அதன் பிரயோகம்

கண்டிப்பான விஞ்ஞான விதிகளால் ஒழுங்கியக்கப்படுவதால், அதன் உறுப்புகளின் தேய்மானத்திலும், அது உட்கொள்கிற பொருட்களிலும் அதிக சிக்கனத்துக்கு வழி செய்யப்படுகிறது; இறுதியாக அதன் உற்பத்திக் களம் கைக்கருவியின் உற்பத்திக் களத்தை விட ஈடு இணையற்ற விதத்தில் பெரியதாகும். இயந்திர மானாலும் கைக்கருவியானாலும், அவற்றின் அன்றாட சராசரிச் செலவை ஒதுக்கி விட்டுப் பார்த்தால், அதாவது அன்றாட சராசரித் தேய்மானத்தின் மூலம் உற்பத்திப் பொருளுக்கு அவை செலுத்துகிற மதிப்பையும், எண்ணெய், நிலக்கரி போன்ற துணைப்பொருளை அவை உட்கொள்வதையும் ஒதுக்கி விட்டுப் பார்த்தால், அவை ஒவ்வொன்றும் தம் வேலையை, மனிதனின் உதவியில்லாமல் இயற்கையால் அருளப்பட்ட சக்திகளைப் போலவே, இலவசமாகச் செய்கின்றன. கருவியின் உற்பத்தித் திறனுடன் ஒப்பிடுமிடத்து, இயந்திர சாதனத்தின் உற்பத்தித் திறன் எவ்வளவு அதிகமோ, கருவியின் இலவசப் பணியுடன் ஒப்பிடுமிடத்து இயந்திரத்தின் இலவசப் பணியின் அளவும் அவ்வளவு அதிகம். நவீனத் தொழில் துறையில்தான், மனிதன் தன் கடந்தகால உழைப்பின் உற்பத்திப் பொருளை இயற்கைச் சக்திகளைப் போல் இலவசமாகப் பெரு வீதத்தில் வேலை செய்ய வைப்பதில் முதன்முதலாக வெற்றி கண்டான்.[505]

கூட்டு-வேலையையும் பட்டறைத் தொழிலையும் ஆராய்கையில், கட்டடங்கள் போன்ற சில பொதுப்படையான உற்பத்திக் காரணிகள், தனித்த தொழிலாளியின் சிதறலான உற்பத்திச் சாதனங்களுடன் ஒப்பிடுமிடத்து, பொதுவில் நுகரப்படுவதன் மூலம் சிக்கனமாக்கப்படுகின்றன என்றும், எனவே அவை உற்பத்திப் பொருளை இன்னும் மலிவாக்குகின்றன என்றும் தெளிவாக்கப் பட்டது. ஓர் இயந்திர சாதன அமைப்பில் இயந்திரத்தின் பொறிச் சட்ட அமைப்பு ஏராளமான பணிசெய் கருவிகளால் பொதுவில் நுகரப்படுவது மட்டுமல்லாமல், பிரதம இயக்கியும், விசை

[505] ரிக்கார்டோ இயந்திர சாதனங்களின் இந்தப் பயனுக்கு (மற்றபடி, அவர் உழைப்பு நிகழ்முறைக்கும் உபரி-மதிப்பைப் படைக்கும் நிகழ்முறைக்கும் இடையிலான பொது வேறுபாட்டைக் கவனித்த அளவுக்கே இதையும் கவனித்தார்) எவ்வளவு அழுத்தம் கொடுக்கிறாரென்றால், உற்பத்திப் பொருளுக்கு இயந்திரங்கள் அளித்திடும் மதிப்பை எப்போதாவது பார்க்கத் தவறி, அவ்வப்போது இயந்திரங்களையும் இயற்கைச் சக்திகளை யும் ஒரே அடிப்படையில் வைக்கிறார். எடுத்துக்காட்டாக, ''ஆதாம் ஸ்மித் இயற்கைச் சக்திகளும் இயந்திர சாதனங்களும் நமக்காக ஆற்றுகிற சேவைகளை எங்குமே குறைத்து மதிப்பிடவில்லை; ஆனால் அவை சரக்குகளுக்குச் சேர்க்கிற மதிப்பின் இயல்பை அவர் வேறுபடுத்திப் பார்ப்பது முற்றிலும் நியாயமே...அவை தம் வேலையை இலவசமாகச் செய்வதால், அவை நமக்கு அளிக்கிற உதவியானது பரிவர்த்தனை-மதிப்பைச் சிறிதும் கூட்டுவதில்லை.'' (ரிக்கார்டோ, முன் வந்தது, பக்கம் 336, 337.) ரிக்கார்டோவின் இந்தக் கருத்துரை இயந்திரங்கள் ''இலாபங்களின்'' பகுதியாக அமையும் மதிப்பைப் படைக்கிற ''சேவையைப்'' புரிகின்றன என்று கற்பித்துக் கொள்ளும் மூா. ப. ஸேக்கு மறுப்பாகச் சொல்லப்பட்டது என்ற அளவில், சரியானதுதான்.

செலுத்தும் இயங்கமைப்பின் ஒரு பகுதியும் ஏராளமான பணிசெய் இயந்திரங்களால் பொதுவில் நுகரப்படுகின்றன.

இயந்திர் சாதனத்தின் மதிப்புக்கும், அது ஒரு நாளில் உற்பத்திப் பொருளுக்குப் பெயர்த்தளிக்கும் மதிப்புக்கும் இடையிலான வேறுபாடு குறிப்பிட்டதாய் இருக்க, பின்கூறிய மதிப்பு உற்பத்திப் பொருளை எந்த அளவுக்கு விலை கூடியதாக்குகிறது என்பது, முதலாவதாக, உற்பத்திப் பொருளின் பருமனைப் பொறுத்தது; அதன் பரப்பைப் பொறுத்தது என்று கூடச் சொல்லலாம். பிளாக்பர்னைச் சேர்ந்த திரு பேய்ன்ஸ், 1858இல் பிரசுரிக்கப் பட்ட விரிவுரையில், ''உண்மையான இயந்திரக் குதிரைத் திறன்[506] ஒவ்வொன்றும், ஆயத்த நிலையிலுள்ள 450 தன்னியக்க மியூல் கதிர்களை, அல்லது 200 திராஸில் கதிர்களை, அல்லது முறுக்கு தல், கஞ்சி போடுதல் முதலானவற்றுக்கான சாதனங்களுடன் அமைந்த 40 அங்குலத் துணிக்கான 15 தறிகளை ஓட்டும்'' என்று மதிப்பிடுகிறார். முதல் நேர்வில் 450 மியூல் கதிர்களின் நாள் உற்பத்தியின் மீதும், இரண்டாவது நேர்வில் 200 திராஸில் கதிர்களின் நாள் உற்பத்தியின் மீதும் மூன்றாவது நேர்வில் 15 விசைத் தறிகளின் நாள் உற்பத்தியின் மீதும், ஒரு குதிரைத் திறனுக்கான அன்றாடச் செலவும், அந்தத் திறனால் இயக்கப்படும் இயந்திர சாதனத்தின்

---

[506] எங்கெல்ஸ் குறிப்பு: ஒரு குதிரைத் திறன் என்பது நிமிடத்துக்கு 33,000 அடி இராத்தல் சக்திக்கு, அதாவது ஒரு நிமிடத்தில் 33,000 இராத்தலை ஒரு அடி உயர்த்துகிற, அல்லது ஒரு இராத்தலை 33,000 அடி உயர்த்துகிற சக்திக்குச் சமமாகும். வாசகத்தில் குறிப்பிடப்படும் குதிரைத் திறன் இதுவே. சாதாரண சொல்வழக்கிலும், இந்த நூலில் இங்குமங்குமாக சில மேற்கோள்களிலும் கூட, ஒரே எஞ்சினின் ''பெயர்வழிக்'' குதிரைத் திறனுக்கும் ''வாணிப'' அல்லது ''குறி காட்டிய'' குதிரைத் திறனுக்கும் இடையில் வேறுபடுத்திக் காட்டப்படுகிறது. பழைய அல்லது பெயர்வழிக் குதிரைத் திறன் என்பது பிரத்தியேகமாக உந்துதண்டின் வீச்சின் நீளத்திலிருந்தும், உருளையின் விட்டத்திலிருந்துமே கணக்கிடப்படுகிறது; இது நீராவியின் அழுத்தத்தையும், உந்துதண்டின் வேகத்தையும் கண்டு கொள்வதில்லை. அது நடைமுறையில் தெரிவிப்பது இதுவே: இந்த எஞ்சின், போல்டன், வாட் ஆகியோரின் காலத்தில் போல அதே குறைந்த நீராவி அழுத்தத்தைக் கொண்டும், அதே மந்தமான உந்துதண்டின் வேகத்துடனும் ஓட்டப்பட்டால், 50 குதிரைத் திறனுடைய எஞ்சினாக இருக்கும். ஆனால், இவ்விரு காரணிகளும், அந்தக் காலத்துக்குப் பின்னர், வெகுவாக அதிகரித்துள்ளன. இன்று, ஓர் இயந்திரத்தால் செலுத்தப்படும் இயந்திரத் திறனை அளக்கும் பொருட்டு, உருளையில் நீராவி அழுத்தத்தைக் காட்டுகிற குறிகாட்டி கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. உந்துதண்டின் வேகம் சுலபமாகத் தெரிந்து கொள்ளப்படுகிறது. இவ்வாறு ஓர் இயந்திரத்தின் ''குறிகாட்டிய'' அல்லது ''வாணிபக்'' குதிரைத் திறனானது உருளையின் விட்டம், வீச்சின் நீளம், உந்துதண்டின் வேகம், நீராவி அழுத்தம் ஆகியவற்றை ஏககாலத்தில் உட்படுத்துவதும், ஒரு நிமிடத்தில் எஞ்சின் மெய்யாகவே 33,000 இராத்தலின் எத்தனை மடங்கை உயர்த்துகிறது என்பதைக் காட்டுவதுமான கணிதச் சூத்திரத்தால் தெரிவிக்கப்படுகிறது. எனவே ஒரு ''பெயர்வழிக்'' குதிரைத் திறன் மூன்று, நான்கு, ஏன், ஐந்து ''குறிகாட்டிய'' அல்லது ''மெய்யான'' குதிரைத் திறன்களை செலுத்தக் கூடும். அடுத்து வரும் பக்கங்களில் தரப்படும் பல்வேறு மேற்கோள்களையும் விளங்கச் செய்யும் பொருட்டு இங்கே இதைக் கூறுகிறோம்.

தேய்மானமும் நிறுவப்படுகின்றன; இதனால், மிகச் சொற்பமான மதிப்பே இத்தகைய தேய்மானத்தின் மூலம் ஒரு இராத்தல் நூல் அல்லது ஒரு கெஜம் துணிக்குப் பெயர்த்தளிக்கப்படுகிறது. மேலே குறிப்பிட்ட நீராவிச் சம்மட்டி தொடர்பாகவும் நிலைமை இதுவே. அதன் அன்றாடத் தேய்மானம், அதன் நிலக்கரிச் செலவு முதலானவை ஒரு நாளில் அதனால் அடிக்கப்படும் பிரம்மாண்டமான அளவிலான இரும்பின் மீது பரவிக் கொள்வதால், ஒரு அந்தர் இரும்போடு சேர்க்கப்படுவது சிறிய மதிப்பே; ஆனால் இந்த அசுர ஆயுதம் ஆணியடிப்பதில் ஈடுபடுத்தப்படுமேயானால் அந்த மதிப்பு மிகப் பெரியதாக இருக்கும்.

இயந்திரத்தின் வேலைத் திறன், அதாவது அதன் பணிசெய் கருவிகளின் தொகை, அல்லது, பிரச்சினை வலிமை சம்பந்தப்பட்டதாக இருக்குமிடத்து, அவற்றின் திரள் குறிப்பிட்டதாய் இருக்க, அதன் உற்பத்திப் பொருளின் அளவு அதன் வேலையுறுப்புக்களின் விரைவு வீதத்தை, எடுத்துக்காட்டாகக் கதிர்களின் வேகத்தை அல்லது ஒரு நிமிடத்தில் சம்மட்டி கொடுக்கிற அடிகளின் எண்ணிக்கையைப் பொறுத்ததாகும். இந்த இராட்சதச் சம்மட்டிகளில் பலவும் நிமிடத்துக்கு எழுபது தடவை அடிக்கின்றன; சிறு சம்மட்டிகளைக் கொண்டு கதிர்களை வார்ப்பதற்கான ரைடரின் உரிமைப் பட்டயம் பெற்ற இயந்திரம் நிமிடத்துக்கு 700 தடவை அடிக்கிறது.

இயந்திர சாதனம் தன் மதிப்பை உற்பத்திப் பொருளுக்குப் பெயர்த்தளிக்கும் வீதம் குறிப்பிட்டதாய் இருக்க, இப்படிப் பெயர்த்தளிக்கப்படும் மதிப்பின் அளவு இயந்திர சாதனத்தின் மொத்த மதிப்பைப் பொறுத்தது.[507] அதில் அடங்கியுள்ள உழைப்பு எவ்வளவு குறைவோ அவ்வளவு குறைவான மதிப்பை அது உற்பத்திப் பொருளுக்கு மாற்றுகிறது. அது எவ்வளவு குறைவான மதிப்பை இழக்கிறதோ அவ்வளவு அதிகமான உற்பத்தித் திறனுடையதாய் இருக்கிறது; அவ்வளவு அதிகமாக அதன் சேவைகள் இயற்கைச் சக்திகளின் சேவைகளுக்கு ஒத்தவை ஆகின்றன. ஆனால் இயந்திர சாதனத்தால் இயந்திர சாதனத்தை உற்பத்தி செய்வது எவ்வளவுக்கு எவ்வளவு விரிவாகவும், பயன் திறனோடும் நடக்கிறதோ, இயந்திர

---

[507] முதலாளித்துவக் கருத்துக்களில் ஊறிப் போயிருக்கும் வாசகர், இயந்திரம் அதன் மூலதன-மதிப்புக்கேற்ற விகிதாசாரத்தில் உற்பத்திப் பொருளோடு சேர்க்கிற ''வட்டியை'' இங்கு காணவில்லையே என்று தவிப்பார்தான். ஆயினும், மாறா-மூலதனத்தின் வேறு எந்தப் பகுதியையும் போலவே இயந்திரமும் புதிய மதிப்பைப் படைக்க முடியாது என்பதால், அது ''வட்டி'' என்ற பெயரில் மதிப்பெதையும் சேர்க்க முடியாது என்பது தெளிவு. நாம் உபரி-மதிப்பின் உற்பத்தியை விரித்துரைத்துக் கொண்டிருக்கும் இவ்விடத்தில், வட்டி என்ற பெயரில் அந்த மதிப்பின் பகுதியேதும் இருப்பதாக முன்கூட்டியே அனுமானித்துக் கொள்ள முடியாது என்பதும் தெளிவு. பார்த்த மாத்திரத்தில் அபத்தமானதாகவும் மதிப்புப் படைப்பின் விதிகளுக்கு ஒவ்வாததாகவும் தோன்றுகிற முதலாளித்துவக் கணக்கீட்டு முறை இந்நூலின் மூன்றாம் பாகத்தில் விளக்கப்படும்.

சாதனத்தின் மதிப்பு அவ்வளவுக்கு அவ்வளவு குறைகிறது.

கைத்தொழில்கள் அல்லது பட்டறைத் தொழில்கள் மூலம் உற்பத்தி செய்யப்படும் சரக்குகளின் விலைகளையும், இயந்திர சாதனங்கள் மூலம் உற்பத்தி செய்யப்படும் அதே சரக்குகளின் விலைகளையும் பகுத்தாய்ந்து ஒப்புநோக்கும் போது பொதுவாகத் தெரிவது என்னவென்றால், இயந்திர சாதனங்களின் உற்பத்திப் பொருளில் உழைப்புச் சாதனங்களால் விளையும் மதிப்பு ஒப் பளவில் அதிகரிக்கிறது; ஆனால் அறுதியாகக் குறைகிறது. வேறு விதமாகச் சொல்வதானால், அதன் அறுதி அளவு குறைகிறது, ஆனால் உற்பத்திப் பொருளின், எடுத்துக்காட்டாக ஒரு இராத்தல் நூலின், மொத்த மதிப்போடு ஒப்பிடுகையில் அதன் அளவு அதிகரிக்கிறது.[508]

ஓர் இயந்திரத்தை உற்பத்தி செய்வதற்குச் செலவாகிற உழைப் பின் அளவும், அந்த இயந்திரத்தின் பிரயோகத்தால் மிச்சப்படுத்தப் படும் உழைப்பின் அளவும் ஒன்றாக இருக்கும் போதெல்லாம், நிகழ்வது உழைப்பின் நிலைமாற்றமே தவிர வேறில்லை என்பதும்,

---

[508] பொருளின் வடிவத்தை மாற்றுவதற்கான இயந்திரங்களாக அன்றி வெறும் நகர்த்தும் சக்திகளாக ஈடுபடுத்தப்படும் குதிரைகள் மற்றும் மிருகங்களை இயந்திர சாதனம் நீக்கி விடும் போது, இயந்திர சாதனத்தால் சேர்க்கப்படும் மதிப்பின் இந்தப் பகுதி அறுதியாக மட்டுமல்லாமல், ஒப்பளவிலும் குறைகிறது. தேக்கார்த், மிருகங்களை வெறும் இயந்திரங்களாக இலக்கணம் கூறுகையில் பட்டறைத் தொழிற் காலத்தின் கண் கொண்டு பார்த்தார் என்பதை இங்கே இடைக்குறிப்பாய்க் குறிப்பிடலாம்; மத்திய காலக் கண் கொண்டு பார்க்கையில் மிருகங்கள் மனிதனுக்கு உதவியாளர்களாக இருந்தன; பின்னர், ஃபோன் ஹாலரின் ''Restauration der Staatswissenschaften'' நூலில் அவை அவ்வாறே இருந்தன. பேக்கனைப் போல், தேக்கார்த்தும் மாறிய சிந்தனை முறைகளின் விளைவாக உற்பத்தி வடிவத்தில் ஒரு மாற்றத்தையும், நடைமுறையில் மனிதன் இயற்கையை அடக்கியாள்வதையும் எதிர்பார்த்தார் என்பது, அவரது ''Discours de la Methode'' நூலிலிருந்து தெரிகிறது. அதில் அவர் சொல்கிறார்: ''வாழ்க்கையில் மிகவும் பயனுள்ள அறிவைப் பெறுவது (தத்துவ இயலில் அவர் புகுத்திய வழிமுறை களைப் பயன்படுத்தினால்) சாத்தியமே ஆகும். பள்ளிக் கூடங்களில் சொல்லித் தரப்படும் ஊகத் தத்துவ இயலுக்கு பதில் நடைமுறைக்கு ஏற்றதொரு தத்துவ இயலைக் கண்டறிய முடியும். நமது கைவினைஞர்களின் பல்வேறு தொழில்களையும் நாம் அறிந்திருப்போமானால், அவை பொருந்தி வரக் கூடிய் எல்லா உபயோகங்களுக்கும் முன்னவற்றைப் போலவே பின்னவற்றையும் நாம் ஈடுபடுத்துவதற்கு நடைமுறைக்குகந்த இந்தத் தத்துவ இயல் துணை செய்யும். இவ்விதம் நாம் இயற்கையை ஆண்டு அனுப விப்போர் ஆகலாம்.'' இது ''மனித வாழ்க்கையைக் குறையற்றதாக்கிட உதவும்.'' சர் டட்லி நார்த்தின் ''வர்த்தகம் பற்றிய உரைகளுக்கான'' (1691) முன்னுரையில், தேக்கார்த்தின் வழிமுறை அரசியல் பொருளாதாரத்தைப் பழங்கதைகளிலிருந்தும், தங்கம், வர்த்தகம் முதலானவை பற்றிய மூட நம்பிக்கைகளிலிருந்தும் விடுவிக்கத் தொடங்கியதாகக் கூறப்பட்டுள்ளது. ஆயினும், மொத்தத்தில், ஆரம்ப கால ஆங்கிலேயப் பொருளாதார அறிஞர்கள் தங்கள் தத்துவ ஞானிகளான பேக்கன், ஹாப்ஸ் ஆகியோரின் பக்கமே இருந்தனர்; பின்னொரு காலத்திலோ இங்கிலாந்திலும் பிரான்சிலும், இத்தாலியிலும் அரசியல் பொருளாதாரத்தின் κατ' ἐξοχήν * தத்துவ ஞானியாக இருந்தவர் லாக்.

---

* தலைசிறந்த.

ஆதலால் சரக்கை உற்பத்தி செய்வதற்கு அவசியமாகும் மொத்த உழைப்பு குறைந்து விடவில்லை, அல்லது உழைப்பின் உற்பத்தித் திறன் அதிகமாகி விடவில்லை என்பதும் தெளிவு. ஆயினும், ஓர் இயந்திரத்திற்காகச் செலவாகும் உழைப்புக்கும் அது மிச்சப்படுத்துகிற உழைப்புக்குமிடையிலான வேறுபாடு, வேறுவிதமாகச் சொன்னால் அதன் உற்பத்தித் திறனின் அளவு, அதன் சொந்த மதிப்புக்கும் எந்தக் கருவியினிடத்துக்கு அது வருகிறதோ அந்தக் கருவியின் மதிப்புக்கும் இடையிலான வேறுபாட்டைப் பொறுத்ததன்று என்பது வெளிப்படை. ஓர் இயந்திரத்தில் செலவிடப்படும் உழைப்பும், ஆதலால் உற்பத்திப் பொருளோடு சேர்க்கப்படுகிற அதன் மதிப்பின் பகுதியும் தொழிலாளி தன் கருவியைக் கொண்டு உற்பத்திப் பொருளோடு சேர்க்கிற மதிப்பை விடச் சிறியதாகவே இருக்கும் வரை, மிச்சப்படுத்தப்படும் உழைப்பில் இயந்திரத்துக்கு சாதகமான வேறுபாடு எப்போதுமே உள்ளது. எனவே, ஓர் இயந்திரத்தின் உற்பத்தித் திறன் அது நீக்கி விடுகிற மனித உழைப்புச் சக்தியைக் கொண்டு அளவிடப்படுகிறது. திரு பேய்ன்ஸ் கூறுகிற படி, ஒரு குதிரைத் திறனால் ஓட்டப்படுபவையான ஆயத்த இயந்திர சாதனம் உள்ளிட்ட 450 மியூல் கதிர்களுக்கு 2½ தொழிலாளர்கள் தேவைப்படுகின்றனர்; ஒவ்வொரு தன்னியக்க மியூல் கதிரும் பத்து மணி நேரம் வேலை செய்து 13 அவுன்ஸ் நூலை (சராசரி எண்-தடிப்பு) உற்பத்தி செய்கிறது; ஆதலால் 2½ தொழிலாளர்கள் வாரத்துக்கு 365⅝ இராத்தல் நூல் நூற்கின்றனர். எனவே, கழிவை ஒதுக்கி விட்டால், 366 இராத்தல் பஞ்சு நூலாக மாற்றமடையும் போது, 150 மணி நேர உழைப்பையே, அல்லது நாளுக்குப் பத்து மணி நேரம் என பதினைந்து நாள் உழைப்பையே அது உட்கிரகிக்கிறது.[509] ஆனால் கை நூற்பாளர் ஒருவர் ஓர் இராட்டையைக் கொண்டு அறுபது மணி நேரத்தில் பதின்மூன்று அவுன்ஸ் நூலை நூற்பதாகக் கொண்டால் அதே எடையுள்ள பஞ்சு நாளுக்குப் பத்து மணி நேரமென 2,700 நாள் உழைப்பை அல்லது, 27,000 மணி நேர உழைப்பை உட்கிரகிக்கும்.[510]

---

509 எஸ்ஸென் வர்த்தகச் சபையின் ஆண்டு அறிக்கையின் படி (1863), 1862இல் குருப் வார்ப்பு உருக்குச் சாலையில், அதன் 161 ஊது உலைகள், முப்பத்திரண்டு நீராவி எஞ்சின்கள் (1800ஆம் ஆண்டில் மான்செஸ்டரில் வேலை செய்து கொண்டிருந்த நீராவி எஞ்சின்கள் அனைத்தின் எண்ணிக்கை சுமாராக இதுவே), பதினான்கு நீராவிச் சம்மட்டிகள் (மொத்தத்தில் 1236 குதிரைத் திறனைக் குறிக்கும்), நாற்பத்தொன்பது வார்ப்பச்சுகள், 203 கருவி-இயந்திரங்கள் ஆகியவற்றையும் சுமார் 2,400 தொழிலாளர்களையும் கொண்டு பதின்மூன்று மிலியன் இராத்தல் வார்ப்பு உருக்கு உற்பத்தி செய்யப்பட்டது. இங்கே ஒரு குதிரைத் திறனுக்கு இரண்டு பேர் என்ற அளவில் கூட தொழிலாளர்கள் இல்லை.

510 ஜாவாவில் நூற்பு உழைப்பு மட்டுமே பஞ்சின் மதிப்பை 117%கூட்டுவதாக பாபேஜ் மதிப்பிடுகிறார். அதே காலத்தில் (1832) நேர்த்தி நூற்புத் தொழிலில் இயந்திரங்களாலும் உழைப்பாலும் பஞ்சுக்கு சேர்க்கப்பட்ட மொத்த மதிப்பு பஞ்சின் மதிப்பில் சுமார் 33% ஆயிற்று. (''இயந்திர சாதனத்தின் சிக்கனம் பற்றி,'' பக்கம் 165, 166.)

சீட்டித் துணியைக் கையால் அச்சிடும் பழைய முறையான கட்டை யச்சு முறை இயந்திர அச்சுமுறையால் நீக்கித் தள்ளப்பட்டிருக்கும் இடங்களில், முன்னதாக 200 ஆட்கள் அச்சிட வேண்டியிருந்த அளவு நால்வண்ணச் சீட்டித் துணியை இப்போது ஒரே ஒரு இயந்திரம் ஒரு ஆள் அல்லது சிறுவனின் உதவியுடன் ஒரு மணி நேரத்தில் அச்சிடுகிறது.[511] 1793இல் ஈலி விட்னி பஞ்சு ஜின்னைக் கண்டுபிடிக்குமுன்னர், ஒரு இராத்தல் பஞ்சிலிருந்து கொட்டையைப் பிரிப்பதற்கு ஒரு சராசரி நாளின் உழைப்பு செலவாயிற்று. அவரது கண்டுபிடிப்பைக் கொண்டு ஒரு நீக்ரோ பெண் தினசரி 100 இராத்தலைச் சுத்தம் செய்வது சாத்தியமாயிற்று; அதுமுதல் ஜின்னின் பயன்திறன் கணிசமான அளவுக்கு அதிகரித்துள்ளது. முன்னதாக 50 செண்டு உற்பத்திச் செலவான ஒரு இராத்தல் தூய பஞ்சு அந்தக் கண்டுபிடிப்புக்குப் பின்னர், முன்னிலும் அதிகமான ஊதியமிலா உழைப்பு அடங்கியதாகி, முன்னிலும் அதிக இலாபத்துடன் 10 செண்டுக்கு விற்கப்பட்டது. இந்தியாவில், கொட்டையிலிருந்து பஞ்சைப் பிரிப்பதற்காக பாதி இயந்திரமும் பாதி கருவியுமான சர்க்கா எனப்படும் சாதனத்தைப் பிரயோகிக்கின்றனர்; இதைக் கொண்டு ஓர் ஆணும் பெண்ணும் அன்றாடம் 28 இராத்தல் சுத்தம் செய்ய முடியும். டாக்டர் ஃபோர்பஸ் சில ஆண்டுகள் முன்னர் கண்டுபிடித்த சர்க்காவைக் கொண்டு ஓர் ஆளும் ஒரு சிறுவனும் தினசரி 25 இராத்தல் உற்பத்தி செய்கின்றனர்; அதை ஓட்டுவதற்கு எருது, நீராவி, அல்லது நீர் பயன்படுத்தப்பட்டால், ஊட்டிகளாக வேலை செய்யும் சில சிறுவர்களும் சிறுமிகளும் மட்டுமே தேவைப்படுகின்றனர். எருதினால் ஓட்டப்படும் இத்தகைய பதினாறு இயந்திரங்கள், ஒரு நாளில், சராசரியாக, முன்னர் 750 பேர் செய்த வேலையைச் செய்கின்றன.[512]

ஏற்கெனவே குறிப்பிட்டது போல, ஒரு மணி நேரத்தில் 66 ஆட்கள் 15 ஷில்லிங் செலவில் செய்யும் வேலையை ஒரு நீராவிக் கலப்பை மூன்று பென்னி செலவில் செய்து விடுகிறது. பிழையான கருத்து ஒன்றைப் போக்குவதற்காகவே நான் இந்த உதாரணத்துக்குத் திரும்புகிறேன். இந்த 15 ஷில்லிங் எவ்விதத்திலும், 66 ஆட்கள் ஒரு மணி நேரத்தில் செலவிட்ட உழைப்பு முழுவதன் பணத் தெரிவிப்பன்று. அவசிய-உழைப்புடன் உபரி-உழைப்பின் விகிதம் 100% ஆக இருக்குமேயானால் இந்த 66 ஆட்களும் (அவர்களது கூலியான 15 ஷில்லிங் அவர்களது அரை மணி நேர உழைப்பையே குறிக்கிறது என்ற போதிலும்) ஒரு மணி நேரத்தில் 30 ஷில்லிங்

[511] இயந்திர அச்சு சாயத்தையும் சிக்கனப்படுத்துகிறது.

[512] பார்க்கவும்: இந்திய அரசாங்கத்துக்கு உற்பத்திப் பண்டங்கள் பற்றிய தகவல் அலுவலரான டாக்டர் வாட்ஸன், கலைகள் சங்கத்தில் 1860 ஏப்ரல் 17ஆம் நாள் வாசித்த ஆய்வுரை.

மதிப்பை உற்பத்தி செய்வர். அப்படியானால், ஓர் இயந்திரம் அதனால் நீக்கப்படும் 150 ஆட்களின் ஓராண்டுக்கான கூலியின் அளவுக்கு (உதாரணமாக £3,000) விலையுடையதென்று வைத்துக் கொள்வோம்; இந்த £3,000, எவ்விதத்திலும், இயந்திரம் புகுத்தப் படுமுன்னர் இந்த 150 ஆட்களால் உற்பத்தி செய்யப்படும் பொருளோடு சேர்க்கப்படும் உழைப்பின் பணத் தெரிவிப்பன்று, அவர்களது ஆண்டு உழைப்பின் எந்தப் பகுதி அவர்களுக்காகவே செலவிடப்பட்டு, அவர்களது கூலியால் குறிக்கப்பட்டதோ அந்தப் பகுதியின் பணத் தெரிவிப்பேயாகும். மறு புறம், இயந்திரத்தின் பண மதிப்பான £3,000 உற்பத்திக்காகச் செலவிடப்பட்ட உழைப்பு முழுவதையும் — இந்த உழைப்பு தொழிலாளிக்குக் கூலியாகவும் முதலாளிக்கு உபரி-மதிப்பாகவும் அமைவது என்ன விகிதாசாரத்தில் என்பதைக் கருதாமல் — தெரிவிக்கிறது. எனவே, ஓர் இயந்திரம் அதனால் நீக்கப்படும் உழைப்புச் சக்தியின் அளவுக்கே விலையுடையதாக இருந்தாலும், அதில் பொருள்வடிவாக்கப் பட்டுள்ள உழைப்பு, அப்போதும்கூட, அதனால் நீக்கப்படும் உயிருள்ள உழைப்பை விட மிகக் குறைவானதே.[513]

உற்பத்திப் பொருளை விலை மலிவாக்கும் பிரத்தியேக நோக்கத்துக்காக இயந்திர சாதனத்தை உபயோகிப்பதானது, இயந்திர சாதனத்தை உற்பத்தி செய்வதில், அந்த இயந்திர சாதனத்தை ஈடுபடுத்துவதன் மூலம் நீக்கப்படும் உழைப்பை விடக் குறைவான உழைப்பு செலவிடப்பட்டாக வேண்டும் என்ற வரம்புக்கு உட்பட்டதே. ஆயினும், முதலாளிக்கோ இந்த உபயோகம் மேலும் அதிகமாய் வரம்புக்குட்பட்டதாகும். அவர் உழைப்புக்கு விலை கொடுப்பதற்குப் பதில், ஈடுபடுத்தப்படும் உழைப்புச் சக்தியின் மதிப்பையே கொடுக்கிறார்; எனவே அவர் இயந்திரத்தைப் பயன் படுத்துவதற்கான வரம்பு இயந்திரத்தின் மதிப்புக்கும் அதனால் நீக்கப்படும் உழைப்புச் சக்தியின் மதிப்புக்கும் இடையிலான வேறுபாட்டால் நிர்ணயிக்கப்படுகிறது. நாள் வேலையை அவசிய-உழைப்பாகவும் உபரி-உழைப்பாகவும் பங்கிடும் பிரிவினை, வெவ்வேறு நாடுகளிலும், ஏன், ஒரே நாட்டிலேயே கூட வெவ்வேறு காலங்களிலும், வெவ்வேறு தொழிற் கிளைகளிலும் வேறுபடுகிறது. மேலும், உள்ளபடியே தொழிலாளிக்குத் தரப்படும் கூலி ஒரு நேரத்தில் அவரது உழைப்புச் சக்தியின் மதிப்புக்குக் கீழாக வீழ்கிறது, இன்னொரு நேரத்தில் அதற்கு மேலாக உயர்கிறது. இக் காரணங்களால், இயந்திர சாதனத்தின் விலைக்கும் அந்த இயந்திர

513 "இந்த வாயில்லாக் காரியாதிகள் (இயந்திரங்கள்) அவற்றால் நீக்கப்படும் உழைப்பை விட மிகக் குறைவான உழைப்பின் பலனாகவே — அவை ஒரே பண மதிப் புடையவாய் இருக்கும் போதும் கூட — உள்ளன." (ரிக்கார்டோ, முன் வந்தது, பக்கம் 40.)

சாதனத்தால் நீக்கப்படும் உழைப்புச் சக்தியின் விலைக்கும் இடையிலான வேறுபாடு—இயந்திரத்தை உற்பத்தி செய்வதற்குத் தேவையான உழைப்பின் அளவுக்கும் அதனால் நீக்கப்படும் உழைப்பின் மொத்த அளவுக்கும் இடையிலான வேறுபாடு மாறாது நீடித்த போதிலும்—மிக அதிகமாக மாறுபடுவது சாத்தியமே.[514] ஆனால், முன்கூறிய வேறுபாடு மட்டும்தான் முதலாளிக்கு ஒரு சரக்கை உற்பத்தி செய்வதற்காகும் செலவை நிர்ணயிக்கிறது; போட்டியின் நெருக்குதலைக் கொண்டு அவரது செயல் மீது தாக்கம் செலுத்துகிறது. எனவேதான், இப்போதெல்லாம் இங்கிலாந்தில் கண்டுபிடிக்கப்படும் சில இயந்திரங்கள் வட அமெரிக்காவில் மட்டுமே பயன்படுத்தப்படுகின்றன; இதேபோல்தான், பதினாறாவது, பதினேழாவது நூற்றாண்டுகளில் ஹாலந்தில் மட்டுமே பயன்படுத்துவதற்கான இயந்திரங்கள் ஜெர்மனியில் கண்டுபிடிக்கப்பட்டன; பதினெட்டாவது நூற்றாண்டைச் சேர்ந்த பிரெஞ்சுக் கண்டுபிடிப்புகள் பலவும் இங்கிலாந்தில் மட்டுமே பயன்படுத்திக் கொள்ளப்பட்டன. பழைய நாடுகளில், இயந்திர சாதனம் சில தொழிற்கிளைகளில் ஈடுபடுத்தப்படும் போது ஏனைய கிளைகளில் எந்த அளவுக்கு உழைப்பின் மிகைப்பாட்டைத் தோற்றுவிக்கிறது என்றால், அந்த ஏனைய கிளைகளில் உழைப்புச் சக்தியின் மதிப்புக்குக் கீழாகக் கூலி வீழ்ச்சியடைவது இயந்திர சாதனத்தின் உபயோகத்துக்கு இடையூறு செய்கிறது. முதலாளியின் இலாபம் ஈடுபடுத்தப்படும் உழைப்பின் குறைப்பிலிருந்தல்லாமல், விலை கொடுத்துப் பெறப்படும் உழைப்பின் குறைப்பிலிருந்தே வருவதால், அவரது கண்ணோட்டத்தில், கூலியிலான இந்த வீழ்ச்சி இயந்திர சாதன உபயோகத்தைத் தேவையற்றதாகவும், பல நேரங்களில் சாத்தியமற்றதாகவும் ஆக்கி விடுகிறது. இங்கிலாந்தில் குழந்தைகளை வேலை வாங்குவது கம்பளிப் பட்டறைத் தொழிலின் சில கிளைகளில் சமீப ஆண்டுகளில் கணிசமாகக் குறைந்திருக்கிறது, சிலவற்றில் அறவே ஒழிந்து விட்டது. என்ன காரணம்? தொழிற்சாலைச் சட்டங்கள் குழந்தைகளின் இரு குழுக்களை—ஒன்று ஆறு மணி நேரமும், இன்னொன்று நான்கு மணி நேரமும், அல்லது ஒவ்வொன்றும் ஐந்தைந்து மணி நேரமும் வேலை செய்யும் விதத்தில்—அவசியமாக்கியது என்பதே. பெற்றோர்கள் "முழு நேரக்காரர்களை" விட மலிவாக "அரை நேரக்காரர்களை" விற்க மறுத்து விட்டனர். எனவேதான் "அரை நேரக்காரர்களுக்குப்" பதிலாக இயந்திர சாதனம் வந்தது.[515] சுரங்கங்களில் மாதர் உழைப்பும் 10 வயதுக்குட்பட்ட

514 எனவேதான், இயந்திரங்களை ஈடுபடுத்துவதற்கான வாய்ப்பு முதலாளித்துவ சமுதாயத்தில் இருக்கக் கூடியதைப் போலல்லாமல் பொதுவுடைமைச் சமுதாயத்தில் மிகவும் வேறுபட்டதாக இருக்கும்.

515 "உழைப்பை வேலைக்கமர்த்துவோர் 13 வயதுக்குட்பட்ட குழந்தைகளின் இரு குழுக்களை அனாவசியமாக வைத்துக் கொள்ள மாட்டார்கள்....உண்மையில் ஒரு வகைத்

குழந்தைகள் உழைப்பும் தடை செய்யப்படுவதற்கு முன், சட்டை போடாத மாதர்களையும் பெண்களையும், பல நேரங்களில் ஆண்களுடன் சேர்ந்தாற்போல் வேலை வாங்குவது தமது அறநெறியாலும், குறிப்பாகத் தமது பேரேடுகளாலும் அனுமதிக்கப்பட்டதாகவே முதலாளிகள் கருதினர்; சட்டம் நிறைவேறிய பின்னரே இயந்திர சாதனத்தின் உதவியை நாடினர். யாங்கிகள் கல்லுடைக்கும் இயந்திரமொன்றைக் கண்டுபிடித்துள்ளனர். ஆங்கிலேயர்கள் இதைப் பயன்படுத்திக் கொள்வதில்லை; ஏனெனில், இந்த வேலையைச் செய்கிற ''ஈனனுக்கு'',[516] அவனது உழைப்பின் ஒரு சொற்பப் பகுதிக்கே விலை தரப்படுவதால், இயந்திர சாதனத்தை உபயோகிப்பது முதலாளிக்கு உற்பத்திச் செலவை அதிகமாக்கவே செய்யும்.[517] இங்கிலாந்தில் கால்வாய்ப் படகுகளை இழுப்பதற்கு, குதிரைகளுக்கு பதில் மாதர்கள் இன்னமும் எப்போதாவது பயன்படுத்தப்படுகின்றனர்.[518] ஏனெனில் குதிரைகளையும் இயந்திரங்களையும் உற்பத்தி செய்வதற்குத் தேவையான உழைப்பின் அளவு துல்லியமாகக் கணக்கிடக் கூடியது. ஆனால் உபரி-மக்கள் கூட்டத்தைச் சேர்ந்த மாதர்களைப் பராமரிப்பதற்கு வேண்டிய உழைப்போ எவ்விதக் கணக்கீட்டுக்கும் ஏற்றதன்று. ஆகவேதான், இயந்திர சாதன நாடாகிய இங்கிலாந்தில் மிகவும் அருவருக்கத்தக்க காரியங்களில் மனித உழைப்புச் சக்தி வெட்கம் கெட்ட முறையில் விரயமாக்கப்படுவது போல் வேறெங்கும் காண்பதற்கில்லை.

---

தொழிலதிபர்களான கம்பளி நூல் நூற்பதிபர்கள் இப்போது பதின்மூன்று வயதுக்குட்பட்ட குழந்தைகளை, அதாவது அரை நேரக்காரர்களை வேலைக்கமர்த்துவது அபூர்வமே. அவர்கள் குழந்தைகளின் (அதாவது 13 வயதுக்குட்பட்டோரின்) வேலையை முற்றிலும் நீக்கி விடும் படியான மேம்பட்ட பல்வேறு வகைப் புதிய இயந்திர சாதனங்களைப் புகுத்தியுள்ளனர்; குழந்தைகளது எண்ணிக்கையிலான இக்குறைப்பிற்கு எடுத்துக்காட்டாக ஒரு நிகழ்முறையைக் குறிப்பிடுவேன்; இதில் இருக்கிற இயந்திரங்களோடு துண்டு போடும் இயந்திரம் என்றழைக்கப்படும் கருவியைச் சேர்ப்பதன் மூலம், ஒவ்வொரு இயந்திரத்தின் விசேஷத் தன்மைக்கும் ஏற்ப, ஆறு அல்லது நான்கு அரை நேரக்காரர்களின் வேலையை ஓர் இளம் வயதினர் (13 வயதுக்கு மேற்பட்டவர்) செய்து முடிக்க முடியும்...அரை நேர ஏற்பாடு துண்டு போடும் இயந்திரத்தின் கண்டுபிடிப்பைத் ''தூண்டியது''. (தொழிற்சாலை ஆய்வாளர் அறிக்கைகள், 1858 அக்டோபர் 31க்கானவை.)

516 ''ஈனன்'' என்பது ஆங்கிலேய அரசியல் பொருளாதாரத்தில் விவசாயத் தொழிலாளிக்கான அங்கீகாரம் பெற்ற பதமாகும்.

517 ''இயந்திர சாதனத்தை...உழைப்பு (அவர் கூலியைச் சொல்கிறார்) உயர்ந்து கொண்டிருக்கும் வரை அதிகமாக ஈடுபடுத்த முடியாது.'' (ரிக்கார்டோ, முன் வந்தது, பக்கம் 479.)

518 பார்க்கவும்: ''எடின்பரோவில் நடைபெற்ற சமூக விஞ்ஞானப் பேராயத்தில் அறிக்கை.'' 1863 அக்டோபர்.

## பிரிவு 3.—தொழிலாளி மீது இயந்திர சாதனம் ஏற்படுத்தும் உடனடி விளைவுகள்

உழைப்புக் கருவிகளிலான புரட்சியிலிருந்தே நவீனத் தொழில் துறை தொடங்கியது என்று கண்டோம். இந்தப் புரட்சி ஒரு தொழிற்சாலையில் ஒழுங்கமைந்த இயந்திர சாதன அமைப்பில் அதன் மிகவும் வளர்ச்சியுற்ற வடிவத்தை அடைகிறது. இந்தப் புறவய உயிரமைப்புடன் மானுடப் பொருள் எப்படிச் சேர்க்கப் படுகிறது என்பதை ஆய்ந்தறியும் முன்னர், இந்தப் புரட்சியானது தொழிலாளி மீதே ஏற்படுத்துகிற சில பொதுவான விளைவுகளைப் பரிசீலிப்போம்.

### அ. மூலதனம் துணை உழைப்புச் சக்தியைத் தனதாக்குதல். மாதர்களையும் குழந்தைகளையும் வேலை வாங்குதல்

இயந்திர சாதனம் தசைச் சக்தியை அவசியமற்றதாக்குகிறது என்பதால், அது குறைவான தசை வலிமையுடைய தொழிலாளர் களையும், உடல் வளர்ச்சி முழுமையற்று, ஆனால் கைகால்கள் அதிகம் வளைந்து கொடுக்கக் கூடியனவாய் இருப்பவர்களையும் வேலை வாங்கும் சாதனம் ஆகிறது. எனவே, இயந்திர சாதனங் களைப் பயன்படுத்திய முதலாளிகள் முதலில் நாடிச் சென்றது மாதர்கள், குழந்தைகளின் உழைப்பையே. உழைப்புக்கும் தொழி லாளர்களுக்குமான அந்த வலிமை பொருந்திய பதிலி, பால் அல்லது வயது வேறுபாடின்றி தொழிலாளியின் குடும்பத்தைச் சேர்ந்த ஒவ்வொருவரையும் மூலதனத்தின் நேரடி ஆளுகையில் வேலைக்குப் பதிவு செய்து கொண்டதன் மூலம் கூலித் தொழிலாளர் களின் தொகையை அதிகமாக்குவதற்கான சாதனமாய் உடன டியாகவே மாற்றப்பட்டது. முதலாளிக்கான கட்டாய உழைப்பு குழந்தைகளது விளையாட்டின் இடத்தை மட்டுமல்லாமல், குடும் பத்தின் ஆதாரத்துக்காக மிதமான வரம்புகளுக்குட்பட்டு வீட்டில் நடக்கும் சுதந்தர உழைப்பின் இடத்தையும் அபகரித்துக் கொண்டது.[519]

---

[519] அமெரிக்க உள்நாட்டுப் போரால் தோற்றுவிக்கப்பட்ட பருத்தி நெருக்கடியின் போது, பருத்தித் தொழிலாளர்களின் சுகாதார நிலை பற்றி அறிக்கை அளிப்பதற்காக டாக்டர் எட்வர்டு ஸ்மித்தை லங்காஷயர், செஷயர் போன்ற இடங்களுக்கு ஆங்கிலேய அரசு அனுப்பி வைத்தது. உடல் நலக் கண்ணோட்டத்தில் தொழிற்சாலைச் சூழ்நிலையிலிருந்து தொழிலாளர்கள் விலக்கப்பட்டிருப்பதன்னியில், இந்த நெருக்கடியினால் வேறு பல நன்மைகளும் இருப்பதாக அவர் அறிக்கையளித்தார். இப்போது, ''காட்ஃபிரே பானம்'' கொடுத்து குழந்தைகளுக்கு நச்சூட்டுவதற்கு பதில், தாய்ப்பாலூட்டப் பெண்களுக்குப் போதுமான ஓய்வு கிடைத்தது. சமைக்கக் கற்றுக் கொள்வதற்கு அவர்களுக்கு நேரம் கிடைத்தது. இந்தக் கலையை அவர்கள் கற்றுக் கொண்ட நேரத்தில் துர்ப்பாக்கிய வசமாய் அவர்களிடம் சமைப்பதற்கு ஒன்றுமில்லை. ஆனால், மூலதனம் அதன் தற்பெருக்க நோக்கங்களுக்காக இல்லத்தில் அவசியப்படுகிற உழைப்பை எப்படி அபகரித்து வந்தது என்பது இதிலிருந்து தெரிகிறது. தொழி

உழைப்புச் சக்தியின் மதிப்பு, வயது வந்த தனியொரு தொழிலாளியைப் பராமரிப்பதற்கு அவசியமான உழைப்பு நேரத்தால் மட்டுமன்றி, அவரது குடும்பத்தைப் பராமரிப்பதற்கு அவசியமான உழைப்பு நேரத்தாலும் நிர்ணயிக்கப்படுகிறது என்பதை அறிவோம். இயந்திர சாதனம் அந்தக் குடும்பத்திலுள்ள ஒவ்வொருவரையும் உழைப்புச் சந்தைக்கு இழுத்து விடுவதால், தொழிலாளியினது உழைப்புச் சக்தியின் மதிப்பை அவரது குடும்பத்தார் எல்லாரும் அடங்குமாறு பரவலாய் நிரவுகிறது. இவ்வாறு அது அவரது உழைப்புச் சக்தியை மதிப்பிறங்கச் செய்கிறது. நான்கு தொழிலாளர்களைக் கொண்ட ஒரு குடும்பத்தின் உழைப்புச் சக்தியை வாங்குவதற்கு, முன்னர் குடும்பத் தலைவரின் உழைப்புச் சக்தியை வாங்குவதற்கு ஆனதை விட அதிகச் செலவு ஆனாலும் ஆகலாம்; எனினும் ஒரு நாள் உழைப்புக்கு பதில் நான்கு நாள் உழைப்பு கிடைக்கிறது; அதன் விலை ஒருவரது உபரி-உழைப்பைக் காட்டிலும் நால்வரது உபரி-உழைப்பிற்குள்ள மிகையளவுக்கேற்ற விகிதாசாரத்தில் குறைகிறது. குடும்பத்தின் ஜீவனத்துக்காக, ஒருவருக்கு பதில் இப்போது நால்வர் உழைக்க வேண்டும் என்பதோடு, முதலாளிக்கு உபரி-உழைப்பும் தர வேண்டும். இவ்வாறு, இயந்திர சாதனம் மூலதனத்தின் சுரண்டும் திறனுக்குப் பிரதான இலக்காகிற மானுடப் பொருளை அதிகமாக்கும்[520] அதே நேரத்தில், சுரண்டலின் கடுமையையும் உயர்த்துகிறது.

---

லாளர்களின் புதல்விகள் தையற் பள்ளிகளில் தையல் கற்பதற்கும் இந்த நெருக்கடிக் காலம் பயன்பட்டது. உழைக்கும் பெண்கள், உலகத்திற்கே நூற்கிற பெண்கள், தையல் கற்பதற்கு ஓர் அமெரிக்கப் புரட்சியும், உலகளாவிய நெருக்கடியும் தேவைப் பட்டன!

520 "ஆண் உழைப்புக்குப் பதிலாகப் பெண் உழைப்பையும், அனைத்துக்கும் மேலாக, வயது வந்தோர் உழைப்புக்குப் பதிலாகக் குழந்தை உழைப்பையும் ஈடு படுத்துவது அதிகரிப்பதால் தொழிலாளர்களின் தொகை வெகுவாக அதிகரித்துள்ளது. வாரத்துக்கு 6 ஷில்லிங் முதல் 8 ஷில்லிங் வரையிலான கூலிக்கு அமர்த்தப்படும் 13 வயதுடைய பெண்கள் மூவர் 18 ஷில்லிங் முதல் 45 ஷில்லிங் வரை கூலி பெறும் வயது வந்த ஆணின் இடத்தை நிரப்பியுள்ளனர்." (தாமஸ் டெ குவின்சி: "அரசியல் பொருளாதாரத்தின் தர்க்கவியல்," லண்டன், 1844, பக்கம் 147க்கான குறிப்பு.) குழந்தைகளைப் பேணுவது, அவற்றுக்குத் தாய்ப்பாலூட்டுவது போன்ற சில குடும்பப் பணிகளை அறவே ஒழித்து விட முடியாதென்பதால், மூலதனத்தால் கைப்பற்றப்படும் தாய்மார்கள் ஒருவிதமான பதிலிகளைப் பயன்படுத்திப் பார்க்க வேண்டும். தையல், மராமத்து போன்ற வீட்டு வேலையைத் தவிர்க்கும் பொருட்டு ஆயத்த செய்பொருட்களை விலைக்கு வாங்க வேண்டும். எனவே, வீட்டில் உழைப்பைக் குறைவாகச் செலவிடுவதுடன் கூடவே பணத்தை அதிகமாகச் செலவிட வேண்டியதாகிறது. குடும்பம் நடத்துவதற்கான செலவு அதிகரித்து, கூடுதல் வருவாயை விழுங்கி சரிசெய்து விடுகிறது. மேலும், வாழ்வுச் சாதனங்களின் நுகர்விலும் தயாரிப்பிலும் சிக்கனத்துக்கும் சீர்தூக்கித் தீர்மானிப்பதற்கும் வழியில்லாமற் போகிறது. அதிகாரபூர்வ அரசியல் பொருளாதாரத்தால் மூடி மறைக்கப்படும் இந்த உண்மைகள் சம்பந்தமாக, தொழிற்சாலை ஆய்வாளர்களின் அறிக்கைகளிலும், குழந்தையுழைப்பு ஆணையத்தின் அறிக்கைகளிலும் இன்னும் முக்கியமாகப் பொதுச் சுகாதாரம் பற்றிய அறிக்கைகளிலும் ஏராளமான விவரங்கள் காணக் கிடக்கின்றன.

இயந்திர சாதனம் தொழிலாளிக்கும் முதலாளிக்குமான பரஸ்பர உறவுகளின் வடிவத்தை நிர்ணயிக்கிற அவர்களிடையிலான ஒப்பந்தத்தை முழுக்க முழுக்கப் புரட்சிகரமான முறையில் மாற்றி விடுகிறது. சரக்குப் பரிவர்த்தனையை அடிப்படையாகக் கொண்டு, நாம் முதலில் அனுமானித்துக் கொண்டது என்னவென்றால்: முதலாளியும் தொழிலாளியும் சுதந்தரமான ஆட்களாக, சுயேச்சையான சரக்குடைமையாளர்களாக—ஒருவர் பணத்தையும் உற்பத்திச் சாதனங்களையும் உடையவர், மற்றவர் உழைப்புச் சக்தியை உடையவர் என்ற முறையில்—சந்திக்கின்றனர். ஆனால் இப்போது முதலாளி குழந்தைகளையும், வயது வராதோரையும் விலைக்கு வாங்குகிறார். முன்னதாகத் தொழிலாளி தன் சொந்த உழைப்புச் சக்தியை விற்றார்; அதை அவர் பெயரளவில் சுதந்தர புருஷராய் விற்றார். இப்போது அவர் மனைவியையும் குழந்தையையும் விற்கிறார்: அவர் அடிமை வியாபாரியாகியிருக்கிறார்.[521] குழந்தைகளின் உழைப்புக்கான கோரிக்கை முன்னதாக அமெரிக்கப் பத்திரிகைகளின் விளம்பரங்களில் காணப்பட்ட நீக்ரோ அடிமைகளுக்கான விவரக் கேட்புகளைப் போலவே இருக்கிறது. ஓர் ஆங்கிலேயத் தொழிற்சாலை ஆய்வாளர் கூறுகிறார்: ''என் வட்டத்தைச் சேர்ந்த மிக முக்கியமான தொழில் நகரங்களில் ஒன்றின் உள்ளூர்ப் பத்திரிகையில் வந்திருந்த விளம்பரம் என் கவனத்துக்குக் கொண்டு வரப்பட்டது. பின் வருவது அதன் நகலாகும்: தேவை, 13 எனக் கருதப்படக் கூடிய வயதுக்குக் கீழ்ப்படாத 12 முதல் 20 சிறுவர்கள்; கூலி, வாரத்துக்கு 4 ஷில்லிங். விண்ணப்பிக்கவும்....''[522]

---

521 ஆங்கிலேயத் தொழிற்சாலைகளில் மாதர்கள், குழந்தைகளின் உழைப்பு நேரக் குறைப்பு ஆண் தொழிலாளர்கள் மூலதனத்திடமிருந்து போராடிப் பெற்றதாகும். பெருமைக்குரிய இந்த உண்மைக்கு நேர்மாறாக இருக்கிறது குழந்தைகளை வைத்துக் காக சம்பாதிக்கும் தொழிலாளப் பெற்றோர்களின் குணக்கேடு. குழந்தையுழைப்பு ஆணையத்தின் மிகச் சமீபத்திய அறிக்கைகளிலிருந்து இது தெரிய வருகிறது. உண்மையிலேயே நெஞ்சு கொதிக்கத் தக்கதான, அடிமை வர்த்தகத்துக்கு ஒப்பான குணக்கேடு இது. ஆனால், யூதக் கபட வேடதாரியான முதலாளி ஒருவர், அவரே உருவாக்கி, நிலைக்கச் செய்து, சுரண்டலுக்குப் பயன்படுத்திக் கொள்கிற, மேலும் ''உழைப்புச் சுதந்தரம்'' எனப் புனிதப் பெயர் சூட்டுகிற இந்த மிருகத்தனத்தைக் கண்டிப்பதை அதே அறிக்கைகளில் காண்கிறோம். ''குழந்தைகளின் உழைப்பு துணைக்கழைக்கப்பட்டுள்ளது.... குழந்தைகளும் கூட அன்றாட உணவுக்காக வேலை செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. வரம்பு மீறிய இந்த வேலைப் பளுவைத் தாங்க வலுவில்லாமல், எதிர்காலத்துக்கு வழிகாட்டும் கல்விபோதனைக்கு வழியில்லாமல், உடலுக்கும் உள்ளத்துக்கும் கேடு பயக்கும் சூழலினுள் இந்தக் குழந்தைகள் தள்ளப்படுகின்றனர். ஜெருசலத்தை டைட்டஸ் கைப்பற்றியது பற்றி யூத வரலாற்றாசிரியர் குறிப்பிட்டுள்ளார்: கொடும் பசி பொறுக்க மாட்டாமல் மனிதத் தன்மையை இழந்துவிட்ட தாயொருத்தி தன் மகவையே பலி கொள்ளக் கண்ட இந்நகரம் இப்படிப் படுநாசமுற்றதில் வியப்பில்லை.'' (''பொதுப் பொருளாதாரத்தை ஒருமுகப்படுத்தல்,'' கார்லைல், 1833, பக்கம் 66.)

522 அ. ரெட்கிரேவ் ''தொழிற்சாலை ஆய்வாளர் அறிக்கைகள், 1858 அக்டோபர் 31க்கானவை,'' பக்கம் 40, 41.

''13 எனக் கருதப்படக்கூடிய வயது'' என்ற தொடர், தொழிற்சாலைச் சட்டத்தின் படி 13 வயதுக்குட்பட்ட குழந்தைகள் 6 மணி நேரம் மட்டும் வேலை செய்யலாம் என்பதைக் குறிக்கிறது. அதிகார பூர்வ மாக நியமிக்கப்படும் மருத்துவர் அவர்களது வயதுக்குச் சான்றிதழ் தர வேண்டும். எனவே, 13 வயதான தோற்றமுடைய குழந்தைகள் வேண்டுமென்கிறார் தொழிலதிபர். தொழிற்சாலைகளில் வேலைக் கமர்த்தப்படும் 13 வயதுக்குட்பட்ட குழந்தைகளின் தொகை மளமளவென்று சரிவது இங்கிலாந்தின் கடந்த 20 ஆண்டு காலப் புள்ளி விவரங்களில் வியப்புக்குரிய விதத்தில் வெளிப்படுகிறது. தொழிற்சாலை ஆய்வாளர்களின் சாட்சியத்தின் படியே, இச்சரிவு, பெரும்பாலும்,சான்றிதழ் வழங்கும் மருத்துவர்களின் கைங்கரியமே. அவர்கள் முதலாளியின் சுரண்டல் பேராசைக்கும், இந்தக் கேவல மான வர்த்தகத்தில் ஈடுபட வேண்டியுள்ள பெற்றோரின் தேவை களுக்கும் இணங்க குழந்தைகளின் வயதைக் கூட்டியெழுதினர். பேர்போன வட்டமாகிய பெத்னால் கிரீனில் ஒவ்வொரு திங்கள், செவ்வாய் காலையிலும் ஒரு பொதுச் சந்தை கூடுகிறது; இங்கே 9 வயது முதல் உள்ள ஆணும் பெண்ணுமான குழந்தைகள் பட்டுத் தொழிலதிபர்களிடம் கூலி வேலைக்கு வருகின்றனர். ''வழக்கமான விலை, வாரத்துக்கு 1 ஷில்லிங் 8 பென்னி (இது பெற்றோரைச் சேரும்). 'எனக்கு 2 பென்னியும் தேநீரும்.' இந்த ஒப்பந்தம் அந்த வாரத்துக்கு மட்டுமே கட்டுப்படுத்தக் கூடியது. இந்தச் சந்தையில் காணக் கூடிய காட்சியும் கேட்கக் கூடிய பேச்சும் படுகேவல மானவை.''[523] மாதர்கள் ''குழந்தைகளை வேலையில்லத்திலிருந்து கொண்டு வந்து, வாரத்துக்கு 2 ஷில்லிங் 6 பென்னி கொடுக்கிற எவரிடத்தும் விடுவதும்'' இங்கிலாந்தில் நிகழ்ந்துள்ளது.[524] சட்டத் தையும் மீறி, கணப்படுப்பு சுத்தம் செய்யும் உயிருள்ள இயந்திரங் களாக (அவர்களில்லாமலே அந்த வேலையைச் செய்வதற்கு ஏராள மான இயந்திரங்கள் இருப்பினும்) வேலை செய்ய பிரிட்டனில் பெற்றோர்கள் விற்றிடும் சிறுவர்களின் தொகை இரண்டாயிரத் துக்கும் அதிகம்.[525] உழைப்புச் சக்தியை வாங்குவோருக்கும் விற் போருக்கும் இடையிலான சட்ட நீதியுறவுகளில்இயந்திர சாதனம் ஒரு புரட்சியை ஏற்படுத்தி, இந்தக் கொடுக்கல் வாங்கல் முழுவதுமே சுதந்தர ஆட்களிடையிலான ஒப்பந்தமென்னும் தோற்றத்தை இழக்கச் செய்ததானது, தொழிற்சாலைகள் விஷயத்தில் அரசு தலை யிடுவதற்குச் சட்ட நீதிக் கோட்பாடுகளின் அடிப்படையிலான

523 ''குழந்தையுழைப்பு ஆணையம், ஐந்தாம் அறிக்கை,'' லண்டன், 1866, பக்கம் 81, எண் 31. [4ஆம் ஜெர்மன் பதிப்பில் எங்கெல்ஸ் குறிப்பு.— பெத்னால் கிரீன் பட்டுத் தொழில் இப்போது அநேகமாக நசித்துப் போய் விட்டது.]

524 ''குழந்தையுழைப்பு ஆணையம், மூன்றாம் அறிக்கை,'' லண்டன், 1864, பக்கம் 53, எண் 15.

525 முன் வந்தது, ஐந்தாம் அறிக்கை, பக்கம் 22, எண் 137.

முகாந்தரத்தை ஆங்கிலேயப் பாராளுமன்றத்துக்குக் கிடைக்கச் செய்தது. முன்னர் தலையிடாத தொழில் துறைகளில் சட்டம் குழந்தைகளின் உழைப்பை 6 மணி நேரமாக வரம்பிடும் போதெல்லாம், தொழிலதிபர்களின் புகார்கள் மீண்டும் மீண்டும் கிளம்புகின்றன. சட்டத்திற்குட்படுத்தப்பட்ட தொழில் துறையிலிருந்து தம் குழந்தைகளை அநேகப் பெற்றோர்கள் திரும்பப் பெறுவது, இன்னமும் "உழைப்புச் சுதந்தரம்" கோலோச்சுகிற இடங்களில்—அதாவது 13 வயதுக்குட்பட்ட குழந்தைகள் பெரியவர்களைப் போல் வேலை செய்யுமாறு கட்டாயப்படுத்தப்படுகிற, எனவே இன்னும் அதிக விலைக்கு அவர்களைத் தள்ளி விட முடிகிற இடங்களில்—அவர்களை விற்பதற்குத்தான் என்று தொழிலதிபர்கள் குற்றஞ் சாட்டுகின்றனர். ஆனால், சமனப்படுத்துவது மூலதனத்தின் இயல்பாதலால், சகல உற்பத்தித் துறைகளிலும் அது உழைப்புச் சுரண்டலின் நிலைமைகளில் சமத்துவத்தை நிலைநாட்டுவதால், ஒரு தொழிற் கிளையில் சட்டத்தின் மூலம் குழந்தைகளின் உழைப்புக்கு இடப்படும் வரம்பு ஏனைய கிளைகளிலும் அதற்கு வரம்பிடக் காரணமாகிறது.

இயந்திர சாதனம், அதன் அடிப்படையில் எழுகிற தொழிற் சாலைகளில் முதலில் நேரடியாகவும், பின்னர் மீதமுள்ள தொழிற் கிளைகள் அனைத்திலும் சுற்றடியாகவும் மூலதனத்தின் சுரண்டலுக்கு உட்படுத்துகிற குழந்தைகளும் இளம் வயதினரும் அதே போல் மாதர்களும் அடைந்திடும் உடல் சீர்கேட்டை ஏற்கெனவே குறிப்பிட்டிருக்கிறோம். எனவே, இந்த இடத்தில் ஓர் அமிசத்தை மட்டும் ஆராய்ந்தால் போதும்; அதாவது தொழிலாளர்களின் குழந்தைகள் வாழ்வின் முதற்சில ஆண்டுகளிலேயே மடிவதால் வரும் பெரும் இறப்பு வீதத்தை மட்டும் குறிப்பிடுவோம். இங்கிலாந்து பதிவு-வட்டங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. இவற்றில் பதினாறு வட்டங்களில் ஒரு வயதுக்கு மேற்படாத குழந்தைகளில் ஓராண்டில் சராசரியாக மடிவனவற்றின் வீதம் 100,000க்கு 9,000தான் (ஒரே ஒரு வட்டத்தில் 7,047தான்); 24 வட்டங்களில் 10,000க்கு அதிகம், 11,000க்குக் குறைவு; 39 வட்டங்களில் 11,000க்கு அதிகம், 12,000க்குக் குறைவு; 48 வட்டங்களில் 12,000க்கு அதிகம், 13,000க்குக் குறைவு; 22 வட்டங்களில் 20,000க்கு அதிகம்; 25 வட்டங்களில் 21,000க்கு அதிகம்; 17 வட்டங்களில் 22,000க்கு அதிகம்; 11 வட்டங்களில் 23,000க்கு அதிகம்; ஹூ, உல்வர்ஹாம்ப்டன், லைன்-அடி-ஆஷ்டன், பிரெஸ்டன் ஆகிய வட்டங்களில் 24,000க்கு அதிகம்; நாட்டிங்கம், ஸ்டாக் போர்ட், பிராட்ஃபோர்டு ஆகியவற்றில் 25,000க்கு அதிகம்; விஸ்பீச்சில் 26,000; மான்செஸ்டரில் 26,125.[526] 1861ஆம் ஆண்டில்

[526] "பொதுச் சுகாதாரம் பற்றிய ஆறாம் அறிக்கை," லண்டன், 1864, பக்கம் 34.

அதிகாரபூர்வ மருத்துவ விசாரணை காட்டியது போல, அதீத இறப்பு வீதங்களுக்கு வட்டார அளவிலான காரணங்கள் ஒரு புறமிருக்க, பிரதானமாக, தாய்மார்கள் வீட்டை விட்டுச் சென்று வேலை செய்வதும், அதனால் ஏற்படுகிற கவனிப்பின்மையாலும் தகா முறைகளாலும் விளையும் ஊட்டப் பற்றாக்குறை, பொருந்தா உணவு, அபின் ஊட்டி உறங்கச் செய்தல் போன்ற கேடுகளும் காரணங்களாகும். மேலும், தாய்க்கும் சேய்க்கும் இடையே இயற்கைக்கு ஒவ்வாத பிணக்கு தோன்றுகிறது; இதன் விளைவாக, வேண்டுமென்றே பட்டினி போடுவதும், நச்சூட்டுவதும் நிகழ்கின்றன.[527] "மறு புறம், மாதர்களை வேலை வாங்குவது மிகக் குறைவாயிருக்கும்" விவசாய வட்டங்களில், "இறப்பு வீதம் மிகவும் குறைவு."[528] ஆயினும், வட கடலை ஒட்டியுள்ள, முழுக்க முழுக்க பயிர்த் தொழிலே செய்யும் சில வட்டங்களில், ஒரு வயதுக்குட்பட்ட குழந்தைகளின் இறப்பு வீதம் படுமோசமான தொழிற்சாலை வட்டங்களில் இருப்பதற்குக் கிட்டதட்ட சமமாயிருந்தது என்ற எதிர்பாராத முடிவினை 1861ஆம் வருட விசாரணை ஆணையம் அடைய நேர்ந்தது. எனவே, இந்த விநோதத்தை நேரில் சென்று புலனாய்வதற்கு டாக்டர் ஜூலியன் ஹண்டர் அமர்த்தப்பட்டார். அவரது அறிக்கை "பொதுச் சுகாதாரம் பற்றிய ஆறாம் அறிக்கையுடன்" இணைக்கப்பட்டுள்ளது.[529] மலேரியாவும், தாழ்வான சதுப்புநில வட்டங்களுக்கே உரித்தான இதர நோய்களும் குழந்தைகளைக் கபளீகரம் செய்வதாக இதற்கு முன்பெல்லாம் கருதப்பட்டது. ஆனால் விசாரணை இதற்கு நேர்மாறானதையே வெளிப்படுத்தியது; அதாவது, குளிர்காலத்தில் சதுப்பாகவும், கோடையில் போதாக் குறையான மேய்ச்சல் வெளியாகவும் இருந்த நிலம் தானியம் விளையும் பூமியாக மாறியதுதான் —மலேரியாவை விரட்டியடித்த இந்தக் காரணம்தான்—குழந்தைகளின் அசாதாரண இறப்பு வீதத்தைத் தோற்றுவித்தது என்பதை வெளிப்படுத்தியது.[530] அந்த வட்டத்தில் டாக்டர் ஹண்டர் விசாரித்த மருத்துவத் துறையினர் 70 பேர் இது குறித்து "அதி விசேஷக்

---

527 "மேலும், இங்கே விவரிக்கப்பட்டுள்ள சூழ்நிலைகளில், குழந்தைகள் அவற்றின் தாய்மார்களது அலுவல்களின் விளைவான கவனிப்பின்மைக்கும், தகா முறைகளுக்கும் ஆளாகி நசிந்து போகும் அதே நேரத்தில், தாய்மார்களோ தம் குழந்தைகள்பால் தாய்க்குரிய இயல்பினை அடியோடு இழந்து விடுகின்றனர்; பொதுவாகச் சொன்னால், குழந்தை மடிவது குறித்து அவர்கள் அலட்டிக் கொள்வதில்லை; சில நேரங்களில் அதை உறுதி செய்வதற்குத் தாமே ஆவன செய்கின்றனர். அதிலிருந்து (1861ஆம் வருட விசாரணையிலிருந்து) இவை யாவும் தெரிய வந்தன." (முன் வந்தது)

528 முன் வந்தது, பக்கம் 454.

529 முன் வந்தது, பக்கம் 454-463. "இங்கிலாந்தின் சில கிராமப்புற வட்டங்களில் குழந்தைகளின் அதீத இறப்பு வீதம் பற்றி டாக்டர் ஹென்றி ஜூலியன் ஹண்டரின் அறிக்கை."

530 முன் வந்தது, பக்கம் 35, பக்கம் 455, 456.

கருத்தொற்றுமை'' கொண்டிருந்தனர். உண்மையில் சாகுபடி முறையிலான புரட்சி, தொழில் துறை அமைப்பைப் புகுத்துவதற்கு இட்டுச் சென்றிருந்தது. சிறுவர் சிறுமியரோடு காங்கிகளாக [gangs] வேலை செய்யும் திருமணமான மாதர்கள், நிர்ணயிக்கப்பட்ட தொகைக்கு காங்கி முழுவதற்குமாக ஒப்பந்தம் முடிக்கும் ''ஒப்பந்தக்காரர்'' எனப்படுபவரால் சாகுபடியாளர் வசம் ஒப்படைக்கப்படுகின்றனர். ''இந்தக் காங்கிகள் சில நேரங்களில் தமது கிராமத்திலிருந்து பல மைல் பயணம் செய்யும்; தக்க முறையில் கோட்டும் காலணியும், குட்டைப் பாவாடையும், சில நேரங்களில் காற்சட்டையும் அணிந்துள்ள இவர்களைக் காலையும் மாலையும் சாலைகளில் சந்திக்கலாம். வாட்ட சாட்டமாகவும், திடகாத்திரமாகவும் இருப்பினும், இவர்கள் மாமூலான ஒழுக்கக் கேட்டின் கறை படிந்தவர்கள்; இந்த விறுவிறுப்பான சுதந்தர வாழ்க்கையில் அவர்களுக்குள்ள மோகத்தால் வீட்டிலே கெட்டழியும் அவர்களது இளந்தளிர்களுக்கு விளையும் கொடுங்கேடுகள் குறித்துக் கவலையில்லாதவர்கள்.''[531] தொழிற்சாலை வட்டங்களில் காணக் கூடிய நிகழ்வு ஒவ்வொன்றையும் அப்படியே இங்கேயும் காணலாம்: இலை மறைகாயான சிசுவதையும், அபின் ஊட்டி குழந்தைகளை உறங்கச் செய்தலும் இங்கு இன்னும் கூடப் பெரிய அளவில் நிகழ்வதாய்ச் சொல்லலாம்.[532] பிரிவி கவுன்சில் மருத்துவ அதிகாரியும் பொதுச் சுகாதாரம் பற்றிய அறிக்கைகளின் தலைமைப் பதிப்பாசிரியருமான டாக்டர் சைமன் கூறுகிறார்: ''இப்படிப்பட்ட கொடுமைகளை அறிந்திருப்பதால், வயதுவந்த மாதர்களைப் பெரிய அளவில் தொழில் துறையில வேலை வாங்குவதை நான் கடுமையாக ஆட்சேபிப்பது நியாயமே.''[533] தொழிற்சாலை ஆய்வாளர் திரு பேக்கர் தமது அதிகார பூர்வ அறிக்கையில் வியந்து கூவுகிறார்: ''உண்மையிலேயே மகிழ்ச்சிதான்; திருமணமாகி குடியும் குடித்தனமுமாய் இருக்கும் எந்தப் பெண்ணும் ஜவுளித் தொழில்களில் வேலை செய்யலாகாது என்று தடை விதிக்கப்படுமானால், இங்கிலாந்தின் தொழில் வட்டங்களுக்கு நல்ல காலம்தான்.''[534]

---

531 முன் வந்தது, பக்கம் 456.

532 பயிர்த் தொழில் வட்டங்களிலும், அதே போல் தொழிற்சாலை வட்டங்களிலும், பெரியவர்களான தொழிலாளர்கள் மத்தியில், ஆண் பெண் இரு சாராரும் அபின் உட்கொள்வது நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. ''அபின் கலந்த தூக்க மருந்தின் விற்பனையை உயர்த்துவது...வியாபார முனைப்புள்ள மொத்த வியாபாரிகள் சிலரின் முக்கிய நோக்கமாகும். அதுவே பிரதான விற்பனைப் பண்டமென மருந்து வியாபாரிகள் கருதுகின்றனர்.'' (முன் வந்தது, பக்கம் 459.) அபின் கலந்த தூக்க மருந்தை உட்கொண்ட குழந்தைகள் பிஞ்சிலே பழுத்து தள்ளாத கிழடுகளாய் ஒடுங்கிப் போயின,'' அல்லது ''வற்றிச் சுருங்கி குரங்குக் குட்டிகள் போலாயின.'' (முன் வந்தது, பக்கம் 460.) இந்தியாவும் சீனாவும் இங்கிலாந்தை எப்படிப் பழி தீர்த்துக் கொண்டன என்பதை இங்கே பார்க்கிறோம்.

533 முன் வந்தது, பக்கம் 37.

534 ''1862 அக்டோபர் 31க்கான தொழிற்சாலை ஆய்வாளர் அறிக்கைகள்,'' பக்கம் 59. திரு பேக்கர் முன்பு மருத்துவராக இருந்தவர்.

மாதர்களையும் குழந்தைகளையும் முதலாளித்துவம் சுரண்டுவதால் ஏற்படும் ஒழுக்கச் சீர்கேட்டை ''இங்கிலாந்தில் தொழிலாளி வர்க்கத்தின் நிலைமை'' என்ற நூலில் பிரெடெரிக் எங்கெல்சும், வேறு பல நூல்களில் ஏனைய எழுத்தாளர்களும் விரிவாக விளக்கியிருப்பதால், நான் இங்கே இதனை நினைவுப்படுத்தினால் போதும்; ஆனால் முதிராத நிலையிலுள்ள மானுடப் பிஞ்சுகளை உபரி-மதிப்பு உற்பத்தி செய்யும் வெறும் இயந்திரங்களாக செயற்கையான முறையில் மாற்றுவதால் மனம் பாழ்பட்டு அறிவுச் சீரழிவு உண்டாகிறது. இந்தச் சீரழிவானது மனத்தை—அதன் வளர்ச்சித் திறனை, அதன் இயற்கையான செழுமையை—அழித்து விடாமலே தரிசாகப் போட்டு வைக்கிற இயற்கையான அறியாமையிலிருந்து முற்றிலும் வேறான ஒன்று. இந்த அறிவுச் சீரழிவு இறுதியில் ஆங்கிலேயப் பாராளுமன்றத்தையே நெருக்கி நிர்ப்பந்தித்து தொழிற்சாலைச் சட்டங்களுக்குட்பட்ட ஒவ்வொரு தொழிலிலும் 14 வயதுக்கு மேற்படாத குழந்தைகளை வேலைக்கமர்த்தி ''உற்பத்தித் திறனுள்ள'' முறையில் பயன்படுத்துவதற்கு ஆரம்பக் கல்வியைக் கட்டாய நிபந்தனை ஆக்கும்படி செய்தது. தொழிற்சாலைச் சட்டங்களில் கல்வி சரத்துகள் எனப்படுபவற்றின் கேலிக்குரிய சொல்லமைப்பு, நிர்வாக ஏற்பாடு ஏதும் இல்லாமை (இந்தக் கட்டாயக் கல்வியைக் கானல் நீராக்கி விடும் இல்லாமை இது), இந்தக் கல்வி சரத்துக்களுக்குத் தொழிலதிபர்களே காட்டுகிற எதிர்ப்பு, அவற்றை ஏய்ப்பதற்காக அவர்கள் கையாளும் தந்திரங்களும் சூழ்ச்சிகளும் ஆகிய இவை யாவற்றிலும் முதலாளித்துவப் பொருளுற்பத்தியின் ஆன்மா கண் கூடாகத் தெரிகிறது. ''இதற்கான பழி சட்டமியற்றும் சபையையே சாரும்; தொழிற்சாலைகளில் வேலைக்கமர்த்தப்படும் குழந்தைகளுக்குக் கல்வி புகட்டப்படும் என்று விதிப்பதாகத் தோன்றும் அதே நேரத்தில், வெளியே சொல்லப்படும் அந்த நோக்கத்தை அடைவதற்கான சட்ட விதி எதையும் கொண்டிராத ஏமாற்றுச் சட்டத்தை இந்தச் சபை நிறைவேற்றியிருக்கிறது. வாரத்தில் சில குறிப்பிட்ட நாட்களில், ஒவ்வொரு நாளும் குறிப்பிட்ட (மூன்று) மணி நேரத்துக்கு, பள்ளி என்று சொல்லப்படும் இடத்தின் நான்கு சுவர்களுக்குள் குழந்தைகளை அடைத்து வைக்க வேண்டும் என்றும், ஒரு பள்ளி ஆசிரியர் அல்லது பள்ளி ஆசிரியை எனச் சான்றாளரால் குறிப்பிடப்படும் ஒருவர் இவ்விதம் நடைபெற்றதாக ஒப்பமிட்டளிக்கும் சான்றிதழைக் குழந்தைக்கு வேலை கொடுப்பவர் வாரந்தோறும் பெறவேண்டும் என்றும் மட்டுமே அது விதிக்கிறது.''[535] திருத்தப்பட்ட 1844ஆம் வருடத் தொழிற்சாலைச் சட்டம் நிறைவேறுவதற்கு முன்னதாக பள்ளியில் ஆஜரானதற்கான சான்றிதழ்களில் பள்ளி ஆசிரியர்

535 லி.ஹார்னர்,''1857 ஜூன் 30க்கான தொழிற்சாலை ஆய்வாளர் அறிக்கைகள்'' பக்கம் 17.

அல்லது ஆசிரியை ஒப்பமிடுவதாகச் சொல்லி வெறும் சிலுவைக் குறியைப் போட்டு வைப்பதும் உண்டு. ஏனென்றால் அவர்களுக்கே எழுத்துத் தெரியவில்லை. "ஒரு சந்தர்ப்பத்தில், பள்ளி என்று சொல்லப்பட்ட ஓர் இடத்துக்குச் சென்றதுமே—பள்ளி ஆஜர் சான்றிதழ்கள் அங்கே தரப்பட்டிருந்தன—ஆசிரியரின் அறியாமையால் மிகவும் அருவருப்படைந்து நான் அவரிடம் கேட்டேன்: "பணிந்து கேட்கிறேன் ஐயா, உங்களுக்குப் படிக்கத் தெரியுமா?" அவரது பதில்: "ஓ, கொஞ்சம் கொஞ்சம் தெரியுமே." சான்றிதழ்கள் வழங்குவதற்குத் தனக்குள்ள உரிமையை நியாயப்படுத்தும் முறையில், அவர் மேலும் சொன்னார்: 'எது எப்படியானாலும், நான் எனது மாணாக்கர்களின் எதிரில் இருக்கிறேன்.' 1844ஆம் வருட மசோதா தயாரிக்கப்பட்டுக் கொண்டிருந்த போது பள்ளிகள் என்று சொல்லப்படும் இடங்களின் அவல நிலையினை ஆய்வாளர்கள் எடுத்துச் சொல்லத் தவறவில்லை; இப்பள்ளிகளின் சான்றிதழ்கள் சட்ட விதிகளுக்கு இணங்கவே உள்ளன என்று அவர்கள் ஒப்புக் கொள்ளத்தான் வேண்டியிருந்தது; ஆனால், அவர்கள் பின்வருவதைச் சாதிப்பதில் மட்டுமே வெற்றி பெற முடிந்தது: 1844ஆம் வருடச் சட்டம் நிறைவேறிய பின்னர், பள்ளிச் சான்றிதழில் குறிக்க வேண்டிய விவரங்களைப் பள்ளி ஆசிரியர் கைப்பட எழுத வேண்டும்; இயற்பெயர், குடும்பப் பெயர் ஆகிய தமது முழுப் பெயரையும் எழுதி ஒப்பமிட வேண்டும்."[536] ஸ்காட்லாந்துக்கான தொழிற்சாலை ஆய்வாளர் சர் ஜான் கின்கைடு இதே மாதிரியான அனுபவங்களைச் சொல்கிறார்: "நாங்கள் பார்வையிட்ட முதல் பள்ளிக்கூடம் திருமதி ஆன் கில்லின் [Ann Killin] என்பவரால் நடத்தப்பட்டது. அவரது பெயரை எழுத்துக்கூட்டுமாறு சொன்னதுமே, அவர் C என்ற எழுத்தைச் சொல்லி ஆரம்பித்தார்; ஆக, தொடக்கமே தவறாயிற்று; ஆனால் உடனடியாகத் திருத்திக் கொண்டு தன் பெயர் Kஇல் ஆரம்பிப்பதாகச் சொன்னார். ஆயினும் பள்ளிச் சான்றிதழ்ப் புத்தகங்களில் அவரது கையொப்பத்தைப் பார்த்ததும், அதை அவர் பல்வேறு விதங்களில் எழுத்துக் கூட்டி இருப்பதைக் கவனித்தேன்; அவரது கையெழுத்தோ, கல்வி புகட்ட அவர் தகுதியற்றவர் என்பதை ஐயந்திரிபறக் காட்டியது. தன்னால் பதிவேடு எழுதி வைக்க முடியவில்லை என்பதை அவரே ஒப்புக்கொண்டார்....இரண்டாவது பள்ளிக்கூடத்தில் வகுப்பறை 15 அடி நீளமும் 10 அடி அகலமும் உடையதாய் இருக்கக் கண்டேன். எண்ணிப் பார்த்த போது இந்த இடத்துக்குள் 75 குழந்தைகள் இருந்தார்கள். அவர்கள் விளங்காத எதையோ உளறிக் கொண்டிருந்தார்கள்"[537] "ஆனால் குழந்தைகள் சற்றேனும்

[536] லி. ஹார்னர், "1855 அக்டோபர் 31க்கான தொழிற்சாலை ஆய்வாளர் அறிக்கைகள்," பக்கம் 18, 19.

[537] சர் ஜான் கின்கைடு, "1858 அக்டோபர் 31க்கான தொழிற்சாலை ஆய்வாளர் அறிக்கைகள்," பக்கம் 31,32.

உருப்படியான போதனை பெறாமலே பள்ளிச் சான்றிதழ் பெறுவது, மேலே குறிப்பிட்ட கேவலமான இடங்களில் மட்டும் நடப்பதன்று; தக்க ஆசிரியர் இருக்கிற பல பள்ளிகளிலும், மூன்று அல்லது அதற்கு மேற்பட்ட வயதுடைய குழந்தைகளின் குழப்படிக் கும்பலால் அவரது முயற்சிகள் எல்லாம் விழலுக்கிறைத்த நீராகிப் போகின்றன. அவரது பிழைப்பு, அவ்விடத்துக்குள் முடிந்த வரை அதிகபட்சமாகத் திணிக்கப்படும் குழந்தைகளிடமிருந்து கிடைக்கிற தம்பிடிகளைத் பொறுத்து, எப்படிப் பார்த்தாலும், கேவலமானதாகும்; மேலும், பள்ளி ஆசன வகைகள் போதாமை, புத்தகங்கள் மற்றும் கற்றுக் கொடுப்பதற்கான சாதனங்களின் பற்றாக்குறை, நெரிசலான, கூச்சல் நிறைந்த சூழ்நிலையால் ஏழைக் குழந்தைகளுக்கு ஏற்படும் சோர்வு ஆகியவையும் சேர்ந்து கொள்கின்றன. இப்படிப்பட்ட பள்ளிகள் பலவற்றுக்கு நான் போயிருக்கிறேன்; அங்கே வரிசை வரிசையாகக் குழந்தைகள் ஒன்றுமே செய்யாமல் உட்கார்ந்திருப்பதைப் பார்த்திருக்கிறேன்; இந்த நிலைக்குத்தான் பள்ளி வந்து பாடம் பயில்வதாக சான்றிதழ் தரப்படுகிறது; புள்ளி விவரப் பதிவுகளில் இக்குழந்தைகள் கல்வி புகட்டப் பெறுவதாகக் குறிக்கப்படுகிறது.''[538] ஸ்காட்லாந்தில், கட்டாயம் பள்ளி சென்றாக வேண்டிய குழந்தைகள் இல்லாமலே சமாளிப்பதற்குத் தொழிலதிபர்கள் தம்மால் முடிந்ததையெல்லாம் செய்கின்றனர். ''ஆலையதிபர்களுக்கு இப்படிக் கசப்பாயுள்ள தொழிற் சாலைச் சட்டக் கல்வி சரத்துகள், இந்தச் சட்டத்தின் நோக்கங்களாகிய வேலை வாய்ப்பு, கல்விச் செல்வம் ஆகிய இரண்டுமே அந்த வகைக் குழந்தைகளுக்குக் கிட்டாதவாறு பெருமளவுக்குத் தடுப்பதற்கே ஏதுவானவை என்பதை நிரூபிக்க மேற்கொண்டு வாதம் தேவையில்லை.''[539] ஒரு விசேஷச் சட்டத்தால் கட்டுப்படுத்தப்படும் அச்சுக் கூடங்களில் இது விகாரமாகவும் விநோதமாகவும் வெளிப்பட்டது. அந்தச் சட்டத்தின் படி, ''ஒவ்வொரு குழந்தையும், ஓர் அச்சுக் கூடத்தில் வேலைக் கமர்த்தப்படுவதற்கு முன்னர், முதன் முதல் வேலை செய்யும் நாளுக்கு முந்தைய ஆறு மாதங்களில், குறைந்தது 30 நாட்களுக்கு, 150 மணி நேரத்துக்குக் குறைவில்லாமல் பள்ளி சென்றிருக்க வேண்டும்; அச்சுக் கூடத்தில் தொடர்ந்து வேலை செய்யும் போது, அடுத்து வரும் ஒவ்வொரு ஆறு மாத காலத்துக்கும் அதே போல் 30 நாட்களுக்கு, 150 மணி நேரம் ஒவ்வொரு குழந்தையும் பள்ளி செல்ல வேண்டும்....காலை 8 மணிக்கும் மாலை 6 மணிக்குமிடையே பள்ளியில் இருக்க வேண்டும். எந்த ஒரு நாளிலும் 2½ மணி நேரத்துக்குக் குறைவாகவோ, 5 மணி நேரத்துக்கு அதிகமாகவோ

[538] லி. ஹார்னர், ''1857 அக்டோபர் 31க்கான தொ. ஆ. அறிக்கைகள்.'' பக்கம் 17,18.

[539] சர் ஜா. கின்கைடு, ''1856 அக்டோபர் 31க்கான தொ. ஆ. அறிக்கைகள்.'' பக்கம் 66.

பள்ளியிலிருப்பது 150 மணி நேரக் கணக்கில் சேர்த்துக் கொள்ளப்பட மாட்டாது. சாதாரண நிலைமைகளில், குழந்தைகள் 30 நாட்களுக்கு ஒவ்வொரு நாளும் குறைந்தது 5 மணி நேரம் காலையிலும் பிற்பகலிலும் பள்ளி செல்கின்றனர். 30 நாள் முடிந்ததும், சட்டப்படி கட்டாயமாகிய மொத்தம் 150 மணி நேரம் அடையப்பட்டதும், அவர்களது பாஷையில், கணக்கை முடித்ததும், அவர்கள் அச்சுக் கூடத்துக்குத் திரும்பி ஆறு மாதம் முடியும் வரை வேலை செய்கின்றனர்; பின், இன்னொரு தவணை தொடங்க வேண்டியதாகி, மீண்டும் கணக்கை முடிக்கும் வரை பள்ளியை நாடுகின்றனர்....அவசியமான மணி நேரம் பள்ளி சென்று முடித்த பையன்கள், அச்சுக் கூடத்தில் ஆறு மாத வேலை முடிவடைந்த பின்னர் பள்ளிக்குத் திரும்பும் போது, அவர்கள் முதன் முதலில் அச்சுக் கூடப் பையன்களாகப் பள்ளி வந்த போது இருந்த அதே நிலையில் இருக்கின்றனர்; அதாவது தாங்கள் முந்தைய தவணையில் பள்ளி சென்ற போது பெற்ற பலன்கள் அனைத்தையும் இழந்து விடுகின்றனர்....ஏனைய அச்சுக் கூடங்களில் குழந்தைகள் பள்ளி செல்வது முற்றிலும் நிறுவனத்தின் வேலைத் தேவைகளைப் பொறுத்ததாய் ஆக்கப்படுகிறது. ஒவ்வொரு ஆறு மாத காலத்திலும், அவசியமான மணி நேரம், அநேகமாக அந்த ஆறு மாதம் முழுவதிலும் பரவலாக, தடவைக்கு 3 முதல் 5 மணி நேரம் கொண்ட தவணைகள் மூலம் சரிக்கட்டப்படுகிறது....எடுத்துக்காட்டாக, ஒரு நாளில் காலை 8 முதல் 11 வரையும், இன்னொரு நாளில் பிற்பகல் 1 முதல் 4 வரையும் பள்ளி நேரமாய்க் கொள்ளப்படும்; பல நாட்களுக்குக் குழந்தை பள்ளி செல்லாமலே இருக்கும்; பின் பிற்பகல் 3 முதல் 6 வரை பள்ளியில் இருக்கும்; பின் அடுத்தடுத்து மூன்று, நான்கு நாட்களுக்கோ ஒரு வார காலத்துக்கோ பள்ளி செல்லும்; பின் அது 3 வாரத்துக்கோ ஒரு மாதத்துக்கோ பள்ளி செல்லாது; அதன்பின், அதை வேலை வாங்கும் தொழிலாளி ஒதுக்க விரும்பும் ஏதோ சில நாட்களில், ஏதோ சில நேரங்களில் அது பள்ளி செல்லும்; இவ்வாறு 150 மணி நேரக் கதை முடிக்கப்படும் வரை குழந்தை பள்ளியிலிருந்து வேலைக்கும், வேலையிலிருந்து பள்ளிக்குமாகப் பந்தாடப்பட்டது எனலாம்.''[540]

---

540 ''1857 அக்டோபர் 31க்கான தொழிற்சாலை ஆய்வாளர் அறிக்கைகளில்'' அ. ரெட்கிரேவ், பக்கம் 41-42. முறையான தொழிற்சாலைச் சட்டம் (வாசகத்தில் குறிப்பிட்டுள்ள அச்சுக் கூடங்கள் சட்டமல்ல) சில காலமாய் அமலில் இருந்து வரும் தொழில்களில், கல்வி சரத்துக்களின் வழியிலுள்ள தடங்கல்கள் சமீப ஆண்டுகளில் சமாளிக்கப்பட்டுள்ளன. இச்சட்டத்திற்கு உட்படாத தொழில்களில், கண்ணாடித் தொழிலதிபரான திரு ஜே. கெட்டிசின் கருத்துகள் இன்னமும் விரிவாக ஆட்சி செலுத்துகின்றன. விசாரணை ஆணையர்களில் ஒருவரான திரு வொய்ட்டிடம் அவர் தெரிவித்தார்: ''நான் பார்க்க முடிந்த வரை, கடந்த சில ஆண்டுகளாகத் தொழிலாளி வர்க்கத்தின் ஒரு பகுதி பெற்றுள்ள கல்வி பெரும்பாலும் தீங்கேயாகும். அது ஆபத்தானது; ஏனென்றால் அது அவர்களை சுதந்தர மனிதர்களாக்கி விடுகிறது.'' (''குழந்தை யுழைப்பு ஆணையம், நான்காம் அறிக்கை,'' லண்டன், 1865, பக்கம் 253.)

இயந்திர சாதனமானது, தொழிலாளர்தம் அணிகளில் மாதர்களையும் குழந்தைகளையும் அளவுக்கதிகமாகச் சேர்ப்பதன் மூலம், மூலதனத்தின் கொடுங்கோன்மைக்கு ஆண் தொழிலாளர்கள் பட்டறைத் தொழிற் காலத்தில் தொடர்ந்து காட்டி வந்த எதிர்ப்பை இறுதியில் உடைத்திடுகிறது.[541]

### ஆ. வேலை-நாளின் நீட்டிப்பு

உழைப்பின் உற்பத்தித் திறனை உயர்த்துவதற்கு, அதாவது, சரக்கின் உற்பத்திக்குத் தேவைப்படும் வேலை நேரத்தைக் குறைப்பதற்கு மிகவும் சக்தி வாய்ந்த வழிவகை இயந்திர சாதனமே என்றால், மூலதனத்தின் கையில் அந்த இயந்திர சாதனம், அது முதலில் பிரவேசித்த தொழில்களில், மனித இயல்பு விதிக்கிற வரம்புகளை எல்லாம் மீறி வேலை-நாளை நீளச் செய்வதற்கு மிகவும் சக்தி வாய்ந்த வழிவகையாகிறது. அது புதிய நிலைமைகளைத் தோற்றுவித்து, ஒரு புறம், மூலதனத்தின் ஓயாத போக்காகிய வேலை-நாளை நீட்டும் போக்கிற்குத் தங்குதடையற்ற வாய்ப்பை வழங்குகிறது; மறு புறம், பிறர் உழைப்பை விழுங்கும் மூலதனத்தின் பசியைத் தூண்டி விடும் புதிய குறிக்கோள்களை எழுப்புகிறது.

முதலாவதாக, இயந்திர சாதனங்களின் உருவில், உழைப்புச் சாதனங்கள் தானியங்கிகளாகி, தொழிலாளியைச் சாராமல் சுயேச்சையாய் இயங்கவும் வேலை செய்யவும் முற்படுகின்றன. அது முதல் அவை தொழில் துறையின் நிரந்தர இயக்கிகளாகின்றன. மனித ஊழியர்களின் திடமிலாச் சரீரங்கள், திடமான சித்தங்கள் என்ற உருவில் சில இயற்கைத் தடைகள் மட்டும் இல்லையேல், இந்த இயந்திர சாதனங்கள் நிற்காமல் என்றென்றைக்கும் உற்பத்தி செய்து கொண்டே இருக்கும். மூலதனம் என்ற முறையிலும், அதுவே மூலதனம் என்பதாலும், இந்த இயந்திர மனிதன் முதலாளியின் உருவில் அறிவும் சித்தமும் படைத்ததாகும். ஆகவே, அது விடாப்பிடியான, ஆனால் நெகிழ்ச்சி வாய்ந்த இயற்கைத்

---

541 "தன் விசைத் தறிகளில் பிரத்தியேகமாகப் பெண்களை மட்டுமே வேலைக் கமர்த்துவதாகத் தொழிலதிபர் திரு E என்னிடம் தெரிவித்தார்....திருமணமான பெண்களாகப் பார்த்து, குறிப்பாகக் குடும்பத்தினர் ஜீவனத்துக்கு இப்பெண்களையே நம்பியுள்ளனர் என்னும் நிலையில் இருப்பவர்களாகப் பார்த்து, வேலைக்கமர்த்திக் கொள்கிறார். அவர்கள் திருமணமாகாத பெண்களை விடக் கவனம் வாய்ந்தவர்களாகவும், பணிந்து நடப்பவர்களாகவும் உள்ளனர்; ஜீவிப்பதற்கு அத்தியாவசியமானவற்றைச் சம்பாதிக்க ஆனமட்டும் பாடுபட வேண்டிய கட்டாய நிலையில் உள்ளனர். இவ்வாறு, பெண்ணுக்கே உரித்தான சிறப்பியல்புகள் பெண்ணுக்கே கேடு நேரும் படி திருப்பி விடப்படுகின்றன; பெண்ணின் இயல்பான தன்மைகளாகிய கடமை நாட்டம், மென்மை யாவும் அவளையே அடிமையாக்கி, அல்லலுறச் செய்வதற்குப் பயன்படுத்திக் கொள்ளப்படுகின்றன." (பத்து மணி நேரத் தொழிற்சாலை மசோதா, ஆஷ்லி பிரபுவின் உரை, மார்ச் 15, லண்டன், 1844, பக்கம் 20.)

தடையாகிய மனிதன் காட்டும் எதிர்ப்பைக் கூடுமான வரை குறைக்க வேண்டுமெனத் துடியாய்த் துடிக்கிறது.[542] இயந்திர வேலை பார்வைக்கு இலகுவாய் இருக்கிறது என்பதாலும், அதில் ஈடுபடுத்தப் படும் மாதர்களும் குழந்தைகளும் பணிவும் படிவும் வாய்ந்தவர்கள் என்பதாலும், இந்த எதிர்ப்பு குறைந்து போகிறது.[543]

இயந்திர சாதனத்தின் உற்பத்தித் திறன் அது உற்பத்திப் பொருளுக்குப் பெயர்த்தளிக்கும் மதிப்புக்கு எதிர் விகிதத்தில் இருப்பதைப் பார்த்தோம். இயந்திரத்தின் ஆயுள் எவ்வளவுக்கு எவ்வளவு நீண்டதோ, இயந்திரத்தால் செலுத்தப்படும் மதிப்பு நிரவப் பெறுகிற உற்பத்திப் பொருட்களின் திரள் அவ்வளவுக்கு அவ்வளவு பெரிதாகும்; ஒவ்வொரு தனிச் சரக்கோடும் சேர்க்கப்படும் அம்மதிப்பின் பங்கு அவ்வளவுக்கு அவ்வளவு குறைவாகும். ஆயினும், இயந்திரத்தின் செயல்முனைப்புள்ள ஆயுட் காலமென்பது, வேலை-நாளின் கால அளவை, அல்லது அன்றாட உழைப்பு நிகழ்முறை நீடிக்கும் காலத்தை நிகழ்முறை நடத்தப்படும் நாட்களின் எண்ணிக்கையால் பெருக்கி வருவதைப் பொறுத்ததாகும் என்பது தெளிவு.

இயந்திரத்தின் தேய்மானம் அதன் வேலை நேரத்துக்குக் கறாரான விகிதாசாரத்தில் இருப்பதில்லை. அது அப்படியிருந்தாலும் கூட, 7½ ஆண்டு காலம் அன்றாடம் 16 மணி நேரம் வேலை செய்கிற ஓர் இயந்திரம், அதே இயந்திரம் 15 ஆண்டு காலம் அன்றாடம் 8 மணி நேரமே வேலை செய்தால் கடக்கிற அதே அளவு

---

542 ''இயந்திர சாதனங்கள் பரவலாகப் புகுத்தப்பட்ட பின்னர், மனித இயல்பு அதன் சராசரி வலிமையை மீறி நெடுந்தூரம் வலுவந்தமாய்த் தள்ளப்பட்டுள்ளது.'' (ராபர்ட் ஓவன்: ''ஆலைத் தொழில் முறையின் விளைவுகள் பற்றிய கருத்தோட்டங்கள்,'' 2ஆம் பதிப்பு, லண்டன், 1817.)

543 ஆங்கிலேயர்கள் ஒரு பொருளின் மிக ஆரம்ப காலப் புறத்தோற்ற வடிவத்தை அது இருப்பதற்குரிய மூல காரணமாகக் கருதும் போக்குடையவர்கள். தொழிற்சாலைகளில் நீண்ட வேலை நேரத்துக்குக் காரணம், ஆலைத் தொழிலின் பால பருவத்தில் முதலாளிகள் பரவலான முறையில் வேலை இல்லங்களிலும் அனாதை இல்லங்களிலும் நடத்தி வந்த பிள்ளை பிடிக்கும் செயலே என்று அவர்கள் கருதுவர். இந்தப் பிள்ளைத் திருட்டைக் கொண்டுதான் சுரண்டலுக்கு எதிர்ப்பு காட்டாத மானுடப் பொருள் ஈட்டப் பட்டது. இவ்வாறு, எடுத்துக்காட்டாக, தாமே ஒரு தொழிலதிபரான ஃபீல்டன் கூறுகிறார்: ''இவ்வளவு பெரும் தொகையிலான ஆதரவற்ற குழந்தைகள் நாட்டின் வெவ்வேறு பகுதிகளிலிருந்து கிடைத்ததாலேயே நீண்ட வேலை நேரம் ஏற்பட்டது என்பதும், தொழிலதிபர்கள் ஆட்களை நம்பிக் கொண்டிருக்கவில்லை என்பதும், இந்த வித்தத்தில் தாங்கள் ஈட்டிய துயரார்ந்த மூலப் பொருட்களைக் கொண்டு இவ்வழக்கத்தை நிலைநாட்டியதுமே, அவர்கள் அதனை இன்னும் சுலபமாகத் தம் அண்டையிலிருந்தவர்கள் மீது திணிக்க முடிந்தது என்பதும் தெளிவு, (ஜா. ஃபீல்டன் ''ஆலைத் தொழிலின் சாபக்கேடு,'' லண்டன், 1836, பக்கம் 11.) மாதர்கள் உழைப்பு சம்பந்தமாக, தொழிற்சாலை ஆய்வாளர் சாண்டர்ஸ் தமது 1844ஆம் வருட அறிக்கையில் கூறுகிறார்: ''பெண் தொழிலாளர்களிடையே, சில நாட்கள் தவிரத் தொடர்ச்சியாகப் பல வாரங்களுக்குக் காலை 6 மணி முதல் நள்ளிரவு வரை, உணவுக்காக 2 மணி நேரத்துக்குக் குறைவாக ஓய்வு விட்டு வேலை வாங்கப்படுகிற பெண்டிர் சிலர் உளர்; இதனால், வாரத்தில் 5 நாட்களில், வீட்டுக்குப் போய் வருவதற்கும், படுக்கையில் ஓய்வெடுப்பதற்கும் 24 மணி நேரத்தில் அவர்களுக்கிருப்பது 6 மணி நேரம்தான்.''

வேலைக் காலத்தையே கடக்கிறது; 15 ஆண்டு காலம் அன்றாடம் 8 மணி நேரமே வேலை செய்தால் பெயர்த்தளிப்பதை விடக் குறைவில்லாத மதிப்பை மொத்த உற்பத்திப் பொருளுக்குப் பெயர்த்தளிக்கிறது. ஆனால், இயந்திரத்தின் மதிப்பு, இரண்டாவது நேர்வில் மறுவுற்பத்தி செய்யப்படுவதைப் போல் இருமடங்கு துரிதத்துடன் முதலாவது நேர்வில் மறுவுற்பத்தி செய்யப்படும்; முதலாளி இயந்திரத்தை இப்படிப் பயன்படுத்தி, இரண்டாவது நேர்வில் 15 ஆண்டுகளில் உறிஞ்சுகிற அதே அளவு உபரி-மதிப்பை 7½ ஆண்டுகளில் உறிஞ்சுகிறார்.

இயந்திரத்தின் பொருள்வகைத் தேய்மானம் இருவிதத்தில் ஏற்படுகிறது. ஒன்று, நாணயங்கள் சுற்றோட்டத்தில் தேய்ந்து போவது போன்று உபயோகத்தால் ஏற்படுவது; இன்னொன்று, உறையிலேயே விட்டு வைக்கப்படும் வாள் துருப்பிடிப்பது போன்று உபயோகிக்காமையால் ஏற்படுவது. இரண்டாவது வகை இயற்கைச் சக்திகளின் விளைவாகும். இயந்திரத்தின் உபயோகத்துக்கு, முதலாவது வகை சற்றேறக்குறைய நேர் விகிதத்திலும் இரண்டாவது வகை குறிப்பிட்ட அளவுக்கு எதிர் விகிதத்திலும் உள்ளன.[544]

ஆனால் பொருள்வகைத் தேய்மானத்தோடு கூட, இயந்திரமானது கௌரவ மதிப்பிறக்கம் [moral depreciation] என நாம் அழைக்கக் கூடிய ஒன்றுக்கும் உள்ளாகிறது. அதே ரகமான இயந்திரங்கள் அதை விட மலிவாக உற்பத்தி செய்யப்படுவதாலோ, அல்லது இன்னும் சிறந்த இயந்திரங்கள் அதனுடன் போட்டிக்கு வருவதாலோ அது பரிவர்த்தனை-மதிப்பை இழக்கிறது.[545] இரு நேர்வுகளிலும் இயந்திரம் எவ்வளவுதான் இளமையோடு உயிர்த் துடிப்புடன் இருப்பினும், அதன் மதிப்பு, இப்போது அதில் உள்ளபடியே பொருள்வடிவாக்கப்பட்டுள்ள உழைப்பால் நிர்ணயிக்கப்படுவதில்லை; அதையோ அல்லது அதனிலும் சிறந்த இயந்திரத்தையோ மறுவுற்பத்தி செய்வதற்கு அவசியமான உழைப்பு நேரத்தாலேயே நிர்ணயிக்கப்படுகிறது. எனவே, அதிகமாகவோ குறைவாகவோ அது மதிப்பை இழந்திருக்கிறது. அதன் மொத்த மதிப்பை மறுவுற்பத்தி செய்வதற்கு எடுத்துக் கொள்ளப்படும் காலம் எவ்வளவு குறைவானதோ, கௌரவ மதிப்பிறக்கம் நிகழ்ந்திடும் அபாயம் அவ்வளவு குறைவானது. வேலை-நாள் எவ்வளவுக்கு எவ்வளவு நீள்கிறதோ அவ்வளவுக்கு அவ்வளவு அந்த மறுவுற்பத்திக் காலம் குறைகிறது. இயந்திர சாதனம் ஒரு தொழிலில் முதன்

---

544 "செயலின்மையால் உலோக இயங்கமைப்பின் நுண்மையான இயக்க உறுப்புகளுக்குத் தீங்கு...நேரிடுகிறது", (யூர், முன் வந்தது, பக்கம் 281.)

545 முன்னர் குறிப்பிட்ட மான்செஸ்டர் நூற்பதிபர் (டைம்ஸ், 1862 நவம்பர் 26) இது தொடர்பாகச் சொல்வதாவது: "இயந்திரங்கள் தேய்ந்து போகும் முன்னரே, புதிய, இன்னும் சிறந்த கட்டுமானமுள்ள வேறு இயந்திரங்கள் அவற்றைத் தள்ளி விட்டு வருவதால் இடைவிடாது ஏற்படும் இழப்பை ஈடு செய்வதும் அதன் (அதாவது "இயந்திர சாதனத்தின் சீர்கேட்டுக்கான படித்தொகையின்") நோக்கமாகும்."

முதல் புகுத்தப்படும் போது, அதை இன்னும் மலிவாக மறுவுற்பத்தி செய்யும் புதிய வழிமுறைகள் சரமாரியாகத் தொடர்கின்றன.[546] இயந்திரத்தின் தனி உறுப்புகளையும், பல்வேறு நுணுக்கங்களையும் மட்டுமல்லாமல், அதன் முழு உருவத்தையே திருத்தும் படியான மேம்பாடுகளும் அவ்வாறே தொடர்கின்றன. எனவே, வேலை-நாளை நீட்டிப்பதற்கான இந்த விசேஷ ஊக்குவிசை மிகத் தீவிரமாய் வெளிப்படுவது இயந்திர சாதனத்தினது வாழ்வின் ஆரம்ப நாட்களிலேயே.[547]

வேலை-நாளின் கால அளவு குறிப்பிட்டதாய் இருக்க, மற்றெல்லா நிலைமைகளும் மாறாதிருக்க, சுரண்டப்படும் தொழிலாளர்களின் தொகையை இரு மடங்காக்க வேண்டுமானால், இயந்திர சாதனம், கட்டடங்கள் ஆகியவற்றில் முதலீடு செய்யப்பட்டுள்ள மாறா-மூலதனப் பங்கை மட்டுமல்லாமல், கச்சாப் பொருள், துணைப் பொருட்கள் [auxiliary substances] ஆகியவற்றில் முதலீடு செய்யப்பட்டுள்ள மாறா-மூலதனப் பங்கையும் இரு மடங்காக்க வேண்டியதாகிறது. ஆனால், வேலை-நாள் நீட்டப்படுமானால், இயந்திர சாதனம், கட்டடங்கள் ஆகியவற்றில் முதலீடு செய்யப்பட்டுள்ள மூலதனத் தொகையில் மாற்றமில்லாமலே விரிதிற வீதத்தில் உற்பத்தி செய்ய முடிகிறது.[548] எனவே, உபரி-மதிப்பு அதிகரிப்பது மட்டுமல்லாமல், அதை அடைவதற்கு அவசியமான முதலீடும் சுருங்குகிறது. வேலை-நாள் நீட்டிக்கப்படும் போதெல்லாம் இது குறிப்பிட்ட அளவுக்கு நிகழ்வது மெய்தான்; ஆனால் பரிசீலனையிலுள்ள இந்த நேர்வில் மாற்றம் அதிகம் குறிப்பிடத் தக்கதாய் உள்ளது; ஏனெனில் உழைப்புச் சாதனங்களாக

---

546 "புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்ட இயந்திரத்தின் முதல் தயாரிப்புக்கு ஆகும் செலவு இரண்டாவது தயாரிப்புக்கு ஆவதைப் போல் சுமார் ஐந்து மடங்கு ஆகும் எனத் தோராயமாக மதிப்பிடப்பட்டிருக்கிறது." (பாபேஜ், முன் வந்தது, பக்கம் 349.)

547 "உரிமைப் பட்டயம் பெற்ற வலையைத் தயாரிப்பதற்கான சட்டங்களில் [frames] சமீப காலத்தில் ஏற்பட்ட மேம்பாடுகள் எவ்வளவு அதிகமாய் இருந்தனவென்றால்: £1,200 விலையான நல்ல நிலையிலுள்ள ஓர் இயந்திரம் சில ஆண்டுகள் கழித்து £60க்கு விற்றது. பூர்த்தி செய்யப்படாமலே போய் விட்ட இயந்திரங்கள் அவற்றைச் செய்தவர்களின் கையிலேயே தங்கி விட்டன என்னும் அளவுக்கு, மேம்பாடுகள் அவ்வளவு துரிதமாக ஒன்றையொன்று தொடர்ந்து வந்தன; ஏனெனில் புதிய புதிய மேம்பாடுகள் பழையவற்றின் பயனோக்கத்தை இல்லாதொழித்து விட்டன." (பாபேஜ், முன் வந்தது, பக்கம் 233.) இந்தப் புயல்வேக முன்னேற்றக் காலத்தில் சல்லாத் துணித் தயாரிப்பாளர்கள், ஆரம்பத்தில் 8 மணி நேரமாக இருந்த வேலை-நாளை, ஆட்களின் இரட்டைக் குழுக்களைக் கொண்டு விரைவிலேயே 24 மணி நேரமாக நீட்டினர்.

548 சந்தைகளின் ஏற்ற இறக்கங்கள், வேண்டல் மாறி மாறிச் சுருங்கி விரிதல் ஆகியவற்றின் இடையில், ...கட்டடங்கள், இயந்திர சாதனங்கள் ஆகியவற்றுக்காகக் கூடுதல் செலவு செய்யாமலே கூடுதல் அளவுகளில் கச்சாப் பொருளை செய்பொருளாக்க முடியுமானால், கூடுதலான நிலை-மூலதனத்தை [fixed capital] ஈடுபடுத்தாமல் தொழிலதிபர் கூடுதலான நிலைத்திரா மூலதனத்தை [floating capital] ஈடுபடுத்தக் கூடிய சந்தர்ப்பங்கள் இடைவிடாமல் திரும்பத் திரும்ப வரும்." (ரா. டாரென்ஸ்: "கூலி மற்றும் ஒன்றிணைப்பு பற்றி," லண்டன், 1834, பக்கம் 64.)

மாற்றப்படும் மூலதனம் முன்னிலும் பெரிய அளவுக்கு முதலிடம் வகிக்கிறது.[549] ஆலைத் தொழிலின் வளர்ச்சியைத் தொடர்ந்து, மூலதனத்தில் மேலும் மேலும் அதிகமாகும் ஒரு பகுதி, ஒரு புறம் அதன் மதிப்பு ஓயாமல் தற்பெருக்கம் அடையக் கூடியதும், மறு புறம் உயிருள்ள உழைப்புடன் அது தொடர்பிழக்கும் போதெல்லாம் பயன்-மதிப்பு, பரிவர்த்தனை-மதிப்பு இரண்டையும் இழப்பதும் ஆகிய வடிவமுடையதாய் நிலைபெறுகிறது. பஞ்சுத் தொழில் பெரும் புள்ளியான திரு ஆஷ்வொர்த் பேராசிரியர் நாசா வி. சீனியரிடம் கூறினார்: ''ஒரு தொழிலாளி வேலை செய்யாமல் மண்வெட்டியைக் கீழே போடும் போது பதினெட்டு பென்னி பெறுமானமுள்ள மூலதனத்தை அவ்வளவு நேரத்துக்குப் பயனற்றதாக்குகிறார். நம் ஆட்களில் ஒருவர் வேலை செய்யாமல் ஆலையை விட்டுச் செல்லும் போது £100,000 பெறுமானமுள்ள மூலதனத்தைப் பயனற்றதாக்குகிறார்.''[550] சற்றே கற்பனை செய்து பாருங்களேன்! £100,000 பெறுமானமுள்ள மூலதனம், வினாடிப் பொழுதுக்கே என்றாலும், ''பயனற்றுப்'' போவதாவது! நம் ஆட்களில் ஒரே ஒருவர்தான் என்றாலும் அவர் வேலை செய்யாமல் தொழிற்சாலையை விட்டு கணப் பொழுதும் போவதாவது! மெய்யாகவே கொடுமையிலும் கொடுமைதான்! ஆஷ்வொர்த்திடம் போதம் பெற்ற பின் சீனியர் தெளிவாகத் தெரிந்து கொள்வது போல, இயந்திர சாதனம் மேலும் மேலும் அதிகமாய் பயன்படுத்தப் படுவதைத் தொடர்ந்து வேலை-நாளை இடைவிடாமல் மேலும் மேலும் நீட்டுவது ''விரும்பத்தக்கது''[551] ஆகிறது.

இயந்திர சாதனம் ஒப்பீட்டு உபரி-மதிப்பை உற்பத்தி செய்கிறது; நேரடியாய் உழைப்புச் சக்தியின் மதிப்பைக் குறைப்பதன்

---

[549] முழுமையின் நிமித்தமே இந்நிலைமை குறிப்பிடப்படுகிறது; ஏனெனில் இலாப வீதத்தை, அதாவது முன்னீடு செய்யப்படும் மொத்த மூலதனத்தோடு உபரி-மதிப்பிற்குள்ள விகிதத்தை, மூன்றாம் பாகத்துக்கு வரும் வரை நான் பரிசீலிக்கப் போவதில்லை.

[550] சீனியர், ''தொழிற்சாலைச் சட்டம் பற்றிய கடிதங்கள்,'' லண்டன், 1837, பக்கங்கள் 13, 14.

[551] ''சுழல்-மூலதனத்தோடு ஒப்பிட்டால் நிலை-மூலதனம் அதிகமாயிருப்பது நீண்ட வேலை நேரத்தை விரும்பத் தக்கதாக்குகிறது.'' இயந்திர சாதனமும் இன்ன பிறவும் அதிகமாகப் பயன்படுத்தப்படுவதைத் தொடர்ந்து, ''வேலை நேரத்தை மேலும் மேலும் நீட்ட வேண்டுமென்ற துடிப்பு அதிகரிக்கிறது, ஏனென்றால் பெரும் விகிதாசாரத்தில் உள்ள நிலை-மூலதனத்தை இலாபகரமாக்குவதற்கு இது ஒன்றே வழி.'' (முன் வந்தது, பக்கம் 11-13.) ''ஆலை குறைநேரம் ஓடினாலும், முழுநேரம் ஓடினாலும், மாறாமல் ஒரே விகிதாசாரத்தில் நீடிக்கும் குறிப்பிட்ட சில செலவினங்கள் உண்டு. எடுத்துக்காட்டாக வாடகை வீதங்கள், வரிகள், தீ விபத்துக்கெதிரான காப்பீடு, பல்வேறு நிரந்தர ஊழியர்களின் சம்பளம், இயந்திர சாதனத்தின் சீர்கேடு, உற்பத்தி நிறுவனத்தின் மீதான பலவிதக் கட்டணங்கள்; இலாபங்களுடனான இவற்றின் விகிதாசாரம் உற்பத்தி குறைவதற்கேற்ப அதிகரிக்கிறது.'' (''தொழிற்சாலை ஆய்வாளர் அறிக்கைகள், 1862 அக்டோபர் 31க்கானவை,'' பக்கம் 19.)

மூலமும், உழைப்புச் சக்தியின் மறுவுற்பத்தியில் பங்கு பெறும் சரக்கு களை மலிவாக்கி சுற்றடியாக அவ்வுழைப்புச் சக்தியை மலிவாக்கு வதன் மூலமும் இயந்திர சாதனம் இதைச் செய்கிறது. இவை தவிர, இயந்திர சாதனம் ஒரு தொழிலில் முதன் முதல் சிதறலாகப் புகுத் தப்படும் போது, அதன் உடைமையாளர் வேலைக்கமர்த்துகிற உழைப்பின் தரத்தையும் பயன்திறனையும் உயர்த்துவதன் மூலமும், உற்பத்தி செய்யப்படும் பண்டத்தின் சமுதாய மதிப்பை அதன் தனிப்பட்ட மதிப்புக்கு மேலாக உயர்த்தி, இவ்விதம் முதலாளி ஒரு நாளைய உழைப்புச் சக்தியின் மதிப்பை ஒரு நாளைய உற்பத்திப் பண்டத்தின் மதிப்பில் முன்னிலும் சிறிய பங்கைக் கொண்டு மாற்றீடு செய்வதை சாத்தியமாக்குவதன் மூலமும், இதைச் செய் கிறது. மாறிச் செல்லும் இந்தக் காலத்தில், இயந்திர சாதன உபயோகம் ஒரு விதமான ஏகபோகமாய் இருக்கையில், இதனால் இலாபங்கள் விதிவிலக்கான அளவுக்கு மிக அதிகமாய் இருக்கை யில், முதலாளி ஆனமட்டும் வேலை-நாளை நீட்டித்து ''தமது சுக்கிர தசையை'' முழுமையாகப் பயன்படுத்திக் கொள்ள அரும்பாடு படுகிறார். பெருத்த இலாபம், மேலும் பெருத்த இலாபம் பெற வேண்டுமென்னும் தீப்பசியைத் தூண்டுகிறது.

குறிப்பிட்ட தொழிலில் இயந்திர சாதன உபயோகம் மேலும் பரவலானதாய் மாற மாற, உற்பத்திப் பொருளின் சமுதாய மதிப்பு குறைந்து அதன் தனிப்பட்ட மதிப்புக்குச் சமமாகிறது. உபரி-மதிப்பு இயந்திர சாதனத்தால் மாற்றீடு செய்யப்படும் உழைப்புச் சக்தி யிலிருந்து பிறப்பதன்று, இயந்திர சாதனத்தைக் கொண்டு வேலை செய்வதில் மெய்யாகவே ஈடுபடுத்தப்படும் உழைப்புச் சக்தி யிலிருந்து பிறப்பதே என்ற விதி தன்னை நிலை நாட்டிக் கொள் கிறது. உபரி-மதிப்பு மாறும்-மூலதனத்திலிருந்து மட்டுமே பிறக் கிறது. உபரி-மதிப்பின் அளவு இரு காரணிகளை, அதாவது உபரி-மதிப்பின் வீதத்தையும் ஒருங்கே வேலை வாங்கப்படும் தொழி லாளர்களின் தொகையையும் பொறுத்தது என்று பார்த்தோம். வேலை-நாளின் கால அளவு குறிப்பிட்டதாய் இருக்க, உபரி-மதிப்பின் வீதம் ஒரு நாளில் அவசிய-உழைப்புக்கும் உபரி-உழைப் புக்கும் தேவையான ஒப்பீட்டுக் கால அளவால் நிர்ணயிக்கப்படு கிறது. ஒருங்கே வேலை வாங்கப்படும் தொழிலாளர்களின் தொகையோ மாறா-மூலதனத்துக்கான மாறும்-மூலதனத்தின் விகிதத்தைப் பொறுத்தது. இப்போது, இயந்திர சாதனத்தைப் பயன் படுத்தி உழைப்பின் உற்பத்தித் திறனை உயர்த்தி அவசிய-உழைப் பைக் குறைத்து உபரி-உழைப்பைக் கூட்டுவது எவ்வளவுதான் நடை பெற்றாலும் குறிப்பிட்ட மூலதனத் தொகையால் வேலைக்கமர்த்தப் படும் தொழிலாளர்களின் தொகையைக் குறைப்பதன் மூலமே அது நடைபெறுகிறது. உழைப்புச் சக்தியில் முதலீடு செய்யப்பட்ட மாறும்-மூலதனமாக முன்னர் இருந்ததை அது இயந்திர சாதனமாக

மாற்றுகிறது—இயந்திர சாதனம் மாறா-மூலதனமாகையால் உபரி-மதிப்பை உற்பத்தி செய்யாது. எடுத்துக்காட்டாக, 24 தொழிலாளர்களிடமிருந்து கறக்கும் அளவு உபரி-மதிப்பை 2 தொழிலாளர்களிடமிருந்து கறக்க முடியாது. இந்த 24 பேரில் ஒவ்வொருவரும் 12 மணி நேரத்தில் 1 மணி நேர உபரி-உழைப்பை மட்டுமே கொடுப்பதானால், 24 பேரும் சேர்ந்து 24 மணி நேர உபரி-உழைப்பைக் கொடுக்கின்றனர்; இருவரை மட்டும் எடுத்துக் கொண்டால் அவர்களின் மொத்த உழைப்பே 24 மணி நேரம்தான். இவ்விதம், உபரி-மதிப்பின் உற்பத்திக்கு இயந்திர சாதனத்தைப் பிரயோகிப்பது அதில் உள்ளார்ந்திருக்கும் ஒரு முரண்பாட்டைக் குறிக்கிறது; ஏனெனில் குறிப்பிட்ட அளவு மூலதனத்தால் படைக்கப்படும் உபரி-மதிப்பின் இரு காரணிகளில் ஒன்றாகிய உபரி-மதிப்பு வீதத்தை உயர்த்த வேண்டுமானால், இன்னொரு காரணியாகிய தொழிலாளர்களின் தொகையைச் சுருக்கியாக வேண்டும். குறிப்பிட்ட தொழிலில் இயந்திர சாதனத்தைப் பரவலாக ஈடுபடுத்துவதன் மூலம், இயந்திரத்தைக் கொண்டு உற்பத்தியான சரக்கின் மதிப்பானது அதே ரகத்தைச் சேர்ந்த எல்லாச் சரக்குகளின் மதிப்பையும் ஒழுங்குபடுத்தும் நிலை ஏற்பட்டவுடனே, இந்த முரண்பாடு வெளிச்சத்துக்கு வருகிறது; சுரண்டப்படும் தொழிலாளர்களின் ஒப்பீட்டு எண்ணிக்கைக் குறைவை, ஒப்பீட்டு உபரி-உழைப்பை மட்டுமல்லாமல் அறுதி உபரி-உழைப்பையும் அதிகமாக்குவதன் மூலம் ஈடு செய்யும் பொருட்டு, வேலை-நாளை அளவுக்கதிகமாக நீட்டும் நிலைக்கு முதலாளி நெருக்கித் தள்ளப்படுவது—இந்த மெய்ந்நிகழ்வை உணராமலே நெருக்கித் தள்ளப்படுவது—இந்த முரண்பாட்டினால்தான்.[552]

அப்படியானால், இயந்திர சாதனத்தை முதலாளித்துவம் ஈடுபடுத்துவது, ஒரு புறம், வேலை-நாளை அதீதமாக நீட்டுவதற்கு வலுவான புதிய குறிக்கோள்களை எழச் செய்கிறது; வேலை-நாளை இப்படி நீட்டும் போக்கிற்கு முகங்கொடுக்கும் எதிர்ப்பையெல்லாம் தகர்த்திடும் விதத்தில் உழைப்பின் வழிமுறைகளையும், அதே போல் சமுதாய அளவிலான உழைக்கும் உயிரமைப்பின் தன்மையையும் தீவிரமாய் மாற்றியமைக்கிறது. மறு புறம், இதற்கு முன்பு முதலாளியின் கைக்கு எட்டாதிருந்த புதிய தொழிலாளி வர்க்கப் பிரிவினரை அவருக்குக் கிடைக்கச் செய்வதன் மூலம் ஓரளவும், தொழிலாளர்களை வேலையிலிருந்து அகற்றி விடுவிப்பதன் மூலம் ஓரளவும் உபரி-உழைப்பாளி மக்கள்தொகையைத் தோற்றுவிக்கிறது;[553] இவர்கள் மூலதனத்தின் விருப்பம் போல் ஆட வேண்டிய

[552] முதலாளியும், அவரது கருத்துகளில் ஊறித் திளைக்கும் அரசியல் பொருளாதார அறிஞர்களும் கூட இந்த உள்ளார்ந்த முரண்பாட்டை உணராதிருப்பது ஏன் என்பது மூன்றாம் பாகத்தின் முதற் பகுதியில் தெரிய வரும்.

[553] சரக்கு உற்பத்தி செய்வதற்கான சாதனமாக மட்டுமன்றி, ''தேவைக்கதிகமான

தாகிறது. இவ்வாறு இயந்திர சாதனம் வேலை-நாளின் கால அளவிற்கு இயற்கையாகவும் நெறிமுறையாகவும் தடையாயிருக்கும் வரம்புகளையெல்லாம் தகர்த்தெறிகிறது அல்லவா, நவீனத் தொழில் துறை வரலாற்றின் இந்த அதிவினோதத்துக்கும் அதுதான் காரணம்; உழைப்பு நேரத்தைக் குறைப்பதற்கு மிகவும் சக்திவாய்ந்த வழிவகையாய் இருக்க வேண்டிய இயந்திர சாதனம், தொழிலாளியின் நேரத்தையும் அவரது குடும்பத்தாரின் நேரத்தையும் கணப்பொழுதும் விடாமல் முதலாளியினது மூலதனத்தின் மதிப்பைப் பெருக்கும் பொருட்டு அவரது பிடிக்குள் சிக்கவைக்கும் வச்சிராயுதமாக மாறி விடுகிற இந்தப் பொருளாதார விசித்திரத்துக்கும் அதுதான் காரணம். பண்டைக் காலத்தில் மாபெரும் சிந்தனையாளர் அரிஸ்டாட்டில் பின்வருமாறு கனவு கண்டார்: ''டெடலிசின் படைப்புகள் தாமாகவே நகர்ந்தது போல, அல்லது ஹிஃபெஸ்டசின் முக்காலிகள் தாமாகவே தம் புனிதப் பணிக்குச் சென்றது போல, கருவி ஒவ்வொன்றும், முடுக்கி விட்டவுடன் அல்லது அதுவாகவே கூட அதற்குகந்த வேலையைச் செய்ய முடியுமானால், நெசவாளர்களின் ஊடுநூல் ஓடங்கள் தாமாகவே நெய்வதானால், கைவினை ஆண்டான்களுக்குப் பணியாளர்களோ, பிரபுகளுக்கு அடிமைகளோ தேவைப்பட மாட்டார்கள்.''[554] சிசரோ காலத்தைச் சேர்ந்த கிரேக்கக் கவிஞரான ஆண்டிப் பட்ரோஸ், எல்லா இயந்திர சாதனங்களுக்கும் மூல வடிவமாய்த் திகழும் கண்டுபிடிப்பாகிய தானிய அரைவை நீர் விசைச் சக்கரத்தின் கண்டுபிடிப்பை, அடிமைப் பெண்களுக்கு சுதந்தரம் வழங்கும் கண்டுபிடிப்பென்றும், பொற்காலத்தைத் திரும்பக் கொணரும் கண்டுபிடிப்பென்றும் புகழ்ந்தார்.[555] ஓ! அந்த மிலேச்சர்கள்!

---

மக்கள்தொகையையும்'' சிருஷ்டிப்பதற்கான சாதனமாக இயந்திர சாதனத்தைப் பார்த்திருப்பது ரிக்கார்டோவின் மிகப் பெரும் சிறப்புகளில் ஒன்றாகும்.

[554] பி. பீஸ். ''Die philosophie des Aristoteles,'' பாகம் 2. பெர்லின், 1842, பக்கம் 408.

[555] இந்தக் கவிதைக்கான ஸ்டோல்பெர்க்கின் மொழிபெயர்ப்பைக் கீழே தருகிறேன். ஏனெனில் இது உழைப்புப் பிரிவினை தொடர்பாக முன் கூறிய மேற்கோள்களின் உணர்வை அப்படியே பிரதிபலிக்கும் வகையில், பழங்காலத்தவர், நவீன காலத்தவர் ஆகியோரின் கருத்துகளிடையிலான எதிர்நிலையைத் தெள்ளத் தெளிவாக்குகிறது.

''தானியமரைத்து அசதியுற்ற கைக்கு ஓய்வளிப்பீர்!
ஓ, அரைவைப் பெண்களே, சற்றே கண்ணயர்வீர்!
விடியலை சேவல் கூவியழைப்பது வீணாகட்டும்!
வனிதையர் வேலையை வனதேவதை செய்திடும், இது தேவனின் ஆணை
மெல்லடியெடுத்து தேவதை நடனமிட சக்கரங்கள் சுழன்றோடும்!
அச்சுகள் அசைந்து ஆரைகள் சுற்றும்.
சுழலும் கற்களின் பாரம் இழுபடும்!
மூதாதையர் வாழ்வை மீண்டும் வாழ்வோம்!
களைப்பாறி இளைப்பாறி,

அவர்கள் அரசியல் பொருளாதாரத்திலோ கிறித்துவத்திலோ எதையும் புரிந்து கொள்ளவில்லை என்று கண்டுபிடித்துள்ளனர் கற்றறிந்த பாஸ்தியாவும், அவருக்கு முற்பட்டவரும் அவரை விட பெரிய புத்திசாலியுமான மக்குல்லோஹும். உதாரணமாக, இயந்திர சாதனம் வேலை-நாளை நீட்டுவதற்கு மிக நிச்சயமான வழி வகை என்பதை அறியாதவர்கள் அவர்கள். ஒருவரின் அடிமை நிலை இன்னொருவரின் முழு வளர்ச்சிக்கு வழி செய்வதாகக் கருதி, அதனை அவர்கள் நியாயப்படுத்தியிருக்கலாம். ஆனால், பண்பாடற்ற அரைகுறைப் படிப்பாளர்களான புதுப் பணக்கார அற்பர் சிலர் ''சிறப்பான நூற்பதிபர்களாகவும்'' ''பேர் போன இறைச்சிக் கோலா தயாரிப்பாளர்களாகவும்'', ''செல்வாக்கு மிக்க காலணிக் கரும்பூச்சு வியாபாரிகளாகவும்'' வளரும் பொருட்டு பெருந்திரளான மக்கள் அடிமைகளாய் வாழ வேண்டு மென உபதேசிப்பதற்கு வேண்டிய கிறித்துவ மகிமை அவர்களுக் கில்லை.

### இ. உழைப்பை மும்முரமாக்குதல்

மூலதனத்தின் கையிலிருக்கும் இயந்திர சாதனம் வேலை-நாளை மிதமிஞ்சி நீட்டிப்பதைத் தொடர்ந்து, சமுதாயத்தின் வாழ் வாதாரங்களே ஆபத்துக்குள்ளாகி, சமுதாயத்தின் தரப்பிலிருந்து எதிர்வினை பிறக்கிறது. அதன் விளைவே சட்டத்தால் கால நிர் ணயம் செய்யப்பட்ட இயல்பான வேலை-நாள் [normal working-day]. நாம் ஏற்கெனவே கண்ணுற்ற நிகழ்வாகிய உழைப்பின் மும்முரமாக்கம் [intensification of labour] அதுமுதல் பெரும் முக்கி யத்துவம் உடையதாகிறது. அறுதி உபரி-மதிப்பு தொடர்பான நம் பகுப் பாய்வு உழைப்பின் மும்முரம் குறிப்பிட்டதாய் இருப்பதாகக் கொண்டு, பிரதானமாக உழைப்பின் அளவு அல்லது கால நீடிப் பைப் பற்றியதாகவே இருந்தது. அதிகக் கால நீடிப்புக்குரிய உழைப் புக்குப் பதிலாக அதிக மும்முரம் வாய்ந்த உழைப்பு பயன்படுத்தப் படுவதையும், மும்முரத்தின் கடுமையையும் இப்போது பரிசீலிக்க முற்படுகிறோம்.

இயந்திர சாதனத்தின் உபயோகம் பரவுவதற்கேற்பவும், இயந் திர சாதனத்தோடு பழக்கப்பட்ட தனிவகைத் தொழிலாளர்களின் அனுபவத்திற்கேற்பவும், இவற்றின் இயற்கை விளைவாக, உழைப் பின் விரைவும் மும்முரமும் அதிகரிப்பது கூறாமலே விளங்கும். இவ் வாறு, இங்கிலாந்தில் அரை நூற்றாண்டு காலத்துக்கு, வேலை-நாளின்

---

தேவி நமக்கருளும் திருப்பேறுகள் துய்ப்போம்!
(Gedichte aus dem Griechischen ubersetzt von Christian Graf zu Stolberg, ஹாம்பர்க், 1782.)

நீட்டிப்பு ஆலை உழைப்பின் மும்முரம் அதிகரிப்பதுடன் கைகோத்துச் சென்றது. ஆயினும், உழைப்பானது விட்டு விட்டு நடைபெறாமல், மாறாத சீரொழுங்குடன் நாள்தோறும் திரும்பத் திரும்ப நடைபெறுகையில் வேலை-நாளின் நீட்டிப்பும் உழைப்பின் மும்முரமும் ஒன்றுக்கொன்று ஒவ்வாதவை ஆகி, ஒன்றையொன்று விலக்கி விடும் நிலை கட்டாயம் வந்தேயாக வேண்டும்; அந்நிலையில் வேலை-நாளின் நீட்டிப்பு மும்முரத்தின் குறைந்த கடுமையுடன்தான் ஒத்துப் போக முடிகிறது. மும்முரத்தின் உயர்ந்த கடுமை வேலை-நாளின் குறைப்புடன் ஒத்துப் போக முடிகிறது. பையப் பைய அலைமோதிக் கொண்டிருந்த தொழிலாளி வர்க்க எழுச்சி, பாராளுமன்றத்தை நிர்ப்பந்தித்து, உழைப்பு நேரத்தைக் கட்டாயமாகக் குறைக்குமாறும், முதலில் முறையான தொழிற்சாலைகளில் இயல்பான வேலை-நாளை வலுவந்தமாய்ப் புகுத்தி இதனைத் தொடங்குமாறும் செய்ததுமே, ஆதலால் வேலை-நாளை நீட்டித்து உபரி-மதிப்பு உற்பத்தியை அதிகமாக்குவதற்கு இவ்விதம் இறுதியாக முற்றுப் புள்ளி வைக்கப்பட்டதுமே, அக்கணம் முதற்கொண்டு மூலதனம் இயந்திர சாதனத்தை அவசர அவசரமாக மேலும் மேலும் மேம்படுத்தி ஒப்பீட்டு உபரி-மதிப்பை [relative surplus-value] உற்பத்தி செய்வதில் முழுமூச்சுடன் இறங்கியது. அதே நேரத்தில் ஒப்பீட்டு உபரி-மதிப்பின் இயல்பில் ஒரு மாற்றம் நிகழ்ந்தது. பொதுவாகச் சொன்னால், ஒப்பீட்டு உபரி-மதிப்பை உற்பத்தி செய்யும் முறை என்பது, தொழிலாளி குறிப்பிட்ட காலத்தில் ஒரே அளவு உழைப்பைச் செலவிட்டு, இன்னும் அதிகமாக உற்பத்தி செய்வதற்கு உதவும் விதத்தில் அவரது உற்பத்தித் திறனை உயர்த்துவதில் அடங்கியுள்ளது. உழைப்பு நேரம் மொத்த உற்பத்திப் பொருளுக்கு முன்பு செலுத்திய அதே அளவு மதிப்பையே தொடர்ந்து செலுத்துகிறது; ஆனால், பரிவர்த்தனை-மதிப்பின் இந்த மாறாத அளவு முன்னிலும் அதிகமான பயன்-மதிப்பின் மீது நிரவப்படுகிறது; எனவே, தனிச் சரக்கு ஒவ்வொன்றின் மதிப்பும் வீழ்கிறது. ஆனால், உழைப்பு நேரம் கட்டாயமாகக் குறைக்கப்பட்டதும், இவ்வாறு நடைபெறுவதில்லை. இந்தக் குறைப்பு உற்பத்தித் திறனின் வளர்ச்சியையும் உற்பத்திச் சாதனங்களின் சிக்கனத்தையும் பெரிய அளவில் உந்தி விடுகிறது. இதனால், தொழிலாளி குறிப்பிட்ட நேரத்தில் முன்னிலும் அதிக உழைப்பைச் செலவிடவும் உழைப்புச் சக்தியின் இறுக்கத்தை உயர்த்தவும் வேலை-நாளின் இண்டுஇடுக்குகளையெல்லாம் முன்னிலும் கெட்டியாக அடைக்கவும், அதாவது குறுக்கப்பட்ட வேலை-நாளின் வரம்புகளுக்குள் மட்டுமே சாத்தியமான அளவுக்கு உழைப்பை நெருக்கித் திணிக்கவும் வேண்டியதாகிறது. கூடுதலான உழைப்பை குறிப்பிட்ட நேரத்துக்குள் அடங்குமாறு இப்படி நெருக்கித் திணிப்பது இப்போது உண்மையில் குறிப்பது என்ன? முன்னிலும் அதிக அளவிலான

உழைப்பைத்தான். உழைப்பானது அதன் விரிவின், அதாவது கால நீடிப்பின் அளவையோடு கூட, இப்போது, அதன் மும்முரம், நெருக்கம் அல்லது அடர்த்திக்கான அளவையையும் பெறுகிறது.[556] பத்து மணி நேர வேலை-நாளின் அடர்த்திகூடிய ஒரு மணி நேரத்தில், 12 மணி நேர வேலை-நாளின் இடுக்குநிறைந்த ஒரு மணி நேரத்தில் அடங்குவதை விட அதிகமான உழைப்பு, அதாவது செலவிடப்பட்ட உழைப்புச் சக்தி அடங்கியிருக்கிறது. எனவே முன்குறிப்பிட்ட வேலை நேரத்தின் ஒரு மணி நேர உற்பத்தி பின் குறிப்பிட்ட வேலை நேரத்தின் $1\frac{1}{5}$ மணி நேர உற்பத்தி பெற்றிருக்கும் அதே அளவு மதிப்பை, அல்லது அதை விட அதிகமான மதிப்பைப் பெற்றிருக்கிறது. உழைப்பின் உற்பத்தித் திறனை உயர்த்தியதன் மூலம் ஒப்பீட்டு உபரி-மதிப்பு அதிகமாய்க் கிடைப்பதன்னியில், — உதாரணமாக — முன்னர் நான்கு மணி நேர உபரி-உழைப்பும், எட்டு மணி நேர அவசிய-உழைப்பும் முதலாளிக்கு உற்பத்தி செய்து கொடுத்த அதே அளவு மதிப்பை இப்போது $3\frac{1}{3}$ மணி நேர உபரி–உழைப்பும் $6\frac{2}{3}$ மணி நேர அவசிய-உழைப்பும் உற்பத்தி செய்து கொடுக்கின்றன.

உழைப்பு எப்படி மும்முரமாக்கப்படுகிறது என்ற பிரச்சினைக்கு இப்போது வருகிறோம்.

வேலை-நாளைச் சுருக்குவதன் முதல் விளைவு, உழைப்புச் சக்தியின் செய்திறன் அதன் செலவழிப்பின் கால நீடிப்புக்கு எதிர் விகிதத்தில் உள்ளது என்ற கூறாமல் விளங்கும் விதியிலிருந்து விளைகிறது. எனவே, குறிப்பிட்ட சில வரம்புகளுக்குள், கால நீடிப்பைச் சுருக்குவதால் இழக்கப்படுவது, உழைப்புச் சக்தியின் அதிகரிக்கும் இறுக்கத்தால் ஈட்டப்படுகிறது. மேலும், தொழிலாளி முன்னிலும் அதிகமான உழைப்புச் சக்தியை உள்ளபடியே செலவிடுமாறு முதலாளி அவருக்கு ஊதியமளிக்கும் முறை உறுதி செய்து கொள்கிறது.[557] இயந்திர சாதனம் இடம் பெறாத அல்லது சொற்பமாகவே இடம் பெறுகிற மண்பாண்ட உற்பத்தி போன்ற தொழில்களில் தொழிற்சாலைச் சட்டங்கள் புகுத்தப்பட்டதானது, வேலை-நாளைச் சுருக்குவதே உழைப்பின் முறைப்பாட்டையும், சீர்மை

---

556 உழைப்பின் மும்முரம் வெவ்வேறு தொழில்களில் வெவ்வேறாயிருப்பது மெய்தான். ஆனால், ஆதாம் ஸ்மித் காட்டியிருப்பது போல, இந்த வேறுபாடுகளை அந்தந்த வகை உழைப்புக்கும் உரித்தான சிறுதிற நிலைமைகள் ஓரளவுக்கு ஈடு செய்கின்றன. எப்படியானாலும், மும்முரத்தின் வேறுபாடு மதிப்பின் அளவையாக உழைப்பு நேரம் இருப்பதை பாதிப்பதில்லை — உழைப்பின் கால நீடிப்பும், மும்முரத்தின் கடுமையும் ஒரே அளவு உழைப்பின் எதிர்நிலையான, ஒன்றையொன்று விலக்குகிற இருவிதத் தெரிவிப்புகளாய் இருக்கிற அளவுக்கு ஏற்படும் பாதிப்பைத் தவிர.

557 குறிப்பாக, இந்தப் புத்தகத்தின் பகுதி VIஇல் நாம் ஆய்ந்தறியப் போகும் வடிவமான பலன்வீத வேலை [piece- work] மூலமாக இது செய்யப்படுகிறது.

யையும், ஒழுங்கையும், தொடர்ச்சியையும், ஆற்றலையும் வியக்கத் தக்க அளவுக்கு உயர்த்துகிறது என்பதைப் பளிச்செனக் காட்டியுள்ளது.[558] ஆயினும் முறையான தொழிற்சாலையில் இயந்திர சாதனத்தின் தொடர்ச்சியான, சீரான இயக்கத்தைத் தொழிலாளி சார்ந்திருக்க வேண்டிய நிலை ஏற்கெனவே மிகக் கண்டிப்பான கட்டுப்பாட்டை உண்டாக்கி விட்டதால், இங்கு மேற்கண்ட விளைவு ஏற்பட்டதா என்ற சந்தேகம் எழுந்தது. எனவே, 1844இல் வேலை-நாளைப் பன்னிரண்டு மணி நேரத்துக்குக் கீழாகக் குறைப்பது பற்றிய விவாதம் நடந்த போது, ''வெவ்வேறு கூடங்களில் ஆட்கள் சிறிதும் நேரத்தை வீணாக்காமல் கங்காணிகள் நன்கு கவனித்துக் கொண்டனர்'' என்றும், ''தொழிலாளர்களின் தரப்பில் விழிப்புணர்வு, கவனம் ஆகியவற்றை அதற்கு மேல் அதிகரிக்க அநேகமாய் வழியில்லை'' என்றும், எனவே இயந்திர சாதனத்தின் வேகமும் ஏனைய நிலைமைகளும் மாறாதிருக்கையில், ''தொழிலாளர்களின் கவனத்தை அதிகமாக்குவதால் (நன்கு நிர்வகிக்கப்படும் எந்தத் தொழிற்சாலையிலும்) முக்கிய விளைவு ஏதும் ஏற்படுமென எதிர்பார்ப்பது அபத்தம்'' என்றும் தொழிலதிபர்கள் அநேகமாக ஏகமனதாய்ச் சாதித்தனர்.[559] ஆனால் பரிசோதனை முடிவுகள் இதனை மறுத்தன. திரு ராபர்ட் கார்ட்னர், பிரெஸ்டனிலுள்ள தமது இரு பெரும் தொழிற்சாலைகளில் 1844 ஏப்ரல் 20ஆம் நாளும் அதன் பிறகும் உழைப்பு நேரத்தை நாளுக்கு 12 மணி என்பதிலிருந்து 11 மணியாகக் குறைத்தார். இப்படி சுமார் ஓராண்டு காலம் வேலை செய்த பின் பெறப்பட்ட முடிவு: ''அதே செலவில் அதே அளவு உற்பத்தி கிடைத்தது. தொழிலாளர்கள் முன்னர் 12 மணி நேரத்தில் சம்பாதித்த அதே கூலியை 11 மணி நேரத்தில் சம்பாதித்தனர்.''[560] நூற்பறைகளிலும் சிக்கெடுக்கும் அறைகளிலும் செய்யப்பட்ட பரிசோதனைகளை விட்டு விடுவோம்; ஏனெனில் இயந்திரங்களின் வேகத்தை 2% அதிகமாக்கி அந்தப் பரிசோதனைகள் நடத்தப்பட்டன. ஆனால், மேற்கொண்டு பல ரகமான சித்திர அலங்காரத் துணிகள் நெய்யப்பட்ட நெசவுப் பிரிவில், வேலை நிலைமைகளில் கொஞ்சம் கூட மாற்றமில்லை. இதன் விளைவு: ''1844 ஜனவரி 6 முதல் ஏப்ரல் 20 வரை வேலை-நாள் 12 மணி நேரமாக இருக்கையில், ஒவ்வொரு ஆளின் சராசரி வாரக் கூலி 10 ஷில்லிங் 1½ பென்னி; 1844 ஏப்ரல்

[558] பார்க்கவும்: ''தொழிற்சாலை ஆய்வாளர் அறிக்கைகள், 1865 அக்டோபர் 31க்கானவை.''

[559] 1844க்கும், 1845 ஏப்ரல் 30இல் முடிகிற காலாண்டுக்குமான தொழிற்சாலை ஆய்வாளர் அறிக்கைகள், பக்கம் 20, 21.

[560] முன் வந்தது, பக்கம் 19. பலன்வீத வேலைக்கான கூலி மாறாதிருந்ததால், வார ஊதியம் உற்பத்தியின் அளவைப் பொறுத்ததாய் இருந்தது.

20 முதல் ஜூன் 29 வரை, வேலை-நாள் 11 மணி நேரமாக இருக்கையில், சராசரி வாரக் கூலி 10 ஷில்லிங் 3½ பென்னி.''[561] இங்கே, முன்னதாக 12 மணி நேரத்தில் உற்பத்தியானதை விட அதிகமாக 11 மணி நேரத்தில் உற்பத்தியாவதைக் காண்கிறோம். தொழிலாளர்கள் நேரத்தை முன்னிலும் ஒழுங்காகவும் சிக்கனமாகவும் செலவிட்டதாலேயே கிடைத்த பலன் இது. அவர்களுக்கு, அதே கூலியோடு கூட, ஒரு மணி மீத நேரமும் கிடைத்தது; முதலாளிக்கு அதே அளவு பொருளுற்பத்தியோடு கூட ஒரு மணி நேரத்துக்கான நிலக்கரி, எரிவாயு போன்றவற்றின் செலவு மிச்சமாயிற்று. இதே போன்ற சோதனைகள் திருவாளர்கள் ஆர்ரோக்ஸ் மற்றும் ஜாக்ஸனின் ஆலைகளிலும் நடந்தன; இதே போன்ற பலன்கள் விளைந்தன.[562]

உழைப்பு நேரத்தைக் குறுக்குவது, ஆரம்பத்தில், தொழிலாளி குறிப்பிட்ட காலத்தில் அதிக பலத்தை ஈடுபடுத்த முடியுமாறு செய்வதன் மூலம் உழைப்பை அடர்த்தியாக்குவதற்கான அகவய நிலைமைகளைத் தோற்றுவிக்கிறது. இப்படிக் குறுக்குவது கட்டாயம் ஆனதுமே, இயந்திர சாதனமானது — மூலதனத்தின் கையில் — குறிப்பிட்ட நேரத்தில் அதிக உழைப்பைக் கறப்பதற்காகத் திட்டமிட்டு ஈடுபடுத்தப்படும் புறவயச் சாதனம் ஆகி விடுகிறது. இது இரு வழிகளில் சாதிக்கப்படுகிறது: ஒன்று, இயந்திர சாதனத்தின் வேகத்தை அதிகமாக்குதல்; இரண்டு, தொழிலாளி கூடுதலான இயந்திர சாதனத்தைக் கவனித்துக் கொள்ளுமாறு செய்தல். இயந்திர சாதனத்தின் கட்டுமானத்தை மேம்படுத்துவது அவசியமாகிறது; இப்படிச் செய்யாமல் தொழிலாளியின் மீது இன்னும் அதிகமான அழுத்தத்தைச் சுமத்த முடியாது என்பதும், உழைப்பு நேரம் குறுக்கப்படுவதால் உற்பத்திச் செலவின் மீது மிகக் கண்டிப்பான கண்காணிப்பை செலுத்தும் நிர்ப்பந்தம் முதலாளிக்கு ஏற்படுகிறது என்பதுமே காரணம். நீராவி எஞ்சினிலான மேம்பாடுகள் உந்து தண்டின் வேகத்தை அதிகமாக்கியுள்ளன; அதே நேரத்தில், விசைச் சிக்கனத்தைப் பெருக்குவதன் மூலம், அதே எஞ்சினைக் கொண்டு, அதே அளவில் அல்லது இன்னும் சிறிய அளவில் கூட நிலக்கரியைப் பயன்படுத்தி, இன்னும் அதிகமான இயந்திர சாதனங்களை ஓட்ட முடியுமாறு செய்துள்ளன. விசை செலுத்தும் இயங்கமைப்பிலான மேம்பாடுகள் உராய்வைக் குறைத்திருக்கின்றன. இவை சுழல்தண்டின் விட்டத்தையும் எடையையும் மேலும்

561 முன் வந்தது, பக்கம் 20.

562 மேற்சொன்ன சோதனைகளில் தார்மிக அமிசம் முக்கியப் பங்கு வகித்தது. தொழிலாளர்கள் தொழிற்சாலை ஆய்வாளரிடம் கூறினார்கள்: ''நாங்கள் அதிக ஆர்வத்துடன் வேலை செய்கிறோம்: இரவு சீக்கிரமே வீட்டுக்குப் போக முடிகிறது. இந்த வெகுமதி எங்களுக்கு ஊக்கமளிக்கிறது. மிக இளைய பலன்வீதத் தொழிலாளி முதல் மிக முற்றிய கை வரை எங்கள் எல்லாரிடத்தும் சுறுசுறுப்பான உற்சாக உணர்வு வியாபித்து நிற்கிறது; நாங்கள் ஒருவருக்கொருவர் பெரிதும் உதவ முடிகிறது.'' (முன் வந்தது, பக்கம் 21.)

மேலும் குறைந்து செல்லும் குறைந்தபட்ச நிலைக்குக் குறுகச் செய்திருக்கின்றன — நவீன இயந்திர சாதனத்தைப் பழையதிலிருந்து எடுப்பாக வேறுபடுத்திக் காட்டுவது இதுவே. இறுதியாக, வேலைப் பொறிகளிலான மேம்பாடுகள் (நவீன விசைத் தறியில் போன்று) அவற்றின் பருமனைக் குறைத்துள்ள அதே வேளையில் அவற்றின் வேகத்தையும் செய்திறனையும் அதிகமாக்கியுள்ளன; அல்லது (நூற்பு மியூல்களில் போன்று) அவற்றின் கட்டமைப்பின் பருமனை அதிகமாக்கியிருப்பதோடு, அவற்றின் வேலை உறுப்புகளின் விரிவையும் எண்ணிக்கையையும் கூட அதிகமாக்கியுள்ளன; அல்லது (பத்தாண்டுகள் முன்னர் தன்னியக்க மியூல்களில் கதிர்களின் வேகத்தை ஐந்திலொரு பங்கு அதிகமாக்கியதைப் போன்று) புலனாகாத நுணுக்க மாற்றங்களின் மூலம் இந்த வேலை உறுப்புகளின் வேகத்தைப் பெருக்கியுள்ளன.

வேலை-நாளை 12 மணி நேரமாகக் குறைப்பது இங்கிலாந்தில் 1832இல் தொடங்கியதாகும். 1836இல் ஒரு தொழிலதிபர் கூறினார்: "தொழிற்சாலைகளில் இப்போது நடந்தேறும் உழைப்பு ... முப்பது அல்லது நாற்பது ஆண்டுகள் முன்னர் இருந்த நிலையுடன் ஒப்பிடுகையில்... இயந்திர சாதனத்தின் வேகம் பெரிதும் அதிகமாகி, கூடுதலான கவனமும் சுறுசுறுப்பும் அவசியமாகிற காரணத்தால்...அப்போது இருந்ததை விட மிக அதிகமாகும்.[563] 1844ஆம் ஆண்டில், இப்போது ஷேஃப்ட்ஸ்பரி பிரபுவாக உள்ள ஆஷ்லி பிரபு ஆவண ஆதாரத்துடன் காமன்ஸ் சபையில் பின்வருமாறு கூறினார்:

"ஆலைத் தொழிலின் நிகழ்முறைகளில் ஈடுபட்டிருப்பவர்கள் ஆற்றுகிற உழைப்பு இப்படிப்பட்ட பணிகளின் ஆரம்பத்தில் ஆற்றப்பட்டதைப் போல் மும்மடங்கு அதிகமாகும். இயந்திர சாதனங்கள் லட்சோப லட்சம் மனிதர்களின் உடல்வலு தேவைப்படக் கூடிய வேலையைச் செய்துள்ளன என்பதில் சந்தேகமில்லை; ஆனால் அவற்றின் பயங்கரமான இயக்கங்களால் ஆளப்படுவோரின் உழைப்பை அவை மிதமிஞ்சிப் பெருக்கியும் உள்ளன....1815இல் எண் 40 ரகப் பஞ்சை நூற்கிற ஒரு ஜோடி மியூல்களை கவனித்துக் கொள்ளும் உழைப்பு — வேலை-நாளுக்கு 12 மணி நேரம் எனக் கணக்கிட்டால் — 8 மைல் நடக்கும் அவசியத்தை ஏற்படுத்தியது. 1832இல், அதே ரகப் பருத்தி நூலை நூற்கிற ஒரு ஜோடி மியூல்களைப் பின்தொடர்ந்து நடக்கிற தூரம் 20 மைலாகவும், பல சந்தர்ப்பங்களில் இன்னும் அதிகமாகவும் இருந்தது. 1835இல்" (சந்தேகம் — 1815 அல்லது 1825?) "நூற்பாளர் தினசரி இந்த மியூல்கள் ஒவ்வொன்றிலும் 820 நெட்டு நடந்தால், நாள் முழுக்க மொத்தம் 1,640 நெட்டு நடந்தார். 1832இல் நூற்பாளர் ஒவ்

[563] ஜான் ஃபீல்டன், முன் வந்தது, பக்கம் 32.

வொரு மியூலிலும் 2,200 நெட்டு நடந்தார்; மொத்தம் 4,400 நெட்டு ஆகிறது. 1844இல் ஒவ்வொன்றிலும் 2,400 நெட்டு வீதம் மொத்தம் 4,800; சில நேர்வுகளில், தேவைப்பட்ட உழைப்பின் அளவு இன்னும் கூட அதிகம்....உழைப்பு தொடர்ச்சியாக அதிகரித்துக் கொண்டிருக்கிறது—நடக்க வேண்டிய தூரம் முன்னிலும் அதிகமாக இருப்பதால் மட்டுமல்ல, ஆட்களின் விகிதாசார எண்ணிக்கை முன்பிருந்ததை விடக் குறைவாய் இருக்கும் அதே நேரத்தில், உற்பத்தி செய்யப்படும் சரக்குகளின் அளவு பெருக்கப்படுவதாலும், மேலும் வேலையை இன்னும் கடினமாக்கக் கூடிய மட்டரகமான பஞ்சு இப்போது அதிகமாக நூற்கப்படுவதாலும் உழைப்பு மேலும் மேலும் அதிகரித்துக் கொண்டிருக்கிறது என்று சொல்லி 1842இல் எனக்கு அனுப்பப்பட்ட இன்னொரு ஆவணம் என்னிடம் உள்ளது....சிக்கெடுக்கும் அறையிலும் உழைப்பு மிகவும் அதிகமாகியுள்ளது; அங்கு முன்னதாக இருவர் செய்த வேலையை ஒருவர் செய்கிறார். பெரும் தொகையினர்—பிரதானமாகப் பெண்கள்—வேலை செய்யும் நெசவு அறையில்...உழைப்பு கடந்த சில ஆண்டுகளுக்குள் முழுதாக 10% அதிகரித்திருக்கிறது. இயந்திர சாதனத்தின் கூடுதலான நூற்பு வேகமே அதற்குக் காரணம். 1838இல் நூற்கப்பட்ட சிட்டங்களின் எண்ணிக்கை வாரத்துக்கு 18,000ஆக இருந்தது. 1843இல் அது 21,000 ஆயிற்று. 1819இல் விசைத்தறி நெசவில் நிமிடம் ஒன்றுக்கு ஊசிக் குத்துகளின் எண்ணிக்கை 60 ஆக இருந்தது; 1842இல் 140 ஆயிற்று; உழைப்பு வெகுவாய் அதிகரித்திருப்பதையே இது காட்டுகிறது.''[564]

1844இலேயே பன்னிரண்டு மணி நேரச் சட்டத்தின் படி உழைப்பு இவ்விதம் குறிப்பிடத்தக்கவாறு மும்முரமாக்கப்பட்டு விட்டதால், அந்தத் திசையில் மேற்கொண்டு முன்னேற்றமெதுவும் சாத்தியமில்லை என்றும், எனவே இதற்கு மேல் வேலை நேரத்தைக் குறைப்பதால் உற்பத்தி குறைந்து போய் விடும் என்றும் அந்த நேரத்தில் ஆங்கிலேயத் தொழிலதிபர்கள் கூறியது நியாயமாகவே தோன்றியது. அவர்கள் கூறிய காரணங்கள் சரியானவையாகவே தோன்றியதை, விழிப்புடன் அவர்களைக் கண்காணிக்கும் தணிக்கையாளரான தொழிற்சாலை ஆய்வாளர் லியோனார்டு ஹார்னர் அக்காலத்தில் விடுத்த பின்வரும் அறிக்கை நன்கு காட்டுகிறது:

''இப்போது, உற்பத்தி செய்யப்படும் அளவு பிரதானமாக இயந்திர சாதனத்தின் வேகத்தைப் பொறுத்தது என்பதால், அதிவேகச் சீர்கேட்டிலிருந்து இயந்திர சாதனத்தைப் பாதுகாத்தல், உற்பத்தி செய்யப்படும் பண்டத்தின் தரத்தைப் பாதுகாத்தல், மாறா ஊக்கத்துடன் தாங்கக் கூடியதை விட அதிகப் பிரயாசையின்றி இயக்கத்தைப் பின்பற்றுவதற்கான தொழிலாளியின் வல்லமை ஆகிய

[564] ஆஷ்லி பிரபு, முன் வந்தது, பக்கம் 6-9, பல இடங்கள்.

இந்த நிபந்தனைகளோடு முரணின்றி இயந்திர சாதனத்தை அதிக பட்ச விரைவு வீதத்தில் ஓட்டுவதில் ஆலையதிபருக்கு நாட்டம் இருந்தே தீரும். எனவே, ஒரு தொழிற்சாலையின் உடைமையாளர் தீர்க்க வேண்டியுள்ள மிக முக்கியப் பிரச்சினைகளில் ஒன்று மேற்சொன்ன நிபந்தனைகளுக்கொப்ப தனது இயந்திர சாதனத்துக் குரிய அதிகபட்ச வேகத்தைக் கண்டறிவதாகும். பல சந்தர்ப்பங் களில் அவர் விரைவை மிதமிஞ்சியதாக்கி விடுகிறார்; முறிவுகளும் மோசமான வேலையும் வேக அதிகரிப்பால் வரப்பெறும் ஆதாயத் தைக் கெடுப்பதோடு, அதற்கு மேலும் போய் விடுகின்றன; அவர் வேகத்தை மட்டுப்படுத்த வேண்டிய கட்டாயம் ஏற்படுகிறது. எனவே, செயல் முனைப்பும் மதிநுட்பமும் மிக்க ஆலையதிபர் பத்திரமான அதிகபட்சத்தைக் கண்டுபிடிப்பார் என்பதால், 12 மணி நேரத்தில் உற்பத்தி செய்வதை 11 மணி நேரத்தில் உற்பத்தி செய்வது சாத்தியமாகாது என்று நான் முடிவு செய்தேன். பலன்வீத வேலைக்குக் கூலி பெறும் தொழிலாளியாய் இருப்பின், அதே வேகத்தில் தொடர்ந்து உழைக்கும் சக்திக்குக் கேடின்றி ஆனமட்டும் பாடுபட்டு உழைப்பார் என்றும் கொண்டேன்.''[565] எனவே, வேலை நேரத்தைப் பன்னிரண்டு மணி நேரத்தை விடக் குறை வாகும் படி குறுக்குவது தவிர்க்க முடியாமலே உற்பத்தியைக் குறுக்கி விடும் என்ற முடிவுக்கு ஹார்னர் வந்தார்.[566] ஆனால், பத்தாண்டு களுக்குப் பிற்பாடு, இயந்திர சாதனமும் மனித உழைப்புச் சக்தியும் எவ்வளவு நெகிழ்ச்சி வாய்ந்தவை, வேலை-நாளைக் கட்டாயமாகக் குறைப்பதன் மூலம் இவையிரண்டையும் எந்த அளவுக்கு இழுத்து நீட்ட முடியும் என்பது பற்றி அக்காலத்தில் எவ்வளவு தூரம் குறைத்து மதிப்பிட்டு விட்டோம் என்று கூறி, தமது 1845ஆம் வருட அபிப்பிராயத்தை அதற்குச் சான்றாகக் குறிப்பிடுகிறார்.

1847இல் ஆங்கிலேயப் பருத்தி, கம்பளி, பட்டு, வெண்சணல் ஆலைகளில் பத்து மணி நேரச் சட்டம் புகுத்தப்பட்டதை அடுத்து வந்த காலகட்டத்துக்கு இப்போது வருகிறோம்.

''கதிர்களின் வேகம் திராஸில்கள் மீது நிமிடத்துக்கு 500 சுழற்சியும் மியூல்கள் மீது நிமிடத்துக்கு 1,000 சுழற்சியும் அதிகரித் துள்ளது; அதாவது 1839இல் நிமிடத்துக்கு 4,500 சுழற்சியாக இருந்த திராஸில் கதிரின் வேகம் இப்போது (1862) 5,000 ஆகியுள்ளது. 5,000ஆக இருந்த மியூல் கதிரின் வேகம் இப்போது 6,000 ஆகியுள்ளது; இது முதலாவதில் பத்திலொரு பங்கும் இரண்டாவதில் ஐந்திலொரு பங்கும் வேகம் கூடுதலாகியிருப்பதைக்

---

[565] 1844 செப்டம்பர் 30இல் முடிகிற காலாண்டுக்கும், 1844 அக்டோபர் 1 முதல் 1845 ஏப்ரல் 30 வரையிலான காலத்துக்கும் உரிய தொழிற்சாலை ஆய்வாளர் அறிக்கைகள், பக்கம் 20.

[566] முன் வந்தது, பக்கம் 22.

குறிக்கிறது.''[567] மான்செஸ்டர் அருகே பாட்ரிக்ராஃப்டைச் சேர்ந்த சிறப்புமிக்க கட்டடப் பொறியாளரான ஜேம்ஸ் நாஸ்மித் 1852இல் லியோனார்டு ஹார்னருக்கு எழுதிய கடிதத்தில், 1848ஆம் ஆண்டுக்கும் 1852ஆம் ஆண்டுக்கும் இடையில் நீராவி எஞ்சினில் ஏற்பட்ட மேம்பாடுகளின் தன்மையை விளக்குகிறார். எப்போதுமே அதிகாரபூர்வத் தகவல்களில் 1828இல்[568] இருந்த ஒத்தாற்போன்ற எஞ்சின்களின் சக்திக்கு ஏற்ப மதிப்பீடு செய்யப்படும் நீராவி எஞ்சின்களின் குதிரைத் திறன் பெயர்வழிப்பட்டதே, அவற்றின் உண்மைத் திறனின் குறியீடாகவே அது பயன்படும் எனக் குறிப்பிட்ட பின்னர், அவர் மேலும் சொல்கிறார்: ''அதே எடையுள்ள நீராவி எஞ்சின்-இயந்திர சாதனத்திடமிருந்து, குறைந்தது 50 சதவீதம் அதிகமாகப் பணி அல்லது வேலையை சராசரியாகப் பெற்று வருகிறோம் என்றும், பல நேர்வுகளில், நிமிடத்துக்கு 220 அடி என்று வேகம் மட்டுப்பட்டிருந்த நாட்களில் 50 குதிரைத் திறனை வழங்கி வந்த அதே மாதிரியான நீராவி எஞ்சின்கள் இப்போது 100 குதிரைத் திறனுக்கு மேலாக வழங்குகின்றன என்றும் நம்புகிறேன்....'' ''100 குதிரைத் திறனுள்ள நவீன நீராவி எஞ்சினின் கட்டுமானம், கொள்ளளவு, கொதிகலன்களின் கட்டுமானம் முதலானவற்றில் செய்த மேம்பாடுகளின் காரணத்தால், முன்னைக் காட்டிலும் மிக அதிக விசையுடன் அதை ஓட்ட முடிகிறது....'' ''குதிரைத் திறனுடனான விகிதத்தில் முந்தைய கால கட்டங்களில் ஈடுபடுத்தப்பட்ட அதே தொகையிலான ஆட்கள் ஈடுபடுத்தப்பட்ட போதிலும், இயந்திர சாதனத்துடனான விகிதத்தில் முன்னை விடக் குறைவான ஆட்களே ஈடுபடுத்தப்படுகின்றனர்.''[569]

''1850ஆம் ஆண்டில் ஐக்கிய முடியரசில் இருந்த தொழிற்சாலைகள் 25,638,716 கதிர்களையும் 301,445 தறிகளையும் இயக்குவதற்கு 134,217 பெயர்வழிக் குதிரைத் திறனை ஈடுபடுத்தின. 1856இல் 33,503,580 கதிர்களும் 369,205 தறிகளும்

---

567 ''1862 அக்டோபர் 31க்கான தொழிற்சாலை ஆய்வாளர் அறிக்கைகள்,'' பக்கம் 62.

568 இது 1862இன் ''பாராளுமன்றத் தகவலில்'' மாற்றப்பட்டது. அதில் நவீன நீராவி எஞ்சின்கள், நீர்விசைச் சக்கரங்கள் ஆகியவற்றின் பெயர்வழிக் குதிரைத் திறனுக்குப் பதிலாக உள்ளபடியான குதிரைத் திறன் குறிக்கப்படுகிறது. இரட்டிக்கும் கதிர்களும் முன்போல (1839, 1850, 1856 ஆண்டுகளின் ''தகவல்களில்'' காணப்படுவது போல) இப்போது நூற்புக் கதிர்களில் சேர்க்கப்படவில்லை. மேலும் கம்பளி ஆலைகளைப் பொறுத்த வரை, ''சிலுப்பி உருளைகளின்'' எண்ணிக்கை சேர்த்துக் கொள்ளப்படுகிறது: சணல், ஹெம்ப் ஆலைகளும், வெண்சணல் ஆலைகளும் வேறுபடுத்திக் காட்டப்படுகின்றன. முடிவில் காலுறை நெசவு முதல் தடவையாக அறிக்கையில் இடம் பெறுகிறது.

569 ''1856 அக்டோபர் 31க்கான தொழிற்சாலை ஆய்வாளர் அறிக்கைகள்,'' பக்கம் 13-14, 20 மற்றும் 1852, பக்கம் 23.

இருந்தன. 1850இல் தேவைப்பட்ட அதே அளவு பெயர்வழிக் குதிரைத் திறனே 1856இலும் தேவை என்று கணக்கிட்டால், 175,000 குதிரைகளுக்குச் சமமான திறன் தேவைப்படும்; ஆனால் 1856க்கான தகவலில் தரப்படும் உள்ளபடியான திறன் 161,435 ஆகும்; 1850க்கான தகவலின் அடிப்படையில் கணக்கிட்டால் 1856இல் தொழிற்சாலைகளுக்குத் தேவைப்பட்டிருக்க வேண்டியதை விட இது 10,000க்கும் மேற்பட்ட குதிரைகள் குறைவாகும்.''[570] ''இவ்வாறு (1856ஆம் ஆண்டின்) தகவல் வெளிப்படுத்தும் உண்மைகள் தெரிவிப்பது என்னவென்றால், ஆலைத் தொழில் துரிதமாகப் பெருகிக் கொண்டிருக்கிறது; குதிரைத் திறனுடனான விகிதத்தில் முந்தைய கால கட்டங்களில் ஈடுபடுத்தப்பட்ட அதே தொகையிலான ஆட்கள் ஈடுபடுத்தப்பட்ட போதிலும், இயந்திர சாதனத்துடனான விகிதத்தில் முன்னிலும் குறைந்த ஆட்களே ஈடுபடுத்தப்படுகின்றனர்: விசைச் சிக்கனத்தின் மூலமும், ஏனைய வழிமுறைகளின் மூலமும், நீராவி எஞ்சின் அதிக எடையிலான இயந்திர சாதனத்தை ஓட்ட முடிகிறது; இயந்திர சாதனத்திலான மேம்பாடுகளின் மூலமும், தொழிலின் வழிமுறைகளிலான மேம்பாடுகளின் மூலமும், இயந்திர சாதனத்தின் வேகத்தை அதிகமாக்குவதன் மூலமும், மற்றும் பலவிதமான காரணங்களாலும், அதிக அளவிலான வேலையைச் செய்து முடிக்க இயலுகிறது.''[571]

''சகல வகை இயந்திரங்களிலும் செய்யப்பட்டுள்ள பெரும் மேம்பாடுகள் அவற்றின் உற்பத்தித் திறனை வெகுவாக உயர்த்தியுள்ளன. உழைப்பு நேரத்தைக் குறுக்கியது...இந்த மேம்பாடுகளுக்கு ஊக்கம் கொடுத்தது என்பதில் ஐயமில்லை. இம்மேம்பாடுகளும், தொழிலாளியின் மீதான சுமை முன்னைவிடக் கடுமையானதும் சேர்ந்து, (இரண்டு மணி நேரம் அல்லது ஆறிலொரு பங்கு) குறுக்கப்பட்ட வேலை-நாளில் கிடைத்த உற்பத்தியின் அளவு முன்னதாக அதிக நேர வேலை-நாளில் கிடைத்த உற்பத்தியின் அளவை விடக் குறையாமலிருக்க வழிசெய்தன.[572]

உழைப்புச் சக்தி மேலும் கடுமையாக சுரண்டப்பட்டதோடு, தொழிலதிபர்களின் செல்வம் எவ்வளவு பெரிதாய் அதிகரித்தது என்பதைக் காட்டுவதற்கு ஓர் உண்மை போதுமானது: 1838 முதல் 1850 வரை, ஆங்கிலேயப் பஞ்சாலைகளிலும் ஏனைய தொழிற்சாலைகளிலும் சராசரி விகிதாசார அதிகரிப்பு 32 சதவீதமாக இருக்க, 1850 முதல் 1856 வரையிலோ அது 86 சதவீதம் ஆகிவிட்டது.

---

570 முன் வந்தது, பக்கம் 14-15.

571 முன் வந்தது, பக்கம் 20.

572 ''1858 அக்டோபர் 31க்கான தொ. ஆ. அறிக்கைகள்'' பக்கம் 9,10. பார்க்கவும்: ''1860 ஏப்ரல் 30க்கான தொ. ஆ. அறிக்கைகள்,'' பக்கம் 30 முதலானவை.

ஆனால், 1848 முதல் 1856 வரையிலான 8 ஆண்டுகளில் 10 மணி நேர வேலை-நாளின் தாக்கத்தினால் ஆங்கிலேயத் தொழில் துறை எவ்வளவுதான் முன்னேறியதென்றாலும், அடுத்த கால கட்டமான 1856 முதல் 1862 வரையிலான 6 ஆண்டுகளில் இன்னும் மிகப் பெரிய முன்னேற்றம் ஏற்பட்டது. எடுத்துக் காட்டாக, பட்டுத் தொழிற்சாலைகளில் கதிர்கள் 1856இல் 1,093,799; 1862இல் 1,388,544; தறிகள் 1856இல் 9,260; 1862இல் 10,709. ஆனால் தொழிலாளர்களின் தொகை 1856இல் 56,131; 1862இல் 52,429. எனவே, கதிர்களிலான அதிகரிப்பு 26.9% ஆகவும், தறிகளிலான அதிகரிப்பு 15.6% ஆகவும் இருக்க, தொழிலாளர்களின் தொகையோ 7% குறைந்தது. முறுக்குக் கம்பளி ஆலைகளில் ஈடுபடுத்தப்பட்ட கதிர்கள் 1850இல் 875,830; 1856இல் 1,324,549 (அதிகரிப்பு 51.2%); 1862இல் 1,289,172 (குறைவு 2.7%). ஆனால், 1856க்கான எண்ணிக்கைகளில் — 1862க்கான எண்ணிக்கைகளில் அன்று — இடம் பெறுகிற இரட்டிக்கும் கதிர்களைக் கழித்து விடுவோமானால், 1856க்குப் பின்னர் கதிர்களின் எண்ணிக்கை அநேகமாய் நிலையாகவே இருந்து வந்தது என்பதைக் காணலாம். மறு புறம், 1850க்குப் பின்னர் கதிர்கள், தறிகள் ஆகியவற்றின் வேகம் பல இடங்களிலும் இரட்டிப்பாக்கப்பட்டது. முறுக்குக் கம்பளி ஆலைகளில் விசைத்தறிகளின் எண்ணிக்கை 1850இல் 32,617; 1856இல் 38,956; 1862இல் 43,048. தொழிலாளர்களின் தொகை 1850இல் 79,737; 1856இல் 87,794; 1862இல் 86,063. ஆயினும் இந்தத் தொகைகளில் சேர்க்கப்பட்டிருந்த 14 வயதுக்குட்பட்ட குழந்தைகள் 1850இல் 9,956; 1856இல் 11,228; 1862இல் 13,178. எனவே, 1856ஆம் ஆண்டுடன் ஒப்பிடுமிடத்து 1862இல் தறிகளின் எண்ணிக்கை பெரிதும் அதிகரித்திருந்த போதிலும் வேலைக்கமர்த்தப்பட்ட தொழிலாளர்களின் மொத்தத் தொகை குறைந்தது. சுரண்டப்பட்ட குழந்தைகளின் தொகை அதிகரித்தது.[573]

1863 ஏப்ரல் 27ஆம் நாள் காமன்ஸ் சபையில் திரு ஃபெர்ரண்டு கூறினார்: "தொழிற்சாலைகளில் வேலைச் சுமையானது, இயந்திர சாதன மேம்பாடுகளின் விளைவாக, இடைவிடாது அதிகரித்த வண்ணமுள்ளது என்று லங்காஷயர், செஷயர் ஆகியவற்றின் 16 வட்டங்களைச் சேர்ந்த பிரதிநிதிகள் — அவர்கள் சார்பாகவே நான் பேசுகிறேன் — என்னிடம் தெரிவித்துள்ளனர். முன்பு ஓர் ஆள் இரு உதவியாட்களுடன் இரு தறிகளைக்

[573] "1862 அக்டோபர் 31க்கான தொழிற்சாலை ஆய்வாளர் அறிக்கைகள்," பக்கம் 100, 130.

கவனித்துக் கொண்டதற்குப் பதிலாக, இப்போது ஓர் ஆள் மூன்று தறிகளை உதவியாட்கள் இல்லாமலே கவனித்துக் கொள்கிறார்; நான்கு தறிகளை ஒரே ஆள் கவனித்துக் கொள்வது கூட அசாதாரணமன்று. எடுத்துக்காட்டப்பட்டுள்ள உண்மைகளிலிருந்து தெளிவாவது போல, 12 மணி நேரத்துக்குரிய வேலை இப்போது 10 மணிக்கும் குறைவான நேரத்துக்குள் இறுக்கப்பட்டுள்ளது. எனவே, கடந்த 10 ஆண்டுகளில் ஆலைத் தொழிலாளியின் உழைப்பு எவ்வளவு பிரம்மாண்ட அளவுக்கு அதிகரித்திருக்கிறது என்பது கூறாமலே விளங்கும்.''[574]

எனவே, தொழிற்சாலை ஆய்வாளர்கள் 1844, 1850ஆம் வருடச் சட்டங்களின் பலன்களை ஓய்வு ஒழிவின்றியும் நியாயமாகவும் போற்றிப் புகழ்கின்றனர் என்ற போதிலும், வேலை நேரத்தைக் குறைத்ததானது தொழிலாளியின் ஆரோக்கியத்துக்கும் அவரது உழைப்புத் திறனுக்கும் கேடு செய்யக் கூடிய விதத்தில் உழைப்பு மும்முரமாக்கப்படுவதற்கு ஏற்கெனவே வழிசெய்துள்ளது என்பதை அவர்கள் ஒப்புக் கொள்கின்றனர். ''பஞ்சு, முறுக்குக் கம்பளி மற்றும் பட்டு ஆலைகளில் பெரும்பாலானவற்றில், கடந்த சில ஆண்டுகளுக்குள் இயக்க வேகம் பெரிதும் அதிகரிக்கப்பட்டுள்ள இயந்திர சாதனத்தைத் தொழிலாளர்கள் சரிவர கவனித்துக் கொள்ளும் பொருட்டு உடல் ஓய்ந்து விடும் படியான பரபரப்புநிலை தேவைப்படுகிறது; டாக்டர் கிரீன்ஹௌ இது பற்றிய தமது சமீபத்திய அறிக்கையில் சுட்டிக்காட்டியிருப்பது போல், நுரையீரல் நோயினால் ஏற்படும் மரண வீதம் மிதமிஞ்சியிருப்பதற்கு இந்நிலைமையும் ஒரு காரணமாய் இருக்கக் கூடும் என்று எனக்குத் தோன்றுகிறது.''[575] உழைப்பு நேரத்தை நீட்டிப்பது முடிவாகத் தடை செய்யப்பட்டதுமே, உழைப்பின் மும்முரத்தைத் திட்டமிட்டு உயர்த்துவதன் மூலம் ஈடு தேடிக் கொள்வதற்கும், இயந்திர சாதனத்திலான ஒவ்வொரு மேம்பாட்டையும் தொழிலாளியை

---

574 இரண்டு நவீன விசைத்தறிகளில், ஒரு நெசவாளர் இப்போது 60 வேலை-மணிகள் கொண்ட ஒரு வாரத்தில் குறிப்பிட்ட தரமும் நீள அகலமும் உடைய 26 உருப்படிகளைத் தயாரிக்கிறார்; பண்டைய விசைத்தறிகளில் அவர் இப்படிப்பட்ட 4 உருப்படிகளுக்கு மேல் தயாரிக்க முடிந்ததில்லை. இப்படிப்பட்ட ஓர் உருப்படியை நெய்வதற்கான செலவு ஏற்கெனவே 1850க்குப் பின் சீக்கிரமே 2 ஷில்லிங் 9 பென்னியிலிருந்து 5⅛ பென்னிக்கு வீழ்ந்து விட்டது.

''முப்பதாண்டுகளுக்கு முன்னால் (1841) ஒரு நூற்பாளர், மூன்று பலன்வீதக் கூலியாட்களுடன், 300-324 கதிர்களுடன் கூடிய ஒரு ஜோடி மியூல்களுக்கு மேல் கவனிக்க வேண்டியிருந்ததில்லை. தற்போது (1871) அவர் 5 பலன்வீதக் கூலியாட்களின் உதவியுடன் 2,200 கதிர்களைக் கவனிக்க வேண்டியுள்ளது. 1841இல் உற்பத்தி செய்யப்பட்ட நூலைப் போல் ஏழு மடங்குக்குக் குறைவில்லாமல் அவர் உற்பத்தி செய்கிறார்.'' (அலெக்சாந்தர் ரெட்கிரேவ், தொழிற்சாலை ஆய்வாளர் — 1872 ஜனவரி 5 தேதிய ஜர்னல் ஆஃப் ஆர்ட்ஸ் இதழில்)

575 ''1861 அக்டோபர் 31க்கான தொழிற்சாலை ஆய்வாளர் அறிக்கைகள்,'' பக்கம் 25, 26.

ஒட்டப் பிழிவதற்கான இன்னும் செம்மையான வழிவகையாக மாற்றுவதற்கும் மூலதனத்தைத் தூண்டுகிற போக்கானது, உழைப்பு நேரத்தின் குறைப்பு மீண்டும் தவிர்க்க முடியாததாகும் நிலைமைக்குச் சீக்கிரமே இட்டுச் சென்றாக வேண்டும் என்பதில் துளியும் சந்தேகமிருக்க முடியாது.[576] மறு புறம், 1848க்கும் இப்போதைக்குமிடையே 10 மணி வேலை-நாளின் தாக்கத்தால் ஆங்கிலேயத் தொழில் துறை அடைந்துள்ள துரித முன்னேற்றம் வேலை-நாள் 12 மணி நேரமாய் இருந்த காலமான 1833க்கும் 1847க்குமிடையில் அடைந்த முன்னேற்றத்தை எந்த அளவுக்கு விஞ்சுவதாய் இருக்கிறது என்றால், ஆலைத் தொழில் முதன்முதல் புகுத்தப்பட்ட பின் வேலை-நாளுக்கு வரம்பில்லாமலே கழிந்த அரை நூற்றாண்டு காலத்தில் அடைந்த முன்னேற்றத்தை மேற்கூறிய இரண்டாவது முன்னேற்றம் விஞ்சியதை விடவும் கூடுதலான அளவுக்கு விஞ்சுவதாய் இருக்கிறது.[577]

---

[576] எட்டு மணி நேர வேலை-நாளுக்கான கிளர்ச்சி இப்போது (1867) லங்காஷயரில் ஆலைத் தொழிலாளர்களிடையே ஆரம்பித்திருக்கிறது.

[577] 1848க்குப் பின்னர் ஐக்கிய முடியரசின் ''தொழிற்சாலைகளில்'' ஏற்பட்ட அதிகரிப்பைப் பின்வரும் ஒரு சில புள்ளி விவரங்களிலிருந்து அறியலாம்:

| | ஏற்றுமதி அளவு, 1848. | ஏற்றுமதி அளவு, 1851. | ஏற்றுமதி அளவு, 1860. | ஏற்றுமதி அளவு, 1865. |
|---|---|---|---|---|
| **பருத்தி** | | | | |
| பருத்தி நூல் (இராத்தல்) ............ | 135,831,162 | 143,966,106 | 197,343,655 | 103,751,455 |
| தையல் நூல் (இராத்தல்)............. | | 4,392,176 | 6,297,554 | 4,648,611 |
| பருத்தித் துணி (கெஜம்) ............... | 1,091,373,930 | 1,543,161,789 | 2,776,218,427 | 2,015,237,851 |
| **வெண்சணல் & ஹெம்ப்** | | | | |
| நூல் (இராத்தல்) ...... | 11,722,182 | 18,841,326 | 31,210,612 | 36,777,334 |
| துணி (கெஜம்) ........ | 88,901,519 | 129,106,753 | 143,996,773 | 247,012,529 |
| **பட்டு** | | | | |
| நூல் (இராத்தல்) ...... | 466,825 | 462,513 | 897,402 | 812,589 |
| துணி (கெஜம்) ........ | | 1,181,455 | 1,307,293 | 2,869,837 |
| **கம்பளி** | | | | |
| கம்பளி & முறுக்குக் கம்பளி நூல் (இராத்தல்)............. | | 14,670,880 | 27,533,968 | 31,669,267 |
| துணி (கெஜம்) ........ | | 151,231,153 | 190,371,507 | 278,837,418 |

## பிரிவு 4. — தொழிற்சாலை

இந்த அத்தியாயத்தின் தொடக்கத்தில், எதை நாம் தொழிற்சாலையின் உடலென்று சொல்லலாமோ அதனை, அதாவது ஓர் அமைப்பாக முறைப்படுத்தப்பட்ட இயந்திர சாதனத்தைப் பரிசீலித்தோம். மூலதனச் சுரண்டலுக்கான மூலப் பொருளாக அமைகிற மனிதப் பிறவிகளின் தொகையை, மாதர்கள், குழந்தைகளின் உழைப்பை அபகரிப்பதன் மூலம் இயந்திர சாதனம் எப்படிப் பெருக்குகிறது என்று அங்கே பார்த்தோம். உழைப்பு நேரத்தை மிதமிஞ்சி நீட்டுவதன் மூலம் தொழிலாளியின் செலவிடத்தக்க நேரம் முழுவதையும் அது எப்படிப் பறித்துக் கொள்கிறது என்றும்

---

| | ஏற்றுமதி மதிப்பு, 1848. | ஏற்றுமதி மதிப்பு, 1851. | ஏற்றுமதி மதிப்பு, 1860. | ஏற்றுமதி மதிப்பு, 1865. |
|---|---|---|---|---|
| **பருத்தி** | £ | £ | £ | £ |
| நூல் | 5,927,831 | 6,634,026 | 9,870,875 | 10,351,049 |
| துணி | 16,753,369 | 23,454,810 | 42,141,505 | 46,903,796 |
| **வெண்சணல் & ஹெம்ப்** | | | | |
| நூல் | 493,449 | 951,426 | 1,801,272 | 2,505,497 |
| துணி | 2,802,789 | 4,107,396 | 4,804,803 | 9,155,358 |
| **பட்டு** | | | | |
| நூல் | 77,789 | 196,380 | 826,107 | 768,064 |
| துணி | | 1,130,398 | 1,587,303 | 1,409,221 |
| **கம்பளி** | | | | |
| நூல் | 776,975 | 1,484,544 | 3,843,450 | 5,424,047 |
| துணி | 5,733,828 | 8,377,183 | 12,156,998 | 20,102,259 |

பார்க்கவும்: நீலப்புத்தகங்கள் "ஐக்கிய முடியரசின் புள்ளி விவரச் சாரம்," இதழ் 8 மற்றும் 13, லண்டன், 1861, 1866. லங்காஷயரில் ஆலைகளின் எண்ணிக்கை 1839க்கும் 1850க்கும் இடையே 4 சதவீதம்தான் அதிகரித்தது; 1850க்கும் 1856க்கும் இடையே 19 சதவீதம், 1856க்கும் 1862க்கும் இடையே 33 சதவீதம்; அவற்றில், 11 ஆண்டுகளைக் கொண்ட மேற்சொன்ன கால கட்டங்களில் ஒவ்வொன்றின் போதும் வேலைக்கமர்த்தப்பட்ட ஆட்கள் அறுதியாக அதிகரித்தனர்; ஆனால் ஒப்பளவில் குறைந்தனர். (பார்க்கவும்: "1862 அக்டோபர் 31க்கான தொழிற்சாலை ஆய்வாளர் அறிக்கைகள்," பக்கம் 63.) பஞ்சுத் தொழில் லங்காஷயரில் முதலிடம் வகிக்கிறது. ஐக்கிய முடியரசிலுள்ள ஜவுளி ஆலைகளின் மொத்தத் தொகையில் 45.2 சதவீதத்தையும், கதிர்களில் 83.3 சதவீதத்தையும், விசைத்தறிகளில் 81.4 சதவீதத்தையும், இயந்திரக் குதிரைத் திறனில் 72.6 சதவீதத்தையும், வேலைக்கமர்த்தப்படும் ஆட்களின் மொத்தத் தொகையில் 58.2 சதவீதத்தையும் (முன் வந்தது, பக்கம் 62-63) அது உட்கிரக்கிறது என்பதைப் பார்க்கும் போது, அந்த வட்டத்திலுள்ள பருத்தித் தொழில் எவ்வளவு பிரம்மாண்டமானதாய் இருக்கிறது என்பதைத் தெரிந்து கொள்ளலாம்.

விளக்கினோம். இறுதியாக, மேலும் மேலும் குறுகிய கால அளவு களில் உற்பத்தியின் மிகப் பெரும் அதிகரிப்புக்கு வழி செய்கிற அதன் முன்னேற்றம் திட்டமிட்ட முறையில் முன்னிலும் குறுகிய காலத்தில் முன்னிலும் அதிக வேலையைச் செய்யப் பெறுவதற்கான அல்லது உழைப்புச் சக்தியை இன்னும் மும்முரமாகச் சுரண்டு வதற்கான வழிவகையாக எப்படிப் பயன்படுகிறது என்பதையும் பார்த்தோம். இப்போது முழுத் தொழிற்சாலையை, அதுவும் குறை யற்ற நிறைவான வடிவத்திலுள்ள தொழிற்சாலையைப் பரிசீலிப் போம்.

தானியங்கித் தொழிற்சாலையின் ஆஸ்தானப் புலவர் (பிண்டார்) டாக்டர் யூர் ஒரு புறம் அதனை, ''ஒரு மையச் சக்தியால்'' (பிரதம இயக்கியால்) ''தொடர்ச்சியாக உந்தப்படும் உற்பத்தி இயந்திரங் களின் அமைப்பை சிரத்தைமிக்க தேர்ச்சியுடன் பேணுவதில் வயது வந்தோரும் வராதோருமான பலவிதத் தொழிலாளர்களின் ஒருங் கிணைந்த கூட்டு-வேலை'' என்று வர்ணிக்கிறார்; மறு புறம், ''ஒரு பொதுவான பொருளை உற்பத்தி செய்வதற்காக இடைத்தடை யின்றி ஒருமுகப்பட்டுச் செயல்படுகிற—அனைத்துமே சுய ஒழுங்கு படுத்தலுடன் கூடிய இயங்கும் சக்திக்குக் கீழ்ப்பட்டிருக்கிற—பல்வேறு யாந்திரிக மற்றும் அறிவு சம்பந்தப்பட்ட உறுப்பு களாலான பெரும் இயந்திர மனிதன்'' என்றும் வர்ணிக்கிறார். இந்த இரு வர்ணனைகளும் முழுதொத்தவை அல்ல. ஒரு வர்ணனை யில், கூட்டுத் தொழிலாளி அல்லது சமுதாய உழைப்பு அணியினர் ஆளும் கர்த்தாவாகவும், யாந்திரிக இயந்திர மனிதன் கருவியாகவும் தோற்றமளிக்கின்றனர். அடுத்த வர்ணனையில், இயந்திர மனிதனே கர்த்தா; தொழிலாளர்கள் உணர்வுள்ள உறுப்புகள் மட்டுமே. அவர்கள் இயந்திர மனிதனின் உணர்வற்ற உறுப்புகளுடன் ஒருங் கிணைந்து செயல்படுகின்றனர்; அவற்றோடு சேர்ந்து மையமான இயங்கும் சக்திக்குக் கீழ்ப்படுத்தப்படுகின்றனர். முதல் வர்ணனை இயந்திர சாதனத்தின் சாத்தியமான பெருவீதப் பிரயோகம் ஒவ் வொன்றுக்கும் பொருந்துவதாகும்; இரண்டாவது வர்ணனை மூலதனம் அச்சாதனத்தை உபயோகிப்பதற்கும், ஆதலால் நவீன ஆலைத் தொழிலுக்கும் மட்டுமே பொருந்துவதாகும். எனவே, இயக்கம் எதிலிருந்து வருகிறதோ அந்த மையப்பொறியை இயந்திர மனிதன் என்று மட்டுமல்லாமல், ஏகாதிபதி என்றும் வர்ணித்திட யூர் விரும்புகிறார். ''இந்த விசாலமான கூடங்களில் நீராவியின் அருளாட்சி விரும்பித் தொண்டூழியம் புரியும் தன் பரிவாரங்களைத் தன்னைச் சுற்றி ஒன்றுதிரட்டுகிறது.''[578]

கருவியோடு கூட, அதனைக் கையாள்வதில் தொழிலாளி பெற்றுள்ள தேர்ச்சியும் இயந்திரத்துக்குப் போய்ச் சேருகிறது.

[578] யூர், முன் வந்தது, பக்கம் 18.

கருவியின் திறன்கள், மனித உழைப்புச் சக்தியுடன் பிணைந்த தடைக் கட்டுகளிலிருந்து விடுவிக்கப்படுகின்றன. அதனால், பட்டறைத் தொழில் உழைப்புப் பிரிவினைக்கு அடிப்படையான தொழில் நுட்ப அடித்தளம் தகர்த்தெறியப்படுகிறது. எனவே, பட்டறைத் தொழிலின் சிறப்பியல்பாய்த் திகழும் தனித் தேர்ச்சி பெற்ற தொழிலாளர்களின் படிவரிசைக்குப் பதிலாக, தானியங்கித் தொழிற்சாலையில், இயந்திரங்களின் கவனிப்பாளர்கள் செய்ய வேண்டியிருக்கும் ஒவ்வொரு வகை வேலையையும் ஒரே நிலைக்குச் சமப்படுத்திக் குறைக்கும் போக்கு தலைதூக்குகிறது.[579] நுணுக்கத் தொழிலாளர்களிடையே செயற்கையாகத் தோற்றுவிக்கப்பட்ட வேறுபாடுகளுக்குப் பதிலாக, வயது, பால் என்னும் இயற்கை வேறுபாடுகள் தலைதூக்குகின்றன.

தொழிற்சாலையில் உருவாகிற உழைப்புப் பிரிவினை, பிரதானமாக தனித்திறனுள்ள இயந்திரங்களிடையே தொழிலாளர்களைப் பங்கிடுவதும், குழுக்களாக ஒழுங்கமைக்கப்படாத தொழிலாளர் திரள்களை தொழிற்சாலையின் பல்வேறு துறைகளிடையே பங்கிடுவதும் ஆகும்; ஒவ்வொரு துறையிலும் ஒருசேர அமைந்த ஒரே மாதிரியான அநேக இயந்திரங்களில் அவர்கள் வேலை செய்கின்றனர். எனவே, அவர்களது கூட்டு-வேலை சாமானிய வகைப்பட்டதேயாகும். பட்டறைத் தொழிலுக்கு உரித்தான ஒழுங்கமைந்த குழு மறைந்து, தலைமைத் தொழிலாளிக்கும் அவரது ஒரு சில உதவியாட்களுக்கும் இடையிலான தொடர்பு எழுகிறது. உள்ளபடியே இயந்திரங்களை வைத்து வேலை செய்கிற தொழிலாளர்களாகவும் (எஞ்சினைக் கவனித்துக் கொள்வோரான சிலரும் இவர்களில் அடங்குவர்), இந்தத் தொழிலாளர்களின் வெறும் சேவகர்களாகவும் (மிகப் பெரும்பாலும் குழந்தைகள்) பிரிக்கப்படுவதே அடிப்படைப் பிரிவினையாகும். வேலைக்குரியதான மூலப் பொருளை இயந்திரங்களுக்கு வழங்கும் ''ஊட்டுவோரில்'' ஏறக்குறைய அனைவருமே சேவகர்களாகக் கணக்கிடப்படுகின்றனர். இவ்விரண்டு பிரதானப் பிரிவுகளோடு கூட, பொறியாளர்கள், இயந்திரக் கம்மியர்கள், பொருத்துநர்கள் போன்ற — இயந்திரம் முழுவதையுமே பார்த்துக் கொள்வதையும் அவ்வப்போது மராமத்து செய்வதையும் அலுவலாகக் கொண்ட — எண்ணிக்கை நோக்கில் முக்கியமற்ற ஆட்களின் பிரிவு ஒன்றும் உள்ளது. மேம்பட்ட தொழிலாளர் பிரிவு இது; இவர்களில் சிலர் விஞ்ஞானக் கல்வி கற்றவர்கள்; மற்றவர்கள் ஒரு தொழிலுக்கென்றே வளர்க்கப்பட்டவர்கள்; இந்தப் பிரிவு ஆலைத் தொழிலாளர் வர்க்கத்துடன் சேர்த்துக் கணக்கிடப்பட்டாலும், அதிலிருந்து

579 யூர், முன் வந்தது, பக்கம் 31. பார்க்கவும்: கார்ல் மார்க்ஸ், முன் வந்தது, பக்கம் 140-141.

வேறுபட்டதாகும்.[580] இந்த உழைப்புப் பிரிவினை முற்றிலும் தொழில் நுட்ப வழிப்பட்டதே.

இயந்திரத்தில் வேலை செய்ய வேண்டுமானால் தொழிலாளிக்கு இளம் பிராயத்திலிருந்தே பயிற்சியளிக்க வேண்டும். இப்படிச் செய்தால்தான் அவர் தனது அசைவுகளை இயந்திர மனிதனின் சீரான, ஓயாத இயக்கத்திற்குத் தகவமைத்துக் கொள்ளக் கற்றிட இயலும். இயந்திர சாதனம் முழுமையும் ஒருங்கே ஒத்திசைந்து வேலை செய்கிற பலதரப்பட்ட இயந்திரங்களின் அமைப்பாகும் போது, அதன் அடிப்படையிலான கூட்டு-வேலைக்கு, வெவ்வேறு வகை இயந்திரங்களிடையே பல்வேறு தொழிலாளர் குழுக்களைப் பங்கீடு செய்வது அவசியமாகிறது. ஆனால் பட்டறைத் தொழிலில் நடப்பது போல் குறிப்பிட்ட பணிக்கு எப்போதும் குறிப்பிட்ட ஆளையே ஒதுக்கி இந்தப் பங்கீட்டை இறுகச் செய்வது, இயந்திர சாதனத்தை ஈடுபடுத்தத் தொடங்கிய பின் அவசியமற்றதாகி விடுகிறது.[581] அமைப்பு முழுவதன் இயக்கமும் தொழிலாளியிடமிருந்து அல்லாமல் இயந்திர சாதனத்திடமிருந்தே தொடங்குவதால் வேலை இடையில் நிற்காமலே எந்த நேரத்திலும் ஆள் மாற்றம் செய்ய முடியும். தொழிலதிபர்கள் 1848-1850இல் கலகம் புரிந்த போது நடைமுறைப்படுத்திய அஞ்சல் முறை இதற்கு மிகவும் தெளிவான நிரூபணமாகும். கடைசியாக, இளம் வயதினர் இயந்திர வேலையைத் துரிதமாகக் கற்றுக் கொண்டு விடுவதால் பிரத்தியேக மாய் இயந்திர சாதன வேலைக்கென்று தனி வகையான தொழிலாளர்களை வளர்த்து உருவாக்குவது அவசியமற்றதாகிறது.[582]

---

[580] பொறியாளர்கள், இயந்திரக் கம்மியர்கள் முதலானோரை மட்டுமல்லாமல், மேலாளர்கள், விற்பனையாளர்கள், செய்தியூழியர்கள், பண்டகசாலை ஊழியர்கள், மூட்டை கட்டுவோர் முதலானோரையும், சுருங்கச் சொல்லின் தொழிற்சாலையின் உடைமையாளரைத் தவிர ஒவ்வொருவரையுமே ஆலைத் தொழிலாளர் என்ற இனத்தில் பாராளுமன்றத் தகவல்கள் தெளிவாகச் சேர்த்துக் கொள்ளும் அதே நேரத்தில், வாசகத்தில் கடைசியாகக் குறிப்பிட்ட தொழிலாளர் பிரிவை ஆங்கிலேயத் தொழிற் சாலைச் சட்டம் அதன் செயல்பாட்டிலிருந்து விலக்கி வைப்பது, புள்ளி விவரங்களைக் கொண்டு செய்யப்படும் மோசடியை ஒத்ததாகவே தோன்றுகிறது. (இந்த மோசடியை ஏனைய விவகாரங்களிலும் கூட விவரமாக நிரூபிக்க முடியும்.)

[581] யூர் இதை ஏற்றுக் கொள்கிறார்: "தேவையிருக்கும் பட்சத்தில்," மேலாளரின் விருப்பம் போல் தொழிலாளர்களை ஒரு இயந்திரத்திலிருந்து இன்னொரு இயந்திரத் துக்கு மாற்ற முடியும் என்கிறார். "இப்படி மாற்றுவது, வேலையைப் பிரித்து ஊசியின் தலையை வடிவமைக்கும் பணியை ஒரு தொழிலாளிக்கும், அதன் முனையைக் கூரர்க்கும் பணியை இன்னொரு தொழிலாளிக்கும் ஒதுக்குகிற பழைய முறைக்கு நேர் மாறானது" என்று வெற்றி முழக்கமிடுகிறார். தானியங்கித் தொழிற்சாலை இந்தப் "பழைய" முறையிலிருந்து விலகிச் செல்வது "தேவையிருக்கும் பட்சத்தில்" மட்டும்தானா என்று அவர் ஆலோசித்திருந்தால் இன்னும் நன்றாயிருக்கும்.

[582] இன்னல்கள் அதிகமாகும் போது, எடுத்துக்காட்டாக அமெரிக்க உள்நாட்டு யுத்தத்தின் போது முதலாளி ஆலைத் தொழிலாளியை சாலை போடுதல் போன்ற முரட்டு வேலைகளில் அடிக்கடி ஈடுபடுத்துகிறார். அனாதரவான பஞ்சாலைத் தொழிலாளர்களின்

உதவியாட்களின் வேலையைப் பொறுத்த வரை ஆலையில் ஓரளவுக்கு இயந்திரங்களைக் கொண்டே அதைச் செய்திடலாம்.[583] மிகவும் சாமானியமாயிருப்பதால், அலுப்பும் சலிப்பும் வாய்ந்த இந்த வேலையின் சுமைக்கு ஆட்படுவோரைத் துரிதமாகவும் இடைவிடாமலும் மாற்றிக் கொண்டிருக்கலாம்.

தொழில் நுட்ப நோக்கில், பழைய உழைப்புப் பிரிவினை ஏற்பாடு இவ்விதம் இயந்திர சாதனத்தால் நீக்கப்பட்ட போதிலும், அது பட்டறைத் தொழிலிலிருந்து வரப்பெற்ற பரம்பரைப் பழக்கமாக தொழிற்சாலையில் நீடிக்கவே செய்கிறது. பிற்பாடு அது உழைப்புச் சக்தியைச் சுரண்டும் வழியாக மூலதனத்தால் இன்னும் கூட கொடிய வடிவத்தில் ஒழுங்காய் மாற்றியமைக்கப் பெற்று, நிலைநாட்டப்படுகிறது. ஒரே கருவியைக் கையாள்வதன் ஆயுட்காலத் தனித்திறன் இப்போது ஒரே இயந்திரத்தில் பணிபுரியும் ஆயுட்காலத் தனித்திறனாகிறது. தொழிலாளியைக் குழந்தைப் பருவம் முதற்கொண்டே நுணுக்க இயந்திரமொன்றின் பகுதியாக

---

நன்மைக்காக நிறுவப்பட்டதான 1862 மற்றும் அதைத் தொடர்ந்து வந்த ஆண்டுகளின் ஆங்கிலேய "ateliers nationaux"* 1848ஆம் வருடத்திய பிரெஞ்சு "ateliers nationaux" என்பவற்றிலிருந்து வேறுபடுகின்றன. வேறுபாடு என்னவென்றால்: அவற்றில் சேர்ந்த தொழிலாளர்கள் பிரான்சில் அரசு செலவில் உற்பத்திக்கு உதவாத வேலை செய்ய வேண்டியிருந்தது; ஆனால், இங்கிலாந்தில் முதலாளிகளுக்கும் நலம் பயக்கும் விதத்தில் உற்பத்திக்கு உதவும் பொது மராமத்து வேலை செய்தார்கள்; அதுவும் யாருக்குப் போட்டியாக அமர்த்தப்பட்டார்களோ அந்த முறையான தொழிலாளர்களை விடக் குறைந்த கூலிக்கு வேலை செய்தார்கள். "பஞ்சாலைத் தொழிலாளர்களின் உடல்தோற்றம் மேம்பட்டுள்ளது என்பதில் ஐயமில்லை. இதற்குக் காரணம்... ஆடவர்களைப் பொறுத்த வரை, பொது பணிகளில் திறந்த வெளியில் அவர்கள் வேலை செய்ததே என்பேன்." ("1863 அக்டோபர் 31க்கான தொழிற்சாலை ஆய்வாளர் அறிக்கைகள்," பக்கம் 59.) இதை எழுதுபவர் இங்கே குறிப்பிடுவது, பிரெஸ்டன் திடலில் வேலை வாங்கப்பட்ட பிரெஸ்டன் ஆலைத் தொழிலாளர்களையே.

583 எடுத்துக்காட்டு: 1844ஆம் வருடத்திய சட்டத்துக்குப் பின்னர் குழந்தைகளின் உழைப்பிற்குப் பதிலாய் கம்பளி ஆலைகளில் நிறுவப்பட்ட பல்வேறு இயந்திரப் பொறிகள். ஆலையதிபர்களின் குழந்தைகளே ஆலையில் உதவியாட்களாகச் சிறிது காலம் இருக்க வேண்டிய நிலை ஏற்படுமேயானால், அநேகமாக ஆய்ந்தறியப்படாத இந்த இயந்திரவியற் பிரிவு சீக்கிரமே குறிப்பிடத்தக்க முன்னேற்றமடையும். "இயந்திர சாதனங்களில் தன்னியக்க மியூல்களைப் போல் ஆபத்தானவற்றைக் காண்பது அரிது. அவற்றால் ஏற்படும் விபத்துகளில் பெரும்பாலானவை சிறு குழந்தைகளுக்கு ஏற்படுகிறவை. இக்குழந்தைகள், மியூல்கள் இயங்கிக் கொண்டிருக்கையில் தரையைக் கூட்டுவதற்காக அவற்றின் அடியில் ஊர்ந்து செல்வதால் இவை நேரிடுகின்றன. பல கவனிப்பாளர்களுக்கு இவ்விதம் கவனம் தவறிய குற்றத்திற்காக அபராதம் விதிக்கப்பட்டுள்ளது; ஆனால் பொதுவாக அதிகப் பயன் கிட்டவில்லை. இயந்திர நிர்மாணிகள் இயந்திரங்களின் கீழ் இச்சிறு குழந்தைகள் ஊர்ந்து செல்ல வேண்டியதை அவசியமற்றதாக்கி விடும் தன்னியக்கத் துடைப்பான் ஒன்றைக் கண்டுபிடிப்பார்களாயின், நமது இடர் காப்பு நடவடிக்கைகளுக்கு அது அருஞ்சேவை புரிவதாய் அமையும்." ("1866 அக்டோபர் 31க்கான தொழிற்சாலை ஆய்வாளர் அறிக்கைகள்," பக்கம் 63.)

---

* தேசியப் பட்டறைகள்.

மாற்றியமைத்திடும் விதத்தில் இயந்திர சாதனம் தவறான முறையில் பயன்படுத்தப்படுகிறது.[584] இவ்விதத்தில், அவரது மறுவுற்பத்தியின் செலவுகள் கணிசமாகக் குறைக்கப்படுவது மட்டுமல்ல; வேறு வழியின்றி தொழிற்சாலை முழுவதையும், ஆதலால் முதலாளியையும் அவர் சார்ந்து வாழ வேண்டிய நிலை அதே நேரத்தில் முழுமையாக்கவும் படுகிறது. வேறெங்கும் போலவே இங்கும் சமுதாய உற்பத்தி நிகழ்முறையினது மேம்பாட்டின் விளைவாய் அதிகரித்த உற்பத்தித் திறனுக்கும், அம்மேம்பாட்டை முதலாளி பயன்படுத்திச் சுரண்டுவதன் விளைவாய் அதிகரித்த உற்பத்தித் திறனுக்கும் இடையில் நாம் வேறுபடுத்திப் பார்க்க வேண்டும். கைத்தொழில்களிலும், பட்டறைத் தொழிலிலும் தொழிலாளி கருவியைப் பயன்படுத்துகிறார்; தொழிற்சாலையில் இயந்திரம் அவரைப் பயன்படுத்துகிறது. அங்கே உழைப்புக் கருவியின் இயக்கங்கள் அவரிடமிருந்து ஆரம்பமாகின்றன; இங்கே இயந்திரத்தின் இயக்கங்களை அவர் பின்தொடர வேண்டும். பட்டறைத் தொழிலில் தொழிலாளர்கள் உயிருள்ள இயங்கமைப்பின் அங்கங்களாவர். தொழிற்சாலையில் உயிரற்ற இயங்கமைப்பு தொழிலாளியைச் சாராமல் சுயேச்சையாய் இருப்பதையும், அதற்குத் தொழிலாளி உயிருள்ள ஒட்டுவால் ஆகி விடுவதையும் காண்கிறோம். ''இது ஓயாமல் சலிப்பூட்டுவதும் உடலை வருத்துவதுமான அன்றாட அவ்தி, மாற்றமில்லாத அதே யாந்திரிக வினைமுறையைத் திரும்பத் திரும்ப செய்து கொண்டிருக்கும் அவலம், சிசிஃபஸ் பட்ட பாட்டைப் போன்ற ஒன்று. உழைப்பின் சுமை கற்பாறை போல் திரும்பத் திரும்ப உருண்டு வந்து களைப்புற்றுச் சோர்ந்த தொழிலாளி மீது விழுந்து விழுந்து வதைக்கிறது.''[585] தொழிற்சாலையில் செய்யும் வேலை, நரம்பு மண்டலத்தை மிக அதிகமாய் சோர்வுறச் செய்து விடுகிறது; அதே போது தசைநார்களின் பல்வகை

---

[584] புரூதோனின் கருத்து எவ்வளவு அற்புதமானது என்பதை அறிய இது போதும். இயந்திர சர்தனத்தை உழைப்புக் கருவிகளின் சேர்க்கையாக அன்றி, தொழிலாளியின் நன்மைக்காகவே உள்ளதான நுணுக்கப் பணிகளின் சேர்க்கையாக அவர் ''விளக்கம்'' செய்கிறார்.

[585] பிரெடெரிக் எங்கெல்ஸ், முன் வந்தது, பக்கம் 217. நன்னம்பிக்கை வாய்ந்த சர்வசாதாரண தடையிலா வாணிபக்காரரான திரு மொலினாரி கூட இதை வெளிப்படையாகவே சொல்கிறார்: ''ஒருவர் நாள் ஒன்றுக்குப் பதினைந்து மணி நேரம் ஒரு பொறியமைவின் ஒரேசீரான இயக்கத்தைக் கண்காணித்துக் கொண்டிருப்பாரானால், அதே கால அளவுக்குத் தொடர்ந்து தமது உடல் வலிமையைப் பிரயோகிப்பதால் சோர்ந்து போவதை விடவும் சீக்கிரமாய்ச் சோர்ந்து போகிறார். இந்தக் கண்காணிக்கும் உழைப்பு அதிகப்படியான நேரத்துக்கு நீடிக்காத பட்சத்தில் மனத்துக்குப் பயனுள்ள பயிற்சியாய் அமைந்தாலும் அமையக் கூடும், அதிகப்படியான பிரயோகத்தினால் இது நாளாவட்டத்தில் மனம், உடல் இரண்டையுமே நாசமாக்குகிறது.'' (கு. டெ மொலினாரி, ''பொருளாதாரப் பயிற்சி முறைகள்,'' பாரிஸ், 1846.)

இயக்கத்தை ஒழித்து விடுகிறது; உடல் நடவடிக்கை, அறிவு நடவடிக்கை இரண்டிலுமே அணுவளவும் சுதந்தரம் இல்லாமல் செய்து விடுகிறது.[586] உழைப்பை இலகுவாக்குவதே கூட ஒரு விதமான சித்திரவதையாகி விடுகிறது; ஏனெனில் இயந்திரம் தொழிலாளியை வேலையிலிருந்து விடுவிப்பதில்லை; மாறாக, வேலையை சற்றும் சுவையற்றதாக்கி, சலிப்புறச் செய்கிறது. உழைப்பு நிகழ்முறை மட்டுமன்று, உபரி-மதிப்பைப் படைக்கும் நிகழ்முறையும் ஆகும் என்பதால் எல்லா வகை முதலாளித்துவப் பொருளுற்பத்திக்கும் பொதுவான தன்மை ஒன்றுண்டு: தொழிலாளி உழைப்புக் கருவிகளை வேலை வாங்குவதில்லை, உழைப்புக் கருவிகள்தாம் தொழிலாளியை வேலை வாங்குகின்றன. ஆனால் ஆலைத் தொழிலில்தான் முதன் முதலாய் இந்தத் தலைகீழ் நிலை அப்பட்டமான தொழில் நுட்ப எதார்த்தமாகிறது. உழைப்புக் கருவி ஓர் இயந்திர மனிதனாக அது அடைகிற மாற்றத்தைக் கொண்டு, உழைப்பு நிகழ்முறையின் போது, மூலதனத்தின் உருவில்—உயிருள்ள உழைப்புச் சக்தியின் மீது ஆதிக்கம் செலுத்தி, அதனை ஒட்ட உறிஞ்சுகிற உயிரிழந்த உழைப்பின் உருவில்—தொழிலாளியை எதிர்கொள்கிறது. அறிவு தொடர்பான உற்பத்தித் திறன்களை கையுழைப்பிலிருந்து பிரித்து, அத்திறன்களை உழைப்பின் மீதான மூலதனத்தின் சக்தியாக மாற்றும் போக்கு இயந்திர சாதனத்தை அடித்தளமாய்க் கொண்டு எழுந்துள்ள நவீனத் தொழில் துறையால் இறுதியாக நிறைவு செய்யப்படுகிறது என்பதை ஏற்கெனவே தெளிவுபடுத்தியிருக்கிறோம். தொழிற்சாலை இயங்கமைப்பில் உருக்கொண்டிருப்பதும் அவ்வியங்கமைப்புடன் சேர்ந்து "ஆலையதிபரின்" சக்தியாக அமைவதுமான விஞ்ஞானம், பிரம்மாண்டமான பௌதிகச் சக்திகள், உழைப்பின் பெருந்திரள் ஆகியவற்றின் முன்னால் தனிப்பட்ட சாமானிய ஆலைத் தொழிலாளி ஒவ்வொருவரின் தனித்தேர்ச்சியும் சிறு துகள் அளவினதாய்த் தேய்ந்து கண்ணிற்படாமல் போகிறது. எனவே, "அதிபரானவர்"—அவரது சிந்தனையில் இயந்திர சாதனமும், அது அவரது ஏகபோகமாயிருப்பதும் பிரிக்க முடியாதவாறு ஒன்றாகி விடுகின்றன—அவரது ஆட்களுடன் மோத நேரும் போதெல்லாம், அவர்களைப் பார்த்து மிக அலட்சியமாய்ச் சொல்கிறார்: "ஆலைத் தொழிலாளர்கள் இதனைத் தெளிவாக நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும். அவர்களது தேர்ச்சி பெற்ற உழைப்பு உண்மையில் மட்டரகமான வகையைச் சேர்ந்தது; அது மிகச் சுலபமாகவே கைவரப்பெற்று, அதன் தரத்துக்கும் மிகுதியான அளவிலேயே ஊதியம் பெறுகிறது; ஓரளவு நிபுணராயிருக்கும் எவரும் அளிக்கிற சொற்ப காலப்

[586] பி. எங்கெல்ஸ், முன் வந்தது, பக்கம் 216.

பயிற்சியின் வாயிலாய் விரைவாகவும் குறைவின்றியும் பெறக் கூடியதே....பொருளுற்பத்திக்கு உண்மையில் மிக முக்கியமானது எது? ஆறு மாதக் கல்வியின் வாயிலாகப் பெறக் கூடியதும் சாதாரண உழைப்பாளி எவரும் கற்றுக் கொள்ளக் கூடியதுமான தொழிலாளியின் உழைப்பும் தேர்ச்சியுமா? அல்ல. அதிபரின் இயந்திர சாதனம்தான் மிக முக்கியமானது.''[587] உழைப்புக் கருவிகளின் சீரான இயக்கத்துக்குத் தொழிலாளியைத் தொழில் நுட்ப வழியில் கீழ்ப்படுத்துவதும், சகல வயதினருமான ஆண்பெண்களைக் கொண்ட தொழிலாளர் தொகுதியின் தனிவகை இயைபும் பட்டாளக் கொட்டடிக்குரிய கட்டுப்பாட்டைத் தோற்றுவிக்கின்றன. இக்கட்டுப்பாடு தொழிற்சாலையில் முழுமையான ஏற்பாடாக விரிவாக்கப்படுகிறது; இது முன்னர் குறிப்பிட்ட மேற்பார்வை வேலையை வளர்த்து, அதன் மூலம் உழைப்பாளி மக்களைத் தொழிலாளர்களாகவும், மேற்பார்வையாளர்களாகவும் — ஒரு தொழில் துறைப் பட்டாளத்தின் சாதாரணச் சிப்பாய்களாகவும், சார்ஜெண்ட்டுகளாகவும் — பிரிக்கிறது. ''(தானியங்கித் தொழிற்சாலையில்) பிரதானச் சிக்கல்...யாவற்றுக்கும் மேலாய், மனிதப் பிறவிகள் தமது ஒழுங்கற்ற வேலைப் பழக்கங்களை விட்டொழித்து சிக்கலான இயந்திர மனிதனின் மாறுபடாத முறைப்பாட்டுடன் இரண்டறக் கலந்து விடுமாறு பயிற்றுவிப்பதே....தொழிற்சாலை சரிவர இயங்குவதற்கு அவசியமான தொழிற்சாலைக் கட்டுப்பாட்டு விதிமுறைகளை வெற்றிகரமாக வகுத்து நடைமுறைப்படுத்தியது ஆர்க்ரைட்டின் அரும்பெரும் பணியும் மகத்தான சாதனையுமாகும்! ஆலைத்தொழில் செம்மையாக ஒழுங்கமைக்கப்பட்டு, அதன் உழைப்பு இயன்ற வரை இலகுவாக்கப்பட்டுள்ள இந்த நாளிலும் கூட இளம் பிராயத்தைக் கடந்து விட்டவர்களைப் பயனுள்ள ஆலைத் தொழிலாளர்களாய் மாற்றுவது அநேகமாய் முடியாத காரியம் எனக் காண்கிறோம்.''[588] முதலாளியானவர் தனியார் சட்டமன்றம் போலாகி தன் விருப்பத்துக்கேற்பத் தொழிலாள மக்கள் மீதான ஏதேச்சாதிகாரத்துக்கு வடிவளிப்பதாகும் இந்தத் தொழிற்சாலைக் கட்டுப்பாட்டு விதிமுறை. இதர விவகாரங்களில் முதலாளி வர்க்கம்

---

587 ''நூற்பு அதிபர்கள் மற்றும் தொழிலதிபர்களின் தற்காப்பு நிதிக் குழு. அக் குழுவின் அறிக்கை.'' மான்செஸ்டர், 1854, பக்கம் 17. அதிபர் அவரது ''உயிருள்ள'' இயந்திரங்களை இழக்கும் அபாயம் ஏற்படும் போது பாடுகிற பாட்டு வேறுவிதமானது என்பதை இனிமேல்பார்ப்போம்.

588 யூர், முன் வந்தது, பக்கம் 15. ஆர்க்ரைட்டின் வாழ்க்கை வரலாற்றை அறிந்தவர் எவரும் நாவிதரான இந்த மேதைக்கு ''மகத்தானவர்'' என்று ஒரு போதும் பட்டம் சூட்ட மாட்டார். 18ஆம் நூற்றாண்டின் மாபெரும் கண்டுபிடிப்பாளர்களில் எல்லாம், ஏனையோரின் கண்டுபிடிப்புகளைக் களவாடுவதிலும், அற்பத்தனத்திலும் நிகரற்றவர் இவரே என்பதில் சர்ச்சைக்கிடமில்லை.

போற்றிப் புகழ்ந்து முன்வைக்கும் அதிகாரப் பொறுப்புப் பங்கீட்டுக்கும், இன்னும் அதிகமாகவே போற்றப்படும் பிரதிநிதித்துவ முறைக்கும் இங்கு சிறிதும் இடம் தரப்படவில்லை. இந்த விதிமுறையானது பெருமளவிலான கூட்டு-வேலையிலும், உழைப்புக் கருவிகளை (குறிப்பாக இயந்திர சாதனத்தை) பொதுவில் ஈடுபடுத்துவதிலும் அவசியமாகிற உழைப்பு நிகழ்முறையின் அந்தச் சமுதாய ஒழுங்கு படுத்தலின் முதலாளித்துவக் கேலிச் சித்திரமேயாகும். அடிமைக் கங்காணியின் சாட்டையடிக்கு பதிலாய் அமைவது மேற்பார்வையாளர் விதிக்கும் அபராதம். இயற்கையாகவே எல்லாத் தண்டனைகளும் அபராதங்களாகவும், கூலிப் பிடித்தங்களாகவும் உருப் பெறுகின்றன. தொழிற்சாலை லைக்கர்கஸ் விதிவகுப்பதில் ஆற்றல் படைத்தவர்; அவரது விதிகளை மீறுவது அவற்றை அனுசரிப்பதை விடவும் சாத்தியமான போதெல்லாம் அவருக்கு அதிக இலாபம் அளிப்பதாய் அமையும் விதத்தில் ஆவன செய்திட வல்லவர்.[589]

---

589 ''முதலாளி வர்க்கம் பாட்டாளி வர்க்கத்துக்குப் பூட்டியிருக்கும் அடிமைத் தளை வேறு எதிலும் வெளிப்படுவதை விட ஆலைத் தொழிலில் துலக்கமாய் வெளிப்படுகிறது. அதில், சகலவிதமான சுதந்தரத்துக்கும் சட்டத்தின் படி மட்டுமல்லாமல், உண்மையிலும் முடிவு கட்டப்படுகிறது. தொழிலாளி ஐந்தரை மணிக்கெல்லாம் தொழிற்சாலையில் இருக்க வேண்டும். சில நிமிடம் தாமதமாக வந்தால் தண்டிக்கப்படுகிறார்; 10 நிமிடம் தாமதமாக வந்தால், காலை உணவு முடியும் வரை உள்ளே வர அனுமதியில்லை; இவ்வாறு கால் நாள் கூலியை இழக்கிறார். கட்டளைச் சொல் கேட்டே உணவருந்தலாம், நீர் பருகலாம், உறங்கச் செல்லலாம்....கொடுங்கோல் மணியோசை படுக்கையிலிருந்து அவரை எழுப்புகிறது; காலை உணவிலிருந்தும் மதிய சாப்பாட்டிலிருந்தும் அவரைக் கூப்பிடுகிறது. அவர் ஆலையில் எப்படிக் காலம் தள்ளுகிறார்? அங்கே ஆலையதிபர் இட்டதுதான் சட்டம்; அதிபர் தமக்கு இஷ்டமான விதிமுறைகளை வகுக்கிறார்; விருப்பம் போல் தமது விதிமுறையை மாற்றியமைக்கிறார். சிலவற்றைச் சேர்த்துக் கொள்கிறார்; அவர் அபத்தத்திலும் அபத்தமானவற்றை விதிக்கும் போது நீதிமன்றங்கள் தொழிலாளியைப் பார்த்துச் சொல்கின்றன: நீ இந்த ஒப்பந்தத்தைத் தானாகவே முன்வந்து செய்து கொண்டிருப்பதால், இப்போது அதனை நிறைவேற்றியாக வேண்டும்....இந்தத் தொழிலாளர்கள் ஒன்பது வயதிலிருந்து சாகும் வரை உள்ளத்துக்கும் உடலுக்குமான இந்தச் சித்திரவதையுள் தள்ளப்படுகிறார்கள்.'' (பி. எங்கெல்ஸ், முன் வந்தது, பக்கம் 217 முதலானவை.) ''நீதிமன்றங்கள் சொல்வதை'' இரு உதாரணங்களைக் கொண்டு விளக்குவேன். ஒன்று நிகழ்வது 1866 இறுதியில் ஷெஃபீல்டில். அந்த நகரத்தில் ஒரு தொழிலாளி ஓர் உருக்காலையில் ஈராண்டு காலமாய் வேலை செய்து வந்தார். அவருக்கு வேலை கொடுத்தவரோடு ஏற்பட்ட தகராறின் விளைவாக அவர் ஆலையை விட்டு வெளியேறினார்; எந்நிலையிலும் இனிமேல் அந்த அதிபரிடம் வேலை செய்வதில்லை என்று அறிவித்தார். ஒப்பந்த மீறலுக்காக அவர் மீது வழக்கு தொடரப்பட்டு, இரண்டு மாதச் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது. (அதிபர் ஒப்பந்த முறிவு செய்தால் அவருக்கெதிராகச் சட்ட வழியில் உரிமையியல் நடவடிக்கையே எடுக்க முடியும். இழப்புத் தொகை கட்ட வேண்டும் என்பது தவிர அவருக்கு எந்த ஆபத்துமில்லை.) தொழிலாளி இரண்டு மாத தண்டனையைக் கழித்து விட்டு வந்த பின்னர், அதிபர் அவரை ஒப்பந்தப் படி ஆலைக்குத் திரும்புமாறு அழைக்கிறார். தொழிலாளி சொல்கிறார்: முடியாது, நான் ஒப்பந்த மீறலுக்காக ஏற்கெனவே தண்டிக்கப்பட்டு விட்டேன். அதிபர் மீண்டும் வழக்கு தொடர்கிறார். நீதிமன்றம் தண்டிக்கிறது; ஆயினும், நீதிபதிகளில் ஒருவரான திரு ஷீ, ஒருவர் ஒரே பிழை அல்லது குற்றத்துக்காக உயிருள்ள

தொழிற்சாலையில் உழைப்பு நடந்தேறும் பொருளாயத நிலைமைகளை இங்கே சுட்டிக் காட்டுவதுடன் நிறுத்திக் கொள்கிறேன். நெருக்கமாக வைக்கப்பட்டிருக்கும் இயந்திர சாதனங்களிடையே உயிருக்கும் உறுப்புக்கும் நேரிடும் ஆபத்தைக் கூறாது போனாலும்,

---

வரைக்கும் விட்டு விட்டுத் திரும்பத் திரும்பத் தண்டிக்கப்படுவதற்கு வழிசெய்யும் சட்ட விபரீதம் என்று இதனை பகிரங்கமாகக் கண்டிக்கிறார். லண்டனில் உள்ள உச்ச நீதிமன்றங்களில் ஒன்று வழங்கிய தீர்ப்பு இது; ''ஊதியம் பெறா கனதனவான்கள்,'' வட்டார அசடுகள் வழங்கியதன்று. [**4ஆவது ஜெர்மன் பதிப்பில் எங்கெல்ஸ் குறிப்பு.** — இந்த நிலைமை இப்போது இல்லை. சில விதிவிலக்குகளை, உதாரணமாகப் பொது வாயுத் தொழில்கள் சம்பந்தப்பட்டிருப்பது போன்ற விதிவிலக்குகளைத் தவிர்த்து, இங்கிலாந்திலுள்ள தொழிலாளி, ஒப்பந்த முறிவு ஏற்படும் பட்சத்தில் முதலாளியுடன் சமத்துவ நிலை பெற வழிசெய்யப்பட்டுள்ளது. தொழிலாளிக்கெதிராக உரிமையியல் வழக்குதான் தொடர முடியும்.] இரண்டாவது உதாரணம் நிகழ்வது வில்ட்ஷயரில் 1863 நவம்பர் இறுதியில். வெஸ்ட்பரி லேயைச் சேர்ந்த லியோவர்ஸ் ஆலையில் துணி உற்பத்தியாளரான ஹார்ரூப் என்பவரிடம் வேலை செய்து வந்த சுமார் 30 விசைத்தறி நெசவாளர்கள் வேலைநிறுத்தம் செய்தனர்; ஏனெனில் காலையில் தாமதமாக வருவோருக்குக் கூலியில் பிடித்தம் செய்வதென்ற இலாபகரமான பழக்கமுடையவர் அதிபர் ஹார்ரூப். தாமதத்துக்கான பிடித்தம் 2 நிமிடத்துக்கு 6 பென்னி, 3 நிமிடத்துக்கு 1 ஷில்லிங், 10 நிமிடத்துக்கு 1 ஷில்லிங் 6 பென்னி, மணிக்கு 9 ஷில்லிங், நாளுக்கு £4, 10 ஷில்லிங் 0 பென்னி. ஆனால் ஓர் ஆண்டின் சராசரியில் நெசவாளர்களின் கூலி ஒருபோதும் வாரத்துக்கு 10 அல்லது 12 ஷில்லிங்கைத் தாண்டிப் போனதில்லை. ஹார்ரூப், ஆலை துவங்கும் நேரத்தை ஊதலின் மூலம் அறிவிப்பதற்கு ஒரு சிறுவனை நியமித்தார்; இச்சிறுவன் பல நேரங்களில் காலை 6 மணிக்கு முன்னரே இதைச் செய்தான்; ஊதல் ஊதி முடிவதற்குள் ஆட்கள் உள்ளே வந்து விட வேண்டும்; இல்லையேல் கதவு மூடப்பட்டது; வெளியில் நின்ற ஆட்களுக்கு அபராதம் விதிக்கப்பட்டது; ஆலைப் பகுதியில் கடிகாரம் இல்லை; ஆதலால் இந்த துர்ப்பாக்கியசாலிகள் ஹார்ரூப்பினால் ஏவப்பட்ட நேரக்காப்பாளச் சிறுவனின் தயவில் விடப்பட்டனர். வேலைநிறுத்தம் செய்தவர்கள் தாய்மார்களும், பெண்களும் — நேரக் காப்பாளருக்கு பதில் கடிகாரம் வேண்டும், அபராத விகிதம் நியாயமாய் இருத்தல் வேண்டும், இந்தக் கோரிக்கைகள் ஏற்கப்பட்டால்தான் வேலைக்குத் திரும்புவோம் என்றனர். ஹார்ரூப் ஒப்பந்த முறிவுக்காக 19 தாய்மார்களையும் பெண்களையும் மாஜிஸ்திரேட்டுகளின் முன்னால் நிறுத்தினார். கூடியிருந்தோர் எல்லாம் கொதிப்படையும் விதத்தில், அத்தொழிலாளர்களிடமிருந்து தலைக்கு 6 பென்னி அபராதமும், 2 ஷில்லிங் 6 பென்னி வழக்குச் செலவும் பிடுங்கப்பட்டது. நீதிமன்றத்திலிருந்து ஹார்ரூப்பைப் பின்தொடர்ந்து சென்ற மக்கள் கூட்டம் அவரை கேலி செய்து கெக்கலித்தது. வேலை செய்த பொருளின் குறைபாடுகளைக் காட்டி கூலியில் பிடித்தம் செய்து தொழிலாளர்களைத் தண்டிப்பது ஆலையதிபர்களுக்கு மிகப் பிடித்தமான வாடிக்கைச் செயல். இந்த நடைமுறை ஆங்கிலேய மண்பாண்டத் தொழில் வட்டங்களில் 1866இல் பொது வேலைநிறுத்தம் நடப்பதற்கு வழிசெய்தது. தொழிலாளி கூலியேதும் பெறாதது மட்டுமல்லாமல், அவரது உழைப்பின் மூலமாகவும் தண்டனை விதிமுறைகளின் மூலமாகவும் அவரது மதிப்பிற்குரிய அதிபரின் கடனாளியாகவும் மாறுகிற உதாரணங்களைக் குழந்தையுழைப்பு ஆணையத்தின் அறிக்கைகள் (1863-1866) தருகின்றன. சமீபத்தியப் பருத்தி நெருக்கடியும், கூலியில் பிடித்தம் செய்வதில் தொழிற்சாலை அதிபதிகள் எவ்வளவு சாமர்த்தியசாலிகள் என்பதை நிதர்சனமாக்கும் தெளிவான எடுத்துக்காட்டுகளை வழங்கியது. தொழிற்சாலை ஆய்வாளர் திரு ஆர். பேக்கர் கூறுகிறார்: ''வாட்டி வதைக்கிற இந்தக் காலத்தில், ஒரு பஞ்சாலை அதிபர் தம்மிடம் வேலை பார்க்கிற இளம் வயதுத் தொழிலாளர்கள் சிலரது கூலியில் மருத்துவர் சான்றிதழுக்காக தலா 10 பென்னி பிடித்தம் செய்தார் (இச்சான்றிதழுக்காக அவருக்காகும் செலவு 6 பென்னிதான்)....சட்டத்தின் படி 3 பென்னி பிடித்தம்

தொழில் துறைச் சமரில் கொல்லப்பட்டோர், காயமடைந்தோர் பட்டியலை பருவ கால முறைப்பாட்டுடன் இவ்வியந்திர சாதனங்கள் வெளியிடுகின்றன — செயற்கையாக வெப்ப நிலையை உயர்த்துவதாலும், தூசி மண்டிய காற்றாலும், செவிப்பறை கிழியும்படியான ஒலியாலும் சகல புலனுறுப்புகளுமே கேடுறுகின்றன.[590] சமுதாயப்

---

செய்வதற்கே அவருக்கு அனுமதியுண்டு; மாமூல் வழக்கப்படி பிடித்தமே செய்யக் கூடாது; இதன் நிமித்தம் அந்த ஆலையதிபர் மீது வழக்கு தொடருமாறு நானே அண்மையில் உத்தரவிட நேர்ந்தது....சட்டமில்லாமலே சாதிக்கும் பொருட்டு, ஆனால் அதே குறிக்கோளை அடைவதற்காக, தம்மிடம் வேலை செய்யும் ஏழைக் குழந்தைகள் பஞ்சு நூற்புக்குப் பொருத்தமும் தகுதியுமுள்ளவர்கள் என்று மருத்துவரால் அறிவிக்கப்பட்டதுமே, அத்தொழிலின் கலையையும் மருமத்தையும் கற்றுக் கொள்வதற்குரிய கட்டணமாக அக்குழந்தைகளுக்குத் தலைக்கு ஒரு ஷில்லிங் விதிக்கிற இன்னொருவர் பற்றி என்னிடம் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே வேலைநிறுத்தங்கள் போன்ற அசாதாரண வெளிப்பாடுகளுக்கு உள்ளோட்டமான காரணங்கள் இருக்கலாம்; இவ்வெளிப்பாடுகள் எங்கெல்லாம் தோன்றுகின்றனவோ அங்கெல்லாம் இதுவே நிலைமை என்பது மட்டுமல்லாமல், குறிப்பாக இது போன்ற நேரங்களிலும் இதுவே உண்மையாகும்; இவ்வெளிப்பாடுகள் விளக்கப்படவில்லையானால், பொது மக்களுக்கு விளங்காது போகின்றன.'' 1863 ஜூனில் டார்வெனில் நடந்த விசைத்தறி நெசவாளர்களின் வேலைநிறுத்தத்தையே இங்கு அவர் குறிப்பிடுகிறார். (''1863 ஏப்ரல் 30க்கான தொழிற்சாலை ஆய்வாளர் அறிக்கைகள்,'' பக்கம் 50-51.) இவ்வறிக்கைகள் எப்போதுமே அவற்றின் அதிகாரபூர்வத் தேதிகளுக்கும் அப்பால் விவரமளிக்கின்றன.

[590] தொழிற்சாலைச் சட்டங்கள் ஆபத்தான இயந்திர சாதனத்திடமிருந்து அளித்த பாதுகாப்பு நலம் பயத்துள்ளது. ''ஆனால் இருபது ஆண்டுகள் முன்பு இருந்திராத இதர வழிகளிலும்...விபத்துகள் நேரிடுகின்றன. முக்கியமாக இயந்திர சாதனத்தின் அதிகரித்த வேகத்தைக் குறிப்பிட வேண்டும். சக்கரங்களும், உருளைகளும், கதிர்களும், ஊடுநூல் ஓடங்களும் இப்போது அதிகரித்த, அதிகரிக்கிற விரைவுடன் செலுத்தப்படுகின்றன; அறுந்த இழையை எடுப்பதற்கு விரல்கள் முன்னிலும் துரிதமாகவும் சாதுரியமாகவும் இயங்க வேண்டும்; ஏனென்றால், தயங்கித் தயங்கியோ, கவனமின்றியோ விரல்கள் இயங்கினால் அதோகதிதான்....தொழிலாளர்கள் தமது வேலையைத் துரிதமாகச் செய்து முடிப்பதற்குக் காட்டுகிற ஆர்வத்துடிப்பால் ஏராளமான விபத்துகள் நேரிடுகின்றன. இயந்திர சாதனம் இயக்கத்திலிருப்பது, அதாவது நூலையும் பிற பண்டங்களையும் உற்பத்தி செய்து கொண்டிருப்பது தொழிலதிபர்களுக்கு மிகவும் முக்கியமானது என்பதை நினைவில் இருத்த வேண்டும். ஒவ்வொரு நிமிட நிறுத்தமும் விசை இழப்பு மட்டுமன்று, உற்பத்தி இழப்புமாகும். செய்து முடிக்கப்படும் வேலையின் அளவில் அக்கறை கொண்டுள்ள மேற்பார்வையாளர்கள், இயந்திர சாதனத்தை இயக்கிய வண்ணமே இருக்குமாறு தொழிலாளர்களை வற்புறுத்துகின்றனர்; தொழிலாளர்களில், எடை அல்லது உருப்படிக்கேற்ப ஊதியம் பெறுவோருக்கும், இயந்திர சாதனம் இயக்கத்திலேயே இருக்க வேண்டுமென்பது அதே அளவுக்கு முக்கியமானது. ஆதலால் இயந்திர சாதனம் இயக்கத்திலிருக்கையில் சுத்தம் செய்யப்படுவது பல தொழிற்சாலைகளில், அல்ல, பெரும்பாலான தொழிற்சாலைகளில் தடை செய்யப்பட்டிருந்த போதிலும், அனைத்திலும் இல்லாவிட்டாலும் பெரும்பாலானவற்றில் தொழிலாளர்கள் — ஆட்சேபம் இல்லாமலே — பொறிச் சட்டங்கள் இயக்கத்திலிருக்கையில் கழிவைப் பொறுக்குவதும், உருளைகள், சக்கரங்கள் போன்றவற்றைத் துடைப்பதும் எப்போதும் வாடிக்கையாக உள்ளது. இவ்வாறு இந்தக் காரணத்தால் மட்டும் ஆறு மாத காலத்தில் 906 விபத்துகள் நிகழ்ந்துள்ளன....சுத்தப்படுத்தல் கணிசமான அளவுக்குத் தொடர்ச்சியாக நாள்தோறும் நடந்து கொண்டிருந்தாலும், இயந்திர சாதனத்தை முழுமையாகச் சுத்தம் செய்வதற்குரிய நாளாக ஒதுக்கப்படுவது பொதுவாக சனிக்கிழமைதான். இதில் கணிசமான பகுதி இயந்திர சாதனம் இயக்கத்திலிருக்கையில் செய்யப்படுகிறது.'' சுத்தம் செய்வதற்கு ஊதியமளிக்கப்படுவதில்லை

பொருளுற்பத்திச் சாதனங்களின் சிக்கனமான பயன்பாடு ஆலைத் தொழில் என்னும் மூட்ட அறையில் முற்றிக் கனிய வைக்கப் படுகிறது. இந்தச் சிக்கனத்தை மூலதனத்தின் கரம் திட்டப்படி நிகழ்த்தப்படும் கொள்ளையாக மாற்றுகிறது; வேலையின் போது தொழிலாளியின் உயிருக்கு அவசியமானவையெல்லாம், இடம், ஒளி, காற்று ஆகியவையெல்லாம், உற்பத்தி நிகழ்முறையின் ஆபத்தான, ஆரோக்கியக் கேடான விளைவுகளுக்கெதிராக அவரது சரீரத்துக்குள்ள பாதுகாப்புகள் எல்லாம் சூறையாடப்படுகின்றன. தொழிலாளியின் வசதிக்கான பொறியமைவுகளெல்லாம் சூறை யாடப்படுவதைக் கூறவே வேண்டாம்.[591] தொழிற்சாலைகளைக் ''கடுமை தணிந்த சிறைகள்'' என்று ஃபூரியே அழைப்பது தவறா?[592]

---

என்பதால், தொழிலாளர்கள் முடிந்த வரை வேகமாக அதை செய்து முடிக்க முனை கின்றனர். எனவேதான், ''வெள்ளியிலும், குறிப்பாக சனியிலும் நேரிடும் விபத்துகளின் எண்ணிக்கை வேறு எந்த நாளிலும் நேரிடுவதை விட மிகவும் அதிகம். வெள்ளிக் கிழமையில் வாரத்தின் முதல் நான்கு நாட்களுக்குரிய சராசரிக்கும் அதிகமான கூடுதல் கிட்டத்தட்ட 12 சதவீதம்; சனிக்கிழமையில், அதற்கு முந்தைய ஐந்து நாட்களுக்குரிய சராசரிக்கும் அதிகமான கூடுதல் 25 சதவீதம்; அல்லது சனிக்கிழமைக்கான வேலை-மணிகளின் எண்ணிக்கையைக் கணக்கிலெடுத்துக் கொள்வோமானால் — இதர நாட்களின் 10½ மணிகளுடன் ஒப்புநோக்க, சனிக்கிழமையின் 7½ மணிகள் — அந்த ஒரு நாளில் ஏனைய ஐந்து நாட்களுக்குரிய சராசரிக்கும் அதிகமான கூடுதல் 65 சதவீதம்.'' (''1866 அக்டோபர் 31க்கான தொழிற்சாலை ஆய்வாளர் அறிக்கைகள்,'' பக்கம் 9,15,16,17.)

591 மூன்றாம் பாகத்தின் முதல் பகுதியில் ஆபத்தான இயந்திர சாதனத்திடமிருந்து ஆட்களுக்குக் காப்பளிக்கிற தொழிற்சாலைச் சட்டங்களின் சரத்துகளை எதிர்த்து ஆங்கிலேயத் தொழிலதிபர்கள் நடத்திய சமீப கால இயக்கத்தை விவரிப்பேன். லியோனார்டு ஹார்னரின் அதிகாரபூர்வ அறிக்கையிலிருந்து இந்த ஒரு மேற்கோளை மட்டும் இங்கு தருகிறேன். ''விபத்துகளில் சிலவற்றைப் பற்றி, மன்னிக்க முடியாத அலட்சியத்துடன் ஆலையதிபர்கள் சிலர் பேசுவதை, உதாரணமாக விரல் ஒன்றை இழப்பது அற்ப சங்கதி என்று பேசுவதைக் கேட்டிருக்கிறேன். ஆனால், தொழிலாளிக்கு விரலை இழப்பது மிகக் கடுமையான இழப்பாகும். அந்த அளவுக்கு அவரது வாழ்க்கை யும், வருங்கால வாய்ப்புகளும் அவரது விரல்களைப் பொறுத்தவை. இப்படிப்பட்ட அக்கறையில்லாத பேச்சுகள் காதில் விழும்போதெல்லாம் வழக்கமாகவே இந்த கேள்வியைக் கேட்பேன்: உங்களுக்குக் கூடுதலான ஒரு தொழிலாளி தேவைப்பட்டு, இருவர் விண்ணப்பித்து, இருவருமே மற்றபடி சமமான தகுதி படைத்தோராய் இருந்து, ஒருவர் கட்டை விரலையோ ஆள்காட்டி விரலையோ இழந்திருப்பதாக வைத்துக் கொண்டால், இவர்களில் யாருக்கு வேலை கொடுப்பீர்கள்? தயக்கமின்றி வந்தது பதில்....'' தொழிலதிபர்கள் ''போலிப் பரோபகாரச் சட்டமெனக் காட்டப்பட்டதாகத் தாங்கள் கேள்விப்பட்டுள்ள இந்தச் சட்டத்துக்கெதிராக தவறுதலான காழ்ப்புகளைக்'' கொண் டுள்ளனர். (''1855 அக்டோபர் 31க்கான தொழிற்சாலை ஆய்வாளர் அறிக்கைகள்.'') இந்தத் தொழிலதிபர்கள் கெட்டிக்காரர்கள்; அடிமையுடைமையாளர்களின் கலகத்துக்கு ஆதரவாக அவர்கள் குதூகலித்ததற்குக் காரணமில்லாமலில்லை.

592 வேலை-மணிகளுக்குக் கட்டாய வரம்பு, மற்றும் இதர விதிமுறைகளுடன் கூடிய தொழிற்சாலைச் சட்டங்களுக்கு மிக நீண்ட காலம் உட்பட்டிருந்த தொழிற்சாலைகளில் நிலவிய பழைய கேடுகளில் பல மறைந்து போய் விட்டன. இயந்திர சாதன மேம் பாட்டினாலேயே குறிப்பிட்ட அளவுக்கு ''கட்டட நிர்மாண மேம்பாடும்'' அவசிய மாகிறது; இது தொழிலாளர்களுக்கு அனுகூலமானது. (பார்க்கவும்: ''1863 அக்டோபர் 31க்கான தொழிற்சாலை ஆய்வாளர் அறிக்கைகள்,'' பக்கம் 109.)

## பிரிவு 5. — தொழிலாளிக்கும் இயந்திரத்துக்கும் இடையிலான போர்

முதலாளிக்கும் கூலித் தொழிலாளிக்கும் இடையிலான போராட்டம் மூலதனத்தின் பிறப்பிலிருந்தே நடப்பதாகும். பட்டறைத் தொழிற் காலம் முழுவதிலும் அது நடந்த வண்ணமிருந்தது.[593] ஆனால் இயந்திர சாதனம் புகுத்தப்பட்ட பின்னர்தான், மூலதனத்தின் பொருளாயத வடிவமாகிய உழைப்புச் சாதனத்துக்கெதிராகவே தொழிலாளி போராடினார். உற்பத்திச் சாதனங்களின் இந்தக் குறிப்பிட்ட வடிவமே முதலாளித்துவப் பொருளுற்பத்தி முறையின் பொருளாயத அடிப்படையாக உள்ளதென்ற விதத்தில் அதற்கெதிராக அவர் கிளர்ந்தெழுகிறார்.

17ஆம் நூற்றாண்டில், ஜெர்மனியில் Bandmuhle, Schnurmuhle, Muhlenstuhl என்று அழைக்கப்பட்ட—ரிப்பன்களையும், ஓர ஒப்பனைகளையும் நெய்வதற்கான இயந்திரமாகிய—ரிப்பன் தறிக்கு எதிரான தொழிலாளர் கிளர்ச்சிகளை அநேகமாய் ஐரோப்பா முழுவதுமே கண்டது. இந்த இயந்திரங்கள் ஜெர்மனியில் கண்டு பிடிக்கப்பட்டவை. 1636இல் வெனிசில் வெளியான, ஆனால் 1629இலேயே எழுதப்பட்டு விட்ட ஒரு நூலில் பாதிரியார் லான்செலோட்டி பின்வருமாறு கூறுகிறார்: ''டான்சிக்கைச் சேர்ந்த அந்தோனி முல்லர், சுமார் 50 ஆண்டுகள் முன்னர், அந்த நகரத்தில், ஒரே நேரத்தில் 4 முதல் 6 உருப்படிகளை நெய்கிற சாதுரியமான இயந்திரமொன்றைப் பார்த்தார். ஆனால், இந்தக் கண்டுபிடிப்பு பெரும் தொகையிலான தொழிலாளர்களைத் தெருவில் நிறுத்தக் கூடும் என்று அச்சப்பட்ட நகர மேயர், அதைக் கண்டுபிடித்தவரை இரகசியமாகக் கழுத்தை நெரித்து அல்லது நீரினுள் அமிழ்த்தி சாகடிக்க ஏற்பாடு செய்தார். லேய்டனில் இந்த இயந்திரம் 1629 வரை பயன்படுத்தப்படவில்லை; அங்கே ரிப்பன் நெசவாளர்களின் கலகம் நீண்ட காலத்திற்குத் தொடர்ந்ததால் இறுதியில் நகராட்சி மன்றம் அதனைத் தடை செய்ய வேண்டியதாயிற்று. பக்ஸ்ஹார்ன் (Institutiones Politicae, 1663), இந்த

---

[593] ஏனையவற்றோடு கூட பார்க்கவும்: ஜான் ஹௌப்டன்: ''மேம்பட்ட வேளாண்மையும் தொழிலும்.'' லண்டன், 1727. ''கிழக்கிந்திய வர்த்தகத்தால் வரும் அனுகூலங்கள், 1720.'' ஜான் பெல்லர்ஸ், முன் வந்தது. ''வருந்தத்தக்க விதத்தில், தொழிலதிபர்களும் அவர்களது தொழிலாளர்களும் ஒருவரோடொருவர் ஓயாத போரில் ஈடுபட்டுள்ளனர். அதிபர்களின் மாறாத குறிக்கோள் தமது வேலையை முடிந்த வரை மலிவாகச் செய்ய வைப்பதாகும். இந்த நோக்கத்துக்காக சகல உபாயங்களையும் அவர்கள் கையாளத் தவறுவதில்லை; தொழிலாளர்களும் அதே போல் தவறாமல் இன்னும் உயர்படியான கோரிக்கைகளுக்கு இணங்குமாறு அதிபர்களை நெருக்குவதற்கு ஒவ்வொரு சந்தர்ப்பத்தையும் பயன்படுத்திக் கொள்கின்றனர்.'' (''பலசரக்குகளின் இப்போதைய உயர்விலைக்கான காரணங்கள் பற்றிய ஆய்வு,'' பக்கம் 61-62. இந்நூலின் ஆசிரியர், எப்போதும் தொழிலாளர் பக்கமிருக்கும் மறைதிரு நதேனியல் ஃபார்ஸ்டர்.)

இயந்திரம் லேய்டனில் புகுத்தப்பட்டதைக் குறிப்பிட்டுச் சொல்கிறார்: "சுமார் இருபதாண்டுக்கு முன்னர் சிலர் ஒரு நெசவுக் கருவியைக் கண்டுபிடித்தனர். பலரும் சேர்ந்து நெய்வதைக் காட்டிலும், ஒரே ஒருவர் இக்கருவியைக் கொண்டு அதே காலத்தில் அதிகமான துணியை மேலும் சுலபமாக நெய்ய முடிந்தது. இதன் விளைவாய் நெசவாளர்களிடமிருந்து புகார்கள் எழுந்தன. கலவரங்கள் மூண்டன. இறுதியில் நகராட்சி மன்றம் இக்கருவியின் உபயோகத்துக்குத் தடை விதித்தது." ஹாலந்து நாடாளுமன்றம் 1632,1639 முதலான ஆண்டுகளில் இத்தறியை அநேகமாகத் தடை செய்யும் படியான பல்வேறு ஆணைகளையும் பிறப்பித்த பின்னர், கடைசியாக 1661 டிசம்பர் 15 ஆணையின் மூலம் குறிப்பிட்ட சில நிலைமைகளில் அது பயன்படுத்தப்படுவதை அனுமதித்தது. இங்கிலாந்தில் அது புகுத்தப்பட்டதானது தொழிலாளரிடையே கொந்தளிப்புகளுக்கு காரணமாகிக் கொண்டிருந்த அதே நேரத்தில், 1676இல் கொலோனிலும் அது தடை செய்யப்பட்டது. 1685 பிப்ரவரி 19 தேதிய மாமன்னர் உத்தரவின் மூலம் ஜெர்மனி முழுவதிலும் அதன் உபயோகம் தடை செய்யப்பட்டது. ஹாம்பார்க்கில் செனட் உத்தரவுப்படி மக்கள் முன்னிலையில் அது எரித்தழிக்கப்பட்டது. பேரரசர் ஆறாம் சார்லஸ் 1719 பிப்ரவரி 9ஆம் நாள் 1685ஆம் வருட உத்தரவை மீண்டும் பிறப்பித்தார். 1765 வரை அதன் உபயோகம் சாக்ஸனித் தொகுதியில் வெளிப்படையாக அனுமதிக்கப்படவில்லை. ஐரோப்பாவின் அஸ்திவாரங்களையே ஆட்டங்காணச் செய்த இந்த இயந்திரமானது, உண்மையில், மியூல், விசைத்தறி ஆகியவற்றுக்கும் 18ஆம் நூற்றாண்டின் தொழிற் புரட்சிக்கும் முன்னோடியாயிற்று. அனுபவமே இல்லாத சிறுவன் ஒருவன் ஒரு தடியை முன்னும் பின்னுமாக அசைப்பதன் மூலம் ஓடங்கள் அனைத்துடனும் தறி முழுவதையுமே இயக்குவதற்கு அது உதவியது; மேலும் மேம்படுத்தப்பட்ட நிலையில், அது ஒரே நேரத்தில் 40 முதல் 50 உருப்படிகளை உற்பத்தி செய்தது.

1630 வாக்கில் டச்சுக்காரர் ஒருவர் லண்டன் அருகே நிறுவிய காற்றுவிசை அறுவை ஆலை ஒன்று மக்களின் அத்துமீறிய அடாச் செயல்களுக்குப் பலியாயிற்று. 18ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் கூட, நீர்விசை அறுவை ஆலைகள், பாராளுமன்றத்தின் ஆதரவு இருந்த போதிலும், பெருஞ்சிரமத்துடன்தான் மக்களின் எதிர்ப்பைச் சமாளித்தன. 1758இல் எவெரட், நீர்விசையால் இயங்கும் கம்பளி வெட்டும் இயந்திரத்தை முதன் முதல் நிறுவியதுமே, அதனால் வேலையிலிருந்து துரத்தப்பட்ட 100,000 மக்கள் அதனைத் தீயிட்டுக் கொளுத்தினர். முன்பு கம்பளியை சிக்கெடுத்துக் காலந்தள்ளி வந்த ஐம்பதாயிரம் தொழிலாளர்கள் ஆர்க்ரைட்டின் கோதல் ஆலைகளுக்கும் சிக்குவாரி எஞ்சின்களுக்கும் எதிராகப்

பாராளுமன்றத்துக்கு மனுச் செய்தனர். இந்நூற்றாண்டின் முதல் 15 ஆண்டுகளில், பிரதானமாக விசைத்தறியின் உபயோகத்தைத் தொடர்ந்து, ஆங்கிலேய ஆலைத் தொழில் வட்டங்களில் இயந்திரங்கள் பெரிய அளவில் அழிக்கப்பட்டன. இது லுட்டைட் இயக்கமென [Luddite movement] பெயர் பெற்றது. ஜகோபின்-எதிர்ப்பு அரசாங்கங்கள் — சிட்மவுத், கேஸில்ரே போன்றோரின் அரசாங்கங்கள் — இவ்வியக்கத்தைக் காரணமாய்க் காட்டி மிகவும் பிற்போக்கான பலாத்கார நடவடிக்கைகளை மேற்கொண்டன. இயந்திர சாதனத்தையும், அதனை மூலதனம் கையாள்வதையும் தொழிலாளர்கள் வேறுபடுத்திப் பார்ப்பதற்கும், தமது தாக்குதல்களைப் பொருளாயத உற்பத்திக் கருவிகளுக்கு எதிராக அல்லாமல் அக்கருவிகள் பயன்படுத்தப்படும் முறைக்கெதிராகத் தொடுப்பதற்கும் கற்றுக் கொள்வதற்கு காலமும் அனுபவமும் தேவைப்பட்டன.[594]

பட்டறைத் தொழிலில் கூலி குறித்து எழும் போராட்டங்கள் பட்டறைத் தொழிலை நிராகரிப்பவை அல்ல. அப்படி ஒன்று இருப்பதை ஒழிக்கும் நோக்கமுடையவை அல்ல. புதிய பட்டறைத் தொழில்களை நிறுவுவதற்கு எதிர்ப்பு கிளம்புவது கைவினைச் சங்கங்களிடமிருந்தும், தனிச் சலுகை பெற்ற நகரங்களிடமிருந்தும் தான்; உழைக்கும் மக்களிடமிருந்தல்ல. எனவே, பட்டறைத் தொழிற் காலத்தைச் சேர்ந்த எழுத்தாளர்கள் உழைப்புப் பிரிவினையை முக்கியமாக உழைப்பாளர் போதாக்குறையைப் போக்குவதற்கான வழியாகக் கருதுகிறார்களே தவிர, உள்ளபடியே வேலையிலிருப்பவர்களை நீக்கம் செய்கிற வழியாகக் கருதவில்லை. இந்த வேறுபாடு கூறாமலே விளங்குவதாகும். இங்கிலாந்தில் இப்போது 500,000 மக்கள் மியூல்களைக் கொண்டு நூற்கிற பஞ்சைப் பழைய இராட்டையைக் கொண்டு நூற்பதற்கு 100 மிலியன் மக்கள் தேவைப்படுவார்கள் என்று சொல்லப்படுமேயானால், ஒருபோதும் இருந்திராத அந்த மிலியன் கணக்கான மக்களின் இடத்தை மியூல்கள் எடுத்துக் கொண்டன என்பதல்ல, நூற்பு இயந்திர சாதனத்தின் இடத்தை நிரப்புவதற்குப் பல மிலியன் மக்கள் தேவைப்படுவார்கள் என்பதே இதன் அர்த்தம். இதற்கு மாறாக, இங்கிலாந்தில் விசைத்தறி 800,000 நெசவாளர்களைத் தெருவில் நிறுத்தியது என்று நாம் சொல்லும் போது, இப்போதிருக்கிற இயந்திர சாதனத்துக்குப் பதிலாக இத்தனைத் தொழிலாளர்கள் தேவைப்படுவார்கள் என்பதல்ல, உள்ளபடியே இத்தறிகள் ஏராளமான நெசவாளர்களை நீக்கின அல்லது வெளியேற்றின என்பதே

594 பழைய முறையிலான பட்டறைத் தொழில்களில் இயந்திர சாதனத்துக்கு எதிரான உழைக்கும் மக்களின் கலகங்கள் இன்றும் கூட எப்போதாவது வெறித்தனம் கொண்டவையாக மாறுவதுண்டு. 1865இல் ஷெஃபீல்டு அரம் தீட்டுவோர் செய்த கலகம் இப்படிப்பட்டதே.

இதன் அர்த்தம், பட்டறைத் தொழிற் காலத்திலும் கைத்தொழில் உழைப்பே—உழைப்புப் பிரிவினையால் அதில் மாற்றம் ஏற்பட்டிருந்த போதிலும்—அடிப்படையாய் இருந்தது. மத்திய காலத்திலிருந்து வந்த நகரத் தொழிலாளர்கள் ஒப்பளவில் சிறு தொகையினராய் இருந்ததால் புதிய குடியேற்றச் சந்தைகளின் [colonial markets] வேண்டல்களை நிறைவு செய்ய முடியவில்லை; முறையான பட்டறைத் தொழில்கள் பிரபுத்துவ அமைப்பின் குலைவால் நிலத்திலிருந்து விரட்டப்பட்ட கிராமப்புற மக்களுக்குப் புதிய உற்பத்திக் களங்களாயின. எனவே, அந்த நேரத்தில், பட்டறைகளிலான உழைப்புப் பிரிவினையும் கூட்டு-வேலையும் உழைப்போரின் உற்பத்தித் திறனை உயர்த்துகின்றன என்ற வகையில் அனுகூலமே மேலோங்கி இருப்பதாகக் கருதப்பட்டது.[595] நவீனத் தொழில் துறைக்கு நெடுங்காலம் முன்னதாகவே, கூட்டு-வேலையும், ஒரு சிலரது கையில் ஒருங்கிணைந்த உழைப்புக் கருவிகளின் குவிப்பும்—இந்த வழிமுறைகள் பயிர்த் தொழிலில் பிரயோகிக்கப்பட்ட ஏராளமான நாடுகளில்—உற்பத்தி முறைகளிலும், ஆதலால் கிராமப்புற மக்களின் வாழ்க்கை நிலைமைகளிலும், வேலை வாய்ப்புச் சாதனங்களிலும் திடீரென்ற பலவந்தமான பெரும் புரட்சிகளைத் தோற்றுவித்தன. ஆனால், முதலில் இந்த மோதல் மூலதனத்துக்கும் கூலியுழைப்புக்கும் இடையில் நடப்பதை விட அதிகமாகப் பெரு நிலவுடைமையாளர்களுக்கும் சிறு நிலவுடைமையாளர்களுக்கும் இடையில் நடக்கிறது; மறு புறம், உழைப்பாளிகள் உழைப்புக் கருவிகளாலும், ஆடுகள், குதிரைகள் முதலானவற்றாலும் வெளியேற்றப்படும் போது, இந்நிலையில் முதலாவதாகத் தொழிற் புரட்சிக்குரிய பீடிகையென்ற முறையில் வன்முறை நேரடியாகக்

---

595 *சர் ஜேம்ஸ் ஸ்டுவர்ட்டும் இயந்திர சாதனத்தை இதே நோக்கில்தான் கருதுகிறார்: "முன்னைக் காட்டிலும் சற்றும் கூடுதலான உழைப்போருக்கு உணவளிக்க வேண்டிய கட்டாயம் இல்லாமலே உழைப்போரின் தொகையைக் காரியாம்சத்தில் உயரச் செய்வதற்கான வழியாகவே இயந்திரங்களைக் கருதுகிறேன்....இயந்திரம் ஏற்படுத்தும் விளைவுக்கும், புதிய ஆட்கள் குடியேறுவதால் ஏற்படும் விளைவுக்கும் வித்தியாசம் ஏது?" (பிரெஞ்சு மொழிபெயர்ப்பு, முதல் பாகம், புத்தகம் I., அத்தியாயம் XIX.) பெட்டி இன்னும் கூட வெகுளித்தனமாய்ப் பேசுகிறார்; அது "பலதார மணத்திற்கு" பதிலியாய் அமைகிறது என்கிறார். மேற்சொன்ன கண்ணோட்டம், அமெரிக்க ஐக்கிய அரசின் சில பகுதிகளுக்கு வேண்டுமானால் பொருந்தலாம். மறு புறம், "தனியாளின் உழைப்பைக் குறுக்குவதற்கு இயந்திர சாதனத்தை வெற்றிகரமாக ஈடுபடுத்த முடியாது அரிதே; அதன் பிரயோகத்தின் மூலம் மிச்சப்படுத்த முடிவதை விட அதிக காலம் அதன் நிர்மாணத்தில் இழக்கப்படும். அது மெய்யாகவே பயன்மிக்கதாய் இருப்பது, பெரும் மக்கள் திரள்களின் மீது செயல்படும் போதே, ஒரே ஒரு இயந்திரம் ஆயிரக்கணக்கானோரின் வேலைக்கு உதவ முடியும் போதே. வேலையற்றிருப்போர் அதிகமாயுள்ள ஜனநெருக்கமிக்க நாடுகளில்தான் இவ்வாறு அது மிதமிஞ்சியுள்ளது....அது பயன்பாட்டுக்குக் கொண்டுவரப்படுவது ஆட்கள் போதாமையால் அல்ல, அவர்களைப் பெருந்திரளாக வேலையில் ஈடுபடச் செய்வது எளிதாவதாலேயே." (பிர்சி ராவென்ஸ்டோன்: "நிதி ஏற்பாடு மற்றும் அதன் விளைவுகள் 'பற்றிய சிந்தனைகள்." லண்டன், 1824, பக்கம் 45.)*

கையாளப்படுகிறது. முதலில் உழைப்பாளிகள் நிலத்திலிருந்து விரட்டப்படுகின்றனர்; அடுத்து ஆடுகள் வருகின்றன. இங்கிலாந்தில் நடத்தப்பட்டது போன்ற பெருவீத நிலப்பறிப்பானது பெருவீதப் பயிர்த் தொழிலுக்குக் களம் அமைப்பதற்கான முதற்படியாகும்.[596] எனவேதான் பயிர்த் தொழிலில் ஏற்படும் இந்த மாற்றம் ஆரம்பத்தில் ஓர் அரசியல் புரட்சியின் தோற்றம் கொண்டதாகிறது.

உழைப்புக் கருவி இயந்திர வடிவம் பெற்றதும், உடனடியாகவே அது தொழிலாளிக்குப் போட்டியாளனாகிறது.[597] இயந்திர சாதனத்தின் விளைவாய் ஏராளமான தொழிலாளர்கள் வாழ்வுச் சாதனங்களைப் பறிகொடுக்க நேரிடுகிறது; இயந்திர சாதனத்தைக் கொண்டு மூலதனம் அடைகிற தற்பெருக்கம் இப்படிப் பறிகொடுக்கும் தொழிலாளர்களின் தொகைக்கு நேர் விகிதத்தில் நடைபெறுகிறது. தொழிலாளி தன் உழைப்புச் சக்தியை சரக்காக விற்பதுதான் முதலாளித்துவப் பொருளுற்பத்தி முறை முழுவதற்கும் அடிப்படை. உழைப்புப் பிரிவினையானது இந்த உழைப்புச் சக்தியைக் குறிப்பிட்ட ஒரு கருவியைக் கையாள்வதற்கு மட்டுமேயான தேர்ச்சியாகக் குறுக்கி அதைத் தனித்திறனுடையதாக்குகிறது. இந்தக் கருவியைக் கையாள்வது இயந்திரத்தின் வேலையாகியதுமே தொழிலாளியின் உழைப்புச் சக்தியினது பயன்-மதிப்போடு பரிவர்த்தனை-மதிப்பும் மறைந்து போகிறது; சட்டம் போடுவதன் மூலம் செலாவணியற்றதாக்கப்படும் காகிதப் பணத்தைப் போலவே, தொழிலாளியும் விலை போகாதவராகிறார். இயந்திர சாதனத்தால் இவ்வாறு தேவைக்கதிகமானதாக்கப்படுகிற, அதாவது மூலதனத்தின் தற்பெருக்கத்துக்கு இனியும் உடனடி அவசியம் இல்லாததாக்கப்படுகிற தொழிலாளி வர்க்கப் பகுதி பழைய கைத்தொழில்களும் பட்டறைத் தொழில்களும் இயந்திர சாதனத்துடன் நடத்தும் அசமத்துவப் போட்டியில் ஒழிந்து போகிறது; அல்லது எளிதில் நுழையக் கூடிய தொழிற் கிளைகள் யாவற்றிலும் பெருக்கெடுத்து, உழைப்புச் சந்தையை மூழ்கடித்து, உழைப்புச் சக்தியின் விலையை அதன் மதிப்புக்கும் கீழானதாக வீழ்த்துகிறது. முதலாவதாக தொழிலாளர்களின் அவதிகள் தற்காலிகமானவையே (''தற்காலிகச் சங்கடம்'') என்றும், இரண்டாவதாக, சிறுகச் சிறுகவே இயந்திர சாதனம் குறிப்பிட்ட உற்பத்தித் துறை முழுவதும் ஆதிக்க நிலை

---

596 [4ஆம் ஜெர்மன் பதிப்பில் எங்கெல்ஸ் குறிப்பு.—இது ஜெர்மனிக்கும் பொருந்துகிறது. நமது நாட்டில் பெருவீதப் பயிர்த்தொழில் நிலவும் இடங்களில், எனவே குறிப்பாகக் கிழக்கில், அது சாத்தியமாகியிருப்பது பண்ணைகளிலிருந்து ஆட்களை வெளியேற்றியதன் (''Bauernlegen'') விளைவாகவே. இந்நடைமுறை 16ஆம் நூற்றாண்டிற்குப் பிறகு, குறிப்பாக 1648 முதல் வெகுவாய்ப் பரவியது.]

597 *''இயந்திர சாதனமும் உழைப்பும் இடைவிடாத போட்டியில் ஈடுபட்டுள்ளன.'' ரிக்கார்டோ, முன் வந்தது, பக்கம் 479.*

பெறுகிறது, அதனால் இயந்திர சாதனம் ஏற்படுத்தும் நாசகர விளைவு அளவிலும் கடுமையிலும் சிறுத்து விடுகிறது என்றும் உழைப்பாளி மக்களிடம் வலியுறுத்தி, பெருமளவில் ஆறுதலளிக்கப் பார்க்கின்றனர். முதலாவது ஆறுதல் இரண்டாவது ஆறுதலுக்கு வழியில்லாத படி செய்து விடுகிறது. இயந்திர சாதனம் ஒரு தொழில் துறையைச் சிறுகச் சிறுகப் பற்றிக் கொள்ளும் போது, அதனோடு போட்டியிடுகிற தொழிலாளர்கள் மத்தியில் நீடித்து நிலவக் கூடிய கொடுந்துயரை ஏற்படுத்துகிறது. மாற்றம் துரிதமாக நடைபெறுமிடத்து, விளைவு கடுமையானதாகவும், பெருந்திரளான மக்களைப் பீடிப்பதாகவும் உள்ளது. ஆங்கிலேயக் கைத்தறி நெசவாளர்கள் சிறுகச் சிறுக நசித்துப் போனதை விட — பல பத்தாண்டுகள் நீடித்து நடைபெற்று, இறுதியில் 1838இல் முடிவுற்ற இந் நிகழ்வை விட — பயங்கரமான ஒன்றை வரலாறு கண்டதில்லை; பலர் பட்டினி கிடந்து மடிந்தனர். பலர் குடும்பம் முழுவதற்கும் நாளொன்றுக்குக் கிடைத்த 2½ பென்னியில் நெடுநாள் வதைந்து நசித்துப் போயினர்.[598] மறு புறம், ஆங்கிலேயப் பருத்தி இயந்திர சாதனம் இந்தியாவில் கொடிய விளைவை உண்டாக்கிற்று. கவர்னர்-ஜெனரல் 1834-35இல் அளித்த அறிக்கை வருமாறு: ''இத்துயருக்கு இணையான ஒன்றை வாணிப வரலாற்றில் காண்பது அரிது. பருத்தி நெசவாளர்களின் எலும்புகள் பொசுங்கி இந் தியச் சமவெளிகள் சுடலைக் காடுகளாகி வருகின்றன.'' சந்தேகமே இல்லை, ''இக'' லோகத்திலிருந்து ''பர'' லோகத்துக்கு அனுப்பி, இயந்திர சாதனம் அவர்களுக்கு ஏற்படுத்தியது ''தற்காலிக

---

[598] 1833ஆம் வருடத்திய வறியோர் நலச் சட்டம் நிறைவேற்றப்படுவதற்கு முன்னர், இங்கிலாந்தில் கைநெசவுக்கும் விசைநெசவுக்கும் இடையிலான போட்டி, குறைந்தபட்ச அளவையும் விட கூலி வெகுவாய்க் குறைந்தும் கூட வட்டார வறியோர் உதவியின் துணை கொண்டு தொடர்ந்து நீடித்தது. ''1827இல் மறைதிரு டர்னர் ஆலைத் தொழில் வட்டமான செஷயரில் வில்ம்ஸ்லோ வட்டார குருவாக இருந்தார். குடி வெளியேற்றக் குழுவின் கேள்விகளும் திரு டர்னரின் பதில்களும், இயந்திர சாதனத்துக்கெதிராக மனித உழைப்பின் போட்டி நீடிக்கச் செய்யப்படுவது எப்படி என்பதைக் காட்டுகின்றன. ''கேள்வி: விசைத்தறியின் உபயோகம் கைத்தறியின் உபயோகத்தை ஒழித்து விட்டதல்லவா? பதில்: சந்தேகமேயில்லை. கைத்தறி நெசவாளர்கள் கூலிக் குறைப்புக்கு உட்பட இயலாது போயிருந்தால், அது அவற்றை இன்னும் கூட அதிகமாய் ஒழித்திருக்கும். கேள்வி: ஆனால் கூலிக் குறைப்புக்கு உட்படுவதன் மூலம், அவர் தமது பராமரிப்புக்குப் போதாத கூலியை ஏற்றுக் கொண்டு, மீதிக்கு வட்டார நன்கொடையை எதிர்பார்க்கிறாரா? பதில்: ஆம், உண்மையில், கைத்தறிக்கும் விசைத் தறிக்குமிடையிலான போட்டி வறியோர் நல வரிகளைக் கொண்டு காப்பாற்றப் படுகிறது. வருந்தியுழைப்போருக்கு இவ்வாறு இயந்திர சாதனத்தின் வருகை தந்த பரிசு வக்கற்றோராகி இழிவுபடுதல் அல்லது நாட்டை விட்டு வெளியேறுதலே. மதிப்புக்கும் மரியாதைக்கும் உரியவராய், ஓரளவு சுதந்தரமான கம்மியராய் இருந்தவர், இயந்திர சாதனம் புகுத்தப்பட்டதால் தலைகுனிவுக்குரிய தருமச் சோற்றை உண்டு வாழ்கிற பிச்சைக்காரராய்த் தாழ்த்தப்படுகிறார் இதைத்தான் அவர்கள் தற்காலிகமான சங்கடம் என்கின்றனர்.'' (போட்டி, ஒத்துழைப்பு ஆகியவற்றின் ஒப்பீட்டுச் சிறப்புகள் பற்றிய பரிசுக் கட்டுரை.'' லண்டன், 1834, பக்கம் 29.)

சங்கடமே'' தவிர வேறொன்றுமில்லை. மற்றபடி, இயந்திர சாதனம் புதிய புதிய உற்பத்திக் கிளைகளைப் பற்றிப் படர்ந்த வண்ணமிருப்பதால், அதன் தற்காலிக விளைவு உண்மையில் நிரந்தர விளைவேயாகும். எனவேதான், மொத்தத்தில் முதலாளித்துவப் பொருளுற்பத்தி முறை ஒரு புறம் தொழிலாளிக்கும் மறு புறம் உழைப்புச் சாதனங்கள், உற்பத்திப் பண்டம் ஆகியவற்றுக்கும் இடையே ஏற்படுத்தும் பிளவும் பிணக்கும், இயந்திர சாதனத்தின் பயனாய் முழுப் பகைமையாக முற்றி வளர்கிறது.[599] எனவே, இயந்திர சாதனம் அரங்கேறியதும் தொழிலாளர்கள் முதன் முதலாய் உழைப்புச் சாதனங்களை எதிர்த்து மூர்க்கமாகக் கிளர்ந்தெழுகின்றனர்.

உழைப்புச் சாதனம் தொழிலாளியை வீழ்த்துகிறது. உழைப்புச் சாதனத்துக்கும் தொழிலாளிக்கும் இடையிலான இந்த நேரடிப் பகைமை, புதிதாகப் புகுத்தப்பட்ட இயந்திர சாதனம் முந்தைய காலத்திலிருந்து வரப்பெற்ற கைத்தொழில்கள் அல்லது பட்டறைத் தொழில்களுடன் போட்டியிடும் போதெல்லாம் மிக வலுவாய் வெளிப்படுகிறது. ஆனால், நவீனத் தொழில் துறையிலும் கூட இயந்திர சாதனத்தின் தொடர்ச்சியான மேம்பாடும், தானியங்கி முறையின் வளர்ச்சியும் இதையொத்த விளைவை உண்டாக்குகின்றன. ''மேம்படுத்தப்பட்ட இயந்திர சாதனத்தின் குறிக்கோள் கையுழைப்பைக் குறைப்பதாகும். மனிதப் பொறியமைவுக்குப் பதிலாக ஓர் இரும்புப் பொறியமைவின் துணை கொண்டு ஒரு நிகழ்முறை நிறைவேறுவதற்கு, அல்லது செய்பொருளுற்பத்தியில் ஒரு கண்ணி பூர்த்தியாவதற்கு வழிசெய்வதாகும்.''[600] ''இதுவரையிலும் கையினால் இயக்கப்பட்ட இயந்திர சாதனம் விசையினால் இயங்குவதற்கு ஏற்பாடு செய்வது அநேகமாய் அன்றாடம் நடைபெறும் நிகழ்ச்சியாகும்....இயந்திர சாதனத்தில் சில சில்லறை மேம்பாடுகளைச் செய்வதன் மூலம் விசையாற்றலைச் சிக்கனப்படுத்தவும், வேலையை மேம்படுத்தவும், குறிப்பிட்ட நேரத்தில்

---

599 ''நாட்டின் வருவாயை'' (அதாவது, அதே வாசகத்தில் ரிக்கார்டோ விளக்குவது போல, பொருளாதாரக் கண்ணோட்டத்தில் யாருடைய செல்வம் நாட்டின் செல்வமாக அமைகிறதோ அந்த நிலப்பிரபுகள், முதலாளிகளின் வருவாய்களை) ''அதிகமாக்கக் கூடிய அதே காரணம், அதே நேரத்தில் மக்கள்தொகையைத் தேவைக்கதிகமான தாக்கவும், தொழிலாளியின் நிலைமையைச் சீரழிக்கவும் கூடும்.'' (ரிக்கார்டோ, முன் வந்தது, பக்கம் 469.) ''உண்மையில் எந்நேரமும் இயந்திர சாதனத்திலான ஒவ்வொரு மேம்பாட்டுக்குமுள்ள நோக்கமும், போக்கும் மனித உழைப்பை முற்றிலும் நீக்கி விடுவதாகும்; அல்லது, வயது வந்த ஆடவருக்கு பதில் பெண்டிரையும் குழந்தைகளையும் உழைக்கச் செய்து, அல்லது தேர்ச்சி பெற்ற தொழிலாளர்களுக்கு பதில் தேர்ச்சியற்ற தொழிலாளர்களை உழைக்கச் செய்து உழைப்பின் விலையைக் குறைப்பதாகும்.'' (யூர், முன் வந்தது. பாகம் I. பக்கம் 35.)

600 ''1858 அக்டோபர் 31க்கான தொழிற்சாலை ஆய்வாளர் அறிக்கைகள்,'' பக்கம் 43.

இன்னும் அதிக வேலையைச் செய்து முடிக்கவும், குழந்தை, பெண் அல்லது முழு ஆளை நீக்கி விடவும் முடிகிறது; இத்தகைய சில்லறை மேம்பாடுகள் எப்போதும் நடந்த வண்ணமுள்ளன. இவை அதிக முக்கியத்துவம் வாய்ந்தவையாய் சில நேரங்களில் தோன்றா விட்டாலும் ஓரளவு முக்கிய விளைவுகளை உண்டாக்குபவை.''[601] ''விசேஷ சாமர்த்தியமும் கைத்திறனும் தேவைப்படுகிற நிகழ்முறையும் கூட பல வகையான ஒழுங்கின்மைகளுக்கு ஆட்படுகிற சாமர்த்தியத் தொழிலாளியிடமிருந்து கூடுமான அளவுக்கு சீக்கிரமே விலக்கப்பட்டு, ஒரு குழந்தையே கண்காணித்துக் கொள்ளக் கூடிய அளவுக்குத் தன்னியக்கத் தன்மை வாய்ந்த விசேஷ இயந்திர இயங்கமைப்பின் பொறுப்பில் விடப்படுகிறது.''[602] ''தேர்ச்சி பெற்ற உழைப்பு தானியங்கித் திட்டத்தில் தொடர்ச்சியாக மேலும் மேலும் நீக்கப்படுகிறது.''[603] ''ஒரு குறிப்பிட்ட பலனை உற்பத்தி செய்யும் பொருட்டு முன் போல அதே அளவு வயது வந்தோர் உழைப்பை அமர்த்துவதற்கான அவசியத்தை நீக்குவதில் மட்டுமன்றி, ஒருவித மனித உழைப்புக்குப் பதில் இன்னொரு வித மனித உழைப்பை — அதிகம் தேர்ச்சி பெற்ற உழைப்புக்குப் பதிலாகக் குறைவாகத் தேர்ச்சி பெற்ற உழைப்பை, வயது வந்தோர் உழைப்புக்குப் பதிலாகப் பாலர் உழைப்பை, ஆண் உழைப்புக்குப் பதிலாகப் பெண் உழைப்பை — ஈடுபடுத்துவதிலும் இயந்திர மேம்பாடுகள் ஏற்படுத்தும் விளைவு கூலி வீதத்தில் புதியதொரு குழப்பத்தைத் தோற்றுவிக்கிறது.''[604] ''சாதாரண மியூலுக்குப் பதிலாகத் தன்னியக்க மியூலைக் கொணர்வதன் விளைவு ஆண் நூற்பாளர்களில் பெரும் பகுதி

---

601 ''1856 அக்டோபர் 31க்கான தொழிற்சாலை ஆய்வாளர் அறிக்கைகள்,'' பக்கம் 15.

602 யூர், முன் வந்தது, பக்கம் 19. ''செங்கல் தயாரிப்பில் ஈடுபடுத்தப்படும் இயந்திர சாதனத்திற்குள்ள பெரும் அனுகூலம், முதலாளிக்கு தேர்ச்சி பெற்ற தொழிலாளர்கள் சிறிதும் தேவையில்லாமற் போவதே.'' (''குழந்தையுழைப்பு ஆணையம் ஐந்தாம் அறிக்கை,'' லண்டன், 1866, பக்கம் 130, எண் 46.) இரயில் எஞ்சின்கள் தயாரிப்பது போன்றவை தொடர்பாக, மகா வடபுல இரயில்வேயின் இயந்திரப் பிரிவுக் கண்காணிப்பாளர் திரு அ. ஸ்டர்ராக் சொல்கிறார்: அதிகச் செலவாகும் ஆங்கிலேயத் தொழிலாளர்களைப் பயன்படுத்துவது நாளுக்கு நாள் குறைந்து வருகிறது. இங்கிலாந்துப் பட்டறைகளின் உற்பத்தி, மேம்பட்ட கருவிகளின் உபயோகத்தால் அதிகமாகி வருகிறது. மேலும், இந்தக் கருவிகளுக்கு கீழ்வகை உழைப்பே போதுமானது....முன்னதாகத் தேர்ச்சி பெற்ற உழைப்பே எஞ்சின்களின் அனைத்துப் பாகங்களையும் உற்பத்தி செய்ய வேண்டியிருந்தது. இப்போது எஞ்சின்களின் பாகங்கள் தேர்ச்சி குறைந்த உழைப்பால், ஆனால் நல்ல கருவிகளைக் கொண்டு உற்பத்தி செய்யப்படுகின்றன. கருவிகள் என்று நான் சொல்வது, பொறியாளரின் இயந்திர சாதனங்கள், கடைசற் பொறிகள், இழைப்பு இயந்திரங்கள், துரப்பணங்கள் இன்ன பிறவற்றையே.'' (''இரயில்வேக்கள் பற்றிய முடியரசு ஆணையம்,'' லண்டன், 1867, சாட்சியப் பதிவுகள், எண் 17,862, 17,863.)

603 யூர், முன் வந்தது, பக்கம் 20.

604 யூர், முன் வந்தது, பக்கம் 321.

யினரை வேலையிலிருந்து வெளியேற்றி விட்டு, இளம் பிராயத்தின ரையும் குழந்தைகளையும் மட்டும் வைத்துக் கொள்வதாகும்.''[605] திரட்டப்பட்ட நடைமுறை அனுபவம், கைவசமுள்ள இயந்திர சாதனங்கள், இடையறாத தொழில் நுட்ப முன்னேற்றம் ஆகிய வற்றின் காரணத்தால் ஆலைத் தொழிலுக்குள்ள அசாதாரண விரிவுத் திறன், குறுக்கப்பட்ட வேலை-நாளினால் நெருக்கப்பட்டு அவ்வமைப்பு கண்ட பகாசுர முன்னேற்றங்களால் நமக்கு ருசுப் பிக்கப்பட்டது. ஆனால், ஆங்கிலேயப் பருத்தித் தொழிலின் உச்ச ஆண்டான 1860இல், அடுத்து வந்த 3 ஆண்டுகளில் அமெரிக்க உள்நாட்டு யுத்தத்தின் உந்துவிசையால் விரைந்தோடி வந்த இயந்திர மேம்பாடுகள் பற்றியும், அதற்கேற்ப உழைக்கும் மக்கள் பெயர்த் தெறியப்பட்டது பற்றியும் கனவிலும் கூட யாராவது நினைத்திருப் பாரா? தொழிற்சாலை ஆய்வாளர்களின் அறிக்கைகளிலிருந்து இது தொடர்பான ஓரிரு உதாரணங்களைக் குறிப்பிடுவது போது மானது. மான்செஸ்டரைச் சேர்ந்த தொழிலதிபர் ஒருவர் கூறு கிறார்: ''எங்களிடம் முன்னதாக 75 வாரும் எஞ்சின்கள் இருந்தன: இப்போது எங்களிடம் உள்ள 12 எஞ்சின்கள் அதே அளவு வேலை யைச் செய்கின்றன...நாங்கள் 14 ஆட்களைக் குறைத்துக் கொண்டு விட்டோம். கூலி தொடர்பாக வாரத்துக்கு £10 மிச்சப்படுகிறது. கழிவு தொடர்பாக மிச்சப்படுவதென மதிப்பிடப்படுவது உட்கொள்ளப் படும் பஞ்சின் அளவில் சுமார் 10% ஆகும்.'' ''மான்செஸ்டரில் இன்னொரு நேர்த்தி நூற்பு ஆலையில், அதிகரித்த வேகத்தின் மூலமும், சில தன்னியக்கச் செயல்முறைகளை மேற்கொண்டதன் மூலமும், ஆட்களின் தொகை ஒரு பிரிவில் கால்வாசியும், இன் னொரு பிரிவில் பாதிக்கதிமாகவும் குறைந்துள்ளது என்றும், இரண் டாவது சிக்கெடுப்பு இயந்திரத்தினிடத்தில் வாரும் இயந்திரத்தைப் புகுத்தியதன் மூலம், முன்னதாகச் சிக்கெடுப்பு அறையில் வேலை செய்த ஆட்களின் தொகை கணிசமாகக் குறைந்துள்ளது என்றும் என்னிடம் தெரிவித்தார்கள்.'' இன்னொரு நூற்பாலை 10% உழைப்பை மிச்சப்படுத்துவதாக மதிப்பிடப்படுகிறது. மான்செஸ் டரில் உள்ள நூற்பதிபர்களான திருவாளர்கள் கில்மர் கூறு வதாவது: ''எங்களது ஊது அறைப் பிரிவில் புதிய இயந்திர சாதனத்தால், கூலி வகையில் எங்கள் செலவும் ஆட்களின் தொகை யும் முழுதாக மூன்றிலொரு பங்கு குறைந்திருப்பதாகக் கருது கிறோம்....பஞ்சு தூக்கிச் சட்ட, இழுப்புச் சட்ட அறையில் பணச் செலவும் ஆட்களின் தொகையும் சுமார் மூன்றிலொரு பங்கு குறைந் துள்ளது. நூற்பு அறையில் செலவுகள் சுமார் மூன்றிலொரு பங்கு குறைந்துள்ளன என்றும் நாங்கள் கருதுகிறோம். இது மட்டுமன்று; புதிய இயந்திர சாதனத்தின் பிரயோகத்தால் எங்கள் நூல் மிகவும்

[605] யூர், முன் வந்தது, பக்கம் 23.

மேம்பட்டுள்ளது; எந்த அளவுக்கு என்றால், ஆலையதிபர்களிடம் இந்த நூல் செல்லும் போது, பழைய இயந்திர சாதனத்தில் உற்பத்தி யான நூலிலிருந்து செய்ததை விட அதிக அளவிலும் மலிவாகவும் அவர்கள் துணி உற்பத்தி செய்வார்கள்.''[606] திரு ரெட்கிரேவ் அதே அறிக்கையில் மேலும் குறிப்பிடுகிறார்: ''உற்பத்தி அதிகரித்த போதிலும் ஆட்களின் தொகை தொடர்ந்து குறைந்து கொண்டிருக் கிறது; கம்பளி ஆலைகளில் இக்குறைப்பு சிறிது காலம் கழித்துத் தொடங்கிய போதிலும், தொடர்ந்து நடந்து கொண்டிருக்கிறது; மகளிர் பள்ளியில் மாணவியர் தொகை பெருமளவில் வீழ்ந்திருப் பதற்கு வறுமை நிலை மட்டும் காரணமன்று, கம்பளி ஆலைகளில் ஏற்பட்ட இயந்திர சாதன மாற்றங்களைத் தொடர்ந்து 70 குறை நேரக்காரர்கள் ஆட்குறைப்பு செய்யப்பட்டதும் காரணமாகும் என்று ரோச்டேல் பகுதியைச் சேர்ந்த பள்ளி ஆசிரியர் ஒருவர் சில நாட்களுக்கு முன்னர் என்னிடம் கூறினார்.''[607]

அமெரிக்க உள்நாட்டுப் போரின் காரணத்தால் ஆங்கிலேயப் பருத்தித் தொழிலில் ஏற்பட்ட இயந்திர மேம்பாடுகளின் மொத்த விளைவைப் பின்வரும் அட்டவணையில் காணலாம்:

### தொழிற்சாலைகளின் எண்ணிக்கை

| | 1857 | 1861 | 1868 |
|---|---|---|---|
| இங்கிலாந்தும் வேல்சும்...... | 2,046 | 2,715 | 2,405 |
| ஸ்காட்லாந்து...................... | 152 | 163 | 131 |
| அயர்லாந்து......................... | 12 | 9 | 13 |
| ஐக்கிய முடியரசு ....... | 2,210 | 2,887 | 2,549 |

[606] ''1863 அக்டோபர் 31க்கான தொழிற்சாலை ஆய்வாளர் அறிக்கைகள்,'' பக்கம் 108,109.

[607] முன் வந்தது, பக்கம் 109. நெருக்கடியின் போது இயந்திர சாதனத்தில் ஏற்பட்ட துரித மேம்பாட்டின் விளைவாய், அமெரிக்க உள்நாட்டுப் போர் ஓய்ந்த வுடனேயே, ஆங்கிலேயத் தொழிலதிபர்கள் கண்மூடிக் கண்திறக்கும் நேரத்தில் மீண்டும் உலகச் சந்தைகளை நிரம்பி வழியச் செய்து சரக்குகளின் வதிநிலையை [glut] உண் டாக்க முடிந்தது. 1866ஆம் ஆண்டு கடைசி ஆறு மாத காலத்தில் துணி அநேகமாய் விற்க முடியாத படி பெருகி விட்டது. உடனே இந்தியாவுக்கும், சீனாவுக்கும் சரக்கு அனுப்பீடு ஆரம்பமாயிற்று; இயல்பாகவே சரக்குகளின் வதிநிலை இதனால் மேலும் தீவிரமாயிற்று. 1867 ஆரம்பத்தில் தொழிலதிபர்கள் சிக்கலிலிருந்து தப்புவதற்குரிய வழக்கமான வழியைக் கையாண்டனர்; அதாவது கூலியை 5 சதவீதம் குறைத்தனர். தொழிலாளர்கள் இதை எதிர்த்தனர்; குறுகிய காலம், அதாவது வாரம் ஒன்றுக்கு 4 நாள் மட்டும் வேலை செய்வது ஒன்றே பரிகாரம் என்று கூறினர்; அவர்களது கருத்து சரியானதுதான். தொழில் துறைத் தளகர்த்தர்களாகத் தம்மைத் தாமே தேர்ந்தெடுத்துக் கொண்டவர்கள் சிறிது காலம் தாக்குப் பிடித்துப் பார்த்த பிறகு, சில இடங்களில் குறைந்த கூலியுடனும், மற்ற இடங்களில் குறைந்த கூலியின்றியும் வேலை நேரத்தைக் குறுக்க ஒப்புக் கொள்ள வேண்டியதாயிற்று.

விசைத்தறிகளின் எண்ணிக்கை

| | 1857 | 1861 | 1868 |
|---|---|---|---|
| இங்கிலாந்தும் வேல்சும்... | 275,590 | 368,125 | 344,719 |
| ஸ்காட்லாந்து .................. | 21,624 | 30,110 | 31,864 |
| அயர்லாந்து .................. | 1,633 | 1,757 | 2,746 |
| ஐக்கிய முடியரசு ..... | 298,847 | 399,992 | 379,329 |

கதிர்களின் எண்ணிக்கை

| | 1857 | 1861 | 1868 |
|---|---|---|---|
| இங்கிலாந்தும் வேல்சும்.. | 25,818,576 | 28,352,125 | 30,478,228 |
| ஸ்காட்லாந்து .................. | 2,041,129 | 1,915,398 | 1,397,546 |
| அயர்லாந்து .................. | 150,512 | 119,944 | 124,240 |
| ஐக்கிய முடியரசு ... | 28,010,217 | 30,387,467 | 32,000,014 |

வேலை செய்தோரின் எண்ணிக்கை

| | 1857 | 1861 | 1868 |
|---|---|---|---|
| இங்கிலாந்தும் வேல்சும்.... | 341,170 | 407,598 | 357,052 |
| ஸ்காட்லாந்து .................. | 34,698 | 41,237 | 39,809 |
| அயர்லாந்து .................. | 3,345 | 2,734 | 4,203 |
| ஐக்கிய முடியரசு ..... | 379,213 | 451,569 | 401,064 |

எனவே 1861க்கும் 1868க்கும் இடையே 338 பஞ்சாலைகள் மறைந்து போயின; வேறு விதமாகச் சொன்னால், இன்னும் பெரு வீதத்தில் இன்னுமதிக உற்பத்தித் திறன் வாய்ந்த இயந்திர சாதனங்கள் முன்னை விடச் சிறு தொகையிலான முதலாளிகளின் கையில் குவிந்தன. விசைத்தறிகளின் தொகை 20,663 குறைந்தது; ஆனால் அதே காலத்தில் அவற்றின் உற்பத்திப் பண்டம் அதிகரித்ததென்பதால், மேம்படுத்தப்பட்ட தறி பழைய தறியை விட அதிகப் பலன் கொடுத்திருக்க வேண்டும். கடைசியாக, கதிர்களின் தொகை 1,612,541 அதிகரித்த அதே நேரத்தில், தொழிலாளர்களின் தொகை 50,505 குறைந்தது. பருத்தி நெருக்கடியால் தொழிலாள மக்கள் மீது சுமத்தப்பட்ட "தற்காலிகத்" துன்பம் துரிதமான,

பிடிவாதமான இயந்திர சாதன முன்னேற்றத்தால் கடுமையாகி, தற்காலிக நிலையிலிருந்து மாறி நிரந்தரமாயிற்று.

ஆனால், இயந்திர சாதனம் தொழிலாளியை விஞ்சி விடும் போட்டியாளனாகச் செயல்படுகிறது, இடையறாது அவரைத் தேவையற்றவராக்கும் நிலையிலுள்ளது என்பது மட்டுமன்று. அது அவருக்குப் பகையான சக்தியுமாகும்; மூலதனம் அதனை அவ்வாறே கூரை மீது ஏறி நின்று கூவி அறிவிக்கிறது; அதனை அவ்வாறே பயன்படுத்திக் கொள்கிறது. மூலதனத்தின் ஆதிபத்தியத்துக் கெதிரான தொழிலாளி வர்க்கத்தின் அவ்வப்போதைய எழுச்சிகளான வேலைநிறுத்தங்களை ஒடுக்குவதற்கு ஆகச் சக்தி வாய்ந்த ஆயுதமாகும் இது.[608] காஸ்கெலின் கருத்துப் படி, நீராவி எஞ்சின் ஆரம்ப முதலே மனித சக்தியின் எதிராளியாக இருந்தது; புதிதாய்ப் பிறந்த ஆலைத் தொழில் நெருக்கடிக்கு ஆளாகும் படி அச்சுறுத்திய தொழிலாளர்களின் வளர்ந்தெழும் கோரிக்கைகளை முதலாளி காலுக்கடியில் மிதிப்பதற்கு உதவிய எதிராளி அது.[609] தொழிலாளி வர்க்கத்தின் கிளர்ச்சிகளுக்கெதிரான ஆயுதங்களை மூலதனத்துக்கு வழங்கும் ஒரே நோக்கத்துடன் 1830 முதற்கொண்டு செய்யப்பட்ட கண்டுபிடிப்புகளை வைத்து ஒரு வரலாறே எழுதலாம். இவற்றிடையே முக்கியத்துவத்தில் முதலிடம் கொள்வது தன்னியக்க மியூலாகும்; ஏனெனில் தானியங்கி முறையில் ஒரு புதிய சகாப்தத்தை அது ஆரம்பித்து வைத்தது.[610]

நீராவிச் சுத்தியலைக் கண்டுபிடித்தவரான நாஸ்மித், தன்னால் செய்யப்பட்டவையும், 1851இல் பொறியாளர்களின் பரவலான, நீடித்த வேலைநிறுத்தங்களின் விளைவாகப் புகுத்தப்பட்டவையுமான இயந்திர மேம்பாடுகள் தொடர்பாகத் தொழிற்சங்க ஆணையத்தின் முன்னர் பின்வருமாறு சாட்சியம் அளிக்கிறார்: "எமது நவீன இயந்திர மேம்பாடுகளின் தனிச்சிறப்பான அமிசம், தன்னியக்கக் கருவி-இயந்திர சாதனம் [self-acting tool machinery] புகுத்தப்படுவதாகும். இப்போது ஒவ்வொரு இயந்திரத் தொழிலாளியும் செய்ய வேண்டியிருப்பது தானே உழைப்பதன்று, இயந்திரத்தின்

---

608 "ஊது ஃபிளிண்ட் சீசாத் தொழில்களில் தொழிலதிபருக்கும் தொழிலாளிக்குமான உறவு, நீடித்த வேலைநிறுத்தத்துக்கு ஒப்பானது." எனவேதான் முக்கியமான வேலைகளை இயந்திர சாதனம் செய்கிற அழுத்தக் கண்ணாடி உற்பத்தி ஊக்கம் பெறுகிறது. முன்னதாக 350,000 இராத்தல் ஊது ஃபிளிண்ட் கண்ணாடி உற்பத்தி செய்த நியூகேஸில் தொழில் நிறுவனம் ஒன்று, இப்போது அதற்கு பதில், 3,000,500 இராத்தல் அழுத்தக் கண்ணாடி உற்பத்தி செய்கிறது. ("குழந்தையுழைப்பு ஆணையம் நான்காம் அறிக்கை, 1865, பக்கம் 262-263.)

609 காஸ்கெல், "இங்கிலாந்தில் ஆலைத் தொழிலில் ஈடுபடும் மக்கள்," லண்டன், 1833, பக்கம் 3,4.

610 டபிள்யூ. ஃபெர்பெயிர்ன் தமது பட்டறைகளில் நடந்த வேலைநிறுத்தங்களின் விளைவாக, இயந்திரங்களின் கட்டுமானத்துக்கு உதவும் மிக முக்கிய இயந்திர சாதனப் பிரயோகங்கள் பலவற்றைக் கண்டுபிடித்தார்.

அழகிய உழைப்பைக் கண்காணிப்பதே; இதை எந்தச் சிறுவனாலும் செய்ய முடியும். பிரத்தியேகமாகத் தம் தேர்ச்சியையே சார்ந்திருக்கும் தொழிலாளர் என்ற வகை முழுவதும் இப்போது ஒழிந்து விட்டது. முன்னதாக, ஒவ்வொரு இயந்திரக் கம்மியருக்கும் நான்கு சிறுவர்கள் வீதம் வேலைக்கமர்த்தினேன். இந்தப் புதிய இயந்திர நுட்ப ஒன்றிணைப்புகளின் பயனாய், வயதுவந்த ஆட்களின் தொகையை 1,500இலிருந்து 750ஆகக் குறைத்திருக்கிறேன். இதனால் எனது இலாபம் கணிசமாய் அதிகரித்துள்ளது.''

காடாத் துணிக்கான அச்சுவேலையில் பயன்படுத்தப்படும் ஓர் இயந்திரம் குறித்து யூர் சொல்கிறார்: ''கடைசியாக, முதலாளிகள் விஞ்ஞான வாய்ப்பு வளங்களைக் கட்டுப்படுத்திய இந்தச் சகிக்க முடியாத தளையிலிருந்து'' [அதாவது, அவர்களது பார்வையில், தொழிலாளர்களுடனான தங்களது ஒப்பந்தங்களின் இடைஞ்சலான சரத்துக்களிலிருந்து] ''விடுதலை நாடினர்; நியாயமாய் அவர்களுக்குரியதான ஆட்சி—மனிதனின் தலை அதை விடக் கீழ்ப்பட்ட உறுப்புகள் மீது செலுத்திடும் ஆட்சி—விரைவில் அவர்களுக்கே மீட்டளிக்கப்பட்டது.'' பாவு நூலை மெருகிடுவதற்கான ஒரு கண்டுபிடிப்பு பற்றிச் சொல்கிறார். ''உழைப்புப் பிரிவினை என்னும் பழைய படைவரிசைகளின் பின்னே வெல்லற்கரிய விதத்தில் அரண் கொண்டிருப்பதாகக் கற்பனை செய்து கொண்ட உதவாக்கரைகளின் கூட்டம் புதிய இயந்திர உத்திகளால் தங்களின் சேனைகள் புறமுதுகு காட்டி ஓடுவதையும், தங்களின் தற்காப்புகள் வீணாகிப் போனதையும் கண்டனர்; விவேகத்துடன் சரணடையும் கட்டாயம் அவர்களுக்கேற்பட்டது.'' தன்னியக்க மியூலின் கண்டுபிடிப்பு தொடர்பாகச் சொல்கிறார்: ''உழைக்கிற வர்க்கங்கள் மத்தியில் ஒழுங்கை மீண்டும் நிலைநாட்டுவதற்கென விதிக்கப்பட்ட ஒரு படைப்பு....மூலதனம் விஞ்ஞானத்தைத் தனக்குப் பணிசெய்ய அமர்த்தும் போதெல்லாம், உழைப்பின் முரட்டுக் கரம் பணிந்து இயங்குவதன் அவசியம் கற்றுத் தரப்படும் என்ற—ஏற்கெனவே வகுத்துரைக்கப்பட்ட—முக்கியக் கோட்பாட்டை இக்கண்டுபிடிப்பு உறுதிப்படுத்துகிறது.''[611] யூர் எழுதிய நூல் முப்பதாண்டுகளுக்கு முன்னர், ஆலைத் தொழில் ஒப்பளவில் சொற்ப வளர்ச்சியே கண்டிருந்த நேரத்தில் வெளி வந்தது. ஆயினும், இந்நூல் இன்றும் கூட தொழிற்சாலையின் மனப்பாங்கை கனகச்சிதமாக வெளியிடுகிறது; இரக்கமற்ற போக்கு அப்பட்டமாய் அம்பலமாவதோடு, முதலாளித்துவ சிந்தனையின் அசட்டு முரண்பாடுகளும் வெகுளித்தனமாய் இதில் வெளிப்படுகின்றன. எடுத்துக்காட்டாக, தான் கூலிக்கமர்த்தும் விஞ்ஞானத்தின் துணை கொண்டு மூலதனம் உழைப்பின் முரட்டுக் கரத்தை எப்போதுமே பணிந்து இயங்கச் செய்கிறது

611 யூர், முன் வந்தது, பக்கம் 368-370.

என்ற மேற்கூறிய "கோட்பாட்டை" வகுத்துரைத்த பின்னர், அவர் கடுஞ்சினம் கொள்கிறார்; ஏனெனில் "அது (பௌதிக இயந்திர விஞ்ஞானம்) ஏழைகளை வருத்துவதற்கான ஆயுதமாகப் பணக்கார முதலாளிக்கு சேவை புரிவதாகக் குற்றஞ்சாட்டப்படுகிறது." இயந்திர சாதனத்தின் துரித வளர்ச்சி உழைக்கும் வர்க்கங்களுக்கு எவ்வளவு அனுகூலமானது என்று உபதேசித்து நீண்டதொரு பிரசங்கம் நிகழ்த்திய பின், அவர்கள் தமது பிடிவாதத்தாலும், வேலை நிறுத்தங்களின் மூலமும் அந்த வளர்ச்சியை விரைவுபடுத்துகின்றனர் என்று எச்சரிக்கிறார். "இது போன்ற வன்முறையான ஆவேச எழுச்சிகள் மனிதன் எப்படித் தொலைநோக்கு இல்லாமல் தன்னைத்தானே வதைத்துக் கொண்டு இழிவுறுகிறான் என்பதைத் தான் வெளிப்படுத்துகின்றன" என்கிறார். சில பக்கங்கள் முன்னதாக அவர் இதற்கு நேர்மாறானதைச் சொல்கிறார்: "ஆலைத் தொழிலாளர்கள் மத்தியில் நிலவும் தவறான கருத்துகளிலிருந்து விளைகிற வன்முறை மோதல்களும் குறுக்கீடுகளும் இல்லையேல், ஆலைத் தொழில் இன்னும் மிகத் துரிதமாகவும், சம்பந்தப்பட்ட அனைவருக்கும் நலம் பயக்கும் விதத்திலும் வளர்ந்தோங்கியிருக்கும்." அடுத்து அவர் மீண்டும் வியந்து கூவுகிறார்: "மகா பிரிட்டனின் பருத்தித் தொழில் பிரதேசங்களில் இயந்திர சாதன மேம்பாடுகள் நல்லவேளையாக சமுதாயத்துக்குத் தீங்கின்றி படிப்படியாகவே நிகழ்கின்றன." "அது" (இயந்திர சாதன மேம்பாடு) "வயது வந்தோரில் ஒரு பகுதியை நீக்கி விடுவதன் மூலமும், இவ்வாறு அவர்களது உழைப்புக்கான வேண்டலுடன் ஒப்பிடுமிடத்து அவர்களது தொகையை மிதமிச்சமாக்கி விடுவதன் மூலமும், அவர்களது ஊதிய விகிதத்தைக் குறையச் செய்வதாகச் சொல்லப்படுகிறது. நிச்சயமாக இது குழந்தைகளின் உழைப்புக்கான வேண்டலை அதிகமாக்கி, அவர்களது கூலி வீதத்தை உயரச் செய்கிறது." மறு புறம், குறைவின்றி ஆறுதல் வழங்கும் இதே வள்ளல், குழந்தைகளின் கூலி குறைவாக இருப்பதை நியாயப்படுத்துகிறார்; பெற்றோர் தம் குழந்தைகளைச் சின்னஞ்சிறு வயதில் தொழிற்சாலை வேலைக்கு அனுப்புவதை இது தடுக்கிறது என்று காரணமும் சொல்கிறார். அவரது நூல் முழுவதுமே கட்டுத்தளையில்லாத கால அளவுள்ள வேலை-நாளை நியாயமென்று சாதிப்பதேயாகும்; 13 வயதுள்ள குழந்தைகள் ஆவி நைந்து சோர்வுறும் படி நாளொன்றுக்கு 12 மணி நேரம் வேலை செய்வதை பாராளுமன்றம் தடை செய்ய வேண்டும் என்பது மத்திய காலத்தின் இருண்ட நாட்களை அவரது மிதவாத ஆத்மாவுக்கு நினைவுபடுத்துகிறது. தங்களது "அமரஜீவிய நலன்கள்" பற்றி யோசிப்பதற்கு இயந்திர சாதனத்தின் வாயிலாக ஓய்வு நேரம் அளித்திருக்கும் தெய்வத்துக்கு நன்றி சொல்லுமாறு ஆலைத் தொழிலாளர்களுக்கு அவர் அழைப்பு விடுப்பதற்கு இது தடையாவதில்லை.[612]

[612] யூர், முன் வந்தது, பக்கம் 368, 7, 370, 280, 281, 321, 370, 475.

## பிரிவு 6.—இயந்திர சாதனத்தால் நீக்கப்படும் தொழிலாளர்கள் தொடர்பான இழப்பீட்டுத் தத்துவம்

ஜேம்ஸ் மில், மக்குல்லோஹ், டாரென்ஸ், சீனியர், ஜான் ஸ்டுவர்ட் மில் மற்றும் முதலாளித்துவப் பொருளாதார அறிஞர்கள் பலரும், தொழிலாளர்களை நீக்கம் செய்கிற எல்லா இயந்திர சாதனங்களும் அதே நேரத்தில் அதே தொழிலாளர்களுக்கு வேலை கொடுக்கப் போதுமான மூலதனத் தொகையைக் கட்டாயமாக விடுவிக்கின்றன என்று வலியுறுத்துகின்றனர்.[613]

சமுக்காளத் தொழிற்சாலையில் ஒரு முதலாளி ஆண்டுக்கு £30 கூலியில் 100 தொழிலாளர்களை அமர்த்தி வேலை வாங்கு வதாகக் கொள்வோம். ஆதலால், ஆண்டுதோறும் முதலீடு செய்யப் படும் மாறும்-மூலதனம் £3,000 ஆகிறது. அவர் தனது தொழி லாளர்களில் 50 பேரை விடுவித்து விட்டு, மீதமுள்ள 50 பேரை அவருக்கு £1,500 செலவாகிற இயந்திர சாதனத்தை வைத்து வேலை வாங்குவதாகவும் கொள்வோம். கட்டடங்கள், நிலக்கரி முதலானவற்றை எளிமையின் நிமித்தம் நாம் கணக்கிலெடுத்துக் கொள்ளவில்லை. மேலும், இந்த மாற்றத்துக்கு முன்னரும் பின்னரும் ஆண்டுதோறும் நுகரப்படும் கச்சாப் பொருளுக்கு £3,000 செலவாவதாகக் கொள்வோம்.[614] இந்த மாற்றத்தால் மூலதனமேதும் விடுவிக்கப்படுகிறதா? மாற்றத்துக்கு முன்னர், £6,000 மொத்தத் தொகையில் பாதி மாறா-மூலதனமாகவும், பாதி மாறும்-மூலதனமாகவும் இருந்தது. மாற்றத்துக்குப் பின்னர், அதில் £4,500 மாறா-மூலதனமாகவும் (கச்சாப் பொருள் £3,000, இயந்திர சாதனம் £1,500), £1,500 மாறும்-மூலதன மாகவும் இருக்கிறது. மாறும்-மூலதனம் மொத்த மூலதனத்தில் சரிபாதியாக இருப்பதற்கு பதில் கால்வாசியாகவே உள்ளது. இங்கே மூலதனத்தின் ஒரு பகுதி விடுவிக்கப்படுவதற்கு பதில் முடக்கப்பட்டுள்ளது; அதனை இனி உழைப்புச் சக்திக்குப் பரிவர்த் தனை செய்து கொள்வதற்கில்லை: மாறும்-மூலதனம் மாறா-மூலதனமாக மாற்றப்பட்டிருக்கிறது. மற்றவை மாறாதிருக்க £6,000 மூலதனத்தால் வருங்காலத்தில் 50 ஆட்களுக்கு மேல் வேலைக்கமர்த்த முடியாது. இயந்திர சாதனத்தில் மேம்பாடு ஏற்படும் போதெல்லாம், அந்த சாதனத்தில் வேலை செய்வோரின் தொகை குறையவே செய்யும். புதிதாகப் புகுத்தப்பட்ட இயந்திர

[613] ரிக்கார்டோவும் ஆரம்பத்தில் இவ்வாறே கருதினார். ஆனால் பிற்பாடு அவருக்குரிய விஞ்ஞான நேர்மையுடனும், சத்தியசீலத்துடனும் இக்கருத்தை வெளிப் படையாக நிராகரித்தார். பார்க்கவும்: முன் வந்தது, அத்தியாயம் xxxi. ''இயந்திர சாதனம் குறித்து.''

[614] கவனிக்க வேண்டிய ஒன்று. எனது எடுத்துக்காட்டு, முற்றிலும், மேற்குறிப் பிட்ட பொருளாதார அறிஞர்கள் கொடுத்துள்ள எடுத்துக்காட்டுகளின் வழிநிற்பதே.

சாதனத்துக்கான செலவு அதனால் நீக்கப்படும் உழைப்புச் சக்திக்கும் கருவிகளுக்குமான செலவை விடக் குறைவாயிருந்தால், எடுத்துக்காட்டாக அவற்றுக்கு £1,500 செலவாவதற்கு பதில் £1,000 மட்டுமே செலவானதென்றால், £1,000 மாறும்-மூலதனம் மாறா-மூலதனமாக மாற்றப்பட்டு முடக்கப்பட்டிருக்கும்; £500 மூலதனம் விடுவிக்கப்பட்டிருக்கும். கூலி மாறாதிருப்பதாக வைத்துக் கொண்டால், இந்த £500 மூலதனமானது விடுவிக்கப்பட்ட 50 ஆட்களில் 16 பேருக்கு வேலை கொடுக்கப் போதுமான தொகையாக இருக்கும்; இன்னும் சொல்லப் போனால், 16க்கும் குறைவானோருக்கு வேலை கொடுக்கப் போதுமான நிதியாகவே இருக்கும்; ஏனெனில் மூலதனமாக ஈடுபடுத்தப்பட வேண்டுமானால், இந்த £500இல் ஒரு பகுதி இப்போது மாறா-மூலதனமாக வேண்டும்; இவ்வாறு மீதமுள்ள தொகையே உழைப்புச் சக்திக்காகச் செலவிடுவதற்கென்று எஞ்சியுள்ளது.

ஆனால், இதன்னியில், புதிய இயந்திர சாதனத்தைத் தயாரிப்பது முன்னிலும் அதிகத் தொகையிலான இயந்திரக் கம்மியர்களுக்கு வேலை கொடுப்பதாகக் கொண்டால், நடுத்தெருவில் விடப்பட்ட சமுக்காளத் தொழிலாளர்களுக்குக் கிடைக்கும் இழப்பீடு என்று அதைக் கூற முடியுமா? எப்படியும், அவ்வியந்திர சாதனத்தின் நிர்மாணம் அதனை ஈடுபடுத்துவதால் நீக்கம் செய்யப்படுவோரை விடக் குறைவான ஆட்களுக்கே வேலை கொடுக்கிறது. நீக்கம் செய்யப்பட்ட சமுக்காளத் தொழிலாளர்கள் பெற்று வந்த கூலியைக் குறித்த தொகையான £1,500 இப்போது இயந்திர சாதனத்தின் உருவில் பின்வருவனவற்றைக் குறிக்கிறது: (1) அவ்வியந்திர சாதனத்தின் நிர்மாணத்தில் பயன்படுத்தப்பட்ட உற்பத்திச் சாதனங்களின் மதிப்பு, (2) அதன் நிர்மாணத்தில் வேலைக்கமர்த்தப்பட்ட இயந்திரக் கம்மியர்களின் கூலி, (3) அவர்களது "அதிபர்" வசம் போகிற உபரி-மதிப்பு. மேலும், இயந்திர சாதனம் தேய்ந்தொழியும் வரை அதனை மாற்றீடு செய்யத் தேவையில்லை. எனவே, அதிகரித்த தொகையிலான இயந்திரக் கம்மியர்களுக்கு இடையறாது வேலை தர வேண்டுமானால், ஒருவர் பின் ஒருவராக சமுக்காளத் தயாரிப்பாளர்கள் இயந்திர சாதனத்தைக் கொண்டு தொழிலாளர்களை நீக்கம் செய்ய வேண்டும்.

உண்மையில், இந்தச் சப்பைக்கட்டுவாதிகள் [apologists] இவ்விதமான மூலதன விடுவித்தலைச் சொல்லவில்லை. விடுவிக்கப்பட்ட உழைக்கும் மக்களின் வாழ்வுச் சாதனங்களையே அவர்கள் மனதிற்கொண்டுள்ளனர். மேற்கூறிய எடுத்துக்காட்டில், இயந்திர சாதனம் 50 ஆட்களை விடுவித்து, இவ்வாறு அவர்களை மற்றவர்கள் பயன்படுத்திக் கொள்ளக் கூடிய நிலையில் வைக்கிறது என்பது மட்டுமல்லாமல், அதே போது £1,500 மதிப்புள்ள வாழ்வுச் சாதனங்களையும் அவர்களது நுகர்விலிருந்து திரும்பப் பெற்று

விடுவிக்கிறது என்பது மறுக்க முடியாத உண்மைதான். எனவே, இயந்திர சாதனம் தொழிலாளர்களை அவர்களது வாழ்வுச் சாதனங்களிலிருந்து துண்டித்து விலக்குகிறது என்ற எளிய உண்மையை — புதிய உண்மையை அல்ல—பொருளாதாரத் தனி மொழியில் கூறும் போது, இயந்திர சாதனம் தொழிலாளிக்காக வாழ்வுச் சாதனங்களை விடுவிக்கிறது, அல்லது அந்த வாழ்வுச் சாதனங்களை அவரை வேலைக்கமர்த்துவதற்கான மூலதனமாக மாற்றுகிறது என்றாகி விடுகிறது. பார்த்தீர்களா, எல்லாம் சொல்லும் விதத்தையே பொறுத்துள்ளது. Nominibus mollire licet mala.*

இத்தத்துவம் குறிப்பது என்னவென்றால்: வாழ்வுச் சாதனங்களின் பெறுமானமாகிய £1,500 மூலதனமாக இருந்தது, விடுவிக்கப்பட்ட 50 ஆட்களின் உழைப்பால் பெருக்கப்பட்டு வந்தது. ஆதலால், அவர்கள் வலுவந்தமாய்த் தரப்பட்ட விடுமுறையைத் துவக்கியதுமே இந்த மூலதனம் வேலையற்றதாகிறது, இதே 50 ஆட்களால் உற்பத்தித் திறனுள்ள விதத்தில் மீண்டும் நுகரப்படக் கூடிய புதிய முதலீடாகும் வரை அது ஓய்வதேயில்லை. எனவே, இன்றோ நாளையோ மூலதனமும் தொழிலாளர்களும் மீண்டும் கூடியே ஆக வேண்டும். அப்போது இழப்பீடு முழுமை பெறுகிறது. எனவே இயந்திர சாதனத்தால் நீக்கம் செய்யப்படும் தொழிலாளர்களின் துன்ப துயரங்கள் பூலோகச் செல்வங்களைப் போல் அநித்தியமானவையே.

நீக்கப்பட்ட தொழிலாளர்களைப் பொறுத்த வரை, வாழ்வுச் சாதனங்களின் பெறுமானமாகிய £1,500 மூலதனமாக இருந்ததே இல்லை. மெய்யாகவே மூலதனமாக அவர்களுக்கெதிரில் வந்தது, பிற்பாடு இயந்திர சாதனத்தில் முதலீடு செய்யப்பட்ட தொகையான £1,500தான். இன்னும் நெருங்கிப் பார்த்தால் இந்தத் தொகை நீக்கப்பட்ட 50 ஆட்கள் ஓராண்டில் உற்பத்தி செய்த சமுக்காளங்களில் ஒரு பகுதியைக் குறிப்பதாகும், முதலாளியிடமிருந்து அவர்கள் பொருள் வடிவில் அல்லாமல் பண வடிவில் கூலியாய்ப் பெற்ற பகுதியாகும் என்பது தெரிய வரும். பண வடிவிலான சமுக்காளங்களைக் கொண்டு, அவர்கள் £1,500 மதிப்புள்ள வாழ்வுச் சாதனங்களை வாங்கினர். ஆகவே, இந்த வாழ்வுச் சாதனங்கள் அவர்களுக்கு சரக்குகளாக இருந்தனவே தவிர, மூலதனமாக இருக்கவில்லை. இச்சரக்குகளைப் பொறுத்த வரை, அவர்கள் விலை கொடுத்து வாங்குவோராக இருந்தனரே தவிர, கூலித் தொழிலாளர்களாக இருக்கவில்லை. அவர்கள் வாங்கற் சாதனங்களிடமிருந்து இயந்திர சாதனத்தால் விடுவிக்கப்பட்டனர் என்ற நிலைமை அவர்களை வாங்குவோர் என்ற நிலையிலிருந்து வாங்க முடியாதோராக மாற்றியது. அந்தச் சரக்குகளுக்கு வேண்டல் குறைந்தது

* கேடானாலும் சூடு தணியச் சொல்லுதல் நல்லது.

இதனால்தான் — அவ்வளவுதான் சங்கதி. இக்குறைவு வேறு ஏதேனும் ஒரு திசையிலிருந்து வரும் அதிகரிப்பால் ஈடு செய்யப் படா விட்டால், இச்சரக்குகளின் சந்தைவிலை வீழ்கிறது. இந்நிலைமை சிறிது காலத்துக்கு நீடிக்குமானால், இச்சரக்குகளின் உற்பத்தியில் வேலை செய்யும் தொழிலாளர்களை நீக்க வேண்டியதாகிறது. முன்னதாக அவசிய வாழ்வுச் சாதனங்களின் உற்பத்திக்கு ஒதுக்கப் பட்ட மூலதனத்தில் ஒரு பகுதியை இன்னொரு வடிவத்தில் மறுவுற் பத்தி செய்ய வேண்டியதாகிறது. விலைகள் வீழ்ந்து மூலதனம் வெளியேற்றப்படுகையில், அவசிய வாழ்வுச் சாதனங்களின் உற் பத்தியில் வேலை செய்கிற தொழிலாளர்களோ அவர்களது கூலியில் ஒரு பகுதியிடமிருந்து ''விடுவிக்கப்படுகின்றனர்.'' எனவே, இயந்திர சாதனம் தொழிலாளியை அவரது வாழ்வுச் சாதனங்களிடமிருந்து விடுவிக்கும் அதே நேரத்தில் அந்த வாழ்வுச் சாதனங்களை அவருக்கு மேற்கொண்டு வேலை கொடுப்பதற்கான மூலதனமாக மாற்றுகிறது என்று நிரூபிப்பதற்கு பதில், வழங்கல்-வேண்டல் விதியைத் தயாராய்க் கையில் வைத்திருக்கும் நமது சப்பைக்கட்டுவாதிகள் இதற்கு மாறானதையே நிரூபிக்கின்றனர்; அதாவது இயந்திர சாதனம் அது புகுத்தப்படுகிற உற்பத்திக் கிளை யில் மட்டுமல்லாமல், புகுத்தப்படாத கிளைகளிலும் தொழிலாளர் களை வேலையிழக்கச் செய்து தெருவில் நிறுத்துகிறது என்பதையே நிரூபிக்கின்றனர்.

எல்லாம் நன்மைக்கே என்னும் பொருளாதார அறிஞர்தம் கொள்கை, உண்மை விவரங்களை நகைப்புக்குரியதாக்கி விடுகிறது. இவ்வுண்மை விவரங்களாவன: இயந்திர சாதனத்தால் பட்டறை யிலிருந்து விரட்டப்பட்ட தொழிலாளர்கள் உழைப்புச் சந்தையில் வீசப்பட்டு, அங்கே முதலாளிகளின் பயன்பாட்டுக்குரியோராய் இருக்கும் தொழிலாளர்களின் தொகையைப் பெருகச் செய்கின் றனர். இயந்திர சாதனத்தின் இந்த விளைவை தொழிலாளி வர்க்கத் துக்குக் கிடைக்கும் இழப்பீடாகச் சித்திரிக்கிறார்கள் என்பதைப் பார்த்தோம்; ஆனால் உண்மையில் இது படுபயங்கரமான கொள்ளை நோயாகும் என்பது இந்த நூற்பாகத்தின் பகுதி VIIஇல் தெரிய வரும். இப்போதைக்கு இதை மட்டும் சொல்கிறேன்: எந்தத் தொழிற் கிளையிலும் வேலையிலிருந்து வெளியேற்றப்படும் தொழி லாளர்கள் வேறு ஏதாவது ஒரு கிளையில் வேலை தேடலாம் என் பது மெய்தான். அவர்களுக்கு அது கிடைத்து, இவ்வாறு அவர்களுக்கும் வாழ்வுச் சாதனங்களுக்கும் இடையிலான பிணைப்பு புதுப்பிக்கப்பட்டால், முதலீட்டை நாடிக் கொண்டிருக்கும் புதிய, கூடுதலான மூலதனத்தைக் கொண்டு இது நிகழ்கிறதே தவிர, முன்னதாக அவர்களுக்கு வேலை கொடுத்து, பின்னர் இயந்திர சாதனமாக மாற்றப்பட்ட மூலதனத்தைக் கொண்டு அல்லவே அல்ல. அவர்களுக்கு வேலை கிடைப்பதாயினும், எவ்வளவு பரி

தாபத்துக்குரியது அவர்களது நிலை! பாவம், இந்த ஏழைகள் உழைப்புப் பிரிவினையால் முடமாக்கப்பட்டவர்கள்; தமது பழைய தொழிலுக்கு வெளியே மதிப்பில்லாதவர்கள்; குறையூதியத் தொழிலாளர்கள் மிகையாகக் கிடைக்கிற மட்டரகமான ஒரு சிலவற்றைத் தவிர பிற தொழிற் கிளைகள் எதிலும் சேர முடியாதவர்கள்.[615] மேலும், ஒவ்வொரு தொழிற் கிளையும் ஆண்டுதோறும் ஆட்களின் புதிய அணிவரிசையைக் கவர்ந்து கொள்கிறது. இந்த அணிவரிசைதான் காலியிடங்களை நிரப்புவதற்கு வேண்டிய ஆட்தொகுதியை அளித்துதவுகிறது. இயந்திர சாதனம் குறிப்பிட்ட தொழிற்கிளையில் வேலை செய்கிற தொழிலாளர்களில் ஒரு பகுதியை விடுவித்தவுடனே, பதிலி ஆட்களும் புதிய வேலை வாய்ப்பு வழிகளில் திருப்பி விடப்பட்டு, பிற கிளைகளில் சேர்ந்து விடுகின்றனர்; இதற்கிடையில் ஆரம்பத்தில் பாதிக்கப்பட்டவர்கள் மாற்றமைவுக் காலத்தின் போது பெரும்பாலும் பட்டினி கிடந்து மடிய நேரிடுகிறது.

தொழிலாளி வாழ்வுச் சாதனங்களிடமிருந்து ''விடுவிக்கப் படுவதற்கு'' இயந்திர சாதனம் அதனளவில் பொறுப்பாளியன்று. இதில் சந்தேகத்திற்கிடமில்லை. இயந்திர சாதனம் அது கையி லெடுக்கும் கிளையில் உற்பத்தியை மலிவாக்கி அதிகமாக்குகிறது. பிற கிளைகளில் உற்பத்தி செய்யப்படும் வாழ்வுச் சாதனத் திரளில் ஆரம்பத்தில் அது மாற்றமேதும் செய்வதில்லை. எனவே, வேலையி லிருந்து வெளியேற்றப்படும் தொழிலாளர்களுக்கான அவசிய வாழ்க்கைப் பண்டங்கள், இயந்திர சாதனம் புகுத்தப்படுவதற்கு முன்பிருந்ததை விட அதிகமாக இல்லா விட்டாலும் எப்படியும் அதற்குக் குறைவில்லாமல் சமுதாயத்தின் வசம் உள்ளன; வருடாந் தர உற்பத்தியில் தொழிலாளர் அல்லாதாரால் விழுங்கப்படும் பெரும் பங்கைக் கணக்கில் எடுக்காமலே இந்நிலை. நமது சப்பைக் கட்டுவாதிகள் நம்பியிருப்பது. இதைத்தான்! இயந்திர சாதனத்தின் முதலாளித்துவப் பிரயோகத்திலிருந்து பிரிக்க முடியாதவையான முரண்பாடுகளும் பகைநிலைகளும் பிறப்பதற்கு இயந்திர சாத னம் அதனளவில் காரணமன்று, அவற்றின் முதலாளித்துவப்

---

[615] மூா.ப. ஸேயின் உப்புச் சப்பில்லாக் கூற்றுகளுக்குப் பதில் அளிக்கும் விதத்தில் ரிக்கார்டோவின் சீடரொருவர் இது குறித்துக் கூறுவதாவது: ''உழைப்புப் பிரிவினை நன்கு வளர்ச்சியடைந்துள்ள இடத்தில், உழைப்பாளியின் தேர்ச்சி என்பது எந்தக் கிளையில் அது பெறப்பட்டதோ அக்கிளைக்கு மட்டுமே உரியது; அவரே ஒருவிதமான இயந்திரமாகி விடுகிறார். எனவே, எல்லாமே சமநிலை அடையும் போக்குடையவை என்று கிளிப்பிள்ளை போல் திரும்பத் திரும்பச் சொல்வது கிஞ்சிற்றும் உதவாது. சுற்றிலும் பார்ப்போமானால், நீண்ட நெடுங்காலத்துக்கு அவற்றால் சமநிலையை அடைய இயலவில்லை என்பதையே காண்கிறோம். அப்படியே அவை சமநிலையை அடைந்தாலும், அவற்றுக்கு வரப்பெறும் சமநிலை நிகழ்முறையின் தொடக்கத்தி லிருந்ததை விட எப்போதும் தாழ்வாகவே இருக்கக் காண்கிறோம்.'' (''வேண்டலின் இயல்பு...கோட்பாடுகள் பற்றிய ஆய்வு.'' லண்டன்,1821, பக்கம் 72.)

பிரயோகமே காரணம் என்பதை வைத்து, அம்முரண்பாடுகளும் பகைநிலைகளும் நிலவவில்லை என்றே அவர்கள் கூறி விடுகின்றனர்! இயந்திர சாதனம் அதனளவில் உழைப்பு நேரத்தைக் குறைக்கிறது; ஆனால் மூலதனத்துக்குப் பணி செய்யும் போது உழைப்பு நேரத்தை நீட்டுகிறது. அதனளவில் உழைப்பை இலகுவாக்குகிறது, ஆனால் மூலதனத்தால் ஈடுபடுத்தப்படும் போது உழைப்பின் மும்முரத்தை உயர்த்துகிறது. அதனளவில் இயற்கைச் சக்திகள் மீது மனிதன் கண்ட வெற்றியாகத் திகழ்கிறது, ஆனால் மூலதனத்தின் கையிலிருக்கையில் மனிதனை அச்சக்திகளின் அடிமையாக்குகிறது. அதனளவில் உற்பத்தியாளர்களின் செல்வத்தை அதிகமாக்குகிறது, ஆனால் மூலதனத்தின் கையிலிருக்கையில் அவர்களை வக்கற்றவர்கள் ஆக்குகிறது. இவற்றையும் ஏனைய பல நிலைமைகளையும் வைத்து முதலாளித்துவப் பொருளாதார அறிஞர், இந்த முரண்பாடுகளெல்லாம் எதார்த்தத்தின் நிழல்களே தவிர எதார்த்தம் அல்ல, உள்ளபடியாகவோ தத்துவார்த்தமாகவோ நிலவுகிறவை அல்ல என்பது நிதர்சனமாய்த் தெரிவதாக அசங்காமல் சொல்கிறார். இதற்கு மேல் மண்டையை உடைத்துக் கொள்ளத் தேவையில்லை என்கிறார். அது மட்டுமல்ல. அவரது எதிராளி, இயந்திர சாதனத்தின் முதலாளித்துவப் பிரயோகத்துக்கு எதிராக அன்றி இயந்திர சாதனத்துக்கு எதிராகவே தர்க்கம் புரியும் அளவுக்கு மூடனாயிருப்பதாக பாவித்துக் கொண்டு பேசுகிறார்.

இயந்திர சாதனத்தின் முதலாளித்துவப் பிரயோகத்தால் தற்காலிக அசௌகரியம் ஏற்படுவதை அவர் மறுக்கவில்லை என்பது மெய்தான். ஆனால் மறு பக்கம் இல்லாத நாணயம் ஏது? மூலதனத்தால் அன்றி இயந்திர சாதனத்தை வேறெவ்வகையிலும் பிரயோகிப்பது அவருக்கு சாத்தியமன்று. எனவே, அவரது கருத்துப்படி தொழிலாளியை இயந்திரம் பயன்படுத்திக் கொள்வதும், இயந்திரத்தைத் தொழிலாளி பயன்படுத்திக் கொள்வதும் ஒன்றே. எனவே, இயந்திர சாதனத்தின் முதலாளித்துவப் பிரயோகம் பற்றிய உண்மை நிலவரங்களை அம்பலப்படுத்துகிறவர் எவரும் எவ்வகையான இயந்திர சாதனப் பிரயோகத்தையும் எதிர்ப்பவராம், சமுதாய முன்னேற்றத்தின் எதிரியாம்![616] பில் சைக்ஸ் என்னும்

---

[616] போலியான இந்த அசட்டுத்தனத்தில் கை தேர்ந்தவர்களில் மக்குல்லோஹும் ஒருவர். 8 வயது குழந்தைக்குரிய வெகுளித்தனத்தை செயற்கையாக வரவழைத்துக் கொண்டு அவர் சொல்கிறார்: "ஒரே அளவு உழைப்பைக் கொண்டு, அல்லது இன்னும் குறைந்த அளவு உழைப்பைக் கொண்டு, அதிகரித்துக் கொண்டே போகும் படி சரக்குகளை உற்பத்தி செய்ய வல்லவராக தொழிலாளி இருக்கும் விதத்தில் அவரது தேர்ச்சியை மேலும் மேலும் வளர்ப்பது அனுகூலமாக இருக்குமேயானால், இம் மேன்மையை அடைவதில் மிகவும் சக்தி வாய்ந்த விதத்தில் அவருக்குத் துணை செய்யக் கூடிய இயந்திர சாதனத்தின் உதவியை அவர் பயன்படுத்திக் கொள்வதும் அனுகூலமானதாகவே அமைய வேண்டும்," (மக்குல்லோஹ்: "அரசியல் பொருளாதாரக் கோட்பாடுகள்," லண்டன், 1830, பக்கம் 166.)

அந்தப் பிரபலஸ்தரே கூட இப்படித் தான் வாதிடுகிறார்: ''சான்றாயக் கனவான்களே, இந்த வணிகப் பிரயாணியின் கழுத்து வெட்டப்பட்டது மெய்தான். ஆனால் அது என் குற்றமன்று, கத்தியின் குற்றமே. இப்படியொரு தற்காலிக அசௌகரியம் ஏற்படுகிறது என்பதற்காக, கத்தி உபயோகிப்பதையே ஒழித்து விட வேண்டுமா? சற்றே எண்ணிப் பாருங்கள்! கத்தியில்லாமல் உழவும் தொழிலும் என்னாகும்? அது உடற்கூறியலின் வெற்றிக்குக் கை கொடுப்பதல்லவா? அதே போல் அறுவை மருத்துவத்தில் மெச்சத்தக்கதல்லவா? மேலும் விருந்து மேசையில் பணிந்து சேவகம் புரிவது அல்லவா? கத்தியை நீங்கள் ஒழித்து விட்டால்—இவ்விதம் அநாகரிக நிலையின் அடியாழத்துக்குள் திரும்பவும் எங்களைத் தள்ளுகிறீர்கள்.''[617]

இயந்திர சாதனம், அது புகுத்தப்படும் தொழில்களில் எல்லாம், கட்டாயமாய் வேலையிருந்து ஆட்களை வெளியேற்றி விடுகிறது என்ற போதிலும், ஏனைய தொழில்களில் இதற்கு மாறாக வேலை வாய்ப்பினைப் பெருகச் செய்யலாம். ஆயினும், இந்த விளைவுக்கும் இழப்பீட்டுத் தத்துவம் எனப்படுவதற்கும் இடையே பொதுவான தொன்றுமில்லை. ஓர் இயந்திரத்தால் உற்பத்தி செய்யப்படும் ஒவ்வொரு பண்டமும் கையால் உற்பத்தி செய்யப்படும் அதே மாதிரிப் பண்டத்தை விட மலிவானதாகும் என்பதால், பின்வரும் பிழையா விதியை பெறுகிறோம்: முன்னதாகக் கைத்தொழில் அல்லது பட்டறைத் தொழிலின் மூலம் உற்பத்தி செய்யப்பட்ட ஒரு பண்டம் இப்போது இயந்திர சாதனத்தைக் கொண்டு உற்பத்தி செய்யப்படுகையில் முன்னர் உற்பத்தி செய்யப்பட்ட அப்பண்டத்தின் மொத்த அளவும் இப்போது உற்பத்தி செய்யப்படுகிற மொத்த அளவும் சமமானால் செலவிடப்படும் மொத்த உழைப்பு குறைந்துள்ளது. இயந்திர சாதனம் போன்ற உழைப்புச் சாதனங்களுக்காகவும், நிலக்கரி முதலானவற்றுக்காகவும் செலவிடப்படும் புதிய உழைப்பு, இயந்திர சாதனத்தின் உபயோகத்தால் நீக்கம் செய்யப்பட்ட உழைப்பை விடக் குறைவானதாகவே இருக்க வேண்டும்; இல்லையென்றால், இயந்திரத்தால் உற்பத்தி செய்யப்படும் பண்டம் கையுழைப்பால் உற்பத்தி செய்யப்படும் பண்டத்தைப் போல் அதே அளவு அல்லது இன்னும் கூட அதிக அளவு பெறுமானமுடையதாகி விடும். ஆனால், உள்ளபடியே, குறைந்த தொகையிலான தொழிலாளர்களைக் கொண்டு இயந்திர சாதனத்தின் மூலம் உற்பத்தி செய்யப்பட்ட பண்டத்தின் மொத்த அளவு, கையால் செய்த பண்டத்தின் மொத்த அளவுக்குச் சமமாய் இருப்பதற்குப்

617 ''நூற்பியந்திரத்தைக் கண்டுபிடித்தவர் இந்தியாவைப் பாழாக்கி விட்டார்; ஆயினும் நமது உள்ளத்தை உருகச் செய்யாத உண்மை இது.'' அ.தீயெர்: De la propriete. — இங்கே திருவாளர் தீயெர் நூற்பியந்திரத்தை விசைத்தறியோடு போட்டுக் குழப்பிக் கொள்கிறார்; ''ஆயினும் நமது உள்ளத்தை உருகச் செய்யாத உண்மை இது.''

பதில், பெரிதும் கூடுதலாகவே உள்ளது. கையினால் 100,000 கெஜம் துணி நெய்யக் கூடியவர்களை விடக் குறைவான நெச வாளர்கள் விசைத்தறிகளில் 400,000 கெஜம் துணியை உற் பத்தி செய்திருப்பதாகக் கொள்வோம். நான்கு மடங்காய்ப் பெருகி யுள்ள உற்பத்திப் பண்டத்தில் நான்கு மடங்கு கச்சாப் பொருள் அடங்கியுள்ளது. ஆகவே, கச்சாப் பொருளின் உற்பத்தியை நான்கு மடங்காக்க வேண்டும். ஆனால் கட்டடங்கள், நிலக்கரி, இயந்திர சாதனம் போன்ற உழைப்புச் சாதனங்களைப் பொறுத்த வரை நிலைமை வேறு; அவற்றின் உற்பத்திக்கு வேண்டியுள்ள கூடுதல் உழைப்பு அதிகரிக்க முடிவதற்குள்ள வரம்பு, இயந்திரத்தால் செய் யப்படும் பண்டத்தின் அளவுக்கும் அதே தொகையுள்ள தொழி லாளர்கள் கையால் செய்யக் கூடிய அதே பண்டத்தின் அளவுக்கும் இடையிலான வேறுபாட்டுக்கேற்ப மாறுபடுகிறது.

எனவே, குறிப்பிட்ட தொழிலில் இயந்திர சாதனத்தின் உப யோகம் பெருகும் போது, இத்தொழிலுக்கு உற்பத்திச் சாதனங் களைத் தருகிற ஏனைய தொழில்களில் உற்பத்தியைப் பெருகச் செய்வதே உடனடி விளைவாகும். இதன் மூலம் அதிகரித்த தொகை யிலான ஆட்களுக்கு எவ்வளவு தூரம் வேலை கிடைக்கும் என்பது, வேலை-நாளின் கால அளவும் உழைப்பின் மும்முரமும் குறிப்பிட்ட தாய் இருக்க, ஈடுபடுத்தப்படும் மூலதனத்தின் இயைபினை [composition], அதாவது அதன் மாறும் அங்கத்துடன் மாறா அங்கம் கொண்டுள்ள விகிதத்தைப் பொறுத்ததாகும். இந்த விகிதமோ அத்தொழில்களை இயந்திர சாதனம் ஏற்கெனவே வசப்படுத்தி யிருக்கிற, அல்லது இப்போது வசப்படுத்தி வருகிற அளவிற்கேற்பக் கணிசமாக மாறுபடுகிறது. நிலக்கரிச் சுரங்கங்களிலும் உலோகச் சுரங்கங்களிலும் உழைக்க வேண்டியிருந்த ஆட்களின் தொகை ஆங்கிலேய ஆலைத் தொழில் கண்ட முன்னேற்றத்தின் விளை வாகப் பெருமளவு அதிகரித்தது; ஆனால் கடந்த சில பத்தாண்டு களில், சுரங்கத் தொழிலில் புதிய இயந்திர சாதன உபயோ கத்தின் விளைவாக இத்தொகையின் பெருக்கம் மட்டுப்பட்டுள் ளது.[618] இயந்திரத்தோடு கூட ஒரு புதுரகத் தொழிலாளி, அதாவது அவ்வியந்திரத்தைச் செய்பவர் உதித்தெழுகிறார். இயந்திர சாதனம் இந்த உற்பத்திக் கிளையையும் கூட அனுதினமும்

---

618 1861ஆம் வருட மக்கள்தொகைக் கணக்கின் படி (பாகம் II., லண்டன், 1863) இங்கிலாந்திலும் வேல்சிலும் நிலக்கரிச் சுரங்கங்களில் வேலை வாங்கப்பட்டவர்களின் தொகை 246,613ஆக இருந்தது; இதில் 73,545 பேர் 20 வயதுக்கு உட்பட்டோராயும், 173,067 பேர் 20 வயதுக்கு மேற்பட்டோராயும் இருந்தனர். 20 வயதுக்கு உட் பட்டோரில் 835 பேர் 5 வயதுக்கும் 10 வயதுக்கும் இடைப்பட்டோர்; 30,701 பேர் 10க்கும் 15க்கும் இடைப்பட்டோர்; 42,010 பேர் 15க்கும் 19க்கும் இடைப்பட்டோர். இரும்பு, தாமிரம், ஈயம், தகரம், இன்னும் சகல வகைச் சுரங்கங்களிலும் வேலை வாங்கப் பட்டோரின் தொகை 319,222ஆக இருந்தது.

மேலும் மேலும் அதிகமான அளவுவீதத்தில் வசப்படுத்தியுள்ளது என்பது நாமறிந்ததே.[619] கச்சாப் பொருளைப் பொறுத்த வரை[620] பஞ்சு நூற்பின் துரித முன்னேற்றமானது அமெரிக்க ஐக்கிய அரசில் பருத்திச் சாகுபடியையும், அத்துடன் ஆப்பிரிக்க அடிமை வர்த்தகத்தையும் வெப்ப மண்டலத்துக்குரிய செழிப்புடன் தழைத்தோங்கச் செய்தது என்பதோடு, அடிமை வளர்ப்பை எல்லையோர அடிமையுடைமை மாநிலங்களின் தலையாயத் தொழிலாய் மாற்றவும் செய்தது என்பதில் எள்ளளவும் சந்தேகமில்லை. 1790இல் அடிமைகள் பற்றிய முதல் கணக்கெடுப்பு அமெரிக்க ஐக்கிய அரசில் நடைபெற்ற போது, அவர்களது தொகை 697,000 ஆக இருந்தது; 1861இல் அது கிட்டத்தட்ட நான்கு மிலியனை எட்டி விட்டது. மறுபுறம், ஆங்கிலேயக் கம்பளித் தொழிற்சாலைகளின் உதயமானது பயிர் நிலத்தைப் பையப்பைய ஆட்டு மேய்ச்சல் நிலமாக மாற்றியதோடு, விவசாயத் தொழிலாளர்களில் ஒரு பகுதியை வேண்டாத உபரியாக்கி, பெருந்திரளாய் அவர்கள் நகரங்களுக்குத் துரத்தப்படுவதற்கு வழிகோலியது என்பதிலும் சந்தேகமில்லை. கடந்த இருபதாண்டு காலத்தில் அயர்லாந்தின் மக்கள்தொகை கிட்டத்தட்ட சரிபாதியாகக் குறைந்து விட்டது; இப்போதும் கூட அயர்லாந்து, அதன் நிலப்பிரபுகள் மற்றும் ஆங்கிலேயக் கம்பளித் தொழிலதிபர்களின் தேவைகளுக்கு முற்றிலும் இணங்கும் விதத்தில், அயர்லாந்துவாசிகளின் தொகையைக் குறைத்துச் செல்லும் போக்கு தொடர்ந்து நிகழ்ந்து வருகிறது.

உழைப்பின் இலக்குப் பொருள் பூர்த்தியாவதற்காகக் கடந்து செல்ல வேண்டியிருக்கும் பூர்வாங்க அல்லது இடைநிலைக் கட்டங்கள் எதிலும் இயந்திர சாதனம் பிரயோகிக்கப்படும் போது, அக்கட்டங்களில் உற்பத்தி அதிகமாகிறது. அதே நேரத்தில் இயந்திர வழி உற்பத்தியிலிருந்து பொருட்களைப் பெற்றுச் செயல்படுகிற கைத்தொழில்கள் அல்லது பட்டறைத் தொழில்களில் உழைப்புக்கான வேண்டலும் அதிகமாகிறது. உதாரணமாக, இயந்திர வழி நூற்பு கைத்தறி நெசவாளர்களுக்கு மிக மலிவாகவும் அபரிமிதமாகவும்

[619] இங்கிலாந்திலும் வேல்சிலும், 1861இல், இயந்திர சாதனம் தயாரிப்பதில் வேலை செய்து வந்தவர்கள் 60,807 பேர். அதிபர்களும் அவர்களது எழுத்தர்கள் முதலானோரும், இத்தொழிலோடு தொடர்புள்ள சகல முகவர்களும் வியாபாரிகளும் இத்தொகையில் அடங்குவர். ஆனால் தையல் இயந்திரங்கள் போன்ற சிறு இயந்திரங்களைத் தயாரிப்போரும், அதே போல் கதிர்கள் போன்ற இயந்திர வேலையுறுப்புகளைத் தயாரிப்போரும் இதில் அடங்கவில்லை. கட்டடப் பொறியாளர்களின் மொத்தத் தொகை 3,329.

[620] இரும்பு மிக முக்கியமான கச்சாப் பொருட்களில் ஒன்று என்பதால் இங்கே இதைக் கூற விரும்புகிறேன்: 1861இல் இங்கிலாந்திலும் வேல்சிலும் 125,771 இரும்பு வார்ப்படத் தொழிலாளர்கள் இருந்தனர்; இவர்களில் 123,430 பேர் ஆண்கள், 2,341 பேர் பெண்கள். ஆண்களில் 30,810 பேர் 20 வயதுக்கு உட்பட்டவர்கள், 92,620 பேர் 20 வயதுக்கு மேற்பட்டவர்கள்.

நூல் வழங்கியதால், அவர்கள் ஆரம்பத்தில் முதலீட்டை அதிகப் படுத்தாமலே முழு நேரம் வேலை செய்ய முடிந்தது. அதற்கேற்ப அவர்களது சம்பாத்தியமும் உயர்ந்தது.[621] எனவேதான், ஏராள மானோர் பருத்தி நெசவுத் தொழிலை மேற்கொண்டனர். ஜென்னி யாலும், திராசிலாலும், மியூலாலும் இவ்விதம் அதிகரித்து வந்த நெசவாளர் தொகை 800,000 ஆயிற்று. இந்நிலையில் விசைத்தறி இதற்கு முடிவு கட்டியது. இதே போல, இயந்திர சாதனம் அபரி மிதமாகத் துணி உற்பத்தி செய்ததால், தையற்காரர்கள், தையற் காரிகள், ஊசிப் பெண்கள் ஆகியோரின் தொகை அதிகரித்துச் சென்றது. தையல் இயந்திரத்தின் வருகை இதற்கு முற்றுப்புள்ளி வைத்தது.

இயந்திர சாதனம் ஒப்பளவில் சிறு தொகையிலான தொழி லாளர்களின் துணை கொண்டு கச்சாப் பொருட்கள், இடைநிலை உற்பத்திப் பொருட்கள், உழைப்புக் கருவிகள் முதலானவற்றின் திரளைப் பெருகச் செய்வதற்கேற்ற விகிதத்தில், இந்தக் கச்சாப் பொருட்களையும் இடைநிலை உற்பத்திப் பொருட்களையும் பூர்த்தி யான பண்டங்களாக மாற்றும் வேலை எண்ணற்ற கிளைகளாகப் பிரிந்து போகிறது; சமுதாயப் பொருளுற்பத்தியின் பல்வகைமை பெருகுகிறது. பட்டறைத் தொழிலை விட ஆலைத் தொழில் சமு தாய உழைப்புப் பிரிவினையை அளவிடற்கரிய முறையில் முன் னெடுத்துச் செல்கிறது; ஏனெனில் தான் வசப்படுத்திக் கொள்கிற தொழில்களின் உற்பத்தித் திறனை அது இன்னும் மிக விரைவாய் உயர்த்துகிறது.

இயந்திர சாதனத்தின் உடனடி விளைவு உபரி-மதிப்பையும், உபரி-மதிப்பு உருக்கொண்டுள்ள உற்பத்திப் பண்டத் திரளையும் பெருகச் செய்வதாகும். முதலாளிகளும், அவர்களைச் சார்ந்திருப் பவர்களும் நுகர்கிற பண்டங்கள் இன்னும் ஏராளமாய்ப் பெருகப் பெருக, இச்சமுதாயப் பிரிவுகளும் அவ்வாறே பெருகுகின்றன. அவர்களது செல்வப் பெருக்கமும், வாழ்க்கையின் அவசியப் பண்டங்களை உற்பத்தி செய்வதற்கு அவசியமான தொழிலாளர் களது ஒப்பளவிலான எண்ணிக்கைக் குறைவும் சேர்ந்து, புதிய சொகுசுத் தேவைகளையும் அத்தேவைகளை நிறைவு செய்யும் சாதனங்களையும் தோற்றுவிக்கின்றன. சமுதாயத்தின் பொருளுற் பத்தியில் முன்னிலும் பெரிய பகுதி உபரி-உற்பத்தியாக மாற்றப் படுகிறது; இந்த உபரி-உற்பத்தியில் முன்னிலும் பெரிய பகுதி

---

621 "வயது வந்த நான்கு பேரைக் கொண்ட ஒரு குடும்பம், சென்ற நூற்றாண்டின் இறுதியிலும் இந்த நூற்றாண்டின் ஆரம்பத்திலும், குழந்தைகள் இருவரை நூல் சுற்று வோராக கொண்டு, தினசரி பத்து மணி நேரம் உழைத்து வாரத்துக்கு £4 சம்பாதித் தது....வேலை மிகவும் அவசரமாக இருந்தால், இன்னும் அதிகம் சம்பாதிக்க முடிந் தது....அதற்கு முன்பெல்லாம் அவர்கள் நூல் பற்றாக்குறையால் அவதிப்பட்டனர்." (காஸ்கெல், முன் வந்தது, பக்கம் 25-27.)

மேலும் மேலும் செப்பஞ் செய்யப்பட்டு, பல்வேறுபட்ட உருவங்களில் நுகர்வுக்காக வழங்கப்படுகிறது. வேறுவிதமாகச் சொன்னால், சொகுசுப் பண்டங்களின் உற்பத்தி அதிகரிக்கிறது.[622] செப்பஞ்செய்யப்பட்ட பல்வேறு வகை உற்பத்திப் பண்டங்களுக்கு உலகச் சந்தைகளுடனான புதிய உறவுகளும் காரணமாகும்; இவ்வுறவுகளை நவீனத் தொழில் துறை தோற்றுவிக்கிறது. முன்னிலும் பெரிய அளவுகளில் உள்நாட்டு உற்பத்திப் பண்டங்களுக்குப் பிரதியாக அயல்நாட்டு சொகுசுப் பண்டங்கள் பரிவர்த்தனை செய்து கொள்ளப்படுவது மட்டுமல்லாமல், அயல்நாட்டுக் கச்சாப் பொருட்கள்,பகுதிப் பொருட்கள், இடைநிலை உற்பத்திப் பொருட்கள் ஆகியவை முன்னிலும் பெருந்திரளாக உள்நாட்டுத் தொழில்களில் உற்பத்திச் சாதனங்களாகப் பயன்படுத்தப்படுகின்றன. உலகச் சந்தைகளுடனான இந்த உறவுகளின் விளைவாக, உழைப்புக்கான வேண்டல் போக்குவரத்துத் தொழில்களில் அதிகரிக்கிறது; இத்தொழில்கள் ஏராளமான வகைகளாகப் பிரிந்து போகின்றன.[623]

உற்பத்திச் சாதனங்களிலும் வாழ்வுச் சாதனங்களிலுமான அதிகரிப்பு தொழிலாளர்களின் தொகையில் ஒப்பளவிலான குறைவுடன் சேர்ந்து வந்த போதிலும், கால்வாய்கள், கப்பல் துறைகள், குகைப் பாதைகள், பாலங்கள் இன்னபிறவற்றை அமைப்பதில் உழைப்புக்கான வேண்டலைப் பெருகச் செய்கிறது. இப்பணிகள் தூரத்து எதிர்காலத்தில்தான் பலன் தரக் கூடியவை. புதிய உழைப்புக் களங்களைப் படைக்கிற புத்தம்புதிய உற்பத்திக் கிளைகளும், இயந்திர சாதனத்தின் நேரடி விளைவாகவோ, அல்லது அவற்றால் தோற்றுவிக்கப்படும் பொதுவான தொழில் துறை மாற்றங்களின் நேரடி விளைவாகவோ அமைக்கப்படுகின்றன. ஆனால் இக்கிளைகள் பொதுவான பொருளுற்பத்தியில், வளர்ச்சியடைந்த நாடுகளிலும் கூட முக்கிய இடம் வகிப்பதில்லை. அவற்றில் வேலை கிடைக்கப் பெறுகிற தொழிலாளர்களின் தொகை, மிக மிகப் பண்படாத வடிவத்திலான கையுழைப்பில் அத்தொழில்கள் தோற்றுவிக்கும் வேண்டலுக்கு நேர் விகிதமுடையதாகும். எரிவாயுத் தொழில், தந்தி, புகைப்படத் தொழில், நீராவிக் கப்பற் போக்குவரத்து, இரயில்வேக்கள் இவை இப்போது இவ்வகையைச் சேர்ந்த முக்கியத் தொழில்களாகும். இங்கிலாந்துக்கும் வேல்சுக்குமான 1861ஆம் வருடத்திய மக்கள்தொகைக் கணக்கெடுப்பின் படி,

---

622 ''இங்கிலாந்தில் தொழிலாளி வர்க்கத்தின் நிலைமை'' என்ற நூலில் பி. எங்கெல்ஸ், இதே சொகுசுப் பண்டங்களை உற்பத்தி செய்கிற ஏராளமானோரின் அவல நிலையைச் சுட்டிக்காட்டுகிறார். ''குழந்தையுழைப்பு ஆணையத்தின் அறிக்கைகளிலும்'' மிகப் பல உதாரணங்களைப் பார்க்கலாம்.

623 1861இல் இங்கிலாந்திலும் வேல்சிலும் வர்த்தகச் சேவையில் 94,665 மாலுமிகள் இருந்தனர்.

எரிவாயுத் தொழிலில் (எரிவாயுத் தொழிற்கூடங்கள், இயந்திரப் பொறியமைவு உற்பத்தி, எரிவாயு. நிறுமங்களின் சேவகர்கள் முதலான வகையில்) 15,211 பேரையும், தந்தித் துறையில் 2,399 பேரையும், புகைப்படத் தொழிலில் 2,366 பேரையும், நீராவிக் கப்பற் போக்குவரத்தில் 3,570 பேரையும், இரயில்வேக்களில் 70,599 பேரையும் காண்கிறோம்—இவர்களில் ஏறக்குறைய நிரந்தரமாக வேலை பெற்றுள்ள தேர்ச்சியற்ற "நாவிகளும்," நிர்வாக, வாணிப ஊழியர் அனைவரும் சேர்ந்து சுமார் 28,000 பேர் ஆவர். எனவே, இந்த ஐந்து புதிய தொழில்களிலும் வேலை பெற்றுள்ளவர்களின் மொத்தத் தொகை 94,145 ஆகிறது.

கடைசியாக, நவீனத் தொழில் துறையின் அசாதாரண உற்பத்தித் திறன், மற்றெல்லா உற்பத்தித் துறைகளிலும் உழைப்புச் சக்தி முன்னிலும் விரிவான அளவிலும் முன்னிலும் மும்முரமான முறையிலும் சுரண்டப்படுவதற்கு வழி செய்கிறது என்பதால், மேலும் மேலும் பெரிய தொழிலாளி வர்க்கப் பகுதியை உற்பத்திக்குதவாத விதத்தில் வேலை வாங்குவதற்கும், ஆதலால் வேலைக்காரர்கள், வேலைக்காரிகள், கையாட்கள் முதலானோர் உள்ளிட்ட ஒரு வேலைக்கார வர்க்கத்தின் பெயரால், புராதன வீட்டு அடிமைகளை—இடையறாது விரிவடையும் அளவில்—புனருத்தாரணம் செய்வதற்கும் இடமளிக்கிறது. 1861ஆம் வருட மக்கள்தொகைக் கணக்கெடுப்பின் படி, இங்கிலாந்து, வேல்ஸ் ஆகியவற்றின் மக்கள்தொகை 20,066,244 ஆக இருந்தது; இவர்களில் 9,776,259 பேர் ஆண்கள், 10,289,965 பேர் பெண்கள். வயோதிகத்தாலோ வயது போதாமையாலோ வேலை செய்ய முடியாதவர்களையும், உற்பத்தியில் ஈடுபடாத சகல மாதர் கள், இளம் வயதினர் மற்றும் குழந்தைகளையும், அரசு அலுவலர் கள், பாதிரிமார்கள், வழக்கறிஞர்கள், சிப்பாய்கள் போன்ற "சித்தாந்த" வர்க்கங்களையும் மேலும் வாடகை, வட்டி முதலான வற்றின் வடிவத்தில் பிறர் உழைப்பை நுகர்வதன்றி எந்த வேலையு மில்லாத அனைவரையும், கடைசியாக வக்கில்லாதார் [paupers], ஊர்சுற்றிகள் [vagabonds] மற்றும் குற்றவாளிகளையும் இந்த மக்கள்தொகையிலிருந்து கழித்து விட்டால், விருத்தமான எண்ணிக் கையில் சகல வயதினரும் இருபாலாருமான எட்டு மிலியன் பேர் மீதமிருப்பர்; எவ்விதத்திலேனும் தொழில் துறை, வாணிபம் அல்லது நிதித் துறையில் ஈடுபட்டுள்ள ஒவ்வொரு முதலாளியும் இந்தத் தொகையில் அடக்கம். இந்த 8 மிலியனில்:

| | ஆட்கள் |
|---|---|
| விவசாயத் தொழிலாளர்கள் (ஆடு மேய்ப்போர், வேலையாட்கள், சாகுபடியாளர்களின் வீட்டோடிருக்கும் வேலைக்காரிகள் உட்பட)................................ | 1,098,261 |

| | |
|---|---|
| பருத்தி, கம்பளி, முறுக்குக் கம்பளி, வெண் சணல், ஹெம்ப், பட்டு, சணல் தொழிற்சாலைகளிலும் இயந்திர சாதனத்தைக் கொண்டு காலுறை தயாரித்தல், சித்திரப் பின்னல் ஆகியவற்றிலும் வேலை செய்கிற அனைவரும்.......... | 642,607[624] |
| நிலக்கரிச் சுரங்கங்களிலும், உலோகச் சுரங்கங்களிலும் வேலை செய்கிற அனைவரும்...................................... | 565,835 |
| உலோகத் தொழில்களிலும் (ஊது உலைகள், உருட்டாலைகள் முதலானவை) சகலவிதமான உலோகத் தயாரிப்புகளிலும் வேலை செய்கிற அனைவரும்.. | 396,998[625] |
| வேலைக்கார வர்க்கம்......................... | 1,208,648[626] |

ஜவுளி ஆலைகளிலும் சுரங்கங்களிலும் வேலை செய்கிறவர்களை எல்லாம் கூட்டிப் பார்த்தால் 1,208,442 பேர் ஆவர்; ஜவுளி ஆலைகளிலும் உலோகத் தொழில்களிலும் வேலை செய்வோரைக் கூட்டிப் பார்த்தால் 1,039,605 பேர் ஆவர்; இவ்விரு தொகைகளும் நவீன கால வீட்டு அடிமைகளின் தொகையை விடக் குறைவாகும். இயந்திர சாதனத்தினது முதலாளித்துவப் பிரயோகத்தின் அற்புத விளைவுதான் என்னே!

## பிரிவு 7.—தொழிலாள மக்களை ஆலைத் தொழில் விலக்குவதும் ஈர்ப்பதும். பருத்தித் தொழிலில் நெருக்கடிகள்

புதிய இயந்திர சாதனத்தைப் புகுத்துவதால், இவ்வியந்திர சாதனம் முதலில் எவற்றோடு போட்டியிடுகிறதோ அந்தப் பழைய கைத்தொழில்களிலும், பட்டறைத் தொழில்களிலும் தொழிலாளர்களுக்குக் கேடு விளைகிறது என்பதை தகுதி வாய்ந்த அரசியல் பொருளாதார அறிஞர்கள் எல்லாம் ஒப்புக் கொள்கிறார்கள்.

---

624 இவர்களில் 177,596 பேர் மட்டுமே 13 வயதுக்கு மேற்பட்ட ஆண்கள்.

625 இவர்களில் 30,501 பேர் பெண்கள்.

626 இவர்களில் 137,447 பேர் ஆண்கள். தனியார் இல்லங்களில் வேலை செய்யாத யாரும் 1,208,648 பேரில் சேர்க்கப்படவில்லை. 1861க்கும் 1870க்குமிடையே ஆண் வேலைக்காரர்களின் தொகை கிட்டத்தட்ட இரு மடங்காயிற்று; அது 267,671ஆக அதிகரித்தது. 1847ஆம் ஆண்டில் (நிலப் பிரபுகளின் சொந்தக் காடுகளுக்கான) வேட்டை மிருகக் காப்பாளர்கள் 2,694 பேரும், 1869இல் 4,921 பேரும் இருந்தனர். லண்டன் கீழ் நடுத்தர வர்க்கத்தின் இல்லங்களில் இளம் வயது வேலைக்காரப் பெண்கள் பேச்சு வழக்கில் ''ஸ்லேவீக்கள்'' என்று அழைக்கப்படுகின்றனர்.

ஆலைத் தொழிலாளி அடிமைப்படுகிறார் என அநேகமாக அவர்கள் எல்லாருமே வருத்தம் தெரிவிக்கின்றனர். அவர்கள் கையாளுகிற முக்கியத் துருப்புச் சீட்டு எது? இயந்திர சாதனம் புகுத்தப்பட்டு, வளர்ச்சியடைகிற காலத்தின் பயங்கரங்கள் தணிந்து போன பின், நீண்ட கால நோக்கில் அவை உழைப்படிமைகளின் தொகையைக் குறைப்பதற்கு பதில் அதிகமாக்குகின்றன என்பதே! ஆம், அரசியல் பொருளாதாரம் இதைச் சொல்லித்தான் ஆனந்தக் கூத்தாடுகிறது. முதலாளித்துவப் பொருளுற்பத்தி முறையின் முத்தாய்ப்பான இயந்திர சாதன வழிப்பட்ட ஆலைத் தொழிலே கூட வளர்ந்து உருப்பெற்ற பிற்பாடு, முன்பு ஆரம்பத்தில் அது வேலையில்லாமல் தெருவில் நிறுத்தியவர்களைக் காட்டிலும் அதிகமான தொழிலாள மக்களைக் கசக்கிப் பிழிகிறது என்ற இந்தத் தத்துவத்தை—முதலாளித்துவப் பொருளுற்பத்தி முறை இயற்கையால் கட்டளையிடப்பட்ட நிரந்தர அவசியமாகும் என்று நம்புகிற ''பரோபகாரி'' ஒவ்வொருவருக்கும் பேய்த்தனம் வாய்ந்ததாய்த் தோன்றும் இந்தத் தத்துவத்தை—சொல்லித்தான் அரசியல் பொருளாதாரம் அகமகிழ்கிறது.[627]

ஆங்கிலேய முறுக்குக் கம்பளி மற்றும் பட்டுத் தொழிற்சாலைகளின் எடுத்துக்காட்டுகளிலிருந்து நாம் பார்த்தது போல, சில நேர்வுகளில், ஆலைத் தொழிலின் அசாதாரண விரிவாக்கம், அதன்

---

627 மாறாக, ஆலைத் தொழிலின் இறுதி விளைவு தொழிலாளர்களின் தொகை அறுதியாகக் குறைவதே என்று கானில் கருதுகிறார்; இந்தத் தொழிலாளர்களைப் பலியிட்டுத்தான் மேலும் மேலும் அதிகமான ''கண்ணியவான்கள்'' வாழ்க்கை நடத்துகிறார்கள்; ''குறைவகற்றி நிறைவு செய்யத்தக்க குறைவிலா நிறைவுகள்'' என்ற அவர்களது பிரசித்தமான இயல்புகளை வளர்த்துக் கொள்கிறார்கள். பொருளுற்பத்தியின் இயக்கத்தை கானில் புரிந்து கொள்ளவில்லை என்ற போதிலும், இயந்திர சாதனத்தைப் புகுத்துவதானது முயற்சி வாய்ந்த தொழிலாளர்களை வக்கற்றோராக மாற்றுகிறது என்றால், அதன் வளர்ச்சி அது ஒடுக்கியிருப்பதை விட அதிக உழைப்படிமைகளை தோற்றுவிக்கிறது என்றால், இயந்திர சாதனம் மிகவும் அழிவார்ந்த ஏற்பாடாய் இருக்க வேண்டும் என்பதையாவது உணர்கிறார். அவரது கண்ணோட்டத்தின் அலங்கோலத்தை அவரது சொற்களால்தான் வெளிப்படுத்த முடியும்: ''உற்பத்தி செய்யவும் நுகரவும் விதிக்கப்பட்ட வர்க்கங்கள் சிறுத்துப் போகின்றன. உழைப்பை ஒழுங்கியக்கி, மக்கள் அனைவருக்கும் இளைப்பாறலும், ஆறுதலும், அறிவும் தரும் வர்க்கங்கள் பெருத்துப் போகின்றன....உழைப்புக்காகும் செலவு குறைவதாலும், சரக்குகள் ஏகமாய்க் கிடைப்பதாலும் நுகர்வுப் பண்டங்களின் குறைந்த விலையாலும் விளையும் நன்மைகளையெல்லாம் இந்த வர்க்கங்கள் தமதாக்கிக் கொள்கின்றன. இந்தத் தலைமையில், மனித வர்க்கம் மேதைமையின் மகோன்னதப் படைப்புகளை உருவாக்கிச் சிறப்படைகிறது; சமயத்தின் மாயமான ஆழ்நிலைகளை ஊடுருவிப் பார்க்கிறது; உன்னதமான நல்லொழுக்கக் கோட்பாடுகளை ('நன்மைகளையெல்லாம் தமதாக்கிக் கொள்ளும்' கோட்பாடுகளை) நிறுவுகிறது; சுதந்தரத்தையும் ('உற்பத்தி செய்ய விதிக்கப்பட்ட வர்க்கங்களின்' சுதந்தரத்தை?) அதிகாரத்தையும், கீழ்ப்படிதலையும் நீதியையும், கடப்பாட்டையும் மனிதத்துவத்தையும் பாதுகாப்பதற்கான நியதிகளை நிலைநாட்டுகிறது.'' இந்தப் பிதற்றலுக்குப் பார்க்கவும்: ''Des Systemes d'Economie Politique, & c., எழுதியவர் திருவாளர் ஷார்ல் கானில்,'' 2ஆம் பதிப்பு, பாரிஸ், 1821, பாகம் I, பக்கம் 224, மற்றும் பக்கம் 212.

வளர்ச்சியின் குறிப்பிட்ட கட்டத்தில், வேலை செய்யும் தொழிலாளர்களின் தொகையில் ஒப்பீட்டுக் குறைவை மட்டுமல்லாமல் அறுதியான குறைவையும் ஏற்படுத்தக் கூடும் என்பது உண்மைதான். 1860ஆம் ஆண்டில் ஐக்கிய முடியரசிலுள்ள தொழிற்சாலைகள் அனைத்தையும் பற்றி ஒரு விசேஷக் கணக்கெடுப்பு பாராளுமன்றத்தின் உத்தரவுப் படி நடைபெற்ற போது, லங்காஷயர், செஷயர், யார்க்ஷயர் ஆகியவற்றில் தொழிற்சாலை ஆய்வாளர் திரு பேக்கரின் வட்டத்தில் சேர்க்கப்பட்டிருந்த பகுதிகளில் தொழிற்சாலைகளின் எண்ணிக்கை 652ஆக இருந்தது; இவற்றில் 570 தொழிற்சாலைகளில் 85,662 விசைத்தறிகளும், 6,819,146 கதிர்களும் (இரட்டிக்கும் கதிர்களைச் சேர்க்காமல்) இருந்தன. இவை 27,439 (நீராவிக்) குதிரைத் திறனையும், 1,390 (நீர் விசைக்) குதிரைத் திறனையும், 94,119 ஆட்களையும் ஈடுபடுத்தின. 1865ஆம் ஆண்டில் அதே தொழிற்சாலைகளில் 95,163 தறிகளும், 7,025,031 கதிர்களும் இருந்தன. இவை 28,925 நீராவிக் குதிரைத் திறனையும் 1,445 நீர்விசைக் குதிரைத் திறனையும் ஈடுபடுத்தின; 88,913 ஆட்களை வேலை வாங்கின. எனவே, 1860க்கும் 1865க்குமிடையே தறிகளிலான அதிகரிப்பு 11% ஆகவும், கதிர்களிலான அதிகரிப்பு 3% ஆகவும், எஞ்சின் விசைத் திறனிலான அதிகரிப்பு 3% ஆகவும் இருக்க, வேலை செய்த ஆட்களின் தொகை 5½% குறைந்தது.[628] 1852க்கும் 1862க்குமிடையே ஆங்கிலேயக் கம்பளிப் பட்டறைத் தொழிலில் கணிசமான பெருக்கம் நிகழ்ந்தது; ஆனால் அதில் வேலை செய்த ஆட்களின் தொகையோ அநேகமாய் மாறாமலிருந்தது. புதிய இயந்திரங்களைப் புகுத்தியதானது முன்சென்ற காலங்களில் செலவிடப்பட்ட உழைப்பை எந்த அளவுக்கு நீக்கம் செய்து விட்டது என்பதை இது காட்டுகிறது.[629] வேலைக்கமர்த்தப்படும் ஆட்களின்

[628] "தொழிற்சாலை ஆய்வாளர் அறிக்கைகள், 1865, அக்டோபர் 31," பக்கம் 58 முதலானவை. ஆயினும் அதே நேரத்தில், அதிகரித்த தொகையிலான ஆட்களுக்கு 11,625 தறிகள், 628,576 கதிர்கள், நீராவி, நீர்விசை ஆகியவற்றின் மொத்தக் குதிரைத் திறன் 2,695 இவற்றோடு கூடிய 110 புதிய ஆலைகளில் வேலை வாய்ப்பு தயாராய் இருந்தது. (முன் வந்தது.)

[629] "1862 அக்டோபர் 31க்கான தொ. ஆ. அறிக்கைகள்," பக்கம் 79. 1871 இறுதியில், தொழிற்சாலை ஆய்வாளர் திரு அ. ரெட்கிரேவ் பிராட்ஃபோர்டில், நியூ மெக்கானிக்ஸ் இன்ஸ்டிட்யூஷனில் ஆற்றிய சொற்பொழிவில் கூறியதாவது: "கடந்த சில காலமாக எனக்குப் பளிச்செனப் படுவது கம்பளித் தொழிற்சாலைகளின் மாறிய தோற்றமாகும். முன்னதாக அவற்றில் மாதர்களும் குழந்தைகளும் நிறைந்திருந்தனர்; இப்போது இயந்திர சாதனம் சகல வேலைகளையும் செய்வதாகத் தோன்றுகிறது. ஒரு தொழிலதிபரிடம் நான் இதற்கு விளக்கம் கேட்டதற்கு, அவர் பின்வருமாறு கூறினார்: 'பழைய முறையில் என்னிடம் 63 பேர் வேலை செய்தனர். மேம்பாடு செய்த இயந்திர சாதனங்களைப் புகுத்திய பின்னர் எனது ஆட்களை 33ஆகக் குறைத்துக் கொண்டேன்; சமீபத்தில் விரிவான புதிய மாற்றங்களின் விளைவாக, அந்த 33ஐ 13ஆகக் குறைக்கிற நிலையில் இருக்கிறேன்."

தொகையிலான அதிகரிப்பு சில சந்தர்ப்பங்களில் வெளித் தோற்றத் துக்கான அதிகரிப்பே; அதாவது அது ஏற்கெனவே நிறுவப்பட்ட தொழிற்சாலைகளின் விரிவாக்கத்தின் விளைவல்ல, தொடர்புள்ள தொழில்களை படிப்படியாக இணைத்துக் கொள்வதன் விளைவே. எடுத்துக்காட்டாக, பருத்தித் தொழிலில், 1838க்கும் 1856க்கும் இடையில் விசைத்தறிகளிலும் அவற்றால் வேலை வாங்கப்பட்ட ஆட்களிலுமான அதிகரிப்பு, இத்தொழிற் கிளையினது விரிவாக்கத் தின் விளைவுதான்; ஆனால், ஏனைய தொழில்களில் இவ் வதிகரிப்பின் காரணம், முன்பெல்லாம் மனித சக்தியைக் கொண்டு இயக்கப்பட்டு வந்த சமுக்காளத் தறிக்கும், ரிப்பன் தறிக்கும், துணித் தறிக்கும் நீராவிச் சக்தியைப் பிரயோகித்ததாகும்.[630] இதனால்தான் பின்குறிப்பிட்ட தொழில்களில் ஆட்களின் அதிகரிப்பு வேலை செய்வோரின் மொத்தத் தொகையில் ஏற்பட்ட குறைவின் அறிகுறி யாகவே இருந்தது. இறுதியாக, உலோகத் தொழில்களில் எங்குமே இளம் வயதினரும் (18 வயதுக்குட்பட்டோர்) மாதர்களும், குழந்தை களும் ஆலைத் தொழிலாளர் வர்க்கத்தில் மிகப்பெரும்பான்மை யினராக இருப்பதைக் கருதாமலே இந்தப் பிரச்சினையைப் பரிசீலித்திருக்கிறோம்.

ஆயின், இயந்திர சாதனம் பெருந்திரளான ஆட்களை உள்ள படியே அகற்றி விட்டு காரியாம்சத்தில் அவர்களுக்கு பதிலி யாகிறது என்றாலும், அகற்றப்பட்ட பட்டறைத் தொழிலாளர்கள், கைவினைஞர்கள் ஆகியோரை விட ஆலைத் தொழிலாளர்கள் — குறிப்பிட்ட தொழிலில் மேலும் ஆலைகளைக் கட்டுவதன் மூலமும், பழைய ஆலைகளை விரிவாக்குவதன் மூலமும் — தொகையில் அதிகமாகி விடலாம் என்பது புரிந்து கொள்ளத் தக்கதே. உதாரண மாக, பழைய உற்பத்தி முறையில், £500 மூலதனம் வாரந்தோறும் ஈடுபடுத்தப்படுவதாகவும், ஐந்திலிரு பங்கு மாறா-மூலதனமென்றும் ஐந்தில் மூன்று பங்கு மாறும்-மூலதனமென்றும், அதாவது £200 உற்பத்திச் சாதனங்களில் செலவிடப்படுவதாகவும், £300 — தலைக்கு £1 என்ற வீதத்தில் — உழைப்புச் சக்திக்காகச் செலவிடப் படுவதாகவும் கொள்வோம். இயந்திர சாதனங்களைப் புகுத்தியதும் இந்த மூலதனத்தின் இயைபு மாறிப் போகிறது. அது ஐந்தில் நான்கு பங்கு மாறா-மூலதனத்தையும், ஐந்திலொரு பங்கு மாறும்-மூலதனத்தையும் கொண்டிருப்பதாகக் கொள்வோம்: அதாவது இப்போது £100 மட்டுமே உழைப்புச் சக்திக்காகச் செலவாகிறது. இதன் விளைவாகத் தொழிலாளர்களில் மூன்றிலிரு பங்கினர் வேலை இழக்கின்றனர். இப்போது தொழில் விரிவடைந்து, ஈடுபடுத்தப்படும் மொத்த மூலதனம், மாறாத நிலைமைகளில்

630 பார்க்கவும்: "தொ. ஆ. அறிக்கைகள், 1856 அக்டோபர் 31க்கானவை," பக்கம் 16.

£1,500ஆக அதிகரித்தால், தொழிலாளர்களின் தொகை இயந்திர சாதனத்தைப் புகுத்து முன் இருந்த அதே தொகையான 300ஆக அதிகரிக்கும். மூலதனம் மேலும் வளர்ந்து £2,000 என்றானால், 400 பேர், அதாவது பழைய நிலவரத்தில் இருந்ததை விட மூன்றி லொரு பங்கு அதிகமானோர் வேலை செய்வர். உள்ளபடியே அவர் களது தொகை 100 அதிகரித்துள்ளது. ஆனால் ஒப்பளவில், அதாவது முன்னீடு செய்யப்படும் மொத்த மூலதனத்துடனான விகிதாசாரத்தில் அத்தொகை 800 குறைந்துள்ளது; ஏனென்றால் £2,000 மூலதனம் பழைய நிலவரத்தில் 400 பேருக்குப் பதிலாக 1,200 பேருக்கு வேலை கொடுத்திருக்கும். எனவே, ஆட்களின் தொகையில் ஏற்படும் குறைவு உள்ளபடியே ஏற்படும் அதிகரிப் புக்கு ஒப்பளவில் இசைவானதே. மொத்த மூலதனம் அதிகரிக்கை யில், அதன் இயைபு இருந்தவாறே இருக்கிறது, ஏனெனில் உற்பத்தி நிலைமைகள் மாறாதுள்ளன என்று மேலே அனுமானித்துக் கொண் டோம். ஆனால் இயந்திர சாதன உபயோகத்தில் ஒவ்வொரு முன்னேற்றத்துடனும், மூலதனத்தின் மாறாக் கூறு — இயந்திர சாதனம், கச்சாப் பொருள் முதலானவற்றாலான அந்தப் பகுதி — அதிகரிக்கிற அதே வேளையில், உழைப்புச் சக்திக்குச் செலவிடப் படும் பகுதியான மாறும் கூறு குறைகிறது என்பதை நாம் ஏற் கெனவே பார்த்துள்ளோம். வேறெந்த உற்பத்தி முறையிலும், ஆலைத் தொழிலில் போல, மேம்பாடு அவ்வளவு தொடர்ச்சியான தாகவும், ஈடுபடுத்தப்படுகிற மூலதனத்தின் இயைபு அவ்வளவு ஓயாமல் மாறுவதாகவும் இருப்பதில்லை என்பதும் நமக்குத் தெரி யும். ஆயினும், இந்த மாற்றங்களில் ஓய்வுக் காலங்கள் தொடர்ச்சி யாகக் குறுக்கிடுகின்றன; இந்த ஓய்வுக் காலங்களில் என்ன நடக் கிறது என்றால், இருக்கிற தொழில்நுட்ப அடிப்படை மீது தொழிற் சாலைகளின் அளவில் மட்டுமே விரிவாக்கம் நடைபெறுகிறது. இது போன்ற காலங்களில் தொழிலாளர்களின் தொகை கூடுகிறது. இவ் வாறு, 1835இல் ஐக்கிய முடியரசின் பருத்தி, கம்பளி, முறுக்குக் கம்பளி, வெண் சணல் மற்றும் பட்டுத் தொழிற்சாலைகளில் தொழி லாளர்களின் மொத்தத் தொகை 354,684தான்; 1861இல் விசைத் தறி நெசவாளர்களின் தொகை மட்டுமே (இருபாலாரும், எட்டு வயது முதற்கொண்டு சகல வயதினரும்) 230,654ஆகி விட்டது. 1838இலும் குடும்பத்தினரையும் சேர்த்து கைத்தறி நெச வாளர்களின் தொகை 800,000ஆகவே இருந்தது என்பதைப் பார்க்கும் போது,[631] (ஆசியாவிலும், ஐரோப்பாவின் கண்டப்

[631] ''கைத்தறி நெசவாளர்களின் துன்ப துயரங்கள் குறித்து முடியரசு ஆணையம் விசாரணை செய்தது. ஆனால், அவர்களது துயரநிலை ஒப்புக்கொள்ளப்பட்டு அதற் காகத் துக்கம் தெரிவிக்கப்பட்ட போதிலும், அவர்களது நிலையை மேம்படுத்தும் பொறுப்பு, அநேகமாகத் தவிர்க்க முடியாமலே காலத்தின் சந்தர்ப்பக் கோலங்களிடமும் மாற்ற நிகழ்வுகளிடமும் விடப்பட்டது;'' இப்போது [20 வருடங்கள் கழித்து!] ''அந்தத்

பகுதியிலும் வேலையிலிருந்து வெளித்தள்ளப்பட்டோரைக் குறிப்பிடாது போனாலும்) நிச்சயமாக இந்த வளர்ச்சி அவ்வளவு முக்கியமானதன்று என்பது தெரியும்.

இது குறித்து இன்னும் சில வார்த்தைகள் கூற வேண்டும். உள்ளபடியே நிலவுகிற அந்தச் சில உறவுகளைக் குறிப்பிட வேண்டும். இவற்றை நமது தத்துவார்த்த ஆய்வு இன்னும் வெளிப்படுத்தியாகவில்லை.

குறிப்பிட்ட தொழிற்கிளையில் ஆலைத்தொழிலானது பழைய கைத்தொழில்களை அல்லது பட்டறைத் தொழிலை பலியிட்டுப் பல்கிப் பெருகிக் கொண்டிருக்கும் வரை, இதன் விளைவு பீரங்கிச் சேனைக்கும் வில்-அம்புகள் ஏந்திய சேனைக்கும் இடையிலான மோதலின் விளைவைப் போலவே ஐயமறத் தெளிவானது. இயந்திர சாதனம் அதன் செயற்களத்தை வெற்றி கொள்கிற இந்த முதற் காலகட்டம், அதன் உதவியால் உண்டாகிற அசாதாரண இலாபங்களின் காரணத்தால், தீர்மானகர முக்கியத்துவமுடையதாகும். இந்த இலாபங்கள், விரைவு கூடிய திரட்டலின் ஆதாரமாக அமைவதோடு, ஓயாது படைக்கப்படுவதும், புதிய முதலீடுகளை எதிர்பார்த்து எந்நேரமும் காத்திருப்பதுமான கூடுதல் சமுதாய மூலதனத்தின் பெரியதொரு பகுதியைச் சலுகை பெற்ற நிலையிலுள்ள உற்பத்தித் துறைக்குள் கவரவும் செய்கின்றன. வேகமான, விறுவிறுப்பான நடவடிக்கை நிறைந்த இந்த முதற்காலகட்டத்தின் தனி அனுகூலங்கள் இயந்திர சாதனம் படையெடுக்கிற ஒவ்வொரு உற்பத்திக் கிளையிலும் உணரப்படுகின்றன. ஆயினும் ஆலைத்தொழில் குறிப்பிட்ட அளவுக்குக் காலூன்றி குறிப்பிட்ட அளவுக்கு முதிர்ச்சியுற்றதுமே, முக்கியமாக அதன் தொழில் நுட்ப அடிப்படையாகிய இயந்திர சாதனத்தைக் கொண்டே உற்பத்தி செய்யும் நிலை ஏற்பட்டதுமே, நிலக்கரிச் சுரங்கத் தொழிலும் இரும்புச் சுரங்கத் தொழிலும் உலோகத் தொழில்களும் போக்குவரத்துச் சாதனங்களும் புரட்சிகரமாக மாற்றப்பட்டதுமே, சுருங்கச் சொல்லின் நவீனத் தொழில் துறையின் பொருளுற்பத்திக்கு வேண்டிய பொதுவான நிலைமைகள் நிறுவப்பெற்றதுமே, இந்த உற்பத்தி முறை நெகிழ்ச்சித் திறன் பெறுகிறது; அதாவது கச்சாப்பொருள் கிடைப்பதிலும், உற்பத்தியான பண்டத்தை விற்பதிலும் ஏற்படக் கூடியது தவிர வேறு தடையேதுமில்லாமல் மடை திறந்தாற்போல் விரைந்து விரிவுபட வளரும் ஆற்றல் பெறுகிறது; ஒரு புறம், இயந்திர சாதனத்தின் உடனடி விளைவு கச்சாப்பொருள் வழங்கலை அதிகமாக்குவதாகும்.[632]

---

துன்பங்கள் அநேகமாய் நீக்கப்பட்டு விட்டதாக நம்பலாம்; விசைத் தறியின் இப்போதைய பெரும் விரிவாக்கத்தாலேயே இது நிகழ்ந்திருக்க வேண்டும்.'' (''தொழிற்சாலை ஆய்வாளர் அறிக்கைகள், 1856 அக்டோபர் 31,'' பக்கம் 15.)

632 இயந்திர சாதனம் கச்சாப் பொருள் உற்பத்தியின் மீது தாக்கம் செலுத்துகிற இதர வழிகள் மூன்றாம் பாகத்தில் குறிப்பிடப்படும்.

உதாரணமாக, பஞ்சு-ஜின் பருத்தியுற்பத்தியைப் பெருகச் செய்தது. மறு புறம், இயந்திர வழி உற்பத்திப் பண்டங்களின் மலிவும், போக்கு வரத்து மற்றும் தொடர்புச் சாதனங்களும் அந்நியச் சந்தைகளை வெற்றி கொள்ள வழி செய்தன. இயந்திர சாதனம் இதர நாடுகளில் கைத்தொழில் உற்பத்தியை நாசமாக்குவதன் மூலம், அவற்றை தனக்கு வேண்டிய கச்சாப் பொருளை வழங்குவதற்கான களங்களாக வலுவந்தமாய் மாற்றுகிறது. இவ்விதத்தில் மகா பிரிட்டனுக்காகப் பருத்தி, கம்பளி, ஹெம்ப், சணல், அவுரி ஆகியவற்றை உற்பத்தி செய்யுமாறு கிழக்கிந்தியா கட்டாயப்படுத்தப்பட்டது.[633] தொடர்ச்சியாய் ஆட்களின் ஒரு பகுதியை ‘‘உபரி’’ ஆக்குவதன் மூலம், நவீனத் தொழில் துறை, அது வேரூன்றிய எல்லா நாடுகளிலும் குடிப்பெயர்ச்சிக்கும் கடல்கடந்த நாடுகளில் குடியேற்றங்கள் அமைவதற்கும் தூண்டுகோலாகிறது. இவ்விதம் தாய்நாட்டுக்கு வேண்டிய கச்சாப் பொருளை விளைவிப்பதற்கான பாளையங்கள் உருவாக்கப்படுகின்றன; இவ்வாறுதான், ஆஸ்திரேலியா கம்பளி வளர்ப்புக்கான குடியேற்றமாக மாற்றப்பட்டது.[634] ஒரு புதிய உழைப்புப் பிரிவினை, உலகு தழுவிய உழைப்புப் பிரிவினை, நவீனத் தொழில் துறையினது தலையாயக் கேந்திரங்களின் தேவைகளுக்குப் பொருத்தமான உழைப்புப் பிரிவினை உதித்தெழுகிறது; அது இவ்வுலகின் ஒரு பகுதியை, பிரதானமாகத் தொழிற் பிரதேசமாய் இருக்கிற மறு பகுதிக்குத் தேவையானவற்றை வழங்கும் பொருட்டு பிரதானமாக விவசாயப் பிரதேசமாய் மாற்றி விடுகிறது. இந்தப் புரட்சியுடன் கூடவே வேளாண்மையிலும் தீவிர மாற்றங்கள் ஏற்படுகின்றன; அவற்றை இங்கே ஆராயத் தேவையில்லை.[635]

---

[633] இந்தியாவிலிருந்து மகா பிரிட்டனுக்குப் பருத்தி ஏற்றுமதி. 1846.—34,540,143 இராத்தல். 1860.—204,141,168 இராத்தல். 1865.—445,947,600 இராத்தல்.

இந்தியாவிலிருந்து மகா பிரிட்டனுக்குக் கம்பளி ஏற்றுமதி. 1846.—4,570,581 இராத்தல். 1860.—20,214,173 இராத்தல். 1865.—20,679,111 இராத்தல்.

[634] நன்னம்பிக்கை முனையிலிருந்து மகா பிரிட்டனுக்குக் கம்பளி ஏற்றுமதி. 1846.—2,958,457 இராத்தல். 1860.—16,574,345 இராத்தல். 1865.—29,920,623 இராத்தல்.

ஆஸ்திரேலியாவிலிருந்து மகா பிரிட்டனுக்குக் கம்பளி ஏற்றுமதி. 1846.—21,789,346 இராத்தல். 1860.—59,166,616 இராத்தல். 1865.—109,734,261 இராத்தல்.

[635] அமெரிக்க ஐக்கிய நாட்டின் பொருளாதார வளர்ச்சியே கூட ஐரோப்பிய, இன்னும் குறிப்பாக ஆங்கிலேய நவீனத் தொழில் துறையால் விளைந்ததுதான். இப்போதைய வடிவத்தில் (1866) அமெரிக்க ஐக்கிய நாட்டை இன்னமும் ஐரோப்பியக் காலனியாகவே கருத வேண்டும். [4ஆம் ஜெர்மன் பதிப்பில் எங்கெல்ஸ் குறிப்பு.—அதன் பின் அது உலகில் இரண்டாவது நிலைக்குரிய தொழில் துறையைக் கொண்ட நாடாக வளர்ச்சி பெற்றுள்ளது; ஆனாலும் தன் காலனித் தன்மையை அடியோடு இழந்து விடவில்லை.]

திரு கிளாட்ஸ்டனின் பிரேரணையின் பேரில், 1831க்கும் 1866க்கும் இடையில் ஐக்கிய முடியரசில் ஏற்றுமதி-இறக்குமதியான சகலவிதமான தானியங்கள், சோளம், மாவு ஆகியவற்றின் மொத்த அளவுகளைப் பற்றித் தகவல் திரட்டுமாறு 1867 பிப்ரவரி 17ஆம் நாள் காமன்ஸ் சபை உத்தரவிட்டது. திரட்டப்பட்ட தகவலின் சுருக்கத்தைக் கீழே தருகிறேன். மாவு இத்தனை குவார்ட்டர் தானியம் என்ற கணக்கில் தரப்படுகிறது. [அட்டவணை—பக்கம் 612இல்.]

தாவித் தாவி விரைந்து விரிவடைகிற ஆலைத் தொழிலில் உள்ளார்ந்துள்ள பேராற்றலும், அது உலகச் சந்தைகளைச் சார்ந்திருப்பதும் தவிர்க்க முடியாமலே ஜுரவேக உற்பத்தியைத் தோற்றுவிக்கின்றன. இதைத் தொடர்ந்து சந்தைகள் மிகையாக நிரம்பி வழியும் நிலை ஏற்படுகிறது; அடுத்து, சந்தைகளின் சுருக்கம் உற்பத்தியை முடங்கச் செய்கிறது. நவீனத் தொழில் துறையின் வாழ்வே மிதமான செயற்பாடு, செழிப்பு, மிகையுற்பத்தி, நெருக்கடி, தேக்கம் ஆகிய காலவட்ட வரிசை ஆகி விடுகிறது. இயந்திர சாதனம் தொழிலாளர்களின் வேலை வாய்ப்பிலும், ஆதலால் வாழ்க்கை நிலைமைகளிலும் தோற்றுவிக்கிற நிச்சயமின்மையும் நிலையின்மையும் தொழிற் சகடத்தின் இந்தக் கால வட்ட மாற்றங்களின் காரணத்தால் சகஜமாகி விடுகின்றன. செழிப்புக் காலங்களில் தவிர, முதலாளிகளிடையே சந்தைகளில் அவரவரின் பங்குக்காக மூர்க்கப் போர் நடைபெறுகிறது. உற்பத்திப் பண்டத்தின் மலிவுக்கு நேர் விகிதத்திலானது இந்தப் பங்கு. உழைப்புச் சக்திக்கு பதிலியாக அமையும் மேம்பட்ட இயந்திர சாதனத்தைப் பிரயோகிப்பதிலும், புதிய உற்பத்தி வழிமுறைகளைப் பிரயோகிப்பதிலும் இந்தப் போராட்டம் தோற்றுவிக்கும் போட்டாப்போட்டி ஒரு புறமிருக்க, தொழிற்

அமெரிக்க ஐக்கிய நாட்டிலிருந்து மகா பிரிட்டனுக்குப் பருத்தி ஏற்றுமதி

1846.—401,949,393 இராத்தல். 1852.—765,630,543 இராத்தல்
1859.—961,707,264 இராத்தல். 1860.—1,115,890,608 இராத்தல்.

அமெரிக்க ஐக்கிய நாட்டிலிருந்து மகா பிரிட்டனுக்கு சோளம் முதலானவற்றின் ஏற்றுமதி

| | 1850 | 1862 |
|---|---|---|
| கோதுமை, அந்தர்........................................ | 16,202,312 | 41,033,503 |
| பார்லி, ,, ........................................ | 3,669,653 | 6,624,800 |
| ஓட்ஸ், ,, ........................................ | 3,174,801 | 4,426,994 |
| ரை, ,, ........................................ | 388,749 | 7,108 |
| மாவு, ,, ........................................ | 3,819,440 | 7,207,113 |
| பக்வீட், ,, ........................................ | 1,054 | 19,571 |
| மக்காச் சோளம், அந்தர்.................................... | 5,473,161 | 11,694,818 |
| பீர் அல்லது பிக், (ஒரு வித பார்லி), அந்தர்...... | 2,039 | 7,675 |
| பட்டாணி, அந்தர்........................................ | 811,620 | 1,024,722 |
| பீன்ஸ், அந்தர்........................................ | 1,822,972 | 2,037,137 |
| மொத்த ஏற்றுமதி.................... | 35,365,801 | 74,083,441 |

## ஐந்தாண்டு காலப்பகுதிகளும் 1866ஆம் ஆண்டும்

| ஆண்டுச் சராசரி | 1831-1835 | 1836-1840 | 1841-1845 | 1846-1850 | 1851-1855 | 1856-1860 | 1861-1865 | 1866 |
|---|---|---|---|---|---|---|---|---|
| இறக்குமதி (குவார்ட்டர்)........ | 1,096,373 | 2,389,729 | 2,843,865 | 8,776,552 | 8,345,237 | 10,913,612 | 15,009,871 | 16,457,340 |
| ஏற்றுமதி (குவார்ட்டர்) | 225,263 | 251,770 | 139,056 | 155,461 | 307,491 | 341,150 | 302,754 | 216,218 |
| ஏற்றுமதியை விட இறக்குமதியின் கூடுதல்................ | 871,110 | 2,137,959 | 2,704,809 | 8,621,091 | 8,037,746 | 10,572,462 | 14,707,117 | 16,241,122 |
| மக்கள்தொகை | | | | | | | | |
| ஒவ்வொரு காலப் பகுதியிலும் ஆண்டு சராசரி................ | 24,621,107 | 25,929,507 | 27,262,569 | 27,797,598 | 27,572,923 | 28,391,544 | 29,381,460 | 29,935,404 |
| ஒவ்வொரு வராலும் ஆண்டுதோறும் நுகரப்படும் சோளம் முதலானவற்றின் சராசரி அளவானது நுகரப்படும் உள்நாட்டு உற்பத்திக்கு மேல் கொண்டிருக்கும் கூடுதல் (குவார்ட்டர்) | 0.036 | 0.082 | 0.099 | 0.310 | 0.291 | 0.372 | 0.501 | 0.543 |

சகடம் ஒவ்வொன்றிலும் சரக்குகளை மலிவாக்கும் பொருட்டு உழைப்புச் சக்தியின் மதிப்புக்கும் கீழே வலுவந்தமாய்க் கூலியை வெட்டிச் செல்ல முயல்கிற நேரமும் வருகிறது.[636]

என்வே, ஆலைத் தொழிலாளர்களின் தொகை பெருகுவதற்கு ஓர் அவசிய நிபந்தனை, ஆலைகளில் முதலீடு செய்யப்படும் மூல தனத் தொகை விகிதாசார முறையில் இன்னும் வெகு துரிதமாய்ப் பெருகுவதாகும். ஆயினும், இப்பெருக்கம் தொழிற் சகடத்தின் ஏற்றவற்றத்தால் கட்டுப்படுத்தப்படுகிறது. இது ஒரு புறம் இருக்க, ஒரு நேரத்தில் புதிய தொழிலாளர்களுக்குரிய இடத்தைக் காரியாம் சத்தில் வழங்குவதும், இன்னொரு நேரத்தில் உள்ளபடியே பழைய தொழிலாளர்களை விலக்குவதுமான தொழில் நுட்ப முன் னேற்றமும் அதில் ஓயாது குறுக்கிடுகிறது. தொழில் துறையிலான இந்தப் பண்புவழி மாற்றம் தொடர்ச்சியாக தொழிற்சாலையி லிருந்து ஆட்களை வெளியேற்றுகிறது; அல்லது புதிய ஆட்கள் நுழைய விடாமல் கதவைச் சாத்துகிறது; முற்றிலும் அளவு வழியில் தொழிற்சாலைகளை விரிவுபடுத்துவது வேலையிலிருந்து வெளி

---

636 கதவடைப்பால் தெருவில் நிறுத்தப்பட்ட லீசெஸ்டர் பாத அணித் தொழிலா ளர்கள் இங்கிலாந்தின் தொழிற் குழாம்களுக்கு 1866 ஜூலையில் செய்து கொண்ட முறையீட்டில் கூறுவதாவது: ''இருபதாண்டுகள் முன்னர், தைப்பதற்குப் பதிலாக ஆணி அடிப்பது புகுத்தப்பட்டதால் லீசெஸ்டர் பாத அணித் தொழில் புரட்சிகரமாக மாற்றப்பட்டது. அந்த நேரத்தில் நல்ல கூலி சம்பாதிக்க முடிந்தது. மிகச் கச்சிதமான சரக்கை ஏந்த நிறுவனம் செய்து தர முடியும் என்பதில் வெவ்வேறு நிறுவனங்களிடையே கடும் போட்டி மூண்டது. ஆயினும், சில காலம் பின்னர் ஒரு மோசமான வகைப் போட்டி, அதாவது சந்தையில் ஒருவரை விட ஒருவர் குறைந்த விலைக்கு விற்பதென்ற போட்டி கிளம்பியது. இதன் தீய விளைவுகள் சீக்கிரமே கூலிக் குறைப்புகளாய் வெளிப் பட்டன; முன்பிருந்த கூலியில் சரிபாதியைத்தான் இப்போது பல நிறுவனங்கள் கொடுக்கின்றன என்னும் அளவுக்கு உழைப்பின் விலையிலான வீழ்ச்சி கனவேகத்தில் நிகழ்ந்தது. இருப்பினும், கூலி மேலும் மேலும் வீழ்ந்தாலும், கூலி வீதத்திலான மாற்றம் ஒவ்வொன்றுடனும் இலாபங்கள் அதிகரிப்பதாக தெரிகிறது.'' கூலியை அதிகமாகக் குறைப்பதன் மூலம், அதாவது தொழிலாளியின் வாழ்வுச் சாதனங்களை நேரடியாகக் கொள்ளையிடுவதன் மூலம் அசாதாரண இலாபமடைவதற்கு நெருக்கடியான நேரங் களையும் கூடத் தொழிலதிபர்கள் பயன்படுத்திக் கொள்கின்றனர். ஓர் உதாரணம் (கவண்ட்ரி பட்டு நெசவிலான நெருக்கடி தொடர்பானது): ''தொழிலதிபர்களிடமிருந் தும், அதே போல் தொழிலாளர்களிடமிருந்தும் எனக்குக் கிடைத்திருக்கும் தகவல்களி லிருந்து, அந்நிய உற்பத்தியாளர்களின் போட்டி அல்லது இதர நிலைமைகள் அவசிய மாக்கியிருப்பதை விட பெரிய அளவுக்குக் கூலி குறைக்கப்பட்டிருக்கிறது என்பதில் சந்தேகமில்லையெனத் தெரிகிறது....பெரும்பாலான நெசவாளர்கள் 30முதல் 40 சத வீதம் குறைந்த கூலிக்கு வேலை செய்து கொண்டிருக்கின்றனர். ஐந்தாண்டுகளுக்கு முன் னர் நெசவாளிக்கு 6 அல்லது 7 ஷில்லிங் கூலி பெற்றுத் தந்த ரிப்பன் உருப்படி இப் போது 3 ஷில்லிங் 3 பென்னி அல்லது 3 ஷில்லிங் 6 பென்னி மட்டுமே பெற்றுத் தரு கிறது; முன்னதாக 4 ஷில்லிங்கும், 4 ஷில்லிங் 3 பென்னியும் பெற்றுத் தந்த இன் னொரு வேலை இப்போது 2 ஷில்லிங்கும், 2 ஷில்லிங் 3 பென்னியும் பெற்றுத் தரு கிறது. வேண்டலை அதிகமாக்குவதற்கு அவசியமானதை விடவும் கூலிக் குறைப்பு அதிக மாய் செய்யப்பட்டிருப்பதாகத் தெரிகிறது. உள்ளபடியே பல ரிப்பன் வகைகள் தொடர் பாக, நெசவுச் செலவிலான குறைப்புக்கேற்ப பண்டத்தின் விற்பனை-விலை குறைக்கப் படவே இல்லை.'' (திரு எஃப். டி. லாங்கேயின் அறிக்கை. ''குழந்தையுழைப்பு வேலை ஆணையம், ஐந்தாம் அறிக்கை, 1866,'' பக்கம் 114, 1.)

யேற்றப்பட்ட ஆட்களை மட்டுமல்லாமல், புதிய ஆள்தொகுதிகளையும் உள்ளிழுத்துக் கொள்கிறது. இவ்விதத்தில் தொழிலாள மக்கள் தொடர்ச்சியாக விலக்கவும் படுகின்றனர், ஈர்க்கவும் படுகின்றனர்; இவ்விதம் அலைக்கழிக்கப்படுகின்றனர்; அதேபோது திரட்டப்படுவோரின் பாலிலும், வயதிலும், தேர்ச்சியிலும் இடைவிடாத மாற்றங்கள் நிகழ்கின்றன.

ஆலைத் தொழிலாளர்களின் கதி, ஆங்கிலேயப் பருத்தித் தொழிலின் போக்கினை சற்றே நோக்கின் நன்கு புலப்படும்.

1770 முதல் 1815 வரையிலான காலத்தில் 5 ஆண்டுகள் மட்டுமே இந்தத் தொழில் மந்த நிலையிலோ தேக்க நிலையிலோ இருந்தது. இந்த 45 ஆண்டு காலத்தில் ஆங்கிலேயத் தொழிலதிபர்கள் இயந்திர சாதனத்திலும், உலகச் சந்தைகளிலும் ஏகபோகம் பெற்றிருந்தனர். 1815 முதல் 1821 வரை—மந்த நிலை; 1822-1823—செழிப்பு; 1824—தொழிற்சங்கங்களுக்கெதிரான சட்டங்கள் ரத்து, எங்கு பார்த்தாலும் தொழிற்சாலைகளின் மாபெரும் விரிவாக்கம்; 1825—நெருக்கடி; 1826—ஆலைத் தொழிலாளர்கள் மத்தியில் பெருந்துயரம், கலகங்கள்; 1827—சிறு மேம்பாடு; 1828—விசைத்தறிகளிலும் ஏற்றுமதிகளிலும் பெரும் அதிகரிப்பு; 1829—ஏற்றுமதிகள் (குறிப்பாக இந்தியாவுக்கு) முந்தைய ஆண்டுகள் அனைத்தையும் விஞ்சி விடுகின்றன; 1830—சந்தைகளில் வதி நிலை, பெருந்துன்பம்; 1831 முதல் 1833 வரை—தொடர்ந்து மந்தம்; இந்தியாவுடனும் சீனாவுடனுமான கிழக்கிந்தியக் கம்பெனியின் வர்த்தக ஏகபோகம் ரத்து; 1834—தொழிற்சாலைகளிலும் இயந்திர சாதனங்களிலும் பெரும் அதிகரிப்பு, ஆள் போதாமை. புதிய வறியோர் நலச் சட்டம் விவசாயத் தொழிலாளர்கள் தொழிற்சாலை வட்டங்களில் குடியேறுவதை ஊக்கி வளர்க்கிறது. கிராமப்புற வட்டங்கள் குழந்தைகள் அற்றவையாகின்றன. வெள்ளை அடிமை வர்த்தகம்; 1835—பெரும் செழிப்பு, அதே காலத்தில் கைத்தறி நெசவாளர்கள் பட்டினி; 1836—பெரும் செழிப்பு: 1837-1838—மந்தமும் நெருக்கடியும்; 1839—மீட்சி; 1840—பெரும் மந்தம், கலகங்கள், இராணுவம் அழைக்கப்படுதல்; 1841-1842—ஆலைத் தொழிலாளர்கள் மத்தியில் பயங்கர அவதி; 1842—தொழிலதிபர்கள் மத்தியில் பயங்கர அவதி; 1842—தொழிலதிபர்கள், தானியச் சட்டங்களை ரத்துச் செய்யுமாறு நிர்பந்திக்க வேண்டி, ஆட்களை வெளியே தள்ளி தொழிற்சாலைகளில் கதவடைப்பு செய்கின்றனர். தொழிலாளர்கள் ஆயிரக்கணக்கில் லங்காஷயர், யார்க்ஷயர் நகரங்களுக்குள் நுழைகின்றனர், இராணுவம் அவர்களைத் திருப்பித் துரத்துகிறது; அவர்களது தலைவர்கள் மீது லங்காஸ்டரில் வழக்கு விசாரணை; 1843—பெரும் துன்பம்; 1844—மீட்சி; 1845—பெரும் செழிப்பு; 1846—முதலில் தொடர்ந்து மேம்பாடு, பின்னர் எதிர்வினை;

தானியச் சட்டங்கள் ரத்து; 1847 — நெருக்கடி, "பெரிய ரொட்டித் துண்டை" கௌரவிக்கும் விதத்தில் 10 சதவீதமும் அதற்கதிகமாகவும் பொதுவான கூலிக் குறைப்பு; 1848—தொடர்ந்து மந்தம்; இராணுவப் பாதுகாப்பில் மான்செஸ்டர்; 1849 — மீட்சி; 1850 — செழிப்பு; 1851 — விலை வீழ்ச்சி, குறைவான கூலி, அடிக்கடி வேலைநிறுத்தங்கள்; 1852 — மேம்பாடு தொடங்குகிறது, வேலை நிறுத்தங்கள் தொடர்கின்றன, அந்நிய ஆட்களை இறக்குமதி செய்வதாகத் தொழிலதிபர்கள் மிரட்டுகின்றனர்; 1853 — அதிகரிக்கும் ஏற்றுமதிகள். 8 மாதங்களுக்கு வேலைநிறுத்தம், பிரெஸ்டனில் பெரும் துயரம்; 1854 — செழிப்பு, சந்தைகளில் வதிநிலை; 1855 — அமெரிக்க ஐக்கிய நாட்டிலிருந்தும், கனடாவிலிருந்தும், கிழக்கிந்தியச் சந்தைகளிலிருந்தும் தோல்விச் செய்திகள் வந்து குவிகின்றன; 1856 — பெரும் செழிப்பு; 1857 நெருக்கடி; 1858 — மேம்பாடு; 1859 — பெரும் செழிப்பு, தொழிற்சாலைகள் அதிகரிப்பு; 1860 — ஆங்கிலேயப் பருத்தித் தொழிலின் சிகர ஆண்டு; இந்தியா, ஆஸ்திரேலியா, மற்றும் இதர நாட்டுச் சந்தைகளில் சரக்குகள் அப்படி வதிநிலை அடைந்து விட்டதால், 1863இலும் கூட முழு அளவுக்கு உட்கிரகிக்கப்படவில்லை; பிரெஞ்சு வாணிப ஒப்பந்தம், தொழிற்சாலைகளிலும் இயந்திர சாதனங்களிலும் பெரும் வளர்ச்சி; 1861 — சிறிது காலம் தொடர்ந்து செழிப்பு, எதிர்வினை, அமெரிக்க உள்நாட்டுப் போர், பருத்திப் பஞ்சம்; 1862 முதல் 1863 வரை முழுத் தகர்வு.

பருத்திப் பஞ்சத்தின் வரலாறு குறிப்பிடத்தக்கது; இதனை சற்றே பரிசீலிப்பது அவசியமாகும். 1860-1861இல் உலகச் சந்தைகளின் நிலைமை பற்றிய விவரங்களிலிருந்து பருத்திப் பஞ்சம் தொழிலதிபர்களுக்குச் சரியான தருணத்தில் வந்தது என்பதையும், ஓரளவு அவர்களுக்கு அது சாதகமாக இருந்தது என்பதையும் பார்க்கிறோம். இந்த உண்மை மான்செஸ்டர் வர்த்தக சபையின் அறிக்கைகளில் ஒப்புக் கொள்ளப்பட்டது; பாராளுமன்றத்தில் பாமர்ஸ்டன், டெர்பி ஆகியோரால் பிரகடனம் செய்யப்பட்டது; நிகழ்ச்சிகளால் உறுதி செய்யப்பட்டது.[637] 1861இல் ஐக்கிய முடியரசிலிருந்த 2,887 பஞ்சாலைகளில் சிறு அளவிலான ஆலைகள் பல இருந்தன என்பது மெய்தான். திரு அ. ரெட்கிரேவ் அளித்த அறிக்கையின் படி, அவரது வட்டத்தில் சேர்க்கப்பட்டிருந்த 2,109 ஆலைகளில் 392 அல்லது 19% ஆலைகள் ஒவ்வொன்றும் 10 குதிரைத் திறனுக்கும் குறைவாகப் பயன்படுத்தின; 345 அல்லது 16% ஆலைகள் 10 குதிரைத் திறனும் 20 குதிரைத் திறனுக்குக் குறைவாகவும் பயன்படுத்தின; 1,372 ஆலைகள் 20 குதிரைத் திறனும், அதற்கதிகமாகவும் பயன்படுத்தின.[638] பெரும்பாலான

[637] பார்க்கவும்: "தொழிற்சாலை ஆய்வாளர் அறிக்கைகள், 1862 அக்டோபர் 31," பக்கம் 30.

[638] முன் வந்தது, பக்கம் 19.

சிறு ஆலைகள் 1858க்குப் பின்னர் செழிப்புக் காலத்தில் பெரும் பாலும் ஊக வாணிபக்காரர்கள் கட்டிய நெசவுத் கொட்டில்களாக இருந்தன; இந்த ஊக வாணிபக்காரர்களில் ஒருவர் நூலையும் மற் றொருவர் இயந்திர சாதனத்தையும், இன்னொருவர் கட்டடங்களை யும் தந்துதவினர். கங்காணிகளாக இருந்து வந்தவர்கள், அல்லது சிறு வசதி வாய்ப்புடைய மற்றவர்கள் இவற்றை இயக்கினார்கள். இந்தச் சிறு தொழிலதிபர்கள் பெரும்பாலும் நொடித்துப் போயி னர். பருத்திப் பஞ்சத்தால் வர்த்தக நெருக்கடி தடுக்கப்பட்டிரா விட்டால் அப்போதும் அவர்களுக்கு இதே கதி நேர்ந்திருக்கும். அவர்கள் தொழிலதிபர்களின் மொத்தத் தொகையில் மூன்றிலொரு பங்கினராக அமைந்தனர் என்ற போதிலும், அவர்களது ஆலைகள் பருத்தித் தொழிலில் முதலீடு செய்யப்பட்ட மூலதனத்தில் இன்னும் மிகச் சிறு பங்கையே உட்கிரகித்தன. எந்த அளவுக்கு வேலை நின்று போனது என்றால், 1862 அக்டோபரில் கதிர்களில் 60.3 சதவீத மும் தறிகளில் 58 சதவீதமும் ஓய்ந்து நின்றதாக நம்பத்தக்க மதிப் பீடுகளிலிருந்து தெரிகிறது. இது பருத்தித் தொழில் முழுவதற்கு மானது; தனித்தனி வட்டங்களுக்குக் கணிசமான திருத்தம் தேவை தான். மிகச் சில ஆலைகள் மட்டுமே முழு நேரம் (வாரத்துக்கு 60 மணி நேரம்) வேலை செய்தன; எஞ்சியவை விட்டு விட்டு வேலை செய்தன; வழக்கமான பலன்வீதக் கூலிக்கு முழு நேரம் வேலை நடந்த அந்தச் சில ஆலைகளிலும் கூட, நல்ல பருத்திக்குப் பதிலாக மட்டரகப் பருத்தி பயன்படுத்தப்பட்டதால்—ஸீ ஐலண்டுப் பருத்திக் குப் பதிலாக (நேர்த்தி நூற்பாலைகளில்) எகிப்தியப் பருத்தியும், அமெரிக்க மற்றும் எகிப்தியப் பருத்திக்குப் பதிலாக சூரத் பருத்தி யும், சுத்தமான பருத்திக்குப் பதிலாகக் கழிவும் சூரத் பருத்தியும் சேர்ந்த கலவைகளும் பயன்படுத்தப்பட்டதால்—தொழிலாளர் களின் வாரக் கூலி தவிர்க்க முடியாமலே வீழ்ந்தது. சூரத் பருத்தி யின் குட்டையான இழையும், அதன் அழுக்கான நிலையும், இழை யின் கூடுதல் நலிவும் பாவு நூலுக்குப் பசையிடுவதில் மாவுக்கு பதில் எல்லாவித கனத்த கலவைப் பொருட்களையும் பயன்படுத் தியதும் ஆகிய இவையெல்லாம் இயந்திர சாதனத்தின் வேகத்தை, அல்லது ஒரு நெசவாளி கண்காணித்துக் கொள்ளக் கூடிய தறி களின் எண்ணிக்கையைக் குறைத்து, இயந்திர சாதனத்திலிருக்கும் குறைபாடுகளால் விளையும் உழைப்பை அதிகமாக்கி, செய்து முடித்த பண்டத் திரளைக் குறைப்பதன் மூலம் பலன்வீதக் கூலி யைக் குறைத்தன. சூரத் பருத்தி பயன்படுத்தப்பட்ட இடங்களில், முழு நேர வேலையிலிருக்கும் போது தொழிலாளர்களுக்கு ஏற்பட்ட கூலியிழப்பு 20 சதவீதம், 30 சதவீதம், இன்னும் அதிகமாக வும் இருந்தது. இது போதாதென பெரும்பாலான தொழிலதிபர் கள் பலன்வீதக் கூலியை 5, 7½, 10 சதவீதம் குறைத்தனர். எனவே, வாரத்துக்கு 3, 3½ அல்லது 4 நாள் மட்டுமே, அல்லது

நாளொன்றுக்கு 6 மணி நேரம் மட்டுமே வேலை கிடைத்தவர்களின் நிலைமையை யூகித்துக் கொள்ளலாம். ஒப்பளவிலான மேம்பாடு ஆரம்பித்த பின், 1863இலும் கூட நூற்பாளர்கள், நெசவாளர்களின் வாரக் கூலி 3 ஷில்லிங் 4 பென்னி, 3 ஷில்லிங் 10 பென்னி, 4 ஷில்லிங் 6 பென்னி, 5 ஷில்லிங் 1 பென்னி ஆக இருந்தது.[639] ஆயினும், இந்த அவல நிலையிலும் கூட, புதுப்புது முறைகளைப் புகுத்த வேண்டுமென்ற தொழிலதிபரது துடிப்பு அடங்கி விடவில்லை; அது கூலியிலிருந்து பிடித்தங்கள் செய்வதில் வெளிப்பட்டது. இப்பிடித்தங்களில் ஒரு பகுதி உண்மையில் அவரது மட்டரகப் பருத்தியினாலும், பொருத்தமில்லாத இயந்திர சாதனத்தாலும் பூர்த்தியான பண்டத்தில் நேரிட்ட குறைபாடுகளுக்கு அபராதமாக அமைந்தது. மேலும், தொழிலாளர்களின் குடிசைகள் தொழிலதிபருக்குச் சொந்தமாக இருந்த இடங்களில், வாடகைத் தொகையை இந்தப் படுகேவலமான கூலியிலிருந்து பிடித்துக் கொண்டதன் மூலம், அவர் தனக்குத்தானே வாடகை செலுத்திக் கொண்டார். தன்னியக்கக் கவனிப்பாளர்கள் (ஒரு ஜதை தன்னியக்க மியூல்களைப் பரிபாலிக்கும் தொழிலாளர்கள்) குறித்து திரு ரெட்கிரேவ் நமக்குச் சொல்கிறார். ''இவர்கள் இருவார முழு வேலையின் முடிவில் 8 ஷில்லிங் 11 பென்னி சம்பாதிக்கின்றனர். இந்தத் தொகையிலிருந்து வீட்டு வாடகை பிடித்துக் கொள்ளப் பட்டது; ஆயினும் தொழிலதிபர் பாதி வாடகையை உபகாரமாகத் திருப்பித் தருகிறார். கவனிப்பாளர்கள் கைக்குக் கிடைத்தது 6 ஷில்லிங் 11 பென்னி. பல இடங்களில், 1862 பிற்பகுதியில் தன்னியக்க கவனிப்பாளர்கள் வாரத்துக்கு 5 ஷில்லிங் முதல் 9 ஷில்லிங் வரையிலும், நெசவாளர்கள் 2 ஷில்லிங் முதல் 6 ஷில்லிங் வரையிலும் ஊதியம் பெற்றனர்.''[640] பல சந்தர்ப்பங்களில் குறை நேரம் வேலை செய்யும் போதும் கூட, தொழிலாளர்களின் கூலியிலிருந்து வாடகை பிடித்தம் செய்யப்பட்டது.[641] லங்காஷயரின் சில பகுதிகளில் ஒரு வகையான பஞ்சக் காய்ச்சல் [famine fever] பரவியதில் ஆச்சரியமில்லை. ஆனால், இதையெல்லாம் விடக் குறிப்பிடத்தக்கது தொழிலாளர்களைப் பலியிட்டு உற்பத்தி நிகழ்முறையில் நடந்த புரட்சி. தவளைகள் மீது உடற்கூறு ஆய்வாளர்கள் செய்வதைப் போன்ற experimenta in corpore vili* முறைப்படி செய்யப்பட்டன. திரு ரெட்கிரேவ் சொல்கிறார்: ''பல்வேறு ஆலைகளில் தொழிலாளர்களின் உள்ளபடியான

639 ''தொழிற்சாலை ஆய்வாளர் அறிக்கைகள், 1863 அக்டோபர் 31,'' பக்கம் 41-45.

640 முன் வந்தது, பக்கம் 41-42.

641 முன் வந்தது, பக்கம் 57.

* வேண்டாத உடலிலான பரிசோதனைகள்.

சம்பாத்தியங்களை நான் கொடுத்திருக்கிறேன் என்ற போதிலும், அவர்கள் வாரத்துக்கு வாரம் அதே தொகையைச் சம்பாதிக்கின்றனர் என்று அர்த்தமில்லை. தொழிலதிபர்களின் இடைவிடாத பரிசோதனை முயற்சியால் தொழிலாளர்கள் பெரும் ஏற்ற இறக்கத்துக்கு ஆளாகின்றனர்....தொழிலாளர்களின் சம்பாத்தியங்கள் பருத்திக் கலவைகளின் தரத்திற்கேற்ப உயரவும் வீழவும் செய்கின்றன; சில நேரம் அவை முந்தைய சம்பாத்தியங்களில் 15 சதவீதத்துக்குள் இருந்துள்ளன; பின் ஓரிரு வாரத்தில் அவை 50 முதல் 60 சதவீதம் வீழ்ந்துள்ளன.''[642] இந்தப் பரிசோதனைகளுக்குப் பலியானவை தொழிலாளியின் வாழ்வுச் சாதனங்கள் மட்டுமல்ல. அவரது ஐம்புலன்களும் கூட தண்டனைக்குள்ளாயின. ''சூரத் பருத்தியை வைத்து வேலை செய்வோர் மிக அதிகமாகப் புகார் செய்கின்றனர். பருத்திக் கட்டுகளைப் பிரித்ததுமே வயிற்றைப் புரட்டும் முடைநாற்றம் கிளம்புவதாகத் தெரிவிக்கின்றனர்....கலத்தல், கிளறுதல், சுத்தம் செய்தல் ஆகியவற்றுக்கான அறைகளில் பிரித்தெடுக்கப்படும் தூசியும் அழுக்கும் சுவாசப் பாதைகளில் எரிச்சல் உண்டாக்கி, இருமல், மூச்சுத் திணறல் ஆகியவற்றுக்குக் காரணமாகின்றன. ஒருவகைத் தோல் வியாதியும் பரவியுள்ளது. சூரத் பருத்தியின் தூசியால் ஏற்படும் நமைச்சலே இதற்குக் காரணம். இழை மிகக் குட்டையாக இருப்பதால் மிருகப் பசை, தாவரப் பசை இரண்டுமே பெருமளவில் பயன்படுத்தப்படுகின்றன....தூசியின் காரணத்தால் மார்ச்சளி நோய் அதிகமாய்ப் பீடித்துள்ளது. இதே காரணத்தால், எரிச்சலூட்டும் தொண்டைப் புண் பரவியுள்ளது. ஊடுநூல் அடிக்கடி அறுந்து போகும் போது நெசவாளி ஓடத்தின் வட்டத்துளை வாயிலாக நூலினை வாயில் வைத்து உறிஞ்சுவதால் வாந்தியும் செரியாமாந்தமும் ஏற்படுகின்றன.'' மறு புறம் மாவின் பதிலிகள் நூலின் எடையை அதிகமாக்குவதால், அவை தொழிலதிபர்களுக்கு வற்றாத இலாபச் சுனைகளாயின. ''15 இராத்தல் கச்சாப் பொருள் நெய்யப்பட்ட பின்னர் 26 இராத்தல் எடை நின்றது.''[643] 1864 ஏப்ரல் 30க்கான தொழிற்சாலை ஆய்வாளர் அறிக்கை கூறுவதாவது: ''இத்தொழில் இப்போது அவப்பேர் ஏற்படும் அளவுக்கு இந்த உபாயத்தைப் பயன்படுத்துகிறது. 5¼ இராத்தல் பஞ்சையும், 2¾ இராத்தல் பசையையும் கொண்டு செய்யப்பட்ட 8 இராத்தல் எடையுள்ள துணி பற்றி நம்பத்தக்கவர்கள் கூறக் கேட்டேன். 2 இராத்தல் பசை உள்ளிட்ட 5¼ இராத்தல் எடையுள்ள இன்னொரு துணி பற்றியும் கேள்விப்பட்டேன். இவை சாதாரண ஏற்றுமதிச் சட்டைத் துணிகள். இதர வகைத் துணிகளில் சில நேரம் 50 சதவீதத்துக்கு கஞ்சிப் பசை சேர்க்கப்

---

642 முன் வந்தது, பக்கம் 50-51.

643 முன் வந்தது, பக்கம் 62-63.

படுகிறது. தொழிலதிபர் இவ்விதம் இராத்தல் நூலுக்கு அளித்ததை விடவும் குறைந்த விலைக்கு இராத்தல் துணியை விற்றுப் பணம் சேர்ப்பதாய்ப் பீற்றிக் கொள்ள முடியும், பீற்றிக் கொள்ளவும் செய்கிறார்.''[644] ஆனால் ஆலைகளின் உள்ளே தொழிலதிபர்களும், வெளியே நகராட்சிகளும் நடத்திய பரிசோதனைகள் மட்டுமல்ல, குறைந்த கூலியும் வேலையின்மையும் மட்டுமல்ல, இல்லாமையும் ஈகையும், பிரபுகள் சபையிலும் காமன்ஸ் சபையிலும் நிகழ்த்தப் பட்ட புகழுரைகளும் கூட தொழிலாளர்களை வருத்தின. ''பருத்திப் பஞ்சத்தின் விளைவாக அதன் தொடக்கத்தில் வேலையிலிருந்து விரட்டப்பட்டு இவ்விதம் சமுதாயத்தால் புறக்கணிக்கப்பட்ட பரிதாபத்துக்குரிய பெண்கள், இப்போது அத்தொழில் மீட்சிபெற்று நிறைய வேலை இருந்த போதிலும், தொடர்ந்து அந்தக் கேடுகெட்ட நிலையிலேயே இருக்கிறார்கள்; இனியும் இருப்பார்கள் என்றே தோன்றுகிறது. மேலும், கடந்த 25 ஆண்டுகளில் இருந்திராத தொகையில் நகரில் இன்று இளம் வயது விபசாரிகள் இருக்கக் காண்கிறேன்.''[645]

ஆக, ஆங்கிலேயப் பருத்தித் தொழிலின் முதல் 45 ஆண்டுகளான 1770 முதல் 1815 வரையிலான கட்டத்தில் 5 ஆண்டுகள் மட்டுமே நெருக்கடிக்கும் தேக்கத்துக்கும் உரிய காலம் என்று தெரிகிறது. ஆனால், இது ஏகபோகத்தின் காலமாக இருந்தது. 1815 முதல் 1863 வரையிலான இரண்டாவது கட்டத்தில், 48 ஆண்டுகளில் 20 ஆண்டுகள் மட்டுமே மீட்சிக்கும், செழிப்புக்கும் உரிய காலம்; 28 ஆண்டுகள் மந்தத்துக்கும் தேக்கத்துக்கும் உரிய காலம். 1815க்கும் 1830க்குமிடையில் ஐரோப்பாவின் கண்டப் பகுதியுடனும், அமெரிக்க ஐக்கிய நாட்டுடனும் போட்டி ஆரம்பமாகிறது. 1833க்குப் பின்னர் ஆசியச் சந்தைகளின் விரிவாக்கம் ''மனித இனத்தின் அழிவால்'' (இந்தியக் கைத்தறி நெசவாளர்களின் சர்வ நாசத்தால்) வலுவந்தமாகச் சாதிக்கப்படுகிறது. தானியச் சட்டங்களின் ரத்துக்குப் பின்னர், 1846 முதல் 1863 வரையில், 8 ஆண்டுகள் மிதமான செயற்பாட்டுக்கும் செழிப்புக்கும் உரிய காலம்; 9 ஆண்டுகள் மந்தத்துக்கும், தேக்கத்துக்கும் உரிய காலம். செழிப்புக்குரிய ஆண்டுகளின் போதும் கூட வயதுவந்த ஆண் தொழிலாளர்களின் நிலைமையை இத்துடன் தரப்படும் அடிக் குறிப்பிலிருந்து அறியலாம்.[646]

---

644 ''தொழிற்சாலை ஆய்வாளர் அறிக்கை, 1864 ஏப்ரல் 30,'' பக்கம் 27.

645 ''தொழிற்சாலை ஆய்வாளர் அறிக்கை, 1865 அக்டோபர் 31'' பக்கம் 61-62இல் போல்ட்டன் தலைமைக் காவலர் திரு ஹாரிசின் கடிதத்திலிருந்து.

646 ஒழுங்கமைந்த குடிப்பெயர்ச்சிக்காக சங்கம் அமைக்கும் நோக்கத்தை முன்னிட்டு, லங்காஷயர் முதலான இடங்களைச் சேர்ந்த ஆலைத் தொழிலாளர்கள் 1863ஆம் ஆண்டில் விடுத்த வேண்டுகோள் கூறுவதாவது: ''ஆலைத் தொழிலாளர்களின் இப்போதைய சோர்வு நிலையிலிருந்து அவர்களை எழுப்பப் பெருமளவிலான குடிப்பெயர்ச்சி இப்போது அத்தியாவசியமாகும் என்பதைச் சிலரே மறுப்பர்; ஆனால்

## பிரிவு 8. — பட்டறைத் தொழிலிலும், கைத்தொழில்களிலும், வீட்டுத் தொழிலிலும் நவீனத் தொழில் துறை ஏற்படுத்திய புரட்சி

### அ. கைத்தொழிலையும் உழைப்புப் பிரிவினையையும் அடிப்படையாகக் கொண்ட கூட்டு-வேலையின் வீழ்ச்சி

இயந்திர சாதனம் கைத்தொழில்களின் அடிப்படையிலான கூட்டு-வேலையையும், கைத்தொழில்-உழைப்புப் பிரிவினையின் அடிப்படையிலான பட்டறைத் தொழிலையும் எப்படி ஒழித்துக் கட்டுகிறது என்று பார்த்தோம். முதல் வகைக்கு எடுத்துக்காட்டு புல் வெட்டும் இயந்திரம்; புல் வெட்டும் தொழிலாளர்களிடையிலான கூட்டு-வேலைக்குப் பதிலாக அது வருகிறது. இரண்டாவது வகைக்கு எடுப்பான எடுத்துக்காட்டு ஊசி தயாரிக்கும் இயந்திரம். ஆதாம் ஸ்மித் தரும் எடுத்துக்காட்டின் படி, அவரது காலத்தில் 10 ஆட்கள் நாளொன்றுக்கு 48,000க்கும் அதிகமான ஊசிகளைக் கூட்டு-வேலையின் மூலம் தயாரித்தனர். ஆனால், ஓர் ஊசி இயந்திரம் 11 மணிகள் கொண்ட வேலை-நாளில் 145,000 ஊசிகளைத்

---

தொடர்ச்சியான குடிப்பெயர்ச்சி சதாகாலமும் அவசியமாகும் என்பதையும், இல்லையேல் சாதாரண நேரங்களில் அவர்கள் தமது நிலையைக் காப்பாற்றிக் கொள்வது சாத்தியமற்றது என்பதையும் விளக்குவதற்காக முடிவில் இத்துடன் இணைக்கப்பட்டுள்ள தகவல்களைக் கவனிக்குமாறு வேண்டுகிறோம்: — 1814இல் ஏற்றுமதி செய்யப்பட்ட பருத்தித் துணிகளின் அதிகார பூர்வ மதிப்பு £17,665,378. உண்மையான சந்தை மதிப்பு £20,070,824. 1858இல் பருத்தித் துணிகள் ஏற்றுமதியின் அதிகார பூர்வ மதிப்பு £182,221,681. உண்மை மதிப்பு அல்லது சந்தைக்குரிய மதிப்பு £43,001,322 மட்டுமே. பத்து மடங்குத் துணி முன்னைப் போல் இரு மடங்குக்கு சற்று அதிகமான விலைக்கு விற்கப்பட்டது. பொதுவாக நாட்டுக்கும், குறிப்பாக ஆலைத் தொழிலாளர்களுக்கும் இவ்வளவு பாதகமான விளைவுகளைத் தோற்றுவிக்கப் பற்பல காரணங்கள் இணைந்து வேலை செய்துள்ளன; நிலைமைகள் அனுமதித்திருக்குமேயானால், இக்காரணங்களை இன்னும் தெளிவாகத் தங்கள் கவனத்துக்குக் கொண்டு வந்திருப்போம்; மிகக் கண்கூடான காரணம் இடையறாது இருந்து வரும் உழைப்பின் மிதமிச்ச நிலையாகும் என்பதைச் சொல்வது இப்போதைக்குப் போதுமானது; இந் நிலையில்லாமல் இவ்வளவு நாசகர விளைவுகளைக் கொண்ட தொழில் ஒருகாலும் நடத்தப்பட்டிருக்க முடியாது; தன்னை அழிவிலிருந்து காத்துக் கொள்ள இடையறாது பெருக்கமடையும் சந்தை இந்த உழைப்புக்குத் தேவைப்படுகிறது. இப்போதைய ஏற்பாடுகளில், மரணத்தைப் போலவே சர்வ நிச்சயமான கால வட்டத் தொழிற் தேக்கங்களால் நமது பஞ்சாலைகள் நின்று போகும் நிலை ஏற்படலாம்; ஆனால் மனித மனம் இடையறாது வேலை செய்து கொண்டிருக்கிறது; கடந்த 25 ஆண்டு காலத்தில் ஆறு மிலியன் ஆட்கள் கப்பலேறியுள்ளனர் என்று கூறுவது குறைமதிப்பீடாகவே இருக்கும் என்றாலும், இயற்கையான மக்கள்தொகைப் பெருக்கத்தாலும், உற்பத்தியை மலிவாக்க உழைப்பை விலக்குவதாலும், வயதுவந்த ஆண்களில் பெரும் சதவீதத்தினர் மிகச் செழிப்பான காலங்களில் எம்மாதிரியான நிபந்தனைகளின் பேரிலானாலும் தொழிற்சாலைகளில் வேலை பெறுவது சாத்தியமற்றதாகி விடுகிறது.'' (''தொழிற்சாலை ஆய்வாளர் அறிக்கைகள், 1863 ஏப்ரல் 30,'' பக்கம் 51-52.) தொழிலதிபர்களாகிய நமது நண்பர்கள் பருத்தித் தொழிலில் ஏற்பட்ட நாசக்கேட்டின் போது அரசுத் தலையீடு உட்பட ஒவ்வொரு வழியிலும் தொழிலாளர்களின் குடிப்பெயர்ச்சியைத் தடுக்க முயன்றதைப் பின்னொரு அத்தியாயத்தில் பார்ப்போம்.

தயாரிக்கிறது. இப்படிப்பட்ட நான்கு இயந்திரங்களை ஒரு பெண் அல்லது சிறுமி கண்காணித்துக் கொள்கிறாள்; இப்படியாக ஒரு நாளில் சற்றேறக்குறைய 600,000 ஊசிகளையும், ஒரு வாரத்தில் 3,000,000க்கும் அதிகமான ஊசிகளையும் உற்பத்தி செய் கிறாள்.[647] தனியொரு இயந்திரம் கூட்டு-வேலையின் அல்லது பட்டறைத் தொழிலின் இடத்தை மேற்கொள்ளும் போது, அதுவே கைவினைத் தன்மையுள்ள தொழில் ஒன்றின் அடிப்படையாகப் பயன்படலாம். ஆயின், இப்படிக் கைத்தொழில்களுக்குத் திரும்பிச் செல்வது ஆலைத் தொழிலுக்கு மாறிச் செல்வதேயாகும். வழக்க மாகவே, மனிதத் தசையாற்றலுக்குப் பதிலாக நீராவி அல்லது நீர் போன்ற யாந்திரிக இயக்குவிசை இயந்திரங்களை ஓட்ட முற்பட்ட தும் ஆலைத்தொழில் உதயமாகிறது. இங்குமங்குமாக, ஆனால் எப்படியும் சிறிது காலத்துக்கு மட்டுமே ஒரு தொழிலை இயந்திர விசை கொண்டு சிறுவீதத்தில் நடத்திச் செல்லலாம். பர்மிங்காம் தொழில்கள் சிலவற்றில் செய்யப்படுவது போல, நீராவிச் சக்தியை வாடகைக்கு அமர்த்துவதன் மூலம், அல்லது சில நெசவுக் கிளை களில் நடப்பது போல, சிறு வெப்ப எஞ்சின்களைப் பயன்படுத்து வதன் மூலம் இப்படிச் செய்யப்படுகிறது.[648] கவண்ட்ரி பட்டு நெசவுத் தொழிலில் "குடிசைத் தொழிற்சாலைகள்" என்ற பரிசோதனை செய்து பார்க்கப்பட்டது. வரிசை வரிசையான குடிசைகளால் சூழப்பட்ட சதுக்கத்தின் மையத்தில் எஞ்சின் அறை ஒன்று கட்டப்பட்டு, குடிசைகளிலிருந்த தறிகளுடன் சுழல்தண்டுகள் மூலம் எஞ்சின் இணைக்கப்பட்டது. எல்லா இடங்களிலுமே தறிக்கு இவ்வளவு என்று விசைக் கட்டணம் வசூலிக்கப்பட்டது. தறிகள் வேலை செய்தாலும், வேலை செய்யா விட்டாலும் வாரந்தோறும் வாடகை செலுத்த வேண்டும். ஒவ்வொரு குடிசையும் 2 முதல் 6 தறிகளைக் கொண்டிருந்தன; சில தறிகள் நெசவாளிக்குச் சொந்தம், சில கடனுக்கு வாங்கப்பட்டவை, சில வாடகைக்கு அமர்த்தப் பட்டவை. இந்தக் குடிசைத் தொழிற்சாலைகளுக்கும் முறையான தொழிற்சாலைக்கும் இடையிலான போராட்டம் 12 ஆண்டுகளுக் கும் அதிகமாக நீடித்தது. இந்தப் பரிசோதனை 300 குடிசைத் தொழிற்சாலைகளின் அழிவில் போய் முடிந்தது.[649] உற்பத்தி நிகழ்முறைக்கு இயல்பாகவே பெருவீத உற்பத்தி அவசியமாய்

647 "குழந்தையுழைப்பு ஆணையம் மூன்றாம் அறிக்கை,. 1864," பக்கம் 108, எண் 447.

648 அமெரிக்க ஐக்கிய நாட்டில், இவ்விதத்தில் இயந்திர சாதனத்தின் துணை கொண்டு கைத்தொழில்கள் மீண்டும் தலைதூக்குவது அடிக்கடி நிகழ்கிறது; எனவே, ஆலைத் தொழிலுக்குத் தவிர்க்கவியலாத விதத்தில் மாறிச் செல்லும் போது அடுத்து வருவதான குவிப்பு ஐரோப்பாவுடனும், ஏன், இங்கிலாந்துடனும் ஒப்பிடுமிடத்து அசுர வேகத்தில் நடைபெறும்.

649 பார்க்கவும்: "தொழிற்சாலை ஆய்வாளர் அறிக்கைகள், 1865 அக்டோபர் 31," பக்கம் 64.

இராத சந்தர்ப்பங்களில் எல்லாம், கடந்த சில பத்தாண்டுகளில் முளைத்தெழுந்த புதிய தொழில்கள் — உறை தயாரித்தல், பேனா அலகு தயாரித்தல் போன்றவை — ஆலைத் தொழிலாக மாறிச் செல்வதற்கான குறுகிய கட்டடங்களென்ற முறையில் முதலில் கைத்தொழிற் கட்டத்தையும், பின்னர் பட்டறைத் தொழிற் கட்டத்தையும் கடந்து வந்துள்ளன என்பதே பொதுவான நிலைமை. பட்டறைத் தொழில்வழிப் பண்ட உற்பத்தி அடுக்கடுக்கான நிகழ்முறைகளின் தொடரால் அன்றி அதிக எண்ணிக்கையிலான தொடர்பில்லாத நிகழ்முறைகளால் ஆனதாக இருக்கும் சந்தர்ப்பங்களில் மாற்றம் மிகக் கடினமானது. இந்த நிலைமை பேனா அலகு தயாரிக்கும் தொழிற்சாலைகள் நிறுவுவதற்குப் பெரும் இடையூறாயிற்று. ஆயினும், சுமார் 15 ஆண்டுகள் முன்னர் 6 தனித்தனிப் பணிகளை ஒரே நேரத்தில் தானியங்கு வழியில் ஆற்றிய ஓர் இயந்திரம் கண்டுபிடிக்கப்பட்டது. முதலில் பேனா அலகுகள் 1820ஆம் ஆண்டில் குரோஸ் £7 4 ஷில்லிங் வீதம் கைத்தொழில் முறையால் வழங்கப்பட்டன; 1830இல் அவை குரோஸ் 8 ஷில்லிங் வீதத்தில் பட்டறைத் தொழிலால் வழங்கப்பட்டன. இன்று ஆலைத்தொழில் அவற்றை குரோஸ் 2 ஷில்லிங் முதல் 6 பென்னி வரைக்கும் வியாபாரத்துக்கு வழங்குகிறது.[650]

### ஆ. பட்டறைத் தொழில் மீதும் வீட்டுத் தொழில்கள் மீதும் ஆலைத் தொழிலின் பிரதிபலிப்பு

ஆலைத் தொழிலின் வளர்ச்சியோடும், அதனோடு சேர்ந்து வரும் பயிர்த்தொழிற் புரட்சியோடும் கூட, மற்றெல்லாத் தொழிற் கிளைகளிலும் நடைபெறும் உற்பத்தி விரிவடைவது மட்டுமல்லாமல், தன்மையிலும் மாற்றமடைகிறது. ஆலைத் தொழிலில் செயற்படுத்தப்படும் கோட்பாடுதான், அதாவது உற்பத்தி நிகழ்முறையை அதன் உட்கட்டங்களாகப் பகுத்தல், இதில் எழும் பிரச்சினைகளுக்கு இயந்திரவியலையும், இரசாயனத்தையும், சகல வித இயற்கை விஞ்ஞானங்களையும் பிரயோகித்துத் தீர்வு காணுதல் என்ற கோட்பாடுதான் எங்கும் நிர்ணயிக்கும் கோட்பாடாகிறது. ஆகவே, இயந்திர சாதனம் முதலில் ஒரு நுணுக்க நிகழ்முறைக்கும் அடுத்து இன்னொரு நுணுக்க நிகழ்முறைக்கும் பயன்பட்டு, பட்டறைத் தொழில்களினுள் நுழைகிறது. இவ்வாறு, பழைய உழைப்புப்

---

650 திரு கில்லோட் பெருவீதத்திலான முதல் பேனா அலகு தொழிற்சாலையை பர்மிங்காமில் அமைத்தார். அது 1851இலேயே ஆண்டுக்கு 180,000,000க்கும் அதிகமான அலகுகளை உற்பத்தி செய்தது; 120 டன் உருக்கை அது உட்கொண்டது. ஐக்கிய முடியரசில் இத்தொழிலின் ஏகபோகம் பர்மிங்காமிடம் உள்ளது; இப்போது பர்மிங்காம் கோடிக்கணக்கான பேனா அலகுகளை உற்பத்தி செய்கிறது. 1861ஆம் வருட மக்கள் தொகை கணக்கெடுப்பின் படி, இத்தொழிலில் வேலை செய்தோரின் தொகை 1,428ஆக இருந்தது; இவர்களில் 1,268 பேர் ஐந்து வயது முதல் பல்வேறு வயதினரான பெண்கள்.

பிரிவினையின் அடிப்படையிலான ஒழுங்கமைப்பாகிய பட்டறைத் தொழில்களின் திண்மையான ஒழுங்கமைப்பு குலைந்து போய் இடையறாத மாற்றங்களுக்கு ஆட்படுகிறது. இது ஒரு புறமிருக்க, கூட்டுத் தொழிலாளியின் இயைபில் தீவிர மாற்றம் நிகழ்கிறது; ஒன் றிணைந்து வேலை செய்யும் ஆட்களின் மாற்றமாகும் இது. பட்டறைத் தொழிற் காலத்தோடு வேறுபடும் விதத்தில், அதுமுதல் உழைப்புப் பிரிவினையானது எங்கெல்லாம் சாத்தியமோ, அங் கெல்லாம் மாதர்களையும், சகல வயதினருமான குழந்தைகளையும், தேர்ச்சியற்ற தொழிலாளர்களையும் வேலை வாங்குவதை, சுருங்கச் சொல்லின் — இங்கிலாந்தில் பொருத்தமாக அழைக்கப்படுவது போல—மலிவான உழைப்பை அடிப்படையாகக் கொள்கிறது. இயந்திர சாதனத்தை ஈடுபடுத்துவதாக இருந்தாலும், இல்லா விட்டாலும் பெருவீத உற்பத்தி அனைத்திலும் இவ்வாறு நிகழ்கிறது. தொழிலாளர்களின் வீடுகளில் நடத்தப்படுவதானாலும் சரி, சிறு பட்டறைகளில் நடத்தப்படுவதானாலும் சரி, வீட்டுத் தொழில் எனப்படுவதிலும் கூட இவ்வாறே நிகழ்கிறது. இந்த நவீன வீட்டுத் தொழில் எனப்படுவதற்கும் (சுயேச்சையான நகரப்புறக் கைத் தொழில்களையும், சுயேச்சை விவசாயியின் வேளாண்மையையும், அனைத்துக்கும் மேலாக உழைப்பாளிக்கும் அவரது குடும்பத் திற்கும் ஓர் உறைவிடத்தையும் முன்தேவைகளாகக் கொண்ட) பழைய முறையிலான வீட்டுத் தொழிலுக்கும் பெயரைத் தவிரப் பொதுவானது ஒன்றுமில்லை. அந்தப் பழைய முறையிலான தொழில் இப்போது தொழிற்சாலையின், பட்டறையின், அல்லது பண்டகசாலையின் ஒரு வெளிப் பிரிவாக மாற்றப்பட்டிருக்கிறது; மூலதனத்தால் ஓரிடத்தில் பெருந்திரள்களாகக் குவிக்கப்பட்டு, நேரடியாக அதன் கட்டளைக்குட்படுகிற ஆலைத் தொழிலாளர்கள், பட்டறைத் தொழிலாளர்கள், கைத்தொழிலாளர்கள் ஆகியோரன் னியில், கண்ணுக்குத் தெரியா இழைகளின் மூலம் இன்னொரு பட்டாளத்தையும் அது இயக்குகிறது. வீட்டுத் தொழில்களில் ஈடுபட் டுள்ள தொழிலாளர்களது பட்டாளம் இது; இவர்கள் பெருநகரங் களில் வசிப்பவர்கள் மட்டுமல்லர், நாடெங்கிலும் சிதறிக் கிடப் பவர்களும் ஆவர். ஓர் உதாரணம்: லண்டன்டெரியிலுள்ள திருவாளர்கள் தில்லீயின் சட்டைத் தொழிற்சாலை; தொழிற் சாலையிலேயே ஆயிரம் தொழிலாளர்களையும், கிராமப்புறத்தில் பரவிக் கிடந்து தம் சொந்த இல்லங்களிலேயே வேலை செய்கிற 9,000 ஆட்களையும் இது வேலை வாங்குகிறது.[651]

மலிவான, முதிர்ச்சியுறாத உழைப்புச் சக்தியைச் சுரண்டுவது, முறையான தொழிற்சாலையில் நடப்பதை விட நவீன பட்டறைத்

---

651 "குழந்தையுழைப்பு ஆணையம் இரண்டாம் அறிக்கை, 1864," பக்கம் LXVIII., எண் 415.

தொழிலில் இன்னும் அதிக வெட்கக்கேடான முறையில் நடைபெறுகிறது. ஏனெனில் ஆலைத்தொழிலின் தொழில் நுட்ப அடித்தளம், அதாவது தசையாற்றலுக்குப் பதிலாக இயந்திரங்களைப் பயன்படுத்துவதும், உழைப்பு இலகுவாதலும் பட்டறைத் தொழிலில் கிடையாது; அதே நேரத்தில் மாதர்களும் பச்சிளங்குழந்தைகளும் ஈவிரக்கமற்ற விதத்தில் நச்சுப் பொருட்களின் அல்லது தீங்கிழைக்கும் பொருட்களின் பாதிப்புக்கு ஆளாக்கப்படுகின்றனர். இந்தச் சுரண்டல் பட்டறைத் தொழில்களை விட வீட்டுத் தொழில் எனப்படுவதில் இன்னும் அதிக வெட்கக்கேடான முறையில் நடைபெறுகிறது. ஏனெனில், தொழிலாளர்களின் எதிர்ப்புச் சக்தி அவர்கள் பரவிச் சிதறுண்டு போவதற்கேற்ப குறைந்து செல்கிறது; கொள்ளைக்கார ஒட்டுண்ணிகளின் முழு வரிசையொன்று வேலை கொடுப்பவருக்கும் தொழிலாளிக்கும் இடையே நுழைந்து கொள்கிறது; வீட்டுத் தொழில் எப்போதுமே அதே உற்பத்திக் கிளையில் ஆலைத் தொழிலுடனோ பட்டறைத் தொழிலுடனோ போட்டி போட வேண்டியிருக்கிறது; ஏழ்மையானது தொழிலாளியிடமிருந்து அவரது உழைப்புக்கு மிகவும் அத்தியாவசியமான நிலைமைகளை — இடத்தையும், ஒளியையும், காற்றோட்டத்தையும் — சூறை கொள்கிறது; வேலை வாய்ப்பு மேலும் மேலும் ஒழுங்கற்றதாகிறது; இறுதியாக, நவீனத் தொழில் துறையாலும் விவசாயத்தாலும் ''தேவையற்றோர்'' ஆக்கப்படும் மக்கள் திரள்களின் கடைசிப் புகலிடங்களான இந்த வீட்டுத் தொழில்களில் வேலைக்கான போட்டி உச்சமடைகிறது. உற்பத்திச் சாதனங்களில் சிக்கனம் என்பது முதலில் ஆலைத் தொழிலில் திட்டமிட்ட முறையில் அமலாக்கப்படுகிறது; அதில், ஆரம்ப முதலே மிகவும் கண்மூடித்தனமாக உழைப்புச் சக்தியை விரயம் செய்வதற்கும் சாதாரணமாக உழைப்புக்குத் தேவைப்படும் நிலைமைகளைப் பறிப்பதற்கும் வழி செய்வதாகும் இச்சிக்கனம். குறிப்பிட்ட தொழிற் கிளையில் உழைப்பின் சமுதாய உற்பத்தித் திறனும் நிகழ்முறைகளின் ஒன்றிணைப்புக்கான தொழில் நுட்ப அடிப்படையும் எந்த அளவுக்குக் குறைவாக வளர்ச்சி அடைந்துள்ளனவோ, அந்த அளவுக்கு அதிகமாக இச்சிக்கனம் இக்கிளையில் தனது பகைநிலையையும் கொலைத் தன்மையையும் வெளிக்காட்டுகிறது.

### இ. நவீனப் பட்டறைத் தொழில்

இப்போது மேற்கூறிய கோட்பாடுகளைச் சில எடுத்துக்காட்டுகளின் வாயிலாக விளக்க முனைகிறேன். வேலை-நாள் பற்றிய அத்தியாயத்தில் தரப்பட்டுள்ள ஏராளமான எடுத்துக்காட்டுகளை ஏற்கெனவே வாசகர் நன்கறிவார். பர்மிங்காமிலும் சுற்று வட்டாரத்திலும் உலோகப் பாண்டப் பட்டறைத் தொழில்களில், பெரும்பாலும் மிகக் கடினமான வேலையில், 10,000 மாதர்களன்னியில்

30,000 குழந்தைகளும் இளம் வயதினரும் வேலை செய்கின்றனர். அங்கே அவர்களை சுகாதாரக் கேடான பித்தளை வார்ப்படச் சாலைகளிலும், பித்தான் தொழிற்சாலைகளிலும், இனாமல் பூச்சு, மின்முலாமிடல், வண்ணப்பூச்சு ஆகிய தொழில்களிலும் பார்க் கலாம்.[652] வயது வந்தோரும் வராதோருமான தொழிலாளர்களின் அதீத உழைப்பின் காரணத்தால், செய்தித் தாட்களும் புத்தகங்களும் அச்சிடப்படுகிற குறிப்பிட்ட சில லண்டன் தொழிற் கூடங்களுக்கு ''கசாப்புக் கொட்டில்கள்''[653] என்ற இழவுப் பெயர் கிடைத்திருக் கிறது. இதே போன்ற அக்கிரமங்கள் புத்தகங் கட்டுதலில் நடக்கின்றன. இதில் பாதிக்கப்படுவோர் பிரதானமாக மாதர்களும், சிறுமிகளும், குழந்தைகளுமே; இளம் வயதினர் கயிற்று வேலைக் கூடங்களில் கடுமையாக வேலை செய்ய வேண்டியுள்ளது; உப்புச் சுரங்கங்கள், மெழுகுவத்தித் தொழிற் கூடங்கள், இரசாயனத் தொழில்கள் ஆகியவற்றில் இரவு வேலை செய்ய வேண்டியுள்ளது. இயந்திர சாதனத்தைக் கொண்டு நடத்தப்படாத புட்டு நெசவில், இளம் வயதினர் முழு நேரமும் தறிகளை இயக்கியே உயிரை விடு கின்றனர்.''[654] மிகவும் வெட்கக்கேடான, மிகவும் அழுக்கான, மிகவும் ஊதியங்குறைந்த உழைப்பு வகைகளில் ஒன்று கந்தல் பிரித்தல்; இதில் ஏனையோரை விட பெண்களையும் சிறுமி களையுமே விரும்பி வேலைக்கு எடுக்கிறார்கள். மகா பிரிட்டன் அதன் சொந்தக் கந்தற் கூளத்தை ஏராளமாய்க் குவித்துக் கொண் டிருப்பதோடு, அனைத்துலகிலிருந்தும் கந்தலைக் குவித்திடும் சந்தை யுமாகும் என்பது பிரசித்தம். ஜப்பானிலிருந்தும், தென் அமெரிக்கா வின் கடைக் கோடி நாடுகளிலிருந்தும், கானரி தீவுகளிலிருந்தும் கந்தல் வந்து குவிகிறது. ஆனால், அதனை வழங்கும் முக்கிய இடங்கள் ஜெர்மனி, பிரான்ஸ், ருஷ்யா, இத்தாலி, எகிப்து, துருக்கி, பெல்ஜியம், ஹாலந்து ஆகியவை. அது உரத்துக்காகவும், மெத்தை தயாரிப்பதற்கும், கந்தல் இழைக்காகவும் பயன்படுத்தப் படுகிறது. அது காகிதத்தின் கச்சாப் பொருளாகப் பயன்படுகிறது. கந்தல் பிரிப்போர் பெரியம்மையையும் தொற்று வியாதிகளையும் பரப்புவோராவர்; அவர்களே அவற்றின் முதற்பலிகளும் ஆவர்.[655] மிகைவேலைக்கும், கடினமான, பொருத்தமற்ற உழைப்புக்கும்,

---

652 இப்போது குழந்தைகள் ஷெஃபீல்டில் அரம் தீட்டுவதிலும் கூட வேலை வாங்கப்படுகின்றனர்.

653 ''குழந்தையுழைப்பு ஆணையம் ஐந்தாம் அறிக்கை 1866,'' பக்கம் 3, எண் 24; பக்கம் 6, எண் 55, 56; பக்கம் 7, எண் 59, 60.

654 முன் வந்தது, பக்கம் 114, 115, எண் 6, 7. இயந்திரங்கள் மனிதர்களுக்கு பதிலாய் வருவதே வழக்கம் என்ற போதிலும், இங்கே உள்ளபடியே இளம் வயதினர் இயந்திரங்களுக்குப் பதிலாய் வருகின்றனர் என்று ஆணையம் குறிப்பிடுவது சரிதான்.

655 பார்க்கவும்: கந்தல் வியாபாரம் பற்றிய அறிக்கை; ''பொதுச் சுகாதாரம் எட்டாம் அறிக்கை'' லண்டன், 1866, பிற்சேர்க்கை என்பதில் ஏராளமான விவரங்கள் தரப்பட்டுள்ளன. (பக்கம் 196, 208.)

தொழிலாளியின் மீது அவரது குழந்தைப் பருவம் முதற்கொண்டே அது ஏற்படுத்தும் குரூரமான விளைவுகளுக்கும் நிலக்கரிச் சுரங்கத் தொழிலும் பொதுவாக சுரங்கத் தொழிலாளர்களும் மட்டுமன்றி, ஓடு, செங்கல் தயாரிப்புத் தொழிலும் கூட சிறந்த எடுத்துக் காட்டாகும். அண்மையில் கண்டுபிடிக்கப்பட்ட இயந்திர சாதனம் இங்கிலாந்தில் ஓடு, செங்கல் தயாரிப்புத் தொழிலில் சிதறலாகவே பயன்படுத்தப்படுகிறது. மே மாதத்துக்கும் செப்டம்பர் மாதத்துக்கும் இடையே காலை 5 மணி முதல் இரவு 8 மணி வரை வேலை நடக் கிறது; திறந்த வெளியில் உலர்த்தப்படும் போது காலை 4 மணி முதல் இரவு 9 மணி வரை நடப்பதுண்டு. காலை 5 மணி முதல் இரவு 7 மணி வரையிலான உழைப்பு ''குறைவானது'' என்றும், ''மிதமானது'' என்றும் கருதப்படுகிறது. 6 வயதுடைய, ஏன், 4 வயதுடைய சிறுவர்களும் சிறுமிகளும் கூட வேலை வாங்கப்படு கின்றனர்; வயது வந்தோர் வேலை செய்கிற அதே நேரத்துக்கே, பல சந்தர்ப்பங்களில் அதை விட அதிக நேரத்துக்கும் கூட வேலை செய்கின்றனர். வேலை கடினமாக உள்ளது, கோடை வெப்பம் சோர்வை அதிகப்படுத்துகிறது. மாஸ்லீயில், குறிப்பிட்ட ஓடறுக்கு மிடத்தில், உதாரணமாக, 24 வயதுடைய இளம் பெண் 2 சிறுமி களின் உதவியுடன் நாளொன்றுக்கு 2,000 ஓடு செய்வது வழக்கம்; இச்சிறுமிகள் அப்பெண்ணுக்கு உதவியாகக் களிமண் சுமந்தனர், ஓடுகளை அடுக்கினர். 30 அடி ஆழத்திலிருந்து களிமண் குழிகளின் வழுக்கலான சரிவுகளில் நாளொன்றுக்கு 10 டன் சுமந்தனர்; பின்னர் 210 அடி தூரத்துக்கு அதைச் சுமந்து சென்றனர். ''குழந் தைகளுக்கு இது நரக அனுபவம்; ஒழுக்கக் கேடுறாமல் எந்தக் குழந் தையும் இதனைக் கடந்து வர இயலாது....பச்சிளம் பருவத்திலிருந்தே கீழ்த்தரமான பேச்சுக்குப் பழகிப் போய் விடுகின்றனர். அறியாப் பருவத்தில் தறிகெட்ட நிலையில் தாறுமாறான, அசிங்கமான, வெட் கக்கேடான பழக்க வழக்கங்களிடையே வளர்கின்றனர். இதனால், பிற்கால வாழ்க்கையில் நியதியற்று, இழிவுற்று, கெட்டழிந்து விடு கின்றனர்....வாழ்க்கை முறை ஒழுக்கச் சீரழிவின் நச்சுக் கலனா கிறது. எப்போதுமே தேர்ச்சி பெற்ற தொழிலாளியாகவும், குழுவின் தலைவராகவும் இருக்கிற ஓடறுப்பவர் ஒவ்வொருவரும், தன்னிடம் வேலை செய்யும் 7 பேருக்குத் தன் குடிசையில் உணவும் உறை விடமும் தருகிறார். அவரது குடும்பத்தைச் சேர்ந்தவர்களாக இருந் தாலும் இல்லா விட்டாலும், ஆண்கள், சிறுவர்கள், சிறுமிகள் அனைவருமே குடிசையில் உறங்குகின்றனர்; இக்குடிசையில் பொது வாக 2, விதிவிலக்காக 3, அறைகள் உள்ளன; எல்லாமே தரை மட்டத்தில் உள்ளவை; காற்றோட்டம் அற்றவை. நாள் முழுதும் உழைத்து ஓய்ந்து போனவர்கள் சுகாதாரம், தூய்மை, நன்னயம் தொடர்பான எந்த விதியைப் பற்றியும் கவலைப்படாதவர்கள். இந்தக் குடிசைகளில் பலவும் அசிங்கம், அழுக்கு, தூசி இவற்றின்

உருவாய் அமைந்தவை....இத்தகைய வேலையில் சிறுமிகளை அமர்த்தும் முறையில் உள்ள மிகப் பெரிய தீமை, வழக்கமாகவே அவர்களைக் குழந்தைப் பருவ முதல் பிற்கால வாழ்க்கை முழுவதற்கும் கடைகெட்ட கும்பலோடு இறுகப் பிணைத்து விடுவதாகும். பெண்ணாய்ப் பிறந்தவர்கள் என்பதை இயற்கை அவர்களுக்கு அறிவுறுத்தும் வரை, வாய் கூசாமல் வசவுச் சொல் பேசும் முரடர்களாகவே வளர்கிறார்கள். அழுக்கேறிய சொற்பக் கந்தலுடுத்தி, முழுக் காலும் தெரிய, முடியிலும் முகத்திலும் சேறு படிந்திருக்க, நற்பண்பு, நாணம் யாவும் அறவே வெறுத்து ஒதுக்குவோராகி விடுகிறார்கள். உணவு இடைவேளையில் களங்களில் நீட்டிப் படுக்கிறார்கள்; அல்லது அண்டையிலுள்ள வாய்க்காலில் குளிக்கும் பையன்களை வேடிக்கை பார்க்கிறார்கள். கடும் உழைப்பில் கழிந்த வேலை-நாள் முடிந்ததும், உடுத்திக் கொண்டு, மது விடுதிகளுக்குப் போகும் ஆண்களுடன் சேர்ந்து கொள்கிறார்கள்.'' இத்தகையோர் பிள்ளைப் பிராயம் முதற்கொண்டே குடிபோதைக்குப் பழக்கப்பட்டிருப்பதில் வியப்பில்லை. ''மிகவும் வருந்தத்தக்கது என்னவென்றால், கல்லறுப்போர் மனக் கசப்புற்று, விரக்திக்கு ஆளாகி விடுகிறார்கள். இவர்களில் சற்றே மேம்பட்ட ஒருவர் சவுதால்ஃபீல்டு பாதிரியார் ஒருவரிடம் 'சைத்தானைத் திருத்தினாலும் திருத்தலாம்; கல்லறுப்பவனைத் திருத்தவே முடியாது, சாமி!' என்றார்.''[656]

நவீனப் பட்டறைத் தொழிலில் (இதில் முறையான தொழிற்சாலைகள் தவிர்த்து பெரிய அளவுள்ள எல்லாப் பட்டறைகளையும் சேர்த்துக் கொள்கிறேன்) உழைப்பின் தேவைப் பொருட்களை மூலதனம் சிக்கனப்படுத்துகிற விதத்தைப் பொறுத்த வரை, இது பற்றிய அதிகாரபூர்வமானதும் செழுமியதுமான ஆதாரங்களைப் பொதுச் சுகாதார அறிக்கைகள் நான்கிலும் (1863), ஆறிலும் (1864) காணலாம். ''பட்டறைகள் குறித்து, குறிப்பாக லண்டனைச் சேர்ந்த அச்சகங்கள் மற்றும் தையற்கூடங்கள் குறித்துக் கூறப்படுவது நமது புனைவியல் எழுத்தாளர்களின் அருவருப்பான கற்பனைகளையும் விஞ்சுவதாகும். தொழிலாள மக்களது சுகாதாரத்திற்கு ஏற்படும் கேடு, கூறாமல் விளங்கும். பிரிவி கவுன்சிலின் தலைமை மருத்துவ அதிகாரியும், ''பொதுச் சுகாதார அறிக்கைகளின்'' அதிகாரபூர்வப் பதிப்பாசிரியருமான டாக்டர் சைமன் கூறுகிறார்: ''தொழிலாள மக்கள் தங்களது முதல் துப்புரவு உரிமையை — அதாவது வேலைக் கமர்த்துபவர் எந்த வேலைக்காக அவர்களை ஒன்று கூட்டினாலும் சரி, உழைப்பு அவரைச் சார்ந்துள்ள வரை தவிர்க்கப்படக்கூடிய சுகாதாரக் கேடான அனைத்து நிலைமைகளிலிருந்தும் விடுவிக்கப்பட வேண்டும் என்ற உரிமையை — வற்புறுத்துவது எப்படி

656 ''குழந்தையுழைப்பு ஆணையம் ஐந்தாம் அறிக்கை, 1866,'' பக்கம் xvi-xviii, எண் 86-97; பக்கம் 130-133, எண் 39-71. மேலும் பார்க்கவும்: மூன்றாம் அறிக்கை, 1864, பக்கம் 48,56.

நடைமுறையில் சாத்தியமற்றது என்பதை எனது நான்காம் அறிக்கையில் (1863) விளக்கினேன். தொழிலாள மக்கள் நடைமுறையில் இந்தத் துப்புரவு நீதியைப் பெற இயலாதவர்களாக உள்ளனர் என்னும் அதே நேரத்தில், துப்புரவுக் கொள்கையின் ஊதிய நிர்வாகத்தாரிடமிருந்து உருப்படியான ஆதரவெதையும் அவர்களால் பெற இயலவில்லை என்பதைச் சுட்டிக் காட்டினேன்....பல்லாயிரக்கணக்கான ஆண், பெண் தொழிலாளர்களின் ஆயுள் இப்போது அவர்களது வேலையாலேயே ஏற்படும் ஓயாத உடல் வருத்தத்தால் வீணில் வதையுண்டு, குறுகிப்போகிறது.'' [657] வேலைக் கூடங்கள் ஆரோக்கியத்தைப் பாதிக்கிற விதத்தை எடுத்துக் காட்டும் விதத்தில் டாக்டர் சைமன் பின்வரும் இறப்பு வீத அட்டவணையைத் தருகிறார்.[658]

| அந்தந்தத் தொழிலிலும் வேலை செய்கிற எல்லா வயதிலுமான ஆட்களின் தொகை | ஆரோக்கியம் தொடர்பாக ஒப்பு நோக்கப்படும் தொழில்கள் | அந்தந்தத் தொழிலிலும் தரப்பட்டுள்ள அடியிற்கண்ட வயதுகளிடையே 100,000 ஆட்களுக்கு இறப்பு வீதம் | | |
|---|---|---|---|---|
| | | வயது 25-35. | வயது 35-45. | வயது 45-55. |
| 958,265 | இங்கிலாந்திலும் வேல்சிலும் பயிர்த் தொழில் | 743 | 805 | 1,145 |
| 22,301 ஆண் 12,379 பெண் | லண்டன் தையற்கூடங்கள் | 958 | 1,262 | 2,093 |
| 13,803 | லண்டன் அச்சகங்கள் | 894 | 1,747 | 2,367 |

### ஈ. நவீன வீட்டுத் தொழில்

வீட்டுத் தொழில் எனப்படுவதற்கு வருகிறேன். நவீன இயந்திரத்

657 ''பொதுச் சுகாதாரம் ஆறாம் அறிக்கை,'' லண்டன், 1864, பக்கம் 29. 31.

658 முன் வந்தது, பக்கம் 30. 25, 35 வயதுகளிடையே லண்டன் தையற்கூடங்கள் மற்றும் அச்சகங்களின் தொழிலாளர்கள் மத்தியில் இறப்பு வீதம் உண்மையில் இன்னும் அதிகமாகும் என்கிறார் டாக்டர் சைமன். ஏனென்றால், லண்டனிலுள்ள முதலாளிகளுக்கு கிராமப்புறத்திலிருந்து 30 வயது வரையிலான இளைஞர்கள் பெரும் தொகையில் ''பழகு தொழிலாளர்'' ஆகவும், ''திறம் பெறுவோர்' ஆகவும் கிடைக்கின்றனர்; இவர்கள் தம் தொழிலில் செம்மை பெறும் நோக்கத்துக்காக வருகின்றனர். இவர்கள் மக்கள்தொகைக் கணக்கில் லண்டன்வாசிகளாக இடம் பெறுகின்றனர்; லண்டன் இறப்பு வீதம் கணக்கிடப்படுவதற்கு அடிப்படையாகவுள்ள ஆள் எண்ணிக்கையை இவர்கள் உயர்த்தி விடுகின்றனர்; ஆனால் இறப்பு எண்ணிக்கை அதற்கேற்ப உயர்வதில்லை. அவர்களில் பெரும்பகுதியினர், குறிப்பாகக் கடும் நோய்வாய்ப்பட்டோர் கிராமங்களுக்குத் திரும்பி விடுகின்றனர். (முன் வந்தது.)

தொழிலின் பின்னணியில், மூலதனம் தன் சுரண்டலை நடத்துகிற இந்தத் துறையின் பயங்கரங்களைப் பற்றித் தெரிந்து கொள்ளும் பொருட்டு, வெளித்தோற்றத்துக்கு கிராம வாழ்க்கைக்குரியதாய் இங்கிலாந்தின் தொலைதூரக் கிராமங்கள் சிலவற்றில் நடைபெறும் ஆணி செய்யும் தொழிலைப்[659] பார்த்தாக வேண்டும். ஆயினும், சித்திரப் பின்னல் தொழிற் கிளைகளிலும், சருகுப் பின்னல் தொழிற் கிளைகளிலும் சில உதாரணங்களைத் தருவது இங்கு போதுமானதாக இருக்கும். இவை இன்னும் இயந்திர சாதனத்தின் துணை கொண்டு நடைபெறாதவை, தொழிற்சாலைகளாய் அல்லது பட்டறைகளாய் அமைந்தவற்றுடன் இன்னமும் போட்டியிடாதவை.

இங்கிலாந்தில் சித்திரப் பின்னல் உற்பத்தியில் வேலை செய்யும் *150,000* பேரில் சுமார் *10,000* பேர் *1861*ஆம் ஆண்டு தொழிற்சாலைச் சட்டத்தின் ஆளுகைக்குட்பட்டோர் ஆவர். மீதமுள்ள *140,000* பேரில் அநேகமாக எல்லாருமே மாதர்களும், இளம் வயதினரும், குழந்தைகளும் ஆவர்; குழந்தைகளில் ஆண் குழந்தைகள் மிகக் குறைவு. சுரண்டலுக்குரிய இந்த மலிவான மூலப் பொருளின் ஆரோக்கிய நிலையை, நாட்டிங்கம் பொது மருந்தகத்தின் மருத்துவர் டாக்டர் ட்ரூமன் தயாரித்த பின்வரும் அட்டவணையிலிருந்து அறியலாம். சித்திரப் பின்னல் தொழிலாளர்களான, பெரும்பாலும் *17, 24* வயதுகளுக்கிடைப்பட்ட *686* பெண் நோயாளிகளில் காச நோயாளிகளின் தொகை:

| | |
|---|---|
| *1852 — 45*இல் *1.* | *1857 — 13*இல் *1.* |
| *1853 — 28*இல் *1.* | *1858 — 15*இல் *1.* |
| *1854 — 17*இல் *1.* | *1859 — 9*இல் *1.* |
| *1855 — 18*இல் *1.* | *1860 — 8*இல் *1.* |
| *1856 — 15*இல் *1.* | *1861 — 8*இல் *1.*[660] |

காச நோய் வீதத்திலான இம்முன்னேற்றம், எல்லாம் நன்மைக்கே என்று நம்புகிற முன்னேற்றவாதிகளுக்கெல்லாம் முன்னேற்றவாதியாக இருப்பவருக்கும் ஜெர்மனியின் தடையிலா வாணிபப் பிரசாரகர்களிலேயே மிகப்பெரிய புளுகு மூட்டைக்காரருக்கும் போதுமானதாகும்.

*1861*ஆம் ஆண்டுத் தொழிற்சாலைச் சட்டம் சித்திரப் பின்னல் வேலையை, இங்கிலாந்தில் இயந்திர சாதனத்தின் துணை கொண்டு இது நடைபெறும் போதெல்லாம், முறைப்படுத்துகிறது. இங்கிலாந்தில் இவ்வேலை பொதுவாக இயந்திர சாதனத்தின் துணை

---

[659] நான் இங்கே குறிப்பிடுவது சுத்தியால் தட்டித் தயாரிக்கப்படும் ஆணிகளையே; இயந்திரங்களால் வெட்டிச் செய்யப்படும் ஆணிகள் வேறு. பார்க்கவும்: "குழந்தையுழைப்பு ஆணையம், மூன்றாம் அறிக்கை," பக்கம் xi.,xix., எண் *125-130*. பக்கம் *52*, எண் *11*, பக்கம் *114*, எண் *487*, பக்கம் *137*, எண் *674*.

[660] "குழந்தையுழைப்பு ஆணையம் இரண்டாம் அறிக்கை," பக்கம் xxii., எண் *166*.

கொண்டே நடைபெறுகிறது. நாம் இப்போது பட்டறைகளில் அல்லது பண்டக சாலைகளில் வேலை செய்வோரை அல்லாமல், வீட்டில் வேலை செய்வோரை மட்டுமே கருத்திற் கொண்டு பரிசீலிக்கப் போகும் கிளைகள் இரு பிரிவுகளாய் அமைகின்றன. அவையாவன: (1) இறுதி வடிவளித்தல், (2) சரி செய்தல். முதலாவது இயந்திரத்தால் செய்யப்பட்ட சித்திரப் பின்னலுக்கு இறுதி வடிவளிப்பதற்கான வேலைகளைச் செய்கிறது; இது மிகப் பல உட்பிரிவுகளைக் கொண்டது.

சித்திரப் பின்னலுக்கு இறுதி வடிவளிக்கும் வேலை ''எஜமானி களின் இல்லங்கள்'' எனப்படுபவற்றில் செய்யப்படுகிறது; அல்லது பெண்களால் அவர்களது குழந்தைகளின் உதவியுடனோ உதவியில் லாமலோ சொந்த இல்லங்களில் செய்யப்படுகிறது. ''எஜமானி களின் இல்லங்களை'' வைத்திருக்கும் பெண்களே ஏழைகள்தாம். வேலைக் கூடம் தனியார் இல்லமாகும். எஜமானிகள் பட்டறை யதிபர்களிடமிருந்து அல்லது பண்டகசாலையினரிடமிருந்து சரக் காணைகள் [orders] பெறுகின்றனர்; தமது அறைகளின் அளவுக் கும் தொழிலின் ஏறியிறங்கும் வேண்டலுக்கும் ஏற்ப மாதர்களையும், இளம் பெண்களையும், சின்னஞ்சிறார்களையும் வேலைக்கமர்த்து கின்றனர். இந்த வேலைக் கூடங்களில் அமர்த்தப்படுகிற பெண் தொழிலாளர்களின் தொகை சிலவற்றில் 20 முதல் 40 ஆகவும், மற்றவற்றில் 10 முதல் 20 ஆகவும் இருக்கும். குழந்தைகள் வேலை செய்ய ஆரம்பிக்கிற சராசரி வயது ஆறு; ஆனால் பல நேர்வுகளில் இது ஐந்துக்கும் குறைவு. வழக்கமான வேலை நேரம் காலை 8 முதல் இரவு 8 வரை; இதில் சாப்பாட்டுக்கு 1½ மணி நேரம்; தாறுமாறான இடைவேளைகளில், அழுக்கடைந்த வேலையறை களில் சாப்பிடுகின்றனர். தொழில் மும்முரமாக நடக்கும் போது, பல நேரங்களில் உழைப்பு காலை 8, ஏன், 6 மணியிலிருந்து இரவு 10, 11, அல்லது 12 வரை நீடிக்கிறது. ஆங்கிலேய இராணுவக் கொட்டடிகளில் ஒவ்வொரு சிப்பாய்க்கும் விதிப்படி ஒதுக்கித் தரப்படும் இட அளவு 500 முதல் 600 கன அடியும், இராணுவ மருத்துவ மனைகளில் 1,200 கன அடியுமாகும். ஆனால் இறுதி வடிவளிப்பு நடைபெறும் அந்த வேலைக் கொட்டில்களில் ஒவ் வொருவருக்கும் 67 முதல் 100 கன அடி வரைதான் உள்ளது. மேலும், காற்றிலுள்ள பிராண வாயுவை வாயு விளக்குகள் விழுங்கி விடுகின்றன. சித்திரப் பின்னலை சுத்தமாக வைத்துக் கொள்ளும் பொருட்டு, தளமிட்ட தரையாய் இருந்த போதிலும் குழந்தைகள் பாத அணிகளைக் கழற்றி விடுமாறு, குளிர்காலத்திலும் கூட, கட்டாயப்படுத்துகின்றனர். ''14 முதல் 20 குழந்தைகள் 12 அடி சதுரத்துக்கு மேற்படாத சிறு அறையில் நெருக்கியடித்துக் கொண்டு அமர்ந்து, களைப்பும் அலுப்பும் ஊட்டி உடலை ஓயச் செய்யும் வேலையில் — ஆரோக்கியக்கேடான சகல தீய நிலைமைகளிலும்

நடைபெறுவதாகிய இந்த வேலையில் — 24 மணி நேரத்தில் 15 மணி நேரத்துக்கு ஈடுபட்டிருப்பதை நாட்டிங்கமில் சர்வ சாதாரண மாய்க் காணலாம்....குழந்தைகளும் கூட முழு முயற்சி செய்து, கவனம் செலுத்தி, வியப்பூட்டும் விரைவுடன் வேலை செய் கிறார்கள்; விரல்கள் நொடிப் பொழுது கூட ஓய்வதுமில்லை, வேகம் குறைவதுமில்லை. யாரேனும் ஏதாவது கேட்கையிலும், பணியிலிருந்து கண்ணை அவர்கள் உயர்த்துவதில்லை; விநாடி நேரம் வீணாகி விடுமே என்று அஞ்சுகிறார்கள். நேரம் செல்லச் செல்ல, அடிக்கடி ''கைப்பிரம்பை'' உபயோகித்து எஜமானிகள் உசுப்புகிறார்கள், ''குழந்தைகள் மெல்ல மெல்லக் களைப்படை கிறார்கள்; உடல் பாங்கில் மாற்றமின்றி அமர்ந்து, அலுப்பும் சலிப் பும் ஊட்டி கண்ணை வாட்டி உடலை ஓயச்செய்யும் வேலையில் ஈடுபடுகிற இவர்கள் இந்த நெடுநேரச் சித்திரவதையின் முடிவில் அமைதியின்றிப் பறவைகள் போல் படபடக்கின்றனர். அவர்கள் படும் பாடு அடிமைகள் படும் பாட்டைப் போன்றது.[661] மாதர்களும் அவர்தம் குழந்தைகளும் வீட்டில் — இப்போதெல்லாம் இதன் பொருள் வாடகை அறையில் என்பதாகும், பல சந்தர்ப்பங் களில் ஒதுக்கறையில் என்பதாகும் — வேலை செய்யும் போது, நிலைமை இன்னும் கூட மோசமானது. இவ்விதமான வேலை, நாட் டிங்கமைச் சுற்றி 80 மைல் அளவில் தரப்படுகிறது. இரவு 9 அல்லது 10 மணிக்குப் பண்டகசாலையை விட்டுப் புறப்படும் குழந்தைகளிடம், வீட்டுக்கு எடுத்துச் சென்று இறுதி வடிவளிப்பதற் கென ஒரு கட்டு சித்திரப்பின்னல் தருகிறார்கள். கபடவேடதாரி யான முதலாளியின் சார்பில் அவரது வேலையாட்களில் ஒருவர் இப்படித் தருகையில் ''இது அம்மாவுக்காக'' என்று பரிவுடன் கூறத் தவறுவதில்லை; ஆயினும், பரிதாபத்துக்குரிய இந்தக் குழந்தைகள் தூங்காமல் விழித்திருந்து உதவியாக வேண்டும் என்பது அவருக்குத் தெரிந்ததுதான்.[662]

தலையணை சித்திரப் பின்னல் இங்கிலாந்தில் முக்கியமாக இரண்டு விவசாய வட்டங்களில் நடைபெறுகிறது. ஹோணிடான் சித்திரப்பின்னல் வட்டம் — தெவோன்ஷயரின் தென் கடற்கரை நெடுக 20 முதல் 30 மைல் நீளமுடையது; வடக்கு தெவோனைச் சேர்ந்த சில இடங்கள் உள்ளிட்டது. மற்றொன்று — பக்கிங்காம், பெட்ஃபோர்டு, நார்த்தாம்ப்டன் ஆகிய மாவட்டங்களில் பெரும் பகுதியும், இதையொட்டி வரும் ஆக்ஸ்ஃபோர்டுஷயர், ஹண்டிங் டன்ஷயர் ஆகியவற்றில் சில பகுதிகளும் உள்ளிட்டது. வழக்கமாக வேலை நடக்கிற இடங்கள் விவசாயத் தொழிலாளர்களின் குடிசை கள்தாம். பல தொழிலதிபர்கள் 3,000க்கும் அதிகமான சித்திரப்

661 ''குழந்தையுழைப்பு ஆணையம், இரண்டாம் அறிக்கை, 1864,'' பக்கம் xix., xx., xxi.

662 முன் வந்தது, பக்கம் xxi., xxii.

பின்னல் தொழிலாளர்களை வைத்து வேலை வாங்குகின்றனர்; இத்தொழிலாளர்களில் குழந்தைகள் பிரதானம்; இளம் வயதினரில் எல்லாரும் பெண்களே. சித்திரப் பின்னல் இறுதி வடிவளிக்கும் வேலைக்கு உரியதென மேலே கூறப்பட்ட அதே நிலைமைதான் இங்கும் நிலவுகிறது; ஒரே ஒரு வேறுபாடு என்னவென்றால், "எஜமானிகளின் இல்லங்களுக்கு" பதிலாய் இங்கே ஏழைப் பெண்கள் தம் குடிசைகளில் வைத்துள்ள "சித்திரப் பின்னல் பள்ளிகள்" எனப்படுபவற்றைக் காண்கிறோம். குழந்தைகள் ஐந்து வயது முதல், பல சந்தர்ப்பங்களில் இன்னும் சிறு வயது முதலே, பன்னிரண்டு அல்லது பதினைந்து வயது வரை இந்தப் பள்ளிகளில் வேலை செய்கின்றனர்; முதலாண்டில் மிகச் சிறு குழந்தைகள் நான்கு முதல் எட்டு மணி நேரம் வேலை செய்கின்றனர்; பின்னர் காலை 6 மணி முதல் இரவு எட்டு, பத்து மணி வரை வேலை செய்கின்றனர்; "அறைகள் பொதுவாகச் சிறு குடிசைகளின் சாதாரண வசிப்பறைகளாகும்; குளிர்க் காற்றைத் தடுப்பதற்காகப் புகைபோக்கி அடைத்து வைக்கப்படுகிறது; உள்ளிருப்போர் அவர்களது உடல் வெப்பத்தால் மட்டுமே கதகதப்பு பெறுகின்றனர்; குளிர் காலத்திலும் கூட பெரும்பாலும் இதே நிலைதான். மற்ற இடங்களில் பள்ளி அறைகள் எனப்படும் இவை கணப்பிடங்கள் இல்லாத கிட்டங்கிகளைப் போன்றவையே....இந்த இருட்குகைகளில் நெரிசல் மிகையாகி, காற்று படுமோசமாய்க் கெட்டு விடுவதுண்டு. சாக்கடைகள், கழிப்பறைகள், அழுகிய குப்பைகள், மற்றும் சிறு குடிசைகளின் சுற்றுவட்டாரத்துக்குரிய அசுத்தங்களால் நேரிடும் தீமைகளும் இத்துடன் சேர்ந்து கொள்கின்றன." இடவசதியைப் பொறுத்த வரை: "சித்திரப்பின்னல் பள்ளி ஒன்றில் 18 பெண்களும் ஓர் எஜமானியும், ஒவ்வொருவருக்கும் 35 கன அடி; இன்னொன்றில் சகிக்க முடியாத துர்வாடை வீசுமிடத்தில் 18 பேர், தலைக்கு 24½ கன அடி. இந்தத் தொழிலில் 2, 2½ வயதுக் குழந்தைகள் கூட வேலை வாங்கப்படுவதைக் காணலாம்."[663]

பக்கிங்காம், பெட்ஃபோர்டு மாவட்டங்களில் சித்திரப் பின்னல் முடியுமிடத்தில், சருகுப் பின்னல் ஆரம்பித்து ஹெர்ட்ஃபோர்டுஷயரின் பெரும்பகுதியிலும், எஸ்ஸெக்சின் மேற்கத்திய, வடக்கத்திய பகுதிகளிலும் விரிந்து பரவுகிறது. 1861இல் சருகுப் பின்னல், சருகுத் தொப்பி செய்தல் ஆகியவற்றில் 40,043 பேர் வேலை செய்தனர்; இவர்களில் 3,815 பேர் சகல வயதினருமான ஆண்கள்; எஞ்சியோர் பெண்கள்; இவர்களில் சுமார் 7,000 குழந்தைகள் உட்பட 14,913 பேர் 20 வயதுக்குட்பட்டவர்கள். சித்திரப் பின்னல் பள்ளிகளுக்கு பதில் இங்கே "சருகுப் பின்னல் பள்ளிகள்" காணப்படுகின்றன. குழந்தைகள் பொதுவாக சருகுப்

---

663 முன் வந்தது, பக்கம் xxix., xxx.

பின்னலில், 5 வயதில், பல சந்தர்ப்பங்களில் 3 வயதுக்கும் 4 வயதுக்குமிடையே போதம் பெறத் துவங்குகின்றனர். அவர்களுக்குக் கல்வி புகட்டப்படுவதில்லைதான். இந்த இரத்தக் காட்டேரி நிறுவனங்களிலிருந்து வேறுபடுத்திக் காட்டும் பொருட்டும் ஆரம்பப் பள்ளிகளைக் குழந்தைகள் ''இயற்கைப் பள்ளிகள்'' என்றழைக் கிறார்கள். அரைப் பட்டினி அன்னையர் பொதுவாகத் தினசரி 30 கெஜம் என்று விதிக்கிற வேலையை செய்து தொலைப்பதற்காகக் குழந்தைகள் இந்நிறுவனங்களில் பாடுபடுகிறார்கள். இத்தாய் மார்கள் குழந்தைகளைப் பள்ளி முடிந்த பிறகும் வீட்டில் இரவு 10, 11, 12 மணி வரை வேலை செய்ய வைப்பதுண்டு. அவ்வப் போது வாயில் வைத்து சருகை ஈரமாக்க வேண்டியிருப்பதால், விரல்களும் வாயும் புண்ணாகின்றன. படுக்கையறை அல்லது பணியறையில் ஒவ்வொருவருக்கும் முறையாகத் தேவைப்படும் குறைந்தபட்ச இடவசதி 300 கன அடி என்பது லண்டனிலுள்ள மருத்துவ அதிகாரிகள் குழாம் முழுவதன் பொதுக் கருத்தாகும் என்கிறார் டாக்டர் பல்லார்டு. ஆனால், இட வசதி அளிப்பதில் சித்திரப்பின்னல் பள்ளிகளை விட சருகுப் பின்னல் பள்ளிகள் சிக்கனம் செய்கின்றன. ''ஒவ்வொருவருக்கும் 12⅔, 17, 18½ கன அடியும், 22 கன அடிக்குக் குறைவாகவுமே கிடைக்கிறது.'' இவற்றில் ஆகக் குறைந்த கன அடியிலான இடவசதி, ஒவ்வொரு திசையிலும் 3 அடி அளவுள்ள பெட்டியில் ஒரு குழந்தையை அடைத்து வைப்பதாகக் கொண்டால் அதற்குக் கிடைப்பதில் பாதிக்கும் குறைவானதாகும் என்கிறார் ஆணையர்களில் ஒருவரான திரு வொய்ட். குழந்தைகள் 12 அல்லது 14 வயது வரை இப்படித் தான் வாழ்க்கையை அனுபவிக்கிறார்கள். அரைப் பட்டினி கிடக்கிற ஏழைப் பெற்றோர்கள், தம் குழந்தைகளிடமிருந்து முடிந்த வரை அதிகமாகக் கறப்பதிலேயே குறியாய் உள்ளனர். இக்குழந்தை களுக்கு வயது வந்ததும், இவர்கள் தம் பெற்றோர்களைப் பற்றிச் சிறிதும் கவலைப்படாமல் பிரிந்து போவதில் வியப்பேதுமில்லை. ''இப்படி வளர்க்கப்படுவோரிடையே அறியாமையும் குணக்கேடு களும் கோலோச்சுவதில் ஆச்சரியமில்லை....ஒழுக்க நிலையில் அவர்கள் அதலபாதாளத்தில் இருக்கிறார்கள்....மிகப் பல பெண் களுக்கு புறமணக் குழந்தைகள் உள்ளனர்; அதுவும் குற்றவியல் புள்ளிவிவரங்களை நன்கறிந்தவர்களும் கூட திகைப்படையும் விதத் தில் சிறு வயதிலேயே இப்படிக் குழந்தை பெற்று விடுகின்றனர்.''[664] இந்த ஆதர்சக் குடும்பங்களின் ஜென்ம பூமியானது ஐரோப்பாவுக் கான முன்மாதிரி கிறிஸ்தவ நாடாகும்; எப்படியும், கிறித்துவம் தொடர்பாய் அருகதை வாய்ந்த ஆதாரமாய்க் கொள்ளக்கூடிய பெருமகனார் மோந்தலாம்பேர் இப்படித்தான் சொல்கிறார்.

---

664 முன் வந்தது, பக்கம் xl., xli.

மேற்கண்ட தொழில்களில் கிடைக்கும் அற்பக் கூலியும் கூட (சருகுப் பின்னல் பள்ளிகளில் குழந்தைக்குத் தரப்படும் கூலி 3 ஷில்லிங்கை எட்டுவதே அபூர்வம்), சரக்கூதிய முறை [truck system] நிலவுவதால், எங்குமே, குறிப்பாக சித்திரப்பின்னல் வட்டங்களில் பெயரளவிலான இந்தத் தொகையை விடவும் பெரிதும் குறைந்து விடுகிறது.[665]

### உ. நவீனப் பட்டறைத் தொழிலும் வீட்டுத் தொழிலும் நவீன இயந்திரத் தொழிலாய் மாறிப் போதல். அத்தொழில்களுக்குத் தொழிற்சாலைச் சட்டங்களைப் பிரயோகிப்பதால் இப்புரட்சி துரிதமாதல்

மாதர்கள், குழந்தைகள் ஆகியோரின் உழைப்பை ஒவ்வாத முறையில் பிரயோகித்தும், வேலை செய்வதற்கும் வாழ்வதற்கும் வேண்டிய இயல்பான நிலைமை ஏதுமில்லாத படி சூறையிட்டும், மிகை வேலையையும் இரவு வேலையையும் மிருகத்தனமான அள வுக்கு சுமத்தியும், இப்படி உழைப்புச் சக்தியை மலிவாக்கிச் செல்லும் வழியில் தாண்டிச் செல்ல முடியாத இயற்கைத் தடைகள் இறுதியில் குறுக்கிடுகின்றன. இதே குறுக்கீடுதான் இந்த வழிமுறை களைக் கொண்டு சரக்குகளை மலிவாக்கிச் செல்வதற்கும், பொது வாக முதலாளித்துவச் சுரண்டலுக்கும் ஏற்படுகிறது. இப்படியொரு நிலை இறுதியில் ஏற்பட்டதும்—இது ஏற்படப் பல்லாண்டு கால மாகிறது—இயந்திர சாதனத்தைப் புகுத்த வேண்டிய தருணம் பிறக் கிறது; சிதறிக் கிடக்கும் வீட்டுத் தொழில்களும், மேலும் பட்டறைத் தொழில்களும் கூட இத் தருணம் முதல் அதிவேகமாய் ஆலைத் தொழில்களாக மாற வேண்டியதாகிறது.

இந்த அதிவேக மாற்றத்துக்கு எடுத்துக்காட்டாய்—பகாசுரப் பரிமாணமுடைய எடுத்துக்காட்டாய்—ஆடை அணி உற்பத்தி செய் யும் தொழிலைக் குறிப்பிடலாம். குழந்தையுழைப்பு ஆணையம் செய்துள்ள வகைப்பிரிவின் படி இத்தொழிலில் அடங்கிய கிளை களாவன: சருகுத் தொப்பி செய்தல், மகளிர் தொப்பி செய்தல், குல்லாய் செய்தல், தையல், ரிப்பன் தயாரித்தல், உடை தயாரித்தல், சட்டை தயாரித்தல், உள்ளாடை தயாரித்தல், கையுறை தயாரித்தல், பாத அணி தயாரித்தல்; மற்றும் கழுத்துப் பந்தனங்கள், கழுத்துப் பட்டிகைகள் தயாரித்தல் போன்ற பல சிறுசிறு கிளைகள். 1861இல் இங்கிலாந்திலும் வேல்சிலும் இந்தத் தொழில்களில் வேலை செய்த பெண்களின் தொகை 586,299. இவர்களில் குறைந்தது 115, 242 பேர் 20 வயதுக்குட்பட்டவர்கள்; 16,650 பேர் 15 வயதுக்குட்பட்டவர்கள். 1861இல் ஐக்கிய முடியரசில்

665 "குழந்தையுழைப்பு ஆணையம், முதலாம் அறிக்கை, 1863," பக்கம் 185.

இந்தப் பெண் தொழிலாளர்களின் தொகை 750,334. இங்கிலாந்திலும் வேல்சிலும் தொப்பி செய்வதிலும், பாத அணித் தயாரிப்பிலும், கையுறைத் தயாரிப்பிலும் தையல் தொழிலிலும் வேலை செய்த ஆண்களின் தொகை 437,969. இவர்களில், 15 வயதுக் குட்பட்டவர்கள் 14,964 பேர். 15க்கும் 20க்கும் இடைப்பட்ட வயதினர் 89,285 பேர். 20 வயதுக்கு மேற்பட்டவர்கள் 333,117 பேர். சிறு கிளைகள் பலவும் இப்புள்ளி விவரங்களில் சேர்க்கப்பட வில்லை. ஆனால் இந்த எண் விவரங்களை இப்படியே எடுத்துக் கொண்டாலும் கூட, 1861 ஆம் வருட மக்கள்தொகைக் கணக்கெடுப்பின் படி, இங்கிலாந்துக்கும் வேல்சுக்கும் மட்டும் மொத்தம் 1,024,277 பேர் இதில் இருக்கக் காணலாம். இது பயிர்த் தொழிலிலும், கால்நடைவளர்ப்பிலும் ஈடுபட்டிருப்போரின் தொகைக்கு கிட்டத்தட்ட சமம். இயந்திர சாதனத்தின் ஜாலவித்தையால் மலை மலையாய்க் குவிக்கப்படும் சரக்குகள் என்ன ஆகின்றன, அந்த இயந்திர சாதனம் வேலையற்றோராக்குகிற திரள் திரளான உழைப்பாளி மக்கள் என்ன ஆகிறார்கள் என்பதை இப்போது புரிந்து கொள்ளத் தொடங்குகிறோம்.

ஆடை அணி உற்பத்தியின் ஒரு பகுதி பட்டறைகளில் நடைபெறுகிறது. இந்தப் பட்டறைகளில் காணப்படுகிற உழைப்புப் பிரிவினை முன்பே தயாராயிருந்த தனித்தனி உறுப்புகளைக் கொண்ட உழைப்புப் பிரிவினையின் மறுபதிப்புதான். ஆடை அணி உற்பத்தியின் இன்னொரு பகுதி சிறு கைவினை ஆண்டைகளால் செய்யப்படுகிறது; ஆனால் இவர்கள் முன் போல தனிப்பட்ட நுகர்வோருக்காக வேலை செய்வதற்கு பதிலாய், பட்டறைத் தொழிற்கூடங்களுக்காகவும், பண்டக சாலைகளுக்காகவும் வேலை செய்கின்றனர்; பாத அணித் தயாரிப்பு போன்ற குறிப்பிட்ட சில கிளைகளை முழு நகரங்களும் கிராமியப் பகுதிகளும் தனித் தொழிலாகவே நடத்தும் அளவுக்கு இது நடைபெறுகிறது; இறுதியாக பட்டறைகளுக்கும் பண்டக சாலைகளுக்கும், ஏன், சிறு அதிபர்களின் தொழிற்கூடங்களுக்கும் கூட புறப் பிரிவாக அமைகிற வீட்டுத் தொழிலாளர் எனப்படுவோரால் மிகப்பெரும் அளவு வீதத்தில் இவ்வுற்பத்தி நடத்தப்படுகிறது.[666]

கச்சாப் பொருள் முதலானவற்றை இயந்திரத் தொழில் அளித்து தவுகிறது. இயந்திரத் தொழிலாலும் மேம்பட்ட பயிர்த் தொழிலாலும் ''விடுவிக்கப்பட்ட'' ஆட்கள் மலிவான மானுடப் பொருளாய் (taillable a merci et misericorde*) அமைகின்றனர். வேண்டல்

---

666 இங்கிலாந்தில் ரிப்பன் தயாரித்தல், ஆடை தயாரித்தல் ஆகியவை பெரும்பாலும் வேலையதிபரின் கட்டத்திலேயே நடைபெறுகின்றன. அங்கேயே தங்கியும், வெளியிலிருந்து வந்தும் பெண் தொழிலாளர்கள் இந்த வேலையைச் செய்கிறார்கள்.

---

* நினைத்த படியும் விருப்பம்போலும் வரி விதிக்கப்படுகிறவர்களாய்

அதிகரிக்கையில் நிறைவு செய்வதற்கு ஓர் உழைப்புப் பட்டாளம் தயார் நிலையில் இருப்பது முதலாளிக்கு அவசியம் என்பதே இவ் வகைப் பட்டறைத் தொழில்கள் தோன்றுவதற்கு முக்கியக் காரணம்.[667] ஆயினும், இப்பட்டறைத் தொழில்கள் சிதறலான கைத் தொழில்களையும், வீட்டுத் தொழில்களையும் ஓர் அகண்ட அடித் தளமாகத் தொடர்ந்து நீடிக்க அனுமதித்தன. இந்த உழைப்புக் கிளைகளில் மிகுதியாய் உபரி-மதிப்பு உற்பத்தியாவதற்கும் இவற்றின் உற்பத்திப் பண்டங்கள் மேலும் மேலும் மலிவாவதற்கும் முக்கியக் காரணமாய் இருந்ததும் இருப்பதும் என்னவென்றால், உயிர் விடாமல் காலம் தள்ளும் அவல வாழ்வுக்கு வேண்டிய குறைந்த பட்சத்துக்கு மேல் அதிகமாகாத கூலியே தரப்படுவதும், மனித உயிரமைப்பு தாளக் கூடிய உச்ச அளவுக்கு வேலை நேரம் நீட்டிக்கப் படுவதும்தான். சரக்குகளாக மாற்றப்பட்ட மனித வியர்வையும், மனித இரத்தமும் இவ்வளவு மலிவாக இருந்ததால்தான், சந்தைகள் இடையறாது விரிவடைந்தன, தொடர்ந்து நாள்தோறும் விரிவடைகின்றன. ஆங்கிலேய ரசனைகளையும், பழக்க வழக்கங்களையும் கொண்ட இங்கிலாந்தின் குடியேற்றச் சந்தைகளுக்கு இது இன்னும் குறிப்பாகவே பொருந்தும். இறுதியாக ஓர் எல்லை வந்தடையப் பெற்றது. பழைய வழிமுறைக்கான அடிப்படை — அதாவது உழைப் பாளர்களைச் சுரண்டுவதில் அப்பட்டமான மிருகத்தனமும், அத் துடன் கூட அதிகமாகவோ குறைவாகவோ முறைப்படியான உழைப்புப் பிரிவினையும் — விரிவடைந்து கொண்டிருந்த சந்தைகளுக்கும், இன்னும் அதிவேகமாய் முதலாளிகளிடையே விரிவடைந்து கொண்டிருந்த போட்டிக்கும் இப்போது போதுமானதாயில்லை. இயந்திர சாதனத்தின் பிரவேசத்துக்குரிய தருணம் வந்துவிட்டது. புரட்சிகர இயந்திரங்களிலேயே தீர்மானகர இயந்திரம் தையல் இயந்திரமாகும் — ஆடைத் தயாரிப்பு, தையல், பாத அணித் தயாரிப்பு, ஊசிவேலை, தொப்பித் தயாரிப்பு, இன்ன பிற வற்றைக் கொண்ட இந்த உற்பத்தித் துறையின் எண்ணற்ற கிளைகளையெல்லாம் சம அளவில் தாக்கிடும் இயந்திரம் இது.

உழைப்பாளர்கள் மீது இந்த இயந்திரத்தால் ஏற்படும் உடனடி விளைவு நவீனத் தொழில் துறையின் உதயத்துக்குப் பின்னர் புதிய தொழிற் கிளைகளைப் பற்றிக் கொள்ளும் சகல இயந்திர சாதனங்களாலும் ஏற்படும் விளைவைப் போன்றதே. சின்னஞ் சிறார்கள் வேலையிழக்கிறார்கள். மிகப் பலரும் பரம ஏழைகளாய் இருக்கும் வீட்டுத் தொழில் உழைப்பாளர்களின் கூலியுடன் ஒப்பிடுமிடத்து இயந்திர உழைப்பாளர்களின் கூலி உயர்கிறது. சற்று மேலான

---

[667] ஆணையர்களில் ஒருவரான திரு வொய்ட், அநேகமாய் அனைவரும் பெண்களான, 1,000 முதல் 1,200 பேர் வேலை செய்த இராணுவ ஆடைப் பட்டறை ஒன்றையும், 1,300 பேரைக் கொண்ட பாத அணிப் பட்டறை ஒன்றையும் பார்வையிட்டார். இவர்களில் கிட்டத்தட்ட பாதிப் பேர் குழந்தைகளாகவும், இளம் வயதினராகவும் இருந்தனர்.

நிலைக்குரிய கைவினைஞர்களின் கூலியும் இயந்திரம் அவர் களோடு போட்டியிடுவதால் சரிந்து விடுகிறது. புதிய இயந்திர உழைப்பாளர்கள் பிரத்தியேகமாகச் சிறுமிகளும் இளம் பெண் களுமே ஆவர். அவர்கள் கனரக வேலையில் ஆண் உழைப்பிற் கிருந்த ஏகபோகத்தை இயந்திரத் திறனின் துணைகொண்டு தகர்த் திடுகிறார்கள். இலகுரக வேலையிலிருந்து ஏராளமான வயோதிக மாதர்களையும், சிறு குழந்தைகளையும் விரட்டியடிக்கிறார்கள். சமாளிக்க முடியாத இந்தப் போட்டியில் கையுழைப்பாளர்களில் மிகவும் பலவீனமானோர் அழிந்து போகிறார்கள். லண்டனில் கடந்த பத்தாண்டுகளில் பட்டினிச் சாவின் பயங்கர அதிகரிப்பு இயந்திரத் தையலின் பெருக்கத்தோடு கைகோத்துச் செல்கிறது.[668] புதிய பெண் தொழிலாளர்கள் இயந்திரத்தின் எடை, அளவு, தனிப் பட்ட உருவமைப்பு ஆகியவற்றுக்கேற்ப, சில நேரம் அமர்ந்து கொண்டும், சில நேரம் நின்று கொண்டும், கையாலும் காலாலும், அல்லது கையால் மட்டும் இயந்திரங்களை ஓட்டி, ஏராளமான உழைப்புச் சக்தியைச் செலவிடுகின்றனர். பழைய முறையில் இருந்த அளவுக்கு அதிகமில்லை என்றாலும் கூட நீண்டதாகவே இருக்கிற வேலை நேரத்தின் விளைவாக அவர்களது தொழில் உடல் நலத் துக்கு ஒவ்வாததாய் உள்ளது. தையல் இயந்திரம் குறுகலான, ஏற் கெனவே நெரிசல் மிகுந்த வேலையறைகளில் இருக்கையில் தீய விளைவுகள் இன்னுமதிகமாகி விடுகின்றன. திரு லார்டு சொல் கிறார்; ''30 முதல் 40 இயந்திரத் தொழிலாளர்கள் வேலை செய்யும் தாழ்வான கூரையுள்ள வேலையறைகளுக்குள் செல்வது சகிக்க முடியாத அனுபவம்....அனலாய்த் தகிக்கிறது. இஸ்திரி களுக்குச் சூடேற்றப் பயன்படுத்தப்படும் வாயு அடுப்புகள் ஓரளவு காரணம்....இப்படிப்பட்ட இடங்களில் வேலை நேரம் மிதமான தாக—அதாவது காலை 8 முதல் மாலை 6 வரையிலானதாக— இருக்கும் போதும் கூட அன்றாடம் தவறாமல் 3 அல்லது 4 பேர் மயக்கம் போட்டு விழுகின்றனர்.''[669]

உற்பத்திக் கருவிகளில் ஏற்படும் புரட்சியின் விளைவாக தொழில் முறைகளில் அவசியமாகி விடுகிற புரட்சி பல்வேறுபட்ட இடைநிலை வடிவங்களில் நடந்தேறுகிறது. ஒரு தொழிற் கிளையில் தையல் இயந்திரம் எந்த அளவுக்கு வழக்கில் வந்துள்ளது என்பதற் கேற்ப, அது வேலை செய்து வந்துள்ள காலத்துக்கேற்ப, பட்டறைத்

668 ஓர் உதாரணம்: இறப்புகள் தொடர்பாக, தலைமைப் பதிவாளர். 1864 பிப்ரவரி 26 தேதியிட்டு அளித்த வாராந்தர அறிக்கை 5 பட்டினிச் சாவுகளைக் குறிப்பிடுகிறது. அதே நாளில் தி டைம்ஸ் ஏடு இன்னொரு பட்டினிச் சாவு பற்றித் தகவல் தருகிறது. ஒரு வாரத்தில் பட்டினிக்குப் பலியானோர் ஆறு பேர்!

669 ''குழந்தையுழைப்பு ஆணையம், இரண்டாம் அறிக்கை, 1864'', பக்கம் lxvii., எண் 406-409, பக்கம் 84, எண் 124, பக்கம் lxxiii., எண் 441, பக்கம் 68, எண் 6, பக்கம் 84, எண் 126, பக்கம் 78, எண் 85, பக்கம் 76, எண் 69, பக்கம் lxxii., எண் 483.

தொழில், கைத்தொழில்கள் அல்லது வீட்டுத் தொழிலின் ஏற்றத் துக்கேற்ப, வேலையறைகளின் வாடகை[670] இன்ன பிறவற்றுக் கேற்ப, இந்த வடிவங்கள் மாறுபடுகின்றன. எடுத்துக்காட்டாக, பெரும் பகுதி உழைப்பு பிரதானமாக சாமானியக் கூட்டு-வேலை யால் ஏற்கெனவே ஒழுங்கமைக்கப்பட்டிருந்த ஆடைப் பட்டறைத் தொழிலில், தையல் இயந்திரம் ஆரம்பத்தில் ஒரு புதிய காரணியாக மட்டுமே அமைந்தது. தையல், சட்டைத் தயாரிப்பு, பாத அணித் தயாரிப்பு போன்றவற்றில் எல்லா வடிவங்களுமே ஒன்றோடொன்று கலந்துள்ளன. இங்கே முறைப்படியான ஆலைத் தொழில் அமைப்பு உள்ளது. அங்கே இடை ஆட்கள் தலைமை முதலாளியிடமிருந்து (the capitalist en chef) கச்சாப் பொருளைப் பெற்று, 10 முதல் 50 அல்லது இன்னும் அதிகமான பெண் தொழிலாளர்களை "கூடங் களிலும்" ஒதுக்கறைகளிலும் தமது தையல் இயந்திரங்களைச் சுற்றிக் கூட்டுகின்றனர். இறுதியாக, கைவினைஞர்களும், வீட்டுத் தொழி லாளர்களும் தமது குடும்பத்தினரோடு கூட அல்லது வெளியிலிருந்து மிகுதி உழைப்பைப் பெற்று, சொந்தத் தையல் இயந்திரங்களைப் பயன்படுத்திக் கொள்கின்றனர். இயந்திர சாதனம் ஓர் அமைப்பாக ஒழுங்குபடுத்தப்படாமல் இருக்கிற சந்தர்ப்பங்களிலும், சின்னஞ்சிறு பரிமாணங்களிலும் கூட அதனைப் பிரயோகிக்க முடிகிற சந்தர்ப் பங்களிலும், எப்போதுமே இப்படித்தான் நிகழ்கிறது.[671] இங்கி லாந்தில் உள்ளபடியே வழக்கிலுள்ள ஏற்பாடு என்னவென்றால், முதலாளி ஏராளமான இயந்திரங்களைத் தனது கட்டடத்தில் ஒன்று சேர்க்கிறார்; பின் அவ்வியந்திரங்களின் உற்பத்திப் பொருளை மேற் கொண்டு செப்பஞ்செய்வதற்காக வீட்டுத் தொழிலாளர்களிடையே விநியோகிக்கிறார்.[672] ஆயினும் இடைநிலை வடிவங்களின் பல் வகைமை முறைப்படியான ஆலைத் தொழிலாக மாற்றமடையும் போக்கை மறைத்து விடுவதில்லை. இந்தப் போக்கு தையல் இயந் திரத்தின் இயல்பாலேயே ஊக்கி வளர்க்கப்படுகிறது; தையல் இயந் திரத்தின் பலதரப்பட்ட உபயோகங்கள் முன்னதாகத் தனித்தனியாய் இருந்த தொழிலின் கிளைகளை ஒரே கூரையின் கீழும் ஒரே மேலாண்மையின் கீழும் ஒன்றுசேர்ப்பதை முன்னுந்தித் தள்ளு கின்றன. ஆயத்த ஊசி வேலையையும், மற்றும் குறிப்பிட்ட சில

---

670 "வேலையறைகளுக்கு அவசியமான கட்டடங்களின் வாடகைத் தொகையே இங்கே இறுதியாகத் தீர்மானிக்கும் அமிசமெனத் தோன்றுகிறது; ஆதலால், சிறு வேலை யதிபர்களிடமும் குடும்பங்களிடமும் வேலையை ஒப்படைக்கிற பழைய முறையானது தலைநகரில்தான் மிக நீண்ட காலத்துக்கு நிலைத்திருக்கிறது, மிகத் துரிதமாய்த் திரும் பவும் கையாளப்படுகிறது." (முன் வந்தது, பக்கம் 83, எண் 123.) இந்த மேற்கோளில் முடிவாக வரும் கூற்று பிரத்தியேகமாகப் பாத அணித் தயாரிப்பு தொடர்பானதாகும்.

671 உழைப்பாளர்களின் நிலைமையை வக்கில்லாதவர்களின் நிலையிலிருந்து வேறு படுத்திப் பார்க்க இயலாத கையுறைத் தயாரிப்பு போன்ற சில தொழில்களில் இவ்வாறு நிகழ்வதில்லை.

672 முன் வந்தது, பக்கம் 83, எண் 122.

பணிகளையும் ·இயந்திரம் இயங்குகிற கட்டடத்திலேயே செய்வது தான் வசதியானது என்பதும், அதே போல், கைத் தையற்காரர்கள், தம் சொந்த இயந்திரங்களை வைத்து வேலை செய்கிற வீட்டுத் தொழிலாளர்கள் ஆகியோர் தவிர்க்க முடியாமலே உடைமைப் பறிப்புக்கு ஆளாகின்றனர் என்பதும் இதற்குச் சாதகமாக உள்ளன. இந்தக் கதி ஏற்கெனவே அவர்களுக்கு ஓரளவு ஏற்பட்டு விட்டது. தையல் இயந்திரங்களில் முதலீடு செய்யப்படும் மூலதனத் தொகை இடைவிடாது அதிகரிப்பது[673] இயந்திர வழிப் பொருளுற்பத்தியை ஊக்குவிக்கிறது, அப்பண்டங்களை சந்தைகளில் நிறைத்து வதி நிலையை ஏற்படுத்துகிறது; இதனால் வீட்டுத் தொழிலாளர்கள் தமது இயந்திரங்களை விற்று விட வேண்டியதாகிறது. ஆனால், தையல் இயந்திரங்களின் மிகையுற்பத்தியானது, எப்படியாவது விற்றாக வேண்டுமென்னும் நிலையிலுள்ள அவற்றின் உற்பத்தியாளர்கள் அவற்றை வாராந்தர வாடகைக்கு விடக் காரணமாகிறது; இவ்வாறு, இவர்களது கடும் போட்டி தையல் இயந்திரங்களின் சிறுவுடைமையாளர்களை நாசமாக்கி விடுகிறது.[674] இயந்திரங்களின் கட்டமைப்பில் ஓயாமல் மாற்றங்கள் செய்யப்படுவதாலும், அவை மேலும் மேலும் மலிவாகிக் கொண்டே போவதாலும், பழைய வகை இயந்திரங்கள் நாளுக்கு நாள் மதிப்பிறங்கி விடுகின்றன; அவற்றைப் பெரும் எண்ணிக்கையில் கேவலமான விலைக்குப் பெரிய முதலாளிகளிடம் விற்க வேண்டியதாகிறது. இப்போது அவற்றை இலாபகரமாகப் பயன்படுத்த இந்தப் பெரிய முதலாளிகளால் மட்டுமே முடியும். முடிவில், மனிதனுக்குப் பதிலாக நீராவி எஞ்சினைப் புகுத்துவதானது இது போன்ற எல்லாப் புரட்சிகர மாற்றங்களிலும் போலவே இந்த மாற்றத்திலும் இறுதி அடியாகிறது. நீராவிச் சக்தியின் உபயோகமானது இயந்திரங்களின் சீரற்ற போக்கு, அவற்றின் வேகத்தைக் கட்டுப்படுத்துவதிலுள்ள சிரமம், இலகுரக இயந்திரங்களின் துரிதமான தேய்மானம் போன்ற தொழில் நுட்பச் சங்கடங்களையே ஆரம்பத்தில் சந்திக்கிறது. இவையெல்லாம் அனுபவத்தின் துணை கொண்டு சீக்கிரமே சமாளிக்கப் படுகின்றன.[675] ஒரு புறம், பெரிய பட்டறைகளில் பல இயந்திரங்கள் ஒன்றுகுவிக்கப்படுவது நீராவிச் சக்தியை உபயோகிப்பதற்கு வழி செய்கிறதென்றால், மறு புறம் நீராவிக்கும் மனிதத் தசையாற்றலுக்கும் இடையிலான போட்டி பெரிய தொழிற்சாலைகளில்

---

673 லீசெஸ்டரின் மொத்த வியாபாரப் பாத அணித் தொழிலில் மட்டும் 1864இலேயே 800 தையல் இயந்திரங்கள் உபயோகத்திலிருந்தன.

674 முன் வந்தது, பக்கம் 84, எண் 124.

675 எடுத்துக்காட்டுகள்: லண்டனைச் சேர்ந்த பிம்லிகோவிலுள்ள இராணுவ உடுப்புச் சாலை, லண்டன்டெரியிலுள்ள தில்லீ, ஹெண்டர்சன் ஆகியோரின் சட்டைத் தொழிற்சாலை, சுமார் 1,200 ஆட்களுக்கு வேலை கொடுக்கிற லிமரிக்கிலுள்ள திருவாளர்கள் டெய்ட்டின் ஆடைத் தொழிற்சாலை.

தொழிலாளர்களும் இயந்திரங்களும் ஒன்றுகுவிவதை விரிவுபடுத்துகிறது. இங்கிலாந்து இவ்வாறு, ஆடை தயாரிக்கும் பிரம்மாண்டத் தொழிலில் மட்டுமல்லாமல், மேற்கூறிய ஏனைய தொழில்களில் பெரும்பாலானவற்றிலும் இப்போது இந்த மாற்றத்தை அனுபவித்து வருகிறது; பட்டறைத் தொழில், கைத்தொழில், வீட்டுத் தொழில் ஆகிய உற்பத்தி வடிவங்கள் ஆலைத் தொழிலாக மாற்றமடைந்து வருகின்றன. இவை மூன்றும் நவீனத் தொழில் துறையின் தாக்கத்தால் அடியோடு மாறி, உருக்குலைந்து—ஆலைத் தொழிலில் அடங்கிய சமூக முன்னேற்ற அமிசங்கள் எதிலும் பங்கு இல்லாமலே—ஆலைத் தொழிலுக்குரிய பயங்கரங்களையெல்லாம் நெடுநாள் முன்பே வார்த்து வெளிப்படுத்தியதோடல்லாமல், இன்னும் கூடப் பெருக்கியும் காட்டிய பிறகு, இந்த மாற்றம் நடைபெறுகிறது.[676]

இந்தத் தொழிற் புரட்சி தன்னியல்பாகவே நடக்கிற ஒன்று; அதே போது, மாதர்களும் இளம் வயதினரும் குழந்தைகளும் வேலை செய்கிற சகல தொழில்களுக்கும் தொழிற்சாலைச் சட்டங்களை விரிவுபடுத்தியதானது செயற்கையான முறையில் இப்புரட்சியை உந்தித் தள்ளியது. ஒரு புறம், கால அளவு, நிறுத்தங்கள், ஆரம்பம், முடிவு ஆகியவை தொடர்பாக வேலை-நாளைக் கட்டாயமாக ஒழுங்குபடுத்துவது, குழந்தைகளுக்கான அஞ்சல்முறை, குறிப்பிட்ட வயதுக்குட்பட்ட எந்தக் குழந்தையையும் சேர்த்துக் கொள்ளாமை முதலானவை கூடுதலான இயந்திர சாதனத்தையும்[677] இயக்குவிசை என்ற விதத்தில் தசையாற்றலின் இடத்துக்கு

---

[676] "ஆலைத் தொழிலுக்கு இட்டுச் செல்லும் போக்கு" (முன் வந்தது, பக்கம் lxvii). "வேலை முழுவதுமே இந்த நேரத்தில் மாற்றத்துக்குரிய இடைநிலையில் உள்ளது; சித்திரப் பின்னல், நெசவு முதலானவற்றில் ஏற்பட்ட அதே மாற்றத்துக்கு ஆட்பட்டுக் கொண்டிருக்கிறது." (முன் வந்தது. எண் 405.) "ஒரு முழுப் புரட்சி" (முன் வந்தது, பக்கம் xlvi., எண் 318). 1840ஆம் ஆண்டில் குழந்தையுழைப்பு ஆணையம் அமைக்கப்பட்ட நேரத்தில் கூட, காலுறைத் தயாரிப்பானது கையுழைப்பு கொண்டே நடைபெற்றது. 1846 முதற்கொண்டு பல்வேறுபட்ட இயந்திரங்கள் புகுத்தப் பட்டுள்ளன; இவை இப்போது நீராவியால் ஓட்டப்படுகின்றன. இருபாலாரும், 3 வயதுக்கு மேற்பட்ட சகல வயதினருமாய், இங்கிலாந்தில் காலுறைத் தயாரிப்பில் வேலை செய்வோரின் மொத்தத் தொகை 1862இல் சுமார் 129,000. இவர்களில் 4,063 பேர் மட்டுமே 1862 பிப்ரவரி 11 தேதியப் பாராளுமன்ற விவர அறிக்கையின் படி, தொழிற்சாலைச் சட்டங்களின் ஆளுகைக்கு உட்பட்டிருந்தனர்.

[677] இவ்வாறு, உதாரணமாக மண்பாண்டத் தொழிலில், கிளாஸ்கோ பிரிட்டன் பாட்டரியைச் சேர்ந்த திருவாளர்கள் கோக்ரேன் தரும் அறிக்கையாவது: "எங்கள் உற்பத்தி அளவு குறையாமலிருக்கும் பொருட்டு, தேர்ச்சியற்ற உழைப்பால் இயக்கப் படும் இயந்திரங்களை விரிவாக நிறுவியுள்ளோம். பழைய முறையில் உற்பத்தி செய்வதை விட அதிகமாக உற்பத்தி செய்ய முடியும் என்று நாளும் உணர்ந்து வருகிறோம்." ("தொழிற்சாலை ஆய்வாளர் அறிக்கை, 1865 அக்டோபர் 31," பக்கம் 13.) "தொழிற்சாலைச் சட்டங்களின் விளைவு மேலும் மேலும் இயந்திர சாதனம் புகுத்தப்படுவதை முன்னுந்தித் தள்ளுவதாகும்." (முன் வந்தது, பக்கம் 13-14.)

நீராவியைக் கொணர்வதையும் அவசியமாக்குகின்றன.[678] மறு புறம் பொதுவில் பயன்படுத்தப்படும் உலைகள், கட்டடங்கள் போன்ற உற்பத்திச் சாதனங்கள் கால இழப்பை ஈடு செய்யும் பொருட்டு அதிகமாக்கப்படுகின்றன. அதாவது உற்பத்திச் சாதனங் கள் கூடுதலாய் ஒன்றுகுவிக்கப்படுகின்றன. அத்துடன் கூடவே தொழிலாளர்கள் கூடுதலாய் ஒன்றுதிரட்டப்படுகிறார்கள். தொழிற் சாலைச் சட்டத்தால் அச்சுறுத்தப்படும் பட்டறைத் தொழில் ஒவ்வொன்றின் சார்பாகவும் திரும்பத் திரும்ப உணர்ச்சிப் பெருக்கோடு எழுப்பப்படும் முக்கிய ஆட்சேபம் என்னவென்றால், தொழிலைப் பழைய அளவுவீதத்தில் தொடர்ந்து நடத்தும் பொருட்டு, கூடுதலான மூலதனச் செலவீடு அவசியமாகி விடும் என்பதே. ஆனால் வீட்டுத் தொழில்கள் எனப்படுபவற்றிலும், அவற்றுக்கும் பட்டறைத் தொழிலுக்கும் இடையிலுள்ள இடைக்கட்ட வடிவங்களிலுமான உழைப்பைப் பொறுத்த வரை, வேலை-நாளுக்கும் குழந்தைகளை வேலைக்கமர்த்துவதற்கும் வரம்பு கட்டி யதுமே அத்தொழில்கள் நசித்துப் போகின்றன. அவற்றின் போட்டி யிடும் சக்திக்கு ஆதாரம் ஒன்றே ஒன்றுதான் — மலிவான உழைப்புச் சக்தியை வரம்பின்றிச் சுரண்டுவதுதான்.

ஆலைத் தொழிலின் நிலவலுக்கான அடிப்படை நிபந்தனை களில் ஒன்று — குறிப்பாக வேலை-நாளின் கால அளவு நிர்ண யிக்கப்பட்டதாய் இருக்கும் போது — விளைவிலான நிச்சயத் தன்மை யாகும்; அதாவது குறிப்பிட்ட நேரத்தில் குறிப்பிட்ட அளவு சரக்கின், அல்லது குறிப்பிட்ட விளைபயனின் உற்பத்தியாகும். அது மட்டுமல்லாமல், அவ்வப்போதும், திடீரென்றும் வேலை நிற்பதால் உற்பத்திப் பண்டத்துக்கு ஊறு விளைவதில்லை எனக் கொண்டு தான் வேலை-நாளில் சட்டம் இடைநிறுத்தங்களைக் கோருகிறது. விளைவிலான இந்த நிச்சயத் தன்மையும், வேலையை இடையில் நிறுத்துவதென்ற இந்த சாத்தியப்பாடும், இரசாயன, பௌதிக நிகழ்முறைகள் பங்கு வகிக்கிற தொழில்களை விட — எடுத்துக் காட்டாக, மண்பாண்டத் தொழிலையும், வெளுத்தல், சாயமேற்றல், ரொட்டி தயாரித்தல் ஆகியவற்றையும், உலோகத் தொழில்களில் பெரும்பாலானவற்றையும் விட — முற்றிலும் யாந்திரிகத் தன்மை யுள்ள தொழில்களில் அடையப்படுவது எளிதாகும் என்பதில் ஐயமில்லை. கால அளவு தொடர்பாக வேலை-நாளுக்குக் கட்டுத் திட்டமில்லாத போதெல்லாம், இரவு வேலையால் தங்குதடையின்றி மனித உயிர் நசியும் போதெல்லாம், நிலைமையை மேம்படுத்தது வதற்கு வேலையின் இயல்பு ஏற்படுத்துகிற சிறு தடங்கலும் கூட இயற்கையாய் அமைந்த நிரந்தரத் தடையாகக் கருதப்படும் நிலை

[678] தொழிற்சாலைச் சட்டத்தை மண்பாண்டத் தொழில்களுக்கு விரிவுபடுத்திய பின், கையால் இயக்கப்படும் சக்கரங்களுக்கு பதில் விசைச் சக்கரங்கள் மிகவும் பெருகியதை இதற்குச் சான்றாய்க் குறிப்பிடலாம்.

விரைந்து உருவாகிறது. நச்சுக் கிருமிகளை ஒழித்துக் கட்டும் நஞ்சு போல, தொழிற்சாலைச் சட்டம் இத்தகைய நிரந்தரத் தடைகளை நிர்மூலமாக்குகிறது. ''சாத்தியமில்லை'' என்று சொல்லி மண் பாண்டத் தொழிலதிபர்களாகிய நமது நண்பர்களைப் போல் கூச்சல் போட்டவர்கள் யாருமில்லை. ஆயினும், 1864இல் அவர்கள் அச்சட்டத்திற்கு உட்படுத்தப்பட்டனர்; பதினாறே மாதங்களில் ''சாத்தியமின்மை'' எல்லாம் இடந்தெரியாமல் மறைந்து விட்டது. ''பூசி உலர்த்துவதற்கு பதிலாக அழுத்தியே பூச்சுகள் தயாரிக்கும் மேம்பட்ட வழிமுறை,''—சட்டம் காரணமாய் அவசியமாகிய வழிமுறை—''பச்சை மண் நிலையிலேயே பாண்டத்தை சுட்டெடுப்பதற்காகப் புதியதாய் நிர்மாணிக்கப்பட்ட சூளைகள் முதலான ஒவ்வொன்றும் மண்பாண்டக் கலையில் மிகுந்த முக்கியத்துவமுடைய நிகழ்ச்சியாகும்; ஒவ்வொன்றும் முந்தைய நூற்றாண்டு காலம் கண்டிராத முன்னேற்றத்தைக் குறிக்கிறது....இத்துடன் கூட, சூளைகளின் வெப்பநிலையை வெகுவாய்க் குறையச் செய்து, எரிபொருளைக் கணிசமாய் மிச்சப்படுத்தியதோடு, முன்னிலும் விரைவாய்த் தயார்நிலை அடைவதற்கு உதவியது.''[679] சகல ஆரூடங்களையும் மீறி, மண்பாண்டங்களின் அடக்க-விலை உயராமலிருந்தது; உற்பத்தி செய்யப்பட்ட அளவு மட்டுமே உயர்ந்தது; 1865 டிசம்பரில் முடியும் பன்னிரண்டு மாதங்களுக்கான ஏற்றுமதியின் மதிப்பு அதற்கு முந்தைய மூன்றாண்டுகளின் சராசரியை விட £138,628 அதிகமாயிருந்தது என்னும் அளவுக்கு உயர்ந்தது. தீக்குச்சிப் பட்டறைத் தொழிலில் சிறுவர்கள் சாப்பாட்டை அறக்கப்பறக்க விழுங்கும் போதே கூட, தீக்குச்சிகளை உருகிய பாஸ்ஃபரசில்—இதிலிருந்து கிளம்பிய விஷ ஆவி முகத்தைத் தாக்க—தோய்த்தெடுப்பது அவசியமெனக் கருதப்பட்டது. தொழிற்சாலைச் சட்டம் (1864) நேரத்தை மிச்சப்படுத்துவதை அவசியமாக்கியது; எனவே, தோய்த்தெடுக்கும் இயந்திரத்தைக் கண்டுபிடிக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படச் செய்தது; இந்த இயந்திரத்திலிருந்து வெளியேறும் ஆவி மேலே தாக்காமல் தொழிலாளர்கள் வேலை செய்ய முடிந்தது[680] ஆகவே, தற்போது இன்னமும் தொழிற்சாலைச் சட்டத்தின் ஆளுகைக்கு உட்படாதவையான சித்திரப் பின்னலின் கிளைகளில், பல்வேறு சித்திரப் பின்னல் வகைகளும் உலருவதற்குத் தேவைப்படும் வெவ்வேறு கால அளவு

[679] ''தொழிற்சாலை ஆய்வாளர் அறிக்கை, 1865, அக்டோபர் 31,'' பக்கம் 96, 127.

[680] இவ்வியந்திரமும் ஏனைய இயந்திர சாதனங்களும் தீப்பெட்டித் தயாரிப்பில் புகுத்தப்பட்டதால் ஒரு பிரிவில் மட்டும் 230 இளம் வயதினருக்கு பதில் 14 முதல் 17 வயதுடைய 32 சிறுவர்-சிறுமியர் வந்தனர். இப்படி உழைப்பை மிச்சம் பிடிப்பது நீராவிச் சக்தியின் பிரயோகத்தால் 1865இல் இன்னும் அதிகமாயிற்று.

களின் காரணத்தால்—இக்கால அளவுகள் மூன்று நிமிடம் முதல் ஒரு மணி வரையும், இன்னும் அதிகமாகவும் பல விதமாக உள்ளன—உணவு நேரம் ஒத்தாற் போல் இருக்க முடியாது என்று வாதிடப்படுகிறது. இதற்குக் குழந்தையுழைப்பு ஆணையர்கள் அளிக்கும் பதில்: ''இத்தொழிலின் நிலைமைகள் நமது முதல் அறிக்கையில் பார்த்த காகிதச் சாயமிடும் தொழிலின் நிலைமைகளை அப்படியே ஒத்துள்ளன. பயன்படுத்தப்படுகிற மூலப் பொருட்களது தன்மையின் காரணத்தாலும், அவற்றின் பல்வேறு நிகழ்முறைகளின் காரணத்தாலும், எந்தக் குறிப்பிட்ட சமயத்திலும் உணவுக்காக வேலையை நிறுத்தினால் தாங்கள் பேரிழப்புக்கு ஆளாக நேரிடும் என்று இத்தொழிலின் முக்கிய அதிபர்கள் சிலர் வலியுறுத்தினர். ஆனால் அவர்கள் அஞ்சுகிற இந்த இடர்ப்பாட்டை உரிய கவனிப்பின் மூலமும், முன்னேற்பாட்டின் மூலமும் தவிர்த்து விடலாம் என்பது சாட்சியத்திலிருந்து தெரிய வந்தது. அதன் படி, பாராளுமன்றத்தின் இந்த அமர்வில் நிறைவேற்றப்பட்ட தொழிற்சாலைச் சட்டங்கள் விரிவாக்கச் சட்டத்தின் பிரிவு 6, சரத்து 6இன் மூலம், தொழிற்சாலைச் சட்டங்களால் குறிக்கப்படும் உணவு நேரத்தை அனுசரிக்க, சட்டம் நிறைவேறியதிலிருந்து பதினெட்டு மாத அவகாசம் அவர்களுக்குத் தரப்படுகிறது.''[681] இச்சட்டம் நிறைவேற்றப்பட்டுக் கூட இருக்காது, அப்போதே தொழிலதிபர்களான நமது நண்பர்கள் கண்டுபிடித்துச் சொன்னார்கள்: ''தொழிற்சாலைச் சட்டங்களை நமது உற்பத்திக் கிளையினுள் புகுத்தியதால் ஏற்படுமென நாங்கள் எதிர்பார்த்த அசௌகரியங்கள் ஏற்பட்டு விட வில்லை என்பதை மகிழ்ச்சியுடன் கூறிக் கொள்கிறேன். உற்பத்தியில் சிறிதும் குறுக்கீடு இல்லை. சுருங்கச் சொல்லின், அதே காலத்தில் நாங்கள் முன்னிலும் அதிகமாக உற்பத்தி செய்கிறோம்.''[682] மேதாவிலாசம் மிதமிஞ்சி விட்டதாக யாராலும் குற்றஞ்சாட்ட முடியாத இந்த ஆங்கிலேயச் சட்ட மன்றம், வேலை-நாளைக் கட்டுக்குள்ளாக்கவும், முறைப்படுத்தவும் தடை போடும் விதத்தில் உற்பத்தி நிகழ்முறையின் இயல்பிலிருந்தே எழுகிற இடையூறுகள் எனப்படுபவை அனைத்தையும் ஒழித்திட சாதாரணக் கட்டாயச் சட்டம் போதும் என்ற முடிவுக்கு, அனுபவத்தின் வாயிலாய் வந்து சேர்ந்தது என்பது தெளிவு. எனவேதான், குறிப்பிட்ட தொழிலில் தொழிற்சாலைச் சட்டம் புகுத்தப்பட்டதுமே, ஆறு முதல் பதினெட்டு மாதம் வரையிலான காலக் கெடு நிர்ணயிக்கப்படுகிறது; இக்காலத்துக்குள் தொழிலதிபர்கள் சட்டம் செயலாவதற்குள்ள எல்லாத் தொழில் நுட்ப இடையூறு

681 ''குழந்தையுழைப்பு ஆணையம், இரண்டாம் அறிக்கை, 1864,'' பக்கம் ix., எண் 50.

682 ''தொழிற்சாலை ஆய்வாளர் அறிக்கை, 1865 அக்டோபர் 31,'' பக்கம் 22.

களையும் அகற்றக் கடமைப்பட்டோர் ஆவர். "Impossible! ne me dites jamais ce bete de mot!"* என்றார் மிராபோ. இது நவீனத் தொழில் நுட்பவியலுக்கு சாலப் பொருந்தும். ஆனால் தொழிற் சாலைச் சட்டங்கள் இவ்விதத்தில் பட்டறைத் தொழிலை ஆலைத் தொழிலாக மாற்றுவதற்கு வேண்டிய பொருளாயதக் கூறுகளைச் செயற்கை முறையில் கனியச் செய்கின்றன என்றாலும், இச் சட்டங்கள் அதேபோது முதலீட்டை அதிகமாக்க வேண்டிய அவசியத்தை ஏற்படுத்தி, சிறு அதிபர்களின் வீழ்ச்சியையும், மூலதனக் குவிப்பையும் [concentration of capital] துரிதப்படுத்து கின்றன.[683]

முற்றிலும் தொழில் நுட்பம் தொடர்பானவையும், தொழில் நுட்ப வழியில் அகற்றக் கூடியவையுமான இடையூறுகளன்னியில், தொழிலாளர்களின் ஒழுங்கற்ற பழக்கங்களே கூட உழைப்பு நேரத்தை ஒழுங்குபடுத்துவதற்குக் குறுக்கே நிற்கின்றன. குறிப் பாக, பலன்வீதக் கூலி முறை அதிகமாய் நடப்பிலுள்ள போதும், நாள் அல்லது வாரத்தின் ஒரு பகுதியில் நேரிடும் கால இழப்பு, மிகை நேர அல்லது இரவு நேர வேலையால் பிற்பாடு சரிக் கட்டப்படும் போதும் — வயது வந்த தொழிலாளியை மிருகமாக்கி, அவனது மனைவி மக்களை நாசமுறச் செய்கிற முறையாகும் இது — நடப்பது இதுவே.[684] உழைப்புச் சக்தியைச் செலவிடுவதில்

---

683 "ஆனால் அந்த மேம்பாடுகள், சில நிறுவனங்களில் முழு அளவில் அமலாக்கப்பட்ட போதிலும் எவ்விதத்தும் பரவலானவை அல்ல என்பதையும், பழைய பட்டறைகள் பலவற்றில் இப்போதைய உரிமையாளர்கள் பலரின் சக்திக்கப்பாற்பட்ட மூலதனச் செலவீடு இல்லாமல் இவற்றை உபயோகத்துக்குக் கொணர இயலாது என்பதையும் மனதிற் கொள்ள வேண்டும்." உதவி ஆய்வாளர் மே எழுதுகிறார்: "இப்படி ஒரு (தொழிற்சாலைச் சட்டங்கள் விரிவாக்கச் சட்டம் போன்ற) நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதைத் தொடர்ந்து தவிர்க்க முடியாமலே தற்காலிகமாய் ஒழுங்குக் குலைவு ஏற்படவே செய்கிறது. உண்மையில் இது அந்நடவடிக்கையின் மூலம் பரிகாரம் காணப்பட வேண்டிய கேடுகளையே குறிப்பதாகும்....ஆயினும் எனக்கு மகிழ்ச்சிதான்." (தொழிற்சாலை ஆய்வாளர் அறிக்கை, 1865 அக்டோபர் 31.)

684 எடுத்துக்காட்டாக, ஊதுஉலைகளில் "ஆட்கள் திங்களன்றும், எப்போதாவது செவ்வாயன்று பகுதி நேரம் அல்லது முழு நேரமும் கூடச் சோம்பிக் கிடக்கிற பழக்கத்தின் காரணத்தால், பொதுவாக வாரத்தின் இறுதிவாக்கில் வேலை நேரம் வெகுவாக நீட்டப்படுகிறது." ("குழந்தையுழைப்பு ஆணையம் மூன்றாம் அறிக்கை," பக்கம் vi.) "பொதுவாகச் சிறு அதிபர்களிடம் வேலை நேரம் ஒழுங்குமுறையற்றது. அவர்கள் இரண்டு அல்லது மூன்று நாட்களை இழந்து விட்டு, பின்னர் அதை ஈடு செய்ய இரவு முழுவதும் வேலை வாங்குகின்றனர்....தங்களுக்குக் குழந்தைகளிருந்தால், எப்போதும் அக்குழந்தைகளையே வேலை வாங்குகின்றனர்." (முன் வந்தது, பக்கம் vii.) "வேலைக்கு வருவதில் ஒழுங்குமுறையில்லாமை, கூடுதல் நேரம் வேலை செய்வதன் மூலம் இதனை ஈடு செய்யும் வாய்ப்பாலும் நடைமுறையாலும் ஊக்குவிக்கப்படுகிறது." (முன் வந்தது, பக்கம் xviii.) "பர்மிங்காமில்...நேரம் அதிகமாய் விரயமாகிறது....பகுதி நேரம் சோம்பிக் கிடக்கிறார்கள்; எஞ்சிய நேரம் மாடாய் உழைக்கிறார்கள்." (முன் வந்தது, பக்கம் xi.)

---

* "இயலாது! இந்த அபத்தச் சொல்லை என்னிடம் சொல்லாதே!"

இப்படி ஒழுங்குமுறை இல்லாதிருப்பது, அலுப்பும் சலிப்பும் ஊட்டும் அவல வேலையின் இயல்பான மூர்க்க விளைவே; இந்த ஒழுங்கின்மை இன்னும் கூட அதிகமாய் உற்பத்தி அராஜகத்திலிருந்து [anarchy in production] எழுவதாகும்—முதலாளி உழைப்புச் சக்தியைத் தங்குதடையின்றிச் சுரண்டுவதால் ஏற்படுகிற அராஜகம் இது. தொழில் துறைச் சகடத்தின் பொதுவான காலவட்ட மாற்றங்கள், ஒவ்வொரு தொழிலும் சந்தையில் காணும் தனி ஏற்ற இறக்கங்கள் ஆகியவையன்னியில், ''வியாபாரப் பருவம்'' எனப்படுவதையும் கணக்கில் கொள்ள வேண்டும். இந்தப் பருவம் நீர்வழிப் போக்குவரத்துக்கு சாதகமான காலவட்ட முறையையோ, அல்லது புது மோஸ்தரையும், கூடுமான விரைவில் உடனே செய்ய வேண்டிய பெரிய சரக்காணைகள் திடீரெனக் கிடைப்பதையுமோ பொறுத்ததாகும். இத்தகைய சரக்காணைகள் இரயில்வேக்கள் மற்றும் தந்தித் தொடர்புகளிலான விரிவாக்கத்தின் பயனாய் அடிக்கடி கிடைக்கின்றன. ''நாடு முழுவதிலும் இரயில்வே அமைப்பின் விரிவாக்கத்தால் குறுங்கால அறிவிப்பின் பேரில் சரக்காணைகள் இடும் பழக்கம் மிகுந்து விட்டது. சரக்கு வாங்குவோர் இப்போது கிளாஸ்கோவிலிருந்தும், மான்செஸ்டரிலிருந்தும், எடின்பரோவிலிருந்தும் ஏறத்தாழ இரு வாரத்துக்கு ஒரு முறை இங்கு வருகிறார்கள். நகரில் நம்மிடம் சரக்கு எடுக்கிற மொத்த வியாபாரப் பண்டக சாலைகளில், வழக்கம் போல் இருப்பிலிருந்து வாங்காமல், உடனடியாய் நிறைவேற்றச் சொல்லி சிறுசிறு சரக்காணைகள் கொடுத்துச் செல்கிறார்கள். சில ஆண்டுகளுக்கு முன்பெல்லாம், நாம் எப்போதுமே அடுத்த வியாபாரப் பருவத்தின் வேண்டலைச் சமாளிக்கும் பொருட்டு மந்தமான காலங்களில் வேலை செய்ய முடிந்தது; ஆனால் வேண்டல் எப்படி அமையும் என்பதை இப்போது யாரும் முன்கூட்டிச் சொல்ல முடியாது.[685]

இன்னமும் தொழிற்சாலைச் சட்டங்களுக்குட்படாத தொழிற்சாலைகளிலும், பட்டறைகளிலும், வியாபாரப் பருவம் என்று அழைக்கப்படும் காலத்தில் திடீர் சரக்காணைகளின் விளைவாய், அவ்வப்போது பயங்கர மிகைவேலை சகஜமாகி விடுகிறது. தொழிற்சாலை, பட்டறை, பண்டகசாலை இவற்றின் வெளிப் பிரிவில், எப்படிப் பார்ப்பினும் தொடர்ச்சியாய் வேலை கிடைக்காதவர்களாகிய வீட்டுத் தொழிலாளர்கள் எனப்படுவோர் கச்சாப் பொருளுக்கும் சரக்காணைகளுக்கும் முழுக்க முழுக்க முதலாளியின் விருப்ப அலைவுகளையே சார்ந்துள்ளனர்; இத்தொழிலில், கட்ட

685 ''குழந்தையுழைப்பு ஆணையம் நான்காம் அறிக்கை,'' பக்கம் xxxii., ''இரயில்வே அமைப்பின் விரிவாக்கமானது, திடீர் சரக்காணைகள் கொடுக்கிற இந்தப் பழக்கத்துக்கும், ஆதலால் அவசரத்துக்கும், உணவு நேரப் புறக்கணிப்புக்கும், தொழிலாளர்கள் நேரங்கழித்து வீடு திரும்புவதற்கும் பெரிதும் காரணமாகியிருப்பதாகக் கூறப்படுகிறது.'' (முன் வந்தது, பக்கம் xxxi.)

டங்களும் இயந்திர சாதனமும் மதிப்பிறங்கிப் போகுமென முதலாளி கவலைப்படத் தேவையில்லை; வேலையை நிறுத்துவதால் ஆபத்து தொழிலாளிக்கே தவிர அவருக்கன்று. ஆகவே, இங்கே அவர் கண நேர முன்னறிவிப்பில் தயாராகி விடக் கூடிய தொழில் துறை சேமப் பட்டாளத்தை [industrial reserve force] அமைப்பதற் குத் திட்டமிட்ட முறையில் பாடுபடத் தீர்மானிக்கிறார். ஆண்டின் ஒரு பகுதியில், மனிதத் தன்மையற்ற முறையில் வேலை வாங்கு வதன் மூலம் இப்பட்டாளத்தை சீரழிக்கிறார்; மறு பகுதியில் அதனை வேலையில்லாமல் பட்டினி கிடக்கச் செய்கிறார். ''வீட்டுத் தொழிலுக்குரிய வழக்கமாகிய வேலை நேர முறைப்பாடின்மையை முதலாளிகள் தமக்கு சாதகமாக்கிக் கொண்டு, திடீர் எனக் கூடுதல் வேலை அவசியமாகும் போது இரவு 11,12, அல்லது 2 மணி வரை, அல்லது வழக்கமாகச் சொல்வது போல் ''எந்நேரமும்'' வேலை நடைபெறச் செய்கிறார்கள். அதுவும் எம்மாதிரியான இடங்களில் என்றால், ''நாற்றம் குடலைப் பிடுங்கும்; முயற்சி எடுத்து வீட்டை அணுகி கதவைத் திறப்பீர்களானால் உள்ளே நுழைய முடியாமல் திடுக்கிட்டு நின்று விடுவீர்கள்.''[686] சாட்சி களில் ஒருவரான பாத அணித் தொழிலாளி தொழிலதிபர்கள் பற்றிப் பேசுகையில் கூறியதாவது: ''இவர்கள் வேடிக்கையானவர் கள்; ஒரு பாதி ஆண்டில் போதிய வேலையில்லாமல் சும்மா இருக்கிற சிறுவன் மறு பாதி ஆண்டில் இராப் பகலாய் வேலை செய்வதால் அவனுக்குத் தீங்கேதும் இல்லை என்று அவர்கள் நினைக்கிறார்கள்.''[687]

தொழில் நுட்ப இடையூறுகள் குறித்துச் சொன்னது போலவே, ''தொழிலின் வளர்ச்சியுடன் சேர்ந்து வளர்ந்துள்ள பழக்கங்கள்'' குறித்தும் வேலையின் இயல்பிலிருந்தே எழுகிற தடங்கல்கள் இவை என்று சம்பந்தப்பட்ட முதலாளிகள் கூறினார்கள், இன்றும் கூறி வருகிறார்கள். பஞ்சாலைப் பிரபுகளை தொழிற்சாலைச் சட் டங்கள் முதன் முதலாக அச்சுறுத்திய போது, அவர்கள் ஓயாமல் எழுப்பிய கூப்பாடு இதுவே. அவர்களது தொழில் வேறு எந்தத் தொழிலை விடவும் அதிகமாக நீர்வழிப் பயணத்தைச் சார்ந்த தென்ற போதிலும் அனுபவம் அவர்களைப் பொய்யர்களாக்கி விட்டது. அதுமுதல் தொழில் தடைபடுவதாக அவர்கள் எழுப்பிய கூச்சல் ஒவ்வொன்றையும் வெறும் புரட்டாகவே தொழிற்சாலை ஆய்வாளர்கள் கருதினர்.[688] சில தொழில்களில் வேலை நேரத்தை

---

686 ''குழந்தையுழைப்பு ஆணையம் நான்காம் அறிக்கை,'' பக்கம் xxxv., எண் 235,237.

687 ''குழந்தையுழைப்பு ஆணையம் நான்காம் அறிக்கை,'' பக்கம் 127, எண் 56.

688 ''கப்பல் சரக்காணைகளைக் காலாகாலத்தில் நிறைவேற்றாமையால் ஏற்படும் வர்த்தக இழப்பைப் பொறுத்த வரை, 1832இலும் 1833இலும் தொழிற்சாலை அதிபர்

முறைப்படுத்தியதன் பயனாய், ஏற்கெனவே பயன்படுத்தப்பட்ட உழைப்புத் திரள் ஆண்டு முழுவதும் முன்னிலும் சமச்சீரான முறையில் பயன்படுத்தப்படலாயிற்று.[689] புது மோஸ்தர் என்னும் அர்த்தமற்ற கொலைகார மோகங்களுக்கு, நவீனத் தொழில் துறை அமைப்புக்கு சிறிதும் ஒவ்வாத இம்மோகங்களுக்கு,[690] இந்த வேலை நேர முறைப்படுத்தல் அறிவுவழிப்பட்ட முதற்கடிவாள மாயிற்று. கடற் பயணத்தின் வளர்ச்சியும், பொதுவாக தொடர்புச் சாதனங்களின் வளர்ச்சியும் உண்மையில் வியாபாரப் பருவம் சார்ந்த வேலைக்கு ஆதாரமாய் இருந்த தொழில் நுட்ப அடித் தளத்தைத் தகர்த்திட்டன.[691] முன்னிலும் சமாளிக்க இயலாதவை என்று சொல்லப்பட்ட ஏனைய இடர்ப்பாடுகள் எல்லாம் பெரிய பெரிய கட்டடங்களாலும், கூடுதலான இயந்திர சாதனங்களாலும், வேலை செய்யும் தொழிலாளர்களின் தொகைப் பெருக்கத்தாலும்,[692]

---

களின் வாடிக்கையான வாதமாக இது இருந்தது என்பது நினைவுக்கு வருகிறது. இப் போது இது பற்றி எடுத்துரைக்கப்படக் கூடிய வாதங்கள் எல்லாம்—நீராவி எல்லாத் தூரங்களையும் சரிபாதியாக்கி, இடப்பெயர்ச்சிக்கு புதிய ஒழுங்கு முறைகளை நிலை நாட்டிய பின்னர்—வலுக்குன்றி விட்டன. சோதனைக்கு விடப்பட்ட அந்த நிரூபணக் காலத்தில் இவ்வாதம் படுதோல்வி கண்டது; மீண்டும் அதை சோதிக்க வேண்டியிருக்கு மேயானால் நிச்சயம் தோற்கும்.'' (''தொழிற்சாலை ஆய்வாளர் அறிக்கைகள், 1862 அக்டோபர் 31,'' பக்கம் 54,55.)

689 ''குழந்தையுழைப்பு ஆணையம் நான்காம் அறிக்கை,'' பக்கம் xviii., எண் 118.

690 ஜான் பெல்லர்ஸ் 1699இலேயே கூறியதாவது: ''மோஸ்தர்களின் நிலை யின்மை ஏதுமில்லாதோரை அதிகமாக்கவே செய்கிறது. இதனால் இருபெரும் கேடுகள் உண்டாகின்றன. முதலாவது, பணியாளர்கள் குளிர்காலத்தில் வேலையின்மையால் அவதிப்படுகிறார்கள். பணியாளர்களுக்குத் தொடர்ந்து வேலை கிடைக்கச் செய் வதற்காக, பட்டு வியாபாரிகளும் நெசவு அதிபர்களும், வசந்த காலம் வருவதற்குள் தமது இருப்புகளைச் செலவிடத் துணிவதில்லை; ஏனெனில் அப்போது மோஸ்தர் எப்படி இருக்கும் என்பது அவர்களுக்குத் தெரியாது. இரண்டாவது, வசந்த காலத்தில் போதிய பணியாளர்கள் கிடைப்பதில்லை. ஆனால் நெசவு அதிபர்கள் பழகு பணியாளர்களை ஏராளமாய் சேர்த்துக் கொள்ள வேண்டும். அப்போதுதான், நாட்டின் மிக முக்கியத் தொழிலாகிய இதற்குத் தேவைப்படுவோர் அடுத்த காலாண்டிலோ அரையாண்டிலோ கிடைப்பர். இதனால் உழவிற்கு ஆளில்லாமல் போகிறது; கிராமப்புறத்திலிருந்து உழைப்பாளர்கள் துரத்தப்படுகிறார்கள்; நகரத்தில் பிச்சைக்காரர்கள் பெருக்கெடுக் கிறார்கள்; சிலர் பிச்சையெடுக்க வெட்கப்பட்டு, குளிர் காலத்தில் பட்டினி கிடக் கிறார்கள்.'' (''ஏழைகள், பட்டறைத் தொழில்கள்...பற்றிய கட்டுரைகள்,'' பக்கம் 9.)

691 ''குழந்தையுழைப்பு ஆணையம் ஐந்தாம் அறிக்கை,'' பக்கம் 171, எண் 34.

692 பிராட்ஃபோர்டு ஏற்றுமதி நிறுவனங்கள் சிலவற்றின் சாட்சியம் பின்வருமாறு: ''இந்த நிலைமையில் பூச்சு வேலையில் காலை 8 மணிக்கு வேலை தொடங்கும் சிறுவர் களை இரவு 7 அல்லது 7.30 மணிக்கு மேல் வேலை வாங்கத் தேவையில்லை என்று தெரிகிறது. இது கூடுதல் ஆட்கள், கூடுதல் செலவீடு பற்றிய பிரச்சினையே ஆகும். சில அதிபர்கள் இவ்வளவு பேராசைக்காரர்களாக இல்லா விட்டால், பையன்கள் காலந் தாழ்த்தி வேலை செய்ய மாட்டார்கள்; கூடுதல் இயந்திரத்துக்காகும் செலவு £16

இவையெல்லாம் சேர்ந்து மொத்த வர்த்தக முறையில் ஏற்படுத்தும் மாற்றங்களாலும்[693] ஒழிந்து போகின்றன. குழந்தையுழைப்பு ஆணையத்தின் சிரத்தையும் நேர்மையும் வாய்ந்த ஆய்வுகள் இந்த விவரங்களை நிரூபிக்கின்றன. ஆன போதிலும் உழைப்பு நேரத்தைக் கட்டாயமாக முறைபடுத்துவதற்கான "பாராளுமன்றப் பொதுச் சட்டத்தின் நெருக்குதலின் விளைவாக"[694] அல்லாமல் மூலதனம் இவ்வாறான மாற்றங்களுக்கு இணங்க ஒருபோதும் மனம் ஒப்புவதில்லை; அதன் பிரதிநிதிகளே திரும்பத் திரும்ப ஒப்புக் கொள்ளும் உண்மை இது.

## பிரிவு 9.— தொழிற்சாலைச் சட்டங்கள். துப்புரவு, கல்வி பற்றிய அவற்றின் சரத்துகள். இங்கிலாந்தில் அவற்றின் பொதுவான விரிவாக்கம்.

தன்னியல்பாய் வளர்ந்த உற்பத்தி நிகழ்முறை வடிவத்துக்கெதிராக சமுதாயத்தின் உணர்வுபூர்வமான, முறைப்படியான முதல் எதிர்வினையாகிய தொழிற்சாலைச் சட்டங்கள் — பருத்தி நூலையும், தன்னியக்கிகளையும், மின்சாரத் தந்தியையும் போலவே — நவீனத் தொழில் துறையால் ஏற்படும் அவசிய விளைவுகள் என்பதைப் பார்த்தோம். இங்கிலாந்தில் அச்சட்டங்களின் விரிவாக்கத்தைப் பரிசீலிக்கப் புகுமுன்னர், தொழிற்சாலைச் சட்டங்களில் அடங்கியுள்ள, வேலை நேரத்திற்குத் தொடர்பில்லாத சரத்துகள் சிலவற்றை சற்றே கவனிப்போம்.

இந்தச் சட்டங்களில் துப்பரவு தொடர்பான சரத்துகள் மிகவும்

---

அல்லது £18தான்; இப்போது மிகை நேரம் வேலை வாங்குவதற்கு முக்கியக் காரணிகள் பொறியமைவுகள் போதாமையும் இடப் பற்றாக்குறையுமே." "குழந்தையுழைப்பு ஆணையம் ஐந்தாம் அறிக்கை." பக்கம் 171, எண் 35,36,38.

693 முன் வந்தது. லண்டன் தொழில் அதிபர் ஒருவர் உழைப்பு நேரத்தைக் கட்டாயமாக முறைப்படுத்துவது ஏனைய அமிசங்களில் தொழிலதிபர்களுக்கெதிராகத் தொழிலாளர்களுக்கும், மொத்த வர்த்தகத்துக்கெதிராகத் தொழிலதிபர்களுக்கும் பாதுகாப்பாகும் என்று கருதுகிறார். அவர் கூறுவதாவது: "உதாரணமாக, குறிப்பிட்ட வியாபாரப் பருவத்தில், போய்ச் சேர வேண்டிய இடத்தை அடையும் விதத்தில் சரக்குகளைப் பாய்மரக்கலம் ஒன்றில் அனுப்ப விரும்புகிற, அதே நேரத்தில் பாய்மரக் கலத்துக்கும் நீராவிக் கப்பலுக்குமிடையே கட்டணத்திலுள்ள வேறுபாட்டை அடைய விரும்புகிற, அல்லது போட்டியாளர்களை முந்திக் கொண்டு அந்நியச் சந்தையை அடையும் பொருட்டு இரு நீராவிக் கப்பல்களில் முன்னதாகச் செல்வதைத் தேர்ந்தெடுக்கிற ஏற்றுமதியாளர்களால் நமது தொழிலில் நிர்ப்பந்தம் தோற்றுவிக்கப்படுகிறது."

694 "இதனைத் தவிர்த்து விடலாம்" என்கிறார் ஒரு தொழிலதிபர்; "பாராளுமன்றப் பொதுச் சட்டத்தின் நெருக்குதலின் விளைவான தொழில் விரிவாக்கத்தைக் கைவிட்டால் போதும்." முன் வந்தது, பக்கம் x., எண் 38.

சொற்பமே — இந்த சரத்துகளின் சொல்லாட்சியும் கூட முதலாளி கள் அவற்றைக் கடைப்பிடிக்காமல் ஏய்ப்பதற்கே தோதாய் உள்ளன. சுவர்களுக்கு வெள்ளையடித்தல், வேறு சில வகைகளில் தூய் மையை உறுதி செய்தல், காற்றோட்ட வசதி அளித்தல், அபாய கரமான இயந்திர சாதனங்களிடமிருந்து பாதுகாப்பு வழங்கல் ஆகியவை தொடர்பான வழிவகைகளுடன் இந்த சரத்துக்கள் நின்று விடுகின்றன என்பதே உண்மை. இந்த சரத்துக்களின் படி, தொழி லதிபர்கள் தங்களது தொழிலாளர்களின் கைகால்களைக் காத்திடும் சாதனங்களுக்கென சிறிதளவே செலவு செய்தாக வேண்டும் என் றாலும், இவற்றை எவ்வளவு வெறித்தனமாய் எதிர்த்தார்கள் என்று மூன்றாம் பாகத்தில் பார்ப்போம். இந்த எதிர்ப்பு தடையிலா வாணிபக் கொள்கையினரது கோட்பாட்டின் லட்சணத்தை வெட்ட வெளிச்சமாக்குகிறது — இந்தக் கோட்பாடு என்ன சொல்கிறது என்றால், முரண்பட்டு மோதுகிற நலன்களைக் கொண்ட சமுதாயத் தில் ஒவ்வொரு தனியாளும் தனது தனிப்பட்ட நன்மை ஒன்றையே நாடுவதன் மூலம் தவிர்க்க முடியாமலே பொது நலத்தை முன்னேற்று கிறாராம்! ஓர் எடுத்துக்காட்டே போதுமானது. கடந்த 20 ஆண்டு களில் வெண்சணல் தொழில் மிக அதிகமாகப் பெருகியிருப்பதும், இந்தப் பெருக்கத்தைத் தொடர்ந்து அயர்லாந்திலுள்ள சணல் அடிப்பு ஆலைகளின் தொகை அதிகரித்திருப்பதும் வாசகருக்குத் தெரியும். 1864இல் அந்த நாட்டில் இத்தகைய 1,800 ஆலைகள் இருந்தன. தவறாமல் ஒவ்வொரு குளிர்காலத்திலும் இலையுதிர் காலத்திலும் மாதர்களும் "இளம் வயதினரும்" இயந்திரங்களோடு சிறிதும் பழக்கப்படாதவர்களான அண்டையிலிருக்கும் சிறு விவசா யிகளின் பெண்டு பிள்ளைகளும் சணல் அடிப்பு ஆலைகளில் உருளைகளுக்கு வெண்சணல் ஊட்டுவதற்காக வயல் உழைப்பி லிருந்து கொண்டுசெல்லப்படுகின்றனர். இயந்திர சாதன வரலாறு இதுவரை கண்டிராத அளவுக்கு எத்தனையோ விபத்துகள் எத் தனையோ வழிகளில் ஏற்படுகின்றன. கார்க் அருகே கில்டினானில் ஓர் அடிப்பு ஆலையில், 1852க்கும் 1856க்குமிடையே உயிர் பறித்த விபத்துகள் ஆறும், அங்கச் சிதைவுகள் அறுபதும் நிகழ்ந்தன; இவை ஒவ்வொன்றையும், சில ஷில்லிங் செலவிட்டு மிகவும் சாமா னிய ஏற்பாடுகளைச் செய்திருந்தால், தடுத்திருக்கலாம். டவுன் பாட்ரிக்கில் தொழிற்சாலைகளுக்கான சான்றிதழ் தரும் வைத் தியரான டாக்டர் வி. வொய்ட் 1865 டிசம்பர் 15 தேதியிட்ட அதிகார பூர்வ அறிக்கையில் சொல்வதாவது: "சணல் அடிப்பு ஆலை களில் நடந்துள்ள கடுமையான விபத்துகள் எல்லாம் மிகவும் பயங்கர மானவை. இந்த விபத்துகள் பலவற்றில் கால்பகுதி உடல் துண்டிக் கப்பட்டுவிடுகிறது; மரணமோ, அல்லது கொடிய ஏலாமைக்கும் அவதிக்கும் உரிய வாழ்வோதான் விளைகிறது. நாட்டில் ஆலை களின் பெருக்கம் இந்தக் கொலைகார விளைவுகளைப் பெருக்கவே

செய்யும்; அவை சட்ட நெறிக்குட்படுத்தப்பட்டால் பெரிய வரப் பிரசாதமாக இருக்கும். சணல் அடிப்பு ஆலைகளை முறையாக மேற்பார்வையிடுவதன் மூலம், உயிரும் உறுப்பும் அதிகமாகப் பலியாவது தவிர்க்கப்படும் என்று திடமாக நம்புகிறேன்.''[695]

சுத்தத்தையும் சுகாதாரத்தையும் பராமரிப்பதற்கான சாமானிய ஏற்பாடுகளையும் கூட பாராளுமன்றச் சட்டங்களின் மூலமே திணிக்க வேண்டி இருக்கிறதென்றால், முதலாளித்துவப் பொருளுற் பத்தி முறையின் தன்மை பட்டவர்த்தனமாகிறதல்லவா? 1864ஆம் வருடத் தொழிற்சாலைச் சட்டத்தின் விளைவாக, மண்பாண்டத் தொழில்களில் ''வெள்ளையடித்து சுத்தப்படுத்தும் வேலை 200க் கும் அதிகமான பட்டறைகளில் நடந்தேறியது. சுத்தப்படுத்தும் வேலையிலிருந்து நெடுங்காலம்—பல சந்தர்ப்பங்களில் இருப தாண்டு காலம், மற்றும் சிலவற்றில் ஆரம்பத்திலிருந்தே—இவை துறவு பூண்டிருந்த பின் இது நடந்தேறியது. (என்னே முதலாளியின் ''துறவறம்''!) இப்பட்டறைகளில் 27,800 கைவினைஞர்கள் வேலை செய்தனர். இது வரை இவர்கள் நச்சுக் காற்றை சுவாசித்தே பகற் பொழுதிலும், அடிக்கடி இராப் பொழுதிலும் வேலை செய்தார்கள். மற்றபடி ஒப்பளவில் அபாயமில்லாத ஒரு தொழில் இதனால் நோயையும் சாவையும் உண்டாக்கும் தொழிலாகி விட்டது. இச்சட்டம் காற்றோட்ட வசதி வெகுவாக மேம்படுவதற்கு வழிசெய்திருக்கிறது.''[696] அதே போது, முதலாளித்துவப் பொரு ளுற்பத்தி முறை, அதன் இயல்பு காரணமாகவே, விவேகமுள்ள எந்த மேம்பாட்டையும் குறிப்பிட்ட அளவுக்கு மேல் ஒதுக்கித் தள்ளி விடுகிறது என்பதற்கு சட்டத்தின் இந்தப் பகுதி தெளிவான நிருபணமாகும். வேலை தொடர்ச்சியாக இருக்குமிடத்தில், ஒவ் வொருவருக்கும் அனுமதிக்கப்பட வேண்டிய குறைந்தபட்ச இட வசதி 500 கனஅடி ஆகும் என்பது ஆங்கிலேய மருத்துவர் களின் ஏகோபித்த கருத்தாகும்; இது திரும்பத் திரும்ப எடுத்துரைக் கப்பட்டுள்ளது. தொழிற்சாலைச் சட்டங்கள், அவற்றின் கட்டாய ஏற்பாடுகள் மூலம், சிறு பட்டறைகள் தொழிற்சாலைகளாக மாறு வதை எப்படிச் சுற்றடியாகத் தூண்டித் துரிதப்படுத்துகின்றனவோ, சிறு முதலாளிகளின் சொத்து உரிமைகளை இவ்விதம் சுற்றடியாகத் தாக்கி எப்படிப் பெரு முதலாளிகளுக்கு ஏகபோகத்தை நிச்சயப் படுத்துகின்றனவோ, அதே போல் ஒவ்வொரு பட்டறையிலும் ஒவ் வொரு தொழிலாளிக்கும் கட்டாயம் முறையான இடவசதி வழங்க வேண்டும் என்று விதிக்கப்படுமேயானால், தொழில் புரியும் பல்லாயிரக்கணக்கான சிறு உடமையாளர்கள் ஒரே வீச்சில் நேரடி

[695] முன் வந்தது, பக்கம் XV., எண் 72 முதலானவை.

[696] ''தொழிற்சாலை ஆய்வாளர் அறிக்கை, 1865 அக்டோபர் 31,'' பக்கம் 127.

உடைமைப் பறிப்புக்கு ஆளாவார்கள்! முதலாளித்துவப் பொருளுற்பத்தி முறையின் அடிவேரே — அதாவது பெரிதானாலும் சரி, சிறிதானாலும் சரி, ஒவ்வொரு மூலதனமும் தங்குதடையின்றி ''சுதந்தரமாக'' உழைப்புச் சக்தியை விலைக்கு வாங்கி நுகர்வதன் மூலம் தற்பெருக்கம் அடைவதென்பதே — தாக்குதலுக்குள்ளாகும். எனவே, சுவாசிப்பதற்கு 500 கன அடி இடவசதி வேண்டும் என்று கேட்பதால், தொழிற்சாலைச் சட்ட நெறியே தடைபட்டு விடுகிறது. துப்புரவு அதிகாரிகள், தொழில் துறை விசாரணை ஆணையர்கள், தொழிற்சாலை ஆய்வாளர்கள் எல்லாருமே அந்த 500 கன அடி இடவசதி அவசியம் என்றும், மூலதனத்திடமிருந்து அதைப் பெற முடியவில்லை என்றும் ஓயாமல் திரும்பத் திரும்ப சொல்கிறார்கள். மூலதனம் என்று ஒன்று இருப்பதற்கு தொழிலாளர்களிடையே காசநோயும், ஏனைய நுரையீரல் நோய்களும் நிலவுவது அத்தியாவசிய நிலைமையாகும் என்று இவர்களெல்லாம் பறைசாற்றுகிறார்கள் என்பதே இதன் பொருள்.[697]

தொழிற்சாலைச் சட்டத்தில் கல்வி சம்பந்தமான சரத்துகள் மொத்தத்தில் போதாக்குறையானவை என்றாலும், குழந்தைகளை வேலைக்கமர்த்துவதற்கான இன்றியமையா நிபந்தனையாக ஆரம்பக் கல்வியைக் குறிப்பிடுகின்றன.[698] அந்த சரத்துகளுக்குக் கிடைத்த வெற்றி, கல்வியையும் உடற்பயிற்சியையும்[699] உடலுழைப்புடன்

---

697 ஆரோக்கியமான சராசரித் தனியாள் சராசரி மும்முரத்துடன் மூச்சுவிடும் ஒவ்வொரு முறையும், சுமார் 25 கன அங்குலம் காற்று உள்ளிழுக்கப்படுகிறது என்றும், ஒவ்வொரு நிமிடத்திலும் சுமார் 20 முறை மூச்சு விடுவதாகவும் பரிசோதனையின் மூலம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. எனவே, ஒவ்வொருவரும் 24 மணி நேரத்தில் உள்ளிழுக்கும் காற்று சுமார் 720,000 கன அங்குலம், அதாவது 416 கன அடி ஆகும். ஆயினும், சுவாசிக்கப்பட்ட காற்று திரும்பவும் சுவாசிக்கப்படுவதற்கு முன்னால் இயற்கை என்னும் மாபெரும் பட்டறையில் சுத்தமாக்கப்பட வேண்டும் என்பது தெளிவு. வாலெண்டின், பிருன்னர் ஆகியோரது பரிசோதனைகளின் படி, ஆரோக்கியமான மனிதன் மணிக்குச் சுமார் 1,300 கன அங்குலம் கரி அமிலத்தை வெளிவிடுகிறான் என்று தெரிகிறது. 24 மணி நேரத்தில் நுரையீரலிலிருந்து வெளியேற்றப்படுவது 8 அவுன்ஸ் கார்பன் திடப்பொருள் என்றாகிறது. ''ஒவ்வொரு மனிதனுக்கும் குறைந்தது 800 கன அடி இருக்க வேண்டும்.'' (ஹக்ஸ்லி.)

698 ஆங்கிலேயத் தொழிற்சாலைச் சட்டத்தின் படி, பெற்றோர்கள் 14 வயதுக்குட்பட்ட குழந்தைகளைச் சட்டத்தின் ஆளுகைக்குட்பட்ட தொழிற்சாலைகளுக்கு அனுப்புவதானால், அதே காலத்தில் அவர்கள் ஆரம்பக் கல்வி பெறுவதையும் அனுமதித்தாக வேண்டும். சட்டத்தை அனுசரிக்க வேண்டிய பொறுப்பு தொழிலதிபரைச் சாரும். ''தொழிற்சாலைக் கல்வி கட்டாயமானது; சட்டப்படி அவசிய வேலை நிலைமை அது.'' (''தொழிற்சாலை ஆய்வாளர் அறிக்கை, 1865 அக்டோபர் 31, '' பக்கம் 111.)

699 தொழிற்சாலைக் குழந்தைகளுக்கும் வக்கற்ற ஏழைகளான ஆரம்பப் பள்ளிக் குழந்தைகளுக்கும் கட்டாயக் கல்வியுடன் உடற்பயிற்சியை (சிறுவர்களைப் பொறுத்த வரை அணிப் பயிற்சியையும்) ஒன்றிணைப்பதன் மிக அனுகூலமான விளைவுகள் பற்றி பார்க்கவும்: ''சமூக விஞ்ஞான முன்னேற்றத்துக்கான தேசிய சங்கத்தின்'' ஏழாவது

ஒன்றிணைக்க முடியும் என்பதற்கும், எனவே உடல் உழைப்பைக் கல்வியுடனும் உடற்பயிற்சியுடனும் ஒன்றிணைக்க முடியும் என்பதற்கும் முதற்பெரும் நிரூபணமாய் அமைந்தது. முறையாகப் பள்ளி சென்று படிக்கும் குழந்தைகளின் கல்வியில் பாதியளவே கிடைத்தது என்றாலும், தொழிற்சாலைக் குழந்தைகள் அதே அளவும் பல சந்தர்ப்பங்களில் இன்னும் அதிகமாகவும் கற்றுக் கொண்டார்கள் என்று தொழிற்சாலை ஆய்வாளர்கள் பள்ளி ஆசிரியர்களை விசாரித்து சீக்கிரமே கண்டறிந்தார்கள். ''அரை நாள் மட்டுமே பள்ளியில் இருப்பதால், இவர்கள் எப்போதுமே புத்துணர்வுடன் இருப்பதும், போதனை பெற விரும்பி அநேகமாய் எந்நேரமும் தயாராய் இருப்பதுமே காரணம். பாதி நேரம் உடலுழைப்பு, பாதி நேரம் பள்ளிப் படிப்பு என்ற முறையில் அவர்கள் வேலை செய்வதால் இவை ஒன்றுக்கொன்று ஓய்வாகவும், இளைப்பாறலாகவும் அமைகின்றன; ஆகவே, இரண்டுமே குழந்தைக்கு உகந்தவையாகின்றன. முழு நேரமும் ஓயாமல் ஒன்றையே செய்து கொண்டிருந்தால் இது சாத்தியமாகாது. காலை நேரம் முழுவதும் (குறிப்பாக வெப்ப காலத்தில்) பள்ளிக்கூடத்தில் இருந்துள்ள சிறுவன், வேலை முடிந்து புத்துணர்வோடும் பொலிவோடும் வருகிற சிறுவனுக்கு ஈடாக முடியாது என்பது தெளிவு.''[700] 1863இல் எடின்பரோவில் சமூக விஞ்ஞானப் பேராயத்தில் சீனியர் ஆற்றிய உரையிலிருந்து இது பற்றி மேற்கொண்டு தகவல் பெறலாம். அதில், ஏனையவற்றோடு கூட, மேல்தட்டு மற்றும் நடுத்தர வர்க்கத்தினரின் குழந்தைளைப் பள்ளியில் இருத்திப் பயனற்ற முறையிலும் சலிப்பூட்டும் விதத்திலும் நெடுநேரம் பயிலச் செய்வதால் ஆசிரியரின் உழைப்பு எப்படி அனாவசியமாக நீளுகிறது என்றும், ''அப்போது, உருப்படியான பலன் ஏதும் இல்லாத விதத்தில் என்பது மட்டுமல்லாமல், முற்றிலும் தீமை பயக்கும் விதத்திலும் குழந்தைகளின் நேரத்தையும் உடல் நலத்தையும் ஆற்றலையும் ஆசிரியர் வீணடிக்கிறார்'' என்றும் அவர் தெளிவுபடுத்து

வருடாந்தரப் பேராயத்தில் நா. வி. சீனியரின் பேச்சு, ''நிகழ்ச்சி அறிக்கை,'' லண்டன், 1863, பக்கம் 63, 64. மற்றும் ''தொழிற்சாலை ஆய்வாளர் அறிக்கை, 1865 அக்டோபர் 31,'' பக்கம் 118, 119, 120, 126 முதலானவை.

700 ''தொழிற்சாலை ஆய்வாளர் அறிக்கை, 1865 அக்டோபர் 31,'' பக்கம் 118. குழந்தையுழைப்பு ஆணையர்களிடம் பட்டுத் தொழிலதிபர் ஒருவர் ஒளிவு மறைவின்றிச் சொல்கிறார்: ''திறம் வாய்ந்த தொழிலாளர்களை உருவாக்குவதன் உண்மை இரகசியம் பிள்ளைப் பிராயத்திலிருந்தே கல்வியையும் உழைப்பையும் ஒருசேர இணைப்பதில் அடங்கும், இதில் சந்தேகமே இல்லை. வேலை மிகையான அளவுக்குக் கடுமையானதாகவோ, சலிப்பூட்டுவதாகவோ, ஆரோக்கியமற்றதாகவோ இருத்தலாகாது என்பது மெய்தான். ஆனால் இரண்டையும் இணைப்பதால் வரப்பெறும் நன்மைகள் பற்றி எனக்குச் சந்தேகமேயில்லை. என் குழந்தைகளுக்கும் கூட, அவர்களது பள்ளிப் படிப்பு பலதிறப்பட்டதாய் அமைந்திடும் பொருட்டு சிறிது வேலையும் விளையாட்டும் இருக்க வேண்டுமென்று ஆசைப்படுகிறேன்.'' (''குழந்தையுழைப்பு ஆணையம் ஐந்தாம் அறிக்கை'' பக்கம் 82, எண் 36.)

கிறார்.[701] வருங்காலத்தில் தழைத்தோங்கப் போகிற கல்வி எப்படி ஆலைத் தொழிலில் முளைவிடுகிறது என்று ராபர்ட் ஓவன் விவரமாகவே நமக்குக் காட்டியுள்ளார். இந்த வருங்காலக் கல்வி யானது, குறிப்பிட்ட வயதுக்கு மேற்பட்ட ஒவ்வொரு குழந்தைக்கும் உற்பத்தித் திறனுள்ள உழைப்பைக் கல்வி போதனையோடும் உடற்பயிற்சியோடும் ஒன்றிணைத்திடும்; உற்பத்தியின் பயனாற் றலை உயர்த்துவதற்கான ஒரு வழிமுறை என்பதோடு, முழு வளர்ச்சி பெற்ற மனிதர்களை உருவாக்குவதற்கான ஒரே வழி முறையாகவும் இந்த ஒன்றிணைப்பை மேற்கொள்ளும்.

ஒவ்வொருவரும் தனியொரு நுணுக்கப் பணியோடு ஆயுள் பரியந்தம் கட்டிப் போடப்படும் பட்டறைத் தொழில் உழைப்புப் பிரிவினையை, நவீனத் தொழில் துறை தொழில் நுட்ப வழிகளின் மூலம் துடைத்தெறிவதைப் பார்த்தோம். அதே நேரத்தில், அந்தத் தொழில் துறையின் முதலாளித்துவ வடிவம் இதே உழைப்புப் பிரிவினையை இன்னும் குரூரமான உருவத்தில் வார்த்தெடுக்கிறது. முறையான தொழிற்சாலையில் தொழிலாளியை இயந்திரத்தின் உயிருள்ள ஒட்டுவாலாக மாற்றுவதன் மூலமும், தொழிற்சாலைக்கு வெளியே, இயந்திர சாதனம் மற்றும் இயந்திரத் தொழிலாளர்களை இங்குமங்குமாகப் பயன்படுத்துவதன் மூலம் ஓரளவுக்கும்,[702]

---

701 *சீனியர், முன் வந்தது, பக்கம் 66. நவீனத் தொழில் துறை குறிப்பிட்ட நிலையை அடைந்த பின், உற்பத்தி முறையிலும் உற்பத்தியின் சமூக நிலைமைகளிலும் சாதிக்கிற புரட்சியின் மூலம் எப்படி மனிதர்களின் உள்ளங்களையும் புரட்சிகரமாக மாற்ற வல்லதாய் இருக்கிறது என்பதைத் தெளிவாகவே காணலாம்: 1833ஆம் வருடத் தொழிற் சாலைச் சட்டத்துக்கெதிரான சீனியரின் கண்டன முழக்கங்களுடன் 1863இல் அதே சீனியர் ஆற்றிய உரையை ஒப்புநோக்குங்கள்; அல்லது இங்கிலாந்தின் கிராமப்புற வட்டங்கள் சிலவற்றில் ஏழைப் பெற்றோர்கள் பட்டினிச் சாவுக்கு அஞ்சி, தம் குழந்தைகளைப் படிக்க வைக்காமலிருக்கின்றனர் என்ற உண்மையுடன் மேற்கூறிய பேராயத்தின் கருத்துகளை ஒப்பு நோக்குங்கள். இவ்வாறு, உதாரணமாக, மறை வட்டார உதவி பெற விரும்புகிற ஏழை தன் குழந்தைகள் பள்ளி செல்வதை நிறுத்துமாறு கட்டாயப்படுத்தப்படுவது சாமர்செட்ஷயரில் சர்வ சாதாரணம் என்று திரு ஸ்னெல் தெரிவிக்கிறார். ''சில குடும்பங்கள் தம் குழந்தைகளைப் பள்ளிக்கு அனுப்பிக் கொண் டிருந்ததால்'' அவற்றுக்கு அடியோடு உதவி மறுக்கப்பட்ட (!) நிகழ்ச்சிகளை ஃபெல்தாமில் பாதிரியாராகிய திரு வொல்லர்ட்டனும் குறிப்பிடுகிறார்.*

702 *மனிதர்களால் ஓட்டப்படும் கைத்தொழில் இயந்திரங்கள் இயந்திர விசையால் ஓட்டப்படும் இன்னும் மேம்பட்ட இயந்திரங்களுடன் நேரடியாகவோ சுற்றடியாகவோ போட்டியிடும் இடங்களில் எல்லாம், இயந்திரத்தை ஓட்டும் தொழிலாளி தொடர்பாகப் பெரும் மாற்றம் நிகழ்கிறது. முதலில் இந்தத் தொழிலாளியின் இடத்துக்கு நீராவி எஞ்சின் வருகிறது: பிற்பாடு நீராவி எஞ்சினின் இடத்துக்கு அவர் வர வேண்டும். பிரயாசையும் செலவிடப்படும் உழைப்புச்சக்தியின் அளவும் இதனால் மிகக் கடுமையாக உயர்ந்து விடுகின்றன. குறிப்பாக இந்தச் சித்திரவதைக்கு ஆட்படுமாறு சபிக்கப்பட்ட குழந்தைகள் தொடர்பாக இதைக் காணலாம். ஆணையர்களில் ஒருவரான திரு லாங்கே, கவண்ட்ரியிலும் சுற்றுவட்டாரத்திலும், 10 முதல் 15 வரை வயதுடைய சிறுவர்கள் ரிப்பன் தறிகளை ஓட்டக் கண்டார். இன்னும் கூட வயதில் குறைந்த இளந்தளிர்கள்*

மாதர்கள் மற்றும் குழந்தைகளின் உழைப்பையும், மலிவான தேர்ச்சியற்ற உழைப்பையும் பரவலாகப் புகுத்தி ஒரு புதிய அடிப்படையில் உழைப்புப் பிரிவினையை மறுபடியும் நிலைநிறுத்துவதன் மூலம் ஓரளவுக்கும், இது செய்யப்படுகிறது.

பட்டறைத் தொழில் உழைப்புப் பிரிவினைக்கும் நவீனத் தொழில் துறையின் வழிமுறைகளுக்கும் இடையிலான பகைமை கடுமையான பாதிப்புகளை உண்டாக்குகிறது. இத்தகைய பாதிப்புகளில் படுபயங்கரமான ஒன்று என்னவென்றால், நவீனத் தொழிற்சாலைகளிலும் பட்டறைத் தொழில்களிலும் வேலை செய்கிற குழந்தைகளில் கணிசமானோர் பிள்ளைப் பிராயத்திலிருந்தே மிக சாமானிய செயல்களோடு இறுகப் பிணைக்கப்படுகிறார்கள்; பிற்காலத்தில் அதே பட்டறை அல்லது தொழிற்சாலைக்கே பயன்படத் தக்கவர்களாகும் விதத்தில் கூட எந்தவொரு வேலையும் கற்பிக்கப்படாமலே, தொடர்ந்து பல ஆண்டுகளுக்குச் சுரண்டப்படுகின்றனர். ஆங்கிலேய எழுத்தச்சுத் தொழிலை எடுத்துக் கொள்வோமானால், பழகு தொழிலாளர்களை எளிதான வேலையிலிருந்து மேலும் மேலும் கடினமான வேலைக்கு முன்னேற்றுவதற்கான ஓர் ஏற்பாடு—பழைய பட்டறைத் தொழில்களிலும் கைத்தொழில்களிலும் நிலவியதற்கு இணையான ஒன்று—இத்தொழிலில் முன்னர் நிலவியது. முழுத்திறனுள்ள அச்சிடுவோராக மலரும் விதத்தில் அவர்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டது. படிக்கவும் எழுதவும் தெரிந்திருப்பது அவர்கள் ஒவ்வொருவருக்கும் அவர்களது தொழிலின் தேவையாக இருந்தது. அச்சு இயந்திரம் வந்ததும் இதெல்லாம் மாறிப் போயிற்று. அதில் வேலை செய்வோர் இரு வகைப்பட்டவர்கள்; வயது வந்த இயந்திரப் பொறுப்பாளர்கள் ஒரு வகை; பெரும்பாலும் 11 முதல் 17 வயதான பையன்கள் மற்றொரு வகை. இவர்களது ஒரே வேலை இயந்திரத்தின் அடியில் காகிதத் தாள்களைப் பரப்புவது, அல்லது அச்சிடப்பட்ட தாள்களை அதிலிருந்து எடுப்பது. அவர்கள் அலுப்பு தட்டும் படியான இந்த வேலையை, குறிப்பாக லண்டனில், வாரத்தில் பல நாள் தொடர்ந்து 14, 15, 16 மணி நேரமும், அடிக்கடி 36 மணி நேரமும் கூட செய்கிறார்கள்—உண்ணவும் உறங்கவும் 2 மணி நேரம் மட்டும் எடுத்துக் கொள்கிறார்கள்.[703] அவர்களில் பலருக்கு படிக்கத் தெரியாது; வழக்கமாக அவர்கள் காட்டான்களாகவும், அசாதாரணப் பிறவிகளாகவும் உள்ளனர். தாங்கள் செய்ய

---

சிறு இயந்திரங்களை ஓட்ட வேண்டியிருந்தது பற்றிச் சொல்லவே வேண்டாம். "இது அளவின்றிக் களைப்பூட்டும் வேலை. நீராவிச் சக்திக்கு பதிலியாகி விடுகிறான் சிறுவன்." ("குழந்தையுழைப்பு ஆணையம், ஐந்தாம் அறிக்கை, 1866," பக்கம் 114, எண் 6.) அதிகாரபூர்வ அறிக்கை வர்ணிப்பது போல " இந்த அடிமை முறையின்" படுபயங்கரமான விளைவுகள் பற்றி, பார்க்கவும்: முன் வந்தது. பக்கம் 114 முதலானவை.

[703] முன் வந்தது, பக்கம் 3, எண் 24.

வேண்டிய வேலைக்குத் தகுதி பெற அவர்களுக்கு அறிவுப் பயிற்சி எதுவும் வேண்டியதில்லை; தேர்ச்சிக்கு அதில் இடமில்லை; கணிப் பாற்றல் வேண்டவே வேண்டாம். அவர்களது கூலி, சிறுவர்களுக்கு சற்று அதிகமே என்றாலும், அவர்கள் வளர வளர அதற்கேற்ற விகிதத்தில் அதிகமாவதில்லை; அவர்களில் பெரும்பாலார் அதிக ஊதியம் கிடைக்கக் கூடிய, அதிகம் பொறுப்பு வாய்ந்த இயந்திர கவனிப்பாளராகப் பதவி உயர்வு பெறுவோம் என எதிர்பார்ப் பதற்கில்லை. ஏனெனில், ஓர் இயந்திரத்துக்கு ஒரே ஒரு கவனிப் பாளர்தான்; ஆனால் அவருக்கு உதவியாகக் குறைந்தது இரு சிறுவர்கள்; பல சந்தர்ப்பங்களில் நான்கு சிறுவர்களும் கூட உண்டு.[704] குழந்தைக்குரிய இந்த வேலைக்கு லாயக்கில்லாத அளவுக்கு வயதானதுமே, அதாவது அதிகம் போனால் சுமார் 17 வயது ஆனதுமே, அவர்கள் அச்சிடும் நிறுவனங்களிலிருந்து நீக்கப் படுகிறார்கள்; குற்றவுலகில் புதுமுகங்களாய்ப் பிரவேசிக்கிறார்கள். வேறெங்காவது அவர்களுக்கு வேலை தேடித் தரும் முயற்சிகள் பயனற்றுப் போகின்றன; அந்த அளவுக்கு அவர்கள் மூடர்களா கவும், முரடர்களாகவும், உடலிலும் உள்ளத்திலும் கேடுற்றோ ராகவும் இருக்கிறார்கள்.

பட்டறைத் தொழிற்கூடங்களினுள் நிலவும் உழைப்புப் பிரி வினை தொடர்பாகக் கூறப்பட்டதே சமுதாயத்தினுள் நிலவும் உழைப்புப் பிரிவினைக்கும் பொருந்தும். கைத்தொழிலும் பட் டறைத் தொழிலும் சமுதாயப் பொருளுற்பத்தியின் பொதுவான அடிப்படையாக இருக்கும் வரை, உற்பத்தியாளரைப் பிரத்தியே கமாக ஒரு கிளைக்குக் கீழ்ப்பட்டவராக்குவது, அவரது வேலையின் பன்முகத் தன்மையைச் சிதைப்பது[705] வளர்ச்சி ஏணியில் அவசிய மான ஒரு படியாகும். ஒவ்வொரு தனி உற்பத்திக் கிளையும் அந்த அடிப்படையின் மீது அதற்குத் தொழில்நுட்ப வழியில் பொருத் தமான வடிவத்தை அனுபவ வாயிலாய் அடைந்து, படிப்படியாக அதனை செம்மை செய்து குறிப்பிட்ட முதிர்ச்சி நிலை அடையப்

---

704 முன் வந்தது, பக்கம் 7, எண் 60.

705 "புள்ளி விவர அறிக்கையின் படி சில ஆண்டுகளுக்கு முன்பெல்லாம் ஸ்காட் லாந்து மேட்டுப் பிரதேசத்தின் சில பகுதிகளில் ஒவ்வொரு விவசாயியும் தானே பதனிட்ட தோலைக் கொண்டு தனக்கு வேண்டிய பாத அணிகளைத் தயாரித்துக் கொண்டார். ஆடு மேய்ப்பாளரும் பண்ணையாளும், மனைவியும் குழந்தைகளும் உட்பட, தேவாலயப் பிரார்த்தனைக்கு அணிந்து சென்ற ஆடையணிகள் எல்லாம் முழுக்க முழுக்க அவர்களே தயாரித்தவை — ஆட்டிடமிருந்து ரோமம் கத்தரிப்பதும், வயலில் வெண்சணல் விதைப்பதும் அடங்கலாய் எல்லா வேலைகளும் அவர்களே செய்தார்கள். இவற்றைத் தயாரிப்பதில் குத்தூசி, ஊசி, விரலுறை ஆகியவற்றையும் தறிக்கு வேண்டிய இரும்பு உறுப்புகள் சிலவற்றையும் தவிர அநேகமாய் வேறு எதுவும் வெளியில் வாங்கியதில்லை என்கிறது அவ்வறிக்கை. சாயங்களும் கூட முக்கியமாக பெண்களால் மரங்களிலிருந்தும், புதர்களிலிருந்தும், பச்சிலைகளிலிருந்தும் வடித் தெடுக்கப்பட்டவை." (டுகால்டு ஸ்டுவர்ட்டின் "நூல்கள்". ஹாமில்டன் பதிப்பு, பாகம் viii., பக்கம் 327-328.)

பெற்றதும் துரிதமாக அந்த வடிவத்தை திடப்படுத்திக் கொள்கிறது. வாணிபம் வழங்குகிற புதிய கச்சாப் பொருள் ஒரு புறமிருக்க, மாற்றத்துக்கு இங்குமங்கும் காரணமாகிற ஒன்றே ஒன்று உழைப்புக் கருவிகளில் படிப்படியாக ஏற்படும் மாறுதலே. ஆனால் இந்த உழைப்புக் கருவிகளின் வடிவமும் கூட, அனுபவம் வாயிலாய் திட்டவட்டமாக நிலைப் படுத்தப்பட்ட பின், மாறுதலுக்கு வாய்ப்பின்றி கெட்டிப்பட்டு விடுகிறது. பல உழைப்புக் கருவிகள் தலைமுறை தலைமுறையாகக் கைமாறி வந்த ஆயிரக்கணக்கான ஆண்டுகளில் மாற்றமின்றி அதே வடிவத்தில் இருந்து வருவது இதனை நிரூபிக்கிறது. பதினெட்டாவது நூற்றாண்டிலும் கூட வெவ்வேறு வகைத் தொழில்களும் ''மருமங்கள்'' என்றழைக்கப்பட்டது குறிப்பிடத்தக்கதாகும்.[706] அவற்றின் இரகசியங்களை முறைப்படி தீட்சை பெற்றவர்கள் தவிர வேறு எவரும் நெருங்கிச் சென்று அறிய முடியாது. மனிதர்களிடமிருந்து அவர்களது சமுதாயப் பொருளூற்பத்தி நிகழ்முறையையே மறைத்த மூடுதிரையை, தன்னியல்பாய்ப் பிரிந்த பல்வேறு உற்பத்திக் கிளைகளையும் வெளியாருக்கு மட்டுமல்லாமல், தீட்சை பெற்றவர்களுக்கும் கூட புரியாப் புதிர்களாக்கிய மூடுதிரையை நவீனத் தொழில் துறை கிழித்தெறிந்தது. அது கடைப்பிடித்த கோட்பாடு (ஒவ்வொரு நிகழ்முறையையும் அதிலடங்கிய இயக்கங்களாக—அவற்றை மனிதக் கரத்தால் நிறைவேற்றும் சாத்தியப்பாட்டைக் கருதாமலே—பகுப்பதென்ற கோட்பாடு) தொழில் நுட்பவியல் என்ற புதிய நவீன கால விஞ்ஞானத்தைத் தோற்றுவித்தது. தொடர்பற்றவையாய்த் தோன்றும் பல்வேறுபட்ட இறுகிப்போன வடிவங்களாகிய தொழில் வினைமுறைகளின் வடிவங்கள், குறிப்பிட்ட பயன்தரு விளைவுகளை அடைவதற்கான இயற்கை விஞ்ஞானப் பிரயோகங்களாக—உணர்வுபூர்வமான, திட்டமிட்ட முறையிலான பிரயோகங்களாக—இப்போது உருப்பெற்றன. பயன்படுத்தப்படும் கருவிகளின் பல்வகைமையினையும் மீறி, மனித உடலின் உற்பத்திச் செயல் ஒவ்வொன்றும் தவிர்க்க முடியாமலே மேற்கொள்கிற முக்கியமான அடிப்படை இயக்க வடிவங்கள் சிலவற்றை தொழில் நுட்பவியல் கண்டுபிடித்தது; இயந்திர சாதனம் எவ்வளவுதான் சிக்கலானதாய் இருந்தாலும் அதனை இயந்திரவியல் விஞ்ஞானமானது சாமானிய யாந்திரிகச் சக்திகள் தொடர்ச்சியாகத்

---

[706] எட்டீன் புவாலோ எழுதிய பிரபல ''Livre des metiers'' என்பதில் கைவினைப் பணியாளர் ஒருவர் ஆண்டையாக சேர்த்துக் கொள்ளப்படுகையில், பின் வருமாறு சத்தியம் செய்ய வேண்டுமென விதிக்கப்பட்டிருக்கக் காண்கிறோம். ''சோதரர்களை சோதர பாவத்துடன் நேசிப்பதாகவும், அவர்களை அவரவரது தொழில்களில் ஆதரிப்பதாகவும், தொழில் இரகசியங்களை மனமறிந்து வெளிப்படுத்துவதில்லை எனவும், மேலும் அனைவரது நலனையும் முன்னிட்டு, பிறர் தயாரித்த பண்டங்களிலுள்ள குறைபாடுகளை வாங்குபவர்களுக்கு சுட்டிக்காட்டி தன் சரக்குகளை சிபாரிசு செய்ய முற்படாமல் அனைவரது நலனையும் பேணுவதாகவும்'' அவர் சத்தியம் செய்தாக வேண்டும்.

திரும்பத் திரும்ப இயங்குவதாக மட்டுமே கொள்வதை சான்றாய்க் குறிப்பிடலாம்.

ஒரு நிகழ்முறையின் நடப்பு வடிவத்தை நவீனத் தொழில் துறை இறுதியான ஒன்றாகக் கருதிச் செயல்படுவதில்லை. எனவே, முன் சென்ற உற்பத்தி முறைகள் எல்லாம் சாராம்சத்தில் மாற்றத்துக்கு எதிரானவையாய் இருக்க, நவீனத் தொழில் துறையின் தொழில் நுட்ப அடித்தளம் புரட்சிகரமானதாய் இருக்கிறது.[707] இயந்திர சாதனத்தின் மூலமும் இரசாயன நிகழ்முறைகளின் மூலமும், இதர பல வழிகளிலும் அது உற்பத்தியின் தொழில் நுட்ப அடித்தளத்தில் மட்டுமல்லாமல், தொழிலாளியின் செயற்பாடுகளிலும் உழைப்பு நிகழ்முறையின் சமூக இணைவுகளிலும் கூட ஓயாமல் மாற்றங்களை உண்டாக்கிய வண்ணமுள்ளது. இவ்வழியில் அது சமுதாயத்தில் நிலவும் உழைப்புப் பிரிவினையயும் புரட்சிகரமான முறையில் மாற்றுகிறது; ஓயாமல் மூலதனத்தையும் தொழிலாள மக்களையும் திரள் திரள்களாக உற்பத்தியின் ஒரு கிளையிலிருந்து பெயர்த்தெடுத்து இன்னொரு கிளையில் இயங்கச் செய்கிறது. ஆனால் இவ்வழியில் நவீனத் தொழில் துறை அதன் இயல்பாலேயே உழைப்பின் மாறுபாட்டையும், பணியின் சரளமான ஓட்டத்தையும், தொழிலாளி எங்கும் செல்லும் படியான பெயர்ச்சித் திறனையும் அவசியமாக்குகிறது என்றால், மறு புறம் அதன் முதலாளித்துவ வடிவத்தில், பழைய உழைப்புப் பிரிவினையை அதன் கெட்டிப்பட்ட தனித் திறப்பாடுகளுடன் கூட அப்படியே வார்ப்பிடுகிறது. நவீனத் தொழில் துறையின் தொழில் நுட்ப அவசியங்களுக்கும் அதன் முதலாளித்துவ வடிவத்தில் உள்ளார்ந்துள்ள சமூகத் தன்மைக்கும் இடையிலான இந்த அறுதி முரண்பாடு எப்படி தொழிலாளியின் நிலைமையை சிறிதும் நிலையற்றதாயும் பாதுகாப்பற்றதாயும் ஆக்கி விடுகிறது என்று பார்த்தோம்;

---

707 *"உற்பத்திக் கருவிகளிலும், அதன் மூலம் உற்பத்தி உறவுகளிலும், மேலும் சமுதாய உறவுகள் எல்லாவற்றிலும் தொடர்ந்து புரட்சிகர மாற்றங்களை ஏற்படுத்தாமல் முதலாளி வர்க்கத்தால் வாழ முடியாது. மாறாக, இதற்கு முந்தைய் தொழில் துறை வர்க்கங்கள் எல்லாவற்றுக்குமே பழைய உற்பத்தி முறைகளை மாறாத வடிவில் பாதுகாத்துக் கொள்வதுதான் வாழ்வதற்குரிய முதல் நிபந்தனையாய் இருந்தது. உற்பத்தியில் ஓயாமல் ஏற்படும் புரட்சிகர மாற்றங்கள், சமூக நிலைமைகள் யாவும் இடையறாது குலைவுறுதல், முடிவே இல்லாத நிச்சயமின்மையும் கொந்தளிப்பும்—இவை முதலாளித்துவ சகாப்தத்தை முந்தைய எல்லா சகாப்தங்களிலிருந்தும் வேறுபடுத்திக் காட்டுகின்றன. நிலைத்து இறுகிப் போன உறவுகள் யாவும்—அவற்றோடிணைந்த பழங்காலத்தியப் புனிதத் தப்பெண்ணங்களும் கருத்துகளும்—துடைத்தெறியப்படுகின்றன, புதிதாய் அமைந்த உறவுகளெல்லாம் இறுகிக் கெட்டிப்படுவதற்குள் பழைமைப்பட்டு விடுகின்றன. திடமானதெல்லாம் காற்றாய்க் கரைகிறது; புனிதமானதெல்லாம் புனிதம் இழக்கிறது; முடிவில் மனிதன் தெளிந்த புத்தியுடன் தனது வாழ்க்கையின் மெய்யான நிலைமைகளையும் சக மனிதர்களோடு தனக்குள்ள உறவுகளையும் நேர்நின்று நோக்க வேண்டியதாகிறது." (மார்க்ஸ், எங்கெல்ஸ்: "கம்யூனிஸ்டுக் கட்சி அறிக்கை," லண்டன், 1848, பக்கம் 5.)*

உழைப்புக் கருவிகள் பிடுங்கப்பட்டு, அவரது வாழ்வுச் சாதனங்கள் அவரிடமிருந்து பறிக்கப்படும் ஆபத்தையும்,[708] அவரது நுணுக்கப் பணி ஒழிக்கப்பட்டு, அவர் வேண்டாத உபரி ஆக்கப்படும் ஆபத்தையும் இந்த முரண்பாடு எப்படி எந்நேரமும் உண்டாக்குகிறது என்றும் பார்த்தோம். மேலும், தொழில் துறை சேமப் பட்டாளம் என்கிற அந்த பயங்கர அபத்தத்தை உண்டாக்கி, மூலதனத்தின் உபயோகத்துக்கு எந்நேரமும் தயாராய் அதன் வசம் இருக்கும் பொருட்டு இப்பட்டாளத்தைத் துன்பத்தில் உழலச் செய்தும், தொழிலாளி வர்க்கத்தாரை ஓயாமல் பலி கொடுத்தும், உழைப்புச் சக்தியைக் கண்மூடித்தனமாய் விரயமாக்கியும், பொருளாதார முன்னேற்றம் ஒவ்வொன்றையும் ஒரு சமூகத் துயராக மாற்றுகிற சமூக அராஜகத்தின் மூலம் பேரழிவை உண்டாக்கியும் இந்தப் பகைமை எப்படி அதன் சீற்றத்தை வெளிப்படுத்துகிறது என்றும் பார்த்தோம். இவை எல்லாம் தீமைகளைக் குறிப்பவை. ஆனால், ஒரு புறம் வேலை மாறுபாடு எதிர்க்கவொண்ணாத இயற்கை விதியைப் போலவும் எல்லா இடங்களிலும் எதிர்ப்பைச் சந்திக்கிற இயற்கை விதிக்குரிய கண்மூடித்தனமான அழிவுச் செயலுடனும்[709] இப்போது கட்டாயமானதாகிறது என்றால், மறு புறம் வேலை மாறு பாட்டை உற்பத்தியின் ஓர் அடிப்படை விதியாக ஏற்கும் படி, நவீனத் தொழில் துறை அதன் உற்பாதங்களின் மூலம் கட்டாயப் படுத்துகிறது. ஆதலால் மாறுபட்ட வேலைக்குத் தொழிலாளி தகுதி பெற்றிருப்பதையும், ஆதலால் அவரது மாறுபட்ட திறப்பாடுகள் கூடுமான அளவுக்கு வளர்ச்சியடைவதையும் அவ்வாறே அடிப்படை விதியாக ஏற்க வேண்டியதாகிறது. இந்த விதியின் முறையான செயல்பாட்டுக்கு உற்பத்தி முறையைத் தகவமைப்பதென்ற பிரச்சினை சமுதாயத்துக்கு ஜீவ மரணப் பிரச்சினையாகிறது. இன்றைய நுணுக்கத் தொழிலாளிக்கு பதிலாய், ஒரே சிறுதிற வேலையை

---

[708] "நீ என் வாழ்க்கையைப் பறிக்கிறாய், என் வாழ்க்கையின் சாதனங்களைப் பறித்திடும் போது." — ஷேக்ஸ்பியர்.

[709] பிரெஞ்சுத் தொழிலாளி ஒருவர் சான் பிரான்சிஸ்கோவிலிருந்து திரும்பி வந்ததும் இவ்வாறு எழுதுகிறார்: "கலிபோர்னியாவில் பல்வேறு தொழில்களில் வேலை செய்தேன்; இத்தனைத் தொழில்களில் வேலை செய்ய முடியும் என்று இதற்கு முன்பு என்னால் ஒருபோதும் நம்பியிருக்க முடியாது. நான் அச்சுத் தொழில் தவிர எதற்கும் லாயக்கற்றவன் என்றே உறுதியாகக் கருதியிருந்தேன்....சட்டையை மாற்றிக் கொள்வது போல் தொழிலை அடிக்கடி மாற்றிக் கொள்கின்ற சாகசக்காரர்களின் இந்த உலகை அடைந்தவுடனேயே, அடக்கடவுளே, நானும் அதையே செய்தேன். சுரங்கத் தொழில் போதுமான ஊதியம் அளிக்காததால், அதை விட்டு நகரத்துக்கு போனேன்; அங்கே அடுத்தடுத்து அச்சுக் கலைஞனாகவும், ஓட்டுத் தொழிலாளியாகவும், குழாய்த் தொழிலாளியாகவும் இருந்தேன்; இப்படிப் பல தொழில்கள் செய்தேன். இவ்வாறு நான் எந்தவித வேலைக்கும் லாயக்கானவன் என்பதைக் கண்டு கொண்டதன் பயனாய், கிணற்றுத் தவளையாய் இல்லாமல், அதிக அளவுக்கு மனிதனாகினேன்." (அ. கார்போன், "De l'enseignement professionnel," 2ஆம் பதிப்பு, பக்கம் 50.)

ஆயுள் முழுவதும் திரும்பத் திரும்பச் செய்வதால் ஊனமாகி இவ்விதத்தில் குறைமனிதனாகத் தாழ்ந்து போயிருக்கும் இந்தத் தொழிலாளிக்கு பதிலாய், நவீனத் தொழில் துறையானது முழு வளர்ச்சி பெற்ற தனிமனிதனைத் தோற்றுவிக்குமாறு—இல்லையேல் மடியவே நேரிடும் என்று அச்சுறுத்தி—சமுதாயத்தை மெய்யாகவே கட்டாயப்படுத்துகிறது. முழு வளர்ச்சி பெற்ற தனிமனிதன் விதவித மான வேலைகளைச் செய்யும் தகுதி பெற்றவனாகவும், உற்பத்தி யில் ஏற்படும் எந்த மாற்றத்தையும் சமாளிக்க வல்லவனாகவும், சமுதாயத்தில் தான் ஆற்றும் வெவ்வேறு பணிகளை தனது இயற்கைத் திறன்களுக்கும் முயன்று பெற்ற திறன்களுக்கும் தடை யற்ற வாய்ப்பினை வழங்கும் அத்தனை வழிகளாய்க் கொண்ட வனாகவும் இருப்பான்.

இந்தப் புரட்சியை சாதிக்கும் திசையில் தன்னியல்பாய் ஏற் கெனவே ஓர் அடி எடுத்து வைக்கப்பட்டுள்ளது: தொழில் நுட்ப, வேளாண்மைப் பள்ளிகளும் ''ecoles d'enseignement profession-nel,''* என்பவையும் (இவற்றில் தொழிலாளர்களின் குழந்தைகள் தொழில் நுட்பவியலிலும், நடைமுறையில் பல்வேறு உழைப்புச் சாதனங்களைக் கையாள்வதிலும் சற்றே போதம் பெறுகிறார்கள்) நிறுவப்பட்டுள்ளன. மூலதனத்திடமிருந்து போராடிப் பெற்ற முதலாவது சொற்பச் சலுகையான தொழிற்சாலைச் சட்டம் ஆரம்பக் கல்வியைத் தொழிற்சாலை வேலையுடன் இணைப் பதோடு நின்று விடுகிறது என்றாலும், தொழிலாளி வர்க்கம் ஆட்சியதிகாரத்துக்கு வரும் போது—தவிர்க்க முடியாமல் வந்தே தீரும்—தத்துவம், நடைமுறை இரு விதத்திலுமான தொழில் நுட்ப போதனை தொழிலாளி வர்க்கப் பள்ளிகளில் அதற்குரிய இடத் தைப் பெறும் என்பதில் சந்தேகமே இருக்க முடியாது. பழைய உழைப்புப் பிரிவினையை ஒழிப்பதே நுரைத்தெழுகிற இத்தகைய புரட்சிகர செயற்பாடுகளின் இறுதி இலக்கு. இந்தச் செயற்பாடுகள் முதலாளித்துவப் பொருளுற்பத்தி வடிவத்துக்கும், அவ்வடிவத்துக் கேற்ப தொழிலாளிக்குள்ள பொருளாதார நிலைமைக்கும் நேர் எதிரானவை என்பதிலும் சந்தேகமே இல்லை. ஆனால் குறிப்பிட்ட உற்பத்தி வடிவத்தில் உள்ளார்ந்துள்ள பகைமைகளின் வரலாற்று வளர்ச்சியே அந்த உற்பத்தி வடிவம் கலைக்கப்பட்டு புதிய வடிவம் நிறுவப்படுவதற்குள்ள ஒரே வழியாகும். ''Ne sutor ultra crepidam''** என்பது கைவினை உலகின் மணிவாசகம். கடி காரம் செய்பவரான வாட் நீராவி எஞ்சினையும், நாவிதரான ஆர்க்ரைட் திராசில் தறியையும் பொற்கொல்லரான ஃபுல்டன் நீராவிக் கப்பலையும் கண்டுபிடித்த அக்கணத்திலிருந்தே இந்த

* தொழிற் பயிற்சிப் பள்ளிகள்

** ''செம்மானுக்குத் தெரிந்தது செருப்புத் தொழில்''

மணிவாசகம் அபத்தமாகி விட்டது.[710]

தொழிற்சாலைச் சட்டநெறியானது தொழிற்சாலைகள், பட்டறைகள் முதலானவற்றில் உழைப்பை முறைப்படுத்துவதோடு நின்று கொள்ளும் வரை, மூலதனத்தின் சுரண்டும் உரிமைகளில் ஒரு குறுக்கீடு என்று மட்டுமே கருதப்படுகிறது. ஆனால், அது ''வீட்டு உழைப்பு''[711] எனப்படுவதை முறைப்படுத்த முற்பட்டதும், உடனே பெற்றோரது அதிகாரத்தின் மீதான நேரடித் தாக்குதலாகக் கருதப்படுகிறது. பொன்மனம் படைத்த ஆங்கிலேயப் பார்ராளுமன்றம் இக்காரியத்தைச் செய்யாமல் நெடுங்காலம் வாளாவிருந்தது. ஆயினும், முடிவில் உண்மைகளின் வலிமையால் நெருக்கப்பட்ட அப்பாராளுமன்றம் பாரம்பரியமான குடும்பத்துக்கும் அதை ஒட்டிய குடும்ப உழைப்புக்கும் அடிப்படையாக இருந்த பொருளாதார அடித்தளத்தைத் தகர்த்ததன் மூலம், நவீனத் தொழில் துறை பாரம்பரியமான குடும்ப பந்தங்கள் யாவற்றையும் தளரச் செய்து விட்டது என்பதை ஒப்புக் கொள்ள வேண்டியதாயிற்று. குழந்தைகளின் உரிமைகளை அது பிரகடனம் செய்ய வேண்டியதாயிற்று. 1866ஆம் வருட குழந்தையுழைப்பு ஆணையத்தின் இறுதி அறிக்கை கூறுவதாவது: ''வேறு யாரை விடவும் அதிகமாய்ப் பெற்றோரிடமிருந்தே இருபாலாருமான குழந்தைகளுக்குப் பாதுகாப்பு தேவைப்பட்டது என்பது வேதனைக்குரிய விதத்தில் சாட்சியம் முழுவதிலும் தெளிவாய் வெளிப்படுகிறது.'' பொதுவாகக் குழந்தைகளின் உழைப்பையும், குறிப்பாக வீட்டு உழைப்பு எனப்படுவதையும் வரம்பின்றிச் சுரண்டும் முறை ''பாதுகாத்து வரப்படுகிறது என்றால், பெற்றோர் பச்சிளம் பாலகர்கள் மீது தீமை பயக்கும் இந்த எதேச்சாதிகாரத்தை வரம்போ வரைமுறையோ இல்லாமல் பிரயோகிக்க முடிகிறது என்பதே காரணம்....குழந்தைகளை 'வார்ரத்துக்கு இவ்வளவு கூலி சம்பாதித்துக் கொடுக்கும்

---

710 அரசியல் பொருளாதார வரலாற்றில் அதிசயமாய்த் திகழ்ந்த ஜான் பெல்லர்ஸ், சமுதாயத்தின் எதிரெதிர்த் துருவங்களிரண்டிலும் அளவுமீறிய ஊட்டத்தையும் அளவுமீறிய வாட்டத்தையும் உண்டாக்குகிற இன்றைய கல்வி முறையையும், உழைப்புப் பிரிவினையையும் ஒழித்தாக வேண்டும் என்று 17ஆம் நூற்றாண்டின் இறுதியிலேயே தெளிவாகச் சொன்னவர். ஏனைய பலவற்றோடு கூட, ''உழைக்காமல் கற்பது உழைக்காதிருக்கக் கற்பதைக் காட்டிலும் மேலானதன்று...உடல் உழைப்பு, அது கடவுளின் ஆதி ஏற்பாடாகும்....உயிருக்கு உணவு அவசியம், உடல் ஆரோக்கியத்துக்கு உழைப்பு அவ்சியம்; ஏனெனில் உடல் வருத்தம் வேண்டாமென்று சும்மாயிருந்தால் நோய்வாய்ப்பட்டு வருந்த வேண்டியதுதான்....உயிரென்னும் விளக்குக்கு உழைப்பே எண்ணெய், சிந்தனையே தீபம்...கற்றல் இல்லாத வறட்டு உழைப்பால் குழந்தைகளுக்குக் கிடைப்பது மூளை வறட்சிதான்.'' (பேஸ்டோவ்களுக்கும் அவர்களின் இன்றைய போலிகளுக்கும் அன்றே முன்னறிந்து தரப்பட்ட எச்சரிக்கை இது). (''...தொழிற் கல்லூரி ஒன்றை ஏற்படுத்துவதற்கான யோசனைகள்.'' லண்டன், 1696, பக்கம் 12,14,18.)

711 இவ்வகை உழைப்பு பெரும்பாலும் சிறு பட்டறைகளில் நடைபெறுவதை சித்திரப் பின்னல், சருகுப் பின்னல் ஆகிய தொழில்களில் பார்த்தோம். ஷெஃபீல்டு, பர்மிங்காம் முதலானவற்றின் உலோகத் தொழில்களில் இதை இன்னும் கூட விவரமாகக் காணலாம்.

இயந்திரங்களாக' மாற்றும் பரிபூரண அதிகாரம் பெற்றோருக்கு இருக்கலாகாது.....எனவே, இது போன்ற எல்லா சந்தர்ப்பங்களிலும் தமது உடல் வலிமையை அகாலமாக அழிப்பதும், அறிவுடைமைக்கும் நெறியுடைமைக்கும் உரியவர்களின் துலாக் கோலில் தம்மை ஈனப்படுத்துவதும் எதுவோ அதிலிருந்து இயற்கை உரிமை என்ற முறையில் தங்களுக்கு விலக்கு பெற்றுத் தரப்பட வேண்டுமென்று குழந்தைகளும் இளம் வயதினரும் சட்ட மன்றத்தைக் கோர நியாயமுண்டு.''[712] ஆயினும் பெற்றோர் அதிகாரத்தின் துர்ப்பிரயோகம் குழந்தையுழைப்பு நேரடியாகவோ சுற்றடியாகவோ முதலாளித்துவ வழியில் சுரண்டப்படும் நிலையைத் தோற்றுவித்து விடவில்லை. மாறாக, முதலாளித்துவச் சுரண்டல் முறைதான் பெற்றோர் அதிகாரத்தின் பொருளாதார அடிப்படையைத் தகர்த்து, அதன் பிரயோகத்தை கேடு பயக்கும் அதிகாரத் துர்ப்பிரயோகமாகச் சீர்கெடச் செய்தது. முதலாளித்துவ அமைப்பில் பழைய குடும்ப உறவுகள் குலைந்து போவது எவ்வளவு தான் பயங்கரமானதாகவும், அருவருப்பானதாகவும் தோன்றிய போதிலும், நவீனத் தொழில் துறையானது உற்பத்தி நிகழ்முறையில் ஒரு முக்கியப் பங்கை வீட்டு வட்டத்துக்கு வெளியே மாதர்களுக்கும், இளம் வயதினருக்கும், இருபாலாருமான குழந்தைகளுக்கும் ஒதுக்குவதன் மூலம், குடும்பம் மற்றும் ஆண்-பெண் உறவுகளின் இன்னுமுயர்ந்த வடிவத்துக்கான புதிய பொருளாதார அடித்தளத்தைப் படைக்கிறது. புராதன ரோமானிய, புராதன கிரேக்க அல்லது கிழக்கத்தியக் குடும்ப வடிவங்களை முற்றானவை, முடிவானவை என்று கருதுவது எவ்வளவு அபத்தமோ, சந்தேகமேயில்லாமல் அவ்வளவு அபத்தம்தான் டீட்டானிய-கிறிஸ்தவக் குடும்ப வடிவத்தை முற்றானது, முடிவானது என்று கருதுவதும். இந்தக் குடும்ப வடிவங்களை எல்லாம் ஒருசேர நோக்குமிடத்து, இவை யாவும் வரலாற்று வளர்ச்சியில் ஒரு தொடர்வரிசையாய் அமைகிறவை. தவிரவும் கூட்டு-வேலைக் குழு இருபாலாரும் சகல வயதினருமான தனியாட்களால் ஆனது என்ற உண்மை, பொருத்தமான நிலைமைகளில் அவசியமாகவே மனித நேய வளர்ச்சிக்கு ஓர் ஆதாரமாய்த் திகழ்ந்தாக வேண்டும் என்பது கண்கூடு; ஆயினும், கூட்டு-வேலைக் குழுவின் தன்னியல்பாய் வளர்ந்த, மிருகத்தனமான முதலாளித்துவ வடிவத்தில், உற்பத்தி நிகழ்முறை உழைப்பாளிக்காக இல்லாமல் உழைப்பாளி உற்பத்தி நிகழ்முறைக்காக இருக்கிற இவ்வடிவத்தில், மேற்கூறிய உண்மையானது ஊழலையும் அடிமைத்தனத்தையும்

---

712 ''குழந்தையுழைப்பு ஆணையம் ஐந்தாம் அறிக்கை,'' பக்கம் xxv., எண் 162; இரண்டாம் அறிக்கை, பக்கம் xxxviii., எண் 285, 289, பக்கம் xxv., xxvi., எண் 191.

விளைவிக்கும் விஷ ஆதாரமாகி விடுகிறது.[713]

தொழிற்சாலைச் சட்டங்களைப் பொதுவானவையாகப் பரவலாக்கும் அவசியம்—இயந்திர சாதனத்தின் முதற் படைப்புகளாம் இயந்திர நூற்பு மற்றும் நெசவு தொடர்பான தனிச் சட்டம் என்ற நிலையிலிருந்து மொத்தமாகச் சமுதாயப் பொருளுற்பத்திக்கான பொதுச் சட்டமாக அவற்றை மாற்றி அமைக்கும் அவசியம்—நவீனத் தொழில் துறை வரலாற்று வழியில் வளர்க்கப்பட்ட முறையிலிருந்து பிறந்தது என்று பார்த்தோம். நவீனத் தொழில் துறையின் புழக்கடையில் பட்டறைத் தொழில், கைத்தொழில், வீட்டுத் தொழில் ஆகியவற்றின் பாரம்பரிய வடிவம் அடியோடு புரட்சிகரமாக மாற்றப்படுகிறது. பட்டறைத் தொழில்கள் ஆலைத் தொழில்களாகவும், கைத்தொழில்கள் பட்டறைத் தொழில்களாகவும் இடையறாது மாறிச் சென்ற வண்ணமுள்ளன. கடைசியாக, கைத்தொழில், வீட்டுத்தொழில் ஆகிய துறைகள் ஒப்பளவில் பார்த்தால் வியக்கும் படியான குறுகிய காலத்திற்குள் முதலாளித்துவச் சுரண்டலின் மிக மூர்க்கமான அத்துமீறல்கள் தலைவிரித்தாடும் இருண்ட வதைக்கூடங்கள் ஆகின்றன. இரு நிலைமைகள் இறுதியில் திருப்புமுனையாகின்றன. முதலாவதாக, மூலதனம் ஒரு முனையில் சட்ட வழியிலான கட்டுப்பாட்டுக்கு உட்பட நேர்ந்ததுமே, இதை சரிக்கட்டும் பொருட்டு அந்த அளவுக்குக் கண்மூடித்தனமாகப் பிற முனைகளில் இழப்பீடு தேடுகிற நிலைமை திரும்பத் திரும்ப ஓயாமல் ஏற்படுகிறது.[714] இரண்டாவதாக, போட்டியின் நிலைமைகளில் சமத்துவம் வேண்டுமென்று, அதாவது உழைப்புச் சுரண்டல் அனைத்தையும் சமமாகக் கட்டுப்படுத்த வேண்டுமென்று முதலாளிகள் ஓலமிடுகிறார்கள்.[715] மனமுடைந்த இருவர் இவ்விதம் ஓலமிடுவதைக் கேட்போம். ஆணி, சங்கிலி போன்றவற்றைத் தயாரிக்கும் பிரிஸ்டலைச் சேர்ந்த திருவாளர்கள் கூக்ஸ்லி தமது தொழிலில் தொழிற்சாலைச் சட்டத்தின் விதிமுறைகளைத் தாமாகவே புகுத்தினர். "ஒழுங்குமுறையில்லாத பழைய ஏற்பாடு அண்டையிலுள்ள தொழில்களில் வழக்கிலிருப்பதால், திருவாளர்கள் கூக்ஸ்லியிடம் வேலை பார்க்கும் சிறுவர்கள் மாலை 6 மணிக்குப் பிறகு வேறிடங்களில் தொடர்ந்து உழைப்பதற்குக் கிடைக்கும் வாய்ப்பு கூக்ஸ்லியை பாதிக்கிறது. ஆகவே, அவர்கள் சொல்கின்றனர்: 'இது சிறுவனின் வலிமையில் ஒரு

---

[713] "தொழிற்சாலை உழைப்பு வீட்டு உழைப்பைப் போல் அதே அளவுக்கு—ஏன், இன்னுமதிக அளவுக்கே கூட—தூயதாகவும், சிறந்ததாகவும் இருக்க முடியும்." ("தொழிற்சாலை ஆய்வாளர் அறிக்கை, 1865 அக்டோபர் 31," பக்கம் 129.)

[714] "தொழிற்சாலை ஆய்வாளர் அறிக்கை, 1865 அக்டோபர் 31," பக்கம் 27-32.

[715] "தொழிற்சாலை ஆய்வாளர் அறிக்கையில்," ஏராளமான உதாரணங்கள் கிடைக்கும்.

பகுதியை விழுங்கி விடுவதால், அவனது வலிமையிலிருந்து கிடைக்கும் முழு ஆதாயத்தையும் அடைய வேண்டியவர்களான எங்களுக்கு இழப்பு நேரிடச் செய்து அநீதி இழைக்கிறது'.''[716] திரு ஜே. சிம்ப்ஸன் (காகிதப் பெட்டி மற்றும் பை தயாரிப்பாளர், லண்டன்) ஆணையர்கள் முன்னால் கூறியதை குழந்தையுழைப்பு ஆணையம் விவரிக்கிறது: ''அவர் அதற்காக'' (சட்டமன்றத் தலையீட்டுக்காக) ''எந்த மனுவிலும் ஒப்பமிடுவார்....தனது நிலையத்தை மூடிய பின் மற்றவர்கள் தனக்குப் பிறகும் வேலை செய்வார்களோ என்றும், தனக்கு வர வேண்டிய சரக்காணைகளைத் தட்டிக் கொண்டு விடுவார்களோ என்றும் இரவெல்லாம் உறக்கமின்றித் தவிக்கிறார்.''[717] குழந்தையுழைப்பு ஆணையம் தொகுத்துச் சொல்கிறது: ''பெரிய தொழிலதிபர்களின் தொழிற்சாலைகளில் உழைப்பு நேரம் சட்டக் கட்டுப்பாட்டுக்கு உட்பட்டிருக்கையில், அதே தொழிற் கிளையைச் சேர்ந்த சிறிய நிலையங்கள் சட்டக் கட்டுப்பாடு எதற்கும் உட்படாமலிருப்பது பெரிய தொழிலதிபர்களுக்கு இழைக்கப்படும் அநீதியாகும். சிறிய நிலையங்கள் சட்டத்துக்கு உட்படாதிருந்தால் வேலை நேரம் தொடர்பாக ஏற்படும் நேர்மையற்ற போட்டி நிலைமைகளால் விளையும் அநீதியோடு கூட, பெரிய அதிபர்களுக்குக் கிடைக்க வேண்டிய பாலர் உழைப்பையும் மாதர் உழைப்பையும் சட்ட நெறிக்கு உட்படாத நிலையங்கள் கவர்ந்து கொள்வதால் விளையும் பாதக நிலைமையும் சேர்ந்து கொள்கிறது. மேலும், அநேகமாக எப்போதுமே, மக்களின் ஆரோக்கியத்துக்கும், வசதிக்கும், கல்விக்கும், பொது மேம்பாட்டுக்கும் அதிகம் ஒவ்வாதவையான சிறு நிலையங்கள் பல்கிப் பெருகுவதற்கே இது ஏதுவாகும்.''[718]

ஆணையத்தின் இறுதி அறிக்கை 1,400,000க்கும் அதிகமான குழந்தைகளையும் இளம் வயதினரையும் மாதர்களையும் — இவர்களில் சுமார் பாதிப் பேர் சிறிய தொழில்களிலும் வீட்டு வேலை எனப்படுவதன் மூலமும் சுரண்டப்படுகின்றனர் — தொழிற்சாலைச் சட்டத்துக்கு உட்படுத்துமாறு யோசனை கூறுகிறது.[719] . அது

716 ''குழந்தையுழைப்பு ஆணையம் ஐந்தாம் அறிக்கை,'' பக்கம் x., எண் 35.

717 ''குழந்தையுழைப்பு ஆணையம் ஐந்தாம் அறிக்கை,'' பக்கம் ix., எண் 28.

718 முன் வந்தது, பக்கம் xxv., எண் 165-167. சிறுவீதத் தொழில்களோடு ஒப்பிடுமிடத்து பெருவீதத் தொழில்களின் அனுகூலங்கள் குறித்து, பார்க்கவும்: ''குழந்தையுழைப்பு ஆணையம் மூன்றாம் அறிக்கை,'' பக்கம் 13, எண் 144, பக்கம் 25, எண் 121, பக்கம் 26, எண் 125, பக்கம் 27, எண் 140 முதலானவை.

719 தொழிற்சாலைச் சட்டத்துக்கு உட்படுத்த உத்தேசிக்கப்பட்ட தொழில்கள் வருமாறு: சித்திரப் பின்னல், காலுறை நெசவு, சருகுப் பின்னல், ஏராளமான உட்பிரிவுகளோடு கூடிய ஆடை தயாரிப்பு, செயற்கைப் பூ தயாரிப்பு, பாத அணி தயாரிப்பு, தொப்பி தயாரிப்பு, தையல், கையுறை தயாரிப்பு, ஊது உலைகள் முதல் ஊசித் தொழில் வரை சகல உலோகத் தொழில்களும், காகித ஆலைகள், கண்ணாடித்

கூறுவதாவது: ''ஆனால் அந்தப் பெரும் தொகையிலான குழந்தைகள், இளம் வயதினர், பெண்கள் எல்லாரையுமே மேற்குறிப்பிட்ட காப்புச் சட்ட நெறிக்கு உட்படுத்துவது தகும் என்று பாராளுமன்றம் கருதுமேயானால்...இப்படிப்பட்ட சட்டம், அதன் உடனடி இலக்காகிய வயதிற்சிறியோர் மீதும் வலுவற்றோர் மீதும் மட்டுமல்லாமல், இன்னும் பெரிய தொகையிலான வயது வந்த தொழிலாளர்கள் மீதும்—இந்தக் கிளைகள் அனைத்திலும் நேரடியாக மட்டுமல்லாமல், சுற்றடியாகவும் அதன் உடனடித் தாக்கத்துக்கு உள்ளாகிற இவர்கள் மீதும்—மிகவும் சாதகமான விளைவை ஏற்படுத்தும் என்பதில் சந்தேகமில்லை. அது அவர்களது உழைப்பு நேரத்தை முறைப்படுத்துவதோடு, மிதப்படுத்தவும் செய்யும்; அவர்களது வேலையிடங்கள் ஆரோக்கியமாகவும், சுத்தமாகவும் இருப்பதற்கு வழி செய்யும்; எனவே அவர்களது நல்வாழ்வுக்கும், நாட்டின் நல்வாழ்வுக்கும் பெரிய ஆதாரமாய் அமையும் உடல் வலிமை என்கிற வளத்தைப் பேணி வளர்க்கும்; வளரும் தலைமுறையினரின் உடலமைப்புகளைக் கெடுத்து அகாலச் சீர்கேட்டுக்கு இட்டுச் செல்லும் இளம் பிராயக் கடும் உழைப்பிலிருந்து அவர்களைக் காப்பாற்றும்; இறுதியாக அவர்கள் ஆரம்பக் கல்வி பெறும் வாய்ப்பை—குறைந்தது 13 வயது வரை—உறுதி செய்யும்; நமது உதவி ஆணையர்களின் அறிக்கைகளில் தத்ரூபமாய் வெளிப்படுவதும், மிகுந்த வேதனைக்கும் ஆழ்ந்த தேசிய அவமானத்துக்கும் உரியதுமாகிய கேவலமான அறியாமையை அகற்றும்.''[720]

டோரி அமைச்சரவை 1867 பிப்ரவரி 5ஆம் நாள் அரியணை உரையில், தொழில் துறை விசாரணை ஆணையத்தின்[721] யோசனைகளை மசோதாக்களாய் வடித்திருப்பதாக அறிவித்தது. அந்த அளவு

---

தொழில்கள், புகையிலைத் தொழிற்சாலைகள், இந்தியா ரப்பர் தொழில்கள், (நெசவுக்கான) நூற்பின்னல், சமுக்காளக் கைநெசவு, குடை மற்றும் சிறு குடை தயாரிப்பு, கதிர்கள் மற்றும் உருளைகள் தயாரிப்பு, அச்சிடுதல், புத்தகங்கட்டுதல், (காகிதப் பைகள், அட்டைகள், வண்ணத்தாள் முதலானவை உட்பட) எழுதுபொருள் தயாரிப்பு, கயிறு தயாரிப்பு, திட்டிக்கல் ஆபரண தயாரிப்பு, செங்கல் தயாரிப்பு, பட்டுக் கைநெசவு, கவண்ட்ரி நெசவு, உப்புத் தொழில்கள், மெழுகுவத்தித் தொழில்கள், சிமெண்ட் தொழில்கள், சர்க்கரை ஆலைகள், பிஸ்கட் தயாரிப்பு, பல்வேறு மரத் தொழில்கள், மற்றும் கலப்புத் தொழில்கள்.

720 முன் வந்தது, பக்கம் XXV., எண் 169.

721 தொழிற்சாலைச் சட்டங்கள் விரிவாக்கச் சட்டம் 1867 ஆகஸ்ட் 12ஆம் நாள் நிறைவேற்றப்பட்டது. எல்லா வார்ப்படச் சாலைகளையும், கொல்லுலைகளையும், இயந்திரப் பட்டறைகள் உட்பட உலோகத் தொழிற்கூடங்களையும் மேலும் கண்ணாடித் தொழில்கள், காகித ஆலைகள், மரப்பால் பிசின் மற்றும் இந்தியா ரப்பர் தொழில்கள், புகையிலைத் தொழிற் கூடங்கள், எழுத்தச்சு மற்றும் புத்தகங்கட்டும் தொழில்கள் ஆகியவற்றையும், முடிவில் 50க்கும் அதிகமானோர் வேலைக்கமர்த்தப்படும் சகல பட்டறைகளையும் இச்சட்டம் ஒழுங்குமுறைக்குள்ளாக்குகிறது. 1867 ஆகஸ்டு 17ஆம் நாள் இயற்றப்பட்ட உழைப்பு நேர ஒழுங்குமுறைச் சட்டம் சிறு பட்டறைகளையும் வீட்டுத் தொழில்கள் எனப்படுகிறவற்றையும் கட்டுப்படுத்துகிறது.

இந்தச் சட்டங்களையும் 1872ஆம் வருட புதிய சுரங்க வேலைச் சட்டத்தையும் இரண்டாம் பாகத்தில் மீண்டும் பரிசீலிப்போம்.

செல்வதற்கு, மேலும் இருபதாண்டு கால *experimentum in corpore vili** தேவைப்பட்டது. 1840இலேயே குழந்தைகள் உழைப்பு தொடர்பாகப் பாராளுமன்ற ஆணையம் ஒன்று நியமிக்கப்பட்டது. 1842இல் அதன் அறிக்கை வெளிப்படுத்தியதாவது (நாசா வி. சீனியரின் சொற்களில்): ''அதிபர்களும், பெற்றோர்களும் வெளிப்படுத்திய பேராசை, சுயநலம், கொடூரம் ஆகியவற்றையும், சிறுவர்களுக்கும் குழந்தைகளுக்கும் ஏற்பட்ட துன்பம், சீர்கேடு, அழிவு ஆகியவற்றையும் அது என்றுமில்லாத அளவுக்கு பயங்கரமாக வெளிப்படுத்தியது....கடந்த கால பயங்கரங்களை அது வர்ணிப்பதாகவே எண்ணத் தோன்றும். ஆனால், வருத்தத்துக்குரிய விதத்தில், அந்தப் பயங்கரங்கள் அன்று போலவே இன்றும் கடுமையாக இருந்து வருவதற்கு சான்றுண்டு. 1842இல் முறையீட்டுக்கு இலக்கான துர்ப்பிரயோகங்கள் இன்று முழு மலர்ச்சி பெற்றுள்ளன என்று சுமார் 2 ஆண்டுகளுக்கு முன்னால் ஹார்டுவிக் வெளியிட்ட பிரசுரம் கூறுகிறது. இந்த அறிக்கை 20 ஆண்டுகளுக்குக் கவனிப்பாரற்றுக் கிடந்தது என்பதே தொழிலாளி வர்க்கக் குழந்தைகளின் அறநெறியும் ஆரோக்கியமும் பொதுவாகப் புறக்கணிக்கப்படுவதற்கு விபரீத முறையிலான சான்றாகிறது; 'அறநெறி என்பதைப் புரிந்து கொண்டதற்கு இம்மியளவும் அறிகுறி இல்லாமலும், அறிவோ, சமயநெறியோ இயல்பாய் வரும் அன்போ இல்லாமலும் வளர்க்கப்பட்ட குழந்தைகள்,' இந்த இருபதாண்டு காலத்தில் இன்றைய தலைமுறையின் பெற்றோர் ஆகி விடும் நிலைமை உண்டாயிற்று.''[722]

சமூக நிலைமைகள் மாறி விட்ட படியால், பாராளுமன்றம் 1840ஆம் வருட ஆணையத்தின் கோரிக்கைகளை இழுத்தடித்தது போல் 1862ஆம் வருட ஆணையத்தின் கோரிக்கைகளை இழுத்தடிக்கத் துணியவில்லை. எனவேதான் 1864இல், ஆணையம் அதன் அறிக்கைகளில் ஒரு பகுதியை மட்டுமே வெளியிட்டிருந்த போது, (மண்பாண்டத் தொழில்கள் உட்பட) மண்செய்பொருட் தொழில்களும், காகிதத் தோரணம், தீப்பெட்டி, தோட்டா, குல்லாய் ஆகியவற்றைத் தயாரித்தலும், துவாலை வெட்டுதலும் ஜவுளித் தொழில்களில் அமலிலிருந்த தொழிற்சாலைச் சட்டங்களுக்கு உட்படுத்தப்பட்டன. அன்றைய டோரி அமைச்சரவை 1867 பிப்ரவரி 5ஆம் நாள் அரியணை உரையில், 1866இல் விசாரணையை முடித்துக் கொண்ட ஆணையத்தின் இறுதிப் பரிந்துரைகளின் அடிப்படையில் மசோதாக்கள் கொண்டுவரப் படுவதாக அறிவித்தது.

---

722 சீனியர், ''சமூக விஞ்ஞானப் பேராயம்,'' பக்கம் 55-58.

---

* வேண்டாத உடலிலான பரிசோதனைகள்

*1867* ஆகஸ்டு *15*ஆம் நாள் தொழிற்சாலைச் சட்டங்கள் விரிவாக்கச் சட்டமும்; ஆகஸ்டு *21*ஆம் நாள் பட்டறை ஒழுங்கு முறைச் சட்டமும் அரச சம்மதம் பெற்றன; முதலாவது சட்டம் பெரிய தொழில்கள் தொடர்பானது; இரண்டாவது, சிறிய தொழில்கள் தொடர்பானது.

ஊது உலைகள், இரும்பு மற்றும் தாமிர ஆலைகள், வார்ப்படச் சாலைகள், இயந்திரப் பட்டறைகள், உலோகத் தொழிற்கூடங்கள், மரப்பால் பிசின் தொழில்கள், காகித ஆலைகள், கண்ணாடித் தொழில்கள், புகையிலைத் தொழிற்கூடங்கள், (செய்தித் தாள்கள் உட்பட) அச்சுத் தொழில், புத்தகங் கட்டுதல் ஆகியவற்றை, சுருங்கச் சொல்லின் *50* அல்லது அதற்கதிகமான ஆட்கள் ஒருங்கே வேலை செய்கிற, ஆண்டில் *100* நாளைக்குக் குறையாமல் வேலை செய்கிற மேற்சொன்ன வகைப்பட்ட சகல தொழில் நிறுவனங் களையும் ஆள்வது முதலாவது சட்டம்.

பட்டறைகள் ஒழுங்குமுறைச் சட்டம் பிரயோகமாகிற மண்டலத் தின் விரிவைத் தெளிவுபடுத்துவதற்காக, அதன் விளக்க சரத் திலிருந்து பின்வரும் பகுதிகளை எடுத்துக் காட்டுகிறோம்:

''கைத்தொழில் என்பது, தொழில் என்ற முறையில், அல்லது எந்த ஒரு பண்டத்தையும் அல்லது பண்டத்தின் பகுதியையும் தயாரிப்பதில் இருக்கிற அல்லது வருகிற—அல்லது எந்த ஒரு பண்டத்தையும் விற்பனைக்காக மாற்றி அமைத்தல், பழுது பார்த் தல், அணி செய்தல், இறுதி வடிவளித்தல் அல்லது வேறு விதமாகத் தகவமைப்பதில் இருக்கிற அல்லது வருகிற—ஆதாயத்தின் நோக்கங் களுக்காகச் செய்யப்படுகிற கையுழைப்பைக் குறிக்கும்.''

''பட்டறை என்பது குழந்தை, இளம் பிராயத்தவர், அல்லது பெண் எவரும் ஏதேனும் ஒரு கைத்தொழில் செய்கிற அறை அல்லது இடத்தை—இவர்களை வேலைக்கு அமர்த்துகிறவர் புழங்குவதற்கு உரிமை பெற்றிருப்பதும் தனது கட்டுப்பாட்டில் வைத்திருப்பதுமான அறை அல்லது இடத்தை—குறிக்கும். இது திறந்த வெளியிலோ மோட்டுக்கு அடியிலோ இருக்கலாம்.''

''வேலை செய்தல் என்பது எந்தக் கைத் தொழிலிலும், கூலிக் காகவோ கூலியில்லாமலோ, ஓர் அதிபரின் கீழ் அல்லது இச் சட்டத்தில் விளக்கப்பட்டுள்ள படி பெற்றோரின் கீழ் வேலையில் ஈடுபடுவதைக் குறிக்கும்.''

''பெற்றோர் என்பது ஒரு...குழந்தை அல்லது இளம் பிராயத்தவரைத் தம் வசத்தில் அல்லது கட்டுப்பாட்டில் வைத் துள்ள பெற்றோர், காப்பாளர் அல்லது வேறெவரையும் குறிக்கும்.''

சட்டத்தின் விதிமுறைகளுக்குப் புறம்பாகக் குழந்தைகளையும் இளம் வயதினரையும் மாதர்களையும் வேலை வாங்குவதற்கு தண்டனை விதிக்கிற 7ஆம் சரத்தானது, பெற்றோர் என்றாலும்

பெற்றோர் அல்லரென்றாலும் பட்டறையின் உரிமையாளரை மட்டுமல்லாமல், "குழந்தை, இளம் பிராயத்தவர் அல்லது பெண்ணின் பெற்றோர், அல்லது அவர்களின் உழைப்பிலிருந்து நேரடி நன்மை எதையும் பெறுகிற அல்லது அவர்கள் மீது கட்டுப்பாடு செலுத்துகிற வேறெவரையும்" அபராதங்களுக்கு உட்படுத்துகிறது.

பெரிய நிறுவனங்கள் தொடர்பானதாகிய தொழிற்சாலைச் சட்டங்கள் விரிவாக்கச் சட்டம், ஏராளமான விஷ விதிவிலக்குகள் மூலமும், அதிபர்களுக்கு அடிபணியும் கோழைத்தனமான சமரசங்கள் மூலமும் தொழிற்சாலைச் சட்டத்தின் மதிப்பைக் கெடுக்கிறது.

நுணுக்க விவரங்களில் எல்லாம் படுமோசமாய் அமைந்த பட்டறைகள் ஒழுங்குமுறைச் சட்டம், அதன் செயலாக்கத்துக்குப் பொறுப்பான நகராட்சி, ஊராட்சி அதிகாரிகளின் கையில் ஏட்டுச் சட்டமாய் செயலற்றிருந்தது. 1871இல் பாராளுமன்றம் இந்த அதிகாரத்தை அவர்களிடமிருந்து திரும்பப் பெற்று, தொழிற்சாலை ஆய்வாளர்களிடம் அளித்தது. இவ்வாறு ஒரேயடியில் நூறாயிரத்துக்கும் அதிகமான பட்டறைகளையும் முன்னூறு செங்கல் சூளைகளையும் அவர்களது அதிகார வரம்பிற்கு உட்படுத்தியது; ஆனால், அதே நேரத்தில் அவர்களுக்கு ஏற்கெனவே ஆள் பற்றாக்குறை என்றாலும் கூடுதலாய் எட்டு உதவியாளர்களுக்கு மேல் கிடைக்காமல் பார்த்துக் கொண்டது.[723]

ஆக, 1867ஆம் வருட ஆங்கிலேயச் சட்ட நெறியில் நமக்கு எடுப்பாய்த் தெரிவது என்னவென்றால்: ஒரு புறம், முதலாளித்துவச் சுரண்டலின் அத்துமீறல்களுக்கு எதிராக இவ்வளவு அசாதாரண நடவடிக்கைகளை இவ்வளவு விரிவான முறையில், கோட்பாட்டளவில் ஏற்க வேண்டிய அவசியத்துக்கு ஆளும் வர்க்கங்களின் பாராளுமன்றம் உள்ளாகிறது; மறு புறம், அந்த நடவடிக்கைகளை நடைமுறைப்படுத்துகையில், அதனிடம் தயக்கமும், காழ்ப்புணர்ச்சியும், கெடுமதியும் காணப்படுகின்றன.

1862ஆம் வருட விசாரணை ஆணையம் சுரங்கத் தொழிலிலும் புதிய ஒழுங்குமுறையைப் பரிந்துரைத்தது; ஏனைய தொழில்களைப் போலல்லாமல் சுரங்கத் தொழிலானது நிலப்பிரபுவின் நலன்களும் முதலாளியின் நலன்களும் மோதாமல் கைகோத்துச் செல்லும் சிறப்பியல்பைக் கொண்டதாகும். இந்த இருதரப்பினரது நலன்களின் பகைமை தொழிற்சாலைச் சட்டங்கள் இயற்றப்படுவதற்கு சாதகமாய் இருந்தது; அதே போது, நலன்களின் இந்தப் பகைமை

---

[723] இந்த ஊழியர் குழுவின் "ஆட்கள்" 2 ஆய்வாளர்கள், 2 துணை ஆய்வாளர்கள், 41 உதவி ஆய்வாளர்கள் ஆகியோர் ஆவர். 1871இல் கூடுதலாக 8 உதவி ஆய்வாளர்கள் நியமிக்கப்பட்டனர். 1871-72இல் இங்கிலாந்திலும், ஸ்காட்லாந்திலும், அயர்லாந்திலும் இச்சட்டங்களை நிர்வகிப்பதற்கான மொத்தச் செலவு, மீறிய எஜமானர்கள் மீது வழக்கு தொடர்ந்ததால் ஏற்பட்ட சட்டச் செலவுகள் உட்பட, £25,347க்கு மேல் போகவில்லை.

இன்மை சுரங்கங்கள் தொடர்பாகச் சட்டமியற்றுவதில் ஏற்பட்ட தாமதங்களுக்கும் ஏமாற்றுகளுக்கும் தக்க காரணமாகிறது.

1840ஆம் வருட விசாரணை ஆணையம் சுரங்கத் தொழில் தொடர்பாக அம்பலப்படுத்திய விவரங்கள் அச்சமும் அதிர்ச்சியும் அளித்தன. இதனால் எழுந்த அவக்கேடு ஐரோப்பா எங்கும் பரவிப் பரபரப்பூட்டியது. இந்நிலையில்தான், மனசாட்சியின் குறுகுறுப்பைச் சமாளிக்க பாராளுமன்றம் 1842ஆம் வருட சுரங்க வேலைச் சட்டத்தை இயற்றியது. 10 வயதுக்குட்பட்ட குழந்தைகளையும், பெண்களையும் சுரங்கங்களில் தரைக்கடியில் வேலை வாங்குவதற்குத் தடை விதிப்பதுடன் இச்சட்டம் நின்று கொண்டது.

பிறகு, இன்னொரு சட்டம், 1860ஆம் வருட சுரங்கங்கள் மேற்பார்வைச் சட்டம், சுரங்கங்களை இதற்கென்று தனியாக நியமிக்கப்படும் பொது அதிகாரிகள் மேற்பார்வையிடுவார்கள் என்றும், 10க்கும் 12க்கும் இடைப்பட்ட வயதுடைய சிறுவர்களிடம் பள்ளிச் சான்றிதழ் இல்லா விட்டால் அல்லது அவர்கள் குறிப்பிட்ட மணி நேரத்துக்குப் பள்ளி செல்லா விட்டால் அவர்களை வேலைக் கமர்த்தக் கூடாது என்றும் விதிக்கிறது. நியமிக்கப்பட்ட ஆய்வாளர்களின் தொகை நகைக்கத்தக்கவாறு சொற்பமாய் இருந்ததாலும், அவர்களுக்கு மிகக் குறைந்த அதிகாரங்களே இருந்ததாலும், நமது ஆய்வின் போக்கில் தெளிவாகக் கூடிய இதர காரணங்களாலும், இந்தச் சட்டம் முழுக்க முழுக்க ஏட்டுச் சட்டமாகவே முடங்கிக் கிடந்தது.

சுரங்கங்கள் பற்றிய மிகச் சமீபத்திய நீலப் புத்தகங்களில் ஒன்று ''சுரங்கங்கள் பற்றிய பொறுக்குக் குழுவின் அறிக்கை ...சாட்சியம், 1866 ஜூலை 23'' என்பது. இந்த அறிக்கை, காமன்ஸ் சபை உறுப்பினர்கள் மத்தியிலிருந்து தெரிந்தெடுக்கப்பட்டு, சாட்சிகளை வரவழைக்கவும் விசாரிக்கவும் அதிகாரம் வழங்கப் பெற்ற பாராளுமன்றக் குழு ஒன்றின் படைப்பாகும். இது ஒரு தடித்த நீள்சுவடிப் புத்தகம். இதில் அறிக்கை என்பது ஐந்தே வரிகளில் முடிந்து விடுகிறது; அது கூறுவதெல்லாம் இதுதான்: குழு சொல்வதற்கு ஒன்றுமில்லையாம்! மேலும் சில சாட்சிகளை விசாரிக்க வேண்டுமாம்!

சாட்சிகளை விசாரிக்கும் முறை ஆங்கிலேய நீதிமன்றங்களில் சாட்சிகளைக் குறுக்கு விசாரணை செய்யும் முறையை நினைவுபடுத்துகிறது; இந்நீதிமன்றங்களில் என்ன நடக்கிறது என்றால், எதிர்பாராத, இரு பொருள் தொனிக்கிற, ஆணவமான, சிக்கல் வாய்ந்த, பொருத்தமற்ற கேள்விகள் கேட்டு, சாட்சியை மிரட்டவும், வியப்பிலாழ்த்தவும், திணறடிக்கவும், அவரிடமிருந்து கறந்த பதில்களுக்கு இட்டுக்கட்டிய அர்த்தம் கொடுக்கவும் வழக்கறிஞர் முயல்கிறார். இந்த விசாரணையில் குழு உறுப்பினர்களே குறுக்கு விசாரணை செய்கிறார்கள்; அவர்களிடையில் சுரங்க உடைமையாளர்கள், சுரங்கப் பலனெடுப்பாளர்கள் [mine exploiters] இரு

சாராரையுமே காணலாம்; சாட்சிகள் பெரும்பாலும் நிலக்கரிச் சுரங்கத் தொழிலாளர்கள் ஆவர். இந்தக் கேலிக்கூத்து மூலதனத்தின் ஆன்மாவைப் படம் பிடிப்பதாய் இருப்பதால் இந்த அறிக்கையிலிருந்து சில பகுதிகளை எடுத்துத் தந்தாக வேண்டும். சுருங்கச் சொல்வதன் நிமித்தம், அவற்றை வகைப்படுத்தியுள்ளேன். ஒவ்வொரு கேள்வியும் அதன் பதிலும் ஆங்கிலேய நீலப் புத்தகங்களில் எண் குறிக்கப்பட்டுள்ளன என்பதையும் சொல்லி வைக்கிறேன்.

1. **10 அல்லது அதற்கு மேற்பட்ட வயதுடைய சிறுவர்களை சுரங்கங்களில் வேலை வாங்குதல்.** — சுரங்கங்களில் வேலையானது போவதும் வருவதும் உட்பட வழக்கமாக 14 அல்லது 15 மணி நேரம், சில சந்தர்ப்பங்களில் காலை 3,4,5 மணியிலிருந்து மாலை 5,6 மணி வரை கூட நீடிக்கிறது (எண் 6, 452, 83). வயது வந்தவர்கள், ஒவ்வொன்றும் எட்டு மணி நேரம் கொண்ட இரண்டு ஷிஃப்டுகளில் வேலை செய்கின்றனர்; ஆனால் செலவின் காரணத்தால் சிறுவர்களுக்கு இந்த ஷிஃப்டு வசதி கிடையாது (எண் 80, 203, 204). வயது குறைந்த சிறுவர்கள், முக்கியமாக, சுரங்கத்தின் பல்வேறு பாகங்களில் காற்றோட்டக் கதவுகளைத் திறப்பதிலும் மூடுவதிலும் வேலை வாங்கப்படுகின்றனர்; வயது கூடிய சிறுவர்கள் நிலக்கரியைச் சுமந்து செல்வது போன்ற கடின வேலைகளில் ஈடுபடுத்தப்படுகின்றனர் (எண் 122, 739, 1747). அவர்கள் இவ்வளவு நீண்ட நேரத்துக்குத் தரைக்கடியில் 18 அல்லது 22 வயது வரை வேலை செய்கின்றனர்; பின் அவர்களுக்கு முறையான சுரங்கத் தொழிலாளி வேலை தரப்படுகிறது (எண் 161). குழந்தைகளும் இளம் வயதினரும் முன் எந்தக் காலத்திலும் இல்லாத படி இப்போது படுமோசமாக நடத்தப்படுகின்றனர், கடுமையாக வேலை வாங்கப்படுகின்றனர் (எண் 1663-1667). 14 வயதுக்குட்பட்ட குழந்தைகளைச் சுரங்கங்களில் வேலை வாங்குவதைத் தடை செய்கிற பாராளுமன்றச் சட்டம் வேண்டுமெனச் சுரங்கத் தொழிலாளர்கள் அநேகமாய் ஏகமனதாகவே கோருகின்றனர். இப்போது ஹஸ்ஸி விவியன் (அவரே ஒரு சுரங்கப் பலனெடுப்பாளர்) *கேட்கிறார்:* ''தொழிலாளியின் கருத்து தொழிலாளியினது குடும்பத்தின் வறுமையைப் பொறுத்ததன்றோ?'' திரு புரூஸ் *கேட்கிறார்:* ''பெற்றவர் காயமடைந்து அல்லது நோய்வாய்ப்பட்டு, அல்லது தந்தை இறந்து போய் தாய் ஒருத்தி மட்டுமே இருந்து, 12க்கும் 14க்கும் இடைப்பட்ட வயதுடைய குழந்தை குடும்பத்தின் நன்மைக்காக நாளொன்றுக்கு 1 ஷில்லிங் 7 பென்னி சம்பாதிப்பதை அந்தத் தாய் தடுப்பது அரிதிலும் அரிதாய் இருக்குமென்று நீங்கள் நினைக்கவில்லையா?... பொது விதியா வகுத்திட வேண்டும்?...12க்கும் 14க்கும் கீழ்ப்பட்ட வயதுடைய குழந்தைகளுக்கு, அவர்களது பெற்றோரின் நிலை என்னவானாலும், வேலை கொடுப்பதைத் தடுக்கிற சட்டத்தைப்

பரிந்துரைக்க நீங்கள் தயாரா?'' ''தயார்'' (எண் 107-110). விவியன்: ''14 வயதுக்குட்பட்ட குழந்தைகளை வேலைக்கமர்த்துவதைத் தடுக்கிற சட்டம் நிறைவேற்றப்படுவதாக வைத்துக் கொண்டால்...குழந்தைகளின் பெற்றோர் இதர துறைகளில், எடுத்துக் காட்டாக பட்டறைத் தொழில் துறையில் தம் குழந்தைகளுக்கு வேலை தேடித் தர முயல்வார்கள் என எதிர்பார்க்கலாம் அல்லவா?'' ''பொதுவாக அப்படி நடக்காதென்றே நினைக்கிறேன்'' (எண் 174). கின்னாய்ர்டு: ''சிறுவர்களில் சிலர் கதவுக் காப்பாளர்கள் அல்லவா?'' ''ஆம்.'' ''கதவைத் திறக்கும் போதும் மூடும் போதும் அநேகமாய் ஒவ்வொரு தடவையும் குளிர்க் காற்று வீறிட்டு அடிக்கிறது அல்லவா?'' ''ஆம், பெரும்பாலும் அடிக்கிறது.'' ''இது மிகவும் சுலபமான வேலையாகத் தோன்றுகிறது; ஆனால் உண்மையில் வேதனைமிக்க வேலை அல்லவா?'' ''எப்படியும் அவன் சிறையில் அடைப்பட்டிருப்பது போல் கட்டுண்டவனாகவே இருக்கிறான்.'' முதலாளி விவியன்: ''சிறுவனுக்கு விளக்கு ஏற்பாடு செய்து கொடுத்தால் அவன் படிக்க முடியாதா?'' ''ஆம், மெழுகு வத்தி இருந்தால் அவன் படிக்க முடியும்...அவன் படிக்கும் போது மாட்டிக் கொண்டால் குற்றச்சாட்டுக்கு ஆளாக நேரிடுமே. அங்கே அவன் இருப்பது வேலை செய்வதற்காக, கடமை ஆற்றுவதற்காக. அதில்தான் அவன் கவனம் செலுத்த வேண்டும்; சுரங்கக் குழியில் இது அனுமதிக்கப்படுமென நான் நினைக்கவில்லை.'' (எண் 139, 141, 143, 158, 160.)

**II. கல்வி.** — ஆலைத் தொழிலாளர்களைப் போலவே, சுரங்கத் தொழிலாளர்களும் தமது குழந்தைகளின் கட்டாயக் கல்விக்கு சட்டம் இயற்ற வேண்டுமென விரும்புகின்றனர். 10, 12 வயதுச் சிறுவர்களை அவர்கள் பள்ளிச் சான்றிதழ் தந்த பிறகே வேலைக்கு எடுக்க வேண்டுமென்று விதிக்கும் 1860ஆம் வருடச் சட்டத்தின் சரத்துகள் வீண் ஜம்பமே என்கிறார்கள். இது பற்றி சாட்சிகளின் விசாரணை வேடிக்கையாகவே உள்ளது; ''அது (இச்சட்டம்) அதிகம் வேண்டியிருப்பது அதிபர்களுக்கெதிராகவா, பெற்றோர்களுக்கெதிராகவா?'' ''இரு சாராருக்கும் எதிராகத்தான் என்பேன்.'' ''யாருக்கு எதிராய் அதிகம் தேவைப்படுகிறது என்று சொல்ல முடியாதா?'' ''முடியவில்லை, இந்தக் கேள்விக்குப் பதில் சொல்வது கடினம்'' (எண் 115, 116). ''சிறுவர்கள் பள்ளி செல்லும் படியான முறையில் வேலை நேரம் இருக்க வேண்டும் என்று அதிபர்கள் நினைப்பதாகத் தெரிகிறதா?'' ''இல்லை, வேலை நேரம் இதற்காக ஒருபோதும் குறைக்கப்படுவதில்லை'' (எண் 137). திரு கின்னாய்ர்டு: ''நிலக்கரிச் சுரங்கத்தில் வேலை செய்வோர் பொதுவாகக் கல்வியறிவை விருத்தி செய்து கொள்வதாகச் சொல்ல முடியுமா, வேலை செய்யத் தொடங்கிய பின்னர் தங்கள் கல்வியறிவை அதிகம் விருத்தி செய்து கொண்டதற்கு ஆள்

உதாரணம் காட்ட முடியுமா? அல்லது அவர்கள் பின்னடைந்து, ஏற்கெனவே தம்மிடம் இருக்கிற கல்வியறிவையும் இழந்து விடுவதாகக் கூறலாமா?'' ''பொதுவாக அவர்களது நிலை மோசமாகிறது. அவர்கள் மேம்படுவதில்லை. கெட்ட பழக்கங்களைக் கற்றுக் கொள்கின்றனர்; குடிப்பது, சூதாடுவது போன்ற பழக்கங்கள் வந்து விடுகின்றன; பாழாகிப் போகின்றனர்'' (எண் 211). ''இரவில் பள்ளி நடத்தி இத்தகைய (கல்வி போதனைக்கான) முயற்சி ஏதும் செய்கிறார்களா?'' ''மிகச் சில நிலக்கரிச் சுரங்கங்களில் இரவுப் பள்ளிகள் நடக்கின்றன. அங்கேயும் கூட ஒரு சில சிறுவர்கள் மட்டுமே அந்தப் பள்ளிகளுக்குச் செல்கின்றனர்; ஆனால் அவர்கள் உடல் ஓய்ந்து போய் அங்கே செல்வதால் பயன் ஏதுமில்லை'' (எண் 454). முதலாளி முடிவுக்கு வருகிறார்: ''ஆக, நீங்கள் கல்வி போதனையை எதிர்க்கிறீர்கள்?'' ''இல்லவே இல்லை, ஆனால்''...(எண் 443). ''ஆனால் அவர்கள் (அதிபர்கள்) அவற்றை (பள்ளிச் சான்றிதழ்களை) கோர வேண்டியது கட்டாயமில்லையா?'' ''சட்டத்தின் படி அவர்களுக்கு அது கட்டாயம்தான்; ஆனால் அதிபர்கள் அவற்றைக் கோருவதாக எனக்குத் தெரியவில்லை.'' ''அப்படியானால் சான்றிதழ்கள் தேவை என்கிற இந்தச் சட்ட விதி நிலக்கரிச் சுரங்கங்களில் பொதுவாக அமல்படுத்தப் படுவதில்லை என்கிறீர்களா?'' ''அமல்படுத்தப்படுவதில்லை'' (எண் 443, 444). ''ஆட்கள் இந்த (கல்வி) பிரச்சினையில் அக்கறை கொண்டிருக்கிறார்களா?'' ''பெரும்பாலானவர்கள் அக்கறை கொண்டிருக்கிறார்கள்'' (எண் 717). ''சட்டம் அமலாக வேண்டுமென அவர்கள் ஆவல் கொண்டுள்ளார்களா?'' ''பெரும்பாலார் ஆவல் கொண்டிருக்கிறார்கள்'' (எண் 718). ''இந்த நாட்டில் நிறைவேற்றப்படுகிற எந்தச் சட்டமும், மக்களே அதைச் செயல்படுத்த உதவினாலன்றி எதார்த்தத்தில் பயனுள்ளதாய் இருக்க முடியுமென நினைக்கிறீர்களா?'' ''சிறுவனை வேலை வாங்குவதைப் பலரும் ஆட்சேபிக்க விரும்பக் கூடும்; ஆனால் ஆட்சேபிக்கிறவர் குறி வைக்கப்பட்டவராகி விடுவாரே'' (எண் 720). ''குறி வைக்கப்படுவது யாரால்?'' ''வேலை கொடுக்கிற அதிபர்களால்'' (எண் 721). ''சட்டத்துக்குக் கீழ்ப்படிகிறவரை அதிபரானவர் குற்றங்காண்பாரென்று நினைக்கிறீர்களா...?'' ''குற்றங்காண்பார்கள் என்றே நம்புகிறேன்'' (எண் 722). ''எழுதவோ படிக்கவோ தெரியாத 10க்கும் 12க்கும் இடைப்பட்ட வயதுடைய சிறுவனை வேலை வாங்குவதை எந்தத் தொழிலாளியாவது ஆட்சேபித்ததாக எப்போதாவது கேள்விப்பட்டதுண்டா?'' ''இதெல்லாம் ஆட்களின் விருப்பத்துக்கேற்ப நடப்பதில்லை'' (எண் 123). ''பாராளுமன்றத் தலையீடு வேண்டுமென்பீர்களா?'' ''நிலக்கரிச் சுரங்கத் தொழிலாளர்களின் குழந்தைகளது கல்வி தொடர்பாய் உருப்படியாக ஏதேனும் செய்ய வேண்டுமானால்,

பாராளுமன்றச் சட்டத்தின் மூலம் அதனைக் கட்டாயமாக்க வேண்டியிருக்கும் என்று நினைக்கிறேன்'' (எண் 1634). ''நீங்கள் அந்தக் கடப்பாட்டை நிலக்கரிச் சுரங்கத் தொழிலாளர்கள் மீது மட்டும் சார்த்துவீர்களா, அல்லது மகா பிரிட்டனின் தொழிலாள மக்கள் அனைவர் மீதும் சார்த்துவீர்களா?'' ''நான் வந்தது நிலக்கரிச் சுரங்கத் தொழிலாளர் சார்பில் பேசுவதற்கே'' (எண் 1636). ''அவர்களை (நிலக்கரிச் சுரங்கச் சிறுவர்களை) ஏனைய சிறுவர்களிடமிருந்து நீங்கள் வேறுபடுத்திப் பார்ப்பது ஏன்?'' ''ஏனென்றால் அவர்கள் விதிக்கு ஒரு விலக்கு என்று நினைக்கிறேன்'' (எண் 1638). ''எந்த விதத்தில்?'' ''பௌதிக நிலைமை என்ற விதத்தில்'' (எண் 1639). ''கல்வி இதர வகைச் சிறுவர்களை விட அவர்களுக்கு அதிகம் மதிப்புக்குரியதாய் ஏன் இருக்க வேண்டும்?'' ''அதிகம் மதிப்புக்குரியதா என்று தெரியாது; ஆனால் சுரங்கங்களில் மிகையாகப் பாடுபடுவதன் மூலம், அங்கு வேலைக்கமர்த்தப்படும் சிறுவர்கள் ஞாயிறுப் பள்ளிகளிலோ பகற் பள்ளிகளிலோ கல்வி பெறுவதற்கு அதிக வாய்ப்பில்லை'' (எண் 1640). ''இவ்விதமான பிரச்சினையை முற்றிலும் தனித்து வைத்துப் பார்க்க இயலாது அல்லவா?'' (எண் 1644). ''போதுமான பள்ளிகள் உள்ளனவா?''—''இல்லை''...(எண் 1646). ''ஒவ்வொரு குழந்தையும் பள்ளி செல்ல வேண்டுமென அரசு கூறுவதாக இருந்தால், குழந்தைகள் செல்வதற்குப் போதிய பள்ளிகள் இருக்குமா?'' ''இருக்காது; ஆனால் சூழ்நிலைகள் உருவாகும் போது பள்ளிகள் முளைத்தெழுமெனக் கருதுகிறேன்'' (எண் 1647). ''அவர்களில் (சிறுவர்கள்) சிலருக்குக் கொஞ்சம் கூட எழுதப் படிக்கத் தெரியாதல்லவா?'' ''பெரும்பாலாருக்குத் தெரியாது. ஆட்களிலேயே பெரும்பாலாருக்குத் தெரியாது'' (எண் 705, 725).

**III. பெண்களை வேலை வாங்குதல்.** — 1842க்குப் பின்னர் மாதர்கள் தரைக்கடியில் வேலை வாங்கப்படுவதில்லை; ஆனால் தரை மட்டத்தில், நிலக்கரி முதலானவற்றை ஏற்றுவதில், தொட்டிகளைக் கால்வாய்க்கும் இரயில் வண்டிகளுக்கும் இழுத்து வருவதில், வகை பிரித்தல் போன்றவற்றில் ஈடுபடுத்தப்படுகின்றனர். அவர்களது தொகை கடந்த மூன்று நான்கு ஆண்டுகளில் கணிசமாக அதிகரித்துள்ளது (எண் 1727). அவர்கள் பெரும்பாலும் சுரங்கத் தொழிலாளர்களின் மனைவிமார்களும், புதல்விகளும், விதவைகளும் ஆவர்; அவர்களது வயது 12 முதல் 50 அல்லது 60 வரை இருக்கும். (எண் 645, 1779.) ''மாதர்களை வேலை வாங்குவது பற்றிச் சுரங்கத் தொழிலாளர்கள் என்ன நினைக்கிறார்கள்?'' ''பொதுவாகக் கண்டிக்கின்றனர் என நினைக்கிறேன்'' (எண் 648). ''கண்டிக்கக் காரணம் என்ன?'' ''பெண்பாலாருக்கு அது இழுக்கெனக் கருதுகிறேன்'' (எண் 649). ''உடுப்பு விசேஷமானதா?'' ''ஆம்...அதை ஆணுக்குரிய உடுப்பு என்றுதான்

சொல்ல வேண்டும்; சில சந்தர்ப்பங்களில் மான உணர்ச்சிக்கே இடமில்லாமல் செய்கிறது என்பேன்.'' ''பெண்கள் புகைக்கிறார் களா?'' ''சிலர் புகைப்பதுண்டு.'' ''இந்த வேலை அசிங்கம் பிடித்த வேலைதானே?'' ''அசிங்கம் பிடித்ததுதான்.'' ''கரியும் அழுக்கும் படிந்து விடுகிறதா?'' ''கீழே சுரங்கங்களில் வேலை செய்பவர் களைப் போலவே கரி பிடித்துப் போகின்றனர்...'' ''குழந்தை வைத்துள்ள தாய்மார்கள் (இப்படிப்பட்டவர்கள் சுரங்கக் கரை களில் ஏராளம்) குழந்தைக்குத் தாம் செய்ய வேண்டிய கடமையைச் செய்ய முடியாது என்பேன்'' (எண் 650-654, 701). ''அந்த விதவைகள் இதே அளவு கூலி (வாரத்துக்கு 8 ஷில்லிங் முதல் 10 ஷில்லிங் வரை) கிடைக்கும் விதத்தில் வேறு எங்காவது வேலை பெற முடியுமென நினைக்கிறீர்களா?'' ''அப்படிச் சொல்ல முடி யாது'' (எண் 709). ''அப்படியும் நீங்கள் இப்பெண்கள் இவ் வழியில் பிழைப்பதைத் தடுக்க வேண்டும் என்றா சொல்கிறீர்கள்?'' (என்னே இந்தக் கல்நெஞ்சம்!) ''அப்படித்தான் சொல்கிறேன்'' (எண் 710). ''மாதர்களை வேலை வாங்குவது பற்றி....வட்டாரத் தில் பொதுவாக என்ன நினைக்கிறார்கள்?'' ''இழுக்கு என்றே நினைக்கிறார்கள். சுரங்கத் தொழிலாளர்களாகிய நாங்கள் பெண் களை மதிப்பவர்கள்; குழிக்கரையில் நின்று அவர்கள் வேலை செய்வதைக் காண சகிக்கவில்லை....வேலையின் ஒரு பகுதி மிகக் கடினமானது; இந்தப் பெண்களில் சிலர் நாளொன்றுக்கு 10 டன் சுமை கூடச் சுமந்திருக்கிறார்கள்'' (எண் 1715, 1717). ''தொழிற் சாலைகளில் வேலை வாங்கப்படும் மாதர்களை விட நிலக்கரிச் சுரங்கப் பகுதிகளில் வேலை வாங்கப்படும் மாதர்கள் ஒழுக்கம் குறைந்தவர்கள் என நினைக்கிறீர்களா?'' ''...கெட்டுப் போனவர் கள் சதவீதம்....தொழிற்சாலைப் பெண்களிடையே இருப்பதை விட சற்று அதிகமாய் இருக்கலாம்'' (எண் 1237). ''தொழிற்சாலை களில் நிலவும் ஒழுக்கநிலை குறித்து உங்களுக்கு திருப்திதானா?'' ''இல்லை'' (எண் 1733). ''தொழிற்சாலைகளிலும் மாதர்கள் வேலை வாங்கப்படுவதை தடை செய்ய விரும்புவீர்களா?'' ''இல்லை, அப்படி விரும்ப மாட்டேன்'' (எண் 1734). ''ஏன் மாட்டீர்கள்?'' ''ஆலைகளில் அவர்களது வேலை அதிகம் கௌரவ மானதென்று நினைக்கிறேன்'' (எண் 1735). ''இருப்பினும் அது அவர்களது ஒழுக்கத்துக்குத் தீங்கிழைப்பதாக நினைக்கிறீர்களா?'' ''குழிக்கரையில் வேலை செய்யும் அளவுக்கு இல்லை; ஆனால் அதை முக்கியமாக சமுதாய அந்தஸ்தின் அடிப்படையில் பார்க் கிறேன்; ஒழுக்கத்தைக் கொண்டு மட்டும் பார்க்கவில்லை. இழுக்கு நிலையானது பெண்கள் மீது ஏற்படுத்தும் சமூகப் பாதிப்பு மிகவும் வருந்தத் தக்கது. இந்த 400 அல்லது 500 பெண்கள் நிலக்கரிச் சுரங்கத் தொழிலாளர்களின் மனைவிமார்கள் ஆகும் போது, அந்த ஆண்கள் இந்த இழுக்கு நிலையால் மிகவும் பாதிக்கப்படுகின்றனர்.

அவர்கள் குடும்பத்தில் கருத்திழந்து, குடிகாரர்கள் ஆவதற்கு இது காரணமாகிறது'' (எண் 1736). ''நிலக்கரிச் சுரங்கங்களில் மாதர்கள் வேலை வாங்கப்படுவதை நிறுத்தி விட்டால், அதே போல் இரும்புத் தொழில்களிலும் நிறுத்த வேண்டாமா?'' ''வேறு எந்தத் தொழில் சார்பாகவும் நான் பேச முடியாது'' (எண் 1737). ''இரும்புத் தொழில்களில் மாதர்கள் வேலை வாங்கப்படுவதன் நிலைமைகளுக்கும், நிலக்கரிச் சுரங்கங்களில் தரை மட்டத்துக்கு மேலே மாதர்கள் வேலை வாங்கப்படுவதன் நிலைமைகளுக்கும் வேறுபாடு இருப்பதாகக் கருதுகிறீர்களா?'' ''இதை நான் ஆராய்ந்ததில்லை'' (எண் 1740). ''இவ்வகைக்கும் அவ்வகைக்கும் இடையே வேறுபாடாக அமைகிற எதையாவது பார்க்க முடிகிறதா?'' ''இது பற்றி எனக்குத் தெரியாது; ஆனால் எனது வட்டாரத்தில் வீட்டுக்கு வீடு சென்று பார்த்துள்ளேன்; நிலைமை படுமோசமாகவே உள்ளது...'' (எண் 1741). ''மாதர்களை வேலை வாங்குவது இழுக்கு உண்டாக்குவதாக இருக்கிற எல்லாத் தொழில்களிலுமே இதைத் தடுக்க வேண்டும் என்பீர்களா?'' ''அது தீங்கு செய்வதாகி விடும் என நினைக்கிறேன்; எப்படியென்றால், ஆங்கிலேயர்களின் சிறந்த உணர்வுகள் யாவும் தாயின் போதனையால் உண்டானவையே....'' (எண் 1750). ''இது விவசாய வேலைகளுக்கும் அதே அளவுக்குப் பொருந்தும் அல்லவா?'' ''ஆம், ஆனால் அங்கே இரண்டு பருவ காலத்துக்குத்தான் வேலை; எங்களுக்கோ நான்கு பருவ காலத்துக்குமே வேலை இருக்கிறது'' (எண் 1751). ''பல சந்தர்ப்பங்களில் அவர்கள் இராப்பகலாய் வேலை செய்கிறார்கள்; முழுக்க நனைந்து, உடலம் தேய்ந்து, நலம் கேடுறுகிறார்கள்.'' ''இது பற்றி நீங்கள் அதிகம் ஆராய்ந்தது இல்லையோ?'' ''போகிற போக்கில் கவனித்துள்ளேன்; குழிக்கரையில் பெண்கள் செய்யும் வேலையின் கேடுகளுக்கு ஒப்பானதை எங்குமே பார்த்ததில்லை.... இது ஆணுக்குரிய...வலுவான ஆணுக்குரிய வேலை'' (எண் 1753, 1793, 1794). ''தம்மை உயர்த்திக் கொள்ளவும், மனிதத் தன்மை வாய்ந்தோராக்கிக் கொள்ளவும் விரும்புகிற சிறந்த வகை சுரங்கத் தொழிலாளர்கள் பெண்களிடமிருந்து உதவி பெறுவதற்கு பதில் அவர்களால் தாழ்த்தப்படுகிறார்கள் என்பதுதானே இப்பிரச்சினை பற்றிய உங்களது அபிப்பிராயம்?'' ''ஆம்'' (எண் 1808). இங்கே முதலாளிமார்களிடமிருந்து இன்னும் சில கபடமான கேள்விகள் எழுந்த பின்னர், விதவைகள், ஏழைக் குடும்பங்கள் முதலானோர் பால் அவர்கள் காட்டும் ''அனுதாபத்தின்'' குட்டு முடிவில் உடைந்து விடுகிறது. ''நிலக்கரி உரிமையாளர் வேலைகளை மேற்பார்வையிடுவதற்காக சில கனவான்களை நியமிக்கிறார்; பாராட்டுப் பெறும் பொருட்டு தங்களால் முடிந்த வரை மிகச் சிக்கனமான முறையில் காரியங்களை நடத்துவது அவர்களது கொள்கை; நாளொன்றுக்கு 2 ஷில்லிங் 6 பென்னி கூலிக்கு ஆண்களை

வேலைக்கமர்த்த வேண்டி இருக்கக் கூடிய இடத்தில் நாளொன்றுக்கு 1 ஷில்லிங் முதல் 1 ஷில்லிங் 6 பென்னி வரையிலான கூலிக்கு இந்தப் பெண்களை வேலைக்கமர்த்துகின்றனர்'' (எண் 1816).

**IV. மரண ஆய்வு அலுவலரின் பிரேத விசாரணைகள். —** ''உங்கள் வட்டத்தில் நடைபெறும் மரண ஆய்வு அலுவலரின் பிரேத விசாரணைகளைப் பொறுத்த வரை, விபத்துகள் நிகழும் போது அந்தப் பிரேத விசாரணைகளின் நடவடிக்கைகளில் தொழிலாளர்களுக்கு நம்பிக்கை இருக்கிறதா?'' ''இல்லை'' (எண் 360). ''ஏன் இல்லை?'' ''முக்கியமாக ஏனென்றால், பொதுவாக இப் பொறுப்புகளுக்குத் தேர்ந்தெடுக்கப்படுகிறவர்கள் சுரங்கங்களைப் பற்றியும் இன்ன பிறவற்றைப் பற்றியும் ஒன்றும் தெரியாதவர்கள்.'' ''சான்றாயங்களுக்குத் தொழிலாளர்கள் வரவழைக்கப்படுவதில்லையா?'' ''எனக்குத் தெரிந்த வரை சாட்சிகளாக அன்றி ஒரு போதும் வரவழைக்கப்படுவதில்லை.'' ''பொதுவாக இந்த சான்றாயங்களில் அமர்வோர் யார்?'' ''பொதுவாக அண்டைப்புறத்து வியாபாரிகள்....அவர்களது...தொழிலதிபர்களின் செல்வாக்குக்கு ஆட்படக் கூடியவர்கள். அவர்களது நிலைமைகள் அப்படி.... பொதுவாக அவர்கள் ஒன்றும் தெரியாதவர்கள், தம் முன் அழைக்கப்படும் சாட்சிகளையும், பயன்படுத்தப்படும் பதங்கள் முதலானவற்றையும் புரிந்து கொள்ள இயலாதவர்கள்.'' ''சான்றாயம் சுரங்கத் தொழிலில் வேலை செய்வோரைக் கொண்டதாக இருப்பதை விரும்புவீர்களா?'' ''விரும்பக் கூடியதுதான்....தீர்ப்பு பொதுவாக சாட்சியத்துக்கேற்ப இல்லை என்று அவர்கள் (தொழிலாளர்கள்) நினைக்கிறார்கள்.'' (எண் 361, 364, 366, 368, 371, 375). ''சான்றாயம் கூட்டப்படுவதன் முக்கிய நோக்கம் பாரபட்சமின்றி விசாரிக்க வேண்டும் என்பது அல்லவா?'' ''ஆம், அப்படித்தான் நினைக்கிறேன்.'' ''சான்றாயங்கள் கணிசமான அளவுக்குத் தொழிலாளர்களால் ஆனவையாக இருந்தால் பாரபட்சமற்றவையாக இருக்குமென்று நினைக்கிறீர்களா?'' ''பாரபட்சமாகச் செயல்படுவதற்கு தொழிலாளர்கள் உள்நோக்கம் கொண்டிருக்க முடியுமென நான் நினைக்கவில்லை....சுரங்க வேலை முறைகள் ஏனையோரைக் காட்டிலும் இவர்களுக்கு நிச்சயம் நன்றாகத் தெரிந்திருக்கும்.'' ''நியாயமின்றி கடுமையான தீர்ப்புகளை அளிக்கும் போக்கு தொழிலாளர்களிடம் இருக்குமென்று நீங்கள் நினைக்கவில்லையா?'' ''நினைக்கவில்லை'' (எண் 378, 379, 380).

**V. மோசடி எடைகளும் அளவைகளும். —** தொழிலாளர்க்ள், இரு வாரம் ஒரு முறை என்பதற்குப் பதிலாக வாரம் ஒரு முறையும், தொட்டிகளின் கன பரிமாணத்துக்குப் பதிலாக எடையைக் கொண்டும் ஊதியம் தர வேண்டுமெனக் கோருகின்றனர்; மேலும் அவர்கள் மோசடி எடைகள் உபயோகிப்பதற்கு எதிராகப் பாதுகாப்பு கோருகின்றனர் (எண் 1071). ''வஞ்சகமாய்த் தொட்டிகளின் பருமன் அதிகமாக்கப்பட்டால், 14 நாள் அறிவிப்பு கொடுத்து வேலையை

விட்டு நின்று கொள்ளலாமே?'' ''ஆனால் அவர் இன்னொரு இடத்துக்குச் சென்றால், அங்கேயும் இதே காரியம் நடந்து கொண்டிருக்கிறது'' (எண் 1071). ''ஆனால் தவறு இழைக்கப்பட்டிருக்கும் இடத்தை விட்டு அவர் வெளியேற முடியுமே?'' ''அது பொதுப் படையானது; அவர் செல்லும் இடமெல்லாம் அதற்குக் கீழ்ப்படிய வேண்டியுள்ளது'' (எண் 1072). ''14 நாள் அறிவிப்பு கொடுப்பதன் மூலம் ஒருவர் வெளியேறலாமா?'' ''வெளியேறலாம்'' (எண் 1073). இருந்தும் அவர்களுக்குத் திருப்தியில்லை!

**VI. சுரங்கங்கள் மேற்பார்வை.**— தொழிலாளர்கள் அனுபவிப்பது வெடி விபத்துகளால் நேரிடும் இழப்புகளை மட்டுமல்ல (எண் 234 முதலானவை). ''நிலக்கரிச் சுரங்கங்களில் காற்றோட்ட வசதி போதாமை பற்றி எங்களவர்கள் பெரிதும் புகார் கூறினர்....பொதுவாகக் காற்றோட்ட வசதி படுமோசம்; ஆட்கள் மூச்சுவிட முடியவில்லை. தொடர்ந்து இந்த வேலையைச் செய்த பின் அவர்கள் வேறு எந்த வேலைக்கும் லாயக்கற்றவர்களாகி விடுகின்றனர்; நான் வேலை செய்கிற அதே சுரங்கப் பகுதியில் பலர் வேலையை விட்டு வெளியேற வேண்டிய கட்டாயத்துக்காளாயினர்....வெடிவாயு இல்லாத இடத்தில் காற்றோட்ட வசதி மோசமாக இருப்பதால் சிலர் வாரக்கணக்கில் வேலையின்றி இருக்கிறார்கள்....பொதுவாக முக்கியப் பாதைகளில் காற்று வசதி அதிகமாகவே இருக்கிறது; ஆனால் ஆட்கள் வேலை செய்யும் இடங்களுக்கு இந்தக் காற்றைக் கொண்டுசெல்ல தக்கபடி முயற்சி செய்யப்படுவதில்லை.'' ''ஆய்வாளருக்கு விண்ணப்பிக்காமலிருக்கக் காரணம் என்ன?'' ''உண்மையைச் சொல்வதானால், பலரும் விண்ணப்பிக்க அஞ்சினர். ஆய்வாளருக்கு விண்ணப்பித்தவர்கள் என்று பலியிடப்பட்டு, வேலையிலிருந்து தள்ளப்பட்டவர்கள் பலருண்டு.'' ''ஏன், புகார் செய்கிறவர் குறி வைக்கப்பட்டவராகி விடுகிறாரா?'' ''ஆம்.'' ''இன்னொரு சுரங்கத்தில் அவருக்கு வேலை கிடைப்பது கடினமாகி விடுகிறதா?'' ''ஆம்.'' ''உங்கள் பகுதியிலிருக்கும் சுரங்கங்கள் சட்டத்தின் விதிமுறைகளைக் கடைப்பிடிக்குமாறு உறுதி செய்யத்தக்க விதத்தில் மேற்பார்வையிடப்படுவதாக நினைக்கிறீர்களா?'' ''இல்லை, மேற்பார்வை என்பதே கிடையாது....ஆய்வாளர் ஒரு தடவைதான் சுரங்கக் குழிக்குள் வந்திருக்கிறார்; இது நடந்து ஏழாண்டாகிறது....என் வட்டத்தில் போதிய ஆய்வாளர்கள் இல்லை. 130க்கும் அதிகமான நிலக்கரிச் சுரங்கங்களைப் பார்வையிடுவதற்கு 70 வயதைத் தாண்டி விட்ட கிழவர் ஒருவர்தான் இருக்கிறார்.'' ''உதவி ஆய்வாளர்கள் என்ற பிரிவு இருக்க வேண்டுமென விரும்புகிறீர்களா?'' ''ஆம்'' (எண் 234, 241, 251, 254, 274, 275, 554, 276, 293). ''ஆனால் தொழிலாளர்களிடமிருந்து தகவல் இல்லாமல் ஆய்வாளர்களே நீங்கள் விரும்புகிற எல்லாவற்றையும் செய்ய வேண்டுமானால், அதற்கு

அவசியமான ஆய்வாளர் பட்டாளம் ஒன்றைப் பராமரிக்க அரசினரால் முடியும் என்று நினைக்கிறீர்களா?'' ''இல்லை, முடியாத காரியம் என்றே சொல்ல வேண்டும்....'' ''ஆய்வாளர்கள் இன்னும் அடிக்கடி வருவது விரும்பத் தக்கதாக இருக்குமா?''. ''ஆம், கூப்பிட்டனுப்பாமலே வர வேண்டும்'' (எண் 280, 277). ''இந்த ஆய்வாளர்களை இவ்வளவு அடிக்கடி நிலக்கரிச் சுரங்கங்களைப் பரிசோதிக்கச் செய்வதன் விளைவு முறையான காற்றோட்ட வசதி செய்து தரும் பொறுப்பை (!) சுரங்கங்களின் உடைமையாளர்களிடமிருந்து அரசாங்க அதிகாரிகளுக்கு மாற்றுவதாக இருக்கும் என்று நீங்கள் நினைக்கவில்லையா?'' ''அப்படி நினைக்கவில்லை; ஏற்கெனவே இருந்து வரும் சட்டங்களை அமல் படுத்துவதை அவர்கள் தமது பணியாகக் கொள்ள வேண்டுமென நினைக்கிறேன்'' (எண் 285). ''உதவி ஆய்வாளர்கள் என்று நீங்கள் சொல்லும் போது இப்போதிருக்கும் ஆய்வாளர்களை விடத் தாழ்ந்தவர்களாக் குறைந்த சம்பளம் பெறுவோரைச் சொல்கிறீர்களா?'' ''உயர்ந்தவர்களாக அமர்த்துவீர்களானால், தாழ்ந்தவர்களாக இருக்க வேண்டுமெனச் சொல்ல மாட்டோம்'' (எண் 294). ''ஆய்வாளர்கள் இன்னும் அதிகமாக வேண்டும் என்கிறீர்களா, அல்லது தாழ்ந்த வகையினர் ஆய்வாளர்களாக வேண்டும் என்கிறீர்களா?'' ''அங்குமிங்கும் சென்று அலசி ஆராய்கிறவராய், எல்லாம் சரியாக நடக்குமாறு பார்த்துக் கொள்கிறவராய், பயந்து சாகாதவராய் இருக்க வேண்டும்'' (எண் 295). ''தாழ்ந்த வகை ஆய்வாளர்கள் நியமிக்கப்பட வேண்டுமென்ற உங்கள் விருப்பம் நிறைவேறுமானால், தேர்ச்சியின்மை போன்றவற்றால் அபாயமேதும் இருக்காது என நினைக்கிறீர்களா?'' ''அப்படி நினைக்கவில்லை, அரசாங்கம் அதைக் கவனித்துக் கொள்ளும், அந்தப் பதவியில் சரியான ஆட்களை அமர்த்தும் என்று நினைக்கிறேன்'' (எண் 297). முடிவில் இவ்விதமான விசாரணை குழுவின் தலைவருக்கே அதிகப்படியாகி விடுகிறது. அவர் குறுக்கிட்டுச் சொல்கிறார்: ''சுரங்கத்தின் சகல விவரங்களையும் ஆராய்ந்து பார்க்கக் கூடிய, மூலை முடுக்கெல்லாம் செல்லக் கூடிய, உண்மை விவரங்களைப் பரிசீலிக்கக் கூடிய வகையினராய் இருக்க வேண்டுமென விரும்புகிறீர்கள்....அவர்கள் தலைமை ஆய்வாளருக்கு எடுத்துரைப்பார்கள்; அவர்கள் கூறியிருக்கும் உண்மைகளில் தன் விஞ்ஞான அறிவைச் செலுத்தி பிற்பாடு அவர் முடிவெடுப்பார், அப்படித் தானே?'' (எண் 298, 299). ''இந்தப் பழைய பணியிடங்கள் எல்லாம் காற்றோட்டமுள்ளவை ஆக்கப்படுவதற்குப் பெருஞ் செலவு ஆகாதா?'' ''ஆகும்தான், ஆனால் உயிர் பாதுகாக்கப்படும்'' (எண் 531). சுரங்கத் தொழிலாளி ஒருவர் 1860ஆம் வருடச் சட்டத்தின் 17ஆவது பிரிவை ஆட்சேபிக்கிறார்; அவர் சொல்கிறார்: ''இந்த நேரத்தில், சுரங்க ஆய்வாளர் சுரங்கத்தின்

ஒரு பகுதியை வேலை செய்ய லாயக்கற்றது எனக் கண்டால், அவர் சுரங்க உடைமையாளரிடமும் உள்துறைச் செயலரிடமும் அதைத் தெரிவிக்க வேண்டியுள்ளது. அவ்வாறு செய்த பின்னர், இதைக் கவனிக்க சுரங்க உடைமையாளருக்கு 20 நாள் அவகாசம் தரப் படுகிறது; 20 நாள் முடிவில், சுரங்கத்தில் மாற்றமேதும் செய்ய மறுக்கும் அதிகாரம் அவருக்கு உண்டு; ஆனால், மறுக்கும் போதே, சுரங்க உடைமையாளர் ஐந்து பொறியாளர்களின் பெயரைக் குறிப்பிட்டு உள்துறைச் செயலருக்கு எழுதுகிறார். உள்துறைச் செயலர் சுரங்க உடைமையாளரே குறிப்பிடும் அந்த ஐந்து பொறி யாளர்களில் ஒருவரை நடுவராக—நடுவராக என்றே நினைக் கிறேன் — நியமிக்கிறார்; அல்லது அவர்களில் சிலரை நடுவர்களாக நியமிக்கிறார்; இவ்வாறு, சுரங்க உடைமையாளர் காரியாம்சத்தில் தானே தன் நடுவரை நியமித்துக் கொள்கிறார் என்றுதான் நாங்கள் சொல்வோம்'' (எண் 581). முதலாளித்துவ விசாரணையாளர், அவரே ஒரு சுரங்க உடைமையாளர், கேட்கிறார்: ''ஆனால்...இது ஊகத்தின் பேரிலான ஆட்சேபமா?'' (எண்586). ''அப்படி யானால் சுரங்கப் பொறியாளர்களின் நேர்மை குறித்து மோசமாக நினைக்கிறீர்களா?'' ''நிச்சயம் இது நியாயமற்றது, பாரபட்ச மானது'' (எண் 588). ''சுரங்கப் பொறியாளர்கள் ஒரு விதமான பொது நலப் பார்வை உடையவர்கள் அல்லவா? அவர்கள் பார பட்சமாக முடிவெடுக்கக் கூடியவர்கள் என்றா அஞ்சுகிறீர்கள்?'' ''அவர்களின் தனிப்பட்ட பண்பு தொடர்பான இந்தக் கேள்விக்கு நான் பதில் சொல்ல விரும்பவில்லை. பல சந்தர்ப்பங்களில் அவர்கள் உள்ளபடியே மிகவும் பாரபட்சமாக நடந்து கொள்வார் கள் என்றும், மனித உயிர்களுக்கு ஆபத்து ஏற்படலாம் என்னும் போது இந்த அதிகாரம் அவர்களது கையில் இருக்கக் கூடாது என்றும் கருதுகிறேன்'' (எண் 589). இதே முதலாளி பின்வருமாறு கேள்வி கேட்கவும் வெட்கப்படவில்லை: ''வெடிப்பு விபத்தால் சுரங்க உடைமையாளருக்கும் இழப்பு ஏற்படுகிறது அல்லவா?'' இறுதியாக, ''லங்காஷயரிலுள்ள தொழிலாளர்களாகிய நீங்கள் அரசாங்கத்தை உதவிக்கு அழைக்காமல், உங்கள் நலன்களை நீங்களே கவனித்துக் கொள்ள முடியாதா?'' ''முடியாது'' (எண் 1042).

1865ஆம் ஆண்டில் மகா பிரிட்டனில் 3,217 நிலக்கரிச் சுரங்கங்கள் இருந்தன; 12 ஆய்வாளர்கள் இருந்தனர். அவர்களது நேரம் முழுவதையும் விழுங்கி விடுகிற அலுவலக வேலையை ஒதுக்கி விட்டுப் பார்த்தாலும், ஓர் ஆய்வாளர் ஒவ்வொரு சுரங்கத் துக்கும் பத்தாண்டுக்கு ஒரு தடவைதான் போய் வர முடியும் என்று யார்க்ஷயரைச் சேர்ந்த சுரங்க உடைமையாளர் ஒருவரே கணக்கிடு கிறார் (டைம்ஸ், 1867 ஜனவரி 26). கடந்த பத்தாண்டில் வெடிப்பு விபத்துகளின் அளவு, தொகை இரண்டுமே மேலும்

மேலும் அதிகமாகியுள்ளன (சில நேரம் 200-300 பேர் உயிரிழப்பு) என்பதில் வியப்பில்லை. ''சுதந்தர'' முதலாளித்துவப் பொருளுற்பத்தியின் லட்சணம் இது!

1872இல் இயற்றப்பட்ட மிகவும் குறைபாடுள்ள சட்டமே சுரங்கங்களில் வேலை செய்யும் குழந்தைகளின் உழைப்பு நேரத்தை முறைப்படுத்தும் முதலாவது சட்டமாகும். இது பலனெடுப்பாளரையும் உடைமையாளரையும் விபத்துகள் என்பவற்றுக்குப் பொறுப்பாளிகளாக்குகிறது.

பயிர்த் தொழிலில் குழந்தைகளையும் இளம் வயதினரையும், மாதர்களையும் வேலை வாங்குவது பற்றி விசாரித்தறிய 1867இல் நியமிக்கப்பட்ட முடியரசு ஆணையம் மிக முக்கியமான அறிக்கைகள் சிலவற்றைப் பிரசுரித்திருக்கிறது. தொழிற்சாலைச் சட்டங்களின் கோட்பாடுகளை, திருத்தியமைக்கப்பட்ட வடிவத்தில்தான் என்றாலும், பயிர்த் தொழிலில் கடைப்பிடிக்க பல முயற்சிகள் செய்யப்பட்டுள்ளன; ஆனால் இது வரை படுதோல்வியே ஏற்பட்டுள்ளது. நான் இங்கே கவனத்துக்குக் கொண்டுவர விரும்புவதெல்லாம், அந்தக் கோட்பாடுகளைப் பொதுவாக எங்கும் கடைப்பிடிப்பது என்ற தடுத்து நிறுத்த முடியாத ஒரு போக்கு நிலவுகிறது என்பதையே.

உள்ளம், உடல் இரண்டிலுமே தொழிலாளி வர்க்கத்துக்குப் பாதுகாப்பு அளிக்கும் பொருட்டு அனைத்துத் தொழில்களுக்கும் தொழிற்சாலைச் சட்ட நெறியைப் பொதுவாக விரிவாக்குவது தவிர்க்க முடியாததாகி விட்டது என்றால், மறு புறம், ஏற்கெனவே சுட்டிக்காட்டியது போல, பொதுவாக அந்த விரிவாக்கம் ஏராளமான தனித்த சிறு தொழில்கள் பெருவீதத்தில் நடத்தப்படும் ஒரு சில ஒன்றிணைந்த தொழில்களாக மாற்றமடைவதைத் துரிதப்படுத்துகிறது; எனவே, அது மூலதனக் குவிப்பையும் ஆலைத் தொழிலின் பிரத்தியேக முதன்மையையும் முடுக்கி விரைவுபடுத்துகிறது. புராதன வடிவங்கள், இடைநிலை வடிவங்கள் — இவற்றின் பின்னால் மூலதனத்தின் ஆதிக்கம் இன்னமும் ஓரளவுக்கு மறைந்தே செயல்படுகிறது — ஆகிய இரண்டையுமே அது அழித்திடுகிறது; அவற்றுக்கு பதிலாய் மூலதனத்தின் வெளிப்படையான நேரடி ஆதிக்கத்தை ஏற்படுத்துகிறது; ஆனால் இந்த ஆதிக்கத்துக்குள்ள நேரடி எதிர்ப்பையும் இதன் மூலம் பொதுவானதாக்குகிறது. ஒவ்வொரு தனிப்பட்ட பட்டறையிலும், சீராக்கத்தையும் முறைப்பாட்டையும் ஒழுங்கையும் சிக்கனத்தையும் அது செயலாக்குகிறது; அதேபோது, வேலை-நாளை வரையறுப்பதும் ஒழுங்குமுறைக்குள்ளாக்குவதும் தொழில் நுட்ப மேம்பாட்டுக்கு அளிக்கிற மிகப் பெரிய தூண்டுதலின் மூலம், மொத்தத்தில் முதலாளித்துவப் பொருளுற்பத்திக்குரிய அராஜகத்தையும் உற்பாதங்களையும், உழைப்பின் மும்முரத்தையும், தொழிலாளியோடு இயந்திர

சாதனத்தின் போட்டியையும் அது அதிகமாக்குகிறது. சின்னஞ்சிறு தொழில்களையும் வீட்டுத் தொழில்களையும் அழிப்பதன் மூலம், ''வேண்டாத உபரி-மக்கள் தொகையின்'' கடைசிப் புகலிடத்தையும், அத்துடன் சமூக இயங்கமைப்பு முழுமைக்கும் பாதுகாப்பாக எஞ்சி நிற்கும் ஒரே வழியையும் அழித்திடுகிறது. பொருளாயத நிலைமைகளை முதிரச் செய்வதன் மூலமும், உற்பத்தி நிகழ்முறைகளை சமுதாய அளவில் ஒன்றிணைப்பதன் மூலமும், முதலாளித்துவப் பொருளுற்பத்தி வடிவத்தின் முரண்பாடுகளையும் பகைமைகளையும் முற்றச் செய்கிறது; இவ்வழியில், ஒரு புதிய சமுதாயம் உண்டாவதற்கான கூறுகளோடு கூடவே; பழைய சமுதாயத்திற்கு வேட்டு வைப்பதற்கான சக்திகளையும் வழங்குகிறது.[724]

---

[724] கூட்டுறவுத் தொழிற்சாலைகள், பண்டகசாலைகளின் தந்தையும், முன்பு குறிப்பிட்டது போல், மாற்றத்தின் இந்தத் தனித்த கூறுகளது செல்வாக்கு தொடர்பாக தம்மைப் பின்பற்றியவர்களின் பிரமைகளை எவ்விதத்திலும் பகிர்ந்து கொள்ளாத வருமான ராபர்ட் ஓவன், நடைமுறையில் ஆலைத் தொழிலைத் தன் பரிசோதனைகளுக்குரிய ஒரே அடித்தளமாகக் கொண்டது மட்டுமின்றி, தத்துவத்தில் சமூகப் புரட்சியின் தொடக்க நிலையாகவும் அறிவித்தார். லேய்டன் பல்கலைக் கழகத்தில் அரசியல் பொருளாதாரப் பேராசிரியரான திரு விஸ்ஸரிங், கொச்சைப் பொருளாதாரத்தின் சப்பென்ற வாதங்கள் அனைத்தையும் மறுபதிப்பு செய்கிற ''Handboek van Practische Staatshuishoudkunde, *1860-62*'' என்ற தமது நூலில் ஆலைத் தொழிலுக்கெதிராகக் கைத்தொழில்களை வலுவாக ஆதரிக்கும் போது, இது குறித்து அவர் ஐயுறுவதாகக் கருத வேண்டியுள்ளது. [4ஆம் ஜெர்மன் பதிப்பில் எங்கெல்ஸ் குறிப்பு. — பரஸ்பரம் மோதிக் கொள்கிற தொழிற்சாலைச் சட்டங்கள், தொழிற்சாலைச் சட்டங்கள் விரிவாக்கச் சட்டம், பட்டறைகள் சட்டம் ஆகியவற்றைக் கொண்டு ஆங்கிலேயச் சட்ட நெறி உருவாக்கிய ''முரண்பாடான சட்டங்களின் படுமோசமான குழப்படி'' (பக்கம் 407) இறுதியில் சகிக்கவொண்ணாததாயிற்று. இவ்வாறு இது பற்றிய சட்டமன்றச் சட்டங்கள் எல்லாம் 1878 தொழிற்சாலை மற்றும் பட்டறைச் சட்டத்தில் தொகுக்கப்பட்டன. இப்போது நடைமுறையிலுள்ள இந்த ஆங்கிலேயத் தொழில் துறைச் சட்டம் குறித்து இங்கே விவரமாக விமர்சிப்பதற்கில்லைதான். பின்வரும் குறிப்புகளே போதும். இச்சட்டத்தில் அடங்கியிருப்பவை:

1) ஜவுளி ஆலைகள். இங்கே யாவும் இருந்த படியே இருந்து வருகின்றன: 10 வயதுக்கு மேற்பட்ட குழந்தைகள் நாள்தோறும் 5½ மணி நேரமோ, அல்லது சனிக் கிழமையை ஓய்வு நாளாகக் கொண்டு 6 மணி நேரமோ வேலை செய்யலாம்; இளம் வயதினரும் மாதர்களும் 5 நாட்களில் 10 மணி நேரமும், சனிக் கிழமையில் அதிகபட்சம் 6½ மணி நேரமும் வேலை செய்யலாம்.

2) ஜவுளி அல்லாத தொழிற்சாலைகள். இங்கே விதிமுறைகள் எண் 1இன் விதிமுறைகளுக்கு நெருங்கியதாக்கப்படுகின்றன; ஆனால் பல்வேறு விதிவிலக்குகள் இன்னமும் உள்ளன; இவை முதலாளிகளுக்குச் சாதகமானவை, குறிப்பிட்ட சில சந்தர்ப்பங்களில் உள்துறைச் செயலரின் தனி அனுமதி மூலம் இவற்றை விரிவாக்கலாம்.

3) ஏறக்குறைய முந்தைய சட்டத்தில் போன்றே விளக்கப்பட்டுள்ள பட்டறைகள்; அங்கே வேலை செய்யும் குழந்தைகள், இளம் தொழிலாளர்கள், மாதர்கள் ஆகியோரைப் பொறுத்த வரை, பட்டறைகள் ஜவுளியல்லாத தொழிற்சாலைகளுடன் கிட்டத்தட்ட ஒரே தரத்திலுள்ளன; ஆனாலும் நிலைமைகள் நுணுக்க விவரங்களில் முன்னிலும் வசதியாயுள்ளன.

4) குழந்தைகளோ இளம் தொழிலாளர்களோ வேலை செய்யாமல், இருபாலாருமான 18 வயதுக்கு மேற்பட்டோர் மட்டுமே வேலை செய்யக் கூடிய பட்டறைகள்; இந்த வகை முன்னிலும் வசதியான நிலைமைகளைக் கொண்டுள்ளது.

## பிரிவு 10. — நவீனத் தொழில் துறையும் விவசாயமும்

விவசாயத்திலும், விவசாய உற்பத்தியாளர்களின் சமூக உறவுகளிலும் நவீனத் தொழில் துறை தோற்றுவித்த புரட்சியைப் பின்னர் பரிசீலிப்போம். முன்கூட்டிச் சொல்லும் வகையில் சில விளைவுகளை இந்த இடத்தில் குறிப்பிடலாம். இயந்திர சாதனத்தின் உபயோகத்தால், ஆலைத் தொழிலாளிக்கு ஏற்படுவது போல் விவசாயத்தில் அவ்வளவாக உடலுக்குத் தீங்கு விளைவதில்லை; ஆனால் உழைப்பாளர்களை நீக்கி விட்டு அவர்களுக்குப் பதிலியாவதில் இயந்திர சாதனத்தின் செயல் அதிகம் தீவிரமாய் உள்ளது, குறைந்த எதிர்ப்பையே சந்திக்கிறது; இதைப் பின்னர் விவரமாகப் பார்ப்போம். உதாரணமாக, கேம்பிரிட்ஜ், சஃபோல்க் ஆகிய மாவட்டங்களில் சாகுபடி செய்யப்படும் நிலத்தின் பரப்பு கடந்த 20 ஆண்டுகளுக்குள் (1868 வரைக்கும்) மிக அதிகமாய்ப் பெருகியிருக்க, அதே காலத்தில் கிராமப்புற மக்கள் தொகையோ ஒப்பளவில் மட்டுமின்றி அறுதியாகவும் சுருங்கியுள்ளது. அமெரிக்க ஐக்கிய நாட்டில், விவசாய இயந்திரங்கள் உழைப்பாளிகளுக்கு பதிலியாவது இன்று வரை சொல்லளவில் மட்டுமே; அதாவது, சாகுபடியாளர் [farmer] இன்னும் பெரிய நிலப் பரப்பைச் சாகுபடி செய்ய அவை வழிசெய்கின்றனவே அல்லாமல் வேலை செய்து வரும் உழைப்பாளர்களை உள்ளபடியே வெளியேற்றுவதில்லை. 1861இல் இங்கிலாந்திலும் வேல்சிலும் விவசாய இயந்திரங்களை உற்பத்தி செய்வதில் ஈடுபட்டிருந்தவர்களின் தொகை 1,034 ஆக இருக்க, விவசாய இயந்திரங்களையும் நீராவி எஞ்சின்களையும் பயன்படுத்தி வேலை செய்த விவசாயத் தொழிலாளர்களின் தொகை 1,205ஐத் தாண்டவில்லை.

நவீனத் தொழில் துறையானது பழைய சமுதாயத்தின் அரணாகிய விவசாயியை இல்லாதொழித்து அவருக்குப் பதிலாய்

---

5) குடும்பத்தினர் மட்டும் அவர்களது குடியிருப்பில் வேலை செய்கிற வீட்டுப் பட்டறைகள்: முன்னிலும் நெளிவுசுளிவான விதிமுறைகள்; அதே போது வசிப்பிடமாகவும் பயன்படுத்தப்படாத அறைகளில் மட்டுமே அமைச்சகம் அல்லது நீதிமன்றத்தின் தனி அனுமதியில்லாமல் ஆய்வாளர் நுழையலாம் என்ற கட்டுப்பாடு; கடைசியாகக் குடும்ப உறுப்பினர்கள் செய்யும் சருகுப் பின்னல், சித்திரப் பின்னல், கையுறை தயாரித்தல் ஆகியவற்றுக்குத் தங்குதடையில்லாத சுதந்தரம்; பல குறைபாடுகள் இருப்பினும், இந்தச் சட்டம் — 1877 மார்ச் 23 தேதிய ஸ்விட்சர்லாந்து சமஷ்டித் தொழிற்சாலைச் சட்டத்தோடு கூட — இத்துறையில் நாளது வரை இயற்றப்பட்டுள்ள சட்டங்களிலேயே மிகச் சிறந்தது. மேற்குறிப்பிட்ட ஸ்விட்சர்லாந்து சமஷ்டிச் சட்டத்தோடு அதனை ஒப்புநோக்குவது குறிப்பிடத்தக்கவாறு பயன்மிக்கதாகும். ஏனென்றால் அது இவ்விரு சட்ட நெறிகளின் நிறைகுறைகளை — சந்தர்ப்பம் கோரும் போது தலையிடுகிற ஆங்கிலேய "வரலாற்று" முறை, பிரெஞ்சுப் புரட்சியின் மரபுகள் மீது கட்டப்பட்டிருப்பதும், அதிகமாகப் பொதுமைப்படுத்துவதுமான கண்டத்து முறை இவற்றின் நிறைகுறைகளை — தெள்ளத் தெளிவாக்குகிறது. ஆய்வு அலுவலர்கள் போதாமையால், ஆங்கிலேயச் சட்டம் பட்டறைகளைப் பொறுத்த வரை இன்னமும் செயலற்ற ஏட்டுச் சட்டமாகவே பெரும்பாலும் இருந்து வருவது வருந்தற்பாலது.]

கூலித் தொழிலாளியைக் கொண்டுவருகிறதென்பதால், வேறு துறைகளைக் காட்டிலும் விவசாயத் துறையில் அதிகம் புரட்சிகரமான விளைவை உண்டாக்குகிறது. இவ்வாறு, சமூக மாற்றங்களுக்கான விருப்பமும், வர்க்கப் பகைமைகளும் நகரங்களிலுள்ள அதே அளவுக்கு கிராமப்புறத்திலும் வளர்க்கப்படுகின்றன. அறிவின் பாற்படாத, பழம் பாணியிலான விவசாய முறைகளுக்கு பதிலாய் விஞ்ஞான வழிப்பட்ட முறைகள் புகுத்தப்படுகின்றன. உழவையும் தொழிலையும் அவற்றின் பிள்ளைப் பிராயத்தில் இணைத்துக் கட்டியிருந்த பழைய பந்தத்தை முதலாளித்துவப் பொருளுற்பத்தி அறவே துண்டித்து விடுகிறது. ஆனால் அதே போது, இன்னும் உயர்ந்த வருங்காலச் சேர்க்கைக்கான பொருளாயத நிலைமைகளை, அதாவது தற்காலிகமாய்ப் பிரிந்திருந்த போது உழவு, தொழில் இவை ஒவ்வொன்றும் பெற்றுக் கொண்ட மேலும் செம்மையான வடிவங்களின் அடிப்படையில் அவையிரண்டும் ஒரு சேர இணைவதற்கான பொருளாயத நிலைமைகளை அது தோற்றுவிக்கிறது. பெரும் கேந்திரங்களில் மக்களை ஒன்றுதிரட்டுவதன் மூலமும், நகர மக்கள் பெரும்பான்மையாய் இருக்கும் நிலையை மேலும் மேலும் அதிகமாக்குவதன் மூலமும், முதலாளித்துவப் பொருளுற்பத்தி ஒரு புறம் சமுதாயத்தின் வரலாற்று இயக்கு விசையை ஒன்றுகுவியச் செய்கிறது; மறு புறம், மனிதனுக்கும் மண்ணுக்குமிடையில் நடைபெறும் பொருளின் சுற்றோட்டத்தைக் குலைக்கிறது; அதாவது உணவு, உடையின் வடிவில் மனிதனால் நுகரப்பட்ட மண்ணின் கூறுகள் மண்ணுக்குத் திரும்பிச் செல்வதைத் தடுக்கிறது; ஆகவே மண்வளம் நிலைத்து நீடிப்பதற்கு அவசியமான நிலைமைகளைக் கெடுக்கிறது. இந்தச் செயலின் மூலம் அது நகரத்திலிருக்கும் உழைப்பாளியின் உடல் ஆரோக்கியத்தை அழித்து, அதே போது கிராமத்திலிருக்கும் உழைப்பாளியின் அறிவுலக வாழ்க்கையையும் பாழ்படுத்துகிறது.[725] ஆனால் அது பொருளின் இந்தச் சுற்றோட்டம் தொடர்ந்து நடைபெற இயற்கையாகவே வளர்கிற நிலைமைகளைக் கெடுக்கும் அதே போது, இந்தச் சுற்றோட்டத்தை ஓர் அமைப்பாக, சமூகப் பொருளுற்பத்தியை ஒழுங்குபடுத்தும் விதியாக, மனித இனத்தின் முழு வளர்ச்சிக்குப் பொருத்தமான வடிவில் மீட்டமைப்பதை அவசர

---

725 ''கோமாளிக் காட்டான்களாகவும், ஒடுங்கிய குறளிகளாகவும் இரு பகை முகாம்களாக மக்களைப் பிரிக்கிறீர்கள். அட ஆண்டவனே! விவசாய நலன்களாகவும், வாணிப நலன்களாகவும் பிளவுண்ட தேசம் தன்னை சித்த சுவாதீனமுடையதாகக் கூறிக் கொள்கிறதே! அது மட்டுமா? இயற்கைக்கு ஒவ்வாத இந்தக் குரூரப் பிளவையும் மீறி என்பதோடல்லாமல் இப்பிளவையே காரணமாகக் கொண்டும் தன்னை அறிவொளி படைத்த நாகரிகத் தேசமாகக் கூறிக் கொள்கிறதே!'' (டேவிட் அர்க்கார்ட், முன் வந்தது, பக்கம் 119.) நிகழ்காலம் குறித்துத் தீர்ப்பளிக்கவும் நிந்தனை செய்யவும் தெரிந்திருக்கிறதே தவிர புரிந்து கொள்ளத் தெரியாதிருக்கிற இவ்வகை விமர்சனத்தின் பலத்தையும், பலவீனத்தையும் ஒருங்கே வெளிப்படுத்தும் வாசகம் இது.

அவசியமாக்குகிறது; தொழிலில் போலவே உழவிலும் மூலதன ஆதிக்கத்தில் பொருளுற்பத்தியை மாற்றியமைப்பது அதேபோது உற்பத்தியாளரைப் பலியிடுவதும் ஆகிறது. உழைப்புக் கருவி உழைப்பாளியை அடிமைப்படுத்துவதற்கும், சுரண்டுவதற்கும், ஓட்டாண்டியாக்குவதற்குமான கருவியாகிறது; உழைப்பு நிகழ்முறைகளின் சமூக ஒன்றிணைப்பும் ஒழுங்கமைப்பும் தொழிலாளியின் தனிப்பட்ட ஜீவ சக்தியையும், சுதந்தரத்தையும், சுயேச்சை வாழ்வையும் நசிப்பதற்கான ஒழுங்கமைந்த முறையாகிறது. கிராமப்புற உழைப்பாளர்கள் பெரும் பரப்புகளில் பரந்து கிடப்பது அவர்களது எதிர்ப்புச் சக்தியை முறித்திடுகிறது. மாறாக, நகரத் தொழிலாளர்களின் குவிப்பு அவர்களது எதிர்ப்புச் சக்தியை உயர்த்துகிறது. நகரத் தொழில்களில் போலவே நவீன விவசாயத்திலும், இயங்க வைக்கப்படும் உழைப்பின் உற்பத்தித் திறனும் அளவும் அதிகரிக்கின்றன என்றால், உழைப்புச் சக்தியை விரயமாக்கியும், நோய்க்கு இரையாக்கியும்தான் இந்த அதிகரிப்பு ஏற்படுகிறது. மேலும், முதலாளித்துவ விவசாயத்தின் முன்னேற்றம் எல்லாமே உழைப்பாளியைக் கொள்ளையிடுவது மட்டுமன்றி மண்ணையும் கொள்ளையிடுகிற கலையிலான முன்னேற்றம்தான்; குறிப்பிட்ட காலத்துக்கு மண்ணின் வளத்தை அதிகமாக்குவதிலான முன்னேற்றம் எல்லாமே அந்த வளத்துக்குரிய நிலையான ஆதாரங்களைக் கெட்டழியச் செய்யும் வழியிலான முன்னேற்றம்தான். ஒரு நாடு எவ்வளவுக்கெவ்வளவு நவீனத் தொழில் துறையை அடிப்படையாகக் கொண்டு—உதாரணமாக அமெரிக்க ஐக்கிய நாட்டைப் போல்—தன் வளர்ச்சியைத் தொடங்குகிறதோ, அவ்வளவுக்கவ்வளவு அதிவேகமாய் இந்த அழிவு நிகழ்கிறது.[726] ஆகவே, முதலாளித்துவப் பொருளுற்பத்தியானது

---

[726] பார்க்கவும்: லீபிக் ''Die Chemie in ihrer Anwendung auf Agricultur und Physiologie,'' 7, ஓஃப்லேஜ், 1862; குறிப்பாக முதல் பாகத்தில் ''Einleitung in die Naturgesetze des Feldbaus,'' இயற்கை விஞ்ஞானத்தின் கண்ணோட்டத்தில் நவீன விவசாயத்தின் எதிர்மறை அமிசத்தை, அதாவது அழிவு அமிசத்தைத் தெளிவுற விளக்கியிருப்பது லீபிக்கின் இறவாச் சிறப்புகளில் ஒன்று. அவரது விவசாய வரலாற்றுச் சுருக்கத்தில் சில மோசமான பிழைகள் இருந்தாலும் அதிலும் பல பகுதிகள் சுடர் விடுகின்றன. ஆயினும், அவர் சிலவற்றை மனம்போனபோக்கில் சொல்லத் துணிவது வருத்தத்துக்குரியது; எடுத்துக்காட்டாக: ''இன்னுமதிகமாய்ப் புழுதியாக்குவதன் மூலமும் இன்னுமதிகமாய் அடிக்கடி உழுவதன் மூலமும், பொலபொலப்பான மண்ணின் உட்புறத்தில் காற்றோட்டத்துக்குத் துணை செய்யப்படுகிறது. வளி மண்டலத்தின் வினைக்கு உள்ளாகும் பரப்பு அதிகமாவதோடு, புதுப்பிக்கப்படவும் செய்கிறது. ஆனால் நிலத்தின் விளைச்சலில் ஏற்படும் அதிகரிப்பு அந்நிலத்தில் செலவிடப்படும் உழைப்பு அதிகரிக்கும் அதே விகிதாசாரத்தில் இருக்க முடியாது, குறைந்த விகிதாசாரத்திலேயே இருக்கும் என்பதை எளிதிற் காணலாம்.'' லீபிக் மேலும் சொல்கிறார்: ''இந்த விதியை முதன் முதலாக ஜான் ஸ்டுவர்ட் மில் அவரது அரசியல் பொருளாதார கோட்பாடுகள்,' பாகம் I, பக்கம் 17இல் பின்வருமாறு வகுத்தளித்தார்: ஏனையவை மாறாதிருக்க, வேலை செய்கிற உழைப்பாளர்கள் அதிகமாகிற விகிதத்தை விட தொடர்ந்து குறைந்து செல்லும் விகிதத்தில் நிலத்தின் விளைச்சல் அதிகமாவது பயிர்த் தொழிலின் பொது விதியாகும்' (ரிக்கார்டோ மரபினரால் வகுத்தளிக்கப்பட்ட விதியை மில் இங்கே

செல்வங்களுக்கெல்லாம் மூல ஆதாரமாகிய மண்ணையும் உழைப்பையும் கசக்கிப் பிழிந்துதான் தொழில் நுட்பத்தை வளர்த்திடுகிறது, பல்வேறு நிகழ்முறைகளையும் ஒரு சமுதாய முழுமையாக ஒன்றிணைத்திடுகிறது.

SEELAN BOOKS NORWAY SIGNATURE

தவறான வடிவில் எடுத்தாள்கிறார். ஏனெனில் 'வேலை செய்கிற உழைப்பாளர்களின் எண்ணிக்கைக் குறைவு' இங்கிலாந்தில் விவசாயத்தின் முன்னேற்றத்துடன் சேர்ந்து அதே வேகத்தில் நடைபோட்டது; ஆகவே, இங்கிலாந்தில் கண்டுபிடிக்கப்பட்டு இங்கிலாந்துக்குக் கையாளப்பட்ட இந்த விதி எந்நிலையிலும் அந்நாட்டுக்குப் பொருந்தக் கூடியதாய் இருக்க முடியவில்லை). மில் இந்த விதிக்கான காரணத்தை அறியாதவர் என்பதால் அவர் இவ்விதியை வகுத்தளிப்பது மிகமிகக் குறிப்பிடத்தக்கது." (லீபிக், முன் வந்தது, முதல் பாகம், பக்கம் 143, மற்றும் குறிப்பு.) லீபிக் "உழைப்பு" என்ற சொல்லைத் தவறாக விளக்குவது — இச்சொல்லை அரசியல் பொருளாதாரம் புரிந்து கொள்கிற முறையில் அல்லாமல் முற்றிலும் வேறு முறையில் புரிந்து கொள்வது — ஒரு புறமிருக்க, மேற்கூறிய தத்துவத்தை முதன்முதல் வகுத்திட்டவராக திரு ஜான் ஸ்டுவர்ட் மில்லை ஆக்குவது எப்படியும் "மிகமிகக் குறிப்பிடத்தக்கதுதான்" ஏனெனில் இத்தத்துவம் ஆதாம் ஸ்மித்தின் காலத்தில் ஜேம்ஸ் ஆண்டர்சனால் முதன்முதல் வெளியிடப்பட்டு, 19ஆவது நூற்றாண்டின் ஆரம்பம் வரை பல்வேறு நூல்களிலும் திரும்பத் திரும்ப கூறப்பட்டு வந்துள்ள ஒன்று; இலக்கியக் களவில் மன்னாதி மன்னராகிய மால்தஸ் (அவரது மக்கள்தொகைத் தத்துவம் முழுவதுமே வெட்கங்கெட்ட இலக்கியக் களவுதான்) 1815இல் தனக்குரியதாக்கிக் கொண்ட ஒன்று. இந்தத் தத்துவத்தை ஆண்டர்சன் உருவாக்கிய அதே காலத்தில் அவரோடு சம்பந்தம் இல்லாமல் சுயேச்சையாய் வெஸ்ட்டும் உருவாக்கினார் 1817ஆம் ஆண்டில் ரிக்கார்டோ அதனைப் பொதுவான மதிப்புத் தத்துவத்துடன் இணைத்தார். பின்னர் அது ரிக்கார்டோவின் தத்துவமாய் உலகை வலம் வந்தது; 1820இல் ஜான் ஸ்டுவர்ட் மில்லின் தந்தையான ஜேம்ஸ் மில் அதனைக் கொச்சைப் படுத்தினார். கடைசியில் ஜான் ஸ்டுவர்ட் மில்லும் ஏனையோரும் அதனை எடுத்துரைத்தனர் — ஏற்கெனவே சர்வசாதாரணமாகி விட்ட, ஒவ்வொரு பள்ளிச் சிறுவனுக்கும் தெரிந்த சூத்திரமாக எடுத்துரைத்தனர். எப்படியும், ஜான் ஸ்டுவர்ட் மில்லின் "குறிப்பிடத்தக்க" முதன்மை மிகப் பெருமளவுக்கு இத்தகைய மாறாட்டங்களையே ஆதாரமாய்க் கொண்டிருப்பதை மறுக்க முடியாது.

ISBN No. : 81-234-0588-X
CODE No. : A993

PRICE: Rs.900.00